# 6th ANNUAL RESEARCH SESSION 2024

# PROCEEDINGS



ஒன்றிணைந்த சமூகப்பபொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்

**Integrated Social Responsibility: Creating a Better Nation**

**FACULTY OF ARTS & CULTURE**

**EASTERN UNIVERSITY, SRI LANKA.**

# ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்

# Integrated Social Responsibility: Creating a Better Nation

## 6th Annual Research Session-2024

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka.

**Title** : Integrated Social Responsibility: Creating a Better Nation


**Editorial Board**

**Chief Editor** : Prof. J. Kennedy

**Co-editors** : Mr. A. Jaufer Hussain

Mrs. V. Selvanayagam

Mr. S.L. M. Nashmal

Mrs. S. Mekala

Mr. V. Sasikaran

Mr. M.L. Mohamed Helfan

Dr. M. Somathasan

Mr. P. Suman

Mrs. Vithukshana Dilaxshan



**Edition** : 2024

**Published by**: Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

**ISBN** : 978-624-5731-42-8

# 6th Annual Research Session-2024

**(ARS – 2024)**

## Organizing committee

| | |
|---|---|
| **Chairman** | : Dr.V.Gunapalasingam |
| **Coordinator** | : Dr. S. Jeganathan |
| **Secretary** | : Mrs. Vijitha Thivakaran |
| **Treasurer** | : Dr. M. B. Fowzul |
| **Advisory Board** | : Prof.V.Gunaretnam<br>Prof.T.Krishnamohan<br>Prof.V.Inpamohan<br>Prof.S.Santhirasegaram<br>Prof. J. Kennedy<br>Prof.K. Rajendram<br>Prof.S.Jeysankar<br>Prof.K.Suresh<br>Prof. (Mrs.). S. Kesavan |

# Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka



**Prof. Vallipuram Kanagasingam**
**Vice-Chancellor**
**Eastern University, Sri Lanka.**

---

It is with great pleasure that I welcome you all to this significant conference - of the 06$^{th}$ Annual Research Session - 2024 centered on the theme of "Integrated Social Responsibility: Creating a Better Nation" hosted by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. As we gather to deliberate on this vital subject, I am reminded of the profound impact that socially responsible actions can have in shaping the fabric of our society.

"Purify yourself, and the world will undoubtedly undergo purification. The world will change if we change; if we are pure, the world will become pure" quoted by Swami Vivekananda. This quote emphasizes the importance of personal growth and self-improvement in order to create a better society. By focusing on our actions and behaviors, we can inspire positive change and contribute to the overall betterment of the world. I believe that our discussions will explore the theoretical underpinnings of social responsibility and highlight practical approaches that can be implemented to foster a more inclusive and equitable nation.

Social responsibility is about recognizing the interdependence between individuals, organizations, and communities, calling for ethical practices, sustainable development, and the well-being of all citizens. As we face an increasingly complex global landscape, the need for integrated social responsibility becomes even more pronounced. This conference provides a platform to exchange ideas and strategies on how to integrate these principles into every aspect of national life.

The theme, "Creating a Better Nation," calls for contributing to a society where every individual has the opportunity to thrive, addressing issues such as poverty, inequality, and environmental degradation. The conference's insights will inspire bold steps towards achieving this vision. I believe that the insights gained from this conference will inspire us all to take bold steps towards achieving this vision.

The conference's coordinator, organizers, committee members, Keynote Speaker, presenters, and participants are commended for their dedication and expertise in advancing the discourse on social responsibility and its role in nation building. As we engage in these discussions, I encourage you all to think critically, share your experiences, and collaborate on innovative solutions that can drive meaningful change.

In conclusion, let us remember that the responsibility to create a better nation rests with each one of us. By working together and embracing the principles of social responsibility, we can build a future that is equitable, inclusive, and sustainable for generations to come.

I wish you all a successful and enriching conference.

## பீடாதிபதியின் செய்தி, கலை கலாசார பீடம்



**கலாநிதி வ. குணபாலசிங்கம்**
**பீடாதிபதி, கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஆய்வு நடவடிக்கைகளில் ‘‘வருடாந்த ஆய்வு அமர்வு’’ எனும் தலைப்பில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் ஆய்வு மாநாடு தற்கால சமூகத்தின் நடைமுறைசார் தேவைப்பாடுகளை மையப்படுத்திய தொனிப்பொருளில் அமைவது வழமையானது. இந்தவகையில் 2024 ஆம் ஆண்டு நடைபெறும் ஆறாவது வருடாந்த ஆய்வு அமர்வானது ‘‘ஒன்றிணைந்த சமூகப்பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்’’ எனும் தொனிப்பொருளில் அமைகின்றது. இத்தகைய நடைமுறைசார் தொனிப்பொருளில் அமையும் இவ் வருட மாநாட்டிற்கு உங்கள் அனைவரையும் நான் மிகவும் பெருமையுடனும் ஆர்வத்துடனும் வரவேற்றுக் கொள்கின்றேன்.

வழமைபோல் இம்மாநாடும் அதன் தொனிப்பொருளோடு தொடர்புடைய பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களின் பல்துறைசார்ந்த, பன்முகநோக்குடைய ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கிய மாநாட்டு ஆய்வு மலர் ஒன்றினை வெளியிடுகின்றது. இம்மாநாட்டு ஆய்வு மலருக்கு கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

பொதுவாக, பல்கலைக்கழகங்களின் கல்விசார் நடவடிக்கைகள் வெறுமனே கற்றல் - கற்பித்தல் என்ற முறையில் மட்டும் அமையாது, ஆய்வு, ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், புத்தாக்கம் எனப் பல்நோக்குடையனவாக விளங்குகின்றன. பல்கலைக்கழகங்களின் கற்றல் - கற்பித்தல் முறைமையானது ஆய்வுசார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் அதற்குரிய அடித்தளத்தில் நின்று வகுப்பறைக்கற்றல், சுயகற்றல், உள்ளகப்பயிற்சிநெறி, ஆய்வு நடவடிக்கைகள் என மாணவர்களை ஊக்குவிக்கின்றது. கோட்பாடுகள், கொள்கைகள் மூலம் கற்ற விடயங்களை மாணவர்கள் களப்பயணம், நடைமுறைசார்ந்த பிரயோகம், படைப்பாக்கம், தர்க்கியல் மற்றும் பகுப்பாய்வு முறைகள் மூலம் ஆய்வுச் செயற்பாடுகளாக வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறான ஆய்வுசார் செயற்பாடுகளை எமது பீடத்தின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவது வரவேற்கத்தக்கதாகும்.

‘‘ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு: சிறந்த தேசத்தை உருவாக்குதல்’’ என்ற இம்மாநாட்டின் தொனிப்பொருளானது சமூக மாற்றத்திற்கான ஒரு சக்திவாய்ந்த ஊக்கியாக உள்ளது. ஒருங்கிணைவு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் மூலம், மாற்றத்தை உருவாக்கவும், ஊக்குவிக்கவும், சமூகத்தின் தற்போதைய நிலைமையை எதிர்கொள்ளவும், எமது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பகிரப்பட்ட பொறுப்புசார் உணர்வை வளர்க்கவும் நமக்கு தனித்துவமான வாய்ப்பு உள்ளது. இத்தகைய தொனிப்பொருளில் ஆராய்வதற்கும், விவாதிப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் நாம் இவ்வாறான மாநாடுகளில் ஒன்றுகூடும்போது, கூட்டுப்பொறுப்புப் பற்றிய உணர்வு, தனிநபர், சமூகம் மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் நல்வாழ்வில் ஏற்படுத்தக்கூடிய ஆழமான புரிதல்களையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம். இந்த மாநாடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த புலமையாளர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு எமது சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கக்கூடிய அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபடுவதற்குரிய ஒரு தனித்துவமான தளத்தை வழங்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

‘ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு’ என்ற தொடர் ஒரு கொள்கைசார் கட்டமைப்பு என்பதைக் காட்டிலும் அது பிரயோகரீதியிலான செயற்பாட்டிற்குரிய அழைப்போடு தொடர்புடையதாகும். சமூகத்தில் நிலவும் சிக்கல்கள் மற்றும் சவால்களைத் தீர்ப்பதில் தனிநபர்களாக நின்று அவற்றை எவ்வாறு அணுகுகின்றோம், நிறுவனங்களின் செயற்பாடு எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளன என்பதை மறுபரிசீலனை செய்வதற்கு இந்தத் தொனிப்பொருளானது எம்மைச் சவாலாக்குகின்றது. சமூகப் பொறுப்பை எமது செயற்பாடுகளின் மையமாக ஒருங்கிணைப்பதன் மூலம், நாம் வாழும் சூழலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதோடு, நிலையான மற்றும் சமமான எதிர்காலத்திற்கான முன்னுதாரணத்தையும் அமைக்கின்றோம். இந்த முழுமையான அணுகுமுறையானது பல்வேறு துறையினரின் ஒத்துழைப்பைக் கோருகின்றது, இது மரபுரீதியான எல்லைகளைத் தாண்டி அதற்கு அப்பால் நின்று பகிரப்பட்ட பொறுப்புணர்வுசார் கலாசார சூழலை உருவாக்குகின்றது.

இந்த மாநாட்டின் போது முன்வைக்கப்படும் முன்னளிக்கைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் விளக்கக்காட்சிகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் எம்மோடு தொடர்புடைய துறைகளில் சமூகப் பொறுப்பை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது பற்றி விமர்சனரீதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் சிந்திப்போம் என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை. புதுமையான உத்திகளை ஆராய்வதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளவும், ஒத்துழைப்பிற்கான புதிய வாய்ப்புகளை அடையாளம் காணவும் இம்மாநாடானது இளம் ஆய்வாளர்களுக்கு வழிசமைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். இங்குள்ள எமது கூட்டு முயற்சிகள், எமது சமூகங்களுக்குள் மட்டுமன்றி, நாடு முழுவதும் நீடித்த மாற்றத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன. இந்த மாநாட்டில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அறிவுசார் பகிர்வுகள் மற்றும் அனுபவங்களின் பன்முகத்தன்மை எமது மிகப் பெரிய பலங்களில் ஒன்றாகும். மேலும் இம்மாநாட்டின் பங்குபற்றுகை, பகிர்வு என்பன நம் ஒவ்வொருவரிடமும் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, புதிய யோசனைகளையும் கூட்டாண்மைகளையும் ஊக்குவிக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

இறுதியாக, இந்த மாநாட்டை சாத்தியமாக்கிய ஒருங்கிணைப்பாளர், மாநாட்டுக்குழுவினர், முதன்மைப் பேச்சாளர், முன்னளிக்கை செய்தோர் மற்றும் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள். அதுமட்டுமன்றி, பல்வேறு துறைசார் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து இம்மாநாட்டை அர்த்தமுள்ளதாக்கிய உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன். அவ்வாறே, மதிப்பீட்டாளர்கள் மிகத் திறமையாகச் சரியான நேரத்திற்குள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்துமுடித்தமைக்காவும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூகப் பொறுப்புணர்வை முன்னெடுத்துச் செல்வதற்கான உங்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு என்றும் பாராட்டுக்குரியது, மேலும் உங்கள் பங்களிப்புகள் எமது தேசத்தின் பிரகாசமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். ஒரு சிறந்த தேசத்தின் உருவாக்கத்திற்காக ஒத்துழைக்கவும், புதுமைகளை உருவாக்கவும், அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாம் அனைவரும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம்.

ஆறாவது வருடாந்த ஆய்வு அமர்வு சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்!

# ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி



**கலாநிதி சோ.ஜெகநாதன்**
**இணைப்பாளர், ஆறாவது ஆய்வு மாநாடு**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

---

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வருடம் தோறும் நடாத்தும் வருடாந்த ஆய்வு மாநாடு இம்முறை ''ஒன்றிணைந்த சமூகப் பொறுப்பு : சிறந்த தேசத்தை உருவாக்குதல்'' என்ற பொருண்மையில் இடம்பெறுவது சமூக அக்கறை பற்றிய எமது பீடத்தின் மேன்நோக்கிய பாய்ச்சலைக் காட்டுகிறது. புத்தாக்க எண்ணம் கொண்ட புதிய தலைமுறையினை உருவாக்கும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம் சார் ஆய்வுகளால் பல புதிய கட்டளைப்படிமங்கள் ஆய்வாளர்களின் எண்ணக் கருவறையில் சூல் கொண்டிருப்பதை காணமுடிகின்றது.

புத்தாக்க தொழில் முயற்சி, சர்வதேச உறவுகள், ஆக்க பூர்வமான சமூக ஈடுபாடு, தரமான கற்றல் கற்பித்தல் முதலிய உயர்கல்வியின் இலக்குகளை அடையும் நோக்கோடு தேசிய, சர்வதேச ஆய்வாளர்களால் மீத்திறனான ஆய்வுகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் கல்விப்புலம் சார்ந்தோரின் ஆய்வுச் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்தவும் அவர்கள் பெற்றுக்கொண்ட அறிவை சமூகத்திற்கு கொண்டு சேர்ப்பதற்குமான ஒரு வாய்ப்பினையும் வழங்கியிருப்பது இந்த ஆய்வு மாநாட்டின் வெற்றியாக நான் கருதுகின்றேன். ஆராய்ச்சியின் அடிநாதம் மெய்ப்பொருள் காண்பது என்ற நேர்நிலைச் சிந்தனையோடு சமர்ப்பிக்கப்பட்ட 63 ஆய்வுக்கட்டுரைகளுள் 43 கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. இளம் ஆய்வாளர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் சிறப்பு நோக்கோடு இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சமகால பூகோள நவீன தொழில்நுட்ப மாற்றங்களால் மனித சமுதாயம் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொண்டு நீண்ட காலம் நிலைத்திருக்கும் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புடன் கூடிய சிறந்த தேசத்தை உருவாக்கி ஆரோக்கியமான அபிவிருத்திகளுக்கு வலுச்சேர்ப்பதை இந்த ஆய்வு மாநாட்டின் உள்ளடக்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வு மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு அனுமதியையும் ஆதரவையும் வழங்கிய உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அத்துடன் இந்த மாநாடு அதன் இலக்கை அடைவதற்கு வினைத்திறனாகச் செயற்பட்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்த கலை கலாசாரபீட பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். மேலும் ஆய்வு ஒழுங்கமைப்புகளுக்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டு ஆலோசனைகளை வழங்கிய ஆலோசனை சபையினருக்கும் கட்டுரைகளை உரிய வேளைக்கு மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்களுக்கும் எனது அகம் கனிந்த நன்றிகள். இம்மாநாட்டிற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய மாநாட்டின் செயலாளர் திருமதி விஜிதா திவாகரன் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் பேராசிரியர் ஜீ. கென்னடி அவர்களுக்கும் பதிப்பாசிரியர் குழுவினருக்கும் பொருளாளர் கலாநிதி எம். பீ. பௌசூல் அவர்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இம்மாநாடு இடம்பெறுவதற்கு பங்களித்த எமது பல்கலைக்கழக பதிவாளர் அ. பகீரதன், நிதியாளர் எம். ஏம். பாரிஸ், எமது பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் வி. பிரகாஷ், உதவி நிதியாளர் எஸ் பிரமாகரன் அவர்களுக்கும் கட்டுரை ஆசிரியர்கள், கலை கலாசாரபீட விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய மட்டக்களப்பு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் காகிதாதிகளை வழங்கிய மட்டக்களப்பு யுனைட்டட் புத்தகசாலையினரும் எனது மனம் கனிந்த நன்றிகள். இந்த ஆய்வு மாநாட்டுக்கு சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது அகம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஆதாரசுருதிரை

**Prof. Srivaratharajan Pirashanthan,**
**Ph.D.(Annamalai), M.Phil.in Tamil (Peradeniya),**
**BA Hons in Tamil (Peradeniya),**
**Professor in Tamil,**
**Head,**
**Department of Tamil,**
**Faculty of Arts,**
**University of Peradeniya.**



---

## தமிழ்ச் சூழலில் மூன்றாம் பால்

\- இலக்கண நூல்கள் வழி ஒரு நோக்கு -

ஆண், பெண் என்னும் பாலினங்கள் இரண்டுக்கும் புறம்பாக, மூன்றாம் பாலினம் பற்றிய அக்கறையையும் ஏற்பையும் இன்றைய சமுதாயம் கொண்டிருக்கின்றது. ஒருகாலகட்டத்தில் கேலிக்கும் பரிகாசத்துக்கும் உரியவர்களாக ஒதுக்கப்பட்டவர்களை, இன்று சமுதாயம் - அதன் பெரும்பான்மைப் பிரதிநிதிகளின் கருத்து இன்னும் மாறிவிடவில்லை எனினும் - ஓரளவாவது அனுதாபத்தோடு மனிதர்களாகவே நோக்கத் தலைப்படுகின்றது. இது வரவேற்புக்குரிய ஒரு மாற்றமாகும்.

பேடி என்றும் அலி என்றும் நபுஞ்சகர் என்றும் முன்பு சொல்லப்பட்டவர்களும், திருநங்கை என்று இன்று சொல்லப்படுபவர்களுமாகிய மாற்றுப் பாலினராய இவர்கள், இயற்கையின் வஞ்சனையால் இவ்வாறு ஆனவர்கள் என்பதை அனைவரும் அறிவர். அகம் - புறம் என்ற இருமைகள் ஒருமித்த தெரிவை நாடாமல், முரண்படுவதே இவர்களின் பாலின அந்தரிப்பின் அடிநாதமாகும். புறத்தோற்றத்தில் ஆணாக உடல்தாங்கி மனதில் தம்மைப் பெண்ணாக உணர்பவர்களும் பெண்ணுடல் தாங்கிப் பிறந்து தம்மை மனதில் ஆணாக உணர்பவர்களும் இவ்வாறு மூன்றாம் பாலினர் அல்லது மாற்றுப் பாலினர் எனப்படுகின்றனர். அவர்களுடைய உளச்சிக்கல்களைக் குறித்து மருத்துவர்களும், உளவியலாளர்களும் ஒருபுறம் ஆராய்ந்துகொள்ள, மொழி ஆய்வாளர்களது கவலையோ வேறாக இருந்தது. அவர்கள், இம்மூன்றாம் பாலினத்தாரை மொழியில் எப்படிச் சுட்டுவது - ஆண் என்று சுட்டுவதா, இல்லை பெண் என்று சுட்டுவதா - என்ற நியாயமான மொழி குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். தமிழைப் பொறுத்தவரை இவ்வாராய்ச்சி, இன்று கிடைக்கும் மிகத் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம்.

ஆண் உண்டனன் என்பதாக னகர மெய்யீறு முதலிய ஈறுகள் ஆண்களை உணர்த்தும் என்றும், பெண் உண்டனள் என்பதாக ளகர மெய்யீறு முதலிய ஈறுகள் பெண்களை உணர்த்தும் என்றும் சொல்லதிகார கிளவியாக்கத்தில் ஆண், பெண் பால்களுக்குரிய இறுதிநிலைகளைப் பற்றிப் பேசுகிறார், தொல்காப்பியர். அக்கிளவியாக்கப் பகுதியிலே இவை என்று தம் பொருளைத் தனியே உணர்த்தும் இறுதியைக் கொள்ளாத இரு கூட்டத்தினரைப் பற்றிச் சிந்திக்கின்றார்.

> ''பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
> தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
> இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
> உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும்'' (சொல். 04)

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

இதன்படி, பெண்மைத் தன்மையை விரும்பி நிற்கும் ஆண்மை திரிந்தவர்களையும், தெய்வங்களையும் சுட்டுகின்ற பொருளை உணர்த்தும் ஈறுகள் இவைதாம் என உறுதிபட வரையறுக்கமுடியாது என்பது புலனாகின்றது. தொல்காப்பியர் வார்த்தையில் சொல்வதானால் இவையிரண்டும் 'இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே'. அப்படியாயின் ஆண்மை திரிந்தவர்களை எவ்வாறு வினைகொடுத்து முடிப்பது எனக் கிளம்பும் ஐயத்துக்கான பதிலை, சில சூத்திரங்கள் கழித்து, தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''ஆண்மைதிரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகுஇடன் இன்றே'' (தொல்.12)

என்பது அவர் வார்த்தை. இதன்வழி உடலால் ஆணாய்ப் பிறந்து, உளத்தில் பெண்மையை உணர்ந்து, தம் ஆண்மை திரிந்தவர்களை ஆண் விகுதியிட்டு அழைப்பது பொருத்தமுடையது அன்று என்பது சுட்டப்பெறுகின்றது. எனவே, தொல்காப்பியர் நெறிப்படி பேடி வந்தான் எனச் சுட்டுவது தவறானதாகும். பேடி வந்தாள் என்பதே பொருத்தமுடையதாகும்.

கிட்டத்தட்ட அவர் காலத்திலிருந்து பல நூற்றாண்டுகள் கழித்து இலக்கண நூல் படைத்த பவணந்தியாரும், இம்மூன்றாம் பாலினத்தாரை எப்படி மொழிவது என்பது குறித்து தமது நன்னூலின் சொல்லதிகாரத்தில் சிந்திக்கிறார். பெயரியலில் இருதிணை, ஐம்பால்களைப் பற்றிப் பேசிய நன்னூலார் தொடர்ந்து திணை, பால்களுக்குப் புறனடைச் சூத்திரமாகப் பின்வரும் நூற்பாவைப் படைத்துள்ளார்:

''பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்'' (நன்.264)

இதன்படி, ''பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுகிறவர்களை உயர்திணை ஆண் பாலாகக் கருதுதல் வேண்டும். ஆண் தன்மையை விட்டு பெண்தன்மையை அவாவுகிறவர்களை உயர்திணை பெண்பாலாகக் கருத வேண்டும். இவ்விருவகைகளும் அஃறிணையை ஒத்தும் நடப்பன'' எனும் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

பெண்மையை விட்டு ஆண் தன்மையை விரும்புகின்ற ஒருவரை, அலி வந்தான் என்றும் ஆண் தன்மை விட்டுப் பெண்தன்மையை விரும்புகிற ஒருவரை பேடி வந்தாள் என்றும் சுட்ட வேண்டும். இதேவேளை அலி வந்தது, பேடி வந்தது என்று சுட்டுவதும் தவறாகாது என்பது பவணந்தியாரின் கருத்தாகும்.

பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையை அவாவுகிறவர்களைப் பற்றி நன்னூல் பேசியுள்ளதைப் போலவே இலக்கண விளக்க நூலும் குறிப்பிட்டுள்ளது. பெண்மை திரிந்ததற்கு உதாரணமாகப் பேடன் வந்தான், பேடர் வந்தார், பேடன்மார் வந்தார் என உதாரணங் காட்டுவார், இலக்கண விளக்க நூலாசிரியர். ஆயினும், பேடன் முதலிய இவ்வுதாரணங்களை இளம்பூரணர் முதலியோர் எடுத்தாளாமையின் அவ்வழக்குப் பொருந்தாதென சிவஞானமுனிவர் மறுக்கிறார். அவர், பெண்மை திரிந்தது அலியெனக் கருதுகிறார். எப்பெயரிட்டாயினும், பெண்மையை விட்டு ஆண் தன்மையை அவாவும் மாற்றுப் பாலினத்தாரை எவ்வாறு சுட்டுவது என்பது குறித்து, பின்னை இலக்கண நூல்கள் சில அக்கறை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதன்மைத் தமிழ் இலக்கணங்களாய தொல்காப்பியம் மற்றும் நன்னூல் ஆகியவற்றில் காணப்படும் இம் மூன்றாம் பாலினத்தாரைப் பற்றிய நூற்பாக்களின் வழி, அவ்வக்கால சமுதாயம் அவர்களை எவ்வாறு நோக்கியுள்ளது என்பதை அறிய முடியும்.

மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உடல் அளவில் ஆணாகப் பிறந்து உள்ளத்தில் பெண்ணாக உணரும் மாற்றுப்பாலினர் பேசப்படுகின்றனர். ஆனால், உடல்

அளவில் பெண்ணாகப் பிறந்து ஆண் தன்மையை அவாவும் மாற்றுப்பாலினர் பேசப்படவில்லை. இதற்கான காரணம் ஆராயப்படவேண்டியது. பெண்மை திரிந்து ஆண்மையை அவாவியோர் தொகை சிறுபான்மையாதலால் அவர்களைத் தொல்காப்பியர் சுட்டவில்லை எனும் காரணத்தை அறிஞர் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ‘‘பெண்மை திரிந்த முண்டேனும் ஆண்மை திரிந்த பெரும்பான்மையாகலான் ‘ஆண்மை திரிந்த’ என்றார்; எனவே, பெண்மை திரிதல் சிறுபான்மை யாகலின் அதனை ஆசிரியர் எடுத்துக் கூறாராயினார் என்றபடி. கூறாராயினும் அதுவும் கொள்ளப்படுமென்பது சேனாவரையர் கருத்து’’. எனினும், இக்கருத்து எத்துணை தூரம் உண்மையானது என்பது மேலதிக ஆராய்வுக்குரியது.

எனினும், இதற்கான காரணத்தை அக்கால தமிழகச் சமூக நிலையின் அடிப்படையில் கண்டடைவது பொருத்தமானதாகும். அக்காலச் சமுதாயத்தில், பெண்மையை அவாவுகிற விருப்பை ஆணாகப் பிறந்தவர்கள் வெளிப்படுத்தியது போல, ஆண்மையை அவாவிய விருப்பைப் பெண்ணாகப் பிறந்தவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஆண் தன்மையை அவாவுகின்ற விருப்பை, பெண்ணாகப் பிறந்தவர்கள் பிறரறிய வெளிப்படுத்துவதில் மனத்தடை கொண்டிருந்துள்ளனர் என்பது புலனாகின்றது. இது அக்காலத்தில் பெண்களுக்கு இருந்த சுயமறுப்பையே எடுத்துக் காட்டுகின்றது. தாம் உளத்தில் பால்மாற்றத்தை அவாவியபோதும், பெண்ணாகவே வாழ்ந்து முடிக்கவேண்டிய நிலையிலேயே பெண்கள் சங்ககாலத்தை ஒட்டிய காலத்தில் வாழ்ந்துள்ளனர் என்பது இதன்வழி புலனாகிறது. இதனாலேயே பெண்மையை விரும்பும் ஆண்களாய மாற்றுப்பாலினரை எவ்வாறு சுட்டுவது எனப் பேசிய தொல்காப்பியம், ஆண் தன்மையை விரும்பும் பெண்களாய மாற்றுப்பாலினரைப் பற்றிப் பேசவில்லை.

இவர்கள் ஒரு சிறுதொகையினராகக் கூட மேற்கிளம்பியிருந்தால் இவர்களை எவ்வாறு சுட்டுவது எனும் கேள்வி, தமிழ் மொழிக்கு ஏற்பட்டிருக்கும். இதற்குச் சரியான தீர்வை வழங்கவேண்டிய கடப்பாடு இலக்கண நூலாசிரியருக்கு இருந்திருக்கும். ஆனால், அத்தகைய ஒரு நிலைப்பாடு தொல்காப்பியத்தில் காணப்படாமைக்குக் காரணம், தாம் மனதளவில் ஆணாக உணருவதை எந்தப் பெண்ணும் தம் சமுதாயத்தில் வெளிப்படுத்த இயலவில்லை என்பதேயாகும். அந்தளவு பெண் மீதான கட்டுப்பாடு அக்காலச் சமுதாயத்தில் இருந்திருக்கிறது.

மூன்றாம் பாலினத்தினர் எனச் சுட்டப்பெறும் இரு பகுதியினருள், ஒருபகுதியினரை மட்டும் - அதாவது பெண்மையை விரும்பும் ஆண்களை மட்டும் - சுட்டும் தொல்காப்பியர், அவர்களைச் சுட்டும்போது, ஆண்பால் விகுதி கொடுக்கவேண்டாம் எனக் கூறுகின்றார். இதற்கு உரையாசிரியர்கள் பலரும், “பேடிவந்தான் எனற் போல வருவது இல்லை. பேடிவந்தாள் எனவே வரும்” என்றே எடுத்துக்காட்டுக் கூறியுள்ளனர். இதனை ஆழமாக நோக்குகையில், உயர்திணை ஆண்பால் பெண்பால் பலர்பால் விகுதிகளையும் அஃறிணை விகுதிகளையும் கூறியபின்பு, “ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்மை அறிசொற்கு ஆகு இடன் இன்றே” எனக் கூறுவதன் மூலமாக, பேடி என்பது அஃறிணை முடிவையும் பெறும் என்ற கருத்துக்கு வருதல் முடியும். அதாவது பேடிக்கு பெண்பால் விகுதி கொடுக்கப்பட வேண்டும் எனத் தொல்காப்பியம் சுட்டவில்லை. ஆண்பால் முடிவுகொடுக்க வேண்டாம் என்பதே தொல்காப்பிய நூற்பாவின் கருத்தாக உள்ளது. இதன் உள்ளர்த்தம் பேடிக்கு பெண்பால் முடிவோ அஃறிணை முடிவோ கொடுக்கலாம் என்பதுதான்.

ஆண்மை திரிந்தவரை பெண்பால் விகுதி கொண்டும், பெண்மை திரிந்தவரை ஆண்பால் விகுதிகொண்டும் சுட்டவேண்டும் என்னும் நன்னூலாசிரியர், இவ்விரு திறத்தாரையும் அஃறிணை முடிவுகொண்டும் சுட்டலாம் என்கிறார். இது அவதானத்துக்குரியது. எனவே, தொல்காப்பியமும், நன்னூலும் மூன்றாம் பாலினத்தைச் சுட்ட அஃறிணை முடிவைக் கொள்ளலாம் என்றுரைப்பது அக்காலகட்டத்துத் தமிழ்ச் சமுதாயம் மாற்றுப் பாலினரை எந்த அளவுக்குக் கீழ்மையுற நோக்கியுள்ளது என்பதையே காட்டுகிறது.

இவ்விடத்தில் அஃறிணையாக மானுடர் சுட்டப்பெறும் மொழியின் நிலைப்பாட்டிற்கும், சமுதாயக் கண்ணோட்டத்திற்குமான தொடர்பை பின்வருமோர் உதாரணம் மூலம் உணர்த்தலாம். பழைய காலத்தில் தெலுங்குமொழி குறித்து, மொழி அறிஞர் சுட்டும் தனித்த இயல்பொன்றை இங்கே குறிப்பிடல் பொருத்தமானதாகும். ஆண்பால், பெண்பால்களைத் தனித்தனியாக மேற்கொள்வதிலும், தனித்தனியே வந்த இருபாற் பன்மைகளையும், அவ்விருபாலும் கலந்து வந்த பன்மைகளையும் பலர் பாலென மேற்கொள்வதிலும் திராவிட இனத்தின் ஏனைய மொழிகளோடு ஒத்துப் போகின்ற தெலுங்கு, பெண்பால் ஒருமைப் பொருளுணர்த்துவதற்கு ஆற்றலை அறவே இழந்து, அதற்குப் பதிலாக, அஃறிணை ஒன்றன்பால் ஒருமை விகுதியையே ஆள்கிறது. இவ்வியல்பைக் கண்ணுற்ற மொழி அறிஞர் கால்டுவெல் இதன்வழி கண்டடையும் சமுதாய மதிப்புசார் பின்வரும் கருத்துகள் முக்கியமானவை:

“பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே என்பதை உண்மையென கொள்வதினாலோ, அல்லது குழந்தைகளின் ஆய்வுரைகளைப் போன்றே பெண்களின் ஆய்வுரைகளும் கொள்ளத்தக்கன அல்லவென எண்ணியதாலோ, தெலுங்கு மொழி, ஒவ்வொரு பெண்ணையும், உயிரற்ற பொருள்களையும், சிறு குழந்தைகளையும் வழக்கமாக வழங்குவதுபோல் ‘இது’ என்றே வழங்குகிறது.”

இவ்வாறே, ‘உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே’ எனக் கூறியதன் பின்பு, மனிதராயப் பிறந்து இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட மாற்றுப் பாலினரை - அஃறிணையாகவும் சுட்டலாம் எனத் தமிழிலக்கண நூல்கள் விதிப்பதானது, தமிழ்ச் சமூகம் அவர்களை - மதிப்பார்ந்த நிலையிலிருந்து ஒதுக்கி வந்திருப்பதையே காட்டுகின்றது.

இவற்றைத் தொகுத்து நோக்குகின்றபோது, பின்வரும் முடிவுகளைக் கண்டறிய முடிகின்றது: ஆணாகப் பிறந்து பெண்மையை விரும்பியோர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டதுபோல, பெண்ணாகப் பிறந்து ஆண்மையை அவாவியோர் தம்மை வெளிப்படுத்த சங்ககாலச் சமுதாயம் இடந்தரவில்லை. எனவே, அவர்களை எவ்வாறு சுட்டுவது என்பது குறித்த தேவைப்பாடு மொழிக்கு ஏற்படவில்லை. நன்னூல் தோன்றிய காலப் பகுதியில், பெண்களும் மாற்றுப்பாலாகத் தம்மை வெளிப்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, மொழிக்கு, அவர்களை எவ்வாறு சுட்ட வேண்டும் எனும் தேவை வந்துவிட்டது என்பதை நன்னூல் பிரதிபலிக்கின்றது. சங்ககாலமோ அன்றி சோழர்காலமோ தமிழ்ச் சமுதாயத்தில் மூன்றாம் பாலினத்தாரை இழிவாகக் கருதும் நிலைமட்டும் மாறவில்லை. அவர்கள் எந்தப் பாலினத்தைத் தம் மனதளவில் விரும்புகிறார்களோ, அந்தப் பாலினத்தைச் சுட்டும் விகுதி கொண்டு அவர்களை அழைக்கலாம் என்று கூறிய இலக்கண நூல்கள், அவர்களுக்கு அஃறிணை முடிவும் வழங்கலாம் எனச் சுட்டியிருப்பது இந்நோக்குகளையே காட்டுகிறது.

உசாத்துணை:

கணேசையர், சி. (ப.ஆ.) (2007) தொல்காப்பியம் - சொல்லதிகாரம் மூலமும் சேனாவரையருரையும், சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

கால்டுவெல் (1992) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், கோவிந்தன், கா. (மொழிபெயர்ப்பு), சென்னை : திருமகள் நிலையம்.

கோபாலையர், தி. வே. (2005) தமிழ் இலக்கணப் பேரகராதி, சென்னை : தமிழ்மண் பதிப்பகம்.

ௐ

## பிரதம பதிப்பாசிரியரின் செய்தி



**பேராசிரியர் ஜீ. கென்னடி,**
**பதிப்பாசிரியர், ஆறாவது ஆய்வு மாநாடு**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

---

“ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பு: ஒரு சிறந்த தேசத்தை உருவாக்குதல்” என்ற தொனிப்பொருளில் அமையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகளையும், அவற்றின் ஆய்வுச் சுருக்கங்களையும் தொகுத்து ஒரு மாநாட்டு ஆய்வு மலராக உங்களுக்கு வழங்குவதில் மாநாட்டின் பிரதம பதிப்பாசிரியர் என்றவகையில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த மாநாட்டின் கருப்பொருள் நமது தனிப்பட்ட, தொழில்முறை மற்றும் நிறுவன நடைமுறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக சமூகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கான முக்கியமான தேவைப்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது. இன்று நமது சமூகம் எதிர்கொள்ளும் சிக்கலான சவால்களை எதிர்கொள்ள புலமையாளர்கள், கல்வியாளர்கள், நிபுணர்கள் மற்றும் தலைவர்கள் மேற்கொள்ளும் வேறுபட்ட மற்றும் புதுமையான அணுகுமுறைகளுக்கு இந்த ஆய்வுக்கட்டுரைகளில் உள்ள கருத்துக்கள் மற்றும் நுண்ணறிவுகள் ஆதாரங்களாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு துறைசார்ந்த ஆய்வாளர்களினால் பன்முகப் பார்வையில் எழுதப்பட்டுள்ளன. நவீன ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வருட மாநாட்டிற்காக எமக்கு மொத்தமாக 65 ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 43 கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களினால் ஆய்வு மாநாட்டின் முன்னளிக்கைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் ஆய்வுச்சுருக்கங்கள் மற்றும் கட்டுரைகள் நிலையான வளர்ச்சி, நெறிமுறை நிர்வாகம் முதல் சமூக ஈடுபாடு மற்றும் ஒருங்கிணைந்த பொறுப்புக்கூறல் வரை பரந்த அளவிலான தலைப்புகளை ஆராய்கின்றன. ஒவ்வொரு பங்களிப்பும் மிகவும் நியாயமான, நிலையான மற்றும் சமத்துவமான தேசத்தை உருவாக்குவதற்கு நாம் எவ்வாறு கூட்டாக இணைந்து பணியாற்றலாம் என்பதற்கான தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

இந்த மாநாட்டின் பெறுமதியானது பகிர்ந்து கொள்ளப்பட்ட அறிவில் மட்டுமன்றி, அது பிரதிபலிப்பு, உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளிலும் உள்ளது. இங்கு வழங்கப்பட்டுள்ள கருத்துக்களோடு ஒன்றிணைவதன் மூலம், நமது தேசிய மற்றும் உலகளாவிய முயற்சிகளில் சமூகப் பொறுப்பை எவ்வாறு சிறந்த முறையில் ஒருங்கிணைப்பது என்பது பற்றிய தற்போதைய உரையாடலுக்கு நாம் அனைவரும் பங்களிக்க முடியும்.

நிறைவாக, இந்தக் கட்டுரைகளின் தொகுப்பைக் கொண்டுவர அயராது உழைத்த கலை கலாசார பீடாதிபதி, மாநாட்டின் பதிப்பாசிரியர் குழு, மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர், ஆய்வாளர்கள், ஆய்வுக்கட்டுரை மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூகப் பொறுப்புணர்வு குறித்த சொற்பொழிவை முன்னெடுப்பதில் ஒவ்வொரு ஆய்வாளரின் அர்ப்பணிப்பைப் பாராட்டுவதோடு, அவற்றின் அவசியத்தை இதன் வாயிலாக உணரவைக்கும் இந்தத் தொகுப்பிலுள்ள உள்ள கருத்துக்கள் மற்றும் புதிய ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டமைக்காக எனது நன்றிகள். அத்துடன் இக்கட்டுரைகளை மிகவும் தரமான முறையில் உரிய நேரத்திற்குள் மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்!

## Content

Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka v

பீடாதிபதியின் செய்தி, கலை கலாசாரப்பீடம் vi

ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி viii

ஆதாரசுருதியுரை ix

பிரதம பதிப்பாசிரியரின் செய்தி xiii

ABSTRACTS xix

## Humanities and Social Sciences (Environment and Geography)

கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வு 1

Mr. Srimogan Srilaxan

வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும் 2

Mr. Kannappan Sutharshan, Mrs. Thavapraba Sachithanantham

சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மீதான அச்சுறுத்தலும் அபிவிருத்திக்கான உபாயங்களும் 3

Ms. Niklas Akaliya, Mrs. Thavapraba Sachithanantham

சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு 4

Ms. Mohamed Ismail Fathima Rihma, Mrs. Thavapraba Sachithanantham

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள் 5

Ms. Pavatharani Suntharalingam, Mrs. Thavapraba Sachithanantham.

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் 6

Mr. Srimogan Srilaxan, Ms.Tharunithaa Ragunathan

## Humanities and Social Sciences (Political Science & Governance)

அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தம்: சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 7

Ms. Thampiraja Laxsayini, Dr. N. Pushparajah

இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினைப் பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்தலும், ஊக்குவித்தலும் 8

Ms. Selvaratnam Tharunitha, Prof. V. Gunaretnam

தாலிபான்களின் மீளெழுச்சியும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள் - இஸ்லாமிய நோக்கில் பெண்களின் உரிமைகள் ஓர் ஆய்வு 9

Ms. S. F. Ayman Sihara, Prof. V. Gunaretnam

விகிதாசார தேர்தல் முறையில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: கடந்த ஐந்து பாராளுமன்ற தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (2001 - 2020) 10

Ms. Rajah Ramya, Mr. Chelliah Sivanayagam

இலங்கையில் மலையகத் தமிழ் மக்களும் அவர்களுடைய தனித்துவமான இன அடையாளங்களும் 11

Mr. S. Manogaran, Mr. Chelliah Sivanayagam

ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையில் ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் - ஓர் ஆய்வு 12

Ms. Ravi Abirami, Prof. V. Gunaretnam

## Language and Literature

IMPACT OF HYPERMEDIA-BASED POETRY LEARNING ON WRITING SKILL: AN EXPERIMENTAL STUDY BASED ON 'HIGHER NATIONAL DIPLOMA IN ENGLISH SYLLABUS' 13

Mr. Mohideen Bawa Nowzath, Dr. Singanayagam Umashankar

பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு 14

Ms. Sivanayagam Sisitha

ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு 15

Ms. Ulagagesparam Digatharani

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 16

Ms. Hussain Bawa Nasrin Banu, Mrs. Ruby Valentina Francis

வாகரைப் பிரதேசச் சிற்றிதழ்கள் - ஓர் ஆய்வு 17

Ms. Punitharasa Kisoniya, Mrs. Ruby Valentina Francis

## Classical Literature & Modern Literary Works

'பூவரசு' சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு 18

Ms. Hamsa Lebbe Rinosa, Dr. Nadira Mariyasandanam

ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல் 19

Ms. Shamshiga Jeevakaran

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு 20

Ms. Balarathnam Saranya

புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 21

Ms. Indran Tharshana, Dr. Nadira Mariyasandanam

சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் நெறிகள் 22

Mrs. Gnanasekaram Dilosini

## Educational Ethics & Psychology


சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் 23

Ms. Navareththinam Kethini

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம் 24

Mr. Nadarasa Koventhan

இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு 25

Ms. Pulenthiran Hindujah

பாடசாலையில் கல்வி கற்கும் பெண் மாணவிகளுக்கு ஏற்படும் மன அழுத்தமும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் - ஓர் ஆய்வு (பட்டிருப்புக் கல்வி வலயத்தில் க.பொ. த. சாதாரணதரம் கற்கும் மாணவிகளை அடிப்படையாகக் கொண்டது) 26

Mrs. Pranaha Thineswaran, Dr. Kanthasami Kajavinthan

இருமொழிக் கல்வி முறையில் விஞ்ஞான பாடக் கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு 27

Mr. R. Senthamilselvan, Mrs.Thakshaayini Rajandran


## Innovation and Education


AN INVESTIGATION OF TRAINED SCHOOL TEACHERS' SELF-EFFICACY BELIEFS AND THEIR IMPACT ON THE TEACHING-LEARNING PROCESS 28

Mr. Krishnapillai Punniyamoorthy, Prof. Fareed Mohamed Nawastheen

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளைத் துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு
Mr. Kanthasamy Abilash 29

பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் (மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 30

Mrs. Shiyani Thevaruban, Mrs.Thakshaayini Rajandran

OPTIMIZING PREVENTIVE MAINTENANCE SCHEDULES FOR BIOMEDICAL EQUIPMENT BY USING THE DATA-DRIVEN APPROACH 31

Mr. Ragupathyraja Suhashan, Mr. Rishogar Nirmalakumar, Mr. Kirushnalini Maguran

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பு 32

Mr. Shivanantham Sritharan, Dr. Sabaretnam Athirathan

## Religion & Social Harmony

சமூகநல்லுறவினை மேம்படுத்துவதில் சமய விழுமியங்களின் வகிபாகம் - இந்து பௌத்த சமயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 33

Ms. Arumukam Jeyaruby, Mr. R. Sahaayaseelan

இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் கன்மம் மற்றும் மறுபிறப்புக் கோட்பாடு - அல்குர்ஆனையும் திரிபீடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 34

Mr. Kamaraj Pradeevan, Mr. Kanesan Mathiseelan

## Philosophy,Values and History

தென்னிந்தியத் திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்டம் கிராம சேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மெய்யியல் ஆய்வு – 2023 35

Ms. Pushparaj Dhanadharshani, Dr. Ratnasabpathy Premkumar

இந்து அறிவியலில் சித்தர்களும் இரசவாதமும் : ஒரு மெய்யியல் பார்வை 36

Mr. Uthayathevan Jeevatharsan, Mr. Tharaneenthan Kamalachandran

பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனைகள்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு 37

Ms. Rasu Ashaniya, Mr. Vellappody Alagaratnam

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு - ஒரு வரலாற்று ஆய்வு 38

Ms. Vinayagam Vijayashanthi, Mr.S. K. Shivahaneshan

## Gender & Human Behaviour

நவீன சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம் (மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 39

Mr. Vijayaretnam Vijayaruban

க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடும் கல்வி அடைவு மட்டமும் : யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் உளவியல் ஆய்வு 40

Ms. Saththiyalingam Vaishnavi, Dr. Kanthasami Kajavinthan

MOTHER TONGUE INFLUENCE ON LEARNING ENGLISH AS A SECOND LANGUAGE AMONG SRI LANKAN UNIVERSITY STUDENTS 41

Mr. Mohamed Musthafa Abdul Rahuman, Dr. Singanayagam Umashankar

GENDER TRIBULATIONS IN MAHESH DATTANI’S ON A MUGGY NIGHT IN MUMBAI 42

Dr. V. Francis

யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களின் இயங்கியல் 43

Dr. Thiruchelvam Selvamanoharan

# ABSTRACTS

# Humanities and Social Sciences (Environment and Geography)

# கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வு

Mr. Srimogan Srilaxan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*srilakshan8@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேசத்தில் குடிநீரின் தரம் தொடர்பிலான பல்வேறுபட்ட சமூக, பொருளாதார பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரச்சினையை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வின் பிரதான நோக்கம் கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்ளல் ஆகும். உப நோக்கங்களாக ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரம் தொடர்பான பரமானங்களைப் பரிசீலித்து படமாக்கல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாட்டுக்கு பொறுப்பான காரணிகளை இனங்காணுதல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாடு காரணமாக மக்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல், குடிநீர்ப் பிரச்சினை சார்ந்து எதிர்நோக்கப்படும் சவால்களுக்கான தீர்வுகளை முன்வைத்தல் ஆகியன அமையப் பெற்றுள்ளன. ஆய்வில் அளவைசார் மற்றும் பண்புசார் ரீதியாக இரு முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்குத் தேவையான முதலாம்நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல், பரிசோதனை ஆகிய முறைகளின் ஊடாகவும் இரண்டாம்நிலைத் தரவு மூலங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசம் முழுக்குடியாக தெரிவுசெய்யப்பட்டு அங்குள்ள கிணறுகளில் 3% எனும் அடிப்படையில் 52 மாதிரிகள் பெறப்பட்டு அவற்றின; pH, EC, TDS, Turbidity, Salinity ஆகிய பரமானங்கள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பெறுமானங்கள் பெறப்பட்டன. பரமானம் ஒவ்வொன்றினதும் பெறுமானங்களின் இடரீதியான வேறுபாடுகள் ArcGIS 10.4 மென்பொருள் மூலமாகப் படமாக்கப்பட்டு தரரீதியான நிலைமைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நாசிவன்தீவு கிராமசேவகர் பிரிவில் காணப்படும் குடிநீர்க்கிணறுகளில் மிக உயர்வாக TDS மற்றும் உவராக்கம் ஆகியன அதிகரித்துக் காணப்படுகின்றன. pH ஆய்வுப்பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் பருகுவதற்கு உகந்த வரையறைக்குள்ளும், மின்கடத்துதிறன், கலங்கற்தன்மை ஆகியவை ஆய்வுப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் கூடிக்குறைந்து காணப்படுகின்றது. குடிநீர்க் கிணறுகளின் இத்தகைய தரமாறுபாடுகளுக்கு பிரதேசத்தின் அமைவிடமும் தரைத்தோற்றமும், மண் அமைப்பு, இயற்கை அனர்த்தங்கள், போன்ற பௌதிக காரணிகளும் கண்டல் தாவர அழிப்புக்கள், மணல் அகழ்வு, குடிநீர்க்கிணறுகளின் ஒழுங்கற்ற பராமரிப்புகள், ஒழுங்கற்ற வடிகாலமைப்புகள், விவசாய நடவடிக்கைகள், தொழிற்சாலைகள் போன்ற மானிடக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *உவர்த்தன்மை, கலங்கற்தன்மை, குடிநீரின்தரம், பரமானம், TDS*

## ஆய்வு அறிமுகம்

நாம் வாழும் பூமியில் எல்லா உயிரினங்களும் தோன்றும் முன்பே நீரானது தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. பாதுகாப்பான நீரின்றி 08 செக்கன்களுக்கு ஒரு குழந்தை என்ற விகிதத்தில் மரணம் நிகழ்கின்றது. உலகில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் குழந்தைகள் இறப்பதற்கு பாதுகாப்பற்ற குடிநீர் முதல் காரணமாக விளங்குகின்றது (Moraiti, 2012). தற்போதைய நீர் நுகர்வு விகிதத்திலும் பார்க்க இனிவருகின்ற காலங்களில் இன்னும் மோசமாகும். அந்த வகையில் 2025 ஆம் ஆண்டளவில் மூன்றில் இரண்டு (2/3) பங்கு மக்கள் தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றார்கள் (Yıldz, 2022).

ஆசிய பிராந்தியத்தினைப் பொறுத்த வரையில் நீர் அழுத்தம் என்பது மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்றது. சீனா, இந்தியா போன்ற நாடுகளில் இப்பிரச்சினை தீவிரமான நிலையில் காணப்படுகின்றன (Colopy, 2012). பசுமைப்புரட்சி ஏற்பட்ட காலங்களின் பிற்பாடு அதிகரித்த விளைச்சல் அதிகரித்த நீர்ப்பாவனையை ஏற்படுத்தியது. தொடர் விளைவாக நீர்ப்பற்றாக்குறையினை ஆசிய பிராந்தியம் அனுபவித்தது. மேலும் கைத்தொழில்மயமாக்கம் காரணமாக அதிகளவில் தென்னாசியாவின் முக்கிய நீர் மூலங்கள் கழிவுகளால் பாதிப்படைந்தன. மேலும் ஆசிய பிராந்தியத்தில் அதிகரித்து வரும் காடழிப்பு நீர் பாதுகாப்பிற்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. ஆசியாவின் காடுகளின் பரப்பளவு ஆண்டுக்கு 1 வீதம் குறைவடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது (Brown).

இலங்கையினைப் பொறுத்தவரையில் ஏராளமான நீர் வளங்களினையும் வேறுபட்ட தரைத்தோற்ற, காலநிலை நிலைமைகளையும் கொண்ட தீவாகும். 2021 ஆம் ஆண்டு உலக வங்கியின் அறிக்கையின்படி இலங்கையில் 13 பில்லியன் கி!பிக் மீட்டர் தூய நீர் வருடாந்தம் வெளியேற்றப்படுவதாகக் குறிப்பிடுகின்றது. அதிலும் நாட்டின் உலர் வலயத்திலேயே அதிகளவு நீர்சார் பிரச்சினைகள் காணப்படுகின்றது. இலங்கையின் சனத்தொகையில் 55% க்கும் அதிகமானோர் அன்றாட வீட்டு உபயோகத்திற்காக நிலத்தடி நீரை நம்பியிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது (Samad, 2005).

நீரின் தரமாறுபாடு தொடர்ந்து இடம்பெறுமாயின் அது எதிர்கால சந்ததியினர் சுத்தமான நீரை ஒரு துளியேனும் பெற முடியாத நிலையினை ஏற்படுத்தி விடும். இதனாலேயே நீரின் தர மாறுபாட்டினை தடுக்கும் அல்லது இழிதளவில் குறைக்கும் நடவடிக்கைகள் இன்று துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் அருகிச் செல்லும் குடிநீர் வளத்தினைப் பேணவும், நீரின் தரத்தினை நிலையாக வைத்துக் கொள்ளவும் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் நீரின் தரம் பேணும் உள்நாட்டு, சர்வதேச அமைப்புக்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஏனெனில், நீரின் தர மாறுபாட்டால் இன்று பல்வேறு சூழல் பிரச்சினைகள்

உருவாக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி உயிரினங்களின் தேகாரோக்கியத்திற்கும் குறிப்பாக மனிதனது ஆரோக்கியத்திற்கு எதிரான பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதன்படி உலகளாவிய ரீதியில் ஏறத்தாழ 1.5 பில்லியன் மக்கள் பாவனைக்கான தூய நீரைப் பெறுவதில் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர். இதில் வருடாந்தம் 5 மில்லியன் மக்கள் நீர் மாசாக்கத்தின் விளைவால் உருவாகும் நோயினால் இறக்க நேரிடுகின்றது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலும் பல பிரதேசங்களில் குடிநீரின் தரத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அண்மைக்காலத்தில் அவதானிக்கக்கூடிய ஒரு முக்கிய விடயமாகும். இங்கு நீருக்கான மக்களது நுகர்வு தொடர்ந்து அதிகரித்துச் செல்ல, பயன்படு தன்மை கொண்ட நீரின் தேவையும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் நீரின் தொடர்ச்சியான இருப்பு மற்றும் நீர் வழங்கல் காரணமாக எதிர்நோக்கும் சவால்களை (Challenges) எதிர்கொள்ளும் முகமாக உயிரின வாழ்க்கைச்சூழல் அமைப்புக்களது சேவைகளுக்கென்று நீரைப் பேணிப் பாதுகாக்கும் உலகளாவிய முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வானது நவீன யுகத்தின் இருபத்தியோராம் நூற்றாண்டில் சமீபகாலமாக தோற்றம் பெற்று வருகின்றது. அவ்வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கோறளைப்பற்று பிரதேசத்திலும் குடிநீரின் தரத்தில் மாற்றங்கள் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டு வருகின்றது. இதற்கான காரணங்களை கண்டறிந்து கொள்வதற்காகவும், அதனால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்காண்பதற்காகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்பிட்ட பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட பிரதான பிரச்சினைகளுக்கேற்ப ஆய்வுப் பிரச்சினைகள் பின்வருமாறு தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன அவை குடிநீர்க்கிணற்று மூலங்களில் நிறத்திலும், மணத்திலும், சுவையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன, குடிநீரைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பிரயாணம் செய்தல், குடிநீரை பணம் கொடுத்து வாங்கும் நிலமை, தங்களது கிணற்று நீரை குடிநீராக அருந்துவதில் மக்கள் மத்தியில் காணப்படும் அச்சநிலைமை, குடிநீருக்காக மக்கள் அலைந்து திரியும் நிலைமை, அயலவர்களின் வீடுகளில் குடிநீரைப் பெறச் செல்லும்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றமை, குடிநீர்ப்பிரச்சினை தொடர்பில் மக்கள் மனதில் காணப்படும் விரக்தி நிலைமை போன்றவை ஆய்வுப் பிரச்சினைகளாகக் காணப்பட்டன.

ஆய்வினுடைய பிரதான நோக்கமாக கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராசேவகர் பகுதிகளில் குடிநீரின்தரம் பற்றிய இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்ளுதலும் உபநோக்கங்களாக ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரம் தொடர்பான பரமானங்களைப் பரிசீலித்து படமாக்கல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாட்டுக்கு பொறுப்பான காரணிகளை இனங்காணுதல், ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாடு

காரணமாக மக்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் எனும் நோக்கங்களை அடைவதை அடிப்படையாக கொண்டே இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்:**

**ஆய்வுப் பிரதேசம்**

மட்டக்களப்பு நகரில் இருந்து 32km வடக்கு நோக்கிய கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் குடிநீரின் தரவேறுபாடு மிக்க கல்குடா, நாசிவன்தீவு, பேத்தாளை, வாழைச்சேனை தமிழ் ஆகிய நான்கு கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசம் ஆய்வுப் பிரதேசம் ஆகும். இதன் அமைவிடம் படம் 1 இல் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசமானது உலர்வலயமாக விளங்குவதுடன் குறைவான மழைவீழ்ச்சி மற்றும் கூடுதலான வெப்பநிலையைக் கொண்டு விளங்குகின்றது. சராசரி வெப்பநிலை $27^{0}C$ ஆகக் காணப்படுவதுடன் வடகீழ் பருவக்காற்று மழைவீழ்ச்சியின் மூலம் அதிக மழைவீழ்ச்சியை அனுபவிக்கும் பிரதேசமாகவும் உள்ளது. (Koralaipatru DS Division, 2020).




**விளக்கப்படம் 2.1 : ஆய்வுப் பிரதேச அமைவிடம்**

மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப் பிரதேசமானது கடல், ஆறுகளை கொண்டு காணப்படுவதுடன் இயற்கைத் தாவரங்களான கண்டல் தாவரங்களையும் அதிகளவில் கொண்டு காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கையின்படி (2021) மொத்த சனத்தொகை 28,403 பேராகக் காணப்படுகின்றது. இதில் ஆண்கள் 13,632 பேரும், பெண்கள் 14411 பேரும்

உள்ளடங்குகின்றனர். மேலும் இன அடிப்படையில் நோக்கும் போது தமிழர்கள் 84% ஆகவும், பறங்கியர் 7% ஆகவும், ஏனையோர் 9% ஆகவும் காணப்படுகின்றனர். (Koralaipatru DS Division, 2021) ஆய்வுப்பிரதேச மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக காணப்படுவது விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகும். இவற்றைத்தவிர சுற்றுலாக் கைத்தொழில், சிறு கைத்தொழில், சுயதொழில் முயற்சிகள், வர்த்தக செயற்பாடுகள், தனியார் துறை சார்ந்த தொழில்கள், அரச தொழில்கள் என்பன ஏனைய பொருளாதார நடவடிக்கைகளாக விளங்குகின்றன.

**தரவு சேகரிப்பும் தரவுப் பகுப்பாய்வும்**

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பரிவில் குடிநீரின் தரம் பற்றிய இவ்வாய்வானது அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு நுட்பங்களை உள்ளடக்கி இடரீதியான பகுப்பாய்வுகளை அடிப்படையாக கொண்டு கலப்பு முறையியலை (Mixed Methedology) பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தின் தரைத்தோற்ற உயரம் பற்றிய தரவுகள், காலநிலை தொடர்பான தரவுகள், குடிநீர்க்கிணறுகள் தொடர்பான தரவுகள், சனத்தொகை பற்றிய தரவுகள், சமூகபொருளாதார நிலை தரவுகள் போன்றவை முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டு பண்புசார், அளவுசார் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வுக்கான முதலாம்நிலைத் தரவு சேகரிப்பு நுட்பங்களாக பரிசோதனை முறை, நேரடியாக ஆய்வுப் பிரதேசத்திற்குச் சென்று Coordinate Software மூலமாக சேகரிக்கப்பட்ட இட நிலையங்கள், நேரடி அவதானிப்பு, நேர்காணல் ஆகியன பயன்படுத்தப்பட்டதுடன் ஆய்வு முறையில் ஆய்வுக் களமானது முழுக்குடியாய் கொள்ளப்பட்டு குடிநீர்க் கிணறுகளில் இருந்து 52 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு பெறப்பட்ட நீர் மாதிரிகள் குடிநீரின் தரத்தைப் பரிசீலிப்பதற்காக பௌதீக, இரசாயன பரமானங்களின் அடிப்படையில் காரகடினத்தன்மை (pH), மின்கடத்துதிறன்(EC), நீரில் கரைந்துள்ள மொத்த திண்மப் பதார்த்தங்கள்(TDS), கலங்கற்தன்மை(Turbidity), உவர்த்தன்மை(Salinity) ஆகிய பரமானங்கள் ஆய்வுகூடப் பரிசோதனை முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு அதன் மூலம் பெறப்பட்ட முடிவுகள் இவ்வாய்விற்கான முக்கியமான முதலாம்நிலைத் தரவுகளாக கொள்ளப்பட்டன.

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் அங்கு பரவிக் காணப்படும் பாதிப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள பாதிக்கப்பட்ட கிணறுகளில் 3% எனும் அடிப்படையில் நீர் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டது.

| கிராமசேவகர் பிரிவு | பாதிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை | மாதிரிகளின் எண்ணிக்கை(3%) |
|---|---|---|---|
| வாழைச்சேனை தமிழ் | 455 | 645 | 14 |
| கல்குடா | 501 | 703 | 15 |
| பேத்தாளை | 374 | 457 | 11 |
| நாசிவன்தீவு | 395 | 418 | 12 |
| **மாதிரிகளின் மொத்த எண்ணிக்கை** | | | **52** |

**அட்டவணை 3.9 : மாதிரி தெரிவு**

**மூலம் :** கோறளைப்பற்று பிரதேச செயலக அறிக்கை, 2022

ஆய்வுப் பிரதேசத்தில் நேரடியாக அவதானிக்கப்பட்ட விடயங்களாக கிணறுகளின் அமைவிடம் அவற்றின் பராமரிப்பு, குடிநீர்ப்பிரச்சினையைத் தூண்டும் மானிடக் காரணிகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை நேரடியாக களத்திற்குச் சென்று தரவுகளைப் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் பண்புசார் தரவுகளாக மாற்றப்பட்டு விபரணம் செய்யப்படுவதற்காகவும், ஆய்வினைத் திருத்தமான முறையில் மேற்கொள்வதற்கும் உண்மைத் தன்மையினைக் கண்டறிவதற்கும் அவசியமாகின்றது.

நேர்காணல் முறையினூடாக குடிநீர்ப் பிரச்சினை காரணமாக மக்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர், குடிநீர்ப் பிரச்சினைக்கான காரணங்கள் யாவை என்பவற்றை மக்களிடம் கேட்டு அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தன. ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக தகவல்களை திரட்டிக் கொள்வதற்காக வாய்மொழியாகவும் தரவுகளைத் திரட்டும் நோக்கில் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் திட்டமிடல் பிரிவின் திட்டமிடல் பணிப்பாளர், மட்டக்களப்பு நீர்ப்பாசன திணைக்கள் பொறியியலாளர், திட்டமிடல் உத்தியோகத்தரக்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள் போன்றோரிடம் நேர்காணல் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது. ஆய்வினை முன்னெடுத்துச் செல்வதற்காக கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்களாக குடிநீர்ப்பிரச்சினை தொடர்பான கால ரீதியான மாற்றங்கள், குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் சவால்கள், அரச ரீதியான முன்னெடுப்புக்கள், சமூகத்தோர் குடிநீர்ப் பிரச்சினைக்கு முன்வைக்கும் மாற்று வழிகள் போன்றன இவ்நேர்காணலின் மூலம் கலந்துரையாடப்பட்டன.

இரண்டாம்நிலைத் தரவுகளை பொறுத்த வரையில் இவை ஏற்கனவே வெளியிடப்பட்ட தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளாகும். கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் அறிக்கைகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் வெளியீடுகள், படத்தரவுகள், செய்மதிப்படங்கள் (USGS), இலங்கையின் புவிச்சரிதவியல் மற்றும் புவிவெளியுருவவியல் வரைபடங்கள், முன்னைய ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளங்கள் என்பவற்றில் இருந்து பல்வேறு தரவுகள் ஆய்வுக்காகத் திரட்டப்பட்டுள்ளன. இத்தரவு மூலங்கள் கோறளைப்பற்று பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம், வளிமண்டலவியல் திணைக்களம், மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களம், கோறளைப்பற்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை, நிலஅளவைத் திணைக்களம், நூலகங்கள் போன்ற அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனஙகளின் அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டடு ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களின் ஊடாகவும் பெறப்பட்ட அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபரவியல் முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் என்பவற்றின் மூலம் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசம், தரையுயரப்படம், குடிநீரின் இடரீதியான பரம்பல் வேறுபாட்டினைக் காட்டும் Interpolation Map ஆகியவை Arc GIS 10.4 மூலம் படமாக்கப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீர் மாதிரிகளின் ஆள்கூறுகள் Google Earth (Placemarks) மூலமாக எடுக்கப்பட்டு அவை Kml File ஆக மாற்றப்பட்டு பின்னர் GPS Visualizer மூலமாக GIS இல் அடையாளப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் Spatial Analysis இலுள்ள IDW விற்கூடாக இடரீதியான பரம்பல் வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. Earth Explore Website (USGS) மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட செய்மதிப்படிமங்கள் Arc GIS மென்பொருளில் உட்செலுத்துவதன் மூலமாக பின்னர் Arc Toolbox இன் Raster Interpolation இன் IDW இற்கூடாக DEM (Digital Elevation Model) தயாரிக்கப்பட்டது. அதற்கூடாகவே ஆய்வுப்பிரதேசத்தின் தரைத்தோற்ற உயர வரைபடம் தயாரிக்கப்பட்டது.

## ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### ஆய்வுப் பிரதேசத்தில் நீரின் தரம் தரம் தொடர்பான இரசாயன, பௌதிக பரமானங்களின் இடரீதியான பரம்பல்

குடிநீரின் தரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு நீரின் தரரீதியான பரிசோதனைகள் அவசியம் ஆகின்றது. அந்தவகையில் நீரின் பௌதிக இரசாயன பரமானங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளது. குறித்த பரிசோதனைகளின் முடிவுகளின்

அடிப்படையிலேயே ஆய்வுப் பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக நம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். ஆய்வுப் பிரதேசத்தில் நீரின் தரம் தொடர்பான இரசாயன பௌதீக பரமானங்களின் இடரீதியான பரம்பல் பின்வரும் பரமானங்களின் அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ளது.

- குடிநீரின் pH பெறுமானம்
- குடிநீரின் மின்கடத்துதிறன்
- குடிநீரின் கலங்கற்தன்மை
- குடிநீரின் TDS பெறுமானம்
- குடிநீரின் உவர்த்தன்மை

**ஆய்வுப் பிரதேச குடிநீரின் pH பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**




**விளக்கப்படம் : ஆய்வுப்பிரதேச குடிநீரின் pH பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**

**மூலம் :** ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப் பிரதேசத்தின் குடிநீரின் pH பெறுமானத்தினை மாதிரிகளின் பெறுமானங்களின் அடிப்படையில் நோக்குகின்ற போது இங்கு அனைத்து கிணற்று நீரின் pH பெறுமானமானது உலக சுகாதார நிறுவனத்தினால் அனுமதிக்கப்பட்ட வரையறைக்குள் அமைந்து காணப்படுகின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் பெறப்பட்ட நீர் மாதிரிகளின் pH அளவானது 6.6 – 8.2 வரைக்குமாக வேறுபட்டு அமைகின்றது. ஆகக்குறைந்த பெறுமானமானது வாழைச்சேனைதமிழ் பிரதேசத்தில் பெறப்பட்டுள்ளது. குறித்த குடிநீர்க்கிணறானது வீதி அகலமாக்கல் நடவடிக்கையின்போது குறித்த வீட்டுக் காணியிலிருந்து வீதிக்கு வெளியே கிணற்றின் அரைவாசிப் பகுதி வெளியிலும், எஞ்சிய அரைப்பகுதி குறித்த வீட்டுக் காணியினுள்ளும் தெரியுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசத்தில் மின்கடத்துதிறன் பெறுமானத்தின் இடரீதியான பரம்பல்**

ஆய்வுப்பிரதேசத்தில் பெறப்பட்ட மாதிரிகளின் மின் கடத்துதிறன் பெறுமானமானது 0.21 – 8.99 mS/cm வரை வேறுபடுகின்றது. ஆகக்குறைந்த மின்கடத்துதிறனானது பேத்தாளை கிராமசேவகர் பிரிவு எல்லைக்குள் 0.21 mS/cm ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு குறைவான மின்கடத்துதிறனை இக்கிணற்று நீர் பெற்றிருப்பதற்கு இப்பிரதேச மண் படையமைப்பு காரணமாக அமைய முடியும். எனினும் ஆகக் குறைந்த இம்மின்கடத்துதிறன் உலக சுகாதார அமைப்பினால் (WHO) வரையறுக்கப்பட்டு அனுமதிக்கக்கூடிய எல்லைப் பெறுமானமான 3.5 mS/cm எனும் அளவிற்கு உள்ளேயே அமைந்து காணப்படுகின்றது.

**விளக்கப்படம் : ஆய்வுப்பிரதேச குடிநீரின் EC பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**

**மூலம்** : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023




**ஆய்வுப் பிரதேசத்தில் TDS பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**

**விளக்கப்படம் : ஆய்வுப்பிரதேச குடிநீரின் EC பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**




**மூலம்** : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

ஒரு லீற்றர் குடிநீரில் சராசரியாக 500mg பதார்த்தங்கள் கரைந்து காணப்படும். மொத்த கரைந்துள்ள திண்மப்பதார்த்தங்கள் எனும்போது அசேதன உப்புக்கள் மற்றும் மிகக் குறைந்தளவில் சேதனப் பொருட்களையும் உள்ளடக்கியதாகும். ஆய்வுப் பிரதேசத்தில் TDS இன் ஆகக்கூடிய பெறுமதியானது நாசிவன்தீவு பிரதேசத்திலேயே காணப்படுகின்றது. 1625mg ஆகும். ஆகக்குறைந்த TDS இன் பெறுமதியானது 157mg பேத்தாளை கிராமசேவகர் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**ஆய்வுப்பிரதேசத்தில் உவராதல் பெறுமானத்தின் இடரீதியான பாங்கு**

**விளக்கப்படம்: ஆய்வுப்பிரதேசத்தின் உவராதல் பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**




**மூலம்** : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

ஆகக்குறைந்த உவராக்க அளவானது 0.1 ஆகக் காணப்படுகின்றது. அவை வாழைச்சேனைதமிழ், பேத்தாளை, கல்குடா ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் அதிகளவில் அடையாளம் காணப்பட்டது. நாசிவன்தீவு கிராமகேவகர் பிரிவில் காணப்படும் குடிநீர் கிணறுகளில் மாத்திரமே உவராக்க அளவு அதிகளவில் காணப்படுகின்றது. இங்கு 0.60 – 9.99 வரையான அளவில் உவராக்கம் காணப்படுகின்றது.

**ஆய்வுப்பிரதேசத்தில் கலங்கல்தன்மை பெறுமானத்தின் இடரீதியான பாங்கு.**

**விளக்கப்படம்: ஆய்வுப்பிரதேசத்தின் கலங்கற்தன்மை பெறுமானத்தின் இடரீதியான பரம்பல் பாங்கு**




மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீர்க்கிணறுகளில் அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாக கலங்கற்தன்மை காணப்படுகின்றது. அதிகமான பகுதிகளில் நீரானது கலங்கற்தன்மை அற்ற நிலையில் காணப்படுகின்றது. ஆகக் குறைந்த கலங்கற்தன்மை பெறுமானமானது 0.00 ஆகக் காணப்படுகின்றது. வாழைச்சேனைதமிழ், பேத்தாளை, நாசிவன்தீவு ஆகிய பிரதேசங்களின் பெரும்பாலான கிணறுகளில் கலங்கற்தன்மை 0.00 என்ற நிலையைக் கொண்டுள்ளன. குறைந்தளவான கலங்கற் தன்மை காணப்படும் போது நீரானது தெளிவுத்தன்மையுடையதாக உள்ளது என்று அர்த்தமாகும். அதே சமயத்தில் இதன் அளவு அதிகரிக்கும் போது நீரின் தெளிவுத்தன்மை மிகவும் குறைவாகக் காணப்படும். இருப்பினும் தெளிவான நீரை தூய்மையான நீர் எனக் கருதவும் முடியாது. தெளிவான கலங்கற்தன்மையற்ற நீரில் கண்ணுக்கு தெரியாத சேதன பதார்த்தங்கள் கரைந்திருக்கும். அவை நிறத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தாவிட்டாலும் மணத்தில் வேறுபாட்டினைக் காட்டும். ஆகக்கூடிய கலங்கற்தன்மை

பெறுமானமானது கல்குடா பிரதேசத்தில் காணப்படும் கிணற்றிலிருந்தே பெற்ப்பட்டது. இது 6.93 FAU என்ற உயர்வான பெறுமானத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள்

### பௌதிகக் காரணிகள்

- **ஆய்வுப்பிரதேச அமைவிடமும் தரைத்தோற்ற அமைப்பும்**

ஆய்வுப்பிரதேசமானது கடலோர சமவெளி பாங்குகளுக்கு மிகவும் அண்மித்த பகுதியாகும். இது கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் வடக்கே வாழைச்சேனை ஆறு மற்றும் கிழக்கில் கடற்பிரதேசத்தையும், தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் நிலப்பரப்பையும் எல்லைகளாகக் கொண்டு அமையப்பெற்றுள்ளன. இப்பகுதிகளின் தரைத்தோற்ற உயரம் குறித்து நோக்கும்போது வடக்கு அரைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து தாழ்வான பகுதிகளாகவும் தெற்கு அரைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து உயரமான பகுதிகளாகவும் காணப்படுகின்றன. நாசிவன்தீவு பிரதேசத்தில் காணப்படும் குடிநீர்க்கிணறுகள் மிகவும் ஆழம் குறைந்தாக காணப்படுகின்றன.

**செய்மதிப்படம்: நாசிவன்தீவு மற்றும் கல்குடா பிரதேசத்தின் தரைத்தோற்றம்**




**மூலம்** : Google Earth, 2023

ஆய்வுப்பிரதேசத்தின் ஆகக்கூடிய உயரம் கடல் மட்டத்திலிருந்து 18.5 மீற்றர்களாகவும், மிகவும் தாழ்வான பகுதி 2.1 மீற்றராகவும் காணப்படுகின்றது. இதற்கு இப்பிரதேசத்தின் தரைத்தோற்றம் காரணமாக அமைகின்றது. அத்துடன் நாசிவன்தீவு பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் கடல் மட்டத்திலிலுந்து தாழ்ந்த பகுதிகளாக காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் ஏனைய பெரும்பாலான பகுதிகள் கடல் மட்டத்திலிருந்து உயரமான பகுதிகளாக காணப்படுகின்றன. அப்பகுதிகளில் குடியிருப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. நாசிவன்தீவு பிரதேசத்தில் காணப்படும் குடிநீரின் சவர் தன்மைக்கு

இப்பகுதிகள் கடல்மட்டத்திலிருந்து தாழ்வாகவும், சுற்றிவர நீரினால் சூழப்பட்ட ஒரு தீவாக காணப்படுகின்றமையும் காரணமாக இருக்கலாம்.




**விளக்கப்படம்: ஆய்வுப்பிரதேசத்தின் தரைத்தோற்ற உயரம்**

மூலம் : ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

- **ஆய்வுப் பிரதேச மழைவீழ்ச்சியும், வறட்சியும்**

ஆய்வுப்பிரதேசமானது வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி காற்றின் மூலமாக அதிகளவு மழைவீழ்ச்சியினை பெற்றுக் கொள்ளுகின்றது. இவ்வாறான மழைவீழ்ச்சியானது தற்போது குறைந்து கொண்டுவரும் போக்கைக் காட்டுகின்றது. இதனால் வடகீழ் பருவப் பெயர்ச்சி காற்றுக்கள் வீசும் காலங்களில் இருந்து அதன் வீச்சுப் போக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமை ஆய்வுப்பிரதேசத்தில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான பாதிப்புக்களில் ஒரு விடயமாகக் காணப்படுவது சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஆகும். இக்காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் பெரும்பாலான கிணறுகளின் நீர் மட்டமானது அதிகரித்து காணப்படுவதோடு தொங்கல் நிலை பதார்த்தங்கள், ஏனைய திண்மப் பொருட்களின் சேர்க்கை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்தோடு வறட்சி காலங்களில் கிணறுகளில் தோற்றம் பெற்றிருந்த கிணற்று வளரிகளின் கழிவுகள் மேற்பரப்பினை வந்தடைகின்றமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

- **சுனாமி அனர்த்தமும், தரைக்கீழ் நீர் உவராதலும்**

பெரும்பாலானவர்களின் கருத்துப்படி ஆய்வுப்பிரதேசத்தில் அதிலும் குறிப்பாக நாசிவன்தீவு, கல்குடா, வாழைச்சேனை தமிழ் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் காணப்படும் பெரும்பாலான குடிநீர்க் கிணறுகள் சுனாமிக்குப் பின்னர் உவராக்கம் அடைந்துள்ளன. இதற்கு காரணம் 2004.12.26ம் திகதி அன்று குறித்த பிரதேசங்களுக்கு அண்மித்த கடல்கள் பெருக்கெடுத்து அவை மக்கள் வாழும் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் நுழைந்து தரைக்கீழ் நீரோடு கலந்து விட்டன. இதன் காரணமாக வாழைச்சேனை தமிழ் மற்றும் கல்குடா ஆகிய பிரதேசங்களில் காணப்படும் கிணறுகளில் உவராக்கம் ஏற்படலாயிற்று.

- **ஆய்வுப்பிரதேச மண் அமைப்பு**

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட நான்கு கிராமசேவகர் பிரிவுகளில் கல்குடா மற்றும் நாசிவன்தீவு ஆகிய பகுதிகளிலேயே அதிகளவில் தென்னை மரங்களை அவதானிக்க முடிந்தது. தெங்குச்செய்கை செறிந்து காணப்படும் பகுதிகளில் வண்டல் செறிவு அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான மண் அமைப்பானது மணல்பாங்கானதாகக் காணப்படுகின்றது. இம்மண் அமைப்பானது இலகுவில் நீரினை ஈர்த்துக் கொள்ளும் தன்மை கொண்டது. இவ் மண்ணின் தன்மையாது அவை காணப்படும் பிரதேசங்களில் அதிகளவில் மாசடைந்த நீரானது உட்செல்லுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கிணற்று நீரை அடிப்படையாகக் கொண்ட விவசாய நடவடிக்கைகளும் இப்பகுதியின் தரைக்கீழ் நீரில் பாதிப்பினைச் செலுத்தி வருகின்றது.

- **கிணறுகள் இயல்பாகவே கீழிறங்குதல்**

ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் பெரும்பாலான குடிநீர்க்கிணறுகள் இயல்பாகவே நிலத்தினுள் கீழிறங்கும் தன்மையை அதிக மழைவீழ்ச்சியை பெறும் காலங்களிலும் வெள்ளம் ஏற்படும் காலங்களிலும் அவதானிக்க கூடியதாக உள்ளன. குறித்த பிரதேசத்தில் காணப்படும் மண் இறுக்கமின்றியும், காற்றிடைவெளி அதிகம் மிக்கதாகவும் காணப்படுகின்றமை இதற்கு காரணமாக இருக்கலாம். இவ்வாறான கிணறுகளை பேத்தாளை மற்றும் கல்குடா பிரதேசத்தில் அதிகளவில் அவதானிக்க முடிந்தது. கிணறுகள் மழைவீழ்ச்சி காலங்களில் இவ்வாறு கீழிறங்கும் போது கழிவுநீர் மற்றும் தொங்கல் நிலையில் காணப்படும் பல்வேறு பதார்த்தங்கள் கிணற்றினுள் ஊடுருவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதை நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்ட தருணங்களில் கண்டறிய முடிந்தது. கல்குடா பிரதேசத்தில் இவ்வாறான நிலைமை காணப்பட்ட கிணற்றில் கலங்கல் தன்மை அதிகமாக காணப்பட்டமைக்கு இது ஒரு பிரதான காரணம் எனலாம். இவ்வாறு கிணறுகளின் இயல்பான கீழிறங்கும் நிலைமை சில வேளைகளில் இடிந்துவிழும் ஆபத்தையும் விளைவிக்கும்.

**மானிடக் காரணிகள்**

- **கிணறுகளின் ஒழுங்கற்ற பராமரிப்புக்கள் :** ஆய்வுப்பிரதேசத்தில் அவதானிக்கப்பட்ட விடயங்களில் ஒன்றாக இப்பிரதேசத்தில் குடிநீருக்காக பயன்படுத்தப்படும் கிணறுகள் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. கிணறுகளை சுற்றி எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாத காரணத்தினால் பலத்த காற்று வீசும் போது அல்லது தாவர விலங்குகளின் எச்சங்களும் வந்தடைந்து குறித்த கிணறுகளின் நீரானது பாதிக்கப்படுகின்றது. அத்துடன் பயன்படுத்தப்படும் பம்பிகள் மற்றும் கிணற்று நீரைப் பெற்றுக் கொள்ளும் வாளிகள், கயிறுகள் போன்றவற்றை சரியான முறையில் பயன்படுத்தாத காரணத்தினாலும் கிணற்று நீரின் தன்மையானது மாற்றமடைகின்றது. மேலும் குடிநீர் கிணறுகளுக்கு அருகிலேயே குளித்தல், ஆடைகளைக் கழுவுதல் மற்றும் ஏனைய இதர செயற்பாடுகளை மேற்கொள்வதனால் குறித்த கிணற்றைச் சுற்றி சவர்க்கார நீர் தேங்குவதோடு அதனால் உருவாகின்ற கழிவு நீரானது மீளவும் கிணற்றை சென்றடையும் சந்தர்ப்பம் இப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றது. சில கிணறுகளில் அதிகமாக கயிற்றுத் தும்புகளும், பறவைகளால் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட விலங்குகளின் எச்சங்களும் அவதானிக்கப்பட்டது.

**ஒளிப்படம்: திறந்த வெளியில் பாதுகாப்பு எதுவுமின்றி காணப்படும் குடிநீர்க்கிணறுகள்**



**கால்நடை வளர்ப்பு**

மூலம் : வெளிக்கள ஆய்வு, 2023

- **கைவிடப்பட்ட குழாய்க்கிணறுகள் :** ஆய்வுப்பிரதேசத்தில் 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட மீள்குடியேற்ற திட்டங்களினால் இப்பிரதேசம் அச்சந்தர்ப்பத்தில் பிரதேசவாழ் மக்கள் வேண்டி நின்ற குடிநீர் தேவையினை உடனடியாக ”ர்த்தி செய்யும் நோக்கில் அதிகளவான பிரதேசங்களில் அரச தனியார் நிறுவனங்களின் துணையுடன் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன. இக்குழாய் கிணறுகள் பிற்பட்ட காலங்களில் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் இக்குழாய்கிணறுகளின்

அமைவிடங்களை அண்மித்த பகுதிகளில் குடிநீரின் தரத்தில் மாற்றங்கள் அவதானிக்கடப்பட்டுள்ளது. தற்பொழுது பாவனைக்கு உட்படுத்தப்படும்

குழாய் கிணறுகளின் தரமானது முற்றுமுழுதாக மாற்றமடைந்து காணப்படுகின்றது. குறித்த பிரதேசத்தில் அமைக்கப்படும் குழாய் கிணறுகளானது கைவிடப்பட்ட பின்னர் அப்பகுதிகளில் இருந்து அகற்றுவது என்பது கடினமான காரியமாகும். மேலும் குழாய் கிணறுகள் நிலத்தடிநீரை முழுவதுமாக உறிஞ்சும் தன்மை கொண்டவையாகும். கிழக்கு மாகாணத்தின் அதிகமான பகுதிகளில் குழாய் கிறுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நடவடிக்கைகளும் ஆய்வுப்பிரதேசத்தின் குடிநீர்ப்பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாகும்.

**ஒளிப்படம்: நாசிவன்தீவு பகுதியில் கைவிடப்பட்ட குழாய்க்கிணறுகள்**



மூலம் : வெளிக்கள ஆய்வு, 2023

- **அதிக ஆழத்தில் கிணறுகளைத் தோண்டுதல் :** ஆய்வுப் பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவும் குடிநீரின் அளவு தொடர்பான பிரச்சினைக்கான காரணமாக இப்பகுதிவாழ் மக்கள் கிணறுகளை தோண்டும்போது மிகவும் ஆழமாகத் தோண்டுகின்றார்கள். தண்ணீருக்காக கிணறு தோண்டும் போது மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். தளர்வான மண் காணப்படும் பகுதிகளில் கிணறுகள் தோண்டப்பட்டு இடிந்து போய் கைவிடப்பட்டும் காணப்படுகின்றன. மேலும் அடித்தளப்பாறை வரைக்கும் கிணறுகள் தோண்டப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த பாறையின் தன்மையினை அக்கிணற்று நீரும் கொண்டிருக்கும். ஆய்வுப்பிரதேசத்தின் பேத்தாளை, கல்குடா பகுதிகளில் இவ்வாறான பிரச்சினைகள் அதிகளவில் காணப்படுகின்றன.

- **தரம் பிரிக்கப்படாத கழிவுகள் புதைக்கப்படுதல் :** ஆய்வுப் பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட நான்கு கிராமசேவகர் பிரிவுகளில் வாழைச்சேனைதமிழ் மற்றும் கல்குடா பகுதிகளை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியின் செல்வாக்கானது பிரதான வீதியினை அண்மித்து

பல்வேறு கடைத் தொகுதிகளின் தோற்றத்திற்கு வழிவகுத்துள்ளது. அத்துடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் அமைவிடம் போன்றவை மனித நடமாட்டத்தையும் அவர்களால் உருவாக்கப்படும் திண்மக்கழிவுகளையும் குறித்த சூழலில் உருவாக்கியுள்ளது. குறிப்பாக நாசிவன்தீவு பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் சிரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்படுவதில்லை. வாழைச்சேனை பிரதேசசபையும் இது தொடர்பில் அக்கறை செலுத்தியதில்லை. அத்துடன் குறித்த பிரதேசத்தில் காணப்படும் திறந்த வெளிகளில் குப்பைகள் வீசப்பட்டும், வீடுகளிலும் குப்பைகள் தரம்பிரிக்கப்படாமல் புதைக்கப்பட்டும் வருகின்றன. இவை மழைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு வேறு இடங்களினை மாசுபடுத்துகின்றது. திண்மக்கழிவுகள் உக்கி மண்ணோடு சேர்வதற்கு நீண்ட காலம் எடுக்கும். இவ்வாறான நிலையில் மண்ணின் நுண்துளை இடைவெளிகளை உக்கலடையாத கழிவுகள் நிரப்பி விடுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் மழை பெய்கின்ற போது தரைக்கீழ்நீரானது நிலத்தில் ஊடுருவி செல்வதற்கான வழிகள் தடைப்படுகின்றது. அத்தோடு தரம் பிரிக்கப்படாத கழிவுகள் நிலத்தடி நீர் வளத்தினை அதிகளவில் மாசாக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

- **தொழிற்சாலைகளின் செயற்பாடுகள்** : ஆய்வுப் பிரதேசத்தில் அதிகளவில் ஐஸ் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. மொத்தமான நான்கு ஐஸ்தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. அத்துடன் கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றருக்கும் உட்படாத ஒரு நிலப்பரப்பில் இவ்வாறான தொழிற்சாலைகள் அமைக்கப்படுவது என்பது சாத்தியமற்ற ஒரு விடயம் ஆகும். ஏனெனில் இத்தொழிற்சாலை குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் தகைகீழ்நீர்வளம் குறைவடைய பிரதான காணமாக அமைகின்றது. இத்தொழிற்சாலைகளில் இடம்பெறும் செயற்பாடுகள் காரணமாக அதிகளவு ஆழத்திலும் தரைக்கீழ்நீர் உறிஞ்சப்பட்டு வருகின்றமையால் அடித்தள பாதைத்தளங்களுக்கடையில் காணப்படும் நீரும் சேர்த்து உறிஞ்சப்படுகின்றன. இது நீருடன்’ சேர்த்து பாறைகளில் காணப்படும் கனியங்களையும் மேலே கொண்டு வருகின்றன. இக்கனிமங்கள் பாறைப்படைத்தளங்களின் மேல் காணப்படும் தரைக்கீழ்நீருடன் சேர வாய்ப்புள்ளதால் அவை நீரின் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அத்தோடு பிரதேசத்தில் காணப்படும் மீன்வாடிகளில் இருந்து வெளிறேற்றப்படும் கழிவு நீர் மற்றும் ஏனைய கழிவுகள் வாழைச்சேனை ஆற்றிலேயே விடப்படுகின்றன. இத் தொழிற்சாலைகளின் இவ்வாறான செயற’பாடுகள் தரைக்கீழ்நீர் மாசடைந்து குடிநீர்ப் பிரச்சினைகளும் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் அதிகரிக்க காரணமாகியுள்ளது.

- **ஒழுங்கற்ற வடிகாலமைப்புக்கள்** : ஒரு பிரதேசத்தின் முக்கிய உட்கட்டமைப்பு கூறாக காணப்படுவது அப்பிரதேசத்தின் வீதி மற்றும் வடிகாலமைப்பு செயற்பாடுகளாகும். இவை கட்டாயமாக ஒருபிரதேசத்தில் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். சில காலங்களில் திடீரென ஏற்படுகின்ற கனத்த மழை பொழிவு காரணமாக வாய்க்கால்கள், கால்வாய்கள், பள்ளமான வீதிகள், சதுப்பு நிலங்கள் போன்றன நீர் கொள்ளளவை தாண்டி வெளிப்பாய்ந்து வெள்ள அனர்த்தத்தினை ஏற்படுத்தி விடுகின்றன. ஒழுங்கான முறையில் கால்வாய்கள்

அகலமாக்கப்பட்டு மீளுகை செய்யப்பட்டு தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லை எனில் தாழ் பிரதேசங்கள் அடிக்கடி வெள்ள ஆபத்தினுள் சிக்கி விடுகின்றன. கோறளைப்பற்று பிரதேசமானது அடிக்கடி வெள்ள ஆபத்தினை சந்திக்கின்ற ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. கடல் மட்டத்தில் இருந்து உயரம் குறைவான பகுதிகள் என்ற காரணத்தினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறான வெள்ள நீர்த் தேக்கமானது தரைக்கீழ் நீருடன் கலந்து நீரின் தரத்தினை அதிகளவில் பாதிப்படையச் செய்கின்றது. வாழைச்சேனைதமிழ் பிரதேசத்தின் வீதியின் இரு மருங்குகளிலும் வெட்டப்பட்டிருக்கும் கால்வாய் ஆனது வறட்சியான காலங்களில் திண்மக்கழிவுகள் நிறைந்த பகுதியாக தோற்றம் அளிக்கின்றது. திடீரென மழை பொழிகின்ற போது கழுவு நீர் செல்வதற்கான பாதை தடைப்படுகின்றது. அத்துடன் கால்வாய் முழுவதும் சிறிய தாவர செடி கொடிகளின் பரவலினையும் அவதானிக்க முடியும். ஆய்வுப்பிரதேசத்தின் கல்குடா கிராமசேவக பிரிவில் குடிநீர் வழங்கலினை மேற்கொள்வதற்கான குழாய்கள் புதைக்கும் செயற்றிட்டமானது ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாட்டுக்காக அதிகளவிலான தெருவோர மரங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

- **விவசாய நடவடிக்கைகள் :** விவசாய நடிவடிக்கைகளுக்கு நீர் இன்றியமையாத ஒனறாகும். இந்நீரானது மழைவீழ்ச்சியின் போது நேரடியாகப் பெறப்பட்டாலும் மழைவீழ்ச்சி கிடைக்காத காலப்பகுதிகளில் கிணறுகளில் இருந்து உயர் பம்பிகளின் மூலம் நீர் இறைக்கப்பட்டு அவை பயிர்ச்செய்கை நடவடிக்கைக்குப் பயன்படுகின்றது. தரைக்கீழ்நீரானது தரைத்தோற்றத்திற்கேற்ப இடத்துக்கிடம் மாறுபடும் தன்மை கொண்டது. அத்தோடு இப்பிரதேசத்தில் நிகழ்கின்ற பருவகால வேறுபாட்டிற்கேற்ப தரைநீர்ப்பீடமானது மாறுபாடுடையது. கிணற்று நீரைப் பயன்படுத்தியே விவசாயத்தில் உப உணவுத்தானிய பயிர்ச் செய்கை மற்றும் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக நீர்ப்பம்பிகளின் ஊடாக பயிர்களுக்கு நீரினை பாய்ச்சுகின்றனர்.’

- **மணல் அகழ்வு செயற்பாடுகள் :** ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலான பகுதிகள’ தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றது. நாசிவன்தீவு பகுதியில் இடம்பெறும் சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் இனிவருகின்ற காலங்களில் இப்பகுதிகளை மேலும் தாழ்வான பகுதிகளாக மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக வாழைச்சேனை ஆற்றில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் காரணமாக ஆற்றின் ஆழம் அதிகரித்து கடல்நீர் ஆறுடன் கலந்து அதனை அண்மித்த நாசிவன்தீவு ஆகிய தாழ்பிரதேசம் முழுவதும் உவர்நீர் ஊடுருவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

- **கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுதல்** : நாசிவன்தீவில் காணப்படும் அதிகளவான கண்டற்காடுகள் வாழைச்சேனை ஆற்றுக்கழிமுகம் வரை பரந்து காணப்படுகின்றது. இக்காடுகளும் அதிகமான விறகு தேவைகள் மற்றும் இத்தாவர விதானங்களை அண்மித்து மணல் அகழப்படுவதாலும் ஆபத்தினை எதிர்நோக்கி வருகின்றன. இக்காடுகள் அழிவடையும் போது உவர்நீர் ஊடுருவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. இக்கண்டல்தாவர விதானப்படையானது வாழைச்சேனை ஆற்று பகுதியில் (நாசிவன்தீவு கடற்கரையை அண்மித்த பகுதயில்) மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் மழைக்காலங்களில் ஆற்றுப்பகுதியில் நிரம்பும் நீரானது நாசிவன்தீவின் கிழக்கே உள்ள கடலுடன் கலந்து குறித்த பிரதேசத்தினுள் ஊடுருவும் வாய்ப்பு காணப்படுகின்றது. இனிவருகின்ற காலங்களில் இவ்வாறானதொரு பாரிய அனர்த்தத்தினை இப்பிரதேசம் எதிர்கொள்ளும்.

**ஒளிப்படம்: வாழைச்னேை ஆற்றங்கையை அண்டிய சதுப்புநிலப் பகுதியில்**



**அழிக்கப்பட்டு வரும் கண்டல் தாவரங்களும் தற்போதைய நிலையும்.**

மூலம் : வெளிக்கள ஆய்வு, 2023

- **சூரியஒளி ஊடுறுவக்கூடிய பகுதிகளில் கிணறுகள் காணப்படாமை.**

நீரின் வெப்பநிலை அதிகரிக்கும் போது நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவானது குறைவடையும். அதே சமயத்தில் நீரின் வெப்பநிலை குறைவடையும் போது நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவானது அதிகரிக்கும். அதிகரிக்கும் வெப்பநிலைக்கும் கரைந்துள்ள ஒட்சிசனுக்கும் நேரடித் தொடர்பு காணப்படுகின்றது. நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு குறைவடையும் போது நீர்வாழ் உயிரிகளின் செயற்பாடானது பாதிக்கப்படும். அதே சமயத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் போது நீரில் காணப்படும் நுண்ணங்கிகளினது தொழிற்பாடு அதிகரித்து சேதனப் பதார்த்தங்களின் பிரிந்தழிகை செயற்பாடு அதிகரிக்கும். இதன் பொருட்டு மேலும் ஒட்சிசன் தேவை அதிகரிக்கப்படும். வெப்பநிலை அதிகரிக்கும் போது நீர்வாழ் தாவரங்களின் ஒளித்தொகுப்பும் பாதிக்கப்படும். குறிப்பிட்ட சில தாவரங்களுக்கு குறிப்பிட்ட அளவிலான வெப்பநிலையே அவசியமாகும்.

இவ்வாறாக கிணற்று நீரில் காணப்படும் நுண்ணங்கிகள் மற்றும் தாவர வர்க்கங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த சூரிய ஒளி மிகவும் அவசியமான காரணியாகக் காணப்படுகின்றது. மேலும் சூரியஒளியானது நீரிலுள்ள ஆபத்தை விளைவிக்கும் நுண்ணங்கிகள் மற்றும் பக்றீரியாக்களை அழிக்கும் வல்லமை கொண்டதாகும்.

**ஒளிப்படம்: மரங்களின்கீழ் அமைக்கப்பட்ட கிணற்றில் சூரியஒளி உட்புகாமையினால் நீரின்**



**மேற்படையில் காணப்படும் படிவுகள்.**

மூலம் : வெளிக்கள ஆய்வு, 2023

- **குடிநீர்க் கிணறுகளின் பற்றாக்குறை**

ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் குடிநீர்க் கிணறுகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கைக்கு அமைய காணப்படுவதில்லை. இது இப்பிரதேசத்தில் காணப்படும் மிகப்பெரிய சவாலாகும். இவ்வாறாக குடிநீர்க் கிணறுகள் காணப்பட்டாலும் அது குடிப்பதற்கோ அல்லது ஏனைய தேவைகளை நிறைவேற்றுவதற்கோ பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. நான்கு குடும்பங்கள் ஒரு கிணற்று நீரினை குடிநீராகப் பயன்படுத்துகின்ற நிலமையும் காணப்படுகின்றது.

- **ஆழமற்ற கிணறுகள்**

ஆழமில்லாத கிணறுகள் அடிமண் நீரால் ஆனவை. கழிவுநீரால் இவை எளிதாக பாதிக்கப்படலாம். இவ்வாறான கிணறுகள் பொதுவாக 10 அடிக்கும் குறையாமல் இருக்க வேண்டும். இவ்வாறான கிணறுகளின் அமைவிடங்களை வாழைச்சேனைதமிழ் பிரதேசத்தின் பல இடங்களில் அவதானிக்கக்கூடியதாக காணப்பட்டது. இப்பகுதிகளுக்கு மிகவும் அண்மைய பகுதிகளில் காணப்படும் பரந்துபட்ட சதுப்பு நிலத் தொகுதியானது மழைக்காலங்களில் ஒரு

குளம் போன்ற தோற்றத்தினைக் கொண்டிருக்கும். குறித்த சதுப்பு நிலத்தில் ஏனைய பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் பல் மாசாக்க கழிவு நீரும் தேங்கும் இடமாக காணப்படுகின்றது. இதனை அண்மித்த பகுதிகளில் ஆழமற்ற வகையில் கிணறுகளை தோண்டும் போது குறித்த நீரால் கிணற்று நீரின் தரமானது பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

- **வாழைச்சேனை ஆற்றினை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம்.**

இதன் காரணமாக ஆய்வுப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பாதுகாப்பான குடிநீரை பெறுவதில் பாரிய இன்னல்களை அனுபவிக்கின்றனர். இத்துறைமுகம் மக்கள் வாழும் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த துறைமுகத்தை அண்மித்து வாழும் வாழைச்சேனை பிரதேச மக்களின் கிணறுகளில் கலங்கல் தன்மை அதிகமாக காணப்படுவதுடன் வெட்டப்பட்ட இறந்த மற்றும் மீன்களின் உடற்கழிவுகளை காகங்கள் கொண்டு கிணற்றினுள் போடுவதுடன் இவ்வாற்று பகுதியிலேயே ஆழ்கடல் மீன்பிடிக்கு செல்லும் பாரிய பலநாட் கலங்கள் உட்பட அதிகளவான மீன்பிடி படகுகள் மற்றும் கப்பல்கள் தரித்து வைக்கப்படுகின்றன.

**செய்மதிப்படம் : வாழைச்சேனை ஆற்றங்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மீன்பிடி படகுகள்.**




மூலம் : Google Earth, 2023

**ஆய்வுப் பிரதேசத்தில் குடிநீரின் தரமாறுபாடு காரணமாக மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள்**

- **குடிநீரின் சுவையில் ஏற்படுகின்ற மாற்றங்கள்**

குடிநீர்ப்பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள ஆய்வில் குறித்த பிரதேசத்தின் குடிநீர்க்கிணறுகளின் நீரின் சுவை தொடர்பாக கேட்டு அறியப்பட்டது. பெரும்பாலும் இப்பிரதேசத்தில் குடிநீரில் உப்புச் சுவை காணப்படுவதோடு மேலும் நீரின் நிறம் தெளிவாகக் காணப்பட்ட போதிலும் பருகும் போது சுவை ரீதியிலான மாற்றத்தனை உணரக் கூடியதாக இருந்தது. மேலும் சில இடங்களில் நீரை பருகுவதற்கு முடியாமலும் உள்ளன. மேலும் நீரானது சிற்சில சமயங்களில் புளிப்பு சுவை மிக்கதாக காணப்படுகின்றது. இவ்வாறான நீரினை உணவு தயாரிப்பதற்காக பயன' படுத்தும் போது உணவிலும் சிறயளவிலான சுவை மற்றும் மண ரீதியிலான மாற்றத்தினை அவதானிக்க முடிகின்றது. கல்குடா பிரதேசத்தின் அபிவிருத்தி உத்தியோகாத்தரிடம் நேர்காணல் மேற்கொண்ட போது ''*எங்களது பிரதேசத்தில் பெரும்பாலான வீடுகளில் காணப்படும் கிணறுகளில் நீரானது சவர் சுவை மிக்கதாக காணப்படுகின்றது என வெளியிடங்களைச் சேர்ந்த பலர் நீரினை அருந்தும் போது கருத்து தெரிவிக்கின்றனர் என்றும் ஆனால் எமது கிராம மக்களுக்கு அவ்வாறு சுவையில் மாற்றம் தெரிவதில்லை அது பழகிவிட்டது*'' (ஆண்,வயது 41) எனவும் பதிலளித்தார்.

- **குடிநீரின் நிறம் மாற்றமடைந்து காணப்படுதல்**

தெரிவு செய்யப்பட்ட 4 கிராமசேவகர் பிரிவுகளிலும் வேறுபட்ட விதங்களில் குடிநீர் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிந்தது. நேரடியாக கிணறுகளின் பௌதிக நிலைமைகள் அவதானிக்கப்பட்ட போது சில கிறுகளில் நிறமானது கடும் நிறத்தினைக் கொண்டிருந்ததோடு சில கிணறுகளின் நீர் கண்ணுக்குப் புலப்படக்கூடிய நுண்ணிய துணிக்கைகளைக் கொண்டு காணப்பட்டன. இவ்வாறு கிணற்றுடன் தொடர்புடைய ஏனைய பயன்பாட்டு பொருட்களிலும் குறித்த படிவுகள் காணப்பட்டன. அத்துடன் இப்பகுதிவாழ் மக்கள் இது தொடர்பில் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறித்த மாற்றங்கள் தொடர்பில் போதியளவில் விளக்கத்தினை பெற்றிராத இப்பகுதிவாழ் மக்கள் தொடர்ச்சியாக குறித்த பிரதேசத்திலேயே கிணறுகளை உருவாக்குவதன் மூலமாக நன்னீரை பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றார்கள். எவ்வாறெனினும் சிறிது காலம் சென்ற பின்னர் கிணறுகளில் தரமானது முன்னைய நிலையினை விட மிகவும் மோசமான நிலையினை வெளிப்படுத்தியுள்ளது.கிணறுகளில் அவதானிக்கப்பட்ட நிறங்களாக இளம்பச்சை நிறம், கடும்பச்சை நிறம், இளஞ்சிவப்பு நிறம், போன்றவை காணப்பட்டன. இவ்வாறாக

அதிகளவு நிறத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் நாசிவன்தீவு, வாழைச்சேனைதமிழ் பிரதேசங்களில் இனங்காணப்பட்டது.

- **கிணற்றில் படிவுகள் மற்றும் கலங்கற்தன்மை அதிகரிப்பு**

ஆய்வுப்பிரதேசத்தின் குடிநீர்க்கிணறுகளில் அவதானிக்கப்பட்ட இன்னுமொரு சிக்கலான விடயமாக குறித்த குடிநீர்க்கிணறுகளில் வறண்ட மற்றும் மாரி காலங்களில் மிக நுண்ணிய அளவிலான பருப்பொருட்களை அவதானிக்க முடிகின்றது. இவை கிணறுகளில் நீரை இறைக்கும் போதோ அல்லது நீரினைப் பெற்றுக் கொள்ளும் போதோ மேலும் பரவும் நிலை காணப்படுகின்றது. இப்படிவுகள் காரணமாக குறித்த பிரதேச மக்கள் நீரினை வடிகட்டியே பருக வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் இம்மக்களிடம் சிறந்த நீர்வடிகட்டிகள் காணப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

**ஒளிப்படம்: கிணறுகளில் அவதானிக்கப்பட்ட பல்வேறுபட்ட நிறங்களும் கலங்கல் தன்மையும்**



மூலம் : வெளிக்கள ஆய்வு, 2023

- **பாசி போன்ற கிணற்று வளரிகளின் பெருக்கம்**

குடிநீர்க் கிணறுகளில் மேலும் அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாக காணப்படுவது பாசிகளின் வளர்ச்சியாகும். பாசிகள் போன்ற வேர் அமைப்பு இல்லாதா தாவரங்களின் பெருக்கமானது கிணற்று நீரில் ஒருவித துர்மணத்தினை உண்டாக்கியுள்ளது. அத்தோடு விரும்பத்தகாத கழிவுகளை இப்பாசிகள் கிணற்றினுள் உருவாக்கியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. கிணற்று வளரிகள் சில பழைய ஆழ் கிணறுகளிலும் பாவணைக்குட்படாத கிணறுகளிலும் அவதானிக்க கூடியதாக இருந்தது. இவற்றின் கழிவுகள் கிணற்று நீரில் விழுந்து அழுகிப்போகின்றன. இவை நாட்பட்ட காலங்களில் பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்தினைப் பெறக்கூடியவையாகக் காணப்படுகின்றன. கிணற்றுவாளிகளால் குடிப்பதற்ாக பெற்றுக் கொள்ளும் போது தொங்கல்கள் மற்றும் தூசுக்களோடு இணைந்த ஒரு தோற்ற நிறத்தினை குறித்த கிணறுகளின் நீரானது வெளிப்படுத்துவதை அவதானிக்க முடிந்தது.

- **நீர்ப் பூச்சிகளின் பெருக்கம்**

ஆய்வுப் பிரதேசத்தின் பெரும்பாலான கிணறுகளில் நீர்பூச்சிகளை அவதானிக்க கூடியதாகக் காணப்பட்டது.குறித்த இனங்கள் மழைக் காலங்களில் அதிகமாக கிணறுகளில் தத்தி திரிவதாக அப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றார்கள். இப்பூச்சிகள் சில நேரங்களில் குடிநீருடன் இணைந்து மேலே வருவதாகவும் குறிப்பிட்டனர். இப்பூச்சிகளை அகற்றுவதற்கு கிணறுகளில் குளோரின் இட வேண்டிய தேவையும் உள்ளதாகக் குறிப்பிடுகின்றார்கள்.

- **சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சிரமங்கள்**

ஆய்வுப் பிரதேசமானது குடிநீர்ப் பிரச்சினையினால் ஏற்படுகின்ற சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு அதிகளவில் பாதிக்கப்படுகின்றது. இந்த வகையில் இப்பிரதேச மக்கள் குடிநீரினைப் பெற்றுக் கொள்வதற்காக வேறு இடங்களுக்கு நகர வேண்டிய தேவை ஏற்படுகின்றது. வீடுகளில் சகல வசதிகளும் காணப்பட்ட போதிலும் இம்மக்கள் கடுமையான வறட்சியினாலும் அதிக வெப்பத்தினாலும் கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து நீர்ப்பற்றாக்குறையும் ஏற்படுவதன் காரணமாக சுத்தமான குடிநீரைபெற நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் கோறளைப்பற்று பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் அதிகளவான ஆண்கள் வேலை நிமித்தம் வெளியிடங்களுக்கு சென்று விடுவதனால் பெரும்பாலும் பெண்களும் சிறுவர்களுமே குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக வெளியிடங்களுக்கு செல்லுகின்றார்கள். இதனால் இவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். அயல் வீடுகளில் தண்ணீர் பெறச் சென்றாலும் குறித்த ஒரு கிணற்றை நம்பி ஐந்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றனர். ஏற்கனவே குறித்த பிரதேசத்தின் நீரானது மிகவும் ஆழமாகக் காணப்படுவதனால் ஒரு கிணற்றினை நம்பி இருக்கும் ஏனைய குடும்பங்களின் நீர்த் தேவையானது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதேசமயம் குடிநீர் பெற்றுக் கொள்ளச் செல்லும் இடங்களில் குறித்த கிணறுகளின் உரிமையாளர்களிடம் முரண்பாடுகளும் தோற்றம் பெறுகின்றன. இது தொடர்பாக கிராமவாசி ஒருவரிடம் கேள்வி எழுப்பியபோது *"குடிநீர் பிரச்சினை என்பது இப்பிரதேசத்தில் எவராலும் தீர்க்க முடியாத பிரச்சினையாக உள்ளது. நாம் அயல்வீடு ஒன்றிலேயே கடந்த பத்து வருடங்களாக நீரினைப் பெற்று வருகின்றோம். சில சந்தர்ப்பங்களில் நீரினைப் பெறச் செல்லும் போது அவர்களின் சினப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளோம். கிணற்று வாளி மாற்றுவதற்கும் கிணற்றை இறைப்பதற்கும் பணம் கேட்டு கிணற்று உரிமையாளர் பணத்தை கேட்டு வாங்குவார். அவ்வாறு பணம் வழங்கியும் எங்களது குடிநீர்த் தேவைகளுக்காக காலையிலோ அல்லது மாலை நேரங்களிலோ நீரினைப் பெறச்*

*செல்கின்ற போது சாஸ்திர சம்பிரதாயங்களை முன்னிட்டு அவரோடு முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன''. (பெண், வயது 36).*

- **குடிநீர் தொடர்பிலான பொருளாதாரப் பிரச்சினைகள்**

ஆய்வுப்பிரதேச மக்கள் குடிநீர்ப்பிரச்சினையினால் பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இப்பிரதேசங்களில் குடிநீர்ப் பிரச்சினைகள் தொடர்பான குடும்பங்களின் விபரம் பிரதேச செயலகப் பிரிவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் நீரினை சுத்திகரித்து தூயகுடிநீரை வழங்கிவரும் தனியார் கடை ஒன்றில் 1 லீற்றர் நீருக்கு 4 ரூபாய் என்ற அடிப்படையில் பணத்தை செலுத்தி நீரைப் பெற்று வருகின்றனர். இது பற்றி பிரதேசவாசி ஒருவரிடம் கலந்துரையாடியபோது *ஒரு நாளைக்கு ஒரு குடும்பத்தின் நீர்த்தேவையானது ”ர்த்தி செய்யப்படவேண்டுமென்றால் சாதாரணமாக 20 லீற்றருக்கும் மேற்பட்ட நீர் தேவைப்படுகின்றது. இதனால் நாளொன்றுக்கு நீருக்காக செலவழிக்கும் பணமும் அதிகளவாக தேவைப்படுகின்றது. கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் அசமந்த போக்குகள் காரணமாக நாங்கள் குடிநீரை விலை கொடுத்து வாங்குகின்றோம் மேலும் வீடுகளில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளுக்கு அதிகளவு நீர் தேவைப்படும்போது அதிக விலை கொடுத்து நீரினை பெற்றுக் கொள்ளும் நிலைமையும் காணப்படுகின்றது (ஆண்,வயது 39).* என்றார். ஆய்வுப்பிரதேச மக்களுடன் இது தொரட்பான கலந்துரையாடல்களை மேற்கொண்ட சமயத்தில் குடும்ப அங்கத்தவர்களை பொறுத்து குடிநீருக்கான செலவுகள் வேறுபட்டு அமைந்தன என்பதை அறியக்கூடியதாக இருந்தது.

**அட்டவணை 4.5 : தனியார் கடையில் குடிநீரை பெறும் குடும்பங்கள் சிலவற்றின் நாளாந்த பணச்செலவு**

| இல | பிரதேசம் | குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 1 நாளைக்கு தேவையான குடிநீர்(லீற்றரில்) | குடிநீருக்கான செலவு (1L×4) ரூபாயில். |
|---|---|---|---|---|
| 01 | கல்குடா | 04 | 12L | 12×4 = 48 ரூபா |
| 02 | கல்குடா | 07 | 30L | 30×4 = 120 ரூபா |
| 03 | கல' குடா | 03 | 20L | 20×4 = 80 ரூபா |
| 04 | பேத்தாளை | 03 | 10L | 10×4 = 40 ரூபா |
| 05 | பேத்தாளை | 09 | 40L | 40×4 = 160 ரூபா |
| 06 | பேத்தாளை | 04 | 22L | 22×4 = 88 ரூபா |
| 07 | வாழைச்சேனை தமிழ் | 05 | 20L | 20×4 = 80 ரூபா |
| 08 | வாழைச்சேனை தமிழ் | 05 | 15L | 15×4 = 60 ரூபா |
| 09 | வாழைச்சேனை தமிழ் | 07 | 25L | 25×4 = 100 ரூபா |

மூலம் : களஆய்வு, 2023

- **சுகாதாரரீதியிலான பிரச்சினைகள்**

இப்பிரதேசத்தில் ஆய்விற்காக பெறப்பட்ட மாதிரிகளை வைத்துப்பார்க்கும் போது இப்பகுதிவாழ் மக்கள் தரமற்ற நீரினை தொடர்ச்சியாக பயன்படுத்தி வருகின்றமை தெரிய வருகின்றது. தூய்மையான நீர் என புவி மேற்பரப்பில் எந்த மூலத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியாது. தூய்மையான நீர் எனப்படுவது மழைநீர் மாத்திரம் ஆகும். மீள்குடியேற்ற காலப்பகுதிகளில் அதிகளவான தனியார் மற்றும் அரச நிறுவனங்களால் குடிநீரின் தரம் தொடர்பாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது குடிநீர் தொடர்பான எந்தவொரு அறிவுறுத்தல்களும் மக்கள் மத்தியில் போய்ச்சேருவதில்லை. சுகாதார பரிசோதகர்களால் கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டு வந்தது. கொரோனா தொற்று காலங்களின் பின்னர் இந்நடவடிக்கைகளும் தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

குறித்த பகுதிவாழ் மக்கள் மறைமுகமான முறையில் நீர் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டு வந்தாலும் எவரும் இது குறித்து பெரிதுபடுத்துவதாக தெரியவில்லை. முற்றிலும் சுகாதார பராமரிப்புக்கள் இன்றிய நிலையில் காணப்படும் கிணறுகளில் இருந்து நீரைப் பெற்று சகல தேவைகளையும் நிறைவேற்றும் மக்கள் கட்டாயமாக குடிநீர் தொடர்பான நோய்களுக்கு ஆளாக்கப்படுவார்கள். அத்துடன் நீரில் கரைந்துள்ள மொத்த திண்மப்பதார்த்தங்களின் அளவு அதிகரிக்கும் போதே சிறுநீரக நோய் ஏற்படுகின்றது. மேலும் இப்பிரதேச மக்கள் குடிநீரை பயன்படுத்தும் போது சரும நோய்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். அத்தோடு இந்நீரினை பயன்படுத்தும் போது தலைமுடி உதிர்வு, பற்கள் மஞ்சள் நிறமாதல் போன்ற பிரச்சினைகள' ஏற்படுவதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

## முடிவுரை

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீரின் தரம் பற்றிய இவ்வாய்வானது குடிநீரின் தரம் தொடர்பான பரமானங்களின் இடரீதியான பரம்பல் பாங்கு, குடிநீரின் தரத்தைப் பாதிப்படையச் செய்யும் பௌதிக மற்றும் மானிடக் காரணிகள், அதனால் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் ஆகியவற்றைக் கண்டறிந்ததோடு முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளது. கலப்பு முறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்ட இவ் ஆய்வானது பிரதானமாக முதலாம்நிலைத் தரவுகளையும், இரண்டாம்நிலைத் தரவுகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் நாசிவன்தீவு கிராமசேவகர் பிரிவினிலேயே TDS மற்றும் உவராதல் பெறுமானத்தின் அளவு குடிநீர்க் கிணறுகளில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும் பேத்தாளை கிராமசேவகர் பிரிவினில் இனங்காணப்பட்ட கிணறு ஒன்றிலேயே கலங்கல் தன்மை மிகவும் உயர்வாக உள்ளமையும் கண்டறியப்பட்டது. ஆய்வுப்பிரதேசத்தில் குடிநீரின்

தரத்தில் மாறுபாட்டை ஏற்படுத்துவதில் மானிடக் காரணிகளை விட பௌதிகக் காரணிகளின் செல்வாக்கு முக்கியம் பெறுகின்றது. இதன் விளைவாக குடிநீரின் தரத்தில் ஏற்பட்டுவரும் மாறுபாடுகளின் காரணத்தினால் ஆய்வுப் பிரதேசமானது வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. சமூக பாதிப்புக்களுடன் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களும் உயர்வாக உள்ளமையினால் அவற்றில் இருந்து மீளெழுவதற்கு அதிகளவான சவால்களை இப்பிரதேச மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அரச மற்றும் சமூக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கு அப்பால் மக்களின் சுகாதார நலன்களை கருத்தில் கொண்டு குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் ஆரோக்கியமான வாழ்வினை உறுதிப்படுத்துவதும் அவசியமாகவுள்ளது.

## உசாத்துணைகள்


1. Moraiti, M. (2012). On the quasistatic approximation in the Stokes–Darcy model of groundwater–surface water flows. *Journal of Mathematical Analysis and Applications*, *394*(2), 796-808.
2. Yildz, D. (2022). Water And Conflict In Asia? Asia-Pacific Center For Security Studies.
3. Colopy, C. (2012). *Dirty, sacred rivers: confronting South Asia's water crisis*. Oxford University Press, USA.
4. Brown, L. R., & Halweil, B. (1998). China’s water shortage could shake world food security. *World watch*, *11*(4), 10-21.
5. Samad, M. (2005). Water institutional reforms in Sri Lanka. *Water Policy*, *7*(1), 125-140.
6. புள்ளிவிபரக்கையேடு, கோறளைப்பற்று பிரதேச செயலகம் - 2022

# வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும்

Mr. Kannappan Sutharshan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
sutharshan1019@gmail.com

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thavaprabas@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரையோர வளம் என்பது மிகப் பெறுமதியான ஒன்றாக காணப்படுகின்றது. அந்தவகையில் கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகப் பிரிவில் கரையோரமானது 40 Km தூரம் பரந்து காணப்படுகின்றது. இக்கரையோர பகுதியிலுள்ள வளங்கள் முறையாக அடையாளப்படுத்தி அபிவிருத்திக்குட்படுத்தாத நிலை காணப்படுகின்றது. அதன்படி ‘‘வாகரைப் பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளும்’’ என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் ஆய்வானது வாகரைப் பிரதேசத்தின் கரையோர வளங்களை அடையாளப்படுத்தி அவற்றின் மூலம் அபிவிருத்திக்கான வாய்ப்புகளைக் கண்டறிதல் எனும் பிரதான நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நேரடி அவதானிப்பு, நேர்காணல் ஆகிய முதலாம் நிலை தரவுகள் மூலமும் இரண்டாம் நிலை தரவுகள் மூலமும் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கலப்பு அணுகுமுறையினூடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட வளங்களான கண்டல் தாவரங்கள், முருகைக் கற்பாறைகள், கடற்புற்கள், கடற்கரையோரங்கள், மீன்வளங்கள், கற்பாறைகள், கனியமணல் (இல்மனைட்), ஏனைய கரையோரத் தாவரங்கள் போன்றவை ArcGIS 10.3 மென்பொதியினைப் பயன்படுத்தி படமாக்கப்பட்டுள்ளன. SWOT பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் தடை என்பன அறியப்பட்டு அபிவிருத்தியை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் ஆய்வில் முன்மொழியப்பட்டுள்ளது. கரையோர வளங்களைச் சரியான முறையில் பேணி பொருளாதார ரீதியாக மாற்றியமைக்க கைத்தொழில், சுற்றுலா, மீன்பிடி மற்றும் விவசாயமும் கால்நடைவளர்ப்பும் ஆகிய அபிவிருத்திகளை மேற்கொண்டு சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஆய்வுப் பிரதேசத்தை தற்போதுள்ள நிலைமையில் இருந்து பொருளாதார மற்றும் சமூக ரீதியாக முன்னேற்றமடையச் செய்ய முடியும் எனும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்*** *: அபிவிருத்தி, கரையோரம், கனியமணல், சுற்றுலா, பொருளாதாரம்*

**அறிமுகம்**

உலகில் வாழும் மக்கள் தொகையில் 60 – 70 சதவீதமானோரின் வாழ்வாதாரம் கரையோரத்திலும் கரையோர வளங்களிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கியிருக்கின்றது. இலங்கையின் கரையோரச் சூழலானது இந்து சமுத்திரத்தின் வடபகுதியில் வடக்கே 5º52' மற்றும் 9º52' இற்கும் அத்துடன் கிழக்கே 79º39' மற்றும் 81º53' இற்குமிடையே அமைந்துள்ளது. இலங்கையின் கரையோர வளங்களை கண்டல் காடுகள், உவர் நிலத் தாவரங்கள், மணற்றடுப்புத் தொடர்கள், கடற்கரையோரங்கள், ஈரநிலங்கள், ஏனைய நிலங்கள், பொங்குமுகங்கள் மற்றும் கடனீரேரிகள் என ஏழு வகையாகப் பிரித்துள்ளனர். இலங்கையின் கரையோரத்தில் பல்வேறு வளங்கள் காணப்பட்டாலும் அனைத்து வளங்களும் இன்றைய காலத்தில் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. பல்வேறு வளங்களைக் கொண்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் இன்றும் சில பிரதேசங்கள் முடக்க நிலையில் காணப்படுகின்றது. அவ்வாறான பிரதேசங்களில் உள்ள வளங்களை அடையாளம் கண்டு பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ‘‘வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும்’’ என்ற தலைப்பினைக் கொண்ட ஆய்வின் ஊடாக வெளிக்கொண்டுவருவது இன்றைய காலச் சூழ்நிலையில் பொருத்தமானதாகும். வாகரை பிரதேசத்தில் காணப்படும் கரையோர வளங்கள் அடையாளம் காணப்படாமை மற்றும் வளங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திகள் இடம்பெறாமை ஆகிய பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டு வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களினை அடையாளப்படுத்தி அவற்றின் மூலம் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை கண்டறிதல் எனும் பிரதான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு வாகரை பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட வளங்களை படமாக்குதல் மற்றும் வாகரை பிரதேசத்தின் கரையோர வளங்களினைக் கொண்டு அப்பிரதேசத்தின் அபிவிருத்தியினை எவ்வாறு மேற்கொள்ளலாம் என கண்டறிதல் என்பவற்றை உப நோக்கங்களாகக் கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேசத்தில் உள்ள 16 கிராம சேவகர் பிரிவுகளில் 12 கிராம சேவகர் பிரிவுகள் கடற்கரையோரத்தினை அண்டியதாக காணப்படுகின்றது. அந்த 12 கிராம சேவகர் பிரிவுகளில் அதிகளவாக வளங்களைக் கொண்டுள்ள கதிரவெளி, பால்ச்சேனை, பனிச்சங்கேணி, ஊரியன்கட்டு, புச்சாக்கேணி, காயங்கேணி ஆகிய ஆறு கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Ushanthan & Herath, (2021) “Site selection for seaweed culture in southern coastal region of Sri Lanka” என்னும் இவ்வாய்வின் ஊடாக இலங்கையின் தென்கரையோரப் பகுதியில் கடற்பாசிகளை வளர்ப்பதற்கான தளங்கள் காணப்படுகின்றது எனவும் அதனால்

அப்பிரதேசத்தில் தொழில் வாய்ப்பினையும் அபிவிருத்தியினையும் ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக தரவுகள் ஆய்வுப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் எழுமாற்று ரீதியாக 30 மாதிரிகள் கரையோரம் சார்ந்து எடுக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இக் கடற்பாசி வளர்ப்பினால் அழகுசாதனப் பொருட்கள், உரங்கள் என்பன தயாரிக்கப்படுகின்றன. இக் கடற்பாசி வளர்ப்புக்கு உகந்த கடல் மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் அமைதியான நீர் அலைகள், வலுவான நீரோட்டங்கள் மற்றும் வேட்டையாடுபவர்களுக்கான சிறந்த தளமாக அடையாளம் காணப்படுகின்றன. இதற்கு GIS தொழினுட்பம் பெரும் உதவியாக காணப்படுகின்றது. இதில் காலி, வெலிகம, மாத்தறை, ஹிக்கடுவ மற்றும் Bentota என்பன இவ் ஆய்வின் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

Arunashantha, (2015) “Over Utilizationof Costal Resources and its Impacts: The Case of Sri Lanka” என்னும் தலைப்பில் மேற்கொண்டுள்ள ஆய்வில் இலங்கையின் கரையோர வளங்களின் அதிகரித்த பயன்பாட்டினால் ஏற்படுகின்ற தாக்கங்களைப் பற்றி விபரித்துள்ளார். இதில் கரையோர பிரச்சினைகள், கரையோரம் சார் மக்கள் தொகை வளர்ச்சி, நகர்ப்புறமயமாக்கல் மற்றும் கரையோர வளங்களின் முகாமைத்துவம் தொடர்பான பிரச்சனைகள் பற்றி எடுத்து விளக்கியுள்ளார். இவ்வாய்விற்கு தேவையான தரவுகள் சேகரிப்பதற்கு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. கலந்துரையாடல், அவதானிப்பு, நேர்காணல் போன்ற முதன்நிலை தரவுகளும் படங்கள், பத்திரிகைகள், நிறுவன அறிக்கைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ் ஆய்வில் மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கும் பிரதேச அபிவிருத்தியினை மேற்கொள்ளவும் எத்தகைய முயற்சிகளை எடுக்க முடியும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

Tantrigama, G. (1999) “Coastal Resource Management and Sustainability of Tourism : A Comparative Study of Hikkaduwa, Sri Lanka and Goa, India” என்னும் ஆய்வுக் கட்டுரையானது ஆசியாவின் மிகவும் பிரபல்யமான சுற்றுலா தளங்கள் என அறியப்பட்ட இந்தியாவின் கோவா மாகாணத்திலுள்ள கலங்கூட் கடற்கரை மற்றும் இலங்கையின் ஹிக்கடுவ கடற்கரையோரம் ஆகிய சுற்றுலாத்தளங்களினது கரையோர தாக்கங்கள் தொடர்பாக விளங்குவதாக அமைகின்றது. இந்த இரண்டு தளங்களிலும் திட்டமிடப்படாத மற்றும் தற்காலிக அபிவிருத்தியினைக் கொண்டு காணப்படுவதுடன் இவை கரையோரம் சார்ந்தது பாதிப்பிற்குள்ளாகின்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்றுமுழுதாக இரண்டாம் நிலைத் தரவுகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியமாக நிர்வாக சிக்கல்களை அடையாளம் காணும் நோக்கிலும், சுற்றுச் சூழல், உடல்நலம் மற்றும் பொருளாதார, சமூக, கலாச்சார உட்கூறுகள் சார்ந்து கடலோர பகுதிகள்

மற்றும் அதிலுள்ள வளங்களை முகாமைத்துவம் செய்வதுடன் அபிவிருத்தி செய்வதற்கான மூலோபாயத்தையும் முன்வைக்கின்றன.

### ஆய்வு பிரதேசத்தின் அமைவிடம்

கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேசம் மட்டக்களப்பு நகரின் வடக்கே 80 கி.மீ தூரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள பிரதேசமாகும். இப்பிரதேசமானது 16 கிராம சேவகர் பிரிவுகளையும் 50 கிராமங்களையும் கொண்டுள்ளதோடு 9163 குடும்பங்களையும் 27,411 மக்கள் தொகையினையும் கொண்டுள்ளது. (Statistical Information, 2022).

ஆய்வுப் பிரதேசம்




(மூலம் : ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2023)

### ஆய்வு முறையியல்

இவ்வாய்விற்கென தரவுகளானது முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகளானது நேரடி அவதானிப்பு மற்றும் நேர்காணல் என்பன மூலம் திரட்டப்பட்டுள்ளது. கரையோர வளங்களின் தன்மைகளையும் அவற்றின் நிலைகளையும் அறிவதற்காக நேரடி அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு கரையோர வலயத்தையும் உள்ளடக்கிய கிராம சேவகர் பிரிவுகளுக்கும் நேரடியாகச் சென்று அவதானித்து கரையோர வளங்கள் மற்றும் அவற்றின்

பரம்பல்கள் அவதானிக்கப்பட்டு அவை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. கிராம சேவக உத்தியோகத்தர்கள், கிராமத்திலுள்ள மூத்த உறுப்பினர்கள், மீனவ கூட்டுறவு சங்கத் தலைவர்கள், கரையோர வலய பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர், மீனவர்கள் போன்றோருடன் நேர்காணல்கள் செய்யப்பட்டும் தகவல்கள் பெறப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகள் வெளியிடப்பட்ட மூலங்களிலிருந்து பெறப்பட்டன.

Google Earth மூலம் செய்மதிப்படத்தினை பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளத்திலிருந்து Google Earth மென்பொருள் 7.3 தரவிறக்கம் செய்யப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தினை 1:50,000 எனும் அளவுத்திட்டத்தில் நன்கு பெருப்பித்து மட்டக்களப்பு மாவட்ட கரையோரத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளைக் கொண்டு கலப்பு முறையிலான ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளதால் அளவுசார் அடிப்படையிலும் பண்பு சார் அடிப்படையிலும் மற்றும் இடரீதியான பகுப்பாய்வுகளும் ஆய்வில் இடம்பெற்றுள்ளன. ஆய்வில் இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக ArcGIS 10.4 பகுப்பாய்வு மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் வாகரை பிரதேசத்திற்குரிய கரையோர வளங்கள் காணப்படும் இடங்களின் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் நில அளவைத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கரையோரப் பிரதேசத்திற்கான எண்ணிலக்க தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகரை பிரதேசத்துக்குரிய நிலப்பயன்பாட்டு படமும் ArcGIS 10.4 மென்பொருள் மூலம் படமாக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கம் கரையோர வளங்களினை அடையாளம் கண்டு அவ்வளங்களைக் கொண்டே அப்பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய பல பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் முன்வைப்பதாகும். இதற்காக **SWOT** பகுப்பாய்வு செய்யப்பட்டு பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் தடைகள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கரையோர வளங்களில் முக்கியமான வளங்கள் அடையாளம் காணப்பட்டு அவை எவ்வாறு முக்கியத்துவம் கொண்டதாக காணப்படுகின்றது என நோக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு கரையோர வளங்கள் காணப்படும் இடங்கள் தனித்தனியாக படமாக்கப்பட்டுள்ளது.

**வாகரை பிரதேச கரையோர வலயத்தின் கரையோர வளங்களின் பரம்பல்**

வாகரை பிரதேசத்திலுள்ள 16 கிராம சேவகர் பிரிவுகளில் 12 கரையோர கிராமசேவகர் பிரிவுகள் உள்ளடக்கியுள்ளன. இதில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்ற கரையோர வளங்களாக பின்வருவன அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. கண்டல் தாவரங்கள்

2. முருகைக்கற் பாறைகள்
3. கடற்புற்கள்
4. கடற்கரையோரங்கள்
5. மீன்வளங்கள்
6. கற்பாறைகள்
7. கனியமணல் (இல்மனைட்)
8. ஏனைய கரையோரத் தாவரங்கள்

இவற்றுடன் கரையோர சூழல் சார்ந்துள்ள களப்புக்கள், சதுப்புநிலங்கள் மற்றும் தோணாக்கள் போன்றனவும் இப்பிரதேச கரையோர வளங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

**கண்டல் தாவரங்கள்**

கண்டல் என்பது ஒரு தாவரமாகும். இது சேற்று நில மண்ணை அடித்தளமாகக்கொண்ட அலைகளின் தாக்கம் குறைந்த களப்பு, கழிமுகம் மற்றும் நிழலுள்ள குடாக்களின் கரைகளிலும் காணப்படும். இவை அதிகமாக அயனமண்டல மற்றும் உப அயனமண்டல பிரதேசங்களில் காணப்படுகின்றன. இவை உண்மையான கண்டல்தாவரங்கள் (**True Mangrove**) அதனுடன் வாழும் உபகண்டல் தாவரங்கள் (**Mangrove Associate**) என இருவகையாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. கண்டல்தாவர சமூகம் தான் வாழும் இடத்திற்கு பெரிய உதவி செய்கிறது. இதில் முக்கிய பங்கு இதன் இலை குழைகள் கீழ்விழுந்து நீர்மூலம் களப்பு **அல்லது** கழிமுகம் கடற்கரைப்பகுதிகளுக்கு கடத்தப்பட்டு அங்குள்ள கடற்புற்படுக்கை, பவளப்பாறை ஆகிய கூட்டுச்சமூகத்தால் பயன்படுத்தப்படுகின்றது. இங்குதான் மீன், இறால், நண்டு இனங்கள் தமது இனப்பெருக்க இடமாக பயன்படுத்தி வாழ்கின்றன.

ஆய்வுப்பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் பெரும்பாலான கரையோரப் பகுதிகள் கண்டல் தாவரப்பரம்பலைக் கொண்டு காணப்படுகின்றன. இதனடிப்படையில் அதிகளவான கரையோர தாவரங்களைக் கொண்ட பிரதேசங்களாக கதிரவெளி, புச்சாக்கேணி, பால்ச்சேனை, ஊரியன்கட்டு மற்றும் பனிச்சங்கேணி ஆகிய பிரிவிற்குட்பட்ட கரையோர வலயம் காணப்படுகின்றது. காயங்கேணி ஆனைக்கல் முனைப்பகுதியில் அண்ணளவாக 02 ஏக்கர் அளவிலும் சல்லித்தீவில் அண்ணளவாக 02 ஏக்கர் அளவிலும் வாகரை வடக்கில் 01 கி.மீ அளவிலும் பால்ச்சேனை பண்டித்தீவில் அண்ணளவாக 02 ஏக்கர் அளவிலும் இயற்கையாக வளர்ந்த நிலையில் காணப்படுகின்றது (Google earth இனை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்பட்டது). ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் சல்லியோடை, பாய்ச்சலோடை, கோவிலடித்தோணா, நாணத் தோணா, வாகந்தோணா, பொட்டியடித் தோணா, வோக்கடித் தோணா, பாடசாலைத் தோணா, முருக்கையடித் தோணா ஆகிய தோணாக்கள்

காணப்படுகின்றன. இத் தோணாக்களின் இருமருங்கிலும் கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன.

பனிச்சங்கேணி உப்பாற்றின் இரு மருங்கிலும் காயங்கேணி கழிமுகத்தின் இரு பகுதியிலும் கண்டல் தாவரங்கள் நிறைந்து காணப்படுகின்றன. தில்லை மரம், கீரிக்கண்ணா, வெற்றிலைக் கண்ணா, தில்லை, புன்னை மரம், விழுதுக்கண்ணா, வெல்ல மரம் போன்ற கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன (கள ஆய்வு, 2023). கழிமுகம் கடல் வாழ் உயிரினங்களான நண்டு, இறால், ஊரினங்களின் வாழ்விடமாகத் திகழ்கின்றது.

இக்கரையோரத் தாவரங்கள் காணப்படுகின்ற பகுதிகளில் வாழ்கின்ற நண்டு, இறால், மட்டி மற்றும் சிறிய மீனினங்கள் போன்றவை இப்பிரதேச பொருளாதாரத்திலும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கி வருகின்றன.

**முருகைக்கற் பாறைகள்**

கரையோர வலயத்தில் அடையாளம் காணப்பட்ட மற்றுமொரு முக்கிமான வளமாக முருகைக்கற்பாறைகள் உள்ளன. இப்பாறைகள் ஆழம் குறைந்த கடலில், அயன மண்டல கடற்கரையில் தெளிவான இளம் சூடான கடல் நீரில் காணப்படும். இவை அதிகூடிய இனப்பெருக்கத்திறனைக் கொண்ட ஒரு விலங்கினமாகும். இதன் அதிகரித்த உற்பத்தித்திறனுக்குக் காரணம் சுற்றாடலின் உதவியுடன் கூடிய அதிகரித்த இனப்பெருக்கத்திறனாகும். உயிருடன் இருக்கும்பொழுது ஒளிர்வான பல நிறங்களையும் இறந்தபின் வெள்ளை அல்லது சாம்பல் நிறத்தையும் கொண்டிருக்கும்.

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் முருகைக்கல், சல்லிக்கல் எனும் உள்ளூர் பெயர்கொண்டு இதனை அழைக்கின்றனர். காயான்கேணி, பனிச்சங்கேணி மற்றும் சல்லித்தீவு கிராம அலுவலர் பிரிவுகளில் இப்பாறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதில் சல்லித்தீவுப்பகுதியில் பாதுகாப்பின் நிமித்தம் பவளப்பாறைகள் தற்போது அகழப்படுவதில்லை. 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காயங்கேணியில் நீற்றுக் கொட்டுகளை அமைத்து சுண்ணாம்பு உற்பத்தி செய்து முடிவுப்பொருட்களை வாழைச்சேனை ஓட்டமாவடி பகுதி முதலாளிகளுக்கு விற்பனை செய்து வந்தார்கள். 1986 ஆம் ஆண்டில் 20 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டதோடு காயங்கேணியில் கீழ்க்குடாப் பகுதியிலும் ஆனைக்கல் முனைப்பகுதியிலும் இவ்வகழ்வு இடம்பெற்று வந்துள்ளது.

**கடற்புற்கள்**

வெப்பவலய ஆழமற்ற கடற்கரைகளிலும் காணப்படும் ஒரு விசேடமான கூர்ப்படைந்த உண்மையான பூக்கும் தாவரம் கடற்புல் அல்லது கடற்புற்படுக்கை ஆகும். இவை கண்டல் தாவரத்திலிருந்து கூர்ப்படைந்த கடல்வாழ் தாவரங்கள். ஆழம் குறைந்த அலைப்பிரதேசத்திலும் வாழும் இவை பல சூழ்நிலையிலும் தப்பிப் பிழைக்கும் மற்றுமொரு கரையோர வளமாக அடையாளப்படுத்தப்பட்ட கடற்புற்களைப் பொறுத்தவரையில் வாகரை பிரதேச கரையோர வலயத்தில் தாழை, அடம்பன் போன்ற கடற்புல் இனங்களே அதிகளவில் காணப்படுகின்றன. இவை இப்பிரதேசத்தின் பால்ச்சேனை, கதிரவெளி, புச்சாக்கேணி ஆகிய இடங்களில் அதிக அளவிலே பரந்து காணப்படுகின்றன. எனினும் இப்பிரதேசங்களிலும் இவற்றினுடைய பரம்பலை நோக்கும் போது அவை தொடர்ச்சியானதாக இல்லாமல் இடையிடையே பரவலடைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கடற்கரையோரங்கள்**

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடற்கரையோரம் கிட்டத்தட்ட 40 கிலோ மீற்றர் தூரமாகும். இது நாசிவன் தீவு கழிமுகம் தொடக்கம் வெருகல் ஆறுவரையுள்ள பகுதியாகும். இப்பிரதேசக் கடற்கரையில் அதிகமான பகுதி மணல் கடற்கரையாகக் காணப்படுகின்றது. காயங்கேணி ஆனைக்கல் முனைப்பகுதி 01 கிலோ மீற்றர் பாறைக்கடற்கரையாகவும் பனிச்சங்கேணி சல்லித்தீவு, பால்சேனை, பண்டித்தீவு, முருக்கையடி முனைப்பகுதிகள் பாறைக் கடற்கரையாகக் காணப்படுகின்றன. இப்பிரதேச செயலாளர் பிரிவில் அனைத்து கடற்கரையோரங்களும் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டுக் காணப்படுவதோடு காயங்கேணி ஆனைக்கல் முனைப்பகுதியில் 02 ஏக்கர் தனியார்களின் காணி கடல் அரிப்பினால் தற்போது கடற்பகுதியை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. கரையோரப் பகுதியானது கடலாலும் மணலாலும் கரையோரத் தாவரங்களாலும் தென்னந்தோப்புகளாலும் சூழப்பட்டுக் காணப்படுகின்றது.

இக்கரையோர வலயத்தில் காணப்படுகின்ற கடற்கரைகளில் குறிப்பாக மணற்கடற்கரைகள் முக்கிய கரையோர வளங்களாகக் கொள்ளப்படுகின்றன. கரையோர வலயத்தின் எழிலை அதிகரிக்கச்செய்கின்ற இத்தகைய மணற்கடற்கரைகள் கதிரவெளி, பால்ச்சேனை, சல்லித்தீவு மற்றும் காயான்கேணி ஆகிய பகுதிகளில் அழகானதாக காணப்படுகின்றன. கோறளைப்பற்று வடக்கு பிரதேசத்திலுள்ள பால்ச்சேனை பண்டித்தீவு கடற்கரையினை எடுத்தால் அங்கு அழகிய பாறைத்தீவு தீவு காணப்படுகின்றது. பால்சேனைக் கடலானது எப்பொழுதும் அலைகள் குறைந்த அமைதியான கடற்கரையாக காணப்படுவதுடன் அமைதியான கவர்ச்சிமிக்க சூழலையும் கொண்டுள்ளது.

**பால்ச்சேனை கடற்கரை**



மூலம்: வெளிக்கள ஆய்வு, 2023

இக்கடற்பரப்பில் கற்குன்று பரந்து காணப்படுகின்றது. இது பார்ப்பதற்கு மிகவும் அழகினைக் கொடுப்பதுடன் அதனை அண்மித்து முருகைக்கற்களும் காணப்படுகின்றன. இக்கற்குன்றிற்கு படகுமூலம் சென்று அதன்மீது ஏறிக் கொள்ளவும் முடியும். இது தனியே பாறையாக மட்டுமே காணப்படுகின்றது. எந்தவிதமான தாவரங்களின் வளர்ச்சியும் காணப்படவில்லை.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காயங்கேணி கடற்கரையினை எடுத்தால், அலைகுறைந்த மணற்கடற்கரையாக காணப்படுகின்றது. ஆனால் காயங்கேணி ஆனைக்கல் முனைப்பகுதி ஒரு பாறைக்கடற்கரையாக உள்ளது. இது தென்னாடி வளைகுடா (Thennadi bay) கடற்கரை எனவும் Chenganan point எனவும் அழைக்கப்படுகின்றது. இக்கடற்கரைப்பகுதிகளும் அலைகள் குறைந்த அமைதியான கடற்பரப்பாகக் காணப்படுகின்றது. இக்கடற்கரைப் பகுதியும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் காணப்படுவதனால் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்புக்களைக் கொண்டுள்ள கடற்பகுதியாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

**காயங்கேணிக் கடற்கரை**



மூலம்: வெளிக்கள ஆய்வு, 2023

‘‘வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கடற்பகுதியில் டொல்பின். திமிங்கிலம், கடற்குதிரை என்பனவும் கப்பல்களின் சிதைவுகளும் காணப்படுகின்றன. மே தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையிலான காலங்களில் கச்சான் காற்று வீசும் போது டொல்பின்கள் கரையோரக் கடலை அண்டி கூட்டம் கூட்டமாகப் பாய்ந்து வருவதாக மீனவர் ஒருவர் தெரிவித்தார்’’ (கார்த்திகேசு, வயது 48).

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சல்லித்தீவு கடற்கரை ஆழமற்றதாகவும் கற்குன்றுகளையும், பவளப்பாறைகள மற்றும் சல்லிக்கற்களையும் அதிகளவில் கொண்டு காணப்படுவதுடன் வர்ண மீன்கள், சங்குகள் என்பனவும் இங்கு காணப்படுகின்றன. இக்கடற்கரை பகுதியில் தீவு ஒன்றும் காணப்படுகின்றது. இது பனிச்சங்கேணி கடற்கரையிலிருந்து சுமார் 800m தூரத்தில் உள்ள குடியிருப்பற்ற தீவாகும். இது கடலின் ஆழம் குறைந்த இடத்தில் அமைந்துள்ளதுடன் இத்தீவில் தில்லை, கீரிக்கண்ணா, வெள்ளரசு போன்ற கண்டல் தாவரங்களையும் கொண்டு காணப்படுகின்றது.

**சல்லித்தீவு** **சல்லித்தீவில் காணப்படும் சல்லிக்கற்கள**





மூலம்: வெளிக்கள ஆய்வு, 2023

இத்தீவு கடலினுள் காணப்படுகின்ற போதிலும், அத்தீவினை சில சமயங்களில் நடந்து சென்று பார்க்கக்கூடியதாகவுள்ளது. அதாவது சல்லிக்கற்கள் மற்றும் இறந்த பவளப் பாறைகள் என்பன ஓரிடத்தில் சேர்ந்து நீரினை பிரித்து அவ்விடத்திலிருந்து அரிப்பினை ஏற்படுத்தி மணலுடன் சேர்ந்த பகுதியாக மாற்றுகின்ற போது மூன்று பக்கம் நீரால் சூழப்பட்டது போன்று, தொம்போலோ (Tombolo) நிலவுருவ வடிவில் காட்சியளிக்கும். [பொதுவாக கடலுக்குள் காணப்படும் தீவில் அலைகள் மோதுகையடைவதனால் அதன் ஒதுக்குப்புறத்தில் மணல் படியவிடப்பட்டு, மணற்றொடரினால் கடலிலுள்ள சிறுதீவுடன் கரைப்பகுதி தொடர்புபட்டு காணப்படும் நிலவுருவம் தொம்போலோ (Tombolo) எனப்படும்]. சில காலங்களில் நடந்து சென்று பார்க்கமுடியாத நிலை ஏற்படும். அதாவது நான்கு பக்கங்களும் நீரால் சூழப்பட்ட தீவாக காட்சியளிக்கும். உதாரணமாக 2004, 2013 ஆம் ஆண்டுகளின் செய்மதிப்படத்தின்படி தீவிற்கும் கரைக்கும் இடையில் தொடர்பு காணப்பட்டது (Google Earth map). ஆனால் 2009, 2011 ஆம் ஆண்டு படத்தின்படி தொடர்பற்று தனித்தீவாகக் காட்சியளிக்கின்றது (Google Earth map). இத்தகைய மாற்றங்களை படங்கள் மூலம் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

**சல்லித்தீவானது பிரதான நிலத்துடன் தொடர்புற்று, தொடர்பற்று காணப்படும் நிலை**




மூலம்: Google Earth map இலிருந்து ஆய்விற்காக தயாரிக்கப்பட்டது.

இக்கடலானது ஆழம் குறைந்ததாகவுள்ளதால் நீச்சல் விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களுள்ள பகுதியாகவுள்ளது.

**பனிச்சங்கேணி உப்பாறு வாவி**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாவிகளில் இரண்டாவது பெரிய வாவியாக உப்பாறு வாவி காணப்படுகின்றது. உப்பாறு வாவியானது வடக்கே பால்ச்சேனை தொடக்கம் தெற்கே பனிச்சங்கேணி வரை 29.50 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் காணப்படுவதுடன் 1 – 2m ஆழமுடையதாகவுள்ளது. வாகரையானது உப்பாறு வாவியால் உருவாக்கப்பட்ட தீபகற்பப் பகுதியில் அமைந்துள்ளது. உப்பாறு வாவியை அண்டி அதிகளவான கண்டல் தாவரங்களும், சதுப்பு நிலங்களும் காணப்படுகின்றன. இவற்றின் பரம்பலை கீழ்வரும் படம் மூலம் நோக்கலாம்.

**உப்பாறு வாவியில் கண்டல் தாவரங்கள், சதுப்பு நிலங்களின் பரம்பல்**



மூலம்: ஆய்விற்காக தயாரிக்கப்பட்டது, 2023

செறிவாக கண்டல்கள் உள்ள பகுதிகளில் சில்லுத்தாரா, சிறிய பச்சைக் கொக்கு, பக்கா, உன்னிக் கொக்கு, சாம்பல் நாரை, செந்நீல நாரை, சிறிய, பெரிய, நடுத்தர கொக்குகள், செம்பருந்து, வெண்மார்பு கானான்கோழி, புள், புள்ளிப்புறா, வெண்மார்பு மீன்கொத்தி, தூக்கணாங்குருவி, கதிர்க்குருவி, ஆட்காட்டி, கீச்சான் போன்ற பறவையினங்கள்

காணப்படுகின்றன. அத்துடன் முதலைகளும் அதிகளவில் இப்பகுதியில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. உப்பாறு வாவிப்பகுதியில் சூழல்சார் சுற்றுலாவினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதால் வாய்ப்புள்ள பகுதியாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

**மீன்வளங்கள்**

கரையோர வாழிடங்கள், கரையோர மூலவளங்கள், உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் என்பவற்றின் ஒருங்கிணைந்த மொத்த நன்மைகளின் விளைவுதான் மீன்வளங்கள் ஆகும். வாகரைப் பிரதேச கரையோர வளங்களில் மிக முக்கிய வளமாக மீன்வளம் காணப்படுகின்றது. வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கரைவலை மீன்பிடி அதிக பங்கினை வகிக்கிறது. மேலும் மீன்வகை அல்லாத கடல் உணவுகளாக இறால், சிங்கி இறால், கணவாய், முத்துச் சிப்பி, கடல் அட்டை, கடற் சாதாளை என்பன இங்கு பிரசித்தமாக காணப்படுகின்றன. இது தவிர, டொல்பின், திமிங்கலம், கடற்குதிரை என்பனவும் இக்கடற்பகுதியில் காணப்படுகின்றன. மேலும் டொல்பின் பருவ காலங்களான வைகாசி மாதம் தொடக்கம் புரட்டாதி மாதம் வரையான காலங்களில் தென்மேல் பருவக் காற்று வீசும்போது கரையோரக் கடலை அண்டி கூட்டமாகப் பாய்ந்து வருவதை காணக்கூடியதாகவுள்ளது என இப்பிரதேச மீனவர்கள் கூறுகின்றனர்.

**மீன்வகையல்லாத கடல் உணவுகள்**

ஆழ்கடல் பவளப் பாறைகளிலும் கரையோர கடலினை அண்டிய பாறைப்பகுதிகளில் உள்ளூர் மீனவர்கள் டிசம்பர் மாத காலப்பகுதிகளில் வலைகளைக் கட்டி சிறிய அளவில் சிங்கி இறால்களைப் பிடித்து வருகின்றார்கள். காயங்கேணி ஆனைக்கல் முனைப்பகுதியிலும் பனிச்சங்கேணி சல்லித்தீவுப் பகுதியிலும் பால்ச்சேனை பண்டித்தீவு, முறுக்கையடி முனை, கதிரவெளி குமிழிக்கல் ஆகிய பகுதிகளிலும் கரையோரத்திலுள்ள பவளப் பாறை, கற்குன்றுகள் அமைந்துள்ள இடங்களில் இது காணப்படுகின்றது. இவற்றுடன் கணவாய், கடலட்டை, வர்ணமீன்கள், கடல் தும்பி, அஞ்சாலை, பாம்பு போன்ற ஜீவராசிகளும் இங்கு காணப்படுகின்றன.

**கற்பாறைகள்**

கரையோர வளங்களில் ஒன்றான கற்பாறைகளை நோக்கும் போது, பால்ச்சேனை, காயான்கேணி மற்றும் சல்லித்தீவில் இவை மிகவும் செறிவாகக் காணப்படுகின்றன. கடற்கரையோரம் சார்ந்துள்ள இக்கற்பாறைகள் கரையோர வலயத்திற்கு இயற்கை எழிலை வழங்குகின்ற ஒரு உயிரிற்சூழல் அமைப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். காயான்கேணி கடலினுள் உள்ள ஒரு பாறை யானைக்கல் என அழைக்கப்படுகின்றது. இது யானை போன்ற

உருவினைக் கொண்டு காணப்படுகின்றது. உள்ளூரில் உள்ள சுற்றுலாவாசிகளும் வெளியூர் சுற்றுலாவாசிகளும் பார்வையிட செல்கின்றனர். பால்ச்சேனைப் பகுதியில் கரையிலிருந்து கடலினுள் செல்லக்கூடிய வகையில் 25 மீற்றர் தூரம் கொண்ட கற்பாறையினாலான பாதை போன்ற அமைப்பு காணப்படுகின்றது.

மேலும் அதிக அளவில் சிறிய சிறிய பாறைகள் ஆங்காங்கே காணப்படுகின்றது. அவற்றினை அண்டியதாக நண்டு, இறால் மற்றும் மீன் இனங்கள் பல காணப்படுகின்றன. மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் இரவு வேளையில் அதிக அளவில் தொழிலில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

**கனியமணல் (இல்மனைட்)**

கனிய மணல்களில் ஒன்றான இல்மனைட் படிவானது கதிரவெளி தொடக்கம் பனிச்சங்கேணி வரையான பகுதியில் 100M அகலத்தில் இடத்திற்கு ஏற்ப பரம்பிக் காணப்படுகின்றது. ஆனாலும் அகழ்ந்து எடுக்கக் கூடிய வகையில் கதிரவெளிப் பகுதியில் அதிகளவில் காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் மூலம் இவ்விடயம் அறிந்து கொள்ளப்பட்டது.

அடையாளம் செய்யப்பட்ட வளங்களை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில், சுற்றுலா, மீன்பிடி, விவசாயமும் கால்நடைவளர்ப்பும் ஆகிய செயற்பாடுகளை சிறப்பாக மேறகொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றினூடாக பிரதேச அபிவிருத்தியினை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

**வாகரை பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட கரையோர வளங்கள்**

கண்டல் தாவரங்கள்




முருகைக்கற்பாறைகள்



கடற்புற்கள்




கடற்கரைகள்




பாறைகள்




இல்மனைற்




மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது, 2023

**கரையோர வளங்கள் மூலம் முன்வைக்கக்கூடிய அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்**

ஆய்வுப்பிரதேசமான கோறளைப் பற்று வடக்கு வாகரை பிரதேசத்திலுள்ள கரையோர வளங்கள் அடையாளம் காணப்பட்டு அவை அனைத்தும் படமாக்கப்பட்டுள்ளதோடு அவ்வளங்களைக் கொண்டு அப்பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய SWOT பகுப்பாய்வு மூலம் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இங்கு உள்ள கரையோர வளங்கள் தொடர்பாக பார்க்கும் போது அவற்றுள் பல வளங்கள் அரசாங்கத்தினாலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ பொருளாதார ரீதியாக பிரதேச அபிவிருத்திக்கு சாத்தியமாக்கிக் கொள்ளாத தன்மை காணப்படுகின்றது. இங்கு அடையாளப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு கைத்தொழில், சுற்றுலா, மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**கைத்தொழிலினை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள்**

ஆய்வுப்பிரதேசத்தில் அபிவிருத்திக்கு பலமாக இருக்கின்ற கரையோர வளங்கள் தொடர்பாக பார்க்கும் போது இங்குள்ள கரையோர வளங்களில் முக்கியமான ஒன்றாக இல்மனைட் காணப்படுகின்றது. அவ்வளங்கள் கடந்த சில வருடங்களுக்கு முன்பு கண்டறியப்பட்டுள்ளது. இது வெருகல் ஆறு தொடக்கம் பனிச்சங்கேணி வரையான பகுதியில் பரம்பிக்காணப்படுகின்றது. அதில் அதிகளவாக கதிரவெளிப் பகுதியில் அகழ்ந்து எடுக்கக்கூடியதாக காணப்படுகின்றது. ஆனால் அவ்வளத்தினைக் கொண்டு இதுவரையில் எந்தவித பயனுள்ள நடவடிக்கையினையும் மேற்கொள்ளாத வண்ணம் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் இல்மனைற் வளத்தினை சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அகழ்ந்தெடுத்து கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் பிரதேசத்திலுள்ள வளம் பயன்படுத்தப்படுவதோடு வேலைவாய்ப்பு, பிரதேச அபிவிருத்தி போன்றவற்றிற்கும் வழிசமைக்கலாம்.

இங்கு இன்னுமொரு முக்கியமான கரையோர வளமாக முருகைக் கற்பார்கள் காணப்படுகின்றன. அவை சல்லித்தீவு மற்றும் காயான்கேணி கடற்கரை ஓரங்களில் அதிகளவாக பரம்பிக் காணப்படுகின்றன. குறிப்பாக இம் முருகைக் கற்பார்கள் இறந்த நிலையில் கரைக்கு அருகில் நீளமாக 100 மீற்றர் தூரத்திற்கு பரம்பியுள்ளது. கரையொதிங்கியுள்ள முருகைக்கற்பார்களை சூழலுக்கு நேயமான முறையில் எடுத்து சுண்ணாம்பு தயாரிப்பினை மேற்கொள்ள முடியும். இதற்கு முதல் 1981 மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறு அளவில் இச்சுண்ணாம்பு சூளைகள் சார்ந்த வேலைகள் காயான்கேணி பகுதியில் இடம்பெற்று வந்துள்ளன. ஆனால் அதற்கு பிற்பட்ட காலப்பகுதியில் அத்தொழில் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளது. இக்கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பலமான விடயங்களாக அதிகளவில் அழிவடைந்த நிலையில் பவளப்பாறைகள்

காணப்படுகின்றது. அத்தோடு அனுபவம் வாய்ந்த சில தொழிலாளர்களும் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றனர். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு இங்கு சுண்ணாம்பு கைத்தொழில் நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும். ஆனாலும் கூட இப்பிரதேசத்தில் கைத்தொழில் நடவடிக்கையினை செய்வதில் சில பலவீனமான விடயங்களும் தடைகளும் காணப்படுகின்றது. குறிப்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான எதிர்ப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் குறைவு போன்றவைகள் பலவீனமான விடயங்களாக காணப்படுகின்றது. தடைகள் என்ற ரீதியில் பார்க்கும் போது மக்களில் சிலரின் அறியாமைகள், மண்ணரிப்பு ஏற்படும் வாய்ப்பு, அரசியல் தலையீடுகள், நீர் நிலை பாதிப்படைதல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். அவ்வாறான சில தடைகளையும் பலவீனங்களையும் குறைத்துக்கொள்ள பாதுகாப்புத் திட்டங்களை கைக்கொள்ள முடியும். குறிப்பாக மண் அகழ்ந்த இடத்திற்கு வேறு இடங்களில் இருந்து மண்ணினை எடுத்து குழிகளை நிரப்புதல், கழிவுகளை முறையாக அகற்றுதல் மற்றும் அரசாங்கத்தின் சட்டதிட்ட நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல். இவ்வாறாக ஆய்வுப்பிரதேசத்தில் கைத்தொழில் சாலைகளினை அமைப்பதற்கு பலம், வாய்ப்பு, பலவீனம் மற்றும் தடை போன்ற விடயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பலமான மற்றும் வாய்ப்பான விடயங்களினை வைத்துக்கொண்டு பலவீனமான மற்றும் தடையாக காணப்படுகின்ற விடயங்களை சரி செய்து சூழலுக்கும் சமூகத்திற்கும் நன்மை செய்யக்கூடிய வகையில் பிரதேச அபிவிருத்தியினை மேற்கொள்ள முடியும்.

**சுற்றுலாவினை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள்**

சுற்றுலா நடவடிக்கையினை இப்பிரதேசத்தில் மேற்கொள்வதற்கு அதிகளவான பலமான விடயங்களும், வாய்ப்புக்களும் காணப்படுகின்றது. பலமான விடயங்களினை ஆராயும் போது குறிப்பாக பரந்ததும், ஆழம் குறைவானதும் மற்றும் அழகானதுமான கடற்கரையோரங்கள், வாவி, தீவு, கற்பாறைகள் போன்றன காணப்படுகின்றன. இவை சுற்றுலாத் துறையினை விருத்தி செய்வதற்கு வாய்ப்பாகக் காணப்படுகின்றன.

காயன்கேணி பகுதியில் யானைப்பாறை எனும் உருவம் கொண்ட கற்பாறையமைப்பு காணப்படுகின்றது. அங்கு சென்று நீராடக்கூடிய வசதி காணப்படுகின்றது. அக்கற்பாறையில் இருந்து கடலினுள் காணப்படும் முருகைக் கற்பாறைகளையும் அழகான மீன் இனங்களையும் பார்க்கக் கூடிய வசதி காணப்படுகின்றது. அடுத்ததாக சல்லித்தீவு கடற்கரை மிகவும் அழகானதும் தீவினையும் கொண்டு காணப்படுகின்றது. மேலும் உணவகங்கள் மற்றும் வாகன தரிப்பிடம் போன்றவற்றினை அமைக்கக்கூடிய நிலப்பரப்புக்கள் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை பார்க்கும் போது பாதுகாப்பானதும் சூழல் நேயமானதுமான இடவமைவு, சிறு கிராமிய உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யும் மக்கள் காணப்படுகின்றமை சுற்றுலாவாசிகளினை கவரும் விடயமாக உள்ளது. இவ்வாறாக சுற்றுலா துறைக்கு பலமான மற்றும் வாய்ப்பான விடயங்கள் காணப்படுகின்றன.

இருந்தபோதிலும் ஆய்வுப்பிரதேசத்தில் சுற்றுலா துறையினை வளப்படுத்துவதற்கு சில பலவீனமான மற்றும் தடையான அம்சங்கள் காணப்படுகின்றன. பலவீனம் என்று பார்த்தால் குறிப்பாக பிரதான வீதியில் இருந்து கடற்கரைக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளமை, போக்குவரத்து பாதை சீரின்மை, வாகன வசதி குறைவாக காணப்படுகின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மக்களின் பொறுப்பற்ற சூழல் சார் செயற்பாடுகள், வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதியாக காணப்படுகின்றமை ஆகிய தடைகளையும் கொண்டு காணப்படுகின்றது. பலவீனத்தினையும், தடைகளையும் மாற்று வழிகளின் ஊடாக சரிசெய்து குறிப்பாக போக்குவரத்து தொடர்பான விடயங்களை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தல், மக்களுக்கு இத்துறைசார்ந்து விளக்கமளித்து ஒத்துழைப்பு வழங்கி தூய்மையாக சுற்றுச்சூழலினை பேண வைத்தல். இவ்வாறாக சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதில் பலம், வாய்ப்பு, பலவீனம் மற்றும் தடைகள் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. எனவே பலத்தினையும் வாய்ப்பினையும் சரியாக பயன்படுத்தி பலவீனமான விடயங்களையும் தடைகளையும் சிறந்த முகாமைத்துவத்தின் ஊடாக சாதகமாக்கி சுற்றுலாத்துறையினை விருத்தி செய்யலாம்.

**மீன்பிடி நடவடிக்கையினை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள்**

மீன்பிடி கைத்தொழிலுக்கு பொருத்தமான இடங்களும் வளங்களும் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. இதற்கு பலமானதும் வாய்ப்பானதுமான பல அம்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பௌதிக ரீதியான கடலமைப்புக் காணப்படுகின்றமை, எளிமையாக வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட மக்கள் காணப்படுகின்றமை மீன்பிடிக்கு பலமாகும் மற்றும் பெண்களின் ஈடுபாடு அதிகமாக காணப்படுகின்றமை போன்ற பலமான விடயங்கள் காணப்படுகின்றன. மீன்பிடிக்கு வாய்ப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் விடயங்களினை பார்க்கும் போது அதிக மீன்வளம் நிறைந்த கடலமைப்பு காணப்படுகின்றமை, அரசாங்க உதவிகள் மானிய முறையில் கிடைக்கின்றமை, கருவாடு மற்றும் மீனுக்கு அதிக கேள்வி மக்களினிடையே காணப்படுகின்றமை, கண்டல் தாவரங்கள் காணப்படுவதனால் பல வகையான மீன்கள் மற்றும் நண்டு, இறால் போன்றன அதிகமாக இனப்பெருக்கம் செய்வதாக காணப்படுகின்றது.

இருந்த போதிலும் சில பலவீனமான விடயங்களும் தடைகளும் மீன்பிடிக் கைத்தொழிலினை முன்னெடுப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. அவ்வாறாக பலவீனமான விடயங்களினை எடுத்து நோக்கினால் மீன்பிடி உபகரணங்கள் குறைவாக காணப்படுகின்றமை, மூலதனப் பற்றாக்குறை, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்புகள் மக்களினிடையே குறைவாக காணப்படுகின்றமை, குறைவான கல்வி மட்டம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

தடைகளை எடுத்து நோக்கும் போது புதிய தொழினுட்ப கருவிகளை பயன்படுத்த தெரியாத நிலை காணப்படுகின்றமை, மீன் இனங்கள் ஏனையோரினால் முறையற்ற விதத்தில் பிடித்தல், மக்களினாலும் இயற்கை காரணிகளினாலும் கழிவுகள் கடலினுள் சேருதல், இயற்கை இடர்களுக்கு முகம்கொடுக்கும் தன்மையும் காணப்படுகின்றமை. இவ்வாறாக ஆய்வுப்பிரதேசத்தில் சில தடைகள் காணப்படுகின்றது. பலவீனத்தினையும், தடைகளையும் சரிசெய்து சிறந்த மீன்பிடி நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும். குறிப்பாக மக்களுக்கு புதிய மீன்பிடி முறைகளையும் கருவிகளையும் அறிமுகம் செய்தல், மீன்வளங்களினை முறையற்ற விதத்தில் பிடிப்பதனை தடைசெய்து பாதுகாப்பாகவும் முறையாகவும் தொழிலில் ஈடுபட வழிப்புணர்வூட்டல், இயற்கை இடர்கள் ஏற்படும் காலங்களில் பாதுகாப்பு நடவடிக்கையின் மூலம் மீன்பிடிக்க செல்லுதல்.

இவ்வாறாக மீன்பிடித் துறையினை மேம்படுத்துவதில் பலம், வாய்ப்பு, பலவீனம் மற்றும் தடைகள் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. எனவே பலத்தினையும் வாய்ப்பினையும் சரியாக பயன்படுத்தி மேற்குறிப்பிட்டவாறு பலவீனமான விடயங்களையும் தடைகளையும் சிறந்த முகாமைத்துவத்தின் ஊடாக சாதகமாக்கி மீன்பிடி நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும்.

**விவசாயத்தினையும் கால்நடைவளர்ப்பினையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள்**

விவசாயமும் கால்நடைவளர்ப்பும் மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான இடங்கள் ஆய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கு பலமானதும், வாய்ப்பானதுமான பல விடயங்கள் காணப்படுகின்றது. குறிப்பாக பலமான விடயங்களை எடுத்துக்கொண்டால் இப்பிரதேசத்தில் இறால் வளர்ப்புக்கு ஏற்ற இடவசதியும் சூழல் நிலமைகளும் காணப்படுகின்றது, பரந்த மேய்ச்சல் நிலம் காணப்படுவதனால் கால்நடைகளுக்கு உணவாக பயன்படுகின்றது, நீர்ப்பாசன வசதி போதியளவு காணப்படுகின்மை மற்றும் பால் உற்பத்தியினை சேமித்து வைக்கக்கூடிய பால்பண்ணை காணப்படுகின்றமை.

வாய்ப்பான விடயங்களினை எடுத்துக்கொண்டால் இரண்டு போகத்தில் விவசாயம் செய்யக்கூடிய வசதி ஆய்வுப் பிரசேத்தில் காணப்படுகின்றமை, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கடன் உதவிகள் மற்றும் மானிய முறையில் உதவிகள் செய்கின்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறான பலமானதும் வாய்ப்பானதுமான விடயங்கள் காணப்பட்டாலும் சில பலவீனமான மற்றும் தடையான சில விடயங்கள் ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக பலவீனமான விடயங்களினை எடுத்துக்கொண்டால் விவசாயக் காணிகள் தரிசாக விடப்பட்டுள்ளமை, சந்தைபடுத்தும் வாய்ப்பு சில நேரங்களில் இல்லாமல் போதல் மற்றும் நல்லின கால்நடைகள் கிடைக்காமை. தடைகளினை எடுத்துக்கொண்டால் தற்கால இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை, சில இடங்களில்

நீர் உவர்த்தன்மையாதல், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆகவே விவசாயத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் எமது பிரதேசத்தில் அவற்றை மேற்கொள்வதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் தொடர்பாகவும் தெரியப்படுத்தல், சந்தை வாய்ப்பை அதிகரித்து கொள்ள அரசாங்கத்திடம் கோரிக்கைகளை வரையறுத்தல், சிறந்த கால்நடை வைத்தியர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் கால்நடைகளைத் தெரிவுசெய்தல். ஆகவே கால்நடைகளுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் பலமாகவும் மற்றும் வாய்ப்பாகவும் காணப்படுகின்ற வளங்களை கொண்டு தடைகளையும் மற்றும் பலவீனங்களினையும் முகாமைத்துவம் செய்து ஆய்வுப்பிரதேசத்தில் கால்நடை மற்றும் விவசாய நடவடிக்கையினை சிறப்பாக மேற்கொள்ளமுடியும்.

**முடிவுரை**

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேசத்திற்கு உட்பட்ட கரையோர வளங்களான கண்டல் தாவரங்கள், முருகைக்கற் பாறைகள், கடற்புற்கள், கடற்கரையோரங்கள், மீன்வளங்கள், கற்பாறைகள், கனியமணல் (இல்மனைட்) மற்றும் ஏனைய கரையோரத் தாவரங்கள் போன்றன அடையாளப்படுத்தியதற்கு அமைவாக அங்கு அவ்வளங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட கரையோர வளங்கள் தொடர்பாக ஏற்படுகின்ற பிரச்சினைகளில் முக்கியமாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளாக கரையோர உயிர்ச்சூழல் தரமிழப்பு, கரையோர மாசடைவு மற்றும் கரையோர அரிப்பு என்பன காணப்படுகின்றது. இக்காரணிகள் ஆராயப்பட்டு அவற்றினால் ஏற்பட்ட தாக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு கரையோர வளங்கள் எதிர்நோக்கும் சவால்களைக் குறைத்து வளங்களினைப் பாதுகாக்க பல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முகாமைத்துவ நடவடிக்கைகளினை மேற்கொண்டு இருந்தாலும் அவை சரியான முறையில் கண்காணிப்பின்றியும் காணப்படுகின்றது.

அத்தோடு அவ்வளங்களினைப் பாதுகாப்பதற்கு பல வழிமுறைகளும் இவ்வாய்வினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவ்வளங்களினைக் கொண்டு அப்பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அங்குள்ள கரையோர வளங்களினை சரியான முறையில் பேணி பொருளாதார ரீதியாக மாற்றியமைக்க முன்வைக்கப்பட்ட விடயங்களாக கைத்தொழிற்சாலைகள், சுற்றுலா, மீன்பிடி மற்றும் விவசாயமும் கால்நடைவளர்ப்பும் போன்றன காணப்படுகின்றன. இவற்றை சரியான முறையில் நடைமுறைப்படுத்தும் போது ஆய்வுப் பிரதேசம் தற்போதுள்ள நிலையில் இருந்து பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அபிவிருத்தியடையும். குறிப்பாக வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும், உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியாக்கப்படும், பிரதேச வறுமைநிலை

இல்லாதொழியும், பல சமூக இனங்கள் ஒன்றாகும், கட்டடநிர்மாணங்கள் அதிகரிக்கும், உணவகங்கள் மற்றும் விடுதிகள் அமைக்கப்படும், சிறிய கடைத்தொகுதிகள் அதிகரிக்கும், இப் பிரதேசம் உலக ரீதியில் பிரபல்யமடையும் இவ்வாறாக கரையோர வளங்களின் சரியான முகாமைத்துவத்தினூடான பயன்பாட்டினால் ஆய்வுப்பிரதேசமானது அபிவிருத்தியடையும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது.

**References**

Arunashantha, H. A. S. (2015). Over Utilization of Coastal Resources and Its Impact: The Case of Sri Lanka. http://repository.kln.ac.lk/handle/123456789/13627

Dulip Jayawardena, S. (2004). Assessment of Development of Natural Resource in North – East, Sunday Times[Online], 25.09.2004, Available from: https://www.adb.org/documents/sri-lanka-north-east-coastal-community-development-project [Accessed on : 12 May 2023].

Gunathilaka, T. (2012). Coastal Resource Management and Sustainable of Tourism: A Comparative Study of Hikkaduwa, Sri Lanka and Goa, India, University of Jayawardanapura, Sri Lanka. Available from: http://egillispie.umwblogs.org/2012/02/26/the-effects-of-tourism-on-the-coral-reefs-of-hikkaduwa-sri-lanka/ [Accessed on : 26 May 2023].

Tantrigama, G. (1999). Coastal Resource Management and Sustainability of Tourism: A Comparative Study of Hikkaduwa, Sri Lanka and Goa, India. *University of Sri Jayewardenepura, Sri Lanka*, 91-99. https://repository.library.noaa.gov/view/noaa/36225/noaa_36225_DS1.pdf#page=100

Ushanthan, A., Herath, S. S., & Sanjaya, K. (2021). Site selection for seaweed culture in southern coastal region of Sri Lanka. http://192.248.66.13/bitstream/123456789/5899/1/ASRS2021_Proceedings%20Book-pp.125-128.pdf

# சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மீதான அச்சுறுத்தலும் அபிவிருத்திக்கான உபாயங்களும்

Ms. Niklas Akaliya
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*niklasakaliya@gmail.com*

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thavaprabas@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய காலத்தில் இலங்கையில் காணப்படுகின்ற இயற்கை வளங்களானது பல்வேறு சவால்களுக்குள்ளாகி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அவ்வகையில் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் தரமிழப்பின் காரணமாக மக்கள் பல்வேறு பௌதிக, பொருளாதார மற்றும் சமூக தாக்கத்திற்கு உட்பட்டுள்ளமை மிகப் பெரிய சவாலாக காணப்படுகின்றது. சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் வளங்களின் முகாமைத்துவச் செயற்பாட்டுகளுக்காகக் கொண்டுவரப்பட்ட செயற்திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையினால் பிரதேசத்தின் வளங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. அவ்வகையில் இவ் ஆய்வானது சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதுடன், அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் வெளிக்கொணர்வதாக அமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை அடையாளப்படுத்தி படமாக்கல் செய்துள்ளதுடன், இங்கு காணப்படுகின்ற வளங்கள்சார் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுகின்ற வகையிலும் வளங்களை மையப்படுத்திய அபிவிருத்திக்கான உபாயங்கள் பற்றியும் வெளிக்கொணர்வதனை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்ட படங்கள் Google Earth செயலி மூலம் பெறப்பட்டு ஆய்வுப்பிரதேசத்தின் வளங்கள் பற்றிய படம் ArcMap 10.4.1 மென்பொருள் மூலம் Georeference. Digitize செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட 66 வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் Microsoft Excel மென்பொருள் மூலமாகவும் கலப்பு முறைப்பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வு நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன. மேலும் SWOT பகுப்பாய்வு மூலமாக ஆய்வுப்பிரதேசத்தின் பலம், பலவீனம், வாய்ப்பு, தடை என்பனவும் இனங்காணப்பட்டுள்ளன. சத்துருக்கொண்டான் பகுதியில் மானிடக்காரணிகளால் 82 சதவீதமான வளங்கள் தரமிழக்கச் செய்யப்படுவதும் அதில் முறையற்ற கழிவகற்றலால் 48 வீதமான தரமிழப்பு ஏற்படுவதும் அறியப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் ஊடாகச் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் வளங்கள் சார்ந்த பிரச்சினைகள், அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன், வளங்களைப் பாதுகாப்பதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகள் பற்றியும் அதனால் பிரதேசத்தினை எவ்வாறு அபிவிருத்தியடையச் செய்யலாம் என்பது பற்றியும் ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அபிவிருத்தி, இயற்கை வளங்கள், படமாக்கல், முறையற்ற கழிவகற்றல். வளப்பாதுகாப்பு*

**ஆய்வு அறிமுகம்**

உலகில் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற கூறுகள் அனைத்தையும் நாம் வளங்கள் என அழைக்கலாம். பூமியில் காணப்படக்கூடிய மனிதனது தேவைகளை நிறைவேற்றக்கூடியதும் பொருளாதார ரீதியாக நன்மையினை வழங்கக்கூடியதுமான அம்சங்கள் வளங்களாக வரையறுக்கப்படுகின்றன. நீர், தரைத்தோற்றம், மண், கனிம வளங்கள், பாறைகள், காடுகள், ஈரநிலங்கள், தாவர விலங்குகள், போன்றன வளங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. வளங்கள் எனப்படுவது விருப்பத்தினை நிறைவு செய்யக்கூடியதும், இருப்பிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதுமாக காணப்படும் நாட்டின் பலத்திற்கு கூட்டான நன்மையை பயக்கக்கூடியதும் நலன் தரும் கருவியாக செயற்படுவதும் நன்மைகளை உருவாக்குவதில் திறன் வாய்ந்ததும் நடைமுறைச்சாத்தியமான புதுப்புனைவு கொண்டதும் வளமாக கருதப்படுகின்றது. வளங்கள் மனிதனுக்கான புகலிடங்களாக காணப்படுவதுடன் அதனை பெறுவதற்கு அவற்றில் தங்கியிருக்க நேரிடுகின்றது. (Callin’s New English Dictionary,1956).

பெறுமதி வாய்ந்த இவ்வளங்கள் எண்ணற்ற தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வாழிடங்களாகவும் விளங்குகின்றன. உலகின் ஏனைய பிராந்தியங்களை விட ஆசியப்பிராந்தியமானது இயற்கை வளங்கள் பல நிரம்பப்பெற்றதாகும். உலகின் 75 சதவீதமான விவசாய நிலங்கள், 13% காடுகள், 15% புல்வெளிகள், 25% கரையோர வளங்கள் என்பன ஆசியவலயத்திலே அமையப்பெற்றுள்ளன. இலங்கையில் 80% மான வளங்களே பயன்படுத்தப்படுவதுடன் 20% மான வளங்கள் முறையாக அடையாளப்படுத்தப்படாது மறைவளங்களாகவே காணப்படுகின்றன. இலங்கையில் வளங்கள் இருந்தும் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாக இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் ∴பரிஸ் எச். ஹடாட்-ஜெர்வோஸ் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு அடையாளப்படுத்தப்படாத வளங்களை வெளிக்கொணர்ந்து அதன் மூலமாக சமூக பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவது அவசியமானதாகும்.

இத்தகைய பிரச்சினைகளை களைந்து பிரதேசத்தின் இயற்கை வளங்களினை அடையாளப்படுத்துவதுடன் அதனூடாக அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கான உபாயங்களை முன்வைப்பதற்காகவும் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்களும் அபிவிருத்திக்கான உபாயங்களும் என்ற தலைப்பில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில் சத்துருக்கொண்டான் பிரதேசமானது பல்வேறு வளங்களை (நீர், மண், ஈரநிலம், ஆறு, குளம், கடல், கண்டல்தாவரங்கள், தாவரவிலங்குகள், மனிதவளம்) கொண்டிருப்பதுடன் அபிவிருத்தி வாய்ப்புக்களையும் அதிகமாக கொண்டமைந்துள்ளது. இத்தகைய வளங்களை கொண்டிருப்பினும் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையே இங்கு அவதானிக்கப்படுவதுடன் அபிவிருத்தியை முன்னெடுப்பதிலும் பல பிரச்சினைகளையும் கொண்டிருக்கின்றது.

ஆய்வுப்பிரதேசத்தின் வளங்கள் முறையாக அடையாளங்காணப்படாதிருப்பதுடன் வளங்கள் மீதான அச்சுறுத்தல் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு வளங்களை பயன்படுத்துவதில்

காணப்படும் சவால்களை வெளிக்கொணரல் என்பன ஆய்வுப்பிரச்சினையாக அடையாளங்காணப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கான எவ்வாறான வளங்கள் காணப்படுகின்றன? வளங்கள் சார்ந்து எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள், இயற்கை வளங்களை மையப்படுத்தியதான பிரதேச அபிவிருத்தியினை எவ்வாறு ஏற்படுத்தலாம்? போன்ற வினாக்களிற்கு விடையளிப்பதாய் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது. ஆகவே சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களை அடையாளப்படுத்துவதுடன் அவை தொடர்பாக எதிர்கொள்ளப்படும் சவால்களை இனங்கண்டு சமூக பொருளாதார அபிவிருத்தியில் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கான உபாயங்களை முன்வைத்தல் என்பவற்றை நோக்காக கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Juvavathany Sachchithanantham என்பவரால் 2018 ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ‘‘மாந்தை கிழக்கு பிரதேச செயலகர் பிரிவின் உள்ளார்ந்த வளங்களும் அபிவிருத்தி வாய்ப்புக்களும்’’ என்ற ஆய்வானது மாந்தை கிழக்கு பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது மாந்தை கிழக்கு பிரதேசத்தின் உள்ளார்ந்த வளங்கள் மக்கள் வாழ்வாதார அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை இனங்காணல், ஆய்வுப்பிரதேசத்தின் பௌதீக பண்பாட்டு நிலைமைகளை கண்டறிதல், வளங்களை பயன்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளை அறிதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் நோக்கங்களை அடைவதற்காக இப்பிரதேசத்தின் முழுக்குடிகளும்(15 கிராமசேவகர் பிரிவுகளும்) ஆய்வுக்குட்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக முதனிலைதரவுகளும் பிரதேச செயலக அறிக்கைகள், விவசாய அறிக்கைகள், நீர்ப்பாசன அறிக்கைகள் போன்ற இரண்டாம் நிலை தரவுகளும் விவரண ரீதியான பகுப்பாய்வு முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவுகளாக பிரதேசத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வழிகளாக இயற்கை வளத்தை முறைப்படி பயன்படுத்தி எதிர்கால வளஒதுக்கீட்டையும் கவனத்தில் கொள்ளல், மனிதவள விருத்தி, சமூக அமைப்புக்கள் மூலம் அபிவிருத்தியினை மேற்கொள்ளல் போன்றன குறிப்பிடப்படுவதுடன் குறித்த பிரதேசத்தின் பின்தங்கிய நிலையினை நீக்கி வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினோதினி பொன்னுத்துரை மற்றும் சுபாஜினி உதயராசா ஆகியோரால் 2014 ம் ஆண்டில் ‘‘இத்தாவில் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஆய்வு’’ எனும் தலைப்பில் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக பிரிவின் இத்தாவி கிராமசேவகர் பிரிவினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்ஆய்வானது இத்தாவில் கிராம மக்களின் சமூக பொருளாதார நிலைகளை கண்டறிதல், அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனங்காணல், அபிவிருத்திக்கான பரிந்துரைகளை

முன்மொழிதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இங்கு சமூக பொருளாதார நிலை, பிரச்சினைகள் பற்றி அறிய முதல்நிலை, இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு முதல் நிலைத்தரவானது வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு, போன்ற முறைகளுக்கூடாகவும் 2ஆம் நிலைத்தரவானது திணைக்களப் பதிவேடுகள், அறிக்கைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் வெளியீடுகள் போன்றவற்றிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள் ஆய்வுப் பிரதேசத்தின் 75% மான குடும்பங்களை எழுமாற்று மாதிரி முறையில் தெரிவுசெய்து அதனடிப்படையில் வினாக் கொத்துக்கள் பூரணப்படுத்தப்பட்டன. இங்கு Microsoft excel 2007 மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் முடிவாக, இத்தாவில் கிராமமானது தற்போதைய நிலையில் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளதுடன் இங்குள்ள வளவாய்ப்புக்கள் அனைத்துமே அழிக்கப்பட்டுள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

பத்மானந்தகுமார் மற்றும தசரதன் ஆகியோரால் 2001 ம் ஆண்டு “கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரி முனையில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்கள்” எனும் தலைப்பில் வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் கௌதாரிமுனையினை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது குறித்த கௌதாரிமுனை பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்கள் தொடர்பாகவும் அங்கு காணப்படும் சூழல்சார் சுற்றுலாவின் தற்போதைய நிலை தொடர்பாகவும் வெளிப்படுத்துவதனை நோக்கமாக கொண்டுள்ளது. இவ்வாய்விற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் பெறப்பட்டுள்ளதுடன் தரவுகளை பெற்றுக்கொள்வதற்கான நபர்கள் நோக்க அடிப்படையிலான மாதிரிமுறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சேகரிக்கப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரண ரீதியாக கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவாக கௌதாரிமுனைப் பகுதியில் சுற்றுலாத்துறை தொடர்பிலான வளங்கள் சுற்றுலாத்துறை விருத்திக்கு பயன்படுத்தப்படாத நிலை காணப்படுவதுடன் சுற்றுலா வளங்கள் உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் வெளிப்படுத்தப்படாமையால் இவ்வளங்களை பயன்படுத்தி வருமானத்தை உருவாக்குவது கடினமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப்பிரதேசம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவின் கீழ் அமையப்பெற்றுள்ள சத்துருக்கொண்டான் பிரதேசமே ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இது நிருவாக தலைநகரமான மட்டக்களப்பில் இருந்து 5.6 கிலோமீற்றர் தொலைவில் அமையப்பெற்றுள்ளதுடன் இது சராசரியாக கடல் மட்டத்தில் இருந்து 1.20m தொடக்கம் 4.0m உயரமுடையது. இது 7°44′N 81°40′E ஆள்கூறுகளை கொண்டமைந்துள்ளது.




படம் ஆய்வுப்பிரதேசம்

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது (2023)

ஆய்வுப்பிரதேசத்தின் ஆண்டு சராசரி வெப்பநிலை 28.4 பாகை செல்சியசாக காணப்படுவதுடன் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1606.6 மில்லிமீற்றர் ஆகவும் காணப்படுகின்றது. சத்துருக்கொண்டான் பிரதேசமானது 661 குடும்பங்களினை கொண்டிருப்பதுடன் 2090 மக்கட்தொகையினையும் கொண்ட பிரதேசமாக அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக ஆண்களின் எண்ணிக்கை 985 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 1105 ஆகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடியில் 35% ஈடுபடுவதுடன் தனியார் துறையில் பணிபுரிவோர் 23% காணப்படுகின்றனர். தொழில்தேர்ச்சி பெற்ற 56% பேர் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் பிரதேசத்தின் வளங்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான தரவுகள் சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் இரண்டு வகையான தரவுகள் பெறப்பட்டுள்ளன. முதலாம்நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆய்வுக்கான முதல் நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, வினாக்கொத்து, நேர்காணல், குவியக்குழு கலந்துரையாடல் போன்ற நுட்பமுறைகளை பயன்படுத்தி திரட்டப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கையை கொண்டு 10 சதவீத அடிப்படையில் 66 வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வினாக்கொத்துக்கள் மூலமாக

தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. பிரிவின் கிராமசேவக உத்தியோகத்தர், விவசாய அமைப்புச் செயலாளர், சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோாரிடமிருந்து நேர்காணல் வாயிலாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகள் கிராமசேவக புள்ளிவிபரத்திரட்டுக்கள், பிரதேச செயலக புள்ளிவிபர அறிக்கைகள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல்சார் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றின் ஊடாக பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது கலப்பு முறையிலான ஆய்வாக காணப்படுகின்றது. ஆய்வுக்காக பெறப்பட்டுள்ள தரவுகள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் இடரீதியாகவும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பண்பு சார் பகுப்பாய்வுகளில் பிரதேசத்தின் வளங்கள் தொடர்பாக இடம்பெற்ற நேரடி அவதானிப்பு, நேர்காணல், குவியக்குழு கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், ஒலிப்பதிவுகள் என்பன மூலம் பதியப்பட்ட விடயங்கள் தொகுக்கப்பட்டு பிரதேச வளங்கள் சார்ந்த விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆராயப்பட்டு விபரணரீதியாக ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது. நேரடி அவதானிப்பின் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் குறிப்பெடுக்கப்பட்ட விடயங்கள் பண்புசார் அடிப்படையில் ஆய்வில் விளக்க விபரங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆய்விற்காக வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் மற்றும் புள்ளிவிபர கையேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகள் அளவுசார் அடிப்படையிலான பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகள் MS Office மென்பொருளிலுள்ள Microsoft Excel பகுப்பாய்வுக் கருவியில் உட்செலுத்தப்பட்டு தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் அவை அட்டவணைகளாகவும் புள்ளிவிபர நுட்பங்கள் மூலம் பார் வரைபடங்களாகவும் பை வரைபடங்களாகவும் மாற்றப்பட்டு ஆய்வில் காட்டப்பட்டுள்ளது.

ஆய்வில் இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக ArcMap 10.4.1 பகுப்பாய்வு மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தின் வளங்களின் இடரீதியான பரம்பலை வரைபடமாக்குவதற்காக Google Earth மென்பொருள் மூலம் பெறப்பட்ட சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் மாதிரிகள் Gis மென்பொருளில் உள்ள Georeferencing பகுப்பாய்வுக் கருவி ஊடாக புவிநிலைப்படுத்தப்பட்ட தரவுகளாக மாற்றப்பட்டன. வளங்களினது வேறுபட்ட பரம்பலை இனங்காணும் பொருட்டு ArcMap 10.4.1 மென்பொருளில் Digitizing நுட்பத்திற்கூடாக Digitizing செய்யப்பட்டு ஆய்வுப்பிரதேசத்தின் வளங்களின் பரம்பல் பற்றிய படம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுப்பிரதேசத்தின் தாவரப்போர்வையில் ஏற்பட்ட மாற்றத்தினை ஆண்டு ரீதியாக அளவிடுவதற்காக ArcMap 10.4.1 மென்பொருளில் வளங்களின் மாதிரிகள் Digitizing செய்யப்பட்டு அதன் பண்புஅட்டவணை(Attribute table) இல் இருந்து ஆண்டு ரீதியான மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன.

வரைபடம்: ஆய்வு முறையியல்



## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

சத்துருக்கொண்டான் பிரதேசமானது பல்வேறு இயற்கை வளங்களின் செறிவினைக்கொண்டதாக காணப்படுகின்றது. ஆய்வு பிரதேசத்தில் காணப்படுகின்ற இயற்கை வளங்கள் அடையாளப்படுத்தப்பட்டு படமாக்கப்பட்டுள்ளதுடன் இவ்வளங்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றை அபிவிருத்தியை நோக்கியதாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் இயற்கை வளங்கள் மீதான அச்சுறுத்தல் அவற்றின் அழிவிற்கான மூல காரணங்கள் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## ஆய்வுப்பிரதேசத்தின் வளங்களின் பரம்பல்

மட்டக்களப்பு மாவட்டமானது இயற்கை வளங்கள் பல செறிந்து காணப்படுகின்ற பகுதியாக அமைகின்றது. இங்கு காணப்படும் இயற்கை வளங்கள் மற்றும் அவற்றின் பரம்பல் பற்றி பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை வளங்களின் பரம்பல்(ஹெக்டயரில்)

| வளங்கள் | பரப்பு |
|---|---|
| நீர்வளங்கள்<br>• மேற்பரப்பு நீர்மூலங்கள்<br>✓ ஆறுகள்<br>✓ குளங்கள்<br>✓ கடற்பரப்பு<br>• தரைக்கீழ் நீர்வளம் | 24400 |
| விவசாய நிலங்கள் | 121540 |
| கரையோர வளங்கள் | 218628 |
| மண்வளம் | - |
| வனப்பரப்புக்கள்<br>• புல்வெளிகள்<br>• புற்றைக்காடுகள்<br>• கண்டல் காடுகள் | 95982 |
| கனிம வளங்கள் | 14364 |
| ஈரநிலங்கள் | 4690 |

மூலம்: மத்திய சுற்றாடல் அதிகாரசபை (2018)

மேற்குறிப்பிடப்பட்ட தரவுகளுக்கமைவாக சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் கனிய வளங்கள் தவிர்ந்த ஏனைய இயற்கை வளங்கள் செறிந்து காணப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது.

சுத்துருக்கொண்டான் பிரிவின் கிராமசேவக புள்ளிவிபர அறிக்கையின் பிரகாரம் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் வளங்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

1. நீர்மூலங்கள்
    - குளம்
    - வாவி
    - கடற்கரையோரம்
2. கண்டல் தாவரங்கள்
3. ஈர நிலம்
4. விவசாய நிலங்கள்
5. மீன்வளங்கள்
6. கரையோரத்தாவரங்கள்

என்பன காணப்படுவதுடன் இவற்றுடன் பனை வளமும் தென்னை வளமும் இப்பிரதேசத்தின் வளங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

### 3.1.1 குளம்

புளியடிமுனை கிராமத்தில் அமையப்பெற்றுள்ள குளமானது 52 ஹெக்டயர் பரப்பினை கொண்டு காணப்படுகின்றது. இக் குளம் 62 சதவீதம் மீன்பிடி நோக்கிற்காகவும் 32 சதவீதம் விவசாயத்திற்காகவும் தாமரை மற்றும் தாமரைக்கிழங்கு பெறுவதற்காக 6 சதவீதமும் பயன்படுத்தப்படுகின்றது.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

### 3.1.2 வாவி

இது சத்துருக்கொண்டான் காலனி பகுதியில் அமைய பெற்றுள்ளது. அதாவது தன்னாமுனை தொடக்கம் பிள்ளையாரடிக்கு உட்பட்ட பகுதியில் இவ் வாவி பரந்து காணப்படுகின்றது. குறிப்பாக A15 பிரதான வீதிக்கு அருகில் இவ்வாவி அமையப்பெற்றுள்ளது. வாவியில் 2.3km வரையிலான பரப்பு சத்துருக்கொண்டான் கிராமசேவகர் பிரிவிற்கு உரித்துடையதாக காணப்படுகின்றது.



**கடலும் கடற்கரையோரமும்**

இப்பிரதேசத்தின் கரையோரத்தில் சவுக்கடி கடற்கரையோரம் அமையப்பெற்றுள்ளது. சத்துருக்கொண்டான் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட கடற்கரையோரம் கிட்டத்தட்ட 4.85 கிலோ மீற்றர் தூரமாகும். ஓரளவு சுற்றுலா பயணிகள் வருகை தரும் பகுதியாக காணப்படுகின்றது. இது பிரதேசத்தின் பொருளாதாரத்தில் கணிசமான பங்கினை வைக்கின்றது.



### 3.1.4 ஈரநிலம்

இச்சதுப்புநிலமானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மிகப்பெரிய சதுப்பு நிலக்காடுகளில் ஒன்றாகும். இது இயற்கையாக அமைந்த ஈரநிலப்பகுதியாக காணப்படுகின்றது. இது மொத்தமாக 75 ஹெக்டயர் பரப்பில் அமைந்துள்ளது. ஆயினும் 52 ஹெக்டயர் பரப்பானது சத்துருக்கொண்டான் பிரதேசத்திற்குள் உள்ளடங்குகின்றது.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

இங்கு **Black-headed Ibis** (Threskiornithidae), **Lesser-wistling duck** (Anatidae), **Common sandpiper** (Scolopacidae) உட்பட 36 இனங்களினை சேர்ந்த 447 பறவைகள் இங்கு காணப்படுகின்றன. 8 சதவீத வெளிநாட்டு பறவையினங்களையும் கொண்டு காணப்படுகின்றது.

- Pandanas tectorius
- Marsh fern
- Laguncularia racemosa





- *Great Crested Greb*



- Greater coucal



- Great Blue Heron



- Black breaseted water hen



**கண்டல் தாவரங்கள்**

ஆய்வு பிரதேசத்தின் வாவிக்கரை பகுதிகள் கண்டல் தாவர பரம்பலை கொண்டு காணப்படுகின்றன. இங்கு ஓரளவு அடர்த்தியான கண்டல் தாவர பரம்பலினை அவதானிக்கமுடிகின்றது. 1987 காலப்பகுதிகளில் இப்பகுதியில் கண்டல் தாவரங்கள் மிகவும் அடர்த்தியாக காணப்பட்டதுடன் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இவை பெருமளவாக அழிக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடித்தொழிலுக்காகவும் குடிசைக்கைத்தொழிலுக்காகவும் மருத்துவ தேவைக்காகவும் இக்கண்டல் தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றது.






(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

**விவசாய நிலங்கள்**

A15 பிரதான வீதியின் அருகில் இவ் விவசாய நிலங்கள் அமையப்பெற்றுள்ளன. இங்கு சுமார் 60 ஹெக்டயர் நிலப்பரப்பில் இந்த விவசாய நிலங்கள் பரம்பி காணப்படுகின்றது. இங்கு Maha (மழையை அடிப்படையாக கொண்டது) Yala (குளத்தினை அடிப்படையாக கொண்டது) என்ற இரண்டு பருவங்களில் இங்கு பயிரிடப்படுகின்றன.

படம் 3.7




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

**பனைவளம்**

ஆய்வுப்பிரதேசத்தில் பனைவளமானது பரவலாகவும் செறிவாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக சத்துருக்கொண்டான் கடற்கரையோரத்தினை அண்டி பனைவளம் செறிவடைந்து காணப்படுவதனை குறிப்பிடலாம். இங்கு பெரும்பாலான சுயதொழில் முயற்சியாளர்கள் பனை மற்றும் பனை சார் உற்பத்திகளில் ஈடுபடுகின்றனர்.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

**தென்னை வளம்**

சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் குடியிருப்பு பகுதிகளிலும் கரையோரப்பகுதிகளை அண்டியும் பரவலாக தென்னந்தோட்டங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இத் தென்னை வளத்தினை பயன்படுத்தி பல சிறுதொழில் முயற்சியாளர்கள் பல்வேறு உற்பத்திகளினை மேற்கொண்டு வருகின்றனர். தென்னை வளத்திலிருந்து தேங்காய், கொப்பரை, தேங்காய்எண்ணெய், குருத்து, தென்னோலை, விறகு, பொச்சுமட்டை, தேங்காய் நார், சிரட்டை போன்றன பெறப்படுகின்றன.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

**கரையோரத்தாவரங்கள்**

ஆய்வுப் பிரதேச கரையோர வலயத்தில் காணப்படுகின்ற ஏனைய கரையோரத்தாவரங்களாக சவுக்கு, பனை, எருக்கலை, நிழல்வாகை, பற்றைக்காடுகள் என்பன காணப்படுகின்றன.




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023)

**சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் தொடர்பான பிரச்சினைகள்**

ஆய்வுப்பிரதேசத்தில் வளங்கள் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளில் முக்கியமாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளாக பின்வருவன அமைந்துள்ளன. அவையாவன

1. உயிர்ச்சூழல் பாதிப்பு
2. வளங்கள் தரமிழப்பு
3. வளப்பயன்பாட்டில் காணப்படும் சவால்கள்
4. நில ஆக்கிரமிப்பு

**வளங்களின் தரமிழப்பு**

ஆய்வுப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வினாக்கொத்து பகுப்பாய்வுகளின் அடிப்படையில் 54% மானவர்கள் வளங்கள் முற்றாக தரமிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.



படம்: கரையோரப்பகுதியினை அண்டியுள்ள கழிவுகள்

(மூலம்:களஆய்வு,2023)

ஆய்வுப்பிரதேசத்தில் வளங்கள் தரமிழப்பதற்கான பிரதான காரணியாக முறையற்ற கழிவகற்றல் முறைகள் இனங்காணப்பட்டுள்ளது. வளத்தரமிழப்பில் முறையற்ற கழிவகற்றல் செயன்முறைகள் 48 சதவீதம் பங்களிப்பினை வழங்குகின்றது. ஆய்வுப்பிரதேசத்தின் குறிப்பாக குளம், வாவிப்பகுதிகளை அண்டி வீதியோரப்பயணிகள் மற்றும் வேறு பிரதேச மக்களினாலும் கழிவுகள் வீசப்படுவதும் மாநகர சபையின் கழிவகற்றல் செயன்முறையில் காணப்படுகின்ற குறைபாடுகளும் வளத்தரமிழப்பினை அதிகம் தூண்டும் காரணிகளாக அமைகின்றன.

மேலும் மீன்பிடி சார் தொழில்நடவடிக்கைகளும் வளத்தரமிழப்பில் 23 சதவீத பங்களிப்பினை வழங்குகின்றன. மீன்பிடி நடவடிக்கைகளின் போது தேவைக்கு பயன்படுத்த முடியாத மீன்களை வாவியில் வீசுதல், கரைகளில் விட்டுச்செல்லல் போன்றன காரணமாக குறித்த நீர்ச்சூழல்கள் துர்நாற்றம் வீசும் பகுதிகளாக மாறிவிட்டமையினை களஆய்வின் வாயிலாக அவதானிக்கமுடிந்தது. அத்துடன் இயற்கை காரணிகளும் பிரதேசத்தின் வளத்தரமிழப்பில் கணிசமான பங்கினை கொண்டிருப்பது இனங்காணப்பட்டுள்ளது. குறிப்பாக காற்றின் செயற்பாடுகளினாலும் வெள்ளநீர் பெருக்கடிப்பதன் காரணமாகவும் கழிவுகள் அடித்து வரப்பட்டு கரையொதுங்குவதாகவும் 18 சதவீத மக்கள் தெரிவிக்கின்றனர்.

**வளம்சார் உயிர்ச்சூழல் தரமிழப்பு**

சத்துருக்கொண்டான் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வளம்சார் உயிர்ச்சூழல்களாக கண்டல் தாவரங்கள், ஈரநிலங்கள், கரையோரத்தாவரங்கள் ஆகியன வரையறுக்கப்பட்டுள்ளன. இதுவே அதிகளவில் அழிவடைந்து இருப்பதனை நேரடி அவதானிப்பின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தின் வளம்சார் உயிர்ச்சூழல் அழிவிற்கு மனித நடவடிக்கைகள் வெளிப்படையான காரணிகளாக அமைகின்றன. ஆய்வுப்பிரதேசத்தில் கண்டல் தாவரச்சூழல் அழிவானது அதிகளவு இடம்பெறுவதாக 46 வீதமானோர் குறிப்பிடுகின்றனர். 1987 ம் ஆண்டு

வரை இப்பிரதேசத்தில் அடர்த்தியாகக் காணப்பட்ட கண்டல் தாவரங்கள் 1990 ம் ஆண்டு யுத்தத்தின் போதும் துரித நகராக்க செயன்முறைகள் காரணமாகவும் தொடர்ச்சியாக அழிவடைந்து வருகின்ற போக்கு இப் பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளது. A 15 பிரதான வீதி விஸ்தரிப்பு பணிகளினாலும் கண்டற்தாவரப்பரப்பு அழிவடைந்ததாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.



படம்: கண்டல் தாவர அழிவு

(மூலம்:களஆய்வு,2023)

படம்: கண்டல் தாவரங்களின் அழிவினை காட்டும் படம்




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023).

| ஆண்டு | கண்டல் தாவரங்களின் பரப்பு (ஹெக்டயர்) |
|---|---|
| **2001** | 12.73 |
| **2011** | 11.9 |
| **2023** | 10.8 |

அட்டவணை: ஆண்டுரீதியாக கண்டல் தாவர அழிவு

மூலம்: ArcMap 10.4.1

**வளப்பயன்பாட்டில் காணப்படும் சவால்கள்**

ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களினை பயன்படுத்துவதில் பல்வேறு சவால்கள் காணப்படுவதனை களஆய்வின் வாயிலாக இனங்காணப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள் முறையாக பராமரிக்கப்படாமையினால் இவற்றை சரிவர பயன்படுத்த முடியாத சூழல் காணப்படுவதாக 49 வீதமானோர் தெரிவிக்கின்றனர். குறிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் அமைந்துள்ள குளமானது பராமரிப்புக்குறைபாடுகள் காரணமாக முழுமையாக பயன்படுத்தமுடியாத நிலையில் காணப்படுகின்றது.

குளப்பரப்பில் சாப்பைபுல் (Variegated Striped rice) எனும் நீர்த்தாவர ஆக்கிரமிப்பு, அதிகரித்து காணப்படும் வண்டல் சேற்றுப்படிவுகள், ஆபத்தான உயிரிகளின் நடமாட்டம் போன்ற சவால்களை பிரதேசவாசிகள் எதிர்கொள்வதாக தெரிவித்தனர். சத்துருக்கொண்டான் பிரதேசத்தை சேர்ந்த மீனவரான த.சங்கரலிங்கம் (வயது-53) *''இக் குளமானது எனது வாழ்வாதார நடவடிக்கையாக இருக்கின்றது. குளத்தினை பெருமளவாக சாப்பை புல் ஆக்கிரமித்து காணப்படுவதனால் சாப்பைபுல் காணப்படும் பகுதிகளில் தோணிகளை கொண்டு செல்லமுடியாமல் குளத்தினுள் இறங்கி தோணியினை இழுத்துச்செல்ல வேண்டி ஏற்படுகின்றது. அதே வேளை குளத்தில் முதலை மற்றும் அட்டைகள் இருப்பதனால் பாதுகாப்பின்றி மீன்பிடியில் ஈடுபடுகின்றேன்''* எனக் தெரிவித்தார்.

மேலும் வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வுகளற்ற தன்மையினால் வளங்களை பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாக 20 வீதமானோர்

தெரிவிக்கின்றனர். குறித்த பிரதேசத்தின் வளங்களை 40 வீத வெளிப்பிரதேச மக்களே பயன்படுத்துவதனை அறியமுடிகின்றது.

### நில ஆக்கிரமிப்பு

சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் வளம்சார் நில ஆக்கிரமிப்பானது மிக முக்கிய சவாலாக காணப்படுகின்றது. வினாக்கொத்து பகுப்பாய்வுகளில் 12 சதவீதத்தினர் நிலஆக்கிரமிப்பினால் பிஇங்கு காணப்படுகின்ற வளங்கள் சார்ந்த நிலப்பரப்பானது அண்மைக்காலமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றதனை களஆய்வின் ஊடாக அறியமுடிந்தது.

குறிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற விவசாய நிலங்கள் மற்றும் ஈரநிலம் என்பன ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புக்களும் அபிவிருத்தி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வுப்பிரதேசத்தில் கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களின் காரணமாக இவ்விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையினை களஆய்வின் ஊடாக அறியமுடிந்தது.

படம் 3.12 ஆய்வுப்பிரதேசத்தின் விவசாய நில ஆக்கிரமிப்பு(2001-2023)




படம் 3.13 ஆய்வுப்பிரதேசத்தின் ஈரநில ஆக்கிரமிப்பு(2001-2023)




(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023).

A15 பிரதான வீதி விஸ்தரிப்பின் போது சத்துருக்கொண்டான் ஈரநிலப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இவ் ஈரநிலப்பகுதி தனியாருக்கு உரித்துடைய நிலமாக காணப்படுவதனால் இப்பகுதி விற்பனைக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதனை நேர்காணல் மூலமாக அறியமுடிந்தது.

மேலும் ஈரநிலப்பகுதியினை மண்ணிட்டு நிரப்பி கட்டடங்கள் அமைக்கின்ற செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக ஈரநிலப்பகுதியானது ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதனை அறியமுடிந்தது.

அட்டவணை 3.2 சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் ஆண்டு ரீதியாக வளம்சார் நிலங்கள் ஆக்கிரமிப்பு

| ஆண்டு | விவசாய நிலங்கள் (ஹெக்டயர்) | ஈரநிலம் (ஹெக்டயர்) |
|---|---|---|
| **2001** | 24.2 | 54 |
| **2011** | 22.4 | 53.8 |
| **2023** | 18.9 | 52.2 |

மூலம்: ArcMap10.4.1

**இயற்கை வளங்கள் தரமிழப்பினால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்**

சத்துருக்கொண்டான் பிரதேசம் இயற்கை வளங்களின் தரமிழப்பினால் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் வளங்களின் தரமிழப்பினால் பௌதீக ரீதியாக 47 சதவீத பாதிப்புக்கள் எதிர்கொள்ளப்படுவது இனங்காணப்பட்டுள்ளது.

வளங்கள் தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளின் விளைவாக ஆய்வுப்பிரதேசத்தின் இயற்கை தன்மை மாற்றத்திற்குட்படுவதால் இயற்கை எழில் குறைவடைவதுடன் நிலப்பயன்பாட்டுக் கோலத்திலும் மாற்றங்களை அவதானிக்கமுடிகின்றது.

(மூலம்: ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டது,2023).

ஆய்வுப்பிரதேசத்தில் ...ாதார பாதிப்புக்களும் எதிர்கொள்ளப்படுகின்றது. பனை, பன் போன்றன அதிகமாக சுரண்டப்படுவதாலும் குடிசைக்கைத்தொழிலினை மேற்கொள்ளமுடியாத சூழல் காணப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். கண்டல் தாவரங்கள், கரையோர மற்றும் ஈரநிலம் சார் தாவரங்கள் அழிவடைகின்றன. இதனால் தாவர உயிர்ச்சூழல் வெகுவாக பாதிக்கப்படுவதனால் அதனை நம்பி வாழும் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பிரதேசத்தின் வளங்கள் முறையாக பயன்படுத்தப்படாததால் அபிவிருத்தி ரீதியான பின்தங்கிய நிலை, வறுமை நிலைக்கு தள்ளப்பட்டமையினையும் அறியமுடிந்தது.

ஆய்வுப்பிரதேசம் இயற்கை வளங்களால் சூழப்பட்டு காணப்படுவதனால் வளங்களை மையப்படுத்தியதான அபிவிருத்தி செயன்முறைகளை மேற்கொள்ள வாய்ப்பான பகுதியாக

அமைகின்றது. இப் பகுதி மீன்பிடிசார் தொழில்களுக்கு சாதகமான வளங்களை கொண்டு காணப்படுவதனால் மீன்பிடியினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பிரதேசம் அபிவிருத்தியினை நோக்கிச்செல்லமுடியும். பாரம்பரிய மீன்பிடி முறைகளை களைந்து GPS போன்ற நவீனமுறைகளை கையாள்வதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளல், மானிய முறையில் மீன்பிடி உபகரணங்களை வழங்கல், தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளை பிரதேசத்தில் செயற்படுத்தும் போது மீன்பிடிசார்ந்து இப்பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய முடியும்.

சத்துருக்கொண்டான் பிரதேசம் சுற்றுலாசார் வளங்களை கொண்டிருப்பதனால் கரையோர சுற்றுலாவினை வலுப்படுத்தமுடியும்.




படம் 3.3 படகுச்சவாரியினை ஏற்படுத்துவதற்கான பாதை ஒழுங்கு

(மூலம்: Google Earth)

சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் வாவிக்கரை தொடங்கி மாந்தீவு, எருமைத் தீவு மற்றும் முகத்துவாரம் வெளிச்சவீட்டின் ஊடாக சவுக்கடி கடற்கரை வரையிலான சுமார் 27Km வரையிலான படகு சேவைகளினை ஏற்படுத்திக்கொடுக்கும் போது சுற்றுலாவினை மேலும் விருத்தி செய்யக்கூடியதாக காணப்படும். மக்கள் பொழுதுபோக்கின் நிமித்தம் படகுச்சவாரியினை மேற்கொள்ள ஆர்வம் கொண்டிருப்பதனால் படகுச்சவாரிகளை ஆய்வுப்பிரதேசத்தில் ஏற்படுத்திக்கொடுத்து சுற்றுலாவினை மேம்படுத்த வாய்ப்பாக அமையும். கண்டல் தாவரங்களினை மையப்படுத்தி அவற்றிற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் மிதப்பு பாலங்களை ஏற்படுத்தி கல்விசார் சுற்றுலாவினை ஊக்குவிக்கும் போது வளங்களினை மையப்படுத்திய பிரதேச அபிவிருத்தியினை ஏற்படுத்த முடியும்.

ஈரநிலப்பகுதியில் அதிகளவான உயிர்ப்பல்வகைமை காணப்படுவதனால் அவற்றினை பார்வையிடுவதற்கான செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும் வெளிநாட்டு

பறவையினங்கள் தங்கிச்செல்லும் பகுதியாக இவ்ஈரநிலம் காணப்படுவதனால் அவற்றை பார்ப்பதற்கான கோபுரங்களினை அமைத்து கொடுக்கும் போது அதிகளவான மக்கள் இங்கு வருகை தந்து சுற்றுலாவினை மேற்கொள்ளமுடியும்.




படம் 3.4 பறவைகளினை பார்வையிடும் கோபுரம் அமைப்பதற்கான இடம்

(மூலம்: Google Earth)

## முடிவுரை

சத்துருக்கொண்டான் பிரதேசமானது பெறுமதியான வளங்களை கொண்டதும் சமூக பொருளாதார ரீதியில் முக்கியமான பிரதேசமாக காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. இது நீர்வளம், நிலவளம், இயற்கைத்தாவரங்கள், உயிர்ப்பல்வகைமை போன்ற பலதரப்பட்ட வளங்களின் உறைவிடமாகக் காணப்படுகின்றது. இத்தகைய பெறுமதியான வளங்கள் இயற்கையுடன் ஒப்பிடுகின்ற போது அதிகளவாக மானிடக்காரணிகளின் விளைவால் அச்சுறுத்தலுக்குள்ளாவது ஆய்விற்கூடாக கண்டறியப்பட்டுள்ளது. சத்துருக்கொண்டான் பகுதியில் மானிடக்காரணிகளின் விளைவால் 82 சதவீதமான வளங்கள் தரமிழக்கச் செய்யப்படுவதும் அதில் அதிகளவான பங்கு கழிவகற்றலில் காணப்படும் குறைபாடுகளாலேயே ஏற்படுவதும் இனங்காணப்பட்டுள்ளது. வளங்கள் இருந்தும் சரியான முறையில் பயன்படுத்தப்படாத நிலையே பிரதேசத்தின் பின்தங்கிய நிலைக்கு காரணமாகும்.

இனங்காணப்பட்டவகையில் வளங்களின் தரமிழப்பிற்கான வாய்ப்புக்களும் நடவடிக்கைகளும் இப்பிரதேசத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. கடந்தகாலங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் அழிக்கப்படுவதும், உயிர்ச்சூழல் பாதிக்கப்படுவதும், வளநிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதும் அதிகரித்த போக்கையே காட்டுகின்றது. ஆகவே வளங்களின் தரமிழப்பு இதே நிலையில் செல்லுமானால் அவைவ ளங்களின் இருப்பிற்கு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் முகாமைத்துவத்தினை மேற்கொள்வதன் அவசியம் வெகுவாக உணரப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் வளங்களினை மையப்படுத்திய அபிவிருத்தி செயன்முறைகளினை நடைமுறைப்படுத்துவதற்கான உபாயங்கள் பரிந்துரைகள் மூலம் ஆய்வில் முன்மொழியப்பட்டுள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளை இடைநிறுத்தாமல் பிரதேசத்தின் வளங்களுக்கு பொருத்தப்பாடு உடைய வகையில் பக்க சார்பற்ற வகையிலும் ஆய்வு கூறப்பட்ட தீர்வாலோசனைகளை உள்ளடக்கிய வகையிலும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அபிவிருத்திகளை இடம்பெறுமாயின் சத்துருக்கொண்டான் பிரதேசத்தின் வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன் எதிர்கால சந்ததியினருக்கான வளம் நிறைந்ததும் பிரச்சினைகள் அற்றதுமான பிரதேசத்தினை கையளிக்கமுடியும் என்பதனை இவ்வாய்வானது வெளிப்படுத்துகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


அண்டனி நோர்பேட்.எஸ்.,2003, "சூழல் புவியியல் வளங்களும் முகாமைத்துவமும்" சேமமடு பதிப்பகம்.

அலீம்,கே.(2023 September 25). மட்டக்களப்பின் மீன்பிடி நடவடிக்கைகள்.தினகரன். P.8

இராஜேஸ்வரன்,ச.(2020 March 4 ).வளங்கள் நிறைந்த மட்டக்களப்பு. வீரகேசரி. P.13

குணராசா,க.(2002). சூழலியல். கமலம் பதிப்பகம். யாழ்ப்பாணம்

சிவசந்திரன்,இ.(2018 April 02). இயற்கை வளங்களும் முகாமைத்துவமும். தமிழ்சுடர். 33-38. https://thamizhsudar.com/%E0%AE

போர்டில்லோ,ஜே.(2017August). இயற்கை வளங்கள். 41(1). https://www.renovablesverdes.com/ta/recursos-naturales/

Thanupa.T.(2020). Social development and resources of analai island territory;. 7th International Symposium of FIA- 2020, (pp.535-550) http://.seu.ac.lk/bitstream/123456789/5100/1/Final%20Proceedings%

கேதீஸ்வரன்.ம.(2018).கிழக்கு மாகாணத்தின் வளங்கள், எழுனா, https://ezhunaonline.com/resources-and-local-economic-development-of-the-north-eastern-province/

இராஜேஸ்வரன்,எஸ்.(2015). சுற்றுலா மையங்களின் உள்ளார்ந்த வளங்கள் பற்றிய ஓர் மதிப்பீடு. யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலையினை சிறப்பாகக் கொண்டது: South Eastern University Arts Research Session. (pp.730-750)

Romanova,E.P.etal.(2012 May).Natural resources of world. Pp.228-240. Newyork.

Anthony,C.(2023 May 10). 10 Countreis with most natural resources.Investopedia. Retrieved 13 November 2023, from https://www.investopedia.com/articles/markets-economy/090516/10-countries-most-natural-resources.asp

Elmi,L.(2020 March 13). Developing countries with natural resource. The Borgen project. Retrieved 29 October 2023, from https://borgenproject.org/developing-countries-that-benefit-from-natural-resources/

# சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு

Ms. Mohamed Ismail Fathima Rihma
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*mmifrihma@gmail.com*

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thavaprabas@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற முக்கியமான துறையாகச் சுற்றுலாத்துறை விளங்குகின்றது. கேகாலை மாவட்டத்தில் சுற்றுலாவுக்கு வாய்ப்பான காரணிகளான காலநிலை, தரைத்தோற்றம், இயற்கை காட்சிகள், நீர்வீழ்ச்சி, காடுகள், மலைகள் வரலாற்று இடங்கள் போன்றன சுற்றுலாவுக்கு வாய்ப்புக்கான இடங்களாக காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் ‘‘சுற்றுலாத்துறைக்கு உள்ளார்த்தமான அமைவிடங்களும் அவற்றின் முக்கியத்துவங்களும்: கேகாலை மாவட்த்தினை மையமாக கொண்ட ஆய்வு’’ என்ற தலைப்பில் மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை வாய்ப்பான இடங்களை அடையாளம் காண்பதை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேரடி அவதானம், கலந்துரையாடல், நேர்காணல் போன்ற முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையும் பிரசுரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத இரண்டாம் நிலை தரவுகளும் பெறப்பட்டுள்ளது. ArcMap 10.3.1, Google Earth Pro என்பவற்றின் ஊடாக இடரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சுற்றுலா மையங்கள் தொடர்பாக விளக்கங்கள் முன்வைக்க விபரணப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்கள் தொடர்பாக CapCut பயன்படுத்தி காணொளி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் 8 சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாவனல்லைப் பிரதேச செயலாளர் பிரிவில் 7 சுற்றுலா மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இச்சுற்றுலா மையங்கள் வரலாற்றுடன் தொடர்புபட்ட மையங்களாகவும், இயற்கை சார்ந்த சுற்றுலா மையங்களாகவும் விளங்குகின்றன.

***திறவுச்சொற்கள்:*** *அந்நியச்செலாவணி, சுற்றுலாத்துறை, சுற்றுலா மையங்கள், வளவாய்ப்புகள், விபரணப் பகுப்பாய்வு*

**அறிமுகம்**

சுற்றுலாத்துறை என்பது பொதுவாக எல்லா நாடுகளிலும் அந்நிய செலாவணியையும் அதிகளவான வேலைவாய்ப்பையும் பெற்றுத் தருகின்ற முக்கியமான துறையாக விளங்குகின்றது. ஆரம்பத்தில் நாடுகான் பயணங்கள் கண்டுபிடிக்கும் நோக்குடன் ஆரம்பமான சுற்றுலாத்துறையானது இன்று பல்வேறு நோக்கங்களுக்காக உள்நாட்டில், வெளிநாட்டில் தங்கள் சுற்றுலா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுலாத்துறைச் செயல்பாடுகள் ஓய்வு, இன்பம், பொழுதுபோக்கு, கல்வி, ஆரோக்கியம், சமயம், விளையாட்டு, குடும்ப விவகாரங்கள், கூட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

சுற்றுலா என்றால் என்ன என்பது தொடர்பாக பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலாத்துறை நிறுவனம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது. ‘‘சுற்றுலாத்துறை என்பது சம்பளம் பெற்றுக் கொள்ளும் எந்த செயற்பாட்டிலும் தொடர்பில்லாத பொழுதுபோக்கு, வணிகம் மற்றும் வேறு நோக்கங்களுக்காக 24 மணித்தியாலங்களுக்கு குறையாமலும் தொடர்ச்சியாக ஒரு வருடத்திற்கு மேற்படாமல் தமது வழமையான சுற்றுச்சூழலை விட்டு வெளியே சென்று அங்கு தங்குதலையே சுற்றுலா செயல்பாடு என வரையறுக்கின்றது.’’ உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறையானது அந்நிய செலாவணி, வேலை வாய்ப்பு, முதலீடுகள், உட்கட்டமைப்பு வசதி, பொருளாதார வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளின் விருத்திக்கு பங்களிக்கின்ற ஒரு துறையாக விளங்குகின்றது (*Definintion of Tourism (UNWTO Definition of Tourism) / What Is Tourism ?*, n.d.).

அதன் அடிப்படையில் நோக்கும் போது இலங்கையின் சுற்றுலாத்துறை துறையானது அந்நியச் செலாவணியில் பங்களிக்கின்ற முக்கியமான துறையாகும். 2018 ஆம் ஆண்டு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையின்படி மூன்றாவது இடத்தினை சுற்றுலாத்துதுறை வகிக்கின்றது. மேலும் இலங்கையின் மொத்த தேசிய வருமானத்தில் இதன் பங்களிப்பானது 4.9 வீதமாக 2018 ஆண்டு காணப்பட்டது (சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, 2018).

இலங்கையின் சுற்றுலாத்துறையானது வரலாற்றுக் காலம் தொடக்கம் சுற்றுலாத் துறைக்கு முக்கியமான பிரதேசமாகவும் மையமாகவும் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் இலங்கையின் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவமானது 1960 களுக்குப் பின்னரே உணரப்பட்டது. இலங்கையில் 1967 ஆம் ஆண்டிலேயே சுற்றுலாவுக்கான உரிய அமைப்பானது கொண்டுவரப்பட்டது. இலங்கை நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டின் அமைவிடம், காலநிலை, பல்லுருவ தன்மையான கடற்கரையோர அமைப்பு, கலாச்சாரம், வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், பவளப்பாறைகள், தாவரப் போர்வை, தரைத்தோற்ற அமைப்பு, பண்பாடுகள் போன்றன இலங்கையின் சுற்றுலாத் துறையை கவர்கின்ற ஒரு பிரதேசமாகவும் இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பான இடமாக காணப்படுவதற்கு இவ்வாறான காரணிகளே காரணமாகும். இலங்கையை பொறுத்தவரையில் இலங்கை ஒரு

தீவாக காணப்படுவதன் காரணமாக 24 மணித்தியாலத்துக்குள் எந்த ஒரு பகுதிக்கும் பயணிக்கக் கூடிய வகையில் காணப்படுவதனால் இலங்கை அதிகளவான சுற்றுலா பயணிகளை கவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (வர்ணகுலசிங்கம் மற்றும் பத்மாகந்தகுமார், 2015).

மேலும் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் அளவானது பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்ற ஒரு நிலையே காணப்படுகின்றது. அதாவது சுற்றுலா வளங்களில் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபாடுகள் காரணமாக சுற்றுலா பயணிகள் வருகை தரும் அளவிலும் மாவட்டங்களின் அடிப்படையில் வேறுபடுகின்றதை காணலாம். அதன் அடிப்படையில் இலங்கையின் மத்திய மலைநாட்டின் மேற்குச் சாய்வில் அமையப்பெற்றுள்ள சப்ரகமுவ மாகாணத்தில் ஒரு மாவட்டமாக கேகாலை விளங்குகின்றது. இது இயற்கை எழில் கொண்ட நீர்வீழ்ச்சிகள், ஊற்றுக்கள், மலைகள், தேயிலைத் தோட்டங்கள், காடுகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை கொண்ட ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தினை பொருத்தவரையில் சுற்றுலாத்துறையில் மிகவும் பிரசித்தமான இடங்களாக பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சி சாலை போன்றன காணப்படுகின்றன. குறித்த யானைகள் சரணாலயத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருடாந்த சராசரி எண்ணிக்கை 524,700 ஆக காணப்படுகின்றது (Dayananda & Weerakoon, 2012).

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் பொழுது கேகாலை மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்கள் நேரத்தைக் கழிக்கின்ற வீதமானது குறைவாகவே காணப்படுகின்றது. அதாவது இங்குள்ள பிரதேசங்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற பிரதேசங்களாகக் காணப்பட்டாலும் அவை முறையாக அடையாளப்படுத்தப்படவில்லை. எனவே இவ்வாறான சூழ்நிலையில் கேகாலை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தளங்களை அடையாளப்படுத்தி இப் பிரதேசத்தை பிரசித்தி பெற்ற சுற்றுலா மையங்களாக மாற்ற முடியும்

**ஆய்வுப் பிரச்சினை**

கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் மாவனல்லை மற்றும் அரனாயக்க என்பன முக்கியமான பிரதேச செயலக பிரிவுகளாக காணப்படுகின்றன. கேகாலை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலா மையங்களாக பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் பின்னவல மிருகக்காட்சிசாலையே முக்கியமான சுற்றுலா மையங்களாக காணப்படுகின்றன. ஆனால் இப்பிரதேசங்களை பொறுத்த அளவில் அதிகளவான சுற்றுலாவுக்கான வாய்ப்பான இடங்கள் காணப்பட்டாலும் அவை அடையாளப்படுத்தப்படாத பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. குறிப்பாக அரனாயக்க மற்றும் மாவனல்லை போன்ற பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் சுற்றுலாவுக்கான வாய்ப்பான பிரதேசங்கள் அதிகளவு காணப்படுகின்றன. ஆனால் இன்றுவரை அச்சுற்றுலா பிரதேசங்களானது அடையாளப்படுத்தப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. சுற்றுலாவுக்கு வாய்ப்பான இடங்கள் காணப்பட்டு முறையாக அடையாளப்படுத்தப்படாமை முக்கியமான பிரச்சினையாக விளங்குகின்றது.

**ஆய்வு வினா**

ஆய்வு வினா என்பது ஒரு ஆய்வினைச் சிறப்பாக வடிவமைப்பதற்கு முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. அதாவது ஆய்வு பிரச்சினையை தெளிவாக இனங்காண்பதற்கும், ஆய்வின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கும் ஆய்வினை குறித்த ஆய்வு தலைப்பில் மாத்திரம் வடிவமைப்பதற்கும் ஆய்வு வினா இன்றியமையாததாக காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் இவ்வாய்வின் ஆய்வு வினாக்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுலாத் துறைக்கு வாய்ப்பான பிரதேசங்கள் எவை?

**ஆய்வு நோக்கம்**

எந்தவொரு ஆய்வாக இருப்பினும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. அதன் அடிப்படையில் இவ்வாய்வானது முதன்மை நோக்கமாக மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் அமையப் பெற்றுள்ள சுற்றுலாத் துறைக்கு வாய்ப்பான இடங்களை அடையாளம் காண்பதை முதன்மை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

ஓர் ஆய்வு சிறப்பாக அமைவதற்கு இலக்கிய மீளாய்வு என்பது மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றது. ஆய்வினை சிறப்பாகவும் திறமையாகவும் வடிவமைப்பதற்கு அவ் ஆய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை மீளாய்வு செய்வது அவசியமாகும். இங்கு சுற்றுலாத்துறை வளவாய்ப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சில ஆய்வுகள் தொடர்பான இலக்கிய மீளாய்வினை நோக்குவோம்.

Mandals என்பவரால் (2023) ஆம் ஆண்டு "Potentialities of Eco – Tourism Industry in Arunachal Pradesh" எனும் தலைப்பின் கீழ் இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்பான இடத்தினை கண்டறிவதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்கு இரண்டாம் நிலை தரவுகளான சஞ்சிகைகள், புத்தகங்கள், சுற்றுலா ஆண்டறிக்கைகள், இணையதளம் போன்றவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு விபரணப் பகுப்பாய்வு நுட்பம் முறையை கையாண்டு இவ் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் அருணாச்சலப் பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவுக்கு வாய்ப்பான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், இச் சுற்றுலாத்தளங்களை விருத்தி செய்யும் பொழுது அப்பிரதேசம் சார்ந்த உட்கட்டமைப்புவசதிகள் விருத்தி அடைவதுடன் அப்பிரதேசம்சார் மக்களுக்கான வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக சுற்றுலாத்துறை விருத்தியானது அமையும் என்ற அடிப்படையில் ஆய்வின் முடிவு வழங்கப்பட்டுள்ளது.

Tleuberdinova et., al ஆகியோரால் (2023) ஆம் ஆண்டு "Exploring the Resource Potencial for the Development of Ecological Tourism in Rural Area the case of Kazakshstan எனும் தலைப்பில் கஸகஸ்தானின் கிராமப் புறத்தை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமப்புற சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஊடாக கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நகர வளர்ச்சி மெதுவாக அதிகரிப்பதனையும் நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வானது விபரண பகுப்பாய்வு, கிளஸ்டர் பகுப்பாய்வு, கரஸ்பாண்டட் பகுப்பாய்வு (Correspondence Analysis) போன்ற பகுப்பாய்வு நுட்ப முறைகளை கையாண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின்படி நகர்ப்புற சுற்றுலாத் துறையை விட கிராமப்புற சுற்றுலாவானது சமூகப் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதுடன், கஸகஸ்தானின் கிராமப் பகுதி இயற்கை, கலாசாரம், வரலாற்று ரீதியான வளங்களை கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதுடன், இவ்வளங்கள் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் வருகை தரக்கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக கிராமப்புறத்தின் வாழ்க்கை தரத்தினை உயர்த்த முடியும் என ஆய்வு முடிவு குறிப்பிடுகின்றது.

Mitharan Aioysius et.al ஆகியோரால் (2022) ஆம் ஆண்டு "Ecotourism Potential in Northern Province of Sri Lanka" எனும் தலைப்பின் கீழ் இலங்கையின் வட மாகாணத்தை மையமாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் சூழல்சார் சுற்றுலா துறைக்கான வாய்ப்பினை கண்டறிவதை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வினாக்கத்து, நேரடி அவதானிப்பு ஊடாக தரவுகள் பெறப்பட்டு பெரலொங் முறையை (Pralong's Method ) பயன்படுத்தி முக்கியமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இங்கே படமாக்கள் செயல்முறைக்கு Arc GIS 10.3 என்ற மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் உட்கட்டமைப்பு வசதியின்மை நிறுவனங்கள் பங்களிப்பின்மை போன்ற தடைகள் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தடையாக இருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் யாழ்ப்பாண மாவட்டம் சூழல்சார் சுற்றுலாவுக்கு அதிகளவான வாய்ப்பான மாவட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ந்து மன்னார் கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா மாவட்டங்கள் விளங்குவதாக இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் உட்கட்டமைப்பு விருத்தி மேற்கொள்வதின் ஊடாக எதிர்காலத்தில் வடமாகாணத்தை சிறந்த சூழல்சார் சுற்றுலாவுக்கு பிரசித்தி பெற்ற இடமாக மாற்றலாம் என்று ஆய்வு முடிவு சுட்டிக்காட்டுகின்றது.

## ஆய்வு முறையியல்

### ஆய்வுப் பிரதேசம்

படம் 1.1 ஆய்வுப் பிரதேசம்




மூலம் :- ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2024

இலங்கையில் மேற்குச் சாய்வில் அமையப் பெற்றுள்ள சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டமானது அமைந்துள்ளது. இம்மாவட்டமானது 1692.8 சதுர கிலோமீற்றர் பரப்பினை கொண்டு 11 பிரதேச செயலகப் பிரிவினையும் 523 கிராம சேவகர் பிரிவினையும் கொண்டு அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் ஆய்வு பிரதேசமாக அரனாயக்க மற்றும் மாவனல்லை பிரதேச செயலகப் பிரிவுகள் விளங்குகின்றன. இப் பிரதேச செயலகங்கள் கேகாலை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளதுடன், இவை உயரம் கூடிய மலை பாங்கான பிரதேச செயலகங்களாக காணப்படுகின்றன.

மாவனல்லை பிரதேச செயலகத்தை பொருத்தவரையில் இது சுமார் 71 கிராம சேவகர் பிரிவினையும் சுமார் 117.25 சதுர கிலோமீற்றர் பரப்பையும் 28,982 ஹெக்டயர் நிலப்பரப்பினையும் கொண்டுள்ளது. இது 70° 14’ 31” வட அகலாங்கினையும் 80° 24’ 40” கிழக்கு நெட்டாங்கினையும் இடைப்பட்ட பிரதேசமாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 500 தொடக்கம் 1500 மீற்றர் உயரத்தில் அமையப்பெற்றுள்ளது. இப்பிரதேசத்தின் உயரமான பகுதியாக 3390 அடி உயரம் கொண்ட அலகல்ல மலை காணப்படுகின்றது.

அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவினை பொருத்தவரை கடல் மட்டத்திலிருந்து 300 தொடக்கம் 500 மீற்றர் உயரத்தில் அமைய பெற்றுள்ளது. இது வட அகலங்கு 7° 59’ 89” கிழக்கு நெட்டாங்கு 80° 26’ 32” உற்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் உயரமான பகுதியாக ரமா‘வர் கபொல்லகந்த ஆகும். இது 3667 அடி உயரம் கொண்டது. இப்ரதேசத்தின் வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதி தட்டையாகவும்

ஏனைய பகுதிகள் செங்குத்து சரிவு கொண்ட மலைப் பாங்கான பகுதியாகவும் காணப்படுகின்றது. இதன் பரப்பளவானது சுமார் 1184 சதுர கிலோமீற்றர் காணப்படுகின்றது.

மாவனல்லை பிரதேச செயலகத்தின் சராசரி வெப்பநிலை 24 °C - 27°C காணப்படுவதுடன், வருடாந்த மழை வீழ்ச்சி 2000mm தொடக்கம் 3000 mm வரை கிடைக்கப் பெறுகின்றது. இதன் சராசரி மழை வீழ்ச்சியானது 2373 mm காணப்படுகின்றது. அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவின் சராசரி வெப்பநிலையை நோக்கும் பொழுது இங்கு 27°C காணப்படுகின்றது. அதேவேளை அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவினை நோக்கும் பொழுது இங்கு வடபகுதியை விட தென்பகுதி அதிக அளவு மழை வீழ்ச்சி பெறுகின்ற பிரதேசமாக காணப்படுகின்றது. இதன் வடபகுதி 3000mm மழையையும், மத்திய பகுதி 3000mm தொடக்கம் 4000mm மழை வீழ்ச்சியும் தெற்கு எல்லை பகுதி 4000 mm விட அதிகமாக மழை வீழ்ச்சியைப் பெறுகின்ற பிரதேசமாக அரனாயக்க விளங்குகின்றது.

### தரவு சேகரிப்பும் தரவுப் பகுப்பாய்வு

இவ்வாய்வானது தெரிவு செய்யப்பட்ட ஆய்வு பிரதேசத்தில் இருந்து தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு தரவு சேகரிப்பு நுட்ப முறைகளை கையாண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. குறித்த சேகரிக்கப்பட்ட தரவுகளை கொண்டு பகுப்பாய்வு நுட்ப முறைகளை கையாண்டு ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களை கொண்டு விபரணப் பகுப்பாய்வு முறையினை கொண்டு இவ். ஆய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### தரவுகள்

அந்த அடிப்படையில் இவ் ஆய்வுக்குரிய தரவுகளானது பிரதானமாக இரு மூலங்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டுள்ளது.

- முதாலம் நிலைத் தரவுகள் (Primary Data)
- இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data)

முதலாம் நிலைத்தரவுகளானது மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு சென்று நேரடி அவதானிப்பு மற்றும் நேர்காணல், குவியக் குழு கலந்துரையாடல், புகைப்படம் எடுத்தல் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டது. இரண்டாம் நிலை தரவுகளானது மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலகங்கள், கேகாலை மாவட்ட செயலகம் போன்றவற்றில் இருந்து இரண்டாம் நிலை தரவுகள் பெறப்பட்டன.

**தரவு சேகரிப்பு முறை**

தரவினை நாம் இரண்டு விதமாக பெற்றுக்கொள்ள முடியும். அவை நேரடியாக குறித்த ஆய்வுப் பிரதேசத்துக்கு ஆய்வாளன் சென்று பெறப்படும் தரவு சேகரிக்கும் முறையினை முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறை என்றும், ஆய்வாளன் ஏற்கனவே வெளிவந்த ஆவணப்படுத்தப்பட்ட விடயங்களின் ஊடாக குறித்த பிரதேசம் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் முறை இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறை என்றும் அழைக்கப்படும. அதன் அடிப்படையில் இவ்வாய்வினை மேற்கொள்ள முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

☞ **முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறை**

கலந்துரையாடல், நேர்கானல், அவதானம் போன்ற முறைகளை கையாண்டு ஆய்வாளன் நேரடியாக ஆய்வு பிரதேசத்திற்கு சென்று தரவு மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளும் முறையே இதுவாகும். இவ் ஆய்வானது அவதானம், நேர்காணல், கலந்துரையாடல், வினாக்கொத்து போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.

- **நேரடி அவதானம்**

நேரடி அவதானம் என்பது ஆய்வாளன் களத்துக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலைகளை அவதானிப்பதை நேரடி அவதானம் என்கின்றோம். அதனடிப்படையில் ஆய்வு பிரதேசத்தில் சுற்றுலாத்துறை விருத்திக்கு வாய்ப்பான பிரதேசங்களை கண்டறிவதன் மூலமாக தரவுகளானது சேகரிக்கப்பட்டது. மேலும் புகைப்படங்கள், காணொளிகள் எடுத்தல், சுற்றுலாப் பிரதேசம் தொடர்பாக குறிப்பிடுதல் போன்ற செயற்பாடுகளும் நேரடி அவதானத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- **நேர்காணல்**

தரவுகளை முறையாகவும் தெளிவாகவும் பெற்றுக் கொள்வதற்கு நேர்காணல் என்பது முக்கியமான தரவு சேகரிப்பு நுட்ப முறையாகும். நேர்காணலானது குறித்து அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்கள் காணப்படும் கிராம சேவகர், பிரதேச செயலக பிரிவுகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்றவர்களுடன் நேர்காணல் மேற்கொள்ப்பட்டது. அதுமட்டுமின்றி இச் சுற்றுலாக்கு வாய்ப்பான இடங்கள் தனியார் உடையதாக காணப்பட்டதால் அது தொடர்பான பொறுப்பான அதிகாரிகளிடமும் நேர்காணல் மேற்கொண்டு தரவுகளை பெற்றுக் கொள்ளப்பட்டது. அதுமட்டுமின்றி குறித்த பிரதேசத்தில் சுற்றுலாத் தளங்கள் தொடர்பாக காணொளிகளை பதிவு செய்யும் லழரவரடிநச ஒருவருடன் தொலைபேசி மூலமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.

- **கலந்துரையாடல்**

இங்கு தரவுகளானது தனிப்பட்ட மற்றும் குழு குழுக் கலந்துரையாடல் மூலம் சேகரிக்கப்ட்டுள்ளது. அதாவது குறித்த சுற்றுலா மையங்களை சுற்றி வாழ்கின்ற பெரியவர்கள், வீதியோர கடை உரிமையாளர்கள், அங்குள்ள பொதுமக்கள்

போன்றவர்களுடன் தனிப்பட்ட ரீதியிலும் குழுவாகவும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளப்பட்டது

☞ **இரண்டாம் நிலை தரவுகள்**

இரண்டாம் நிலை தரவுகள் எனும் போது ஆய்வாளன் ஆய்வுக்காக தரவுகளை தான் நேரடியாக சென்று பெற்றுக்கொள்ளாமல் முன்கூட்டியே பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகளை ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படும் முறையை குறிப்பிடலாம். இது அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் பிரசுரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத தரவுகளாக காணப்படுகின்றன.

- **பிரசுரிக்கப்டட்ட தரவுகள்**

பிரசுரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் ஆய்வுக்காக பிரதேச செயலாளர் பிரிவுகள் வெளியிடப்பட்ட புள்ளிவிபரக் கையேடுகள், ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், அறிக்கைகள் மற்றும் உத்தியோகபூர்வமான இணையதளங்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், சுற்றுலா மையங்கள் வெளியிடப்பட்ட புத்தகங்கள் கையேடுகள் போன்றவற்றிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

- **பிரசுரிக்கப்படாத தகவல்கள்**

ஆய்வுக்கு அல்லது பல்வேறு நோக்கத்திற்காக அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களை சேகரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத தரவுகள் பெறப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வு**

ஓர் ஆய்வினை ஒப்பீடு செய்யவும், விமர்சிக்கவும், பெறப்படும் தரவுகளின் உண்மை நிலையை கண்டறிவதற்கும் பகுப்பாய்வு என்பது ஆய்வில் அவசியமானதாக காணப்படுகின்றது. அந்தவகையில் சுற்றுலா துறை வளவாய்ப்புகள் தொடர்பாக பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவ்வாய்வில் பண்புசார் பகுப்பாய்வு,இட ரீதியான பகுப்பாய்வு, காணொலிப்பகுப்பாய்வு போன்றவற்றை பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

சுற்றுலா பயணிகளின் வருகை என்பது ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்ற முக்கியமான ஒரு காரணியாகும். மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள சுற்றுலாவுக்கு வாய்ப்பான இடங்களில் அதிகமாக காணப்படுவதுடன், அப்பிரதேசம் சார்ந்த தரைதோற்றம் காலநிலை, அமைவிடம் மற்றும் அங்கு காணப்படும் மலைத்தொடர்கள், நதிகள் என்பன இப்ரதேசத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப்புகளாக காணப்படுகின்றன. என்றாலும் குறித்த சுற்றுலா மையங்களில் அடையாளப்படுத்தப்படாமலும், குறித்த மையங்களில் சுற்றுலா பயணிகள் வருகை பின்தங்கிய நிலையில் உள்ளது. அதன் அடிப்படையில் ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுலாவுக்கு வாய்ப்பான பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பான பிரதேசங்களை அடையாளம் காணல்.**

**படம் 1.2 அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்கள்**




மூலம் :- Google Earth இல் இருந்து தரவிரக்கம் செய்யப்பட்டு ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2024

கேகாலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளான மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவுகளில் சுற்றுலாத்துறைக்கு வாய்ப்பான பிரதேசங்கள் பல அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1. ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட சுற்றுலா மையங்கள்**

| பிரதேச செயலகம் | சுற்றுலா மையம் | சுற்றுலா வகை |
|---|---|---|
| மாவனல்லை | சரதியல் கிராமம் (Saradiyal Village) | வரலாற்று சுற்றுலா |
| | சரதியல் கல் (Saradiyal Rock) | இயற்கைசார் சுற்றுலா |
| | போவெல்ல (Bo - ella) | இயற்கைசார் சுற்றுலா |
| | செங்கல் பாலம் - மாவனல்லை (Brick Bridge – Mawanella) | வரலாற்று சுற்றுலா |
| | மீயென் எல்ல நீர்வீழ்ச்சியும் சுரங்கமும் (Meeyan ella Falls & Mine) | இயற்கைசார் சுற்றுலா |
| | அலகல்ல மலைத்தொடர் (Alagalla Mountain) | இயற்கைசார் சுற்றுலா |
| | பதஹா (Natural Fall) | இயற்கைசார் சுற்றுலா |
| அரனாயக்க | பதலேகல (Bible Rock) | இயற்கை சுற்றுலா |
| | தெவனகல (Devanagala) | வரலாற்று சுற்றுலா |
| | சண்டராஜா வன அரன வனம் (Sandaraja wana Arana Forest) | இயற்கைசார் சுற்றுலா |
| | தனகிரிகல ரஜமஹா விகாரை (Danagirigala Raja Maha Viharaya) | வரலாற்று சுற்றுலா |
| | தோதுலு ஓயா (Dhaalaoya) | இயற்சைார் சுற்றுலா |
| | செலவ்வ ரஜா மஹா விகாரை (Selava Rajamaha Viharaya) | வரலாற்று சுற்றுலா |
| | அசுபினி எல்ல(Asupini – ella) | இயற்கைசார் சுற்றுலா |
| | வாகிரிகல(Wakirigala) | வரலாற்று சுற்றுலா |

மூலம் :- ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது, 2024

## 1. சரதியல் கிராமம் (Saradiyal Village)

இலங்கையின் ரொபின்ஹூட் என்று அழைக்கப்படுகின்ற சூரசரதியலின் வரலாற்றை சிலைகளாக கொண்டு மக்களுக்கு அத் தகவலை வழங்குகின்ற ஒரு சுற்றுலா மையமாகும். மதங்களுக்கு இடையிலான ஒற்றுமை, கிராமிய பாரம்பரிய முறை மக்கள் மத்தியில் கொண்டு

செல்வதை நோக்காக கொண்டு செயல்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு மருத்துவ நிபுணர் ஆரியரத்ன கமகே என்பவரால் உருவாக்கப்பட்டது. சூரசரதியல் என்பவர் வெள்ளையர்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்களால் தேடப்பட்டு வந்த முக்கியமான ஒருவராக விளங்கினார். அவரை கைது செய்யும் பொழுது போலீசார் ஒருவர் இறந்ததன் விளைவாக இன்று **"இலங்கையின் பொலீஸ் தினம்"** இதனை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடப்படுகின்றது.

## 2. சரதியல் கல் (Saradiyal Rock)

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1410 அடி உயரத்தில் அமைந்துள்ள இக்கற்பாறையானது மலையேற்றத்திற்கு சிறந்த இடமாகும். இது ''உக்குனுகல'', ''சரதியல் கல'', ''காசல் ரொக்'' போன்ற பெயரில் அழைக்கப்பட்டது. மலையேற்றத்தை விரும்புகின்றவர்களும் இயற்கையை இரசிப்பவர்களுக்கும் இச் சுற்றுலாத்தளமானது பொருத்தமானது.

## 3. போவெல்ல (BO ELLA)

பருவகால சுற்றுலா பிரதேசமாக விளங்கும் போவெல்ல பிரதேசமானது மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் கோத்தெனிய கிராம சேவகர் பிரிவில் அமையப்பெற்றுள்ளது. சுமார் மூன்று மீற்றர் உயரம் கொண்ட இந் நீர்வீழ்ச்சியானது குள அமைப்பை கொண்டதாக காணப்படுகின்றது.

## 4. செங்கல் பாலம் (Brick Bridge – Mawanella)

மாவனல்லை பிரதேசத்தின் வரலாற்று ரீதியான தடயமாகவும் பொக்கி'மாகவும் விளங்கும் மாவனல்லை செங்கல் பாலமானது மாவனல்லை நகரின் ஊடாக பாய்ந்து செல்கின்ற மகா ஓயா நதிக்கு குறுக்காக கட்டப்பட்ட செங்கற்கள் மற்றும் மணலை மாத்திரம் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ஓர் பாலமாகும். நான்கு வளைவுகளைக் கொண்ட இப் பாலமானது கண்டி-கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ளது. இப்பாலமானது 1832 தொடக்கம் 1833 காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. இது 70 மீற்றர் நீளமாகும். இப்பாலமானது வரலாற்றுடன் தொடர்புபட்ட முக்கியமான இடம் என்பதால் 1996 நவம்பர் மாதம் இதனை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளமாக பிரகடனப்படுத்தியுள்ளது

## 5. மீயன் - எல்ல நீர் வீழ்ச்சியும் சுரங்கப் பாதையும் (Meeyan ella Falls and tunnel )

இது மாவனல்லை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இஹலக் கோட்டை எனும் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. கண்டி-கொழும்பு பிரதான புகையிரத பாதையில் இஹலகோட்டை எனும் இடத்தில் A5 எனும் சுரங்கப்பாதையின் மேற்பரப்பில் இந்நீர் வீழ்ச்சியானது பாய்கின்றது. அலகல்ல மலையில் இருந்து ஊற்றெடுக்கும் இந்நீர் வீழ்ச்சியானது சுமார் 127 மீற்றர் உயரம் கொண்டதாக காணப்படுகின்றது.

### 6. அலகல்ல மலைத் தொடர் (Alagalla Mountain)

கேகாலை மாவட்டத்தில் மிக உயரமான திரிகோண கணித நிலையம் அமையப்பெற்றுள்ள மலையே இதுவாகும. சப்ரகமுவ மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தின் எல்லை பிரதேசத்தில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1140 மீற்றர் உயரத்தில் இம்மலை அமைய பெற்றுள்ளது.

அலகல்ல மலை தொடரிலேயே மீயென்-எல்ல நீர்வீழ்ச்சி ஊற்றெடுப்பதுடன் இலங்கையின் நீளமான இரண்டாவது புகையிரத சுரங்கப்பாதை இம்மலைத் தொடரிலேயே அமையப்பெற்றுள்ளது. இது மலையேற்றத்திற்கு சிறந்த சுற்றுலா பிரதேசமாக விளங்குகின்றது.

### 7. பதஹா (Pathaha – Natural Falls)

இது இயற்கையான ஊற்றே இதுவாகும். மக்களால் பதஹா, பீலி என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந் நீர்நிலையானது வயல்வெளிகளுக்கு மத்தியில் அமையப்பெற்றுள்ள இயற்கையாக அமைந்த குளம் போல் காட்சியளிக்கின்றது. நிலக் கீழ் ஆற்றில் இருந்து ஊற்று வருவதாக் நம்பப்படும் நீர் நிலையானது எக்காலப் பகுதியில் வற்றாத நிலையில் காணப்படுவது சிறப்பம்சமாகும். சுமார் 10 தொடக்கம் 15 அடி ஆழம் கொண்டது.

### 8. பதலேகல (Bible Rock)

குட்டி சிகிரியா என்று வர்ணிக்கப்படும் பதலேகல குன்றானது அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 2618 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இக்குன்றானது மலையேற்றத்திற்கு சிறப்பான ஓர் இடமாக விளங்குகின்றது.

### 9. தெவனகல (Devanagala)

அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலா தளமாக தெவனகல விகாரை விளங்குகின்றது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1089 அடி உயரத்தில் அமையப்பெற்றுள்ள விகாரையானது, சுமார் 72 ஏக்கர் பாரிய நிலப்பரப்பில் அமைய பெற்றுள்ளது. இது இலங்கையின் மூன்று வரலாற்று காலகட்டங்களுடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன. தெவனகல பாறையின் பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த குளம், கல்வெட்டுக்கள், விகாரைகள், போதி, தர்மசாலை, வி'ணு தேவாலயம், ஆவாசகெய போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய பல்வேறு எச்சங்களும் கட்டிடங்களும் காணப்படுகின்றன.

### 10. சந்தராஜ வன அரண வனம் (Sadaraja wana Arana)

சந்தராஜ வன அரன என்ற வனமானது மத்திய மாகாணத்தின் எல்லைப் பகுதியில் அமையப்பெற்ற தனியாருக்கு உரித்தான ஒரு வனமாகும். இது சுமார் 120 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதுடன் குடா ஓயா, குருந்து ஓயா போன்ற ஆற்றினை எல்லையா கொண்டு அமைந்துள்ளது. உயிர்ப்பல்வகைமை மிக்க இவ்வனமானது கடல் மட்டத்திலிருந்து

சுமார் 2300 அடி உயரத்தில் அமைய பெற்றுள்ளது. இங்கு 100க்கும் மேற்பட்ட பறவை இனங்களும், 37 பட்டாம்பூச்சி இனங்களும், 50 வகையான பாம்பினங்களும் காணப்படுகின்றன. இங்கே காடு சார்ந்த புகைப்படம் எடுத்தல், ஆய்வுகள் மேற்கொள்கள், பாசறைகள் அமைத்தல் போன்றவற்றுக்கு மிகவும் சிறப்பான இடமாக காணப்படுகின்றது.

### 11. தனகிரிகல ரஜமஹா விகாரை (Danagirigala rajamaha viharaya)

இலங்கையின் புராதன வரலாற்றை கொண்ட பிரதேசமாகவும், தொல்பொருள் மிக்க பிரதேசமாகவும் இவ்விகாரை விளங்குகின்றது. அனுராதபுர யுகத்தில் கல்விக்கான மத்திய நிலையமாக விளங்கிய விகாரையானது பொலன்றுவை காலத்தில் பாதுகாப்பு கோட்டையாகவும் விளங்கியது. இவ்விகாரையில் சிறிய சிவனொளிபாதமலை என்றும் அழைக்கப்படுகின்றது. இது 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் தேதி வெளியிடப்பட்ட வர்த்தமான அறிவித்தலின்படி தொல்லியல் பாதுகாப்புத் தலகமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

### 12. தோத்துலு ஓயா (Dothulu oya)

இப்பிரதேசமானது அழகிய தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட பிரதேசமாக காணப்படுவதுடன், மலைப் பாங்கான பகுதியாகவும் பனியுடன் கூடிய குளிரான காலநிலை கொண்ட பிரதேசமாகவும் காணப்படுவதனால், இப்பிரதேசம் **"குட்டி நுவவெரியா"** என்று அழைக்கப்படுகின்றது. இப் பிரதேசத்தில் தோத்துலு ஓயா எனும் நீர்வீழ்ச்சியானது மேலும் கண்ணுக்கு விருந்தளிக்கின்ற ஓர் அம்சமாக விளங்குகின்றது. இது குருகொட ஓயா ஆற்றின் ஒரு பகுதியாக காணப்படுவதுடன், இந் நீர்வீழ்ச்சியானது களனி நதியுடன் சங்கமிக்கின்றது. இங்கு காணப்படும் குளம் மேலும் இப்பிரதேசத்துக்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

### 13. செலவ்வ ரஜ மஹா விகாரை (Selava Raja Maha Vhihara)

வரலாற்று சிறப்புமிக்க விகாரையான செலவ்வ ராஜாமஹா விஹாரையானது அனுராதபுரம் மற்றும் கண்டிக் காலத்துக்கு உரியதாகும். இவ்விஹாரையானது கண்டி இராச்சிய ஆட்சியின் போது கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனின் காலத்தில் 1979 இல் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டதுடன், 1806-ல் விக்ரமராஜசிங்க மன்னன் ஆட்சிக்காலத்தில் நிறைவடைந்தது. இவ்விகாரையானது மூல விகாரை, மெதவிகாரை, உடவிகாரை மூன்று பகுதிகளைக் கொண்டு காணப்படுகின்றது.

இவ்விகாரையில் அமையப் பெற்றுள்ள கல்வெட்டானது இலங்கையில் உருவாக்கப்பட்ட இறுதி மன்னர் ஆட்சி போது உருவாகிய இறுதி கல்வெட்டாகும். இதே 1806 ஆம் ஆண்டு திகதி இட்டு பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். 19 வரிகளைக் கொண்டதாக காணப்படுகின்ற இது கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகள் தொடர்பாகவும் விளக்கப்பட்டுள்ளது.

14. **அசுபினி எல்ல (Asupini ella )**

இது சப்ரகவ மாகாணம் மற்றும் மத்திய மாகாண எல்லையில் அமையப் பெற்றுள்ள ஓர் அழகிய நீர்வீழ்ச்சியாகும். சுமார் 30 அடி உயரமும் 40 அடி அகமும் கொண்டு இந்நீர் வீழ்ச்சியானது கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ளது.

**15. வாக்கிரகல (Wagirigala)**

இவ் வரலாற்று சிறப்புமிக்க தளமானது கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இக்கற்பாறையின் அடிவாரத்தில் அபய சுந்தரராம விகாரை அமைந்துள்ளதுமுதலாம் விஜயபாகு மன்னனின் காலத்தில் கோட்டையாக பயன்படுத்தப்பட்ட பின்னர் இது விகாரையாக மாற்றப்பட்டது. மகா வம்சத்தின் படி நான்காவது விஜபாகு மன்னால் நிர்மாணிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. பொலன்னறுவை காலப்பகுதியில் இம்மன்னர்களின் பாதுகாப்பு அரணாக இருந்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது.2014ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் தளமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**ஒளிப்படம்: அடையாளப்படுத்தப்பட்ட மையங்களுக்கான ஒளிப்படங்கள்**



மூலம்:- கள ஆய்வு, 2024

**முடிவுரை**

மாவனல்லை மற்றும் அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுற்றுலாவுக்கு வாய்ப்பான சுமார் 15 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடங்கள் முறையாக அடையாளப்படுத்தப்படாமல் இருந்தமையே இப் பிரதேசங்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாக வருகின்றமைக்கு காரணமாகும். இப்பிரதேச செயலகங்களில் அடையாளப்படுத்தப்பட்ட வரலாற்றுடன் தொடர்பட்ட சுற்றுலா தலங்களும் இயற்கையுடன் சார்ந்த சுற்றுலாத் தலங்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவற்றில் சில சுற்றுலாத்தலங்கள் மக்கள் மத்தியில் அறியப்பட்டாலும், பெரும்பாலானவை அடையாளப்படுத்தப்படாமல் அறியப்படாமலும் இருந்தவையாகும். எனவே குறித்த சுற்றுலா தலங்களை முறையாக அடையாளப்படுத்தி அவற்றின் அபிவிருத்தி செய்து, விளம்பரப்படுத்துவதன் ஊடாக குறித்த பிரதேச செயலகங்களில் சுற்றுலாவினை விருத்தி செய்ய முடிவதுடன், சுற்றுலா பயணிகளின் வருகையையும் அதிகரிக்கலாம் என்பதில் எவ்வித மாற்று கருத்துமில்லை.

## உசாத்துணைகள்


- Abba, M., & Rilwanu, T. Y. (2015). Physical landscapes and socio-cultural resource Potentials for tourism development in Rurum, Kano State,. . . *ResearchGate*. https://www.researchgate.net/publication/363661126_Physical_Landscapes_and_Socio-cultural_Resource_Potentials_for_Tourism_Development_in_Rurum_Kano_State_Nigeria
- Abegunasekara, A. D. K. (2022). A study on the potentials for development of tourism activity in Nuwara Eliya Municipal Council Area. *journals.sjp.ac.lk*. https://doi.org/10.31357/icremv.v6.6245
- Alaeddinoğlu, F., & Can, A. (2011). Identification and classification of nature-based tourism resources: Western Lake Van basin, Turkey. *Procedia - Social and Behavioral Sciences*, *19*, 198–207. https://doi.org/10.1016/j.sbspro.2011.05.124
- Aloysius, N., Gunawardana, S. M., & Kumari, C. C. (2022). Ecotourism potential in the northern province of Sri Lanka. *ResearchGate*. https://www.researchgate.net/publication/359439682_Ecotourism_Potential_in_the_Northern_Province_of_Sri_Lanka
- Amazinglanka. (n.d.). *Aluthnuwara dedimunda Devalaya at Mawanella | AmazingLanka.com*. AmazingLanka.com. https://amazinglanka.com/wp/aluthnuwara-dedimunda-devalaya/
- Anjana. (2023b, October 19). *Types of tourism in the world – travel agency needs to know*. ColorWhistle. https://colorwhistle.com/types-of-tourism/
- Dasmahapatra, D. (2023). Sustainable Tourism Development Prospects in Digha Sankarpur Coastal area using Tourism Quality Index and SWOT Analysis. *INTERNATIONAL JOURNAL FOR INNOVATIVE RESEARCH IN MULTIDISCIPLINARY FIELD*, *9*(7-July - 2023), 50-58. https://doi.org/10.2015/IJIRMF/202307010
- Dayananda, B., & Weerakoon, D. (2012). Visitor survey of the Pinnawala Elephant Orphanage, Sri Lanka. *ResearchGate*.

https://www.researchgate.net/publication/268629992_Visitor_Survey_of_the_Pinnawala_Elephant_Orphanage_Sri_Lanka

- *Definintion of Tourism (UNWTO definition of tourism) / What is tourism?* (n.d.). Tugberk @ the Heart of Software. https://www.tugberkugurlu.com/archive/definintion-of-tourism-unwto-definition-of-tourism-what-is-tourism

- Dilrukshi, D. G. T. (2016). Ecotourism Development in Maduganga, Sri Lanka. *Youth and Social Transformation*, (November 2016), 42-43. https://ncas.ac.lk/Proceedings/symposium2016/index.html

- Fan, P., Zhu, Y., Ye, Z., Zhang, G., Gu, S., Shen, Q., Meshram, S. G., & Alvandi, E. (2023). Identification and prioritization of tourism development strategies using SWOT, QSPM, and AHP: A case study of Changbai Mountain in China. *Sustainability*, *15*(6), 4962. https://doi.org/10.3390/su15064962

- Ferdaush, J., & Faisal, H. M. (2014). Tourism Potentiality & Development of Bangladesh: Applicability of Pragmatic Governmental Management Policy. *Journal of Management and Science*, *1*(1), 71–78. https://doi.org/10.26524/jms.2014.9

- Jha, A. K. (2020). Tourism in Mithila: Identification of Resource Potentials and Prospects for tourism development. *ResearchGate*. https://www.researchgate.net/publication/340966217_Tourism_in_Mithila_Identification_of_Resource_Potentials_and_Prospects_for_Tourism_Development

- Jordan, S. (2023, February 8). *8 types of tourism that you need to know - TravelPerk*. TravelPerk. https://www.travelperk.com/blog/types-of-tourism/

- Kabu, M., & Lau, E. R. (2022). Identification of village potential as a basis for development of tourism village in Tunua Village, North Mollo District South Central Timor Regency. *Advances in Social Science, Education and Humanities Research*. https://doi.org/10.2991/assehr.k.220301.019

- *Kithulgala*. (n.d.). LANKA EXCURSIONS HOLIDAYS. https://www.lanka-excursions-holidays.com/kithulgala.html

- Kumar, P. (2018). Potentials, challenges and opportunities for tourism development in the eastern Province Sri Lanka. *Journal of Tourism and Hospitality*, *07*(02). https://doi.org/10.4172/2167-0269.1000343

- Lakpura LLC. (n.d.). *Pinnawala Elephant Orphanage*. https://us.lakpura.com/pages/pinnawala-elephant-orphanage

- Lakpura LLC. (n.d.-b). *Pinnawala Open Zoo*. https://uk.lakpura.com/pages/pinnawala-open-zoo

- Mandal, R. K. (2023). Potentialities of Eco-Tourism Industry in Arunachal Pradesh: A Study. *British Journal of Multidisciplinary and Advanced Studies*, *4*(3), 1–13. https://doi.org/10.37745/bjmas.2022.0186

- Melky Kabu & Elim R.A Lau (2021) Identification of Village Potential as a Basis for Development of Tourism Village in Tunua Village, North Mollo District South Central Timor Regency [Conference Session] International Conference on Applied Science and Technology on Social Science 2021 https://www.atlantis-press.com/article/125971100.pdf

- Nainsnl. (2023, August 27). Tourism - Definition, Types & Forms, History & Iimportance. *Tourism Notes*. https://tourismnotes.com/travel-tourism/

- Nisthar, S., Vijayakumar, S., & Nufile, A. a. M. (2016). Assessment of Potentiality of Ecotourism in Sri Lankan Context: An Analytical Study of Econometric basis. *ResearchGate*. https://www.researchgate.net/publication/348431272_Assessment_of_Potentiality_of_Ecotourism_in_Sri_Lankan_Context_An_Analytical_Study_of_Econometric_Basis

- Normaleni.E (2017). The Potentiality of Tourism Resources in Hulu Sungai Selatan Regency, South Kalimantan. *Journal of Indonesian Tourism and Development Studies*, *5*, 1-8. https://doi.org/10.21776/ub.jitode.2017.005.01.01

- Nyoto, Renaldo, N., & Effendi, I. (2023). SWOT ANALYSIS OF ECONOMIC IMPACT DEVELOPMENT OF POTENTIAL KUANTAN SINGINGI PACU JALUR TOURISM DEVELOPMENT. *ResearchGate*. https://doi.org/10.17605/OSF.IO/T58CF

- Rojabi, S. H., Budiatiningsih, M., & Pratama, A. A. (2023). SWOT Analysis of Sustainable tourism development in Tetebatu, East Lombok. *International Journal of Tourism Business Research*, *2*(1), 22–26. https://doi.org/10.29303/intour.v2i1.716

- Roslan, Z., Ramli, Z., & Choy, E. A. (2018b). The potential of heritage tourism development in Jugra, Selangor, Malaysia, using SWOT analysis. In *Springer eBooks* (pp. 159–170). https://doi.org/10.1007/978-981-10-5669-7_13

# மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள்

Ms. Pavatharani Suntharalingam
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
pavatharanisuntharalingam@gmail.com

Mrs. Thavapraba Sachithanantham
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
thavaprabas@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

“மட்டக்களப்பு மாவட்டத்தின் கொம்மாதுறை தொடக்கம் ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையான பிரதேசத்தின் நகர விரிவாக்கல் பாங்குகள்” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் இடரீதியான நகர விரிவாக்கல் பாங்குகளைக் கண்டறிதல் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்தில் திட்டமிடப்படாதவகையில் நகர விரிவாக்கமானது இடம்பெறுவதன் காரணமாக வேறுபட்ட பாங்குகளில் நகர விரிவாக்கம் காணப்படுவது ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. இவ் ஆய்வானது கலப்பு முறையிலான ஆய்வாக அமைவதோடு, இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத்தரவான நேரடி அவதானிப்பும் இரண்டாம் நிலைத்தரவுகளான OpenStreet map தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இவ் ஆய்விற்காக Arc GIS 10.3, Mapsme,Google Earth pro, OpenStreet map போன்ற படமாக்கல் கருவிகள் பயன்படுத்தப்பட்டு படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பெறுபேறுகளாக ஆய்வுப்பிரதேசத்தில் நாடா வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி போன்ற நகர விரிவாக்கல் பாங்குகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சிதறல் வளர்ச்சியானது கொம்மாதுறை மேற்கு கிராம சேவகர் பிரிவிற்குற்பட்ட பிரதேசங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சிதறல் வளர்ச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டுகாலத்தில் எந்தவொரு கட்டடங்களும் காணப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களிலேயே இங்கு கட்டிடங்கள் விருத்தி பெற்றுள்ளன. இவ்வாறான சிதறல் வளர்ச்சி விவசாய நிலங்களில் விருத்தி பெற்று வருவதன் காரணமாக எதிர்காலங்களில் விவசாய நிலத்தின் அளவு குறைவடைவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. ஆறுமுகத்தான் குடியிருப்பு 1, ஆறுமுகத்தான் குடியிருப்பு 2, கொம்மாதுறை கிழக்கு, குமாரவேலியார் கிராமம், எல்லைநகர், செங்கலடி 1, செங்கலடி 2, ஏறாவூர் 4, ஏறாவூர் 5 ஆகிய பிரதேசங்களில் குறைந்த அடர்த்தி வளர்ச்சி இடம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிந்தது. நாடா வளர்ச்சியினை திருகோணமலை பிரதான வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி, கொம்மாதுறை போன்ற பிரதேசங்களில் அமையப்பெற்றிருப்பதோடு பிரதான வீதியுடன் இணைந்தவகையில் பதுளை வீதி, புன்னைக்குடா வீதி, செங்கலடிச் சந்தை வீதி போன்றவற்றிலும் அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில் 100m எல்லையினுள் அமையப்பெற்றுள்ள பெரும்பாலான கட்டடங்கள் வணிக நிறுவனங்களாகவே அமைந்துள்ளன. அதிலும் குறிப்பாக அதிகளவான வணிக நிறுவனங்கள் வீதியில் இருந்து 50m தூரம் வரையான பிரதேசத்தினுள்ளே வரிசையாக அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிந்தது. இந்த நாடா வளர்ச்சியானது காலரீதியாகவும் வளர்ச்சி பெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

***திறவுச்சொற்கள் :*** *காலரீதியான வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, நகர விரிவாக்கம், நாடா வளர்ச்சி,*

**அறிமுகம்**

அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள் தொகைக்கு ஏற்ப இடமளிக்க வேண்டியதன் அவசியத்தால் நகர விரிவாக்கம் ஏற்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கைத்தொழில் துறை புரட்சிக்கு பின்னர் நகரப்பரவுகை ஏற்படத்தொடங்கியது. இப்பரவலானது கைத்தொழிலின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது (Green, 2006). கைத்தொழில் புரட்சிக்காலத்தில் புகையிரத போக்குவரத்து விருத்தி பெற்றதன் காரணமாக நகர மையத்திலிருந்து அதனை சூழவுள்ள ஏனைய பிரதேசங்களுக்கு பயணம் செய்வது இலகுவாக காணப்பட்டமையானது நகரப்பரவலுக்கு காரணமாக அமைந்தது. அந்தவகையில் உலகின் மேம்பட்ட நகரங்களில் இருந்து புறநகர்ப்பகுதிகளை நோக்கி குடியிருப்புகள் வளர்ச்சியடைதல் அல்லது பரவலடைதல் நகர விரிவாக்கமாகும் (Prakasa *et al*., 2018).

இயல்பான மக்கட்தொகை அதிகரிப்பு, வாழ்வாதாரம் நாடி வரும் புதியவர்களின் குடியேற்றம், அதனால் ஏற்படும் மக்கட்தொகை அடர்த்தி, குடியிருப்புகள் பற்றாக்குறை, புதிய குடியிருப்புகள் அமைக்க நிலம் இல்லாமை, வணிக வழியில் அதிகரிக்கும் பொருளாதாரம், பல்வேறு தொழில் வளர்ச்சி, பலவகை பண்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் சமூகச் செயற்பாடுகள் அதிகரித்தல் ஆகியவற்றிற்குத் தீர்வு காணும் பொருட்டு ஒரு நகரம் விரிவடைகிறது (Habibi & Asadi, 2011). அத்துடன் போக்குவரத்து தொழில்நுட்ப வளர்ச்சியும் நகர விரிவாக்கத்திற்கு ஒரு காரணமாக அமைகிறது. இக்காலத்தில் அதிகளவான கைத்தொழில் நடவடிக்கைகளால் நகரங்கள் மாசுபடுத்தப்பட்டமையால் மாசுபடுத்தப்பட்ட நகரப் பகுதியில் இருந்து சில குடியிருப்பாளர்கள் புறநகர் பகுதியை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தனர் ( Bekele, 2005).

நகரவிரிவாக்கமானது தவிர்க்க முடியாததொன்றாக காணப்படுகின்றதோடு இவை எல்லா இடங்களிலும் ஒரே தன்மை கொண்டதாக காணப்படுவதில்லை. நகர விரிவாக்கத்தின் பண்புகளை பல ஆராய்ச்சியாளர்கள் வேறுபட்ட விதமாக வகைப்படுத்துவதனை காணமுடிகின்றது. அந்தவகையில் Harvey & Clark, (1965) ஆகியோரால் 3 பிரதான நகரவிரிவாக்கப்பண்புகள் இனங்காணப்பட்டது. Low density continuous development, Ribbon development sprawl, Leap – frog development என்பனவே அவையாகும். அதேபோன்று Wilson *et al*.(2003) என்போரால் Linear Branch growth, Clustered branch growth, Expansion growth என்பன இனங்காணப்பட்டன.

வளரும் நாடுகளில் நகரமயமாக்கல் விகிதம் அதிகரித்து வருகிறது. இந்தியாவின் நிர்வாக எல்லைகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் ஏற்படும் வளர்ச்சி நகரமயமாக்கலின் புதிய திருப்பு முனையாக அமைந்தது. அதிகரித்து வரும் நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் இடத்திற்கான அதன் தேவை அதிகரித்து வருவதால், குடியிருப்புக்கு பரந்த அளவிலான நிலம் தேவைப்படுகிறது. நகர எல்லைக்குள் உள்ள வரையறுக்கப்பட்ட மற்றும் அதிக மதிப்புள்ள நிலம் காரணமாக, முறையான நகர்ப்புற அதிகார வரம்பிற்கு வெளியே நகர்ப்புறங்களின் இடரீதியான வளர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கிறது. இவ்வாறான

இடங்கள் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் "நகர்ப்புற விளிம்பு பகுதிகள்" என்று அழைக்கப்படுகிறது. நில வளங்களை திறம்பட திட்டமிடுதல் மற்றும் நிர்வகிப்பதற்காக இந்த வளர்ந்து வரும் நாடுகளின் நகரமயமாக்கலில் நகரத்தின் இடஞ்சார்ந்த வளர்ச்சி முறைகள் அளவிடப்பட வேண்டும் (Rajput, 2021).

அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் செங்கலடி மற்றும் ஏறாவூர் நகரத்திலிருந்து திட்டமிடப்படாதவகையில் நகர விரிவாக்கமானது இடம்பெறுவதன் காரணமாக சில பிரதேசங்களில் அதிகளவான மக்கள் வாழ்வதோடு ஏனைய பிரதேசங்களில் குறைந்தளவான மக்கள் வாழ்வதன் காரணமாக அப்பிரதேசங்களின் வளர்ச்சியும் குறைந்ததாகவே காணப்படுவது இவ் ஆய்வின் பிரச்சினையாக அமைந்துள்ளது. இதன் காரணமாகவே ஆய்வுப்பிரதேசத்தில் இடரீதியான நகர விரிவாக்கப்பாங்குகள் எவ்வாறு காணப்படுகின்றது எனும் ஆய்வு வினாவின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்தின் இடரீதியான நகர விரிவாக்கப்பாங்குகளை கண்டறிதல் எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Chen *et al.* (2022) ஆகியோர்களால் "Impacts of different rural settlement expansion patterns on eco-environment and implications in the Loess Hilly and Gully region, China" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது கிராமப்புற வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலில் கிராமப்புற குடியேற்ற விரிவாக்கத்தின் எதிர்மறையான விளைவுகளை குறைத்தல் ஆகியவை நிலையான கிராமப்புற வளர்ச்சியை அடைவதையே நோக்கமாகக் கொண்டது. கிராமப்புற குடியேற்ற விரிவாக்கத்தின் சுற்றுச்சூழல் விளைவுகள் கிராமப்புற நிலையான நிலப்பயன்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் பல்வேறு விரிவாக்க முறைகளின் கீழ் கிராமப்புற குடியேற்ற விரிவாக்கத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையிலான உறவு இன்னும் தெளிவாக இல்லை என்பதே ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. இவ்வாய்விற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இவ்வாய்வின் முடிவைப்பெறுவதற்காக நிலப்பரப்பு விரிவாக்க அட்டவனை (LEI), சுற்றுச்சூழல் சேவைகள் மதிப்பீடு (MA) போன்ற முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு ரிமோட் சென்சிங் தரவு கண்காணிப்பு, மல்டி ஸ்பேக்ட்ரல் 30m இடஞ்சார்ந்த தீர்மான தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் பெறுபேறுகளாக கிராமப்புற குடியேற்றத்தின் இடம் சார்ந்த (Spatiotemporal) விரிவாக்க வடிவங்கள் மாற்றமடைந்ததாகவும் அதே போன்று சுற்றுச்சூழல் சேவைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் (உணவு உற்பத்தி, வாழ்விடத்தரம், காபன் சேமிப்பகத்தின் மாற்றம்) சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளில் கிராமப்புற தீர்வு விரிவாக்கத்தின் தாக்கங்கள் காணப்பட்டதாகவும் அமைந்துள்ளது.

Seevarethnam *et al.* (2022) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட "இலங்கையின் மட்டக்களப்பு மாநகரசபையில் சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஒருங்கிணைத்ததான நகர விரிவாக்கம் (Prediction of urban sprawl by integrating socioeconomic factors in the

Batticaloa municipal council, Sri Lanka)" எனும் தலைப்பிலான ஆய்வானது சமூகப் பொருளாதார மற்றும் பௌதிகக் காரணிகளை ஒருங்கிணைத்து 2030ல் நகர விரிவாக்க முறையைக் கணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நகரமயமாக்கல் மற்றும் நகரவளர்ச்சி காரணமாக நகர சனத்தொகை அதிகரித்து வருவதனால் நகரத்திட்டமிடலில் பாரிய தாக்கத்தினைச் செலுத்துவது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றது. இவ் ஆய்விற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. NDBI, Cramer's V, Logistic regression, CA- மார்கோவ் (CA-Markov) ஆகிய பகுப்பாய்வுகள் கட்டமைக்கப்பட்ட வடிவங்களை வகைப்படுத்தவும் கணிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1990 மற்றும் 2020ம் ஆண்டுகள் வரையான படங்கள் Land Change Modeler, IDRSI 17.0 இல் மாற்றப் பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், Arc GIS 10.6.1 மென்பொருள் பயன்படுத்தப்பட்டு படங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் பெறுபேறானது மட்டக்களப்பு மாநகர சபையிலுள்ள 2030ல் நகர விரிவு முறையைக் கணிக்க முயற்சித்துள்ளது. இவ் ஆய்வு நிலையான வளர்ச்சியை மேம்படுத்த உதவுவதுடன் நகர விரிவாக்கத்தில் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் சிக்கல்களைச் சமாளித்து பொதுமக்களுக்கு நிலையான வீடமைப்பு பற்றிய அறிவையும் வழங்கக் கூடியதான வகையில் அமைதுள்ளது.

Wickramaarachchi *et al.* (2022) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட “கைவினைத்தொழில்களும் நாடா வளர்ச்சியும்: இலங்கையின் கொழும்பு - கண்டி வீதியில் இடரீதியான மாற்றம் (Craft industries and ribbon development: Place change along the Colombo – Kandy road, Sri Lanka)” எனும் தலைப்பிலான ஆய்வானது இலங்கையின் பிலிமத்தலாவ பித்தளை, மொலகொட மட்பாண்டம் மற்றும் வெவல்தெனிய கரும்புத்தொழில் ஆகிய மூன்று கைவினைத்தொழில்களில் கைவினை நாடா வளர்ச்சியின் இடம் சார்ந்த பண்புகளை ஆராய்வதை நோக்கமாக கொண்டது. மேற்கத்தேய நகர்ப்புறங்களில் உள்ள கைவினைத்தொழில்களைப்போலன்றி தெற்கு மற்றும் கிழக்கு ஆசிய கைவினைத்தொழில்கள் புறநகர்ப்பகுதிகளில் நாடா வளர்ச்சியின் தனித்துவமான உருவ அமைப்பை கொண்டுள்ளமையானது இவ் ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. இதற்காக முதலாம் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் கண்காணிப்பு, நேர்காணல், படமாக்கல் போன்ற முறைகளை பயன்படுத்தியுள்ளதோடு பகுப்பாய்விற்காக Qgis, MS excel போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக 1980 - 2020 காலகட்டத்தில் திறந்த பொருளாதார கொள்கைகளின் கீழ் நிகழ்ந்த முக்கியமான மாற்றங்களுடன் காலப்போக்கில் ஆய்வுப்பிரதேசத்தில் கைவினைக்கடைகள் அதிகரித்ததன் மூலம் கைவினைத்தொழில்களில் நேரியல் விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது எனவும் மேலும் காலப்போக்கில் கைவினை நாடா வளர்ச்சி அதிகமாகவும் அறியப்பட்டுள்ளது. எனவே இவ்வாய்வானது எதிர்காலங்களில் வணிக நாடா வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளுக்கும் அடித்தளமாக அமைவதை காணலாம்.

Seevarethnam *et al.* (2021) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட "இலங்கையின் மட்டக்களப்பு மாநகரசபையில் நகர விரிவாக்க பாங்கினை வகைப்படுத்துவதற்கான புவியிட ரீதியான பகுப்பாய்வு (A geo - spatial analysis for characterizing urban sprawl patterns in the Batticaloa municipal council, SriLanka)" எனும் தலைப்பிலான ஆய்வானது புவியியல் தகவல் முறைமை (GIS) மற்றும் தொலையுணர்வுத்தொழில்நுட்பத்தைப் (RS) பயன்படுத்தி மட்டக்களப்பு மாநகரசபையில் நகரப்பரவலின் சிறப்பியல்புகளை அடையாளம் காண்பதனை நோக்கமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் சனத்தொகை அதிகரிப்பு காரணமாக அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்காக மேற்கொள்ள முடியாமல் உள்ளமை ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது. இவ் ஆய்விற்குத் தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் Landsat செயற்கைக் கோள் படங்கள் 2000, 2010 மற்றும் 2020 மற்றும் 2002, 2011 மற்றும் 2019ஆம் ஆண்டுகளின் சனத்தொகை தரவுகள் ARC GIS இல் Maximum likelihood classification tool, density function போன்ற கருவிகளை பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பெறுபேறுகளாக குறைந்த அடர்த்தி கொண்ட வளர்ச்சி, பாய்ச்சல் வளர்ச்சி, வணிக நாடா வளர்ச்சி மற்றும் சிதறிய வளர்ச்சி ஆகியவை மட்டக்களப்பு நகராட்சியில் நகர்ப்புறப்பரவலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனவும் இவை குறிப்பாக நகர்ப்புற விளிம்பிலே காணப்பட்டுள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளதோடு இவ் ஆய்வானது நகர்ப்புறப்பரவல் குறித்த எதிர்கால ஆய்வுகளுக்கு ஒரு முன்னோடியாகவும் அமைவதாக கூறப்பட்டுள்ளது.

Manesha *et al.* (2021) ஆகியோர்களால் மேற்கொள்ளப்பட்ட "புவியியல் தகவல் முறைமை (GIS) மற்றும் தொலையுணர்வு தொழில்நுட்பம் (RS) ஆகியவற்றைப் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் நகர விரிவாக்கத்தை அளவிடுதல்: இலங்கையின் ஒரு விடய ஆய்வு (Measuring urban sprawl of small and medium towns using gis and remote sensing techniques: A case study of Sri Lanka)" எனும் தலைப்பிலான ஆய்வானது இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை, வழங்கப்பட்ட வழிமுறை கட்டமைப்பின் மூலம் நகர விரிவாக்கத்தின் அளவின் படி வரைபடமாக்கி அதனை தரவரிசைப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்விற்காக நகர வளர்ச்சி மற்றும் நிலப்பயன்பாட்டு மாற்றங்களை மதிப்பிடுவதற்கு 2001 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கான 07ETM செயற்கைக்கோள் படத்தொகுப்பில் படங்களும், அமெரிக்க செயற்கைக்கோள் ஆய்வுகளில் இருந்து சில தகவல்களும் பெறப்பட்டுள்ளன. மேலும் நகரம் விரிவடைந்த பகுதிகளை அடையாளப்படுத்திக் காட்டுவதற்கு Arc GIS கணினி மென்பொருள், Microsoft Excel ஆகியனவும் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் வகைப்படுத்தப்பட்ட (Classified) வரைபடங்களின் துல்லிய மதிப்புக்கள் (Accuracy Assesment), KAPPA குணக மதிப்புக்கள் மற்றும் உண்மையான நிலக்குறிப்பு புள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு பகுப்பாய்விற்கு

உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பெறுபேறுகளாக சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் அவற்றின் நகர விரிவாக்கத்தின் அளவை அடிப்படையாகக்கொண்டு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. நகர விரிவாக்கத்தை வேறுபடுத்துவதற்காக முறைசார் கட்டமைப்பு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே மேலே கூறப்பட்ட இலக்கியங்களினை மீளாய்வு செய்ததன் அடிப்படையில் ஆய்வு இடைவெளிகளாக பூகோள ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் நகராக்கம் தொடர்பாகவும் நாடா வளர்ச்சி தொடர்பாகவும் பல ஆய்வுகள் விரிவாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் இலங்கையிலும், மட்டக்களப்பிலும் இது தொடர்பான ஆய்வுகள் குறைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் ஏறாவூர் நகரின் நகர விரிவாக்கம் தொடர்பாகவும் அதன் தாக்கங்கள் தொடர்பாகவும் மாத்திரமே ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிலும் நகரவிரிவாக்கபாங்குகள் அடையாளப்படுத்தப்படவில்லை. மேலும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஏறாவூர் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை எனும் ஆய்வு இடைவெளிகளின் அடிப்படையிலே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப்பிரதேசம்**




படம் 1. ஆய்வுப்பிரதேசம்

மூலம்: இவ் ஆய்விற்காக ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டம் 7° 25'' - 8⁰ 15'' வட அகலாங்கிற்கும் 81° 15'' - 81° 25'' கிழக்கு நெட்டாங்கிற்கிற்கும் இடையில் அமைந்துள்ள ஒரு கரையோர மாவட்டமாகும். இது 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தில் 346 கிராம சேவகர் பிரிவுகளும் 878 கிராமங்களும் உள்ளடங்குகின்றன. இம்மாவட்டத்தின் மொத்த சனத்தொகை ஏறக்குறைய 586, 400 பேராக விளங்குகிறது. இது 2633.1 சதுர கிலோமீற்றர் மொத்த நிலப்பரப்பையும், 22919 சதுர கிலோமீற்றர்

நீர்ப்பரப்பையும் கொண்டு காணப்படுகிறது. இம்மாவட்டமானது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 3.8% ஆக காணப்படுகிறது. இது வடக்கே திருகோணமலை, கிழக்கே இந்து சமுத்திரம், தெற்கே அம்பாறை மாவட்டம், மேற்கே பொலநறுவை ஆகியவற்றை எல்லைகளாக கொண்டுள்ளது.

அந்தவகையில் இவ் ஆய்வின் ஆய்வுப்பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் குடியிருப்பு தொடக்கம் கொம்மாதுறை வரையான நகரப்பகுதிகளை உள்ளடக்கிய பகுதி அமைந்துள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 13மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. ஆய்வுப்பிரதேசமானது 7°45' 41” N - 81° 36’ 13” E எனும் அகல நெடுங்கோட்டில் அமைந்துள்ளது. இது ஏறாவூர் பற்று, ஏறாவூர் நகரம் ஆகிய இரு பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட 22 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. அந்தவகையில் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவானது 203 கிராமங்களையும் 39 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளதோடு 634.16 சதுரகிலோமீற்றர் பரப்பையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இவற்றுள் நகரமயமாக்கப்பட்ட பகுதிக்குள் உள்ளடங்குகின்ற 07 கிராம சேவகர் பிரிவுகள் ஆய்வுப்பிரதேசத்திற்குள் உள்ளடங்குகின்றன. அதேபோன்று ஏறாவூர் நகர பிரதேச செயலகப்பிரிவானது 9.5 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்டதாக காணப்படுவதோடு இதனுள் 17 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் 15 கிராம சேவகர் பிரிவுகள் ஆய்வுப்பிரதேசமாக அமைகின்றன.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு ஒன்று நன்கு நெறிப்படுத்தி நேரிய வழியில் செல்ல நன்கு வடிவமைக்கப்பட்ட ஆய்வுமுறையியல் அவசியமாகும். ஆய்வுகள் எவ்வாறான உத்திகளை பயன்படுத்தியுள்ளன என்பதை வெளிப்படுத்துவதாகவே ஆய்வுமுறையில் அமைகின்றது. இவற்றுள் தரவுகள், தரவு சேகரிப்பு முறைகள், தரவுப்பகுப்பாய்வு முறைகள் போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகிறது. அந்தவகையில் ஆறுமுகத்தான் குடியிருப்பு தொடக்கம் கொம்மாதுரை வரையான பகுதிகளில் இடம்சார் நிலையில் நகர வளர்ச்சிப்பாங்கினை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் இலக்காக அமைந்துள்ளது. இதனை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது அளவைநிலை ஆய்வாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்விற்கான தரவு சேகரிப்பு முறையானது அளவுசார் அடிப்படையிலும் பண்புசார் அடிப்படையிலும் இடம்பெற்றுள்ளது. அந்தவகையில் இவ் ஆய்வு முறையியல் எனும் பகுதியானது ஆய்விற்கான தரவு மூலங்கள், ஆய்வில் பயன்படுத்தப்படுகின்ற தரவின் வகைகள், ஆய்விற்கான தரவுச்செயன்முறைகள், மென்பொருட்கள், தரவுப்பகுப்பாய்வு முறைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

வரைபடம் 1: ஆய்வு முறையியல்




மூலம்: இவ் ஆய்விற்காக ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

**தரவுகள்**

ஒரு ஆய்விற்கு தரவுகள் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன. அந்தவகையில் தரவு என்பது ஆராய்ச்சி அல்லது பகுப்பாய்வு செய்வதற்காக சேகரிக்கப்பட்ட தகவல்களும் புள்ளி விபரங்களும் தரவுகள் என அழைக்கப்படுகின்றது. அந்தவகையில் ஒரு முடிவினை எடுப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற எண்கள் அல்லது உண்மைகள் என்பன தரவுகளாக அமைகின்றன. எனவேதான் தரவுகளானது இலக்கங்களாகவோ அல்லது பண்புகளாகவோ காணப்படலாம். ஒரு ஆய்வில் தரவின் உண்மைத்தன்மையை அடிப்படையாக கொண்டே அதன் பெறுபேறுகளின் நம்பகத்தன்மையும் அமையப்பெறுகிறது. தரவுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் அனுமான ரீதியானதாக காணப்படுமே தவிர விஞ்ஞான பூர்வமானதாக அமையாது. எனவே தான் இவ்வாய்வில் துல்லியமான மற்றும் நம்பகத்தன்மையான முடிவுகளை பெற பல்வேறு தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் சனத்தொகை, வருமானம், கட்டிடங்களின் எண்ணிக்கை, கட்டிடங்களின் தரம், வேலைவாய்ப்பு, கல்வி, போக்குவரத்து, உட்கட்டுமானங்கள், நிலப்பெறுமதி போன்ற தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தரவுசேகரிப்பு முறைகள்**

இவ்வாய்விற்கான படங்களை தயாரிக்கும் பொருட்டு தொலையுணர்வுத்தொழிநுட்பத்தரவுகளான Google Earth Pro, Open Street map தரவுகள் போன்ற இடஞ்சார்ந்த தரவுகளும் குடிசனத்தரவுகள் உள்ளடங்களான சமூக பொருளாதாரத்தரவுகளான இடஞ்சாராத்தரவுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகள் பல மூலங்களில் இருந்து பெறப்படுகின்றன. அந்தவகையில் ஏறாவூர்பற்று பிரதேச செயலகம் - செங்கலடி, ஏறாவூர் நகர சபை, வீதி

அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச சபை - செங்கலடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச செயலகம் - ஏறாவூர் போன்ற அலுவலகங்களில் இருந்து பல தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**தரவுப்பகுப்பாய்வு**

ஆய்வுப்பிரதேசத்தில் நகரங்கள் தொடர்பாக பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வினை முன்னெடுக்கும் போது அவ் ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்து முடிவுகளைப் பெற பல்வேறு நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் Arc Map 10.3, Google Earth pro, Excel போன்ற மென்பொருட்கள் இவ்வாய்வின் தரவுப்பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்படுகின்றன. Arc GIS 10.3 படமாக்கல் முறைகள் மற்றும் Microsoft Excel போன்ற பயன்படுத்தப்பட்டு தரவுகள் துல்லியமாக பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது. அந்தவகையில் இவ் ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் பகுப்பாய்வு செய்து முடிவுகளை பெற பின்வரும் பகுப்பாய்வு மற்றும் படவரைகலை நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டன.

- **அடிப்படைப்புள்ளிவிபரப்பகுப்பாய்வு (Excel பகுப்பாய்வுகள்)**

Ms Excel மென்பொருளில் நகரப்பரவுகையை காட்டுவதற்கு தரப்பட்ட அட்டவணைகள் தெளிவான விளக்கத்தையும் ஒரே பார்வையில் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய வகையிலும் வரைபடங்களாக மாற்றப்பட்டு பகுப்பாக்கம் செய்யப்படுகிறது. அதாவது நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் Ms Excel மென்பொருளைப்பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும் பெறுபேறுகளைக்காட்சிப்படுத்துவதற்கான அட்டவணைகள், வரைபுகள் போன்றவற்றை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதோடு கணிப்புகளை மேற்கொள்வதற்காகவும் இம் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. அந்தவகையில் சனத்தொகை அடர்த்தி, பால் விகிதம் போன்றன கணிப்பீடு செய்யப்பட்டன.

- **விபரணப்பகுப்பாய்வு**

ஆய்வுப்பிரதேசத்தில் நகர வளர்ச்சிப்போக்கு மற்றும் பாங்கு போன்றவற்றிற்கான படங்களை விபரிக்கவும், வணிக நாடா வளர்ச்சியின் தாக்கங்களை மதிப்பிடுவதற்கும் விபரணப்பகுப்பாய்வு பயன்படுத்தப்பட்டது. அதாவது ஆய்வுப்பிரதேசத்தில் நகர வளர்ச்சிப்போக்கு காணப்படும் விதத்தினை விளக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட அட்டவணைகள், படங்கள் போன்றனவும், நகர வளர்ச்சிப்பாங்கு காணப்படும் விதத்தினையும் விளக்குவதற்காக இது அமைகிறது. அந்தவகையில் சனத்தொகையில் ஏற்பட்ட மாற்றங்கள், சனத்தொகை அடர்த்தி மாறுபாடு போன்ற விடயங்கள் விபரணப்படுத்தப்பட்டது.

- **எல்லைப்பகுப்பாய்வு (Buffer Analysis)**

நாடா வளர்ச்சியினை அடையாளப்படுத்த Buffer Tool பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஆய்வுப்பிரதேசத்தினுள் அடங்குகின்ற வீதிகளுக்கு 100m அகலமான buffer எல்லை இடப்பட்டு அவ்வெல்லைக்குள் உள்ளடங்குகின்ற கட்டிடங்கள் clip செய்யப்பட்டு வேறாக்கப்பட்டது. இப்பகுப்பாய்விற்குத் தேவையான கட்டிடங்களின் தரவுகள் open street map மூலமும் வீதிக்கான shape file ஆனது Google Earth Pro மூலமும் எண்ணிலக்கப்படுத்தப்பட்டது.

அந்தவகையில் முதலில் Arc Map ஆனது Open செய்யப்பட்டு ஆய்வுப்பிரதேசத்திற்கான Shape File, Road.shp, Building.shp என்பன உட்செலுத்தப்பட்டன. பின்னர் Geoprocessing இலுள்ள Buffer tool மூலம் 100m அளவில் வீதிக்கான இடைவெளி இடப்பட்டது. அடுத்ததாக Buffer கொடுக்கப்பட்ட layer இனால் கட்டடங்கள் Clip செய்யப்பட்டு கட்டடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.

மேலும் நாடா வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தினை அடையாளப்படுத்த 2003, 2013 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான நாடா வளர்ச்சி Buffer மூலம் பிரித்தெடுக்கப்பட்டு மேற்படிவாக்கம் செய்யப்பட்டு படம் தயாரிக்கப்பட்டதோடு அதில் ஏற்பட்ட மாற்றங்கள் Ms Excel மென்பொருளில் பிந்தைய வருட நாடா வளர்ச்சியிலிருந்து முந்தைய வருடத்தை கழிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

**ஆய்வுப்பிரதேசத்தின் நகரவிரிவாக்கப்பாங்குகள்**

ஆய்வுப்பிரதேசமானது மிகத்துரித நகர விரிவாக்கத்தைக்கொண்டிருப்பதோடு இவை வேறுபட்ட வடிவங்களில் வளர்ச்சி பெற்றதாகவும் காணப்படுகிறது. அந்தவகையில் ஏறாவூர்ப்பிரதேசமானது அதிகளவான சனத்தொகையை கொண்டிருப்பதன் காரணமாக சிறியளவான பரப்பிலே அதிகளவான மக்கள் செறிவாக வாழ்கின்றனர். அதேநேரம் செங்கலடி, கொம்மாதுறை, ஆறுமுகத்தான் குடியிருப்பு போன்ற பிரதேசங்களில் அடர்த்தி குறைந்த விதத்தில் மக்கள் வாழ்கின்றனர். மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் வணிக நிறுவனங்கள் மற்றும் சேவை மையங்கள் போன்றன நாடா வடிவில் வளர்ச்சி பெற்றுச்செல்வதனை காண முடிகிறது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசமானது வணிக நாடா வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி போன்ற விரிவாக்க வடிவங்களைக்கொண்டதாக காணப்படுகிறது.

**சிதறல் வளர்ச்சி**




படம் 2: சிதறல் வளர்ச்சி - 2023

மூலம்: Open Streetmap இல் இருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நகர விரிவாக்க வடிவங்களில் சிதறல் வளர்ச்சியும் அடங்குகிறது. சிதறல் வளர்ச்சியில் கட்டடங்களுக்கு இடையிலான இடைவெளி அதிகமாகக்காணப்படுவதோடு மக்களுக்கிடையிலான தொடர்பு தன்மையும் குறைவாகக்காணப்படும். அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் கொம்மாதுறை மேற்கு எனும் பிரதேசத்தில் சிதறல் வளர்ச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பரப்பளவு கூடிய கிராம சேவகர் பிரிவாக இது காணப்படுகிறது. இப்பிரதேசம் ஆரம்பத்தில் முற்று முழுதாக விவசாய நிலமாகக்காணப்பட்டதொரு பிரதேசமாகும். அதாவது தற்போது சிதறல் வளர்ச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டுகாலத்தில் எந்தவொரு கட்டடங்களும் காணப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களிலேயே இங்கு கட்டடங்கள் விருத்தி பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக விவசாய நிலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்படாததை தொடர்ந்து குடியிருப்புகளாக மாற்றம் பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது. அந்தவகையில் இப்பிரதேசத்தில் குடியிருப்புகள் மட்டுமன்றி ஆலயம் போன்றனவும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சிதறல் வளர்ச்சியானது தீவு வீதியை மையமாகக்கொண்ட பிரதேசங்களிலேயே ஏற்பட்டுள்ளது.

செய்மதிப்படம்: சிதறிய வளர்ச்சி - 2009



மூலம்: Google Earth Pro, 2023

செய்மதிப்படம்: சிதறிய வளர்ச்சி - 2023



மூலம்: Google Earth Pro, 2023

இவ்வாறான சிதறல் வளர்ச்சியானது விவசாய நிலங்களில் விருத்தி பெற்று வருவதன் காரணமாக எதிர் காலங்களில் விவசாய நிலத்தின் அளவு குறைவடைவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது.

**குறைந்த அடர்த்தி வளர்ச்சி**




படம் 3: ஆய்வுப்பிரதேசத்தின் குறைந்த அடர்த்தி வளர்ச்சி - 2023

மூலம்: Open Streetmap இல் இருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டது, 2023

தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப்பிரதேசத்தினுள் இனங்காணப்பட்டுள்ள மற்றுமொரு விரிவாக்கப்பாங்காக குறைந்த அடர்த்தி வளர்ச்சி காணப்படுகிறது. அதாவது நிலத்தினுடைய பரப்பளவு அதிகமாகக்காணப்படும் பிரதேசங்களில் குறைந்தளவான மக்கள் வசிப்பதன் காரணமாவே குறைந்த அடர்த்தி வளர்ச்சி ஏற்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் ஏறாவூர் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள் அனைத்தும் குறைவான சனத்தொகை அடர்த்தி கொண்ட பிரதேசங்களாகவே காணப்படுகின்றது. ஏனெனில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுள் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவானது அதிகளவு பரப்பைக்கொண்ட பிரதேசமாகவே காணப்படுகிறது. இதன் காரணமாக இங்கு ஐதாகவே மக்கள் வாழ்கின்ற தன்மையை காணமுடிகின்றது.

அதாவது ஏறாவூர் நகரத்துடன் ஒப்பிடும் போது இங்கு சனத்தொகை அடர்த்தி குறைவாகக்காணப்படுவதோடு ஒவ்வொருவருடைய காணிகளும் குறைந்தது 15 பேர்ஜ் அளவு கொண்டதாகவும் காணப்படுகிறது. பிரதான வீதியை அண்டி சற்று நெருக்கமாக வாழ்ந்தாலும் ஏனைய பிரதேசங்களில் ஐதான குடியிருப்பையே காணமுடிகின்றது. அந்தவகையில் ஆறுமுகத்தான் குடியிருப்பு 1, ஆறுமுகத்தான் குடியிருப்பு 2, கொம்மாதுரை கிழக்கு, குமாரவேலியார் கிராமம், எல்லைநகர், செங்கலடி 1, செங்கலடி 2, ஏறாவூர் 4,

ஏறாவூர் 5 ஆகிய பிரதேசங்களில் குறைந்த அடர்த்தி வளர்ச்சி இடம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

**நாடா வளர்ச்சி**

ஆய்வுப்பிரதேசத்தில் நாடா வளர்ச்சியையும் அடையாளப்படுத்த முடிகின்றது. அதாவது நாடா வளர்ச்சியானது 20ம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிநுட்ப விருத்தியின் ஒரு பிரதிபலிப்பாகவே அமைகிறது. தொழிநுட்ப முன்னேற்றத்தின் காரணமாக போக்குவரத்துப்பாதைகளும், வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்ததன் விளைவாகவே வணிக நாடாவளர்ச்சியும் ஏற்படத்தொடங்கியது. அதாவது ஆரம்ப காலங்களில் போக்குவரத்துப்பாதைகள் சீரற்ற தன்மை கொண்டதாக காணப்பட்ட வேளையிலும் வாகனங்களின் பயன்பாடு குறைவாகக்காணப்பட்ட காலங்களிலும் குடியிருப்புக்களும் வணிக நிறுவனங்களும் மட்டுப்படுத்தபட்ட தூரத்திலேயே அமைந்து காணப்பட்டது. ஆனால் இவ்வாறான வாகனங்களின் விருத்தியின் காரணமாக மக்கள் தாம் விரும்பிய இடங்களில் குடியிருப்புக்களை அமைக்கக்கூடிய தன்மை கொண்டதாக காணப்படுகிறது.

அந்தவகையிலே இரண்டு பிரதான நகரங்களை இணைக்கின்ற வீதிகள், அதிகளவான மக்கள் நடமாட்டம் காணப்படும் வீதிகள், சேவை நிலையங்கள் அமையப்பெற்றுள்ள வீதிகள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுப்பிரதேசத்திலும் குடியிருப்புக்களும் வணிக நிறுவனங்களும் அமையப்பெற்றுள்ளன. இவ்வாறான வணிக நாடா வளர்ச்சியினை திருகோணமலை பிரதான வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி, கொம்மாதுறை போன்ற பிரதேசங்களில் அமையப்பெற்றிருப்பதோடு பிரதான வீதியுடன் இணைந்தவகையில் பதுளை வீதி, புன்னைக்குடா வீதி, செங்கலடி சந்தை வீதி போன்றவற்றிலும் அமையப்பெற்றுள்ளது.




படம் 4: ஆய்வுப்பிரதேசத்தின் நாடா வளர்ச்சி – 2023

மூலம்: Open Streetmap இல் இருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டது, 2023

ஆய்வுப்பிரதேசத்தில் நாடா வளர்ச்சியை அடையாளப்படுத்துவதற்கு Arc GIS இல் உள்ள Buffer tool பயன்படுத்தப்பட்டு 100m அளவில் எல்லையிடப்பட்டு நாடா வளர்ச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் 100m எல்லையினுள் அமையப்பெற்றுள்ள பெரும்பாலான கட்டடங்கள் வணிக நிறுவனங்களாகவே அமைந்துள்ளன. அதிலும் குறிப்பாக அதிகளவான வணிக நிறுவனங்கள் வீதியில் இருந்து 50m தூரம் வரையான பிரதேசத்தினுள்ளே வரிசையாக அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிந்தது. இந்த வணிக நாடா வளர்ச்சியானது காலரீதியாகவும் வளர்ச்சி பெற்று வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

செய்மதிப்படம் 3: நாடா வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் - 2009, 2016, 2023




மூலம்: Google earth pro, 2023

- **நாடாப்பாங்கின் வளர்ச்சிப்போக்கு**




**படம் 5. நாடா வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் 2003 - 2023**

ஆய்வுப்பிரதேசத்தில் நாடா வளர்ச்சியில் காலரீதியாகவும் இட ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் 2003 தொடக்கம் 2023 வரையான இருபது வருடகால இடைவெளியில் நாடா வளர்ச்சியில் அதிகரித்த போக்கு காணப்படுகின்ற தன்மையினை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் 2003 ஆம் ஆண்டில் 0.49 சதுர கிலோமீற்றர் பரப்பில் காணப்பட்ட நாடா வளர்ச்சியானது 2013 ஆம் ஆண்டில் 0.73 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அதிகரித்துள்ளது. அதேபோன்று 2023 இல் 0.83 சதுர கிலோமீற்றராக மேலும் அதிகரித்துள்ளமையை அறிந்து கொள்ள முடிந்தது.

**அட்டவணை : நாடா வளர்ச்சியின் மாற்றம்**

| வருடம் | பரப்பளவு மாற்றம் (சதுர கிலோமீற்றர்) | வளர்ச்சி வீதம் (%) |
|---|---|---|
| 2003 – 2013 | 0.4 | 0.49 |
| 2013 – 2023 | 0.1 | 0.14 |
| **2003 – 2023** | **0.34** | **0.7** |

மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது, 2023

அந்தவகையில் 2003 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 0.4 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கட்டமைக்கப்பட்ட பகுதிகள் நாடாப்பாங்கில் வளர்ச்சியடைந்துள்ளதோடு 2013 தொடக்கம் 2023 வரையான காலத்தில் 0.1 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கட்டடங்கள் மேலும் அதிகரித்துள்ளது. மொத்தமாக நோக்கும் போது 2003 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் 0.34 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கட்டமைக்கப்பட்ட பகுதிகள் நாடாப்பாங்கில் விருத்தி பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இந்த இருபது வருட காலப்பகுதியில் 0.7% வீதமான வளர்ச்சி நாடாப்பாங்கில் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் 2003 – 2013 காலத்தில் 0.49% மான வளர்ச்சியும், 2013 – 2023 வரையான காலத்தில் 0.14% மான வளர்ச்சியும் இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் 2003 – 2013 வரையான காலப்பகுதியிலே அதிகளவான வளர்ச்சி இடம் பெற்றுள்ளமை தெரிய வருகின்றது.

**முடிவுரை**

ஆய்வுப்பிரதேசத்தில் நகர விரிவாக்கப்பாங்குகளாக நாடா வளர்ச்சி, சிதறல் வளர்ச்சி, குறைந்த அடர்த்தி வளர்ச்சி என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் ஏனைய விரிவாக்க வடிவங்களை விட நாடா வளர்ச்சியானது இடரீதியாகவும் காலரீதியாகவும் விரிவாக்கமடைந்து செல்கிறது. அதாவது 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்ததை விட தற்போது நாடா வளர்ச்சி அதிகரித்து வருகின்றது. அதே சமயம் குறைந்த அடர்த்தி வளர்ச்சியில் மாற்றங்கள் குறைவாகவே இடம்பெற்றுள்ளது. அதாவது குறைவான அடர்த்தி பரவல் இடம் பெற்ற பகுதிகளில் சனத்தொகையில் காலரீதியாக அதிகரிப்புக்காணப்படுகின்ற போதும் சனத்தொகை அடர்த்தியில் மாற்றங்கள் குறைவாகவே இடம் பெற்றுள்ளது. அது போலவே ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றுமொரு விரிவாக்கப்பாங்காக சிதறல் வளர்ச்சி அமைகின்றது. சிதறல் வளர்ச்சி இடம் பெற்றுள்ள பகுதிகளில் ஆரம்பத்தில் ஓரிரு கட்டடங்களே காணப்பட்ட போதும் தற்போது முன்னர் இருந்ததை விட அதிகரித்துள்ள தன்மையே காணப்படுகிறது. இவ்வாறான வளர்ச்சியானது எதிர்காலத்தில் பாய்ச்சல் வளர்ச்சியாக மாற்றமடையக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

**உசாத்துணைகள்**


Bekele, H. (2005). Urbanization and urban sprawl. *Royal Institute of Tecnhology: Stockholm, Sweden*.

Chen, Z., Li, Y., Liu, Z., Wang, J., & Liu, X. (2022). Impacts of different rural settlement expansion patterns on eco-environment and implications in the loess hilly and gully region, China. *Frontiers in Environmental Science*, *10*, 857776.

Green, C. T. (2006). *The origins of urban sprawl* (Doctoral dissertation, University of Georgia).

Habibi, S., & Asadi, N. (2011). Causes, results and methods of controlling urban sprawl. *Procedia Engineering*, *21*, 133-141.

Harvey, R. O., & Clark, W. A. (1965). The nature and economics of urban sprawl. *Land Economics*, *41*(1), 1-9.

Inostroza, L., Baur, R., & Csaplovics, E. (2013). Urban sprawl and fragmentation in Latin America: A dynamic quantification and characterization of spatial patterns. *Journal of environmental management*, *115*, 87-97.

Manesha, E. P. P., Jayasinghe, A., & Kalpana, H. N. (2021). Measuring urban sprawl of small and medium towns using GIS and remote sensing techniques: A case study of Sri Lanka. *The Egyptian Journal of Remote Sensing and Space Science*, *24*(3), 1051-1060.

Seevarethnam, M., Rusli, N., Ling, G. H. T., & Said, I. (2021). A geo-spatial analysis for characterising urban sprawl patterns in the Batticaloa municipal council, Sri Lanka. *Land*, *10*(6), 636.

Seevarethnam, M., Rusli, N., & Ling, G. H. T. (2022). Prediction of Urban Sprawl by Integrating Socioeconomic Factors in the Batticaloa Municipal Council, Sri Lanka. *ISPRS International Journal of Geo-Information*, *11*(8), 442.

Shao, Z., Sumari, N. S., Portnov, A., Ujoh, F., Musakwa, W., & Mandela, P. J. (2021). Urban sprawl and its impact on sustainable urban development: a combination of remote sensing and social media data. *Geo-Spatial Information Science*, *24*(2), 241-255.

Wickramaarachchi, N., Grodach, C., Ranathunga, G. M., Ratnayake, R., & Karunarathne, P. V. M. (2022). Craft industries and ribbon development: place change along the Colombo-Kandy Road, Sri Lanka. *International Planning Studies*, *27*(2), 196-212.

# கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

Mr. Srimogan Srilaxan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*srilakshan8@gmail.com*

Ms.Tharunithaa Ragunathan
Department of Geography,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*tharunithaa.r@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை பிரதேசமானது கரையோரத்தைக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இதனால் இங்கு வாழும் கரையோர மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. இங்கு இயற்கையாக அமைந்த கடற்கரை, காலநிலை, கடல்சார் வளங்கள் என்பவை மீன்பிடியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் இவ் ஆய்வின் நோக்கமாகும். இவ் ஆய்விற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. முதலாம்நிலைத் தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல் ஆகிய முறைகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இங்கு மீன்பிடியை மேற்கொள்கின்ற மீனவ சமூகத்தினரிடையே பல்வேறு விதமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ் ஆய்வின்படி மீன்பிடி சார்ந்த பொதுவான பிரச்சினைகளாக காலநிலை மாற்றம், தொழிற்பயிற்சியின்மை, சந்தை வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றமை, அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறாமை, மீனவர் சங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள், பிறபகுதி மீனவர்களின் ஆதிக்கம், ஆழ்கடல் மீன்பிடி சார்ந்த பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே இப் பிரச்சினைகளை வெற்றிகொண்டு மீனவ சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்தல் ஆய்வுப்பிரதேசத்தில் வேண்டப்படும் ஒன்றாகும்.

***திறவுச்சொற்கள்*** *: கரையோர மக்கள், மீன்பிடி, மீனவ சமூகம், மீனவர் சங்கம், ஜீவனோபாயம்*

## ஆய்வு அறிமுகம்

புவி மேற்பரப்பில் 71% ஆனது சமுத்திரத்தினால் மூடப்பட்டுள்ளது (Miller, 1982). எனவே இந் நீரப் பரப்புக்களில் மீன் வளமானது செறிந்து காணப்படுகின்றது. உலகப் பொருளாதாரத்தில் மனிதர்களுக்கு உணவுப் பொருளாக மீன்வளம் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. பெரும்பாலான உலக நாடுகளின் வணிக வாழ்வாதாரம் மீன்பிடித்தல் ஆகும். மேலும் உணவுக்காகவும், அழகுக்காகவும் மீன் வளர்த்தல் ஒரு மாபெரும் துறையாக உருவெடுத்துள்ளது. மீன்கள் மீன் பிடிப்பவர்களால் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளாகவும், பொதுமக்கள் கண்டுகளிக்கும் மீன்காட்சியகங்களில் அழகுக்காகவும் வளர்க்கப்படுகின்றன (Piet, 2009).

உலக மக்களில் 25% இற்கும் அதிகமானோர் தமது புரத தேவைக்காக மீன்களிலேயே தங்கியுள்ளனர். குறிப்பாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாட்டு மக்களில் அதிகமானோர் தமது புரதத் தேவையினை மீன்களிலிருந்தே பெற்றுக்கொள்கின்றனர். உலக மக்களின் வருடாந்த மீன் கொள்வனவு 100 மில்லியன் மெற்றிக் தொன்னிலும் அதிகமாகும். உலகில் வருடாந்த மீன் ஏற்றுமதி தொடர்பான மதிப்பீட்டு வருமானம் 85 - 90 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். உலகில் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பு ஆகிய தொழிற்துறைகளில் தொழில் புரிவோர் 43 மில்லியனுக்கும் அதிகமாகும் (Agriculture Organization of the United Nations, 2000). உலகில் 540 மில்லியனுக்கும் அதிகமானோரின் அதாவது உலக மக்களில் 8% ஆனோரின் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலானது பங்களிப்பு நல்கின்றது (FAO, 2021). உலகில் மீன்களில் 90% இற்கும் அதிகமானவை சமுத்திரங்கள் மற்றும் கடல்களிலேயே பிடிக்கப்படுகின்றன.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு அழகிய தீவாகக் காணப்படுகின்றது. எனவே "இந்து சமுத்தித்தின் முத்து" என இலங்கை அழைக்கப்படுகின்றது. இயற்கை எழில் நிறைந்த கடற்கரைகள், காடுகள், குன்றுகள், மலைகள், குளங்கள், ஆறுகள், ஏரிகள் எனப் பல அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இலங்கையில் வாழும் மக்களின் பிரதான தொழிலான விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடி காணப்படுகின்றது. இலங்கையில் நன்னீர் மீன்பிடி, உவர்நீர் மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி என மூன்று வகையான மீன்பிடி முறைகள் காணப்படுகின்ற போதிலும் உவர்நீர் மீன்பிடி அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு சாதகமாக அமைந்த காரணியாக 4,37,400 சதுர கிலோமீற்றர் கடல் பரப்பைக் கொண்டதாக இலங்கை காணப்படுகின்றது (Vinayachandran, 2004).

கல்முனை கடல் தொழில் மாவட்டமானது நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற 15 கடல் தொழில் மாவட்டங்களில் ஒன்றாக காணப்படுவதுடன் இலங்கையின் ஏனைய பகுதிகளை விட பிற்போக்கான நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு காரணமானவற்றை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்வதன் மூலம் இப்பிரதேச கடல் மீன்பிடித் துறையை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லலாம் (பீக்கா அமீர்தின் மற்றும் நுபைல், 2014).

இந்தியாவின் மீன்வள செயற்பாட்டில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிப்பதுடன் சந்தைப்படுத்தல், அதிகரித்த போட்டி, குறைந்து வரும் வளங்கள் மற்றும் கடினமான வேலை நிலைமைகள் என்பவை பெண்களின் வேலைகளுக்கு சவாலாகவும் அமைகின்றன. எனவே சமூகப் பொருளாதார நிலையை முன்னேற்ற விரும்பும் மீனவப் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் என்பவற்றை வெளிக்கொண்டு வருவதும் குறைந்த பொருளாதார நிலை, கல்வியறிவு, ஊட்டச்சத்து விழிப்புணர்வின்மை என்பன காரணமாகும் (Vijayakathar, 2019).

இது மட்டுமன்றி இயற்கையாகவே அமைந்த கடலடித்தளமேடைகள் மத்திய கோட்டிற்கு அண்மையில் அமைந்த புவியியல் காரணிகள், பருவக்காற்றுக்களின் சாதகம், கடற்கரை அமைப்புக்கள், களப்புக்கள், கழிமுகங்கள், சதுப்பு நிலங்கள், துறைமுகங்கள் போன்ற பல்வேறு அம்சங்களும் உவர்நீர் மீன்பிடிக்கு சாதகமாகவே காணப்படுகின்றது. உவர்நீர் மீன்பிடியினை ஆழ்கடல் மீன்பிடி, கரையோ மீன்பிடி என இரு வகைப்படுத்தலாம். கரையோர மீன்பிடித் தொழிலானது தீவைச்சுற்றி 40 கிலோமீற்றர் தூரம் தொடக்கம் 40 ஆயிரம் சதுரகிலோமீற்றர் தூரம் வரையில் 80,000 சதுர கிலோமீற்றர் ஆழ்கடல் பரப்புக்குள் இடம்பெறுகின்றது. இந்து சமுத்திரமானது உலகில் நான்காவது மீன்பிடி வலயமாகக் காணப்படுகின்றது (Coulthard, 2014). இலங்கையின் பொருளாதாரத்தில் மீன்பிடித் தொழில் பெரும்பங்கு வகிப்பதுடன் புரதச்சத்து கொண்ட மீன்கள் மக்களின் உணவுத் தேவையில் முக்கிய இடம்பெறுகின்றது.

இலங்கையில் கூடுதலான மாவட்டங்கள் கரையோரப் பகுதியை கொண்டு காணப்படுகின்றது. இவ்வாறு கரையோரப் பகுதியை அண்டிய மக்கள் வரலாற்றுக் காலந்தொட்டு ஜீவனோபாய தொழில்களை மேற்கொள்ளவும், வணிக நோக்கங்கள், போக்குவரத்து போன்ற பல விதமான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல நூற்றாண்டு காலமாக கரையோரப் பகுதியையே நம்பி வாழ்கின்றனர். நாட்டைச் சூழ 1376 கிலோமீற்றர் கடற்கரை காணப்படுவதுடன், 20750 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கண்டத்திட்டும் அமைந்துள்ளது (Balasuriya, 2018). மேலும் இலங்கை ஒரு கண்டமேடையில் அமைந்திருப்பதோடு கடற்கரையில் இருந்து 15 மீற்றர் தொடக்கம் 30 கிலோமீற்றர் வரை அகலமாக அமைந்திருப்பது மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பாக அமைகின்றது.

இதன் அடிப்படையில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு எனும் மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேச செயலகப் பிரிவானது அதிக கடல்சார் வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள கரையோரப் பிரதேசமாகும். இப்பிரதேசமானது கடற்கரையோரங்களை தன்னகத்தே கொண்டமைந்துள்ளமையால் மீன்பிடித் தொழிலானது முதன்மையான வாழ்வாதார நடடிவக்கையாகக் காணப்படுகின்றது. அதிகளவான மக்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர் இதனால் மீன்பிடித் தொழிலானது இக்கிராமத்தின் முதன்மைத் தொழிலாகக் காணப்படுகின்றது. இதன்படி இவ்வாய்வானது கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்நோக்கத்தினை அடைவதற்காக ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட ஆய்வுப் பிரச்சினைகளாக பாரம்பரிய முறைகளை இன்றும் மீன்பிடித் தொழிலில் கையாளுவதால் மீன்பிடித் தொழிலாளர்களிடையே ஆர்வமின்மை காணப்படல், இயற்கை காரணிகளால் காலத்திற்கு காலம் மீன்பிடித் தொழில் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படல், மீன்களுக்கான ச்நதை வாய்ப்பு குறைவாகக் காணப்படுதல், மீனவர்களுக்கான மானியங்கள் அரசினால் வழங்கப்படாமை, மீனவ சங்கங்கள் உரிய முறையில் தொழிற்படாமை போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

## ஆய்வுப்பிரதேசமும், ஆய்வு முறையியலும்

### ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவும் ஒன்றாகும். மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 32km வடக்கு நோக்கி அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டமானது 130 km நீளமான கடற்பரப்பினைக் கொண்டுள்ளது. அப் பிரதேசத்தின் சராசரி வெப்பநிலை $30^0$C – $32^0$C வரையான வெப்பநிலை காணப்படுகின்றது. ஏப்ரல் - செப்ரம்பர் வரையான காலப்பகுதியில் அதிகமாகவும், ஏனைய மாதங்களில் குறிப்பாக வடகீழ் பருவப்பெயர்ச்சி காலகட்டங்களில் குறைவாகவும் வெப்பநிலை காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் வருடார்ந்த மழைவீழ்ச்சி 2273.40mm ஆகும். பிரதேசம் மே தொடக்கம் செப்ரம்பர் வரையான காலப்பகுதியில் தென்மேல் பருவக்காற்றுக் காலநிலையை அனுபவிக்கிறது. வடகீழ் பருவக்காற்றின் செல்வாக்கானது நவம்பர் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை அனுபவிப்பதனால் அதிக மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றது.

**படம் : ஆய்வுப் பிரதேசம்**



மூலம் : ஆய்வாளர் (2024)

இப்பிரதேசத்தின் தரைத்தோற்ற அமைப்பானது கடல் மட்டத்திலிருந்து 7.23 மீற்றர் உயரமான சமதரை மற்றும் மணலைக் கொண்டது. தட்டையான நிலப்பரப்பினைக் கொண்டது. எனவே இதன் காரணமாக இங்கு மீன் பிடி, விவசாயம் மற்றும் ஏனைய சேவைத் தொழில்களினை மேற்கொள்ளக் கூடிய இடமாகக் காணப்படுகின்றது. மேலும் மாதுறு ஓயாவின் கிளை நதியானது வாழைச்சேனைப் பகுதியினூடாகச் செல்வதால் வண்டல் மண் படிவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் நதிக் கரையோரங்களில் அதிக நெற் செய்கையும், வீட்டுத்தோட்டமும் செய்யப்படுகின்றது. எனினும் இப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை விட ஆழ்கடல் மீன்பிடியானது அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வுப் பிரதேச நிலப்பயன்பாட்டினை அவதானித்தோமானால் 3186.86 ஹெக்டயர் குடியிருப்புப் பகுதி அதிகமாகக் காணப்படுகின்றது. இது ஒரு உப நகரப்பகுதியாகக் காணப்படுவதனால் குடியிருப்புப் பகுதி அதிகமாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை** : கோறளைப்பற்று பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை

| இல | கிராமசேவகர் பிரிவு | மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை | மீனவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மீறாவோடை தமிழ் | 60 | 78 |
| 02 | கறுவாக்கேணி | 03 | 03 |
| 03 | கிண்ணையடி | 116 | 140 |
| 04 | சுங்காங்கேணி | 20 | 20 |
| 05 | கும்புறுமூலை | 115 | 155 |
| 06 | கல்குடா | 355 | 693 |
| 07 | கல்மகு | 285 | 472 |
| 08 | வாழைச்செனை தமிழ் | 57 | 65 |
| 09 | புதுக்குடியிருப்பு | 07 | 07 |
| 10 | பேத்தாளை | 358 | 620 |
| 11 | நாசிவன்தீவு | 225 | 235 |
| 12 | கண்ணகிபுரம் | 8 | 12 |
| **மொத்தம்** | | **1604** | **2500** |

விபரம்.

**மூலம்** : புள்ளிவிபரக்கையேடு, கோறளைப்பற்று பிரதேச செயலகம், 2022

அட்டவணை 2.1 இன் பிரகாரம் ஆய்வுப்பிதேசத்தில் காணப்படுகின்ற மொத்த மீனவக் குடும்பங்களில் பேத்தாளை (358 குடும்பங்கள்) மற்றும் கல்குடா (355 குடும்பங்கள்) போன்ற பகுதிகளில் மீனவ குடும்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்ற அதேவேளை மீனவர்களின் எண்ணிக்கையும் பாரியளவினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அதேபோல் கறுவாக்கேணி (03 குடும்பங்கள்) மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மீனவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியல் என்பது ஆய்வினை மேற்கொள்ளும் போது எவ்வாறான முறையில் எத்தகைய உத்திகளைக் கையாண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது என்பதைக் குறித்து நிற்கின்றது. எந்தவொரு ஆய்விலும் ஆய்வு முறையியல் என்பது முக்கியமான ஒன்றாகும். இதனடிப்படையில் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எனும் தலைப்பிலான இவ் ஆய்வில் முதலாம் நிலைத் தரவுகளும் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம்நிலைத் தரவு எனும் போது நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல், கள ஆய்வின் போது தகவல்கள் திரட்டப்பட்டன. மேலும் நேரடிக் கலந்துரையாடலானது ஆய்வுப் பிரதேச மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் கருத்துக்களைப் பெற முடிந்ததுடன் களஅவதானிப்பு முறையானது ஆய்வுப்பிரதேசத்திற்கு விஜயம் செய்து மீனவர்களின் நிலவரங்கள் பற்றி அறிந்து தகவல்களை திரட்டக்கூடியவையாகவும் அமைந்தன. நேரடி அவதானிப்பு மற்றும் கள ஆய்வின் மூலம் மீன்பிடிப்பு, மீனவச் சூழல், சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகள் என்பன ஆராயப்பட்டது. நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் மூலமாக மீனவர்கள் மீன்பிடிப்பதில் உள்ள சிரமங்கள் ஆராயப்பட்டு தகவல்கள் ஆய்வில் உட்செலுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற மீனவர்கள், முக்கிய அலுவலக உத்தியோகத்தர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரை நேரடியாக சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடமிருந்து மீனவக் குடும்பங்கள் மற்றும் மீனவர்களின் எண்ணிக்கை, மீன்பிடிசார் பிரச்சினைகள், மீனவர்களுக்கான சலுகைகள், உதவிகள் என்பன தொடர்பாக தரவுகள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டன.

மேலும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள், இணையத் தரவுகள், மீன்பிடி சார்ந்த நூல்கள், மட்டக்களப்பு மாநகரசபை மூலவளத் திரட்டு, கோறளைப்பற்று பிரதேச செயலக மூலவளத்திரட்டு என்பற்றிலிருந்து பெறப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேச வரைபடமானது Arc GIS மென்பொருளினைப் பயன்படுத்தி கோறளைப்பற்று பிரதேச செயலக வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தரவுகள் இவ் ஆய்விற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

## ஆய்வின் பெறுபேறுகளும், கலந்துரையாடலும்

### கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கோறளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் மீனவர்கள் 74% ஆனவர்களுக்கு பிரச்சினைகள் காணப்படுகின்றது எனவும் 26% ஆனவர்களுக்கு பிரச்சினைகள் எதுவுமில்லை எனவும் கருத்துக்களை தெரிவித்தனர் (உத்தியோகத்தருடனான, 2024). இங்கு பெரும்பாலும் சொந்தமாக மீன்பிடி வைத்திருக்கும் சிலர் மாத்திரமே பிரச்சினைகள் எதுவுமில்லாதவர்களாக காணப்படுகின்றனர் (உத்தியோகத்தருடனான நேர்காணல், 2024). இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்காக எடுத்துக்கொண்ட மீனவக் குடும்பங்களில் 74% ஆனவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன (உத்தியோகத்தருடனான நேர்காணல, 2024). இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் பின்வருமாறு ஆராயப்பட்டுள்ளது.

- **காலநிலை மாற்றம்**

ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்காக எடுத்துக் கொண்ட மீனவக் குடும்பங்களில் 74% ஆன மீனவர்களும் கூறிய பிரச்சினையாக காலநிலை மாற்றம் காணப்படுகின்றது. காலநிலை மாற்றமானது மீனவர்கள் வருடம் முழுவதும் மீன்பிடியை மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. ‘‘எமது பிரதேசத்தில் மே தொடக்கம் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் பலத்த காற்று வீசுவதும் இக்காற்று காரணமாக மீன்பிடிக் கப்பல்கள் கடலில் திசை திருப்பப்படுவதுடன் படகுகள் மற்றும் கப்பல்கள் கடலில் மூழ்கும் அபாயங்கள் நிகழ்வதன் காரணமாக பல மீனவர்கள் இறக்கும் சந்தர்ப்பங்கள் ஆண்டுதோறும் நிகழ்ந்த வண்ணமே உள்ளதுடன் காலநிலையில் உண்டாகும் இத்தளம்பல் நிலை எங்களது ஜீவனோபாயமான மீன்பிடித் தொழிலையும் பெருமளவில் பாதித்தும் வருகின்றன’’ *(மீனவருடனான நேர்காணல், வயது 38).* அதுமட்டுமல்லாமல் இவ்வாறு காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தமது பொருளாதார நிலையை பாதிப்பதாகவும் மீனவர்கள் கருத்துக்களை தெரிவித்தனர். இதனால் போதிய வருமானமின்மை குடும்பத்தில் பல்வேறு பொருளாதார ரீதியான பிரச்சினையும் ஏற்படுகின்றது (பிரதேசவாசிகளுடனான கலந்துரையாடல், 2024).

மீனவர்களின் குடும்பங்களில் அதிகளவு அங்கத்தவர்கள் காணப்படுகின்ற குடும்பங்கள் அதிகமாக காணப்படுகின்றமையால் காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற தொழில் பாதிப்பு, வருமானம் குறைவு என்பனவற்றை சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது (கள ஆய்வு, 2024). மேலும் காலநிலை மாற்றம் காரணமாக சில சமயங்களில் உபகரணங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் மீனவர்களின் உடல் ரீதியாக பாதிப்பு ஏற்படுகின்றது (கள ஆய்வு, 2024). சில சமயங்களில் மீனவர்கள் உயிரிழக்கும் நிலை ஏற்படும் சந்தரப்பங்களும் காணப்படுகிறது (பிரதேசவாசியுடனான நேர்காணல், 2024).

- **தொழிற்பயிற்சி இன்மை**

ஆய்வுப் பிரதேச மீனவர்களில் தமது மீன்பிடி முறையில் 60 சதவீதமானவர்கள் இன்றும் பாரம்பரிய முறையினை மட்டுமே பயன்படுத்துகின்றனர் (உத்தியோகத்தருடனான நேர்காணல், 2024). இவ்வாறு பாரம்பரிய முறையை பயன்படுத்துவதன் மூலம் வருமானம் குறைவாக கிடைக்கின்றமையும் நவீன உபகரணங்களை வாங்குவதற்கு தம்மிடம் பொருளாதார பற்றாக்குறையாகவும், நவீன மீன்பிடி உபகரணங்கள் பற்றிய பயிற்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவுகள் எதுவும் தம்மிடம் இல்லாமையினால் பாரம்பரிய முறையின் அடிப்படையில் மீன்பிடியினை மேற்கொள்கின்றனர் (நேரடி அவதானிப்பு, 2024).

- **சந்தை வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றமை**

ஆள் பலம் மற்றும் உபகரணங்களின் உதவியுடன் கடும் சிரமத்திற்கு மத்தியில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் வரை தம்மால் பிடித்துக்கொண்டு வருகின்ற மீன்களுக்கான உரிய சந்தை வாய்ப்பு குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் இலாபம் குறைவாக காணப்படுகின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டது. தாம் பிடித்து வருகின்ற மீன்களை மொத்த வியாபார முறைக்கு உட்படுத்துவதனால் சந்தை விலையிலும் பார்க்க குறைந்த விலையிலேயே மொத்த வியாபாரிகள் தங்களிடம் இருந்து மீன்களை கொள்வனவு செய்கின்றனர். இதனால் தமக்கு சந்தை விலையை விட குறைவான விலையில் விற்கப்படுவதனால் இங்குள்ள மீனவர்களுக்கு போதியளவு சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024).

- **அரசாங்கம் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவதில்லை**

ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடிக்கென வழங்கப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி பற்றி வினவப்பட்ட போது 61% ஆனவர்களுக்கு அரசு உதவி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி கிடைக்கப்பெறவில்லை எனவும் 39% ஆனவர்களுக்கு மட்டுமே அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி கிடைக்கப் பெற்றுள்ளது (உத்தியோகத்தருடனான கலத்துரையாடல், 2024).

அத்துடன் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு இதுவரையில் உதவி செய்யவில்லை எனவும் அரசாங்கம் சார்ந்து காணப்படுகின்ற கிராம மீனவர் சங்கம் செயற்படாமல் உள்ளமையும் மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இதனுடன் கூலியாக மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் தங்களிடம் சொந்த உபகரணங்கள் இல்லை எனவும் இதனால் தாம் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டது. சில மீன்பிடி உபகரணங்கள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளுதல், அவற்றிற்கு வாடகை செலுத்துதல் போன்ற பிரச்சினைகளும் இனங்காணப்பட்டது (மீனவர்களுடனான கலந்துரைந்துரையாடல், 2024).

கடல் நீர் மாசடைதல் எனும் பிரச்சினையும் மீனவர்களால் குறிப்பிடப்பட்டது. குறிப்பாக கோறளைப்பற்று பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பாசிக்குடா மற்றும் கல்குடா ஆகிய கடற்கரைப்பிரதேசங்களில் பெருமளவில் மாசுக்கள் அதிகரித்து வருகின்றன (நேரடி

அவதானிப்பு, 2024). குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளின் அதிகரித்த வருகை மற்றும் அவர்களின் செயற்பாடுகள் காரணமாக கழிவுப் பொருட்கள் கடலில் வீசப்படுகின்றன. குப்பைகள், மரக்குற்றிகள் மற்றும் ஏனைய கடல்நீரை மாசுபடுத்தும் மாசுக்கள் கடலில் அதிகளவில் கிடப்பதாலும் மீனினங்களுக்கும், மீன்பிடி உபகரணங்களுக்கும், தங்களின் உடலுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றது (நேரடி அவதானிப்பு, 2024).

- **மீனவர் சங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள்**

மீனவர்களின் தொழிலின் உறுதித்தன்மையாகக் காணப்படுவது மீனவர் சங்கமாகும். ஆய்வுப்பிரதேச மீனவர் சங்கமானது 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகவும் 2017ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் உள்ளது (மீனவர் ஒருவருடன் நேர்காணல், 2024). நிறுவனங்கள் பல்வேறு உதவிகளினைக் கொடுத்தும் அது மீனவர்களுக்குச் சென்றடையாமல் அதில் ஊழல் இடம்பெற்று வருகிறது (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024).

இதனால் மீனவர் சங்கமானது இரண்டாக பிளவுபட்டு ஒரு வருடகாலத்தில் புதிய சங்கமானது தாபிக்கப்பட்டது. இருப்பினும் இந்த சங்கமானது இன்னும் பதியப்படாமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் கிடைக்கவிருக்கின்ற உதவிகள் எதுவும் கிடைக்கப்பெறாமல் உள்ளது (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024).

- **சுற்றுலா நடிவடிக்கைகளும், கடற்கரை சூழல் பாதிப்படைதலும்.**

ஆய்வுப்பிரதேசத்தில் பிரபல சுற்றுலாத்தளமாக விளங்கும் பாசிக்குடா கடற்கறையில் சுற்றுலா விடுதிகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரை முறையாக வெளியேற்ற முடியாமல் காணப்படுவதுடன் அவை கடற்கரைய அண்மித்த சுற்றுலா விடுதிகளுக்கு அருகாமையில் வழிந்தோடுவதற்கு வசதியில்லாமல் நீண்ட காலமாக நீர்தேங்கி நிற்கின்றது. இது தொடர்பாக மீனவர் ஒருவரிடம் வினவிய போது “பாசிக்குடா கடற்கரை கவனிப்பாரற்ற நிலையில் கிடப்பதாலும் சுற்றுலாப்பயணிகளால் கொண்டு வரப்படும் திண்மக்கழிவுகள் மற்றும் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்படும் திரவ கழிவுகள் போன்றவை கடலில் சேர்வதன் காணரமாகவும் மீனினங்கள் பெருகுவதற்கு இவை அச்சுறுத்தலாக அமைவதுடன் மீன்பிடித்தொழிலை பாரியளவில் பாதித்தும் வருகின்றன” (*மீனவருடனான நேர்காணல், வயது 49*) எனவும் குறிப்பிட்டார். நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிலைமையை பார்வையிடக் கூடியதாகவும் காணப்பட்டது.



**ஒளிப்படம் :** பாசிக்குடா கடற்கரை சூழலை மாசுபடுத்தும் சுற்றுலா செயற்பாடுகள்.

மூலம் : களஆய்வு, 2024

- **பிறபகுதி மீனவர்களின் ஆதிக்கம்**

ஆய்வுப்பிரதேசத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி முறையான சுருக்குவலை வைத்து மீன்பிடிக்கும் முறையினை பயன்படுத்துகின்றமையால் நீரோட்டங்கள் மூலம் தமது பிரதேசத்திற்கு வருகின்ற மீனினங்களானது பாதியில் மறிக்கப்பட்டு பிடிக்கப்படுகின்றமையால் பிரதேசத்தில் மீன்வளமானது குறைந்துள்ளது (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024). இதனால் மீனவர்களின் உற்பத்தியும் வருமானமும் பாதிக்கப்படுவதுடன் இதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்த முடியாமலும் உள்ளது (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024).

- **ஆழ்கடல் மீன்பிடி சார்ந்த பிரச்சினைகள்**

ஆய்வுப்பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடி தொடர்பாக அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகளாக எரிபொருள் ரீதியான பிரச்சினைகள், காலநிலை சார்ந்த பிரச்சினைகள், மீன் கிடைப்பனவுப் பிரச்சினைகள், சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் ஆகியவை அதிகளவில் காணப்படுகின்றமை ஆய்வின் மூலமாக கண்டறியப்பட்டன. கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி பெருமளவு நிலவிய கடந்த இரண்டு வருடங்களில் ஆய்வுப் பிரதேசத்தில் எரிபொருள் சார்ந்த பிரச்சினைகள் பெருமளவில் வலுப்பெற்றிருந்தது (மீனவருடனான நேர்காணல், 2024). தற்போது ஆழ்கடல் மீன்பிடியில் அதிக பாதிப்பினை ஏற்படுத்துகின்ற பிரதான பிரச்சினையாக மீன்வள கிடைப்பனவில் காணப்படுகின்ற பிரச்சினை ஆய்வின் மூலமாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

வாழைச்சேனை துறைமுகத்தின் ஏற்றுமதி வருமானமானது தற்போது அதிகரித்திருந்தாலும் குறைவான மீன் உற்பத்தியினையே ஆய்வின் மூலமாக கண்டு கொள்ள முடிகின்றன. ஆழ்கடல் மீன்களுக்கான விலையேற்றம் காரணமாக குறைவான மீன் உற்பத்தி காணப்படினும் வருமானத்தினை மாத்திரமே குறிப்பிட்டளவு பெற்றுக் கொள்ள முடிகிறது (மீனவருடனான கலந்துரையாடல், 2024). ஆழ்கடல் மீன்பிடி செயன்முறையில் ஈடுபடுவதற்கான ஆரம்ப செலவுகள் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் ஆய்வுப்பிரதேச

ஆழ்கடல் மீன்பிடியானது பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது (மீனவர்களுடனான கலந்துரையாடல், 2024).

## முடிவுரை

கோறளைப்பற்று பிரதேச செயகப் பிரிவுக்குட்டபட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனும் தலைப்பின் கீழான இவ்வாய்வின் முடிவினை நோக்குகின்றபோது இப்பிரதேசத்தில் அதாவது கரையோரத்தை அண்டி வாழ்கின்ற மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. இம்மீன்பிடியை மேற்கொள்கின்ற மீனவ சமூகத்தினரிடையே பல்வேறு விதமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவ் ஆய்வின்படி மீன்பிடி சார்ந்த பொதுவான பிரச்சினைகளாக காலநிலை மாற்றம், தொழிற்பயிற்சியின்மை, சந்தை வாய்ப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றமை, அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறுவதில்லை, மீனவர் சங்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள், சுற்றுலாசார் நடவடிக்கைகள், பிறபகுதி மீனவர்களின் ஆதிக்கம், ஆழ்கடல் மீன்பிடி சார்ந்த பிரச்சினைகள் என்பனவாகும். இப்பிரச்சினைகள் சமூகம் சார்ந்தவையாகவும் பொருளாதாரம் சார்ந்தவையாகவும் காணப்படுவதுன் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களும் மீன்பிடியில் பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டன.

எனவே இப் பகுதி மீனவர்களின் இப்பிரச்சினைகளில் இருந்தும் இயற்கையாக இடம்பெறும் காலநிலை மாற்றத்திற்கும் ஈடுகொடுத்து தங்களுடைய தொழிலினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான உரிய நடவடிக்கைகளினை மேற்கொண்டு அவற்றிலிருந்து மீண்டு மீனவ சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறாக மீனவர்களின் பிரச்சினைகளினை உரிய அதிகாரிகள் முன்வந்து இவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நாட்டிற்கு வருமானத்தினைப் பெற்றுத் தரும் மீனவ சமுதாயத்தினைப் பாதுகாக்கலாம்.

## உசாத்துணைகள்


1. Amerdheen, M., Nufail, H., & Jisna, M. F. (2021). Challenges faced by fishermen in marine fishing: a study based on Nintavur DS Division.

2. Khader, V. (2019). Challenges Faced by Fisher Women of South India specific. *Acta Scientific Nutritional Health*, *3*(7), 137-139.

3. Miller, D. M. (1982). *Water at the Surface of Earth: An Introduction to Ecosystem Hydrodynamics* (Vol. 21). Academic Press.

4. Kroeker, K. J., Kordas, R. L., Crim, R. N., & Singh, G. G. (2010). Meta-analysis reveals negative yet variable effects of ocean acidification on marine organisms. *Ecology letters*, *13*(11), 1419-1434.

5. Piet, G. J., & Quirijns, F. J. (2009). The importance of scale for fishing impact estimations. *Canadian Journal of Fisheries and Aquatic Sciences*, *66*(5), 829-835.

6. Gripsrud, G. (1990). The determinants of export decisions and attitudes to a distant market: Norwegian fishery exports to Japan. *Journal of International Business Studies*, *21*, 469-485.

7. Register, P. D. (1906). Paducah Daily Register, August 10, 1906.

8. Food and agriculture organization of the United Nations—FAO, (2021) In *The Europa directory of international organizations 2021* (pp. 297-305). Routledge.

9. Vinayachandran, P. N., Chauhan, P., Mohan, M., & Nayak, S. (2004). Biological response of the sea around Sri Lanka to summer monsoon. *Geophysical Research Letters*, *31*(1).

10. Coulthard, S., Sandaruwan, L., Paranamana, N., & Koralgama, D. (2014). Taking a well-being approach to fisheries research: Insights from a Sri Lankan fishing village and relevance for sustainable fisheries. In *Methodological challenges and new approaches to research in international development* (pp. 76-100). London: Palgrave Macmillan UK.

11. Balasuriya, A. (2018). Coastal area management: Biodiversity and ecological sustainability in Sri Lankan perspective. In *Biodiversity and climate change adaptation in tropical islands* (pp. 701-724). Academic Press.

12. Agriculture Organization of the United Nations. Fisheries Department. (2000). *The State of World Fisheries and Aquaculture, 2000* (Vol. 3). Food & Agriculture Org.

13. புள்ளிவிபரக்கையேடு, கோறளைப்பற்று பிரதேச செயாலகம் - 2022

# Humanities and Social Sciences (Political Science & Governance)

# அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தம்: சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

Ms. Thampiraja Laxsayini
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*laxsayi@gmail.com*

Dr. N. Pushparajah
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*pushparajahn@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

சர்வதேச அரசியலில் அதிகாரத்திற்கான போராட்டம் என்பது தொடர் நிகழ்வாகக் காணப்படும் ஒன்றாகும். அந்தவகையில் இன்று பரவலாக உலக அரங்கில் பேசப்பட்டு வரும் விடயமாக சிரியாவின் உள்நாட்டுப் போர் காணப்படுகின்றது. எனவே, இவ் ஆய்வு அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமநிலைக்கான யுத்தத்தில் சிரிய விவகாரம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பானதாகவே அமைந்துள்ளது. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசாக மாறுவதில் அமெரிக்கா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் சிரிய யுத்தத்தை தமது அதிகாரச் சமநிலைக்கான யுத்த களமாக மாற்றியுள்ளமையால் அந்த யுத்தம் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. ரஸ்யா தமது நலன்களை சிரியாவில் பாதுகாப்பதற்கு அசாத் ஆட்சி அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது. அதேநேரம் அமெரிக்கா அசாத் ஆட்சியை வீழ்த்தி தமக்கு இசைவான ஆட்சியை ஏற்படுத்த போராடி வருகின்றது. இதனால் அமெரிக்கா மற்றும் ரஸ்யாவிற்கிடையிலான மோதல் வளர்வதுடன், பிராந்திய நாடுகளுக்கிடையிலான அதிகாரப் போராட்டத்தையும் தூண்டியுள்ளது. இதனால் சிரியாவின் உள்நாட்டு யுத்தமானது சர்வதேச போட்டிக் களமாக பரிணாமம் அடைந்து இன்றுவரை தொடர்வதாகக் காணப்படுகின்றது. சிரிய யுத்தத்திற்கான சமாதான முயற்சிகள் பின்னடைவைச் சந்திப்பதுடன் இந்த யுத்தமானது ஈரான் மற்றும் சவூதி அரேபியாவிற்குமிடையேயும் பிராந்திய அதிகாரப் போட்டியை மேலும் தூண்டியுள்ளதையும் இவ் ஆய்வு மூலம் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆகவே சிரியாவில் ஜனநாயகரீதியான வாக்கெடுப்பை நடத்துதல், மேற்குலகு இஸ்லாமிய நாடுகள் மீதான முரண்பாட்டுணர்வை நீக்குதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை ஒரு முடிவுநிலைக்குக் கொண்டு வரமுடியும் என்பது ஆய்வின் வெளிப்பாடாகும்.

***திறவுச்சொற்கள்:*** *அசாத் ஆட்சி, அதிகாரச் சமனிலை, இஸ்லாமிய நாடுகள், சர்வதேச அரசியல், சிரிய விவகாரம்*

## அறிமுகம்

சர்வதேச அரசியல் என்பது தேசங்கள், நாடுகள் ஆகியவற்றுக்கிடையேயான நேரெதிர் மறையான பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகள் ஆகும். மேலும் நாடுகளுக்கிடையிலான உறவுகளையும், முரண்பாடுகளையும் சர்வதேச அரசுகள் ஒன்றிணைந்து செயற்படுத்தும் சர்வதேச அமைப்புக்கள், சட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. சர்வதேச அரசியலிலே நாடுகளுக்கிடையில் ஒருமைப்பாட்டை வளர்க்கவும் முரண்பாடுகளைத் தணிக்கவும் அதிகாரம் என்பது பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே அரசியல் விவகாரத்தில் அதிகாரமும் வலுவும் ஊடுருவி நிற்கின்றன. ஆகவே தான் இவ் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் வல்லரசு நாடுகள் முனைப்புடன் செயற்படுகின்றன. சர்வதேச அரசியலில் எண்ணெய் வளம் கொண்ட பிரதேசமான மேற்காசியா இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு அதிகம் முக்கியமான பிராந்தியமாக விளங்கியது. மேற்காசிய அரசியலிலே மன்னராட்சி, பிரபுத்துவம் போன்ற பராம்பரியங்கள் முக்கியத்துவம் கொடுக்கும் சர்வாதிகார ஆட்சி பல நூற்றாண்டுகளாக இடம்பெற்று வருகின்றன. இவற்றிற்கு எதிராக பல போராட்டங்கள் அவ்வப்போது நிகழ்ந்த போதும் அதிக மாற்றம் அடையவில்லை. இந்நிலையிலேயே 2010களுக்கு பின் அங்கு எழுச்சி பெற்ற மக்கள் போராட்டம் (அரபு வசந்தம்) அப்பிராந்திய அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. 2010 டிசம்பர் 11 இல் துனீசியாவில் ஆரம்பமாகிய அரபு வசந்தம் பின்பு எகிப்து, லிபியா, மொராக்கோ போன்ற வட ஆபிரிக்க நாடுகளிலும் சிரியா, பஹ்ரைன், ஏமன், ஜோர்டான், அல்ஜீரியா, சூடான், ஓமான், சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகளிலும் உருவாகியது (லக்ஷனா, 2018).

அரபு நாடுகள் பலவற்றில் அரசுகளுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட அரபு வசந்தம் என்ற எழுச்சிப் போராட்டம் குறுகிய காலத்துக்குள் முடிவுக்கு வந்துள்ள போதிலும் சிரியாவின் யுத்தம் மாத்திரம் தான் பல வருடங்களைத் தாண்டியும் தொடர்கின்றது. சிரியா மத்திய கிழக்கில் அமைந்துள்ள முக்கியமான ஒரு நாடாகும். இது மேற்கில் லெபனானையும், தென்மேற்கில் இஸ்ரேல் மற்றும் ஜோர்தானையும், கிழக்கில் ஈராக்கையும், வடக்கே துருக்கியையும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. சிரியா மத சார்பற்ற சோசலிசக் குடியரசாக விளங்குவதுடன் இதன் அதிபராக பஷர் அல் அஸாத் இன்று வரை ஆட்சி செய்து வருகிறார். இவருக்கு எதிராகவே சிரியாவில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகியது. இந்த யுத்தத்தில் பலம் பொருந்திய நாடுகள் இரண்டு அணிகளாக பிரிந்து நின்று செயற்படுவதுடன் இதன் தலைமைப் பொறுப்பை அமெரிக்கா மற்றும் ரஸ்சியா ஆகிய இரு வல்லாதிக்க நாடுகளே தலைமையேற்று வழிநடத்துகின்றது. இவ்விரண்டு நாடுகளுக்கிடையே இடம்பெறும் சிரியா மீதான இராஜதந்திர போட்டி மேற்காசியா அரசியலை கொதிநிலைக்குள் உட்படுத்தியுள்ளது (லக்ஷனா, 2018; Abanoz, 2020).

இவ்வாறு சிரியாவின் உள்நாட்டு விவகாரம் அமெரிக்காவினதும் ரஸ்யாவினதும் அதிகாரச் சமனிலைக்கான யுத்தமாக மாறியுள்ளதால் சிரியாவில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பல சிக்கல்கள் தோன்றுகின்றது. குறிப்பாக சிரியாவில் அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்கும் இடையிலான பதட்டம் அதிகரிக்கப்படுகின்ற நிலையில் நீண்ட முயற்சியால்

கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தமும் முறிவடைந்துள்ளது (லக்ஷனா, 2018). இதனால் சிரியாவில் சமாதனத்தை கட்டியெழுப்ப முடியாமல் உள்ளமைக்கு அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமனிலைக்கான யுத்தம் பிரதானமான காரணமாக அமைகின்றது. இதனால் சர்வதேச சமாதானம் என்பது பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றது. அந்தடிப்படையில் அமெரிக்காவிற்கும் ரஸ்சியாவிற்குமிடையிலான சர்வதேச அதிகாரப் போட்டியும், அப்போட்டியின் அடிப்படையில் சிரிய விவகாரம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது தொடர்பானதாகவே இவ் ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

அமெரிக்காவும் ரஸ்யாவும் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை அதிகாரப் போராட்டக் களமாக மாற்றியுள்ளதால் உலக அதிகார ஒழுங்கிற்கும், சர்வதேச சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது. அத்துடன் அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரச் சமனிலைக்கான யுத்தம் என்பது தமது பலத்தை நிரூபிப்பதற்கான களமாகவும், மற்றும் அதிகாரம், நலன்களுக்கான போட்டிக் களமாகவும் சிரிய யுத்தத்தை அணுகுவது சிரியாவில் தொடர்ந்தேர்ச்சியாக யுத்தம் நடைபெற உந்துதலாக அமைகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

- அமெரிக்கா மற்றும் ரஸ்யாவின் புவிசார் அரசியல் மற்றும் பிராந்திய நலன்கள் யாவை?
- அமெரிக்கா - ரஸ்யா ஆகிய நாடுகளின் இராஜதந்திர, இராணுவ மற்றும் கொள்கை உத்திகள் எவை?
- அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான போட்டியானது சர்வதேச ஒழுங்கில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது?
- பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இவ்விரு நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் எவை?

**ஆய்வின் நோக்கம்**

**பிரதான நோக்கம்**

- சிரிய உள்நாட்டுப் போர்ச் சூழலில் அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்கும் இடையே வளர்ந்து வரும் அதிகாரப் போட்டி மற்றும் இராணுவ, இராஜதந்திர, கொள்கை உத்திகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**உப நோக்கங்கள்**

- அமெரிக்கா மற்றும் ரஸ்யாவின் அரசியல் மற்றும் பிராந்திய நலன்களை வெளிக்கொணர்தல்.

- இப்போட்டியானது பரந்த சர்வதேச ஒழுங்கில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை மதிப்பீடு செய்தல்.
- பிராந்திய ஸ்திரத்தன்மைக்கான இவ்விருநாடுகளின் உத்திகள் மற்றும் நலன்களை ஆய்வு செய்தல்

**ஆய்வு முறையியல்**

ஒரு ஆய்வுக்கு அவசியமாக அமைவது ஆய்வு முறையியலாகும். அத்தோடு ஆய்வானது சிறப்பாக மேற்கொள்ளப்படுவதற்கு தரவு சேகரிப்பானது அத்தியாவசியமானதாகும். இத் தரவுகளே ஆய்வின் நம்பகத் தன்மை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் கணிசமான பங்கு வகிக்கின்றது. அந்த அடிப்படையில் இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகவே கட்டமைக்கப்பட்டுள்ள ஒரு பண்பு ரீதியான ஆய்வாகும். இவ்வாய்வுக்கு இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், தேசிய பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், செய்திகள் மற்றும் சஞ்சிகைகள், இதழ்கள் மற்றும் இணையத்தள கட்டுரைகளின் மீளாய்வினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரணப் பகுப்பாய்வின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்குமிடையிலான அதிகாரப் போராட்டம் எவ்வாறு சிரியாவில் காணப்படுகின்றது என்பதை மையப்படுத்தியதாகக் காணப்படும் இவ் ஆய்வுக்கு உறுதுணையாகக் காணப்படும் பல ஆய்வுகள் இலக்கிய மீளாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

Mahesh Senadeera (2023), என்பவரால் மேற்கொள்ளப்பட்ட The conflict between America and Russia எனும் ஆய்வில், அமெரிக்காவிற்கும் ரஸ்யாவிற்கும் இடையிலான மோதல் சர்வதேச சமூகம் எதிர்கொள்ளும் மிக அழுத்தமான சவால்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சிரிய மோதல், அணுவாயுதப் போட்டி, இணையப் பாதுகாப்பு, ஒருவருக்கொருவர் உள்நாட்டு அரசியலில் தலையிடுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் பதட்டங்களை அதிகரித்து வருவதுடன் உலகளாவிய பாதுகாப்பு, பொருளாதார ஸ்திரமின்மை மற்றும் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் உள்ள பிராந்திய ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

Can Abanoz (2020), என்பவரால் மேற்கொள்ளப்பட்ட Russian – Syrian Relations within the Context of the Syrian Civil War and its Effects on Russian – American Rivalry எனும் ஆய்வில் குறிப்பிட்ட கருத்தின்படி, மத்திய கிழக்கு பிராந்தியம் பல சர்ச்சைகளால் சூழப்பட்டுள்ளது. சிரியாவில் காணப்படும் பல இன மற்றும் பல பிரிவுகள் காரணமாக ஹபிஸ் அல் அஸாத் காலத்திலிருந்தே குறுங்குழுவாதப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. சோவியத் யூனியனுடன் சிரியாவிற்கு இருந்த வரலாற்று ரீதியான தொடர்புகள் சோவியத் யூனியனின் வாரிசான ரஸ்யாவிடமும் தொடரவே செய்தது. இதனால் அஸாத் ஆட்சிக்கு உதவியாக

ரஸ்யா காணப்படுவதால் மத்திய கிழக்கில் அமெரிக்கா பின்னடைவைச் சந்திக்க காரணமாக அமைந்துள்ளது. மத்திய கிழக்கு மற்றும் மத்தியதரைக் கடல் பகுதியில் ரஸ்யாவின் ஜனாதிபதி புடினின் நீண்டகால நோக்கங்கள் கட்சிகளுக்கிடையே பெரும் போட்டியாக மாறியுள்ளது. அத்துடன் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு வல்லராச மாறுவதில் ரஸ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மோதல், இந்தப் போட்டியில் பங்குகொள்ளும் ஏனைய பிரதிநிதிகள் மற்றும் சிரியாவின் முடிவில்லாத உள்நாட்டு ஸ்திரமின்மை ஆகியவை ஒரு புதிய சூழ்நிலையைக் கொண்டு வந்துள்ளதுடன் இந்நிலை புதிய ஒரு பனிப்போரைத் தோற்றுவித்துள்ளது.

லக்ஷனா (2018), என்பவரால் எழுதப்பட்ட சமகால மேற்காசிய அரசியல் ஒரு பார்வை என்னும் ஆய்வு நூலில் மேற்காசியாவின் முக்கியத்துவம் பற்றியும் சிரியா மற்றும் ரஸ்யக் கூட்டின் வெற்றி அமெரிக்காவின் சரிவிற்கு வித்திட்டுள்ளமை பற்றியும், சிரியா மீதான அமெரிக்கக் கூட்டுப் படையின் வெற்றி பிராந்திய போட்டிக்கு வழியமைத்துள்ளது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் சிரிய யுத்தத்தில் சிரியா அரசாங்கத்திற்கான வடகொரியாவின் ஒத்துழைப்பு மூலம் அமெரிக்கா பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றது.

திருநாவுக்கரசு (2008), என்பவரால் எழுதப்பட்ட ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும் எனும் ஆய்வு நூலில் 1990 களுக்கு முன்னர் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான பனிப் போர் சூழல் பற்றியும் அதாவது இரு வல்லரசுகளுக்கிடையிலான அதிகாரத்துக்கான போராட்டம் தொடர்பாகவும், வோர்சோ, நேட்டோ இராணுவக் கூட்டமைப்பு பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. மேலும் சோவியத் யூனியனின் சிதைவு பற்றியும் 1990 களுக்குப் பின்னான அமெரிக்காவின் ஒரு முனை அதிகாரம் தொடர்பாகவும், ஏகாதிபத்திய நலனே ஒற்றை மைய அரசியலின் அச்சாணி எனவும் விதந்துரைத்து இதற்காக அமெரிக்க தலைமையிலான நாடுகள் தம்மிடையே சமரசம் செய்து முழு உலகையும் தம்மிடையே பங்கு போட்டுக்கொள்வதால் ஒரு புறம் யுத்தமும் மறுபுறம் சமரசமும் நிகழ்வதாக இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இவ்வாறு சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை மையமாகக் கொண்டு பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாயினும் சிரிய யுத்தம் தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கு அமெரிக்கா மற்றும் ரஸ்யாவின் அதிகாரத்திற்கான போராட்டமே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை முதன்மையான காரணமாகக் கொண்டு அது தொடர்பான ஆய்வுகள் வெளிவந்தது மிக மிக குறைவானதேயாகும். எனவே இதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு இக்குறைபாட்டை நிவர்த்தி செய்து இத்துறைக்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கிலேயே இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

## முடிவும் கலந்துரையாடலும்

### அமெரிக்கா மற்றும் ரஸ்யாவின் புவிசார் அரசியல் மற்றும் பிராந்திய நலன்கள்

சிரியாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடானது பல்வேறு உந்துதலை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. அந்தவகையில் குரூட்ஸ் எண்ணை மற்றும் பெற்றோலியம், பருத்தி ஆகியவற்றை அபகரிப்பதற்கும் ரஸ்யாவினதும் சீனாவினதும்

ஆதிக்கத்தை சிரியாவில் தடை செய்வதுமே இதன் பிரதான முயற்சியாகும். சிரியாவிடம் இருக்கும் ஆயுதங்களும் அதனால் ஏற்படும் பயங்களும் அமெரிக்காவின் பிராந்திய நலனுக்கு பாதிப்பாக உள்ளது. அதாவது சிரியாவிடம் உயிரின அழிவை ஏற்படுத்தும் குண்டுகள் இருக்கின்றன. அத்துடன் ஐக்கிய அமெரிக்கா இது தொடர்பாக சிரிய அரசை கடுமையாக எச்சரித்திருந்தது. உயிரின அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை லெபனானியப் போராளி இயக்கமான ஹிஸ்புல்லாவிற்கு சிரிய அதிபர் கொடுத்து விடுவாரோ என்ற அச்சம் அமெரிக்காவையும் இஸ்ரேலையும் நீண்ட நாட்களாக பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சிரியாவில் இருந்து ஹமாஸ் இயக்கத்திற்கு ரஸ்யா தயாரிப்பு SA - 17 விமான எதிர்ப்பு ஏவுகணைகள் அனுப்பப்பட்டு விடுமோ என்ற அச்சமும் இருக்கின்றது (றிஸ்வி, 2011). அமெரிக்காவானது தன்னுடைய நெருங்கிய நட்பு நாடான இஸ்ரேலின் பிராந்திய இஸ்திரத் தன்மையினை பேணுவதன் மூலம் மேற்காசியாவில் தனது வல்லாதிக்கத் தன்மையையும், இஸ்ரேலின் பிராந்திய நலனையும் நிலை நிறுத்துவதற்கான ஒரு கருவியாக சிரியாவின் உள்நாட்டு பிரச்சனையை கருதுகின்றது.

மத்திய தரைக் கடலில் ரஸ்யாவின் கேந்திர முக்கியத்துவம்மிக்க நாடு சிரியா ஆகும். ரஸ்யாவுக்கு வெளியே உள்ள ஒரே ஒரு ரகசிய கடற்படை தளம் சிரியாவின் Tartus துறைமுகத்தில் இருக்கின்றது. நவீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கக்கூடிய ஆழ்கடல் துறைமுகமான Tartus துறைமுகத்தை ரஸ்யா இழக்க விரும்பாததோடு சிரியாவில் ஆயுத தளபாட விற்பனையையும் இழக்க விரும்பவில்லை. லிபியாவிலும் ஈராக்கிலும் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றங்கள் ரஸ்யாவின் ஆயுத தளபாடங்களின் விற்பனையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மத்திய கிழக்கில் மிக நீண்ட கால நட்பை சிரியாவும் ரஸ்யாவும் கொண்டிருக்கின்றன. இந்த நட்பு பஷார் அல் அசாத்தின் தந்தை காலத்தில் இருந்த சோவியத் - சிரிய நட்பிலிருந்து தொடங்குகின்றது. பனிப்போர் காலத்திலும் சிரியா, ரஸ்யாவிற்கு உதவியாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (லக்ஷனா, 2018; Phillips, 2018).

ஆகவே மத்திய கிழக்கில் தனது கூட்டாளி நாடான சிரியாவின் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டி, சிரிய யுத்தத்தில் ரஸ்யா ஈடுபட்டடது. மேலும் சிரியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அதன் நெருங்கிய நட்பு நாடான ஈரானில் இருக்கும் ஆட்சியாளர்களும் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டி வரும். தனது அடுத்த நட்பு நாடும் ஆயுத தளபாடங்கள் கொள்வனவு நாடுமான ஈரானையும் ரஸ்யா இழக்க விரும்பவில்லை. அத்துடன் சிரியாவில் இருந்து கிடைக்கும் குரூட் ஓயில், பெற்றோலியம் மற்றும் பருத்தி ஆகியவற்றின் ஏகபோக சொந்தக்காரர்களாக தாம் இருக்க வேண்டும் என ரஸ்யா விரும்புகின்றது. அத்துடன் பனிப்போருக்குப் பின்னர் மத்திய கிழக்கு அரசியலில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் மத்திய கிழக்கில் அமெரிக்காவிற்கு சவால்விட்டு தனது ஆதிக்கத்தை மத்திய கிழக்கில் நிலைநாட்டுவதற்கான ஒரு களமாகவும் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை ரஸ்யா பயன்படுத்தி வருகின்றது என்பதும் நோக்கத்தக்கதாகும் (Abanoz, 2020).

**அமெரிக்கா - ரஸ்யா ஆகிய நாடுகளின் இராஜதந்திர, இராணுவ மற்றும் கொள்கை உத்திகள்**

செப்டம்பர் 2015 இல் ரஸ்யா சிரிய யுத்தத்தில் நேரடியாகத் தலையிட்டதிலிருந்து சிரிய யுத்தம் தீவிரமடைந்ததுடன், அமெரிக்கா - ரஸ்யா ஆகிய இரு நாடுகளின் பினாமி போராகவும் உருவெடுத்தது. இதனால் இரு வல்லரசுகளும் பல்வேறுபட்ட இராஜதந்திர, இராணுவ மற்றும் கொள்கை நோக்கங்களை கடைபிடித்து இந்தப்போரை தமக்குச் சாதகமாக்குவதற்கு முயற்சித்து வருகின்றன. எனினும் சிரியா எப்போதுமே அமெரிக்காவிற்கு சவாலாகவே இருந்து வருகிறது என்பதையும் இந்த ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. அமெரிக்காவும் துருக்கியும் புரட்சிகர சக்திகளை சிறப்பாக ஒழுங்கமைக்க உதவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன. இவ்வாறு, இவ்விரு நாடுகளும் இணைந்து அரசியல் அம்சங்களை நிர்வகிக்க சிரிய தேசிய கவுன்சிலை நிறுவினர். அதேநேரம் சுதந்திர சிரிய இராணுவம் அசாத்தின் படைகளை எதிர்த்துப் போராட ஒரு இராணுவப் பிரிவாக ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், பல்வேறு அரசியல் மற்றும் இராணுவ எதிரிகளை ஒன்றிணைப்பதன் மூலம் அசாத் ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத்தோடு அமெரிக்கா 2012 இல் சிரிய தேசிய கூட்டணியை நிறுவியுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இந்த கூட்டுறவை சிரியாவின் சட்டபூர்வமான அரசாங்கமாக அங்கீகரித்ததுடன் சிரியாவில் நிலைமையை சீராக்குவதற்கான வாய்ப்பாகவும் கருதினர். இருப்பினும், சிரிய தேசிய கூட்டணி பலவீனமாகவும், பிளவுபட்டதாகவும் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (Sadek, 2016).

மறுபுறம் ஈரானுடனான சவுதி அரேபியாவின் பினாமி மோதலில், அமெரிக்கா சவூதி அரேபியாவிற்கு ஆதரவாக உள்ளதுடன் சிரிய எதிர்ப்பிற்கு ஆதரவாகவும் உள்ளது. இதில் அமெரிக்காவின் முக்கிய ஆர்வம் என்னவெனில் சவூதி அரேபியா அல்லது அதன் பிற பிராந்திய நட்பு நாடுகளுடன் செயற்படுவது என்பது மேற்கத்தேய பாதுகாப்பு நலன்களுடன் இணைந்த ஆட்சியை விரும்புவதாகும். சவூதி அரேபியா சிரிய நெருக்கடியில் அமெரிக்காவை ஆதரிப்பது என்பது ஈரானின் செல்வாக்கை குறைமதிப்பிற்குட்படுத்தும். எனவே ரஸ்யாவின் பிராந்திய கூட்டாளியை பலவீனப்படுத்தினால் மத்திய கிழக்கில் ரஸ்யாவின் ஆதிக்கம் பரவுவதைத் தடுக்க முடியும் என்பது அமெரிக்காவின் வியூகமாக உள்ளது (Sadek, 2016).

மேலும் ஈரான் அசாத் ஆட்சியை ஆதரித்து வருகிறது என்பதோடு ஈரான் அசாத் ஆட்சியை ஆதரிப்பதால் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த சிரியாவிற்கு உதவியும் செய்து வருகின்றது. மேலும் ஆயுதங்களை சிரியா வழியாக லெபனான் மற்றும் காசா போராளிக் குழுவான ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸுக்கு அனுப்ப ஈரானுக்கு சிரியா உதவுகிறது. மறுபுறம் ஈரான் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் பாதுகாப்பற்றதாகவும் உணர்வதற்கு சிரிய அரசாங்கத்தின் வீழ்ச்சி அவசியம் என்பதை அமெரிக்கா புரிந்து வைத்துள்ளது. மேலும் அசாத் வீழ்ந்தால், ஈரான் தனது முக்கிய கூட்டாளியை இழந்து, பின்னடைவைச் சந்திக்கும் என்பது அமெரிக்காவின் இராஜதந்திரமாகும். இக்கண்ணோட்டத்தில் தான் அமெரிக்கா சிரிய யுத்தத்தைக் கையாள்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Fisher, 2013).

விளாடிமிர் பூட்டினைப் பொறுத்தவரை அவர் ரஸ்யாவை மீண்டும் ஒரு பெரிய சக்தியாக உருவாக்க விரும்புவதுடன் பிராந்தியத்தில் ரஸ்யா மீண்டும் செயல்படவும், தனது நலனை உறுதிப்படுத்துவதற்கும், அதிகாரத்திற்கு போட்டியாக அமையவும் சிரிய யுத்தத்தை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதுகிறார். ஆகவே பூட்டின் மீண்டும் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை அதிகரிக்க சிரிய மோதலை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார் (லக்ஷனா, 2018; Sadek, 2016). சிரியா மேற்காசியப் பிராந்தியத்தில் ரஸ்யாவின் முக்கிய கூட்டாளியாகும். மேலும் அசாத் ஆட்சி வீழ்ச்சியடைந்தால், சிரியா இஸ்லாமியர்களின் கைகளின் கீழ் இருக்கும். இது ரஸ்யாவிற்கு சாதகமாக இருக்காது என்பதோடு அது ரஸ்யாவின் நலன்களையும் நோக்கங்களையும் கேள்விக்குட்படுத்துவதாகவும் அமையும். இதனால் தான் அசாத் எதிர்ப்புப் படைகளுக்கு எதிராக ரஸ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது என்பதோடு அதிநவீனமான மேற்பரப்பு முதல் வான் ஏவுகணை அமைப்பையும் உருவாக்கியுள்ளது. S-400 என்பது சிரியா மற்றும் மத்திய கிழக்கில் ரஸ்யாவின் ஆதிக்கத்தை தீவிரமாக்கியுள்ளது (Sadek, 2016). எனவே சிரிய மோதலைத் தீர்ப்பதில் மேற்குலகின் பலவீனத்தைக் காட்ட ரஸ்யா விரும்பியதுடன் தனது இராணுவ பலத்தையும் வெளிப்படுத்துகிறது. அத்துடன் பிராந்திய அதிகாரச் சமனிலையின் மறுசீரமைப்பைக் கருத்தில் கொண்டு ஈரானுக்கு ஆதரவாகவும், துருக்கி மற்றும் சவூதி அரேபியாவிற்கு எதிராகவும் ரஸ்யா செயற்படுகின்றது. ஈரான் சிரியாவின் ஒரு நட்பு நாடாகும். எனவே ஈரானுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கும் ரஸ்யாவிற்கு சிரியா அவசியமாகும் (Sadek, 2016).

இந்தப் பின்னணியின் அடிப்படையில் மோதலின் போது, எந்தவொரு சமாதானப் பேச்சுக்களிலும் அசாத்தின் ஆட்சியும் அவரது வலுவான நட்பு நாடான ஈரானும் இருக்க வேண்டும் என்று ரஸ்யா வலியுறுத்தியது. 2013 ஆம் ஆண்டில், மாஸ்கோ அதிநவீன விமான எதிர்ப்பு பேட்டரிகள், நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் பிற வெடிமருந்துகளை அசாத்துக்கு அனுப்பியதுடன் மத்தியதரைக் கடலில் ரோந்து செல்ல 12 ரஸ்யப் போர்க் கப்பல்களையும் வழங்கியது. அத்துடன் பாதுகாப்பிற்கான பொறுப்பின் கீழ் லிபியாவில் மேற்கத்திய சக்திகள் செய்ததை மீண்டும் மீண்டும் செய்வதைத் தவிர்க்க ரஸ்யா விரும்பியது. இதனால், லிபியாவின் நிலைமையிலிருந்து சிரியாவைப் பாதுகாக்க ரஸ்யா அனைத்தையும் செய்துள்ளது. அசாத் பொதுமக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்திய போதும், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒத்துழைப்பு இல்லாமல் சிரியா மீது அமெரிக்கா எந்தத் தாக்குதலையும் மேற்கொள்ளாது என்று ரஸ்யா அறிவித்தது. ஆகவே சிரியாவில் அசாத்துக்கு ஆதரவாக ரஸ்யாவும், கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டு, விரிவாக்கப்பட்ட ஆயுதப் போட்டி பழைய பனிப்போர் காட்சியை வெளிப்படுத்துவதாக உள்ளது (Sadek, 2016).

**அமெரிக்க - ரஸ்ய தலைமைத்துவத்தின் கீழ் பிராந்திய சக்திகளின் வகிபாகம்**

சிரியாவின் உள்நாட்டுப் பிரச்சினை தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கும் சமாதான முன்னெடுப்புக்கள் தோல்வியடைவதற்கும் கிளர்ச்சியாளர்கள் மாத்திரம் காரணமாக அமையாது ரஸ்யாவின் நிலையை ஆதரித்து ஈரான், சீனா ஆகிய நாடுகள் அசாத் ஆட்சிக்கு ஆதரவாகச்

செயற்படுவதும், அமெரிக்காவின் நிலையை ஆதரித்து சவூதி அரேபியா, துருக்கி, கட்டார், இஸ்ரேல் ஆகிய பிராந்திய நாடுகள் அசாத் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவு வழங்குவதும் இதற்குப் பிரதான காரணமாக அமைகின்றன (Phillips, 2018; Abanoz, 2020). ஆகவே அமெரிக்க - ரஸ்ய அதிகாரப் போராட்டத்தில் பிராந்திய நாடுகளும் தமது நலன்களை ஆதாரமாகக் கொண்டு சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் பங்கெடுத்துள்ளது. இதனால் சிரிய யுத்தம் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையேயும் அதிகாரப் போராட்டத்தைத் தூண்டியுள்ளதைக் காணலாம்.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் பஷர் அல் அசாத்தின் ஆட்சியை ஈரான் ஆதரிக்கின்றது. இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் சுன்னி தீவிரவாத பிரிவுகளுக்கு எதிரான அசாத் ஆட்சியை ஆதரிப்பதாக ஈரான் தலைவர்கள் அறிவித்தனர். மேலும் புனித ஷியா ஆலயங்களைப் பாதுகாப்பதற்காக அசாத் ஆட்சிக்கு ஆயுதமேந்திய ஆதரவை வழங்குவதாக ஹிஸ்புல்லா அறிவித்தது (Sadek, 2016; Phillips, 2018). செப்டம்பர் 2015 இல் ரஸ்யப் படைகளைத் தவிர ஈரானும் இராணுவத் தலையீட்டைத் தொடங்கியது. ஈரான் சிரியாவில் 6500 முதல் 9200 இராணுவ மற்றும் துணை இராணுவப் பணியாளர்களை அனுப்பியுள்ளதுடன், இதில் ஈரான் இராணுவத்தின் சிறப்புப் படைகளும் உள்ளடங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மேற்குலக நாடுகள் ஈரானுக்கு எதிராக உள்ளதுடன், அணுசக்தி திட்டம் தொடர்பான அதன் சர்வதேச ஒப்பந்தத்திற்குப் பிறகும், ஈரான் அமெரிக்காவை ஒரு கொடிய எதிரியாகவும், சவூதி அரேபியா மற்றும் இஸ்ரேலின் கூட்டுறவாகவும் தன்னை கருதுகிறது. அத்துடன் ஈரான் தனது எதிரிகளின் சிறந்த இராணுவத் திறனை அங்கீகரித்து, தனது தற்காப்பு பாதுகாப்பை நிலைநிறுத்த, ஈராக் மற்றும் சிரியா போன்ற நாடுகளுடனும் பிராந்தியத்தில் உள்ள அரசு சாராத நிறுவனங்களுடனும் தொடர்புகொள்கிறது (Schmidt, 2019; Heath, 2022). இந்த தற்காப்பு மூலோபாயத்தில் தான் சிரியா முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் அதன் இஸ்ரேலுடனான மோதலுடனும், பாரசீக வளைகுடாவில் சவூதி அரேபியாவுடனான மோதலுடனும் தொடர்புபட்டது. இந்த இரண்டு மோதல்களும் பல ஆண்டுகளாக மத்திய கிழக்கு பிராந்திய வளாகத்தில் (The Middle East Regional Security Complex ) ஆதிக்கம் செலுத்தி வருவதால், சிரியாவில் அதன் ஈடுபாடு மிகவும் விரிவானதாகவும் தீவிரமாகவும் இருப்பதற்குக் காரணமாகும் (யோன்ஸ், 2014). பல நூற்றுக்கணக்கான ஈரானிய சிப்பாய்கள் சிரியாவில் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் ஈரான் அசாத் ஆட்சிக்கு பில்லியன் கணக்கான டாலர்களை நிதி ரீதியாக ஆதரித்து சிரியாவின் தனியார் துறையில் முதலீடு செய்துள்ளது (Schmidt, 2019; Sadek, 2016; Heath, 2022). இதனால் தான் அசாத் ஆட்சியை ஆதரித்தும் ரஸ்யாவிற்கு உறுதுணையாகவும் நின்று சிரிய யுத்தத்தை ஈரான் அணுகுகிறது.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் பஷர் அல் அசாத்தின் ஆட்சிக்கு துணையாக சீனா உள்ளது. வர்த்தக ஒப்பந்தங்களைப் பாதுகாப்பதற்கும், சிரியாவை பட்டுப்பாதை திட்டத்தில் இணைப்பதற்கும் அசாத்துடன் பணிபுரியும் உறவைப் பேணுவதில் சீனா ஆர்வமாக உள்ளது. 2017 இல் அசாத் வெளியிட்ட ஒரு அறிவிப்பில் சிரியப் போர் முடிவடைந்த பின் சீனா,

ரஸ்யா மற்றும் ஈரான் ஆகியவற்றின் உதவியுடன் உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முன்னுரிமை அளிக்கப்படும் என்று அசாத் உறுதியளித்தார். மேலும் சீனா சிரியாவில் 2 பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்வதாக உறுதியளித்துள்ளது. இவ்வாறான பொருளாதார ஆர்வங்களைத் தவிர சிரியாவில் இட்லிப்பில் இருக்கும் உய்குர் முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட ஒரு தீவிரவாத அமைப்பான துர்கிஸ்தான் இஸ்லாமியக் கட்சி பற்றியும் சீனா கவலை கொண்டுள்ளது. இதனால் இவ்வமைப்பைத் தோற்கடிப்பதற்காகவும் சிரிய யுத்தத்தில் அசாத்துக்கு ஆதரவாக சீனா செயற்படுகின்றது. மேலும் சிரியாவின் பெற்றோலியத் துறையில் சீனாவின் முதலீடுகள் மூலமும் சீனா அசாத் ஆட்சிக்கு ஆதரவளித்துள்ளது (Heath, 2022).

சவூதி அரேபியா பிராந்திய வல்லரசுகளில் ஒன்றாகும். இது ஒப்பீட்டளவில் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட நாடாகக் காணப்படுவதுடன் அமெரிக்காவுடன் நெருக்கமான கூட்டணியைக் கொண்டுள்ளது. சிரியா மோதலில் சவூதி அரேபியா மூன்று முக்கிய நலன்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, சவூதி அரேபியா பாரசீக வளைகுடாவில் அதன் அந்தஸ்து அச்சுறுத்தப்படுவதாக உணர்கிறது. இரண்டாவதாக, வளைகுடா மேலாதிக்கம் என்ற நிலையில் ஈரானின் எந்த சவாலையும் தடுக்கும் வகையிலும் ஈரானை தனிமைப்படுத்துவதிலும் சவூதி அரேபியா ஆர்வமாக உள்ளது. இதனால் ஈரானின் பிராந்திய செல்வாக்கு வரம்புக்குட்படுத்தப்படுவதால் சவூதி அரசு சிரியாவில் கிளர்ச்சியாளர்களை ஆதரிக்கிறது. மூன்றாவதாக, சவூதி அரேபியாவில் சுன்னி பிரிவை வலுப்படுத்துவதில் கருத்தியல் ஆர்வம் கொண்டுள்ளது (Schmidt, 2019; Sadek, 2016). வளைகுடாவிலும் முழுப் பிராந்தியத்திலும் மேலாண்மை பெற்று வரும் சவூதி அரேபியாவின் வல்லமைக்கு ஈரானின் சிரியத் தொடர்பு பெரும் சவாலாக உள்ளது. சிரியாவிலும் மற்றும் சில அரபு நாடுகளிலும் ஈரானின் வளர்ந்து வரும் தொடர்புகள் நீண்ட காலத்தில் அரபு கலாசாரத்திலும் பிராந்திய மேலாண்மையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்று சவூதி அரேபியாவும் அமெரிக்கா சார்பு வளைகுடா நாடுகளும் அஞ்சுகின்றன. சிரிய முரண்பாடு வெறும் உள்நாட்டு முரண்பாடு அல்ல. சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்குமான பலப்பரீட்சை நடக்கும் யுத்த களமாகவும் சிரியா இன்று மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Sadek, 2016).

தொழில்நுட்ப ரீதியாக பார்க்கின்ற போது இஸ்ரேல் மற்றும் சிரியா ஆகிய நாடுகள் இரண்டும் போரில் ஈடுபடுகின்றன. குறிப்பாக கோலன் தொடர்பாக போர் நிறுத்தம் அவை இரண்டுக்குமிடையே நடைமுறையில் உள்ள போதும் சமாதான ஒப்பந்தம் இல்லை. அதே நேரத்தில் ஈரான் மீது தாக்குதல் நடத்துவதில் இருந்து இஸ்ரேலைத் தடுக்கும் ஹிஸ்புல்லாவின் திறனை சிரியா எளிதாக்கியுள்ளது (Schmidt, 2019). 1967 ஆம் ஆண்டு வரை கிழக்கு ஜெருசேலம் நகர் ஜோர்டான் வசமிருந்தது. இந்நிலையில் கிழக்கு ஜெருசேலமை கைப்பற்றிய இஸ்ரேலிய அரசு கடந்த 1980 ஆம் ஆண்டில் அந்நகரை தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. ஜெருசேலம் நகரில் யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாட்டுத் தளங்கள் அதிகமாக உள்ளதால் மூன்று மதத்தினரும் இந்நகரை தங்களுக்கே உரிமையாக்கிக் கொள்ள முயன்று வருகின்றனர். சுமார் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் பாலஸ்தீனியர்கள் வசித்து வரும் ஜெருசேலத்தின் கிழக்குப் பகுதியில் இஸ்ரேல் அரசு

அத்துமீறலாக அமைத்த வசிப்பிடங்களில் சுமார் இரண்டு இலட்சம் யூதர் இனத்தவர்கள் வாழ்கின்றனர். இதனால் இஸ்ரேலியர்கள் ஆக்கிரமிப்பச் செய்த இடங்களை தங்களுக்கு வழங்கக்கோரி, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான காஸா என்ற பகுதியை கைப்பற்றியுள்ள ஹமாஸ் போராளிகள் ஜெருசேலம் நகரை இஸ்ரேலின் பிடியிலிருந்து மீட்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் (லக்ஷனா,2018). இப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிரிய யுத்தத்தின் வெற்றி அமைந்துவிடக் கூடாது என்பதினாலேயே அமெரிக்கா சார்பான மேற்குலக நாடுகள் சிரியா மீது கூட்டுத் தாக்குதலை மேற்கொண்டது. இதன் மூலம் பாலஸ்தீனியர்கள் சார்பாக செயற்படும் சிரியாவை தோற்கடிப்பது இஸ்ரேல் - மேற்குலக கூட்டின் நோக்கமாகும். இதனை மேலும் வலுப்படுத்தவே சிரியா இரசாயன ஆயுதங்களை யுத்தத்தில் பாவித்தது எனக் குற்றம் சாட்டியது. அதற்கான விசாரணையும் ஐக்கிய நாடுகள் சபையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது (லக்ஷனா, 2018; Heath, 2022; Dekel et al, 2016).

**யுத்தத்தின் தாக்கங்கள்**

சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்கா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் தலையிட்டு அவ் யுத்தத்தை வேறு ஒரு பரிணாமம் நோக்கி நகர்திச் சென்றுள்ளதால் சிரிய மோதலும் உக்கிரமடைந்து பல்வேறு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய சீரழிவாக சிரியா உள்நாட்டுப் போர் பார்க்கப்படுகின்றது. ஆகவே சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை மையமாகக் கொண்டு ஏற்பட்டுள்ள தாக்களில் இவ்விரு நாடுகளின் வகிபாகம் இன்றியமையாததாகும்.

இவ் யுத்தம் சிரியாவில் மக்கள் இறப்பு, இடப்பெயர்வு, பொருளாதார தாக்கம், மருத்துவ வசதி குறைபாடு, கல்வி அணுகல் தடை, தொல்பொருள் அழிவு என பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பிராந்திய போட்டி, ஷியா – சுன்னி முரண்பாடு மேலும் அதிகரிப்பு, லெபனானில் அகதிகள் நெருக்கடி, துருக்கியில் உள்நாட்டு குழப்பம் போன்ற பல பிராந்திய ரீதியிலான தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியில் இடப்யெர்வு நெருக்கடி, தீவிர வாத எழுச்சி, உலகளாவிய எண்ணை விலை சரிவு போன்ற விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது (Karim & Nazmul Islam , 2016).

**முடிவுரை**

வெளிநாட்டு சக்திகள் தமது நலன்களை மையமாகக் கொண்டு சிரிய உள்நாட்டு போரில் தலையிட்டதால் அம்மோதல் மேலும் தீவிரமான நிலையை அடைந்தது. குறிப்பாக சிரிய யுத்தத்தில் அமெரிக்காவும் ரஸ்யாவும் தலையிட்ட போது, அது இவ்விரு நாடுகளுக்குமிடையிலான அதிகாரப் போட்டியாக வெளிப்பட்டது. அமெரிக்கா 2013 இல் சிரிய யுத்தத்தில் நேரடியாக பங்கேற்றுக் கொண்டதுடன், அமெரிக்கா பங்கேற்று இரு வருடம் கழித்து 2015 ரஸ்யா சிரிய யுத்தத்தில் நேரடியாக பங்கெடுத்துக் கொண்டது. இவ்விரு நாடுகளின் அதிகாரப் போராட்டம் சிரிய யுத்தத்தை ஒரு போட்டிக் களமாக மாற்றியுள்ளதுடன் சிரிய யுத்தம் நின்று நிலைத்திருப்பதற்கான உந்து சக்தியையும் வழங்கியுள்ளது. குறிப்பாக

அமெரிக்காவும் ரஸ்யாவும் தமது அதிகாரச் சமனிலைக்கான யுத்தத்தில் சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தை பயன்படுத்திக் கொண்டது என்று தான் கூற வேண்டும். இவ்விரு நாடுகளும் வெவ்வேறு நலன்களை ஆதாரமாகக் கொண்டு சிரிய யுத்தத்தை அணுகுகின்றது.

சிரியா மீது ரஸ்யாவும் அமெரிக்காவும் வெவ்வேறு சமாதான முயற்சிகளை ஆரம்பித்துள்ளதுடன் இதில் இரு கட்சிகளும் வெவ்வேறு வழிகளைக் கடைப்பிடித்தன. ஆரம்பத்தில் அமெரிக்கா தலைமையிலான ஜெனீவா அமைதிப் பேச்சுக்கள் அசாத்தை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டிருந்தன. ஆனால் ரஸ்யாவின் முயற்சியால் இந்த யோசனை கைவிடப்பட்டது. அத்துடன் ரஸ்யா தலைமையிலான அஸ்தானா செயல்முறையானது ஈரான் மற்றும் துருக்கியின் உத்தரவாதத்துடன் அசாத் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்றுவரை சிரியாவில் சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை. காரணம், வல்லரசுகளின் நலன்கள் மற்றும் அதிகாரத்திற்கான போராட்டமாகும். அத்துடன் சிரிய பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட சமாதான முயற்சிகள் யாவும் வெறும் பேச்சளவில், முயற்சிகள் என்ற நிலையில் மாத்திரமே நின்றனவே தவிர எந்தவொரு முயற்சிகளும் பலனளிக்கவில்லை என்பது தான் உண்மையாகும். இதனால் தான் இன்று வரை சிரியாவில் யுத்தம் இடம்பெற்ற வண்ணமேயுள்ளது. அத்துடன் அமெரிக்கா மற்றும் ரஸ்யாவின் அதிகாரச் சமனிலைக்கான யுத்தத்தால் மத்திய கிழக்கில் காணப்படும் பிராந்திய சக்திகளுக்கிடையிலான அதிகாரப் போராட்டம் மேலும் துருவப்படுத்தப்பட்டுள்ளது. எனவே சிரியாவின் உள்நாட்டு யுத்தம் சர்வதேச ரீதியான பரிணாமத்தைப் பெற்று தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெறுவதற்கு அமெரிக்கா மற்றும் ரஸ்யாவிற்கிடையிலான அதிகாரப் போராட்டமே மிக முக்கியமான காரணமாகும்.

இவ்வாறு மோதல் தீர்க்கப்படாமல் தொடர்வதால் உள்நாடு, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் பல எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்தி உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது. ஆகவே மத்திய கிழக்கின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கு சிரியாவில் மோதல் தீர்க்கபட வேண்டியது அவசியமாகும். இதற்கு வல்லரசுகள் உலக பாதுகாப்பை கருத்தில் கொண்டு செயற்படுவதுடன் பிராந்திய நாடுகளும் குறுகிய அரசியல் அபிலாஷைகளை கைவிட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதில் விருப்பம் கொண்டிருப்பது அவசியமாகும்.

எனவே இவ் ஆய்வின் மூலம் பல்வேறு விடயங்களை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. அந்தவகையில், சிரியாவில் ஒருவரின் வெற்றி இயல்பாகவே மற்றவருக்கு தோல்வியை கொண்டுவருவதால் அமெரிக்கா மற்றும் ரஸ்யா ஆகிய வல்லாதிக்க நாடுகள் சமாதானத்தை கட்டியெழுப்புவதில் பாரிய பின்னடைவை எதிர்நோக்குகின்றது. அதாவது சிரிய அதிபர் பஷர் அல் அசாத்தின் தோவ்வியானது இயல்பாகவே ரஸ்யாவின் தோல்வியாகவும் அமெரிக்காவின் வெற்றியாகவும் கணிக்கப்படும். இதனால் ரஸ்யா, சிரிய அதிபரின் தோல்வியை இலகுவில் ஏற்படுத்த அனுமதிக்காது. இதனால் தான் ஐக்கிய நாடுகள் சபையில் சிரியாவிற்கெதிரான தீர்மானங்களையும் ரத்ததிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்கிறது.

ஆகவே ஒருவரின் தோல்வி மற்றவருக்கு வெற்றியாக அமைவதால் சிரிய யுத்தத்திற்கான சமாதானத்தை எட்டுவதில் பாரிய பின்னடைவை எதிர்காலத்திலும் சந்திக்கும் என்பதை இவ்வாய்வு மூலம் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

சிரியாவை மையமாகக் கொண்டு அமெரிக்கா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுவதைப் போன்று, ஈரான், சவூதி அரேபியா ஆகிய இருநாடுகளுக்கிடையேயும் பிராந்திய அதிகாரப் போட்டி தோன்றியுள்ளது. இவ்விரு நாடுகளும் யேமன் யுத்தம் உட்பட பல மோதல் வலயங்களில் எதிரெதிர் தரப்புக்களுக்கு ஆதரவளித்து வந்துள்ளன. லெபனான், ஈராக் போன்றவற்றில் தமது செல்வாக்கை அதிகரித்துக்கொள்ள முயற்சிப்பது போல் சிரியாவிலும் தமது அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதில் ஆர்வமாகச் செயற்படுவதை இவ்வாய்வின் மூலம் கண்டுகொள்ள முடிந்தது. மேலும் இஸ்லாமிய அரசுகளே பிற இஸ்லாமிய அரசுகளை அழிப்பதில் உந்துசக்தியாகக் காணப்படுகின்றன. அத்துடன் அரபு உலகு ஒற்றுமைக்கு பதிலாக பகைமையினை வளர்து வருகின்றது. சிரியாவிற்கு எதிராக சவூதி அரேபியா, துருக்கி, ஜோர்டான், பஹ்ரைன் போன்ற நாடுகள் செயற்பட்டு பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இதனால் மத்திய கிழக்கு நாடுகளிடையே ஒற்றுமை இல்லாததையும் இவ்வாய்வு மூலம் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆனவே ஜனநாயக ரீதியிலான வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் நடுநிலையான ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம் சிரியாவில் யுத்த சூழலின் தீவிரத் தன்மையை குறைக்க முடியும். மேலும் இஸ்லாமிய நாடுகள் மீதான மேற்குலகின் முரண்பாட்டுணர்வு அகற்றப்பட வேண்டும். சிரியாவில் இருக்கும் வல்லாதிக்க மற்றும் பிராந்திய நாடுகளின் இராணுவ துருப்புக்கள் அகற்றப்பட வேண்டும். சர்வதேச நாடுகள் ஆயுத மோதலை மேலும் தூண்டி, அதன் மூலம் இலாபம் ஈட்டிக்கொள்ளும் குறுகிய நோக்கை கைவிட்டு உலக மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சமாதானத்தை கட்டியெழுப்ப முழு மனதுடன் முயற்சிக்க வேண்டும். அதுமட்டுமல்லாது ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மேலும் பலப்படுத்தப்பட்டு வல்லரசுகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாக கட்டமைக்கப்பட வேண்டும். அத்துடன் இஸ்லாமிய மார்க்கத்தினுள் காணப்படும் இருபெரும் பிரிவுகளான ஷியா, சுன்னி முஸ்லிம்களுக்கிடையே காணப்படும் மோதலுணர்வினை களைவதற்கு இஸ்லாமிய மத நற்சிந்தனைகளை இஸ்லாமிய மத ஸ்தாபனங்கள் எடுத்துரைத்து இரு பிரிவுகளிடையேயும் ஒற்றுமையை உருவாக்க முயற்சித்தல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


திருநாவுக்கரசு, மு. (2008). *ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும்* தமிழியல், காலச்சுவடு பதிப்பகம்.:நாகர் கோவில், இந்தியா.

லக்ஷனா, பா. (2018). *சமகால மேற்காசிய அரசியல் ஒரு பார்வை.* மதிகலர்ஸ்., நல்லூர், யாழ்ப்பாணம்.

Abanoz, C. (2020). *Russian – Syrian Relations within the Context of the Syrian Civil War and its Effects on Russian – American Rivalry*. Retrieved from:

https://www.researchgate.net/publication/344198435_RUSSIAN-SYRIAN_RELATIONS_WITHIN_THE_CONTEXT_OF_THE_SYRIAN_CIVIL_WAR_AND_ITS_EFFECTS_ON_RUSSIAN-AMERICAN_RIVALRY

Dekel, U., Boms, N. T., & Winter, O. (2016). Mapping the Non-State Actors in Syria and their Attitudes toward Israel. In *Syria's New Map and New Actors: Challenges and Opportunities for Israel.* Institute for National Security Studies.

Fisher, M. (2013, August 29). *9 Questions about Syria you were too embarrassed to ask.* Retrieved from: https://www.washingtonpost.com/news/worldviews/wp/2013/08/29/9-questions-about-syria-you-were-too-embarrassed-to-ask/

Heath, S. (2022). *A Critical Analysis of American Foreign Policy in the Syrian Civil War*. Retrieved from: https://scholar.google.com/scholar?hl=en&as_sdt=0%2C5&q=A+Critical+Analysis+of+American+Foreign+Policy+in+the+Syrian+Civil++War&btnG=#d=gs_qabs&t=1699091201500&u=%23p%3DVYlLZq2bQGwJ

Karim, S. & Nazmul Islam.md. (2016). *Syrian crisis: Geopolitics and implications*. Retrieved from: https://scholar.google.com/scholar?hl=en&as_sdt=0%2C5&q=SYRIAN+CRISIS%3A+GEOPOLITICS+AND+IMPLICATIONS&btnG=#d=gs_qabs&t=1699526072690&u=%23p%3DGttsnm0a9r0J

Phillips, C. 2018. *The Battle for Syria.* Yale University Press.

Sadek, L. (2016). *Russia's resurgence in Syria: A new cold War*. Retrieved from: https://scholar.google.com/scholar?hl=en&as_sdt=0%2C5&q=Russia%27s+resurgence+in+Syria%3A+A+new+cold+war&btnG=#d=gs_qabs&t=1699610298172&u=%23p%3D-JaoTvchzQQJ

Schmidt, S. (2019). *The Middle East regional security complex and the Syrian civil war.* Retrieved from: https://scholar.google.com/scholar?hl=en&as_sdt=0%2C5&q=The+Middle+East+Regional+Security+Complex+and+the+Syrian+civil+war.&btnG=#d=gs_qabs&t=1699082625381&u=%23p%3DZTl-cBkc9YkJ

# இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினைப் பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்தலும், ஊக்குவித்தலும்


Ms. Selvaratnam Tharunitha
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*tharunitha878@gmail.com*

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*gunaretnamv@esn.ac.lk*



**ஆய்வுச் சுருக்கம்:**

ஓர் ஜனநாயக நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் சமமான வகையில் அரசியலில் பங்குபற்றுவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சர்வதேசரீதியிலும், இலங்கையிலும் உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ பாதிப்பிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அரசியலில் பங்குபற்றுதல் என்பது மிகவும் அரிதானதாகவே காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணமாக மாற்றுத்திறனாளிகளும் வாக்காளர்களே என்ற ரீதியில் சமத்துவமாக பேணப்படாமை, வாக்கினை முறையான வகையில் வழங்குவதற்கு வழிகாட்டுகின்ற அரசாங்கம் மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்களிப்பு வசதிகள் தொடர்பில் சரியான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தாமை, வாக்காளர் இடாப்பில் முறையாக அவர்களது பெயர்களைப் பதிவுசெய்வதற்கு ஊக்குவிக்கப்படாமை போன்றவை அடையாளப்படுத்தப்படுகின்றன. எனவே இப்பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு பதுளை மாவட்ட பதுளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 29 கிராமசேவகர் பிரிவுகளில் இம்மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமை வசதிகளை மேம்படுத்தும் வகையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகள், மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக உள்ள கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள், மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பினை அதிகரிக்க எவ்வாறான விடயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பவற்றைக் கண்டறிவதனையும் இவ் ஆய்வு தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு முதலாம்நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாற்றுத்திறனாளிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள், தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோர், சமூக நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் போன்றோரிடம் வினாக்கொத்து, கள ஆய்வு, நேர்காணல் போன்றவற்றின் மூலமும், இரண்டாம்நிலைத் தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், இதழ்கள், அறிக்கைகள், இணையம் மற்றும் கையேடுகள் என்பவற்றின் மூலமும் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், இவ் ஆய்வானது நிகழ்தகவு மாதிரிகளில் ஒன்றான எளிய எழுமாற்று மாதிரியெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதுளைப் பிரதேச செயலகத்தினை முழு ஆய்வுப்பிரதேசமாகக் கொண்டு 29 கிராமசேவகர் பிரிவுகளை மையப்படுத்தி சிறப்பாக பதுளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 150 மாதிரி நபர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் Excel விரிதாள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமை வசதிகள் பற்றாக்குறையாக உள்ளமையை இனங்காணக்கூடியதாக இருந்தது. எனவே இவ்வாறான பிரச்சினைகளைக் களைந்து அவர்களுக்கான வாக்களிப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதனூடாக அவர்களது வாக்களிப்பு வீதத்தினை அதிகரிக்கலாம் என்ற ரீதியில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.



***திறவுச்சொற்கள்:*** *ஊக்கப்படுத்தல், மாற்றுத்திறனாளிகள், வலுப்படுத்தல், வாக்களிப்பு வசதிகள், வாக்குரிமை*

**அறிமுகம்**

ஒரு நாட்டிற்குரிய தகைமை பெற்ற சகல பிரஜைக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறப்பிடம், ஆண், பெண் ஆகிய எதுவித பேதங்களும் அற்ற வகையில் நாட்டின் அதிகார நிருவாகத்தில் பங்கேற்கும் உரிமையும், அத்துடன் தங்களுக்கென ஒரு பிரதிநிதியை நியமிப்பதற்கான உரிமையும் கொண்டதுவே சர்வஜன வாக்குரிமையாகும். இலங்கையில் இச் சர்வஜன வாக்குரிமையானது 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவின் பிரேரணையின் மூலம் கிடைக்கப்பெற்றது. (Election commission, 2023) இதன்படி இச் சர்வஜன வாக்குரிமையானது அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையினை வழங்கினாலும், மாற்றுத்திறனாளிகள் மத்தியில் கேள்விக்குட்படுத்தப்படவேண்டியதொன்றாகவே அமைந்துள்ளது. எனவே மாற்றுத்திறனாளிகளின் அரசியல் அறிவை வளர்த்து, அவர்களையும் அரசியலில் பங்காளிகளாக மாற்றி, தமது வாக்குரிமையினை சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலும், அம்மக்கள் மத்தியில் அரசியல் ரீதியிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும், அவர்களது அரசியல் பங்குபற்றலை ஊக்கப்படுத்தும் முகமாகவும், இலங்கை அரசாங்கம் மாற்றுத்திறனாளிகளும் எமது நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் அவர்களது வாக்களிப்பு வசதிகளுக்கான சட்டதிட்டங்களை வகுத்துக் கொடுக்க வேண்டும் என்ற ரீதியிலும், இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கான வசதிகள் தொடர்பில் ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டும் இவ்வாய்வானது அமைந்துள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

தேர்தல்கள் எனும் ஊடகம் மூலமாகவே சர்வஜன வாக்குரிமை செயற்படுத்தப்படுகின்றது. இந்நிலையில் இன்று இலங்கையில் காணப்படும் விகிதாசாரத் தேர்தல் முறையின்படி, மாற்றுத்திறனாளிகள் வாக்காளர்களாகத் தகுதி பெற்றிருந்தாலும், தமக்கு பதிலாக இன்னுமொருவர் வாக்கினை அளிக்கின்ற போது அது சில சமயங்களில் செல்லுபடியற்றதாக மாறல், பெரும்பான்மையான அரசியல்வாதிகள் அவ்வாக்குகளைத் தமது கட்சி நோக்கத்துக்காக பயன்படுத்திக்கொள்ளல் என்பவற்றினால் தமக்கு மேலதிகமாகக் கிடைக்கப்பெற வேண்டிய பிரதிநிதித்துவத்தை இழக்க வேண்டியேற்படுவதுடன், மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையைச் சுதந்திரமாகச் செயற்படுத்துவதற்கான திட்டங்களின் பற்றாக்குறை, மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் தெளிவற்ற தன்மை போன்றவற்றால் அவர்களது உரிமை மறுக்கப்படுகின்றதொரு நிலைமையும் ஏற்படுகின்றது. இதன்படி இயலாமைகளோடு வாழும் வாக்காளர்களின் வாக்குகளை மட்டும் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்ற அரசியல் கட்சிகள், மாற்றுத்திறனாளிகள் தமது வாக்கினை சுதந்திரமான வகையில் வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் ஆர்வம் காட்டாமலிருப்பதால் அவர்களின் அரசியல் சுதந்திரம் என்பது பறிக்கப்படுகின்றதொரு நிலையினையே இலங்கையில் காணக்கூடியதாகவுள்ளது. எனவே இது தொடர்பாக தேசியமட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் வாத, பிரதிவாதங்கள்

இடம்பெற்று வரும் நிலையில் இலங்கையைப் பொறுத்தளவில் இது ஆராயப்படவேண்டியதொரு பிரச்சினையாகவே அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

- மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிதல்.
- மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களைக் கண்டறிதல்.
- மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பினை அதிகரிக்க எவ்வாறான விடயங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பது தொடர்பாக ஆராய்தல்.

**ஆய்வு வினாக்கள்**

- மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகள் எவை?
- மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் எவை?
- மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பினை அதிகரிக்க எவ்வாறான விடயங்கள் பின்பற்றப்பட வேண்டும்?

**இலக்கிய மீளாய்வு**

Femec et al,. (2017). Voting opportunities for persons with disabilities. Femec (2017), Voting opportunities for persons with disabilities. இவ்வாய்வானது மாற்றுத்திறனாளிகளின் அரசியல் உரிமையை பகுப்பாய்வு செய்வதாக அமைவதுடன் அரசியலில் அவர்களின் ஆர்வம் எவ்வாறுள்ளது என்பது தொடர்பாகவும் விளக்குகின்றது. இதன்படி மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமையின் அவசியம் தொடர்பில் எடுத்துரைப்பதாவும், மாற்றுத்திறனாளிகளின் வயது, பாலினம் அல்லது வசிப்பிடம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் வாக்களிக்கும் வாய்ப்புக்களை சரி செய்து மேம்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது.

De Silva, M. T. (2018). Designing an information Technology Based voting solution for Persons with visual Disabilities. இவ்வாய்வானது பார்வைக் குறைபாடுடைய வாக்காளர்களின் வாக்குரிமையினை வலுப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு வாக்குப்பதிவு முறையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Rasika Karunarathne, R.A.R. (2021). A Brief Review of Disability Rights and Welfare in Sri Lanka. இவ் ஆய்வானது இலங்கையிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதாக அமைந்துள்ளது. மேலும் சர்வதேச ரீதியாக மாற்றுத்திறனாளிகளின்

நிலை, இலங்கையில் மாற்றுத்திறனாளிகள், இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் மற்றும் நலன்புரித்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்கின்றது.

Syuib, M. 2023. Regulations on Voting Rights for Persons with Disabilities: A Comparative Study between Indonesia and Australia. இவ்வாய்வு மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிப்பதற்கான வசதிகள் குறித்து இந்தோனேஷியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளை மையமாகக் கொண்டு ஒப்பீட்டு ரீதியில் ஆய்வு செய்வதாக அமைகின்றது.

Virendrakumar (2018), Disability inclusive elections in Africa: a systematic review of published and unpublished literature. இவ்வாய்வில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான மாநாடு, அரசியல் வாழ்க்கையில் பங்கேற்பதற்கான மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமையை வலியுறுத்துகின்றது. இருப்பினும் ஆபிரிக்காவில் அவர்களால் பெரும்பாலும் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்த முடியவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வானது ஆபிரிக்காவிலுள்ள தேர்தல்களில் உள்ள ஆதாரங்களை முறையாக மதிப்பாய்வு செய்வதாக அமைந்துள்ளது. பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் மாற்றுத்திறனை மையமாகக் கொண்ட சட்டங்களை அங்கீகரித்து சமவாய்ப்புக்களை பிரகடனப்படுத்தினாலும், இச்சட்டங்களின் அமுலாக்கம் என்பது கண்டங்களின் அடிப்படையில் வேறுபடுகின்றது என்பதனை இவ் ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன்படி இவ் ஆய்வுகளில் இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வகையிலான தரவுகள் குறைந்தளவிலேயே ஆய்வு செய்யப்பட்டுள்ளன. ஆகவே இவ் ஆய்வு இடைவெளியினை பூர்த்தி செய்யும் ஒரு முயற்சியாகவே இலங்கையில் பதுளை மாவட்டத்தில் பதுளைப் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது எண்சார் தரவுப்பகுப்பாய்வு, பண்புசார் தரவுப்பகுப்பாய்வு ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தி கலப்புத் தரவுப்பகுப்பாய்வு அணுகுமுறையின் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண்சார் தரவுப்பகுப்பாய்வின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான அடிப்படைத்தகவல்கள், அவர்களது நாளாந்த செயற்பாடுகள், பதுளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை வழங்கும் அமைப்புக்கள், மாற்றுத்திறனாளிகள் அரசியலுடன் கொண்டுள்ள தொடர்பு, அவர்களது வாக்குரிமைப் பிரயோகம், மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன வரைபடங்களாகவும், அட்டவணைகளாகவும் காட்டப்பட்டுள்ளன. பண்புசார் தரவுப்பகுப்பாய்வின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்களிப்பு வசதிகள் தொடர்பில் தேர்தல் திணைக்களம் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவோர், சமூக நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள், பதுளைப் பிரதேச செயலகத்தின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பன பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

இவ்வாய்வானது பல்லின மக்கள் வாழும் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பதுளைப் பிரதேச செயலகத்தை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட பதுளைப் பிரதேச செயலகத்தின் 29 கிராம சேவகர் பிரிவுகளையும் மையப்படுத்திய வகையிலேயே மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்கான சிரமங்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எவ்வாறான வாக்களிப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்பதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தரவு சேகரிப்பு முறைகள்**

இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவும், இரண்டாம் நிலைத் தரவும் ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- முதலாம் நிலைத்தரவுகள்

இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து, கள ஆய்வு, நேர்காணல் என்பவற்றின் மூலம் ஆய்வாளரால் முதலாம் நிலை தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**தரவு சேகரிப்பு முறை தொடர்பான விபரம்**

| **தகவல் சேகரிப்பு முறை** | **தகவல் தருபவர்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| வினாக்கொத்து | மாற்றுத்திறனாளிகள் | 75 பேர் |
| | தேர்தல் திணைக்கள அதிகாரிகள் | 10 பேர் |
| கள ஆய்வு | மாற்றுத்திறனாளிகள் | 25 பேர் |
| நேர்காணல் | தேர்தல் திணைக்கள அதிகாரிகள் | 05 பேர் |
| | தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோர் | 03 பேர் |
| | சமூக நிறுவனங்கள் மற்றும் அரச சாரபற்ற நிறுவன அதிகாரிகள் | 04 பேர் |
| | கிராம உத்தியோகத்தர்கள் | 28 பேர் |
| **மொத்தம்** | | **150 பேர்** |

**ஆதாரம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (2023)**

- இரண்டாம் நிலைத்தரவுகள்

இவ்வாய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வு விடயம் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வறிக்கைகள், இதழ்கள், அறிக்கைகள், இணையம் மற்றும் கையேடுகள் என்பவற்றின் மூலமும் ஆய்வாளனால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**மாதிரி எடுப்பு முறை**

இவ் ஆய்வானது நிகழ்தகவற்ற மாதிரிகளில் ஒன்றான எளிய எழுமாற்று மாதிரியெடுப்பினை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. பதுளைப் பிரதேச செயலகத்தினை முழு ஆய்வுப்பிரதேசமாகவும் கொண்டு 29 கிராம சேவகர் பிரிவுகளை மையப்படுத்திய வகையில் சிறப்பாக பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் 150 மாதிரி நபர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**தரவுப் பகுப்பாய்வு**

மாதிரி எடுப்பின் மூலமாக நபர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, கள ஆய்வு மற்றும் நேர்காணல் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டு அந்நபர்களது தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்தலும், ஊக்குவித்தலும் : பதுளை மாவட்டத்தில் பதுளைப் பிரதேச செயலகத்தை மையப்படுத்திய வகையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் Excel மென்பொருளினூடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன்படி பண்புசார் தரவுகள் விபரண ரீதியாகவும், அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

உலக சனத்தொகையில் 16% அல்லது 1.3 பில்லியன் மக்கள் மாற்றுத்திறனாளிகளாவர். (WHO, 2023) இலங்கையில் பார்க்கின்றபோது 17 இலட்சம் பேர் மாற்றுத்திறனாளிகளாவர். (Samakalam, 2023) இதன்படி பதுளைப் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட வகையில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு எவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்ற ரீதியில் ஒட்டுமொத்தமாக 150 மாதிரி நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது,

**ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் ஒவ்வொரு வயது மட்டத்தினடிப்படையில் மாற்றுத்தினாளிகளை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. அந்தவகையில் எனது ஆய்வின் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு 18 வயது பூர்த்தியடைந்த மற்றும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களை மையமாகக் கொண்டே இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறன் வகை அடிப்படையிலான மாற்றுத்திறனாளிகளின் விபரம்**

ஆய்வுப் பிரதேசத்தில் வினாக்கொத்தின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட தகவல்களினடிப்படையில் மாற்றுத்திறனாளிகளின் மாற்றுத்திறன் வகையிடிப்படையிலான விபரத்தை கீழ்வரும் வரைபடம் காட்டுகின்றது. இதன்படி ஆய்வுப்பிரதேசத்தில் அதிகமாக இனங்காணப்பட்டவர்களாக பல்வேறு ஊனம் கொண்டவர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்நிலையில் மனநோய்க்குட்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் தகைமையின்மை காரணமாக அவர்கள் எனது ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.




கள ஆய்வு : (2023)

**பதுளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அரசியலுடன் கொண்டுள்ள தொடர்பு**

ஆய்வுப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட மாற்றுத்திறனாளிகளிடம் அரசியல் தொடர்பான விடயங்களில் உங்களது பங்குபற்றல் தேவையென நீங்கள் உணர்கிறீர்களா என்ற வினாவினை எழுப்பிய போது அவர்களால் முன்வைக்கப்பட்ட பதில்களை கீழ்வரும் வரைபடங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**மாற்றுத்திறனாளிகளின் அரசியல் ரீதியான பங்குபற்றலின் அவசியம்**

கீழ்வரும் வரைபடத்தினடிப்படையில் நோக்கும்போது அதிகளவிலான மாற்றுத்திறனாளிகள் அரசியல் ரீதியாக அவர்களது பங்குபற்றல் அவசியமென்றே உணர்கின்றனர் என்பது தெளிவாகின்றது.




கள ஆய்வு : (2023)

**அரசியல் கூட்டங்கள் மற்றும் பிரச்சாரங்களில் மாற்றுத்திறனாளிகளின் பங்குபற்றல்**

இதன்படி பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் அரசியல் கூட்டம் மற்றும் பிரச்சாரங்களில் பங்குபற்றுவதாக கூறுவதையடுத்து, அவர்களது அரசியலுடனான தொடர்பு எவ்வகையில் வலுவானதாக உள்ளது என்பதனை கீழ்வரும் வரைபடத்திற்கூடாக அறியக்கூடியதாகவுள்ளது.




**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

**மாற்றுத்திறனாளிகள் அரசியல் கட்சிகளுடன் கொண்டுள்ள தொடர்பு**

ஆய்வுப்பிரதேசத்தில் அதிகளவிலான மாற்றுத்திறனாளிகள் தொழிற்சங்கங்கள் / அரசியல் கட்சிகளுடன் தொடர்புடையவர்களாகவே காணப்படுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதனைக் கீழ்வரும் வரைபடத்திற்கூடாக அவதானிக்கலாம்.




**ஆதாரம்: கள ஆய்வு (2023)**

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பு கொண்டுள்ள அரசியல் தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான விபரம்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் எவ்வகையான தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்பது தொடர்பாக கீழ்வரும் வரைபடம் அமைகின்றது.




**ஆதாரம்: கள ஆய்வு (2023)**

இந்நிலையில் பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் இவ் அரசியல் கட்சிகள் தொடர்பான அரசியல் கூட்டங்கள் நிகழும் போது கலந்து கொள்வதாக தெரிவித்துள்ளனர். இதுமட்டுமன்றி இவ் அரசியல் கட்சிகளின் மூலமாக தமக்கான சில வாழ்வாதார உதவிகள் இன்றுமே வழங்கப்பட்டுக் கொண்டுதான் வருகின்றன என்பதும் இவர்களுடைய கருத்தாக உள்ளது. இன்னும் சிலர் தேர்தல் காலங்களின் போது இக்கட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் தமது பங்குபற்றலை உறுதி செய்து வருவதாகவும் தெரிவித்திருந்தனர்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிபுரியும் அரசியல் தலைவர்கள் தொர்பான கருத்து நிலைப்பாடு**

இதன்படி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி புரியும் அரசியல் தலைவர்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கியதாக கீழ்வரும் வரைபடம் அமைந்துள்ளது.




**ஆதாரம்: கள ஆய்வு (2023)**

இதன்படி மாற்றுத்திறனாளிகளில் ஒருசிலர் மேற்குறிப்பிட்ட அரசியல் தலைவர்களினூடாக தமக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக் கொள்கின்றனர். சிலர் குறித்த அரசியல் கட்சிகளுடன் தாம் தொடர்பினை கொண்டிருந்தாலும் அவர்களுக்கு

உதவியேதும் கிடைக்கவில்லை எனவும், இன்னும் சிலர் தாம் அரசியல் கட்சிகளுடன் தொடர்பில் இல்லாததால் அவர்களுக்கு எவ்வித உதவிகளும் கிடைக்கப்பெறுவதில்லை என்ற கருத்தையும் முன்வைத்திருந்தனர்.

**பதுளை பிரதேச செயலகத்திறகுட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமைப் பிரயோகம் தொடர்பான தகவல்கள்**

ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் வாக்குரிமை பெற்ற பிரஜைக்கு வாக்குரிமை தொடர்பான தெளிவு என்பது அவசியமான ஒன்றாக கருதப்படுகின்றது. இவ்வாக்குரிமை பற்றிய தெளிவு சிறந்த முறையில் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே அவ்வாக்குரிமையானது சரியான முறையில் பயன்படுத்தப்படும். அந்தவகையில் பதுளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமை தொடர்பான புரிதல் எவ்வகையிலமைந்துள்ளது என்பது தொடர்பாக ஆராய வேண்டிய தேவை உள்ளது. இந்நிலையில் வினாக்கொத்து மற்றும் கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வாக்குரிமைப் பிரயோகம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் மத்தியில் வாக்குரிமை அவசியம் பற்றிய புரிதல்**

வாக்குரிமை பற்றிய தெளிவு என்பது ஒரு நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜைக்கும் இருக்க வேண்டியதொரு முக்கிய அம்சமாகும். அந்தவகையில் வாக்குரிமை பற்றிய புரிதல் சரியான வகையில் அமையும் பட்சத்திலேயே வாக்குரிமை பிரயோகம் என்பது சரியான முறையில் பயன்படுத்தப்படும். இதனடிப்படையில் ஆய்வுப்பிரதேசத்திற்ட்பட்ட மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வாக்குரிமை அவசியம் பற்றிய புரிதல் குறித்த விபரங்களை பின்வரும் வரைபடம் குறித்து நிற்கின்றது. இவ்வரைபடத்தினடிப்படையில் ஆய்வு பிரதேசத்துக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் பெரும்பான்மையானவர்கள் இவ் வாக்குரிமை அவசியம் குறித்து அறிந்துள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.




**ஆதாரம்: கள ஆய்வு (2023)**

**மாற்றுத்தினாளிகளுக்கான வாக்குரிமை குறித்த அறிவூட்டல்கள் தொடர்பான விபரம்**

மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை குறித்த அறிவூட்டல்கள் தொடர்பாக ஆராய்கின்ற போது பொதுவாக இலங்கையை பொறுத்தளவில் வாக்காளர்களுக்கான வாக்குரிமை தொடர்பில் பல்வேறுபட்ட விழிப்புணர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் மூலமாக இவ் வாக்குரிமை குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. இருப்பினும் இவ்வாறான அறிவூட்டல்கள் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் எந்தளவுக்கு கொண்டு செல்லப்படுகின்றது என்பதனை பகுப்பாய்வு செய்ய வேண்டியதாகவுள்ளது. இதன்படி ஆய்வுப்பிரதேசத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை குறித்த அறிவூட்டல்கள் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் அதிகளவில் காணப்படுவதனையும் இன்னும் சிலரது கருத்துப்படி தமக்கான வாக்குரிமை குறித்த அறிவூட்டல்கள் போதுமாக இல்லை என்பதும் தெரியவந்தது. இதனைக் கீழ்வரும் வரைபடத்தினூடாக அவதானிக்கக்கூடியதாயுள்ளது.




**வரைபடம் 8**

**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

**தேர்தல் வாக்களிப்பில் பங்குபற்றியுள்ளோர் தொடர்பான விபரம்**

ஆய்வுப்பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளிடம் தேர்தல் வாக்களிப்பில் பங்குபற்றியுள்ளீர்களா என்ற வினாவினை எழுப்பிய போது, தேர்தல் வாக்களிப்பில் பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் தாம் வாக்களிப்பில் பங்குபற்றியுள்ளதாகவும் ஏனையோர் வாக்களிப்பில் பங்குபற்றுவதற்கான வசதியின்மையினால் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். இதனையே கீழ்வரும் வரைபடம் சுட்டிக்காட்டுகின்றது.




**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

மேலும் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் இலகுவான தேர்தலாக அடையாளப்படுத்தப்பட்ட தேர்தலாக ஜனாதிபதி தேர்தலும், கடினமான தேர்தல் என்று அடையாளப்படுத்தப்பட்ட தேர்தலாக உள்ளூராட்சி மன்ற தேர்தலும் இனங்காணப்பட்டது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அவர்களின் புரிதல் எனும்போது அதில் ஒருவரை மாத்திரம் தெரிவு செய்வதனால் இத்தேர்தல் இலகுவாகக் காணப்படுகின்றது என கூறியதுடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒரு கட்சியை தெரிவு செய்துவிட்டு, ஏனைய மூன்று விருப்பு வாக்குகளை வழங்க வேண்டியிருப்பதனால் அதனை சரியான வகையில் தெரிவு செய்து கொள்வது என்பது சிரமமாக உள்ளது என தெரிவித்தனர்.

## பதுளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள்

கீழ்வரும் வரைபடத்தை நோக்கும்போது, வாக்களிப்பு நிலையங்களில் என்ற கருத்தே பெரும்பான்மையான மக்களால் முன்வைக்கப்பட்டுள்ளதையடுத்து, இம்மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிப்புச் சுதந்திரம் என்பது என்பது சரியான முறையில் அமையவில்லை என்பதும் தெரியவந்தது. இதனை கீழ்வரும் வரைபடம் விளக்கி நிற்கின்றது.




**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

## வாக்களிப்பு நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சிரமங்கள்

இலங்கையைப் பொறுத்தவரையில் தேர்தல் காலங்களின் போது மாற்றுத்திறனாளிகள் பல்வேறு வகையான சிரமங்களை எதிர்கொண்டு வருவதனை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் தேர்தல் காலங்களின் போது எதிர்கொள்கின்ற சிரமங்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக கீழ்வரும் வரைபடம் அமைந்துள்ளது.

இவ்வரைபடத்தின் படி ஏனைய காரணங்கள் என மாற்றுத்திறனாளிகள் முன்வைத்தவையாக பார்வைக் குறைபாடுடையோர் கூறுகையில் ஆரம்பத்தில் சட்டரீதியாக கிராம உத்தியோகத்தரினால் விண்ணப்பம் தரப்பட்டு மருத்துவ அறிக்கையினை வாக்களிப்பு

நிலையத்தில் ஒப்படைக்கும் பட்சத்தில் எமக்கு நம்பிக்கையான ஒருவருடன் (வாக்களிக்கத் தகுதியுடையவர்) வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று எமது வாக்குப்பதிவினை மேற்கொள்ளக் கூடியதாகவிருந்தது எனவும், ஆனால் இன்று வாக்களிப்பு நிலையத்திலுள்ள மேற்பார்வையாளரால் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுவதால் எமது வாக்குரிமையினை இன்னுமொருவருக்கு தெரியப்படுத்துவது போன்றதொரு எண்ணம் தோன்றுகின்றது எனவும் குறிப்பிட்டதுடன், இது தொடர்பில் வாக்களிப்பு நிலையத்தில் உள்ளவருடன் முரண்பட வேண்டியேற்படுகின்றது என்றனர்.

இதுவே செயற்கையான முறையில் மாற்றுத்திறனுக்குட்பட்டோர் சிலரின் கருத்துப்படி ஆரம்பத்தில் குறைபாடற்றவராக இருந்து தற்போது குறைபாடுடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும் போது செயற்கையாக எமக்கு ஏற்பட்ட மாற்றுத்திறன் தொடர்பில் வினவும் போது உள ரீதியான வகையில் பாதிப்படைகிறோம் எனவும் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.




**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

**வாக்களிப்பு நிலையத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய வசதிகள்**

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்களிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்ற கருத்து ஊசலாடிக்கொண்டிருக்கின்ற நிலையில் நடைமுறையில் அதற்கான சாத்தியப்பாடுகள் என்பது குறைவாகவே உள்ளது. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்திற்குட்பட்ட வகையிலான மாற்றுத்திறனாளிகள் எவ்வகையான வசதிகள்

ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென வினவிய போது அவர்களால் முன்வைக்கப்பட்ட தெரிவுகளை உள்ளடக்கியதாக பின்வரும் வரைபடம் அமைந்துள்ளது




**வரைபடம்**

**ஆதாரம் : கள ஆய்வு (2023)**

## மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்களிப்பு வசதிகள் தொடர்பில் தேர்தல் திணைக்களம் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோரின் பெறப்பட்ட தகவல்கள்

ஆய்வுப்பிரதேசத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பில் தேர்தல் திணைக்கள அதிகாரிகளிடம் சில வினாக்கள் எழுப்பபட்டன. இதன்படி முதலாவதாக மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது வழங்கப்படும் சுற்று நிருப ரீதியான ஏற்பாடுகள் தொடர்பில் வினவிய போது மாற்றுத்திறனாளிகள் அனுமதி பெற்று தமது வாகனங்களில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தருவதற்கான வசதி, வாக்களிப்பதற்கு உதவியாளராக தனக்கு நம்பிக்கையான ஒருவரை அழைத்து வருவதற்கான வசதி, வாக்களிப்பதற்கு உதவியாக சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரை அழைத்துக் கொள்வதற்கான வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கு வரிசைகளில் முன்னுரிமை, 2011ம் ஆண்டு 28ஆம் இலக்க தேர்தல் (விசேட ஏற்பாடுகள் சட்டம்) விசேட தேவை உடையோர் வாக்குச்சீட்டுக்கள் குறியீடு செய்தல், 2002 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் (திருத்தப்பட்ட) விசிட தேவையுடையோருக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குதல் ஏற்பாடுகளை காணப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அடுத்தபடியாக பதுளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் அனைவரும் வாக்களிக்கின்றனரா? என்ற ரீதியில் வினா எழுப்பப்பட்ட போது பெரும்பாலான அதிகாரிகளினால் இல்லை என்ற கருத்தே அதிகமான அளவில் முன்வைக்கப்பட்டது. மேலும் இல்லை என்பதற்கான காரணம் என்ன என வினவப்பட்ட போது மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல்கள் தொடர்பான அக்கறையின்மை, விழிப்புணர்வின்மை, ஆர்வமின்மை, வாக்களிப்பு தொடர்பில் போதிய தெளிவின்மை, வாக்களிப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பற்றிய தெளிவின்மை, வாக்களிப்பதற்கு போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை, வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கான சிரமநிலை, சமூகத்திலிருந்து புறந்தள்ளப்பட்டவர்களாக பார்க்கப்படுகின்றமை போன்ற காரணங்களை முன்வைத்திருந்தனர்.

அடுத்து மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது எதிர்நோக்கும் சவால்கள் என்ற ரீதியில் வினவப்பட்ட போது வாக்களிப்பதற்கான அணுகும் வசதி குறைவாக உள்ளதாகவும், பார்வை குறைபாடு உடையவர்களுக்கான பிரெய்லி (குற்றெழுத்து) வாக்குச்சீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படாமையினால் தமக்கான வாக்களிப்பின் உண்மைத்தன்மை தொடர்பில் அறிய முடியாமை, வாக்களிப்பு நிலையத்தில் இருக்கும் தேர்தல் அதிகாரிகளுக்கு பெரும்பாலும் சைகை மொழி தெரியாத அலுவலர்களாகக் காணப்படுவதனால் சைகை மொழி அவசியமான மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பு நிலையத்தில் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று உதவித் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டிருந்தார். தேர்தல் கடமைகளில் ஈடுபட்டோரின் கருத்துப்படி, வாக்குளிப்பு நிலையத்திற்கு உட்பிரவேசிக்கும் போதும் வாக்குச்சீட்டு சரியான முறையில் அடையாளம் இடுவதிலும் சவால்களை

எதிர்கொள்வதாக குறிப்பிட்டனர். மேலும் சிலர் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பு தொடர்பில் சரியான புரிதலின்மை கொண்டவர்களாக காணப்படுவதனால் தெரிவுகளை மேற்கொள்வதில் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

அடுத்து மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பின் போது எவ்வகையான தேர்தலில் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர் என்ற வினாவிற்கு ஒரு சிலர் ஜனாதிபதி தேர்தல் எனவும், காரணம் அதில் தெரிவுகளை மேற்கொள்வது இலகுவாக உள்ளது எனவும் வேறு சில அதிகாரிகள் விசேடமாக ஆர்வம் செலுத்துவதை காண முடிவதில்லை எனவும் கூறியிருந்தனர்.

மேலும் மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பை ஊக்குவிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் வினவிய போது ஒரு சில அதிகாரிகள் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் மாற்றுத்திறனாளிகள் அணுகுவதற்கான வசதிகளை அதிகரிக்க வேண்டுமெனவும், மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் வாக்களிப்பு நிலையம் நடைமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல் அலுவலர்களுக்கான சைகை மொழி பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் பிரெய்லி மொழி வாக்குச் சீட்டு அறிமுகம் செய்யப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தனர். மேலும் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திற்கும் விசேட தேவை உடையவர்களுக்கான உட்பிரவேசித்தல், வாக்களித்தல் மற்றும் வெளியேறுதல் வசதிகளை உறுதி செய்ய வேண்டும் என கூறியதுடன், வாக்களிப்பு தொடர்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், பார்வையற்றவர்களுக்கான ப்ரெயில் (குற்றெழுத்து) முறையிலமைந்த வாக்களிக்கத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் வேண்டுமெனவும் கூறியிருந்தனர்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக நிறுவனங்கள் / அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்**

மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை வசதிகள் தொடர்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் வினவிய வினாக்களுக்கு அமைய எடுக்கப்பட்ட தகவல்களை கீழ் வருமாறு காணலாம். அந்தவகையில் முதலாவதாக பதுளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வகையான சமூக நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் கடமையாற்றுகின்றன என்ற ரீதியில் வினவிய போது சமூக நிறுவனங்கள் / அரச சார்பற்ற நிறுவனங்கள் இரண்டில் பணிபுரிபவர்களும் அடையாளப்படுத்திய அமைப்புக்களாக உவா சக்தி நிறுவனம் சேவ் த சில்ட்ரன் (Save the Children), பியூச்சர் இன் அவர் ஹேண்ட்ஸ் (Future in our Hands), டெவலப்மெண்ட் ∴பண்ட; (Development Fund), சர்வோதய, உவா மாகாண சமூக சேவைகள் அமைச்சு மற்றும் திணைக்களம், சன்ரைஸ் டெவலப்மெண்ட் பவுண்டேஷன் (Sunrise Development Foundation), பதுளை பிரதேச சபை சமுர்த்தி பிரிவு, மாவட்ட செயலக

சமூக சேவைகள் பிரிவு, பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக நிறுவனங்கள் அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றும் சேவைகள் தொடர்பாக வினவிய போது சமூக சேவைகள் திணைக்கள உறுப்பினர் குறிப்பிடுகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேவைக்கேற்ற வகையிலான உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதாகவும், குடும்ப வறுமைக்கேற்ற விதத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கி வைப்பதாகவும், மாற்றுத்திறனாளிகளின் தொழிற்திறனை வளர்ப்பதற்கான தொழிற்பயிற்சிகளை வழங்குவதாகவும், மாற்றுத்திறனாளிகளது திறனை வெளிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதாகவும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களிலுள்ளோரின் கருத்துப்படி மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் இடங்களை அடையாளம் கண்டு அரசாங்கத்துடன் கலந்துரையாடி அவர்களுக்கான பாதை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், மாற்றுத்திறனாளிகள் தேர்தலில் வாக்களிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல். அதிலும் குறிப்பாக கிராம அலுவலகம் சென்று வாக்காளர் இடாப்பில் அவர்களின் (மாற்றுத்திறனாளிகளின்) பெயரை பதிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தல், தேர்தல் தினத்தன்று வாக்களிக்க செல்கையில் அதற்கான வசதிகளை குறித்த பிரதேசத்துக்கான அரசியல் பிரமுகர்களிடமிருந்து எவ்வாறு கேட்டு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குதல், தேர்தல் காலங்களில் போது மாற்றுத்திறனாளிகளுக்கான இயக்கத்துடன் தொடர்புடைய தலைவர் செயலாளர்களுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல் தெளிவுபடுத்தல் செயல்முறை மற்றும் வாக்களிப்பு முறை தொடர்பான தெளிவூட்டல்களை வழங்குதல் போன்ற சேவைகளை செய்து வருவதாக கூறினர்.

மேலும் அச்செய்திகள் மாற்றுத்திறனாளிகளின் சமூக, அரசியல் செயற்பாட்டுக்கு எவ்வகையில் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பது தொடர்பில் சமூக நிறுவனங்கள் / அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வினவிய போது சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான அந்தஸ்தினை வலுப்படுத்தும் வகையில் இவர்களது சேவைகள் அமைந்துள்ளதெனவும், ஒரு குறித்த சமூகத்துக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாற்றுத்திறனாளிகளையும் இணைத்து செயல்படுவதானது அச்சமூக செயல்பாட்டில் அவர்களின் ஊக்குவிப்பினை அதிகரிப்பதாக அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். அதிலும் குறிப்பாக அரச சார்பற்ற நிறுவன உறுப்பினர்களின் கருத்துப்படி கிராம அபிவிருத்தி திட்ட யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடுகையில் அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிவதாக கூறியிருந்தனர்.

மேலும் மாற்றுத்திறனாளிகளின் அரசியல் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு சமூக நிறுவனங்கள் அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் வினவிய போது அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துப்படி, ஒவ்வொரு விசேட

வேலைத்திட்டத்திலும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளை பங்குபற்ற வைத்தல், குறிப்பாக கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு கற்பித்தல், இலங்கையில் இடம்பெறும் தகவல் அறியும் உரிமை, புதிய அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், அது தொடர்பான கருத்தரங்குகளை நடத்துதல் போன்ற ஏற்பாடுகளை குறிப்பிடலாம். இதுமட்டுமன்றி உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை இலக்கு வைத்து இயங்கும் அங்கவீனமுற்றோருக்கான அமைப்பான வெல்லஸ்ஸ சன்வர்த்தன அமைப்பில் உள்ளடங்கியுள்ள அங்கத்தவர்களை எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு பயிற்சிவிக்கின்ற செயலமர்வுகளை நடத்துதல் கூட்டங்களை ஏற்பாடு செய்தல் போன்ற செயற்பாடுகளை ஊவாசக்தி நிறுவனம் என்ற அமைப்பானது செயல்படுத்தி வருவதாகவும் கூறியிருந்தனர்.

இதுமட்டுமின்றி சில அரசு சார்பற்ற நிறுவனங்கள் அவர்களது பங்குபற்றலை புறமொதுக்காது அவர்களையும் தங்களின் ஒருவராக நினைத்து தமது நிறுவனங்களில் ஒரு அங்கத்தவராக இணைந்து செயல்பட்டு வருவதனையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. அதிலும் குறிப்பாக பதுளை ஊவாசக்தி நிறுவனத்தை பொருத்தவரையில் YCL என்றதொரு திட்டத்தில் மாற்றுத்திறனாளி ஒருவரையும் இணைத்துக் கொண்டே அவர்களது பணிகளை முன்னெடுத்து செல்கின்றனர். எனவே மாற்றுத்திறனாளிகளுக்கு எவ்வாறு வாக்களிப்பது, வாக்களிப்பதற்கான ஆர்வத்தை எவ்வாறு அதிகரிப்பது, ஒரு அரசியல் பிரமுகரை தெரிவு செய்வதில் அதற்கான சரியான முறையை எவ்வாறு பின்பற்றுவது என்பது தொடர்பில் தெளிவூட்டுவதாகவும் அமையும் எனவும் தெரிவித்தனர்.

### மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்களிப்பு வசதிகள் தொடர்பில் கிராம அலுவலர்களின் கருத்து நிலைப்பாடு

மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை வசதிகள் தொடர்பில் பதுளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட கிராம சேவகர்களிடம் வினவிய வினாக்களுக்கு அமைய எடுக்கப்பட்ட தகவல்களை கீழ்வருமாறு காணலாம். இதனடிப்படையில் முதலாவதாக மாற்றுத்திறனாளிகளுக்கு நீங்கள் எவ்வாறான சேவைகளை வழங்குகின்றீர்கள் என வினவிய போது குறித்த மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக வழங்கப்படும் உபகரணங்களை குறித்த பிரதேசத்திலுள்ள மாற்றுத்திறனாளிகளின் தேவைக்கேற்ற விதத்தில் பெற்றுக்கொடுத்தல், குறைந்த வருமானம் பெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான அங்கவீனர் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல், குறித்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளின் திறனை வளர்ப்பதற்கான தொழிற்பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்குதல், மாற்றுத்திறனாளிகளின் திறனை

வெளிப்படுத்தும் வகையிலாக விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற சேவைகளை வழங்குவதாக குறிப்பிட்டனர்.

அடுத்து மாற்றுத்தினாளிகள் அனைவராலும் இச் சேவைகள் பெறப்படுகின்றதா என வினவிய போது இல்லை என்றே கூறியிருந்தனர். காரணம் பெரும்பாலான மாற்றுத்திறனாளிகள் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அறிந்திராமையோகும் என்கின்றனர்.

மேலும் தேர்தல் காலங்களின் போது எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கினர் என்று வினவிய போது தேர்தல் தொடர்பான தெளிவூட்டல் மாற்றுத்திறனாளிகளை சரியான முறையில் சென்றடையாததால் அவர்களால் சரியான முறையில் தெரிவுகளை மேற்கொள்ள முடியாமை, தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகளின் போலியான வாக்குறுதிகளை நம்பி தெரிவுகளை சுயமான முறையில் வழங்க முடியாமை, தேர்தல் காலங்களில் போதைப்பொருட்களை வழங்கி வாக்குகளை அளித்த பின்னர் கைவிடப்பட்ட நிலைக்கு உள்ளாக்கப்படுதல், தேர்தல் காலங்களின் போது சமூகத்தின் ஓரப்பார்வைக்குட்படுத்தப்படல், போக்குவரத்து ரீதியான பிரச்சினைகள், உதவியாளர்களின்றி சுயமாக வாக்களிப்பு நிலையங்களை அடைந்து கொள்ள முடியாமை போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக தெரிவித்திருந்தனர்.

அடுத்து தேர்தல் காலங்களின் போது மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கு எவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என நீங்கள் நினைக்கின்றீர்கள் என வினவிய போது மாற்றுத்திறனாளிகளுக்கான தனியானதொரு வாக்குச் சாவடி நிலையத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும், தேர்தல் காலங்களின் போது மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பு நிலையங்களை அணுகக்கூடிய வகையிலான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் கூறியிருந்தனர்.

## முடிவுரை

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களை தொகுத்து பார்க்கின்றபோது இதில் கண்டுகொள்ளப்பட்ட விடயங்களாக அவர்களுக்கான தேர்தல் தொடர்பான தெளிவூட்டல்கள் சரியான முறையில் அமையாமையும் அவர்களுக்கான வாக்குரிமையில் பாதிப்புச் செலுத்துகின்றது. மேலும் மாற்றுத்திறனாளிகள் தமது வாக்குரிமையினை சுதந்திரமான வகையில் பிரயோகிக்க முடியாமைக்கான மற்றுமொரு முக்கிய காரணம் தேர்தல் காலங்களின் போது அவர்களுக்கான உரிய வசதிகள் வாக்கெடுப்பு நிலையங்களில் அமைத்துக் கொடுக்கப்படாமையுமாகும்.

இதன்படி முதலாவதாக இயக்கக்கோளாறுடையவர்களுக்கு சக்கர நாற்காலிகளில் நடமாடுகின்ற அல்லது தடையின்றி செல்வதற்குரிய வசதிகளின்மை, சாய்வுதளங்களின்மை, வாக்களிப்பு நிலையத்தை அணுகக்கூடிய வகையில் சரியான கட்டிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை போன்றவை அவர்களின் வாக்களிக்கும் சுதந்திரம் மறுக்கப்படுவதற்கு ஒரு

முக்கியமான காரணம் எனலாம். இந்நிலையில் பார்வை இழந்த மாற்றுத்திறனாளிகள் வாக்காளர்களாகத் தகுதி பெற்றிருந்தாலும், அவர்கள் இன்னுமொருவரின் உதவியின்றி சுதந்திரமாக வாக்களிக்கும் வகையில் குற்றெழுத்து முறையான பிரெய்லி வாக்குச் சீட்டுக்களில் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்யப்படாமல் இருப்பதால் அவர்களுடைய வாக்குரிமையும் மறுக்கப்படுகின்றது. மேலும் செவிப்புலன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு அவசியமான சைகை மொழி மூலமான தொடர்பாடல் வசதிகள் வாக்களிப்பு நிலையங்களில் செய்யப்படாமல் இருப்பதனால், அவர்களுடைய வாக்களிக்கும் சுதந்திரமும் மறுக்கப்பட்டுள்ளது. காரணம் சைகை மொழி தொடர்பில் தேர்தல் அலுவலர்களுக்கான தெளிவு என்பது குறைவான மட்டத்தில் காணப்படுவதனாலேயேயாகும்.

மனவளர்ச்சி குறைபாடுடையோர் மற்றும் பல்வேறு ஊனம் போன்ற உதவியாளர்களற்ற மாற்றுத்திறனாளிகளை குறித்த கட்சி தேவையின் நிமித்தம் வாக்களிப்பு நிலையத்துக்கு அழைத்து வந்து வாக்கை பெற்றுக் கொண்ட பின்னர் அவர்கள் கைவிடப்பட்டு செல்லுகின்றதொரு போக்கும் காணப்படுகின்றது. மேலும் சமூகத்தில் ஓரப்பார்வைக்கு உட்படுவதால் அவர்களுக்கான வாக்குச்சீட்டு அனுப்பப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்கள் அவர்களை பெரும்பாலும் வாக்களிப்பு நிலையங்களுக்கு அழைத்து வருவதில்லை.

அத்துடன் வலிப்பு மற்றும் போலியோ போன்றவற்றால் பாதிப்புக்குட்பட்டவர்கள் சமூகத்துக்கு முகம் கொடுப்பதற்கு மனமின்றி வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தராமல் இருக்கவும் செய்கின்றனர். மேலும் தேர்தல் காலங்களின் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும், வாக்களிப்பு நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிகள் தடையின்றி நடமாட்டத்திற்கு ஏற்ற வசதிகள் செய்யப்படாததனாலும், சமூகத்தில் ஓரப்பார்வைக்கு உட்படுத்தப்படுதல் போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதனாலும் அவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு வர மறுக்கின்றனர். இதுமட்டுமன்றி செயற்கையான முறையில் மாற்றுத்திறனுக்குட்பட்டோரும் தமது நிலை தொடர்பில் பிறர் கேள்வியெழுப்புவர் என எண்ணி வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தருவதில்லை. இந்நிலையில் சமூக நிறுவனங்களால் மட்டுமே கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு தமது நாளாந்த செயற்பாடுகளை செய்வதே சிரமமாக உள்ள நிலையில் வாக்களிப்பு நிலையங்கள் மிக தொலைவில் அமைந்திருக்கும் பட்சத்தில் மாற்றுத்திறனாளிகள் சிலர் அதற்கான போக்குவரத்து செலவினை கருத்திற் கொண்டு வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்க வருகை தருவதில்லை.

இதன்படி மேற்கத்தேய நாடுகளில் இம்மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை வசதிகள் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கை போன்ற மூன்றாம் மண்டல நாடுகளில் அவர்களுகான வாக்களிப்பு வசதிகளை செய்து கொடுப்பதானது கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியதொரு விடயமாகவேயுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் மாற்றுத்திறனாளிகள் தமது வாக்குரிமையினை பயன்படுத்துவதில் அகக்காரணிகள் மட்டுமன்றி புறக்காரணிகளும் செல்வாக்கு செலுத்துவதனை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே இதற்கான சில பரிந்துரைகளாக பின்வருவன அமைகின்றன.

- ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்குற்பட்ட கிராம உத்தியோகத்தர்களும் மாற்றுத்திறனாளிகளை வாக்களிக்கச் செய்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதுடன், வாக்காளர் இடாப்பில் தனது பெயரை மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அனைவரும் கட்டாயமாக பதிவு செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கான உளவளத்துணை பயிற்சிகளை வழங்க வேண்டும்.
- தேர்தல் காலங்களின் போது வாக்களிப்பு நிலையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகக்கூடியதாக உள்ளதா என்பதனை ஒவ்வொரு கிராமசேவகர்களும் அது தொடர்பாக ஆராய்ந்து குறித்த தேர்தல் தொகுதிக்குட்பட்ட தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.
- செவிப்புலன் பாதிக்கப்பட்ட மற்றும் பேச்சுத்திறன் குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு அவசியமான சைகை மொழி மூலமான தொடர்பாடல் வசதிகள் தொடர்பில் இலங்கை செவிப்புலன் வலுவற்றோர் மத்திய சம்மேலனத்தின் மூலமாக ஒவ்வொரு தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தேர்தல் அலுவலர்களுக்கான சைகை மொழி தொடர்பான அறிவுறுத்தல்களை கொண்ட அகராதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான சரியான பயிற்சிகள் அவர்களால் எடுத்துக்கொள்ளப்படுகின்றதா என்பது தொர்பில் ஆராயப்பட வேண்டும்.
- பார்வையிழந்தோரில் பிரெய்லி (குற்றெழுத்து) பற்றிய தெளிவற்றவர்களுக்கு ஒலிப்பதிவு அடிப்படையிலான தகவல் தொடர்பு வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும்.
- வாக்களிப்பு நிலையங்களில் உயரம் குறைந்த மாற்றுத்திறனாளிகளினாலும் யாருடைய உதவியுமின்றி தமது வாக்கினை சுதந்திரமான முறையில் வழங்கப்படுவதற்கேற்ற வகையில் வாக்குப்பெட்டிகளில் உயரம் அமைதல் வேண்டும்.
- தேர்தல் காலங்களில் இயக்கக்கோளாறு உடையவர்கள், குறித்த அரசியல் கட்சியினுடைய ஆதரவாளர்களால் கடத்தப்பட்டு வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, குறித்த வேட்பாளர்களுக்கான வாக்களிக்கும்படி கேட்கப்படுவதனை தடுப்பதற்கு, அவ்வாறான மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டலுக்கிணங்க போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
- நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ, உடல்ரீதியாக வாக்களிப்பு நிலையங்களை அடைய சிரமப்படுவோருக்கு, அவர்களது உறவினர்கள் மூலமாகவோ அல்லது வேறு வழிமுறைகளினூடாகவோ அஞ்சல் மூலமான முன்கூட்டிய வாக்களிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடைமுறைகள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

- மாற்றுத்திறனாளிகளுக்கென வாக்குச்சீட்டினை வேறு நிறத்தில் அச்சிடுவது சிறந்ததாக அமையும். இதனால் இம் மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குச்சீட்டினை தவறாக பயன்படுத்த முடியாது.
- பொருளாதார ரீதியான பின்னடைவின் காரணமாக வாக்களிக்க வருகை தர மறுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கைத்தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- தேர்தல் காலங்களின் போது இலங்கை வாழ் பெற்றோர்கள் தமது மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகளை வீட்டிற்குள் அடைத்து வைப்பதன் மூலம் அவர்களது வாக்குரிமையினை சுதந்திரமான வகையில் பிரயோகிப்பதற்கு அனுமதிப்பதில்லை. எனவே மாற்றுத்திறனாளிகளின் அரசியல் பங்குபற்றுதல் தொடர்பில் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக அவர்களது அரசியல் பங்குபற்றலை அதிகரிக்கலாம்.
- மாற்றுத்திறனாளிகளுக்கென தனியானதொரு வாக்கெடுப்புப்பிரிவினை அமைத்துக் கொடுத்தல்.

எனவே மாற்றுத்திறனாளிகள் தமது வாக்குரிமையினை பயன்படுத்துவதில் அகக்காரணிகள் மட்டுமன்றி புறக்காரணிகளும் செல்வாக்கு செலுத்துவதனை எம்மால் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதன்படி மேற்கத்தேய நாடுகளில் இம்மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமை வசதிகள் சிறந்த முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை இலங்கையில் அவர்களுக்கான வாக்களிப்பு வசதிகளை செய்து கொடுப்பதானது கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியதொரு விடயமாகவேயுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை சரியான வகையில் இலங்கை அரசாங்கமும், ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் நடைமுறைப்படுத்துவதுடன், மாற்றுத்திறனாளிகளின் வாக்களிப்பு விடயத்தில் அக்கறை செலுத்தும் பட்சத்தில் குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பான விடயங்களை தீர்த்துக் கொள்ள முடிவதுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்குரிமையினை ஊக்குவிக்கக்கூடியதாகவும் இருக்கும்.

**உசாத்துணைகள்**

இலங்கை தேர்தல் ஆணைக்குழு. (2023). *சர்வசன வாக்குரிமையும் தேர்தல்களும்.* From. Election Commissiom (elections.gov.lk)

சமகளம். (2023, நவம்பர் 08). *இலங்கையில் 17 இலட்சம் பேர் மாற்றுத்திறனாளிகள்.* சமகளம். Retrieved Date (2023, டிசம்பர் 27). From. https://www.samakalam.com/%E0%AE%87%E0%AE%B2%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%B2%E0%AF%8D-17-

%E0%AE%87%E0%AE%B2%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AA%E0%AF%87%E0%AE%B0%E0%AF%8D/

Akinson et al., (2017). *Disability Rights and Election Observation: Incrasing Access to the Political Process*. Nordic journel of Human Rights. 35(4), 375–391. https://doi.org/10.1080/18918131.2017.1400348.

Femec et al., (2017). *Voting opportunities for persons with disabilities.* Vol 53, 1-14. https://hrcak.srce.hr/file/285804.

Rasika Karunarathne, R. A. R. (2021). *A Brief Review of Disability Rights and Welfare in Sri Lanka.* Sri Lanka Journal of Social Development, 1(7) 1-7. From. https://nisd.ac.lk/images/Downloads/sljsd/sljsd2021-2/SLJSD2021-articles.pdf.

Silva, M. T., (2018). *Designing an information Technology Based solution for Persons with visual Disabilities.* University of Colombo *voting* School of Computing, From https://dl.ucsc.cmb.ac.lk/jspui/bitstream/123456789/4213/1/2014IS012.pdf.

Syuib, M. 2023. *Regulations on Voting Rights for Persons with Disabilities: A Comparative Study between Indonesia and Australia*. International Journal of Social Science and Human Research, 6(11) (p.6969-6974). From. http://dx.doi.org/10.47191/ijsshr/v6-i11-55

Virendrakumar et al. (2018). *Disability inclusive elections in Africa: a systematic review of published and unpublished literature.* Taylor & Francis Online. From https://www.researchgate.net/publication/323341225_Disability_inclusive_elections_in_Africa_a_systematic_review_of_published_and_unpublished_literature

WHO. (2023, May 4). Asthma. From. https://www.who.int/news-room/fact-sheets/detail/asthma

# தாலிபான்களின் மீளெழுச்சியும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள் - இஸ்லாமிய நோக்கில் பெண்களின் உரிமைகள் ஓர் ஆய்வு

Ms. S. F. Ayman Sihara
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
aymansihara05@gmail.com

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
gunaretnamv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**
தற்கால உலகில் பெண்களின் உரிமைகள் என்ற எண்ணக்கரு முக்கியத்துவம் பெறுகின்றது. உலகளாவியரீதியில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்வேறு ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவை பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமைகின்றது. அது மட்டுமல்லாமல் தற்கால உலகில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் ஆகியன அதிகம் இடம் பெற்றுக்கொண்டு வருகின்றன. சமயங்களில் கூட பெண்களுக்கான உரிமைகள் என்பது வலியுறுத்தப்பட்டு இருக்கின்றது. அந்தவகையில் இஸ்லாமிய மதத்தில் பெண்களுக்கான உரிமைகள் என்பது குறிப்பிடப்பட்டு இருக்கின்றது.
இஸ்லாம் மதமானது பெண்களைக் கண்ணியமாக மதிக்கின்றது. பெண்களுக்கான அனைத்து வகையான உரிமைகளையும் இஸ்லாமிய மதம் வழங்குகின்றது. ஆப்கானிஸ்தான் நாட்டை ஆட்சி செய்யும் தாலிபான்கள் மூலமாக அங்கு பெண்களினுடைய உரிமைகள் என்பது மீறப்பட்டு வருகின்றது. ஆப்கானிஸ்தானில் பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும், பாகுபாடுகளும் அதிகம் இடம் பெறுகின்றன. தாலிபான்கள் இஸ்லாமிய மதத்தினை பின்பற்றுவதனால் இஸ்லாமிய சட்ட முறையை ஆப்கானிஸ்தானில் அரசியலமைப்பாகக் காணப்படுகின்றது.
அந்தவகையில் இவ் ஆய்வானது ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சியின் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் மற்றும் உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ் ஆய்வு காணப்படுகின்றது. இவ் ஆய்வின் நோக்கமாக தாலிபான்கள் ஆட்சி முறையினால் ஆப்கானிஸ்தானில் ஏற்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் உரிமை மீறல்கள் எவை எனக் கண்டறிந்து, அதனை இஸ்லாமியப் பெண்கள் உரிமை நோக்கில் தாலிபான்களின் பின்பற்றும் சட்டமுறை தொடர்பாக பகுப்பாய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாக காணப்படுகின்றது. இவ் ஆய்வானது பண்புரீதியிலான ஓர் ஆய்வாகும். இதற்காக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் ஆட்சியால் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள், உரிமைமீறல்கள் இடம்பெறுவது வெளிப்படையான உண்மையாகவும், மற்றும் இவர்களின் சில சட்டமுறைகள் இஸ்லாமிய சட்டமுறைக்கு முரணானதாக காணப்படுகின்றது. இந்த ஆய்வில் ஆப்கானிஸ்தானில் நல்லாட்சி நிலவுவதற்கு சில பரிந்துரைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *ஆப்கானிஸ்தான், இஸ்லாம், தாலிபான், பெண்கள் உரிமைகள், வன்முறைகள்*

**ஆய்வு அறிமுகம்**
இஸ்லாம் பெண்கள் பற்றி நோக்கும் விதமும் பெண்களுக்கு வழங்கும் உரிமைகளும் ஆண்களுக்குச் சமமானதாக காணப்படுகின்றது. இஸ்லாம் சமயமானது பாலின சமத்துவத்தினை வலியுறுத்தும் மார்க்கமாக காணப்படுகின்றது. ஆண்களைப் போலவே பெண்களும் கண்ணியத்துக்குரியவர்களாக நோக்குகின்றது. ஆனால் இஸ்லாமிய சட்டக் கொள்கைகளினை சில முஸ்லிம் சமூகம் தவறாகப் புரிந்து கொண்டுள்ளது. அந்த வகையில் ஆப்கானிஸ்தானை கைப்பற்றி ஆட்சி அமைத்து இருக்கும் இஸ்லாமிய மதத்தை பின்பற்றும் தாலிபான்கள் இஸ்லாமிய தீவிரவாத போக்கினை கடைப்பிடிக்கின்றனர். அந்தவகையில் தாலிபான்களின் மீளெழுச்சியினால் ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

பெண்களுக்கும்,சிறுமிகளுக்கும் எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் என்பன இடம்பெற்று வருகின்றன. இவர்கள் இஸ்லாமிய தீவிரவாத போக்கினை பின்பற்றுவதினால் ஆப்கானிஸ்தானிய பெண்களும், சிறுமிகளும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் வண்ணமாகவே காணப்படுகின்றனர். இஸ்லாமிய சட்டமானது முழு மனித வாழ்க்கைக்குமான வழிகாட்டல்களை தனக்கத்தே கொண்டுள்ளது. அது மனித வாழ்வின் அத்தனை துறைகளுக்கும் தேவையான அனைத்து விதமான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. அந்த வகையில் இஸ்லாம் பெண்களுக்கு கண்ணியத்தையும், உரிமைகளையும் வழங்கும் மார்க்கமாக உள்ளது.

இஸ்லாமிய தீவிரவாத போக்கினை பின்பற்றும் தாலிபான்கள் 2021 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானை கைப்பற்றி உள்ளனர். ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய பின்னர் இவர்களின் உடைய மீளெழுச்சியின் மூலமாக ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றன. அமெரிக்கர்கள் ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்த போது பெண்கள் கல்வி கற்பதற்கான உரிமை, வேலை செய்வதற்கான உரிமை, வெளியில் நடமாடும் உரிமை, கருத்துக்களை தெரிவிக்கும் உரிமை, ஊடகங்களில் பணியாற்றும் உரிமைகள் என்பன காணப்பட்டது. ஆனால் தாலிபான்களின் ஆட்சியின் பின்னர் பெண்களின் உரிமைகள் என்பது மீறப்பட்டே வருகின்றன.

சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. அந்தவகையில் இந்த ஆய்வானது தாலிபான்களின் மீளெழுச்சியின் மூலமாக ஆப்கானிஸ்தானில் நிகழும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள், உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வந்து, தாலிபான்கள் பின்பற்றும் சட்ட முறைகளை இஸ்லாமிய பெண்கள் உரிமை சட்ட முறைகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து, தாலிபான்கள் இஸ்லாம் மதத்தில் கூறிய பெண்கள் உரிமைகள் சட்ட முறைகளை தவறாக புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் சட்டத்தினை உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்றும், இஸ்லாம் மதத்தில் பெண்களினுடைய நிலை மற்றும் உரிமைகள் எவ்வாறு காணப்படுகின்றது என்றும், இஸ்லாம் மதத்தினை பின்பற்றும் நாடுகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளினுடைய உரிமைகள் எவ்வாறு காணப்படுகின்றது என்றும், ஆப்கானிஸ்தானில் வாழும் பெண்கள் மற்றும் சிறுமிகளினுடைய எதிர்காலம் எவ்வாறு காணப்படும் என்றும் இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது. இதற்காக வேண்டி இரண்டாம் நிலை தரவுகளினைப் பயன்படுத்தி தொகுத்தறி முறையின் ஊடாக முடிவுகள் கண்டறியப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

அல்லாஹ் ஆண் - பெண் இருவரையும் ஒருவருக்கு ஒருவர் அடிபணியாமல் படைத்துள்ளான். இஸ்லாம் பாலின சமத்துவத்தையும் பெண்களின் உரிமைகளையும் அவர்களின் வாழ்வில் ஒவ்வொரு துறையிலும் உறுதி செய்துள்ளது என்றும் இஸ்லாம் பெண்களுக்கு சரியான உரிமைகள் கண்ணியம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றை பறிக்கவில்லை என்றும், இஸ்லாம் அறிவு, விழிப்புணர்வு,இயலாமை தவறான கருத்துக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றது என்றும் பெண்களின் உரிமைகள் பாலின சமத்துவம் பெண்கள் சுதந்திரம், இஸ்லாம், தவறான கருத்துக்கள் என்பவற்றைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும். இது பங்களாதேஷை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது (Manjur Hossain Patoari, 2019).

ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய தாலிபான்கள் ஆப்கானிஸ்தானிய பெண்களின் உரிமைகளை தமது இஸ்லாமிய ஷரியா சட்டத்திற்கு இணங்க வழங்குவோம் என வெளிப்படையாக கூறி இருந்தாலும் ஆட்சிக்கு வந்த முதல் வாரத்தில் இருந்தே குடிமக்களின் உரிமைகளை நசுக்கி பெண்களுக்கான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். பெண்களின் உரிமைகள் சம்மந்தமான செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது (Gabijaleclerc & Rosamund Shreeves,2023).

தாலிபான்களின் எழுச்சியுடன் பெண்களின் கோரிக்கைகள், உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் தாலிபான்கள் பின்பற்றும் ஷாரியா மற்றும் இஸ்லாமிய சட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தாலிபான்களின் மீளெழுச்சியால் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். தாலிபான்களின் எழுச்சியினால் பெண்களின் அபிலாசைகள் சிதைந்தன. ஆப்கானிஸ்தானில் தாலிபான்களினுடைய மீளெழுச்சியால் பெண்களினுடைய உரிமைகள் மீறப்படுகின்றது என்று இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது (Sumitra.S et al.... 2023).

2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் ஆட்சிக்கு வந்த தாலிபான்களினால் சமூகப் பொருளாதார அரசியல் நிலைமைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும், ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமைகள் பற்றிய முழு விளக்கத்தை தருவதும், அறிவியல் முக்கியத்துவம் மற்றும் ஆப்கானிஸ்தானிய பெண்களின் உரிமைகள் தொடர்பான நிலைமையை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்வதும், இஸ்லாமிய விதிகளில் தாலிபான்கள் தவறான கருத்துக்களை முன்னிலைப்படுத்த மற்ற முஸ்லிம் நாடுகளில் உள்ள பெண்களின் உரிமைகளுடன் ஒப்பீட்டு பகுப்பாய்வு செய்கின்றது. இதில் பெண்களின் உரிமைகள் இஸ்லாமிய சட்டங்கள், இஸ்லாமிய நாடுகளில் சட்ட நிலை குறித்து ஆராயப்பட்டுள்ளது (Yesbol Omirzhanov et al... 2023).

தாலிபான்களின் ஆட்சியில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் பெண்களின் உரிமைகள் தொடர்பான தாலிபான்களின் நிலைப்பாட்டை ஆராய்வதுடன் இது சம்பந்தமாக தாலிபான்களின் நிலைப்பாடு மாறியிருக்கின்றதா? எப்படி ஏன் எந்த அளவிற்கு மாறிவிட்டது என்பதை தீர்மானிக்கவும்! ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமைக்கான வாய்ப்புகளை ஆராய்கின்றது. இந்த ஆய்வில் தாலிபான்கள் மற்றும் ஆப்கானிஸ்தானிய அரசாங்கத்திற்கும், சமாதானம் தொடர்பாக இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளையும், பரிந்துரைகளையும் இவ் ஆய்வானது கொண்டு அமைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது (Fahim Yousufi, 2023).
ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள் பற்றி பகுப்பாய்வு செய்கின்றது. இதில் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளை ஒழித்தல் என்ற

அமைப்பின் சட்டங்களுக்கு ஊடாக எவ்வாறு தாலிபான்களால் பெண்கள் உரிமைகள் மீறப்படுகின்றது என்பதினை இவ்வாய்வானது ஆராய்கின்றது. தாலிபான்கள் பெண்களுக்கு சமமான உரிமை அனுபவிப்பதை உறுதி செய்து, சர்வதேச சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும் என இவ் ஆய்வில் கூறப்பட்டுள்ளது (யாகூப் அய்யூப் கதிர் ரு நூர்ஹலிசா, 2023).

**ஆய்வு பிரச்சினை**

ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் மீளெழுச்சியினால் அந்த நாட்டினுள் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடுமையான மதவாதத்தினை பின்பற்றும் தாலிபான்களின் ஆட்சியினுள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் மற்றும் உரிமை மீறல்கள் என்பன ஏற்பட்ட வண்ணமே காணப்படுகின்றன. பெண்களின் உரிமைகளை இஸ்லாமிய சட்டத்திற்கு உட்பட்டு வழங்கும் என தாலிபான்கள் கூறி இருந்தாலும் இன்று வரை பெண்களின் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தாலிபான்களின் ஆட்சியினால் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டு வரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் உரிமை மீறல்களை கண்டறிதலே இவ்வாய்வின் ஆய்வு பிரச்சினையாக காணப்படுகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

- இஸ்லாமிய மதத்தில் பெண்களின் உரிமைகள் மற்றும் நிலை என்ன?
- ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்த பிறகு பெண்களின் நிலைமை
- என்ன?
- தாலிபான்களின் ஆட்சியில் ஏற்பட்ட பெண்களுக்கும். சிறுமிகளுக்கும் எதிரான உரிமை
- மீறல்கள் என்ன?
- இஸ்லாமிய நாடுகளில் பெண்களின் உரிமைகள் எவ்வாறு காணப்படுகின்றது?
- ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் எதிர்காலம் என்ன?

**ஆய்வு நோக்கம்**

தாலிபான்கள் ஆட்சி முறையினால் ஆப்கானிஸ்தானில் ஏற்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் உரிமை மீறல்கள் எவை என கண்டறிந்து, அதனை இஸ்லாமிய பெண்கள் உரிமை நோக்கில் தாலிபான்கள் பின்பற்றும் சட்டமுறை தொடர்பாக பகுப்பாய்வு செய்வதை ஆய்வின் நோக்கமாக காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு ரீதியிலான ஆய்வாகும். இதற்காக வேண்டி இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் ஆய்வு கட்டுரைகள், இணையதளங்கள், புத்தகங்கள், அல்குர்ஆன், ஹதீஸ் போன்றவற்றிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை தொகுத்தறி முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு இடைவெளி**

இஸ்லாம் மதத்தில் பெண்கள் உரிமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. அந்தவகையில் பெண்களின் உரிமைகள் தொடர்பாக ஆய்வாளர்களினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானை கைப்பற்றி ஆட்சி செய்யும் தாலிபான்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் ஆட்சியினால் ஏற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான உரிமை மீறல்கள் என்பன இடம்பெற்று கொண்டு வருகின்றன. தாலிபான்களின் ஆட்சியினால் ஏற்படும் பெண்களின் உரிமை மீறல்கள் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபட்டுள்ளது.

தாலிபான்களின் ஆட்சியினால் ஆப்கானிஸ்தானில் நிலவிவரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள், பாகுபாடுகள் மற்றும் உரிமை மீறல்கள் தொடர்பாக பல்வேறு ஆய்வு அறிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஆனால் ஆப்கானிஸ்தானில் ஏற்படும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள் இஸ்லாமிய ரீதியில் பெண்களின் உரிமைகள் நோக்கில் ஆராயப்படவில்லை. எனவே இஸ்லாமிய நோக்கில் பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பாக கூறப்பட்டுள்ள நிலை பற்றியும், தாலிபான்களால் பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் எதிராக நடக்கும் வன்முறைகள், பாகுபாடுகள் இஸ்லாமிய நோக்கில் சரியானதா என எந்த ஒரு ஆய்வு அறிக்கையும் காணப்படவில்லை. அந்த வகையில் தாலிபான்கள் பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்பாக ஏற்படுத்தி இருக்கும் நிலை இஸ்லாமிய நோக்கில் சரியானதா அல்லது தவறானதா என ஆராய்வது ஆய்வு இடைவெளியாக காணப்படுகின்றது.

**பெறுபேறுகளும், முடிவுகளும்**

கல்வி தற்போது ஆப்கானிஸ்தானில் கல்வி நிலையினை நோக்கும் போது தலிபான்கள் முதலில் கணித்ததை விட மிகவும் பழமைவாத மற்றும் கொடூரமானவர்களாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. மத மற்றும் இன சிறுபான்மையினரின் கொலை மற்றும் ஒடுக்குமுறை தொடர்கிறது. மாறாக பெண்கள் இன்னும் ஆறாம் வகுப்பிற்கு மேல் பள்ளிக்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை மேலும் அவர்கள் ஆண் துணையின்றி வேலை செய்யவோ அல்லது பயணம் செய்யவோ அனுமதிக்கப்படுவதில்லை. ஆப்கானிஸ்தானுக்கு நிதி மற்றும் பொருள் உதவியை மீண்டும் தொடங்குவதற்கு ஆப்கானிஸ்தானில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் பொதுக் கல்வி என்பது என்ஜிஓக்கள் மற்றும் அரசாங்கங்களால் முக்கிய தேவையாக உள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளின் மோசமான நிலையைக் கருத்தில் கொண்டு பெண்களுக்கான பள்ளிகள் உட்பட தனியார் பள்ளிகளின் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2020 இல் ஆப்கானிஸ்தானில் 803 தனியார் பள்ளிகள் இருந்தன. 170,000 மாணவர்களுக்குக் கற்பிக்கின்றன. அதில் 44 சதவீதம் பெண்கள் ஆகும். இந்த தனியார் பள்ளிகளில் பாதிக்கும் மேற்பட்டவை 420 காபூலில் மற்றும் 124 ஹெராட்டில் உள்ளன. இந்தப் பள்ளிகள் பல்வேறு தலைப்புகளைக் கற்பித்தன. மேலும் பல சிறப்புப் பெற்று இருந்தன. உதாரணமாக அழகுக்கலைக்கான பள்ளி மற்றவை பரந்த கல்வியை வழங்கின. இந்தப் பள்ளிகளும் தலிபான்களால் மூடப்பட்டன. ஆப்கானிஸ்தான் பெண்கள் கல்வியில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாகத் தோன்றினாலும், குடியரசின் கடந்த 20 ஆண்டுகளில் பெண்கள் கல்வியில் இந்த வெளிப்படையான முன்னேற்றம் தவறானதாக இருக்கலாம். காபூல் மற்றும் ஜலாலாபாத் மற்றும் ஹெராத் போன்ற சில நகரங்களில் உள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் இலாபம் ஈட்ட முடிந்தது. ஆனால் நாட்டின் பெரும்பகுதியில் உள்ள பெண்கள் குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே வெற்றிபெறவில்லை. உண்மையில், 20 ஆண்டுகால அரசாங்க ஆதரவு மற்றும் மில்லியன் கணக்கான டாலர்கள் சர்வதேச உதவிக்குப் பிறகும், 2021 ஆம் ஆண்டில் 66 சதவீத சிறுவர்களுடன் ஒப்பிடும்போது, 37 சதவீத ஆப்கானிய பெண்களால் மட்டுமே எழுதவும், படிக்கவும் முடிந்தது.

UDHR CEDAW மற்றும் CESCR இதன் கீழ் ஆப்கானிய பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி பெரும் உரிமை உள்ளது. ஆரம்பத்திலும் மற்றும் நகர்புறத்தில் உள்ள பெண்கள், சிறுமிகளுக்கு இலவச கல்வி முறை இருந்தது. தாலிபான் ஆட்சிக்குப் பின்னர் வானொலி மற்றும் தெருக்களில் பெண்கள் பள்ளிக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. (Yousufi.F (n.d) இதன் மூலமாக ஆப்கானிஸ்தானில் தாலிபான்களினுடைய மீளெழுச்சிக்கு பின்னரான காலத்தில் அதாவது தற்போது வரை அங்கு உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி ரீதியிலான உரிமைகள் என்பது மீறப்பட்டே வருகின்றன. கல்வி ரீதியில் அவர்களுக்கு பாகுபாடுகள் காட்டப்படுகின்றன. அதாவது ஆண்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களும். பாடசாலைகளும் திறக்கப்பட்டுள்ளது. இது பாலினரீதியிலான பாகுபாட்டை குறித்து நிற்கின்றது. ஆகவே ஆப்கானிஸ்தானில் கல்வி ரீதியில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள் என்பன காணப்படுகின்றன.

ஆகஸ்ட் 2021 இல் தலிபான்கள் ஆட்சியைப் கைப்பற்றிய போது 6 ஆம் வகுப்புக்கு அப்பால் உள்ள ஆண், பெண் இருபாலருக்கும் கல்வி இடைநிறுத்தப்பட்டு ஆப்கானிஸ்தான் புத்தாண்டுக்குப் பிறகு, அதாவது மார்ச் 23, 2022க்குப் பிறகு மீண்டும் தொடங்கும் என்று அறிவித்தனர். அதற்கு நேரம் தேவை என்று தலிபான்கள் தெரிவித்தனர். இஸ்லாமிய விழுமியங்களை சிறப்பாகப் பிரதிபலிக்கும் வகையில் பள்ளிப் பாடத்திட்டத்தை மாற்றியமைக்கவும், பெண் பாடத்திட்டம் மற்றும் பெண்களுக்கான பள்ளி சீருடைகளை உருவாக்கவும், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பெண்களுக்கான வகுப்புகளுக்கு பெண்கள் மட்டுமே கற்பிக்க முடியும் என்றும் தலிபான்கள் தீர்ப்பளித்தனர். பல்கலைக் கழகப் படிப்புகள் இணைக்கப்படலாம் என்றும், ஆனால் பெண் மற்றும் ஆண் மாணவர்களுக்கு இடையே உடல்ரீதியான பிரிவினை இருக்க வேண்டும் என்றும் அறிவித்தது (Jackson, 2022).

தலிபான்களின் சட்டங்களைக் கண்டித்து, தான் தொடர்ந்து கற்பிப்பேன் என்று வலியுறுத்திய ஒரு ஆசிரியர், துப்பாக்கியால் தாக்கப்பட்டு, பின்னர் தலையிலும், வயிற்றிலும் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது மரணத்தை அவரது மாணவர்கள், அவரது கணவர் மற்றும் அவரது மகள் பார்த்தனர். பெண்களுக்கான கல்வி வாய்ப்புகளை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும் பெண்களுக்கான சில பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாகவும் தலிபான்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கூறினர். இருப்பினும், அவர்களின் கூற்றுக்கள் இருந்தபோதிலும், தலிபான்கள் பெண்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்க உண்மையான முயற்சி எதுவும் எடுக்கவில்லை. கல்வி வாய்ப்புகள் இல்லாதது ஆப்கான் பெண்கள் அனுபவிக்கும் விரக்திக்கு கணிசமான காரணியாகும்.

உலகிலேயே ஆரம்பநிலைக்கு மேல் பெண் குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படும் ஒரே நாடு ஆப்கானிஸ்தான் ஆகும். கல்வி, வகுப்பறை கற்றல் மற்றும் பள்ளி சமூகங்களில், பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் இன்றியமையாதது. கல்வி என்பது மற்ற அனைவருக்கும் உதவும் உரிமை என்பதை பலமுறை வலியுறுத்துகின்றது. படித்த பெண்கள் இல்லாமல், பெண் மருத்துவர்களோ, பெண் ஆசிரியர்களோ, பெண் வழக்கறிஞர்களோ இருக்க மாட்டார்கள். தாலிபான்கள் பெண் குழந்தைகளின் வளர்ச்சி வாய்ப்புகளை அகற்றிவிட்டனர். எனவே இப்போதும் எதிர்காலத்திலும் சுதந்திரமாக வாழ்வதற்கான அவர்களின் திறன் பலவீனமடைந்து வரவிருக்கும் தலைமுறைகளை பாதிக்கிறது.

**வேலைவாய்ப்புக்கள்**

கட்டுப்பாடுகள் பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைக்கின்றன. நடைமுறையில் உள்ள அதிகாரசபை கட்டிடங்களுக்குள் நுழைவதைத் இது தடுக்கின்றன. மேலும் பொது இடங்களில் அவர்களின் இருப்பை பரந்த அளவில் எதிர்த்து நிற்கின்றன. 15 ஆகஸ்ட் 2021க்கு முன், 17 சதவீத பெண்கள் நாடு முழுவதும் தொழிலாளர் படையில் பங்கு பெற்றனர். இது அக்டோபர் 2021 இறுதிக்குள் 16 சதவிகிதம் குறைந்துள்ளது. தற்போதைய நடமாட்டக் கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பின் கீழ், ஜூலை 2022க்குள் பெண்களின் வேலை வாய்ப்பு 28 சதவிகிதம் குறையும் என்று கணிக்கப்பட்டு இருந்தது. 42 வேலைக் கட்டுப்பாடுகள் பொதுச் சேவையில் பெண்களைக் குறிவைத்துள்ளன. குறைந்த அளவில், தனியார் துறையில் பிராந்தியம், துறை மற்றும் பணியிடத்தின் அடிப்படையில் இவை மாறுபடும். இறுதியில் கடந்த ஆண்டு பெண்கள் தனியார் மற்றும் பொதுப் பணிகளில் முழுமையாக பங்கேற்க முடியாத சூழலை உருவாக்கியுள்ளது.

பெண்களுக்கு வேலை செய்வதற்கான சில வாய்ப்புகள் மட்டுமே உள்ளன. தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து. பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பல பெண்கள் வேலை இழந்துள்ளனர். மற்றவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தால் மட்டுமே தொடர அனுமதிக்கப்படுவார்கள். இன்னும் வேலைக்குச் செல்லும் எந்தப் பெண்ணும் வேலைக்குச் செல்லும் பயணத்தில் ஒரு ஆண் (மஹ்ரம்) உடன் இருக்க வேண்டும். பெண்களுக்கான இந்த வேலை இழப்பு பல குடும்பங்களை இன்னும் வறுமையில் தள்ளியுள்ளது. அதிகரித்து வரும் ஆப்கானியர்கள் உயிர் பிழைப்பதற்காக தெருக்களில் பிச்சை எடுக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் காபூலில் மட்டும் சுமார் 30,000 விதவைகள் இருப்பதாக அறிக்கைகள் மதிப்பிடுகின்றன. அவர்களின் கணவர்கள் மற்றும் பிற ஆண் குடும்ப உறுப்பினர்களின் இழப்பு காரணமாக இந்த விதவைப் பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு ஆதரவு மற்றும் வருமானத்திற்கான ஒரு ஆதாரமாகவும் உள்ளனர். தாலிபான்கள் பெண்கள் வேலைக்கு செல்வதை தடை செய்ததால் பல விதவைமார்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்காக பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பின்னர் ஆப்கானிஸ்தானில் பெண்கள் வேலைக்கு செல்வதை தாலிபான்கள் முற்றாக தடை செய்து உள்ளனர். இதன் மூலமாக பெண்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றது.

**பெண்களுக்கான தாலிபானின் கட்டாய ஆடைக் குறியீடு**

இஸ்லாமிய நம்பிக்கை பெண்கள் தங்கள் உடலை மறைக்க ஊக்குவிக்கும் அதே வேளையில், அது அவர்களின் முகத்தை மறைப்பதை பரிந்துரைக்கவில்லை. மேலும் ஆண்கள் தங்கள் உடலை மார்பிலிருந்து முழங்கால் வரை சரியாக மறைக்க வேண்டும்.பல பெண்கள் தங்கள் உடல்களை போதுமான அளவு மூட்டுகளை மறைக்கும் பொதுவான ஆடைகளாலும்,தலையை மறைக்கும் தாவணிகளாலும் தங்கள் உடலை மறைப்பதன் மூலம் தங்கள் நம்பிக்கையின் கடமைகளுக்கு இணங்குகிறார்கள். மேற்கத்திய பெண்களுக்கு ஆடையை மூட வேண்டும் என்ற நிபந்தனை அடக்குமுறையாக தோன்றினாலும் முஸ்லீம் பெண்களுக்கு இது அவர்களின் பாரம்பரிய மத நம்பிக்கைகளை கடைபிடிப்பது மற்றும் அவர்களின் மதம் மற்றும் அல்குர்ஆனில் போதனைகளை மதிக்கும் வகையில் செய்யப்படுகின்றது (Sahill.P.H, 2023).

அதன் பல சட்டங்களைப் போலவே தலிபான்கள் இஸ்லாம் மதத்தின் ஒரு கொள்கையை எடுத்து அதை ஒரு தீவிர மற்றும் கடுமையான ஆட்சியாக சிதைத்துள்ளனர். பெண்கள் பாரம்பரிய பர்தா அணியாமல் பொது இடங்களில் வருவதை தலிபான்கள் தடை செய்துள்ளனர்.

புர்காவை ஒரு நீண்ட படுக்கை விரிப்பைப் போலவே சிறப்பாக விவரிக்க முடியும். கண்ணின் மேல் ஒரு சிறிய திறப்புடன் தலை முதல் கால் வரை அது பெண்ணை மூடுகிறது.

இப்போது அனைத்துப் பெண்களும் பர்தா அணிய வேண்டும் என்று தலிபான்கள் கோருகின்றனர். பர்தா அணியாமல் பிடிபட்ட பெண்கள் அல்லது பர்தா அணிந்து தங்களை முழுவதுமாக மறைக்கத் தவறியவர்கள் தலிபான்களின் நல்லொழுக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், துணையை அடக்குவதற்காகவும் தெருவில் அடிக்கப்படுவார்கள்.

இதேபோல் ஊனமுற்ற பெண்கள் மற்றும் செயற்கை உறுப்பு அல்லது நடைபயிற்சி உதவி தேவைப்படும் பெண்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்தப் பெண்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே சிறைவைக்கப்படுகின்றனர். அல்லது தலிபானின் சட்டத்தை மீறியதற்காக தலிபானின் கடுமையான மற்றும் காட்டுமிராண்டித்தனமான தண்டனைகளுக்கு ஆளாகும் அபாயம் காணப்படுகின்றது.

புர்காவை வாங்க முடியாத அல்லது இயலாமை காரணமாக சரியாக பர்தா அணிய முடியாத பெண்கள் குறைந்த அளவிலான மருத்துவ வசதியை பெற முடியாமல் தவிப்பதாக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. குறைந்தபட்சம் ஒரு பெண் பர்தா இல்லாததால் அல்லது சரியாக அணிய முடியாத காரணத்தால் மருத்துவ சிகிச்சை பெற முடியாமல் இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டாய ஆடை குறியீடு மூலமாக ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் பெண்களின் உரிமைகளை மீறுகின்றனர்.

**ஊடகம் சுதந்திரம் மறுப்பு**

சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றால் குறிக்கப்பட்ட ஊடக நிலப்பரப்பு தலிபான் கையகப்படுத்துதலைத் தொடர்ந்து வேகமாக மாறிவிட்டது. எல்லைகளற்ற நிருபர்கள் (RSF) மேற்கொண்ட ஆய்வின்படி, ஆகஸ்ட் 15, 2021க்குப் பிறகு, 700 பெண் பத்திரிகையாளர்களில் 100 இற்கும் குறைவானவர்களே காபூலில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்களில் பணிபுரிந்தனர். பழிவாங்கும் மற்றும் துன்புறுத்தலுக்கு பயந்து, சர்வதேச துருப்புக்கள் முழுவதுமாக திரும்பப் பெறப்படுவதற்கு முன், பெண் பத்திரிகையாளர்களின் குறிப்பிடத்தக்க திறமைக் குழு நாட்டை விட்டு வெளியேறியது. நாட்டில் தங்கியிருக்கும் பெண் ஊடகவியலாளர்கள் பணிபுரிய தடை விதிக்கப்பட்டுள்ளது (UN WOMEN, 2022).

காபூலில் பெண்கள் போராட்டங்களை செய்தியாக்குபவர்கள் தாலிபான்களால் தாக்கப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் சுருங்கி வரும் குடிமை இடங்கள், நாட்டில் நடந்து வரும் முன்னேற்றங்களை செய்தியாளர்களுக்கு செய்தியாக்க ஒரு முடமான சூழலை உருவாக்குகிறது. 22 நவம்பர் 2021 அன்று தலிபான்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஊடகக் கட்டுப்பாடுகளின்படி, பெண் நடிகர்கள் தொலைக்காட்சி நாடகங்களில் தோன்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது. ஊடக நிலப்பரப்பில் இருந்து பெண்கள் இல்லாததால், பொதுமக்களின் பார்வையில் இருந்து பெண்களை அழிக்கும் மற்றும் குறிப்பிட்ட தொழில்களில் ஆண் ஆதிக்கத்தை இயல்பாக்கும் ஒரு குளிர்ச்சியான விளைவை ஏற்படுத்தும். ”பெண்கள் தங்கள் குடும்பத்தை ஆதரிப்பதற்கும் வறுமைக் குறைப்புக்கு பங்களிப்பதற்கும் உழைக்க வேண்டும். நாங்கள் எங்கள் குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியாக பங்களித்தோம். இப்போது நாங்கள் எங்கள் வீடுகளில் சிக்கித் தவிக்கிறோம்” பெண் ஆர்வலர் (UN WOMEN, 2022).

**பெண்களை நோக்கிய தாலிபானின் இதர விதிகள்**

தலிபானின் விதிகள் தலிபானின் கட்டளைகளில் சில கடுமையானவை ஆகும். இருப்பினும் பெண்களை நேரடியாக இலக்காகக் கொண்ட பல விதிகள் உள்ளன. மேலும் அவர்களின் விரக்தி, அடக்குமுறை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வுகளுக்கு மேலும் பங்களிக்கின்றன. உதாரணமாக பெண்கள் தங்கள் வீடுகளில் தெருவில் இருந்து பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. இந்த விதியை நடைமுறைப்படுத்த பெண் குடியிருப்பாளர்களைக் கொண்ட அனைத்து வீடுகளின் ஒவ்வொரு ஜன்னல்களிலும் வர்ணம் பூசப்பட வேண்டும் என்று தலிபான் கூறியு. பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர். தலிபான்கள் ”பெண்கள் பேருந்துகள்” என்று குறிப்பிட்டுள்ள பேருந்துகள் மட்டுமே பெண்களுக்கான ஒரே போக்குவரத்து வடிவம் ஆகும்.

பெண்கள் பேருந்துகளின் ஜன்னல்கள் திரைச்சீலைகளால் மூடப்பட வேண்டும் என்றும், ஓட்டுநரின் பகுதியும் திரைச்சீலையால் பிரிக்கப்பட வேண்டும் என்றும் தலிபான் கோருகிறது. பெண்கள் பேருந்துகளில் பேருந்துக் கட்டணத்தை வசூலிக்க பேருந்து ஓட்டுநர்கள் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களை நியமிக்க வேண்டும் என்று தாலிபான் கோருகிறது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, பெண்கள் வெள்ளை பர்தா, வெள்ளை சாக்ஸ் அல்லது வெள்ளை காலணிகள் அணிய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் நடக்கும்போது அவர்களின் குதிகால் சத்தம் எழுப்பினால் அல்லது அவர்கள் ஏதேனும் மீறுவதாகக் கண்டறியப்பட்டால் அவர்கள் அடிக்கப்படுவார்கள். இது தாலிபான்களின் இரதர விதிகளுக்குள் அடங்கும்.

**பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாடுகள்**

ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை ஒரு பரவலான பிரச்சனையாகும். பத்தில் ஒன்பது பெண்கள் தங்கள் வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒரு வகையான நெருக்கமான துணை வன்முறையை அனுபவித்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆகஸ்ட் 2021 முதல், GBV-ஐ நிவர்த்தி செய்வதற்கான ஆதரவைப் பெறுவதற்கான உள்கட்டமைப்பு அகற்றப்பட்டது. மேலும் GBV-ஐ நிவர்த்தி செய்வதற்கான மீதமுள்ள நிறுவன வழிகள் பெண்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன. 15 ஆகஸ்ட் 2021 முதல், ஆபத்து காரணிகள் மோசமடைந்துள்ளன. பெண்களை வீட்டில் அடைத்து வைத்தல், மஹ்ரம் தேவைகள், இடப்பெயர்ச்சி, பொருளாதார அழுத்தம், பெண்களின் உரிமைகள் பறிப்பு, மற்றும் பிற்போக்கு பாலின விதிமுறைகள் மேலும், அனைத்துத் துறைகளிலும் வளர்ந்து வரும் ஆண் மேலாதிக்கம், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையைச் செய்வதற்கு மக்கள் அதிக உரிமை உடையவர்களாக உணர்கின்றார்கள்.

சில குடும்பங்கள் தலிபான் போராளிகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, சில குடும்பங்கள் தங்கள் பெண்களை ஒரு பாதுகாப்பு வடிவமாக முன்கூட்டியே திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணமாகாத தங்கள் பெண் குழந்தைகளை மணப்பெண்ணாகக் கொடுக்கும்படி இஸ்லாமியர்கள் பலமுறை குடும்பங்களை வற்புறுத்தி வருகின்றனர். மற்ற குடும்பங்கள் உண்மையில் தங்கள் மகளை ஒரு தாலிபிற்கு திருமணம் செய்து வைப்பதற்காக குடும்பத்தின் பாதுகாப்பைப் பெற முடிவு செய்கின்றனர்.

வீட்டிற்கு வெளியேயும் பல துறைகளில் பெண்கள் பணியாற்றுவதை தடை செய்யும் உலகின் ஒரே நாடு ஆப்கானிஸ்தான் ஆகும். நீண்டகால வறுமையை அனுபவிக்கும் மக்களுக்கு முக்கியமான சேவைகளை வழங்கும் ஐக்கிய நாடுகள் மற்றும் பிற அமைப்புகளின் திறனை இது கணிசமாகப் பாதிக்கிறது. பொது அலுவலகத்திலிருந்து பெண்களை அகற்றுவது,

பெண்கள் மற்றும் சிறுமிகளின் பார்க்கும் மற்றும் கேட்கும் திறனை மேலும் பாதிக்கிறது. மேலும் அவர்களின் வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்கேற்கிறது.

கட்டாயத் திருமணத்தை எதிர்த்து டிசம்பர் 2021 இல் நடைமுறை அதிகாரிகள் ஆணை பிறப்பித்த போதிலும் குழந்தை மற்றும் கட்டாயத் திருமணங்கள் கடந்த ஆண்டில் ஆப்கானிஸ்தானில் அதிகரித்துள்ளன. பெண்கள் மற்றும் பெண்களை தாங்களே கட்டாயமாக திருமணம் செய்துகொள்வது இது குடும்பங்கள் தங்கள் பெண்களையும் முன்கூட்டியே திருமணம் செய்து கொள்ள வழிவகுக்கிறது. கட்டாயத் திருமணத்திற்கு ஆளாகும் பெண்கள், தங்கள் கணவர்கள் மற்றும் மாமியார்களால் GBV- யின் அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இனப்பெருக்க ஆரோக்கியத்தை அணுகுவதில் வரம்புகள் மற்றும் குறைந்த அளவிலான முழுமையான கல்வியை எதிர்கொள்கின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்களும், சிறுமிகளும் உலகில் பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்களின் சில கடுமையான வடிவங்களைச் சந்தித்து வருகின்றனர். பெண்கள் மற்றும் சிறுமிகளை குறிவைத்து அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மறுப்பதை நிலைநிறுத்தும் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் மூலம் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் அடிப்படையிலான முக்கிய மனித உரிமை ஒப்பந்தங்களை தாலிபான் மீறியுள்ளது. அடக்குமறை ஆணைகள் பெண்கள் மற்றும் சிறுமிகளை ஒடுக்கும் சூழலில் அடைத்து வைக்கின்றன. பொது மற்றும் அன்றாட வாழ்வில் பங்கேற்க இயலாது. இதில் அவர்களின் நடமாட்ட சுதந்திரம், கருத்து சுதந்திரம், வேலை வாய்ப்புகள், அரசியல் பங்கேற்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதார அணுகல் ஆகியவை அடங்கும். பெண்கள் மற்றும் இளம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்கல்விக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்ட உலகின் ஒரே நாடாக ஆப்கானிஸ்தான் காணப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் பாலின அடிப்படையிலான பாகுபாட்டின் அளவு ”உலகளவில் இணையற்றது” என்று ஐ.நா சிறப்பு நடைமுறைகள் ஆணை வைத்திருப்பவர்கள் முடிவு செய்துள்ளனர். அவர்கள் அங்கு பெண்கள் மற்றும் சிறுமிகளை நடத்துவது பாலின துன்புறுத்தல், மனித குலத்திற்கு எதிரான குற்றம் மற்றும் பாலினப் பிரிவினைக்கு சமம் என்று வகைப்படுத்தியுள்ளனர். பெண்கள் மற்றும் சிறுமிகளை முழு ஆதிக்கத்திற்கு உட்படுத்தும் நோக்கத்துடன் தலிபான் அமைப்புரீதியான பாகுபாடுகளால் ஆட்சி செய்வதாகத் தோன்றுவதால், சிலர் நிலைமையை சாத்தியமான ”பாலின நிறவெறி” என்று விவரிக்க முன்மொழிந்துள்ளனர். ஜூன் 2023 இல், ”ஆப்கானிய பெண்கள் மற்றும் சிறுமிகளின் மனித உரிமை மீறல்களுக்காக நீதி தேடும் முயற்சிகளை ஆதரிக்க வேண்டும்” என்று மாநிலங்களை வலியுறுத்தினர்.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகள் வாழும் ஒட்டுமொத்த பாரபட்சமான மற்றும் கட்டுப்பாடான சூழல், உண்மையில் அச்சத்தின் சூழல் குறித்து ஆழ்ந்த கவலை கொள்கின்றது. இது பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் பாலினத்திற்கு பதிலளிக்கக்கூடிய மற்றும் பெண்களுக்கு அணுகக்கூடிய நீதி அமைப்பு இல்லாதது ஆகியவற்றுடன் இணைந்துள்ளது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான இத்தகைய அதீத பாகுபாடு மற்றும் வன்முறைகளை எங்கும் சாதாரணமாக்குவதை அனுமதிக்க முடியாது.

இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, ஆப்கானிஸ்தானில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், பெண்கள் மூன்றாம் நிலைக் கல்வியிலும் தடை செய்யப்பட்டுள்ளனர். பெண்கள் மற்றும்

சிறுமிகள் கேளிக்கை பூங்காக்கள், பொது குளியல் அறைகள், உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் விளையாட்டு கிளப்புகளுக்கு நான்கு மாதங்களுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசு சாரா அலுவலகங்களில் பெண்கள் பணிபுரிய தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2021 இல் ஆப்கானிஸ்தானை தலிபான்கள கையகப்படுத்தியதில் இருந்து, பெண்கள் பொது அலுவலகம் மற்றும் நீதித்துறையில் இருந்து முற்றிலும் விலக்கப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானின் பெண்கள் மற்றும் பெண்கள் கடுமையான ஆடைக் குறியீட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் மஹ்ரம் இல்லாமல் 75 கிமீக்கு மேல் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஆப்கானிஸ்தானைப் போல வேறு நாடும் எந்த பெண்களின் உரிமைகளை கட்டுப்படுத்தவில்லை. இங்கே, பெண்கள் சிறை போன்ற சூழ்நிலைகளில் வாழ்கிறார்கள் அவர்கள் பொது வாழ்க்கையில் பங்கேற்பதைத் தடை செய்கிறார்கள். கடந்த 22 மாதங்களில், பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஒவ்வொரு அம்சமும் உயிர்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் எல்லா வகையிலும் பாகுபாடு காட்டப்படுகிறார்கள். தலிபான்கள் பல பெண் மாணவர்கள் ஹிஜாப் போன்ற பொருத்தமான இஸ்லாமிய உடையை அணியவில்லை என்றும், பாலின கலப்பு இருப்பதாகவும் கூறி தங்கள் தடையை நியாயப்படுத்துகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அவர்களை அடிப்பது மற்றும் வார்த்தைகளால் திட்டுவது மட்டுமல்லாமல் ஆப்கானிஸ்தானிலும் பாலியல் வன்கொடுமை மிக அதிகமாக உள்ளது. இது சட்டவிரோத பாலியல் உறவு, கட்டாய விபச்சாரம், பாலியல் சீரழிவு மற்றும் தவறான சிகிச்சை, கட்டாய கருக்கலைப்பு போன்ற பல்வேறு வடிவங்களில் செய்யப்படுகிறது. இந்த தாக்குதல்கள் பெண்கள் மீது மிகவும் எதிர்மறையான மற்றும் வேதனையான விளைவைக் கொண்டிருக்கின்றன. இது பெண்களை சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அந்நியப்படுத்துகிறது. பாலியல் மீறல்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் உளவியல் சிக்கல்கள், எய்ட்ஸ் போன்ற பாலியல் பரவும் நோய்களின் மிகவும் பொதுவான பிரச்சனையான ”தேவையற்ற கர்ப்பம்” போன்ற பிற பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இது பெண்களின் மனித கண்ணியம் மற்றும் சுயமரியாதையை மீறுகிறது. சமூகத்தில் சுதந்திரமாக வாழும் உரிமையையும் கூட பறிக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் மற்றும் குரல் எழுப்ப வேண்டாம் என்று அவர்களுக்கு நெருக்கமான மற்றும் அன்பானவர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**முடிவுரை**

உலகளாவிய ரீதியில் நோக்கும் போது பெண்களினுடைய உரிமைகள் என்பது முக்கியமான விடயமாக நோக்கப்படுகின்றது. பெண்களின் உரிமைகள் மீறப்படும் போது அதற்கான சட்ட ஏற்பாடுகளையும், பிரகடனங்களையும் கொண்டு காணப்படுகின்றது. இருந்தாலும் பல்வேறு நாடுகளில் பெண்களினுடைய உரிமைகள் என்பது மீறப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஆப்கானிஸ்தானில் இன்று வரை பெண்களினுடைய உரிமைகள் தாலிபான்களினால் மீறப்பட்டு வருகின்றன. தாலிபான்கள் ஆட்சி அமைக்கும் போது இஸ்லாமிய சட்டத்திற்கு அமைவாக பெண்களின் உடைய உரிமைகளை நாங்கள் வழங்குவோம் என ஆட்சிக்கு வந்து கூறினாலும் கூட இன்றுவரை பெண்களினுடைய உரிமைகள் என்பது அந்த நாட்டில் மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது.

இஸ்லாமிய மதத்தில் பெண்களுக்கான உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாம் மதமானது பெண்களை கண்ணியமான முறையில் நடத்துகின்றது. பெண்களுக்கு சமமான உரிமைகள் இருக்கின்றது என அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் ஆண்களைப் போலவே தொழில் செய்வதற்கான உரிமை, கருத்து தெரிவிப்பதற்கான உரிமை,

கல்வி கற்பதற்கான உரிமை என அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ஆனால் தாலிபான்கள் இஸ்லாமிய சட்ட முறையை பின்பற்றி ஆட்சி அமைத்திருந்தாலும் கூட அந்த சட்ட முறையில் பெண்களுக்கான உரிமை அவர்கள் வழங்கவில்லை. இஸ்லாமிய சமயமானது பெண்களுக்கான உரிமையை வலியுறுத்தி இருக்கின்றது. அதாவது இஸ்லாமிய மதத்தில் பெண்களினுடைய உரிமைகள் எவ்வாறு கூறப்பட்டுள்ளது என நோக்கும் போது ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் சமயத்தில் ஒரு பெண் தனது வாழ்வில் கல்வியை மேற்கொள்வதற்கான சகல விதமான வாய்ப்புகளையும், உரிமைகளையும் இஸ்லாம் மதம் வழங்கியுள்ளது. அதற்கான ஆதாரங்களாக ஹதீஸ் அல்குர்ஆன் என்பவற்றில் பெண்கள் உரிமைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. இஸ்லாமிய மதம் பெண்களினுடைய கல்விக்கு முன்னுரிமை அளிக்கின்றது. இஸ்லாமிய சட்ட முறைக்குள் பெண்கள் கல்வி உரிமை பெற்றுக் கொள்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றும் பெண்கள் இஸ்லாம் மதத்தில் கூறிய வரையறைக்குள் உட்பட்டு தனக்கு ஏற்ற தொழிலை செய்வதற்கான உரிமைகள் கூட இஸ்லாம் மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாம் மதமானது ஒரு பெண் திருமணம் செய்து தனது கணவருடன் வாழ முடியாது என தெரிந்த பிற்பாடு அவரை விவாகரத்து செய்வதற்கான உரிமை இஸ்லாம் மதத்தில் இருக்கின்றது. இவ்வாறு இஸ்லாமிய மதமானது பெண்கள் மற்றும் சிறுமிகளினுடைய பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு மதமாகவும் மற்றும் பெண்களினுடைய உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு மதமாகவும் காணப்படுகின்றது. அல்குர்ஆனிலும், ஹதீஸிலும் பெண்களுக்கான உரிமைகள் கூறப்பட்டு இருக்கின்றன என்பது முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்த காலப்பகுதியிலும் பெண்கள் கல்வியில் முன்னேற்றமடைந்து காணப்பட்டார்கள். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மனைவிமார்களும், பிள்ளைகளும் கல்வியில் முதல் நிலையில் இருந்துள்ளார்கள் என ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் குர்ஆனிலும், ஹதீஸிலும் பெண்களுக்கான கல்வியின் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தாலிபான்கள் அதனை எவ்வாறு மீறுகிறார்கள் என்று தெரியவில்லை. அதாவது தாலிபான்கள் பெண்களை ஏன் பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்றால் பெண்களும், ஆண்களும் கலந்து விடுவார்கள். பெண்களை ஆண்கள் பார்த்து விடுவார்கள் என்று அவர்களுக்கு கல்வி தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நபிகள், சஹாபாக்கள் வாழ்ந்த காலத்தில் பெண்களினுடைய கல்வி உரிமைகள் என்பது முக்கியத்துவப்படுத்தப்பட்டு காணப்பட்டது. ஆனால் இவர்கள் பெண்களுக்கு கல்வி தேவை இல்லை என்று கூறுகின்றார்கள். இது இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ள பெண்களின் கல்வி உரிமைக்கு முரணானதாக காணப்படுகின்றது.

பழமையான காலத்தில் சிறுவர்களுக்கு வயதான ஒரு நபரை திருமணம் செய்து கொடுக்கும் ஒரு வழக்கம் இஸ்லாமிய சமயத்தில் காணப்பட்டது. ஆனால் இஸ்லாமிய மதமானது சிறுவர்களே பெரியவர்களுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை. அது ஒரு மத வழிமுறை ஊடாக ஆரம்பத்தில் காணப்பட்ட ஒரு விடயமாகும். ஆனால் உலகளாவியரீதியிலும், சிறுவர்களுக்கான உரிமை பட்டயத்திலும் கூட இவ்வாறான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. தாலிபான்கள் பழமைவாதிகளாக காணப்படுவதால் பழமையான வழக்கங்களை ஆப்கானிஸ்தானுக்குள் உட்புகுத்துகின்றார்கள். அதாவது தற்போது சிறுமிகளை கட்டாயப்படுத்தி தாலிபான்களோ அல்லது வயதானவர்களுக்கோ திருமணம் செய்த கொடுக்கும் முறை அங்கு கொண்டு வந்துள்ளனர். இதன் மூலமாக சிறுமிகளினுடைய உரிமைகள் என்பது பாதிக்கப்படுகின்றது. மற்றும்

சிறுமிகளுக்கு எதிரான வன்முறையாகவும், பாகுபாடாகவும் இது காணப்படுகின்றது. இந்த வகையில் இஸ்லாமிய மதத்தில் கூறப்பட்டுள்ள சிறுமிகளுக்கான உரிமைகளினை தாலிபான்கள் தனக்கு ஏற்றார் போல் அமைத்து சட்டத்தினை அமல்படுத்துகின்றனர். இதன் மூலம் அங்குள்ள பெண்களும், சிறுமிகளும் பாகுபாடுக்கும், வன்முறைக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள்.

இந்த ஆய்வினுடைய முடிவாக ஆப்கானிஸ்தானில் 2021 ஆம் ஆண்டுக்கு பின் ஆட்சி அமைத்துள்ள தாலிபான்களினால் ஆப்கானிஸ்தானில் இன்று வரை பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகளும், வன்முறைகளும் ஏற்பட்ட வண்ணமே காணப்படுகின்றது. தாலிபான்கள் இஸ்லாமிய தீவிரவாத போக்கினை பின்பற்றுவதனால் இஸ்லாம் மதத்தில் குறிப்பிட்டுள்ள சட்டமுறைகளை அவர்களுக்கு ஏற்ற வகையில் அமைத்துக் கொண்டு ஆப்கானிஸ்தானில் வாழும் பெண்கள் மற்றும் சிறுமிகளினுடைய உரிமைகளை மீறும் வகையில் சட்டத்தினை கொண்டு ஆட்சி அமைத்து வருகின்றனர். இதன் மூலமாக பெண்களினுடைய உரிமைகள் மீறப்பட்டும், சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும் இடம்பெற்றுகின்றன. இஸ்லாத்தின் பார்வையில் பெண்களின் உரிமைகளை கருத்தில் கொண்டு அவர்களுக்கு சமூகத்தில் தோன்றுவதற்கும், படிப்பதற்கும், அரசியலில் பங்கு பெறுவதற்கும், சமூகத்தில் தங்கள் பங்கினை ஆற்றுவதற்கும் உரிமை அளிக்கிறது.

பெண்களை துன்புறுத்துதல், அவமானப்படுத்துதல் இஸ்லாம் மதத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. உண்மையில் இஸ்லாமிய சட்டத்தின் தாலிபான்கள் பதிப்பு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் உள்ள ஷரியாவிலிருந்து இவர்களினுடைய சட்டம் வேறுபடுகின்றது. மலேசியா, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் பெண்களின் நிலை குறித்து சுருக்கமாக நோக்கும்போது அந்நாடுகளில் பெண்கள் அரசியல் மற்றும் பொருளாதார, சமூகம் மற்றும் கல்வி துறைகளில் பெண்கள் சாதித்த வண்ணமே காணப்படுகின்றனர். மேலும் ஆப்கானிஸ்தானில் நிலவும் மனித உரிமை மீறல்கள் போல மேற்கூறிய எந்த நாடுகளிலும் காண முடியவில்லை. எனவே இஸ்லாமிய சட்டங்கள் பற்றிய தாலிபான்களின் தவறான எண்ணத்தின் விளைவாக தாலிபான் அரசாங்கத்தின் அனைத்து செயல்பாடுகளும் இஸ்லாமிய விதிகள் மற்றும் மனித உரிமைகளுக்கு முரணாக உள்ளது.

பொருளாதார வாய்ப்பு, இயக்கம் மற்றும் சமூக மற்றும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றை அணுகுவதற்கான ஆப்கானிஸ்தான் பெண்களின் உரிமைகளை பறிப்பது ஓர் சமத்துவ நாடு ஆகும். மிகவும் பாதுகாப்பான மற்றும் நிலையான பிராந்தியத்தை நோக்கி முன்னேறும் தலைமுறை இது அச்சுறுத்துகின்றது. எனவே ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் உடைய ஆட்சியின் மூலமாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், உரிமை மீறல்களின் ஊடாக பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு வருகின்றன. இதன் மூலம் பெண்கள் சிறுமிகளினுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. ஒரு நாடு அபிவிருத்தி நிலையில் வளர்ச்சி அடைய வேண்டுமானால் பெண்களின் பங்களிப்பு என்பது முக்கியமான விடயமாக காணப்படுகின்றது. ஆனால் ஆப்கானிஸ்தானில் எந்த துறையிலும் பெண்களினுடைய பங்களிப்பு என்பது காணப்படவில்லை. இதன் மூலமாக ஆப்கானிஸ்தான் ஒரு வளர்ச்சி அற்ற நாடாகவே காணப்படுகின்றது. எப்போதும் இவர்கள் தங்களினுடைய சட்டத்தினை திருத்தி பெண்களுக்கான பங்கேற்பை அனைத்து துறைகளிலும் கொடுக்கின்றார்களோ அப்போதே ஆப்கானிஸ்தான் வளர்ச்சி நிலையை அடைந்து அபிவிருத்தி நிலைக்கு செல்லும்.

**பரிந்துரைகள்**

- பெண்களுக்கு எதிரான தாலிபான் ஆட்சியின் பாரபட்சமான அணுகு முறையை முடிவுக்குக் கொண்டு வர ஐக்கிய நாடுகள் சபையும், அதன் அமைப்புகளும் தங்கள் பங்கை ஆற்ற வேண்டும்.
- ஆப்கானிஸ்தானில் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான அதிகார பகிர்வு என்பது அவர்களின் வளர்ச்சிக்கு சமமான பொருளாதார, சமூக, சட்ட மற்றும் அரசியல் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- தாலிபான்கள் பெண்கள் மீதான அவர்களின் அணுகுமுறைகளை மறுசீரமைப்பதற்கான திட்டங்களினை முன் வைக்க வேண்டும்.
- தாலிபான்கள் பெண்களுக்கு அரசியலிலும், ஆட்சியிலும் பங்கு கொள்ளும் உரிமையை அளித்து சட்டத்தில் உத்தரவாதம் அளித்து அவர்களை நம்பி அரசியல் பதவிகளை ஒப்படைக்க வேண்டும்.
- ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளித்து அவர்களுக்கு வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்க முடியும்.
- தாலிபான்கள் அல்குர்ஆனில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள், உரிமை மீறல்கள் என்பன இடம்பெறுவதை தவிர்க்க முடியும்.
- தாலிபான்கள் புதிய சட்டங்களை உருவாக்கி அதில் ஆப்கானிஸ்தானின் வாழும் பெண்களின் உரிமைகளையும் உட்பகுத்தி வலியுறுத்துதல் மற்றும் உரிமைகளை மீறுவதற்கான தடைகளை நீக்க வேண்டும்.
- பெண்களுக்கான பள்ளிகளை திறந்து பெண்களுக்கான கல்வியை வழங்குதல் மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்த பயனுள்ள திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.
- ஆப்கானிஸ்தானில் ஆண், பெண் இரு பாலருக்கும் சமமான அதிகார பகிர்வை வழங்க வேண்டும்.
- தாலிபான் ஆட்சியின் அங்கீகாரம் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு மற்றும் பெண்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான நிபந்தனையாக இருக்க வேண்டும்.

தாலிபான்கள் ஆட்சியின் மூலமாக ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடுகள், வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் என்பன இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளினை ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் அமல்படுத்துவதன் மூலமாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும், பாகுபாடுகளும், உரிமை மீறல்களினையும் இல்லாத ஒழிப்பதற்கான வாய்ப்பாக அமையும். ஆப்கானிஸ்தான் நாட்டில் மட்டுமல்லாமல் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பதற்காக பல்வேறு சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். மற்றும் சர்வதேசரீதியாக ஆப்கானிஸ்தானில் நடைபெறும் வன்முறைகள், பாகுபாடுகள், உரிமை மீறல்களை எதிர்த்து கண்டனங்களையும், சட்டங்களையும் பிறப்பித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக ஆப்கானிஸ்தானில் தாலிபான்களினுடைய ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டு அங்கு பாலின சமத்துவமும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான உரிமைகளும் சமத்துவமாக வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

**உசாத்துணைகள்**

Sahill, P. H. (2023). Dwelling in an all-male world: A critical analysis of the Taliban discourse on Afghan women, *Womens Studies International Forum, 98,* 102748. https://doi.org/10.1016/j.wsif.2023.102748

*Women in Afghanistan: Developments over the Last 20 Years and the Return of the Taliban,* (n.d.), Publications | CESifo. https://www.cesifo.org/en/publications/2022/article-journal/women-afghanistan-developments-over-last-20-years-and-return

Hartley-Blecic, M. M. (n.d.), *The Invisible Women: The Taliban's oppression of women in Afghanistan,* NSUWorks. https://nsuworks.nova.edu/ilsajournal/vol7/iss2/24/

Jan, A., Hassan, M., & Ramzan, M. (2022). Implications and prospects of Taliban's rule on Afghan women in Afghanistan in the post US withdrawal period, *ResearchGate.* https://www.researchgate.net/publication/365232832_Implications_And_Prospects_Of_Taliban's_Rule_On_Afghan_Women_In_Afghanistan_In_The_Post_US_Withdrawal_Period

Yousufi, F, (n.d.-b), *The prospect of women's rights in the Post-Taliban-Government peace agreement,* Virtual Commons - Bridgewater State University. https://vc.bridgew.edu/jiws/vol22/iss9/1/

OHCHR, (n.d.), *Afghanistan: Taliban attempting to steadily erase women and girls from public life – UN experts,* https://www.ohchr.org/en/press-releases/2022/01/afghanistan-taliban-attempting-steadily-erase-women-and-girls-public-life-un?LangID=E&NewsID=28029

*Afghanistan,* (n.d.-f), Medica Mondiale, https://medicamondiale.org/en/where-we-empower-women/afghanistan

*View of Afghan women after Talibanization* (n.d.). https://journal.formosapublisher.org/index.php/mudima/article/view/2605/2553

Dawi. A, (2022, December 24,. Women in Afghanistan facing numerous Taliban restrictions in 2022. *Voice of America,* https://www.voanews.com/a/women-in-afghanistan-facing-numerous-taliban-restrictions-in-2022/6868501.html#:~:text=The%20Taliban%20banned%20women%20from,on%20women's%20rights%20and%20freedoms.&text=Throughout%202022%2C%20the%20ruling%20Taliban,seen%20anywhere%20in%20the%20world

Yousaf, F & Peacock, D, (2023), Research report Beyond Stereotypes: Afghan Men as allies for Gender Equality and Feminist Peace, *The Journal of Men's Studies, 31(*3), 436.

# விகிதாசார தேர்தல் முறையில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிதுவம்: கடந்த ஐந்து பாராளுமன்ற தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு (2001 - 2020)

Ms. Rajah Ramya
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
rajaramya1119@gmail.com

Mr. Chelliah Sivanayagam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
sivanayagamc@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் இன்று பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையே காணப்படுகின்றது. தாராள ஜனநாயக ஆட்சி முறையின் உயிர் நாடியாக விகிதாசார பிரதிநிதித்துவமுறை விளங்குகின்றது. இலங்கையில் தற்போதைய யாப்பில் இப்பிரதிநிதித்துவ முறைமையே பின்பற்றப்பட்டும் வருகின்றது. இதன் மூலமாக ஜனநாயக விழுமியங்களைப் பேணிக்காப்பதற்காகவும் சிறுபான்மை மக்களின் அரசியல் பங்குப்பற்றலை உறுதிப்படுத்துவதற்காகவும், எளிய பெரும்பான்மை முறையில் ஏற்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்திப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட தேர்தல் முறையாக விதாசார பிரதிநிதித்துவ முறை காணப்படுகின்றது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றினால் ஜனநாயகம் சிறப்பாக பேணப்படுவதுடன், சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டாலும் நடைமுறையில் அதன் பிரதிபலிப்பு எதிர்மறையான பல விளைவுகளை இலங்கையைப் பொறுத்தவரையில் ஏற்படுத்திவருகின்றன. இவ்விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு மலையகத்தின் ஒரு பகுதியாக காணப்படும் கேகாலை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவ பின்னடைவு குறித்த விடயங்களை ஆராயும் வகையில் கேகாலை மாவட்டத்தின் தற்போதைய பிரதிநிதித்துவ நிலைப்பாடு, பிரதிநிதித்துவ பின்னடைவிற்கான காரணம், அதற்கான தீர்வு முயற்சிகளை கண்டறியும் பொருட்டு பண்புசார் தகவல்களையும், அளவுசார் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு அவை இரண்டும் இணைந்த கலப்பு அணுகுமுறையினுடாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அரசியல் பங்குபற்றுகை, சிறுபான்மையினர், பிரதிநிதித்துவ ஜனநாயகம், விகிதாசாரத் தேர்தல்முறை, ஜனநாயக விழுமியம்*

**ஆய்வு அறிமுகம்**

இன்று உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயக முறையே காணப்படுகின்றது. ஜனநாயகம் என்பது மக்களுக்காக மக்களினால் நடாத்தப்படும் மக்களின் ஆட்சி முறையாகும். ஆரம்ப காலத்தில் குறிப்பாக கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகம் நடைபெற்றது. அங்கு ஆட்சிக்குட்பட்ட அனைத்து மக்களும் ஒன்று கூடி ஆட்சிக் கருமங்கள் பற்றிய தீர்மானங்களை எடுத்தனர். தற்காலத்தில் நாடுகளின் பரந்த நிலப்பரப்பு, சனத்தொகை அதிகரிப்பின் தாக்கம், ஒன்று கூடுவதிலுள்ள சிரமங்கள் போன்ற காரணிகளினால் நேரடி ஜனநாயகமானது பிரதிநிதித்துவ ஜனநாயகமாக மாற்றமடைந்துள்ளது. ஜனநாயகத்தை இரண்டு அம்சங்களில் அடையாளம் காணலாம். அதில் மிகவும் பிரபலமான அம்சம் பிரதிநிதித்துவ அரசாங்கமாகும். இது அரச நிர்வாகத்தின் நடைமுறைப் பற்றிய தெளிவான அமைப்பை வெளிப்படுத்துகிறது. தாராள ஜனநாயக ஆட்சி முறையின் உயிர்நாடியான பிரதிநிதித்துவ முறையானது இன்று எளிய பெரும்பான்மை முறை, விதாசார பிரதிநிதித்துவ முறை, கலப்பு பிரதிநிதித்துவ முறை, தொழில்வாரியான பிரதிநிதித்துவ முறை போன்ற வடிவங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது (E- Thaksalawa, 2001).

இதில் ஜனநாயக விழுமியங்களை பேணிக்காப்பதற்காகவும் சிறுபான்மை மக்களின் அரசியல் பங்குப்பற்றலை உறுதிப்படுத்துவதற்காகவும், எளிய பெரும்பான்மை முறையில் ஏற்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்திப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட தேர்தல் முறையாக விதாசார பிரதிநிதித்துவ முறை காணப்படுகின்றது. அதாவது நாடு தழுவிய ரீதியில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப நாடாளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்கீடு செய்யும் முறையே விகிதாசார தேர்தல்முறை எனப்படுகின்றது. சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்க பலமுறைகள் உள்ளன. அதில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றினால் சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்ற கருத்தியல்கள் முன்வைக்கப்பட்டாலும் நடைமுறையில் எதிர்மறையான விளைவுகளே காணப்படுகின்றன. பல்லின மக்களைக் கொண்ட இன்றைய இலங்கையிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையே அறிமுகப்படுத்தப்பட்டடுள்ளன. ஆயினும் இங்குள்ள சிறுபான்மையினர் போதியளவு பிரதிநிதித்துவத்தினை பெற்றுக்கொள்கின்றனரா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் சிறுபான்மையினராக மலையக தமிழ் மக்களும் காணப்படுகின்றனர். அந்தவகையில் மலையகத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் மற்றும் உத்தேச தேர்தல் சீர்திருத்தத்தில் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்தல் போன்ற விடயங்களில் ஒருவித தொய்வு நிலை காணப்படுவதாக மலையக சிவில் அமைப்பான ஜனநாயகத்திற்கான மலையக அமைப்பு தெரிவித்துள்ளது. 35க்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய ஜனநாயகத்திற்கான மலையக அமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம் ஹட்டன் நகரில்

நடைபெற்ற போது, புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் மற்றும் தேர்தல் சீர்திருத்தம் போன்றவை தொடர்பாக ஆராயப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில், இந்த இரு விடயங்களிலும் மலையக மக்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நிலைமை தோன்றியுள்ளதாக கூறப்பட்டுள்ளது (சமகளம், 2020).

இதன்படி குறைந்தளவிலான மலையக தமிழ் மக்களை கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக கேகாலை மாவட்டமும் காணப்படுகின்றது. இங்கு மொத்தமாக 840,648 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர். இது இலங்கையின் மக்கள் தொகையில் 4.0% ஆகும். இஸ்லாமியர்கள் உட்பட இங்கு தமிழ் பேசும் மக்கள் 121,606 பேர்கள் வாழ்கின்றனர். இனக்குழு அடிப்படையில் 61,609 இஸ்லாமியர்களும், 59,997 தமிழர்களும் வாழ்கின்றனர் (City population, 2021). ஆனால் அங்குள்ள தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் என்பது கேள்விக்குறியான நிலையிலேயே அமையப்பெற்றுள்ளது. மேலும் இவர்கள் தொடர்ந்தும் பெரும்பான்மையின சிங்கள தலைமைத்துவத்தின் கீழ் ஆளப்பட்டு வருகின்ற நிலையிலுள்ளனர். பல்லின மக்கள் இணைந்து வாழ்வதனால் வாக்குபலம் என்பது பெருபான்மை சமூகத்தினையே சென்றடைகின்றது.

இதனால் இம் மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதிதுவம் என்பது சாத்தியமற்று போயுள்ளது. கேகாலை மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் தொடர்ந்தும் இஸ்லாமியர் சார்பில் ஒருவருக்கு பிரதிநிதிதுவம் கிடைக்கப்பெறுகின்ற அதேநேரம் இதுவரைகாலமும் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதிதுவம் கூட கிடைக்கப்பெறாமையானது இம் மாவட்ட தமிழர்களின் பாரிய அரசியல் பிரச்சினையாக பார்க்கப்படுகின்றது. மேலும் குறைந்தது சிறப்பு ஏற்பாடுகளின் மூலமாவது இம் மாவட்ட தமிழ் மக்களுக்கென ஒரு பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற வேணடு மெனவும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. தமிழ் பிரதிநிதித்துவம் இன்மையால் தமிழ் மக்கள் குறிப்பாக கேகாலை மாவட்டத்திலுள்ளவர்கள் அரசியல் அநாதைகளாகவும், அபிவிருத்தியிலே பின்நிற்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏனெனில் தமிழர்கள் பின்தங்கிய நிலையிலுள்ளதனால் அவர்கள் எதிர்க்கொள்கின்ற பிரச்சினைகள் வெளிக்கொணரப்படுவதில்லை.

அதேநேரம் பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமலுமுள்ளது. தமக்கான அரசியல் பின்புலம் அதாவது ஒரு பிரதிநிதியின்மையால் இம்மாவட்டத்தில் காலகாலம் தமிழ் மக்கள் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கேகாலை மாவட்டத்தில் தமிழர்களுக்கான பாராளுமன்ற பிரதிநிதிதுவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாமைக்கான காரணங்களை இனங்காணும் அதேவேளை மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதிதுவம் பாராளுமன்ற நுழைவில் எதிர்நோக்கும் சவால்களை வெளிக்கொணர்தல், மாவட்ட தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான விழிப்புணர்வு

மட்டத்தினை அடையாளங்காணுதல், மற்றும் இப் பாராளுமன்ற பிரதிநிதிதுவ பிரச்சினையை நிவர்த்திப்பதற்கான தீர்வு முயற்சிகளை முன்வைத்தல் என்ற நோக்கில் இவ்வாய்வு பயணிப்பதுடன் கேகாலை மாவட்ட தமிழ் மக்கள் தமது பாராளுமன்ற பிரதிநிதிதுவஇருப்பினை நிலைநாட்ட வாக்களிப்பு முறையினை ஒருநிலைப்படுத்துதல் என்ற கருதுகோளினையும் அடிப்படையாகக்கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

"விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை : ஓர் ஒப்பீட்டு" ஆய்வு என்ற ஆய்வானது இப் பிரதிநிதித்துவமுறை உருவாக்கத்திற்கான பல்வேறு பின்னணிகள் பற்றியும், அதன் வெவ்வேறு வகைகள் பற்றியும் கோட்பாட்டு, மற்றும் நடைமுறைரீதியான அணுகு முறைகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒவ்வொரு தேர்தல் முறைகளதும் தன்மைகள் விரிவாக ஆய்வுசெய்யப்பட்டுள்ளதுடன் அவை பற்றிய மதிப்பீட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது (இரகுநாதன், 2015). பொதுவான கண்ணோட்டத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பற்றிய விடயங்களை ஆராயும் வகையில் அமைந்துள்ள இவ்வாய்வில் இலங்கையில் இப்பிரதிநிதித்துவ முறையினால் தமிழ் சிறுபான்மை மக்கள் எதிர்க்கொள்ளும் சவால்கள் குறிப்பிடப்படவில்லை.

"விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மற்றும் இலங்கையின் பல இன சமூகத்தின் மீதான அதன் தாக்கங்கள்" என்ற ஆய்வுக் கட்டுரையில் பிளவுபட்ட சமூகத்தில் விகிதாசார தேர்தல் முறைகளின் தாக்கம் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆய்வு இலங்கையின் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் பலம், பலவீனம் மற்றும் நிறுவன வடிவமைப்பை ஆராய்வதோடு, முடிவெடுப்பதில் சிறுபான்மையினரை ஒதுக்கி வைக்கும் அபாயத்தையும், இன வன்முறையையும் குறைப்பதற்கான தீர்வுகளையும் பரிந்துரைத்துள்ளது (மொஹமட் அலிப், 2018). பொதுவான விளைவுகளை கூறுகின்ற அதேநேரம் இதுவரை தமக்கான பாராளுமன்ற அரசியல் பிரதிநிதியை பெற்றுக்கொள்ள முடியாதுள்ள கேகாலை மாவட்ட நிலைப்பாடுகள் தொடர்பில் எவ்வித கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை.

"இலங்கைக்கான சரியான தேர்தல் முறை: ஜேர்மனியிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்" என்ற ஆய்வானது சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் எளிய பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசார முறை என்ற இரணடு முக்கிய தேர்தல் முறைககளினதும் நன்மைகள் மற்றும் தீமைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விகிதாசார முறைமையின் பலவீனங்கள் குறித்த பலத்த விமர்சன பார்வையில் எளிய பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசார முறை ஆகிய இரணடின் அனுகூலங்களையும் உள்ளடக்கிய கலப்பு முறையினை ஜேர்மனி நாட்டை மையப்படுத்தி வெவ்வேறு கணே ணாட்டங்களில் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கைக்கு மிகவும்

பொருத்தமான தேர்தல் முறையை அடையாளம் காணும் முயற்சியாக அமைந்துள்ளது. (புரசிங்க, 2017). இதில் தமிழ் சிறுபான்மையினர் தொடர்பிலான விடயங்கள் மற்றும் அவர்கள் அரசியல் பிரதிநிதித்துவமின்றி எதிர்க்கொள்ளும் பிரச்சினைகள் குறிப்பிடப்படவில்லை.

"விகிதாச்சாரத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவம்" என்ற ஆய்வு சிறுபான்மை பிரதிநிதித்துவம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை என வரையறுக்கப்படுகிறது எனவும் விகிதாசார பிரதிநிதித்துவம் சிறுபான்மை நிலையை ஆதரிக்கிறது எனவும் மேலும் சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் மூடிய பட்டியல் மற்றும் திறந்த பட்டியலின் கீழ் வாக்காளர்களாக இருக்கும் போது குறைவாக இருப்பதைக் எடுத்துக்காட்டுகின்றது (மார்கெரிட்டா, 2014). இதில் குறிப்பிடப்படும் விடயத்திற்கு எதிர்மாறான விடயங்களே அண்மைக்காலங்களில் நிகழ்கின்றது. இது தொடர்பிலான எவ்வித எடுத்துக்காட்டுகளும் முன்வைக்கப்படவில்லை.

"சிறுபான்மையினரின் நலன்களை ஊக்குவிக்க விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஏன் தோல்வியடைந்தது?" என்ற ஆய்வு கட்டுரை சமகால இலங்கை அரசியலில் விகிதாசார பிரதிநிதித்துவம் அமைப்பை ஆராய்கிறது. நிறைவேற்று ஜனாதிபதி முறையானது சிறுபான்மைக் கட்சிகளை ஊக்குவிப்பதில் விகிதாசார பிரதிநிதித்துவம் முறையின் செயல்திறனை மறுத்துள்ளது என்று இவ்வாய்வு வாதிடுகிறது (மின்னா தாஹீர், 2017).

மேற்கொள்ளப்பட்ட இலக்கிய மீளாய்வு முடிவின் பிரகாரம் சிறுபான்மை மக்களின் நலன் பேணும் வகையில் உருவாக்கப்பட்ட விகிதாசார பிரதிநிதிதுவ முறைமையின் நோக்கம், அதன் சாதக பாதக விளைவு, சமூகத்தின் மீதான தாக்கம், பாராளுமன்ற தேர்தல் முறைகளில் சிறுபான்மையின பிரதிநிதிகள் குறைவானதாக தெரிவாகப்படுவதனால் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், கேகாலை தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு காணப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியல் பங்கேற்பு நிலை, மற்றும் பிரதிநிதிதுவமின்மையால் அவர்கள் இனத்தின் அடிப்படையில் அரசியல் ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள். தொடர்பாக எவ்வித ஆய்வுகளும் 2001 தொடக்கம் 2020 வரையிலும் செய்யப்படவில்லை என்பதை இவ் இலக்கிய மீளாய்வு மூலம் கணடறியப்பட்டுள்ளது. எனவே இவ்விடைவெளியை பூர்த்தி செய்யும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு அணுகுமுறைகள்**

இந்த ஆய்வானது விகிதாசார பிரதிநிதிதுவ கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகின்றது. பண்புசார் தகவல்களும் அளவுசார் தகவல்களும் தேவையாக இருப்பதால் அவை இரண்டும் இணைந்த கலப்பு அணுகுமுறையே இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரவு சேகரிப்பு முறைகள் - முதலாம்நிலைத் தரவுகளில் பண்புசார் தகவல்களைப் சேகரிப்பதற்காக நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் நேர்காணலானது முன்னாள் நகரசபை உறுப்பினர், ஆசிரியர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், கத்தோலிக்கத் திருச்சபை செயலாளர், பட்டதாரி மாணவர்கள் மற்றும் சமூகநலன் விரும்பிகள் போன்றோர் எளிய எழுமாற்று மாதிரியெடுப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நேர்க்காணல் இடம்பெற்றது. கலந்துரையாடல்களானது 3 - 4 நபர்களினை உள்ளடக்கிய வகையில் 7 குழுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் பிரதிநிதித்துவ குறைபாடு தொடர்பில் அளவு ரீதியான தகவல்களை அறிந்துக் கொள்வதற்காக வினாக்கொத்துக்கள் மூலம் நேரடியாகவும் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. 100 வினாக்கொத்துக்கள் சீரற்ற நோக்கு மாதிரியின் அடிப்படையில் அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்கள் சார்பிலும், ஏனைய மக்கள் சார்பிலும் பகிர்ந்தளிக்கப்பட்டு அளவு ரீதியான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

மொத்த 45,000 தமிழ் வாக்காளர்களிலிருந்து 100 பேர் தெரிவு செய்யப்பட்டு 45 வீதமான மக்களிடமிருந்து வினாக்கொத்துகளினூடாக தகவல்கள் பெறப்பட்டுள்ளன. பிரதிநிதிதுவ குறைபாடு தொடர்பான ஆய்வு என்ற வகையில் ஆய்வு நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு வசதி மாதிரியெடுப்பு அடிப்படையில் ஏனைய மேலதிக தகவல் பெறுநர்கள் தெரிவுச்செய்யப்பட்டு நேர்காணல் மூலமும் முதலாம் நிலை தரவுகள் பெறப்பட்டுள்ளன. மேலும் காலவரையறையினைக் கருத்திற்கொண்டு தொலைப்பேசி உரையாடல்களின் மூலமும் தரவுகளும், தகவல்களும் பெறப்பட்டுள்ளன. இரணடா ் ம் நிலை தரவுகளாக நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தள குறிப்புக்கள், வெளியிட்டப்பட்ட அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள் மூலம் பெறப்பட்ட தரவுகள், தகவல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தரவு பகுப்பாய்வு முறைமை - ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகள் கலப்புமறை பகுப்பாய்வு (Mixed Method Research) முறைகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு பொருத்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் MS Excel நுட்ப முறையை கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் பண்புசார் தரவுகளையும் அளவுசார் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்ட கலப்புசார் பகுப்பாய்வு முறைமையே இவ் ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றது.

**கலந்துரையாடலும் முடிவும்**

**கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் தற்போதைய அரசியல்நிலை**

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தமிழ் பிரதிநித்துவம் பற்றி பரவலாக பேசப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இன்மையால் இம்மாகாண தமிழ் மக்கள் தங்களுடைய இன பிரதிநிதித்துவத்தில் வலுவற்றவர்களாக காணப்படுகின்றனர். குறிப்பாக கேகாலை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் அரசியல் அநாதைகள், அபிவிருத்தியிலே பின்நிற்கின்றவர்கள், அரசியல் சக்தியற்றவர்கள் என்றெல்லாம் கட்டுரைகள் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. மக்கள் தொகைக்கு ஏற்ப நாடாளுமன்றத்திற்குப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதில்லை (துரைசாமி, 2023).

இதில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள இவர்கள் தமது பொருளாதாரச் செலவுகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணடா ˙ டுகின்றனர் இது போன்றே அரசியல் ரீதியிலும் பிரதிநிதித்துவமின்மையால் மனிதவுரிமைகள், சமூக பாதுகாப்பு, சுதாதாரம், பொது நிர்வாகம், சேவை வழங்கள் போன்ற பல்வேறு அடிப்படை சமூக கட்டுமானங்களிலும் இம் மாவட்ட தமிழ் மக்கள் பின்தள்ளப்பட்டும், அநீதியிழைக்கப்பட்டும் வாழ்கின்றனர். இவர்கள் தொடர்ந்தும் இனத்தின் அடிப்படையில் அரசியல் ரீதியாக பின்நிற்கின்றனர் (லோறன்ஸ், 2023).

விகிதாசர தேர்தல் முறையில் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ நிலைப்பாடு என்ற தலைப்பினூடாக இதுவரை காலமும் பிரதிநிதித்துவமின்றி காணப்படும் கேகாலை மாவட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவ நிலைப்பாட்டினை கடந்த 2001 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்ற 5 பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய முற்பட்டுள்ளது.

**கடந்த 5 பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் (2001, 2004, 2010, 2015, 2010)**

| கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகள் | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | கட்சி | பெற்ற வாக்குகள் | சதவீதம் | ஆசன எண்ணிக்கை |
| 2001 | UNF | 208,104 | 49.36% | 5 |
| | PA | 170,901 | 40.53% | 3 |
| | JVP | 36,711 | 8.71% | 1 |
| 2004 | UPFA | 214,267 | 50.88% | 5 |
| | UNF | 186,641 | 44.32% | 4 |
| 2010 | UPFA | 242,463 | 66.89% | 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| | UNF | 104,925 | 28.95% | 2 |
| 2015 | UNP | 247,467 | 49.52% | 5 |
| | UPFA | 227,208 | 40.47% | 4 |
| 2020 | SLPP | 331,573 | 66.29% | 7 |
| | SJB | 131,317 | 26.25% | 2 |

ஆதாரம்: பகுப்பாய்வின் முடிவுகள் (2023 டிசெம்பர்)

| அளிக்கப்பட்ட வாக்குகளின் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | பதிவான வாக்குகள் | மொத்தமாக வாக்களித்தோர் | செல்லுபடியான வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | செல்லுபடியான வாக்குகளின் சதவீதம் |
| 2001 | 554,697 | 444,309 | 421,640 | 22,669 | 80.10% |
| 2004 | 570,229 | 446,816 | 421,131 | 25,685 | 78.35% |
| 2010 | 613,938 | 388,420 | 362,455 | 25,965 | 63.27% |
| 2015 | 649,878 | 518,674 | 499,694 | 18,980 | 96.34% |
| 2020 | 684,189 | 524,754 | 500,207 | 24,547 | 95.32% |

ஆதாரம்: பகுப்பாய்வின் முடிவுகள் (2023 டிசெம்பர்)

| வெற்றிபெற்ற பிரதிநிதிகள் | | | | |
|---|---|---|---|---|
| 2001 | 2004 | 2010 | 2015 | 2020 |
| ருக்மன் சேனாநாயக்க UNF | ருக்மன் சேனாநாயக்க UNF | H.R மித்ரபாலல UPFA | துஸ்மந்த மித்ரபால UPFA | H.R மித்ரபால SLPP |
| மைப்பால ஹேரத் PA | மைப்பால ஹேரத் UPFA | கனக ஹேரத் UPFA | கனக ஹேரத் UPFA | கனக ஹேரத் SLPP |
| A.D சம்பிக பிரேமதாச UNF | R.M காமினி திச்நாயக்க UPFA | A.D சம்பிக பிரேமதாச UNF | துஷித விஜேயமன்ன UNP | சுதந்த் மஞ்சுல SLPP |
| A. செனவிரத்ன PA | A.D சம்பிக பிரேமதாச UNF | A. செனவிரத்ன UPFA | சுஜித் சஞ்சீவ UNP | சுஜித் சஞ்சீவ SJB |
| கபீர் ஹாசிம் UNF | A . செனவிரத்ன UPFA | ரஞ்ஞித் சியம்பலாபிடிய UPFA | ரஞ்ஞித் சியம்பலாபிடிய UPFA | ரஞ்ஞித் சியம்பலாபிடிய SLPP |
| ரஞ்ஞித் சியம்பலாபிடிய PA | கபீர் ஹாசிம் UNF | Y.G பத்மசிறி UPFA | A.D சம்பிக பிரேமதாச UNP | ரஜிகா விக்ரமசிங்க SLPP |
| R.A.D சிறிசேன UNF | ரஞ்ஞித் சியம்பலாபிடிய UPFA | ஜெகத் பாலசூரிய UPFA | தாரக பாலசூரிய UPFA | தாரக பாலசூரிய SLPP |
| R.M காமினி ரத்நாயக்க JVP | மனோ விஜயரத்ன UNF | லலித் திசாநாயக்க UPFA | சஞ்ஞித் சமரசிங்க UNP | உதயகாந்தன் குணதிலக SLPP |

ஆதாரம்: பகுப்பாய்வின் முடிவுகள் (2023 டிசெம்பர்).

1. JVP - Janatha Vimukthi Peremune.
2. PA - people's Alliance.
3. SLPP - Sri Lanka Podujana Peremuna.
4. SJB - Samaji Jana Balawegaya.
5. UNF - United National Front.
6. UPFA - United people's Freedom Alliance.

7. UNP - United National Party.

**பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தொடர்பில் கேகாலை மாவட்ட தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் விழிப்புணர்வு நிலை**

பிரதிநிதித்துவம் தொடர்பிலான தெளிவு கேகாலை மாவட்ட தமிழர் மத்தியில் எவ்வாறான நிலையில காணப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்காக வினாக்கொத்துக்களின் மூலம் பல தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவையாவன,

**தமது மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவமின்மைக்கான தெளிவு தொடர்பில்** அறிந்து கொள்வதற்காக வினாக்கள் எழுப்பப்பட்ட போது 90 வீதமான மக்களுக்கு தமக்கான தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இல்லை என்பது அறியப்பட்டுள்ளது. 5வீதமான மக்களிடம் பாராளுமன்றத்தில் தமக்கான தமிழ் பிரதிநிதி இருக்கின்றனரா? இல்லையா? என்ற சந்தேக நிலை காணப்படுகின்றமையினை அறிய கூடியதாக இருந்தது. மிகுதியான 5வீதமான தமிழ் மக்கள் தமக்கான பிரதிநிதி தொடர்பில் எவ்வித தரவுகளும் தெரியாது என்ற காரணத்தையே முன்வைத்தனர். இத்தரவுகளின் பெறுபேற்றினை பின்வரும் வரைபடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.




ஆதாரம்: கள ஆய்வு (2023 டிசெம்பர்)

**பிரதிநிதித்துவம் தொடர்பிலான அறிவூட்டல்கள்** மக்கள் மத்தியில் எந்த அளவில் காணப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்காக கேட்கப்பட்ட வினாவிற்கான பெறுபேற்றில் பிரதிநிதித்துவம் தொடர்பிலான அறிவூட்டல்கள் திருப்திகரமான நிலையில் இல்லை என்பதனை அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது 66வீதமான மக்கள் மத்தியில் அறிவூட்டல்களும் வழிகாட்டல்களும் போதுமானதாக இல்லை என்ற பதிலை பெறக்கூடியதாக

இருந்தது. 20 விதமான மக்கள் மத்தியில் ஓரளவுக்கு பிரதிநிதித்துவம் தொடர்பான வழிகாட்டல்கள் போதுமானதாக இருக்கின்றது எனவும் கூறினர். எஞ்சிய 14 வீதமான மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவம் தொடர்பான வழிகாட்டல்கள் போதுமானதாக காணப்படுகின்றது என்ற தகவல்களை முன்வைத்தனர். கிடைக்கப்பெற்ற தரவுகளை பின்வரும் வரைபடத்தின் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.




ஆதாரம்: கள ஆய்வு (2023 டிசெம்பர்)

விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை தொடர்பில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பார்க்கும்போது 51வீதமான மக்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் தொடர்பான எந்த ஒரு அடிப்படை அறிவும் இல்லாத நிலையும், 27வீதமானவர்களுக்கு ஓரளவாகவும் 22வீதமானோர் விகிதாசார தேர்தல் முறை பற்றிய பூரண அறிவைப் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பதனையும், தேர்தல் முறை பற்றிய தெளிவின்மையும் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவத்தினை பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளது என்பதனையும் அறிந்து கொள்ள முடிந்தது. இதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.




ஆதாரம்: கள ஆய்வு (2023 டிசெம்பர்)

**பெரும்பான்மை இனத்தினை சார்ந்திருத்தல்** இலங்கையில் கலாசாரங்களுக்கிடையில் ஒற்றுமை என்ற நிலையினைத் தாண்டி நலன் அடிப்படையில் சார்ந்திருக்கும் நிலைத் தோன்றியுள்ளது. பொதுவாக இம் மாவட்ட தமிழ் மக்கள் பிறப்பில் தமிழர்களாகவும் அவர்களது வாழ்க்கைமுறை முழுமையாக சிங்கள கலாசார பண்பாட்டம்சங்களை வெளிக்காட்டும் வகையிலேயே அமைந்துள்ளது.

இது தொடர்பிலான விடயங்களை கள ஆய்வின் போது அவதாணிக்கக் கூடியதாக இருந்தது. இதற்குப் பல காரணங்களும் செல்வாக்கு செலுத்துகின்றன. இதனைப் பின்வரும் வரைப்படத்தின் மூலம் தெளிவுருத்தலாம்.




ஆதாரம்: கள ஆய்வு (2023 டிசெம்பர்)

இதனடிப்படையில் சிங்கள மொழி கலாசாரங்களை ஆதரிப்பவர்களாக 43 வீதமானோரும், 28 வீதமானோர் ஓரளவிற்கு சிங்கள இன, கலாசாரத்தினை ஆதரிப்பவர்களாகவும், 29 வீதமானோர் இக்கருத்தினை நிராகரிப்போர்களாகவும் தமது கருத்துக்களை தெரியப்படுத்தினர். இதற்காண காரணங்களைப் பார்க்கும் போது பெருபான்மை இனத்திற்கு சாதகமான கருத்துக்களை வெளியிட்டோர் அனைவரும் அருகிலுள்ள சிங்கள மொழிமூல பாடசாலைகளில் பயில்பவர்களாகவே காணப்பட்டனர். இதனால் பெரும்பாலான நட்பு வட்டாரங்களும் சிங்கள மக்களை சார்ந்தே அமைகின்றது. இதற்கு உதாரணமாக தமிழ் சிறுவன் ஒருவனும் பௌத்த துறவியான சந்தர்ப்பமும் அண்மையில் இடம்பெற்றமையினைக் குறிப்பிடலாம்.

**பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினை பெற்றுக்கொள்வதில் காணப்படும் தடைகள்**

▪தமிழர்கள் சிறுபான்மை மக்களாக காணப்படுகின்றமை : கேகாலை மாவட்டத்தில் 840,648 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர். இஸ்லாமியரகள் உட்பட இங்கு தமிழ் பேசும் மக்கள் 121,606 பேர் செறிந்து வாழ்கின்றனர். இனக்குழு அடிப்படையில் 61,609 இஸ்லாமியர்களும் 59,997 தமிழர்களும் வாழ்கின்றனர். இதில் பாராளுமன்ற தேர்தலில் தொடர்ந்து இஸ்லாமியர் சார்பில் ஒருவருக்கு பிரதிநிதித்துவ கிடைக்கப்படுகின்றது. அதே நேரம் இஸ்லாமியர்களோடு ஒப்பிடும்போது தமிழர்கள் எண்ணிக்கையில் அண்ணளவாக 2000 மக்கள் தொகையினரே குறைவான நிலையில் காணப்படுகின்றனர். ஆனால் இதுவரை காலமும் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமையானது, இம்மாவட்ட தமிழர்களின் பாரிய அரசியல் பின்னடைவினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. சிறுபான்மை மக்களாக காணப்படுகின்றமையும் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்வதில் தயக்க நிலையினை ஏற்படுத்துவதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

▪கல்வி ரீதியிலான பின்னடைவு : சிங்கள மொழிமூல பாடசாலைகளோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவான எணண் ிக்கையிலேயே தமிழ்மொழிமூல பாடசாலைகள் காணப்படுகின்றன. கணிசமான அளவில் தமிழ் மக்கள் வாழ்ந்த போதிலும் சில பிரதேசத்தில் ஒரு தமிழ்ப் பாடசாலை கூட இல்லாத நிலையில் அங்குள்ள பிள்ளைகள் மாற்று சமூக மற்றும் மாற்று மொழிப் பாடசாலைகளில் இணைந்து கற்கும் கட்டாய நிலை காணப்படுகின்றது. பத்தாயிரம் வரையான மாணவ, மாணவியர் தமிழ்ப் பாடசாலைகளில் கற்கும் நிலையில் மூவாயிரம் வரையான தமிழ்ப் பிள்ளைகள் வேற்று மொழி பாடசாலைகளில் கற்று வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் தேசிய கல்விக் கொள்கைக்கமைய பிற மொழி பாடசாலைகள் பலவற்றில் குறிப்பாக சிங்கள பாடசாலைகளில் கற்போர் தமது சமயமான இந்து சமயத்தைக் கற்க முடியாத நிலையிலுமுள்ளனர்.

▪ஒற்றுமையின்மை : கேகாலை மாவட்ட தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற பெரும்பான்மை இனத்திற்கேற்ற சார்பு நிலையும், சிங்கள இன மக்களின் வாழ்க்கை முறை மீதான ஈடுபாடும் தமிழர்களுக்கு தேவையான பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனக்குறைவை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பான்மை இன பிரதிநிதிகளின் மூலம் தமது தேவைகள் நிறைவேற்றப்படுவதினால் சிறுபான்மை மக்களாக காணப்படுகின்ற தமிழர்களும் தமக்கான ஒரு பிரதிநிதி என்ற எணண் த்தினை விடுத்து பெரும்பான்மை இன பிரதிநிதிகளுக்கு தொடர்ந்தும் தமது பங்களிப்பினையும் ஆதரவினையும் தெரிவித்து வருகின்றனர். தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படும்போது அவர்களது முழுமையான வாக்கு பலமும் ஒரு பிரதிநிதி தமிழ் பிரதிநிதியை தெரிவு செய்வதற்கு உறுதுணையாக இருந்திருக்கும் ஆனால் இந்நிலை ஒற்றுமையின்மை காரணமாக வாக்குகள் சிதறடிக்கப்பட்டு அவை அனைத்தும்

பெரும்பான்மையினப் பிரதிநிதிகளை சென்றடைகின்ற நிலையே கேகாலை மாவட்டத்தை பொறுத்த வரையில் காணப்படுகின்றது.

▪தாழ்வு மனப்பாங்கு : சிறுபான்மை மக்கள் தம்மை அகவுணர்வு ரீதியாக தாழ்த்திக் கொள்கின்றமையும் பிரதிநிதித்துவ பற்றாக்குறைக்கு தடையாக காணப்படுகின்றது அதாவது இவர்களிடையே காணப்படும் இரணடா ் ம் நிலையிலுள்ளோம் என்ற மனநிலையை இதுக்கு காரணமாகும். நான் ஒரு சிறுபான்மை இனத்தை சேர்ந்த தமிழன், அவர்களைப் போல் தலைமைத்துவத்தினை கொண்டு நடாத்த முடியாது, தேர்தலில் போட்டியிட்டாலும் என்னால் பாராளுமன்ற பிரதிநிதியாக முடியாது போன்ற தாழ்வு மனப்பான்மை காரணமாகவே சிறுபான்மை மக்கள் மத்தியில் தலைமைத்துவ பண்பும், ஆற்றலும் காணப்பட்டாலும் அவர்கள் பிரதிநிதியாக முன் வருவதில் தயக்கம் காட்டி வருகின்றனர். சிறுபான்மை மக்கள் சார்பாக தேர்தலில் போட்டியிடுவது பெரும்பான்மை இனத்தோடு ஒப்பிடுகையில் மிக மிக குறைவான எண்ணிக்கையாகவே காணப்படுகின்றது. அதே சமயம் அறியாமையும் இதற்கு ஒரு காரணமாக தெரிய வந்துள்ளது.

▪பெரும்பான்மை இனத்திற்கு ஏற்ற வகையில் இசைவாக்கமடைதல் : சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை இன மக்களோடு அதிகமாக ஒன்றிணைந்த சூழ்நிலையில் வாழ்கின்றமையால் அவர்களின் கலாசாரம், நடத்தைகளுக்கு ஏற்ப சிறுபான்மையின மக்களும் இசைவாக்கம் அடைந்து செல்கின்றனர். இம் மாவட்டத்தினை பொறுத்தவரையில் இப் விடயமானது சாதாரண ஒரு நிகழ்வாக காணப்படுகின்றது. குறிப்பாக தனது பிள்ளைகளை சிங்கள மொழிமூல பாடசாலைகளுக்கு அனுப்பி கற்க செய்கின்றார்கள். சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களாக தங்களை மாற்றி வருகின்றனர். இதனை அவர்கள் பெருமையுடனும் கூறிக் கொள்கின்றனர் அதாவது அவர்களின் வாழ்க்கை முறை பிறப்பு சான்றிதழில் மட்டுமே தமிழர்கள் என்று அடையாளத்தை கொண்டதாக காணப்படுகிறது. மேலதிகமாக அவர்களுடைய பேச்சு, நடத்தை, கலப்பு திருமணம் மற்றும் வழிபாட்டு முறைகள் உள்ளிட்ட அனைத்து பாரம்பரிய அம்சங்களும், சிங்கள இனத்திற்கு ஏற்ற வகையில் தற்போது மாற்றம் அடைந்து வந்துள்ளது.

▪நம்பிக்கையின்மை : பிரதிநிதித்துவம் கிடைக்காமைக்கு பிரதானதோர் தடையாக அமைவது நம்பிக்கையின்மை ஆகும். அதாவது சிறுபான்மை மக்கள் மத்தியில் தமக்கான தமிழ் பிரதிநிதிகள் சிறப்பாக செயல்படுவர் என்ற நம்பிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. பெரும்பாலும் தமிழ் பிரதேசங்களில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து நலன்களும் பெரும்பான்மையின பிரதிநிதிகள் மூலமாக இதுவரை காலமும் செய்து தரப்பட்டுள்ளன. இதனால் தமிழர்கள் மத்தியிலும் தமிழ் பிரதிநிதித்துவம் தொடர்பில் நம்பிக்கை இல்லாத நிலை தோன்றியுள்ளது. மேலும் இதுவரை காலமும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில்

வெற்றி பெற்ற தமிழ் பிரதிநிதிகள் தமது சுயநல தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்துள்ளனர். தமிழ் சிறுபான்மை மக்கள் மத்தியில் தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட வேணடும் என்ற விடயத்தில் அக்கறை குறைவாக உள்ளது என்ற கருத்தினையும் கள ஆய்வின்போது மக்கள் தெரிவித்தனர்.

**பரிந்துரைகள்**

- தமிழ் பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்துதல் : தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தேர்தல் காலங்களில் தமது வாக்குரிமையினை பெரும்பான்மை சிங்கள பிரதிநிதிகளுக்கு சார்பாக பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறான நிலைப்பாட்டினை விடுத்து தமிழர்களும் பாராளுமன்றத்தில் அங்கத்துவத்தினை பெற வேணடு ம். இதனை குறிப்பாக தமிழர்கள் சிந்தித்து செயல்படும்போது எதிர்காலத்தில் கேகாலை மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதிகளினையும் பாராளுமன்றத்தில் எதிர்பார்க்க முடியும். அரசியல் ரீதியில் தமக்கு இருக்கின்ற பலம் வாக்குரிமையாகும். இவ்வாக்குரிமையை சிறந்த முறையில் வினைத்திறனும் செயற்திறனும் மிக்க வகையில் பயன்படுத்தும் போது மட்டுமே தமக்கான பிரதிநிதியை பாராளுமன்றத்தில் உருவாக்க முடியும்.

- அரசியல் வேறு தொழிற்சங்கம் வேறு என்ற மனப்பாங்கு உருவாக வேணடு ம் : கேகாலை மாவட்டத்தை பொருத்தவரையில் தமிழ் பிரதிநிதித்துவமின்மைக்கு முக்கிய காரணம் அரசியல்வாதிகள் தொழிற்சங்கம் சார்பில் செய்யப்படுகின்றமையே ஆகும். பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் தொழிற்சங்க உறுப்பினர்களின் நலன்களை மேம்படுத்துவதனையும் தான் சார்ந்தோரின் நலன்களை பாதுகாப்பதிலுமே அதிக கரிசனை காட்டி வருகின்றனர். இதனால் குறிப்பாக பெருந்தோட்டப்புறங்களில் வாழ்கின்ற தமிழர்களின் நலத்திட்டங்கள் பின்னடைந்து காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையினை கருத்திக்கொண்டு தற்போது இருக்கின்ற தலைவர்கள் தன் சமூகம் சார்ந்த எதிர்கால நலன் கருதி பக்க சார்பற்ற வகையில் செயல்படும்போது தமிழர்களின் ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியும்.

- இளைஞர் சமூகத்தினை அரசியலில் உள்வாங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் : பொதுவாக ஒவ்வொரு பிரதேசத்திலும் இளைஞர் பாராளுமன்றம் பாடசாலை பாராளுமன்றம் என்ற வகையில் அரசியல் அடிப்படை அறிவினை வழங்கி வருகின்றன. இதன் அடிப்படையில் பார்க்கும்போது கேகாலை மாவட்டத்தின் இளைஞர் பாராளுமன்றம் இருக்கின்ற நிலையிலும்இ அதில் பெரும்பாலும் சிங்கள இளைஞர் யுவதிகளின் பங்கேற்பு அதிகமாக காணப்படுகின்றது. இதனால் தமிழர்கள் தொடர்பில் அதிகளவான அக்கறை காட்ட வேணடிய நிலை உருவாகியுள்ளது. ஒவ்வொரு தமிழ் மொழி மூலம் பாடசாலையில் இருந்தும் இவ்வாறான வழிகாட்டல்களும் அறிவூட்டல்களும் வழங்கும் போது

எதிர்காலத்தில் இளைஞர்களின் ஊடாகவும் கேகாலை மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

- தாழ்வு மனப்பாங்கினை இல்லாதொழித்தல் : தமிழ் மக்களை பொருத்தவரை சிறுபான்மையினராக காணப்படுகின்றோம் என்ற தாழ்வு மனப்பாங்கும் அரசியல் ரீதியில் வெளிவருவதற்கு தயக்க நிலையினை ஏற்படுத்துகின்றது. இதனால் பெருவாரியாக திறமையும் ஆளுமையும் இருந்த போதிலும் தமிழ் தலைமைத்துவத்தினை கொண்டு நடத்துவதற்கு முன்வருவதில்லை. பெரும்பாலான பாமர தமிழ் மக்கள் வெளியுலகம் இன்றி தோட்டப்புறங்களுக்குள்ளேயே தமது வாழ்க்கை முடிந்து விடுகிறது என்ற மனநிலையில் இருக்கின்றனர். குறிப்பாக தேர்தல் காலங்களில் கூட இவர்களது பங்களிப்பு குறைவாகவே இருக்கின்றது. இவ்வாறான தாழ்வு மனப்பாங்கும் கேகாலை மாவட்டத்தில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதில் தடையாக இருக்கின்றது. இந்நிலை மாற்றப்பட வேணடு மானால் அனைவரும் நாட்டின் சமத்துவமான பிரஜைகள் என்ற உணர்வு நிலை பிறக்க வேணடும்.

- கல்வி கற்ற சமூகத்தினை உருவாக்குதல் வேணடு ம் : சிங்கள மொழி மூல பாடசாலைகளோடு ஒப்பிடும்போது தமிழ் மொழி பாடசாலை பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றது. பெரும்பாலான தமிழ் மாணவர்கள் சிங்கள மொழி மூலமான பாடசாலைகளில் கல்விக்கற்று வருகின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கை முறை உள்ளிட்ட அனைத்து பாரம்பரிய அம்சங்களும் சிங்கள கலாசாரத்துக்கு ஏற்ற வகையில் இசைவாக்கம் அடைந்து வருகின்றது. இந்நிலை மாற்றப்பட வேணடு மானால் தமிழ் கல்வி கற்ற சமுதாயத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ள வேணடும்.

- தமிழ் தலைமைத்துவம் பொறுப்புடன் முன்மாதிரியாக செயல்படுதல் வேணடு ம் : சிங்கள தலைமை தலைவர்களோடு ஒப்பிடும்போது தமிழ் தலைவர்களின் செயற்பாடு வினைத்திறனும் செயற்றிறனுமற்ற நிலையில் காணப்படுவதனால் பெரும்பாலும் தமிழர்கள் மத்தியில் அவநம்பிக்கையினை ஏற்படுத்துகிற ஒரு தலைமைத்துவமாக பார்க்கப்படுகின்றது. இதற்கு தமிழ் தலைமைத்துவம் மீதான நம்பிக்கையின்மை பிரதான காரணமாக காணப்படுகின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டுமானால் தமிழ் தலைமைத்துவமும் முன்மாதிரியாக செயல்படுவது அவசியமானதாகும்.

**முடிவுரை**

ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு தோள் கொடுக்கும் பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் அச்சமூகம்சார் அரசியல் பிரதிநிதித்துவம் முக்கியமானதாகும். சிறுபான்மையினரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை பெரிதும் முக்கியத்துவம் மிக்க ஒன்றாக கருதப்படுகின்றது. தமிழர்கள் மத்தியில் ஒற்றுமையின்மையும், பெரும்பான்மை இனத்திகேற்ற வகையில் இசைவாக்கமடைதல், தேர்தல் முறை பற்றிய தெளிவின்மை, சிறுபான்மையினராக காணப்படுகின்றோம் என்ற தாழ்வு மனப்பான்மை, பகுதி அளவில் வாக்குரிமை விலைப் பேசப்படுகின்றமை, முக்கியமாக கல்வி ரீதியிலான பின்னடைவு, தமிழ் பிரதிநிதிதுவத்தின் மீதான நம்பிக்கையின்மை போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றமையினை அறியக் கூடியதாக இருந்தது. தமது மாவட்டத்தில் தமக்கான பிரதிநிதித்துவம் இன்மை என்ற தெளிவும் பெரும்பாலான மக்கள் மத்தியில் அறியப்பட்ட ஒரு விடயமாக காணப்பட்டாலும் அதற்கான மாற்றத்தினை கொண்டுவர வேணடு ம் என்பதில் தெளிவற்ற நிலையிலும் அதற்கான தேவைபாடுகளில்லை என்ற மனநிலையில் மக்கள் தமது கருத்துக்களை தெரிவித்தமையினை அவதானிக்க கூடியதாக இருந்தது. மேலும் அரசியலில் பின்தங்கிய சிறுபான்மை மக்களின் சமூக மேம்பாட்டிற்கு பொருத்தமான தேர்தல் முறைமை தொடர்பில் அதீத கவனம் செலுத்த வேணடியுள்ளது. அரசியலில் தமிழ் தலைவர்கள் மட்டுமின்றி கேகாலை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் தமிழர்களும் தமக்கான பிரதிநிதித்துவம் அவசியமானது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயத்திலுள்ளனர். மேலும் தமிழ் பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்துதல், அரசியல் வேறு தொழிற்சங்கம் வேறு என்ற மனப்பாங்கினை உருவாக்குதல், இளைஞர் சமூகத்தினை அரசியலில் உள்வாங்க நடவடிக்கை எடுத்தல், தாழ்வு மனப்பாங்கினை இல்லாதொழித்தல், கல்வி கற்ற சமூகத்தினை உருவாக்குதல், தமிழ் தலைமைத்துவம் பொறுப்புடன் முன்மாதிரியாக செயல்படுதல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தும் போது இப் பிரச்சினை தொடர்பில் மாற்றங்களினை எதிர்காலத்தில ஏற்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**

1. அலி சப்ரி, ஆ. (5.December.2021). தேர்தல் முறை மாற்றமும் சிறுபான்மையின பிரதிநிதித்துவமும். Retrieved 09.10.2023 from https://tamilavani.com/srilanka/66781/

2. இரகுநாதன், கே., (2008). விகிதாசார பிரதிநிதித்துவம் ஓர் ஒப்பீட்டாய்வு. குமரன் புத்தக இல்லம். கொழும்பு. (பக் 1-14).

3. கமல், ரா. (13. மே.2021). கேகாலை மாவட்டத்தில் 8 பாடசாலைகள் தரமுயர்வு. Retrieved 13.11.2023 from https://www.tamilmirror.lk/%E0%AE%AE%E0%AE%B2%E0%AF%88%E0%AE%AF%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D/%E0%AE%95%E0%AF%

4. சந்திரகுமாரி.ந (2012), “கேகாலை மாவட்ட தமிழ் வேட்பாளர்களிடம் ஒரு கேள்வி” Retrieved 09.12..2023 from http://www.ilankainet.com/2012/09/blog-

post_42.html?m=1
5. துரைசாமி, ந. (31.January>2023). மலையகம் : அபிவிருத்தியின் அச்சாணிகள். இலக்கு.
6. பிரசாத், அ. (30 செப்டெம்பர் 2022). இலங்கை மலையக தமிழர்களின் 200 ஆண்டுகால துயரம். Retrieved 18.12.2023 from https://www.bbc.com/tamil/sri-lanka-63085614
7. நிஸாந்தன், சு. (June 9. 2020). தமிழ்பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யவே கருணா அம்மான் அம்பாறையில் போட்டியிடுகின்றார். Retrieved 02.11..2023 from https://www.supeedsam.com/128673/
8. மார்கெரிட்டா, நெ. (2014), விகிதாச்சாரத்தில் சிறுபான்மை பிரதிநிதித்துவம்இ Retrieved 09.10.2023 from http://www.iae.csic.es/investigatorsMaterial/a1417112104917568.pdf
9. மின்னா தாஹீர் (2017), சிறுபான்மையினரின் நலன்களை ஊக்குவிக்க விகிதாசார பிரதிநிதித்துவ முறை ஏன் தோல்வியடைந்தது?. Retrieved 09.11.2023 from https://www.researchgate.net/publication/321638383_Why_the_Proportional_Representation_System_Fails_to_Promote_Minority_Interests
10. லோரன்ஸ். (12. செப்டெம்பர். 2016). மலையகத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதில் தொய்வு Retrieved 19.12.2023 from https://www.bbc.com/tamil/sri_lanka/2016/09/160912_srilanka_political
11. Adaderana (2020), District Results - Kegalle – Final, Retrieved 29.11.2023 from :https://election.adaderana.lk/general-election 2020/district_result.php?dist_id=Kegalle
12. Kegalle district population. (2021). In Wikipedia. Retrieved 08.09.2023 from https://www.citypopulation.de/en/srilanka/prov/admin/sabaragamuwa/92__kegalle
13. Kegalle Electoral District. (2022). In Wikipedia. Retrieved 26.11.2023 from https://en.m.wikipedia.org/wiki/Kegalle_Electoral_District?shem=ssusxt
14. Samagalam. (2022. November.8). சிறுபான்மை அங்கத்துவத்தை பெருக்கிக்கொள்ள மேலும் 5 தேர்தல் தொகுதிகள் அவசியம். Retrieved 09.12.2023 from https://www.samakalam.com/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D%E
15. Samagalam. (12.January. 2021). கேகாலை மாவட்டத்தில் நீர்த்தேக்கம் எதுவும் அமைக்கப்படாது : ஜனாதிபதி உறுதி Retrieved 04.11.2023 from https://www.samakalam.com/%E0%AE%95%E0%AF%87%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B2%E0%AF%88%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%A4%E0%AF%
16. Thaheer. Minna. (2017. June.06). Why the Proportional Representation System Fails to Promote Minority Interests?. Retrieved 21.09.2023 from https://www.researchgate.net/publication/321638383
17. Wikaspedia. (16. November.2022). மக்களாட்சி - ஓர் கணே ணாட்டம். Retrieved 27.09.2023 from https://ta.vikaspedia.in/social-welfare/ba8b95bb0bbeb9fbcdb9abbf-ba8bbfbb0bcdbb5bbeb95ba4bcdba4bc1bb1bc8/b

# இலங்கையில் மலையகத் தமிழ் மக்களும் அவர்களுடைய தனித்துவமான இன அடையாளங்களும்

Mr. S. Manogaran
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*midhanmidhu024@gmail.com*

Mr. Chelliah Sivanayagam
Department of Social Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*sivanayagamc@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதனால் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை வழங்கும் சமூகமாக மலையகத் தமிழ் மக்கள் விளங்குகின்றார்கள். இவர்கள் இலங்கையில் மத்திய மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். 200 வருடங்களிற்கு முன்னர் இந்தியாவிலிருந்து பிரித்தானியர்களால் இவர்கள் இலங்கையிற்கு கூலித்தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டனர். எனினும், இந்த மக்கள் தமது வாழ்க்கை முறையை இலங்கைக்கு ஏற்றாற் போல மாற்றிக்கொண்டு தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டனர். அந்தவகையில், இலங்கையில் மலையகத் தமிழர்கள் தமக்கான தனித்துவமான இனத்துவ அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டனர். மலையகத் தமிழர்கள் தமது மொழி, சமய நம்பிக்கை, கலாசாரம், பாரம்பரியம், வாழ்வியல் போன்ற அம்சங்களை கொண்டு தமது இனத்துவ அடையாளத்தை கட்டியெழுப்பியுள்ள போதிலும், இவர்கள் இனத்துவ அடிப்படையில் பல சவால்களிற்கு முகம் கொடுக்கும் இனமாகும். மேலும், மலையகத் தமிழ் மக்கள் தமது இன அடையாளத்தின் காரணமாக பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வகையான உரிமை மீறல்களையும் பாரபட்சமான கொள்கையையும் நாளுக்கு நாள் அனுபவித்து வருகின்றனர். தனித்துவமான பண்பினைக் கொண்ட மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வானது அமையப் பெற்றுள்ளது. இதன்படி இவ் ஆய்விற்கு பண்புரீதியான ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு நூல்கள் போன்றவற்றைக் கற்று ஆய்விற்கான செயற்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கி மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். இதற்காக இரண்டு வழிகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. இதன்படி முதலாம் நிலைத்தரவுகள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்திய அரசாங்கத்திற்கும் மலையக அரசியல் தலைவர்களிற்கும் இடையில் இடம் பெற்ற உடன்படிக்கை, மலையக தமிழர்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இவ் ஆய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், பத்திரிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ் ஆய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இன அடையாளம், இலங்கை - இந்திய ஒப்பந்தம், உரிமை மீறல்கள், மலையகத் தமிழர், விபரணப் பகுப்பாய்வு*

**அறிமுகம்**

இன்று இலங்கையில் வாழும் பல்வேறு இனக்குழுக்களில் மலையக தமிழர்களும் ஒரு இனத்தவராவர். பொதுவாக இலங்கையைப் பொருத்தவரையில் இங்கு சிங்களவர், முஸ்லீம், வடக்கு - கிழக்கு தமிழர், மலையக தமிழர் மற்றும் பறங்கியர் என பல்வேறு இனக்குழுக்கள் ஒரு தேசமாக வாழ்கின்றனர். இதில் மலையக தமிழ் மக்கள் இலங்கை நாட்டிற்கு வந்து சுமார் 200 வருடங்களை கடந்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை வழங்கும் சமூகமாக மலையக தமிழர்கள் விளங்குகின்றார்கள். இவர்கள் இலங்கையில் மத்தி மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். பெருந்தோட்ட செய்கையை முன்னெடுக்கும் நோக்கில் 1823 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள், இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். அதனை தொடர்ந்து கண்டி, நுவரெலியா மாவட்டங்களின் எல்லையில் காணப்படும் லூல்கந்துர தோட்டத்தில் 1867 ஆம் ஆண்டு முதன் முதலாக தேயிலை செய்கைக்காகவும் பின்னர் இறப்பர் செய்கைக்காகவும் இவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

பொருளாதார நோக்கத்திற்காக ஆங்கிலேயர் காலத்தில் அழைத்து வரப்பட்ட இவர்கள் இன்று தம்முடைய இன்னல்களையும் வழிகளையும் கடந்து வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர். ஆரம்பகட்ட வாழ்க்கையில் ஆங்கிலேயர் கையில் அடிமைகளாக நடாத்தப்பட்ட மக்கள் பின்பு, சுதந்திர இலங்கையிலும் அவர்களின் வாழ்க்கை மிகவும் மோசமானதொரு நிலையினைக் கண்டது. பல நூற்றாண்டுகளாக இம்மண்ணில் நிலைத்து வாழும் இவர்கள் இலங்கை நாட்டில் அவர்களுக்கென ஒரு இன அடையாளம் என்பது நிரந்தரமாக இல்லாமல் பல நாமங்களில் அழைக்கப்படுகின்றனர்.

**ஆய்வுப் பிரச்சினை**

சுமார் 200 வருட காலமாக இலங்கையில் மலையக தமிழ் மக்கள் வாழுகின்றனர். அவர்கள் பூர்வீக நிலத்தில் பின்பற்றிய இன அடையாளங்களை இன்றுமே கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு இலங்கை நாட்டில் இன.மத,மொழி….ரீதியாக தனித்துவமான இன அடையாளங்களைக் கொண்டு வாழுகின்றனர். இருப்பினும் இவர்கள் தமது இனத்துவ அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர் நோக்குகின்றனர். இம் மக்களின் இன அடையாளங்கள் இன்று நலிவடைந்து செல்வதுடன் இனத்துவ அடையாளம் சார்ந்த பிரச்சனைகளை வெளிகொணர்வதே இவ்வாய்வின் பிரச்சனையாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

**பிரதான நோக்கம்:**

- மலையக தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்தைப் பெறுவதில் எதிர்நோக்குகின்ற சவால்களை இனங்காணுதல்.

**துணைநோக்கங்கள்:**

- இனத்துவம் மற்றும் இனத்துவ அடையாளங்களை கண்டறிதல்.
- மலையக தமிழ் மக்களின் வாழ்வியலை தெரிந்து கொள்ளுதல்.
- மலையக மக்களின் இனத்துவ அடையாளம் சார்ந்த பிரச்சனைகளை இனங்காணுதல்.

**ஆய்வு வினாக்கள்**

1. இனத்துவம் மற்றும் இனத்துவ அடையாளங்கள் என்றால் என்ன?
2. மலையகத்தமிழ் மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டமைக்கான காரணங்கள் யாவை?
3. மலையக மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறானது?
4. மலையக மக்களின் இனத்துவ அடையானம் சார்ந்த பிரச்சனைகள் யாவை?
5. மலையக தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாலத்தைப் பெற்றுக்கொள்வதில் எதிர் நோக்குகின்ற சவால்கள் எவை?

**இலக்கிய மீளாய்வு**

மெண்டிஸ் (1960) என்பவர் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி. என்ற நூலில் தோட்டத் தொழிலாளர்களின் வருகை, அவர்களது தொழில் முறைகள், போக்குவரத்து விடயங்கள். மலையகத் தோட்டம் உருவான வரலாறு போன்ற விடயங்களை கூறியுள்ளார். அத்தோடு மலையக மக்களின் முன்னேற்றத்தையும், ஆரம்பத்தையும் கூறியுள்ளார். இத்தகவலானது என்னுடைய ஆய்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கின்றது. ஆனால் முழுமையான மலையக மக்களின் வாழ்வியல் பற்றி தகவல்கள் காணப்படவில்லை.

சடகோபன் (2014) என்பவர் கண்டி சீமையிலே என்ற நூலில் தோட்டத் தொழிலாளர்களின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை,மலையக மக்கள் அடிமையாக்கப்பட்ட விடயம், மலையக மக்களின் வரலாறு, தோட்டத் தொழிலாளர்களை வரைவிலக்கணப்படுத்திய சட்டங்கள், மலையக மக்களின் வருகை, மக்களின் வருமானம் தொடர்பான விடயங்கள். வரிகளில் சந்தித்த இன்னல்கள், போராட்டங்கள் போன்ற விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் ஆய்வுக்கு உதவியாக அமைகின்றது. இருப்பினும் மலையக மக்களின்

வாழ்வியல் தொடர்பான அம்சங்கள் குறிப்பிடப்படவில்லை இதனால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

கீதபொன்கலன் (2004) என்பவர் 21ஆம் நூற்றாண்டில் மலையக தமிழர் எதிர்நோக்கும் சவால்கள் என்ற நூலில் பெருந்தோட்டத்துறையின் சமூக மேம்பாட்டில் காணப்பட்ட அவலநிலை வீடமைப்பு பெருந்தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம், ஐந்து வீடமைப்புத் திட்டங்கள், காணி வீடுகளுக்குரிய பத்திரங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை போன்ற விடயங்களை குறிப்பிட்டுள்ளார். இவ்விடயங்கள் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

கமலினி (1999) என்பவர் மலையக மக்களுடைய இருப்பியல் நிலை எனும் நூலில் மலையகத்தில் குடும்பம் என்பது கருக்குடும்பம். கூட்டுக்குடும்பம் என்ற இரு வேறு பகுதிகளை கொண்டதாக காணப்படுகின்றது. கருக்குடும்பம் எனும் போது பெற்றோரையும் பிள்ளைகளையும் உள்ளடக்கியது. தனிக்குடும்பம் எனும் போது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் ஆண், பெண் என்ற இருபாலருக்கிடையிலான பாலியல் உறவின் அடிப்படையில் குழந்தைகளையும் பெற்றோரையும் உள்ளடக்கியதான ஒன்றாகும். பொதுவான வாழ்விடம் பொருளாதார ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான தங்கியிருத்தல், அங்கு குறிப்பிட்ட வகையில் அங்கத்தவர்களுக்குகிடையே உறவுகள் கட்டமைக்கப்பட்டிருக்கும். இவ்வுறவுகளின் அடிப்படையில் தொடர்ச்சி தன்மை ஓரளவிற்கு நீண்ட காலத்திற்கு இருக்கும். கூட்டுக்குடும்பம் என்பது பிள்ளைகள் திருமணம் செய்த பின்னாலும் தாய் தந்தையருடன் தொடர்கின்ற பாரம்பரியம் முறையைக் குறிக்கும். கூட்டுக்குடும்பம் என்பது கணவன் மனைவி பிள்ளைகள் என்ற வட்டத்திற்கு அப்பாலும் உறவு முறைகளைத் தொடர்ச்சியாகப் பேணும் ஒன்றாகும். என்ற விடயங்கள் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

கணேசமூர்த்தி (2010) அவர்கள் தனது மலையக மக்களின் சமூக, பொருளாதாரம் ஒரு வரலாற்று பார்வை என்ற நூலில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புக்கள் தொழிலாளர் வரிசைக் குடியிருப்புக்கள் அல்லது லயன் என்று அழைக்கப்பட்டன. படுக்கையறை. சிறிய சமையற் பகுதி என்பவற்றைக்கொண்டு குடியிருப்புக்கள் அமைந்தன. தோட்ட நிர்வாகிகள் பார்வைக்கு சகல வசதி அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு அறை வழங்கப்பட்டது. பெரிய குடும்பங்களில் பத்து பன்னிரண்டு குழந்தைகளும் பெரியவர்களுமாக இவற்றுக்குள்ளேயே வாழ வேண்டிய தேவை ஏற்பட்டது. அனைவரும் பொது மலசலகூடத்தை பாவிப்பதோடு பொதுவான நீர் குழாய் மூலம் நீரைப் பெற வேண்டியிருந்தது. திறந்த வெளியில் ஆண்களும் பெண்களும் குளிக்க நேரிட்டது இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் இந்நிலை தொடர்ந்தது என இந்நூலின் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

சாரல்நாடன் (2003) அவர்களின் மலையக தமிழர் வரலாறு, எனும் நூலில் மலைய சமூகத்தினையும், அவர்களது தோட்டப்புற கல்விமுறைகளை பற்றியும், மலையக வீடமைப்புக்கள் பற்றியும், மலையக மக்களின் காணிகள் என்ற தலைப்பினூடாக தோட்டப்புற மலையக மக்களின் வாழ்வியலை விளக்கும் வகையில் இந்நூ காணப்படுகின்றது. இதன் மூலம் ஆரம்பக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்கன அறிந்துக்கொள்வதற்கும், ஆரம்பக்காலங்களின் மலையக மக்கள் எவ்வாறா இன்னல்களை சந்தித்துள்ளார்கள் என்பதை அறிந்துக்கொள்வதற்கு உதவியாகயிருந்தது. அத்தோடு நூலாசிரியர் மலையகத்தின் எதிர்கால வளர்ச்சியை சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விடயங்கள் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

இராசலிங்கம் (2018) என்பவரால் மலையக சமூகம் கட்டமைப்பு ரீதியாக மாற்றம் பெற்று வருகின்றது" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையில் 200 வருடங்கள் தாண்டி மலையக மக்கள் பெருந்தோட்டங்களில் வசித்து வந்தாலும் லயத்து வாழ்க்கை முறை. தொழிலாளர்களின் தொழில் அந்தஸ்து, தொழில் உரிமை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், சுகாதார நிலைமைகள். உணவுமுறை, சிறுவர்களின் போசாக்கு, கட்சி அரசியல், சமூக பொருளாதார குறிகாட்டிகள், அரசாங்க தொழில் வாய்ப்புகள், உயர்கல்வி அடைவுகள் போன்றன இன்னும் வளர்ச்சி பெறாத நிலையிலேயே காணப்படுகின்றது எனவும் மலையக சமூகத்தின் வளர்ச்சி, முன்னேற்றம், அபிவிருத்தி. மேம்பாடு என்பவற்றில் ஏற்படும் பொதுவான மாற்றங்கள் கூட மிகவும் மெதுவான மந்தகதியிலேயே மலையகப்பிரதேசங்களில் இடம்பெறுவதாக குறிப்பிடுகின்றார். இவ்விடயம் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

லூசியஸ் (2014) என்பவரால் "சுதந்திர தினமும் சுதந்திரமற்று வாழும் மலையகத்தவர்கள்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையில் மலையக மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட போதும் இலங்கையில் வாழும் ஏனைய இன மக்களின் வாழ்க்கையுடன் ஒப்பிடும் போது அந்த மக்களின் வாழ்க்கை சம அந்தஸ்து இன்றியே காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்ட மக்கள் தமக்கென ஒரு அடையாளமின்றி இன்னும் கூலித் தொழிலாளர்களாகவும், இரண்டாம் பிரஜைகளாகவுமே நோக்கப்படுகின்றனர் என்று கூறியுள்ளார். இவ்விடயம் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

ரமேஷ் (2015) என்பவரால் வெளியீடப்பட்ட "நல்லாட்சியும் மலையக மக்களும்" என்ற கட்டுரையில் 1980ஆம் ஆண்டு மலையக மக்கள் சட்டரீதியான பிரஜாவுரிமை பெற்றாலும் இன்றும் உரிமைகளைப்பெற முடியாதவர்களாகவே காணப்படுகின்றார்கள். இவர்கள் சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர். கல்வி, சுகாதாரம், வீட்டுரிமை, காணி உரிமை, அரச தொழில் வாய்ப்பு, நியாயமான சம்பளம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். அரசாங்கத்தின் ஆட்சி அமைக்க மலையக கட்சிகள் பங்களிப்பு செய்தாலும் மலையக மக்கள் வாழ்வில் எவ்வித

முன்னேற்றமும் ஏற்படவில்லை. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தற்காலிகமாக வழங்கப்பட்ட லயன் அறைகள் மலையக மக்களின் நிரந்தர வதிவிடங்களாக மாற்றம் பெற்று காணப்படுகின்றன. பெருந்தோட்ட மக்களின் சமூக, பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் இன்றும் காணப்படவில்லை. இவ்விடயங்கள் என்னுடைய ஆய்விற்கு உதவியாக அமைகின்றது.

இதன்படி இவ்வாய்விற்காக மேற்கொள்ளப்பட்ட இலக்கிய மீளாய்வின் முடிவில் மலையக தமிழ் மக்களின் வருகை, மலையக மக்களின் வரலாறு, மலையக தமிழ் மக்களின் குடியேற்றம், மலையக குடியேற்றம், அவர்களின் சாதி அமைப்பு, தொழில் முறைகள், அம்மக்களின் கலைகள், சட்டம், என்பவற்றையும் அவர்களது வாழ்வியல் அம்சங்கள், குடும்ப முறைகள், திருமணம், பொருளாதார நிலை, இலக்கியம், சாதி, மற்றும் உரிமை மீறல்கள் என மலையக தமிழ் மக்கள் தொடர்பாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தனித்துவ இனமான மலையக தமிழ் மக்களின் இனத்துவ அடையாளம் சம்பந்தமாக ஒரு சில ஆய்வுகள் காணப்படுகின்றமையினால் அவ்வாய்வுகள் பூரணமாத்துவம் வாய்ந்ததாக அமையவில்லை என்பது இவ்விலக்கியமீளாய்விலூடாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே இவ்விடைவெளியை நிவர்த்தி செய்யும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விற்கு பண்பு ரீதியான ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு நூல்கள் போன்றவற்றைக் கற்று ஆய்விற்கான செயற்பாட்டுத் திட்டத்தினை உருவாக்கி மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். இதற்காக இரண்டு வழிகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. இதன்படி முதலாம் நிலைத்தரவுகள் இலங்கை இந்திய ஒப்பந்தம், இந்திய அரசாங்கததிற்கும் மலையக அரசியற் தலைவர்களிற்கும் இடையில் இடம் பெற்ற உடன்படிக்கை, மலையக தமிழர்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் இவ்வாய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக புத்தகங்கள், பத்திரிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள், அட்டவணைகள், போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இவ்வாய்வானது விபரணப் பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

**மலையகத்தமிழ் மக்களும் இனத்துவ அடையாளமும்**

மலையகத் தமிழர் என்போர் இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியின் போது 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், தேயிலை, இறப்பர், கோப்பி முதலிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளுக்காக தமிழ்நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்களை குறிக்கும். இருப்பினும் இந்த “மலையகத் தமிழர்” எனும் பதத்திற்குள் தமிழரல்லாத தெலுங்கர்,

மலையாளியினரும் அடங்குவர். மலையகப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டு தமிழரே பெரும்பான்மையாக இருப்பதனால் அவர்களுடன் ஒன்றி வாழ்ந்த தெலுங்கரும் மலையாளிகளும் தமிழ் பேசுவோராக மாறிவிட்டனர். ஆங்கிலேயர் இவர்களை ஒரு அடிமை போன்ற நிலையில் வைத்திருந்ததனாலும், அதன்பின்னர் தொடரும் ஒடுக்குமுறைகளினாலும் இம்மக்களின் வாழ்வு இலங்கையின் ஏனைய சமுதாயத்தினருடன் ஒப்பிட முடியாத அளவில் பின் தள்ளப்பட்ட வகையிலேயே உள்ளது. இந்த பின்னடைவு, விதிவிலக்காக ஒரு சிலரை தவிர, கிட்டத்தட்ட அனைவரும் இந்தியாவில் உள்ள தமது உறவுகளுடனான உறவு துண்டிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டனர்.

1844ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தியாவிலிருந்து இலங்கையின் கோப்பி தோட்டங்களில் வேலைச் செய்வதற்காக, லுதினன் கேர்னல் என்றி சீ.பேர்ட் என்பவர் 14 பேரைச் சேர்த்துக்கொண்டார். இதுவே இந்தியாவிலிருந்து உத்தியோகப்பட்சமாக வேலையாட்கள் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பமாக இருந்தபோதும், 1840களின் தொடக்கத்தில் கோப்பி தோட்டங்கள் நிறுவப்படும்போது, தோட்டங்களுக்கு அருகில் இந்திய வேலையாட்கள் காணப்பட்டனர். மேலும் 1818 ஆண்டு உதவி மன்னார் அரசாங்க அதிபர் ‘‘பெருமளவிலான இந்திய கூலியாட்கள் கொழும்பு நோக்கிச் செல்வதைக் கண்டதாக’’ குறித்துள்ளார். இதன்படி 1844 ஆண்டுக்கு முன்னரும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வேலை தேடி தமிழர்கள் வந்தனர் எனலாம். இவர்கள் நாட்டின் மத்திய மலைப்பகுதிகளில் அமைந்திருந்த பெருந்தோட்டங்களில் குடியேற்றப்பட்டனர். பிரித்தானிய முதலாளிகளின் கீழ் சுமார் 150 ஆண்டுகள் வரை கடுமையான சூழ்நிலைகளின் கீழ் உழைத்து இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக தேயிலை, இறப்பர் முதலியவற்றை உருவாக்கிக் கொடுத்தது இவர்களேயாவர். இவ்வாறு இலங்கை வந்த மக்கள் அன்று தொடக்கம் இன்று வரை ஒரு தனித்துவ இனமாக வாழ்ந்து வருகின்றபோதிலும் நிரந்தர இனத்துவ அடையாளம் என்பது மறுக்கப்பட்டே காணப்படுகின்றது.

**மலையக தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்கள்**

இலங்கையில் உள்ள ஏனைய இனக் குழுக்களையும் விட தனித்துவமான அரசியல் வரலாற்றைக் கொண்ட இனக்குழுவாக மலையக மக்கள் காணப்படுகின்றனர். இத் தனித்துவத்திற்கு 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு தொழிலாளர்களாக குடியேறி தோட்டம் என்ற தனி இராச்சியத்திற்குள் நகர தொழிலாளர்களிடம் இருந்தும் கிராம விவசாயிகளிடம் இருந்தும் பிரித்து, தனியாக வாழ வைக்கப்பட்டமையும் இலங்கையில் ஏனைய பிரஜைகள் பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற வேலையில் அவர்களது அனைத்து சிவில், அரசியல் உரிமை பறிக்கப்பட்டமையும் காரணமாகும்.

இதில் குடியுரிமை பறிக்கப்பட்டமையானது மலையக அரசியலிலும் முதன்மையான அம்சமாகும். பறிக்கப்பட்ட குடியுரிமையை மீட்பதற்கான போராட்டமாகவே சுதந்திரத்துக்குப் பின்னரான

நான்கு தசாப்தத்திற்கு மேலான அரசியல் நிலை பெற்றது. இன்று குடியுரிமைப் பிரச்சினை சட்ட ரீதியாக தீர்க்கப்பட்டிருக்கின்ற போதும் இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அடிப்படை உரிமைகளுக்கு உரித்தற்றவர்களாகவே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். முகவரி, வீடு மற்றும் காணி உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் தொழில் பாதுகாப்பின்றி இன்றும் நாட் கூலிகளாகவே வேலை செய்து வருகின்றனர். தேசிய அரச நிர்வாகத்தில் முழுமையாக இணைய முடியாத நிலை, (இந்நிலை தோட்டங்கள் கிராமங்களாக கணிக்கப்படாமையினால் ஏற்பட்டுள்ளது) பிரதேச சபைக்கு, மாகாண சபைக்கு வாக்களித்தாலும் அதில் இருந்து அபிவிருத்திகளை பெறுவதில் சட்ட ரீதியான தடை என உரிமை மறுப்புக்கு உட்பட்டே மலைய மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, மலையக மக்கள் வாக்காளர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள போதும் ஏனைய "இன பிரஜைகள்" அனுபவிக்கும் உரிமைகள் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இன்று இவர்கள் இலங்கை நாட்டின் பிரஜைகளாக மாற்றப்பட்டு 200 வருடங்களை கடந்து தனித்துவ இனமாக அனைத்து மாவட்டத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

இனத்துவம் என்பது மனிதகுல வரலாற்று காலம் முதல் இருந்த வருகின்றது. Ethic என்ற சொல் 14ம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டில் உள்ளது. ஆனால் மாற்றமடையாதது என எதுவுமில்லை என்பதால் வரலாற்று நகர்வில் இனத்துவம் என்பதும் தொடர்ச்சியான மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. இந்நிலையில் இனத்துவம் குறித்து வெளியான கட்டுரைகளில் நியூயோர்க் பல்கலைக்கழகத்தினால் வெளியிட்ட 'Ethic Classification in Global Perspective' என்ற கட்டுரை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அந்தடிப்படையில் இலங்கையில் காணப்படும் மலையக மக்களின் இனத்துவம் மற்றும் இனத்துவ அடையாளம் பற்றி ஆராய்வோம்.

**இலங்கையில் காணப்படும் மாவட்டங்களில் மலையக தமிழ் மக்களின் எண்ணிக்கைகள் 2012ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கை**

| இல | மாவட்டம் | சனத்தொகை |
|---|---|---|
| 01 | நுவரெலியா | 377,637 |
| 02 | பதுளை | 150,484 |
| 03 | கண்டி | 85,111 |
| 04 | இரத்தினபுரி | 62,124 |
| 05 | கேகாலை | 43,748 |

| | | |
|---|---|---|
| 06 | கொழும்பு | 24,289 |
| 07 | மாத்தளை | 23,238 |
| 08 | களுத்துறை | 23,217 |
| 09 | மாத்தறை | 12,127 |
| 10 | கம்பஹா | 9,137 |
| 11 | குாலி | 6,146 |
| 12 | மோனராகலை | 5,001 |
| 13 | குருநாகல் | 2,594 |
| 14 | முல்லைத்தீவு | 2,281 |
| 15 | மட்டக்களப்பு | 2,078 |
| 16 | வவுனியா | 1,979 |
| 17 | புத்தளம் | 1,953 |
| 18 | யாழ்ப்பாணம் | 1,807 |
| 19 | திருக்கோணமலை | 1,227 |
| 20 | கிளிநொச்சி | 1,030 |
| 21 | அம்பாறை | 846 |
| 22 | மன்னார் | 692 |
| 23 | அனுராதபுரம் | 477 |
| 24 | பொலனறுவை | 161 |
| 25 | அம்பாந்தோட்டை | 120 |

மூலம்:http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2012Visualization/htdocs/index.php?usecase=indicator&action=Data&indId=10

இந்நிலையில் இலங்கையின் 1823ஆம் ஆண்டு மத்திய மலைநாட்டுப் பகுதியில் குடியேற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும், அப்பிரதேசங்கள் சார்ந்து ஏனைய தொழில் நிலைகளில் உள்ளோரும், அவர் தம் வம்சாவழியினரும் “மலையகத் தமிழர்” என்றே அழைக்கப்பட்ட போதும். இவர்கள் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்பதால் “இந்தியத் தமிழர்” என்றும் “இந்திய வம்சாவளித் தமிழர்” எனும் வகுப்புக்குள்ளும் அடங்குவர். இலங்கையின் புள்ளிவிபர அறிக்கைகளில், அடையாள அட்டை வழங்கல் முறையில், மற்றும் ஏனைய பதிவுகளில் இந்தியத் தமிழர் எனக் குறிப்பிடப்படுவதும் நடைமுறையில் உள்ளது. இம்மக்கள் தேயிலைத் தோட்டங்களில் பணி செய்வதால், இவர்களை ‘‘தோட்டக்காட்டான்’’ என்றும் சிங்களவர்களால் அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு

மலையக தமிழ் மக்கள் 1823ம் ஆண்டு இலங்கை தீவிற்கு அழைத்து வரப்பட்டாலும் அவர்கள் வருகையில் இருந்து இன்று வரை ஒரு நிரந்தர அடையாளம் இன்றியே காணப்படுகின்றனர்.

**தொழிற்சங்கங்களும் மலையக அரசியலும்**

பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட பின்னர் மலையக அரசியல் என்பது தொழிற்சங்கத்தை மையப்படுத்தியதாகவே அமைந்திருந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முதன்மையாகவும் அதில் ஏற்பட்ட பிளவுகளின் விளைவாக உருவாகிய தொழிற் சங்கங்களும் 1977 வரை தத்தமது தொழிற்சங்க நடவடிக்கைகள் ஊடாக மலையக அரசியலை முன்னெடுத்தனர். இதன்படி 1954 ஆம் ஆண்டு காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என பெயர் மாற்றிக் கொண்டு தொழிற்சங்கப் பணிகளை மேற்கொண்டபோதும் நடைமுறையில் அது மலையக மக்களை இலங்கைக்கு உரித்தானவர்கள் என்ற அடிப்படையில் நோக்கவில்லை. மாறாக சுதந்திரத்திற்கு முன்னர் இருந்து இந்திய இலங்கை தேசிய வாதத்திற்கு பதிலாக இலங்கை இந்திய தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சங்க வாதத்தை முன்னெடுத்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் இருந்து பிரிந்து (1955) அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் சங்கத்தையும் வெள்ளையன் தேசிய தொழிலாளர் சங்கத்தையும் நிறுவினர்.

மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது மலையகத் தொழிற்சங்கங்களில் மிகவும் பலம்மிக்கதாக இருந்ததோடு இது மலையகத்தின் பெரும் இயக்கமாகவும் வளர்ச்சியடைந்திருந்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. தொண்டமான் ஐயா அவர்கள் நியமன உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து வந்தார். இக்காலகட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பல தொழிற்சங்கப் போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தமை மறுக்க முடியாது. எனினும், மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அது கைக்கொண்ட சந்தர்ப்பவாத போக்குகள் மக்கள் விரோதம் என்ற போதும் இ.தொ.கா. மலையகத்தில் தனது தொழிற்சங்க ஆதிக்கத்தை தொடர்ந்துமே நிலைநிறுத்தி வந்தது.

அத்துடன் கூட்டு ஒப்பந்தம் என்ற ரீதியில் இலங்கையின் வருமானத்தில் பிரதான பங்காளிகளாக மலையக தொழிலாளர்கள் 1820 ஆம் ஆண்டின் முன்பிருந்தே தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இருப்பினும் இச்சமுகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அளவிட முடியாதவை. குறிப்பாக வீட்டுரிமை, காணியுரிமை கல்வியுரிமை, பாதுகாப்புரிமை தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் வாழும் இவர்களின் நலன்களை மேம்படுத்தும் செயற்பாடுகளை மலையக வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொண்டிருக்கவில்லை.

சில தோட்ட அதிகாரிகள் தொழிற்சங்க ஒப்பந்தத்தை மீறும் வகையில் நடந்து கொண்டனர். சிலர் நடைமுறைப்படுத்தவுமில்லை. தோட்டங்களில் இதற்கான கூட்டுக் கமிட்டி அமைக்கப்படவில்லை. உண்மையில் கூட்டு ஒப்பந்தம் எழுதப்பட்டவுடன் எல்லா மட்டத்திலும் இது தொடர்பான விளக்கங்களையும், பிரச்சாரங்களையும் தொழிற்சங்கங்கள் மேற்கொண்வேண்டும். குறிப்பாக, தொழிலாளர்கள் மத்தியில் இது தொடர்பான விளக்கங்களை வழங்கியிருக்க வேண்டும். அதே நேரம் கூட்டு ஒப்பந்தத்தினை மீறும் தோட்ட நிர்வாகிகள் தொடர்பாகத் தோட்ட முதலாளிமார் சங்கத்துடன், பேச்சுவார்த்தைகளை தொழிற்சங்கங்கள் நடாத்தியிருக்க வேண்டும். ஆனால் தொழிற்சங்கங்கள் ஒப்பந்தத்தினை எழுதியதோடு தம் பணி முடிந்ததாகக் கருதி மௌனமாக இருந்தன. இது முதலாளிகள் தமது சுரண்டலைத் தொடருவதற்கான சந்தரப்பத்தினை அனுமத்த செய்முறையாகவே காணப்பட்டது. இந்நிலையில் கூட்டுவொப்பந்தம் என்ற பெயரில் மலையக மக்கள் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் போன்றவற்றினால் சுரண்டப்பட்டு வரும் நிலையே தொடர்ந்தும் காணப்பட்டது.

**மலையக தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்**

மலையக தேசியம் பற்றிய கருத்துருவாக்கமும் ஆரம்ப சமூக ரீதியான செயற்பாடுகளும் மலையகத்தில் கற்ற முற்போக்கு சக்திகளிடம் இருந்து வெளிப்பட்டன. இர. சிவலிங்கம் தலைமையில் 1967 இல் ஆரம்பிக்கப்பட்ட மலையக இளைஞர் முன்னணி, 1968 இல் வி.எல். பெரேரா, சக்தி பாலையா ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட மலையக இளைஞர் பேரவை, தொடர்ந்து எழுபதுகளின் நடுப்பகுதியில் எல். சாந்திகுமார், எம். எஸ். கந்தையா ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் இயக்கம், பீ. ஏ. காதர், வீ.டீ.தர்மலிங்கம், ஏ. லோரன்ஸ், எஸ். தேவசிகாமணி ஆகியோரின் முன்னெடுப்பில் உருவான மலையக வெகுசன இயக்கம், வீ. புத்தரசிகாமணி, திவ்யநாதன், நேருஜி இணைந்து ஏற்படுத்திய மலையக ஐக்கிய முன்னணி, 1989 பெப்ரவரியில் பீ.சந்திரசேகரன், பீ.ஏ. காதர், வீ. டி. தர்மலிங்கம், ஏ. லோரன்ஸ், சரத் ஆகியோரினால் ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணி என இந்த தொடர்ச்சி ஓர் தேசிய இன அரசியல் பாதையில் பயணித்து வந்துள்ளதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

இப்பின்னணியில் மலையக தேசியம் என்ற விடயம் மலையகத் தேசிய அரசியலில் மாற்று அரசியலாக முன்னிலைபெற ஆரம்பிக்கிறது. இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகத்தில் முன்னெடுத்த தொழிற்சங்க வாதத்திற்கு மாற்றாக மலையக மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் என்ற அரசியல் பிரக்ஞையின் வெளிப்பாடு என்று குறிப்பிடலாம். இந்த அரசியல் வெளிப்பாட்டிற்கு இறுதியில் மலையக மக்கள் முன்னணியே தலைமை தாங்கியது. மலையக மக்கள் முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்களினால் தோற்றுவிக்கப்பட்டதாகும். மலையக மக்கள்

முன்னணியை தோற்றுவித்து அதன் அப்போதைய தலைவர் பெ.சந்திரசேகரன் ஆற்றிய உரை பின்வருமாறு அமைந்திருந்தது.

“சிறுபான்மை மக்கள் தங்கள் உரிமையைப் பெற்றுக் கொள்வது என்பது ஐக்கியப்பட்ட போராட்டத்தினால் தான் முடியும். இதைக் கடந்த கால உலக வரலாறுகள் நமக்கு உணர்த்துகின்றன. அரசாங்கத்தோடு தோழமை கொள்வதாலோ அவர்களை தாஜா பண்ணுவதாலோ அல்லது அரசாங்கத்திலுள்ள தனிப்பட்ட ஒரு சிலரின் நட்பைப் பயன்படுத்துவதாலோ தான் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதில்லை. நம் மீது பச்சாதாபப்பட்டோ இரக்கப்பட்டோ வழங்கப்படும் உரிமைகள் நிலைக்க முடியாது. எமது பிரச்சினைகளும் தீரப் போவதில்லை. அப்படி நட்போடு கூடிக்குலாவிய மலையக அமைப்புகள் கூட இன்று 13 வருடங்களுக்குப் பின் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே கூறிக் கொள்கின்றார்கள்”

இக்கூற்று மலையகத்தில் ஒரு மாற்று அரசியல் அதாவது இணக்க அரசியலுக்கு மாற்றாக மலையக மக்களின் உரிமைகளை முன்னிறுத்திய எதிர்ப்பு அரசியல் கூறுகளுடன் வெளிப்பட்டது. எனினும் மலையக தேசியம், மலையக தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கு ஏற்ற மூலோபாயங்களை மலையக மக்கள் கொண்டிருக்கவில்லை என்பதை 1994 ஆம் ஆண்டு தொடங்கிய இணக்க அரசியல் இன்று பாராளுமன்ற வாதத்திற்குள் முழுமையாக அடங்கிப் போயிருப்பதில் இருந்து வெளிப்படுகிறது.

இன்று மலையக மக்கள் முன்னணி மலையக தேசியம் தொடர்பாக வரையறுத்த அளவில் பேசி வருகின்றபோதும் அது முழுமையாக தேசிய அரசியலுக்கான உள்ளடக்கத்தை இழந்த நிலையிலேயே உள்ளது. (லெனின், 2010) எனினும் இ.தம்பையா, இமையவரம்பன், சி. கா. செந்திவேல் போன்றவர்கள் மலையக தேசியத்தின் குறும்பார்வையை விமர்சித்து வெகுஜன அரசியல் ஊடாக ஒடுக்கப்பட்ட ஏனைய தேசிய இனங்களுடனும், சிங்கள உழைக்கும் மக்களுடனும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வெளிப்படுத்தி வருகின்றனர். புதிய ஜனநாயக கட்சி என்ற கட்சியானது இந்தக் கருத்தை தேசிய இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தில் முன்வைத்துள்ளது. எனினும் இவ்வமைப்பானது வெகுஜன போராட்டங்களை முன்னெடுத்து வருகின்ற போதும் மலையகத்தில் அரசியலில் தீர்க்கமான சக்தியாக இல்லாமை கவனிக்கத்தக்கது.

**முடிவுரை**

உலக நாடுகள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறான இனங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் இம்மக்கள் தன்னை ஒரு குழுவில் இருந்து இன்னுமொரு குழு தன்னை வேறுபடுத்திக் காட்ட அவர்களிடம் காணப்படும் வேறுபட்ட இனக்

கூறுகளே காரணமாக இருக்கும். இதனடிப்படையில் இனம் என்று கூறுகையில் ஒத்த கூறுகளைக் கொண்ட மக்கள் கூட்டமே இனம் என்று சொல்லலாம். அவ்வாறான இன கூறுகளாக பரம்பரை, பூர்வீகம், அவர்களுக்கான ஒரு கதை, சாதி, சடங்கு, வழிபாடு, உணவு, நிறம், ஆடை, மற்றும் கலை என பல இனக்கூறுகள் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் இலங்கை நாட்டில் காணப்படும் மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ அடையாளம் பிரதானமானதாக இங்கு அடையாளப்படுத்தப்படுகின்றது.

மலையகத் தமிழ் மக்கள் இனத்துவ அடையாளத்தினை தக்க வைத்துக்கொள்ள எத்தணிக்கும் போதெல்லாம் பல இன ரீதியான சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலை காலம் காலமாக ஏற்பட்டு வருகிறது. இதில் இம்மக்கள் 200 வருட கால இருப்பினைக் கொண்டு காணப்பட்டாலும் இன்றும் அவர்களை வந்தேறிகள் என பார்க்கும் நிலைமை தொடர்ந்து வருகின்றமையால் பல உரிமை மீறல்களுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகி வரும் இலங்கையின் ஒரு இனமாக மலையக தமிழ் மக்களை நாம் சொல்லலாம்.

மேலும் இவ்வாய்வினூடாக உலகளாவிய ரீதியில் இனத்துவம் தொடர்பான நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பிலும், மலையகத் தமிழ் மக்கள் அவர்களின் அன்றாட வாழ்வியலில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பிலும் தெளிவான அறிவினை பெற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படுவதுடன், மலையக தமிழ் மக்கள் வாழ்வியல் அம்சங்கள், இவ் அம்சங்களினூடாக அவர்கள் ஏனைய இனத்திலிருந்து எவ்வாறு தனித்துவமாக விளங்குகின்றனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை மலையக மக்கள் இனத்துவ ரீதியாக அவர்கள் பெற்றுக்கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள், தனக்கான தனித்துவமான இன அடையாளத்தினை பெற்றுக்கொள்வதற்காக மலையக மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எனவே இதற்கான சில பரிந்துரைகளாக

- பாரபட்சம் மற்றும் பாகுபாட்டை எதிர்த்துப் போராடுதல்: இனவெறி, இன அடக்குமுறை மற்றும் இன அடிப்படையிலான எந்தவொரு பாகுபாட்டிற்கும் எதிராக நிற்கவும். தீங்கு விளைவிக்கும் சார்புகளை அங்கீகரிப்பது மற்றும் அகற்றுவது பற்றிய தெளிவை ஏற்படுத்துதல்.
- ஆட்சி மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்தல்: நியாயமான மற்றும் பாரபட்சமற்ற சட்ட அமைப்புகளை உருவாக்குதல், வளங்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்தல், மோதலைத் தடுக்க மனித உரிமைகளை நிலைநிறுத்துவது அவசியம்.

- சர்வதேச ஒத்துழைப்பு: மோதல்களில் மத்தியஸ்தம் செய்வதில் சர்வதேச சமூகம் ஒரு பங்கை வகிக்க முடியும், சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளை ஆதரிப்பது, மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- இனச் சமூகங்களுக்கு அதிகாரமளித்தல்: இன சமூகங்களுக்குள் தலைமைத்துவ வளர்ச்சியை ஆதரித்தல், அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதை உறுதிசெய்து, முடிவெடுக்கும் செயல்முறைகளில் அவர்களின் தேவைகளைத் தீர்த்தல்.
- சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்தல்: இன சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பாகுபாடு - எதிர்ப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல். பாரபட்சமான நடைமுறைகளுக்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பொறுப்பாக்குதல்.
- கல்வியை ஊக்குவித்தல்: பள்ளிப் பாடத்திட்டங்களில் பல்கலாச்சாரக் கண்ணோட்டங்களை ஒருங்கிணைத்தல், பன்முகத்தன்மையைக் கற்பித்தல்.
- சமூக மற்றும் பொருளாதாரத்தை எளிதாக்குதல்: கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்புகள் மற்றும் அனைத்து இன மக்களுக்கும் அரசியல் பங்கேற்பு ஆகியவற்றில் சமமான அணுகலை உறுதி செய்தல். சிறுபான்மையினருக்கு பாதகமான அமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யவும் வழி செய்தல்.
- கலாச்சார பாதுகாப்புத் திட்டங்களை ஆதரித்தல்: இன சமூகங்கள் தங்கள் மொழிகள், மரபுகள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும் முன்முயற்சிகளுக்கு வளங்கள் மற்றும் நிதி வழங்குதல்.
- சர்வதேச ஒத்துழைப்பு: இன சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக வாதிடும் உலகளாவிய கட்டமைப்புகள் மற்றும் முன்முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் பல்வேறு சமூகங்களை பாதிக்கும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ''இனத்தைப் பாதுகாப்பது'' என்பது தனிமைப்படுத்தப்படுவதையோ அல்லது பிரிவினைவாதத்தையோ குறிக்கவில்லை. மாறாக இனங்கள் மதிக்கப்படுவதுடன், அவர்களின் தனித்துவமான அடையாளங்களைத் தக்க வைத்துக் கொண்டு செழிக்கும் வாய்ப்பைப் பெறும் ஒரு சமூகத்தை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அணுகுமுறைக்கும் தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது, தீங்கு விளைவிக்கும் கட்டமைப்புகளை அகற்றுவதற்கும் மேலும் உள்ளடக்கிய மற்றும் சமமான உலகத்தை உருவாக்குவதற்கும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு செயற்படுவதனூடாக இலங்கையில் மலையகத் தமிழ் மக்களையும் அவர்களது தனித்துவ இன அடையாளங்களையும் தொடர்ச்சியாக சிறப்புற பேணிப்பாதுகாத்து வர முடியும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றே கூறலாம்.

**உசாத்துணைகள்**

Department of Census and Statistics. (2012). From http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2012Visualization/htdocs/index.php?usecase ndicator&action=Data&indId=10

Bass, D. (2013). Everyday ethnicity in Sri Lanka. Google Books. From, https://books.google.lk/books?hl=en&lr=&id=2ImKQwhY9ooC&oi=fnd&pg=PP2&dq=info:fOoXHY2ZwJ:scholar.google.com/&ots=yJhHiuR97_&sig=9EIHtUcihBbjAKOYnEcSJCTzTA&redir_esc=y#v=onepage&q&f=false

Chandrasekere, S. (2008). Inventing the Sri Lankans: Construction of Ethnic Identity by Immigrants to Ontario. central.bac-lac.gc.ca. From, https://central.baclac.gc.ca/.item?id=NR44818&op=pdf&app=Library&oclc_number=691737974

Deegalle, M. (2006). Buddhism, Conflict and Violence in Modern Sri Lanka. hldmahindapala.com. From, https://hldmahindapala.com/wp-content/uploads/2017/10/buddhism_conflict_and_violence_in_modern_sri_lanka.pdf#page=151

Freeman, M. (2003). Mapping Multiple Identities within the Self-Concept: Psychological Constructions of Sri Lanka's Ethnic Conflict. Self and Identity, 2(1), 61–83. From, https://doi.org/10.1080/1529886030902

கமலினி, க. (1999). *மலையக மக்களுடைய இனத்துவ இருப்பின் பால்நிலை.* பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

கீதபொன்கலன்,எஸ். ஐ. (2005). *இலங்கையின் இனமோதலும் சமாதானமும்.* 2002-2004. குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சிவசந்திரன், குமாரி. இரா. (1987). *மலையகத் தமிழ் மக்கள்.* பொன்னி வெளியீட்டகம்.

சிவராஜா, அ. (1992). *மலையகத் தமிழரின் அரசியல் வரலாறும் இலக்கியங்களும்.* மலையக ஆய்வகம்.

பாஸ். (2001). *மலைகத் தமிழர் அடையாளத்தின் பின்புல அமைப்புகள்.* மார்க்க வெளியீடு.

முகம்மது சமீம் (1998). *ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்.* கொழும்பு : நிசானா பப்ளிசர்ஸ்.

நிசான், எ. (1992). *இலங்கை: ஒரு கசந்துபோன அறுவடை.* சர்வதேச சிறுபான்மை உரிமைக்குழு அறிக்கை, கொழும்பு.

# ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையில் ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் - ஓர் ஆய்வு

Ms. Ravi Abirami
Department of Sical Sciences,
Faculty of Arts & Culturte,
Eastern University, Sri Lanka.
*raviabirami921@gmail.com*

Prof. V. Gunaretnam
Department of Social Sciences,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*gunaretnamv@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

ரஷ்யா - உக்ரைன் ஆகிய இருநாடுகளுக்கிடையே நிகழும் யுத்தம் சர்வதேச விவகாரங்களில் அரசுகளுக்கிடையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலைப்பாடானது உலகளாவிய சூழலில் அமைதியையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவதற்காக முயற்சிக்கின்றன. இப்போர் உலக நாடுகள் முழுவதும் சந்தித்து வரும் பாரிய சவாலாகும். பல நாடுகள் இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு இவ்யுத்தம் காரணம் எனலாம். இவ்வாறு இலங்கை அரசியல் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியது என்ற வகையில் அதன் உண்மைத் தன்மைகளை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டவகையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது. இதற்காக முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தவகையில் ரஷ்யா - உக்ரைன் யுத்தமானது இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. உலகப்பொருளாதார சந்தை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இலங்கை அரசியல் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய கொள்கைகளை அமுல்படுத்துவதுடன் சிறந்த தலைமைத்துவமுடைய ஆட்சியாளர்களை அதிகார அரசியலுக்குள் உள்வாங்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நிலைகளை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை உருவாக்க வேண்டும். அரசியல்ரீதியாக ஸ்திரத்தன்மையைப் பேணக்கூடிய ஊழலற்ற நிர்வாகச் செயற்பாடுகளையும், குழுக்களையும் கொண்டு வருவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை மேன்மையடையச் செய்யலாம்.

***திறவுச்சொற்கள்:*** *அதிகார அரசியல், இலங்கை அரசியல் பொருளாதாரம், உலகப் பொருளாதாரச் சந்தை, ரஷ்ய - உக்ரைன் போர், ஊழலற்ற நிர்வாகம்*

**ஆய்வு அறிமுகம்**

சர்வதேச அரங்கையே நிலைகுலைய வைத்த போராக ரஷ்யா உக்ரைன் போர் முக்கிய இடத்தை பெற்றுள்ளது. இந்த யுத்தமானது இரு நாடுகளுக்கு இடையிலான யுத்தமாக காணப்படுகிறது. இதில் ஏற்படுகின்ற தாக்கமானது சர்வதேச அளவில் பல்வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்திருக்கின்றது என்பது நோக்கப்படுகின்றது. இந்த யுத்தம் இருநாட்டில் இடம்பெற்றாலும் ஒவ்வொரு நாட்டிலும் ரஷ்ய உக்ரைன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளினுடைய அரசியல் பொருளாதார ரீதியாக பல்வேறுப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள யுத்தமாக பார்க்கப்படுகினறது. இதனால் உலக நாடுகள் பொருளாதார ரீதியாக எதிர்வினைகளை எதிர் நோக்கியுள்ளன.

சர்வதேச நாடுகளில் ஒன்றாகிய இலங்கையிலும் இது பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் 2022 ஆம் ஆண்டு இலங்கை வரலாறு காணாத வகையில் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. அப்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் பங்களிப்பு செய்தன. அந்தவகையில் அக்காரணங்களில் ஒன்றாக ரஷ்யா உக்ரைன் யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளும் நோக்கப்பட்டது. பொருளாதாரத்தில் கொண்டுவரப்பட்ட தவறான கொள்கை முறைகள், வெளிநாட்டு கடன் அதிகரிப்பு, வெளிநாட்டு கையிருப்பு குறைவு, நாணயத்தின் வீழ்ச்சி, விவசாய உரத்தட்டுப்பாடுகள் மற்றும் பொருட்களினுடைய விலை ஏற்றம் போன்ற காரணிகள் பொருளாதார ரீதியாக ஏற்பட்ட தாக்கங்களாக கூறலாம் மற்றும் ஏனைய காரணிகளாக வரிக்குறைப்பு, பணத்தை அச்சிடுதல் மற்றும் தேசிய கொள்கைகளில் கொண்டுவரப்பட்ட தவறான முறைகள் அவற்றுடன் 2019ல் இடம் பெற்ற அமைச்சர்களினுடைய இராஜினாமா போன்றவற்றை இழந்து அரசினுடைய நிலைமை தலைகீழாக்கியது. இந்த வகையில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஏற்படுகின்ற இந்த மாற்றங்களுக்கு பல காரணங்கள் காணப்பட்டாலும் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இடம் பெற்ற இந்த போரானது எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை முன்வைக்கின்றது

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை அரசியலில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றது. இது ஒரு வித்தியாசமானதாக வியக்கத்தக்கதாக அமைந்தது. இதில் கோட்டபய ராஜபக்ஷ அவர்கள் 52 சதவீதமான வாக்குகளை பெற்று வெற்றி கண்டார் . அவற்றுடன் 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLFP) 128 அதிகப்படியான ஆசனங்களை பெற்று மேலும் தனது வெற்றியை உறுதிப்படுத்தியது. இருப்பினும் அவர் கடைப்பிடித்த கொள்கைகளின் மூலம் ஆட்சியை நிலைநிறுத்த முடியவில்லை காரணம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் ஸ்திரத்தன்மைகள் மக்களின் வெறுக்கதக்கவகையில் காணப்பட்டதுடன், அரசியல் பொருளாதாரம் மாற்றமடைய பல

காரணங்களை குறிப்பிடலாம். அதாவது அரசியல் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், வரி கொள்கைகள், கோவிட்-19, உர இறக்குமதி போன்ற காரணங்களை குறிப்பிடலாம். ஆனால் இதில் எது உண்மைத்தன்மை என ஆராயப்படவில்லை . இதற்கு அப்பால் உக்ரைன் ரஷ்யா யுத்தம் அரசியல் பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணமாக அமைந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. அந்த சந்தேகத்தை ஆய்வு பிரச்சனையாக கொண்டு இந்த ஆய்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

1. பொருளாதாரத் தாக்கங்கள்
2. அரசியல் தாக்கங்கள்

**ஆய்வு வினாக்கள்**

1. ரஷ்ய - உக்ரைன் ஆகிய இருநாடுகளுடனான இலங்கையின் உறவு எவ்வாறானது?
2. ரஷ்ய - உக்ரைன் போர் உலக நாடுகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது?
3. இவ்யுத்தம் இலங்கையில் அரசியல் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கம் யாது?
4. இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் யாவை?

**ஆய்வு நோக்கங்கள்**

**பிரதான நோக்கம்:**

1. இலங்கையில் அரசியல் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதைக் கண்டறிதல்.
2. இத்தாக்கங்களிலிருந்து மீண்டு இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல்.

**துணை நோக்கங்கள்:**

1. ரஷ்யா - உக்ரைன் போரினால் ரஷ்யா மற்றும் உக்ரைன் எவ்வாறான விளைவுகளை எதிர் நோக்கியது என்பதை கண்டறிதல்.
2. ரஷ்யா - உக்ரைன் போரினால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட தாக்கங்களைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது விபரண ஆய்வு முறையினூடாக பண்பு ரீதியானதும் , எண்சார் ரீதியான ஆய்வு முறையியலை பயன்படுத்தப்படுகின்றது.

- தரவு சேகரிப்பு முறை

- தரவு பகுப்பாய்வு முறை

**தரவு சேகரிப்பு முறை :-** இவ்வாய்வுக்கான தரவு சேகரிப்பு முறையினை பொருத்தவரையில் முதலாம் நிலைத்தரவு ,இரண்டாம் நிலை தரவு என்பவற்றின் மூலம் தரவு சேகரிக்கப்பட்டுள்ளது.

**முதலாம் நிலை தரவுகள் :-** இவ்வாய்வுக்கான தரவு சேகரிப்பு முறையில் உள்ளடங்கும் தரவுகள் ஒப்பந்தங்கள் மூலமாக ஆய்வாளரினால் சேகரிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை தரவுகள் இவ்வாய்வுக்கான தரவு சேகரிப்பு இரண்டாம் நிலை தரவுகளாக புத்தகங்கள் ,ஆய்வு கட்டுரைகள், பத்திரிக்கைகள்,இணையதளங்கள் போன்ற இரண்டாம் நிலை தரவுகளை பயன்படுத்தி இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

**தரவு பகுப்பாய்வு முறை:-** இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை பயன்படுத்தி ஒரு கலப்பு ரீதியான விபரண ஆய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

Nawas.a .(2022). Russia and Ukraine War Effects on the global economy of the world. இந்த ஆய்வு ரஷ்யா உக்ரைன் போர் உலக பொருளாதாரத்தை எவ்வாறு பாதித்தது என்பதை நோக்கமாகக் கொண்டது. மேலும் 2022 ரஷ்யாவால் ஆக்கிரமித்தான படையெடுப்பு மேற்கு மற்றும் ரஷ்யா புவிசார் அரசியல் பதற்றங்களை அதிகரித்தது. கூடுதலாக ரஷ்யாவிற்கு எதிரான மேற்கத்திய நாடுகளின் பொருளாதார தடைகள் உலகப் பொருளாதாரத்தில் சீற்றத்தை ஏற்படுத்துகின்றன. மோதல் அற்ற வளங்கள் பொருட்கள் மற்றும் வர்த்தக வளங்கள் ஆகியவற்றில் அதிர்ச்சிகளை தூண்டிவிட்டன மேலும் பல நாடுகளில் உலகளாவிய பண வீக்கத்தை விளைவிக்கத்தக்க பொருட்கள் உணவு மற்றும் எரிசக்திக்கான விலைகள் அதிகரித்தன என்பன உள்ளடங்கப்பட்டுள்ளது.

Asanga Abeyagoonasekara. (2023). Srilanka’s economic crisis: Corruption ,abouse of power and economic crime. இலங்கையில் தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலுடனான அதன் தொடர்பை ஆராய்வது இதன் நோக்கம். இது எதேச்சதிகாரப் போக்கு போட்டித் தன்மை குறைப்பு, ஊழல், குடும்ப இராணுவ ஆட்சி என்பவற்றில் முக்கியப்படுத்தியது இவற்றைக் கொண்டு பொருளாதாரத் தொடர்புகளையும் முதன்மைப்படுத்துகின்றது.

Havan charch. A.S ,Shaji charch . A & Baskar .T (2022). Srilasnka’s economic crisis : brief overview. பணவீக்கம் என்பதன் இலங்கையின் தொற்றுநோய் நெருக்கடி மற்றும் பொருளாதார கட்டுப்பாடு என்பன பொருளாதார மற்றும் அரசையும் தலைகீழாக்கியது என்று கூறலாம். இதில்

வெளிநாட்டு கடன் பொருளாதாரத்தளர்ச்சி, நாணய வளர்ச்சி, கோவிட்-19 தாக்குதல் பற்றிய விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

Diego abenante. (2021). Srilanka 2021: from pandamic emergency to political and economic crises. இந்த ஆய்வில் இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட காரணம் என்ன என்பதை முன்வைப்பதே இந்த ஆய்வில் நோக்கம் ராஜபக்ஷ ஆட்சியை மற்றும் அவர்களின் அதிகார செயல்பாடு இந்த அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு காரணமே ஆராயப்பட்டது உள்நாட்டு போர் மற்றும் அரசியல் கொள்கை சீனாவின் அதிகார செல்வாக்கு என்பவற்றுடன் கோவிட்-19 தாக்கம் என்பன இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்ற வகையில் முடிவை முன் வைத்துள்ளது இருப்பினும் தேசிய பொருளாதாரத்தில் இந்த தாக்கம் எவ்வாறு இடம் பெற்றது என்பதையும் முன்வைத்தார்.

Friedrice nauman foundation for freedom uso house. (2019). Impact of the war in Ukraine;. ரஷ்யா-உக்கிரன் போர் தொடர்பாக பல வகையில் உலக நாடு முழுவதும் எதிர்கொண்டது. தெற்காசியாவில் நிலை எவ்வாறு என்பது இவ்வாறு நோக்கமாக காணப்படுகின்றது இவ்வாறு முக்கிய பிரச்சினையாக தெற்காசிய நாடுகளில் ரஷ்யா உக்ரைன் போர் இவ்வாறான பின்விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை நோக்கியது இதில் இலங்கையில் பொருளாதார தாக்கம் தொடர்பாக கூறப்பட்டுள்ளது இருப்பினும் இலங்கையின் அரசியல் மாற்றம் தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.

Sylwai demedziuk. (2013). The new dimension of war the Ukraine Russia conflict (war studies university). இவ்வாய்வின் நோக்கம் ரஷ்யா உக்ரைன் NATO மற்றும் EU அமைப்புடன் ஒன்றிணையா வகையில் செயல்படல் 2013 முதல் உக்ரைன் பிரதேசத்தில் கலப்பின மோதலில் கவனம் செலுத்துகிறது. இதன் நோக்கம் கலப்பின போரின் சிறப்பு இயல்புகள் உங்களை சித்தரிப்பதாகும். ரஷ்யாவில ˙ அரசியலை இதன் பின்னணி எனலாம் உக்ரைன் ஒரு புவிசார் அரசியல் தவறான புரிதல் மற்றும் ரஷ்யா உலகம் என்று குர்ஆனை கூறுகிறது தனது அரசுடன் இணைத்து செயல்படும் வகையில் செயல்படுகின்றது பல திருப்புமுனை உடன் கூடிய வகையில் உக்கிரன் போர் விளைவு அமைகின்றது.

இலக்கிய மீளாய்வுகளின் கருத்துப்படி உக்ரைன் போர் தொடர்பான விடயங்களும் இலங்கையினுடைய பொருளாதார நெருக்கடி தொடர்பான விடயங்களும் தனித்தனியே ஆராயப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த ரஷ்யா-உக்ரைன் போரினுடைய தாக்கமானது, இலங்கையுடைய அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பது தொடர்பாக எந்த ஒரு ஆய்வும் இதுவரை முன்வைக்கப்படவும் அதனுடைய உண்மைதன்மையும் வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாய்வின் இடைவெளியை நிரப்புவதாக இந்த ஆய்வு உள்ளது

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

உலகளாவிய ரீதியில் பல வகையான போர்கள் இடம் பெற்றன. அவ்வகையில் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வதேச அரங்கே தலைகீழாக்கிய ஒரு பாரிய போராக இந்த ரஷ்யா உக்ரைன் போரானது பார்க்கப்படுகின்றது. இப்போரானது இன்று வரை ஒரு நிறைவு பெறா வகையில் அதனுடைய தன்மையானது உலக நாடுகள் முழுவதையும் ஏதோ ஒரு வகையில் காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் இந்த போரானது பல தாக்கங்களை ஏற்படுத்தியது போலவே இலங்கையினுடைய அரசியல் பொருளாதார சமூக ரீதியாகவும் தாக்கங்களை ஏற்படுத்தியது எனலாம். அதாவது இலங்கையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார ரீதியாக நோக்கினால் ஏற்றுமதி இறக்குமதி, உணவு, விவசாயம், சுற்றுலாத்துறை எரிபொருள் போன்ற இவ்வாறான பல காரணங்களில் இந்த போரானது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கங்கள்**

உலகளாவிய உணவு, உரம் மற்றும் எரிசக்தி சந்தைகளில் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கும் உக்ரைன் போர் உலகெங்கிலும் உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் உணவு அமைப்புகளுக்கு முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.




Source: department of census and statistics and central bank of srilanka

வறுமை, உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயம் கடந்த பல தசாப்தங்களில் 2012 இல் ஈர்க்கக்கூடிய 9.1% உண்மையான GDP வளர்ச்சியுடன் இலங்கை அதன் மிக உயர்ந்த வளர்ச்சியைக் கண்டது. (படம் 1.1). அரசியல் ஸ்திரமின்மை மற்றும் 2019 இல் ஆட்சி மாற்றத்துடன், பொருளாதார வளர்ச்சி 2018 இல் பதிவு செய்யப்பட்ட 2.3% இல் இருந்து -0.2% ஆக குறைந்தது. COVID-19 தொற்று நோய் காரணமாக இது 2020 இல் -3.5% ஆகக் குறைந்துள்ளது, ஆனால் 2021 இல் COVID-19 நிலைமை மேம்பட்டதால் வளர்ச்சி 3.5% ஆக உயர்ந்தது. இருப்பினும், கோவிட்-19, உக்ரைன். ரஷ்யா போர் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் கூட்டு விளைவுகள் காரணமாக இது 2005 முதல் 2018 வரை பதிவான 6% சராசரி வளர்ச்சி விகிதத்தை விட மிகக் குறைவாக இருந்தது. 2020 இல்

உக்ரைன் மார்ச் 2022, படையெடுப்பிற்கு முந்தைய நாளிலிருந்து 47% அதிகரிப்பு **(படம் 1.2 )** இலங்கையை பாதித்தது பொருளாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு. இந்த நாடுகளின் மொத்த இறக்குமதியில் கிட்டதட்ட பட்டாணி 53% ஆகும்.(*un Trade map)*

**அட்டவணை: ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து இலங்கைக்கு உணவு இறக்குமதி**

| இறக்குமதி | உக்ரைன் | ரஷ்யா | ஏனைய நாடு |
|---|---|---|---|
| கோதுமை | 8% | 37% | 55% |
| பட்டாணி | 50% | 3% | 47% |
| சோளம் | 32% | | 68% |
| சூரியகாந்தி எண்ணெய் | 69% | 1% | 30% |
| சோயா பீன்ஸ் | 58% | | 42% |
| கொத்தமல்லி | 5% | 18% | 78% |
| பார்லி | 3% | 2% | 95% |
| Chickpeas | 58% | | 42% |

**படம் : ரஷ்யா மற்றும் உக்ரைனில் இருந்து இலங்கைக்கு உணவு இறக்குமதி**




Source: un Trade map https://m.trademap.org/#/?redirectFromDestop=true

**முக்கிய உணவுப் பொருட்களின் மொத்த விநியோகம் 2021**

| | Domestic producion | Imports | Stock | | Exports | Total supply | Domestic production% OFtotal |
|---|---|---|---|---|---|---|---|
| **Rice** | 3435 | 144 | 33 | | 7 | 3605 | 95 |
| **Wheat** | 0 | 1323 | 13 | | 100 | 1237 | 0 |
| **Sugar** | 159 | 578 | 0 | | 21 | 716 | 22 |
| **Pulses** | 45 | 267 | 0 | | 11 | 300 | 15 |
| **Vegetable oil** | 43 | 185 | 0 | | 19 | 209 | 21 |
| **Vegetables** | 2296 | 324 | 0 | | 18 | 2602 | 88 |

Source :Food balance sheet 2021, department of census and statistics http://www.staticallnformation/foodBalanceShee#gsc.tab=0

**இலங்கையில் சுற்றுலாத்துறையின் வீழச்சி**

2022 ஆம் ஆண்டில், இலங்கையில் சுற்றுலாத்துறையானது பல உள்நாட்டு மற்றும் உலகளாவிய உண்மைகளால் ஒரு பாதிப்பை சந்தித்தது. இருப்பினும், உக்ரைனில் நடந்த போரே சுற்றுலாத் துறையின் வீழ்ச்சியில் மிக முக்கியமான பங்கைக் கொண்டுள்ளது. 2020 இல், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகியவை சுற்றுலாப் பயணிகளின் முதல் பத்து தோற்றங்களில் இருந்தன. 2022 இல், ரஷ்யா நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் இரண்டாவது பெரிய தோற்றமாக இருந்தது, வருகை 16,894 எட்டியது உக்ரைன் 7,037 வருகையுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது. 2226 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து இந்த எண்ணிக்கையில் கடுமையான தாக்கத்தை எதிர்பார்க்கலாம் என்று இலங்கை சுற்றுலா ஹோட்டல்கள் சங்கம் கூறுகிறது. (Grima, 2022)

2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் ரஷ்யர்கள் 15.8 வீதமும் உக்ரேனியர்களின் பங்களிப்பு 8.7 வீதமும் ஆகும். யுத்தம் காரணமாக இந்த நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளின் பற்றாக்குறை ஏற்படும். சுற்றுலாத் துறைக்கான தாக்கங்கள். மேலும் , ரஷ்யா - உக்ரைன் யுத்தம் ஏற்கனவே உலகளாவிய எண்ணெய் விலை உயர்வை ஏற்படுத்தியுள்ளது , இது இலங்கை தனது அன்றாட தேவைக்கான எரிபொருளை இறக்குமதி செய்வதில் மேலும் சிக்கல்களை உருவாக்கும். உக்ரேனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் அதிகரித்துவரும் நிலைமை இலங்கை

தேயிலைக்கு முக்கியமான சந்தையாக இருப்பதால் ஏற்றுமதியையும் பாதிக்கலாம். 25 தொற்றுநோய்க்கு முன்னர், இலங்கை அதிக எண்ணிக்கையிலான சீன சுற்றுலாப் பயணிகளை நம்பியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் சுமார் 1,67,863 சீன சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். உக்ரைனில் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக, உக்ரேனில் இடம்பெற்றுவரும் சுற்றுலாப் பயணிகளின் முக்கிய ஆதாரமான ரஷ்யாவிலிருந்து வருகை தருவோர் வீழ்ச்சியை எதிர்பார்ப்பதாக இலங்கை தெரிவித்ததாக, நாட்டின் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அறிக்கை தெரிவிக்கிறது.




**Souce: Srilanka expects Tourism hit with loss of Russian arrivals**

**இலங்கையின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட தாக்கங்கள்**

தேயிலை உற்பத்தி 2022 இல் ஒரு கடினமான ஆண்டாக இருந்தது, கணிசமாக குறைந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் கூர்மையான வீழ்ச்சி. அக்டோபர் வரையிலான 10 மாதங்களுக்கு உற்பத்தியானது 211 மில்லியன் கிலோ கிரோம்களாக இருந்தது, முந்தைய ஆண்டுகளில் இதே காலகட்டத்தின் அளவை விட மிகக் குறைவு. 2021 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்ட 300 மில்லியன் கிலோகிராம்களை விட ஆண்டின் மொத்த அளவு குறைவாக இருக்கும். முதல் பத்து மாதங்களில் ஏற்றுமதி அளவுகள் 90% குறைந்துள்ளதாக ஆசியா சியாக்கா கமாடிடீஸின் நிர்வாக இயக்குநர் அனில் குக் தெரிவித்தார். பழமைவாத கறுப்பு தேயிலையை உற்பத்தி செய்யும் உலகின் மிகப்பெரிய நாடாக இலங்கை உள்ளது, ஆனால் அது வியட்நாம் மற்றும் இந்தியாவில் உள்ள விவசாயிகளின் சந்தை பங்கை இழந்தது .




இலங்கை தேயிலை தயாரிப்பு (2021/2022)




படம் : **Srilanka tea export**







**Source : SriLanka tea industry [https://stir-tea-coffee.com](https://stir-tea-coffee.com)**

இவற்றின் மூலம் பொருளாதார ரீதியாக எவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டது என்பதை நோக்கினோம். இவற்றைக் கொண்டு ஒரு நாட்டிற்கு பொருளாதாரம் என்பது எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நோக்குவதுடன் அரசியல் மற்றும் பொருளாதார என்பது இவ்வகையில் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது. அதாவது பொருளாதாரம் ஒரு நாட்டினுடைய முதுகெலும்பாக காணப்படுகின்றது. பொருளாதார வீழ்ச்சியடையுமாக இருந்தால் ஒரு நாட்டினுடைய அரசாங்கமும் அல்லது அரசியல் ரீதியான தாக்கங்களும் ஏற்படும் எனலாம் அவ்வகையில் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னரே இலங்கையானது பலவகையான அரசியல் பொருளாதார ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டு வந்தது. அதாவது 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கடன் சுமை இவற்றினுடைய தாக்கமானது அதற்குப்பிறகு வந்த அரசியல் தலைவர்கள் அல்லது அரசாங்கத்தினுடைய கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றின் காரணமாக இலங்கையில் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. அவ்வகையில் உலக நாடுகளையே அக்காலப்பகுதியில் அச்சுறுத்திய ரஷ்ய உக்ரைன் போரானது, இலங்கையினுடைய அரசியல் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது எனலாம். அதாவது ஏற்றுமதி, உணவு, எண்ணெய், சுற்றுலா, விவசாயம் மருந்து அத்தியாவசிய பொருட்களினுடைய தட்டுப்பாடு, விலை உயர்வு, அந்நிய செலாவணியினுடைய கையிருப்பு போன்ற பல காரணங்களினால் பொருளாதாரமானது பாதிக்கபட்டது. இந்த பொருளாதாரப் பாதிப்பானது மக்களினுடைய போராட்டம் எழுச்சி பெற்று அது அரசியல் ரீதியாக ஒரு மாற்றமாக இடம் பெற்றது எனலாம். *(devapriya,2022)*

இந்த பொருளாதார நெருக்கடியில் மக்கள் பலவகையான இன்னல்களை எதிர் நோக்கினர் அந்த இன்னல்களினுடைய வெளிப்பாடு 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றம் எனலாம். மக்கள் தங்களினுடைய பொருளாதார ரீதியான தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டமையினால் மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டங்களை மேற்கொண்டு இருந்த அரசாங்கத்தின் மீது தாக்குதல்களை நடாத்தி ஆட்சியை மாற்ற வேண்டும் என்கின்ற வகையில் தங்களுடைய போராட்டங்களை மேற்கொண்டனர் எனலாம். உதாரணமாக நோக்கினால் இந்தப் போராட்டமானது உலக நாடுகளில் இடம்பெறுகின்ற ஒரு போராட்டமானது அக்காலப் பகுதியில் சிறிய நாடுகள் அதாவது மூன்றாம் உலக நாடுகளாக இருக்கட்டும் மேற்கு சார் நாடுகளாக இருக்கட்டும் இந்த நாடுகளிலும் அக்கால பகுதியில் காணப்படுகின்ற அரசு அரசியல் தலைவர்களுடைய ஆட்சி மீது அதனுடைய கவனமானது அதிகம் காணப்படுகின்றது.

உதாரணமாக: 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கமானது யுத்த நிறுத்த செயல்பாடுகளை அதிகமாக ஒரு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியாகும் அதேபோல அந்த யுத்தத்தினை நிறைவு செய்த பெருமையும் அக்கால அரசாங்கத்தையே சாருகின்றது. ஆனால் இப்படிப்பட்ட காலத்தில் அக்காலப் பகுதியில் இடம்பெற்ற போர் குற்றங்கள் மனித உரிமை செயற்பாடுகள் போன்ற விடயங்களை அந்த அரசாங்கத்தின் மீது வெளிநாடுகள் அழுத்தம் செலுத்துகின்றன. இவ்வகையில் இலங்கை அரசாங்கம் தற்போது எதிர்நோக்கி

வருகின்ற இந்த பொருளாதார நெருக்கடியை கோட்டாபய ராஜபக்ச அவர்களுடைய அரசியல் கொள்கைகளே அதற்கு காரணம் என்ற வகையில் மக்கள் தங்களினுடைய ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் பொருளாதார நெருக்கடிக்கும் பல நெருங்கிய தொடர்பு உண்டு எனலாம். அவருடைய ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் உதாரணமாக உர ரீதியான பிரச்சினை ,விவசாய ரீதியான பிரச்சினை, அந்நிய செலாவணி மீது ஏற்பட்ட தாக்கம், கடன் சுமை, சுற்றுலா ரீதியான பாதிப்பு போன்ற செயல்பாடுகள் இலங்கையில் ஏற்பட்டது. இதற்கு ஒரு காரணமாக இந்த ரஷ்ய உக்ரைன் போராட்டம் அமைகின்றது எனலாம். ரஷ்யாவில் இருந்து அதிகப்படியான ஏற்றுமதி பொருட்கள் இறக்குமதி பொருட்கள் அதேபோல டொலரினுடைய செயல்பாடு குறையப்பட்டது, சுற்றுலாத்துறை உடைய பாதிப்பு அதிகமாக காணப்பட்டது. இவ்வாறான நிலையை கொண்டு இலங்கை அரசாங்கமானது பொருளாதார ரீதியான நெருக்கடியை சந்தித்தது. மக்கள் போராட்டமாக எழுச்சி பெற்று அந்த அரசாங்கத்தின் மீது தனது தாக்குதல்களை மேற்கொண்டு அரசாங்கத்தை மாற்றக் கூடிய வகையிலான இந்த ரஷ்யா உக்ரைன் போரின் உடைய வீழ்ச்சியானது இலங்கை நாட்டினை தாக்கியது என்று கூறலாம் அதாவது அதனுடைய தாக்கம் நேரடியாக காணப்படாவிட்டாலும் மறைமுகமாக அதில் காணப்பட்ட எச்சங்கள் இலங்கையினுடைய அரசியலிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது என்று கூறலாம். *(devapriya,2022)*

**முடிவுரை**

ரஷ்யா- உக்ரைனில் இடம் பெற்ற போரானது உலக நாடுகள் முழுவதையும் நிலைகுலைய வைத்த போர் எனலாம். இவ்வாய்வின் மூலம் எவ்வாறான விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்பவை தொடர்பாக அறியக் கூடிய வகையில் உள்ளது. இதன்படி ஒரு விடயம் ஏற்பட பல பின்புலம் காணப்படும் அல்லது ஒரு செயற்பாடு சர்வதேச அரங்கில் இடம் பெறப் போகின்றது என்றால் அதற்கான பல பின்புலங்கள் காணப்படும் உக்ரைன் ரஷ்யா போர் ஏற்படுவதற்கு முன்னரே பனிப்போரினுடைய முடிவின் பின்னர் சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்க என்ற இரு வல்லரசு நாடுகள் உருவாகின, இதில் ஏற்பட்ட குழப்பத்தின் பின்னர் சோவியத் ஒன்றியமானது வோர்சோ அமைப்பு நாடுகளையும், அமெரிக்கா நேட்டோ நாடுகளையும் கொண்டு உலக ஒழுங்கினை தீர்மானித்தது. இதில் சேராத நாடுகள் அணிசேரா கொள்கை உடைய நாடுகள் என்ற வகையில் உலகமானது காணப்பட்டது. இதன் படி சோவியத் ஒன்றியமானது பிற்காலத்தில் பிளவு ஏற்பட்டதுடன் சோவியத் தோன்றியத்தில் காணப்பட்ட பல நாடுகள் தனி நாடுகளாக அங்கீகாரம் பெற்றுக் கொண்டது.

இதன்படி ரஷ்யா உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் வளம் பெற்றன. இதன் மூலம் ஆரம்பத்தில் இருந்தே ரஷ்யா உக்ரைன் உறவு என்பது ஒரு நெருங்கிய நிலையில் காணப்பட்டது. இரு நாடுகளும் போர் ரீதியான ஒரு முனைதலுக்கு எத்தணிக்கப்பட்டது. இதன்படி உக்ரைன் தனது செயற்பாடுகளையும் புதிய கொள்கை முறைகளையும் நேட்டோ அமைப்புடன் மேற்கொள்ள முடிவெடுத்ததன் பின்னரே ரஷ்யா- உக்ரைன், யுத்தமானது ஒரு

புதிய வடிவமாக இன்று அமைந்துள்ளது, இதனால் உலக நாடுகள் முழுவதும் பாதிப்படைந்தது ,தென்னாசிய நாடுகள் போன்றனவும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியது எனலாம். அவற்றின் மூலம் இலங்கையானது இந்தப் போரினால் எவ்வாறான அரசியல் பொருளாதார ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகியது என்பதையும் பொருளாதாரமென்பது சரிவடைகின்ற போது ஒரு நாட்டினுடைய அரசியல் தன்மையும் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை இந்த போரின் மூலம் இலங்கையினை எடுத்து நோக்கி அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

அவற்றுடன் 2022க்கு பின்னர் இலங்கை பொருளாதார நெருக்கடி என்பது பாரிய சரிவினை உண்டாக்கியது. இந்த பொருளாதார ரீதியான நெருக்கடியானது அரசியலிலும் செல்வாக்கினை செலுத்தியது அவற்றுடன் கோட்டாபய ராஜபக்ச ஆட்சி கொண்டுவரப்பட்ட கொள்கை முடிவுகள் அவரின் செயற்பாடுகள் போன்றன பொருளாதார ரீதியாக நாடு பின்னடைவதற்கு ஒரு காரணம் எனலாம். அவற்றுடன் இந்த பொருளாதார ரீதியான பின்னடைவுகளுக்கு பல காரணங்கள் இருக்கின்றது. ரஷ்யா உக்ரைன் யுத்தமும் ஒரு காரணமாக அமைகின்றது என்பதை ஆய்வு மூலம் நோக்க முடிகின்றது. அவற்றுடன் உலக ரீதியாக எவ்வாறு தாக்கங்கள் ஏற்பட்டது என்பதை ஆய்வின் மூலம் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது அவற்றுடன் சர்வதேச ரீதியாக மட்டுமன்றி தென்னாசிய நாடுகள் எவ்வாறு இப்போரினால் பாதிக்கப்பட்டது மற்றும் சர்வதேச பொருளாதார எவ்வாறு பாதிக்கப்பட்டது போன்ற விடயங்களுடன் இலங்கையினுடைய அரசியல் பொருளாதார ரீதியான செயல்பாடுகள் இவ்வாறான நிலைக்கு சென்றது போன்ற விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

1. இலங்கையில் உற்பத்தியை மேற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு விவசாயம், சுற்றுலா,கைத்தொழிற்துறைகளை மேற்கொண்டு உள்நாட்டு உற்பத்திகளை துரிதப்படுத்த வேண்டும்.

2. இலங்கை ஒரு ஜனநாயக நாடாகையால் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு நடத்துவோர் ஆட்சி பீடம் ஏறும் ஆட்சியாளர்களின் உடைய தன்னிச்சையான போக்கினை தடுக்கும் வகையில் சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

3. விவசாயத்துறையின் உடைய வளர்ச்சியை வளர்க்க உரப்பாவனையில் சரியான கொள்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்த வேண்டும்

4. பொருளாதார வளத்தை உயர்த்த கூடிய திட்டங்களை கொண்டு வர வேண்டும்

5. மூலதன ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி அதனை முடிவு பொருளாக மாற்றி ஏற்றுமதி செய்ய வேண்டும்

6. ஏனைய நாடுகளுடனும் சமூகமான உறவை பேணுதல்

7. மூளைசாலிகள் வெளியேற்றத்தை தடுக்க வேண்டும்.

8. பொருளாதாரம் மேம்படுத்துவதை அடிப்படையாக கொண்டு நீண்ட கால திட்டங்களை வகுக்க வேண்டும்.

ரஷ்யா- உக்ரைன் போரானது உலக நாடுகள் அனைத்தையும் சர்ச்சை உள்ளாக்கியது இவ்வகையில் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான இலங்கையிலும் அதனுடைய தாக்கம் பல்வேறு வகையில் காணப்பட்டது என்பதனை நோக்கினோம் இருப்பின் இலங்கையினுடைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு பல காரணங்கள் அமைந்தது கோவிட்-19 உடைய தாக்கம் அரசுத் தலைவர்களின் உடைய ஒழுங்கற்ற செயற்பாடுகள் போன்ற காரணங்கள் இலங்கையினுடைய அரசியல் பொருளாதாரம் நெருக்கடிக்கு காரணமா அமைந்தது அவ்வகையில் ரஷ்யா- உக்ரைன் போரும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது என்பதனை இது ஆய்வின் மூலம் அறிய முடியுகின்றது.

**உசாத்துணைகள்**

Asanga Abeyagoonasekara .(2023). Srilanka's economic crisis: corruption ,abouse of power and economic crime. *emerald in sight* From.https://www.emerald.com/insight/content/doi/10.1108/JFC0320230069/full/html?skipTracking=true.

Deepak. S. (2023). Impact of Russian-Ukraine War on South Asian. *Quest jounals* From..https://www.questjournals.org/jrhss/papers/vol11issue10/11100105.pdf

Dharankumar pandey .(2022). Russia Ukraine war and the global tourism sector: 13tale.*SSRN*.From.https://ppers.ssrn.com/sol3/ppers.cfm?astract_id=4086650

Diego abenante.(2021).Srilanka in 2021:Pandamic emergency to political and economic crises. *asia maior* .From.https://www.asiamaior.org/?p=1462

Friedrice nauman foundation for freedom uso house. (2022). Impact of the war in Ukraine. *freiheit* .From..https://www.freiheit.org/sites/default/files/2023-02/afganistan-web-version.pdf

Source: un Trade map https://m.trademap.org/#/?redirectFromDestop=true

*Takshashila Case Study - Sri Lanka's Economic Crisis*. (n.d.). The Takshashila Institution. Retrieved February 5, 2023, from https://takshashila.org.in/research/takshashila-case-study-srilanka-economic-crisis

*The Crisis in Sri Lanka Economic and Political Dimensions Uditha devapriya*. (n.d.). https://media.defense.gov/2022/Aug/12/2003055791/-1/-1/1/JIPA%20-%20DEVAPRIYA%20-%20AUG%202022.PDF

The Guardian.(2022)The Guardian EU agrees plan to ration gas use over Russia supply fea Retrieved from https://www.theguardian.com/business/2022/jul/26/eu

*Tourist arrivals from Russia hit all-time high | Daily FT*. (n.d.). Www.ft.lk. Retrieved December 25, 2023, from http://www.ft.lk/front-page/Tourist-arrivals-from-Russia-hit-all-time-high/44-693203

Tsay, R.S, (2005). Tsay Analysis of financial time series John Wiley & Sons, Ltd. Google Scholar

Tsey.y.(2001).Index arbitrage with heterogeneous investors: A smooth transition error correction analysis Journal of Banking & Finance, 25 (10) (2001), pp. 1829-1855 view PDF View article View in Scopus Google Scholar

Tylerburden .(2013). *researchgate*.Retrieved from : https://www.researchgate.net/scientific-contributions/Tyler-Burden-

# Language and Literature

# IMPACT OF HYPERMEDIA-BASED POETRY LEARNING ON WRITING SKILL: AN EXPERIMENTAL STUDY BASED ON 'HIGHER NATIONAL DIPLOMA IN ENGLISH SYLLABUS'

Mr. Mohideen Bawa Nowzath
Department of English,
Sri Lanka Institute of Advanced Technological Education,
nowzathmnf@gmail.com

Dr. Singanayagam Umashankar,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
Eastern University of Sri Lanka.
umashankars@esn.ac.lk

**Abstract:**

The application of hypermedia-based poetry learning, which basically refers to facilitating the learning process through the control of graphics, images, animation, sound, video, and other multimedia information with the assistance of hypertext aligned to selected learning strategies, plays a major role in the performance of the students. Since no prior research had been done in this area of the academic field, the purpose of this study was to determine the relationship between the performance in the writing skill in the HNDE course of ATI-Sammanthurai of SLIATE and the hypermedia-based learning of poetry under selected categories in the HNDE syllabus with proper learning strategies (operations and actions in word corner with photo method). Ninety students from HNDE, class A, first year, were taken as an experimental group, and ninety students from class B, first year, were taken as a controlled group. A pre-test was conducted for both groups to find out the previous knowledge of the students in the groups in order to compare them, and the mean differences were found to be negligible for both groups from the pre-test. Later, the experimental group was used in the classroom to pursue hypermedia-based poetry learning based on selected learning strategies for six months with sixty hours of learning, while the controlled group was generally taught without the use of hypermedia-based poetry learning. After six months, a post-test was conducted for both groups. When the post-test was conducted, the mean was slightly better for group B than the pre-test, and the mean was considerably better for group A in the post-test. Thus, it is found that there is a positive relationship between hyper-media-based poetry learning using selected learning strategies and performance in the writing skill. The research findings imply that hyper-media-based poetry learning improves the writing skills of the learners.

***Keywords:*** *Hypermedia, Poetry learning strategies, Photo method, Word corner, Writing skill*

## Introduction

The students' performance in writing through hypermedia-based poetry learning with proper learning strategies is a topic in today's higher education. Hypermedia is an incorporation of numerous types of media messages into teaching and learning process. Moreover, hypermedia is typical of innovation of information presentation and writing. Hypermedia permits learners to positively incorporate fresh knowledge into their original knowledge bases so that learners become decision makers in information processing with their syllabus contents (Kirkgoz, 2014).

It is found that poor involvement in hypermedia-based poetry learning without proper learning strategies is seen as one of the reasons for failure in the performance in the writing skill in academic courses (Subramaniam, 2003). During the last decade, studies that investigated the relationship between hypermedia-based poetry learning and the performance in the writing skill concluded that a positive correlation exists between these two variables ( Ghasemi & Florentino, 2014), but there are no research studies in the context of the higher education at Sri Lanka Institute of Advanced Technological Education - SLIATE. As per the gap, along with the direct investigation, this study aims at looking into the effect of the hypermedia-based poetry learning with selected learning strategies in the performance in the writing skill using data collected from Higher National Diploma in English course at ATI - Advanced Technological Institute – Sammanthurai in SLIATE under the Ministry of Ministry of Higher Education in Sri Lanka.

The hypermedia-based poetry learning; mainly mentions to enable the learning practice through the control of graphics, images, and animation, sound, video and other multimedia information with the assistance of hypertext, was comprehended as one of the greatest central resources of communication in our society after the arrival of the internet. The learners of English as the Foreign Language can gain various information regarding legal vocabularies, creative sentences, aesthetic thoughts, daily writing structure of sentences and so on from the hypermedia-based poetry. Learners are informed by the hypermedia-based poetry what is going on around them and neighbourhood with taste of literature. And also, hypermedia-based poetry opened ways to learners' lives with many thoughtful supports, exploration and valued articles on diverse themes worldwide. It is found that learners cannot absorb much about diversity, possible scenarios and evidence on tragedies without a hypermedia-based poetry (Glencoe, 2005; Meyers, 2006).

**Literature Review:**

Riverol (1991) empirically examines how the habit of literary writings can be a positive thought involvement in the language laboratory and positions that their use should not only be to exemplify specific language features but should also to stimulate the sentiments in some way, that is, to hearten a reader response. Further he finds that using literature with hypermedia-based poetry should increase the learning condition and form an essential part of the thinking procedure as a whole and should be introduced if and when the teacher senses its appropriateness with a specified learner group.

Murat (2005) states that the language teacher's using literature with hypermedia-based technology in a foreign language class aids for generating a significantly inspiring, amusing and energetic lesson and also literature is not only a device for emerging the written and oral skills of the students in the target language but is also a window opening into the culture of the target language, building up a cultural competence in students.

Küçükolu 2011) states that integrating literature into a foreign language education programme is a significant foundation for reflecting the sociolinguistic features of the target language and literature in English Language Teaching lessons support prospective teachers to increase their characters while educating them as whole persons as well as its educational suitability, it also supports personality development of the learners. Further, he examines that using literature in English Language Teaching with hypermedia classes is measured to be a vastly encouraging material for learners and present literature also supports this in that literature exposes students to complex themes and unforeseen uses of language.

Subramaniam (2003) empirically states that training of literature with technology such as blogs and hypermedia with hypertexts to Malaysian students commences with an outline and the alertness of methods and utilities of the language in the literary texts and this supports generate strong paths to familiarise to students simple aesthetic structures in the writings and to reflect their parts. Lastly the linguistic ways recognised through language-based and stylistic methods may be used to advance focused reading which can enhance the quality of writing.

Finch (2015) examines how poems and poetry-related connections through hypermedia might increase English language writing at middle school and high-school level and he suggests that

an attention on the attractiveness of the words of the target language and on their student-directed practice in non-grammatical as well as in grammatical settings, can support significant and appropriate written communication of personal meanings, in addition to aiming on specific features of construction and syntax. Further he states that a great depth of poetic look can be originated in pop-song scripts, which voice the hopes and fears of artists who are often seen as role-models by secondary students writing needs.

Writing is often used in combination and to describe the relevant fact which is called as "If the paragraph is predominantly developed by description" (Bustamante, 2013, P.187). Wishon and Burks (2005), note that in description, the writer uses the readers' imagination in order to "visualize a sense or a person or to understand a sensation or an emotion ", as the primary purpose is to describe a person, place or things in such vivid details that the aforesaid goal would be accomplished (Glencoe, 2005;Meyers,2006).

Moreover, it is identified that the students still face the issues in writing, particularly in writing a paragraph. It becomes difficult for the learners to understand the format, because this context is used in schools. According to the opinion of Juzwaik (2012), he defines that the students' paragraph writing weakens due to poor topic sentences, poor supporting sentences and poor contents. Meanwhile the greatest number of students becomes lethargy to support writing. Also, students have negative thoughts and opinion towards descriptive writing.

To overcome these problems, it is necessary to follow current trends in writing, to apply innovations within the classroom, to create writing environments wherever students will write freely exploiting their imagination, and to modify students to accumulate writing skills that they will use throughout their lives (Okur&Gocen, 2019). In this context, to overcome the problem, narrative poetry composition becomes a valid resource for developing the descriptive writing skills among students.

Poetry is a piece of writing in which words are arranged beautifully and rhythmically (Mittal, 2014). In particular, Hanauer (2004) described poetry as a literature text which presents the writer's experiences, thoughts and feelings through a self-referential use of language that generates a new understanding of the text for the reader and writer. Simply defined, poetry is a creative literacy writing that arranged beautifully and rhythmically to express experiences,

thought and feelings. Writing poetry itself is a creative and reflective writing approach (Celly, 2019). When incorporating in language classrooms, poems could offer opportunities for students to project their feelings and emotions, thus fostering personal involvement in learners since it deals with universal themes and human concerns (Heath, 1996).

Richard (1988) proposed some teaching methods such as storytelling and role play. Those experts agree that learning poetry via technology based teaching brings good benefits for students and it was practically done. It means that students' competence for their language acquisition can be gained from learning poetry. Reid (1995) connected learning poetry with students' learning style expansion. Robey (1983) pointed out that poetry conveys a considerable proportion of its feeling through the regular arrangement and sound of words.

It states that studies have investigated the relationship between hyper-media based learning of poetries and the performance in the writing skill reaching to the conclusion that there exists a positive correlation between these two variables. Hypermedia shows a vital part in the field of education, which essentially denotes to ease the learning process through the control of graphics, images, animation, sound, video and other multimedia information with the support of hypertext. Hypermedia is a combination of many types of media messages into teaching and learning process. Moreover, hypermedia is typical of innovation of information presentation and writing. Hypermedia permits learners to positively incorporate fresh knowledge into their original knowledge bases so that learners become decision makers in information processing with their syllabus contents. In this line of argument the hypermedia can be effectively used for the development of writing skill of students in higher educational institutions too.

**Methodology**

The aim of the research was to identify the relationship between the hypermedia-based poetry learning with selected learning strategies: operations and actions in word corner with photo method and the performance of the students in the writing skill. Two groups of students were randomly taken from HNDE course with the targeted subject writing skill from the Advanced Technological Institute - Sammanthurai under SLIATE under the Ministry of Higher Education. 90 students from Higher National Diploma in English – class – first year - A were taken as the experimental group and 90 sample students from Higher National Diploma in English – class – first year - B were taken as the controlled group.

A pre-test was conducted for both the groups in writing skill and the mean differences were tested. Later, the experimental group was instructed to pursue hypermedia-based poetry learning on learning strategies such as Word Corner: a digitalized place to display the parts of speech from the poetries and Photo Method: a digitalized screen to show sentence types for six months with sixty hours learning practices and the classes for the controlled group were conducted with usual leaning practices. After six months a post-test was conducted for both the groups in writing skill with the same questions in paragraph writing.

**Hypothesis**

In order to accomplish the aim of this research the following hypotheses were developed.

$H_0$: There is no impact of hyper-media based learning of poetries with learning strategies on the performance in the writing skill.

$H_1$: There is an impact of hyper-media based learning of poetries with learning strategies on the performance in the writing skill.

**Results and Discussion**

The data analysis and findings bring out the representation of data which were collected with the marks through pre-test for experimental group, pre-test for controlled group, post-test for experimental group, and post-test for controlled group. In this analysis, significant p value and mean difference were mainly considered with the support of Statistic Package for Social Science – version 23.

At this point, from the pre-test, the Table 1 below shows that mean value of the marks of group A was 10.2332 with the standard deviation of 2.05810 and group B took the mean of the marks as 11.2334 with the standard deviation of 3.12031. The mean deference between Group A and B is -0.844 in the independent sample test. The t statistics is -1.127 and associated p value was as 0.064. It means that the value is more than 0.05 and, therefore the null hypotheses $H_0$ is not rejected and it shows that the mean differences (- 0.84444) were found as to be negligible between both the groups.

Table 1: Group Statistics

| | Group | N | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|---|
| Pre-test | A | 90 | 10.2332 | 2.05810 | .21706 |
| | B | 90 | 11.2334 | 3.12031 | .32996 |

Independent Samples Test (Pre-Test)

| | Levene's Test for Equality of Variances | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | F | Sig. | t | df | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | | Lower | Upper |
| Equal variances assumed | 13.28 | .000 | -1.127 | 178 | .064 | -.8444 | .3949 | -1.6238 | -.0650 |
| Equal variances not assumed | | | -1.138 | 154 | .064 | -.8444 | .3949 | -1.6246 | -.0642 |

The Table 2 below shows paired sample t test of group – B (pre and post). The mean of the marks is as 11.3111 with the standard deviation of 3.13961 in the post-test. The mean of the marks is as 11.2333 with the standard deviation of 3.13032 in the Pre-test. The mean deference between pre and post-test of groups B is - 0.07778 and standard deviation is 3.6338 in the paired sample t test. The t statistics is -0.203 and associated p value was as 0.840. It means that it is more than 0.05 and, therefore the null hypotheses is not rejected and it shows that the mean differences were found as to be negligible between both the test and expound as there is no considerable improvement in the performance.

Table 2: Paired Samples Statistics

| | | Mean | N | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|---|
| group – B | PreTest | 11.2333 | 90 | 3.13032 | .32996 |
| | PostTest | 12.3111 | 90 | 3.13961 | .33094 |

Paired Samples Test

| | Paired Differences | | | | | T | df | Sig. (2-tailed) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Mean | Std. Deviation | Std. Error Mean | 95% Confidence Interval of the Difference | | | | |
| | | | | Lower | Upper | | | |
| PreTest - PostTest | -.077 | 3.638 | .3835 | -.8399 | .6843 | -.203 | 89 | .840 |

The Table 3 below shows paired sample t test of group – A (pre and post). The mean of the marks is as 11.4869 with the standard deviation of 2.0592 in the pre-test. The mean of the marks is as 14.2337 with the standard deviation of 1.9185 in the post-test. The mean deference between pre and post-test of groups A is – 2.877 and standard deviation is 1.8713

in the paired sample t test. The t statistics is -14.589 and associated p value was as 0.000. It means that it is less than critical alpha value 0.05 at 95% confidential level. Therefore, the null hypothesis ($H_0$) is rejected and the alternative hypothesis ($H_1$) is not rejected. It means that there is an impact of hypermedia-based poetry learning with learning strategies on the performance in the writing skill.

Table 3: Paired Samples Statistics

| | | Mean | N | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|---|
| group – A | PreTest | 11.4869 | 90 | 2.05920 | .21706 |
| | PostTest | 14.2337 | 90 | 1.91857 | .20223 |

Paired Samples Test

| | Paired Differences | | | | | t | df | Sig. (2-tailed) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Mean | Std. Deviation | Std. Error Mean | 95% Confidence Interval of the Difference | | | | |
| | | | | Lower | Upper | | | |
| PreTest - PostTest | -2.877 | 1.871 | .1972 | -3.269 | -2.4858 | -14.589 | 89 | .000 |

## Conclusion

The students who continued hypermedia-based poetry learning with learning strategies, as described in the methodology section for six months with sixty hours of learning practices show a positive impact on the performance in the writing skill. However, the students who followed usual learning practices, described in methodology section do not show an impact on the performance in the writing skill.

## Significance of the study

This research presents experimental evidence of the relationship of hypermedia-based poetry learning on learning strategies and the performance in the writing skill. The evidence presented in this research will essentially contribute to the body of existing literature, relating to research on hypermedia-based poetry learning on learning strategies and the performance in the writing. Further, the outcome of the research will make the learners deeply think of the usage of the hypermedia-based poetry learning in the classroom activities as it supports the learners' thought and will bring the real experience to the learners. When the learners are aware of the usefulness of the hypermedia-based poetry learning, the receptive skills and the productive skills of the learners will increase with the inclusion of standard level of attending,

accepted level of interpretation, established level of communication and recognized level of writing.

Along with the direct investigation, the establishment of a correlation between the hypermedia-based poetry learning with learning strategies and the performance in the writing would assist in applying different policies in terms of English language learning in Sri Lanka and it will have a broader result in updating the policy makers in the educational field.

**References**

Adiyansyah, A. (2006). The difficulties in writing descriptive paragraphs faced by second year students of SMA negeri 18 Plambang ( Graduate thesis). *Sriwijaya University, Palembang*.

Mason, L. (2011). Self - regulated strategy development for students ith riting difficulties. *Theory into practice publications, 50 (1), 20-27*.

Oshima, H. (2011). Investigating the efficiency of EFL undergraduate writng skilss. *Wrting paragraph skills evaluations, 63 (1), 142-145*.

Hogue, O. (2007). The use of clustering technique to improve the students skills in writing. *English community journal, 35 (1), 167 - 1745*.

Wishon, B. (2019). Using juxtaposing pictures in improving writing skilss. *Journal of Language and Literature, 37 (1), 167 - 178- 2019*.

Berrarbi, A. (2018). Introducing Short Stories in EFL Classroom to Explore Culturally Diverse Issues. *Arab world English journal*, Pp. 103-116.

Finch, A. (2015). Using poems to teach English. *English Language Teaching*, 15(2), 29 – 45.

Kirkgoz, Y. (2014). Exploring poems to promote language learners' creative. *Procedia - Social and Behavioral Sciences* , 394 – 401.

Küçükolu, H.. (2011). Prospective English language teachers' views on literature in their teacher education curriculum and its potential value. *Procedia Social and Behavioral Sciences 15*, 1718–1722.

Murat, H. (2005). Teaching English Through Literature. *Journal of Language and Linguistic Studies*, Vol.1, No.1,.

Subramaniam, G. (2003). Linguistic Pathways to the Study of Literature in the Malaysian ESL Context. *GEMA Online Journal of Language Studies*, Vol.3(1).

# பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு

Ms. Sivanayagam Sisitha
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
sisithasisitha2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

புகலிட மூத்த எழுத்தாளர் என்றவகையில் பார்த்திபனுக்கு முதன்மையானதும் தனித்துவமானதுமான ஓர் இடமுண்டு. அந்தவகையில் ''பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு'' என்னும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது புகலிட எழுத்தாளர் என்ற வரிசையில் முதன்மை இடத்தினைப் பெறும் பார்த்திபனது புனைகதைகளில் வரும் பெண்கள் பற்றியதாக அமைந்துள்ளது. அந்தவகையில் பார்த்திபனின் சிறுகதைகள், நாவல்கள் மற்றும் தொடர்கதைகளில் பெண்களின் இருப்பும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் ஆசிரியரால் வழங்கப்படும் தீர்வுகள் என பல விடயங்களை விவரித்து அவற்றை விமர்சனப் பார்வையில் நோக்குதல் என்பது இவ் ஆய்வின் நோக்கமாகும். பார்த்திபனது குறிப்பிட்ட சிறுகதைகளும், நாவல்களும், தொடர்கதையும் ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. பெண்களுக்கான சவால்கள், இன்னல்கள், இயல்புகள், தீர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்துவதில் புனைகதைகளுக்குரிய வகிபாகம் எத்தகையது என்பதை இவ் ஆய்வின் ஆய்வு பிரச்சினையாக அமைந்துள்ளதோடு, விமர்சன மற்றும் விவரண ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்காக பார்த்திபனது நாவல்கள், தொடர்கதைகள், சிறுகதைத் தொகுப்புகள் சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் மற்றும் பார்த்திபனுடனான தொலைபேசி நேர்காணல்கள் என்பன முதல்நிலைத் தரவுகளாகவும், பார்த்திபன் மற்றும் அவரது எழுத்துக்கள் பற்றி நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் வெளிவந்த கட்டுரைகள் இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பார்த்திபனது புனைகதைகளில் பெண்களின் இருப்பு எத்தகையது என்பதை வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *சீதனம், பார்த்திபன், பாலியல் சுரண்டல், புகலிட எழுத்தாளர்கள், புகலிடப் புனைகதைகள்*

**ஆய்வுப் பின்னணி**

தற்கால உலகில் பெண்கள் தொடர்பான கருத்தாக்கங்கள் அதிகமாகவே பேசப்பட்டு வருகின்றமையினைக் காண முடிகின்றது. பெண்களை குறித்து அதிக கவனத்தை செலுத்தும் துறைகளுள், மிக முக்கியமான இடத்தை பெறுவது இலக்கியங்கள் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து புலம்பெயர் இலக்கியங்களில் குறிப்பாக புனைகதைகள் பெண்கள் தொடர்பான விடயங்களில் அதிகூடுதல் கவனத்தை பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. அந்த அடிப்படையில் புலம்பெயர் எழுத்தாளரான பார்த்திபனின் நாவல்களும் சிறுகதைகளும் முதன்மை பெறுகின்றன.

"பார்த்திபனின் புனைகதைகளில் பெண்கள் - ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இந்த ஆய்வானது புலம்பெயர் எழுத்தாளர்களுள் ஆரம்ப எழுத்தாளரான பார்த்திபனின் புனைகதைகளை அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் வரும் பெண்கள் பற்றிய ஆய்வாக இடம்பெறுகின்றது. ஈழத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் 1984 ஆம் ஆண்டு ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தவரே பார்த்திபன். இவ்வாறு ஜேர்மனி சென்று எண்பதுகளின் தீவிர எழுத்தாளராகச் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பல நாவல்களையும், சிறுகதைகளையும் படைத்துள்ளார்.மற்றும் முற்றுப் பெறாத தொடர்கதைகளும் இவரது படைப்புக்களாக உள்ளன. இவற்றின் ஊடாகப் புலம்பெயர் நாட்டு அவலங்கள், சொந்த நாட்டு போர்ச்சூழல், பெண்கள்சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அதற்குரிய தீர்வுகள் என பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார். பார்த்திபன் பொதுவாக தன்னுடைய புனைகதைகளில் அதிகமாகவே பெண்கள் பற்றிய பார்வையை வெளிப்படுத்தியுள்ளார் என்பது அவதானிக்கத்தக்கது. எனவே, பார்த்திபனின் புனைகதைகளில் பெண்களின் நிலை பற்றி பேசப்படுவது அவசியமானதாகும்

**பார்த்திபனின் நாவல்களில் பெண்கள்**

பார்த்திபனின் நாவல்களான, 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்', 'பாதி உறவு', 'ஆண்கள் விற்பனைக்கு' போன்ற நாவல்களிலும் சித்ரா பெண் என்ற தொடர்கதையிலும் வரும் பெண்கள் பற்றியதாக இது அமைகின்றது.

- **சாதியம் தொடர்பான பிற்போக்கு சிந்தனை கொண்ட பெண்கள்**

பார்த்திபனின் 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்' என்ற நாவலில் வரும் பெண்கள் பற்றி பார்த்தோமானால், சாதியம் தொடர்பான பிற்போக்கு சிந்தனையுடைய பெண்களையே காண முடியும். இந்த நாவலின் மையக்கரு சாதியம் ஆகும். இந்த நாவலில் சாதியத்தை விமர்சித்து அதனை இல்லாதொழிக்கும் செயற்பாட்டை சுகுமார் மற்றும் அவரின் தந்தை ஆகிய இரு ஆண்பாலினரே மேற்கொள்கின்றனர். ஆனால் இந்நாவலில் சுகுமாரின் தாய் தேவகி, தங்கை வாணி, தங்கையின் நண்பி சுதா மற்றும் நண்பியின் தாய் சாரதா என இந்நாவலில் வரும்

அனைத்து பெண்ப் பாத்திரங்களும் சாதியத்தை ஏற்று நடக்கும் பிற்போக்கு சிந்தனையுடைய பெண்களாகவே காணப்படுகின்றனர்.

> ‘‘...... தேவகி - சுகுமார் வாணியின் அம்மா. ராமலிங்கத்தின் மனைவி. ரவியுடன் சுகுமார் நெருங்கி பழகுவது அவளுக்கு பிடிக்கவே இல்லை. சாடைமாடையாகவும் நேரடியாகவும் எத்தனையோ முறை சுகுமாருக்கு அவள் எடுத்துக் கூறியும் சுகுமார் செவிமடுக்காததோடு அவளுக்கே பல வினாக்கள் கூறத் தொடங்கி விடுவான்.
>
> அவனுடன் பக்கபலமாக ராமலிங்கம் நிற்பது தேவகியின் பலத்தை பலவீனம் ஆக்கியது.
>
> ராமலிங்கம் தொழிலில் மட்டும் கல்லூரி அதிபராக இருக்கவில்லை. வீட்டில் வெளியில் கூட தன்னுடைய தொழில் தகைமைக்கேற்பவே நடந்து கொண்டார். இதனால் வழமை போல் இப்படி பொதுத்தொண்டு நல்லது செய்ய போய் கிடைக்கும் கிறுக்குப் பட்டத்தையும் வாங்கிக் கொண்டார்.
>
> தேவகி காரணம் இல்லாமல் குறைபடவில்லை. சுகுமாரின் தங்கை வாணியே போதுமான அடிப்படையானதுமான பிரச்சினையாகப் பிரகடனப்படுத்தினாள்.
>
> வயது வந்த பெண் வீட்டிலிருக்கையில் வயது வந்த ஆடவர்கள் அடிக்கடி வீட்டிற்கு வருவது தேவையற்ற வதந்திகளைக் கிளப்பி விடும் என்று ஒரு தாயாக அவள் பயந்தாலும் ரவியின் சாதித்தராதரம் தான் அவளைப் பன்மடங்கு பயமுறுத்தியது.
>
> சமூகத்துக்காக அவள் பயந்தாலும் சாதி வித்தியாசம் பார்ப்பதன் மூலம் அதே சமூகத்தில் ஒரு பங்கு எடுத்திருந்தாள்’’ (பார்த்திபன், 1987)

- **சாதியத்துக்குள் ஒடுக்கப்பட்ட பெண்கள்**

அத்துடன் இந்நாவலில் சாதாரண விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்த ஏழைக் குடும்பத் தலைவியாகவும் தன் மகனுக்காக தன்னுடைய அனைத்து சுக துக்கங்களையும் கைவிட்டு வாழும் தாயாகவும் ரவினுடைய தாய் பொன்னி படைக்கப்பட்டுள்ளார். ஒரு சாதாரண ஏழைத்தாயின் பண்பினை கொண்ட ஒரு பாத்திரமாகவும் ஒடுக்கப்பட்ட சாதியத்துக்குள் ஒடுங்கும் பெண்ணாகவும் இப்பாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

- **ஆணினத்தால் தோற்றுப் போகும் பெண்கள்**

பார்த்திபனின் இன்னுமோர் நாவலான பாதி உறவு நாவலில் வரும் பெண்களை பார்த்தோமானால், இதில் ஆணினத்தால் தோற்றுப் போகும் பெண்களை காணமுடியும். அதாவது இதில் வரும் கனகேஸ்வரி எனும் பெண் கணவனால் சீதனம் வாங்கி திருமணம் செய்யப்பட்டு, பின்னர் வேறு பெண்ணுடனான தொடர்பும் அதேநேரம் தன் மீதும் தன் பிள்ளைகள் மீதும் கரிசனை இல்லாதவராக கணவன் இருந்தமையாலும் கனகேஸ்வரிக்கு

வாழ்க்கை மீது ஏற்பட்ட வெறுப்பினால் தன் கணவரால் (ஆணால்) ஒரு சிறந்த மனைவியாக, தாயாக இருப்பதற்கான தகுதியை ஒரு பெண் இழப்பதைக் காணலாம். இதனால் அங்கே ஒரு பெண் ஒரு ஆணால் தோற்கடிக்கப்படுகின்றாள்.

> "…..உன்ரை புருஷன் முந்தி ஒரு பெட்டையை லவ் பண்ணினவர் தெரியுமே? இரண்டு, மூன்று வருஷமா நல்ல சிநேகிதம். கனகேஸ்வரியால் முதலில் இதை நம்ப முடியவில்லை….. தன்னால் கிடைக்கும் சீதனத்திற்காகவே மகாலிங்கம் தன்னுடைய காதலை கைவிட்டார் என்ற முடிவுக்கு அவள் வர வேண்டியதாயிற்று…….. ஒரே வீட்டில் இருந்தாலும் அவர்கள் கணவன் மனைவியாக இருக்கவில்லை." (பார்த்திபன், 1987)

- **மௌனித்து வாழும் பெண்கள்**

மேலும் இந்நாவலில் நம் சமூகத்தில் அடக்குமுறைகளாலும் வன்முறைகளாலும் பாதிப்படைந்த பெண்கள் எவ்வாறு அதனை எதிர்த்து அதிலிருந்து விடுபட முயலாமல் மௌனித்து வாழ்கின்றனர் என்பதை இந்நாவலில் கனகேஸ்வரி என்ற பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தன் கணவனால் மேற்கொள்ளப்பட்ட அநீதியிலிருந்து விடுபடாமல் அதனை ஏற்று மௌனம் சாதிக்கும் பெண்ணாக கணகேஸ்வரி காணப்படுகின்றாள். மேலும் இந்நாவலில் சிறுவயது முதல் தந்தை - தாய் தகராற்றினால் பாதிப்படையும் ஒரு பெண் குழந்தை, தந்தை தவறானவர் என தன் தாயின் மூலம் அறிந்து கொண்டதனால் சிறு வயது முதல் ஆண்கள் மீதான வெறுப்பினை வளர்த்து, இறுதியில் அவளின் குடும்ப வாழ்விலும் அதன் தாக்கம் காணப்படுவதை நந்தினி எனும் பெண் பாத்திரத்தின் ஊடாக வெளிபடுத்தப்பட்டிருப்பதை காணலாம்.

- **ஆண்களுக்கு எளிதான விவாகரத்து**

அத்துடன் இந்நாவலில், பெண்ணிற்கு தன்னை திருமணம் செய்ய விருப்பம் உள்ளதா? என்பதை அறியாமலே திருமணத்தை முடித்துக் கொண்ட ஆண்கள் ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைத்ததும் பெண்கள் மீது பழியை சுமத்தி இலகுவாக விவாகரத்தினை வழங்க எத்தணிக்கின்றனர் என்பதை பார்த்திபன் தன்னுடைய நாவலில் ரவீந்திரன் - பியதாஸ என்பவர்களின் உரையாடலின் போது வெளிப்படுத்தி உள்ளமைனைக் காணலாம். நந்தினிடமிருந்த ஒரு ஆணின் புகைப்படத்தைக் கொண்டு அவளை சந்தேகித்து, தன் நண்பன் விவாகரத்து செய்ய உத்தேசத்துள்ளான் என்பதை பியதாஸ, " விவாகரத்தா? " என அவசரமாக கேட்பது, ஆண்கள் பெண்களை உண்மையை ஆராயாமல் எளிதாக விவாகரத்து செய்யும் குணத்தை காட்டுகின்றது.

- **ஆடைச் சுதந்திரத்தில் ஆணின் அதிகாரம்**

மேற்கூறப்பட்ட பாதி உறவு நாவலில், ஆண்கள் பெண்களை கட்டுப்படுத்தும் மிக முக்கியமான விடயமாக ஆடை சுதந்திரத்தில் ஆணின் அதிகாரத்தை குறிப்பிடலாம். பொதுவாக ஆண்கள், தன் மனைவியானவள் புடவை அணிந்து, பூ வைத்து, நெற்றியில் பொட்டுடனே இருக்க வேண்டும் என ஆசைப்படுகின்றனர். எப்போதுமே இந்நிலையிலே

இருத்தல் வேண்டும் என எதிர்பார்ப்பர். இது பெண்கள் மீதான ஆடை திணிப்பாகக் கொள்ள முடியும். பெண்களுக்கு தங்கள் அணியும் ஆடையில் முழு சுதந்திரமும் உண்டு. இதனை ரவீந்திரனின் மனநிலையின் ஊடாக வெளிப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

> “திருமணத்திற்கு முன்பு தாங்கள் தன்னிச்சையாக நடந்து கொள்வார்கள். ஆனால் வரப்போகும் மனைவியை பற்றி அவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தாங்களாகவே ஒரு வரைவிலக்கணத்தை அமைத்துக் கொள்கின்றார்களே, இது என்ன நியாயம்?
>
> பெண்கள் தலையை குனிந்து நடப்பது தான் அடக்கமாம். அதையே ஆண்கள் செய்தால் அது கோழைத்தனமாம்.” (மேலது, 1987)

- **பெண்களை பாதிக்கும் சீதன முறைகள்**

பார்த்திபனின் இன்னுமொரு நாவலான ஆண்கள் விற்பனைக்கு என்னும் நாவலானது முழுக்க முழுக்க காலம் மாற்றத்தையும் தாண்டி இன்றளவும் பெண்களை முடக்கும் சீதன முறைகளை தூற்றும் ஒரு நாவலாக அமைந்துள்ளது. இந்நாவலில் பெண்களிடமிருந்து சீதனத்தை பெற்று பெண்களை திருமணம் செய்யும் ஆண்களையும், அவ்வாறு சீதனம் பெற்று திருமணம் செய்து அச்சீதனத்தை இன்னும் ஒரு ஆணுக்கு கொடுத்து தன் சகோதரிகளை திருமணம் செய்து வைக்கும் ஆண்களையும், சீதனத்திற்காக தன் காதலிகளையும் கைகழுவும் ஆண்களையும் நாவலில் வெளிப்படுத்திருப்பதை காணலாம். இதனால் அதிகம் பாதிப்படைவது பெண்களாகவே காணப்படுகின்றனர்.

இந்த நாவலில் பெண்களிடமிருந்து சீதனத்தை எதிர்பார்ப்பது ஆண்கள் மட்டுமன்றி பெண்களுக்கு எதிராக பெண்களே சீதனத்தை எதிர்பார்க்கும் நிலையையும் வெளிப்படுத்திருப்பதை காண முடிகின்றது.

> “......தவபாலன்ரை தங்கச்சிக்கு கல்யாணம் சரி வந்துட்டுதாம். எப்படித் தெரியுமே? தவபாலனுக்கு எங்கயோ பேசி அங்க சீதனம் வாங்கி அதை தங்கச்சிக்குக் கொடுத்து செய்யப் போயினாம். நல்ல ஐடியா என்ன மாலா? சொல்லிட்டு பத்மாவை பார்த்தாள்.. (பார்த்திபன், 1988)

- **பெண்கள் வெறும் நுகர்வு பண்டமா?**

இந்நாவலில் பெண்களை சில ஆண்கள் பார்க்கும் விதம் வெறும் பாலியல் இச்சைக்காக மட்டுமே எனபதை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம். அதாவது பெண்களை வெறும் நுகர்வு பண்டமாக பார்க்கும் சில ஆண்களின் குணத்திற்கு இந்நாவலில் வரும் நிரஞ்சன் என்ற பாத்திரம் ஒரு எடுத்துக்காட்டாகும். உமாவை அவன் காதலிப்பதாக பழகியதும் கடையில் வேலை செய்யும் போது பெண்களை பார்க்கும் விதமும் பெண்களை வெறும் பாலியல் பொருளாக பார்த்துள்ளான் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

> ‘‘....அந்த சம்பவத்தை நினைத்ததும் உமா வெறுப்படைந்தாள். நிரஞ்சனின் ‘அவர்’ மதிப்பு ‘அவனாக’ இறங்கியது.
>
> பாவி என்ன மாதிரி பழகினான். உரிமையா உடம்பில எல்லாம் தொட்டுப் பழகி போட்டு எல்லாம் சும்மா விளையாட்டாமோ? நாங்கள் பெட்டையள். எங்களால ஒண்டும் செயயேலாதெண்ட துணிவு தானே அவனுக்கு நாங்கள் பழகினத்துக்கு சாட்சியள் இல்லை என்ட தைரியம் அவனுக்கு.” (மேலது, 1988)

- **பெண்ணுக்கு தேவை திருமண உரிமை**

பெண்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான உரிமை மறுப்பாக திருமணத்தின் போது தன் கணவனை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரத்தை இழப்பதை குறிப்பிடலாம். பொதுவாக நம் சமூகத்தில் திருமணம் என்ற நிலையில் பெண்களின் சம்மதமோ அவர்களின் விருப்பு பற்றியோ அக்கறையின்றி நடத்தப்படுவதற்கு ஆண்கள் விற்பனைக்கு எனும் நாவலில் வரும் வேதாவின் திருமணத்தை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

> ‘‘.....இளமை நேரம். வேதா பாடசாலை முடிந்து, தோழிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டு, வீடு வர அவர்களைப் பிரிந்து, உள்ளே வந்தபோது அவளுக்காக ஒரு புதுமை காத்திருந்தது.
>
> ‘‘கெதியில முகம் கழுவி உடுப்பு மாத்து. ஆக்கள் வரப்போகினோம் என்று அப்பா என்றும் இல்லாதவாறு அவசரமாக இருந்தார்.”ஆர் வருகினம் ‘‘வேதா அம்மாவை கேட்டாள்.” மாப்பிள்ளை வீட்டுக்காறர் ”
>
> பதிலைக் கேட்டு வேதா சிலிர்த்து போய் நின்றாள். யாரும் அவளை ஒன்றும் கேட்கவில்லை. அந்த விஷயத்தை பற்றி அவளுடன் கதைக்கவும் இல்லை.
>
> அவளைப் பொருட்படுத்தாமலே பெண் பார்க்கப்பட்டது. பேச்சுக்கால்கள் நடந்தன. நாள் குறிக்கப்பட்டது. அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. வீட்டுக்கு வெள்ளையடிக்கப்பட்டது. வளவு துப்புரவாக்கப்பட்டது. கதியால்கள் புதிதாக முளைத்தன. இரவல் தளபாடங்கள், பாத்திரங்கள் வீட்டை நிறைத்தன. எந்நேரமும் ஆட்கள் ஆர்ப்பாட்டமாக இருந்தார்கள்.
>
> ஆனால் ஒருவர் கூட அவளிடம் எந்த அபிப்பிராயமும் கேட்கவில்லை”
>
> (மேலது, 1988)

- **பெண்ணடிமை நீங்க...**

மேலும் இந்த நாவலில் பெண்கள் தங்கள் மீதான அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் எதிராக எத்தகைய நிலைகளில் பெண்களின் கைகள் ஓங்கி, தலைகள் நிமிர்கின்றனவோ அப்போதுதான் பெண்களுக்கான சம உரிமைகளும் சுதந்திரமும் கிடைக்கும் என்பதை

நாவலில் புலப்படுத்திருப்பதை காணலாம். அத்தகைய பெண்கள் மாற வேண்டிய நிலைகளை பார்ப்போம்.

அந்தவகையில் பெண்கள் தங்கள் வாழ்க்கை என்பது திருமணத்தை அடிப்படையாகக் கொண்டது என நம்புகின்றனர். திருமணம் தடைப்படும் போது மனமுடைந்து உயிரைக் கூட விடுவதற்கு துணியும் பிற்போக்கு சிந்தனையிலிருந்து முதலில் விடுபட வேண்டும் பெண்ணுக்கு திருமணமே வாழ்க்கை அல்ல. அதையும் தாண்டி பெண் சாதிக்க பல விடயங்கள் உண்டு என்பதை பெண்கள் உணர வேண்டும்.

மேலும் பெண்கள் தங்கள் அடிமைத்தனம் நீங்க ஆண்களுக்கு சமமாக கல்வியில் சிறக்க வேண்டும். கல்வி மட்டுமே பெண்களின் வாழ்வை ஒளிமயமாக்க முடியும் என்பதை பெண்களுக்கு உணர்த்த வேண்டும். இவ்வாறு பெண்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டால் மட்டும் போதாது. சமூகம், உலகம் என்ற நிலையில் அனைத்து பெண்களும் ஒடுக்குமுறைகளிலும் அடக்கு முறைகளிலும் இருந்து விடுபட ஒன்று சேர்ந்து தங்கள் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் முழுமையான பெண் சுதந்திரத்தையும் உரிமையையும் பெற முடியும். மேற்குறிய நிலைகளில் பெண்களின் கைகள் ஓங்க வேண்டும் என நாவல் புலப்படுத்துகின்றது.

> “.....எங்கட போராட்டத்தை நாங்கள் சமுகத்தில தான் ஆரம்பிக்க வேணும். பொம்பிளையள் தங்கட படிப்பை முழுமையாகத் தொடர்றத்துக்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டின அவசியத்தை வலியுறுத்த வேணும். பொம்பிளையள் தங்கட சொந்தக்காலில நிக்க தேவையான தொழிற்பயிற்சியை பெற்றுக் கொள்றதுக்கு வசதியும் அனுமதியும் ஊக்கமும் குடுக்க வேணுமெண்டதை தெளிவாக்க வேணும்.அதே மாதிரி சொந்தகாலில நிக்க வேண்டிய தேவையை பொம்பிளையளுக்கும் வலியுறுத்த வேணும்” (பார்த்திபன், 1988)

1989 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நமது குரல் சஞ்சிகையில் தொடர்கதையாக வெளிவந்தது தான் ”சித்ரா - பெண்” எனும் தொடர்கதையாகும். இதில் வரும் பெண்கள் பற்றி நோக்குவோம். இந்த தொடர்கதையானது ஒரு குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்கள் சார் பிரச்சினைகளையும் அடக்குமுறைகளையும் வெளிப்படுத்திருப்பதைக் காணலாம்.

- **குடும்பத்தின் சுமையாக பார்க்கப்படும் பெண்கள்**

மிக முக்கியமாக இத்தொடர்கதையில் வெளிப்படுத்தி நிற்கும் பெண் அடக்குமுறைகளுள், பெண் என்பவள் குடும்பத்தின் சுமையாக கருதுவதை குறிப்பிடலாம். அதாவது பெண் பிள்ளைகள் பிறப்பது சமூகமானது குடும்பத்தின் சுமையாக கருதுகின்றது. காரணம் பெண்களை வளர்த்து, ஆளாக்கி ஒரு திருமணத்தை நடத்துவதற்கான சீதனத்தை பெற்றோர்களால் திரட்டுவது ஒரு பொருளாதார சிக்கலாக கொள்ளப்படுகின்றது. பிறக்கு முன்னமே கருவில் இருப்பது பெண் பிள்ளை தான் என்ற மனநிலையில் குடும்ப பொருளாதாரம் பற்றிய அக்கறையும் பெண் பிள்ளைகளை வளர்க்கும் திட்டங்களும் தீட்டப்படுகின்றமையை இதில் வரும் தவமணியின் குடும்பத்தின் ஊடாக அறியலாம்.

"......மூண்டாவது பிள்ளையும் பிறக்குது. இனித்தான் கட்டு செட்டா இருக்க வேணும். பொம்பிளைப் பிள்ளை தான் பிறக்கும்.. கண்டபடி காசைச் செலவழிக்காம சேத்து வைச்சா பிறகு றோட்டில் நிக்க வேண்டி வராது...

அந்த நாளையைப் போல இப்ப ஒண்டுமே இல்லை. எல்லாமே விலை. சாமான் சக்கட்டுகள் விலையேறிப் போச்சு. வீடு, வளவுகள் நைச்சுப் பாக்கேலாத விலை.முழுச் சீவியமுமே விலை கூடிப் போச்சு... இதோட சேந்து மாப்பிளையின்ரை விலையும் கூடிப் போச்சு.." (பார்த்திபன், 1989)

- **கடமைகளாக கட்டமைக்கப்பட்ட குடும்பச் சுமைகள்**

குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண் - பெண் என்ற பாலின பேதங்களின் அடிப்படையில் குடும்பத்தின் பொறுப்புகள் வகுக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். இவ்வாறு வகுக்கப்பட்டு பெண்ணுக்குரிய வேலை, இடம், வசதி என குடும்ப பொறுப்புக்கள் அவளிடம் ஒப்படைக்கப்பட்டு, அவை பெண்ணுக்கான தலையாய கடமைகள் என அவளை நம்ப வைத்து, குடும்பத்தின் சுமைகள் திணிக்கப்படுகின்றது. அதாவது குடும்பத்தின் பழுக்களை பெண்கள் மீது கடமைகளாக கட்டமைக்கப்பட்டு சுமத்தப்படுவதைக் காணலாம். அதாவது வீட்டுப் பொறுப்புக்கள் அனைத்தும் பெண்களுக்கு உரியது என்ற மனநிலை ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்குள்ளும் தோன்றிவிட்டது.

இவ்வாறு குடும்பச் சுமைகள் அனைத்தும் கடமைகளாக கொண்டு வாழும் தாய்மார்கள் தங்களுக்கு பிறக்கும் பெண் பிள்ளைகளுக்கும் தாங்கள் எவ்வாறு கடமைகளாக கருதி குடும்பத்தின் அனைத்து சுமைகளினையும் சுமக்கின்றனரோ அது போலவே கற்றுக் கொடுத்து வளர்க்கின்றனர் என்பதற்கு இதில் வரும் தவமணி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- **பாலியல் சுரண்டல்**

பொதுவாக குடும்பத்தை தாண்டிய பாலியல் சுரண்டல்களையும் பலாத்காரங்களையும் நாம் சமூகத்தில் அதிகமாக காண்கின்றோம். இதற்கு சட்டரீதியான தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகின்றது. இதைத் தாண்டியும் பெண்கள் தங்கள் கணவர்களால் பாலியல்சார் பலாத்காரங்களுக்கு உட்பட்டே வருகின்றனர். தன் மனைவி தானே என்றும் என் விருப்பத்திற்கு அவள் தட்டாமல் பணிந்து போக வேண்டும் என்பதும் ஆணின் அதிகார நிலையை காட்டுகின்றது. இது பெரும்பாலும் சட்டத்திற்கு முன் கொண்டு வரப்படாத பாலியல் பலாத்காரமாக கொள்ளலாம். அதாவது இத்தகைய கணவர்களின் மனநிலையில் இது ஒரு சட்டபூர்வமான பாலியல் பலாத்காரமாகவே கொள்ளப்படுகின்றது. இக்கதையில் தவமணியின் விருப்பின்றி சிவலிங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தாம்பத்தியமானது ஒரு பாலியல் பலாத்காரமாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

"......அருகில் படுத்திருந்த சிவலிங்கம் அவள் பக்கமாக நெருங்கி கொஞ்சம் தாமதித்து, பின் அணைத்தார். தவமணிக்கு எரிச்சலாக இருந்தது. தலையிடியும் உடல் நோவும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தன.

தலையிடிக்குதப்பா.. என்று சொல்லி மறுபக்கம் திரும்பிப்படுத்தாள். சிவலிங்கம் அவள் சொன்னதில் அக்கறை கொள்ளாமல் வேறில் அக்கறையாயிருந்தார்.

அன்று நடந்தது அப்பட்டமான பாலியல் பலாத்காரம் என்பது இப்போதுதான் தவமணிக்கு புரிந்தது…'' (மேலது, 1989)

- **பெண்ணிற்கு விதித்த வரையறைகள்**

மேலும் இத்தொடர்கதையில் குடும்பம் சார்ந்தும் பாடசாலை சார்ந்தும் பல வரையறைகள் பெண்ணுக்கு விதித்துள்ளமையினை வெளிப்படுத்துகின்றது. இவை ஆண் - பெண் பாகுபாட்டினால் பெண் மீது திணிக்கப்படும் அடக்குமுறையாகும். தவமணியின் மகன் சபேசன், மகள் மாதவியின் ஊடாக குடும்பத்தில் பெண்ணிற்கு இடப்பட்ட வரையறைகளை வெளிப்படுத்திருப்பதைக் காணலாம். அதாவது பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் போல் ஓடியாடி விளையாட கூடாது, சைக்கி ஓடக் கூடாது என பெண்களை ஒரு வரையறைக்குள் குடும்பமானது வைத்துள்ளது. அதனை மீறி பெண் செயற்படும் போது அது பெண்ணுக்கும் அவளின் குடும்பத்திற்கும் சமூகத்தில் அவப்பெயரையை பெற்றுத்தரும் என காலந்தோறும் பெண்களை அடிமைப்படுத்துவதைக் காணலாம்.

குடும்பத்திலிருந்து பாலின பேதத்திற்கு ஏற்ப வளர்க்கப்பட்டு பாடசாலைக்கு செல்லும் போது அங்கும் பெண்ணிற்கும் ஆணுக்கும் என வரையறைகள் வகுத்து மீண்டும் பெண்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் தள்ளப்படுகின்றனர். பொதுவாக பாடசாலைகளில் வகுப்பறைகளை சுத்தம் செய்தல், அழிப்பான்களை தைத்துக் கொண்டு வருதல், சங்கீதம் - நடனம் போன்ற பாடங்களுக்கு உரியவர்களாக பெண்களை பாடசாலை சமூகம் ஒரு வரையறைக்குள் வைத்துள்ளதை இத்தொடர்கதை புலப்படுத்துகின்றது.

இத்தகைய வரையறைகள் பாடசாலையில் பெண் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி பெண் ஆசிரியர்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளமையினை இக்கதையில் காண முடிகின்றது. பெண் ஆசிரியர்களுக்கென நிகழ்வுக்கான சமையல், அலங்காரம் வேலைகள், நிகழ்ச்சிகளை பழக்குதல் மற்றும் தயார்படுத்தல் போன்று குறிப்பிட்ட வரையறுத்த வேலைகளே வழங்கப்படுவதை கதையின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**பார்த்திபனின் சிறுகதைகளில் பெண்கள்**

- **கற்பு பற்றிய கண்ணோட்டம்**

பெண்கள் எதிர்கொள்ளும் கற்பு பற்றிய சித்தாந்தம் பார்த்திபனின் சிறுகதைகளில் எத்தகைய கண்ணோட்டங்களில் வெளிப்படுகின்றது என்பதை ஆராய்வது அவசியமாகும். இவருடைய பல சிறுகதைகளிலிருந்து மிக முக்கியமாக "குற்றமில்லாத கொலைகள், வந்தவள் வராமல் வந்தால், விபத்தை மறந்துவிடு, கற்பு'' என்ற நான்கு சிறுகதைகளை மையப்படுத்தி கற்பு

என்ற நிலையில் பெண்கள் எவ்வாறு வஞ்சிக்கப்படுகின்றனர் என்பதை இரு வேறு கண்ணோட்டத்தின் வாயிலாக காணலாம்.

அந்தவகையில் பார்த்திபனின் சிறுகதைகளில் ‘‘குற்றமில்லாத கொலைகள், வந்தவள் வராமல் வந்தால்’’ என்ற இரு சிறுகதைகளிலும் கற்பு என்பதனை ஆணாதிக்க சமுதாயம் எத்தகைய பார்வையில் நோக்குகின்றது என்ற ஒரு வகையான கண்ணோட்டத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. அதாவது ஆண்கள் கற்பு என்ற ஒரு கட்டமைப்பிலிருந்து விலகி தங்களுக்கு அது இல்லை என்றும், கற்பு தவறுவது பெண்களுக்கு மட்டுமே இழிவை உண்டாக்கும் என்ற சிந்தனை மிதமிஞ்சிய நிலையில் இருப்பதையும் மேற்கூறிய இரு சிறுகதைகளிலும் காணலாம். ஆண்களால் தங்கள் கற்பிற்கு ஏற்பட்ட கலங்கத்தை பொறுக்காமல் உயிரை துச்சமாக கருதும் பெண்களையே இவ்விரு சிறுகதைகளும் பிரதிபலிக்கின்றன. அத்துடன் கற்பை கொண்டு பெண்களை நிலைகுலைய செய்ய முடியும் என்ற ஆணின் கற்பு பற்றிய கண்ணோட்டமாக இச்சிறுகதைகள் அமைந்துள்ளன.

> ‘‘..... புதிய கதை ஒன்றும் நாதனாலும் நண்பர்களாலும் பரப்பப்பட்டது.
>
> பார்வதியின் நடத்தை சரியில்லை. இதை சம்பந்தப்படுத்தி கற்பனை உபகதைகளும் அந்த ஊரில் உலா வந்தன. பார்வதியின் ரியூசன் நிறுத்தப்பட்டது. சங்கரியின் படிப்பும் நிறுத்தப்பட்டது.
>
> அந்தக் குடும்பத்தை பற்றிய தாழ்வான அபிப்பிராயம் ஊரெங்கும் நிலவப்பட்டது. பல இரவுகள் அந்த மூன்று பெண்களுக்கும் நீளமாக கழிந்தன. அத்தியாவசிய அலுவல்கள் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு வீட்டுக்குள்ளேயே வாழ்க்கை நடத்தினர். எந்நேரமும் யோசனையில் இருந்தனர்.
>
> வம்பு பேச்சுக்கள், அவமரியாதைகள் இறுகி அவர்களின் வேதனை உச்சமாகிய போது பார்வதியின் தூக்க மாத்திரைகளை எல்லோருமாக பகிர்ந்து சாப்பிட்டார்கள். ஒருவரை ஒருவர் அணைத்து அழுதார்கள். ஒருவர் பக்கத்தில் ஒருவராக படுத்தார்கள்.
>
> அதன் பின் அவர்கள் எழும்பவேயில்லை.
>
> அவர்களின் முடிவு ஊரவர் கண்களுக்கு கோழைத்தனமான தற்கொலையே. ஆனால் ஆண் துணையே இல்லாத அந்த மூன்று அபலைகளையும் இந்த சமூகம் கொலைதான் செய்துவிட்டது. அவர்களாக மரணிக்கவில்லை. நிரபராதிகளான அவர்களுக்கு சமூகத்தினால் கட்டாயமாக மரண தண்டனை விதிக்கப்பட்டு விட்டது.’’ (பார்த்திபன்,1986)

‘‘விபத்தை மறந்து விடு, கற்பு’’ என்ற இரண்டு சிறுகதைகளிலும் கற்பு பற்றிய வேறு ஒரு பார்வை வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம். அதாவது பெண்கள் தங்கள் மீது சுமத்தும் கற்பு பற்றிய அவதூறுகளின் போது கற்பு என்ற ஒன்று தங்களுக்கு மட்டுமே என்ற ஆண்கள்

புகுத்திய மாயையிலிருந்து விலகி பாரதி கூறியது போன்று கற்பு என்ற ஒன்று இருக்குமாயின் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய பொதுவானதாக அமைய வேண்டும் என்னும் சிந்தனை கொண்ட ஒரு புரட்சி பெண்களாக இருக்க வேண்டும் என இச்சிறுகதைகளில் வரும் பெண்கள் வெளிப்படுகின்றனர்.

> கற்பு என்ன பெண்களுக்கு மட்டும் தான் உரியதொன்றா?
>
> அல்லது பிறிம்பாக காணப்படும் ஏதாவதொன்றா?
>
> ஆண்களுக்கு கற்பு தேவையில்லையா? அல்லது அவர்களுக்கு இல்லையா?
>
> நான் யாருக்காக வெட்கப்பட வேண்டும்? மானமுள்ளவர்கள் முன்னால் தானே வெட்கப்பட வேண்டும்? இங்குதான் அப்படி யாரும் இல்லையே. நான் வெளியே போக வேண்டும்.
>
> என்னை மீறி நடந்த செயலுக்கு நானே எனக்கு ஏன் சிறை தண்டனை விதித்துக் கொள்ள வேண்டும்? தேவிகா இப்போது பழைய பெண்ணில்லை.
>
> 'அம்மா!'
>
> தேவிகாவின் குரலில் பழைய விளையாட்டுத்தனம் இருக்கவில்லை.
>
> (மேலது, 1986)

- **சீதனமும் குடும்ப வன்முறைகளும்**

பார்த்திபனுடைய சிறுகதைகள் பல சீதனம் பற்றியும் அதனால் குடும்பங்களில் ஏற்படும் வன்முறை சார்ந்த விளைவுகளையும் அதிகமாக பேசி இருப்பினும், மிக முக்கியமாக அவருடைய சிறுகதைகளிலிருந்து "மனைவி இறக்குமதி, கல்லான கணவன்" என்ற இரு சிறுகதைகளிலும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். புலம்பெயர் சூழலில் தமிழ் இளைஞர்கள் பின்பற்றும் சீதனத்தை பற்றியும் திருமணத்திற்கு பிறகு குடும்பத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறைகளையும் இவ்விரு சிறுகதைகளும் முறையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

- **போலிச் சம்பிரதாய அடக்குமுறைகள்**

பெரும்பாலும் சமய சம்பிரதாயங்களை காரணம் காட்டியே பெண்களை அதிகமாக அடிமைப்படுத்துகின்றமையினைக் காணலாம். அந்தவகையில் பார்த்திபனுடைய சிறுகதைகளிலும் பெண்களுக்காக மட்டும் என்று காலங்காலமாக பின்பற்றி வருகின்ற போலிச் சம்பிரதாயங்களை வெளிப்படுத்தி, அதனை விமர்சிக்கும் தன்மையைக் காண முடியும். அந்த வகையில் "ராதா பெரிசான பின், அம்மா பாவம்" ஆகிய சிறுகதைகளில் சம்பிரதாயங்கள் என்ற பெயரில் பெண்களை அடிமைப்படுத்தும் நிலையைக் காண முடியும்.

பார்த்திபனின் "ராதா பெரிசான பின்" என்னும் சிறுகதையில் பூப்படைதல் என்பது இயற்கையான ஒரு உடல் மாற்றமாகும். இது இரு பாலினருக்கு உரிய ஒன்றாகும். ஆனால்

பெண்களை மட்டும் பூப்படைந்ததாக கருதி அதனை கோலாகலமாக கொண்டாடி தங்களிடம் திருமண பருவத்தில் ஒரு பெண் இருக்கின்றாள் என விளம்பரப்படுத்துவதுடன் அவளை தீட்டு என தள்ளிவைக்கும் நிலையையும் வெளிபடுத்தி இருப்பதைக் காணலாம். மேலும் ‘‘அம்மா பாவம்’’ என்னும் சிறுகதையானது ஒரு கணவனை இழந்த பெண்ணின் துயரம் வெளிப்படுகின்றது.

> ‘‘....அம்மா மட்டும் ஏன் இப்படி இருக்க வேணும்? தான் செத்துப்போனா அம்மா இப்படித்தான் இருக்க வேண்டுமெண்டு அப்பா சொல்லியிருப்பாரோ?
>
> அப்பா திரும்பி வரமாட்டார் எண்டு அம்மாவுக்கு தெரியும். திரும்பி வராத ஆளுக்காண்டி அம்மா எப்படி இருந்தால் என்ன?
>
> அப்ப அம்மாவை வேற ஆரோ தான் இப்படி இருக்க வேணுமெண்டு சொல்லியிருக்கிறாங்கள். அவைக்குப் பயந்து தான் அம்மா இப்படி இருக்கிறா. ஆர் சொல்லி இருப்பினம்? ஆருக்கு அம்மா பயப்படுறா? ” (பார்த்திபன் 2017)

- **புலம்பெயர் சூழலில் ஈழம் மற்றும் வெளிநாட்டுப் பெண்கள்**

பார்த்திபனின் சிறுகதைகளில் புலம்பெயர் சூழலில் ஈழத்துப் பெண்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகள் பல பேசப்பட்டுள்ளன. அந்த வகையில் புலம்பெயர் சூழலில் ஈழத்துப் பெண்கள் எதிர்கொண்ட ஒரு மனவெழுச்சிசார் பிரச்சினையாக தனிமை உள்ளது. அந்நியதேசத்தில் வேரறுந்த நிலையில் பெண்கள் மத்தியில் அதிகமாக காணப்படுவது தனிமையாகும். இதனை இவருடைய ‘‘ஐம்பது டொலர் பெண்ணே,நாளை’’ போன்ற சிறுகதைகளில் உணர முடியும். புலம்பெயர் சூழலில் ஈழத்துப் பெண்கள் எதிர் கொண்ட இன்னுமொரு பிரச்சனை பாலியல் சுரண்டலாகும். இதனை ‘‘வந்தவள் வராமல் வந்தால்’’ ‘‘இழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’’ என்ற இருகதைகளிலும் மேற்கூறிய விடயம் வெளிப்பட்டு உள்ளமையினைக் காணலாம்.

பார்த்திபன் ஈழநாட்டுப் பெண்களின் பிரச்சினைகளை மட்டுமன்றி ஜேர்மனிய சூழலில் வாழ்ந்த ஜேர்மனிய பெண்களையும் அங்கு அகதிகளாக வாழ்ந்த உக்ரைன் மற்றும் மொஸ்கோ நாட்டு பெண்களின் துயரங்களையும் பல கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக இவர்கள் எதிர்கொண்ட பாலியல் சுரண்டல்கள், தனிமை போன்ற பல துயரங்களை ‘‘தூள் கெட்டன வாழும், வந்தவள் வராமல் வந்தால்’’ போன்ற சிறுகதைகளில் வெளிப்படுத்தப்பட்டுயிருப்பதை காணலாம்.

> ‘‘ அதை எப்படி சொல்லுறது. ஒரு சிகரெட் பெட்டியை காட்டியே ஒரு மொஸ்கோப் பெட்டையைக் கொண்டு போகலாம். அங்கு அதுகள் காசுக்கும் சாப்பாட்டுக்கும் சரியாக் கஸ்ரப்படுதுகள். அதைச் சரியாய்ப் பாவிக்கிறது எங்கடை சிறிலங்கன் தான். எங்கட சிலோன் ரூபாவை விட அவங்கட ரூபில் பெறுமதி குறைவு தெரியுமே? நாங்கள் ஐஸ்கிரீம் வேண்டிக் குடிச்சாலே

அதுகள் ஆவண்டு பார்த்துக் கொண்டு நிக்குங்கள். எல்லா கொப்பச்சேவ், ஜெல்சினின்ரை புண்ணியம்.''

(பார்த்திபன், 2017)

**முடிவுரை**

ஆரம்பகால புலம்பெயர் எழுத்தாளரான பார்த்திபன் புனைகதைகளை எழுதத் தொடங்கிய காலம், ஈழத்தில் இனப் போர் உக்கிரமடைந்து படுகொலைகளும் வன்முறைகளும் மலந்து காணப்பட்ட காலமாகும். எனவே இச்சூழலில் இடம்பெற்ற பல துயர சம்பவங்களை தன் புனைகதைகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அவரின் புனைகதைகளின் மூலம் அறிய முடிகின்றது. அதிலும் அதிகமாக இச்சூழலிலும் புலம்பெயர் சூழலிலும் பெண்கள் எதிர் கொண்ட பல துயரங்களையும் சவால்களையும் வெளிப்படுத்தியுள்ளார் என்பது இந்த ஆய்வின் ஊடாக ஏற்பட்ட தெளிவாகும்.

பார்த்திபன் அதிகமாக பெண் சார்ந்த துயரங்களையும் பிரச்சனைகளையும் மட்டும் கூறிவிட்டு தன் படைப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடவில்லை. பெண் சார்ந்த ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் ஒரு பெண் நிலையில் நின்று கொண்டு தீர்வுகளையும் வழங்கிலள்ளார் என்பது புலனாகிறது. மேலும் இப்புனைகதைகளில் குறிப்பிட்ட பல பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளில் சில பிரச்சினைகள் காலம் மாற்றத்தினாலும், பெண்களின் விழிப்பாலும் கலை பிடுங்கப்பட்டுள்ளன எனலாம். ஆயினும் சில பெண்களுக்கு எதிரான சவால்கள் இன்றளவும் காணப்பட்டே வருகின்றன என்பது யாராலும் மறுக்க முடியாத ஒன்றாக உள்ளது.

**உசாத்துணைகள்**

1. பார்த்திபன்,. (1986). *நிஜங்கள்.* மேற்கு ஜேர்மனி: தென்னாசியா நிறுவனம்.
2. பார்த்திபன்,. (1986). *ஜனனம்.* மேற்கு ஜேர்மனி: தென்னாசியா நிறுவனம்.
3. பார்த்திபன். (1987). *வித்தியாசப்படும் வித்தியாசங்கள்.* மேற்கு ஜேர்மனி: தென்னாசிய நிறுவனம்.
4. பார்த்திபன்,. (1987). *பாதி உறவு.* மேற்கு ஜேர்மனி: தென்னாசிய நிறுவனம்.
5. பார்த்திபன்,. (1988). *ஆண்கள் விற்பனைக்கு*. மேற்கு ஜேர்மனி: தென்னாசிய நிறுவனம்.
6. பார்த்திபன்,. (1988 – 1993). *கனவை மிதித்தவன்.* தூண்டில்,ஜேர்மனி.
7. பார்த்திபன்,. (1989). *சித்ரா - பெண்.* நமது குரல், ஜேர்மனி.
8. பார்த்திபன்,. (2017). *கதை.* சுவிஸர்லாந்து: தமிழச்சு.
9. பார்த்திபன்,. (1988). *கல்லான கணவன்.* தூண்டில், ஜேர்மனி.
10. பார்த்திபன்,. (1988). *விபத்தை மறந்து விடு.* தூண்டில், ஜேர்மனி.

# ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு

Ms. Ulagagesparam Digatharani
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*digaulages98@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

“ஆரையூர் மூ. அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வானது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையூர் மூ. அருளம்பலம் என்பவரின் படைப்பிலக்கியங்கள் மற்றும் அவரின் எழுத்துக்கள் அனைத்தையும் ஆய்விற்குரிய பொருளாக எடுத்துக்கொண்டுள்ளது. ஆரையூர் மூ. அருளம்பலத்தின் எழுத்துக்கள் கற்றோருக்கு மட்டுமன்றி, சாதாரண பாமர மக்களும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைகின்றது. இவர் தனது படைப்புகளை பாடல்கள், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், வில்லுப்பாட்டுக்கள், நாட்டுக் கூத்துக்கள், நாடகங்கள் எனப் பல்வேறு வடிவங்களில் வெளியீடு செய்து ஒரு பல்துறைசார் கலைஞனாக இற்றைவரைக்கும் பரிணமித்துக் கொண்டிருக்கிறார். தமிழ் மொழியின் தனித்துவமும், எளிமையான நடையும், சம்பவங்களைக் கோர்த்து சுவாரஸ்யமாகக் கதை சொல்லும் பாணியும் தற்காலத்தைய கதை சொல்லியல் முறையிலிருந்து இருந்து அவரை தனித்துவமாகக் காட்டுகின்றன. இவரின் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளிட்ட ஆக்க இலக்கியப் படைப்புகள் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் இடம் பிடித்துள்ளன. இதேவேளையில் இவருடைய வில்லுப்பாட்டுக்களும் நாடகங்களும் திறந்த போட்டிப் பிரிவுகளில் மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை சென்று வெற்றிச் சாதனை புரிந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பன்முக ஆற்றல் உடைய ஆக்க இலக்கியப் படைப்பாளராக, கலைஞராகத் திகழும் இவர், கல்வி மற்றும் கலைசார் அனுபவங்களை தன்னகத்தே கொண்டவர். அத்துடன், தனக்கே உரித்தான புலமை மரபைக் கொண்டு தமிழ்ச் சமூகத்தின் பல தளங்களிலும் தீவிரமாக செயற்பட்டவர். சுய தேடல், சுய கற்றல் மற்றும் ஆய்வுசார் புத்தாக்க சிந்தனையுடையவராகவும், புத்துணர்ச்சியாளராகவும் செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு கலைத்துறையில் தன்னலம் கருதாது பணியாற்றி வரும் இவரது ஆக்கங்களை ஒட்டுமொத்தமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியது தமிழ் ஆய்வுலகில் அவசியமாகின்றது. ஏனெனில், இதுவரை காலமும் இவருடைய படைப்புக்கள் அனைத்தையும் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தவில்லை என்பதே இதற்குரிய காரணமாகும்.

***திறவுச்சொற்கள்:*** *ஆக்கவிலக்கியம், ஆரையம்பதி, ஆரையூர் மூ. அருளம்பலம், கிழக்கிலங்கை தமிழிலக்கியம், புத்தாக்கச் சிந்தனை*

**ஆய்வு அறிமுகம்**

ஆரையூர் அருளம்பலம் கவிதை, கட்டுரை மட்டுமன்றி நாடகம், கும்மி, கூத்து போன்ற பல வடிவங்களில் தமது படைப்புகளை வெளியிட்டுள்ளார். இவற்றை எமது சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உண்டு. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வரும் இவரது எழுத்தாற்றலை முழுமையாக வெளிக்கொணராமை ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது. மேலும் இவருடைய சிறுகதை, கட்டுரை, கவிதை என்பன முழுமையான தொகுப்பாக வெளியிடப்படவில்லை என்பதும் ஓர் ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

மேலும் ஒரு துறையில் மாத்திரமன்றி கட்டுரை, கவிதை, சிறுகதை என எழுத்துத் துறையிலும் நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு என கலை இலக்கியத் துறையிலும் பரிணமித்துக் கொண்டிருக்கும் ஆரையூர் அருளை சமூகத்திற்கு வெளிக்கொண்டு வருவதற்காகவும் இவ் ஆய்வினை மேற்கொண்டுள்ளேன். இவருடைய படைப்புக்கள் தொடர்பான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு நோக்கங்கள்**

இவ் ஆய்வானது பின்வரும் ஆய்வு நோக்கங்களைக் கொண்டமைகின்றன. அவையாவன:

1. ஆரையூர் அருளம்பலத்தின் ஆக்கங்களை ஒன்று திரட்டி ஆய்வினை மேற்கொள்வதோடு, தமிழிலக்கியப் பரப்பில் ஆரையூர் அருளம்பலத்தினை அவரது இலக்கிய வடிவங்கள் ஊடாக அறிமுகப்படுத்துதல்.
2. இவரது படைப்புகளில் உள்ள சமய, சமூக, புராண, இதிகாசக் கதைகள் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துதல்.
3. ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பில் அவரின் படைப்புகள் பெறும் முக்கியத்துவம் குறித்து மதிப்பிடுதல்.

**இலக்கிய மீளாய்வு**

ஆரையூர் மூ. அருளம்பலத்தின் இலக்கிய படைப்புகள் பற்றிய முழுமையான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இவருடைய ஆக்கங்கள் தொடர்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் வெளிவந்த கருத்துக்களையும் இவரது நூலுக்கு வழங்கப்பட்டுள்ள அணிந்துரை, சிறப்புரை போன்றவற்றில் கூறப்பட்ட விடயங்களையும் இலக்கிய மீளாய்வாகக் கருத முடியும்.

மேலும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விபுலானந்த அழகிய கற்கைகள் நிறுவகத்தில் இளமாணிப் பட்டப்படிப்பினை மேற்கொண்ட சி. சிவமதி (2017), ‘‘மூ.அருளம்பலம் அவர்களின் கோயில் சடங்குப் பாடல்களில் இசை’’ எனும் தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வில் ஆலயங்களின் சடங்கு பற்றியும் சடங்குப் பாடல்களின் முக்கியத்துவம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இவரது "இறையின்ப பாவாரம்" எனும் நூலில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆலயங்களின் வரலாறு, எழுந்தருளியுள்ள ஆண் மற்றும் பெண் தெய்வங்களின் சிறப்புக்கள் பாடல்களாக சித்திரிக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் கும்மி, ஊஞ்சல், காவியம், தாலாட்டு, காவடி, கரகம் எனப் பலவகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் காணப்படும் உரைநடை, இலக்கிய வடிவம், அணிகலன்கள் போன்றவற்றை சங்க கால இலக்கண நூல்களுடன் தொடர்புபடுத்தியும், தற்கால உரைநடையில் உள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் சிறப்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு முறையியல்**

ஆரையூர் மூ. அருளம்பலத்தின் ஆக்கங்கள் கட்டுரை, கவிதை, சிறுகதை, நாடகம், வில்லுப்பாட்டு, கூத்து, சடங்குப் பாடல் என பரந்துபட்ட அளவில் காணப்படுகின்றன. இவருடைய சில எழுத்துக்கள் தொலைந்து போயுள்ளமையினால் முழுமையாக அனைத்துப் படைப்புக்களும் கிடைக்கப் பெறவில்லை. எனவே, இவற்றில் கிடைக்கப் பெற்ற ஆக்கங்களையும், படைப்புகளையும் உள்ளடக்கி இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வானது விபரண அணுகுமுறை மூலமாகவும் நேர்காணல் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு முதல்நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல்நிலைத் தரவுகளாக அருளம்பலத்தின் ஆக்கங்கள், நேர்காணல் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்கள் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் இருந்து பெறப்பட்ட இவருடைய படைப்புகள் பற்றிய தகவல்களும் இவருடைய நூல்களில் அவரைப் பற்றிய ஏனையோரின் குறிப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு பற்றிய ஓர் பார்வை**

கிழக்கிலங்கையின் 'மீன்பாடும் தேனாடாம்' எனச் சிறப்பிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அனைத்து வளங்களும் நிரம்பப் பெற்ற இடமாக ஆரையம்பதி திகழ்கின்றது. இக் கிராமம் பழம் பெரும் தமிழ்ப் பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு சைவக் கிராமம் ஆகும். இவ்வாறு சிறப்பு பொருந்திய பழம்பெரும் கிராமத்தில் பண்டுதொட்டு கண்ணகி அம்பாளுக்கு தொண்டாற்றி வந்த கட்டாடி (பூசாரி) குடும்பத்தின் வழித்தோன்றலான மூத்ததம்பி-அன்னம்மா தம்பதியினருக்கு மூன்றாவது ஆண் மகனாக ஆனைக்குட்டி சுவாமிகளின் ஆசீர்வாதத்தினால் 1949.09.19 அன்று ஆரையூர் அருள் பிறந்தார். ஆனைக்குட்டி சுவாமிகளின் ஆசிக்கிணங்கி இவருக்கு அருளம்பலம் எனும் பெயர் சூட்டப்பட்டது. இளம்பருவத்தில் இறையுணர்வில் ஈடுபாடும் சமயப் பணியில் ஆர்வமும் சமூகப் பணியாற்றும் நோக்கும் நிறைந்தவராக இவர் திகழ்ந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். சிறுவயது முதல் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளைக் கேட்பதில் ஆர்வம் உடையவர். ஆரம்பக் கல்வி கற்கும் காலங்களில் தாயாரின்

போதனையுடன் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நல்லதங்காள் கதை போன்றவற்றையும் கற்றுக்கொண்டார். இவர் தரம் ஐந்தில் படிக்கும்போது பாடசாலையில் நடைபெற்ற விபுலாநந்தர் விழாவில் விபுலாநந்தரைப் பற்றிய சிறிய கவிதை ஒன்றை எழுதி, வாசித்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பார்வையாளர்கள் போன்றோரின் பாராட்டுகளைப் பெற்றவர். அதே வருடத்தில் **'அவள்'** என்ற சிறுகதையை எழுதி முதல் பரிசைப் பெற்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் பாராட்டையும் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய ஆசியும் பாராட்டும் ''ஆரையூர் அருள்'' எனும் புனைபெயரில் எழுதுவதற்கு உந்து சக்தியாக அமைந்திருந்தது. இவ்வாறு சிறுவயது முதலே எழுத்தார்வம் கொண்ட இவர் தான் பணிபுரிந்த பாடசாலையிலும் தனது சமூகத்திலும் பல்வேறுபட்ட கலைச் செயற்பாடுகளை மேற்கொண்டு பல இலக்கியம்சார் பங்களிப்புகளை ஆற்றியுள்ளார்.

ஆரையூர் மூ.அருளம்பலம் சிறுகதை, கட்டுரை, கவிதை, நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக் கூத்து எனப் பலவகையான இலக்கியங்களைப் படைத்துள்ளார். இவர் மாணவர் மையக் கல்வி, சமுதாய தராசு, நன்றும் தீதும் பிறர்தர வாரா உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் இலக்கிய விபரணம், கவிதை அமைப்பு, சிறுவர் இலக்கியம் என முப்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் வாழ்வு மலர்ந்தது, தாயன்பூ, தென்றல் பேசிது முதலான முப்பதுக்கும் மேற்பட்ட கவிதைகளையும் சமர்ப்பணம், கல்வி அழகே அழகு, குந்தியின் வரம் உள்ளிட்ட பல நாடகங்களையும் பதினைந்திற்கும் மேற்பட்ட நாட்டுக்கூத்துக்களையும் வித்தகர் விபுலானந்தர், ஞான விளக்கு போன்ற இருபது வில்லுப்பாட்டுக்களையும் படைத்துள்ளார். அத்துடன் இவர் தனது ஆக்கங்களை நூல்களாகப் பதிப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்கியங்களை அதன் உள்ளடக்கம் சார்ந்தும் வெளிப்பாட்டு முறைகள் சார்ந்தும் நோக்குவதே எனது ஆய்வின் நோக்கமாகும். அந்த வகையில் உள்ளடக்கம் தொடர்பாக ஆராய்வோம்.

**சிறுகதைகள்**

ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய படைப்புக்களில் சிறுகதைகளும் உள்ளடங்குகின்றன. மனமாற்றம், நெஞ்சக நினைவுகள், வாழ்வளித்த தொழிற்கல்வி, அந்த நினைவுகள் உள்ளிட்ட பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவருடைய சிறுகதைகள் கற்றலுக்கான ஊக்குவிப்பு, இறைவனின் பெருமையை வெளிப்படுத்தல், பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தல், சமகாலக் கல்வி எனும் ரீதியில் அமைந்துள்ளன.

- **கற்றலுக்கான ஊக்குவிப்பு**

அந்த நினைவு மற்றும் மனமாற்றம் எனும் இரு சிறுகதைகள் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த ஆசிரியர்கள் உதவுகின்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

அந்த நினைவு எனும் சிறுகதை சமுதாயத்தின் துன்ப துயரங்களை துடைக்க எம்மால் இயன்ற பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என்பதையே இக்கதையானது

வலியுறுத்துகின்றது. சுகுணன் என்ற மாணவரின் துயர் நிலையை விபரித்து அவனை மகோன்னத நிலைக்கு கொண்டு உதவிய ஆசிரியரின் மனநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

மனமாற்றமானது வறுமைப்பட்ட குடும்பச் சூழலுக்கு ஆறுதல் அளித்தது மட்டுமன்றி குடும்பத்தில் பிள்ளைகளுக்கு உதவி நல்கி நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்பதையே இக்கதை மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறாக இவ்விரு கதைகளிலும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்த ஆசிரியர்களின் உதவி செய்யும் மனநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

- **இறைவனின் பெருமையை வெளிப்படுத்தல்**

  கசமுகாசூரனின் கர்வமடக்கிய கணபதி எனும் சிறுகதையில் இறைவனின் பெருமைகளும் கசமுகாசூரனின் அசுர குணங்களும் சித்திரிக்கப்படுகின்றன. அத்துடன், அகங்காரம் இறுதியில் அழிவையே தரும் என்பதும் எடுத்துக்காட்டப்படுகின்றது. மேலும், விநாயகரை வணங்கும்போது தோப்புக்கரணம் போடுதல், தலையில் மூன்று முறை குட்டி வணங்குதல் போன்ற வழிபாடுகளும் கசமுகாசூரனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- **பண்பாட்டு விழுயங்களை வெளிப்படுத்தல்**

நெஞ்சக நினைவுகள், நன்றி கடன் எனும் இரு கதைகளும் சமூக பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றன. நெஞ்சக நினைவுகள் என்பதில் மத ஒற்றுமை, இனங்களுக்கு இடையே உள்ள நல்லுறவு போன்றவற்றை எடுத்துக்காட்டி, வாழ்க்கையில் சிறுவயதில் அனுபவித்த துன்பங்களை நினைத்து, இந்நிலைமையில் வாழும் ஏழைச் சிறார்களுக்கு உதவ வேண்டுமென்றும் நெஞ்சத்தில் அகலா நினைவுடன் செயற்பட வேண்டும் என்றும் உணர்த்துகின்றது.

- **சமகாலக் கல்வி**

சமகால கல்வி பற்றிப் பேசுபவைகளாக வாழ்வளித்த தொழிற்கல்வி மற்றும் மாணவர் மையக் கல்வி எனும் கதைகள் காணப்படுகின்றன.

**கவிதைகள்**

ஆரையூர் அருள் பலவகையான கவிதைகளை எழுதியுள்ளார். அவற்றை உள்ளடக்கம் சார்ந்து பின்வருமாறு எடுத்து நோக்கலாம்.

- மனிதப் பண்பு சார்ந்த கவிதைகள் - ஒற்றுமைக் கரவொலி ஒலிக்கட்டும், மனிதம் மாண்புற
- வாழ்த்துப்பா தொடர்பான கவிதை - ஆ.மு.சி. வேலழகன் தத்துவ வித்தகங்கள்
- பழந்தமிழ் இலக்கியச் சிறப்பு - ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள்

- பிரதேசச் சிறப்பு - மண்முனைப்பற்றெழிலாள், ஆடவர் தோளிலுங் ''கா'' அரிவையர் வாயிலும் ''கா'' ஆரையூர் அருள் கவியிலுங் ''கா'' - 1987
- அறிஞர்களின் சேவை தொடர்பான கவிதைகள் - பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று, வித்தகன் விபுலானந்தன்

**கட்டுரைகள்**

- இலக்கியம் தொடர்பானவை - கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும், சிறுவர் இலக்கியம், இலக்கிய விபரணம்
- அறிஞர்கள் தொடர்பானவை - விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி, கணிதத் துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு
- கலைகள் தொடர்பானவை - மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப் பிரதிகள், எமது பிரதேச மரபுக் கலைகள் (நிகழ்கலைகள்)

**ஆரையூர் அருளின் படைப்புக்களின் வெளிப்பாட்டு முறைகள்**

ஆரையூர் மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்களான சிறுகதை, கவிதை, கட்டுரை என்பவற்றின் உத்தி முறைகள் தொடர்பாக நோக்கும் போது இவருடைய ஆக்கங்களில் கிராமிய பேச்சுவழக்குப் பாவனை, வாசகரிடம் உணர்வு ரீதியான சிந்தனையைத் தூண்டல், அறநீதிக் கருத்துக்களை வெளிப்படுத்தல், சிறந்த மையக்கரு, இலகுவான வசனநடை, எடுத்துக்காட்டுக்கள் எடுத்தாளல் போன்ற பண்புகள் கையாளப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவற்றை விரிவாக ஆராய்வோம்.

- **சிறந்த மையக்கரு**

இவருடைய சிறுகதைகள் சிலவற்றில் வரலாற்றுச் செய்திகளை முன்நிறுத்தி சில விடயங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளமை இவர் கையாண்டுள்ள ஓர் உத்திமுறையாகும். 'கசமுகாசூரனின் கர்வமடக்கிய கணபதி' எனும் சிறுகதையினை புராணங்களில் கூறப்பட்டுள்ள ஒரு விடயமாக கருத முடியும். தற்காலத்தில் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இதனைப் படைத்துள்ளார். இக்கதையில் விநாயகர் கசமுகாசூரனின் கர்வத்தை அடக்கியமை, பெருச்சாளியை வாகனமாக ஏற்றுக் கொண்டமை, தோப்புக்கரணம் போடுதல், தலையில் குட்டி வணங்குதல் முதலிய வழிபாட்டு முறைகள் போன்ற பல விடயங்களை இக்கதையில் காணலாம்.

'நெஞ்சக நினைவுகள்' சிறுகதை ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கருத்தினை உட்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சமூகத்தின் அவல நிலையினையும் சீர்திருத்தப்பட வேண்டிய வழிமுறைகளையும் உட்பொருளாகக் கொண்டு அதிகமான சிறுகதைகளைப் படைத்துள்ளார். மேலும், பல

கோணங்களில் சிறுகதைகள் ஆக்கப்பட்டு அவை தத்துவக் கருத்துக்களை முனைப்பதாகவுள்ளன. இவருடைய சிறுகதைகள் சமூக விழுமியங்களைப் பின்பற்றுவதற்கான நடைமுறைகளை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளதுடன் இனமத வேறுபாடின்றி, கடைபிடிக்க வேண்டிய நல்லெண்ணச் சிந்தனைகளும் காட்டப்பட்டுள்ளன.

ஆரையூர் அருளின் கட்டுரைகள் பலவகையாக அமைந்துள்ளன.

- ✓ புராண, இதிகாசக் கதைகள் - ஆரையம்பதியில் வீரத்தமிழன் இராவணன்
- ✓ இறை பெருமைகளைச் சித்திரிப்பவை - அருளாட்சி செய்யும் ஆரையூர் கண்ணகி அம்பாள் மாட்சி, மட்டக்களப்பில் பேச்சியம்பாள் வழிபாடு, சிறப்புமிகு சிவராத்திரி
- ✓ கலைகள் தொடர்பானவை - மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துப் பிரதிகள், எமது பிரதேச மரபுக் கலைகள்
- ✓ அறிஞர்களின் சிந்தனைகள் - சுவாமி விவேகானந்தரின் சமூக சமத்துவ சிந்தனைகள், விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி, கணிதத் துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு
- ✓ இலக்கியங்கள் சார்ந்தவை - சிறுவர் இலக்கியம், கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும்
- ✓ தொழிற்கல்வி சார்ந்தவை - பாரம்பரிய நெல்லினமும் பயனும், வாழ்வை வளமாக்கிய பாரம்பரிய தும்புக் கைத்தொழில்

- ➢ **உணர்வு ரீதியான சிந்தனை**

கற்றலை ஊக்குவிக்க ஆசிரியர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வறுமைப்பட்ட குடும்பச்சூழலை எடுத்துக்காட்டி மனமாற்றம், அந்த நினைவு எனும் சிறுகதைகளில் விளக்கியுள்ளார்.

சாதி, மத பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பதை ஒற்றுமை கரவொலி ஒலிக்கட்டும், மனிதம் மாண்புற எனும் கவிதைகளில் கூறியுள்ளளார்.

> ''பலவழி பிறந்திடும் நதிகள் - பாரில்
>
> கடல் தனில் சங்கமம் ஆகும்
>
> பலவகைப் பட்ட மதங்கள் - தரும்
>
> படிப்பினை ஒன்றதே யாகும்
>
> பல்லின மக்களும் ஈற்றில் - மெய்யா
>
> இறப்பது என்பதே திண்ணம்'' (அருளம்பலம்.மூ., 1996)

அதேபோன்று எமது பிரதேசத்தில் காணப்படும் சிறப்பான தன்மைகளை எடுத்துக்காட்டி பிரதேசப்பற்றை எம்மிடையே தோற்றுவிக்கிறார். எடுத்துக்காட்டாக, 'மண்முனைப்பற்றெழிலாள்' கவிதையைக் குறிப்பிடலாம்.

- **மொழிநடை**

பொதுவாக சிறுகதையின் செறிவு அதன் மொழி நடை நோக்கில் முக்கியம் பெறுகின்றது. இவருடைய சிறுகதைகளில் பெரும்பாலும் பின்பற்றப்பட்ட சொற்பிரயோகங்கள் கிராமப்புறங்களில் வாழும் பாமர மக்களின் சூழலுக்கு இசைவாக அமைந்துள்ளமையும் இவரின் இன்னுமோர் உத்திமுறையாகும்.

> ‘‘என்னடி காசில்ல என்றா? ‘‘நேற்றுத்தானடி சுளையா நாநூறு ரூபாத் தந்தநான்’’
>
> ‘‘அந்தக் காசிலதான் சுரேசுக்கு பள்ளிக்காசு கட்டிப்போட்டு, அவன் ஒரே சேட்டத்தான் ஒரே கழுவிக் கழுவிப் போட்டு போறானெண்டு வாத்திமாரெல்லாம் ஊத்த சட்டையென்று ஏசுறதாம், மற்ற பிள்ளைகளும் அவனோட சேருரதோ கதைக்கிறதோ இல்லையாம்.’’ (அருளம்பலம்.மூ., மனமாற்றம், 2020)

ஆரையூர் அருளம்பலம் தனது கட்டுரைகளில் பின்பற்றிய மொழிநடை எளிய வசனங்களாக கற்றோரும் மற்றோரும் வாசித்துப் பயன்பெறக்கூடியதாக அமைந்துள்ளது. கிராமிய வழக்குச் சொற்களாக வேளாண்மை, உப்பட்டிக்கட்டு, சூடுபோடல், பொலிக்காவு, சவனிக்கை (மட்டக்களப்பில் வழக்கொழிந்து வரும் கலைகள், அருளம்பலம்.மூ) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அத்துடன் இலகுவான வசன நடைக்கு,

‘‘சிறந்த சிவபக்தனான இராவணன், சிவபக்தையான தனது தாய் தள்ளாத, நோய்வாய்ப்பட்ட காலத்திலும் தினமும் நெடுந்தூரம் நடந்து வந்து கோணேசர் ஆலயத்தில் பூசை செய்வதைக் கண்டு மனம் வருந்தி, தாயிருக்குமிடத்திற்குக் கோயிலைக் கொண்டு வருவதற்காகத் தனது பெரிய வாளினால் மலையை வெட்டினான். இதுவே ‘இராவணன் வெட்டு’ என அழைக்கப்படுகின்றது.’’ (அருளம்பலம்.மூ., 2018) உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவரின் கவிதைகளில் பெரும்பாலானவை மரபுக் கவிதைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. கவிதைகள் பின்பற்றப்பட்ட மொழிநடை, கவிதையின் தலைப்புக்கேற்ற வகையில் வெவ்வேறுபட்ட கோணங்களில் காணப்படுகின்றன. குறிப்பாக இலகு தமிழில் சொற்பயன்பாடு, அணிகலன் சேர்க்கை என்பவற்றை இனங்காணக் கூடியதாக உள்ளதுடன் சமூக விழுமியங்களை சித்திரிக்கும் கவிதைகளில் இறுக்கமான வசனநடையினைப் பயன்படுத்தியுள்ளார். பிரதேச வேறுபாடுகளுக்கமைய நாளாந்தம் பயன்படுத்தும் மொழிநடைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாக கூறமுடியும்.

> ‘‘ஊற்றுக்கோல் ஊண்டியெழுதிய நூல்கள் பலவாகும்
>
> சான்றோர்கள் சாற்றிடுவ ரவையனைத்தும் உயர்வாகும்
>
> நற்கவிதைகள் பலபடைத்து நல்வழி கண்டிடச் செய்தீர்

மண்சார்ந்த படைப்பாலே மனிதநேயம் சொன்னீர்

பட்டறிவு கற்றறிவு பகுத்தறிவால் உய்த்த்துணர்ஞானி

தொட்டனைத்தூறு மணற்கேணி யொப்பவெழுதுபாணி'' (அருளம்பலம்.மூ.,)

என வெண்பாவின் வரிகளில் மரபுக் கவிதையின் சாயலை தெளிவாக புலப்படுத்தி உள்ளார். இருப்பினும் கவிதையில் பயன்படுத்தப்பட்ட சில சொற்கள் கொச்சைத் தமிழில் அமைந்திருப்பதனையும் கவிதையில் காணலாம்.

எடுத்துக்காட்டு - ஏறு கெழுத்தியாக்கி, கண்டவங்க கண்ணு படும், புளுகுநாவ குளத்து, காத்தணைவு ஆக்காம, ராவைக்கு கூத்துப் பாக்க, திண்டானெக்கு சத்திவரும் (அருளம்பலம்.மூ., 2020)

- **எடுத்துக்காட்டுக்கள் காட்டல்**

தான் கூறவந்த விடயத்தை தெளிவாக எடுத்துரைப்பதற்கு எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்காட்டி விளக்குவதை கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும், விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி, சுவாமி விவேகானந்தரின் சமூக சமத்துவ சிந்தனைகள் எனும் கட்டுரைகளில் காணலாம்.

''எமது இளைஞர்களே! உங்களுக்குப் பகவத்கீதையை விளையாட விளையாட்டு சுவர்க்கத்திற்கு சுருக்க வழியாகும். உங்கள் தசைநார்களும், புயங்களும் இன்னும் வலிமை பெற்றால், கீதையை இன்னும் நன்றாய் அறிந்து கொள்வீர்கள்'' (சுவாமி விவேகானந்தர் கூற்று, அருளம்பலம்.மூ., 2018)

''பட்டு மேகம் பட்டு மேகம்

பயணம் எங்கே போகுது

முட்டி மோதி முட்டி மோதி

முழு மதியை சூடுது'' (அருளம்பலம்.மூ., 2019)

- **அறநீதிக் கருத்துக்கள் இடம்பெறல்**

ஆரையூர் அருள் தமது கவிதைகளில் நீதிக்கருத்துக்களை எடுத்துக்கூறி போதனை செய்கிறார்.

''அடம்பன் கொடி ஒன்றிடில் திண்மை''

''ஒற்றுமை நீங்கின் தளர்வே'' (அருளம்பலம்.மூ., 1996)

''அறம்செய்ய விரும்பு என்றார் ஔவைப்பாட்டி

அமிர்தம்போல் சிறியோர் முதியோர்க் கறிவதூட்டி''

(அருளம்பலம்.மூ., 2021)

மேற்கூறப்பட்டவாறு ஆரையூர் அருளின் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலான ஆக்க இலக்கியங்கள் சமூகத்திற்குத் தேவையான கருத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ் இலக்கியங்களைப் போலவே ஆரையூர் அருள் தமது இலக்கியங்களைப் நூல்களாகப் பதிப்பித்துள்ளமையும் இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும். அவ்வாறு பதிப்பித்த நூல்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) கல்லடி, உப்போடை பேச்சியம்பாள் பாடல்கள் (2001)
2) மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகை அம்பாள் பாடல்கள் (2002)
3) புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பாடல்கள் (2006)
4) கல்லடி-உப்போடை-நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ பேச்சியம்பாள் பாடல்கள் (2010)
5) ஓங்காரானந்த சரஸ்வதி சரிதம் (2010)
6) பேச்சியம்பாள் அவதாரமும் ஆலயமும் (2018)
7) கிராமத்து உள்ளங்கள் (2013)
8) இறையின்பப் பாவாரம் (2016)
9) தமிழ் கூத்தியல் (2020)
10) வில்லடிப்பாட்டு (2021)
11) பக்தாலய பாவாரங்கள் (2022)

**இறையின்பப் பாவாரம்** எனும் நூல் எமது பிரதேசத்தில் மட்டுமன்றி, ஏனைய பிரதேசங்களிலும் உள்ள ஆலயங்களில் அமைந்திருக்கும் இறைவனின் சிறப்புக்கள், பெருமைகள், ஆலயங்களின் வரலாறு, அங்கு பின்பற்றப்படும் சடங்கு முறைகள் போன்றவற்றைக் கொண்ட பாடல்களின் தொகுப்பாகும். அருளம்பலத்தின் அறிவு, ஞானம், ஆற்றல், வல்லமை ஆகியவற்றை பறைசாற்றக்கூடிய வகையில் கும்மி, காவடி, காவியம், சிந்து, ஊஞ்சல் எனப் பலதரப்பட்ட வடிவங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

“மட்டக்களப்பு வாவி யோடிக் - கூடி

வங்கக் கடலோடு சங்கமிக்கும்

அமிர்தகளிப் பதி தேடியமர்ந்த

ஆனை முகவனைப் பாடிடுவோம்”

"அனுமான்வால் தீயை அணைத்த - வர

சாடக சௌந்தரிக் கழகளித்த

கோதண்ட மூன்றியே ராமர் பெற்ற

அமிர்தநதித் தீர்த்தத்தைப் பாடிடுவோம்"

(அருளம்பலம்.மூ., 2016)

இவ்வாறே புரவலர் புத்தக பூங்காவின் வெளியிடாக அருளம்பலத்தின் **கிராமத்து உள்ளங்கள்** எனும் நூல் அமைந்துள்ளது. இது நாட்டாரியல் சார்ந்த நூலாகும். 'தென்றல்' எனும் சஞ்சிகையில் (2012) நாட்டார் இலக்கியம் தொடர்பாக இவரால் எழுதப்பட்டு வந்த விடயங்கள் இந்நூல் உருவாகுவதற்கு கருப்பொருளாக அமைந்திருந்தன. கிராமிய விளையாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், பழமொழி, நையாண்டி என்பன இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

"ஆராரோ...ஆரிவரோ...

ஆரு பெத்த பாலகரோ...

சீரும் சிவத்தேழை பெத்த

செல்வ மகனே நித்திரைசெய்" (அருளம்பலம்.மூ., 2012)

ஆரையூர் அருளின் வெளியீடுகளில் **வில்லடிப்பாட்டு** எனும் நூல் அனைவராலும் பாராட்டப் பெற்றதாகும். இந்நூலில் வில்லுப்பாட்டின் தோற்றம், வில்லின் தத்துவம், வில்லின் அமைப்பு போன்ற விடயங்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவரால் எழுதப்பட்ட வில்லுப்பாட்டுக்களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது.

> "புற்றீசல் போல குறித்த காலத்தில் அக்காலத்தின் தேவை கருதி மட்டுமே இயற்றப்பட்டு பின் மேடையேற்றப்பட்டு ஈற்றில் அழிந்து போகும் பிரதிகளின் நிலைமைக்கு மத்தியில் இக்கலையை ஆத்மார்த்தமான நிலைமைக்கு நேசிக்கும் கலைஞரான இவர் தான் எழுதி மேடையேற்றிய வில்லுப்பாட்டுக்களை இலக்கியத் தொகுப்பாகவும் தந்திருப்பது இக்கலையின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிவதாகும்" (அருளம்பலம்.மூ., 2021)

என இந்நூலின் மதிப்பீட்டுரையில் சிரேஷ்ட விரிவுரையாளர் றூபி வலன்ரீனா பிரான்சிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இவர் எழுதிய வில்லுப்பாட்டுக்களை பெரியோர்கள், அறிஞர்கள், சைவ அடியார்கள், பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கும் விழுமியங்கள், பண்டைய கால அரசர்கள், சுகாதார விதிமுறைகள் என்றவாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

**உதாரணம்:**

- பெரியோர்கள், அறிஞர்கள் - வித்தகர் விபுலானந்தர்
- சைவ அடியார்கள் - ஜீவசேவையே சிவ சேவை (இளையான்குடி மாற நாயனார்)
- பழந்தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கும் விழுமியங்கள் - ஒன்றே குலம் ஒருவனே தேவன் (திருமந்திரம்), அரசியல் பிழைத்தோர்கு அறம் கூற்றாகும் (சிலப்பதிகாரம்), நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன (புறநானூறு), தேறற்க யாரையும் தேறாது (திருக்குறள்)
- பண்டைய அரசர்கள் - சமநீதியே சரிநீதி (எல்லாளன் கதை), சித்திர புத்திரன் (கௌதம முனிவர்)
- சுகாதார விதிமுறைகள் - சுத்தம் சுகம் தரும்

இவரின் வில்லுப்பாட்டு ஆக்கங்கள் ஒழுக்க விழுமியங்கள், சமகால பிரச்சினைகள் என்பவற்றை எடுத்துரைப்பதாக காணப்படுகின்றன. உரையாடல்களின் போது இணையத்தள பயன்பாடு, முகப்புத்தக அறிமுகம், போதைவஸ்து, தீய நட்பு முதலான விடயங்களும் சமூக சீர்திருத்த நோக்கில் பேசப்பட்டுள்ளன.

“பக்கத்தில் பார்த்தாலும் துன்பம், துயரம், கொடூரம்
போர், சிறுவர் துட்பிரயோகம், பெண்கள் கொடுமை
என கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து பழகிப்
போச்சுதுங்க சனங்கள் துன்பத்திலுமொரு சுக முண்டு
கதையக் கேளுங்க.” (தானே வரும் தன்கேடு - குரு)

மேலும், இவரால் எழுதப்பட்ட கூத்துகளில் **இறைவனும் புலவனும்**, **இராவண சொரூபம்** ஆகிய தென்மோடி கூத்துக்கள் குறிப்பிட்டுக்கூறக்கூடியன ஆகும். இவ்விரு கூத்துக்களையும் இவர் **தமிழ் கூத்தியல்** எனும் நூலாக வெளியிட்டுள்ளார்.

அத்துடன், பக்தி இலக்கியங்களாக **பக்தாலய பாவாரங்கள்** எனும் நூலும் **கல்லடி-உப்போடை பேச்சியம்பாள் பாடல்கள்**, **புதுக்குடியிருப்பு கற்பரசி கண்ணகை அம்பாள் பாடல்கள்**, **புன்னைச் சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பாடல்கள்**, **கல்லடி-உப்போடை-நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர்**, **ஸ்ரீ பேச்சியம்பாள் பாடல்கள்** என்பனவும் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு இவர் பக்திப்பரவசமூட்டும் பாடல்கள் பலவற்றை இயற்றி நூலாக வெளியிட்டுள்ளதோடு, அவற்றுள் சிலவற்றை ஒலிப்பேழைகளாகவும் வெளியிட்டுள்ளார். இவ்வாறான படைப்புகளை மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெளியிட்ட பெருமையும் ஆரையூர் அருளையே சாரும். அத்துடன் பாரம்பரியக் கலையம்சங்களை இலகு தமிழில் சாதாரண பாமர மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் பாடல்களாக வெளியிட்டு இச்சமூகத்திற்கு உவந்தளித்த இவரின் அர்ப்பணிப்பான சேவை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**முடிவுரை**

எமது சமூகத்தில் இனங்காணப்படுவோரில் ஒரு சில விடயங்களில் தேர்ச்சி பெற்றவராக, ஆற்றல் பெற்றவராக காணப்படுகின்ற அறிஞர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர், கூத்தாசிரியர் என தனிப்பட்ட ஒரு துறையினைக் கருத்தில் கொண்டே பெயர் சூட்டப்படுகின்றனர். ஆனால் ஆரையூர் அருள் பல்துறை சார்ந்த கலைச் செயற்பாடுகளான கவிதை, கட்டுரை, நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற ஆக்கங்களைப் படைத்து வருபவர். இதனடிப்படையில் இவருடைய 'பல்கலைவித்தகர்' எனும் பட்டம் பொருத்தமாக அமைகின்றது. இவர் போன்ற பல்துறை சார் அறிஞர்களை நாம் கண்டு கொள்வது அரிதாகவே உள்ளது. அதேபோன்று இவருக்கு வழங்கப்பட்ட இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பட்டங்களும் இன்னொரு கலைஞனுக்கு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லை என்றே கூற வேண்டும். அத்துடன் இவருக்கு கிடைக்கப்பெற்ற பாராட்டுக்களும் விருதுகளும் எண்ணிலடங்காதவையாக உள்ளன. இவற்றையெல்லாம் ஒரு தனிமனிதனால் பெற்றுக் கொள்ள முடியும் என்றால் இவருடைய திறமை, ஆற்றல் என்பவற்றை எம்மால் மதிப்பிட முடிகின்றது.

இவ்வாறு கிழக்கிலங்கைக்குக் கிடைத்த அளப்பெரிய சொத்தை இச்சமூகத்திற்கு வெளிக்கொணர்வதற்கு எம்மால் முடியுமான வரையில் செயல் ஊக்கம் அளிக்க வேண்டும். பல்துறை சார்ந்து எம்மிடம் உள்ள வளத்தை ஏனைய இடங்களுக்கும் கொண்டு சென்று இக்கலைகளை மென்மேலும் வளரச் செய்வதற்கான முயற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும்.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த ''மூ.அருளம்பலத்தின் இலக்கிய ஆக்கங்கள் - ஓர் ஆய்வு'' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டுள்ளேன். அந்த வகையில் இவ் ஆய்வில் இவருடைய படைப்புகள் தொடர்பான பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் ஆரையூர் அருளை நேரடியாகச் சந்தித்து நேர்காணல் மூலம் சில தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பாக இருந்தது. இதுமட்டுமன்றி இவருடைய ஆக்கங்கள் அனைத்தும் முழுமையாக கிடைக்காவிட்டாலும் கிடைக்கப்பெற்ற ஆக்கங்களை ஆய்வுத் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்வதற்கு உதவி புரிந்துள்ளார். மேலும், இவருடைய வெளியீடுகள் தொடர்பாக முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படாவிட்டாலும் சில விடயங்கள் ஆய்வுக்காக கவனத்திற் கொள்ளப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

1. அருளம்பலம், மூ. (ஆரையூர் அருள்). (2012). *கிராமத்து உள்ளங்கள்.* கொழும்பு: புரவலர் புத்தக பூங்கா.
2. அருளம்பலம், மூ. (2019). *தமிழ் கூத்தியல்.* கிழக்கு மாகாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.
3. அருளம்பலம், மூ. (2021). ''வில்லடிப்பாட்டு'', முனைக்காடு: நாகசக்தி கலா மன்றம்.

4. அருளம்பலம், மூ. (2022). "பத்தாலய பாவாரங்கள்", ஆரையம்பதி: ஸ்ரீ முருகன் இந்து மன்றம்.

5. ஆரையூர் அருள். (2016). "இறையின்பப் பாவாரம்", திருகோணமலை: ஏ.ஆர்.ரி பிரிண்டர்ஸ்.

6. ஆரையூர் இளவல். (1999). "ஆரையூர் கந்தன்", ஆரையம்பதி: ஸ்ரீ கந்தசுவாமி கோயில்.

**சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்**

1. அருளம்பலம், மூ. (2016). அந்த நினைவு. *யுக்தி*, (இதழ்-6), 6-11.
2. அருளம்பலம், மூ. (2021). இலக்கிய விபரணம். *தேனகம்,* 37-42.
3. அருளம்பலம், மூ. எமது பிரதேச மரபுக் கலைகள். *புதிய மழை*, (தூறல்-4), 44-57.
4. அருளம்பலம், மூ. (2021). ஔவை இலக்கியங்கள் அத்தனையும் ஔடதங்கள். *புதிய மழை*, (தூறல்-2),
5. அருளம்பலம், மூ. (2020). கசமுகாசூரனின் கர்வமடக்கிய கணபதி. *சுபீட்சம்,* (ஏப்ரல்), 6.
6. அருளம்பலம், மூ. (2020). கணிதத் துறைக்கு இராமானுஜரின் பங்களிப்பு. *சுபீட்சம்,* (நவம்பர்), 6.
7. அருளம்பலம், மூ. கலை இலக்கியமும் கல்விச் செயற்பாடும். *எழுகதிர்,* 19-22.
8. அருளம்பலம், மூ. (2019). சதி!மதி!விதி!. *அகணி,* 93-107.
9. அருளம்பலம், மூ. (2019). சமர்ப்பணம். *அகணி,* 4-11.
10. அருளம்பலம், (2019). மூ. சிறுவர் இலக்கியம். *சிகரம்,* 57-60.
11. அருளம்பலம், மூ. (2021). நெஞ்சக நினைவுகள். சுபீட்சம், (ஜனவரி), 7.
12. அருளம்பலம், மூ. (2020). மனமாற்றம். *சுபீட்சம்,* (டிசம்பர்), 7.
13. அருளம்பலம், மூ. மனிதம் மாண்புற. *சிகரம்,*.
14. ஆரையூர் அருள்., (2020). ஆடவர் தோளிலுங் "கா" அரிவையர் வாயிலும் "கா" ஆரையூர் அருள் கவியிலுங் "கா". *சுபீட்சம்,* (டிசம்பர்),.
15. ஆரையூர் அருள்., ஆ.மு.சி.வேலழகன் தத்துவ வித்தகங்கள். *சந்தனக்காடு,* 46-47.
16. ஆரையூர் அருள்., (1996). ஒற்றுமை கரவொலி ஒலிக்கட்டும். *ஒளி,* 4-5.
17. ஆரையூர் அருள்., (2018). சுவாமி விவேகானந்தரின் சமூக சமத்துவ சிந்தனைகள். *தென்றல்,* (ஆடி), 38-40.
18. ஆரையூர் அருள்., (2021). நன்றிகடன். *சுபீட்சம்,* ஜனவரி 10.

19. ஆரையூர் அருள்., (1992). பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று. *கிழக்கொளி*,.

20. ஆரையூர் அருள்., (2018). மட்டக்களப்பு வடமோடி தென்மோடி கூத்து பிரதிகள். (செப்டெம்பர்), 1-5.

21. ஆரையூர் அருள்., (2009). மண்முனை பற்றுச்சிறப்பு. *கதிரவன்,* 30.

22. ஆரையூர் அருள்., (2013). மண்முனை பற்று பிரதேச பெண் தெய்வ வழிபாடு. *சிகரம்,* 2-6.

23. ஆரையூர் அருள்., (2003). மண்முனை பற்றெழிலாள். *சிகரம்,* (கார்த்திகை),.

24. ஆரையூர் அருள்., (2021). மாணவர் மையக் கல்வி. *சுபீட்சம்,* (பெப்ரவரி),.

25. ஆரையூர் அருள். ,(2021). வாழ்வளித்த தொழிற்கல்வி. *சுபீட்சம்,*.

26. ஆரையூர் அருள்., (1999). வித்தகன் விபுலானந்தன். *கிழக்கொளி,* 15.

27. ஆரையூர் அருள்., (2018). விபுலானந்தரின் சமரச சமத்துவ சமூகப்பணி. *தென்றல்,* (சித்திரை), 12-15.

28. தவராஜா,சண். (1997). நாட்டுக்கூத்து அருகி விடாமல் காக்கும் அருளம்பலம். *தினக்குரல்,*.

29. மோகனதாசன், க. (2021). ஆரையூர் அருளின் வில்லடிப்பாட்டு நூல் மதிப்பீடு. *சுபீட்சம்,* (மார்ச்),.

**நேர்காணல்**

1. ஆரையூர் அருள், 23.09.2023 அன்று மேற்கொண்ட நேர்காணல்.
2. ஆரையூர் அருள், 07.10.2023 அன்று மேற்கொண்ட நேர்காணல்.
3. ஆரையூர் அருள், 29.10.2023 அன்று மேற்கொண்ட நேர்காணல்.

## 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

Ms. Hussain Bawa Nasrin Banu
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
hbnasrinbanu@gmail.com

Mrs. Ruby Valentina Francis
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,

Eastern University, Sri Lanka.
*jude_ruby@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

ஐ.சாந்தன் ஈழத்து சிறுகதை ஆசிரியர்களில் முக்கியமான எழுத்தாளர் ஆவார். அந்தவகையில் "2000ஆம் ஆண்டுக்கு பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது ஐ.சாந்தனது சிறுகதைகளை உள்ளடக்கரீதியிலும் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகளை அடிப்படையாகக் கொண்டும் விரிவாக ஆராய்கின்றது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மக்களின் வாழ்வை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் சிறுகதைகளாக இவரின் சிறுகதைகள் எங்ஙனம் அமைகின்றன என்பது பற்றியும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் ஐ.சாந்தனின் பங்களிப்பு மற்றும் அவரின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவம், தனித்துவம் என்பது குறித்தும் மதிப்பிடுவதும் ஆய்வின் நோக்கமாகும். ஈழத்து இலக்கிய உலகில் இவரது இலக்கியங்கள் ஏற்படுத்திய தாக்கம் அவற்றின் கலைப்பெறுமதி போன்ற விடயங்கள் இதுவரை முழுமையாக வெளிக்கொணரப்படவில்லை. இவரின் எழுத்துக்களை பேசுபொருள் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டியது தேவைப்பாட்டினை முன்னிறுத்தி இவரின் ஆக்கங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. ஐ.சாந்தனின் சிறுகதைகள் வெளிவந்த தொகுப்புக்களை முதல் நிலைத் தரவாகவும் அவர் தொடர்பாக சஞ்சிகைகள், பிற நூல்களில் வெளிவந்த கட்டுரைகள் இரண்டாம் நிலை தரவாகவும் கொண்டு இவ் ஆய்வு பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்க முறை ஆய்வு என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐ.சாந்தனின் சிறுகதைகளை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி அவரது சிறுகதைகளின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் வெளிக்கொணர்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *அந்நியமாதல், இடப்பெயர்வு, சுற்றிவளைப்பு, தொன்மம், வர்க்கவுணர்வு*

**ஆய்வு அறிமுகம்**

"2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஐ.சாந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள ஐ.சாந்தனின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகில் தனித்து அடையாளப்படுத்தத் தக்க ஓர் எழுத்தாளர் சாந்தன். தனது தமிழ், ஆங்கில மொழி எழுத்துக்களால் இன்று தமிழ் சூழலுக்கு அப்பாலும்

பேசப்படும் ஓர் எழுத்தாளனாக விளங்குகிறார். அத்துடன் பல விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்கள் என்பன இவரது எழுத்துக்களுக்கு கிடைத்துள்ளன.

அறுபதுகளின் பிற்பகுதி முதலாகத் தொடர்ச்சியாக தமிழிலும் 1990இல் இருந்து ஆங்கிலத்திலும் இவர் எழுதி வருகிறார். சாந்தன் சிறுகதை, நாவல், தெறிப்புக்கதைகள் (Flash Fiction), குறுங்கதை, நெடுங்கதை, குறுநாவல் முதலான ஆக்கங்களில் தன் ஆளுமையைப் பதிவு செய்திருக்கிறார். மேலும் பயணக்கட்டுரைகள், உலக இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள், சூழலியல், இலக்கிய அனுபவம் சார்ந்த கட்டுரைகள் என்பன இவரது ஆளுமையின் மற்றொரு பரிமாணத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனித்து அடையாளப்படுத்த வேண்டிய ஐ.சாந்தனின் சிறுகதைகளையும் அவற்றின் உள்ளடக்கங்களையும் அவற்றின் பின் புலங்களையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

ஐ.சாந்தனின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தையும், அதன் தனித்துவத்தையும் வெளிக் கொண்டு வருவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ் ஆய்வானது ஐ.சாந்தனின் சிறுகதைகளில் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளிவந்த சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் பரப்பை வரையறை செய்து கொள்கின்றது.

**ஆய்வு முறையியல்**

பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்க முறை ஆய்வு என்பவற்றின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்க்கொள்ளப்படுகிறது.

**ஐ.சாந்தனின் வாழ்க்கை பின்னணியும் படைப்புக்களும்**

ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான ஐயாதுரை சாந்தன் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலக்கிய படைப்புக்கள் எழுதி வருகிறார். இவர் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுதுமலை எனும் ஊரிலே 1947ம் வருடம் மார்ச் மாதம் 17ம் திகதி ஐயாத்துரை-புவனேஸ்வரி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். சாந்தனின் முதலாவது சிறுகதையான ‘‘பார்வை’’ பத்தொன்பதாவது வயதில் ‘கலைச்செல்வி’ இதழில் 1966ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியானது. அதனைத் தொடர்ந்து ‘விவேகி’, ‘வீரகேசரி’, ‘கதம்பம்’, ‘சுதந்திரன்’ போன்ற பல்வேறு பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. இலங்கையில் ‘மல்லிகை’, ‘இளம்பிறை’, ‘முரசொலி’, ‘ஈழமுரசு’, ‘வெளிச்சம்’ போன்ற இதழ்களிலும் தமிழ்நாட்டில் ‘கணையாழி’, ‘பாலம்’, ‘1/4’, ‘தாமரை’, ‘சாவி’, ‘புதிய பார்வை’, ‘அகநாழிகை’, ‘யுகமாயினி’ போன்றவற்றிலும் எழுதினார். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புது முனைப்புகளைக் காட்டியவையாய் அவரின் ஆக்கங்கள் அமைந்தன. ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் எழுத்துலகில் தீவிரமாக இயங்கியதன் பயனாய் சிறுகதைத் தொகுதிகள், நாவல், குறுநாவல்கள், கவிதை, பயண நூல்கள், கட்டுரைத் தொகுதிகள், மொழிபெயர்ப்புகள் என இதுவரை தமிழில் இருபதிற்கும் மேற்பட்ட இவரது நூல்கள் வெளியாகியுள்ளன.

**ஐ.சாந்தனின் சிறுகதைகளின் உள்ளடக்கங்கள்**

சாந்தனின் பெரும்பாலான சிறுகதைகள் அக உணர்வு சார்ந்தவையாக காணப்படுகின்றன. அக உணர்வு என்ற வகையில் இளமைக்கால மனப்பதிவுகள், பாலியல் உணர்வுகள், மெல்லிய மன உணர்வுகள், நட்பு மற்றும் பிற மனித உணர்வுகள், அந்நியமாதல் போன்ற விடயங்கள் இவரது கதைகளில் காணப்படுகின்றன. குறிப்பாக சிறுகதைகள் சமூகத்தில் காணப்படும் சீர்க்கேடுகளையும், குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளன. இந்த வகையில் சமூகத்தில் காணப்படும் போலித்தனங்கள், சமூக சுரண்டல்கள், வர்க்க உணர்வுகள், சாதியம், சமூக ஒடுக்கு முறைகள் போன்றவற்றை இவரது சிறுகதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

சாந்தன் நீண்ட காலமாக (தொழில் நிமித்தம்) நகரத்தில் வாழ்ந்துள்ளார். நகர வாழ்வில் பல சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளார். குறிப்பாக பஸ் பிரயாணங்கள், வாடகை வீடு, குழாய் நீர் நெருக்கடி நகர வாழ்வின் அவதி,பரபரப்பு மற்றும் வேற்றூரிலிருந்து நகரத்திற்கு சென்றவர்களை நகரவாசிகள் நடத்தும் விதம் போன்ற பல விடயங்கள் காணப்பட்டுள்ளன. இதனை தனது சிறுகதைகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

ஒரு சிறுகதை சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட வேண்டுமாயின் அச்சிறுகதையின் கதைக் கருவானது சிறப்பானதாகவும், அச்சிறுகதை எழுந்த காலப்பகுதியினை தெளிவாகப் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும். இதன் அடிப்படையில் சாந்தனின் ‘எழுதப்பட்ட அத்தியாயங்கள்’, ‘சிட்டுக்குருவி’ ஆகிய சிறுகதை தொகுதிகளின் உள்ளடக்கமானது போர்க்காலம் சார்ந்தவையாகவும், இனப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதாகவும், இந்திய இராணுவத் தலையீடு, குண்டு வீச்சு, இடப்பெயர்வு, இழப்புக்கள் என மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அனுபவங்களையும் அவை அவர்களது மனநிலைகளில், செயல்பாடுகளில் ஏற்படுத்திய பாதிப்புகளையும் எடுத்துரைப்பவையாகவும் உள்ளன.

- **போர்க்கால அவலங்கள்**

1956, 57, 58, 77 ஆம் ஆண்டு மற்றும் 83 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இனக்கலவரங்கள் தமிழ் மக்களின் வாழ்வை அதிகம் பாதித்தன. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை மேற்கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் அறிவாளுமையை நிறுவனக் கல்வி ரீதியாக ஒடுக்கும் முறையையும் அரசு மேற்கொண்டது. இது மட்டுமின்றி அரசியல் மதமாக பௌத்தமதம் முதன்மை பெற்றதுடன் மதரீதியான சமத்துவ நிலையையும் பாதிப்புக்குள்ளாக்கியது. இன, மொழி, மத, பண்பாட்டு சார் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஈழத்தமிழர் தமக்குரிய அரசியலை உறுதிப்படுத்த உரிமைக்காக போராடுவதும் தவிர்க்க முடியாத வரலாற்று தேவையாக அமைந்திருந்தது.

இதன் அடிப்படையில் ஐ.சாந்தனின் “எழுதப்பட்ட அத்தியாயங்கள்”, “சிட்டுக்குருவி” ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் போர்க்கால பின்னணியையும் அக்காலத்தில் இடம்பெற்ற வன்முறைகளையும் வெளிப்படுத்துகின்றன. இவரது சிறுகதைகள் போர்க்கால் சூழலை பின்னணியாகக் கொண்டு போரானது மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய துன்பங்களையும்,

பிரச்சினைகளையும் எடுத்துரைக்கின்றன. இதனை ‘கட்டடங்கள்’, ‘பாதை’, ‘சனம்’ போன்ற சிறுகதைகளில் விவரித்துள்ளார்.

தொண்ணூற்றைந்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இடப்பெயர்வின் பிறகு ஊர் மக்கள் எங்கிருந்தோ ஒவ்வொரு குடும்பமாய் திரும்பி வந்தனர். ஆனால் பலர் சொந்த ஊருக்கு மீண்டும் வர மனமின்றி வன்னிக்கு போய்விடுகிறார்கள். வீடுகள் எல்லாம் ஆள் நடமாட்டம் இன்றி வெறித்துப் போய் கிடந்தன. இதனை ‘பாதை’ என்ற சிறுகதையிலே எடுத்துக்காட்டப்படுகிறது.

“ மாமாவின் வீடு குடியிருக்க ஆளின்றி வெறித்துக் கிடந்தது. அந்த ஓரிரு ஆண்டுகள் அனேக வீடுகள் இவ்வாறே பேய் மனைகளாய் மாறிப் புழக்கமின்றி இருண்டு கிடந்தன. யாழ்குடா நாட்டின் குடித்தொகை பாதியாய்க் கூட இல்லாது குறைந்திருந்த வேளை அது ” (மேலது:551)

“ வேலிதான் முதலில் மறையத் தொடங்கிற்று. வெகு விரைவாக ஒன்று ஒன்றாக இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே வீடு இருந்த இடத்தில் வெறும் மண்ணும் கல்லுமான சில மேடுகளே மிஞ்சத் தெரிந்தன. பிறகு வளவில் எஞ்சியிருந்தது கிணறு மட்டும் தான். அதுவும் கப்பி,தூண்கள் எதுவும் இன்றி. ஆதன் பின்னர் மரங்களின் முறை. தோடர்ந்து ஒவ்வொன்றாக மறைய ஆரம்பித்தன. இதெல்லாம்வற்றையும் யார் அழித்தார்கள், வெட்டினார்கள், கொண்டு போனார்கள் என்பது தெரியாது. தெரிந்து கொள்வதற்கான தேவையும், ஏன் துணிவுங் கூட எவருக்கும் இருக்கவில்லை”(மேலது:551)

மேலும், போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களுள் வீதிகள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போய்விட்டன. இதனை ‘பாதை’ எனும் சிறுகதையிலே எடுத்துக்காட்டப்படுகிறது.

“முடக்கில் நடந்து திரும்பவென்று இறங்கினார். பார்த்தபோதுதான் தெரிந்தது. எதிரே ஒழுங்கையும் இல்லை, முடக்கும் இல்லை. செங்கோணமாய் திரும்பி ஒழுங்கையாய் இருந்த இடம் காண்டைப் புதர் மண்டியிருந்தது.யார் யாரோ வீசி எறிந்த குப்பைகளும், புதர்களில் சிக்கி காற்றில் அசைகின்ற பல நிறத்துப் பொலித்தீன் பைகளுமாய் இருந்தது அந்த இடம். பிளாஸ்ரிக் உடைசல்கள் துருத்திய ஓர் உரச்சாக்கும், கோழிச்சிறகுகள் வெளித்தள்ளிய ஒரு பெரிய பையும் கூடவே கிடந்தன. வயிற்றைப் புரட்டும் நாற்றம் வேறு வருவதாயிருந்தது. இல்லாமலே ஆகிவிட்ட அந்தப்பாதையை ஒரு தடவை பார்த்தார். வேற்றுப்பார்வை. பெருமூச்சுக்கூட வரவில்லை” (மேலது:552).

எண்பத்திமூன்று ஜூலை கலவரத்தின் பின் வீதிகள் மக்கள் நடமாட்டமற்று வெறிச்சோடிப்போய்க் கிடந்தன. வீதிகளிலேயே யாரையும் காண முடியவில்லை. ஏத்தனையோ தேவைக்காக வீதியிலே உலாவுகின்ற மக்கள் போரின் தாக்கத்தாலும் பயத்தாலும் நடமாடாமல் இருந்தனர். இதனை ‘சனம்’ எனும் சிறுகதை எடுத்துக் கூறுகிறது.

“ என்ன இது? ஒருவரையும் காணவில்லை! தெருநீளம் ஒரு காகக் குருவியும் இல்லை! என்ன சங்கதி? இந்த நேரத்தில் இந்த தெருவில் எவ்வளவு சனம் போகும்? என்ன நடந்தது?”(சாந்தன்,ஐ.,2021:289)

“ அசை வேயில்லை. ஒரு வாகனம், வண்டில், சைக்கிள்? நடப்பவர்கள் கூட! என்ன நடந்தது எல்லோருக்கும்? இறைப்பவர்கள், விறகுக்கு அலம்பல் தேடுபவர்கள், எருப்பொறுக்குபவர்கள்,எதையோ விதைப்பதற்காக கொத்துபவர்கள், புல் பிடுங்குபவர்கள், மாட்டைக் கலைப்பவர்கள், இவர்களோடு கதைப்பவர்கள், சண்டை பிடிப்பவர்கள், வரம்பால் நடந்து தவறானைக்குப் போகிறவர்கள், வரும்போது வரம்பில் தள்ளாடுபவர்கள், குறுக்கே பாயக்கூடிய சிறுவர்கள்...? எல்லோரும் எங்கே? ஏஎன்ன இது.இன்று?” (சாந்தன்,ஐ.,2021:551)

இலங்கை இராணுவ விமானக்குண்டுத் தாக்குதலால் மக்களது வீடுகள் அழிக்கப்பட்டன. அத்துடன் மக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையையும் சிறுகதைகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இதனை ‘சனம்’ சிறுகதை விவரிக்கின்றது.

“நேற்றிரவு தின்னவேலியிலை நடந்ததுக்குப் பழிவாங்கலாம், இது...”. காற்றோடு கதைகள்.

“சந்தடியில் சிறு கும்பல் நின்றது. நின்றவர்கள், காதுகளையும் கால்களையும் தயாராய் வைத்தபடி நின்றார்கள்”.

“எப்போது எங்கிருந்து வருவான்களென்று தெரியாத பதகளிப்பு பூட்டியிருந்த கடைகளில் வளர்ந்தியிருந்த சடலங்கள்... எல்லாம் இளந்தாரிகள் ... பள்ளிக்குப் போன பொடியன்களும்... கடவுளே!”

“இடது கன்னமேட்டில் துவாரம் தெளிவாய்த் தெரிய மல்லாந்து கிடந்த முகமொன்று...”(சாந்தன்,ஐ.,2021:552)

- **இந்திய இராணுவத்தினரின் செயற்பாடுகள்**

1987ஆம் ஆண்டு இலங்கை – இந்தியா கைச்சாத்திட்ட ஒப்பந்தப்படி இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இந்தியாவினால் இந்திய அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டது. அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் தனது இராணுவ அதிகாரத்தினை தமிழர் வாழ் பிரதேசங்களில் நிலைநிறுத்த முற்பட்டது. இச்சூழவில் தமிழ் மக்கள் மிகுந்த துன்பங்களுக்கு ஆளாகினர். உயிர், உடமை இழப்புக்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள் என துயரங்கள் தொடர்ந்தன. எழுத்து பேச்சுச் சுதந்திரங்கள் கூட ஏறத்தாழ மறுக்கப்பட்டிருந்தன.

இந்த சூழலில் மக்களின் உணர்வுகளையும், தெளிவான அரசியல் நிலைப்பாட்டையும் சாந்தன் தனது படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் மக்களின் வேலிகள் என்று சொல்லிக் கொண்டு உள்நுழைந்த இந்திய இராணுவம் வேலியே பயிரை மேய்ந்த கதையாக அம்மக்களை துயரப்படுத்தியதை இவரது கதைகள் தெளிவாக விளக்குகின்றன. ‘எழுதப்பட்ட

அத்தியாயங்கள்’, ‘அசோகவனம் அல்லது வேலிகளின் கதை’, ‘சனம்’, ‘சுற்றிவளைப்பு’ எனும் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மக்களை வீதியில் நடமாட விடாமல் ஊரடங்குச் சட்டங்களை அமுல்ப்படுத்தினார்கள். இதனால் மக்களின் அன்றாட வாழ்வு தடைப் பட்டதோடு பொருளாதார சிக்கலும் ஏற்பட்டுள்ளது. இதனை ‘‘சுற்றிவளைப்பு’’ எனும் சிறுகதையிலே எடுத்துக்காட்டியுள்ளார்.

15 வயது தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்ட ஆண்கள் எல்லோரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டார்கள். வளர்ந்த பிள்ளைகளை திடீர் திடீரென கைது செய்து கொண்டு சென்றார்கள் பெற்றோர்களுக்கு பிள்ளைகளை வீட்டில் வைத்திருப்பதே பயமாக இருந்தது. இதனை ‘சனம்’ எனும் சிறுகதை எடுத்துரைத்துள்ளது.

‘‘இந்த வளர்ந்த பிள்ளைகளை வச்சுக்கொண்டு என்ன செய்யப் போகிறோம் ஆரோ தலையாட்டி வருகுதாம்’’

‘‘பயந்து என்ன செய்யிறது பிள்ளை? ஆவனைக் கேள்’’ அம்மா மேல்நோக்கி இரண்டு கைகளையும் விரித்தா. நூய்களின் குரைப்பு நெருங்கி வந்தது. நூலைந்து இடங்களிலிருந்தது என்னவென்று தெரியாத, தவிர்க்கவே முடியாத அந்த பயங்கரத்திற்காக அவர்கள் காத்திருந்தார்கள். வயிற்றுக்குள் ஏதோ செய்தது. நெஞ்சு இடிப்பது கேட்டது. ஒழுங்கையில் இப்போது சனங்கள் போகத் தொடங்கியிருந்தார்கள். மூரிவேலி வரிச்சுக்கூடாய் விரையும் கால்கள் விடாமல் வரிசையாய், இடைக்கிடை செல்கிற கனத்த காலணிகள், காக்கிக் காற்சட்டைகள்’’

‘‘படார் என்று படலை திறந்தது யாரு வீட்டில்? அந்நியக் குரல் ஒன்றின் அதட்டல் ஐந்தாறுபேர் உள்ளே நுழைந்தார்கள்’’

‘‘அம்மா பூசையறையிலிருந்து வெளியே வந்திருந்தா கைகள் இரண்டும் நடுங்குவது வடிவாக தெரிந்தது’’

இராணுவத்தினர் சாதாரண மக்களையும் விடுதலைப்போராளிகள் என்று சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். அவர்கள் இருக்கும் இடத்தை கூறுமாறு கேட்டு மக்களை துன்புறுத்தினர் இதனை ‘அசோகவனம் / வேலிகளின் கதையில் எடுத்துக்கூறியுள்ளார்.

நீ ஒரு எல்சீரியா!?

‘‘பொய் சொல்லாதே! சொன்னால்’’

‘‘இல்லை நான் ஒரு ஆசிரியன், குடும்பக்காரன்.’’

‘‘ஆசிரியன் என்ற முறையில் உண்மையைச் சொல்லு. ஏல்..ரீ.ரி.ஈ. க்காரர்கள் எங்கே? இங்கே யார் எல்.ரீ.ரி..’’

நீ ஒரு இளமால் உனக்கு கட்டாயம் தொடர்பு இருந்திருக்கும்.’’

எனக்கு அவர்களோடு எந்தத் தொடர்பும் கிடையாது''

''செட் அப்...!'' அவன் கதிரையிலிருந்து நிமிர்ந்தான் . கன்னத்துத் தசைகள் துடிப்பது வடிவாக தெரிந்தது. இமை கொட்டாமல் இவனையே முறைத்தான்.

''எனக்கு படிப்பிக்க நினையாதே! கன்னத் தசைகள் இன்னமும் துடித்தன''

''சரி இந்த ஊர் புலிகளின் கோட்டை என்று சொல்லப்படுகிற இடம். நீ இந்த ஊரவன். ஊனக்கு அவர்களைத் தெரியாது என்கிறாய். எப்படி நம்புவது?'' அடிக்காத குறையாக குறையாக கையை நீட்டி இரைந்தான் மேஜர்'' (மேலது:490,491)

- **இடப்பெயர்வு அவலங்கள்**

இலங்கையில் இனப்பிரச்சினை 1983ஆம் ஆண்டுக்குப் பின் தீவிரமடைந்த கால கட்டங்களில் இராணுவத்தினருக்கும், தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் ஆயுதம் ஏந்திய படையெடுப்புக்கள் மிகப் பலமாக இடம்பெயற்றன. இத்தகைய சூழலில் இராணுவத்தினரின் நகர்வுகள் ஈழத் தமிழ் மக்களையும் அவர்கள் வாழ்ந்த பகுதிகளையும் நோக்கியதாக அமைந்தன. குண்டுத் தாக்குதல்களையும், விமான தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இதன் காரணமாக தமிழ் மக்கள் தமது உடமைகளையும், உயிர்களையும் இழந்ததோடு தமது சொந்த மண்ணையும் விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாக செல்ல வேண்டிய சூழ்நிலையும் உருவானது.

இவ்வாறாக மக்கள் தமது சொந்த இடத்தை விட்டு வெளியேறி எங்கு செல்வது என்று தெரியாமல் வீதியில் நாடோடிகளாக சென்ற அவல நிலையை ''மண்ணும் முளையும்'', ''போர்க்கால பூக்கள்'', ''கிருஷ்ணன் தூது'', ''ஆரைகள்'' போன்ற சிறுகதையிலே ஐ. சாந்தன் எடுத்துக்காட்டியுள்ளார்.

'போர்க்கால பூக்கள்' எனும் சிறுகதையானது எண்பதுகளின் நடுப்பகுதிகளில் இருந்து தொண்ணூறுகளின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்திலிருந்து இடப்பெயர்வினால் வெளியேறிய மக்களின் துயரங்களை எடுத்துக் கூறுகிறது.

''இதோ முன்னாள் ஒரு கூட்டம் போய்க் கொண்டிருக்கிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழவர்கள்.. ஏதேதோ எடுக்க முடிந்தவற்றைத் தூக்கிக் கொண்டு களைத்துக் காய்ந்து...''(மேலது:273)

'' அவன் சைக்கிள் அவர்களை நெருங்கிய போது அக்குழுவிலே எல்லோர்க்கும் பின்னால் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணும் சிறுவனுமே முதலில் கண்ணில் பட்டார்கள். ஓக்களையில் இன்னும் ஒரு கைக்குழந்தை. வலது கையில் ஒரு சூட்கேஸ்: பிடித்துக் கொண்டிருந்த மாதிரியில் வலு பாரமாக இருக்கும் போலிருந்தது. ஆடிக்கடி நின்று நின்று பார்த்து அழைத்துப் போய்க் கொண்டிருந்த அந்த தாய்க்குப் பின்னால் ஓடிக்கொண்டிருந்த இந்த குழந்தைக்கு கூட, தூக்கிக் கொண்டு போகப்பட வேண்டிய பருவந்தான். ஆனால்,

அவள் தான் என்ன செய்ய முடியும்? கூட வேற யாருமில்லையா?"(மேலது:273) இவ்வாறாக இடம்பெயர்வு அவலங்கள் எடுத்துக்கூறப்படுகிறது.

- **மக்கள் எதிர்கொண்ட அவலங்களும் வேதனைகளும்**

சாந்தனின் சிறுகதைகள் சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பெண்கள், பெற்றோர்கள் எதிர்கொண்ட துயரங்களையும் அவலங்களையும் எடுத்துக் கூறுகிறது.

சாந்தனின் சிறுகதைகள் போர்க்காலச் சூழலில் பெண்கள் எதிர் கொண்ட பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவதாகவுள்ளன. அவ்வகையில் போர்க்காலச் சூழலில் பெண்கள் சொந்த பந்தங்களை இழந்து அனுபவித்த அவலங்கள். குணவனை இழந்த நிலையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வேலைக்கு செல்கின்ற பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வேலை செய்யும் இடத்தில் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற விடயங்களை 'சுற்றி வளைப்பு', 'போர்க்காலப் பூக்கள்', 'கோபம்' போன்ற சிறுகதைகளிலே வெளிப்படுத்தியுள்ளார்.

'இளங்கன்று/ இசைவாக்கம்?' என்னும் சிறுகதையிலே பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு அவர்கள் வீடு திரும்பும் வரை பெற்றோர்கள் படும் வேதனையும், அவதியும் சொல்லில் அடங்காதவை. பாடசாலையில் குண்டு போடப்பட்டிருக்குமா? இடையில் யாரும் வழிமறித்து இருப்பார்களோ? எந்த ஆபத்து காத்திருக்கும்? எந்த துஷ்டர்களிடமாவது பிள்ளைகள் மாட்டி விட்டார்களோ? போன்ற பல கேள்விகள் பெற்றோரிடம் எழுகின்றன. இறுதியில் படிப்பும் வேண்டாம், பள்ளியும் வேண்டாம், பிள்ளைகள் உயிருடன் வந்தாலே போதும். ஏன்ற நிலைக்கு பெற்றோர்கள் வந்துவிட்டதனை பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

" பள்ளிப்பக்கம் பிரச்சனை"

"படிப்பும் வேண்டாம், பள்ளியும் வேண்டாம்... பிள்ளை வந்திடட்டும், கடவுளே! பெற்றவர்கள் நேர்ந்தார்கள்"(மேலது:350)

"பொம்மர்களும் ஹெலிகளும் போய்த் தொலைய, பிஞ்சுகள் வந்தார்கள். பள்ளியின் வாயிலில் பதட்டமும் பயமுமாய் பார்த்திருந்தவர்கள் பிள்ளையை அணைத்துக் கொண்டார்கள். "பயந்திட்டியா ராசா?" (மேலது:350)

மேலும் இச்சிறுகதையிலே அடிக்கடி குண்டுத் தாக்குதலாலும், பொம்மர்த் தாக்குதலாலும் பாதிப்புற்ற மக்களினதும் மாணவர்களின் மனதும் அத்தகைய வாழ்விற்கு ஏற்றபடி மாறி இசைவாக்கம் அடைந்து விட்டதை பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

"அம்மா, நாலு குண்டுதான் போட்டவங்கள்... ஒருக்கா ஒரு பொம்பர் பதிஞ்சது,ஆனால் குண்டு போடாம எழுப்பி விட்டுது.... அது ஏன் அம்மா?"(மேலது:350)

இவ்வாறான இராணுவ செயற்பாடுகளால் சிறுபான்மை மக்கள் குறிப்பாக இளம் தலைமுறையினர், பெண்கள், பெற்றோர்கள் அளவுக்கு அதிகமான இன்னல்களுக்கும்,

துன்பங்களுக்கும் உள்ளாகியுள்ளதை சாந்தனின் சிறுகதைகள் யதார்த்தப் பூர்வமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

**ஐ.சாந்தனின் சிறுகதைகளில் உத்தி முறைகள்**

எந்த ஒரு படைப்பினதும் உள்ளடக்கமே உருவத்தை தீர்மானிக்கின்றதாயினும் ஒரு படைப்பாளன் வெளிப்படுத்தும் விதத்திலேயே படைப்பானது தனித்தன்மை பெறுகிறது எனலாம். இத்தகைய வெளிப்பாட்டு முறையை உத்தி எனலாம்.அந்த வகையில் ஐ. சாந்தன் தனக்கென தனித்துவமான உத்திகளைக் கையாண்டு சிறுகதைகளைப் படைத்துள்ளார். ஆவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

- **தொன்மம்**

தொன்மங்களைக் கையாண்டு படைப்பாக்கங்களை மேற்கொள்வது பண்டுதொட்டு எல்லாச் சமூகங்களிலும் நிலவிவருகிறது. குறிப்பாக ஒவ்வொரு மனிதனதும் வாழ்வியலோடு தொன்மங்கள் கலந்துள்ளதால் உயிர்ப்புடன் இயங்கும் எந்தப் படைப்பாளியும் அவற்றினின்றும் நீங்கியிருக்கவோ அவற்றைப் புறந்தள்ளவோ முடியாது.

இந்த அடிப்படையில் ஈழத்துப் போர்க்காலத் தமிழ்ப் படைப்பாக்கங்களில் தொன்மங்களையும் தொன்மக் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு பல சிறுகதைகள் தோற்றம் பெற்றுள்ளன.இவ்வகையில் ஐ.சாந்தன் தொன்மவியல் சம்பவங்களை அடிப்படையாகக் வைத்து ''அசோகவனம்/ வேலியின் கதை'', ''கிருஷ்ணன் தூது''ஆகிய சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

இவ்வகையில் ''அசோகவனம் / வேலியின் கதை'' எனும் சிறுகதையிலே சீதையை இராவணன் நயவஞ்சகமாக கடத்தி வந்து சிறை வைத்த இடமே அசோகவனம் ஆகும்.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்தபோது, அவர்களால் சாதாரண மக்கள் நடத்தப்பட்ட முறையையும் அம்மக்களின் மனப்போராட்டங்களையும் மேற்கூறிய அசோகவனம் என்றதொன்மத்தை மூலவுருவாகக்கொண்டு வெளிப்படுத்தும் சாந்தனின் அசோகவனம்/வேலியின் கதை அசோகவனமாக்கப்பட்ட யாழ் பிராந்தியத்தைக் காட்டுகிறது.

இராவணன் சீதையை நயவஞ்சகமாகக் கடத்தி வந்து சிறைவைத்ததுபோல இங்கு கிருஷ்ணன், சிங்கர் எனும் இரு சிவிலியன்களை நயவஞ்சகமாக (வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு முகாமிலுள்ள மக்களுக்கு ஏற்பாடு உனவு செய்ய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அழைத்துச் செல்வதாகக் இந்திய இராணுவத்தினர். அழைத்துச் சென்று விசாரணைக்கு உட்படுத்துகிறார்கள். அவ்விசாரணைச் சூழலை சீதை சிறைவைக்கப்பட்டிருந்த அசோகவனமாகக் காணும் ஆசிரியர், அங்கு சிக்கித் தவிக்கும் கிருஷ்ணன், சிங்கர் ஆகியோரின் மனப்போராட்டங்களை சீதையின் மனப்போராட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

மேலும் ''கிருஷ்ணன் தூது'' சிறுகதை தொன்மவியில் நோக்கில் அமைந்துள்ளது. பாண்டவர் வனவாசத்திலிருந்து திரும்பிய பிறகும் அவர்களுக்குரிய பங்கான நாட்டைத் தர கௌரவர்கள் மறுத்தனர். எங்கும் பகைமைக் காற்று வீசியது. ஆதனால் கிருஷ்ணர், கடவுள் அவதாரமாக

இருந்த போதிலும் சமாதானம் நிலவ இறுதி முயற்சியாக ஒரு முறை முயன்று பார்க்க, தாமே, பாண்டவர்களின் தனிப்பட்ட தூதுவனாக, திருதராஷ்டிரனது சபைக்குச் சென்றமையே கிருஷ்ணன் தூது ஆகும். எனினும் இத்தூது பயனளிக்கவில்லை.

கொழும்பில் கந்தோர் ஊழியர் நலன்புரி சங்கத்தில் தமிழ், சிங்கள் மக்கள் நாற்பதுக்கு அறுபது என்கின்ற விகிதத்தில் வேலை செய்தனர். சுங்கத்தால் வெளியிடப்படும் கடிதங்கள் ஆங்கில சிங்கள மொழிகளில் அமைந்துள்ள போது கடிதங்களை தமிழிலும் வெளியிடுமாறு அங்கு பணி புரியும் தமிழ் ஊழியர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. எனினும் கோரிக்கை ஏற்கப்படாததால் தமிழ் ஊழியர்களின் உரிமை மறுக்கப்படுவதாக அலுவலகத்திலேயே சுமுகமற்ற சூழல் ஒன்று உருவாகியது.

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் ஊழியர்களின் உரிமையை நிலை நாட்டவும், அதே சமயம் சிங்கள சகோதரர்களுக்கு பாதகம் இல்லாமலும் பிரச்சனையை சுமுகமாய் தீர்த்து வைக்கிற வகையில் அறிவுபூர்வமாக ஊழியர் சங்க அதிகாரிகளுக்கு கடிதம் வழங்கப்படுகிறது கடைசியில் இவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விடும் பட்சத்திலும் தமிழ் ஊழியர்கள் கண்ணியமாய் தங்கள் கௌரவத்தை நிலை நிறுத்திக் கொள்கிறார்கள் என்பதை கிருஷ்ணன் தூது எனும் தொன்மத்தை மூலவுருவாகக்கொண்டு சாந்தன் வெளிப்படுத்துகிறார்.

- **குறியீட்டுப் பாங்கான தலைப்பு**

சிறுகதை தலைப்பு அச்சிறுகதை வெளிப்படுத்தும் பிரச்சினைகளையோ, சம்பவங்களையோ எடுத்துக்காட்டுபவையாக அல்லது குறியீட்டுப் பாங்கிலேயோ அமையலாம்.

இவ்வகையில் குறியீட்டு பாங்கில் அமைந்த சிறுகதைகளாக குயில் வீடு, சிட்டுக்குருவி, மண்ணும் முளையும், போர்க்காலப் பூக்கள் ஆகிய சிறுகதைகளைக் குறிப்பிடலாம்.

‘‘குயில் வீடு’’ என்ற சிறுகதையில் வரும் பாத்திரமானது யுத்தத்தால் தனது சொந்த வீடுகள் அழிக்கப்பட்டபோது வீடற்றவனாகி வேறொரு இடத்திற்குச்சென்று இடம்பெயர்ந்து வாழும் அவல நிலை காணப்படுகிறது. அதேபோன்று கதையில் வரும் குயிலின் வீடான மரம் தறிக்கப்படுவதால் அதுவும் வீடற்று வேறொரு இடத்திற்குப் பறந்து செல்கிறது. ஆகவே இருவரினதும் வீடற்ற நிலையை ஒப்பிட்டு இச்சிறுகதைக்கு குயில் வீடு எனும் தலைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது.

‘‘மண்ணும் முளையும்’’ என்ற சிறுகதையில் போர்க்கால ஊரடங்கு அவலத்திலும் அம்மண்ணிலே ஒரு குழந்தை பிறக்கின்றது. குழந்தைக்கான குறியீடாக முளை காணப்படுகிறது.

‘‘சிட்டுக்குருவி’’ என்ற சிறுகதை ஒரு பறவை இனத்தின் இருப்பியல் சார்ந்து ஒரு நேரடி பரிமாணத்தைத் தருவதோடு யுத்தத்துடன் தொடர்புபடுத்தும் ஒரு குறியீட்டுப் பெறுமானமாக துலங்குகிறது. யுத்த சூழலினால் இடம் பெயர்ந்து சென்ற மக்களுக்கான குறியீடாக சிட்டுக்குருவி காணப்படுகிறது.

“அந்தச் சிட்டுக்கள் வேறு எங்கும் போகவில்லை இங்கு வந்திருக்கின்றன. என்றார் பெரேரா. இலங்கையின் சூழலும் காலநிலையும் அவற்றிற்கு ஒத்துக்கொள்ளாது போய்விட்டு இருக்கலாம். என்ற தனது ஊகத்தையும் குறிப்பிட பெரேரா மறக்கவில்லை”(சாந்தன்,ஐ.,2021:593)

“கட்டடங்கள்” எனும் சிறுகதையிலே கட்டிடத்தின் முக்கியத்துவம் கதை முழுவதும் பேசப்படுவதால் அந்தத் தலைப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. “பாதை” எனும் சிறுகதையிலே யுத்தத்திற்கு முன் இருந்த பாதையின் வர்ணிப்பும், யுத்த சூழ்நிலையில் அதன் அழிவையும், அப்பாதை மாற்றமுற்றற விதத்தையும் எடுத்துரைப்பதால் இத்தலைப்பு பொருத்தமானது.

கதையில் இடம்பெறும் முக்கியமானதொரு நிகழ்ச்சியை தலைப்பாக அமைத்தலுக்கு உதாரணமாக கோபம், சுற்றிவளைப்பு, அதிர்வு, விழிப்பு, 76இல் ஒரு விடுமுறை நாள் போன்ற சிறுகதைகளைக் குறிப்பிடலாம்.

“சொல்ல முடியாத பாடல்” என்ற தலைப்பு அக்கதையில் சொல்ல முடியாத பாடல் ஒன்றே பிரதான பேசு பொருள் என்பதால் முன்வைக்கப்பட்டுள்ளது.

சிறுகதைகளின் முடிவை மையப்படுத்தி முன்வைக்கப்பட்ட தலைப்புகளுக்கு எடுத்துக்காட்டாக “அதிர்வு”, “மீளுதல்” என்னும் சிறுகதைகளைக் கூறலாம்.

ஈழத்தின் ஆரம்பகால நாவல்களில் ஒரு நாவலுக்கு இரு தலைப்பிடும் வழக்கம் காணப்பட்டது. எதாரணமாக சி.வை.சின்னப் பிள்ளையின் உதிரபாசம்/இரத்தின பவானி (1915), இராசம்மாளின் சரஸ்வதி/காணாமல் போன பெண்மணி (1929), இடைக்காடரின் நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன் (1925). சி.வை. தாமோதரம் பிள்ளையின் காந்தமலர்/கட்பின் மாட்சி (1936), எச்.நெல்லையாவின் சோமாவதி/இலங்கை இந்தியா நட்பு (1940) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பண்பு சாந்தனின் சிறுகதைகளிலும் காணப்படுகிறது. உதாரணமாக ‘இளங்கன்று/இசைவாக்கம்’, ‘அசோகவனம்/வேலிகளின் கதை’ போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- **பாத்திரவார்ப்பு**

பாத்திரப்படைப்பிற்கு சாந்தன் அதீத அக்கறை காட்டுகின்றார். இவர் கதைகளில் அதிக அளவு பாத்திரங்களை அறிமுகஞ் செய்வதில்லை. குறிப்பிட்ட கதைப்பொருளை நகர்த்துதற்குத் தேவைப்படும் பாத்திரங்களை மட்டுமே அறிமுகஞ் செய்கின்றார். கதைகளில் பாத்திரங்களின் உணர்வு நிலை வெளிப்பாட்டிற்கு அதிக முக்கியத்துவத்திளை ஆசிரியர் கொடுத்திருக்கின்றார். இப்பாத்திரங்கள் தமது உரையாடல்கள், செயற்பாடுகள் மூலம் உணர்வுகளை வெளியிடுகின்றன. சுருக்கமாகவும், சுட்டிப்பாகவும், தெளிவாகவும் இவ்வுணர்வு வெளிப்பாடு நிகழ்த்தப்படுகின்றது.

கதைகளில் பாத்திரங்கள் அறிமுகம், குணாதிசய விபரிப்புகள் என்பன சுருக்கமான முறையில் அமைந்துள்ளன. யதார்த்தத்திற்கு முரணற்ற வகையில் தமது பலம், பலவினம், விருப்பு, வெறுப்பு முதலானவற்றை இப்பாத்திரங்கள் வெளியிடுகின்றன் குழந்தைகள், பெண்கள், சமூகத்தின் பல்வேறு நிலைகளிலுள்ளோர், வேறுபட்ட வர்க்கத்தினர், வேறுபட்ட இனத்தினர்.

பல்வேறுபட்ட கொள்கையாளர் எனப் பலரையும் இவரது கதைகளில் தரிசிக்க முடிகின்றது. சில கதைகளில் ஆசிரியர் தானே ஒரு பாத்திரமாக அறிமுகமாகின்றார். தான் கலந்து எழுதுவது அவரது கதைகள் பலவற்றின் பலமாக அமைந்துள்ளது.

- **நோக்கு நிலை**

ஒரு சிறுகதை அதைக் கூறும் கோணத்திலும் சிறந்திருக்க வேண்டும். கதை கூறும் கோணத்தை நோக்கு நிலை உத்தி என்று குறிப்பிடுவர். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் எந்தக் கோணத்திலிருந்து பார்க்கிறார் எந்த விதமான உள்ளீட்டுக்கு எந்தக் கோணத்தைத் தேர்ந்தெடுக்கிறார் என்பது முக்கியம்.

ஆசிரியர் நோக்கு, முக்கியப் பாத்திர நோக்கு, கடிதம் அல்லது நாட்குறிப்பு மூலம் கதை கூறல் என்று பலவாறான நோக்கு நிலைகளில் கதைகள் கூறப்படுவதுண்டு. ஆசிரியர் கதை கூறும்போது, தன்னை உணர்த்தாமல் படர்க்கையில் கதை கூறுவது சிறந்த முறையாகும். பெரும்பாலான கதைகள் இவ்வகையைச் சார்ந்தன. ‘குயில் வீடு’, ‘சனம்’, ‘சொல்ல முடியாத பாடல்’ போன்ற சிறுகதைகள் இவ்வகையைச் சார்ந்தது.

- **மொழிநடை**

ஒரு சிறந்த படைப்பாளியை அவரது மொழிநடையின் மூலமாகத்தான் நாம் இனங்கண்டு கொள்ள முடிகிறது. மனித உணர்ச்சிகளைத் தெளிவாகப் புலப்படுத்துவது மொழியாகும். இதனால் படைப்பாளியின் பிரதான ஊடகமாக மொழி விளங்குகின்றது. படைப்பாளி தான் சொல்ல வரும் கருப்பொருளை மொழியின் துணைகொண்டு உயிர்ப்பித்து யதார்த்தப்பூர்வமாகக் கையாண்டுள்ளார்.

சாந்தன் தனது சிறுகதைகளில் சிறிய வசனங்கள், சிக்களமான வார்த்தை பிரயோகங்கள், தக்க ரீதியான சொல்லாட்சி, நிறுத்த குறியீடுகள் என்பவற்றைக் கையாண்டுள்ளதை. அவரது சிறுகதைகளிலே காண முடிகின்றன.

எவ்வித அலங்கார வேலைப்பாடுகளையும் இவரது கதைகளில் காண முடியவில்லை. நேரடியாக விடயத்தினை அணுகி விபரிக்கின்றார். சோல்லும் விடயத்திற்கு ஏற்ப மொழி வளைந்து கொடுக்கின்றது. இது அவர் சொல்லும் முனையும் கருத்துக்களை உயிர்த் துடிப்புடையனவாக்குகின்றது

ஒரு பிரதேசத்தின் இயல்புகளைச் சித்திரிப்பதோடு அப்பிரதேச மக்களின் உணர்ச்சிகளை நேரடியாகப் பிரதிபலிப்பது பேச்சு வழக்காகும். மனிதனைப் பொருளாகக் கொண்ட இலக்கியங்களிலே அவனது பேச்சுமொழி கையாளப்படும் போதே இலக்கியமும் உயிர்த்துடைப்புடையதாகின்றது.

இவ்வகையில் சாந்தனின் சிறுகதைகளில் யாழ்ப்பாணத்தமிழ் பிரக்ஞை பூர்வமாகக் இதனை “போர்க்கால பூக்கள்” சிறுகதையிலேயே காணலாம்.

“என்ன செய்யிறது... உதுகளைக் குற்றஞ் சொல்லேலாது...”(சாந்தன்,ஐ.,2021:270)

“எங்கை போட்டு வாறாய்? என்ன யோசினை?”(மேலது:275)

சாந்தனின் சிறுகதைகளில் உரையாடல்கள் இடம் அறிந்து பயன்படுத்தப்படுகின்றன. தேவைக்கேற்ப பிறமொழிச் சொற்களும் பழைய தமிழ் வழக்குச் சொற்களும் பயின்று வருவதை நோக்கலாம்.

கிருஷ்ணன் தூது: லெட்டர், புறூ∴ப், றெஸிக்னேஷன், கல்குலேஷன், பொஸ், ஸெக்சன், கொமிற்றி, ஹெட், லெப்ற் றைற், ரெஜிஸ்டர், டைப்,ட்ரிப்பிள் மெஷின்

ஒரு படைப்பாளியை இன்னொரு படைப்பாளியிடம் இருந்து தனித்து இனங்காட்டுபவை அவர்கள் கையாளும் படைப்பாக்க உத்திகளே ஆகும் அந்தவகையில் சாந்தன் தலைப்பு, பாத்திரப்படைப்பு, நோக்குநிலை, சிறுகதைத் தொடக்கம், முடிவு, தொன்மவியல நோக்கு,மொழிநடை ஆகிய சிறுகதை உத்திகளைக் கையாண்டு தனது சிறுகதைகளை தனித்துவப்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சிறுகதை தனித்துவமான இடத்தை பெற்று விளங்குகின்றது ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் ஐ.சாந்தன் குறிப்பிடத்தக்க சிறப்பினைக் கொண்டு விளங்குகிறார்.

“பார்வை(1966)” என்ற சிறுகதையுடன் இலக்கியத்திற்குள் பிரவேசம் செய்த ஐ.சாந்தன் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வருகிறார். இவரது சிறுகதைகள் தான் பிறந்த ஊரான யாழ்ப்பாணத்தையும் பணி நிமித்தம் சென்ற கொழும்பையும் வெளிநாட்டு பயணங்களின் போது சென்ற சில இடங்களையும் (லெனின்கிராத், மொஸ்கோ, கென்யா) மையப்படுத்தியதாக அமைந்திருக்கின்றன.

இவரது சிறுகதைகள் சமூகக் குறைபாடுகளை சுட்டிக்காட்டத்தக்கவையாக அமைந்துள்ளன. அந்த வகையில் சமூக சுரண்டல், வர்க்க உணர்வுகள், சாதியம், சமூகப் போலித்தனம் என்பவற்றை அதிகம் படைப்புக்களில் எடுத்துக்காட்டியுள்ளார். சமூக குறைபாடுகளின் பிரதிபலிப்புகளை வாசகருக்கு எடுத்துக்காட்டி அவர்களைத் தர்க்கரீதியாக சிந்திக்கத் தூண்டுவதாக இவரது படைப்புகள் (கோபம், மூண்டெரியும் தீயின் மூலப்பொறி, எழுதப்பட்ட அத்தியாயங்கள், ஆரைகள்) அமைந்துள்ளன. சாந்தன் அகவுணர்வு சார்ந்த ஆக்கங்களை எழுதுவதில் கவனம் செலுத்தியுள்ளார். அகவுணர்வு என்ற வகையில் இளமைக்கால மனப் பதிவுகள், பாலியல் உணர்வுகள், மெல்லிய மன உணர்வுகள், நட்பு மற்றும் புற மனித உறவுகள், அந்நியமாதல் போன்ற விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

கணிசமான காலங்கள் நகர வாழ்க்கையோடு சாந்தன் தன்னை இணைத்துக் கொண்டதால் நகர வாழ்க்கையின் பரபரப்பு, பஸ் பிரயாணங்கள், வாடகை வீடு, யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து நகரத்திற்குச் சென்றவர்களின் மனோநிலை, நகர வாழ்க்கை அவலங்கள், தலைமுறை மாற்றங்கள் போன்ற விடயங்களை தனது கதைகளின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார். மேலும் போர்க்காலங்களில் பொதுமக்கள் எதிர் நோக்கிய அவலங்களையும், அக்கால நாட்டு அரசியல் நிலவரங்கள், இன முரண்பாட்டுச் சூழல், இந்திய இராணுவத்தினரின் இலங்கை வருகை போன்ற விடயங்களையும் தனது படைப்புகளிலேயே கூறியுள்ளார்.

சாந்தனின் சிறுகதைகளில் காணப்படும் சிறப்பம்சம் அவரது கடுகு கதைகள்/குறுங்கதைகள் ஆகும். இதுவே அவரை பிற எழுத்தாளர்களிடமிருந்து சிறப்பித்துக் காட்டுவதாகும். இவரது கடுகுக் கதைகள் மரபார்ந்த குறுகிய கதைகளிலிருந்து முழுமையாக வேறுபட்டு யதார்த்தத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்கதைகள் நான்கு அல்லது ஐந்து வரிகளிலும் ஓரிரு பக்கங்களிலும் முடிவடைந்து விடுகிறது. (மூண்டெரியும் தீயின் மூலப்பொறி-7வரி, மண்ணும் முளையும்-7வரி, இளங்கன்று/இசைவாக்கம் 10வரி, அர்த்தம்-பக்கம், இன்னொரு வெண்ணிரவு 1பக்கம் போக்கு பேக்கம், சுரண்டல் - 1பக்கம் 76ல் ஒரு விடுமுறை நாளில்- 20பக்கம்).

இவ்வாறு ஐ.சாந்தனின் 2000ஆம் ஆண்டுக்கு பின்னரான சிறுகதைகள் பற்றிய ஆய்வை நோக்கும் போது ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஐ.சாந்தனின் சிறுகதைகளின் தனித்துவத்தையும் முக்கியத்துவத்தையும் விளங்கிக் கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**

**மூலநூல்கள்**

1. சாந்தன்,ஐ.(2001). எழுதப்பட்ட அத்தியாயங்கள். கொழும்பு: மல்லிகைப் பந்தல் வெளியீடு.
2. சாந்தன்,ஐ.(2014). சிட்டுக்குருவி. சென்னை: அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம்.
3. சாந்தன்,ஐ.(2021). சாந்தன் படைப்புலகம். யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

**துணை நூல்கள்**

1. அருணாச்சலம்,க. (2012). இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம். சென்னை: குமரன் புத்தக இல்லம்.
2. குணராசா,க. (2001). ஈழத்து தமிழ் சிறுகதை வரலாறு. கொழும்பு: சேமமடு புத்தக நிலையம்.
3. குணேஸ்வரன்,சு.(2009). அலைவும் உலைவும், தினைப்புனம் வெளியீடு.
4. சிவகுமாரன், கே.எஸ்.(2008). ஈழத்து சிறுகதைகளும் ஆசிரியர்களும் ஒரு பன்முகபார்வை (1962-1977). சென்னை: மணிமேகலை பிரசுரம்.
5. சிவத்தம்பி,கா. (1967). தமிழில் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை: தமிழ் புத்தகாலயம்.
6. துரை மனோகரன். (1977). இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம்.
7. பஞ்சாங்கம்,க. (2005). தொன்மத் திறனாய்வு. அன்னம் - அகரம் வெளியீடகம்.
8. மௌனகுரு,சி. சித்திரலேகா,மௌ. நு.்.மான்,எம்.ஏ. (1979). இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம். கல்முனை: 06 வாசகர் சங்கம்.
9. யோகராசா,செ. (2000). இலக்கியத் தேட்டம் ஈழத்து நவீன இலக்கியம், கொழும்பு: தமிழ்ச்சங்கம்.

# வாகரைப் பிரதேசச் சிற்றிதழ்கள் - ஓர் ஆய்வு

Ms. Punitharasa Kisoniya
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*kisok2099@gmail.com*

Mrs. Ruby Valentina Francis
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*jude_ ruby@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு கல்குடா தேர்தல் தொகுதியின் கீழ் வாகரைப் பிரதேசம் அமையப்பெற்றுள்ளது. அந்தவகையில் வாகரைப் பிரதேசத்திலும் கலை இலக்கிய முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை. வாகரைப் பிரதேச இலக்கிய முயற்சிகளுள் பல சிற்றிதழ்களும் பல வெளிவந்த வண்ணமே உள்ளன. இச்சிற்றிதழ்கள் இலக்கிய வரலாற்றில் புகழ்மிக்க ஒரு தனித்துவமான இடத்தினைப் பெறாவிட்டாலும் அவை வாகரை மண்ணின் புகழ் பாடுவனவாகவும் வாகரைப் பிரதேசத்தின் கலை இலக்கியவாதிகளை வெளிக்கொணரும் களமாகவும் அமைகின்றன. அந்தவகையில் 2007 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் வெளிவந்த 14 சிற்றிதழ்களே இவ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இச்சிற்றிதழ்களை கையெழுத்துப் பிரதிகள், அச்சுப் பிரதிகள் என வகைப்படுத்தி இவ் ஆய்வினை மேற்கொள்ள முடிகின்றது. இவற்றுள் கையெழுத்துப் பிரதி என்ற பிரிவினுள் வாகரைப் பிரதேசத்திலுள்ள பொது நூலகங்களான மாங்கேணி, வாகரை, கதிரவெளி, வம்மிவட்டவான் ஆகிய நூலகங்களில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வருடாவருடம் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்ற சிற்றிதழ்கள் அமைகின்றன. அச்சுப்பிரதி என்ற வகையில் வாகரைப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்தும், அரச நிறுவனங்களிலிருந்தும் வெளிவருகின்ற சிற்றிதழ்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச்சிற்றிதழ்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற ஆக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் கவிதை, சிறுகதை ஆகிய படைப்புக்களை அவற்றின் கருப்பொருளுக்கு ஏற்றவகையில் உள்ளடக்கரீதியாக வகைப்படுத்தியும் அப்படைப்புக்களில் கையாளப்பட்டுள்ள உத்திகளைக் கண்டறிந்தும் ஆராயப்பட்டுள்ளன. மற்றும் கட்டுரை உள்ளடக்கரீதியாக இவ்வாய்வில் எடுத்து நோக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது விபரண முறை மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சிற்றிதழ்கள் மூலம் வாகரைப் பிரதேச மக்களின் வாழ்வியல் முறைகள் எடுத்துக்காட்டும் விதம் பற்றி இவ் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *கசாது, சிற்றிதழ்கள், தேசிய வாசிப்பு மாதம், புலிக்கூத்து, வாகரை*

**அறிமுகம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே 70 கிலோ மீற்றர் தூரத்தில் வாகரைப் பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசம் ஏறக்குறைய 543.70 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவை கொண்டமைந்துள்ளது. வாகரைப் பிரதேசம் பல நூற்றாண்டு கால தொன்மை வாய்ந்த தமிழர் பிரதேசமாக காணப்படுகின்றது. இவ்விதத்தில் கி.பி15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாகரையில் வன்னிச்சி நாச்சியின் ஆட்சி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்கள் கையெழுத்துப் பிரதி, அச்சுப் பிரதி எனும் இரு வகையினுள் அடக்கப்படுவதுடன் வாகரைப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், பொதுநூலகங்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து 2007 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் வெளிவந்த 14 சிற்றிதழ்களே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. 1992இல் கதிராழி சிற்றிதழ் வெளிவந்திருப்பினும் வன்முறைக் காலங்களில் அது அழிவடைந்து இன்று கிடைக்கப்பெறாமையால் இவ்வாய்வு 2007இல் இருந்து வெளிவந்த சிற்றிதழ்களை ஆய்விற்குட்படுத்தியுள்ளது.

**ஆய்வின் கருதுகோள்**

வாகரைப் பிரதேச சிற்றிதழ்கள் அப்பிரதேச இலக்கிய முயற்சியாளர்களை வெளிக்கொணரும் வகையிலும், வாகரைப் பிரதேச மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**ஆய்வு முறையியல்**

பகுப்பாய்வு முறை, விபரண ஆய்வு முறை என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

வாகரைப் பிரதேச சிற்றிதழ்கள் குறித்து இதுவரையில் அதிகளவிலான ஆய்வுகளோ கட்டுரைகளோ எழுதப்படவில்லை. இவ்வாய்வே முதல் ஆய்வு என்பது குறிப்பிடத்தக்கது.

- வாகரைப் பிரதேசத்திலிருந்து கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச சபையினால் உள்ளூராட்சிவாரச் சிறப்புமலராக வெளிவந்த ‘நெய்தல்’ எனும் சிற்றிதழில் முதலாவது இதழில் திருமதி சு.சசிதரன் என்பவரால் “வாகரைப் பிரதேச இலக்கிய வரலாறும் சஞ்சிகை வெளியீடுகளும் - ஒரு நோக்கு” என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரையில் வாகரை மக்களின் இலக்கிய முயற்சியை நாடக மரபிலிருந்து எடுத்துக்காட்டி பின்னர் வாகரைவாணனின் படைப்புக்களையும் அதனைத் தொடர்ந்து சஞ்சிகை வெளியீடுகள் பற்றியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் சஞ்சிகைகள் பற்றி சுருக்கமான அறிமுகங்களே கூறப்பட்டுள்ளதால் அதனை நிவர்த்தி செய்து முழுமையான ஆய்வாக இவ்வாய்வு அமைகின்றது.

**வாகரைப் பிரதேச சிற்றிதழ்கள்**

வாகரைப் பிரதேச இலக்கிய முயற்சி பற்றி நோக்குகையில் வாகரை மக்கள் தமது இலக்கிய பாரம்பரியத்தை மரபு ரீதியான கூத்துக்களில் இருந்தே ஆரம்பித்துள்ளனர். பின்பு மேடை நாடகங்கள் மூலம் தமக்கிருந்த இலக்கிய ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். மரபு ரீதியான இலக்கிய வகைகளுக்குள் கட்டுண்டு கிடந்த வாகரைப் பிரதேச இலக்கியமானது சந்தியாப்பிள்ளையின் புத்திரர்களான செபநாயகம் மற்றும் அரியரெத்தினம் போன்றவர்களால் நவீன இலக்கிய முயற்சியில் வளர்ந்தது.

வாகரைப் பிரதேச இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களுக்கும் முக்கியமான பங்குண்டு என்றே கூறலாம். அவ்விதத்தில் வாகரைப் பிரதேசத்திலுள்ள பொதுநூலகங்கள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள் பல சிற்றிதழ்களை வெளியிட்டு வருகின்றன. பொதுநூலகங்களில் இருந்து வெளிவருகின்ற சிற்றிதழ்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. இவ்விதத்தில் மாங்கேணி பொதுநூலகத்திலிருந்து ‘ஆழிமுத்துக்கள்’(2014) என்ற சிற்றிதழும் வாகரை பொதுநூலகத்திலிருந்து ‘கடல்அமுதம்’(2014) என்ற சிற்றிதழும், கதிரவெளி பொதுநூலகத்திலிருந்து ‘எழுகதிர்’(2014) சிற்றிதழும் வம்மிவட்டவானில் இருந்து ‘கடல் மங்கை’(2014) என்ற சிற்றிதழும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளிவருகின்றன.

மேலும், பாடசாலை மட்டத்தில் இருந்தும் பல சிற்றிதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மட்/ககு/கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து ‘கதிராழி’ எனும் சிற்றிதழ் 1992இல் வெளிவந்தது. இருப்பினும் இவ்விதழ் வன்முறைக் காலங்களில் பேணப்படாமல் அழிவடைந்துள்ளது. 2010இல் க.பரமானந்தம் என்பவரை இதழாசிரியராகக் கொண்டு கதிராழி இதழ் இரண்டு வெளிவந்தது. பின்னர் பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2023இல் கதிராழி இதழ் மூன்று வெளியிடப்பட்டுள்ளது. அடுத்து 2011இல் எ.த.ஜெயரஞ்சித் அவர்களை இதழாசிரியராகக் கொண்டு மட்/ககு/பால்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் இருந்து ‘பாலருவி’ என்ற சிற்றிதழ் வெளிவந்துள்ளது.

மட்/ககு/கட்டுமுறிவு அ.த.க பாடசாலையில் 2013இல் எ.ஜெயக்குமணன் என்பவரை இதழாசிரியராகக் கொண்டு ‘தேனருவி’ எனும் சிற்றிதழ் வெளிவந்துள்ளது. மேலும் மட்/ககு/வம்மிவட்டவான் வித்தியாலயத்திலிருந்து 2011இல் நா.சத்தியசீலன் என்பவரை இதழாசிரியராக் கொண்டு ‘வம்மிப்பூ’ என்ற சிற்றிதழ் வெளியிடப்பட்டது. பின்னர் 2016இல் கு.சுதாகரன் என்பவரை இதழாசிரியராகக் கொண்டு வம்மிப்பூ இதழ் இரண்டும் 2019இல் பாடசாலையின் வைரவிழாச் சிறப்பு மலராக வம்மிப்பூ இதழ் மூன்றும் வெளியிடப்பட்டது. மற்றும் மட்/ககு/வாகரை மகாவித்தியாலயத்தில் இருந்து 2007இல் க.நிதிகரன் என்பவரை இதழாசிரியராகக் கொண்டு ‘வாகைத்தளிர்’ என்ற சிற்றிதழ் பாடசாலையின் வைரவிழாச் சிறப்பு மலராக வெளிவந்தது. மட்/ககு/வட்டவான் கலைமகள் வித்தியாலயத்திலிருந்து 2015இல் ‘கலைப்பேழை’ என்ற சிற்றிதழ் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

வாகரைப் பிரதேசத்தில் அரசுசார்ந்த நிறுவனங்கள் மூலமும் சிற்றிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரச் சிறப்பு மலராக ‘நெய்தல்’(2014) என்ற சிற்றிதழ் நான்கு இதழ்கள் வரை வெளிவந்துள்ளது. மற்றும் கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகத்திலிருந்து ‘வாகை’(2008) எனும் சிற்றிதழ் 9 இதழ்கள் வரையும் ‘அரும்பு’(2008) எனும் சிற்றிதழ் 12 இதழ்கள் வரையும் வெளிவந்துள்ளன. வாகரை எஸ்கோ சிறுவர் கழகத்தினால் ‘விழுதுகள்’(2009) என்ற சிற்றிதழ் ஆறு இதழ்கள் வரை வெளிவந்துள்ளது.

**வாகரைப் பிரதேச சிற்றிதழ்களில் வெளிவந்த ஆக்கங்கள்**

**1) கவிதைகள்**

- **உள்ளடக்கரீதியான வகைப்பாடு**

வாகரைப் பிரதேச சிற்றிதழ்களிலுள்ள கவிதைகளை வாகரை மண்ணின் சிறப்பு, போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஆகியன ஏற்படுத்திய தாக்கங்கள், தாயின் மனவுணர்வு, சிறுவர் உரிமை, முதியோர் பேணல், வாசிப்பின் முக்கியத்துவம், கல்வி என உள்ளடக்க ரீதியாக பாகுபடுத்தலாம்.

**வாகரை மண்ணின் சிறப்பு**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களுள் நெய்தல், அரும்பு, வாகை, வம்மிப்பூ, கதிராழி, வாகைத்தளிர், தேனருவி, விழுதுகள், எழுகதிர் போன்ற சிற்றிதழ்களில் வாகரைப் பிரதேசம் பற்றிப் பல கவிதைகள் வெளிவந்துள்ளன.

நெய்தல் நான்காவது இதழில் விஜிதா என்பவரின் ‘விரைவாக விழித்தெழுவோம்’ என்ற கவிதை வாகரையின் சிறப்பினையும், வாகரைப் பிரதேசத்திலுள்ள கலையம்சங்களையும் மிகவும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியுள்ளது. இக்கவிதையானது வாகரைப் பிரதேசத்தினை பின்தங்கிய கிராமம் என ஏளனமாக பேசுபவர்களுக்கு வாகரையில் உள்ள சிறப்புக்களை எடுத்துக்காட்டி தக்க பதிலடி கொடுக்கும் முகமாக அமையப்பெற்றுள்ளது. மற்றும் வாகரைவாழ் மக்களை இத்தகையோருக்கு எதிராக விழித்தெழும்படி அறிவுரை கூறும் கவிதையாகவும் அமைகின்றது. இதனை ஆசிரியர் பின்வருமாறு எடுக்காட்டுகின்றார்.

> “கோறளைப்பற்று வடக்கு என்றால் கோலவுரு கொண்டு கோவணம் கட்டிய
> கோழைகள் நாமென்று ஏளனம் செய்திங்கு எள்ளி நகையாடி
> கோலங்கள் போட்டிங்கு குற்றிடாமல் குட்டிச் சுவராக்கிய காலமன்று!
>
> வாயைப் பிளந்து நின்று வாயாரப் புகழ்ந்து கொண்டு
> வாஞ்சையோடு ஒன்றுகூடி வன்னி நாச்சியின் வரலாறு தேடி நின்று
> வாகரை வாணனொடு வாகையும் கரம் கோர்க்கும் காலமின்று!
> வாய்க்கு ருசியாக உடலுக்கு உரமாக உயர்ரக தானியங்கள்

வந்தோரை மீளவுமே வா கரையென அழைக்கும் வளமிகு பூமியிது!’’

(விஜிதா.மு.,2016:35)

**போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கங்கள்**

போர் மற்றும் ஆழிப்பேரலை ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மனவுணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக இத்தகைய கவிதை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அந்தவகையில் வாகை, கதிராழி, வாகைத்தளிர், பாலருவி, எழுகதிர், விழுதுகள் போன்ற சிற்றிதழ்களில் இத்தகைய கவிதைகளைக் காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக வாகைத்தளிர் எனும் சிற்றிதழில் பவளேந்திரகுமார் என்பவரால் எழுதப்பட்ட ‘இனியும் எங்கள் வாழ்வில்….’ என்ற தலைப்பிலமைந்த கவிதையானது போர் மற்றும் ஆழிப்பேரலை ஆகிய இரண்டினாலும் மக்கள் அடைந்த துன்பங்களை எடுத்துக் கூறுகின்றது.

‘‘அலைகடலும் அலைக்களித்த வேளைதனில்
அடிபட்ட அடையல்களாய் மீண்டுவந்தோம்
இன்னும் எங்கள் வாழ்க்கையில் ஏதுமுண்டோ!
என நினைத்து………
……. தொண்டர்களின் அரவணைப்பில் துளித்திடுவோம் - என
நினைக்க மீண்டதையா எம் வாழ்வில்
மீண்டும் போர்’’

(பவளேந்திரகுமார்.இ.,2007)

**தாயின் மனவுணர்வு**

அரும்பு, வாகை, வம்மிப்பூ, பாலருவி, தேனருவி, கலைப்பேழை போன்ற சிற்றிதழ்களில் தாய் பற்றிய கவிதைகளைக் காணலாம். வாகை எனும் சிற்றிதழில் ரூபனின் ‘நிழலாடும் நினைவுகள்’ எனும் கவிதை ரூபன் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. இக்கவிதையானது ஏழு பிள்ளைகளைப் பெற்ற தாய் இறுதியில் கணவனை இழந்து பிள்ளைகளால் கவனிப்பற்று அனாதையாக தனிமையில் துயரப்படுகிறாள். அத்தாயின் மனவுணர்வு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

‘‘…. ஐந்து பிள்ளைகளோ அதிகாரிகளாக
அலுவலகங்களில் அரச பணிகள் செய்ய
இரண்டு பிள்ளைகளோ இலண்டன் நாட்டில்
சுகபோக சுந்தர வாழ்வெய்துகின்றார்கள்

கரம் பற்றி கனிவான வாழ்வு தந்த கணவன்
உலகை விட்டு பிரியும் போது நாவதில் தவழ்ந்த
கடைசி வார்த்தை கவலை படாத புள்ள – உன்னை
கண்ணிமை போல் பிள்ளைகள் பார்க்கும்

காலங்கள் கடந்தது கணவரின் கடைசி வார்த்தையும் கனவானது
கற்பனை வாழ்க்கை வாழ்ந்த எனக்கு கண்ணீரே மிச்சமானது
அத்தனை பிள்ளைகள் இருந்தும் ஆதரவேதுமின்றி
அனாதையாக இந்த குடிசைக்குள்ள … ம்…ம்..
……. சேலைத் தொங்கலால் மெல்லத் தொடைத்து விட்டு
விரைகிறாள் தோட்டமொன்றில் கூலி வேலை செய்ய…"

(ரூபன்.க.,2014:9)

**சிறுவர் உரிமை**

அரும்பு, விழுதுகள், நெய்தல், வாகைத்தளிர், வம்மிப்பூ, தேனருவி போன்ற சிற்றிதழ்களில் சிறுவர்கள் பற்றிய கவிதைகள் வெளிவந்துள்ளன. வாணிரட்ணத்தின் 'சுதந்திர உலகில் சிதைக்கப்பட்ட உணர்வலைகள்' எனும் தலைப்பில் அமைந்த கவிதையானது சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களையும் அவர்களுக்கு ஏற்படும் உயிர் அச்சுறுத்தல்களையும் எடுத்துக்கூறுகின்றது. இவற்றுக்கு எதிரான தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவதாகவும் கவிதை அமைகின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

"….சிறார்கள் எட்டி உதைக்கப்பட வேண்டியவர்களல்ல
எட்டடி ஏணிகளாய் உயர வேண்டியவர்கள்
…..பணம் பெருக்கும் நோக்காய்
வெண்சிட்டுக்களின் அவயங்களை
பெட்டிகளில் பொக்கிசங்களாய்
நாடு விட்டு நாடு கடத்தி…" (வாணிரட்ணம்.,2008:22)

**முதியோர் பேணல்**

முதியோர் பற்றிய கவிதைகள் அரும்பு, வம்மிப்பூ, விழுதுகள் போன்ற சிற்றிதழ்களில் வெளிவந்துள்ளதைக் காணலாம். அந்தவகையில் பாணுஜாவின் 'முதுமையின் வலிமை' என்ற கவிதையானது மூத்தோர்களின் சொற்களை கேட்டு அவர்களை மதித்து அவர்களின் வழிகாட்டலின் கீழ் இளஞ்சிறார்கள் நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. உதாரணமாக பின்வரும் வரிகளை எடுத்துக்காட்டலாம்.

"சீர்கெட்ட சமூகம் கொஞ்சம்
செவிசாய்க்க வேண்டும்
நரைத்தவர் அறிவெல்லாம்
சிரத்திலே ஏற்ற வேண்டும்
மூத்தவர் வாக்கெல்லாம்
மூளையில் பொறிக்க வேண்டும்
சிறார்களின் எதிர்காலம்

முதுமையின் முதுகில்….''

(பாணுஜா.வே.,2019:27)

**வாசிப்பின் முக்கியத்துவம்**

இன்றைய மாணவர்கள் மத்தியில் வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலும் வாசிப்பின் அவசியத்தை இன்றைய இளந்தலைமுறையினர் அறியச் செய்யும் நோக்கிலும் வாசிப்பு பற்றிய கவிதைகள் அமையப்பெற்றுள்ளன. அந்தவகையில் அரும்பு, நெய்தல், வம்மிப்பூ, ஆழிமுத்துக்கள், எழுகதிர் போன்ற சிற்றிதழ்களில் வாசிப்பு சார்ந்த கவிதைகள் வெளிவந்திருப்பதை காணலாம்.

நெய்தல் இதழ் இரண்டில் யோகினியின் 'வாசிக்கப் பழகிடு மானிடா' எனும் கவிதையானது மனிதனிடம் வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் வாசிப்பின் பயன் என்ன என்பது பற்றியும் கூறுகின்றது. பின்வரும் கவிதை வரிகளூடாக இதனை அறியலாம்.

''வாசிகசாலை சென்று பழகிடு மானிடா
வாஞ்சையாய் வாசித்துப் பழகு நீ – மானிடா
நல்ல நூல்களே உன் நண்பர்கள்
அதை நேசிக்கப் பழகிடு மானிடா
பத்திரிகைகள் பலவும் தினமும் வாசி
பயனறிந்து வாசி மானிடா
வாசிப்பு உன் வாழ்வினில்
ஞான ஒளி ஏற்றிடட்டும் மானிடா''

(யோகினி.தி.,2014:18)

**கல்வி**

வம்மிப்பூ, அரும்பு போன்ற சிற்றிதழ்களில் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் கல்வியின் அவசியம் என்பன கூறப்பட்டுள்ளன. அவற்றுள் வம்மிப்பூ என்ற சிற்றிதழில் வினோதாவின் 'பாடசாலைக் கல்வி' எனும் கவிதையானது கல்வியின் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. கவிதையை வாசிக்கும் போது கடந்தகால பாடசாலை ஞாபகங்களை நினைவிற்கு கொண்டுவருகின்றது. நாம் பெற்ற கல்வியினால் பெருமையை தேட வேண்டும் என்பதை வலியுறுத்தகின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

''அடிவாங்கி அடம்பிடித்து
அழுது புரண்டு
அம்மாவின் கால்களைக்
கட்டிக் கொண்டு
கதறக் கதறப் பிரிக்கப்பட்டு
கண்டிப்புடன் உட்கார்ந்த

வகுப்பு முதலாம் வகுப்பு

… பெருமைக்காகத் தேடிப்
பெறுவது அல்ல கல்வி
பெற்றதைக் கொண்டு
பெருமை தேடிக் கொள்வதே கல்வி''

(வினோதா.சி.,2019:55)

- **கவிதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திகள்**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் காணப்படும் கவிதைகளில் சொல்லாட்சித்திறன், அணிகள், பிரதேச வர்ணனை போன்ற உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

**சொல்லாட்சித் திறன்**

அரும்பு இதழ் ஒன்றில் வாணிரட்ணத்தின் 'சுதந்திர உலகில் சிதைக்கப்பட்ட உணர்வலைகள்' எனும் கவிதையில் 'ஐயிருப்போர்வை' என்ற சொல் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

''அன்னையவளின் ஐயிருப்போர்வையின்
மாதமுடிவில் ஈசனின் அருட்கொடையில் ….''

(வாணிரெட்ணம்.,2008:23)

பவளேந்திரகுமாரின் 'இனியும் எங்கள் வாழ்வில்….' என்ற கவிதையில் அடையல்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'அடையல்கள்' என்பது நீரில் அடித்துச் செல்லப்படும் பொருள் மிதந்து மிதந்து ஒரு கரையை சேருவது போல ஆழிப்பேரலையால் மக்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு அதிலிருந்து மீண்டு வருவதைக் கூறுகின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

''அலைகடலும் அலைக்களித்த வேளைதனில்
அடிபட்ட அடையல்களாய் மீண்டுவந்தோம்''

(பவளேந்திரகுமார்.இ.,2007)

அரும்பு ஆறாவது இதழில் அனுஜா என்பவரின் 'குடும்பம் உங்களை பாதுகாக்கும்' என்ற தலைப்பிலமைந்த கவிதையில் 'கபாலம்' எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. கபாலம் என்பது உறுதியான எலும்பை உடைய மண்டையோட்டைக் குறிக்கின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

''எங்கள் குடும்ப கபாலங்களை
பிளந்து போட்டது புலம்பெயர்வு!''

(அனுஜா.ம.,2013:18)

**அணிகள்**

வாகரைப் பிரதேச சிற்றிதழ்களில் வெளிவந்த கவிதைகளில் உவமை, உருவகம் போன்ற பொருளணிகளும் எதுகை, மோனை போன்ற சொல்லணிகளும் கையாளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அரும்பு இதழ் 12இல் லிதுர்சனாவின் 'முதியோர் வழிகாட்டலில் இன்றைய சிறார்கள்' என்ற கவிதை முதியோர்களே சிறுவர்களின் பாதுகாவலர்களாக உள்ளார்கள் என்பதை பல உவமைகளால் எடுத்துக்காட்டுகின்றது. இதனை பின்வரும் வரிகளூடாக அறியலாம்.

"மரத்தை தாங்கிடும் வேர்போல
சிறார்களை தாங்கிடும் முதியோர்களே
தேனைக் காத்திடும் தேனீ போல
சிறார்களை காத்திடும் முதியோர்களே!"

(லிதுர்சனா.ஜோ.க.,2019:26)

அடுத்து, விவேகானந்தனின் 'மங்கலமானாள் வாகையவள்', சரஞ்சனின் 'வாகையூர் ஓர் மாது' எனும் கவிதைகளில் உருவக அணியைக் காணலாம். இதில் ஒரு பெண்ணுக்குரிய இயல்புகளைக் கொண்டு வாகரைப் பிரதேச சிறப்பினை எடுத்துக்கூறுகின்றார்.

சொல்லணிகளான எதுகை, மோனை போன்ற அணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் அரும்பு நான்காவது இதழில் சுதர்சினியின் 'வாசிப்போம்' என்ற கவிதையில் எதுகையணி பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக பின்வரும் வரிகளைக் கூறலாம்.

"வாசித்தேன் வாசிப்பை
நேசித்தேன் வாசிப்பை
யாசித்தேன் வாசித்ததை
யோசித்தேன்" (சுதர்சினி.V.,2016:28)

ஶ்ரீபிரியாவின் 'இளந்துளிரின் எதிர்கால நோக்கு' என்ற கவிதையில் மோனையணி பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் வரிகளில் இதனை எடுத்துக்காட்டலாம்.

"உயர்வு தாழ்வு பாராமல்
உத்தமனாய் மலர்ந்திடு!
நேர்வழியில் நடந்திடு
நேர்மையை கைக்கொண்டிரு!" (ஶ்ரீபிரியா.ஜீ.,2008:34)

**பிரதேச வர்ணனை**

வம்மிப்பூ மூன்றாவது இதழில் டெனிஸ்காவின் 'வாகரைக்குறம்' எனும் கவிதையானது வாகரைப் பிரதேசத்திலுள்ள கிராமங்களையும் அவற்றிலுள்ள வளங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றது. இதிலிருந்து வாகரைப் பிரதேச மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்பதை சிறப்பாக கூறுகின்றது. இதனை பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது.

"… வம்மி வட்டவானிலுள்ள கருங்கனி மர நாவலும்
இம்மி யளவும் கசந்ததில்லை இனிக்கும் நம்ம நாவிலே
களாப் பழமும் கனிந்திருக்கும் கட்டுமுறிவு தேசமே
பாலப் பழமும் பழுத்திருக்கும் தோணிதாண்ட மடுவிலே

கருவாடும் காஞ்சறச்சும் ஆண்டாங்குளம் தரவே
பால்சேனையில் பழமிளநீர் பருகலாமே தினமே
மாங்கேணியின் மங்கையர்கள் கட்டுவலை தெரிய
பாங்கதாக பளபளக்கும் பாலை மீனும் விளையும்…"

(டெனிஸ்கா.டி.,2019:45)

**2) சிறுகதைகள்**

- **உள்ளடக்கரீதியான வகைப்பாடு**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களிலுள்ள சிறுகதைகளை சமூகப் பிரச்சினைகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஆகியன ஏற்படுத்திய தாக்கங்கள் என உள்ளடக்க ரீதியாக பாகுபடுத்தலாம்.

**சமூகப் பிரச்சினைகள்**

சமூகத்தில் நிலவுகின்ற பல்வேறு வகையான பிரச்சினைகளை இச்சிறுகதைகள் எடுத்துக்கூறுகின்றன. அவற்றுள் அரும்பு இதழ் ஐந்தில் கஸ்விதா என்பவரால் எழுதப்பட்ட 'கடைசிவரை…. கண்ணீர்' எனும் தலைப்பிலுள்ள சிறுகதையானது குடும்பத்தில் மதுபோதைக்கு அடிமையாகிய தாய் மற்றும் தந்தையினால் பிள்ளைகள் அடைந்த துன்பமும் அவர்களின் வாழ்க்கை சீர்குலைந்தமை பற்றியும் பேசுகின்றது. இது குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிய பெற்றோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

> "கந்தசாமியின் மனைவியான கண்ணகிக்கும் அவளின் பிள்ளைகளுக்கும் மிக்க வறுமையே நிலவினாலும் கண்ணகி தான் ஒரு சிறந்த குடிமகள் என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்துக்கொண்டே இருப்பாள்." (கஸ்விதா.சு.,2012:23)

### பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

பொதுவாக சமூகத்தில் பெண்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றுள் கணவனை இழந்து தனது பிள்ளைகளையும் குடும்பத்தையும் வழிநடத்துகின்ற பெண்கள், சீதனக் கொடுமையை எதிர்கொள்ளும் பெண்கள், மது போதைக்கு அடிமையான கணவனின் பிடியில் சிக்கி வறுமையில் வாழும் பெண்கள் எனப் பல்வேறு வகையான பெண்கள் பிரச்சினைகளை காணலாம். வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களும் பெரும்பாலும் இவற்றையே எடுத்தியம்புகின்றன.

பாலருவி எனும் சிற்றிதழில் யோதிஸ் என்பவரால் எழுதப்பட்ட 'சீதனம்' எனும் தலைப்பிலமைந்த சிறுகதையானது சீதனம் என்பது பெண்கள் வாழ்வில் எவ்வளவு பிரச்சினைகளை கொண்டுவருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இதனை பின்வரும் வரிகளூடாக எடுத்துக்காட்டலாம்.

> "என்னம்மா சொல்றீங்க திருமணமா? நான் பெண் எடுக்கும் போது சீதனம் இல்லாமல் எடுக்கமாட்டேன். அது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டான். அம்மா எல்லாம் தெரிஞ்சுதான் நான் திருமணத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். பொழுது விடிந்தது பெண் திருமண சந்தோசத்தில் மகிழ்வாய் இருந்தாள். மாப்பிள்ளை சீதனம் எப்போது கிடைக்கும் என்று யோசித்த வண்ணம் இருந்தான். இவனது அம்மா இவனுக்குத் தெரியாமல் சீதனம் ஒன்றும் வேண்டாம் என்று பெண்ணைக் கேட்டுவிட்டார். ....நீங்கள் எனக்குச் சொன்ன சீதனமான நாலு லட்ச ரூபா, மோட்டார் பைக் என்பன தராதமையால் உங்கள் பெண்ணை நான் கல்யாணம் கட்ட மாட்டேன் என்றான்.
>
> ....ஓர் அறையுள் கதிரை விழுந்த சத்தம் கேட்டது. அங்கால மணப்பெண்ணை காணவில்லை என்று சத்தம் கேட்டது. உடனே அறையைப் பார்த்தால் மணப்பெண் தற்கொலை செய்து கொண்டாள். தனது மகளின் பிரிவை தாங்க முடியாத அவளது அப்பாவும் அம்மாவும் பைத்தியமானார்கள்." (யோதிஸ்.கு.,2011)

### பொருளாதாரப் பிரச்சினைகள்

சமூகத்திலே பொருளாதாரம் என்பது மிக முக்கிய பிரச்சினையாக உள்ளது. இவ்விதத்தில் வாகை மூன்றாவது இதழில் நிலுஜா என்பவரால் எழுதப்பட்ட 'வறுமை' என்ற தலைப்பிலமைந்த சிறுகதையானது அதன் தலைப்பிலேயே தனது உள்ளடக்கத்தை தெளிவுபடுத்துகின்றது. வறுமை என்பது சாதிக்க தடை அல்ல என்பதை இக்கதை எடுத்துக்காட்டுகின்றது. இதனை பின்வருமாறு ஆசிரியர் கூறுகின்றார்.

> "சுனாமியால் தனது கணவனை இழந்த கண்ணம்மா. உண்பதற்கு உணவின்றியும், தனது பிள்ளைகளை படிப்பிக்க வைப்பதற்கு பெரிதும் கஸ்டப்பட்டாள். எப்படியாவது ஒரு கூலிவேலை தேடி தனது பிள்ளைகளை படிக்க வைக்க முயற்சி செய்தாள். அவளது முயற்சி பயனளித்தது. ஓர் வீட்டில் அவளது பாவத்திற்கு இரங்கி ஒரு

பெண்மணி சமையல் வேலை கொடுத்தாள். சுனேஸ் ஒரு ஆசிரியராக வந்தான். கொன்மேன்டில் படிக்கவைத்த சுஜித் ஒரு வைத்தியராக வந்தான். கீதா பல்கலைக்கழகம் படிக்கிறாள்.''

(நிலுஜா:.பொ.,2010:89)

**போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கங்கள்**

ஈழத்திலே ஏற்பட்ட உள்நாட்டு போரினாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட பிரதேசமாக வாகரைப் பிரதேசம் விளங்குகின்றது. இத்தகைய சூழலில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கில் சிறுகதைகளை எழுதியுள்ளனர். கேதினியின் 'மண்ணும் மனிதமும்' என்ற சிறுகதை ஆழிப்பேரலை மற்றும் போர்ச்சூழலால் மனிதர்களுக்கு மட்டுமின்றி இயற்கைக்கும் ஏற்பட்ட அழிவுகளை எடுத்துக்காட்டுகின்றது. இதனை பின்வருமாறு ஆசிரியர் கூறுவதைக் காணலாம்.

''திரும்பிவர புறப்பட்டவன் முன்னால் சனங்கள் 'கடல் வருது கடல் வருது' என்று ஓடுவதைனக் கண்டான். அவனுக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. கடல் எப்படி ஊருக்குள் வருமென்று சிந்தித்தவனுக்கு விடை கிடைத்ததும் பதறிப்போய் வாகரைக்கு ஓடினான். வாகரையின் அடையாளமே இல்லாமல் கடலன்னையின் திருவிளையாடல் அவனை சிந்திக்க விடாமல் பேயாய் வீட்டை நோக்கிச் சென்றான். வீட்டின் அடையாளமே தெரியாமல் தட்டுத்தடுமாறி ஆற்றைக்கடந்து தட்டுமுனைக்கு ஓடினான்.''

(கேதினி.,2007:25)

- **சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திகள்**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களிலுள்ள சிறுகதைகளில் மொழிநடை மற்றும் வருணனை உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

**மொழிநடை**

பேச்சுமொழிப் பயன்பாடு, பிறமொழிப் பயன்பாடு, பழமொழி ஆகியன சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவற்றுள் பேச்சுமொழிப் பயன்பாடானது இச்சிறுகதைகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பேச்சுமொழியூடாக ஒரு படைப்பு எத்தகைய சூழலின் பின்னணியில் படைக்கப்பட்டது என்பது வெளிப்பட்டு நிற்கிறது. பேச்சு மொழியானது பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபட்டதாகவும் அமைகின்றது. இதனூடாக கிராமமக்களின் வாழ்வியலையும் அவர்களின் மொழிப்பிரயோகத்தினையும் அறிய முடிகின்றது. அதுமட்டுமின்றி பிரதேச அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் தன்மை காணப்படுகின்றது.

வாகரைப் பிரதேசத்தில் வழக்கத்திலுள்ள பேச்சுமொழிச் சொற்கள் இச்சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ளதைக் காணலாம். உதாரணமாக வாகை இதழ் இரண்டில் ராஜசுரேசின் 'ஒருசாண் நிலம்' என்ற சிறுகதையில் 'மன' என்ற சொற்பிரயோகம் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இச்சொல் ஆண், பெண் பாகுபாடின்றி பொதுவாக ஒருவரை அழைக்கப் பயன்படுகின்றது. பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களே இதனை அதிகம் பயன்படுத்துவார்கள். இச்சொல் இன்றும் வாகரையில் வழக்கில் இருக்கும் சொல்லாகும். இதனூடாக வாகரைப் பிரதேச அடையாளம் வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். உதாரணமாக பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

> ''ஏன்மன நீயிப்ப அங்க போப்பறா போனியெண்டா பழசையெல்லாம் நினச்சி கஸ்ரப்படுவா அதான் சொல்றன்.''
>
> (ராஜசுரேஸ்.இ.,2009)

அதுமட்டுமின்றி, பிறமொழிச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் பிறமொழிப் பயன்பாடு மக்கள் மத்தியில் அதிகமாக கலப்பில் வந்துவிட்டது. அவற்றை இலக்கியங்களில் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகின்றது. அவற்றுள் பஸ், ரீச்சர், சேர், ஓயல், பாஸ், விறாந்தை, குசினி, குட்மோனிங், அங்கிள், ஸ்மரணை, ரூம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பழமொழிப் பயன்பாடும் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ளதைக் காணலாம். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இருத்தல், இக்கரை மாட்டிற்கு அக்கரைப் பச்சை போன்ற பழமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வருணனை**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களிலுள்ள சிறுகதைகளில் பிரதேச வருணனை இடம்பெற்றுள்ளது. பிரதேச வர்ணனை என்பது கதை இடம்பெறும் பிரதேசத்தினை வருணித்து அதன் வளங்கள் பற்றியும் கூறுவதாகும். உதாரணமாக சுந்தரேஸ்பரனின் 'கட்டுமுறிவு' எனும் சிறுகதையில் ஆசிரியர் வாகரைப் பிரதேசத்திலுள்ள தொழில்முறைகள் மற்றும் கட்டுமுறிவுக் கிராமத்திற்குச் செல்லும் சிரமம் என்பவற்றையும் கூறுவதனூடாக பிரதேசம் பற்றிய அடையாளத்தை வாசகர் கண்முன் கொண்டு வருகின்றார். இதனை பின்வருமாறு எடுத்துக் காட்டலாம்.

> ''நான் மாரிபோகம் கட்டுமுறிவுல ஆயத்துக்கு வெள்ளாம செய்யுறநான். முன்னய மாதிரி இல்ல எனக்கும் வயதாகித்து. முதல் முதல் நான் ரெண்டு ஏக்கர் விதைக்கிறன். அது என்ன சொல்லயா வேணும் சேத்துப்பூமி முழங்காலுக்குப் புதையும். எங்கட ஊருக்குள்ள சேனைப்பயிர் செய்யுறண்டா பறவாயில்ல. அதுக்கும் நல்ல பூமி இல்ல. கட்டுமுறிவு சந்தி வந்துத்துடா தம்பி நீ தண்ணீர் குடிச்சித்து வா இனித்தான் செரியான நெருப்பு ஓட்டம் ஓடணும். ……நான் ஆத்துக்குப் போறனான். அதுல எல்லா நேரமும் தொழில் இல்ல. ஒரு சீசனுக்கு தொழில் நடக்கும். எங்கட ஆத்து நண்டையும் மணல மீனையும்

சாப்பிட்டா மறக்கமாட்டா. .....நாலு மாடு நிண்டது. அந்த மாட்டையும் கூட்டில நிண்ட கோழிகளையும் வித்து எடுத்தன்.'' (சுந்தரேஸ்பரன்.அ.,2011)

**3) கட்டுரைகள்**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் உள்ள கட்டுரைகளை சமூகப்பிரச்சினைகள், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பானவை, வாகரைப் பிரதேசம் தொடர்பானவை, கலைகள் என வகைப்படுத்தி நோக்கலாம்.

**சமூகப்பிரச்சினைகள்**

வாகரையில் இன்றுவரைக்கும் நிலவுகின்ற சமூகப்பிரச்சினைகளாக வறுமை, இளவயது திருமணம், போதைப்பொருள் பாவனை என்பன காணப்படுகின்றன. அவற்றை வெளிப்படுத்தும் நோக்கில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அரும்பு இதழ் ஆறில் கோகிலராணியின் 'இளவயது திருமணங்களும் அவற்றினால் ஏற்படும் விளைவுகளும்' என்ற தலைப்பிலமைந்த கட்டுரையானது சமூகத்தில் இளவயது திருமணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

**சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பானவை**

இன்றை உலகில் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துஸ்பிரயோகங்கள், இளவயது திருமணங்கள் அவற்றிலிருந்து அவர்களை பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றியுமே இக்கட்டுரைகள் பேசுகின்றன. இவ்விதத்தில் அரும்பு, விழுதுகள் போன்ற சிற்றிதழ்களில் இத்தகைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. கரிகரன் என்பவரால் எழுதப்பட்ட 'சிறுவர் உரிமைகள் மீறப்படும் போது' எனும் கட்டுரையானது சிறுவர்களுக்கு துஸ்பிரயோகம் ஏற்படும் போது அல்லது அவர்களது உரிமைகள் மீறப்படும் போது சிறுவர்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க சட்டதிட்டங்கள் மற்றும் நீதிமன்றங்கள் உள்ளன என்பதை வலியுறுத்திக் கூறுகின்றது. இதனை பின்வரும் கூற்றின் மூலம் எடுத்துக்காட்டலாம்.

> ''பயப்படாதீர்கள், உங்கள் உரிமையை பறிக்க யாராலும் இயலாது அப்படியானால் சிறுவர் உரிமைக் குழுவுள்ளது. அக்குழுவில் சென்று சொல்லுங்கள். அவர்கள் பாதிப்பை நிவர்த்தி செய்வார்கள். மீண்டும் சொல்கிறேன் உங்களது உரிமை உங்களுக்காகவே யாரும் பறிக்க முடியாது.''

(கரிகரன்.மு.,2015:25)

**வாகரைப் பிரதேசம் தொடர்பானவை**

வாகரைப் பிரதேசத்தின் வரலாற்றினையும் அதன் தொன்மையினையும் இப்பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் எடுத்துக் கூறுவனவாகவே இக்கட்டுரைகள் அமைகின்றது. அந்தவகையில் நெய்தல், வாகை, தேனருவி போன்ற சிற்றிதழ்களில்

இத்தகைய கட்டுரைகளைக் காணலாம். வாகை இதழ் மூன்றில் சிவராம் என்பவரது ‘வாகரையில் வேடுவ இனத்தவர்கள்’ எனும் கட்டுரையானது வாகரைப்பிரதேசத்தில் வாழும் வேடுவ இனத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், சம்பிரதாயங்கள் என்பவற்றை விரிவாக ஆராய்கின்றது. இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டலாம்.

> “வாகரையில் காயான்கேணி, மாங்கேணி, மதுரங்கேணி, குஞ்சன்குளம், பனிச்சங்கேணி, கண்டலடி, அம்மந்தனாவெளி, பால்சேனை, கதிரவெளி, கட்டுமுறிவு போன்ற இடங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். …இக்காலப்பகுதியில் இலுக்குப் புல்லினால் அமைக்கப்பட்ட குடில்களிலே வசித்ததாகவும் தாங்கள் வேட்டைக்கு நாய்களை பயன்படுத்தியதாகவும் கூறுகின்றார். உடும்பு பிடித்தல், தேன் எடுத்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டதாகவும் தனக்கு விவசாயம் தெரியாது எனவும் கூறுகின்றார். அக்காலத்தில் ஒல்லிக்காயை காயவைத்து இடித்து அதனை சோறு போன்று உண்டதாக குறிப்பிடுவர். மீன் பிடிப்பதற்கு கருங்கெயல் வேரினை தட்டி அதனை தண்ணீரில் விட்டால் மீன் இறக்கும் என கூறுகின்றார். இதன் மூலம் மீன் பிடித்த இவர் திருமணத்தை கசாது எனக் குறிப்பிடுகின்றார்.” (சிவராம்.ப.,2010:1)

**4) கலைகள்**

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் கலைகள் தொடர்பாக பல கட்டுரைகள் வெளிவந்துள்ளதைக் காணலாம். அவற்றுள் வாகை ஆறாவது இதழ்(2013) கலைஞர்களின் விபரத்திரட்டாகவும், ஒன்பதாவது இதழ்(2016) கலைகளின் தொகுப்பாகவும் வெளிவந்தமை சிறப்பிற்குரியதாகும். வாகரைப்பிரதேசத்தில் உள்ள கூத்து தொடர்பான விடயங்களையும் ஏனைய கலைவடிவங்களையும் எடுத்துக்கூறுகின்றன.

வாகை ஏழாவது இதழில் இராசலிங்கம் என்பவரது ‘புலிக்கூத்தின் ஆரம்பமும் தற்கால வளர்ச்சியும்’ எனும் கட்டுரையானது புலிக்கூத்து வாகரையில் யாரால் தோற்றுவிக்கப்பட்டது, ஏன் தோன்றியது, அது எவ்வாறு ஆற்றுகை செய்யப்படுகின்றது என்பதை விரிவாக எடுத்துக்காட்டுகின்றது. இக்கூத்தானது தேன் எடுக்கும் போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாக நடித்துக்காட்டுவதாகும். இத்தகைய கலைமுயற்சியானது வாகரைப் பிரதேசத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. பின்வருமாறு அவற்றை நோக்கலாம்.

> “மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே வாகை சூடி வந்தோரை வாழவைக்கும் தாயவள் கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசமாகும். இத்தாயவள் காக்கும் அம்மந்தனாவெளிக் கிராமக் குழந்தையில்தான் இளம்பிறைக் கலைமன்றம் நிலை நிறுத்திய புலிக்கூத்து பிறந்து வளர்ந்தது. இப்புலிக்கூத்தினை கந்தன் வைரமுத்து என்பவர் இயற்றியுள்ளார். புலியினுடைய தோற்றம், தாக்குதல், தேன் எடுப்பவன் எப்படியெல்லாம் கஸ்டப்படுவான் என்பதை காட்டுவதற்காகவே புலிக்கூத்து இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.” (இராசலிங்கம்.க.,2014:1)

**முடிவுரை**

எனவே வாகரைப் பிரதேசத்தில் இருந்து வெளிவந்த சிற்றிதழ்களில் உள்ள ஆக்கங்கள் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கி நோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கவிதை மற்றும் சிறுகதைகள் என்பன அவற்றின் உள்ளடக்க அடிப்படையிலும் அவற்றில் கையாளப்பட்டுள்ள உத்திமுறைகள் அடிப்படையிலும் எடுத்து நோக்கப்பட்டுள்ளன. மற்றும் கட்டுரை அவற்றின் உள்ளடக்க அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாக்கங்களில் கையாளப்பட்டுள்ள மொழிப் பயன்பாடானது வாகரைப் பிரதேசத்தின் தனித்துவமான அடையாளத்தை எடுத்துக்காட்டுகின்றன. மேலும் பெரும்பாலான ஆக்கங்கள் மக்களின் யதார்த்தபூர்வமான உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. உதாரணமாக போர்ச்சூழல் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் மனவுணர்வுகளை ஆக்கங்களாக வெளிப்படுத்தியுள்ளனர். அதுமட்டுமின்றி இச்சிற்றிதழ்களிலுள்ள ஆக்கங்கள் சமூகப் பண்பாட்டையும் அதனூடாக பிரதேசத்தின் அடையாளத்தையும் வாகசர்கள் உணரும் வகையில் அமையப்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

இதனடிப்படையில் வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களிலுள்ள கவிதைகளின் எண்ணிக்கை 237 ஆகும். ஏனைய ஆக்கங்களை விட கவிதைகளே அதிகளவில் வெளிவந்துள்ளன. கவிதைகளை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் வாகரை மண்ணின் சிறப்பு, போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கம், தாயின் மனவுணர்வு, சிறுவர் உரிமை, முதியோர் பேணல், வாசிப்பின் முக்கியத்துவம், கல்வி என்றவாறு பாகுபடுத்தி நோக்க முடியும்.

அடுத்து 52 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இச்சிறுகதைகளை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலும் அவற்றில் கையாளப்பட்டுள்ள உத்திகள் அடிப்படையிலும் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் உள்ளடக்க அடிப்படையில் சமூகப் பிரச்சினைகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், போர்ச்சூழல் மற்றும் இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய தாக்கம் என்றவாறு பாகுபடுத்தி நோக்கப்பட்டுள்ளது.

வாகரைப் பிரதேசத்திலிருந்து வெளிவந்த சிற்றிதழ்களிலுள்ள கட்டுரைகள் மிகவும் முக்கியமானவையாகும். மொத்தமாக 197 கட்டுரைகள் இச்சிற்றிதழ்களில் காணப்படுகின்றன. இவ்விதத்தில் இக்கட்டுரைகள் அவற்றின் உள்ளடக்க ரீதியாக சமூகப் பிரச்சினைகள், வாகரைப்பிரதேசம் பற்றியவை, கலைகள், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பானவை என்ற பாகுபாட்டின் அடிப்படையில் வகுத்து நோக்கப்பட்டுள்ளது.

இச்சிற்றிதழ்களிலுள்ள ஆக்கங்களை எடுத்து நோக்குகின்ற போது இதில் கையாளப்பட்டுள்ள உத்திமுறைகள் மிகவும் சிறப்பிற்குரியனவாகும். அந்தவகையில் யதார்த்தபூர்வமாக உணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. அதேசமயம் வாகரைப் பிரதேச மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களையும் வெளிக்கொணரும் முகமாக

இவ்வாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இதனூடாக வாகரைப் பிரதேச அடையாளத்தை வெளிப்படுத்துவனவாக சில ஆக்கங்கள் அமைவதைக் காணமுடிகின்றது.

**உசாத்துணைகள்**

**மூலநிலை ஆதாரம்**

1. அரும்பு, (சர்வதேச சிறுவர்தின சிறப்புமலர்) 2008, 2009, 2010, 2011, 2012, 2013, 2014, 2015, 2016, 2017, 2018, 2019, பிரதேச செயலகம், கோறளைப்பற்று வடக்கு: வாகரை
2. ஆழிமுத்துக்கள், 2014, 2017, 2022 பொதுநூலகம், மாங்கேணி
3. எழுகதிர், 2015, 2016, 2019, பொதுநூலகம், கதிரவெளி
4. கடல்அமுதம், 2015, 2022, பொதுநூலகம், வாகரை
5. கடல்மங்கை, 2017, பொதுநூலகம், வம்மிவட்டவான்
6. கதிராழி, (நூற்றாண்டு விழா சிறப்புமலர்), 2023, மட்/ககு/கதிரவெளி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் (தேசியபாடசாலை)
7. கலைப்பேழை, 2015, மட்/ககு/வட்டவான் கலைமகள் வித்தியாலயம், வாழைச்சேனை
8. தேனருவி, (சிறப்புமலர்), 2013, மட்/ககு/கட்டுமுறிவுக்குளம் அ.த.க.பாடசாலை, கதிரவெளி.
9. நெய்தல், (தேசிய வாசிப்புமாத சிறப்பு மலர்), 2014, 2016 பிரதேச சபை, கோறளைப்பற்று வடக்கு, வாகரை
10. பாலருவி, 2012, மட்/ககு/பால்சேனை அ.த.க.பாடசாலை, கதிரவெளி
11. வம்மிப்பூ, (சிறப்புமலர்), 2011, 2016, மட்/ககு/வம்மிவட்டவான் வித்தியாலயம், கதிரவெளி
12. வம்மிப்பூ, (வைரவிழா சிறப்புமலர்), 2019, மட்/ககு/வம்மிவட்டவான் வித்தியாலயம், கதிரவெளி
13. வாகை, (கலாசாரவிழா சிறப்புமலர்), 2008, 2009, 2010, 2011, 2012, 2014, 2015, 2016, கலாசார பேரவை, பிரதேச செயலகம், கோறளைப்பற்று வடக்கு, வாகரை
14. வாகைத்தளிர், (வைரவிழா சிறப்புமலர்), 2007, மட்/ககு/வாகரை மகாவித்தியாலயம், வாகரை
15. விழுதுகள், (சிறுவர் தின சிறப்பு வெளியீடு) 2009, 2010, 2011, 2012, 2013, 2014, வாகரைப் பிரதேச சிறுவர் கழகங்கள்: எஸ்கோ

**நூல்கள்**

1. வாகரைவாணன்.,(2011), கிழக்கிலங்கைத் தமிழகம், மட்டக்களப்பு: எகெட் கரித்தாஸ் நிறுவகம்
2. வாகரைவாணன்.,(2021), தலை நிமிர்ந்து நிற்கும் தமிழ், மட்டக்களப்பு: யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி
3. வாகரைவாணன்.,(2002), கிழக்கில் ஒரு கிராமம் (இது ஒரு கிராமத்தின் வராலாறு), மட்டக்களப்பு: ஆரணியகம்
4. வாகரைவாணன்.,(2006), வாகரை ஒரு வரலாற்றுபள் பார்வை, மட்டக்களப்பு: ஆரணியகம்

# Classical Literature & Modern Literary Works

# ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு

Ms. Hamsa Lebbe Rinosa
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
hamsarinosa1@gmail.com

Dr. Nadira Mariyasandanam
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
nadiraeusl@yahoo.co.in

**ஆய்வுச் சுருக்கம்:**

புலம்பெயர் ஆக்கங்களை வெளிக்கொண்டுவரும் சாதனங்களுள் சஞ்சிகைகளும் ஒன்றாகும். அவ்வகையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புலம்பெயர் சஞ்சிகைகளின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானதாகும். ‘பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு’ எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது 1991 ஆம் ஆண்டு ஜேர்மனியிலிருந்து வெளிவந்த ‘பூவரசு’ எனும் சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பீடு செய்வதாக அமைந்ததுள்ளது. புலம்பெயர் சஞ்சிகைகளுள் ஒன்றான ‘பூவரசு’ சஞ்சிகையானது கலை, இலக்கிய இதழாக வெளிவரினும், இலக்கியம் சார்ந்த பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவந்துள்ளமை சிறப்பம்சமாகும். ஆய்வின் சுருக்கம் கருதி இச்சஞ்சிகையில் வெளிவந்த ஆக்கங்களில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் பற்றி ஆராய்வதனூடாகப் ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பினை மதிப்பீடு செய்வது இவ் ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புப் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. 1991 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ‘பூவரசு’ சஞ்சிகையின் கிடைக்கப் பெற்ற முப்பத்தொன்பது இதழ்களும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ‘பூவரசு’ சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள் ஆகியன உள்ளடக்கம் மற்றும் உணர்த்து முறையும் மொழிப் வெளிப்பாடும் என்ற அடிப்படையிலும், கட்டுரைகள் உள்ளடக்கரீதியாகவும் ஆய்வு செய்யப்பட்டு ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புகள் மதிப்பிடப்பட்டுள்ளன. புலம்பெயர் சஞ்சிகை வரலாற்றில் ‘பூவரசு’ சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானது என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்*** *: உணர்த்துமுறை, புலம்பெயர் இலக்கியம், ‘பூவரசு’ சஞ்சிகை, மொழிவெளிப்பாடு, விமர்சன அணுகுமுறை*

**அறிமுகம்**

'ஜெர்மனிலிருந்து வெளிவந்த பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு - ஒரு மதிப்பீட்டாய்வு' எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது புலம்பெயர் சஞ்சிகை வரலாற்றில் பூவரசு சஞ்சிகை பெறும் முக்கியத்துவத்தையும் அதன் இலக்கியப் பங்களிப்பையும் வெளிக்கொண்டுவரும் நோக்கில் இச் சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பவற்றை முழுமையாக ஆய்வு செய்வதன் மூலம் அதன் இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடல் என்பதை நோக்காகக் கொண்டு அமைகிறது. பூவரசு சஞ்சிகையானது புலம்பெயர் சஞ்சிகைகளின் பொற்காலத்தில் வெளிவந்த ஒன்றாகும். பூவரசு சஞ்சிகை பூவரசு கலை, இலக்கியப் பேரவையால் ஜெர்மனியிலிருந்து 1991 ஆம் ஆண்டு தை மாதம் இந்து மகேஷ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ''உலகமே நம் இல்லம் உள்ளமெல்லாம் நம் சொந்தம்" என்ற மகுட வாசகத்துடன் முதலில் கையெழுத்துப் பிரதியாகவும் பின்னர் ஆறாவது இதழிலிருந்து அச்சுப்பிரதியாகவும் வெளிவந்தது. ஓராண்டு நிறைவின் பின்னர் வர்ண அட்டைப் படங்களுடன் வெளிவந்தது. பூவரசு சஞ்சிகை இருதிங்கள் இதழாக ஆரம்பிக்கப்பட்டு நான்காவது ஆண்டிலிருந்து திங்கள் இதழாக வெளிவந்தது. ஐந்தாவது ஆண்டில் இருந்து தவிர்க்க முடியாத காரணங்களினால் மீண்டும் இரு திங்கள் இதழாக வெளிவர வேண்டிய நிலை ஏற்பட்டது. 1991 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பூவரசு சஞ்சிகையானது 2008 ஆம் ஆண்டுடன் தனது வரவினை நிறுத்திக் கொண்டது. அறிமுகப் படைப்பாளர்கள் முதல் கலை, இலக்கிய உலகில் ஏற்கனவே எழுதிக் கொண்டிருக்கும் படைப்பாளர்கள் வரை அவரவர் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்குத் களம் அமைத்துக் கொடுப்பதே பூவரசு சஞ்சிகையின் அடிப்படைக் கொள்கையாகும். பூவரசில் வெளிவந்த ஆக்கங்களாக கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், குறுங்காவியம், நாடகம் என்பவற்றுடன் சிறுவர்களுக்கான பகுதியாக இளந்தளிர் என்னும் பகுதியும் பெண்களுக்கான குறிப்புகள், சமையல் குறிப்புகள் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. புலம்பெயர் மண்ணில் தமிழ்ப் படைப்பாளர்கள் அதிகமாக உருவாக வேண்டும் என்பதிலும் தமிழக் கலை, இலக்கியங்கள் பெருக வேண்டும் என்பதிலும் அக்கறையுடன் பல அரிய பங்களிப்புகளைச் செய்துள்ள பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புக்களைப் பற்றி ஆய்வு செய்வது அவசியமானதாகும்.

**ஆய்வு நோக்கம்**

புலம்பெயர் தமிழ்ச் சஞ்சிகைகளின் வரலாற்றில் பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அவ்வகையில் பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பவற்றை தொகுத்து ஆய்வு செய்வதன் மூலம் பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பினை வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனினும் பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புகள் பற்றிய முழுமையான ஆய்வுகள் எவையும் இடம்பெறவில்லை என்பது ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வு முறையியல்**

விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறை அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

1991 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியில் வெளிவந்தவற்றுள் கிடைக்கப் பெற்ற பூவரசு சஞ்சிகையின் 39 இதழ்களும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காக 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிவந்த கிடைக்கப் பெற்ற பூவரசு சஞ்சிகையின் முப்பத்தொன்பது இதழ்களும் முதல்நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொண்ட தரவுகள் மற்றும் பூவரசு சஞ்சிகை தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளில் இடம்பெறும் குறிப்புக்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்புகள்**

பூவரசு சஞ்சிகை பதினேழு வருட காலமாக புலம்பெயர் மண்ணில் இலக்கியப் பங்களிப்புகளைச் செய்துள்ளது. படைப்பாளர்கள் பெருக வேண்டும் அதன் மூலம் தமிழ் இலக்கியம் வளம் பெற வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயற்பட்டது. படைப்பாக்கங்களை அதிகரிக்கச் செய்வதற்காகவும் தரம் வாய்ந்த ஆக்கங்கள் படைக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளது. பூவரசு வருடாந்த கவிதை, சிறுகதை, கட்டுரை போட்டிகள், பூவரசு சஞ்சிகையின் அட்டை படத்திற்கான கவிதை, சிறுகதை போட்டிகள், படைப்பாளர் சிறுகதை ஒன்றினை ஆரம்பித்து வைக்க அதனைத் தொடர்ந்து முடித்து செல்வது எனப் பல்வேறு போட்டிகளை நடத்தியுள்ளது. மேலும் 1985 தொடக்கம் 1998 வரை வெளிவந்த கையெழுத்துச் சஞ்சிகைகளின் ஆக்கங்களைச் சேகரித்து அதனைத் தொகுத்து சிறப்பிதழாக வெளியிட முயன்றமை, புலம்பெயர் நாட்டில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகளின் பெயர்களை அவை வெளிவந்த நாடுகளின் பெயருடன் பட்டியல்படுத்தியமை என்றவகையில் புலம்பெயர் சஞ்சிகைகளின் ஆவணப்படுத்தலுக்கானப் பங்களிப்புகளை நல்கியுள்ளது.

**பூவரசு கவிதைகள்**

பூவரசு சஞ்சிகையில் எழுதப்பட்ட படைப்பாக்கங்களில் கணிசமானவை கவிதைகளாகும். இக் கவிதைகளைப் பின்வரும் அடிப்படைகளில் நோக்கலாம். பூவரசு சஞ்சிகைக்கென எழுதப்பட்ட கவிதைகள், பூவரசு நிறைவு ஆண்டுக் கவிதைப் போட்டிக்கு எழுதப்பட்ட கவிதைகள், பூவரசு சஞ்சிகையின் அட்டைப்படத்திற்கு எழுதப்பட்ட கவிதைகள், 'பூவரசு நிழலிலே புதுப்பாட்டு' எனும் தொடர் பகுதியில் வெளிவந்த கவிதைகள் என்றவாறு வகைப்படுத்தலாம். இக்கவிதைகள் உள்ளடக்கம் மற்றும் உணர்த்து முறையும் மொழி வெளிப்பாடும் ஆகிய இரு பிரிவுகளாக இங்கு ஆராயப்படுகின்றன.

**கவிதைகளின் உள்ளடக்கம்**

ஈழத்துக் கவிதை வளர்ச்சியினை அடுத்த கட்ட நகர்வினை நோக்கி இட்டுச் செல்பவையாக புலம்பெயர் கவிதைகள் நோக்கப்படுகின்றன. பூவரசில் வெளியான கவிதைகளின் உள்ளடக்கமானது போர்ச்சூழல் ஏற்படுத்திய தாக்கம், புலம்பெயர் வாழ்வின் அவலங்கள், சமூகம் சார்ந்தவை, காதல் என்றவாறு அமைகின்றன.

- **போர்ச்சூழல் ஏற்படுத்திய தாக்கம்**

ஈழத்தில் இடம்பெற்ற முப்பது வருட யுத்த காலப்பகுதியில் வெளிவந்த பூவரசு சஞ்சிகையில் அது சார்ந்த பொருண்மையைக் கொண்ட கவிதைகள் வெளிவருவது தவிர்க்க முடியாததாகும். இக்கவிதைகள் போர்ச்சூழலின் அவலங்கள், போர் முழக்கம், விடுதலை, ஈழத்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தல், போரினால் ஏற்படும் அவலங்களைத் தவிர்ப்பதற்காக சமாதானத்தை வேண்டி நிற்றல் ஆகிய நிலைகளில் எழுதப்பட்டவையாக அமைகின்றன. இதற்கு மண்ணில் எழுதாத வரிகள், நாற்சார் வீடு, சங்கு முழங்குது சங்கு முழங்குது சங்கு முழங்கிடும் செய்தியைக் கேளடா, பிரிவுகள் தடுப்போம், வெண்புறா சிறகடித்தால்… முதலிய கவிதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். 'நாற்சார் வீடு' என்ற கவிதை குண்டு வீச்சுகளால் உடைமைகள் மற்றும் உயிர்கள் இழக்கப்படுகின்ற போர்ச் சூழலின் அவலத்தை வெளிப்படுத்துகிறது. இக்கவிதை நீண்ட அமைப்புடையது. இக்கவிதைகளிலிருந்து சில வரிகள்:

அந்த அலறலே அவரின் இறுதி அலறல்.
கையில் தாங்கிய மனைவியின் உடல்
நிலத்தில் சரிய
அவ்வுடல் மீது தன்னுடல் சரிய
தன்னுயிரையும் விட்டார்.
ஆமாம்
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி
அவர் உழைத்துக் கட்டிய
அந்த நாற்சார் வீடு
தரைமட்டமாகி இருந்தது. (மகேஸ்வரி வரதராஜா,1996,இதழ் 37:35)

போரினால் ஏற்படும் அவலங்களைத் தவிர்ப்பதற்காக சமாதானத்தை வேண்டி நிற்றலை எடுத்துரைக்கிறது 'வெண்புறா சிறகடித்தால்…' என்ற கவிதை. இக்கவிதையிலிருந்து சில வரிகள்.

போருக்கு வைப்போம் முற்றுப்புள்ளி
பூமி தாய்க்கு கொடுப்போம் நேசம் அள்ளி
என்றும் வாழ்வோம் அன்பு சொல்லி
பூமித்தாய்க்கு கண்ணீர் என்றும் இல்லை
வெண்புறா சிறகடிக்கும்
சமாதானம் என்று சொல்லிச் சொல்லி! (குணதீசன்,க.,2003,இதழ் 82).

- **புலம்பெயர் வாழ்வு**

இக்கவிதைகள் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்றவர்களின் நிலையினை எடுத்துரைப்பவையாக அமைகிறன. இப்பிரிவினில் அடங்கும் கவிதைகள் தாங்கள் பிரிந்து வந்த சொந்த நாடு மற்றும் அங்குள்ள சொந்தங்கள் பற்றிய ஏக்கம், அகதி நிலை, தாய் நாட்டிற்காகத் தங்களது ஆடம்பரங்களைக் குறைத்து உதவ வேண்டும் என்ற அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. இதற்கு மனத்துடிப்பு, என் உயிர்த்தோழி, அகதி நிலை மாறும் ஒரு காலம் வராதா?, சிந்தியுங்கள், மனமே முதலிய கவிதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். 'மனத்துடிப்பு' என்ற கவிதை புலம்பெயர்ந்து வந்ததன் பின்னர் சொந்த நாட்டின் குளத்தில் ஆரம்பித்து கிணறு வரையான நிகழ்வுகளை நினைத்து மனத்துடிப்புடன் எழுதப்பட்டக் கவிதையாக விளங்குகிறது. இக்கவிதையிலிருந்து சில வரிகள்:

இத்தனையும் என் தாயகத்து
இனிப்பான செய்திகள்தான். ஆனால்
துடிக்கிறது என் மனமும்….!
தரை விழுந்த மீன்போல - என்
தாய்மண்ணை மிதிப்பதற்கு (வேலணையூர் பொன்னண்ணன்,1995,இதழ் 27:11).

'சிந்தியுங்கள்' என்ற கவிதை புலம்பெயர்ந்து ஆடம்பரமாக வாழ்பவர்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைவதைக் காணலாம். ஆடம்பரமாக வீண் செலவுகள் செய்வதை விடுத்து ஈழத்தில் போரினால் அங்கு வாடும் மக்களுக்கு உதவ வேண்டும் என மனதை உருக்கும் விதமாக அமைகின்றது. இக்கவிதையில் இருந்து சில வரிகள்:

ஐம்பது வயதானவர்க்கும்
அழைப்பின்றிப்
பிறப்பைக் கொண்டாடச்
செல்வதிங்கே
நாகரீகம் என்றால்
அதுவே உங்கள் நட்புக்கு

வரைவிலக்கணம் என்றால்...
ஐயா பசிக்கிறதே...
உதவுங்கள் என்று
அழைக்கின்றார்கள் அங்கே
அது உங்கள்
காதில் விழவில்லையா? (கொற்றையூர் வாசன்,1997,இதழ் 44:07).

- **சமூகம் சார்ந்தவை**

சமூகம் சார்ந்தக் கவிதைகள் பொதுவாக வறுமை, பெண்களின் நிலை, சமூக நலக் கருத்துக்கள், சமூகத்தில் காணப்படும் குறைபாடுகள், சமூகம் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைகள், தைப்பொங்கல்தினம் என்பவற்றை வெளிப்படுத்துவதாகக் கவிதைகள் அமையப் பெற்றுள்ளன. இதற்கு சுமை, மறவாது பாடு, சோதனையும் சாதனையும், ஆண்மகன், பொங்கல் பெருவிழா முதலியக் கவிதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். 'ஆண்மகன்' என்ற கவிதையானது சீதனம் பெறாதவனே உண்மையான ஆண்மகன் என்றும் பெண்கள் சீதனம் வழங்கி உயர்பதவி, உத்தியோகங்களில் இருப்பவர்களை திருமணம் முடிப்பது மகிழ்ச்சியான வாழ்கவாக அமையாது எனவும் குறிப்பிடுகிறது. உதாரணமாக இக்கவிதையிலிருந்து சில வரிகளைக் குறிப்பிடலாம்.

உயர்பதவி உத்தியோக
மாப்பிள்ளைவேணும் என்றோ
உன்னில் காதல்கொள்ளா உடம்பினிலே
உன் வாழ்வை ஒப்படைத்து
உள்பூசல் இருக்தாலும்
வெளியே மதிப்பொன்றே பெரிதென்று
கட்டுக்கட்டாய்க் காசோடு
கடலலைபோல் நீயலைந்து
கடைசியில் விலைத்தகராறில்
கண்ணீரில் நீ அமிழ்ந்து
ஆண்மகன் என்றாலே
காசுகறக்கும் வர்க்கம் என்று
அடியோடு வெறுக்காதே..
ஏன் என்றால் உன் காதலையே
சீதனமாய்க்கொள்வதற்கு
கால் கடுக்கக்காத்து நிற்கும்
நானும் ஓர் ஆண்மகன்தான் (யோகநாதன்,செ.,1993,இதழ் 10:62).

'சிகரட்' என்ற கவிதை சிகரட் புகைப்பதால் வரும் விளைவை நயமாகக் கூறுகிறது. என் நண்பர்களின் வாழ்வைப் பறித்து விடாமல் சற்று விலகி நிற்குமாறு சிகரடிடம் வேண்டுவதாக அமைகிறது. இக்கவிதையிலிருந்து சில வரிகள்.

இதழ்வரையும் தானே
யாசித்தார்கள்...
ஆனால்
நீயோ
இதயம் வரையல்லவா
புகுந்து விடுகிறாய்.
போதை வழியில் -நீ
ஊற்றெடுத்ததனால் பாதிப்போ
இங்கு பலரிடத்தில்.
சிகறட்டே..
எனது நண்பர்களைக்
கொன்றுவிடாமல்
சற்று விலகிக்கொள்வாயா...? (ஆட்டிஸ்டின்,1996,இதழ் 37:79).

- **காதல் கவிதைகள்**

காதல் கவிதை என்னும் போது பெரும்பாலானவர்களின் ஆரம்பக் கவிதைகளாக அமைவது காதல் கவிதைகள் எனலாம். இவ்வாறாக பூவரசு சஞ்சிகையின் ஆரம்பக் கவிதைகளில் கணிசமானவைக் காதல் கவிதைகளாகும். இதற்கு காதல், ஏமாற்றிய அவளுக்கு, தமிழ்க்குருவி, கன்னித்தமிழே ஓர் கடிதம், இதயராகம் முதலிய கவிதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். ‘காதல்’ என்ற கவிதையானது காதலன் தனது காதலை உணர்ந்துக் கொள்வதைக் குறிப்பிடுகிறது. இக்கவிதையிலிருந்து சில வரிகள்:

தத்தளிக்கும் பறவைபோல்
தனித்திருந்த அவள்
என்னை ஏறெடுத்துப்பார்க்கக்கூசி
தன் இருவிழியால் புதுமொழியில்
ஒருகணத்தில் புரியவைத்தாள்
புரிந்துகொண்டேன்
காதலை நான் உணர்ந்து கொண்டேன் (குகன்,1995,இதழ் 27:24).

காதல் தோல்வியின் வலி கொடியது என்பதை ‘ஏமாற்றிய அவளுக்கு’ என்றக் கவிதை வெளிப்படுத்துகிறது. இக்கவிதையிலிருந்து சில வரிகள்:

நீ கைமாறி போனதனால்
உன் நிழலைத் தேடி
நான்
சிறகு உதிர்ந்த பறவையாக
இன்று தனிமை வானில் (பீற்றர்குலம்,1992,இதழ் 07:19).

பூவரசு சஞ்சிகையில் 1991 தொடக்கம் 1998 வரையான காலப்பகுதியில் வெளிந்த கவிதைகளில் போரச்சூழல் ஏற்படுத்தியத் தாக்கம், காதல் ஆகிய இரண்டும் முதன்மைப் பெற்றன. சஞ்சிகைகள் பொதுவாக எழுத்தாளர்களுக்குச் சுதந்திரம் அளிப்பன. இருப்பினும், பூவரசு தன்னுடைய கொளள்கைக்கு மாறான மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமளிக்கும் என்பதை அதன் ஆசிரியர் இந்து மகேஷ் பின்வரும் கவி வரிகள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

எங்கள் கருத்தோடு
இணைந்தவைகள் தம்மோடு
மாற்றுக் கருத்துக்களுக்கும்
வழி விடுதல் நம் கடமை (இந்து மகேஷ்,1992,இதழ் 07).

இதற்குச் சான்றாகக் காதல் கவிதைகளுக்கு முதன்மைக் கொடுத்த பூவரசில் போர்ச்சூழலில் காதல் கவிதைகள் எதற்கு என்ற ஆவேசத்துடன் எழுதப்பட்ட 'வந்திடுமோ மனம் எந்தனுக்கு' என்ற கவிதையின் பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

மஞ்சள் நிலவையும்
மங்கை அழகையும்
வண்ண மலரையும்
வண்டின் செயலையும்
வர்ணித்துப் பாடிட
வந்திடுமோ மனம் எந்தனுக்கு.
…………………………………
தேக சுகம் பற்றி
தேன் சொட்டும் கவிப்புணைய
வந்திடுவோம் மனம் எந்தனுக்கு? (கொன்றையூர் வாசன்,1998,இதழ் 48:50).

1999 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியில் பூவரசு சஞ்சிகையில் வெளிவந்தக் கவிதைகளை ஆராயின் போர்ச் சூழல் ஏற்படுத்தியத் தாக்கம் மற்றும் சமூகம் சார்ந்தக் கவிதைகள் முதலிடம் பெறுகின்றன.

**கவிதைகளின் உணர்த்து முறையும் மொழி வெளிப்பாடும்**

கவிதைகளின் உணர்த்து முறையையும் மொழி வெளிப்பாடினையும் நோக்கின் குறியீடுகள், அணி, படிமம், என்பவற்றின் பயன்பாடு, தொடர்நிலை செய்யுள் முறை, மொழி வெளிப்பாட்டுச் சிறப்பு என்வற்றைக் குறிப்பிடலாம். இதில் படிமம் புதுக்கவிதையின் பண்பு என்பதனால் அதிகமானக் கவிதைகளில் படிமம் இடம் பெற்றுள்ளது. புலம்பெயர் கவிதைகளில் சொந்த மண் பற்றிய ஏக்கம் அதிகம் இடம் பெறுவதைக் காணலாம். சான்றாக 'முற்றத்து வேம்பு' என்ற கவிதை வரிகளைக் குறிப்பிடலாம். இதன் கவிதை அமைப்பும் பின்வருமாறு அமைகிறது.

முப்பத்து நூறு கிளை பரப்பி

முற்றம் கோடிவரை மொத்தமாய்
முழுவதும் சுற்றிவளைத்து
முற்றுகையிட்டாய்
எமை நீ அன்று
இல்லை எம் வீட்டை
அள்ளி நீ முத்தமிடாய் (இராஜகாந்தனின்,ப.,2000,இதழ் 61:54).

இச்சஞ்சிகை தனது கருத்துக்கு மாற்றான கருத்துக்களையும் வெளியிடுவதற்கு அனுமதி வழங்கியமையால் இளம்கவிஞசர்களின் உருவாக்கத்திற்குப் பங்களித்துள்ளது என்றுக் கூறலாம்.

**பூவரசு சிறுகதைகள்**

புலம்பெயர் சிறுகதைகளின் பண்புகளில் குறிப்பிடத்தக்கது யதார்த்த வெளிப்பாடு எனலாம். பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகளும் இப்பண்பினை கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன. சிறுகதைகள் உள்ளடக்கம் மற்றும் உணர்த்து முறையும் மொழி வெளிப்பாடும் ஆகிய இரு பிரிவுகளாக ஆராயப்படுகின்றன.

**சிறுகதைகளின் உள்ளடக்கம்**

பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதைகளின் உள்ளடக்கமானது பிரதானமாகப் போர்ச்சூழல் ஏற்படுத்தியத் தாக்கம், புலம்பெயர் வாழ்வு, சமூகம் சார்ந்தவை என்றவாறு அமைகின்றன.

- **போர்ச்சூழல் ஏற்படுத்தியத் தாக்கம்**

போர்க்காலப் பகுதியில் வெளிவந்த இச்சஞ்சிகையில் அது சார்ந்த பொருண்மையினை உள்ளடக்கமாகக் கொண்டு சிறுகதைகள் வெளிவருவது தவிர்க்க முடியாததாகும். இக்காலப் பகுதியில் மக்களின் உயிரிழப்புக்கள், உடைமைகள் சேதமடைதல், உயிருக்கு உத்தரவாதம் அற்ற நிலை, பெண் தலைமைத்துவ உருவாக்கம் போன்றன போர்ச்சூழல் ஏற்படுத்தியத் தாக்க விளைவுகளாக அமைவதை இச்சிறுகதைகள் மூலம் அறிய முடிகிறது. இதற்கு மனிதாபிமானம் மரணித்தபோது (உண்மை சம்பவம்), பூ ஒன்று வாடுகிறது, பிரிவு, பொசுக்குக போலிகள் முதலிய சிறுகதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாக 'பூ ஒன்று வாடுகிறது' என்ற சிறுகதையில் போர்ச்சூழலில் ஏற்பட்டக் கலவரத்தின் காரணமாகவே சாருமதி கல்யாண வயதில் குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்று நடக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். எடுத்துக்காட்டாக இச்சிறுகதையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

காலாகாலத்தில் திருமணம்செய்து புருஷனோடும் குழந்தைகளோடும் சந்தோசமாக
வாழவேண்டிய பருவத்தில் வாடியமலராய்

குடும்பக்கிற்காக உழைக்கும் தன் மூத்தமகளை எண்ணித் தினமும் கண்ணீர் வடிப்பாள்
பார்வதி அவள் இதைத் தன் கணவரிடமும் சொல்வதுண்டு
(சம்பந்தன்,இ.,1997,இதழ் 48:15).

- **புலம்பெயர் வாழ்வின் நெருக்கடிகள்**

புலம்பெயர் சிறுகதைகளின் சிறப்புப் பண்பான யதார்த்த வெளிப்பாடு அதனை இப்பகுப்பில் அடங்கும் சிறுகதைகளிலும் காணலாம். புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் கலாசாரத்தினை முழுமையாகப் பின்பற்றி நெருக்கடிகள் வருகின்ற பொழுது சொந்த நாட்டின் நிலை அறிந்து உதவ முன்வருதல், புலம்பெயர் நாடுகளில் தங்களின் மொழி, சமயம், கலாசாரம் என்பவற்றை பேணுதல், புலம்பெயர் நாட்டில் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் காரணமாக மன நோய்களுக்காளாகி இறுதியில் தற்கொலைச் செய்துக் கொள்ளல், பண்பாட்டு மோதல், பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக அந்நாடுகளில் காணப்படும் சட்டத் தீர்வுகளின் தன்மை, பெண்களின் துணிவு, முற்போக்கான தீர்மானங்கள் போன்றன இச்சிறுகதைகளின் உள்ளடக்கமாக அமைகின்றன. இதற்குத் தெளிவு, அகத்தில் அரும்பிய ஆருடம், ஆன்மீக கிரகணங்கள், குருடான கவிஞனுக்கு, கறை முதலிய சிறுகதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாக புலம்பெயர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக மன நோய்க்கு ஆளாகின்ற நிலைமைகள் ஏற்படுவதுண்டு. இதற்கு 'அகத்தில் அரும்பிய ஆருடம்' என்ற சிறுகதையைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக இச்சிறுகதையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

நான் வேலைக்குப் போற இடத்திலை எல்லாம் உவங்கள் எனக்கு விசர் எண்டு ரெலிபோன்
அடிச்சுச் சொல்லுறாங்கள்...
நீயாய் எதையோ கற்பனை பண்ணுறாய். ரெலிபோன் அடிச்சுச் சொன்னாப் போலை
நம்புவாங்களே...டேய் சந்திரன்! சும்மா தேவையில்லாததுகளை நினைச்சு உன்னையும்
உன்ரை சொந்தங்களையும் பாழாக்கிப் போடாதை! (1993, இதழ் 39:12).

- **சமூகம் சார்ந்தவை**

சமூகத்தில் உள்ள குறை நிறைகளைக் காரணக் காரிய அடிப்படையில் சுட்டி நிற்பனவாக இப்பிரிவில் அடங்கும் சிறுகதைகள் இடம்பெறுகின்றன. உறவுகளுக்கு இடையிலான நெருக்கம் - பிரிவு, விளிம்பு நிலை மக்களின் வாழ்வு, சீதனம், காதல் என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. இச்சிறுகதைகள் முற்போக்கான சிந்தனைகளை கொண்டவையாகவும் யதார்த்தத்தை வெளிப்படுத்தி நிற்பனவாகவும் அமைகின்றன. இதற்கு வடுக்கள் (உண்மை சம்பவம்), தாலி, சீதனம், புல்லாங்குழல் ஊமையானது முதலிய சிறுகதைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாக பிரகாஷ் பிரியாவிடம் கூறாமல் பிரிந்து செல்கிறான். அவன் திரும்பி வரும்போது அனாதை இல்லம் ஒன்றில் அங்குள்ள பிள்ளைகளுக்கு தாயாக மாறிவிடுகிறாள் பிரியா. பிரகாஷ் திரும்பி வந்து அழைத்தும் என் வாழ்க்கை இனி இந்தக் குழந்தைகளுக்கானது என்றுக் கூறி மறுத்து விடுகிறாள். இவ்விதம்

அமையும் 'புல்லாங்குழல் ஊமையானது' என்ற சிறுகதையிலிருந்து எடுத்துக்காட்டாக பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

இந்தப் பிரியா ஊமையாகிவிட்ட புல்லாங்குழல். இதில் இனி இசையைக் கோர்க்க முடியாது பிரகாஷ். என் வாழ்நாள் எல்லாம் இச்சிறுவர்களுக்குத்தான்!"
பிரியா. இதுவும் ஊமையாகி விட்ட புல்லாங்குழல் தான். இதில் பிரியாவின் பிரியமான இசையைத் தவிர வேறெந்த இசையையும் கேட்க முடியாது.'' (சரோஜினி,என்.,1995,இதழ் 33B:41).

**சிறுகதைகளின் உணர்த்து முறையும் மொழி வெளிப்பாடும்**

சிறுகதைகளின் உணர்த்தும் முறைகளாக நோக்கு நிலை, குறியீடு, பாத்திரப்படைப்பு, கதை ஆரம்பம், கதை முடிவு, சிறுகதை தலைப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். சிறுகதைத் தலைப்பு என்னும் போது கணிதக் குறியீடுகளைப் பயன்படுத்திச் சிறுகதைக்குப் பொருத்தமான முறையில் தலைப்பிட்டு உள்ளதைக் காணலாம். சான்றாக பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

'+ × - = 0'

இதிலை எனக்கு விருப்பமில்லை ஒரு தாளோடு வந்து சகவும் சயவும் போட்டுக் கொண்டிருந்தான் நான் அப்பவே பூச்சியம் போட்டு விட்டேன் (கோசல்யா சொர்ணலிங்கம்,1998,இதழ் 54:16).

மொழிநடை என்னும் போது யாழ்ப்பாணப் பேச்சு வழக்குச் சொற்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. ஆங்கில மற்றும் சிங்கள சொற்கள், சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக மனிதாபிமானம் மரணித்தபோது என்ற சிறுகதையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம் (சிங்களம்).

கெதர கவுத? தொர அரிண்ந, நத்தம் கடனவா!

கோடியா யாஹோ புத்தா (கணபதி கணேசன்,2003,இதழ் 82:64-65).

சான்றாக யாழ்பாணப் பேச்சு வழக்குச் சொற்கள்

உந்த உபத்திரவம் உன்ர குடும்பத்துக்கு மட்டுமல்ல……….. கனக்க அலட்டிக்காதே. இசக்குப் பிசகா என்னவாகிலும் மண்டைக்கு ஆகிடப்போகுது.! (கிறிஸ்ரின்,கி.,1998,இதழ் 53:41)

சிறுகதைகள் யதார்த்தப் பண்பினை பிரதானமாகக் கொண்டமைந்தவை. போர்ச்சூழல் ஏற்படுத்திய தாக்கம், புலம்பெயர் வாழ்வு, சமூகம் சார்ந்தவை எனப் பகுத்து நோக்கப்படினும் நூற்றுக்கு தொண்ணூற்றைந்து சதவீதமான சிறுகதைகள் பெண்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். சிறுகதைகள் எழுதப்படுவதற்குத் தூண்டுதலாகப்

போட்டிகளை அடிக்கடி நடத்துதல். பூவரசில் படைப்பாளர் ஒருவர் சிறுகதையை ஆரம்பித்து அதனை முடிக்குமாறு ஏனையப் படைப்பாளர்கள் மற்றும் வாசகர்களைத் தூண்டுவதன் ஊடாகவும் (உள்ளக்குமுறல்) சிறுகதை படைப்பாளர்களை உருவாக்கும் பங்களிப்பினை செய்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

**கட்டுரைகள்**

கட்டுரை என்னும் போது கருத்துக்களை நேரடியாகவும் சுருக்கமாகவும் அதே நேரம் தெளிவாகவும் கூற முற்படுவதைக் காணலாம். இக்கட்டுரைகள் தனிக்கட்டுரைகள் மற்றும் தொடர்க்கட்டுரைகளாக வெளிவந்துள்ளன. இவை தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பவையாக அமைகின்றன. கட்டுரைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சமூகம் பற்றியக் கட்டுரைகள்
2. புலம்பெயர் வாழ்வு பற்றியக் கட்டுரைகள்
3. இலக்கியக் கட்டுரைகள்
4. அறிவியல் கட்டுரைகள்
5. வரலாறு பற்றியக் கட்டுரைகள்
6. பயணக் கட்டுரைகள்

- **சமூகம் பற்றியக் கட்டுரைகள்**

சமூகம் பற்றியக் கட்டுரைகளில் பண்பாடு மற்றும் கலாசாரம் சார்ந்த விடயங்கள், மனிதன் மறந்து போன மனிதநேய விடயங்கள் மீட்டெடுத்தலுக்கான குரல், சமூகப் பெரியார்களின் வரலாறு மற்றும் ஆன்மீகம் சார்ந்த விடயங்களை எடுத்துக்கூறிச் சமூகத்தை நெறிப்படுத்த விழைதல், சமூகத்தில் பெண்களது நிலை பற்றி யதார்த்த வெளிப்பாட்டுடன் அவர்களது முன்னேற்றத்திற்கான வழிகளையும் சுட்டி நிற்றல் என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டமைகிறது. இதற்கு பண்பாடு – கலாசாரம் - நாகரீகம், மண்ணும் மனிதனும், ஞானபிரகாசர், விசுவாச மனிதனின் தெய்வீக சமத்துவம், பெண் முதலிய கட்டுரைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாகப் பெண்கள் சீதனம், சாதி, மதம், அந்தஸ்து போன்றவைகளால் ஒடுக்கப்படுகிறார்கள். பெண்மையை மென்மை என்பதும், மென்மையென கூறி வர்ணிப்பதும் கெட்டவள் எனக்கூறி ஒதுக்கி வைப்பதும் என்னதான் நியாயம். பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும் எனக் கூறும் ‘பெண்’ என்ற கட்டுரையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

பெண்களின் மறுமலர்ச்சிக்கு வழிகோலுங்கள். இதே சமயம் பெண்களும் அடிமைத்தனங்களுக்கு எதிராக தாங்களும் போராட வேண்டும். மூடநம்பிக்கையிலே மூழ்காது அவைகளை எதிர்த்து வாழ பழகிக் கொள்ள வேண்டும். (ஸ்ரீதாஸ்,1995,இதழ் 25:16).

- **புலம்பெயர் வாழ்வு பற்றியக் கட்டுரைகள்**

புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் மொழி, பண்பாடு சார்ந்த பல நெருக்கடிகளுக்கு உள்ளாகினர். ஆரம்பத்தில் மொழி தெரியாத சூழலில் அதற்கானத் தீர்வாக அமையும் மொழிபெயர்ப்பாளர்கள் மூலமாக அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டமை, புலம்பெயர் நாடுகளில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்கள் தங்களது மொழி, சமயம், கலாசாரம் என்பவற்றை மறந்துச் செயற்பட்டமை, அவ்வாறானவற்றை கண்டிப்பது, மாற்றத்திற்கான வழிகளைக் கூறுவது என்றவாறு கட்டுரைகள் அமைகின்றன. தாய் மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதற்கு 'Ich bin der dolmetscher, ஐரோப்பிய நாடுகளில் எமது குழந்தைகள், உதிர்வுகள், இளைய தலைமுறைகள், எங்கள் தாய் மொழியும் நாங்களும் முதலிய கட்டுரைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். மொழிபெயர்ப்பாளர்களின் அடக்குமுறைகளைப் பற்றிக் கூறும் கட்டுரையின் தலைப்புப் பின்வருமாறு ஜெர்மன் மொழியில் அமைந்துள்ளது. 'Ich bin der dolmetscher' இதன் தமிழ்க் கருத்து 'நான் ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளன்' இக்கட்டுரையிலிருந்து சில வரிகள் பின்வருமாறு அமைகின்றன.

அகதிகள் நேரடியாக ஜேர்மன் அதிகாரிகளாலும் மறைமுகமாக மொழிபெயர்ப்பாளர்களாலும் தவறான முறையில் கையாளப்படுவது (சஞ்சயன்,1997,இதழ் 44:50).

- **இலக்கியக் கட்டுரைகள்**

பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த இலக்கியக் கட்டுரைகள் பண்டைய இலக்கியங்களின் பெருமை, எழுத்தாளர், வாசகர் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு, பழமை இலக்கியங்களின் கருத்துக்களின் உண்மையை அறிய ஆராய்ச்சிகள் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இலக்கியம் சார்ந்த ஆய்வுகள் பற்றியும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இதற்கு இலக்கிய இன்பம் தொடர் கட்டுரை, வள்ளுவம் காட்டும் வாழ்க்கை துணைநலம், தமிழ்பணி, ஹைகூ எனும் சித்திரம் முதலிய கட்டுரைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாக ஹைக்கூ வடிவம் பற்றிக் கூறும் 'ஹைகூ எனும் சித்திரம்' என்றக் கட்டுரையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

ஹைகூ மிகச் சிறந்த கவிதை வடிவம். அது தமிழில் சரியாகப்புரிந்து கொள்ளப்படவில்லை இன்னும், ஒரு நீளமான வரியை மூன்று வரிகளில் மடித்து எழுதுவதே ஹைக்கூ என்பது பலரின் தவறான எண்ணம் (கு.ராமதாஸ்,சி.,2000,இதழ் 62:04).

- **அறிவியல் கட்டுரைகள்**

பூவரசு சஞ்சிகையில் அறிவியல் சார்ந்த விளக்கங்களுடன் கூடியக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இதற்கு சர்ச்சைக்கு உள்ளாகும் சனிவளையங்கள், ஆன்மீக சிந்தனைகள், காலனாகிவரும் கண்ணிவெடிகள் முதலிய கட்டுரைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக்

குறிப்பிடலாம். சான்றாகச் சர்வசித்தனின் 'சர்ச்சைக்கு உள்ளாகும் சனிவளையங்கள்' என்ற கட்டுரையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

இவ்வளையங்கள் யாவும். சூரியக் குடும்பத்தின் தோற்றம் நிகழ்ந்ததாக நம்பப்படும் சுமார் நாலரை பில்லியன் (450 கோடி) ஆண்டுகளுக்கு முன்பே உருவாகி இருக்கவில்லை என்றும், இவை யாவும் இன்றில் இருந்து ஏறத்தாழ நூறுமில்லியன் (10 கோடி) வருடங்களுக்கு முற்பட்டவையாகவே இருத்தல் சாத்தியம் என்றும் வலியுறுத்தும் புதிய கொள்கை ஒன்று உருவாக வழிபிறந்தது (சர்வசித்தன்,1997,இதழ் 44:22).

- **வரலாறு பற்றியக் கட்டுரைகள்**

வரலாறு பற்றியக் கட்டுரைகள் வரலாற்று நிகழ்வுகளை ஆண்டுகள் அடிப்படையில் தொகுத்துக் கூறுதல், விழிப்புணர்விற்காக வரலாற்று நிகழ்வுகளைக் கூறல், தமிழ் ஆண்டு, தமிழ் இலக்கியம், தமிழ் பண்பாட்டு வரலாற்றுத் தொன்மங்கள் முதலியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு அமைகின்றன. இதற்கு 20ம் - நூற்றாண்டு - முக்கிய நிகழ்வுகள், சத்தியத்தின் சுவடுகள், எது தமிழ் ஆண்டு, இங்கே உறங்கும் தமிழ் ஏட்டுச் சுவடிகள், தமிழர் பராமரிக்கத் தவறிய தொன்மை வரலாற்று முகாமை மிக்க கண்ணகி கோயில் முதலிய கட்டுரைகளைச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சான்றாக '20 நூற்றாண்டு - முக்கிய நிகழ்வுகள்' என்றக் கட்டுரையிலிருந்து பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

20ம் நூற்றாண்டு ஆரம்பமானபோது ஐரோப்பா பெரிய ஆயுதத் தொழிற்சாலையாகவே விளங்கியது. இரு பழைய எதிரிகளான பிரிட்டனும் பிரான்சும் பலமடைந்துகொண்டிருந்த ஜேர்மனிக்கு எதிராக இணைந்து செயற்பட்டன (கந்தசாமி,எஸ்.,1996,இதழ் 41:51).

- **பயணக் கட்டுரைகள்**

தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தமான இடங்களைப் பற்றியதானத் தகவல்களாக அமைவதுடன் அன்றையக் காலகட்டத்தில் தமிழ்நாட்டுச் சூழலில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகநிலையினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக 'தமிழ்நாட்டைச் சுற்றினோம்' என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம்.

அங்கு எப்போதுமே காலைநேரப் பூஜைக்கு பக்தர்கள் குறைவு. ஏனெனில் காலையில் சற்றுக்குளிர் என்பதனால் அந்நிலையாம். ஆனால் குளிரப் பிரதேசமொன்றில் இருந்து செல்பவர்களுக்கு அது சாதாரணம். குறிஞ்சிக்குமரனை மனமுருகத் தரிசித்தோம் (வரதராஜா,வீ.ஆர்.,1993,இதழ் 16:08).

**முடிவுரை**

பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானது. பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பன இலக்கியத்தரம் வாய்ந்தவை என்பதோடு

சமூக நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பவையாக அமைகின்றன. தனது கொள்கைக்கு மாற்றான கருத்தாக இருப்பினும் சமூகத்தின் தேவை கருதி அவற்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடதக்கது. அவ்வகையில் போர்க்கால வாழ்வு, புலம்பெயர் வாழ்வு, பெண்களின் முன்னேற்றம், உறவுகள், சமூக முன்னேற்றம் முதலியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட ஆக்கங்களை வெளியிட்டுள்ளமையை குறிப்பிடலாம். குறிப்பாகப் பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள் மூலம் அக்காலச் சமூகத்தின் பல்வேறு நிலைகளும் யதார்த்தமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கட்டுரைகள் சமூகம் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தி நிற்பதுடன் எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளமையைக் காண முடிகிறது. புலம்பெயர் ஆக்கங்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்கான ஆவணப்படுத்தல் முயற்சிகளையும் பூவரசு சஞ்சிகை மேற்கொண்டுள்ளது. பூவரசு சஞ்சிகையானது இலக்கியத்தரம் வாய்ந்த ஆக்கங்களை வெளியிட்டமை, புலம்பெயர் சஞ்சிகைகளின் ஆவணப்படுத்தலுக்கு உதவியமை என்ற வகையில் புலம்பெயர் சஞ்சிகை வரலாற்றில் அதற்கெனத் தனியானதொரு இடம் உண்டு.

இவ்வாய்வு பூவரசு சஞ்சிகையின் காத்திரமான இலக்கியப் பங்களிப்பினை இலக்கியவுலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இலக்கிய வரலாற்றில் பூவரசு சஞ்சிகைக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு சிறு முயற்சியே இவ்வாய்வாக அமைகின்றது. புலம்பெயர் சஞ்சிகை வரலாற்றில் பூவரசு சஞ்சிகையின் இலக்கியப் பங்களிப்பு காத்திரமானதாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் பூவரசு சஞ்சிகையில் வெளிவந்த ஆக்கங்கள் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்தப்படுவதற்கு இவ்வாய்வு வழிக்காட்டியாக அமையும் என்பது குறிப்பிடதக்கது.

**துணைநூற்பட்டியல்**

1. **மூலாதாரம்**

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 06, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 07, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 09, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 10, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 11, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1993, இதழ் 14, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 16, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1995, இதழ் 27, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 28, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1995A, இதழ் 33, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1995B, இதழ் 33, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1995, இதழ் 35, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 36, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1996, இதழ் 37, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 41, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 42, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1997, இதழ் 44, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 48, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1998, இதழ் 49, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1998, இதழ் 50, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1998, இதழ் 51, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 52, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 53, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 54, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1999, இதழ் 55, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 56, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 57, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 58, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 2000, இதழ் 61, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 62, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 63, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 64, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 65, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 66, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 2001, இதழ் 67, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 2002, இதழ் 73, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 1991, இதழ் 75, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 2003, இதழ் 82, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

பூவரசு சஞ்சிகை, 2004, இதழ் 87, இந்துமகேஷ், பூவரசு கலை இலக்கியப் பேரவை: ஜெர்மன்.

**2. துணை ஆதாரங்கள்**

### I. நூல்கள்

- இராமச்சந்திரன்,மா., கிருட்டினமூர்த்தி,சா., தசரதன், ஆ.(பதிப்பாசிரியர்கள்),2005, தமிழ் வளர்ச்சியில் இதழ்கள், சிதம்பரம், சபாநாயக அச்சகம்.

- கிருஷ்ணபிள்ளை விசாகரூபன், புலம்பெயர் கவிதை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.

- குணேஸ்வரன், சு.,2009, அலைவும் உலைவும், யாழ்ப்பாணம், மதுரன் கிராபிக்ஸ் அண்ட் பிரிண்டர்ஸ்.

- இரத்தின வேங்கடேசன், எழில்வசந்தன்,எ., சிதம்பரம்,கு., விசயராகவன்,கோ. (பதிப்பாசிரியர்கள்),2014, புலம்பெயர்ந்த தமிழர் வரலாறும் வாழ்வியலும், சென்னை, ஸ்ரீ சரவணா அச்சகம்.

### II. இணையத்தள முகவரிகள்

- கிரிதரன், வ.ந., 2020, எழுத்தாளர் சி.மகேஸ்வரனின் (இந்து மகேஷின்) ‘இதயம்’ [online]Available at: https://WWW.geotamil.com, [Accessed 18 Dec. 2023].
- குணேஸ்வரன்,சு., புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் இதழியற் செயற்பாடுகள், [online]Available at: https://vanakkamlondon.com, [Accessed 18 Dec. 2023].

# ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்

Ms. Shamshiga Jeevakaran
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*shamshamshi417@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

“ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்” எனும் தலைப்பில் அமையும் இவ் ஆய்வுக் கட்டுரையானது சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் பத்துப்பாட்டுக்குள் உள்ளடங்கும் ஆற்றுப்படை இலக்கியங்களிலே அக்கால மக்களது விருந்தோம்பல் பண்பானது எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதனை ஆராய்வதாக அமைந்துள்ளது. விருந்தோம்பல் என்பது தமிழரின் பண்பாட்டம்சங்களில் முதன்மையானதாகும். இத்தகைய விருந்தோம்பலின் சிறப்பினை தமிழிலே தோன்றிய பல இலக்கியங்கள் பேசுகின்றன. திருக்குறளில் விருந்தோம்பல் எனும் அதிகாரத்தை திருவள்ளுவர் படைத்துள்ளமையை காணமுடிகிறது. இவ்வாறு இலக்கியங்கள் பல விருந்தோம்பலை எடுத்துக்கூறிய போதிலும் பழந்தமிழ் இலக்கியங்கள் எனும் சிறப்புக்குரிய சங்ககால இலக்கியங்களிலே ஆற்றுப்படை இலக்கியங்கள் எவ்வாறு விருந்தோம்பலை சிறப்பித்துள்ளது என்பதை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகிய நான்கு ஆற்றுப்படை நூல்களை முதன்மை நிலைத் தரவாக கொண்டு இவ் ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் ஆய்வு முறையியலாக விவரண ஆய்வுமுறை மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆற்றுப்படை இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படையும் ஒன்றாக காணப்பட்ட போதிலும் அந் நூல் முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருப்பதனால் அதில் விருந்தோம்பல் பற்றிய குறிப்புக்கள் காணப்படாததனால் அந்நூலினை இவ் ஆய்வுக் கட்டுரைக்குப் பயன்படுத்தவில்லை. ஆற்றுப்படை நூல்கள் தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் இடம்பெற்றிருந்தாலும், விருந்தோம்பல் குறித்த தனி ஆய்வுகள் இடம்பெறாமல் இருப்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு ஆய்வு இடைவெளியை நிரப்புவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஆற்றுப்படை, எட்டுத்தொகை பத்துப்பாட்டு, சங்ககாலம், பாணர், விருந்தோம்பல்*

**ஆய்வு அறிமுகம்**

பண்டைய காலம் தொட்டே தமிழர்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியுள்ளமையை பல இலக்கியங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. அந்தவகையில் ''ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்'' எனும் தலைப்பில் அமையும் இவ்வாய்வுக்கட்டுரையானது பத்துப்பாட்டு நூல்களில் உள்ளடங்கியுள்ள ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பற்றி குறிப்பிடப்படும் செய்திகளை எடுத்துக்காட்டுவதை நோக்கமாக கொண்ட ஆய்வாக அமைந்துள்ளது. இவ் ஆய்வு பத்துப்பாட்டில் உள்ளடங்கியுள்ள திருமுருகாற்றுப்படை நீங்கலாக ஏனைய நான்கு ஆற்றுப்படை நூல்களையுமே ஆய்வு வரையறையாக கொண்டுள்ளது.
விருந்தோம்பல் பண்பு குறித்து பல்வேறு இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளை சுருக்கமாக குறிப்பிடுவதுடன் தமிழில் ஆற்றுப்படை நூல்கள் குறித்தும் சுருக்கமாக கூறுகின்றவகையில் இவ்வாய்வு அமைகின்றது.

பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய நான்கு ஆற்றுப்படை நூல்களிலும் உள்ள விருந்தோம்பல் பண்புகளையும் அவற்றின் முறைகளும் விரிவாக பகுத்தறிவாய்முறைக்கு உட்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல் பண்பும் இலக்கியங்களும்**

தமிழர்களின் பழக்கவழக்கங்களில் ஒன்றாக பழங்காலந்தொட்டே விருந்தோம்பல் பண்பு காணப்படுகின்றது. தமது இல்லத்திற்கு வருகின்றவர்களை அன்புடன் உபசரித்து அவர்களது பசியினை போக்கும் வகையில் அவர்களுக்கு அளிக்கப்படும் உணவே விருந்தாகும். அத்தகைய உணவினை அவர்களுக்கு வழங்கி உபசரிக்கும் பண்பினை விருந்தோம்பல் என்று குறிப்பிடலாம். கொடுக்கப்படும் உணவின் சிறப்பை விட அகமகிழ்வுடன் வருவோரை உபசரிப்பதே விருந்தோம்பலின் சிறப்பாக காணப்படுகின்றது.

விருந்தோம்பல் என்பது புதிதாக வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதாகும். இதனை தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பா எடுத்துக்காட்டுகின்றது.

''விருந்தே தானும்
 புதுவது புனைந்த யாப்பின் மேற்றே'' (தொல்.செய்.231)

விருந்தோம்பல் பண்பும் பழந்தமிழரின் விருந்தோம்பும் முறை குறித்தும் பல்வேறு இலக்கியங்கிளில் கூறப்பட்டிருக்கின்றன. சங்ககாலம் தொட்டு இன்று வரை இலக்கியங்களில் விருந்தோம்பல் பற்றிய செய்திகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையை காணலாம். ஐங்குறுநூற்றில் மகளிர் விருந்தோம்பலினை விருப்புடன் செய்தமையை பல பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக பின்வரும் அடிகளை எடுத்துக்காட்டலாம்.

''விளைக வயலே வருக இரவலர்'' (ஐங்.நூ.2)

''நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க'' (ஐங்.நூ.1)

''பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
 விருந்து நனி பெறுதலும் உரியள் மாதோ

இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே'' (ஐங்.நூ.442)

சங்ககாலத்துப் பெண்கள் இரவில் தம் மனைக்கு விருந்தினர் வந்தால் கூட முகம் கோணாது அவர்களை மகிழ்ச்சியாக விருந்துபசாரம் செய்தமையை நற்றிணையின் பாடலடிகளை அவதானிக்கின்ற போது அறிந்து கொள்ளமுடிகின்றது.

''அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்'' (நற்றிணை 142,9 -11)

ஔவையார் புறநானூற்றிலே அதியமானின் விருந்தோம்பல் பண்பினை குறிப்பிடும்போது முதல்நாளில் எவ்வாறு இன்முகத்துடன் விருந்தளித்து உபசரித்தானோ, அதுபோலவே பல நாட்கள் தொடர்ந்து தங்கியிருக்கின்றபோதும் முதல்நாள் போன்றே விருந்துபசாரம் செய்வதாக கூறுகின்றார். இது விருந்து எத்தனை நாள் தொடர்கின்றபோது அதியமானின் விருந்துபசாரத்தில் எவ்விதமாற்றமும் இல்லாது அகமகிழ்வுடன் விருந்தளித்த தன்மையினையே காட்டுகின்றது.

''ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம்
புலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'' (புறம்.101)

இனியவை நாற்பது விருந்தோம்பல் பற்றி குறிப்பிடும் போது யார் இல்லத்து விருந்தோம்பல் சிறந்தது என்பதனை கூறியுள்ளது.

பாலை மிகுதியாக கறக்கும் ஆவுடையான் அளிக்கும் விருந்து மிகவும் இனிது என்பதை பின்வரும் பாடலடி எடுத்துக்காட்டுகின்றது.

''எத்துணையும் ஆற்ற இனிதென்ப பால்படும்
கற்றா உடையான் விருந்து'' (இனி.நா, 39,3 -4)

திருக்குறளில் திருவள்ளுவர் அறத்துப்பாலில் ஒன்பதாவது அதிகாரத்திலே விருந்தோம்பலின் சிறப்பினை கூறியுள்ளார். இல்லற வாழ்வை வாழ்வதே விருந்தினர்க்கு உபகாரம் செய்வதற்கே என்பதனை திருவள்ளுவர் பின்வரும் குறளினூடாக எடுத்துரைக்கின்றார்.

''இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'' (திருக்குறள்.81)

மேற்குறிப்பிட்டவாறு பல இலக்கியங்கள் விருந்தோம்பல் பண்பை பழந்தமிழ் மக்கள் முறையாக செய்து வந்த தகவல்களை எடுத்துரைப்பதை காணமுடிகின்றது. விருந்தோம்பலின் சிறப்பு குறித்து அக இலக்கியங்கள், புற இலக்கியங்கள், அற இலக்கியங்கள் என்பவற்றில் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

**தமிழில் ஆற்றுப்படை இலக்கியங்கள்**

பொதுவாக எந்தவொரு காலகட்டத்து இலக்கியமும் அதன் முந்தைய கால இலக்கியப் பண்புகளையும் சமகால இலக்கியப் பண்புகளையும் உள்வாங்கி வளர்ச்சியடைதல் என்பது இயல்பானதொரு செயற்பாடாகும். அந்தவகையில் சங்க இலக்கியங்கள் பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு பல்வேறு நிலைகளில் ஆதாரமாக விளங்குகின்றன என்பது இயல்பு. அந்தவகையில் ஆற்றுப்படை எனும் துறை இலக்கிய வடிவமாகவே மாறிய தன்மையை காணலாம். அதாவது எட்டுத்தொகை பாடல்களில் பாடாண்திணையில் ஒரு துறையாக இருந்த ஆறறுப்படை பத்துப்பாட்டிலேயே தனி இலக்கியங்களாக வளர்ந்தது.

சங்க கால மக்களது வாழ்வு அகத்திணை, புறத்திணை என்று இருவகை ஒழுக்கங்களாக பகுக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் ஒவ்வொன்றுக்கும் ஏழு திணைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் பாடாண் திணை மட்டுமே மரத்தால் பெயர் பெறவில்லை. பாடாண்திணை ஒருவனை புகழ்ந்து பாடுவது. அறிவு, ஆற்றல், தன்னலம் இல்லாத அருள் ஆகிய நல்ல இயல்புகள் அனைத்தும் கொண்டவன் தான் மனிதருள் உயர்ந்த தலைமகன் ஆவான். ஒருவனிடம் இருக்கும் இவற்றை ஆராய்ந்து பாராட்டிப் புகழ்வது அவனை மேலும் உயர்த்தும். எனவே பண்புகளின் உயர்வை பாடும் பாடாண் திணையே மிக உயர்ந்தது. பாடாண்திணை பல துறைகளைக் கொண்டது. அவற்றுள் ஆற்றுப்படை என்பது ஒரு துறை.

ஆற்றுப்படை என்பது ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லானது வழிப்படுத்தல், வழியிற் செல்லுதல் என்ற பொருளைக் குறிப்பதாக நச்சினார்க்கினியர் கூறுகிறார். “ஆற்றுப்படை என்ற ஓர் இலக்கிய மரபினை நாம் வேறு எம்மொழியிலும் காண இயலாது. அது தமிழுக்கே தனிச்சிறப்பாக அமைந்ததாகும்.” என்று சி.பாலசுப்பிரமணியம் கூறுவர். சுருங்கக் கூறின் புரவலன் பெருமையை இரவலன் பாடினான். இரவலர்கள் அனைவரும் இசை வல்லுநர்கள். இவர்களே ஆற்றுப்படை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு காரணமானவர்கள். பழுமரம் தேடும் பறவையினராய் எங்கோ ஒரு மன்னனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடிய இரவலர்கள் தாம் பரிசில் பெற்ற வரலாற்றின் வாய்மொழி வடிவமே ஆற்றுப்படை எனலாம்.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயற்றல் என்பதன்படி தொல்காப்பியம் முதல் பாட்டியல் நூல்கள் வரை ஆற்றுப்படைக்கு இலக்கணம் வகுத்துள்ளமையை காணலாம். இவ் இலக்கணம் வகுத்த முறையும் ஆற்றுப்படை இலக்கியத்தின் வளர்ச்சிப் போக்கினை காட்டும்.

தொல்காப்பியர் கூற்றின்படி ஆற்றுப்படை என்பது வறுமைச் சூழலில் உள்ள கலைஞர்களான கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றோரை வளம் பெற்ற மற்றொரு கலைஞர் தான் பெற்றது போன்றே வளமும் வாழ்வும் பெறும் வகையில் வள்ளல் ஒருவரிடம் செல்வதற்குத் துணை புரிவதே ஆகும். ஆற்றுப்படை இலக்கியம் தொல்காப்பியர் காலத்தில்

கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என நான்காக இருந்தது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன ்ன பக்கமும்" (தொ.புற.36)

சங்க இலக்கியத்தில் புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படைத்துறை அமைந்த சிறு சிறு பாடல்கள் இருப்பதை காணலாம். புறநானூற்றில் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படை என்பனவும் பதிற்றுப்பத்தில் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை என்னும் வகைகளில் ஆற்றுப்படைப் பகுதிகள் காணப்பட்டன. இதிலிருந்து தொல்காப்பியர் காலத்தில் நான்காக இருந்த ஆற்றுப்படை வகைகள் சங்ககாலத்தில் ஐந்தாக வளர்ச்சி அடைந்ததை காணலாம்.

புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படைத்துறை தனித்துறையாக அமையாது புறத்திணைக்குள் அமைந்திருந்தன. பின் தனியானதொரு இலக்கியவடிவமாகவே மாறியுள்ளதை காணமுடிகின்றது. இதனை பத்துபாட்டில் பாதி எனும் அளவிற்கு ஆற்றுப்படை இலக்கியங்கள் உருவானமை அதன் வளர்ச்சியை காட்டுகிறது. இரவலர்கள் கையிலிருந்த ஆற்றுப்படை இலக்கியம் புலவர்கள் கையில் வந்தபோது பல மாற்றங்களை அடைந்து பத்துப்பாட்டில் காணப்படுகிறது. இந்த வகையில் பாவகை மாற்றத்தையும் கூறலாம். ஆசிரியப்பாவில் ஆற்றுப்படை இலக்கியங்கள் அமைந்ததை காணலாம். பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியமான கலம்பகத்தில் ஆற்றுப்படை 18 உறுப்புக்களில் ஒன்றாக விளங்குவதை காணலாம்
பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) ஆகிய ஐந்து ஆற்றுப்படை நூல்கள் காணப்படுகின்றன.

**பொருநராற்றுப்படையில் விருந்தோம்பல்**

பத்துப்பாட்டின் இரண்டாவது பாட்டாகத் திகழ்வது பொருநராற்றுப்படை ஆகும். இங்கு பொருநரை ஆற்றுப்படுத்தியமையால் இது பொருநராற்றுப்படை எனப்பட்டது. இப்பாடல் கரிகாற்பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் பாடியது ஆகும். இவ் ஆற்றுப்படை நூலின் நோக்கம் பொருநன் வாயிலாக கரிகாற் பெருவளத்தானை புகழ்ந்துரைத்து அவனிடம் சென்று பொருள் பெறுமாறு ஆற்றுப்படுத்துவதாக காணப்பட்டாலும் வந்தோரை உபசரிக்கும் விருந்தோம்பல் பண்பும் ஆங்காங்கே கூறப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

மன்னன் வருவோரை விருந்துபசாரம் செய்கின்றான். நல்ல நகைகளை அணிந்த மகளிர், இனிமை தரும் புன்சிரிப்புடன் விளங்குகின்ற பெண்கள் ஒளிருகின்ற பொற்கிண்ணத்திலே பல தடைவ மதுவை நிரம்ப ஊற்றிக் கொடுக்கிறார்கள். அங்கு சென்றோர் அவர்கள் வழியில்

நடந்த வருத்தம் தீர அம் மதுவினை உண்கின்றனர். பண்டைய காலத்தில் மதுவினை விருந்தினருக்கு கொடுத்து உபசரிக்கும் பழக்கம் காணப்பட்டதை பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.

“இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறைய, பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர உண்டு பேரஞர் போக்கி
செருக்கொடு நின்ற காலை” (பொ.ஆ, 85 - 89)

கரிகாற்பெருளத்தான் மன்னனுடைய உபசரிக்கும் முறை கூறப்பட்டிருக்குமாற்றினை பார்த்தால் அவன் தன்னுடைய நண்பரிடம் உறவாடுவது போல் வந்த இரவலனோடு உறவுகொள்கின்றான். அவன் கூறாதே அவனது நிலையினை அறிந்து அவனுக்கு தேவையானவற்றை செய்கின்றமையை காணலாம். மேலும் செம்மறியாட்டினுடைய வெந்த இறைச்சியையும் பரிய தசைத் துண்டத்தையும் அவர்க்ள உண்டு வெறுக்குமளவு உணவாக கொடுத்தும் இனிய சுவையான தின்பண்டங்களையும் உண்பதற்காக கொடுத்து உபசரிக்கின்றமையை காணலாம். அத்தோடு சோற்றையும் பொரிக்கப்பட்ட பொரிக்கறிகளையும் உடனிருந்து உண்ணவைக்கும் விருந்தோம்பல் பண்புடையவனாக கரிகாற்பெருவளத்தான் காணப்படுவதாய் கூறப்படுகிறது.

“மகிழ்ப்பதம் பல்நாள் கழிப்பி, ஒருநாள்
‘அவிழ்ப்பதம் கொள்க’ என்றுஇரப்ப, முகிழ்த்தகை
முரவை போகிய முரியா அரிசி
விரல்என நிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்
பரல்வறைக் கருணை, காடியின் மிதப்ப
அயின்ற காலை, பயின்றுஇனிது இருந்து
கொல்லை உழுகொழு ஏய்ப்ப, பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி
உயிர்ப்பிடம் பெறாஅது, ஊண்முனிந்து” (பொ.ஆ, 111- 119)

எனவே இப் பொருநராற்றுப்படையில் மது, மாமிசம், மரக்கறி உணவுகள் என்பன வருவோருக்கு கொடுக்கின்ற தன்மையை காணமுடிகிறது.

**சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல்**

சிறுபாணாற்றுப்படை 269 அடிகளால் ஆன பாட்டு. பாட்டு என்றும், யாழ் என்றும், இசை என்றும் பொருள்படும் பண் என்னும் சொல்லின் அடிப்படையில் பிறந்தது தான் பாண் என்ற சொல். இசைத்தமிழை போற்றி வளர்த்தவர்கள் பாணர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பல வகைப்படுவர். யாழ்ப்பாணர் சிறுபாணர், பெரும்பாணர் என இருவகைப்படுவர். சிறிய யாழை இசைத்துப் பாடுவோர் 'சிறுபாணர்' என்றும், பெரிய யாழை இசைத்துப் பாடுவோர் 'பெரும்பாணர்' அழைக்கப்பட்டனர்.

(மோகன்.இரா,2004:134)

சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். இப்பாடல் ஒய்மா நாட்டு நல்லியக் கோடனிடம் பரிசில் பெற்று மீளும் சிறுபாணன் ஒருவன் வழியில் காணும் வறுமையால் வாடும் பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தும் முறையில் அமைந்துள்ளது. ஆற்றுப்படுத்தலின் ஊடாக நல்லியக் கோடனின் கொடைச்சிறப்பு, புகழ் என்பன பிரதானமாக கூறப்பட்டிருந்தாலும் இப்பாடலில் விருந்தோம்பும் பண்பும் கூறப்பட்டிருப்பதை காணலாம்.

எயினர் குடியிருப்புக்களில் எயினர்களது விருந்தோம்பல் பண்பு காட்டப்பட்டுள்ளது. முல்லை நிலத்தைச் சேர்ந்த வேலூரில் வெப்பம் மிக்க குடில்ககளில் வாழும் எயினர் காணப்படுகின்றனர். இது முல்லை நிலம் தன் இயல்பை இழந்து பாலை நிலமாக மாறியுள்ளது. பாலையில் வாழும் மக்களை எயினர் என்று அழைப்பர். அம்மக்கள் சமைத்த இனிய புளிங்கறி இட்ட சோற்றினை மானினது சூட்டிறைச்சியோடு வருபவர்களின் பசி தீருமாறு தந்து உபசரிப்பதை காணலாம்.

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

தேமா மேனிச் சில்வளை ஆயமொடு

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்" (சிறு.ஆ, 175 -177)

முல்லை நிலமான வேலூரில் வாழும் எயினர்களது விருந்துபசாரப்பண்பு கூறப்பட்டது போன்றே மருத நிலத்தைச் சேர்ந்த ஆமூரில் உள்ள உழவர்களது விருந்துபசாரப்பண்பு கூறப்பட்டிருப்பதை காணலாம்.

ஆமூரிலே உள்ள உழவர்கள் வீட்டில் குற்றப்பட்ட சிறந்த அரிசியினாலான கட்டியான சோற்றினை நண்டினது கலவையோடு அங்கு செல்வோருக்கு உண்ணத்தருவார்கள் என்பதை பின்வரும் சிறுபாணாற்றுப்படை பாடலடிகள் காட்டுகின்றன.

"அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையோடு பெறுவிர்" (சிறு.ஆ,194-195)

அடுத்து நல்லியக்கோடனை சந்திக்கும் பாணருக்கு அவன் அளிக்கும் விருந்துபசாரமானது அவர்கள் உடுத்திருக்கும் கந்தல் ஆடையினை நீக்கி சிறந்த ஆடையினை அளித்து பின் வீமன் அருளிய மடைநூலின் விதி தப்பாதவாறு சமைத்த உணவினை பொன்னாலான பாத்திரத்திலே பரிமாறுவதாய் காணப்படுகின்றது.

''பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்

பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்

வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த

இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து

விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி,

ஆனா விருப்பின், தான்நின்று ஊட்டி'' (சிறு.ஆ, 240 -245)

எனவே, சிறுபாணாற்றுப்படையில் எயினர்களதும் உழவர்களதும் நல்லியக்கோடனதும் விருந்தோம்பல் முறைகள் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் அமைந்திருப்பதை காணமுடிகின்றது. இங்கு எயினர்களது விருந்தோம்பலை குறிப்பிட்டிருப்பது பழங்கால மக்களது விருந்தோம்பலின் உயர்வை காட்டுகின்றது என்றே கூறலாம். ஏனெனில் பாலை நிலம் மிகவும் வளம் குன்றியது அங்கு வாழ்வோரே வருவோரை நன்கு உபசரிக்கும் தன்மையானவர்களாக காணப்படுவது தனிச்சிறப்பு என்றே கூறலாம். வேலூர் வளமிக்க முல்லை நிலத்தைச் சேர்ந்த இடம். ஆனால் பாடலில் வேலூரில் உள்ள எயினர்களது விருந்தோம்பல் பண்பு கூறப்பட்டிருப்பது அக்கால மக்கள் விருந்தோம்பலில் எத்தகைய சிறப்பினை பெற்றிருந்தனர் என்பதை காட்டுவதாகவே காணப்படுகின்றது.

**பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல்**

பத்துப் பாட்டுள் நான்காவதாக இடம்பெற்றிருப்பது பெரும்பாணாற்றுப்படை ஆகும். கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் தொண்டைமான் இளந்திரையனை புகழ்ந்து பாடப்பட்ட நூலாகும். இப்பாடல் தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்றுச் சென்ற பெரும்பாணன் ஒருவன் வழியில் வறுமையால் வாடும் வேறொரு பாணனையும் அவனது சுற்றத்தாரையும் கண்டு அவர்களை இளந்திரையனிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் தொண்டைமான் இளந்திரையனின் கொடை அவனது குடிகளின் சிறப்பு பேசப்படுவது போலவே அங்கே வாழும் எயினர்களும் ஆடவர்களும் உழவர்களும் வலைஞர்களும் பார்ப்பனரும் விருந்தோம்பலில் எத்தகைய சிறப்புடையவர்கள் என்பதையும் காட்டப்பட்டுள்ளன.

எயிற்றியரது விருந்தோம்பல் தன்மையானது அவர்கள் எறும்புப் புற்றைப் பாரையாற் குத்தி அங்கே எறும்புகள் சேர்த்து வைத்த புல்லரிசியை கொண்டுவந்து சமைத்து அங்கே போகும் பாணர்களின் பசி தீருமாறு இறைவனுக்கு கொடுப்பது போல் கருவாட்டோடு சேர்த்து தேக்கிலையில் வைத்து தருவார்கள் என்று கூறப்படுகிறது.

“தெய்வ மடையின் தேக்கிலைக் குவைஇ, நும்

பைதீர் கடும்பொடு பதம்மிகப் பெறுகுவிர்’’ (பெரு.ஆ,104-105)

அங்குள்ள கோவலர் குடியிருப்புக்களில் வருவோரை எவ்வாறு உபசரிக்கின்றனர் என்று பார்த்தால் நண்டின் பார்ப்பை ஒத்த பசிய தினையால் ஆக்கிய சோற்றைப் பாலுடன் கொடுக்கின்றமையை பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

“இருங்கழளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன

பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்’’ (பெரு.ஆ,167 -168)

முல்லை நிலத்திலே உழுது உண்பவர்களது ஊர்களை அடைந்தால் அங்கே உள்ள வீடுகளில் வாழ்வோர் வரகரிசிச் சோற்றை அவரை விதையின் பருப்புடன் சேர்த்து சமைத்த பருப்புச் சோற்றினை வருவோர்க்கு உணவாக அளிப்பதை காணலாம்.

“பருவ வானத்துப் பாமழை கடுப்பக்

கருவை வேய்ந்த, கவின்குடிச் சீறூர்

நெடுங்குரல் பூளைப் பூவின் அன்ன

குறுந்தாள் வரகின் குறள்அவிழ்ச் சொன்றி

புகர்இணர் வேங்கை வீகண் டன்ன,

ஆவரை வான்புழுக்கு அட்டி பயில்வுற்று

இன்சுவை மூரல் பெறுகுவீர்’’ (பெ.ஆ, 190 - 196)

மருதநிலத்தை அடைந்தால் அவ்வூர்களில் அங்கு செல்வோரின் பசி தீருமாறு பசி, வறுமை என்பதையே அறியாத குடியிருப்புக்களில் வாழும் மக்கள் தம் உழைப்பால் பெற்ற வெண்மையான நெல்லரிசிச் சோற்றையும் அவர்கள் வீடுகளில் வாழும் கோழியை சமைத்து அப்பொரியலுடன் தருவர்.

“தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை

முல்லல் பேர்ஊர் மடியின், மடியா

வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி

மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்’’ (பெரு.ஆ,253 - 256)

இங்கே வருவோரை சரியாக உபசரிக்க அவர்கள் தாம் வீடுகிளில் வளர்த்த கோழியையே சமைத்து கொடுத்து உபசரிக்கின்றமை உழவர்களது விருந்தோம்பலின் சிறப்பினையே எடுத்துக்காட்டுகின்றது.

“உழவரின் விருந்தோம்பலைச் சிறப்பாக எடுத்துரைத்தார் ஆசிரியர். உழவர் தம்பால் வந்த விருந்தினரைச் சிறப்பாக ஓம்ப வேண்டும் என்று கருதும் பொழுதுதான் மனைக்கண் வாழும் கோழியைச் சமைப்பாராம். எனவே, அவரிடம் அப்பாணர்களைப் பெரிதும் ஆர்வத்தோடு ஓம்பும் தன்மையை, ‘மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்’ என்பதனால் பெற வைத்தார் ஆசிரியர். கோழியின் பெண்பாற் பெயராக அளகு எனும் சொல் வழங்கப்பட்டது என்பதனை

“கோழி கூகை ஆயிரண்டு அல்லவை

சூழும் காலை அளக்கெனல் அமையா” (தொல்.மரபியல்.நூ.55) என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம்” (மோகன்.இரா,274)

வலைஞர் குடிகளை சென்றடைந்தால் அங்கே குற்றாத கொழியல் அரிசியை நல்ல களியாகத் துழாவி அட்ட கூழை மலர்ந்த வாயையுடைய தட்டுப்பிழாவில் இட்டு உலரும்படி செய்து நல்ல நெல் முளையை இடித்து அதனை அதிலே கலந்து அதனை இரண்டு பகலும் இரண்டு இரவும் கழித்து வலிய வாயினையுடைய சாடியின் கண்ணேயிட்டு வெந்நீரில் வேகவைத்து நெய்யரியாலே வடிகட்டி விரலாலே அலைத்துப் பிழியப்பட்ட நறிய கள்ளைப் பச்சைமீன் சூட்டோடு வருவோருக்கு வழங்கி உபசரிப்பர்.

“அவையா அரிசி அம்களித் துழவை

மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றி

பாம்புஉறை புற்றின் குரும்பி ஏய்க்கும்

பூம்புற நல் அடை அளைஇ, தேம்பட

எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி

வல்வாய்ச் சாடியின் வழைச்சுஅற விளைந்த

வெந்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி

தண் மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர் (பெரு.ஆ, 275 - 282)

அந்தணர்களது வீடுகளில் தங்கினால் அங்கே பறவைப் பெயருடைய நெற்சோற்றையும் சிவப்பு நிறப்பசுவில் இருந்து எடுக்கப்பட்ட மோரிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெயில் வெந்த மிளகுப் பொடியும் கறிவேப்பிலையும் கலந்து அட்ட மாதுளங்காய்ப் பொரியலையும் மாங்காய் ஊறுகாயுடனும் சேர்த்து உணவாக தந்து உபசரிப்பார்.

“……….. பறவைப் பெயர்படு வத்தம்

சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து

உருப்புற பசுங்காய்ப் போழோடு கறிகலந்து

கஞ்சக நறுமுறி அளைஇ பைந்துணர்

நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த

தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்'' (பெரு.ஆ, 305 - 310)

பட்டினத்து மக்கள் தங்களிடம் வருவோரை ஆண் பன்றியின் இறைச்சியையும் கள்ளினையும் இல்லை என்று சொல்லாது கொடுத்து உபசரிப்பதை பின்வரும் பாடலடிகள் காட்டுகின்றன.

"…………. ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்

கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவீர்'' (பெரு.ஆ, 344 - 345)

தோப்புகளின் நடுவே உள்ள மனைகளில் பலாப்பழமும், இளநீரும், வாழைப்பழங்களும் நுங்கையும் பண்டங்களையும் தருவார்கள். அதை வெறுக்கும் அளவு உண்டபின் வள்ளிக்கிழங்குகளை உண்ணத் தந்து வருவோரின் பசி தீரும் அளவு அவர்களை உபசரிப்பதை காணலாம்.

"தாழ்கோட் பலவின் சூழகளைப் பெரும்பழம்

வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்

கவைமுலை இரும்பிடிக் கவுள்மருப்பு ஏய்க்கும்

குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்

திரள்அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்

தீம்பல் தாரம் முனையின் சேம்பின்

முளைப்புற முதிர்கிழங்கு ஆர்குவிர்'' (பெரு.ஆ, 356 - 362)

எனவே பெரும்பாணாற்றுப்படையில் ஒவ்வொரு நில மக்களும் அவர்களது வாழ்க்கை முறைக்கேற்ற உணவினை உண்ணும் பழக்கத்தினை கொண்டிருப்பதனையும் தம்மிடம் வருவோர்க்கு இல்லை என்று கூறாது தமக்காக சமைத்த உணவினை கூட வழங்கி உபசரிக்கின்ற பண்பினை அக்கால மக்களிடம் இருந்துள்ளமையை இவ் இலக்கியம் தெளிவுபடுத்துகின்றது.

**மலைபடுகடாமில் விருந்தோம்பல்**

மலைபடுகடாமே பத்துப்பாட்டின் இறுதிப்பாட்டாகும். இது 583 அடிகளைக் கொண்டது. இந்நூல் மலையிலே தோன்றும் ஓசைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. மக்கள் வாழுகின்ற மலையிலே பலவகையான ஓசைகள் காணப்படும் அவற்றுள் சிறப்பாக இருபது வகையான ஓசைகள் பற்றி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. இந் நூலின் ஆசிரியர் கௌசிகனாராவார். இப்பாட்டின் தலைவன் நன்னன். இவன் வேளிர் குலத்தலைவன். இவன் சிறந்த வீரன். கோடை வள்ளல். விருந்தினர்க்கும் இரவலர்க்கும் வேண்டுவன கொடுக்கும் இயல்புடையவன்.

இப்பாட்டானது ஒரு கூத்தன் நன்னனிடம் போய்ப் பரிசில் பெற்று வருகின்றான். அவன் வரும் வழியிலே பரிசு கொடுப்போரை தேடிச் செல்லும் மற்றொரு கூத்தனை காண்கின்றான். அவனையும் அவனது சுற்றத்தினரையும் கண்டு தான் பெற்ற பரிசில்களை கூறி நன்னனிடம் செல்லும் வழியினை காட்டுகின்றான். அவ் வழியின் சிறப்பியல்புகள் பலவற்றை கூறும் அவன் அவ் வழிகளில் உள்ள மக்களது விருந்தோம்பல் பண்பினையும் இப்பாடலில் வலியுறுத்துவதை காணலாம்.

மலைபடுகடாமில் நன்னனைப் பார்க்கச் செல்லும் வழியிலுள்ள சிற்றூர்களில் நிகழும் விருந்து பற்றி பார்த்தோமானால் அங்குள்ள மக்கள் அங்கு செல்வோரை பலநாள் பழகிய உறவினர்கள் போல் வரவேற்று விருந்துபசாரம் செய்வதை காணலாம். அங்கு நடைபெறும் விருந்து நெய்யில் பொரித்து வெந்த தசைகளையும், தினையரிசிச் சோறையும் இனிய மொழிகளை கூறி வருவோரை உபசரிக்கின்ற தன்மை உடையதாக காட்டப்படுகிறது.

‘‘பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்’’ (ம.க,168 -169)

இங்கு வாழ்ந்த மலைவாழ் மக்களின் இல்லங்களில் நன்னனை சந்திக்க வரும் இரவலர்கள் கேளாமலே உள்நுழைந்து அவர்களுடன் உறவாடுகின்ற தன்மையும் அவர்களை அவ் ஊர்களில் வாழும் மக்கள் விருந்துபசாரம் செய்வதையும் காணலாம்.

கோவலர் குடியிருப்புக்களில் நடைபெறும் விருந்தோம்பலை பார்த்தோமானால் அங்கு வாழும் இடையர்கள் தமக்கென்று சமைத்த பாலும் பாற்சோறையும் அங்கு செல்வோருக்கு கொடுத்து உபசரிப்பதை காணலாம்.

‘‘பல்யாட்டு இனிநிரை எல்லினிர் புகினே

பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்’’ (ம.க,416 - 417)

உழவர்கள் கூத்தர்களுக்கு வலையர்கள் வழங்கிய மீனுக்கும் கள்ளுக்கும் விலையாக தம்முடைய நெல்லினை கொடுப்பர். அத்துடன் நன்னனுக்கு உணவாக அமைகின்ற உணவு என வியக்கும்படியான முள்ளை நீக்கி ஆக்கிய கொழுப்பினால் வெள்ளை நிறத்தையுடைய தசைத்துண்டுகள் விராவிய வெள்ளிய சோற்றை அங்கு வரும் கூத்தரது சுற்றத்தாருக்கு வழங்கி உபசரிப்பதாக கூறப்படுகிறது.

‘‘முள் அரித்து இயற்றிய வெள் அரி வெண் சோறு’’ (ம.க, 465)

குறமகளது விருந்துபசாரப்பண்பினை பார்க்கின்றபொழுது வருபவர்களை தேடிச்சென்று அவர்களுக்கு தேவையானவற்றை வழங்கி உபசரிக்கும் பண்பானது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

‘‘குறமகள் தான் சமைத்த உணவினை வழியால் செல்வோருக்கு தம் பிள்ளைகளை அனுப்பி உறவு முறை கூறி வழங்கியமையை மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது. (மலை.182 - 185) புரவலர்களைத் தேடி காட்டுவழியாகச் செல்வோர் வழி தடுமாறி நிற்கின்ற வேளையில்

அத்தகையோருக்கு உதவுகின்றவர்களாகக் குறவர்கள் இருந்தனர். கூத்தர் பிறிதொரு கூத்தரை ஆற்றுப்படுத்துகின்ற வேளையில் குறிப்பிடும் செய்யுட் பகுதியினூடாக இக்குணவியல்பு வெளிப்பட்டு நிற்கிறது. (மலை.278 - 286) இதன் மூலம் வழி தடுமாறி நிற்போரைக் கண்டதும் தாமதமின்றி ஓடிவந்து பழங்களைக் கொடுத்து பசியைப்போக்கித் தாமே முன்சென்று வழியைக் காட்டி அனுப்பிவைக்கின்ற உயர்குணமுடையவர்களாக குறமக்கள் விளங்கியுள்ளமை தெரியவருகின்றது.'' (த.மேகராசா,2020:167)

எனவே மலைபடுகடாமில் கூறப்பட்டுள்ள விருந்து உபசாரங்களாக நன்னனை பார்க்கச் செல்லும் ஊரின் வழியிலுள்ள சிற்றூர்கள், கோவலரது குடியிருப்புக்கள், மருத நிலத்து உழவர்கள் என்போரது விருந்துபசார முறைகள் கூறப்பட்டிருப்பதை காணலாம். அவ் அவ் மக்கள் தங்களது வாழ்க்கை முறைக்கேற்றவாறான உணவுப் பொருட்களை வருவோர்க்கு அளித்து அவர்களை இன்முகத்தோடு வரவேற்கும் பண்பினை மலைபடுகடாமில் கூறப்பட்டிருக்கின்றது.

**முடிவுரை**

விருந்தோம்பல் என்பது பழந்தமிழ் காலந்தொட்டே தமிழர் பண்பாட்டில் காணப்பட்டு வருவதை பழந்தமிழ் இலக்கியங்கள் தொட்டு நாம் அறிந்துகொள்ளமுடிகின்றது. ''ஆற்றுப்படை இலக்கியங்களில் விருந்தோம்பல்'' எனும் இவ் ஆய்வுக்கட்டுரையானது சங்ககாலத்திலே தோற்றம் பெற்ற ஆற்றுப்படை நூல்களை ஆதாரமாக கொண்டு அவ் இலக்கியங்களிலே விருந்தோம்பல் பண்பாடு குறித்து ஆராய்ந்துள்ளது.

ஆற்றுப்படை இலக்கியங்கள் பிரதானமாக பரிசில் பெற்ற ஒருவன் பரிசில் பெறாத வறுமையில் வாடும் ஒருவனை மன்னனிடம் சென்று பரிசில் பெறுமாறு ஆற்றுப்படுத்துவதாகவே அமைந்திருக்கும். அத்தகைய இலக்கியத்தில் அம்மன்னின் கொடைச்சிறப்பு பேசப்படும். எனினும் அவனை சந்திக்க செல்லும் வழிகளில் வாழும் மக்களது விருந்தோம்பல் பண்பு எவ்வாறு காணப்பட்டுள்ளது என்பதை இவ் ஆய்வுக் கட்டுரை விவரிக்கின்றது.

ஒவ்வொரு நிலங்களில் வாழும் மக்களும் அவரவர் நிலங்களுக்கேற்ற வாழ்க்கை முறையினை கொண்டிருந்தனர். அவர்களது உணவுமுறைகளும் அவர்களது வாழ்வியலுடன் நெருங்கியே காணப்பட்டிருந்தது. அவ்வாறு தாம் வைத்துள்ள உணவுகளை தாம் முன்பே அறியாத அவ்விடத்திற்கு வருவோருக்கு உறவினர்களைப்போன்று இன்முகத்துடன் வரவேற்று அவர்கள் பசியினை மறக்குமளவு உணவினை வழங்குகின்ற தன்மையினை ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நான்கு ஆற்றுப்படை நூல்களிலுமே காணமுடிகின்றது.

**உசாத்துணை**

1. மோகன், இரா. (2004). பத்துப்பாட்டு முதலாம் பகுதி - மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.
2. மோகன், இரா. (2004). பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி - மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.

3. விசுவநாதன், அ. (2007). நற்றிணை - மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. விசுவநாதன், அ. (2007). புறநானூறு - மூலமும் உரையும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. மேகராசா, த. (2020). வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள் ஆய்வு மாநாடு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், தமிழ்த்துறை

# தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு

Ms. Balarathnam Saranya
Department Of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
balarathnamsaranya2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளில் சிறுகதைகளுக்கு தனியானதொரு இடமுண்டு. ‘தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புகள் - ஓர் ஆய்வு’ எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு அவை பிரிதிபலிக்கும் ஒடுக்கப்பட்ட மலையக மக்களின் வாழ்வியலை ஆராய்ந்துள்ளது. ஈழத்து மலையக இலக்கிய வரலாற்றில் தெளிவத்தை ஜோசப்பும் குறிப்பிடத்தக்கவர். இவரது சிறுகதைகளை மையமாக வைத்து பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. எனினும் அவை மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை ஆழமாகச் சித்திரிக்கவில்லை. அந்த ஆய்வு இடைவெளியை மையப்படுத்தியதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவ் ஆய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக இவருடைய இரண்டு சிறுகதை தொகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவருடைய சிறுகதைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும் இவருடைய சிறுகதைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே அவருடைய சிறுகதைகள் வெளிப்படுத்தும் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை ஆராய்தல் என்ற அடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஒடுக்கப்பட்ட வாழ்வியல், தெளிவத்தை ஜோசப், மலையக இலக்கியம், மலையகச் சிறுகதைகள், விமர்சன ஆய்வு அணுகுமுறை*

**ஆய்வு அறிமுகம்**

'தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல் சித்திரிப்புக்கள் - ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் மலையக இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள் இன்று அதிகளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய ஆய்வுகளில் இவரது இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளும் முக்கியமானவையாகும். அந்தவகையில் இவர் மலையக சிறுகதை எழுத்தாளர்களில் தற்போது எல்லோராலும் குறிப்பிடப்படும் ஒருவராகக் காணப்படுகின்றார். சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனப் பல காத்திரமான படைப்புகளையும் ஆய்வுகளையும் எழுதியுள்ளார். இவர் ஈழத்தின் சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முகம் கொண்டவர்.

**ஆய்வு நோக்கம்**

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை எவ்வாறு சித்திரிக்கின்றன என்பதை வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாக வைத்து பல ஆய்வுகள் பல்வேறு கோணங்களில் இடம்பெற்றுள்ளன. மலையக மக்களை மையமாக வைத்துப் படைக்கப்பட்ட இவருடைய சிறுகதைகளில் பல்வேறு உள்ளடக்கங்கள் இடம்பெற்ற போதிலும் அவை வெளிப்படுத்தும் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை பற்றிய எந்தவித ஆழமான ஆய்வுகளும் பெரியளவில் இடம்பெறவில்லை. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறை அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

தெளிவத்தை ஜோசப்பின் ''மீன்கள்'', ''தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள்'' ஆகிய இரண்டு சிறுகதை தொகுதிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காக தெளிவத்தை ஜோசப்பின் ''மீன்கள்'', ''தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள்'' ஆகிய இரண்டு சிறுகதை தொகுதிகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும்

அவரின் சிறுகதைகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**தெளிவத்தை ஜோசப்பின் வாழ்க்கை வரலாறும் இலக்கிய முயற்சிகளும்**

இலங்கையின் ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் ஊவா கட்டவளை எனும் தோட்டத்தில் சந்தனசாமி ஆசிரியருக்கும் பரிபூரணம் அம்மையாருக்கும் 1934 பெப்ரவரி 16 ஆம் திகதி மகனாக பிறந்தவர் ஜோசப். மூன்று சகோதரர்களையும் ஒரு சகோதரியையும் கொண்ட கத்தோலிக்க இறைபக்தி நிறைந்த குடும்ப பின்னணியோடு ஊவா கட்டவளை தோட்டத்துப் பள்ளியில் தனது கல்வியை ஆரம்பித்தவர். சிலகாலம் தமிழகத்தின் கும்பகோணத்திலும், பின்னர் பதுளை பீட்ஸ் கல்லூரியிலும் கல்வியை தொடர்ந்திருக்கின்றார்.

1963 இல் பதுளை தெளிவத்தை எனும் தோட்டத்தில் ஆசிரியராகவும் பகுதிநேர எழுதுவினைஞராகவும் தொழில் தொடங்கியவர் அப்போதே தமிழகத்தில் இருந்து வெளிவந்த ‘‘உமா’’, ‘‘பேசும் படம்’’ கொழும்பில் இருந்து வெளிவந்த “கதம்பம்” ஆகிய இதழ்களுக்கு எழுதி ‘‘தெளிவத்தை ஜோசப்’’ எனும் இலக்கிய பெயருக்கு சொந்தகாரரானார். 1963 ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகை நடாத்திய மலையக சிறுகதை போட்டியில் ‘பாட்டி சொன்ன கதை’ என்ற கதைக்கு முதல் பரிசு பெற்றதன் ஊடாக தன்னை அங்கீகாரம் பெற்ற எழுத்தாளராக மாற்றிக்கொண்டார்.

தெளிவத்தை ஜோசப் பிலோமினாவை திருமணம் செய்துக் கொண்டார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். தனது மனைவியின் பிலோமினா என்ற பெயரிலும், தமது பிள்ளைகளான திரேசா, ரமேஸ், ரவீந்திரன், சியாமளா ஆகியோர் பெயர்களிலும் ஜேயார், ஜோரு என்ற புனைப்பெயர்களிலும் படைப்புக்களைத் தந்துள்ளார். இவருக்கு ஏழு பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

சிறுகதை, நாவல், இலக்கிய கட்டுரைகள், வானொலி நாடகங்கள், தொலைகாட்சி நாடகங்கள், திரைப்பட வசனம், பத்தி எழுத்துக்கள் எனப் பல்வேறு தளங்களிலும் தனது இலக்கிய ஆளுமையை பதிவு செய்திருக்கின்றார். இலங்கையில் உருவான ‘‘புதிய காற்று’’ என்ற திரைப்படம் இவரது திரைக்கதை வசனத்தோடு உருவானது என்பது குறிப்பிடதக்கது.

நாளாந்த வாழ்வில் மக்களோடு பழகுகின்ற தன்மையும், அவரது சமூகப் பிரக்ஞையும், சமூகம் நோக்கிய அவரது வித்தியாசமான பார்வையும் அவரது படைப்புக்களில் ஒரு வித்தியாச தன்மையையும் யதார்த்தத்தையும் கொண்டுவந்தது. மக்களின் வாழ்க்கையை தமது எழுத்துக்களின் ஊடாக படைப்பாக்கம் செய்யும் செழுமை பெற்றவர். அவரது ஒவ்வொரு படைப்புக்குள்ளும் சமூக வாழ்வின் பல்வேறு நுணுக்கங்களையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றார்.

தெளிவத்தை ஜோசப் தன் கொழும்பு வத்தளை இல்லத்தில் 2022 அக்டோபர் 21 அன்று தனது 88 வது வயதில் காலமானார். அவர் மலையக இலக்கிய உலகிற்கு ஆற்றிய பங்கு

அளப்பரியது. இவருடைய படைப்புக்கள் காலங்கள் கடந்து ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று நிற்கும்.

**தெளிவத்தை ஜோசப்பின் இலக்கிய முயற்சிகள்**

பல ஆண்டுகளாக பல்வேறு சஞ்சிகைகள் பத்திரிகைகளில் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் தொகுப்புக்களாக வெளிவந்தவை,

**சிறுகதைத் தொகுப்புகள்**

- நாமிருக்கும் நாடே (1979)
- மீன்கள் (2013)
- தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் (2014)

**நாவல்கள்**

- காதலினால் அல்ல (1966)
- காலங்கள் சாவதில்லை (1974)
- நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் (1983)
- குடை நிழல் (1996)
- மாறுதல்கள் (2014)

**குறுநாவல்கள்**

- பாலாயி
- மனம் வெளுக்க
- ஞாயிறு வந்தது

**ஆய்வுக் கட்டுரை**

- மலையக சிறுகதை வரலாறு
- இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியல் வரலாறு
- மலையக நாவல் வரலாறு

தினசரிகள், வார இதழ்கள், இலக்கிய சிற்றிதழ்களில் பத்திகளை எழுதுவதன் மூலம் பத்தி எழுத்தாளராகவும் தன்னை அடையாளம் காட்டியவர்.

தினகரன் - இலக்கிய தகவல்கள், வீரகேசரி - இலக்கிய தகவல்கள், சிலுமின – பாலம் போன்றன இவரது பிரபலமான பத்தி எழுத்துத் தொடர்களாகும். இந்த பத்திகள் ஊடே இலக்கிய இரசனைக் கட்டுரைகள், விமர்சனக் குறிப்புகள், நூலறிமுகம், துயர்பகிர்தல், மொழிபெயர்ப்பு அம்சங்கள், இலக்கிய பயணக்கட்டுரைகள், இலக்கிய அனுபவங்கள் போன்றவற்றை பதிவு செய்துள்ளார். வேறு எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு (சிறுகதை – 17, கவிதை – 2, நாவல்-6, நடைச்சித்திரம்-2, நாடக நூல்-1, ஆய்வுநூல்-1, நாட்டாரியல்-1) 30 க்கும் மேற்பட்ட முன்னுரை, அணிந்துரைகள் எழுதியுள்ளார்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

**தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் வெளிப்படுத்தும் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியல்**

- **அடிப்படை வசதி : இருப்பிடம்**

மலையக மக்களின் வீடுகள் லயக் குடியிருப்புக்களாக அமைந்திருக்கும். இவை ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டவை. ஆனால் இன்றளவும் அவற்றில் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கவனிபாரற்றும், கேற்பாரற்றும் இன்னும் லயத்து வீடுகளில் வாழ்கின்ற மலையக மக்களின் வாழ்வியல் யதார்த்தத்தை இவருடைய சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன.

“வெள்ளைக்காரன் தேயிலை பயிரிடத் தொடங்கிய காலத்தில் கட்டப்பட்டவை இந்த லயங்கள். நூற்றைம்பது அறுபது ஆண்டு பழைமை வாய்ந்தவை. மாற்றமே இல்லாமல் அப்படியே தொடர்கின்றன. அரசுக்கு அரசு தலைவர்கள் மாறுகின்றார்கள். ஆனாலும் இவை மாறுவதில்லை” (அம்மா - சிறுகதை)

ஒரு சராசரி மனிதனின் அடிப்படை வாழ்வியல் அம்சங்களில் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றும் முக்கியமானவை. தோட்டப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் இத்தகைய அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தங்கள் வாழ்நாள் முழுவதும் போராட வேண்டிய வாழ்க்கை அவலத்தை இவருடைய “மீன்கள்” எனும் சிறுகதை வெளிப்படுத்துகின்றது. காலம் முழுவதும் ஆறேழு பிள்ளைகளுடன் ஒற்றை அறையில் குடித்தனம் நடத்தும் அவஸ்த்தையை இக்கதை கூறுகின்றது. தன் மனைவி மற்றும் ஆறு பிள்ளைகளுடன் லயத்து வீட்டில் வாழும் ஒரு தொழிலாளி. நான்கு பக்கங்களை கொண்ட ஒரு சிறிய அறை. காலம் செல்லச் செல்ல பெண்குழந்தைகளும் வளர்ந்து விடுகின்றனர். மாற்று இடத்துக்காக அவனும் எத்தனையோ முறை துரையின் காலில் விழாத குறையாகக் கெஞ்சி பார்க்கிறான். சண்டையிட்டு பார்க்கிறான். கடைசி வரை அவை எல்லாம் வெறும் முயற்சியாகவே போய்விடுகின்றது. லயக் காமிராக்கள் (லய வீடுகள்) காலியாகும் போதேல்லாம் யாரோ ஒருவருக்கு எல்லாம் போய்ச் சேர்ந்து விடுகின்றது. கடைசியாக லஞ்சம் கொடுத்தாவது வாங்கி விடவேண்டும் என்று கங்காணியிடம் செல்ல மற்றவர்கள்

முன்னிலையில் லஞ்சம் கொடுக்க வந்தியாடா? என்று கங்காணி அதட்டிக் கத்த உடல் நடுங்கி வெளியேறுகின்றான். கடைசி வரை அவனுக்கு மாற்று இடம் கிடைக்கவே இல்லை. அந்த ஒடுக்கப்ட்ட அறையில் பல இன்னல்களுக்கு மத்தியில் பிள்ளைகளின் முகங்களைக் கூட பார்க்க முடியாத ஒடுக்கப்பட்ட வாழ்க்கை நிலை. இதனையே இக்கதை கூறுகின்றது. மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினையின் அடிப்படையை இக்கதையினூடாக உணரக்கூடியதாக உள்ளது.

- **பயணம் : போக்குவரத்து**

மலையக மக்களின் வாழ்க்கையில் அவர்கள் இன்றும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் ஒன்றுதான் போக்குவரத்துச் சிக்கல். மலையகப் பகுதியில் வாழும் மக்கள் யாருமே நகரத்திற்கு அண்மித்தவர்கள் இல்லை. அவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், சில நேரங்களில் கல்விக்காகவும், தொழிலுக்காகவும் வைத்திய தேவைக்காகவும் பல சந்தர்ப்பங்களில் மலைகளில் இருந்து இறங்கி நகரத்திற்கு வரவேண்டிய சூழல் ஏற்படும். அப்போதைய சந்தர்ப்பங்களில் அவர்கள் சந்திக்கும் இன்னல்களை தெளிவத்தை ஜோசப் தனது சிறுகதைகளில் வெளிப்படுத்தி உள்ளார்.

இவருடைய ‘‘பயணங்கள்’’ என்ற சிறுகதையில் பத்துமைல் தூரம் ஓடும் ஒரு பேரூந்து பயணத்தில் இம்மக்கள் எதிர்கொள்ளும் இன்னலை மிக அழகாக எடுத்துரைத்திருக்கின்றார். ஊரின் உள் பகுதிகளுக்கு செல்லும் பேரூந்து குறிப்பிட்ட நேரங்களில் செல்வது கிடையாது. வாரத்தில் மூன்று முறை செல்ல வேண்டுமாயின் ஒரு முறை செல்வதே அரிதானது. மாணவர்கள் பாடசாலைக்கு சரியான நேரத்திற்குச் செல்ல முடியாது, தொழிலுக்குச் செல்ல முடியாது. இடவசதி போதாது. குறித்த பேரூநத்திற்காக அதிகமான நேரங்கள் காத்திருக்க வேண்டியதாக இருக்கும். வளைவுகளில் அதிக நெரிசல் ஆபத்துக்களை ஏற்படுத்தும். இத்தகைய பயணச் சிரமங்களை அவருடைய “பயணங்கள்’’ சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

‘‘பஞ்சு திணித்த சாக்குப் போல் வாய் வழிய நிற்கிறது பஸ்’’

‘‘கிளம்பி ஓடாதா! காற்று கொஞ்சம் வீசாதா! என்று விலையில்லாத காற்றுக்கு ஏங்கினார்கள். அத்தனை பேரும்’’

‘‘தபாலாபீஸ் சந்தியில் வட்டமடித்துத் திரும்பும் போதே மற்றவர்களின் எழும்புகள் முறிந்தன’’ (பயணங்கள் - சிறுகதை)

இது ஒரு சின்னப் பயணம். இதுவே இந்த மக்களுக்கு இத்தனை சிரமமாகவும் சிக்கலாகவும் இருக்கின்றது என்றால் வாழ்க்கை எனும் பெரும்பயணம்….? என்று கேள்விக் குறியோடு இக் கதையை முடிக்கின்றார். இந்தக் கேளிவிக்குறியோடுதான் இன்றும் பல மலையக மக்களின் வாழ்க்கை நகர்கின்றது. மலைய மக்களின் பயணச் சிக்கல்களை அவருடைய ‘‘அம்மா’’ என்ற சிறுகதையும் வெளிப்படுத்துகின்றது.

“நுவரெலியா பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறுவதென்பது ஒரு சர்க்கஸ் விளையாட்டு மாதிரி. ஸ்டாண்டை நோக்கி ஓடிவரும்போதே பஸ்ஸில் ஏறும் சாகஸம் தெரிந்துருக்க வேண்டும். அடித்துப் பிடித்து முட்டி மோதிக் கொண்டு ஏறத் தைரியம் வேண்டும். விழாமல், கால் செருப்பை அறுத்துக் கொள்ளாமல் பாய்ந்து தொற்றிக் கொள்ளும் லாவகம் தெரிய வேண்டும். குடையைக் கண்டதும் மிரளும் பசுமாடுபோல் கூட்டத்தைக் கண்டாலே மிரளும் இதுகளுடன் எப்படி பஸ் ஏறுவான்?” (அம்மா - சிறுகதை)

- **தொழில் தளங்களில் நடைபெறும் அடக்குமுறை**

தேயிலை தோட்டத்தில் வேலை செய்யும் மக்கள் பல இன்னல்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருக்கும். அவற்றில் துரை, கங்காணி, கணக்குபிள்ளை முதலானோரின் அடக்கு முறைகளும் முக்கியமானவை. இலாப நோக்கில் தோட்டத்தில் வேலை செய்யும் மனிதர்களைச் சற்றேனும் மதிக்காது அடிமைகளைப் போல நடத்துகின்ற நிலையை இவரது சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன. ‘கத்தியின்றி ரத்தமின்றி’ என்ற சிறுகதையானது அடைமழை காலத்தில் மலைகளில் நின்று வேலை செய்ய முடியாத சூழலில் துரையிடம் சென்று வேலையை நிறுத்த அனுமதி கேட்கின்றார் தலைவர். ஆடைமழை காரணமாக மரங்கள் முறிந்து விழுகின்றன ஆகவே துரையும் வேலையை நிறுத்த அனுமதி தருகின்றார். எனினும் இடையில் கணக்குப்பிள்ளையை அழைத்து ‘மணி ஒன்பது தான் ஆகின்றது 12 மணி வரையாவது கொழுந்தெடுக்க வைத்து அனுப்பிவிடு’ என்று கூறிவிடுகின்றார். கணக்குபிள்ளையும் மணி ஒன்பது தான் ஆகின்றது இப்பொழுது தேயிலையை நிறுக்க முடியாது என்று கூறி மீண்டும் வேலை செய்யும் படி விரட்டுகின்றார். மழையில் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தவர்கள் மலைக்கு மறுபடி செல்ல முடியாது என்று மறுக்கின்றனர். இதனால் கோபமுற்ற கணக்குபிள்ளை தன்னுடைய ஈவு இரக்கமற்ற தன்மையையும் அடக்குமுறையையும் தனது வார்த்தைகளில் காட்டுகின்றான்.

“நீ ஆயிரம் காரணம் சொல்லு. நாள் நிறுக்கப் போறதில்லே…..” இது கணக்குபிள்ளை.

“ஆளுங்க எல்லாம் குளிர் புடிச்சுத் செத்தா…….?”

“மண்ணும் ஈரமாத்தான் இருக்கு…… குழி வெட்ட லேசாத் தான் இருக்கும்”

“இந்த வார்த்தைகளை கேட்ட தலைவரின் கவ்வாத்துக் கத்தி கணக்குபிள்ளையின் தோள்களில் பாய்ந்தது” (கத்தியின்றி ரத்தமின்றி - சிறுகதை)

கணக்கு பிள்ளை அதே மலையகத்தில் பிறந்து வளர்ந்தவர் என்றாலும் கூட துரையின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு மழையினால் படும் கஷ்டங்களை கண்டுக்கொள்ளாமல் அவர்களை மனிதர்களாக மதிக்காமல் ஒடுக்குகின்றபோது ஒரு கட்டத்தில் அவர்கள் ஒடுக்குமுறை தாங்காமல் அவற்றை தகர்த்து எறிகின்றார்கள். இவ்வாறு ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழும்போது எல்லா துரைகளும் கணக்குப்பிள்ளைகளும் தொழிலாளியின் பலத்தை அறிந்து கொள்வார்கள் என்பதனை இக்கதை வெளிப்படுத்துகின்றது. இக்கதையினூடாக தொழில் தளங்களில் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்வியலை எம்மால் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

- **பண்டிகை**

மலையக மக்களின் வாழ்க்கையில் இன்னொரு முக்கியமான அம்சம் ஒன்று இருக்கின்றது. அது பண்டிகை. பண்டிகைத் தினம் நெருங்கி விட்டது என்றால் குடும்பங்களில் பண சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். அவர்களுடைய மாதச் சம்பளமே மாதச் செலவுக்குப் போதாத நிலையில் பண்டிகைக்காகச் சீட்டுப் பிடிப்பது, காசு சேர்த்து வைப்பது என்று சில மாதங்களுக்கு முன்பே சேர்க்கத் தொடங்கி விடுவார்கள். அவைகளும் சுலபமாக கிடைத்துவிடாது. சேர்த்து வைத்த பணம் செலவாகிப் போகும். இல்லையென்றால் சரியாக குறித்த திகதியில் சீட்டு கிடைக்காது. வருடத்திற்கொருமுறை வரும் பண்டிகையைக் கொண்டாடுவதே பெரும் சிரமமாக இருக்கும். இத்தகைய நிலையை இவருடைய ‘‘சிலுவை’’ எனும் சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

வருகின்ற கிறிஸ்மஸ் பண்டிகைக்காகப் போட்ட சீட்டுக்காசை நம்பியிருக்கின்றான். சீட்டுகாசை வாங்குகின்ற நாளில் ஊரில் எட்டுமாதக் கர்ப்பணி பெண் மலையிலிருந்து கீழே விழுந்து விடுகின்றாள். அவளை பதுளை பெரிய வைத்தியசாலைக்கு கொண்டு போய்விடுன்றார்கள். அவளின் மருத்துவத் தேவைக்காக அந்தச் சீட்டுக்காசை அவளுக்கு கொடுக்க வேண்டியதாக போய்விட்டது. வரப்போகும் பண்டிகைக்கு இப்போது அவனிடம் எதுவும் இல்லை. வருடத்திற்கு ஒரு முறை வரும் பண்டிகைகளைக் கூட அவர்களால் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் கொண்டாட முடியாத வாழ்க்கை நிலையில் மலையக மக்கள் வாழ்கின்றார்கள்.

‘‘ஒனக்கு இந்த மாசமும் ‘நயிட்டி ஸ்கூலுக்கு’ அடுத்த மாசமுனு தான் பேச்சு. அவனுக்கு ஆபத்து ஒனக்கு பெருநாளு, என்ன செய்யலாம்..’’

ஓம்பேரைச் சொல்லியேதான் சீட்டு பிரிச்சேன்… அங்கே உசிரு போவுதுல்ல, எது பெருசு….?’’ (சிலுவை - சிறுகதை)

- **சமூக அடுக்கமைவு அடிப்படையிலான பாகுபாடு**

சமூகத்தில் இன அடுக்கமைவு அடிப்படையிலான பாகுபாடு தனிநபர் வாழ்க்கையிலும் குடும்பங்களிலும் பல பாதிப்புக்களைச் செலுத்தும். பிறந்த இடம், செய்யும் தொழில், கல்வி மட்டம், சாதி என இந்த அடுக்கமைவு அடிப்படையிலான பாகுப்பாட்டிற்கு பல காரணங்கள் செல்வாக்கு செலுத்தினாலும் மலையகப் பகுதியில் தோட்டத்துத் தமிழ் பெண்களாக இருந்தால் இவற்றின் பாதிப்பு அதிகமாகவே இருக்கும் இதனை அவரது ‘‘பயணம்’’ சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

‘‘அத்தனை சட்டம் பேசியவன் அந்த ‘அட்வான்ஸ் புக்கிங்’ யாருக்கு என்று கேட்கவில்லை. கைக்குழந்தையுடன் அல்லல்படும் அவளுக்கு அதில் கொஞ்சம் இடம் கொடுக்கும்படி கூறவில்லை

அவள் ஒரு தோட்டத்துத் தமிழச்சி தானே?’’ (பயணம் - சிறுகதை)

- **மலையகத் தாய்மாரை சித்திரித்துக் காட்டுதல்**

வயதுமுதிர்ந்த தாய்மார் இயலாத காலத்தில் வீட்டில் இருந்து விடுவது வழக்கம். அதுவரை காலமும் உழைத்து ஓய்ந்த கைகளுக்கு ஓய்வு கொடுக்காமல் கொடுமை செய்கின்ற பிள்ளைகளும் இருக்கதான் செய்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒரு குடும்ப கதையையும் தெளிவத்தை ஜோசப் தனது சிறுகதையில் வெளிப்படுத்துகின்றார்.

‘‘பழம் விழுந்தது’’ எனும் சிறுகதையில் வரும் வீரன். வெறும் பெயருக்கு மட்டும். தனது தாயை ஒரு மனிசியாக கூட நடத்துவது இல்லை. அவள் மூலம் கிடைக்கும் பணத்திலேயே குறியாக இருக்கின்றான். தள்ளாத வயதில் முடியாமல் மலைக்கு வேலைக்கு செல்லும் தாய் ஒருநாள் செல்லா விட்டாலும் கொடும் வார்த்தைகளால் திட்டுவான்.

“கிழவி, இன்னைக்கு வேலைக்குப் போகலியா? என்பதில் தொடங்கி எனக்கிருப்பது போதாதென்று இதுவேறு வந்து கழுத்தை அறுக்கிறது சனியன் கிழடை கொளுத்திய அன்று தான் தனக்கு நிம்மதி என்று முடிப்பான் வீரன்.

அப்பொதெல்லாம் கிழவி “ஏம்பா அப்படிச் சொல்றே இந்த மாசத்திலேயே இன்னைக்கு மட்டும் தானே வீட்டுலே நின்னேன்”என்று நினைத்துக் கொள்வாள். ஆனால் சொல்லமாட்டாள்.” (பழம் விழுந்தது – சிறுகதை)

மேற்குறித்த வரிகள் ஈவிரக்கமற்ற பிள்ளைகளால் தாய்மார்கள் படும் கஷ்டத்தை வெளிப்படுத்துகின்றது. சம்பளத்தை முழுவதுமாக வாங்கிக் கொள்வான். அந்த சம்பள பணத்தில் அவளுக்கு ஒரு சேலை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்றாலும் அதற்கு பண்டிகை நாள் ஒன்று வரவேண்டும். கால்வயிற்று சாப்பாடு மட்டுமே போடுவான். அவளது சம்பள பணத்தை துரையிடம் கேட்டு சரி பார்த்துக் கொள்வான்.

ஒரு கட்டத்தில் இதற்கு மேல் மலைக்கு அனுப்ப முடியாது என்று தனது தாயை வேலையை விட்டு நிறுத்தி விட்டார்கள் என்று தெரிந்ததும் மகன் வீரன் அலுவலகத்திற்கு சென்று கேட்ட முதல் கேள்வி “கிழவிக்கு யார் சோறு போடுகிறது?” துரையிடம் சண்டையிட்டு மறுபடி அவளுக்கு வேலை வாங்கினான். அவளது ஓய்வு சம்பளத்துக்கான பெயர் எடுக்கப்பட்டதும் வேலை இல்லை என்று துரை சொன்னதும் அவன் பெயரில் ஒரு கொந்தரப்பு எடுத்து கிழவியை வைத்து வேலை வாங்கினான். வேலை செய்வது தாய். சம்பளம் அவனுக்காக இருந்தது. இப்படிப்பட்ட மலையக மக்களில் ஈவிரக்கமற்ற பிள்ளைகளால் தாய்மார்கள் படும் கஷ்டங்களையும் தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன.

- **நீர் பிரச்சினை**

நீர் பிரச்சினை எல்லா சமூகங்களிலும் காணப்படும் பிரச்சினையே. எனினும் மலையகப் பகுதியில் இன்றும் இந்த தண்ணீர் பிரச்சினைகளுக்கு பஞ்சமில்லை. இவருடைய கதைகளில் இடம்பெறுகின்ற பல விடயங்கள் இன்றும் மலையக கிராமங்களில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. முன்னைய காலங்களில் ஆறுகளுக்கும் ஓடைகளுக்கும்

குளங்களுக்கும் நீர் எடுக்க செல்வார்கள். லயக்குடியிருப்பு என்றானதும் பொதுவாக வீட்டிற்கு அருகாமையிலேயே நீர் வசதிகளை பெற்று தருவதற்காக துரைமார்கள் குழாய் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். எனினும் அந்த குழாய் தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காக லயத்து மக்களிடையே அடிக்கடி சண்டைகள் எழுவது வழக்கமாக இருக்கும். சண்டையில் குழாய் உடைவதும் துரை குழாயையை சரி செய்வதும் மறுபடி சண்டையிட்டு குழாயை உடைப்பதுமென்று இந் நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். இத்தகைய லயத்து மக்களின் வாழ்வியலையும் இவரது சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன.

இவருடைய ‘பீலி மேலே போகிறது’ என்ற சிறுகதை இந்த குழாய் சண்டையை, பிரச்சணையை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

“அடடா ஒண்ணும் தெரியாத பாப்பா…! ஊருக்கே போட்டாளாம் தாப்பா..! கொடம் மாத்தி வாளி, வாளி மாத்தி கொடம்னு நீயே ரொப்பிக்கிட்டாக்க மத்தவங்க ஆக்குறது அரிக்குறது இல்லே! இன்னொருக்கா மட்டும் வை, ஓ வூட்டு கொடத்தே தூக்கிக் குப்பை மேட்டுல வீசுறேனா இல்லியா பாரு!

வீசுடி பார்ப்போம்..!

நீ வைடி வீசுறேனா இல்லியான்னு பார்ப்போம்..!

இதோ வச்சேன்..!

இதோ வீசுனேன்..!” (பீலி மேலே போகிறது – சிறுகதை)

இவற்றோடு சேர்த்து இந்த தண்ணீர் பிரச்சனையால் தோட்டத்திற்கு வேலைக்கு செல்லும் பெண்கள் தாமதமாக வேலைக்குச் செல்வதும், அதனால் துரையிடம் பேச்சு வேண்டுவதும், வேலை முடித்து செல்லும் பெண்கள் தினமும் தண்ணீர் பிரச்சணையால் தங்களுடைய அன்றாட வேலைகளை செய்து முடிக்க முடியாமல் இரவெல்லாம் தண்ணீருடன் போராடும் வாழ்வியலையும் இவரது சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

- **சுகாதாரம்**

இவருடைய “எக்சீமா” எனும் சிறுகதை தோட்டத்தில் உள்ள சுகாதார பிரச்சனைகளை பேசுவதன் வாயிலாக அவர்களின் ஒடுக்கப்பட்ட வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றது. எக்சீமா என்பது ஒரு வகையான தோல் நோய். நாம் நமது உடற் பாகங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளாத சந்தர்ப்பங்களில் இத்தகைய நோய்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகம். தோட்டத்தில் வேலை செய்கின்ற தோட்ட மக்களை எவ்வாறு கங்காணிகளும் கணக்கு பிள்ளைகளும் ஒடுக்கி நடத்துகின்றார்களோ அதுபோல அவர்களும் துரைமார்களால் ஒடுக்கி நடத்தப்படுவார்கள். அதனை இக்கதை வெளிப்படுத்துகின்றது. இக்கதையில் வரும் சின்ன கணக்கு பிள்ளைக்கு காலில் எக்சீமா நோய் ஏற்பட்டுள்ளது. அவரும் எல்லா வைத்தியங்களும் செய்து பார்த்துவிட்டார். ஒன்றும் கைக்கொடுக்கவில்லை. அவர் மலைகளில் ஏறி இறங்குகையில் குச்சிகள் கிழித்து இரத்தம் சொட்டுகின்றது. பெரிய கணக்கு

பிள்ளையிடம் சென்று வருத்தத்தை கூறி சப்பாத்து அணிய அனுமதி கேட்டாலும் அவர் அசைந்த பாடில்லை. இத்தகைய வாழ்வு தான் மலையக மக்களின் வாழ்க்கை நிலை. சுகாதாரம் இல்லை. நோய்களுக்கு பஞ்சமில்லை. அதற்கான தீர்வுகளும் கிடைப்பதில்லை.

"நீட்டிக் கொண்டிருந்த ஒரு தேயிலைக் கம்பு தாண்டும்போது எக்சீமாவில் கீறிவிட்டது.

'பாத்தீங்களா..! இந்த எளவுக்காகத்தான் ஒரு சப்பாத்தை மாட்டிக்கிறேன்னு உங்ககிட்ட கேட்டுக்கிட்டே இருக்கேன்' என்பார் அழாத குறையாக"

அதற்கு பெரிய கணக்குபிள்ளை,

"தொரை ஒரு மாதிரியா பாப்பானே..! என்ன இன்னைக்கு சப்பாத்தோட வர்றாரு! நாளைக்கு கார்ல வருவாரோன்னு கருவிபுட்டானா.. நாம அவ்வளவுதான்" (எக்சீமா – சிறுகதை)

மேற்குறித்த வரிகள் சப்பாத்து போடுவதற்குகூட துரையின் அனுமதியும் சம்மதமும் வேண்டி நிற்கின்ற மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன.

மேலும், தோட்டத்து வைத்தியரின் மருந்து கூட இவருடைய வருத்தத்தை போக்கவில்லை. கடைசியாக பதுளை நகரத்தில் உள்ள மலையாள வைத்தியர் ஒருவரிடம் செல்கின்றார். அவர் காயத்தில் ரத்தம் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும் அதனோடு தான் கொடுக்கும் மருந்துகளையும் உண்டால் மட்டுமே சுகமாகும் என்கின்றார். ஆனால் அதற்கு வழியில்லை ஏனென்றால் அவர்களுக்கு தங்கள் கால்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும், குச்சுகள் குத்தி இரத்தம் வராமல் இருக்க வேண்டும் என்றால் சப்பாத்து போட வேண்டும். ஆனால் அதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை. இறுதியாக தன் கால்களை காப்பற்றிக் கொள்ள வேண்டும் தன்னை சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால் என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று அரைகால் சட்டை போட்டு சப்பாத்து போட்டு மலைக்கு செல்கின்றார் சின்ன கணக்குபிள்ளை. சில நேரங்களில் இத்தகைய இறுக்கமான சூழல்கள் தான் அவர்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை தகர்க்க வழி சமைத்து விடுகின்றது.

இவரது ஒரு புதிய உயிர் என்ற சிறுகதை தோட்ட மக்கள் கிராம புறங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாததால் ஏற்படும் பிரச்சனைகளைக் கூறுகின்றது. கதையில் மூக்கய்யாவிற்கும் மூக்காயிற்கும் நான்கு குழந்தைகள் ஐந்தாவதாக வயிற்றில் ஒரு குழந்தை. நான்காவது குழந்தைக்கும் ஐந்தாவது குழந்தைக்கும் இடைவெளி இல்லை. இதனால் அவளுடைய பிரவசத்தில் பிரச்சணை ஏற்படுகின்றது. இவற்றோடு அவளுக்கு இரத்த சோகை வேறு. குழந்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக பல்வேறு ஆலோசணைகள், விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி கூறினாலும் தோட்ட மக்கள் அதை கண்டுக் கொள்வதில்லை.

இவற்றுக்கிடையில் வீட்டில் உள்ள பிள்ளைகளை பார்த்துக் கொள்ள முடியாத கணவன் வைத்தியசாலைக்கு சென்று பெரிய வைத்தியரிடம் மனைவியை வீட்டுக் கூட்டிச் செல்ல அனுமதி கேட்கின்றான். ஆனால் அவளின் உடல் நிலை சரியில்லாததால் வைத்தியர் மறுக்கிறார்.

“இடைவெளி இன்றி குழந்தை பெறுவதால் தாய்க்கும் சேய்க்கும் உண்டாகும் பாதிப்புக்கள் பற்றிய குறிப்புகள் சிவப்பில் தடித்த எழுத்தில் இருந்தன.

‘இரு பிள்ளைகளுக்கான கால இடைவெளி குறைந்த அளவு ஐந்து வருடங்கள் இருப்பது சிறப்பு’என்னும் வரிகளில் அய்யா நீட்டிய குச்சியின் நுனி நிற்கின்றது.

‘இதெல்லாம் பத்தி நாங்க சொல்லிக்குடுக்கையில ஒருத்தரும் கவனிக்கறது இல்லே..’ என்று இன்னும் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தார் அய்யா’

இதொன்றும் மூக்கையாவின் செவியில் நுழைவதாக இல்லை.

மனைவியை எப்படியாவது கூட்டிப் போய்விட வேண்டும் என்பது மட்டுமே மனதில் இருந்தது.”
(ஒரு புதிய உயிர் - சிறுகதை)

எனினும் இவன் வற்புறுத்த வேறுவழியின்றி அவரும் செல்ல அனுமதி தருவதோடு அவளுடைய உடல் நிலைக்கு தான் பொறுப்பில்லை என்பதையும் கூறிவிடுகின்றார். இதே சந்தர்ப்பத்தில் இதே போன்ற சூழலில் தன் மனைவியை சண்டையிட்டு வைத்தியசாலையிலிருந்து கூட்டிச் சென்ற ஒருவர் தன் மனைவியின் உடல் நிலை மோசமாகி போகவே பயந்து பெரிய வைத்தியரை பார்க்க வருகின்றார். வைத்தியரும் நிலைமை புரிந்து அவன் சண்டையில் கூறிய வார்த்தைகள் எதையும் கவனித்திற் கொள்ளாது அவளது உயிரை காப்பாற்ற செல்கின்றார். இவர்கள் இருவரும் நடந்தவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு என்ன செய்வதென்று தெரியாமல் சென்ற பெரிய வைத்தியர் வரும் வரை காத்திருக்கின்றனர்.

இத்தகைய நிகழ்வு தோட்ட மக்களிடையே அடிக்கடி நிகழும். வைத்தியசாலை வருவதற்கு முன்பும் சரி, வைத்தியசாலையிலும் சரி சுகாதார நடைமுறைகளை இம்மக்கள் பின்பற்றுவதில்லை. இவற்றை புறக்கணிப்பதால் ஏற்படும் விபரிதங்கள் தொடர்பிலும் எந்த அக்கறையும் இல்லை. இத்தகைய நிலையில் வாழும் மலையக மக்களை இவருடைய சிறுகதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**முடிவுரை**

இவ்வாறாக இவ்வாய்வானது பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை சித்திரிக்கின்றது. மலையகம் குறித்தும் மலையக மக்கள் குறித்தும் பல எழுத்தாளர்கள் எழுதியிருந்தாலும் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை மிக யதார்த்தமாகவும் தத்ரூபமாகவும் தனது சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

இவர் தனது சிறுகதைகளில் மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை அடிப்படை வசதி : இருப்பிடம், பயணம் : போக்குவரத்து, தொழில் தளங்களில் நடைபெறும் அடக்குமுறை, பண்டிகை, சமூக அடுக்கமைவு அடிப்படையிலான பாகுபாடு, மலையக தாய்மாரை சித்திரித்துக் காட்டுதல், நீர் பிரச்சனை, சுகாதார பிரச்சனை ஆகிய அம்சங்களில்

வெளிப்படுத்தி காட்டியிருக்கின்றார். தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் குறித்து பல கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை தனித்துவமாக கொண்டு அது தொடர்பிலான ஆழமான ஆய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை. அக்குறையை நிவர்த்தி செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாறாக இவ்வாய்வானது மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வாழ்வியலை தனித்துவமாக விளக்கிக்காட்டக் கூடியதாக அமைகின்றது. இவரது சிறுகதைகள் முக்கியமானவை. இவற்றினாலேயே தெளிவத்தை ஜோசப் இன்றும் மலையக எழுத்தாளர்களில் தனிப்பெரும் ஆளுமையாக விளக்குகின்றார்.

**துணை நூற்பட்டியல்**

**அ. மூல நூல்**

1. தெளிவத்தை ஜோசப். 2014. தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள். ஹட்டன் : பாக்யா வெளியீடு.
2. தெளிவத்தை ஜோசப். 2013. மீன்கள். தமிழ்நாடு : நற்றிணைப் பதிப்பகம்.

**ஆ. துணை நூல்கள்**

**நூல்கள்**

1. தெளிவத்தை ஜோசப், 2000. மலையக சிறுகதை வரலாறு. கொழும்பு : துரைவி வெளியீடு.

**சஞ்சிகைகள்**

1. தாய்வீடு, 2014 ஒக்டோபர், புலம்பெயர் சஞ்சிகை.

## புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

Ms. Indran Tharshana
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*tharshanatharshana646@gmail.com*

Dr. Nadira Mariyasandanam
Department of Tamil Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*nadiraeusl@yahoo.co.in*

**ஆய்வுச் சுருக்கம்:**

“புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள்- ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது ஈழத்துப் புலம்பெயர் எழுத்தாளர்களுள் முக்கியமானவராகக் கருதப்படும் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைத் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். 1980 களில் ஈழத்தில் இனமுரண்பாட்டினால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக மக்கள் வேற்றுநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்களுள் கணிசமானோர் தாங்கள் அனுபவித்த துன்பங்களையும், வாழ்வியல் அனுபவங்களையும் தமது எழுத்துக்களில் வெளிப்படுத்தியுள்ளனர். இவ் எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் விக்னா பாக்கியநாதன் ஆவார். இவர் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை ஆற்றியுள்ளார். இவ் ஆய்வானது அவரது சிறுகதைத் தொகுப்புக்களான ‘உறவுக்குப் போராட்டம்’, ‘இதயச்சிறை’ ஆகியவற்றில் உள்ள சிறுகதைகளை ஆராய்வதாக அமைந்துள்ளது. விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகள் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் இன்றியமையாத பங்களிப்பை வழங்கியதோடு சிறப்பான இடத்தையும் பெற்றுள்ளது என்ற அடிப்படையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது. இவரது சிறுகதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அம்சங்களையும், புலம்பெயர் சூழலையும், அவர்கள் எதிர்கொண்ட அவலங்களையும், பெண்கள் சார்ந்த பிரச்சினைகளையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன. இவரது சிறுகதைகளின் உள்ளடக்கம் மற்றும் உத்தி முறைகள் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வு பகுப்பாய்வு, விளக்கமுறை முறை மற்றும் மதிப்பீட்டு முறை போன்ற ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் விக்னா பாக்கியநாதனின் புலம்பெயர் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இனமுரண்பாடு, கலாசாரப் பிறழ்வு, பண்பாட்டு மோதுகை புலம்பெயர் சிறுகதைகள், நிறவாதம்,*

**அறிமுகம்**

"புலம்பெயர் எழுத்தாளர் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள்- ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது அவரது "உறவுக்குப் போராட்டம்" , ",தயச்சிறை" ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இவர் 1984ல் இலக்கிய உலகில் பிரவேசித்தார். இவர் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எனப் பல்வேறு இலக்கியங்களைப் படைததுள்ளார். இவரது சிறுகதைகள் ஈழத்துப் போரினால் ஏற்பட்ட அவலங்கள், சாதிஎதிர்ப்பு, நிறவாதம், பெண்கள் சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் ஈழத்தமிழர்கள் பலர் 1980களின் பின்னர் உலகின் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் நிறவெறி, புதிய பண்பாட்டுச்சூழல், தாயக ஏக்கம், உறவுகளின் பிரிவு போன்ற பிரச்சினைகளால் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகினர். இவ்விடயங்களை இவர் தனது சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் பற்றி இதுவரை ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை ஆதலால் அவை பற்றி ஆய்வினை மேற்கொண்டு ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் அவரது சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்**

ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வரலாற்றில் முக்கியமான எழுத்தாளர்களுள் ஒருவராகக் காணப்படும் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகளின் சிறப்புக்களை ஆராய்தல் இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

ஈழத்துப் புகலிட இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளராக விளங்கும் விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் பற்றிய பூரணமான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவருடைய சிறுகதைகள் பற்றிய ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

**ஆய்வுக் கருதுகோள்**

விக்னா பாக்கியநாதன் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பெறுவதோடு அவருடைய சிறுகதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்க்கை முறைகள், வாழ்வியல் அனுபவங்கள், பெண்கள் சார்ந்த பிரச்சினைகள், சாதி எதிர்ப்புப் போன்றவற்றை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கமுறை முறை மற்றும் மதிப்பீட்டு முறை போன்ற ஆய்வணுகு முறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

விக்னா பாக்கியநாதனின் „தயச்சிறை‟, ˙உறவுக்குப் போராட்டம்" போன்ற சிறுகதைத் தொகுதிகள் இவ்வாய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காக முதனிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

**முதனிலைத் தரவுகள்:**

விக்னாவின் சிறுகதைத் தொகுப்புக்கள்

- இதயச்சிறை
- உறவுக்குப் போராட்டம்

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

- விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் பற்றிச் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகள்.
- அவரைப் பற்றி இணையத்தளங்களினூடாக பெற்றுக்கொண்ட தகவல்கள்.

**இலக்கிய மீளாய்வு**

புலம்பெயர் எழுத்தாளரான விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் குறித்த முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை. ஆனால் அவரது சிறுகதைகள் பற்றிய பகுதியளவிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விக்னா பாக்கியநாதனது சிறுகதைகள் பற்றி சில ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக்கட்டுரைகளில் விக்னாவின் சிறுகதைகளில் சில மேலெழுந்தவாரியாக கூறப்பட்டுள்ளன. அவை பற்றிய விரிவான ஆய்வுகளாக அவை காணப்படவில்லை.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2022ம்ஆண்டு தம்பிப்பிள்ளை மேகராசா "ஜேர்மனிய புகலிடத் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் - சமூக, பண்பாட்டு ஆய்வு" எனும் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் ஜேர்மனிய படைப்பாளர்களின் வரிசையில் விக்னா பாக்கியநாதன் பற்றிக் கூறப்பட்டுள்ளதோடு அவருடைய சிறுகதைகள் சில ஆராயப்பட்டுள்ளன.

அந்தவகையில், விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகள் பற்றிய முழமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. ஆகவே இவ்வாய்வானது விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் பற்றி முழுமையாகவும், விரிவாகவும் ஆய்வு செய்வதாக அமைகின்றது.

**விக்னா பாக்கியநாதனின் வாழ்வும், பணியும்**

விக்னா பாக்கியநாதன் விஸ்வலிங்கம் நல்லம்மா தம்பதிகளுக்கு மகளாக 1953.12.09ம் திகதி யாழ்ப்பாணத்தில் கிழக்கு வேலணைக் கிராமத்தில் பிறந்தார். விக்னேஸ்வரி எனும் இயற்பெயரை உடைய இவர் இலக்கிய உலகில் விக்னா எனும் புனைபெயரில் அறியப்படுகின்றார். இவர் தனது ஆரம்பக்கல்வியை வேலணை அம்பிகை மகளிர் வித்தியாலயத்திலும், உயர்கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் கற்றார். தனது இளங்கலைமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். 1981ல் புலம்பெயர்ந்து சென்று ஜேர்மனியில் வாழ்கிறார். இவரது கணவர் பெயர் பாக்கியநாதன். தனது பாடசாலைக் காலத்திலேயே பல்வேறு கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இவர் புலம்பெயர்ந்து ஜேர்மனிக்குச் சென்ற பின்னர் தனது கணவருடன் இணைந்து "கலைவிளக்கு" எனும் பத்திரிகையை நடாத்தி வருகின்றார். அத்துடன் அங்கு தமிழையும், தமிழ்க் கலாசாரத்தையும் வளர்ப்பதற்கு பல்வேறுபட்ட கலை, இலக்கியச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகளின் உள்ளடக்கம்**

விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகள் "உறவுக்குப் போராட்டம்" , "இதயச்சிறை" எனும் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் பலதளங்களில் பல்வேறு வகைப்பட்ட விடயங்களையும் பேசுகின்றவைகளாகக் காணப்படுகின்றன. இச்சிறுகதைகள் இலங்கையின் போர்ச்சூழல் , ஜேர்மனியக் கலாசாரம் என்பவற்றை வெளிப்படுத்துவனவாகவும், பெண் அடிமைத்தனத்தின் எதிர்ப்புக்குரலாகவும் அமைகின்றன. இச்சிறுகதைகளின் பேசுபொருள்களை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம். அவை பெண்களின் பிரச்சினை, யுத்த அவலங்கள், மலையக மக்களின் வாழ்க்கைப்பிரச்சினை, குடும்பஉறவு நிலை, மேற்கைத்தேய, தமிழ் கலாசாரங்கள், மொழிப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, நிறவாதப் பிரச்சினை, பிள்ளை வளர்ப்புமறை போன்றனவாகும்.

**பெண்களின் பிரச்சினை**

விக்னாவினுடைய ",தயச்சிறை" எனும் தொகுப்பில் இடம் பெறுகின்ற சிறுகதைகள் பெண்களுக்குச் சமூகத்தில் நடக்கும் அநீதிகள், குறிப்பாக ஆண்கள் அடக்கி ஆளுகின்ற முறைகள், சமுதாயத்தில் காணப்படும் பெண்ணடிமைத் தனம் போன்ற பெண்களுக்கெதிரான பிரச்சினைகள் பலவற்றை உள்ளடக்கியதாக அமைகின்றன. அவரது ஆண்டி அல்ல, எதிர்பார்ப்புக்கு எதிர் மாறியது நெஞ்சம், வாயும்வயிறும் வேறு, சமுதாய நீதவான், என் உரிமை, ஊனமுற்ற மனம் போன்ற சிறுகதைளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். பெண்பிள்ளைகள் பிறந்தால் அப்பெற்றோரைச் சமூகம் இழிவாக நினைக்கின்ற நிலையை "ஆண்டி அல்ல" எனும் கதையினூடாகக் காட்டுகின்றார். பெண்களைக் கேவலமாக நினைக்கும் சமூகத்திற்கு எதிராகப் பெண்களைப் பெற்றால் பெருமைதான் என்பது இக்கதையினுடாக எடுத்துக்காட்டப்படுகின்றது. உதாரணமாகப் பின்வரும் பகுதியைக் கூறலாம்.

ஓம்.. அண்ணை! இந்தக் காலத்தில் பெண்பிள்ளைகளால் பிரச்சினை என்று நாம் எண்ணக் கூடாது. நாமே தான் அது பிரச்சினை என்று எமக்குள்ளே உருவாக்கிக் கொள்கின்றோம். ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் சமம் என்ற எண்ணம் எம்மத்தியில் எப்போது உருவாகுமோ அப்போது தான் எமது சமுதாயம் உருப்படும். (2000:44)

போலிக்கௌரவத்திற்காக ஆண் குழந்தைதான் வேண்டும். பெண் பிறந்தால் இழுக்கு என்று பெண்ணை அவளது பிறப்பிற்கு முதலே இழிவாக நினைக்கும் சமூகத்தைப் பற்றி "எதிர்பார்ப்புக்கு எதிர்" எனும் சிறுகதையில் குறிப்பிடுகின்றார். ஆணுக்குப் பெண் சமம் என்கின்ற நிலைமையை மறுத்துக் கூறும் ஆணாதிக்க நிலையை "மாறியது நெஞ்சம்" எனும் சிறுகதை கூறுகின்றது. இவ்வாறாக சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை தன்னுடைய கதைகளில் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**யுத்த அனுபவங்கள்**

ஈழத்தில் யுத்தத்தின் போதும், யுத்தத்தின் பின்னரும் மக்கள் எதிர்கொண்ட துன்பங்களை விக்னாவினுடைய ",தயச்சிறை" எனும் சிறுகதை தொகுப்பிலுள்ள "கிருகப்பிரவேசம்" , "சத்தங்கள்" ஆகிய கதைகள் வெளிப்படுத்துகின்றன. "கிருகப் பிரவேசம்" எனும் கதையில் வாழ்க்கையில் சிறிதாக உழைத்து சேமித்து ஒருவீடு கட்டியவன் போரின்போது பொம்பர் குண்டுபட்டு தன் புதிய வீடு சிதறியதைக் கண்டு மனமுடைகின்ற துன்பகரமான நிலை காட்டப்படுகின்றது. ஏழைகளுக்குத் துன்பத்தை அளித்த மனிதாபிமானமற்ற போரின் அவலத்தை இக்கதை எடுத்துக் கூறுகின்றது. இதனைப் பின்வரும் பகுதி எடுத்துக் காட்டுகின்றது.

எங்கு? ஏன்? எதற்கு? வீசுவது என்று தெரியாமல் வீசப்பட்ட இராணுவத்தினரின் "பொம்பர்" ஒன்று சந்திரனது புதுமனையில் புகுந்து இடிந்து விழுந்த நிலையில் வீடு உருமாறி சிதைந்தது. சுவாமிப்படம் குடியிருக்க முன்பு "பொம்பர்" அங்கே குடியிருந்த நிகழ்வால் சந்திரன், பரிமளா நிலைகுலைந்து நின்றனர். (2000:207)

மனைவி, பிள்ளைகள், சொந்தபந்தங்கள் எனக் கூடிக்குலாவி மகிழ்ச்சியாக வாழ்ந்த மக்களை யுத்தம் வந்து பிரித்ததையும், மனைவியை இழந்து பிள்ளைகளைக் கண்காணாத தேசத்திற்கு அனுப்பிப் பிள்ளைகள் இருந்தும் அநாதையாக வாழும் சிற்றம்பலத்தாரின் கதை மூலம் யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட தனிமையை "சத்தங்கள்" சிறுகதை விளக்குகின்றது. யுத்தத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட உறவுகள் பற்றியும், அவர்களின் தனிமை வாழ்வு, அதனால் அவர்கள் அடைந்த துன்பங்கள், ஏழை மக்களின் வாழ்க்கையில் இன்னல்களை அளித்த போரின் கொடுமை போன்றவற்றை இவரது சிறுகதைகள் பிரதிபலிக்கின்றன.

**மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள்**

மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்கள் படிக்கக் கூடியவர்களாக இருந்தும் தமது குடும்ப வறுமை காரணமாக வெளியிடங்களுக்கு வேலைக்குச் சென்று அங்கு துன்பங்களை அனுபவிக்கின்றனர். இதனை இவரது "உத்தியோகம் கிடைத்தது" எனும் சிறுகதை எடுத்துக் காட்டுகின்றது. பின்வரும் பகுதியை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

காமாட்சி தனது மூத்த புதல்வியின் பேச்சுக்களை மனதில் ஜீரணித்துப் பொருமினாள். ஐந்து குழந்தைகளின் வயிற்றை தமது வருமானத்தால் எப்படி ஆற்றி விட முடியும்? அவள் கணவன் கண்ணப்பன் மூட்டை தூக்குபவனாக நடமாடும் சுமை தாங்கியாகி விட்டான். இருவரின் வருமானமும் அவர்களின் ஒரு நேரச்சாப்பாட்டிற்குத்தான் போதுமானமாக இருந்தது. இந்நிலையில் பிளள்ளகளை படிப்பிக்க வேறு செலவுகளுக்கு எங்கே போவது? (2000:87)

இவ்வாறு குடும்பக் கஸ்டத்திற்காக சிறுவயதிலேயே வேலைக்குச் செல்கின்ற மலையகத் தொழிலாளிகளின் ஏழ்மைநிலை இக்கதையினூடாகக் எடுத்துக் காட்டப்படுகின்றது.

**குடும்ப உறவு நிலை**

குடும்பத்திலுள்ள உறவுகளுக்கிடையில் நிகழும் தியாகங்கள், அன்புப் பரிமாற்றங்கள் போன்றவற்றை இவரது சிறுகதைகளில் காணலாம். "இதயச்சிறை" சிறுகதை தனக்காகவும், தன் சந்தோசத்திற்காகவும் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும் தனது அம்மா தன் காதலனின் அப்பாவை விரும்புகின்றார் என்று அறிந்ததும் அவர் மீது கோபம் கொள்ளாமல் அம்மாவிற்கு வாழ்க்கையில் கிடைத்த ஒரேயொரு சந்தோசம் அது எனப்புரிந்து கொண்டு தன்காதலை தன் தாய்க்காக விட்டுக் கொடுக்கின்ற தியாகமனம் படைத்த மகளைப் பற்றிக் கூறுவதாகக் காணப்படுகின்றது. உதாரணமாகப் பின்வரும் பகுதியை எடுத்துக் காட்டலாம். என் விருப்பங்களுக்காக.. தன் விருப்பங்களைத் தியாகம் செய்த என் அம்மாவுக்கு நான் செய்யும் கைம்மாறு என் காதலை அவருக்காகத் தியாகம் செய்து அதை அவருக்கே அர்ப்பணிப்பதுதான். (2020)

மேலும் மனைவியை அடிக்கடி கடிந்து கொண்டு மனைவியை திட்டும் கணவன் தன்குழந்தை தனது தவறைச் சுட்டிக்காட்டியதன் மூலம் தனது சோம்பேறித்தனத்தையும், அறியாமையையும் உணர்ந்து திருந்துவதை இவரது "அரும்பு தந்த திருப்பம்" எனும் கதை கூறுகின்றது.இவ்வாறு குடும்ப உறவுகளுக்கிடையில் நிகழும் தியாகம், பாசம் போன்றவற்றை இச்சிறுகதைகள் உள்ளடக்கியுள்ளதைக் காணலாம்.

**மேற்கத்தேய, தமிழ் கலாசாரங்கள்**

கலாசாரப் பண்பாட்டுப் பிரச்சினைகள் பற்றிப் புலம்பெயர் சிறுகதைகளில் அதிகமாக கூறப்படுகின்றன. தமிழ்க் கலாசாரப் பண்பாடும் மேலைத்தேயக் கலாசாரப் பண்பாடும் ஒன்றோடொன்று மோதும் நிலையில் நிகழும் உணர்வுத் தாக்கங்களை அவை எடுத்துக்

காட்டுகின்றன. விக்னா ஜேர்மனியக் கலாசாரம் சார்ந்த சிறுகதைகளையும், இரு கலாசாரங்களுக்குமிடையே ஏற்படும் கலாசாரப் பிறழ்வுகளையும் தனது சிறுகதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

தாய்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து சென்றவர்கள் அங்குசென்று தங்களின் கலாசாரப் பண்பாடுகளையும் மறந்து மேல்நாட்டுக் கலாசாரத்தில் மூழ்கி அதற்கு அடிமைப்பட்ட நிலைமையை "காலத்தின் கோலமா" சிறுகதை காட்டுகின்றது. தனது குடும்பக் கஸ்டங்கள் காரணமாக வெளிநாடு சென்று அங்கு கஸ்ரப்பட்டு உழைக்கின்றான். உழைத்த பணத்தை வீட்டுக்கு அனுப்பாமல் மகனின் பிறந்த தினத்தை அங்கேயே கொண்டாடுகின்றனான். தமிழ் கலாசாரத்தின்படி இறந்த ஒருவரின் படத்திற்குதான் மாலை போட்டு அஞ்சலி செலுத்துவர் என்பதை மறந்து மேலைத்தேயக் கலாசாரப்படி உயிரோடு இருக்கும் தனது மகனுக்கு மாலை போட்டு பிறந்தநாள் கொண்டாடுகின்றான். இவ்வாறு தனது கலாசாரப் பழக்கத்தை மறந்த ஒருவரின் நிலையை இச்சிறுகதை காட்டுகின்றது.

அத்துடன் விக்னாவின் "உறவுக்குப் போராட்டம்" எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறுகின்ற புதிய கோணங்கள் சிறுகதையும் இத்தகைய கலாசாரப் பிறழ்வைக் கூறுகின்றது. ஆசிரியர்களைக் கண்டால் எழுந்து மரியாதை செலுத்துதல் தமிழ் கலாசாரத்தில் முக்கியமான ஒழுக்க விடயம். ஆனால் மேலைநாட்டில் மாணவர்களும், ஆசிரியர்களும் நண்பர்கள் போலப் பழகுவதால் அவர்கள் ஆசிரியர் வரும்போது எழுந்து நின்றோ அவருக்குக் கைகூப்பி வணக்கம் செலுத்தியோ பழகியது இல்லை. இதனால் மேலைநாடுகளிலிருந்து வந்த சிறுவர்கள் ஈழத்தில் கல்வி கற்கும்போது அவர்கள் தமிழ்ப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் பேணமுடியாமல் தவிக்கின்ற நிலையை இக்கதை கூறுகின்றது.

''நான் படிச்ச பள்ளிக் கூடத்தில் அப்படிச் சொல்லவில்லையே. மாஸ்டரும் நாங்களும் நண்பர்கள் போலத்தான் பழகினாங்கள். நான் ஆசிரியரைக் கண்டால் எழும்பி நிற்கவில்லை. அவரும் என்னைக் கண்டால் எழும்புங்கோ என்றும் சொல்வதில்லை. ஏன் சேர் எழும்ப வேண்டும்? ஆசிரியர் ஏதாவது கேட்பார் அதை எடுத்துக்கொடுக்க வேண்டும் என்பதற்காக எழும்புவதா? என்று கேட்டான்.'' (1997:85)

இவ்வாறு மேலைநாடு, தமிழ்க் கலாசாரங்கள் பற்றியும், அவை வேறுபடுவதால் ஏற்படும் பண்பாட்டு மோதுகை பற்றியும் தமிழ்க் கலாசாரங்களில் வளர்ந்து தமிழ்ப் பண்பாட்டை அறிந்தவர்கள் மேலை நாட்டிற்குச் சென்றபின் அந்தந்த நாடுகளின் கலாசார மோகத்தால் தமிழ்ப் பண்பாட்டை மறந்து செயற்படுகின்றமையை இச்சிறுகதைகள் எடுத்துரைக்கின்றன.

**மொழி அந்நியப்பாடு**

புலம்பெயர்ந்து வேறுநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கு மிகமுக்கியமான பிரச்சினை மொழிவேறுபாடாகும். இவர்கள் எதிர்கொள்ளும் மொழிப்பிரச்சினை பற்றியும், அவர்களின் தாய்மொழிப் பற்றினையும் இச்சிறுகதைகள் எடுத்தியம்புகின்றன. "ஒரு தன்மானத்தின் தவிப்பு" என்ற சிறுகதை தமிழ்மொழியின் மகத்துவம் பற்றியும், வெளிநாட்டில் வாழ்பவர்கள்

அங்கிருக்கின்ற மொழியினைப் புரிந்து கொள்ள முடியாமல் படும்அவதியையும் கூறுகின்றது. தமிழ்மொழிப் பாண்டித்தியம் உள்ளவர் வேற்று நாட்டு மொழியைப் புரிந்து கொள்ள முடியாமல் அவதியுறுகின்ற நிலையையும், தாய் மொழியை நினைத்து ஏங்குகின்ற நிலைமையையும் இக்கதை கூறுகின்றது

"காகித ஓடம்" என்ற சிறுகதை புலம்பெயர்ந்து வேறுநாட்டில் வாழ்ந்தாலும் தாய்மொழியின் மகத்துவத்தை தமது பிள்ளைகளும் கற்றறிய வேண்டும் என்று பல்வேறு சிரமங்களின் மத்தியில் அவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கப் போராடுகின்ற தாயைப் பற்றியதாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக:

''என்னவோ வாணி! நீர் சொல்றதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீரும் பிள்ளைகளும் நாளைக்குத் தாய்நாட்டிலே இறங்கும்போது உமது பிள்ளைகள் தமிழ்பேச எழுதத் தெரியாமல் மற்றப் பிள்ளைகளால் ஒதுக்கப்படுவார்கள். அப்போது தான் உம்முடைய பிள்ளைகள் உம்மீது ஆத்திரமும் வெறுப்பும் அடைவார்கள். எங்கள் அம்மா எங்களுக்குத் தமிழ் பேச எழுத வாசிக்கக் கற்றுத் தரவில்லையே, என்று திட்டும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. (2000:164)

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றோர் அவர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் எதிர்கொள்ளும் மொழிச்சிக்கல்களையும், தாய்மொழியின் மகத்துவம் அறியாது தமது பிள்ளைகளுக்கு அதனைக் கற்பிக்காமல் விடுகின்ற அறிவிலிகளையும் இவர் தனது கதைகளிலே சாடுகின்றமையைக் காணலாம்.

**சாதிப்பாகுபாடு**

தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகின்ற சாதிப்பாகுபாட்டின் பல்வேறு நிலைகள் பற்றி விக்னா தன்னுடைய சிறுகதைகளிலே வெளிப்படுத்துகின்றார். சாதிப்பாகுபாடு ஈழத்தில் மட்டுமல்லாது தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் பரந்து காணப்படுகின்றமையைத் தனது "செம்பிற் களிம்பு" எனும் சிறுகதையில் குறிப்பிடுகின்றார். ஒருவன் தாழ்த்தப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்ததால் ஊரை விட்டுத் துரத்தப்பட்டுகின்றான். இதனால் சொந்த நாட்டில் வாழ இயலாது ஜேர்மனி செல்கின்றான். ஆனால் அங்கும் தமிழர்கள் வாழும் இடங்களில் இச்சாதிப் பாகுப்பாடுகள் இருப்பதைக் கண்டு மனவருத்தம் அடைகின்றான். சாதிப்பாகுபாடு கடல்கடந்தும் தமிழ் மக்களிடையே ஊறிவந்துள்ளதை இக்கதை கூறுகின்றது. உதாரணமாக பன்வரும் பகுதியைக் கூறலாம்:

இவர்களை எனக்குத் தெரியும் போல இருக்கு. இவர்களின் கதையிலிருந்து தெரிந்து கொண்டேன். அந்தப் பொம்பளை யார் என்று தெரியுமோ? மீன் பிடிக்கும் பொன்னர் இருக்கிறாரே அவரின் பேத்தி மீனவ ஆட்கள். தண்ணி ஊத்துவம் கப்புகளை கழுவு. இல்லை. பொறு! இதைப் பாவிக்க வேண்டாம். பழைய கப்புகள் கொஞ்சம் கிடக்கு அதில ஊத்திக் குடுப்பம்" என அம்மா மகளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.
(2000:148)

இவ்வாறு சாதி என்பது ஒருகறை போல எப்போதுமே தமிழ் சமூகத்திடையே ஒட்டிக் கொண்டு காணப்படுவதை விக்னா இக்கதையில் குறிப்பிடுகின்றார்.

**நிறவாதம்**

புலம்பெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளிலொன்று நிறப்பிரச்சினையாகும். விக்னாவின் "தெளிவு" எனும் சிறுகதையானது புலம்பெயர் சிறுவர்களிடம் காட்டப்படும் நிறப்பாகுபாடு பற்றிக் கூறுகின்றது. புலம்பெயர்தமிழ்ச் சிறுவர்கள் வெளிநாட்டுப் பாடசாலைகளில் கல்வி கற்கும் போது மேலைத்தேய நாட்டு சிறுவர்களால் நிறரீதியாக ஒதுக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் மனதில் ஏற்படும் பாதிப்பை இக்கதை எடுத்துக்காட்டுகின்றது. இதனை பின்வரும் பகுதி விளக்குகின்றது:

பிரியாவின் கண்களிரண்டிலிருந்தும் முத்து முத்தாக கண்ணீர் „பொல பொலவென்று கொட்ட; அங்கே நிற்கின்றான் தொப்பியாஸ். அவன் என்னைப் பார்த்து நீ ஒரு நாளும் குளிப்பதில்லையா? அதுதான் உம்மை பாரக்கப் புகைக்கூடு துடைக்கிற ஆளின் நிறம் போல இருக்கிறது. நீ குளித்தால் எங்களைப் போல வெள்ளையாக வருவீர் என்று கூறினான்" என தொப்பியாஸ் என்ற சகமாணவனைக் காட்டி அழுதாள். (2000:210)

**குழந்தை வளர்ப்புமுறை**

குழந்தைகள் வளரும் முறை, சூழல் என்பவற்றைக் கொண்டே அவர்களது நடத்தை முறைகள் மாறுபடுகின்றது. ஒருபிள்ளையின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது அப்பிள்ளை வளர்க்கப்படும் முறை ஆகும். ஒருபிள்ளையை நல்ல முறையில் வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உண்டு. பெற்றோர் தம்பிள்ளைக்கு எவ்வாறான விடயங்களைக் கூறி வளர்க்கின்றனரோ அதேபோன்றுதான் அப்பிள்ளையின் செயல்களும் அமையும். இவ்வாறு பிள்ளையின் எதிர்காலத்தில் முக்கியபங்கு வகிக்கும் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்க்கும்போது விடும் தவறுகளையும், பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதையும் விக்னா தனது சிறுகதைகளில் குறிப்பிடுகின்றார்.

இவரது "கனவும் நிறைவும்" சிறுகதையானது புலம்பெயர்ந்து சென்று வாழும் பெற்றோர்கள் மேலைநாட்டுக் கலாசார மோகத்தில் சிக்குண்டு தங்கள் பிள்ளைகளும் மேலைநாட்டுக் கலாசாரத்தின்படி வாழ வேண்டும் என்று நினைத்துப் பிள்ளைகளைப் பாரம்பரிய பண்பாட்டில் இருந்து மாற்றி மேலைநாட்டுப் பண்பாட்டிற்கு அடிமைப்படுத்துகின்றனர். இதனால் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கத் தவறுகின்றனர். இதனால் பிள்ளைகள் குறிப்பாக வயதுவந்த பிள்ளைகள் மேலைநாட்டுக் கலாசாரத்தில் தீயபழக்கங்களைப் பழகி தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரத்தைச் சீரழிக்கின்றனர். இத்தகைய விடயத்தைச் சொல்வதாக இக்கதை அமைகின்றது. இதனை பின்வரும் எடுத்துக்காட்டு விளக்குகின்றது.

லட்சுமி! இங்கே வாங்கோ! இது என்ன அநியாயம். சிகரெட் தொடாத என் அண்ணனின் மகளா? நம்ப முடியவில்லையே. அதிலிருந்த புத்தகங்களையும், சிகரெட் பெட்டியையும் அறை

வாசலில் எடுத்து எறிந்தாள். லட்சுமி இதோ பாருங்கள் ஜேர்மனியக் கறுப்புக் குடும்பமே பாருங்கள் இவை என்ன? சொல்லுங்கள்..நீங்கள் சொன்ன மாதிரி உங்கள் நவியா நல்ல பழக்கம் பழக வேண்டும். அதில் ஒன்று தானே இவை. ஜேர்மன் பெண்களின் முக்கிய பழக்கங்களில் ஒன்று. அதுதான் நவியாவும் உடனே பின்பற்றி விட்டாள். உங்கள் விருப்பமும் அதுதானே (2000:32)

அடுத்ததாக சிறுவயதுப் பிள்ளைக்கு அப்பிள்ளையின் அறிவுக்கு எட்டிய வயதில் இருந்து பழக்கிவரும் ஒரு பழக்கத்தை இடைநடுவில் நிறுத்தி விடும்போது அக்குழந்தைக்கு மனரீதியாக மிகப்பாரிய தாக்கம் ஏற்படும். இவ்விடயத்தை இவரது "பிஞ்சு மனம்" எனும் கதை கூறுகின்றது. சிறுவயதில் இருந்து தனது பிள்ளைக்கு ஒவ்வொரு பிறந்த தினத்திற்கும் புத்தாடை அணிவித்து அவளது பிறந்தநாளைக் கொண்டாடி வந்தவர்கள். தங்களது பொருளாதாரச் சிக்கல் காரணமாகப் பிறந்தநாளைக் கொண்டாடாமல் விடும்போது அக்குழந்தை உளரீதியான தாக்கத்தைச் சந்திக்கின்றது. இதனைப் பெற்றோர் கவனிக்க தவறுவதை கூறுவதாக இக்கதை அமைகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் அக்கறை எடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு வீட்டிலும் ஒழுங்கான பயிற்சிகளை வழங்க வேண்டும் என்றும் "வருங்காலச் சிற்பிகள்" கதை கூறுகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பினால் மட்டும் கடமை முடிந்து விட்டது என எண்ணாமல் அவர்களது கல்வியின் முன்னேற்றங்களை அடிக்கடிக் கண்காணிக்க வேண்டும் என்பதை இக்கதை மூலம் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறாக விக்னாவின் சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் காணப்படுகின்றன.

**விக்னா பாக்கியநாதனின் சிறுகதைகளில் கையாளப்படும் உத்திமுறைகள்**

ஒரு படைப்பாளியின் சிறந்த ஆக்கத் திறனும், ஆளுமைத் திறனும் உத்தி எனப்படுகின்றது. சிறுகதை சிறப்பாக அமைய நடைத் தெளிவு, சிறந்த பாத்திரப் படைப்பு, நோக்கு நிலை, மொழிநடை போன்ற உத்திகள் சிறந்த முறையில் அமைந்திருத்தல் வேண்டும். இந்த ரீதியில் விக்னாவினுடைய சிறுகதைகளில் உள்ள படைப்பாக்க உத்திகள் குறிப்பிடத்தக்கன.

**எடுத்துரைப்பு முறை**

சிறுகதையானது நல்ல முறையில் எழுதப்படவும், வாசகர்களைக் கதைக்குள் முழுமையாகக் கவர்ந்திழுக்கவும் சில உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இது எடுத்துரைப்பு முறை எனப்படுகின்றது. ஆசிரியர் தான் கூறவந்த நிகழ்ச்சியையோ, சம்பவத்தையோ எந்தக் கோணத்தில் நின்று கூறுகின்றார் என்பதை எடுத்துரைப்பு முறை காட்டுகின்றது. விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகளில் ஆசிரியர் கதை கூறல், கதாபாத்திரம் கதை கூறல், உள்மனப்பேச்சு ஆகிய கதை எடுத்துரைப்பு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கதைமாந்தர் கதை கூறல்**

சிறுகதையில் வருகின்ற பாத்திரமோ அல்லது துணைப் பாத்திரமோ கதை கூறுவதாக அமைவது கதைமாந்தர் கதை கூறும் உத்தியாகும். "கொடுத்து வைத்தவன்" , "செம்பிற் களிம்பு" "உள்ளக்கிடக்கை" போன்ற சிறுகதைகள் இவ்வுத்தி முறையில் அமைந்துள்ள சிறுகதைகளாக உள்ளன. "கொடுத்து வைத்தவன்" சிறுகதையில் வருகின்ற நவீனா எனும் பாத்திரம் கதையை நகர்த்திச் செல்லும் பாத்திரமாக அமைந்துள்ளது. இதனைப் பின்வரும் பகுதி விளக்குகின்றது.

எனது வேலைத் தளத்துக்குச் சென்றதும் வேலைக்குரிய உடையைத் தரித்துக் கொண்டு எனது பிரிவுக்குச் சென்றேன். நான் சென்ற போது என்னுடன் சேர்ந்து வேலை செய்யும் பெண் இஷபெல்லா ஏற்கனவே அரை மணித்தியாலயத்திற்கு முன்னரே வந்து விட்டாள். (2000:116)

"செம்பிற் களிம்பு" என்ற சிறுகதையின் பிரதான பாத்திரம் கதையைக் கூறுகின்றதாக அமைந்துள்ளது. இவரது சிறுகதைக வித்தியாசமான கதை எடுத்துரைப்பு முறையைக் கொண்டதாக "உள்ளக்கிடக்கை" எனும் சிறுகதை அமைகின்றது. இக்கதையில் ஒருநாய் பாத்திரமாக்கி கதையை நகர்த்திச் செல்லும் தன்மையைக் காணலாம்.

இவ்வாறு விக்னாவின் சிறுகதைகள் கதைமாந்தர் கதை கூறும் உத்தியில் அமைந்துள்ளன.

**ஆசிரியரே கதை கூறல்**

ஆசிரியர் கதை கூறும்போது நான் என்று கதை சொல்லுவது போலச் சொல்லாமல் படர்க்கை முறையில் கதை கூறுவது ஆசிரியர் கதைகூறும் உத்தியாகும். விக்னாவினுடைய கதைகளில் பெரும்பாலானவை இவ்வாறான முறையில் அமைந்த சிறுகதைகளாகவே உள்ளன. "இதயச் சிறை" ,"கனவும் நிறைவும், "ஆண்டி அல்ல" , "புதிய கோணங்கள்" போன்ற சிறுகதைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பின்வரும் பகுதியை இதற்கு எடுத்துக் காட்டலாம். இன்று பயிற்சி நெறிப் பாடசாலையில் அவளுக்கு பத்தரை மணிக்குத்தான் பாடம் ஆரம்பம் என்று ஏற்கனவே தெரிந்திருந்தபடியால் இந்த நீண்ட நேர நித்திரை நவியாவுக்கு. மேலதிகமாக அவளுக்கு செல்லம் கொடுத்த அவளது தாய் அன்றைக்குத் தானே அப்படி நித்திரை கொள்கின்றாள் என பேசாது விட்டு விட்டாள். (2000:22)

**உள்மனப்பேச்சு**

பாத்திரத்தின் விருப்புவெறுப்புக்கள், மனச்சஞ்சலங்கள், ஏக்கங்கள் போன்ற மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு உத்தியாக உள்மனப்பேச்சுக் காணப்படுகின்றது. "காலத்தின் கோலமா?" சிறுகதையில் பிரதான பாத்திரமான மாதவனின் மனவோட்டமானது ஆசிரியர் கூற்றாக அமையும் உள்மனப் பேச்சில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் பகுதி வெளிக்காட்டுகின்றது. தனது மகனின் பிறந்ததினத்தைத்தான் கொண்டாட முடியவில்லையே?

சீதா அங்கு என்னமாதிரி கொண்டாடுகிறாளோ? உடைகள் வேண்டிக் கொடுக்கிறாளோ? என யோசித்து கவலையில் மூழ்கினான். (விக்னா 2000:191)

மேலும் "காலந்தாழ்த்திய தெளிவு" சிறுகதையில் சித்ரா என்ற கதாபாத்திரத்தின் மனவுணர்வுகள் ஆசிரியர் கூற்றாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு விக்னாவினுடைய சிறுகதைகளில் ஆசிரியர் கூற்றாக அமையும் உள்மனப்பேச்சு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

**பாத்திரப்படைப்பு**

சிறுகதையில் முக்கியத்துவம் பெறுவது பாத்திரங்கள்தான். அளவில் சிறியதாகவும் பொருளைத் தெளிவாகக் கூறுவதாகவும் இருக்க வேண்டும் என்பதால் சிறுகதைகளில் அவசியமற்ற கதாபாத்திரங்கள் தவிர்க்கப்பட்டு தேர்ந்து எடுக்கப்பட்ட பாத்திரங்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. விக்னா தன்னுடைய கதைகளில் யதார்த்த பூர்வமான பாத்திரங்களையே அதிகமாகப் படைத்துள்ளார். இவருடைய கதைகளில் தாழ்த்தப்பட்ட சாதி மக்களில் இருந்து பெண்ணியம் பேசுகின்ற பெண்கள் வரை சமூகத்தின் அனைத்துமட்ட மாந்தர்களும் வலம் வருகின்றனர்.

விக்னா தன்னுடைய கதைகளில் பெரும்பாலும் பெண் கதாபாத்திரங்களையே முதன்மையாகப் படைத்துள்ளார். இவருடைய கதைகளில் உள்ள பெண் கதாப்பாத்திரங்கள் அன்றாட வாழ்க்கையில் காணும் இல்லத்தரசிகள், தனது தன்மானத்தை காக்கப் போராடும் பெண்கள், பெண் விடுதலையைக் காக்கப் போராடும் போராளிகள் என உயிரோட்டமுள்ள வகையில் படைக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக இதயச்சிறை சிறுகதையில் தனது மகளுக்காக தன்னுடைய சந்தோசத்தையும், ஆசையையும் அர்ப்பணித்து வாழும் ஒரு தியாகத் தாய், அதே நேரத்தில் தனது அம்மாவிற்காக தனது காதலையே அழிக்கும் ஒரு தியாக உள்ளம் கொண்ட மகள் போன்ற பாத்திரங்களைக் கூறலாம். மேலும் இவரது சிறுகதைகளில் பெண்பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்களாகவும் ஆண் பாத்திரங்கள் துணைப்பாத்திரங்களாகவும் படைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக "மாறியது நெஞ்சம்" எனும் கதையில் வரும் கோகிலா முதன்மைபாத்திரமாகவும், அவளது கணவன் துணைப்பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

விக்னா தன்னுடைய சிறுகதைகளில் பாத்திரங்களை உயரோட்டமுள்ளதாய் படைத்துள்ளார். உதாரணமாக "உத்தியோகம் கிடைத்தது" சிறுகதையில் மலையக ஏழைச் சிறுமியான தங்கமணியின் தோற்றத்தையும், அவள் செய்கின்ற வேலைகளையும் விவரிக்கும் போது உயிர்த்துடிப்புடன் வாசகர் மனக்கண்முன் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனைப் பின்வரும் பகுதி விளக்குகின்றது.

முற்றத்தைக் கூட்டிப்பெருக்கி பூங்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டு பின் துணிமணிகளை சலவை செய்து சூரிய ஒளி படக் கூடியதாக அவற்றை கயிற்றிலே காய விட்டு கால்களில் ஒட்டியிருந்த மண்ணைக் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றாள். (2000:85)

இவரது கதைகளில் சிறுகுழந்தைகளே தனித்துவமான பாத்திரங்களாகக் காணப்படுகின்றனர். உதாரணமாக "அரும்பு தந்த திருப்பம்" கதையில் வரும் தினேஸ் எனும் குழந்தை தனது தந்தையை திருத்தும் குழந்தையாகவும், "உறவுக்குப் போராட்டம்" சிறுகதையில் வரும் வாணி எனும் குழந்தை தாயின் அன்புக்காக ஏங்கும் குழந்தையாகவும், "புதிய கோணங்கள்" கதையில் வருகின்ற குழந்தைகள் தமிழ்க் கலாசாரப் பழக்கவழக்கங்கள் தெரியாமல் தவிக்கின்ற குழந்தைகளாகவும் வித்தியாசமான கோணங்களில் குழந்தைக் கதாபாத்திரங்களைப் படைத்துள்ளதைக் காணலாம்.

இவ்வாறாக விக்னாவினுடைய சிறுகதைகளில் வருகின்ற பாத்திரங்கள் அனைத்துமே யதார்த்த வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவையாகவும் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கின்ற பாத்திரங்களாகவும் படைக்கப்பட்டுள்ளமை இவருடைய சிறந்த பாத்திரவார்ப்பைக் காட்டி நிற்கின்றது.

**மொழிநடை**

ஒவ்வொரு படைப்பாளியினதும் மொழிநடை வெவ்வேறு விதமாக அமையும். மொழிநடை என்பது ஒவ்வொரு படைப்பாளியினதும் ஆளுமையுடன் தொடர்புபட்டதாக உள்ளது. நடையென்பது ஒரு ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதாகக் காணப்படும். ஆசிரியருடைய மொழிநடையானது எளிய நடையில் அமையும்போது அப்படைப்பு சிறந்த வெற்றியைப் பெறும். அந்தவகையில் விக்னாவினுடைய மொழிநடை நேரடியானதாகவும், விவரிப்புப் பாங்கினை உடையதாகவும் காணப்படுகின்றது. தனக்கேயுரிய தனிநடையுடன் சிறுகதைகளில் உவமைகள், வருணனை போன்ற மொழிநடை உத்திகளைப் பயன்படுத்திப் படைத்துள்ளமையைக் காணலாம். எதையும் நின்று நிதானமாக வர்ணித்துச் சொல்வது இவருடைய தனித்தன்மையாகக் காணப்படுகின்றது. ஒரு இடத்தைப் பற்றியோ பாத்திரத்தை பற்றியோ நிகழ்ச்சி பற்றியோ அவருடைய விவரிப்பு எளிமையான மொழிநடையில் அமைவதைக் காணலாம். தனது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் இத்தனி நடையினூடாக வெளிப்படுத்துகின்றார்.

**உவமைகள்**

விக்னா தன்னுடைய சிறுகதைகளில் உவமைகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பயன்படுத்தியுள்ளார். உதாரணமாகப் பின்வரும் சிறுகதைகளில் வரும் உவமைத்தொடர்களை எடுத்துக்காட்டலாம். "ஊனமுற்ற மனம்" சிறுகதையில் பின்வரும் உவமைத்தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தூண்டிய திரிதூண்டி சுடர்விடும் முன் எண்ணெய்க்குள் அமிழ்ந்தது போல (2000:108)

“செம்பிற் களிம்பு'' சிறுகதையில் பின்வரும் உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது.
நிலவுக்குப் பயந்து பரதேசம் போன கதைபோல் இருக்கிறதே என மனம் குமைந்தாள். (விக்னா 2000:146)

இவ்வாறாக கதையோட்டத்திற்கு ஏற்ப பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த உவமைகளை விக்னா பயன்படுத்தியுள்ளார்.

**வருணனை**

வருணனை நடை என்பது கற்பனைக்கு இடம் கொடுக்கின்ற முக்கிய சிறுகதை உத்தியாகும். விக்னாவின் கதைகளில் பாத்திர வருணனை, நிகழ்ச்சி வருணனை, உணர்ச்சி வருணனை போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பாத்திர வருணனை**

பாத்திர வருணனையானது சிறுகதையில் வரும் பாத்திரத்தை வாசகர் மனக்கண்முன் கொண்டு வருதற்கு உதவுவது. இவரது இதயச்சிறை கதையில் பிரதான பாத்திரத்தின் வருணனை பின்வருமாறு அமைகின்றது.

பேராசிரியை திருமதி சந்திரவதனியைப் பாரக்கும் போது அவரின் முகத்திலே அறிவின் ஒளி பிரகாசித்தது. வயது முப்பத்தியெட்டைத் தாண்டினாலும் கலையாத அழகும் சுறுசுறுப்பும் அவரது வயதைக் குறைத்துக் காட்டியது. இடையிடையே தலைமுடியில் ஓரிரண்டு வெள்ளிக் கம்பிகள்போல மயிர்கள் எட்டிப் பார்த்து அவரது வயதை உறுதி செய்து கொண்டிருந்தன. (2000:07)

இவ்வாறு விக்னாவின் சிறுகதைகளில் பாத்திரங்களின் அறிமுகம் வர்ணனையாகக் கூறப்பட்டுள்ளது.

**நிகழ்ச்சி வருணனை**

நிகழ்ச்சி வருணனைகள் விக்னாவின் சிறுகதைகளில் ஒரு சம்பவத்தை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவருடைய கிருகப் பிரவேசம் சிறுகதையில் புதிதாகக் கட்டிய வீட்டுக்குக் குண்டுபடும் நிகழ்வு ஆசிரியரால் வர்ணனையாகக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் பகுதி விளக்குகின்றது.
இரவு ஒரு மணியளவில் திடீரென டும்..டும்..டும்.. என்று சத்தம் தூரத்தில் கேடப்து போலிருந்தது (2000:206)

**உணர்ச்சி வருணனை**

விக்னாவின் சிறுகதைகளில் கோபம், அன்பு, ஏக்கம், ஆச்சரியம் எனப்பல வகைப்பட்ட உணர்வுகளும் இடம்பெறுகின்றன. இவ்வுணர்ச்சிகளைப் பாத்திரங்களின் வாயிலாக உணர்ச்சி வருணனைகளாக வெளிப்படுத்தியுள்ளார். “கனவும் நிறைவும்” கதையில் வரும் மீனாட்சியின்

கோபம் வருணனையாக வருகின்றது. இதனைப் பின்வரும் பகுதி விளகக்கின்றது. மைத்துனியை லட்சுமி! லட்சுமி! என ஆக்ரோசத்துடன் கூச்சலிட்டாள். லட்சுமி இங்கே வாங்கோ இது என்ன அநியாயம். அதை நீங்களா வாங்கி கொடுத்தீர்கள்?" (விக்னா 2000:32)

இவ்வாறு விக்னாவின் சிறுகதைகளில் வருணனைகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**சொல்லாட்சி**

சிறுகதையில் சொல்லாட்சி எனும் போது ஆசிரியருடைய சொற்கள் தொடர்பான ஆளுமை வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கின்றது. விக்னா புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்பவர் என்பதால் அவருடைய சிறுகதைகளில் வேற்றுமொழிச் சொற்களும், பேச்சு வழக்குச் சொற்களும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

**பிறமொழிச் சொற்கள்**

விக்னாவின் கதைகளில் ஜேர்மன் மொழிச் சொற்களே வேற்று மொழிச் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "ஒரு தன்மானத்தின் தவிப்பு" சிறுகதையில் ஜேர்மன் மொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக

"குட்மோகன் அயன் சிறைபற் போஸ்ற் பிற்ற என்ர சிறைபன் கியர்" எனக்கூறி அவளது கையொப்பத்தை வாங்கிக் கொண்டு சென்றார் தபாற்காரர். (2000:64)

**பேச்சு மொழிச் சொற்கள்**

விக்னாவினுடைய சிறுகதைகளில் பிரதேச பேச்சு வழக்குச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. "காலம் தாழ்த்திய தெளிவு" சிறுகதையில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக:

தங்கச்சி!பிள்ளை மோனே!!..என்ர கைத்தடியைக் காணேல்ல. (2000:96)

"உத்தியோகம் கிடைத்தது" சிறுகதையில் மலையகப் பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எம்பட்ட என்ன ஐயா இருக்கு? நான் தனியத்தான் இருக்கிறேன். நயினார் இன்னும் வரேல்ல வந்த பிறகு வாங்க சாமி." (2000:88)

இவ்வாறாக வேற்றுமொழிச் சொற்களையும், பிரதேச வழக்குச் சொற்களையும் விக்னாவின் சிறுகதைகளில் காணமுடிகின்றது.

**முடிவுரை**

விக்னா பாக்கியநாதனுடைய சிறுகதைகள் பெண்கள் சார்ந்த பிரச்சினைகள், மொழிஅந்நியப்பாடு, போர்க்கால அவலங்கள், அனுபவங்கள், ஜேர்மனிய, தமிழ்க் கலாசாரப் பழக்கவழக்கங்கள, அவற்றின் முரண்கள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. விக்னாவின் சிறுகதைகளில் தனது நேரடி அனுபவங்கை யதார்த்த பூர்வமாக வெளிக்கொண்டு வந்துள்ளார். விக்னாவின் சிறுகதைகள் சிறந்த சிறுகதைக்குரிய உத்திமுறைகளைக் கையாண்டு எழுதப்பட்டவையாகக் காணப்படுகின்றன. விக்னாவினுடைய சிறுகதைகளில் அவரது பன்முகப்பட்ட ஆளுமைத் தன்மை வெளிப்படுத்தப்படுகின்றது. தனது சிறுதைகளை ஒரேவகையான கருப்பொருட்களைக் கொண்டு எழுதாமல் சமூகத்தில் உள்ள அனைத்துத் தளங்களிலும் நின்று எழுதியுள்ளார். இது இவரது எழுத்துக்களில் காணப்படும் சிறப்பம்சமாக உள்ளது. தனது சிறுகதைகள் எல்லாவற்றிலும் எளிமையான மொழிநடையையே கையாண்டுள்ளார். சிறுவர்கள், பெரியவர்கள் என அனைத்து மட்ட வாசகர்களையும் மனங்கொண்டு தனது படைப்புக்களைப் படைத்துள்ளார். இவரது சிறுகதைகளில் சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளும் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கான சீர்திருத்தக் கருத்துக்களும் காணப்படுகின்றன.

இவரது சிறுகதைகள் மூன்று முக்கியமான விடயங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவையாவன பெண்களை மையப்படுத்தியவை, சிறுவர்களையும், பெற்றோர்களையும் மையப்படுத்தியவை, மேற்கைத்தேய, தமிழ்க்கலாசார விடயங்களை மையப்படுத்தியவை என்பனவாகும். தொகுத்து நோக்கும்போது விக்னா பாக்கியநாதனது சிறுகதைகளின் உள்ளடக்கம் மற்றும் அவர் கையாளும் மொழிநடை, உத்திமுறைகள் என்பன அவரது ஆளுமைச் சிறப்பிளை வெளிக்காட்டி நிற்கின்றன. இப்பின்னணியில், இவ்வாய்வின் மூலம் ஈழத்துப் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சியில் விக்னா பாக்கியநாதன் பெறும் முக்கியத்துவத்தையும், அவருக்கான இடத்தையும் அறியமுடிகிறது.

**உசாத்துணைகள்**

**1. சிறுகதைத் தொகுப்புக்கள்**

விக்னா பாக்கியநாதன்.,(1997), உறவுக்குப் போராட்டம், சென்னை24: சதுர்வேந்தன் அச்சகம்.
விக்னா பாக்கியநாதன்., (2000), இதயச்சிறை , சென்னை17: மணிமேகலைப் பிரசுரம்

**2. துணை ஆதாரங்கள்**

**இதழ்கள்**

உமா., மேற்கு ஜேர்மனியில் தமிழ்ச் சிறுகதைகள், 1990, சிந்தனை
வைரமூர்த்தி., தமிழ்ச் சிறுகதைகளும் உத்தி முறைகளும், 2009, முத்துகக்மலம்.
ஆய்வேடு: மேகராசா.த., 2022, ஜேர்மனியப் புகலிடத் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள்-சமூக பண்பாட்டு ஆய்வு (கலாநிதிப் பட்ட ஆய்வேடு), வந்தாறுமூலை: இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்.

# சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் நெறிகள்

Mrs. Gnanasekaram Dilosini
T/M/Kiliveddy Maha Vidyalayam,
Muthur,
Trincomalee.
*gnadilog22@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் அனைவரும் இப்பூவுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். 'எப்படியும் வாழலாம்' என்பதை விட 'இப்படித்தான் வாழ வேண்டும்' என சில நெறிமுறைகளை வகுத்து அதன்படி வாழ வேண்டும். நிலையில்லாத இவ்வுலகில் நிலைபெற்று மடிந்தவர்கள் சிறந்த செயற்பாடுகளுடன் வாழ்ந்து மடிந்தவர்களாவர். மனித வாழ்க்கை உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நீதிநெறியான சேவையைச் சமூகத்திற்குச் செய்ய முடியும். வாழ்வியல் நெறிகளைச் செம்மையாக வைத்துக் கொண்டு வாழ வேண்டும். சிறந்த நெறிகளைக் கடைப்பிடித்து வாழாதவிடத்து சமூகத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும். வாழ்வில் சீரிய நெறிகள் சீர்குலையுமாயின் தேசத்தில் பல்வேறு விதமான பாதக விளைவுகள் ஏற்படும். மனிதர்கள் ஒவ்வொருவரும் விழுமியப் பண்புகளுடன் கூடிய நீதி நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை பல இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. சிறந்த வாழ்வியல் நெறிகள் பண்டைத் தமிழ் நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. அந்தவகையில் மனித வாழ்க்கைக்குத் தேவையான சீரிய வாழ்வியல் நெறிகள் சிறுபஞ்சமூலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் காணப்படும் 'சிறுபஞ்சமூலம்' எக்காலத்திற்கும் ஏற்ற அறநெறியுடன் கூடிய, வாழ்வியல் நெறிக் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் நான்கு அடிகளில் ஐந்து கருத்துக்களை ஆழமாகக் கூறும் இந்நூலில் வாழ்வியல் நெறிச்சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலில் அறம் செய்தல், பிறரைப் பழி கூறுதல், பிறர்மனை நாடாமை, பக்கச்சார்பின்மை, பகிர்ந்து உண்ணுதல், நல்ல நூல்களின் படி ஒழுகுதல், நடுநிலைமை, தவறைப் பொறுத்தல், கொல்லாமை, களவு செய்யாமை, புலால் உண்ணாமை, தீய நட்பு கூடாது, கல்வி கற்றல், ஈகை, கொல்லாமை, பொய் சொல்லாமை, மாணவனின் கடமை, தவத்தின் இனிமை, தேசத் தொண்டு முதலான வாழ்வில் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய உயரிய நெறிகள் சிறந்த பிரஜைகளை உருவாக்கி, சிறப்பான தேசத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள் :*** *அறம், ஈகை, சிறுபஞ்சமூலம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், விழுமியம்*

**அறிமுகம்**

சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் அறத்தை வலியுறுத்தும் நீதி நூல்களாகப் பதினொரு நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 'சிறுபஞ்சமூலமும்' ஒன்றாக விளங்குகின்றது. இந்நூலின் ஆசிரியர், மாக்காயனார் மாணாக்கன் காரியாசான் ஆவார். சிறுபஞ்சமூலம் என்பது ஒரு மருந்தின் பெயராகும். மூலம் என்பது வேரைக் குறிக்கும். சிறிய ஐந்து வேர்கள் என்பதே சிறுபஞ்சமூலம் என்பதன் பொருளாகும். ஐந்து வேர்களால்(கண்டங்கத்தரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர்) ஆன மருந்துப் பண்டம் உடல் நோயைப் போக்குவது போல இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் ஐந்து கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வைந்து கருத்துக்களும் மனிதர்களின் மனப் பிணியை நீக்கி, உள்ளத்தைப் பரிசுத்தமாக வைத்திருக்கும் வகையில் அமைகின்றன. இந்நூல் 97பாடல்களை கொண்டுள்ளது. இந்நூலானது சிறந்த வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது.

**அறம்**

சிறுபஞ்சமூலம் எக்காலத்திற்கும் எற்ற வகையில் சிறந்த அறங்களை எடுத்துக்காட்டுகின்றது. கொல்லாமை, பொய்யாமை, புலால் உண்ணாமை, களவு செய்யாமை இவ்வறங்களுடன் ஏனைய அறங்களும் மக்கள் வினையைத் தீர்க்கும் வலிமையுடையன. ஆகவே இவ்வறங்களை வலியுறுத்துகின்றது. அறம் செய்பவன் பழியையும் பாவத்தையும் பிறரைப் பழிபடக் கூறும் புறமொழிகளையும் கூறமாட்டான். தவம் செய்ய வேண்டும். நீர் அளித்தல், நிழல் உண்டாகச் செய்தல், தமது வீட்டில் மற்றவர்கள் தங்குவதற்கு இடம் கொடுத்தல், உயிர்களுக்கு பகிர்ந்து கொடுத்து உண்ணுதல், கோயிலுடன் மரங்கள் நிறைந்த சோலையை உருவாக்குதல் இவை மிகவும் சிறந்த நல்ல அறங்கள் என்று சிறுபஞ்சமூலம் கூறுகின்றது. இவ்வறங்களைச் செய்வதால் பேரின்பம் உண்டாகும்.

''நீரறம் நன்று நிழல் நன்று தன்னில்லுள்
பாரறம் நன்று பார்த்து உண்பானேல் - பேரறம்
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாம் சால வுடன்''(63)

உலகில் மிகவும் பெரிய அறங்களாகச் சான்றோர் குறிப்பிட்ட விடயங்களை சிறுபஞ்சமூலம் எடுத்துக்காட்டியுள்ளது. தாய், தான் பெற்ற குழந்தையை வளர்த்தல், தான் அடைந்த கருவை அழிக்காது வெளிப்படுத்தல், வளர்ப்பவர் இல்லாத குழந்தையை கண்டு எடுத்து வளர்த்தல், கருக்கொண்ட கன்னியையும் மிகவும் வருந்தியர்களையும் வீட்டில் வைத்துப் பாதுகாத்தல் என்பன நூலறிவோர் கூறிய பெரிய அறங்களாகும்.

''ஈன்றெடுத்தல் சூல் புறம் செய்தல் குழவியை
ஏன்றெடுத்தல் சூலேற்ற கன்னியை – ஆன்ற
அழிந்தாளை இல்வைத்தல் பேரறமா ஆற்ற
மொழிந்தார் முதுநூலார் முன்பு''(72)

நல்வாழ்வை அடையும் பொருட்டு நல்ல நெறிகளை அறிந்தவர்கள் தீய சொற்களை சொல்லுதல், மக்கள் நடக்கும் வழியில் சென்று துன்பமடைதல், தாழ்வுபடுவதில் பொருந்துதல், சான்றோர் கூறிய நீதிகளை சினந்து வெறுத்தல் ஆகியவற்றை ஆராய்ந்து நீக்கிவிடுவதும் அறமாகும் என்கிறது சிறுபஞ்சமூலம்.

''வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை
குறிப்படரல் தீச்சொற்களோடு – மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துயக் கற்றவர்
ஆய்ந்து விடுதல் அறம்''(97)

இவ்வாறு அறம் பற்றிக் கூறி மனிதர்கள் அறம்செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது.

**ஈகை**

பூமியில் உதவியின்றி, பொருளின்றி வாழ்பவர்களுக்கு முடிந்தவரை உதவி செய்வது ஈகையாகும். புகழ் நிறையக் கொடை செய்ய வேண்டும். 'ஈதலிசைபட வாழ்தலதுவல்ல தூதியமில்லை யுயிர்க்கு' என்பதற்கிணங்க ஈதல் அறம் பற்றிச் சிறப்பாகக் கூறப்படுகின்றது. ஒருவன் தன்னிடமிருந்து நீங்கியவற்றுக்கு இரங்காதவனாகவும் தனக்கு கிட்டாதவற்றை விரும்பாதவனாகவும் பொருள் இல்லாதவர்கள் இரந்து கேட்டவற்றை உள்ளம் மகிழ்ந்து, இன்சொல்லுடன் கொடுப்பவனாக விளங்கினால் அவன் தேவர்களால் துதிக்கப்படுவான் என்று கூறி மற்றவர்களுக்கு இன்முகத்துடன் கொடுப்பதை பற்றிக் கூறுகின்றது.

''மென்மொழியால் உள்நெகிழ்ந்து ஈவானேல்
விண்ணோரால் இன்மொழியால் ஏத்தப்படும்.''(82)

பிறர் வேண்டியதை ஈவது மிகவும் நல்லதாகும். ஈயாமல் இருப்பது தீமையையே தரும். 'ஈவது நன்று தீது ஈயாமை…'(94) ஒருவன் தான் ஈட்டிய பொருளைப் பிறருக்கு கொடுக்க வேண்டும். இந்தப் பிறவியில் ஒருவன் சிறப்பாக இருக்க விரும்பினால் கொடை நல்க வேண்டும். 'இடம்பொழிய வேண்டுமேல், ஈகை'(4) என்கின்றது.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஈகைக் குணமுடையவர்களாக விளங்க விளங்க வேண்டும்.

**தீமையானவை**

மனிதனுக்கு வாழ்வில் தீமை பயக்கும் விடயங்கள் எவை? என்பதை எடுத்துக்கூறி அத்தீய விடயங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் சிறுபஞ்சமூலம் வலியுறுத்துகின்றது. பிறர் செய்த தவறைப் பொறுக்காமை, பிறர் செய்த தீமையை நினைத்துக் கொண்டிருத்தல், மற்றவர்களுடன் பகை கொள்ளுதல், பிறரை ஏளனம் செய்தல் முதலானவை எந்தவொரு நன்மையையும் பயக்காமல் தீமையையே தரும். கள்ளுண்ணல், கணவனைப் பிரிந்து வாழ்தல், பிறர்மனை நாடுதல், பிறரின் செயல்களை ஆராய்தல், தீயவருடன் நட்புக்கொள்ளுதல் இவை தீய தொழில்களாகும். ஆகவே அத்தீய செயல்களை விலக்க வேண்டும் என்கிறது.

''கள் உண்டல், காணின் கணவற் பிரிந்து உறைதல்,
வெள்கிலளாய்ப் பிறர் இல் சேறல், உள்ளிப்
பிறர் கருமம் ஆராய்தல், தீப் பெண் கிளைமை,

திறவது தீப் பெண் தொழில்.''(23)

உயிர்களைக் கொன்று உண்ணுதல், பொய் சொல்லுதல் கூடாது. உயிர்களைக் கொன்று உண்பதாலும் பொய் சொல்வதாலும் நாக்கு அற்றுப் போகும் என்கின்றது. பிறர் பொருளை களவு செய்தல், சூதாடல், பிறர் மனம் வருந்தும்படி வன்சொல் கூறுதல், புலால் விரும்புதல் என்பனவும் தீயவையாகும். இவற்றைத் தவிர்த்து உயரிய விழுமிய நெறியில் வாழ்பவனுக்கு மீண்டும் மீண்டும் பிறக்கின்ற பிறவித் துன்பம் இருக்காது என்று சிறுபஞ்சமூலம் கூறுகின்றது.

''கள்ளான், சூது என்றும் கழுமான், கரியாரை
நள்ளான், உயிர் அழுங்க நா ஆடான், எள்ளானாய்,
ஊன் மறுத்துக் கொள்ளானேல், ஊன் உடம்பு எஞ்ஞான்றும்
தான் மறுத்துக் கொள்ளான், தளர்ந்து.''(19)

சிறுபஞ்சமூலம் தீமையான விடயங்களையும் அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டி, தீமையானவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்றது.

**மாணவர்களின் கடமை**

ஆசிரியம் காப்பவன் ஆசிரியர். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் மீது மாணவர்கள் அன்பு செலுத்த வேண்டும். மாணவர்கள் காமம், வெகுளி, மயக்கம் மூன்றையும் கைவிட வேண்டும்.

''ஆசான் அவற்கு இயைந்த மாணாக்கன், அன்பான், வழிபடுவான்,
மாணாக்கன் கற்பு அனைத்து கடிந்தான்…''(27)

மாணவர்களின் கடமைகளை சிறுபஞ்சமூலம் பின்வருமாறு கூறுகின்றது. மாணவர்கள் குடுமி வைத்துக்கொள்ளுதல் கூடாது. ஆசிரியரை வணங்க வேண்டும். நல்ல நூல்களை படிக்க வேண்டும். கேட்க வேண்டும். கேட்டவற்றை ஓத வேண்டும்.

''நெய்தல் முகிழ்த் துணை ஆம், குடுமி, நேர் மயிரும்
உய்தல் ஒரு திங்கள் நாள் ஆகும்,…
நுணங்கு நூல் ஓதுதல், கேட்டல், மாணாக்கர் வணங்கல்…''(28)

இலக்கண நூல், ஞான நூல், அளவை நூல், அறிவு மிக்க முத்தி நூல் என்பவற்றைக் கற்று அறிபவன் சிறந்த மாணவனாவான் என்கிறது. ஆகவே மாணவர்கள் இத்தகு சிறப்பான நூல்களைக் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

''சத்தமெய்ஞ் ஞானம் தருக்கம் சமயமே….''(86)

மாணவர்களின் கடமை, ஒழுக்கம் பற்றிக் கூறும் இந்நூல் இளமையில் கற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

**தேசத்தொண்டு**

தொண்டுகளில் சிறந்தது தேசத் தொண்டாகும். நாம் பிறந்த தேசத்திற்கு செய்ய வேண்டிய சீரிய தொண்டுகள் பற்றிச் சிறுபஞ்சமூலம் சிறப்பாகக் கூறுகின்றது. குளத்திலே நீரைத் தேக்கி வைக்க வேண்டும். நீர் தேங்கியிருந்தால்தான் வேளாண்மை செய்ய முடியும். நெற்பயிர் சிறப்பாக செழித்து வளரும். நாட்டில் பஞ்சம், பசியின்றிச் செல்வம் பெருகும். குடிமக்கள்

சிறந்து விளங்கினால் அரசாட்சியும் சிறந்து விளங்கும். இதற்காக பெரிய குளங்களை ஆழமாகத் தோண்ட வேண்டும்.

தரிசு நிலங்களைத் திருத்தி, கழனியாக்கி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வர். காடுகளை அழிக்கக் கூடாது. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். தளிர்த்து வளரக் கூடிய மரங்களை நட வேண்டும். மக்கள் நடக்கும் வழிகளை முட்புதர்கள், மேடுபள்ளங்கள் இல்லாது அமைக்க வேண்டும். இத்தகைய தேசத் தொண்டுகளைச் செய்பவர்கள் சொர்க்கத்தை அடைவர் என்கிறது சிறுபஞ்சமூலம்.

"குளம் தொட்டு, காவு பதித்து, வழி சீத்து,
உளம் தொட்டு உழு வயல் ஆக்கி, வளம் தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று இவை பாற்படுத்தான்
ஏகும் சுவர்க்கம் இனிது…"(64)

இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் தேசம் சிறப்பாக மிளிர செய்ய வேண்டிய தொண்டுகளை எடுத்துக்காட்டியுள்ளது.

**முடிவுரை**

சிறுபஞ்சமூலம் மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க சீலங்களை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. சிறந்த அறநெறிக் கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சிறுபஞ்சமூலம் கூறும் வாழ்வியல் நெறிகளில் அறம், ஈகை, தீயவை, மாணவர்களின் கடமை, தேசத்தொண்டு என்பன பற்றிய கருத்துக்களும் குறிப்பிடத்தக்கன. இந்நூல் கூறும் ஒழுக்க சீலங்களைக் கடைப்பிடிப்பதால் நல்ல பிரஜைகளை உருவாக்கலாம். சிறுபஞ்சமூலம் கூறியிருக்கும் வாழ்வியல் நெறிகள் இன்றும் நாம் பின்பற்ற வேண்டியவையே. ஆகவே சிறுபஞ்சமூலம் கூறிய வாழ்வியல் நெறிகளை மனிதர்கள் பின்பற்றி சிறப்பாக வாழவேண்டும்.

**உசாத்துணைகள்**

1. சிதம்பரனார்,சாமி.,2003, பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், ஸ்ரீ சரவணன் பிரிண்டர்ஸ், சென்னை.
2. பழனியாண்டி, சு., 2009, சிறுபஞ்சமூலம் ஒரு சமூகவியல் பார்வை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. புன்னைநாத முதலியார், சி.(உரை), 1936, சிறுபஞ்சமூலம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

# Educational Ethics & Psychology

# சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

Ms. Navareththinam Kethini
Department of Education and Childcare,
Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
*kethu4174@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

எமது நாட்டைப் பொறுத்தவரையில் கற்றல் செயற்பாடுகள் வினைத்திறனாக அமைவதற்கு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான நடத்தைகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய நடத்தைகள் அனைத்து மாணவர்களிடமும் சிறப்பாகக் காணப்படுகின்றனவா என நோக்கினால் அவை சிறப்பாகக் காணப்படவில்லை என்றுதான் கூற வேண்டியுள்ளது. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டுமாயின், ஒழுக்கம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் இன்றைய காலகட்டங்களில் இடைவிலகல் முரண்பாடுகள், தகாத நட்பு, போதைப்பொருள் பாவனை, பாடசாலைக்கான தொடரான வரவு ஒழுங்கீனம் எனப் பல ஒழுக்க சீர்கேடுகள் மாணவர்களிடையே காணப்படுகின்றன. அந்தவகையில் ''சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்'' என்ற தலைப்பிலான இவ் ஆய்வானது மண்முனை மேற்கு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் பற்று மேற்கு கல்விக்கோட்டத்திலுள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏறாவூர் பற்று மேற்கு கல்விக்கோட்டத்தில் க.பொ.த சாதாரண தரத்தைக் கொண்டுள்ள ஐந்து பாடசாலைகளும் ஆய்வாளரால் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதில் 1C பாடசாலைகளின் அதிபர்கள் 02, வகை 2 பாடசாலைகளின் அதிபர்கள் 03, ஆசிரியர்கள் மற்றும் ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்கள் 52, மாணவர்கள் 120, பெற்றோர்கள் 40, ஆகியோரை நோக்க, இலகு எழுமாற்று மாதிரி, வசதி மாதிரியினூடாகத் தெரிவு செய்து வினாக்கொத்து, நேர்காணல், ஆவணம் மூலமாக அவர்களிடமிருந்து அளவு மற்றும் பண்புரீதியானதுமான தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளின் பிரகாரம் மாணவர்களிடம் காணப்படுகின்ற முரண்படுதல், பணிவின்மை, போதைப்பொருள் பாவனை, வரவு ஒழுங்கீனம் எனப் பல ஒழுக்கரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப்பிரச்சினைகளினால் கற்றலில் ஆர்வமின்மை, இடைவிலகல், பெறுபேற்று வீழ்ச்சி என்பன அவர்களின் கற்றல் செயற்பாடுகளின் எதிர்விளைவுகளாக அமைகின்றன. இந்நிலையினை மாற்றியமைக்க வேண்டுமாயின், பெற்றோர் பிள்ளைகள் மீதும் அவர்களின் நடத்தைகள், கற்றல் செயற்பாடுகள் மீதும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவை தொடர்பாகப் பெற்றோர்களுக்கும், மாணவர்கள் சார்ந்த அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர்களிடையே காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகளை இல்லாதொழித்து அவர்களைக் கற்றலில் உயர்வடையச் செய்யும் நோக்கில் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இடைவிலகல், ஒழுக்கம், கற்றல், சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள்,*

## அறிமுகம்
## ஆய்வு அறிமுகம்

இன்று உலகில் உள்ள பல்வேறு பாகங்களிலும், பல்வேறு துறைகளிலும் பல பரிமாணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய அறிவைக் கண்டறிவதற்கும் கல்வித் துறையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு அதனை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதற்கும் ஆய்வானது அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் கற்றல் தொழிற்பாடானது மேம்பட்ட வகையில் இடம்பெறுவதற்கு ஆய்வானது பெரிதும் வேண்டப்படும் ஒரு தேவையாக உள்ளது.

எதிர்காலத்தில் மாணவர்கள் உலக சவால்களை இலகுவாக வெற்றி கொள்வதற்காகவும், அறிவினை விருத்தி செய்வதற்காகவும், வேலையுலகில் சிறந்த வேலையினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஒழுக்கமுள்ள பிள்ளைகளாக இருந்து கற்றலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இச்சூழலில் ஆய்வுப் பிரதேசமான ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஒழுக்கமானது குறைவாகக் காணப்படுவதாகவும் இதனால் கற்றலில் பின்தங்கிய நிலை காணப்படுகின்றது என சமூக நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் போன்றோர் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் ‘‘சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கரீதியான பிரச்சினைகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்’’ எனும் தலைப்பில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களை உள்ளடக்கி ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப்பிரச்சினை**

கல்வி என்பது இந்த உலகத்தில் பெரிதாக மதிக்கப்படும் முக்கியமானதொரு விடயமாகும். இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவையாகி விட்டது. கல்வியை மட்டும் வைத்துக்கொண்டு மனிதன் வாழ்க்கையில் உயரிய நிலைக்குச் செல்ல இயலாது. வாழ்க்கைக்கு கல்வி எவ்வளவு அவசியமோ அந்தளவிற்கு ஒழுக்கமும் மிகவும் அவசியமாகும். மாணவர்களின் நடத்தைகள் சீரும் சிறப்புமாக இருந்தால் தான் எதிர்காலத்தில் நன்னடத்தை உள்ளவர்களாகவும் ஒளிமயமான உலகத்தை நோக்கி முன்னேறுபவர்களாகவும் வளர்ச்சியடைவர். இந்த அடிப்படையில் தற்காலத்தில் மாணவர்களிடையே ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதனால் அவர்களின் கற்றலானது பாதிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் எத்தகைய ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் மாணவர்களிடையே காணப்படுகின்றது என்பதை இணங்காண்பதோடு அவை எத்தகைய தாக்கத்தினை அவர்களின் கற்றலில் செலுத்துகின்றது என்பதை இனங்கண்டு அப்பிரச்சினைகளை சரிசெய்வதற்கான ஆலோசனைகளை முன்வைப்பது ஆய்வாளனின் எதிர்பார்ப்பாகும்.

**ஆய்வுப்பிரச்சினைக் கூற்று**

“மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களில் உள்ள பாடசாலை மாணவர்களை விட ஏறாவூர்ப் பற்று மேற்கு கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடமே அதிகளவான ஒழுக்க ரீதியிலான பிரச்சினைகள் காணப்படுகின்றது.”

அட்டவணை 1.1 மட்டக்களப்பு மேற்கு வலயத்திலுள்ள ஏறாவூர்பற்று மேற்கு கோட்டத்தில் 2022 ஆம் ஆண்டு சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்பட்ட இடைவிலகல் பற்றிய விபரம்.

| பாடசாலை | மாணவர்களின் எண்ணிக்கை (இடைவிலகல் தரம் -10, 11) | | கற்றலில் ஆர்வமின்மை |
|---|---|---|---|
| | 2021 | 2022 | 2022 |
| A | 8 | 10 | 90% |
| B | 10 | 09 | 88% |
| C | 8 | 5 | 79% |
| D | 5 | 6 | 78% |
| E | 6 | 7 | 82% |

மூலம்: திட்டமிடல் பிரிவு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்,குறிஞ்சாமுனை- 2022

இத்தரவின் படி கடந்த 2022 ஆம் ஆண்டில் ஏறாவூர்பற்று மேற்கு கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற்ற் மாணவர்களின் இடைவிலகல் பற்றிய தகவல்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1.2 மட்டக்களப்பு மேற்பு வலயத்திலுள்ள மூன்று கோட்டங்களிலும் 2022 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மொத்த சித்தி சதவீதம்.

| கோட்டம் | ப.தோற்றியோர் | ப.சித்தியடைந்தோர் | சதவீதம் % |
|---|---|---|---|
| ஏ.ப.மே | 164 | 42 | 26 |
| ம.தெ.மே | 360 | 165 | 45 |
| ம.மே | 1530 | 760 | 50 |
| வலயம் | 2082 | 947 | 45.4 |

மூலம்: திட்டமிடல் பிரிவு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம், குறிஞ்சாமுனை - 2018.

இத்தரவின் படி கடந்த 2022 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள மூன்று கல்விக் கோட்டங்களில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையும் , அதில் சித்தியடைந்த சதவீதமும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

இதன்படி 164 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய போதும் 42 மாணவர்கள் மட்டுமே சித்தியைப் பெற்றுள்ள கோட்டமாக ஏறாவூர்ப் பற்று மேற்கு கோட்டம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி 26% ஆக அங்கு சித்தி காணப்படுகின்றது. எனவே இவ்வாறான சித்தியை பெறுவதற்கு மாணவர்களிடையே எவ்வாறான ஒழுக்கப்பிரச்சினைகள் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதையும் அதற்கான காரணங்களையும் கண்டறியும் நோக்கில் ஆய்வாளனால் குறித்த பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்**

ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டத்தில் உள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் கற்றலில் தாக்கம் செலுத்துவதினால் அம் மாணவர்கள் கற்றலில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் என்பதனை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் தீர்வுகளையும் முன்வைத்தல்.

**சிறப்பு நோக்கம்**

1. சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளைக் கண்டறிதல்.
2. சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சனைகளுக்கான காரணங்களை கண்டறிதல்.
3. சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் அவர்களின் கற்றலில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதை மதிப்பிடுதல்.
4. சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கற்றலை மேம்படுத்த தேவையான வழிமுறைகளையும் இனங்காணல்.

**இலக்கிய மீளாய்வு**

Kath Dr. Abdhul Sathtar, Allahdino Abro. Ph.D and Roshan Ali Mugheri (2012) என்பவர்களால் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்படட ஆய்வின் படி பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரின் இடைவினை குறையும் போது வெளி இடங்களில் அன்பைத் தேட முயற்சிக்கின்றனர். இதனால் உடன்பாடற்ற நட்பு வட்டாரங்கள் உருவெடுக்க ஆரம்பிக்கின்றன. இவ்வாறான பிள்ளைகள் வெளிப்படையாக பலமானவர்களாகவும் உளரீதியான பலவீனமானவர்களாகவும் காணப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இவ்வாறான பிள்ளைகள் கற்றல் சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துவது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது எனக் கூறியுள்ளனர்.

சின்னத்தம்பி (2015) பிள்ளைகள் மீது பெற்றோர் அதீத கட்டுப்பாடுகளையும் அடக்கு முறைகளையும் பிரயோகிப்பது தவறாகும். எனவே குழந்தைகளின் மனதைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப பெற்றோர் செயற்பட வேண்டும். தவிர தமது விருப்புக்களை அவர்கள் மீது திணிப்பது தவறாகும். எனவே நன்றாகப் பழகக்கூடிய பிள்ளைகள் கூட பெற்றோர்களின் இச் செயல்களினால் மனம் சலித்து கற்றலை இடைநடுவிலே விடக்கூடும். ஆல்லது பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெறாமல் போகலாம். எனவே இந்நிலைகளும் இன்றைய நிலைகளில் மாணவர்களின் கற்றல் பின்னடைவில் அதிக தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதனை அனைவரும் உணர வேண்டும் எனக் கூறியுள்ளார்.

கரீம் (2016) என்பவர் மேற்கொண்ட ஆய்வில் மாணவர்களது ஒழுக்க மீறுகைகளும் சமூக விழுமியங்கள் மீதான அதன் தாக்கமும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. அந்த வகையில் வரையறையின்றி நண்பர்களுடன் பழகுதல், நாகரீககமற்ற தொலைக்காட்சிப் பாவனை, வலைத்தளங்கள் மூலமாக ஆபாசப்படங்களைப் பாரத்தல், போதைப்பொருட் பாவனை, களவு, ஓரினச்சேர்க்கை, ஆசிரியர்களுடன் முறண்படுதல், இடைவிலகல் , தற்கொலை எனப் பல வடிவங்களாக ஒழுக்கச் சீர்கேட்டு விளைவுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் மாணவர்கள் தங்களுக்குள் நாணயமிள்ளாதவர்களாக செயற்படுவதுடன் ஒருவர் மற்றையவரில் நம்பிக்கை இழந்தும் காணப்படுகின்றார்கள். சுறு சுறுப்புச் சந்தை விவகாரங்கள் அதிகரித்துள்ளன. கலப்படங்கள், மேசாடிகள், கொலை, கொள்ளை போன்ற ஒழுக்க மீறல் விளைவுகள் என்றுமில்லாதவாறு பல்கிப் பெருகியுள்ளன. கடத்தல்கள் , கப்பல் கோரல்கள் , சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பகிடிவதைகள், களவு போன்ற ஒழுக்கப்பிரச்சினைகள் வேகமாக அதிகரித்து வருகின்றன எனக் கூறியுள்ளார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கற்றலில் அக்கறை காட்டாது புறக்கணித்தால் ஏற்படும் சமூக விளைவுகளை சிறப்பாக முன்வைக்கின்றார். அத்துடன் பொதுவாக மாணவர்கள் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னராக பாடசாலைக்கு சமூகம் கொடுக்க வேண்டும் என்பது பாடசாலை முகாமைத்துவம் எதிர்பார்க்கும் ஒரு விடயமாகும். அப்போதுதான் மாணவர்கள் தங்களுடைய உரிமைகளை நிறைவேற்றுவதுடன் கற்றலுக்கு முன்னாயத்தவமாகவும் தங்களைத் தயார்படுத்துவார். பாடசாலையானது வருடாந்தம் 200 நாட்கள் நடைபெறும். இதில் பெரும்பாலான நாட்களில் மாணவர்கள் பாடசாலை ஆரம்பிக்கும் நேரமான காலை 7.30 மணிக்குப் பின்னர் பாடசாலைக்குச் சமூகமளிக்கின்றனர். இவ்வாறு பல நாட்களில் இடம்பெறும் போது பல பிரச்சினைகள் தோன்றி அவை மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறியுள்ளார்.

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண் அளவு ரீதியான முறையியல்களும் பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள்,

அட்டவணைகள், வரைபடங்கள், விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புறவயத்தன்மையான ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்மந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும் அதிபர்கள், பெற்றோர்களிடம் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தரவுகள் அபிப்பிராயங்கள் எண்ணங்கள் வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவு ரீதியான பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

**மாதிரித் தெரிவு**

இந்த ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டத்தில் காணப்படும் 17 பாடசாலைகளையும் ஆய்வுக்குட்படுத்துவது சற்று கடினம் என்பதாலும் அதிக காலம் தேவைப்படும் என்பதாலும் அனைத்து பாடசாலைக்கும் செல்வதற்கான வசதி குறைவு என்பதாலும் ஆய்வின் பொருத்தப்பாடு கருதி ஏறாவூர்ப்பற்று கோட்டத்திலுள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவைக் கொண்டுள்ள 05 பாடசாலைகளையும் வசத மாதிரி அடிப்படையில் ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் அனைத்து மாணவர்களையும் ஏகவீனக் குடித்தொகையாகக் கருதி அவர்களிலிருந்து மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவாறு இலகு எழுமாற்று மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள் ஏன் தெரிவு செய்யப்பட்டனர் எனில் அவர்களிடமே அதிக ஒழுக்கப் பிரச்சினைகள் காணப்படுன்றது என்பதுடன் கற்றலில் பின்தங்கிய நிலைக்கு இத் தரங்களில் உள்ளவர்கள் செல்வதாகவும் உள்ளதால் ஆய்வின் நோக்கம் கருதி அவர்கள் இந்த ஆய்வில் மாதிரித் தெரிவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் காணப்படும் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் 360 மாணவர்கள் காணப்பட்டனர். அவர்களிலிருந்து 3:1 எனும் விகிதத்தில் 120 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட இடைநிலைப்பிரிவில் கல்வி கற்கும் 360 மாணவர்களில் இருந்து மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 120 மாணவர்களின் பெற்றோர்களிலிருந்து இலகு எழுமாற்று மாதிரியெடுப்பு முறையின் மூலம் 40 பெற்றோர்கள் 3:1 எனும் விகிதத்தின் அடிப்படையில் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளிலும் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்ற 104 ஆசிரியர்ளையும் ஆய்விற்கு உட்படுத்துவது சற்று கடினம் என்பதால் இலகு எழுமாற்று மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி 2:1 எனும் விகிதத்தில் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு 05 பாடசாலைகளை நிர்வகிக்கும் 05 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தரவுப்பகுப்பாய்வு**

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள்**

சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றதா? ஏன மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் அதிபர்களிடமும் வினவிய போது 100 விகிதமானோர் ஆம் என பதிலளித்துள்ளனர். எனின் எவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றது என அவர்களிடம் வினவிய போது அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு




உரு 4.1 சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள்

உரு 4.1 இன்படி 31% ஆன ஆசிரியர்கள் வரவு ஒழுங்கற்றதாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தவிர முரண்பாடுகள், ஒழுங்கீனமாக வருகை தரல், மதுபாவனைப்பழக்கம் , பணிவின்மை போன்ற பல காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் அதிகமானோர் வரவு ஒழுங்கீனம் என்ற காரணத்தையே சுட்டிக்காட்டியுள்ளனர்.

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கான காரணங்கள்**

சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கான காரணங்களை ஆசிரியர்களிடம் வினவிய போது அவர்கள் அளித்த பதில்கள் உரு 4.2 காட்டுகின்றது.




உரு 4.2 : சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கான காரணங்கள்.

உரு 4.2 இன் படி மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கு குடும்பச் சூழல் 57மூ எனக் கூறியுள்ளனர். ஏனின் அதற்ாகன காரணங்களை வினவிய போது, பெற்றோர் பிள்ளைகள் மீதும் அவர்களின் கற்றல் மீதும் அக்கறையின்மையாக இருத்தல், தாய்மார் வெளிநாடு செல்லல், பெற்றோரிடையே காணப்படும் மதுபாவனைப்பழக்கம், குடும்பத்தில் காணப்படும் பிரச்சினைகள், முக்கிய காரணங்களாக உள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் கற்றலில் ஏற்படும் தாக்கம்.**

மாணவர்களிடம் காணப்படுகின்ற இவ்வாறான ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் கற்றல் செயற்பாட்டில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என வினவிய போது அவர்களால் அளிக்கப்பட்ட பதில்கள் வருமாறு.




உரு 4.3 ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என வினவிய போது கிடைத்த ஆசிரியர்களின் கருத்துக்கள்.

உரு 4.3 இன்படி இவ் மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் கற்றலில் பெறுபேறுகளில் அதிக வீழ்ச்சி, கற்றலில் ஆர்வமின்மை மற்றும் இடைவிலகல் போன்றவற்றை அதிகமாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

**ஒழுக்க ரீதியான பிரச்சினைகளையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகளையும் தீர்வுகளையும் முன்வைத்தல்**

மாணவர்களின் ஒழுக்கத்தை கவனிப்பதற்கு ஒழுக்காற்குக் குழு எந்தளவிற்கு செயற்படுகின்றது? என்ற வினாவை ஆசிரியர்களிடம் வினவிய போது 60% ஆனோர் ஓரளவு என்ற பதிலையே அளித்தனர். ஓரளவு எனின் அதற்கான காரணங்களை வினவிய போது அவர்கள் அளித்த பதில்கள் உரு 4.4 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 4.4 இல் பாடசாலைகளில் ஒழுக்காற்றுக் குழு சிறப்பாக செயற்படாமைக்கான காரணங்கள்

உரு 4.4 இன் படி பாடசாலையில் ஒழுக்காற்றுக்குழு இருக்கின்றது. ஆனால் அதன் பணிகளை ஒழுங்காக மேற்கொள்கின்றதா என்று பார்த்தால் ஓரளவு என்று தான் கூறப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம் மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்கப் பிரச்சினைகளாகும்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகள்**

**முடிவுகள்**

1. சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்கள் பாடசாலைக்கு வரவு வீதமானது குறைவாகக் காணப்படுகின்றது.
2. மாணவர்கள் பாடசாலையில் முரண்படுகின்ற தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது.
3. மாணவர்களிடம் பணிவு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.
4. மாணவவர்கள் வரவு ஒழுங்கீனமாகக் காணப்படுகின்றது.
5. மாணவர்களிடையே மதுபாவனைப்பழக்கம் காணப்படுகின்றது. ( பாக்கு போடுதல்)

**விதப்புரைகள்**

1. மாணவர்களின் வரவு தொடர்பாக பாடசாலை நிர்வாகம் கண்டிப்புடன் இருப்பதுடன் பெற்றோர்களும் அக்கறை காட்ட வேண்டும்.
2. முரண்படுகின்ற மாணவர்களை இனங்கண்டு வழிகாட்டல் ஆலோசனை வழங்க வேண்டும்.
3. முரண்படுகின்ற வேளைகளில் அவர்களுக்கு தகுந்த தண்டணையை வழங்க வேண்டும்.( அதாவது பாடசாலையில் உள்ள புற்களை துப்புரவு செய்ய விடுதல் , மைதானத்தை சுற்றி ஓட விடுதல்)
4. கீழ்ப்படிந்து நடப்பதன் அவசியத்தை மாணவர்களுக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் எடுத்துக்கூற வேண்டும்.
5. மாணவர்களின் வரவை அதிகரிக்கக் கூடியவாறு பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகள் காணப்பட வேண்டும்.
6. அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ளாது நண்பர்களாக அவர்களுடன் அணுகி அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்க்க வேண்டும்.

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடம் காணப்படும் ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கான காரணங்கள்**

**முடிவுகள்**

1. 57% ஆன ஆசிரியர்கள் மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கு குடும்பச் சூழலே அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றது எனக் கூறியுள்ளனர்.
2. 90 % ஆன மாணவர்கள் குடும்பச் சூழல் எனவும் 10% ஆன மாணவர்கள் சமூகச் சூழல் எனவும் கூறியுள்ளனர்.
3. 64% ஆன பெற்றோர்களும் குடும்பச் சூழலையே அதிகம் எனக் கூறியுள்ளதுடன் 36% ஆன பெற்றோர்கள் சமூகத்தையும் பாடசாலையையும் கூறியுள்ளனர்.

**விதப்புரைகள்**

1. குடும்பச் சூழலை சிறந்த முறையில் மாற்றியமைப்பதில் பெற்றோர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும். அத்துடன் ஒழுக்கமாக இருப்பதற்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.
2. பிள்ளைகளின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை பெற்றோர்கள் கூடியளவு கவனத்திற் கொள்ள வேண்டும்.
3. கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
4. சிறுவர் நன்னடத்தைப்பிரிவு பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஒழுக்க மீறல்களினால் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பாகவும் கருத்தரங்குகளை நடாத்த வேண்டும்.
5. ஆசிரிய ஆலோசகர்கள் , உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் போன்றோரின் ஆலோசனைகளைப் பெற்று ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைப் பற்றி பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
6. தமது பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் அக்கறை கொள்ளுமாறு பெற்றோர்களுக்கு அறிவூட்ட வேண்டும். பிள்ளைகளுடன் சிலமணி நேரங்களை செலவிடுமாறு அறிவுறுத்த வேண்டும்.

**ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் கற்றலில் ஏற்படும் தாக்கம்**

**முடிவுகள்**

1. 80% மான ஆசிரியர்கள் பெறுபேறுகளில் அதிக வீழ்ச்சி எனக் சுட்டிக்காட்டியுள்ளனர்..
2. 64% மான ஆசிரியர்கள் மாணவர்களிடம் இடைவிலகல் அதிகரித்து காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.
3. 80 % ஆசிரியர்களும் அதிபர்களும் மாணவர்கள் கற்றலில் விருப்பமின்மையாக உள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

**விதப்புரைகள்**

1. மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டல் ஆலோசனைகள் மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.
2. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மாணவர்கள் விரும்பக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
3. வகுப்பறைக் கற்பித்தலின் போது மீளவலியுறுத்தல் செயற்பாட்டினை ஆசிரியர் அடிக்கடி மேற்கொள்ள வேண்டும்.
4. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்குபற்றலை அதிகரிக்க வேண்டும்.
5. மாணவர்களுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.
6. கற்றலில் ஊக்குவிக்கும் தன்மையினை ஆசிரியர்கள் தம்மிடத்தில் அதிகளவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தன்மையானது எல்லா மாணவர்களையும் கற்றலில் சிறப்பாக ஈடுபடச் செய்வதற்கான உத்தியாக அமையும்.

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளும் தீர்வுகளும்**

**முடிவுகள்**

1. பாடசாலையில் உள்ள ஒழுக்காற்றுக் குழுக்களின் செயற்பாடுகள் திருப்தியளிப்பதாக இல்லை.
2. மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்படுவது மிகக் குறைவாக உள்ளது.
3. பாடசாலையில் மாணவர்களுக்கு விழுமியக்கல்வி வழங்கப்படுவது குறைவாக உள்ளது.
4. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர் அதிபர்களுடன் கலந்துரையாடுவது குறைவாக உள்ளது.
5. பாடசாலையில் பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகள் வழங்கப்படுவது குறைவாகக் காணப்படுகின்றது.
6. பாடசாலை செயற்பாடுகளில் பழைய மாணவர்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது.

**விதப்புரைகள்**

1. மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.
2. அனைத்து மாணவர்களும் கற்றலில் சிறந்து விளங்குபவர்கள் என்று கூறமுடியாது. எனவே அவர்களின் திறமைகளை அறிந்து கொண்டு அதற்கேற்ப தொழிற்கல்வி வழங்கப்பட வேண்டும்.

3. பழைய மாணவர்கள் மாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்களை நடாத்துவதுடன் போதியளவு வழிகாட்டல்களையும் வழங்க வேண்டும்.
4. பிள்ளைகள் அருகில் உள்ள நூலகங்களுக்கு சென்று கற்பதற்கு பெற்றோர் உதவி செய்ய வேண்டும்.
5. பிள்ளைகள் வீட்டில் கற்பதற்கு தகுந்த சூழலை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர்களின் வீட்டு வேலைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
6. மாணவர்களின் கற்றலை அதிகரிப்பதற்கு அவர்களுக்கு விருப்பமான ஊக்கிகள் வழங்கப்பட வேண்டும்.
7. புாடசாலைகளில் உள ஆற்றுகைப்படுத்தலுக்கான செயற்பாடுகள் மேலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்படுவது அவசியமாகும். பொருத்தமான உளவள ஆலோசகரை நியமித்து அல்லது பொருத்தமான வளவாளரைக் கொண்டே உள ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும்.
8. மாலை நேர வகுப்புக்களை விட பெற்றோரின் ஈடுபாடே மாணவர்களின் கற்றலை முன்னேற்றும் என்பதை பெற்றோர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

**சாராம்சம்**

இன்றைய உலகில் கல்வியும் ஒழுக்கமும் இரு கண்கள் போல் உள்ளது. கல்வியை பெற்று விட்டு ஒழுக்கமில்லாத பிள்ளையாக இருக்கும் பட்சத்தில் அது பொருத்தமாக இருக்காது. அந்தவகையில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களிலும் இத்தகைய பிரச்சினைகள் காணப்படுகின்றது. அதில் ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்டத்தில் ஏனையவற்றை விட சற்று கூடியளவு பிரச்சினைகள் இருப்பது ஆய்வாளனால் கண்டுபிடிக்கப்பட்டது. இக் கோட்டத்தில் உள்ள மக்கள் ஆரம்ப காலங்களிலிருந்து பாரியளவு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து விட்டு வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வில் ஒரு ஒளியை ஏற்ற வேண்டுமாயின் அதற்கு பொருத்தமான வழி கல்வி ஒன்றாகும். எனவே அக்கல்வியை மாணவச் செல்வங்கள் கற்று வாழ்வில் உயர வேண்டும் எனவும் கற்றல் செயற்பாடுகளுக்கு தடையாக உள்ள காரணங்களை தகர்த்து வீசி கல்வியில் முன்னேற வேண்டும் என்பதனையும் கருத்திற் கொண்டு ஆய்வாளனால் இக்கோட்டம் ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்டது.

இக் கோட்டத்தில் மாணவர்கள் கற்றலில் பின்னடைவடைவதற்கான காரணங்களில் ஒழுக்கமும் ஒரு காரணமாக அமைகின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் உள்ள ஏறாவூர்பற்று மேற்கு கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களிடத்தில் பல்வேறு பட்ட ஒழுக்கரீதியிலான பிரச்சினைகள் காணப்படுகின்றது. இத்தகைய ஒழுக்கப் பிரச்சினைகளினால் மாணவர்களின் கற்றல் செயற்பாடானது பாதிப்புக்கு உள்ளாகின்றது. இந்த நிலையானது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு பாதிப்பாகவும் கேள்விக்குறியாகவும் அமையும். எனவே இவ்வாய்வின் மூலமாக மாணவர்களிடம் காணப்படுகின்ற ஒழுக்க ரீதியான பிரச்சினைகளினால் கற்றலில் எவ்வாறான தாக்கம் ஏற்படுகின்றது என்பதை அறியவும் அதனை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்ற

விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளமையினால் இவ்வாய்வானது ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் உள்ள மாணவர்களை கற்றலில் ஈடுபடுத்துவதற்கு பயனளிக்கக் கூடியதாக அமையும்.

**உசாத்துணை**

**நூல்கள்**

அருள்மொழி.செ. 2008. கல்வி ஆய்வு முறைகள், துர்க்கா அச்சகம் , கொக்குவில் , மட்டக்களப்பு.

கருணாநிதி, மா. 2008. கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் , சேமமடு பதிப்பகம் , கொழும்பு.

சின்னத்தம்பி, மா. 2005. பாடசாலையும் சமூகமும் , குமரன் புத்தக இல்லம் , டாம் வீதி, கொழும்பு 12.

சின்னத்தம்பி, மா. 2004. ஆசிரியர்களின் வகிபங்கும் அந்தஸ்தும் , அகவிழி சேமமடு பதிப்பகம் , கொழும்பு.

பக்கீர் ஜபர் , ப.கா. 2009. மாணவரின் வகுப்பறை நடத்தை, குமரன் புத்தக இல்லம் , 361 ½,டாம் வீதி, கொழும்பு.

நௌபீர், ஏ.எல். 2013. கல்விச் சமூகமும் எதிர்பார்ப்பும் வகிபங்கும் , கல்வி உயிர்த்தெழு மையம் , மகரகம.

சந்திரசேகரம் , ப. 2012. கல்வியற் சிந்தனைகள் , சேமமடு பதிப்பகம் , கொழும்பு.

மகேசன் , ஏ. 2010. கல்வியும் ஆலோசனை வழங்கலும் , ஹிரா அச்சகம்.

புண்ணியமூர்த்தி, கி. 2010. விழுமியக்கல்வியும் வாசிப்பும் , அகவிழி வெளியீடு, கொழும்பு.

யோகேஸ்வரன் , ஆர். 2008. மாணவர்களின் மனவெழுச்சிகளை ஒழுங்கமைப்பதில் ஆசிரியரின் பங்கு, அகவிழி வெளியீடு, கொழும்பு.

கரீம் , அ, மு, கா. 2016. **மாணவர்களது ஒழுக்க மீறுகைகளும் சமூக விழுமியங்கள் மீதான அதன் தாக்கமும்.** (கல்வி முதுமாணிப் பட்டத்திற்காக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.)

ஞானேஸ்வரி, தி.2010. **பாடசாலை மாணவர்களின் நெறிபிறழ்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் தாக்கம்.** (கல்வி முதுமாணிப்பட்டத்திற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.)

பரஞ்சோதி, சோ. 2007. **மாணவரிடையே மனிதமேம்பாட்டுப் பண்புகளை வளர்த்தெடுக்க பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக விழுமியக்கல்வி புகட்டுதலின் அவசியம்** (கல்வி முதுமாணிப் பட்டத்திற்காக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது)

யாழின், க. 2005. கொழும்பு அல்- ஹிக்மா கல்லூரி **மாணவர்களின் ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் பற்றிய பகுப்பாய்வு** (கல்வி முதுமாணிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது).

Dr. Abdhul Saththar, Allahdino Abro.Ph.D and Roshan Ali Mugheri, 2012, **Mothers on the Development of children,** Pakistan.

**Guiding your young child with positive discipline**, 2016, Canadian pediatricsociety.

**How to encourage good behavior from your child,** 2003, Murdoch cgildren's research institute and center for community child health.

# மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம்

Mr. Nadarasa Koventhan
BT/ BW/ Navatkadu Namagal Vidyalayam,
Batticaloa.
koventhannadarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

“மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் வகிபாகம்” எனும் தலைப்பில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் அளவைநிலை ஆய்வானது, மெல்லக் கற்கும் மாணவர்கள், வகுப்பறைக் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன், அவர்களது கற்றலில் ஆசிரியரின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையிலும் இடம்பெற்றுள்ளது. இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் தெரிவுசெய்யப்பட்டது. இக்கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களைக் கொண்ட 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இந்த 10 பாடசாலைகளிலுமிருந்து 10 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையிலும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், மெல்லக் கற்கும் 50 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 50 பேரும் எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையிலும் குடித்தொகையில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்புரீதியானதும், அளவுரீதியாகவுமான கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தரவுகள் MS EXCEL ஊடாக உருக்கள், அட்டவணைகளாக குறித்துக்காட்டப்பட்டுள்ளன. ஆய்வு முடிவின் பிரகாரம் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாடு குறைவதற்கான காரணங்களாக ஆசிரியர்களுக்கு இம்மாணவர்கள் பற்றிய தெளிவின்மை, பெற்றோர் ஆசிரியர்களுடன் பிள்ளையின் கற்றல் தொடர்பில் கலந்துரையாடலின்மை எதிரான மனப்பாங்கு, ஆசிரியர்களின் பொருத்தமற்ற கற்பித்தல் முறை ஆகிய காரணங்கள் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகத்தை குறைக்கின்றது. இதனால் ஆசிரியரின் பங்களிப்பும் குறைகின்றது. இவற்றிற்கான தீர்வுகளாக அதிபர் ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், பாடசாலையில் இம் மாணவர்கள் தொடர்பாக நடைபெறும் கூட்டங்களில் பெற்றோரைப் பங்குகொள்ளச் செய்தல், ஆசிரியர்கள் மாணவர்களின் வீட்டிற்குச் சென்று பெற்றோருடன் மாணவர்களின் கற்றல் தொடர்பில் கலந்துரையாடுதல், ஆசிரியர்கள் இம் இம்மாணவர்கள் தொடர்பான செயல்நிலை ஆய்வுகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *அளவைநிலை ஆய்வு, ஆசிரியர் வகிபங்கு, பெற்றோர், மெல்லக் கற்போர், வகுப்பறைக் கற்றல்*

**ஆய்வு அறிமுகம்**

**அறிமுகம்**

உண்மையில் மெல்லக் கற்கும் பிள்ளைகள் மீது அனேக பெற்றோர்கள், மற்றும் சமூக விழிப்புணர்வு உயர்நிலையாகும். மெல்லக் கற்கும் மாணவர்களுக்குக் கல்வி வழங்கப் பாடசாலைகள் தயாராக உள்ள போதிலும் பெற்றோர்கள் இதற்காகத் தயாராகுவது குறைவாகவே உள்ளது. மெல்லக் கற்கும் பிள்ளைகள் தோற்றம் பெறுவதற்கு அக, புறக் காரணிகளும், பெற்றோர்களின் நடவடிக்கைகளும் காரணங்களான உள்ளன. அந்த வகையில் பிள்ளைகளை சுமையாக எண்ணி அவர்களை கவனத்தில் எடுக்காமல் இருப்பதோடு, கல்வியில் அக்கறை இல்லாமல் அசமந்தப்போக்குடன் காணப்படுகின்ற நிலையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது (சோபா, 2013).

இது பெற்றோரிடத்தில் மட்டுமன்றி சமூகத்திலும் அதிகரித்துச் செல்கிறது. மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலினை கவனிக்காவிடின் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுவதோடு சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நிலைக்கும் செல்வார்கள். இத்தகு பிள்ளைகளை ஏனைய சாதாரணமான பிள்ளைகள் அலட்சியமாகப்பார்க்கின்ற நிலையையும், ஒதுக்கி வைக்கின்ற நிலையையும் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையின் பெரும்பங்குதாரர்களாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் விளங்குகின்றனர். கல்வியினை வழங்குவதற்குப் பாடசாலைகள் முன்வந்தாலும் பெற்றோர்கள் அலட்சியமாக எண்ணுதல், பாடசாலைக்கு அனுப்பினாலும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அசமந்தப்போக்காக காணப்படல், போன்ற பலவிடயங்கள் பெற்றோர்களிடம் காணப்படுகின்றன (Caplan,1994).

மெல்லக் கற்கும் பிள்ளைகள் எதையும் செய்யமாட்டார்கள் என்று பரிதாபமாய்ப் பார்க்கின்ற நிலை பெற்றோர்களிடம் அதிகரித்துச் செல்கின்றது. மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகிறது. உட்படுத்தல் எனும் பதமானது ஜனநாயகக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கொண்டதாக கருதப்படுகின்றது (இமானுவல், 1998). மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் வகிபாகமே மிக அதிகமாக காணப்பட வேண்டும். மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் பெற்றோர், ஆசிரியரின் வகிபாகத்தை அறியும் பொருட்டு இவ்வாய்வு இடம்பெறுகிறது. மெல்லக் கற்கும் மாணவர்கள் என்போர் வாசிப்பு, எழுத்துக்கூட்டல், ஞாபகப்படுத்தல். தகவல்களை ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றில் சிரமப்படும் மாணவர்களாவர்.

**ஆய்விற்கான பின்னணி / நியாயத்துவம்**

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அனுபவமுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். (Anas and Nawastheen, 2019).

குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் அதிகபடியான மெல்லக் கற்கும் மாணவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாகவும், தங்கள் வேலைகளை சுயமாகச் செய்ய முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்மாணவர்களுக்கான வளங்களும் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் அரிதாகவேயுள்ளது. இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஒரு சில ஆசிரியர்கள் விசேட தேவைகள் தொடர்பான பட்டப்படிப்பினை மேற்கொள்ளாதவர்களாகவும் உள்ளனர்.

மெல்லக் கற்கும் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குகின்ற பாடசாலைகள், கல்வியை உயர்தரத்தில் வழங்குகின்றனவா? எதிர்காலத்தில் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான வழிகள் எத்தகையன? இதில் பெற்றோர் மற்றும் ஆசிரியர் பங்களிப்பு சிறப்பாக இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்வதாக உள்ளது. மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியர் வகிபாகத்தை பின்னணியாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

மெல்லக் கற்கும் மாணவர்கள், குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கோ, கல்வியற் கல்லூரிகளுக்கோ செல்வது மிகக் குறைவு இது ஒரு பாரிய பிரச்சினையாகும். மேலும் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர் இணைந்து செயற்படும் போக்கு குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் குறைவாகவே உள்ளது. ஆசிரியர்கள் முன்வந்தால் பெற்றோர்கள் முன்வருவது அரிது அத்துடன் பாடசாலையில் இருந்து இம் மாணவர்களின் வீடுகள் அதிக தூரத்தில் இருப்பதனால் ஆசிரியர்கள் இம்மாணவர்களின் வீடு தரிசித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். என்பதை ஆய்வாளன் நேரடியாக இம் மாணவர்களின் வீடுகளுக்கு சென்ற போது அவதானிக்க முடிந்தது.

ஆய்வாளனின் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள இவ்வகை மாணவர்களின் பெற்றோர்களில் கூடுதலானோர் தினக்கூலி வேலைக்கு செல்பவர்களாகவே காணப்படுகின்றனர். மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் குடும்ப நிலமை சாதகமாக அமைவது மிகக் குறைவாகவே உள்ளது. இதில் சில குடும்பங்களில் வேறு விசேட தேவையுடைய மாணவர்களும் காணப்படுகின்றனர். இது தொடர்பில் பெற்றோருக்கு போதிய விளக்கமின்மையால் இப் பிள்ளைகளை எவ்வாறு பராமரிப்பது, அவர்களது கற்றலை எவ்வாறு மேன்மையடையச் செய்வது என்பது தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகிறது.

வீட்டில் இம்மாணவர்களது கற்றலுக்குரிய தளபாட வசதிகள் குறைவாக காணப்படுகின்றமையால் வெறும் தரையில் இருந்தே கல்வி கற்கின்றனர் என்பது ஆய்வாளனின் நேரடி அவதானிப்பின் மூலம் கண்டறியப்பட்டது. பாடசாலை கூட்டங்களுக்கு ஆசிரியர்கள் பெற்றோரை அழைத்தால் அதிகபடியான மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் சமூகமளிப்பதில்லை இதனால் தங்கள் பிள்ளை கல்வியில் என்ன நிலையில் உள்ளது என்பதைக் கூட உணர்ந்துகொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் பங்குபற்றுதல் குறைவாக காணப்படுகின்றமையால் இம் மாணவர்கள் பொருத்தமான கல்வியை பெறுவதில் சிரமப்படுகின்றனர் (மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்கள் தொடர்பான ஆய்வறிக்கை, 2019).

**ஆய்வினது முக்கியத்துவம்**

மெல்லக் கற்கும் பிள்ளைகளிற்கான கல்வியை வழங்குவதில் ஆசிரியரின் பங்களிப்பானது குறைவாகவே காணப்படுகிறது. இவர்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்கால ஆய்வுப்பரப்போடு தொடர்புபட்ட ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு ஆய்வின் நோக்கத்தை பூரணப்படுத்துவதற்கும், பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது. மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கப்பட இருக்கும் கல்விக் கொள்கைகளில், கலைத்திட்டத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கேற்ப திட்டங்களை வகுப்பதற்கு உதவும்.

இவ்வாறான ஆய்வுகளை செய்து உயர்கல்வி நிறுவனங்களில் வெளியிடப்படுமாயின் கலைத்திட்டத்தை உருவாக்குபவர்கள் இவ் மெல்லக் கற்கும் பிள்ளைகள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களுக்கு பொருத்தமான வகையில் பாடத்திட்டத்தை வடிவமைக்க முடியும்.

**இலக்கிய மீளாய்வு**

பாடசாலை வேலைகளில் திறமை குறைந்தோர் மெல்லக் கற்போர் எனப்படுவர் அவர்கள் கற்கும் வகுப்பிலும் பார்க்க ஏறக்குறைய ஒரு வகுப்புக் குறைவான பாட அடைவை கொண்டிருந்தால் அவர்கள் கல்வியில் பின்தங்கியோர் எனக்கூறலாம். (முத்துலிங்கம், 2002)

ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் பிள்ளைகளுக்கு தனியாக நேரத்தை ஒதுக்கி கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்( முனவ்ரோ 2020).

மெல்லக் கற்கும் மாணவர்கள் வகுப்பறை கற்றல் நடவடிக்கைகளில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டது. எனவே ஆசிரியர்கள் கற்றலில் சிரமங்களை எதிர் கொள்கின்ற மாணவர்களைப் பற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்ளவும், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபாட்டினை அதிகரிக்கவும் வேண்டும் (Shazny, 2021).

மொழியை பேசுதல், எழுதுதல், வாசித்தல் ஆகியன தொடர்பான செயன்மறைகள் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட ஒழுங்கீனங்களை உடையோர் மெல்லக் கற்கும் பிள்ளைகளாவர் (அமெரிக்காவின் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான ஆலோசனைக்குழு, 1986)

Desforges and abouchar, 2003. இல், பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பினை அதிகரிப்பது தொடர்பாக இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. பெற்றோர்களின் கருத்துக்களை கவனத்திற் கொண்டு அவர்களுடன் இணைந்து கற்றல், கற்பித்தல் தொடர்பாக வரும் பிரச்சினைகளை ஆசிரியர்கள் தீர்ப்பதன்

மூலம் பெற்றோரின், பங்களிப்பையும் அதிகரிகப்பதுடன் மாணவர்களின் கற்றலையும் மேம்படுத்த முடியும்.

ஆரம்பத்தில் புலக்காட்சி, குறைந்த நேர பாடமும் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலை அதிகரிக்கும் இம் மாணவர்கள் கருத்துக்களை வெளியிட முடியாமல் மிகவும் மன வேதனை அடைகின்றனர், கற்பதற்கு இன்னொருவரின் உதவி வேவைப்படும் நபர்களாக காணப்படுகின்றனர். இதனால் வகுப்பறைக்குள் சமவயது குழுக்களின் உதவியை வேண்டி நிற்கின்றனர்.(Charles, cutis and james, 2006 ).

ஆரம்பத்தில் ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களை சரியாக இனங்காணாமல் இருந்தால் பின்னர் நிவர்த்திப்பது கடினம். (Bateman, 1991).

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியலானது, ஆய்வின் பொது நோக்கத்தையும், சிறப்பு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கு விடை காண்பதன் அடிப்படையில் ஓர் அளவீட்டு ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுப் பிரதேசம், மாதிரித் தெரிவு, தரவுப் பகுப்பாய்வு முறை போன்ற பல முக்கிய விடயங்களைக் கொண்டதாக அமைகிறது. ஆய்வுப் பிரதேச குடித்தொகையின் அடிப்படையில் எளிய எழுமாற்று மாதிரி, நோக்கமாதிரித் தெரிவுகள் இதில் இடம்பெற்றுள்ளன.

**பொது நோக்கம்**:

மெல்லக் கற்கும் மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியரின் வகிபங்கினை ஆராய்வதாகும்.

**சிறப்பு நோக்கங்கள்**:

1. வகுப்பறைக் கற்றலில் மெல்லக் கற்கும் பிள்ளைகளை இனங்காணல்.
2. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளைக் அறிதல்.
3. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோர் மற்றும் ஆசிரியரின் ஈடுபாட்டை இனங்காணல்.
4. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. வகுப்பறைக் கற்றலில் மெல்லக் கற்கும் பிள்ளைகள் என்போர் யாவர்?
2. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகள் எவை?

3. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை அதிகரிப்பது எவ்வாறு?
4. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் ஆலோசனைகள் எவை?

**குடித்தொகை**

குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வாளரால் குடித்தொகை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எந்த ஆய்வாக இருந்தாலும் குடித்தொகை என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும்.

**அட்டவணை 01 மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பாடசாலைகளின் விபரம்**

| கோட்டம் | பாடசாலைகளின் எண்ணிக்கையும் | அதிபர்கள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் |
|---|---|---|---|---|
| மண்முனை மேற்கு கோட்டம் | 30 | 30 | 323 | 6197 |
| மண்முனை தென்மேற்கு கோட்டம் | 21 | 21 | 335 | 5584 |
| ஏறாவூர் பற்று மேற்கு கோட்டம் | 17 | 17 | 144 | 2743 |
| மொத்தம் | 68 | 68 | 802 | 14524 |

**மூலம் : திட்டமிடல் பிரிவு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.**

**ஆய்வின் மாதிரித் தெரிவு**

மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மெல்லக் கற்கும் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும், இம்மாணவர்ளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும் ஆய்வின் பொது நோக்கத்தை அடையும் வகையில் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**அட்டவணை 02 . ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள்**

| இல | பாடசாலை | வகை | [illegible] | ஆசிரியர்கள் | | மெல்லக் கற்கும் மாணவர்கள் | | பெற்றோர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | A | 1AB-02 | | 10 | | | 10 | | 10 |
| | B | 1C-05 | | 19 | | | 25 | | 25 |
| | C | II-02 | | 07 | | | 10 | | 10 |
| | D | III-01 | | 4 | | | 5 | | 5 |
| | **மொத்த மாதிரிகள்** | **10** | | **40** | | | **50** | | **50** |

**மூலம் : திட்டமிடல் பிரிவு மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.**

ஆய்வுக்காக மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் கடமையாற்றும் 10 அதிபர்ககள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இப் 10 பாடசாலைகளில் உள்ள மெல்லக் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் 40 ஆசிரியர்களுள் 20 ஆசிரியர்கள் 2:1 என்பதன் படி எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இப் 10 பாடசாலைகளில் இனங்காணப்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்கள் ஒரு பாடசாலையில் 5 பேர் எனும் வீதத்தில் 10 பாடசாலைகளிலும் 50 மாணவர்கள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இப் 10 பாடசாலைகளில் இனங்காணப்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்களது பெற்றோர் ஒரு பாடசாலையில் 5 பேர் எனும் வீதத்தில் 10 பாடசாலைகளிலும் 50 பெற்றோர்கள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும், கலந்துரையாடலும் :-**

மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் பெற்றோர் மற்றும் ஆசிரியரின் வகிபங்கை அறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வுக்கான தகவல்கள் நேர்காணல், வினாக்கொத்துக்கள், அவதானிப்பின் மூலம் திரட்டப்பட்டன. அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும், பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆள.நுஒஉநட மூலம் பகுப்பாய்வு செய்து அதனை வியாக்கியானமும், கலந்துரையாடலும் செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**வகுப்பறைக் கற்றலில் மெல்லக் கற்கும் பிள்ளைகள்**




*உரு 1: மெல்லக் கற்கும் பிள்ளைகள்*

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல், தொடர்பில் கேட்கப்பட்ட வினாவிற்கு மிக அதிகம் என 10% ஆன ஆசிரியர்களும், அதிகம் என 15% ஆன ஆசிரியர்களும், ஓரளவு என 20% ஆன ஆசிரியர்களும், குறைவு என 30% ஆன ஆசிரியர்களும், மிகக்குறைவு என 25% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கினர். பகுப்பாய்வின்படி சாதாரண மாணவர்களை விட இம்மாணவர்களின் கற்றல் குறைவாகவே காணப்படுகின்றது. மேற்கொண்ட கலந்துரையாடலில் இதற்கான காரணங்களாக பெற்றோருக்கு இப் பிள்ளைகளின் கற்றல் தொடர்பான விழிப்புணர்வு குறைவாக உள்ளதனால் பிள்ளைகளை பாடசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பாமல் விடுகின்றனர், எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாகவும் இம் மாணவர்கள் உள்ளனர் எனக்கூறினர்.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றல் பிரச்சினைகள்**




*உரு 2 வகுப்பறைச் சூழல்.*

மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைச் சூழல் தொடர்பாகப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், ஓரளவு என 15% ஆன ஆசிரியர்களும், குறைவு என 40% ஆன ஆசிரியர்களும், மிகக் குறைவு என 25% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர். இதிலிருந்து மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலுக்கு பொருத்தமான வகுப்பறைச் சூழல் குறைவாகவே உள்ளது. குறைவு, மிகக்குறைவு என பதில் அளித்தவர்கள் கூறிய காரணங்களாக இடவசதி குறைவு, அதிகபடியான மாணவர்கள் காணப்படுகின்றமை, போன்ற காரணங்களை கூறினர்.

மெல்லக் கற்கும் மாணவர்களின் பண்புகள் பற்றிய ஆய்வை மேற்கொண்டவர்களான டீயவநசஅயஒெ ஏயடடைஅஇ லுழரளெ ஆகிய கல்வி ஆய்வாளர்கள் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்த நிருபிக்கப்பட்ட உண்மைகளாக வகுப்பறையில் அவர்கள் அதிக நேரத்தை செலவழித்து தமக்கு விருப்பமான ஒரு விடயத்தை கற்றுக்கொள்வர் ஏனைய விடயங்களில் அக்கறை காட்டமாட்டார்கள் எனக்குறிப்பிட்டுள்ளது.

எனவே வகுப்பறையில் அதிகபடியான மாணவர்கள் காணப்படுகின்றமையால் இம்மாணவர்களுக்காண அதிகபடியான ரேத்ததை செலவிடுவது ஆசிரியருக்கு பெரும் சவாலாக உள்ளது மேற்கூறிய ஆய்வு முடிவு ஆய்வாளனின் இந்த ஆய்வை முன்னெடுத்துச்செல்வதற்கு ஊன்றுகோலாய் உள்ளது.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாடு.**




***உரு 3 பெற்றோரின் ஒத்துழைப்பு.***

மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர், கற்றல் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனரா? என கேட்கப்பட்ட வினாவிற்கு மிக அதிகம் என 10% ஆன ஆசிரியர்களும், அதிகம் என 15% ஆன ஆசிரியர்களும், ஓரளவு என 20% ஆன ஆசிரியர்களும், குறைவு என 30% ஆன ஆசிரியர்களும், மிகக்குறைவு என 25% ஆன

ஆசிரியர்களும் பதில்களை வழங்கினர். பகுப்பாய்வின்படி பெற்றோரது ஒத்துழைப்பு குறைவாகவே காணப்படுகின்றது. கலந்துரையாடலின் படி பெற்றோரின் ஒத்துழைப்பு குறைவதற்கான காரணங்களாக பெற்றோர்களின் கவனம் இன்மை, ஆசிரியருடன் தொடர்பாடல் குறைவு, மெல்லக் கற்கும் பிள்ளைகளை கவனிப்பது குறைவு, பெற்றோர் வறுமை காரணமாக தூர இடங்களுக்கு தொழிலுக்கு செல்கின்றமை போன்ற காரணங்களை முன்வைத்தனர்.

மெல்லக் கற்கும் மாணவர்களின் குடும்ப வறுமை காரணமாகவே ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையிலான இடைவெளி குறைவாக உள்ளதென சர்வதேச ஆய்வாளரான ஆரீரனயவாரஇ 2013 இல் Role of Teacher on helping slow learners எனும் ஆய்வில் வளர்ச்சிடைந்துவரும் நாடுகளில் வாழும் மக்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களாக காணப்படுகின்றனர் அனேகமான மக்கள் கூலித்தொழில் செய்து தனது வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர் இதனால் இம்மாணவர்களின் கற்றலில் பெற்றோர்களால் அதிக ஈடுபாடு காட்ட முடியாமல் போய் விடுகின்றது. இதனால் ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் இணைந்து செயற்படுவது குறைவாக உள்ளது.

மேற்கூறிய ஆய்வு முடிவிலும் ஆய்வாளனின் ஆய்வுப்பிரச்சினை வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனவே பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து செயற்படுவதன் மூலம் இம்மாணவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும்.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையும், ஆலோசனையும்**




*உரு 4 பெற்றோரின் ஈடுபாடு*

மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு உள்ளதா? எனக் கேட்கப்பட்ட வினாவிற்கு மிகச் சிறப்பாக என 10% ஆன ஆசிரியர்களும், சிறப்பானது என 10% ஆன ஆசிரியர்களும், திருப்தியாக என 20% ஆன ஆசிரியர்களும், குறைவாக என 40% ஆன ஆசிரியர்களும், மிகக் குறைவாக என 20% ஆன ஆசிரியர்களும் பதில் வழங்கினர். ஆகவே பெற்றோரின் ஈடுபாடு குறைவாக உள்ளது. மேற்கொண்ட கலந்துரையாடலில் இதற்கான பாடசாலையிலிருந்து வீடு அதிக தூரத்தில் உள்ளமை, இம்

மாணவர்கள் தொடர்பாக பெற்றோர் கொண்டுள்ள எதிரானமனப்பாங்கு போன்ற காரணங்களால் இம் மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாடு குறைகின்றது.

**முடிவுகளும், விதப்புரைகளும்**

**வகுப்பறைக் கற்றலில் மெல்லக் கற்கும் பிள்ளைகளை இனங்காணல்.**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளின் வகுப்பறையில் மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்கண்டு கற்பிப்பது குறைவாகவே காணப்படுகிறது.
2. வகுப்பறையில் எழுத்துப்பிரச்சினையுடைய மாணவர்களை, வாசிப்புப்பிரச்சினையுடைய மாணவர்களை, கணிதம் தொடர்பான பிரச்சினையுடைய மாணவர்களை தனித்தனியாக கையாள்வது குறைவாகக் காணப்படுகிறது.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளைக் அறிதல்.**

1. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் 65% ஆன பாடசாலைகளின் வகுப்பறை இம்மாணவர்களின் கற்றல், கற்பித்தலுக்கு பொருத்தமானதாக இல்லை.
2. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் குறிப்பாக 65% ஆன மெல்லக் கற்கும் மாணவர்கள் கிரகித்தல், மனனம் செய்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தல், தொகுத்தல், முதலிய செயற்பாடுகளில் குறைந்த மட்டத்தில் உள்ளனர்.
3. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவது குறைவு. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் 65% ஆன மெல்லக் கற்கும் மாணவர்களின் பாடசாலை வரவு குறைவு.

**மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை இனங்காணல்.**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 55% ஆன மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பங்களிப்பு வழங்குவது குறைவாகவே காணப்படுகிறது.
2. இம் மாணவர்களின் 60% ஆன பெற்றோரின் கல்வி மட்டம் குறைவாக உள்ளதனால் இம் மாணவர்களுக்கு வீட்டில் கல்வி கற்றுக்கொடுப்பது சவாலாக உள்ளது.
3. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்வது குறைவு.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையும், ஆலோசனையும்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 65% ஆன மெல்லக் கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் இப் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் விழிப்புணர்வு

அற்றவர்களாகவும், இப் பிள்ளைகள் பற்றி தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும், தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

2. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 60% ஆன பெற்றோர்கள் இம்மாணவர்களுக்கு பொருத்தமான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாகவே காணப்படுகிறது.
3. சில பெற்றோர் ஆசிரியருடன் இப் பிள்ளைகளின் கற்றல் தொடர்பில் கலந்துரையாடுவது குறைவு.

**விதப்புரைகள்**

**வகுப்பறைக் கற்றலில் மெல்லக் கற்கும் பிள்ளைகளை இனங்காணல்**

1. நுண்மதிச் சோதனைகள் நடாத்துதல், வகுப்பறையில் கற்பிக்கும் போது இம் மாணவர்கள் வெளிப்படுத்தும் இயல்பைக்கொண்டு ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களை இனங்காண்டு அவர்களுடன் உறவாடுவது மிகுந்த பயனைத்தரும் (Abraham Willard, 1991).
2. ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலுக்கு உதவ வேண்டும், குறிப்பாக பெற்றோர்களும் இப் பிள்ளைகளை சரியான முறையில் இனங்கண்டு அவர்களை கையாள வேண்டும்.
3. சிறப்பு வகுப்புக்கள் நடாத்துதல் வேண்டும். விளக்கப்படங்கள், செய்து காட்டல்கள், காட்சிக் கேள்வி சாதனங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.
4. ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் பிள்ளைகளுக்கு தனியாக நேரத்தை ஒதுக்கி கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்( முனவ்ரோ 2020).

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல் பிரச்சினைகளைக் அறிதல்**

1. மெல்லக் கற்கும் மாணவர்களுக்கேற்ப வகுப்பறைச் சூழல் அமைக்கப்பட வேண்டும். அதற்குப் பாடசாலையின் உதவியுடன் பெற்றோர், கல்வி அதிகாரிகளின் உதவிகளைப் பெற வழிவகுத்தல் அவசியம். இம்மாணவர்களின் விசேட நிலையை ஆசிரியர் உணர்ந்து பொருத்தமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.
2. மேலும் பயிற்றப்பட்ட விசேட தேவைகள் சார் கல்விக்கு பொருத்தமான ஆசிரியர்களை நியமித்தல். விசேட செயற்றிட்டங்களை மேற்கொண்டு இம்மாணவர்களின் கற்றலை உறுதிப்படுத்தல். அதிபர் சிறந்த முறையில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.
3. செயல்நிலை ஆய்வுகளில் ஆசிரியர் ஈடுபட்டு இம்மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு பரிகார கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். (Thannaraj, 2005).

**மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை இனங்காணல்**

1. பிள்ளை கல்வியைக் கற்று சிறந்த வகையில் முன்வர அவர்களுக்கு பெற்றோரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். (சிவநடேஸ், 2006).
2. மெல்லக் கற்கும் பிள்ளைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் பாடசாலைக்கு பெற்றோருக்கும் இடையிலான உறவை பலப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளும் வகையில் அருகில் உள்ள பாடசாலையில் இம்மாணவர்களை சேர்ப்பதற்கு வலயக் கல்வி அலுவலகம் உதவி புரிதல் வேண்டும்.
3. மெல்லக் கற்கும் மாணவர்களுடன் தொடர்புபட்ட பல்கலைக்கழக, கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்களை அழைத்து பெற்றோர்களுக்கு செயலமர்வுகள் நடாத்துதல்.

**மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் மெல்லக் கற்கும் மாணவர்களின் வகுப்பறைக் கற்றலில் ஆசிரியரின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையும், ஆலோசனையும்**

1. விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு காணப்படும் வாய்ப்பினை ஆசிரியர்கள் பெற்றோருக்கு தெளிவுபடுத்தல். ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் தொடர்பில் இம்மாணவர்களது நிலைமைகளை பெற்றோருக்கு எடுத்துக்காட்டல் வேண்டும்.
2. பெற்றோர்களின் கருத்துக்களை கவனத்திற் கொண்டு அவர்களுடன் இணைந்து கற்றல், கற்பித்தல் தொடர்பாக வரும் பிரச்சினைகளை ஆசிரியர்கள் தீர்ப்பதன் மூலம் பெற்றோரின், பங்களிப்பையும் அதிகரிகப்பதுடன் மாணவர்களின் கற்றலையும் மேம்படுத்த முடியும் ( Desforges and abouchar, 2003).
3. இப் பிள்ளைகளது குடும்பத்துடன் பாடசாலை, நெருக்கமான உறவை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை தொடர்ச்சியாக வழங்குதல்

**உசாத்துணைகள்**

Anas, P. L.,& Nawastheen, F. M. (2019) **Teachers' perception towards in fulfilling diverse learners needs in the classroom teaching-learning process**, *South Eastern University International Arts Research Symposium - 2019*, http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170.

Caplan, G. (1974) **Support systems and community mentel helth: lectures on consept Development,** Behavioral Publications, New York.

Dempsey, I., & Dunst, J. (2004) **Helpgiving styles and parent empowerment in families with a young child with a disability**, *Journal of Intellectual & Developmental Disability*, *29*:1, 40-51. https://doi.org/10.1080/13668250410001662874.

Desforges, C. & Abouchaar, A. (2003) "**The impact of parental involvement, parental support and family education on pupil achievemet**", (No. 433). Nottingham, England: DfES. http://relationalschools.org/2017/08/12.

Noor, A. (2015) **Parental involvement in special education challenges faced to involving in education,** university of Karachi, Pakistan.

Rodriguez, R. J., Blatz, E. T. & Elbaum, B. (2014) **Parents "views of schools" involvement efforts**. *Exceptional Children*, *81*(1), 79–95. https://doi.org/10.1177/0014402914532232.

Shazny, S. (2021) **"Challenges faced by students with special needs and learning opportunities for them"**, *Muallim Journal of Social Sciences and Humanities*, *5(*1), 74-83. https://doi.org/10.33306/mjssh/113

AR, M. M., & Hardiansyah, F. (2021). Analisis Optimalisasi Peran Guru dan Orang Tua dalam Mendampingi Anak Selama Pembelajaran Daring Siswa Sekolah Dasar. Jurnal Basicedu, 6(1), 423–432. https://doi.org/10.31004/basicedu.v6i1.1942

Azhari, B., & Fajri, I. (2022). Distance learning during the COVID-19 pandemic: School closure in Indonesia. International Journal of Mathematical Education in Science and Technology, 53(7), 1934–1954. https://doi.org/10.1080/0020739X.2021.1875072

Baidowi, A. (2020). Implementasi Kebijakan Bantuan Operasional Penyelenggaraan Pendidikan pada Masa Pandemi Covid-19. Jambura Journal of Educational Management, 1(September), 85–102. https://doi.org/10.37411/jjem.v1i2.167

Chrisnawati, Y., & Suryani, D. (2020). Hubungan Sikap, Pola Asuh Keluarga, Peran Orang Tua, Peran Guru dan Ketersediaan Sarana Dengan Perilaku Hidup Bersih dan Sehat. Jurnal Ilmiah Kesehatan Sandi Husada, 12(2), 1101–1110. https://doi.org/10.35816/jiskh.v12i2.484

# இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு

Ms. Pulenthiran Hindujah
AK/ Al- Aqsa Vidyalayam,
Pothuvil.
phindujah1994@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மாணவர்களின் மொழித்திறன் விருத்திக்கும், மீளவலியுறுத்தலுக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுவதற்காக “இடைநிலைப் பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு” எனும் தலைப்பில் அளவைநிலை ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில் மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைக் கண்டறிதல், மீளவலியுறுத்தும் செயற்பாட்டினைப் பொருத்தமான முறையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கு மீளவலியுறுத்தல் நுட்பங்களை உரிய காலப்பகுதியில் பிரயோகிக்காமல் விடுவதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்தல் மற்றும் மீளவலியுறுத்தலினைப் பின்பற்றி மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் ஆகிய ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் நோக்க மாதிரியின் அடிப்படையில் 1AB பாடசாலை இரண்டும் 1C பாடசாலை மூன்றும் வகை II பாடசாலை ஐந்தும் என மொத்தமாக 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிபர்கள் (10), தமிழ்ப் பாட ஆசிரியர்கள் (17) தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் ஆண், பெண் எனும் அடிப்படையிலும் (3:1 எனும் விகித அடிப்படையில் மொத்தமாக 79 பேர்) பெற்றோர்கள் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய ஆண் மற்றும் பெண் மாணவர்களின் பெற்றோர்கள் எனும் அடிப்படையிலும் படையாக்கப்பட்ட மற்றும் இலகு எழுமாற்று மாதிரியின் மூலம் (3:1 எனும் விகித அடிப்படையில் மொத்தமாக 79 பேர்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளரையும் உள்வாங்கி மாதிரித் தெரிவானது எடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் ஆகிய ஆய்வுக்கருவிகளின் மூலம் பெறப்பட்ட தரவுகள் அளவு மற்றும் பண்புரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் நேர்மீளவலியுறுத்தல் நுட்பங்களைப் பிரயோகிப்பதன் வாயிலாக மாணவர்களின மொழித்திறன் செயற்பாட்டில் ஆர்வம் அதிகரிக்கும் என 58.82% வீதமான ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், மாணவர்களின் பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்காக அவர்களின் கூச்ச சுபாவத்தைத் தணிக்க அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கல் வேண்டும் என 23.53 வீதமான ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு மேற்கூறப்பட்டுள்ள முடிவுகள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன், முடிவுகளுக்கேற்ப விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *எழுத்துத்திறன், கிரகித்தல் திறன், பேச்சுத்திறன், மீளவலியுறுத்தல், வாசிப்புத்திறன்*

**அறிமுகம்**

**ஆய்வு அறிமுகம்**

மாணவர்களுடைய மொழித்திறன் விருத்தியானது அவர்களுடைய கற்றல் செயற்பாட்டினை வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க வகையில் அமைத்துக்கொள்வதற்கு அவசியமானதாகக் காணப்படுகின்றது. மொழித்திறன் எனும் போது வாசிப்புத் திறன், எழுத்துத் திறன், கிரகித்தல் திறன், பேச்சுத்திறன் ஆகியன உள்ளடங்குகின்றன. இத்தகைய திறன்கள் உரிய விதத்தில் விருத்தியடைந்திருப்பது அவசியமாகும். இதன் வாயிலாகவே அவர்களால் உரிய அடைவுமட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும், இணைப்பாடவிதானச் செயற்பாட்டுப் போட்டிகளில் முறையாகச் செயற்படுவதற்கும் இயலுமாகின்றது.

பாடசாலையினைப் பொறுத்த வரையில் அதனுடைய விருத்தியில் அடைவுமட்டம், இணைப்பாடவிதானச் செயற்பாட்டுப் போட்டிகளின் முடிவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே பாடசாலையானது விருத்தியடைய வேண்டுமாயின் மாணவர்களது மொழித்திறன் விருத்தியானது மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. மொழித்திறன் விருத்தியினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களது வகிபாகமும், பெற்றோரது வகிபாகமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

மாணவர்கள் ஒவ்வொருவரினதும் தனியாள் விருத்தியானது இனங்காணப்பட்டு அதனடிப்படையில் ஊக்குவிப்பானது வழங்கப்படவேண்டியது அவசியமாகும். ஆகவே மாணவர்களது தனியாள் வேறுபாடுகளினை இனங்காண வேண்டிய முக்கிய பொறுப்பானது ஆசிரியர்களினைச் சார்கின்றது. நடைமுறையில் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களது தனியாள் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரிய விடயமாகின்றது. எனவே ''மாணவர்களது மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலின் செல்வாக்கு'' எனும் இவ்வாய்வானது மாணவர்களின் மொழித்திறன் விருத்தியினை மேம்படுத்துவதில் ஸ்கின்னரின் மீளவலிறுத்தல் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு அவருடைய கோட்பாட்டின் படி மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்குத் தேவைப்படும் மீளவலிறுத்தலானது ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் எவ்விதம் பிரயோகத்திலுள்ளது என்பதனையும் மீளவலியுறுத்தல் செயன்முறைகளினைப் பிரயோகிப்பதனால் அல்லது பிரயோகிக்காது விடுவதனால் ஏற்படும் விளைவுகளினையும் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

எந்தவொரு பாடத்தையும் கற்க வழிவகுப்பது மொழித்திறனாகும். மொழித்திறன் விருத்தியானது குறைவாகக் காணப்படும் போது ஏனைய பாடங்களைக் கற்பது சிரமமான விடயமாகிவிடும் நிலையானது ஏற்படும். தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் மாணவர்களது மொழித்திறன் சார்ந்த விருத்தியானது உயர்ந்த பட்சமாக விருத்திய செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலானது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது பற்றியதாகவே ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

ஆலையடிவேம்புக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மொழித்திறன்களுடன் தொடர்பான மீளவலியுறுத்தலானது உரிய காலப்பகுதியில் ஆசிரியர்கள் மற்றும் வீட்டுச் சூழலில் மாணவர்களுக்கு வழுங்கப்படாமையானது அவர்களுடைய மொழித்திறனை விருத்தி செய்வதில் தாக்கத்தை ஏற்படுத்தி கற்றல் செயற்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

**பொது நோக்கம்:**

மாணவர்களுடைய மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலானது எவ்விதம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கங்கள்:**

1. மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளினைக் கண்டறிதல்.
2. மீளவலியுறுத்தலினை பொருத்தமான வகையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்காணல்.
3. மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கு மீளவலியுறுத்தல் நுட்பங்களை உரிய காலப்பகுதியில் பிரயோகிக்காது விடுவதால் ஏற்படும் விளைவுகளை ஆராய்தல்.
4. மீளவலியுறுத்தலினைப் பின்பற்றி மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்ளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் யாவை?
2. மீளவலியுறுத்தலினை பொருத்தமான வகையில் பிரயோகிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?
3. மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கு மீளவலியுறுத்தல் நுட்பங்களை உரிய காலப்பகுதியில் பிரயோகிக்காது விடுவதால் ஏற்படும் விளைவுகள் யாவை?
4. மீளவலியுறுத்தலினைப் பின்பற்றி மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்ளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனைகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

Dadazie (2018) கல்விக்கான வாசிப்பு எனும் தலைப்பில் கானாவில் மேற்கொண்ட ஆய்வின் முடிவின் படி வாசிப்புக் குறைபாட்டுக் காரணிகள் தவிர மாணவர்களிடையே பொதுவாகக் காணப்படும் பல வகையான வாசிப்பு சார்பான இடர்பாடுகள் காணப்படுகின்றன. இதில்

- உச்சரிப்புப் பிழை

- பிழையாகப் புரிந்துகொள்ளல்
- எழுத்துக்கள் அல்லது சொற்களைத் தவிர்த்தல்
- கூடுதல் எழுத்துக்கள் அல்லது சொற்களைச் செருகுதல்
- ஒத்த ஒலியுடைய சொற்களை மாற்றுதல்
- வார்த்தைகளை தவறாக உச்சரித்தல்
- சொல் அல்லது அசைகளை தலைகீழாக மாற்றுதல்
- வார்த்தைகளை இடமாற்றம் செய்தல்
- வார்த்தைகளை திரும்பத் திரும்ப சொல்லுதல்

போன்றன காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் படி வாசிப்புத்திறன் தொடர்பாக மாணவர்கள் எத்தகைய இடர்பாடுகளினை எதிர்கொள்கின்றனர் என்பதனை இனங்காண வேண்டியுள்ளதால் இவ்வாய்வானது இலக்கிய மீளாய்வில் உள்வாங்கப்பட்டுள்ளது.

Silvina & Listyani (2020) மாணவர்களது எழுத்து இடர்பாட்டில் பங்களிக்கும் உண்மைகள் எனும் தலைப்பில் இந்தோனேசியாவில் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் எழுதுவது என்பது மிகவும் கடினமான திறன்களில் ஒன்றாகும். மொழி கற்பவர்கள் எழுதும் செயன்முறையில் பல்வேறு சிரமங்களினை எதிர்கொள்கின்றனர். எழுதுவதில் மாணவர்கள் சிரமப்படுவதற்கு இரண்டு காரணிகள் இருக்கின்றன. இது உள் மற்றும் வெளிப்புறக் காரணிகளாகும். உட்காரணியில் சுய ஊக்கம், தன்னம்பிக்கை, அறிவு இல்லாமை மற்றும் அழுத்தமான உணர்வு ஆகியன உள்ளடங்கப்பட்டுள்ளன. வெளிப்புறக் காரணிகளில் கற்பித்தல் பாணி, வகுப்பறை சூழல் ஆகியன உள்ளடங்குகின்றன. அத்துடன் பேசுவதைப் போலல்லாமல் எழுதுவதற்குப் பல்வேறு அம்சங்கள் தேவைப்படுவதால் மாணவர்கள் விரக்தியையும் பதற்றத்தையும் உணர்கின்றனர். எழுதுவதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையில் என்ன எழுத வேண்டும் மற்றும் எப்படி எழுத வேண்டும் என்பதில் அவர்களிடம் காணப்படும் இலக்கணப்பிழை எழுதுவதில் தயக்கமானது ஏற்படுவதற்கும் காரணமாகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

Zainurrahman & Sangaji (2019) மாணவர்களது பேச்சுத்திறன் இடர்பாடு எனும் தலைப்பில் இந்தோனேசியாவில் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் பேசுவது தொடர்பான சிரமங்கள் மாணவர்களிடம் அவ்வப்போது காணப்படுவதுடன் இது கற்பித்தல் உத்தி காரணமாக ஏற்படவில்லை எனக் குறிப்பிடுவதுடன் மாணவர்களிடம் இலக்கண அறிவு குறைவாக இருக்கின்றமை, மாணவர்களின் தயக்கம் மற்றும் உளவியல் பிரச்சினைகள் பேசும் செயல்பாட்டின் செயல்திறன் பாதிப்படைவதற்குக் காரணமாக அமைகின்றன. அத்துடன் சுயமரியாதை குறைவு, கண்டுபிடிப்பு மற்றும் சொல்வளம் குறைவு ஆகியவற்றால் மாணவர்கள் பேசும் செயற்பாட்டில் இடர்படுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Diora & Noor (2020) கிரகித்தலில் மாணவர்களது சிரமங்கள் எனும் தலைப்பில் சுமாத்திராவில் மேற்கொண்ட ஆய்வின் முடிவின் படி மாணவர்கள் புரிந்துகொள்வதில் சிரமங்களை ஏற்படுத்தும் காரணிகள் மற்றவர்களைச் சார்ந்தது. அந்த வகையில் ஆசிரியர்களிடம் பொருள் விளக்கம் கேட்க வெட்கம், உணர்ச்சிக் குழப்பங்கள், ஆசிரியர் மிக விரைவாக விடயங்களை

விளக்குதல், வெகுமதி மற்றும் மீளவலியுறுத்தல் இல்லாமை மற்றும் கவனம் செலுத்தாமை ஆகியன கிரகித்தலில் மாணவர்கள் இடர்படுவதற்கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளார். மாணவர்களது மொழித்திறன் விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணங்களினை எடுத்துக்காட்டுவதற்காக இவ்வாய்வானது இலக்கிய மீளாய்வில் சேர்க்கப்பட்டுள்ளது.

Wheatly, West & et al (2017) மாறுபட்ட மீளவலியுறுத்தல் மூலம் நடத்தையை மாற்றியமைத்தல் எனும் தலைப்பில் வட வேர்ஜீனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவர்களது நடத்தையினை மாற்றியமைப்பதற்கு மீளவலியுறுத்தலினை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்**

பாடசாலையானது மாணவர்களிடத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கலைத்திட்ட அமுலாக்கத்தினூடாக மாணவர்களிடத்தில் உருவாக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்கின்றது. இத்தகைய செயற்பாட்டினை திருப்திகரமாக முன்னெடுப்பதற்கு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது மாணவர்களது மொழித்திறன் விருத்தியானது உரிய முறையில் மீளவலியுறுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ஆனால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் இடைநிலைப்பிரிவு மாணவர்களிடையே மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய பலர் காணப்படுவதோடு, கற்றல் செயற்பாடுகளும் மிகவும் பின்னடைந்த நிலையில் காணப்படுவதனால் அம்மாணவர்களுடைய மொழித்திறனை விருத்தி செய்வதற்கு உரிய முறையில் மீளவலியுறுத்தலானது மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு வகையான ஆய்வு முறைகள் காணப்படுகின்ற போதிலும் ஆய்வாளன் தனக்குப் பொருத்தமான ஆய்வு முறையினைத் தெரிவு செய்ய வேண்டும். ஆய்வாளனானவன் ஆய்வு தொடர்பான ஆய்வு நோக்கங்கள், ஆய்வுப் பிரச்சினையின் இயல்புகள், ஆய்வின் முக்கியத்துவம், ஆய்விற்கான வளங்கள், நடைமுறைச் சாத்தியம் என்பன பற்றிய தெளிவான விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு முறையினைத் தெரிவு செய்ய வேண்டும். அந்த வகையில் மாணவர்களுடைய மொழித்திறன் விருத்தியில் மீளவலியுறுத்தலானது செல்வாக்குச் செலுத்தும் விதம் எனும் ஆய்வுத் தலைப்பிற்குப் பொருத்தமான ஆய்வு முறையாக அளவை நிலை ஆய்வு முறை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வானது மாணவர்களுடைய மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலுள்ள தொடர்புகளினைக் கண்டறிந்து அதனைப் பின்பற்றி மாணவர்களது மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுத் தலைப்பினை மையமாகக் கொண்டு பொது நோக்கம், சிறப்பு நோக்கங்கள் என்பன அமைக்கப்பட்டு அவற்றிலிருந்து ஆய்வு வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆய்வு வினாக்களை மையமாகக் கொண்டு ஆய்வுக் கருவிகள் அமைக்கப்பட்டதுடன் ஆய்வுக் கருவிகளின் பொருத்தப்பாட்டினை இனங்காண்பதற்கு ஆய்வுக் கருவிகள் முன்னாய்வு செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஆய்வு முடிவுகளை நம்பகம் மற்றும்

தகுதியுடையதாக்குவதற்குப் பொருத்தமான ஆய்வுக் கருவிகளான வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வுப் பிரதேசமான ஆலையடிவேம்புக்கோட்டமானது 16 பாடசாலைகளினைக் கொண்டுள்ளது. இதில் 1AB பாடசாலைகள் இரண்டும், 1C பாடசாலைகள் மூன்றும் வகை II பாடசாலைகள் ஐந்தும், வகை III பாடசாலைகள் ஆறும் என 16 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதில் ஆய்விற்கான தகவல்களைப் பெறும் நோக்கில் பாடசாலைகள் நோக்க மாதிரியினடிப்படையில் பத்துப்பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இக்கோட்டத்திலுள்ள வகை III பாடசாலைகளில் ஆறும் ஆரம்பப் பிரிவுகளினை மாத்திரம் உள்ளடக்கியதால் அவை ஆய்வுத் தலைப்பிற்குப் பொருந்தாததால் அவை உள்ளடக்கப்பட முடிவுசெய்யவில்லை.

மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பத்துப் பாடசாலைகளிலுமுள்ள பத்து அதிபர்கள், தமிழ் மொழிக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர், தமிழ் மொழிக்கான ஆசிரியர்கள் ஆகியோர் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களது பெற்றோர் ஆகியோர் படையாக்கப்பட்ட மாதிரி மற்றும் இலகு எழுமாற்று மாதிரி மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் ஆய்வு மாதிரிகளாக தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரும், ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளிலுள்ள 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தமிழ்மொழிக்கான ஆசிரியர்கள் 17 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் ஆண், பெண் எனப் படையாக்கப்பட்டு 3:1 என்ற விகிதத்தில் 79 மாணவர்களும், மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய 241 மாணவர்களது பெற்றோர்கள் ஆண், பெண் மாணவர்களது பெற்றோர் எனப் படையாக்கப்பட்டு 3:1 என்ற வீதத்தில் 79 பேரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இம் மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடல் மண்டபத்திற்கு வரவழைக்கப்பட்டு ஆய்வாளனால் வினாக்கள் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் வழங்கப்பட்டுள்ளது.

தரவுப் பகுப்பாய்வு செய்யும் போது முதலில் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் அதிபருக்கு நேர்காணல், தமிழ்ப்பாட ஆசிரியர்கள் மற்றும் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களுக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெற்றோருக்கு நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்துக்கள் மூடிய வினாக்கள் மற்றும் திறந்த வினாக்களைக் கொண்டு வடிவமைக்கப்படும் ஆய்வுக்கருவிகளின் வாயிலாக தரவுகள் மற்றும் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளையும் ஆய்வு நோக்கத்திற்கேற்ப பிரித்து ஒவ்வொரு நோக்கத்திற்கும் கீழ் குறிப்பிட்ட அந்நோக்கங்களினை ஈடுசெய்யக் கூடியவாறான விடயங்கள் அமையுமாறு தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. தரவுகள் அட்டவணையாக்கம் செய்யப்பட்டும் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட முறையில் தொகுக்கப்பட்ட தகவல்கள் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்வு முறை கலந்த கலப்பு பகுப்பாய்வு மூலமாக EXCEL மென்பொருள் மூலமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. தொகை அடிப்படையில் பெறப்பட்ட தகவல்கள் நூற்றுவீத அமைப்பில் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதால் இது அளவு ரீதியான முறையாகவும், பண்பு ரீதியாகப் பெறப்பட்ட தகவல்கள் அட்டவணையாக்கப்பட்டு விபரிக்கப்பட்டு வியாக்கியானமும் கலந்துரைரையாடலும் செய்யப்பட்டு முடிவானது பெறப்பட்டுள்ளதால் அளவு மற்றும் பண்பு ரீதியான முறைகளினைக் கொண்ட கலப்பு முறையானதாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குடித்தொகையும் மாதிரித் தெரிவும்**

இவ்வாய்வானது ஆய்வுக்கருவிகளினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆய்வு வினாக்களுக்கு விடை காணும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களினைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அத்தியாயம் ஒன்று ஆய்வைப் பற்றிய அறிமுகமாகவும், அத்தியாயம் இரண்டு இலக்கிய மீளாய்வாகவும், அத்தியாயம் மூன்று ஆய்வு முறையியலாகவும், அத்தியாயம் நான்கு தரவுகளின் பகுப்பாய்வு வியாக்கியானமும் கலந்துரையாடலாகவும், அத்தியாயம் ஐந்து முடிவுகளும் விதப்புரைகளும் என்ற வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆய்வு வினாக்களினை மையமாகக் கொண்டு அளவு ரீதியான , பண்பு ரீதியான இறுதி முடிவுகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வு நோக்கத்தை மையப்படுத்தி பெறப்பட்ட முடிவுகளிற்கேற்ப விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்கான குடித்தொகை நியாயமானதாக அமைய வேண்டியது அவசியமாகும். திருக்கோவில் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆலையடிவேம்புக் கோட்டத்தில் 16 பாடசாலைகள் அமைந்துள்ளன. இதில் இடைநிலைப் பிரிவினை உள்ளடக்கிய 10 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வாளன் தனது ஆய்வில் வெற்றி பெறுவதற்கு ஆய்விற்குப் பொருத்தமான மாதிரித் தெரிவானது அமைவது அவசியமாகும். அந்த வகையில் ஆய்வின் நம்பகத்தன்மையினையும் உண்மைத் தன்மையினையும் அறியும் நோக்கில் நோக்க மாதிரியின் உபயோகத்தினால் 10 பாடசாலைகளுமே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆய்விற்கான ஆலையடிவேம்புக்கோட்டத்தில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் யாரும் இல்லாத நிலையானது காணப்படுவதால் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் காணப்படுவதால் அவரையும் உள்வாங்கி மாதிரித் தெரிவானது எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வின் நோக்கம் கருதி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலிருந்தும் நோக்கமாதிரியின் பிரயோகத்தால் 10 அதிபர்களுமே மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகளிலும் கனிஷ்ட இடைநிலைப் பிரிவிற்குக் கற்பிக்கும் தமிழ்ப்பாட ஆசிரியர்கள் 17 பேரில் நோக்க மாதிரியின் உபயோகத்தால் 17 பேருமே மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பத்துப் பாடசாலைகளிலும் மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் 241 பேர் காணப்படுகின்றனர். இவர்களில் ஆண், பெண் எனப் படையாக்கப்பட்டு அவர்களில் 3:1 என்ற விகிதாசாத அடிப்படையில் இலகு எழுமாற்று மாதிரியினடிப்படையில் 79 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளர்.

மாணவர்களது மொழித்திறன் விருத்தியினைப் பொறுத்த வரையில் பெற்றோரின் பங்களிப்பும் முக்கியமாகக் காணப்படுவதனால் இவர்களும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களது பெற்றோரும் 241 பேர் காணப்படுகின்றனர். அவர்களில் ஆண் மாணவர்களது பெற்றோர், பெண் மாணவர்களது பெற்றோர் எனப் படையாக்கப்பட்டு அவர்களில் 3:1 எனும் விகித அடிப்படையில் இலகு எழுமாற்று மாதிரியின் உபயோகத்தால் 79 பெற்றோர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**முடிவுகள்**

**மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலான தொடர்புகள்**

மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடம் மாணவர்களது எழுத்துத் திறன் குறைவு அல்லது மிகக் குறைவு எனின் அதற்கான காரணங்கள் 02இனைக் குறிப்பிடுக எனும் வினாவானது வழங்கப்பட்ட போது அவர்கள் வழங்கிய பதில்கள் பின்வரும் அட்டவணையின் வாயிலாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1: மாணவர்களது எழுத்துத்திறன் குறைவாக மற்றும் மிகக் குறைவாகக் காணப்படுவதற்கான காரணங்கள் தொடர்பான ஆசிரியர்களது பதில்கள்**

| காரணங்கள் | ஆசிரியர்களது எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1. ஒலி வேறுபாடுகள் உரிய முறையில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் மீளவலியுறுத்தப்படாமையினால் அவற்றை இனங்கான முடியாத நிலை | 02 | 14.29% |
| 2. எழுத்துக்கள் சரியாக எழுதுவதற்கு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் ஊக்குவிக்கப்புக்கள் வழங்கப்படாமை | 02 | 14.29% |
| 3. ஆரம்ப வகுப்பிலிருந்து எழுத்துக்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் மீளவலியுறுத்தப்படாமை. | 08 | 57.14% |
| 4. எழுத்துக்களை சரியான அளவுகோலுக்கு அமைவாக எழுத ஆசிரியர்களால் மீளவலியுறுத்தப்படாமை. | 03 | 21.43% |
| 5. வீட்டில் மாணவர்களது கொப்பிகளினைப் பெற்றோர் பார்வையிட்டு ஊக்குவிப்புக்களினை வழங்குவதல் குறைவு. | 06 | 42.86% |
| 6. ஒலிக்குரிய சொற்களை எழுத ஆசிரியர் மற்றும் | 04 | 28.57% |

| | | |
|---|---|---|
| பெற்றோர்களால் மீளவலியுறுத்தப்படாமை. | | |
| 7. குறில், நெடிலுக்கேற்ற வாக்கியம் அமைக்க முடியாமை | 01 | 7.14% |
| 8. எழுத்துப் பிழையின்றி எழுத ஆசிரியர் மற்றும் பெற்றோரால் ஊக்குவிப்புக்கள் உரிய முறையில் வழங்கப்படாமை. | 02 | 14.28% |

அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் ஆரம்ப வகுப்பிலிருந்து எழுத்துக்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் மீளவலியுறுத்தப்படாமை எனக் குறிப்பிட்டுள்ளனர். இது 57.14% ஆகும். ஒலிக்குரிய சொற்களை எழுத ஆசிரியர் மற்றும் பெற்றோர்களால் மீளவலியுறுத்தப்படாமை எனக் 28.57% ஆனோர் குறிப்பிட்டுள்ளனர். பெரும்பான்மையானோரின் பதில்களின் படி மாணவர்களது எழுத்துத்திறனானது குறைவாக இருப்பதற்கான காரணமாக ஆரம்ப வகுப்பிலிருந்து எழுத்துக்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரால் மீளவலியுறுத்தப்படாத நிலை காணப்படுவதனைக் கண்டறியலாம்.

இதன் படி Ibrahim (2015) மாணவர்களது எழுத்துப் பிரச்சினை எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் மாணவர்களிடம் மொழியியல் பிரச்சினை, மனப்பாங்கு மற்றும் அறிவாற்றல் பிரச்சினை ஆகியன எழுத்துத்திறன் சார்பாகக் காணப்படுகின்றன. இதில் மாணவர்களிடம் எழுதுவதில் பிரச்சினை ஏற்படுவதற்கான காரணங்களாக எழுதும் ஆரம்பத்திலிருந்து எழுத்துத் தெரியாமலிருத்தல், கற்பவரின் உக்குவிப்பு இல்லாமை, நேரம் போதாமை மற்றும் பயிற்சி போதாமை ஆகியவற்றினைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய காரணங்களால் மாணவர்கள் எழுதுவதில் பல்வேறு சவால்களினை எதிர்கொள்கின்றனர். இதனால் அவர்களுடைய கற்றல் செயற்பாட்டிலும் முழுமைபெற முடியாத நிலையானது ஏற்படுகின்றது. எனக் குறிப்பிட்டது போன்று ஆய்வுப் பிரதேசத்திலும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படாத நிலையானது காணப்படுகின்றதால் இவருடைய ஆய்வானது தரவுப்பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுடன் ஒத்துப்போவதாக அமைகின்றது.

**மொழித்திறனை விருத்தி செய்வதில் ஏற்படும் சவால்கள்**

மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடம் பௌதீக வளங்களது பற்றாக்குறையினால் மாணவர்களது மொழித்திறனை விருத்தி செய்வதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் 03இனைக் குறிப்பிடுக எனும் வினாவானது வழங்கப்பட்ட போது அவர்கள் வழங்கிய பதில்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2: பௌதீகவளங்களின் பற்றாக்குறையினால் மொழித்திறனை விருத்தி செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான ஆசிரியரது பதில்கள்**

| சவால்கள் | ஆசிரியர்களது எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| 1. மாணவர்களது மொழித்திறனை விருத்தி செய்வதற்கான பௌதீக வளங்களை முறையாக செயற்படுத்துவது | 02 | 11.76% |

| | | |
|---|---|---|
| சிரமமாகக் காணப்படுகின்றது | | |
| 2. இடர்பாடுடைய மாணவர்கள் கவனிப்பாரற்ற நிலை | 08 | 47.06% |
| 3. குறைபாடுடைய மாணவர்களது இடம்பெயர்வு | 09 | 52.94% |
| 4. மாணவர்களினை ஊக்குவிக்க முடியாமை | 10 | 58.82% |
| 5. நவீன கற்றல் உபகரணங்களினைப் பயன்படுத்த முடியாமை | 11 | 64.71% |
| 6. மாணவர்களிற்குப் பிடித்தவாறு கற்பித்தலினை மேற்கொள்ள முடியாமை | 11 | 64.71% |

மூலம் - ஆய்வாளன்

அட்டவணை 4.2 இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் பௌதீக வளங்களது பற்றாக்குறையினால் நவீன கற்றல் உபகரணங்களினைப் பயன்படுத்த முடியாமை மற்றும் மாணவர்களிற்குப் பிடித்தவாறு கற்பித்தலினை மேற்கொள்ள முடியாமை ஆகியவற்றறால் மாணவர்களது மொழித்திறனை மேம்படுத்த முடியாத நிலையானது காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது 64.71% ஆகும். பெரும்பான்மையானோரின் பதில்களின் படி பௌதீக வளங்களது பற்றாக்குறையினால் நவீன கற்றல் உபகரணங்களினைப் பயன்படுத்த முடியாமை மற்றும் மாணவர்களிற்குப் பிடித்தவாறு கற்பித்தலினை மேற்கொள்ள முடியாமை ஆகியவற்றால் மாணவர்களது மொழித்திறனை மேம்படுத்த முடியாத நிலையானது காணப்படுவதனைக் கண்டறியலாம்.

**கற்றல் மீதான ஆர்வம்**

மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிடம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களது முயற்சிகளினை ஆசிரியர் மற்றும் பெற்றோர்கள் பாராட்டாதுவிடின் கற்றலின் மீதுள்ள ஆர்வமானது அவர்களிற்கு குறைவடைகின்றது. இக் கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீர்களா எனும் வினாவானது வழங்கப்பட்டுள்ளதுடன் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற செயற்பாடுகளில் உங்களது முயற்சிகளினை ஆசிரியர் மற்றும் பெற்றோர் பாராட்டாதுவிடின் கற்றலின் மீதுள்ள உமது ஆர்வமானது குறைவடைகின்றது. இக் கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீர்களா எனும் வினாவானது வழங்கப்பட்ட போது அவர்கள் வழங்கிய பதில்கள் உருவின் மூலம் காட்டப்பட்டுள்ளது.




**உரு 4.1 ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டாது விடின் மாணவர்களது கற்றல் மீதான ஆர்வம் குறைவது தொடர்பான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது பதில்கள்**

உரு 4.1 இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களது முயற்சிகளினை ஆசிரியர் மற்றும் பெற்றோர் பாராட்டாதுவிடின் கற்றலின் மீதுள்ள ஆர்வமானது குறைவடைகின்றது என்பதனை வலுவாக ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது 70.59% ஆகும். மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் பெரும்பான்மையானோரும் வலுவாக ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது 78.48% ஆகும். பெரும்பான்மையானோரின் பதில்கள் படி வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களது முயற்சிகளினை ஆசிரியர் மற்றும் பெற்றோர் பாராட்டாதுவிடின் கற்றலின் மீதுள்ள ஆர்வமானது மாணவர்களிற்கு குறைவடைவதனை வலுவாக ஏற்றுக்கொள்ளலாம்.

இதன் படி Erika & Zsuzanna (2016) மொழிகற்றல் அனுபவத்தில் பாடசாலையில் பின்பற்றப்படும் உத்திகள் எனும் தலைப்பில் ருமேனியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவர்கள் மொழியினைக் கற்றுக்கொள்வதற்கு மொழிசார்ந்த கற்றல் அனுபவங்கள் மற்றும் மொழியினைக் கற்பதற்கு அவர்களிடம் ஆர்வம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அத்துடன் மொழியை அடையாளம் காணுவதில் உணர்ச்சி, பாதிப்பு மற்றும் அறிவாற்றல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஆர்வமானது மாணவர்களிடம் காணப்படும் பட்சத்திலேயே அவர்களினை கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியும். இதற்காக ஆசிரியர்கள் உரிய முறையில் பாராட்டுக்களினை வழங்குதல் வேண்டும். இதன் படி மொழியினைக் கற்றலில் மாணவர்களிடையே கற்றல் மீதான ஆர்வமானது முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. இவ்வாய்வில் கூறப்பட்டுள்ள விடயத்தின் படி ஆய்வுப்பிரதேசத்திலும் மாணவர்களது முயற்சிகளினைப் பாராட்டாது விடின் கற்றலில் ஆர்வமானது குறைவடைவது

கண்டறியப்பட்டுள்ளது. இதன் படி பாராட்டுக்கும் ஆர்வத்திற்கும் இடையில் தொடர்புகள் காணப்படுவதால் தரவுப்பகுப்பாய்வில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இவ்வாய்வுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது.

**மொழித்திறன் விருத்தி**

மாணவர்களது மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் 02இனைக் குறிப்பிடுக எனும் வினாவானது ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டதுடன் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடம் உமது வாசிப்பு, எழுத்து, பேச்சு, கிரகித்தல் திறன்களை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் 02இனைக் குறிப்பிடுக. எனும் வினாவானது வழங்கப்பட்ட போது அவர்கள் வழங்கிய பதில்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.




**உரு 4.2: மொழித்திறன் விருத்தி தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது பதில்கள்**

உரு 4.2இல் காட்டப்பட்டுள்ள பதில்களின் படி மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் பெரும்பான்மையானோர் மாணவர்களது வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்கு திறமையான மாணவர்களின் உதவியுடன் வாசிப்புப் பயிற்சியில் ஈடுபடுவோருக்கு பாராட்டு வழங்குவதுடன் இனிய வார்த்தை பேசுதல் என 41.18% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் மாணவர்களில் 50.63% ஆனோர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். மற்றும் தினமும் வாசிப்போருக்கு பரிசுகளினை வழங்குதல் என 41.18%

ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் இதனை 25.32% ஆன மாணவர்களும் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிட்டள்ளனர். இது 41.18% ஆகும்.

மாணவர்களது எழுத்துத்திறனை விருத்தி செய்வதற்கு சொல்வள பயிற்சிகள் வழங்கி ஊக்குவித்தல் என 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 44.30% ஆன மாணவர்களும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் பொறிமுறைப்படி அனுசரித்து எழுத வழிப்படுத்துதல் என 23.53% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 37.97% ஆன மாணவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர்களது பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்கு தலைப்புக்கொடுத்து பேசவிட்டு ஊக்குவித்தல் என 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 60.76% ஆன மாணவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் காலை நற்சிந்தனைக்கு மாணவர்களைத் தயார்படுத்தி பரிசு வழங்குதல் என 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 29.11மூ ஆன மாணவர்களும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

மாணவர்களது கிரகித்தல் திறனை விருத்தி செய்வதற்கு வினாக்கொத்துக்களினை வழங்கி சரியாகச் செய்வோரைப் பாராட்டல் என 35.29% ஆன ஆசிரயர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 75.95% ஆன மாணவர்களும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் பாடத்தினை வாசிக்க விட்டு அதில் வினாக்களை வினவி சரியான விடை கூறுவோருக்கு பாராட்டுதல் என 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன் 53.16% ஆன மாணவர்களும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

**தீர்வுகளும் ஆலோசனையும்**

**மொழித்திறன் விருத்திக்கும் மீளவலியுறுத்தலுக்கும் இடையிலான தொடர்புகள்**

**முடிவுகள்**

1. குறில், நெடில் எழுத்துக்கள் உரிய முறையில் மீளவலியுறுத்தப்படாமையால் அவற்றை இனங்காண முடியாத நிலையில் மாணவர்கள் காணப்படுவதாக 61.54% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
2. தலைப்பிற்குரிய விடயங்களினை எழுதுவதற்கு ஊக்குவிக்கப்படாமையினால் மாணவர்கள் எழுத்தாக்கங்களினை மேற்கொள்வதில் குறைவாகவே ஆர்வம் காட்டுவதாக 37.5% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர
3. மாணவர்கள் சுயமாக முன்வந்து பேசுதல் ஊக்குவிக்கப்படாமையினால் மாணவர்களது பேச்சுத்திறன் குறைவாகக் காணப்படுவதாக 80% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்.
4. பாடங்களை மேலோட்டமாக வாசித்தல் மற்றும் ஆழமாக யோசிக்க முடியாமை ஆகியவற்றினால் மாணவர்களது கிரகித்தல் திறன் குறைவாகக் காணப்படுவதாக 28.57% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

1. தமிழ்பாட ஆசிரியர்களும் பெற்றோரும் குறில் நெடில் எழுத்துக்கள் அடங்கிய சொல்லட்டைகளினைப் பயன்படுத்தி வாசிப்புச் செயற்பாடுகளினை முறையாக மீளவலியுறுத்துதல் வேண்டும்.
2. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக புதிய தலைப்புக்களினை வழங்கி முறையாக ஆக்கங்களினை எழுதுவோருக்கு காலை ஒன்றுகூடலில் பாராட்டுக்கள் வழங்குவதற்கான ஒழுங்குகளினை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மேற்கொள்ள வெண்டும்.
3. சுயமாக முன்வந்து பேசும் மாணவர்களிற்கு போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களினை வழங்கி உரிய ஊக்குவிப்புக்கள் மற்றும் அங்கீகாரத்தினை ஆசிரியர்கள் வழங்குதல் வேண்டும்.
4. பாடவேளையின் போது மாணவர்கள் குறித்த பாடப்பகுதியினை வாசிப்பதற்கு போதுமான நேரத்தினை வழங்குவதுடன் அவர்களது சிந்தனையாற்றலினை அதிகரிப்பதற்கு பாடப்பகுதியிலிருந்து வாய்மொழி மூலமாக வினாக்களினைக் கேட்டு மீளவலியுறுத்தும் செயற்பாடுகளினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**மொழித்திறனை விருத்தி செய்வதில் ஏற்படும் சவால்கள்**
**முடிவுகள்**

1. மொழித்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினை உரிய முறையில் மேற்கொண்டு மீளவலியுறுத்தலினை வழங்குவதற்கு திறன்வகுப்பறை, கணனி செயற்பாட்டறை, ஒலி ஒளி கருவி மற்றும் பல்லூடக வசதி ஆகியவற்றிற்கான பற்றாக்குறையானது நிலவுவதாக உதவிக்கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.
2. பௌதீக வளங்களது பற்றாக்குறையினால் நவீன கற்றல் உபகரணங்களினைப் பயன்படுத்த முடியாமை மற்றும் மாணவர்களிற்குப் பிடித்தவாறு கற்பித்தலினை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக 64.71% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

1. பாடசாலையில் நிலவும் வளப்பற்றாக் குறையினை நிவர்த்தி செய்வதற்காக நலன்விரும்பிகள் மற்றும் சமூக தொண்டர் அமைப்புக்களிலிருந்து உதவிகளினைப் பெற்றுக்கொள்ளவதற்கான நடவடிக்கைகளினை அதிபர்கள் மேற்கொள்ள வேண்டும்.
2. பாடசாலையில் பற்றாக்குறை நிலவும் பௌதீக வளங்கள் தொடர்பான தகவல்களினை உரிய முறையில் திரட்டி அவற்றினை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கைகளினை மேற்கொள்வதுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினை மாணவர்களிற்கு பிடித்தவாறு மேற்கொள்வதற்கான செயற்பாடுகளில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபடுதல் வேண்டும்.

**கற்றல் மீதான ஆர்வம்**

**முடிவுகள்**

1. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் போன்ற செயற்பாடுகளில் மாணவர்களது முயற்சிகளினை ஆசிரியர் மற்றும் பெற்றோர் பாராட்டாதுவிடின் கற்றலின் மீதுள்ள ஆர்வமானது மாணவர்களிற்கு குறைவடைவதனை வலுவாக ஏற்றுக்கொள்வதாக 78.48% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
2. பயிற்சிகள், கவிதை மற்றும் கட்டுரை ஆக்கங்களினை குறித்த காலப்பகுதியில் திருத்தி தரப்படாவிடத்து கற்றலிலும் மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகளிலும் ஆர்வமிழக்கின்ற நிலையானது ஏற்படுகின்றது என்பதனை வலுவாக ஏற்றுக்கொள்வதாக 73.42% ஆன மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
3. கற்றலில் ஊக்குவிப்புக் குறைவதனால் மொழிவிருத்திச் செயற்பாடுகளிலும் ஆர்வம் குறையும் என 58.23% ஆன மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது ஆகும்.

**விதப்புரைகள்**

1. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது வாசித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கிரகித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களிற்கு முறையான பாராட்டுக்களினை வழங்கி அவர்களினை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். இதற்காக வகுப்றையிலேயே அனைவருக்கும் முன்பாக அழைத்து பாராட்டுக்களினை வழங்கலாம்.
2. மாணவர்கள் எழுதும் ஆக்கங்களினை உரிய காலத்தில் திருத்தி அவர்களிற்கான வழிகாட்டுதல்களினை உரிய காலத்தில் வழங்கி அவர்களினை ஊக்குவிக்கும் செயற்பாடுகளினை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.
3. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது மாணவர்களிற்குரிய மீளவலியுறுத்தல்களினை வழங்கி மொழித்திறன் விருத்திக்கான ஊக்குவிப்புக்களினையும் ஆசிரியர்கள் வழங்குதல் வேண்டும்.

**மொழித்திறன் விருத்தி**

**முடிவுகள்**

1. வாசிப்புத்திறனை விருத்தி செய்வதற்கு தினமும் வாசிப்போருக்கு பரிசில்களினை வழங்குதல் மற்றும் திறமையான மாணவர்களின் உதவியுடன் வாசிப்புப் பயிற்சியில் ஈடுபடுவோருக்கு பாராட்டுடன் இனிய வார்த்தை பேசுதல் வேண்டும் என 41.18%ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
2. எழுத்துத்திறனை விருத்தி செய்வதற்கு மாணவர்களிற்கு சொல்வள பயிற்சிகள் வழங்கி ஊக்குவித்தல் வேண்டும் என்பதனை 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

3. மாணவர்களது பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்கு காலை நற்சிந்தனைக்கு மாணவர்களினைத் தயார்படுத்தி பரிசு வழங்குதல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும் என 35.29% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
4. கிரகித்தல் திறனை விருத்தி செய்வதற்கு சிறிய குறுவினா வழங்கி விடைகளுக்கு புள்ளி வழங்குதல் மற்றும் பந்திகளினை உரைநடையில் எழுதவிட்டு ஊக்குவித்தல் வேண்டும் என 29.41% ஆன ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

1. மாணவர்களது வாசிப்புத்திறனை விருத்தி செய்வதற்காக நேர்மீளவலியுறுத்தல் நுட்பங்களினைப் பின்பற்றி அவர்களினை ஊக்குவிக்கும் செயற்பாடுகளினை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டும்.

2. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது மாணவர்களிற்கான சொல்வள பயிற்சிகளினை வழங்கி அது தொடர்பான போட்டிகளினை வைத்து மாணவர்களினை ஆசிரியர்கள் ஊக்குவித்தல் வேண்டும்.
3. பாடசாலையில் காலை ஒன்றுகூடலில் கலந்துகொண்டு பேசுவோருக்கு அனைவர் முன்னிலையிலும் பாராட்டி அவர்களினை ஊக்குவிக்கும் செயற்பாட்டினை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.
4. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சிறிய குறுவினாக்களினை வழங்கி அதில் சரியாகச் செய்யும் மாணவர்களிற்கு உரிய ஊக்குவிப்புக்களினை வழங்குவதுடன் சரியாகச் செய்யும் மாணவர்களிற்கு உடனடியாகப் புள்ளிகளினை வழங்கி அவர்களினை ஆசிரியர்கள் ஊக்குவித்தல் வேண்டும்.

## References:

Abdul, Malik & et al (2016), Role of Reinforcement or Punishment in Learning Language: A Study at Secondary Level in Southern Punjab Pakistan, International Journal of Business and Social Science,Vol. 7, No. 8; August 2016

Abnorm (2013), Language Ability Predicts the Development of Behavior Problems in Children, Doi:10.98640/2334586x.2013.8678184

Azmi, Celik & et all (2014), Listening Comprehension Difficulties Encountered by Students in Learning Class. Journal of Educational and Instructional Studies in the World, 4(4), 1-6.

Acad (2013), language skills disorder, author manuscript, America, Doi:10.109/00004583-20000-00011

Addisu (2020), Factors affecting the attitudesof students towards learning languages, Doi:10.1080/2331186x.2020.1738184

Ahmad (2021), Language skills and their Relationship to learning Difficulties in English Language from the students point of view, Shanlax international journal of Education.

Alam, Alay & ect (2018), Effects of Positive Reinforcement on Students Academic Performance, North American American research, Vol 1, Iss 1;2018,1(1) 220-225.

Aude, Anisia & etc (2019), Spoken language Development and the challenge of skill integration, Researchgate, DOI:10.3389/fpsyg.2019.02777

Brendan (2016) , Parental influence on attitudes to language learning, Educational research, Doi:10.1080/00131880600732298.

Bushra & Arshad (2019), Development of reading skillthrough activity based learning, Bulletin of education and research, Vol.41,No.1pp.85-104

Brown (2004), Language Assessment principles and Action practices, Newyork, logman

Behnam & Siros (2016), The impact of listening Strategies on improving learners listening skill, Journal of language Teaching and research, Vol.7,No 6 pp 1089-1096, Doi:10.17507/jltr.0706.04

Dadzie (2018), Reading for Learning, Ghana library journal, Doi:10.4314/glj.v20i1.33978

David, Nicholas & etc (2016), Using Variable Interval Reinforcement Schedules to Support Students in the Classroom: An Introduction With Illustrative Examples, Journal of Educational Research and Practice, DOI:10.5590/JERAP.2016.06.1.0618

Derwina, Chong & et all (2021), The cycle of fear in learning, Researchgate, Doi:10.6007/IJARBSS/v11-i11/116

Donald & Gaye (2015), Language Abilitiesand Reading: A Review of the literature on their relationship, The Elementary School journal, Vol,80.No5(May,2015),pp.269-277

Duc & Thuan (2021), Attitude and motivation in language learning, Researchgate, Doi:10.32996/jeltal.2021.3.5.7

Diora & Noor (2020), An Analysis of Students Difficulties in Listening Comprehension, Journal of English language teaching, Doi: 10.24036/jelt.vai1.107957.

Emad & Khalil (2013), The influence of language on results. Management and research practice.Vol.4 issue 2(2013) pp:37-48

Erika & Zsuzanna (2016), Language attitudes, language learning experiences, Doi: 10.1515/ausp-2016-0022

Fahd & Ummai (2016), The effectiveness of using linguistic classroom activities in teaching language in developing the skills of oral linguistic performance, English language teaching, Vol.9,No.3, Doi:10.5539/elt.v9n3p207

Fahimeh & Abdolrahim (2011), Designing a model for managing talents of students in elementary school, DOI:10.1016/j.sbspro.2011.11.338

Hamouda (2003), An Investigation of listening Comprehension Problems Encountered by Saudi Students in the EL Listening Classroom, International Journal of Academic Research in Progressive and Development, Vol. 2, No. 2 ISSN: 2226-6348

Herdianti, Syarrizal & iidi (2019), The effect of reinforcement toward students speaking ability, Journal of English education and teaching 3(3):299-310, Doi:10:3369/jeet.3.3.299-310

Hiroaki, Kazufum & et all (2015), Active listening activates the reward system and improves the impression of relevantexperiences, Social neuroscience, Doi: 10.1080/174709.2014954732

Isaacs (2012), A Review of reading skills for learning, Researchgate, Doi: 10.4553/jkiu.n466.6754

Isai amuthan, (2014), A Review of B.F Skinner's Reinforcement theory of motivation, international journal of research in education methodology, Vol 5, No.3.

Ibrahim (2015), Students writing problems: Dianosis & Remedy, European Centre for Research training & development, Vol.3.No.3 pp.40-52

Jonathan, Dorothea, , Lerman, and Jennifer (2010), An Experimental Analysis Of Negative Reinforcement Contingencies For Adult-Delivered Reprimands , Journal of Applied Behaviour Analysis, doi: 10.1901/jaba.2010.43-769

Javed & Juan. (2013), A study of students' assessment in writing skills of the English language. International Journal of Instruction, 6(2), 129–144.

Jeongchul, Sumi & et all (2011), Piaget's Egocentrism and language learning, DOI:10.4304/jltr.2.4.733-739

Karen (2018), The role of individual difference in writing strategies, DOI:10.1080/02671522.2018.1452963

Krebs , Kukkonen & Braeam (2021), Selective reinforcement of conflict processing in task, Journal pone, Doi:10.1371.0255430

Kelly , Henry & Tara (2011), Evaluating The Separate And Combined Effects Of Positive And Negative Reinforcement On Task Compliance, Journal of Applied Behaviour Analysis ,doi: 10.1901/jaba.2011.44-175

Kyunghee (2018), Meta analysis of the relationship of creative achievement to both IQ and divergent thinking test scores, Researchgate,DOI:10.1002/j.2162-6057.2018.tb01290.x/full.

Lard & Douglas (2021) , Reinforcement for Reading achievement, Researchgate, DOI:10.1007/s40617-020-00511-1

Low & Sonntag ( 2013), Towards a pedagogy of listening: Teaching and learning from life stories of human rights violations. Journal of Curriculum Studies, vol. 45, no. 6, pp. 768-789. http://dx.doi.org/10.1080/00220272.2013.808379

Lucy & Josephine (2020), The description of teachers use of reinforcement, International journal of humanities and social science, Vol10.no 1, Doi:10.30845/ijhss.vol10n1p6

Maizatulliza & Kiely (2017), Students evaluation of their language learning experience.

Mayshinta & Sudirman (2018), A Study of the reinforcement used by English teacher in 6A class, DOI:10.23887/ijll.v2i3.16317.

Marzano (2005), Identifying various types of student writing problem, International literacy Association, Vol.25.N0.5 pp 408-411

Maulidiyah (2010), The Students' Problems In Listening Comprehension, UIN antasari open journal system, Doi: 10.45098/jh.ty.vfum.189065

Martin & Pear (2016), Behaviour Modification, Psychology Press

Masoud (2011), Language stress and anxiety among the language learners, DOI:10.1016/j.sbspro.2011.10.349

McKay (2010), Assessing young language learners. Cambridge: Cambridge University Press. Doi:https://doi.org/10.1017/CBO9780511733093.

Mehdi, Fatemeh & Ali (2017), Acomparative study of Vygotskys perspectivies on child language development with nativism and behaviorism, DOI:10.18298/ijlet.1748

Mohamad (2021), Relationship with language and learning difficulties, DOI:10.37432/aylyrj.2021.2901.06.

Mohammed, Hena (2017), Influence of Reinforcement in English language learning at primary level of education in Bangladesh, Researchgate, DOI:10.36832/beltaj.2017.0101.05.

Michael & Abigail (2013), Evaluating Competing Reinforcement Contingencies on Off-Task Behavior in a Preschooler with Intellectual Disability: A Data-Based Case Study , Education and Treatment of Children, Vol. 36, No. 1 (February 2013), pp. 97-109

Nasser & Majid (2011) , Motivation, attitude and language learning, Procedia- social and behavioral sciences, Vol.29, pp.994-1000, Doi:10.1016/j.sbspro.2011.11.333

Niwayan & Niluh (2018), The use of Reinforcement in writing and speaking skill, Advance in social science, Education and humanities research, Atlantis press. Doi: 10:2991/aecon-18.2018.24

Ning & jiuqian (2021). Language development in childhood, Doi:10.3389/fpsyg.2021.649680

Okpala (2000), A study of two modes of Reinforcement in teaching and learning, university of Nigeria, Nsukka.

Panjaitan, Sihombing & et all (2022) Students difficulties in speaking, Romeo journal, Doi:10.55047/remeo.vli2.94

Philip, Maria & et all (2015), parents language styles relation with childrens language development, DOI:10.36982/begrj.2015.0561.05.

Robert (2003), The impact of pavlov on the psychology of learning in speaking, DOI:10.1017/s1138741600005242

Rasha & Aya (2014), childrens language development with parents relation, DOI:10.46832/fattaj.2014.0701.05.

Saiful, Haryanto & et all (2022), The effects on positive Reinforcement on students writing achievement, Celebes journal of language studies, Vol.2.N1

Silvina & Listyani (202) Factors contributing to students difficulties in writing class, ELT, Linguistics and Literature Journal, Doi: 10.2407/llt.V1i2.2966,Vol.1No.2 pp.135-149

Seimeng, Xuancheng & Zhayoang (2021), The Effect of teachers reinforcement, Advances in social science, education humanities research, Atlartis press, Vol.561, Doi:10.1007/978-94-007-4578-0

Selin & Secil (2013) Evaluation of classroom design in terms of language learning, DOI:10.1016/j.sbspro.2013.06.054

Shahila & Meenakshi (2012), Individual learner differences language acquisition, DOI:10.4304/jltr.3.4.639-646

Shashikanta, Roopak et all (2022) ,Neurocognitive signatures of prosocial and positive emotional behaviours: emerging research and social impact, DOI:10.1088/978-0-7503-3383-2ch1

Sitti & Shalawati (2016) A Study on Listening skills and Perspectives, J-SHMIC Journal of English foe Acadamic, DOI:10.25299/jshmic.2016.vol3(2).527

Tayagi. (2016) The development of listening attitude scale for secondary school students, journal of mother tongue Education, vol.4 n1 pp 187-199.

Worsdell, Lwata & etc (2007) Effects of continuous and intermittent reinforcement for problem behavior during functional communication training,Journal of Applied Behaviour Analysis, doi: 10.1901/jaba.2007.33-167

Winarti (2017), Teachers and students relationship, Journal of language Teaching and research, Vol.7,No 6 pp 1079-1096, Doi:10.16508/jltr.0906.04

Yasemin 2018, Student’s views on language skills in foreign language Teaching, Researchgate,DOI:10.5539/ies.v11n7p166.

Yumna (2021) Impact of regiona; language difference and linguistic knowledge of parentson children's reading ability, Proceedings of 8th international symposium,FIA, SEUSL.

Zainurrahman & Sangaji (2019), Students Speaking Difficulties, Journal of Linguistics, Literature, and Language Education Vol. 2, No. 1, April, ISSN: 2623-1565

Zheng.G (2022), The evaluation method of teachingability in view of internet of things, DOI:10.1155/2022/2999654

Zi. ,Yuyang & Wei (2015), Influence of individual differences on the effect of language acquisition, DOI:10.1051/shsconf/20151702012

# பாடசாலையில் கல்வி கற்கும் பெண் மாணவிகளுக்கு ஏற்படும் மன அழுத்தமும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் - ஓர் ஆய்வு

**(பட்டிருப்புக் கல்வி வலயத்தில் க.பொ. த. சாதாரணதரம் கற்கும் மாணவிகளை அடிப்படையாகக் கொண்டது)**

Mrs. Pranaha Thineswaran
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
*npranaha@gmail.com*

Dr. Kanthasami Kajavinthan
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
*kajavinthan@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பாடசாலை நாட்கள் என்பது மிக முக்கியமானதொரு காலகட்டமாகவும் எமது வாழ்கைக்கான அடிப்படைகளை வழங்குகின்றனவாகவும் உள்ளன. ஆனால், இந்நாட்களை எத்தனைபேர் மிகவும் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் அனுபவித்தார்கள் என்பது வினாவாகும். அதிலும் குறிப்பாக நாம் பதின்மூன்று வயது முதல் பத்தொன்பது வயது வரையுள்ள பருவங்களைக் கடக்கின்ற வேளையில் எமக்கு ஏற்படுகின்ற குழப்பங்கள் எமது கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. கட்டிளமைப் பருவத்துப் பிள்ளைகளின் உடலிலும் மனதிலும் இனம்புரியாத மாற்றங்கள் தோன்றுகையில் எதுவும் தெளிவாகப் புரியாமல் தடுமாற்றத்திற்கு உள்ளாகித் தத்தளித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களின் தத்தளிப்புகளுக்கும் குழப்பங்களுக்கும் விடை காணப்படாதவிடத்து இவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றார்கள். இதனால்தான் இப்பருவப் பிள்ளைகள் அதிகம் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றார்கள். கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசமானது அதிகம் இளவயது தற்கொலை மரணங்களைச் சந்தித்திருக்கின்றது. இதன் பின்புலத்தினை ஆராயும் போது இவர்களுக்கு ஏற்பட்ட அதீத மன அழுத்தத்தங்களும் ஒரு காரணமாக அமைகின்றது. மனிதன் அல்லது விலங்கு அல்லது உயிரினத்தில் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ உடல்ரீதியாக அல்லது மனரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச்செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் மூலமான தொடர்விளைவு அல்லது பின்விளைவு மன அழுத்தம் எனப்படும். இந்தவகையில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் மன அழுத்தமானது கல்வியில் மட்டுமல்லாது உடல் உளரீதியாகவும் அவர்களைப் பாதித்து அவர்களுடைய செயற்திறனையும் சிந்திக்கும் திறனையும் குறைப்பது மட்டுமல்லாது, செயற்திறனில் ஆர்வமின்மையையும் அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது. மன அழுத்தத்தினால் ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளே அதிகம் துன்பப்படுகின்றனர். ஏனெனில், பூப்படைவதால் ஏற்படும் உடலியல் மாற்றங்கள், அவர்களுக்குச் சிறிது அதிர்ச்சியையும், சந்தேகத்தையும், பயத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இப்பருவத்தில் இரண்டாம்நிலைப் பால்நிலைப் பண்புகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவால் ஏற்படுகின்ற மனவெழுச்சிப் பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், என பல மாற்றங்களும் அதிகம் பெண் பிள்ளைகளுக்கு அழுத்தங்களை கொடுக்கின்றன. மேலும் இவர்கள் தங்களது உணர்வுகளுக்கு மாறாக எது நடந்தாலும் கோபமும், சலிப்பும் வெறுப்பும் விரக்தியும் அடைகின்றனர். இதன் விளைவாக ஏற்படுகின்ற மன அழுத்தம், மனச்சோர்வு, பதற்றக் கோளாறுகள் போன்ற உளப்பாதிப்புகள் தற்கொலை எண்ணத்தை தூண்டுகின்றன. எனவே, இந்நிலையில் இப்பாடசாலை மாணவர்களை இவ் மன அழுத்ததின் தீவிரத்தன்மைக்குச் செல்லாமல் அவர்களின் மன அழுத்ததிற்கான காரணங்களை இனங்கண்டு அவர்களை மீட்டு கல்வியினைத் தொடர்வதற்கு உதவவேண்டியது எமது பொறுப்பாகும். அந்தவகையில் இவ் ஆய்வானது பாடசாலை மாணவிகள் மன அழுத்ததிற்கு உட்படுகின்றார்கள் எனவும் இந்த மன அழுத்தத்திற்கு உள சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் கருதுகோளினை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டதுடன், இவ் ஆய்விற்காக பத்து பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளிலிருந்து எழுமாற்றாக சாதாரணதரம் கற்கும் 100 பெண் மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவ் ஆய்வு ஒரு பண்பியல் சா்ந்த விபரண ஆய்வாகவும் அமைகின்றது. தொடர்ந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் Statistical Packages for Social Science package (SPSS) version 21 பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *கட்டிளமைப் பருவம், செயல்திறன், தற்கொலை, மன அழுத்தம், மனவெழுச்சி*

## ஆய்வு அறிமுகம்

உலகளாவியரீதியில் உளப்பிரச்சினைகளுள் மன அழுத்தம் தொடர்பான பிரச்சினையானது முக்கியமாகப் பேசப்பட்டுவருகின்றது. மனஅழுத்தமானது வயதுவேறுபாடின்றி எல்லோரையும் பாதிக்கின்றது என ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளது. ஒரு மனிதனின் ஆளுமையினை வளர்த்தெடுப்பதில் குடும்ப சூழலிலும் பார்க்க பாடசாலைச்சூழலானது மிக முக்கிய பங்களிப்பினை செய்கின்றது. இச்சூழலானது மாணவர்கள் தமது ஆற்றல்கள் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான சிறந்த களத்தினை அமைத்துக்கொடுக்க வேண்டும். மனித வளர்ச்சிப் பருவங்களிலேயே மிக முக்கியமானதொரு பருவம் கட்டிளமைப்பருவமாகும். இப்பருவத்தினரிடையே துரிதமான வளர்ச்சி ஏற்படுகின்றது. இவற்றிற்கு ஏற்ப தம்மை பொருத்தப்பாடடைவதில் இவர்கள் சிரமத்தினை எதிர்கொள்கின்றார்கள். இப்பருவத்தினரின் உடல்ரீதியான மாற்றங்கள் எனும் போது பூப்படைதல் என்பது கட்டிளமைப்பருவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இது பல்வேறு மனவெழுச்சிகள், உளப்பிரச்சினைகளை உண்டாக்குகிறது. பூப்படைவதால் ஏற்படும் உடல் மாற்றங்கள், அவர்களுக்குச் சிறிது அதிர்ச்சியையும், சந்தேகத்தையும், பயத்தையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இப்பருவத்தில் இரண்டாம்நிலைப் பால்நிலைப் பண்புகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். இப்பருவத்தினர் தங்களைத் தாங்களே பெரியவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். பிறருடைய அறிவுரைகளை ஏற்க மறுப்பதுடன், தங்களது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றனர். தங்களது உணர்வுகளுக்கு மாறாக, எது நடந்தாலும் கோபமும், சலிப்பும் வெறுப்பும், விரக்தியும், அடைகின்றனர். அத்துடன், சமூகத்தில் 'முக்கியமான அந்தஸ்து வகிக்க வேண்டும்' போன்ற எதிர்பார்ப்புகளில் பலவாறான கற்பனைகளையும் வளர்த்துக் கொள்கிறார்கள். தமது எண்ணங்களுக்கு மாறாகத் தோல்விகளைச் சந்திக்க நேர்கையில் துன்பமடைவதுடன், மனஅழுத்தத்திற்கு உட்பட்டு ஏற்பட்டு, விரக்தியின் விளிம்புக்கே சென்றுவிடுவர். இதனால், இப்பருவத்தினரிடையே தற்கொலை எண்ணங்களும் அடிக்கடி தலைதூக்குகின்றது.

இப்பருவத்தினர் தமது பெரும்பாலான நேரத்தினைச் செலவு செய்யும் இடமாகப் பாடசாலை அமைகின்றது. உடல், உள, சமூக, ஆத்மீக ரீதியான விருத்திக்குரிய சரியான வழிகளை இப்பருவத்தில் உரிய முறையில் வழங்கப்படவேண்டும். அவ்வாறு சரியான வழிகாட்டல்கள் வழங்கப்படாதவிடத்தது அந்தவகையில் இப்பாடசாலை பெண்பிள்ளைகள் அதிகம் மனஅழுத்தத்திற்கு உட்பட்டு வருகின்றார்கள். இவர்களிற்கு ஏற்படுகின்ற மனஅழுத்தத்திற்கு பல்வேறு உள சமூக பொருளாதார காரணிகளும் காரணங்களாக அமைகின்றது.

### மனஅழுத்தம்

ஒரு பிரச்சனைக்கோ அல்லது இக்கட்டான சூழ்நிலைக்கோ முகங்கொடுக்கமுடியாத உளஇயக்க எழுச்சிநிலை மனஅழுத்தம் எனப்படும். இவ் மனஅழுத்தத்திற்கு ஜப்பானில் கரோசி என கூறப்படுகின்றது. 1930களில் உயிரியல் உளவியல் அடிப்படையில் மனஅழுத்தம் என்ற பதம் பயன்படுத்தப்பட்டது. மனஅழுத்தமானது எதிர்மறையான மனவெழுச்சி அனுபவங்களால் நடத்தையில் உடல்சார்ந்த இரசாயன இயக்கங்களில் நிகழும் மாற்றமாகும்."Hans taylor" என்பவர் உடலியல் உளவியல் தொழிற்பாட்டை பாதிக்கின்ற

அல்லது பாதிப்பதாக அச்சுறுத்துகின்ற நிகழ்வுகளிற்கு துலங்கும் செயல்முறையே நெருக்கீடு என்றார். மன அழுத்தம் என்பது எதிர்மறையான மனவெழுச்சி அனுபவங்களால் நடத்தையில் உடல் சார்ந்த இரசாயன இயக்கங்களில் நிகழும் மாற்றமாகும். ஒருவர் தன்னைச்சுற்றி நடக்கும் விடயங்களால் அழுத்தத்தை உணரும் போது அவருடைய உடலில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன இந்த மாற்றம் அந்த சூழ்நிலையை மேற்கொள்ள மேலும் சக்தியையும் வலிமையையும் கொடுக்கும். ஆனால் இத்தகைய சூழ்நிலை தொடர்ந்து இருக்குமானால் அது மன அழுத்தமாக மாறும். ஒருவருடைய மன அழுத்தத்தை மூளையின் செயற்பாட்டுக்குறைவினால் ஏற்படும் "sychotic" மன அழுத்தம் , அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் பாதகமான சூழலால் ஏற்படும் "Neurotic" மன அழுத்தம் என இருவகையாக பிரிக்கலாம். இவற்றுள் Neurotic stress வகையே மிகவும் பரவாலாக காணப்படுகிறது. ஆண்களை விட பெண்களே அதிகளவில் உணர்வுகளிற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அதிகமாக பெண்களே அதிகம் அழுத்தத்திற்கு உட்படுகிறார்கள்.

**மனஅழுத்தத்தின் அறிகுறிகள்**

**உடலியல்சார் அறிகுறிகள்**

- இரத்த ஓட்டம் அதிகரித்தல்
- கண்களில் பார்வை குறைவடைதல்
- கேட்டல் திறன் குறைவடைதல்
- வியர்வை அதிகரித்தல்
- சுவாச வீதம் அதிகரித்தல்
- ஜீரணமாகும் தன்மை குறைந்து விடுகிறது
- பதட்டம்
- தலைவலி
- பற்களைக் கடித்தல்
- தசைப்பிடிப்புகளும், சோர்வும்
- இதயம் வேகமாகத் துடித்தல்
- மலச்சிக்கல்
- சிறுநீர்க்கோளாறு

**உளவியல்சார் அறிகுறிகள்**

- மெதுவான உள இயக்கம்
- குழப்பமான நிலை
- எதிர்மறை மனப்பான்மை அல்லது எண்ணங்கள்
- நிலையான கவலை
- கவனம் செலுத்துவதில் சிரமம்
- மறதி
- மாறுபட்ட சிந்தனை மற்றும் தர்க்க ரீதியான சிந்தனை

- வாழ்க்கை பெரும் துன்பம் என்ற உணர்வு
- பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத தன்மை

**மனவெழுச்சி ரீதியான அறிகுறிகள்**

- எரிச்சல்
- பொருத்தமற்ற உணர்ச்சி வெளிப்பாடு
- ஏமாற்றம்
- அதீத வேலை செய்த உணர்வு
- அதீத நலிவடைந்த உணர்வு
- உதவியற்ற உணர்வு
- அக்கறையின்மை

**நடத்தைசார் அறிகுறிகள்**

- தனிமை
- புகைபிடித்தல்
- மது அருந்துதல்
- நகம் கடித்தல்
- தலைமுடியைப் பிடுங்குதல்
- கை, கால் விரல்களைப் பிசைதல்
- அதிகமாக அல்லது குறைவாக உண்ணுதல்
- அதிகமான அல்லது குறைவான தூக்கம்
- மற்றவர்களைத் தவிர்த்துக் கொள்ளும் நிலை

**மனஅழுத்தம் ஏற்படுவதற்கான பொதுவான காரணிகள்**

- பாலியல் பலாத்காரம்
- தாழ்வான சுயமதிப்பீடு.
- பறிகொடுத்தல்.
- இழப்புகளை சந்தித்தல்
- வாழ்க்கை மாறுதல்கள்
- சமூக ஆதரவின்மை
- முரண்பாடுகள்
- விரக்தி
- சூழல்காரணிகள்
- தாழ்வு மனப்பாங்கு
- வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏற்படுகின்ற சம்பவங்கள்

## கட்டிளமைப்பருவ மனஅழுத்தமும் பாடசாலையில் கல்வி கற்கும் பெண்பிள்ளைகளும்

கட்டிளமைப்பருவத்தில் கல்வி பயிலும் பெண்மாணவிகளை பொறுத்தவரையில் இவர்களிற்கு உடல்சார்ந்த சில குழப்ப நிலைகளும் உளம்சார்ந்த சில பேராட்டங்களும் தமது பருவ நிலைகளை கடக்கும் போது ஏற்படுகின்றது. சிறுவர்களாக இருந்த இவர்கள் பூப்புச்சடங்குகளுக்குப் பின்பு, ‘‘அவள் பெரியவளாகிவிட்டாள்’’ என்ற வகையில் பார்க்கப்படுகின்றார்கள். இம்மாற்றங்களுக்குத்தன்னை ஆயத்தம் செய்து கொள்ளாத அவர்கள், சில குழப்பங்களிற்கு ஆளாகின்றனர். பூப்படைதலுக்குப் பின், பல்வேறு உடல்மாற்றங்கள் ஏற்படுகின்றன. உயரம், பருமன் என்பன விரைவாக அதிகரிக்கின்றன. இப்பருவத்தில் இரண்டாம்நிலைப் பால்நிலைப் பண்புகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். சிறுமியர்களுக்கு மார்பகங்களில் விரைவான வளர்ச்சி ஏற்படுதல், பெண் உறுப்பைச்சுற்றி உரோமம் வளருதல், இடுப்பு என்புகள் அகலித்தல், மாதவிலக்கு ஏற்படுவது போன்ற மாற்றங்களால், சிறிது மனவெழுச்சிப் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன. பெண் பிள்ளைகளுக்கு இப்பருவத்தில் உடலின் மெருகு கூடுகின்றது. இவ் அழகு கூடும் அதேவேளை பருவ வயதுக்காதல் விவகாரங்களிலும் ஈடுபட்டு கவர்ந்து இழுக்கப்படுகிறார்கள். இப்பள்ளிப்பருவத்தில் மலரும் காதல் இதனால் ஏற்படுகின்ற மனக்குழப்பங்கள் உணர்வுகளில் ஏற்படும் மாற்றங்கள் இந்நிலையில் கற்றலில் ஏற்படுகின்ற ஆர்வ குறைவு சிந்தனையை ஒருங்கிணைக்கமுடியாமை, இந்நிலையில் பாடசாலைகளிலும் சகமாணவர்கள் ஆசிரியர்களால் புறக்கணிக்கப்படுவதும் துஸ்பிரயோகங்களிற்கு உட்படுத்தப்படுவதும் என சவால்களுடனே இப்பருவ பெண்பிள்ளைகள் வாழ்கிறார்கள். இவற்றையும் கடந்து குடும்ப சூழ்நிலைகள் ,வறுமை ,கற்றலிற்கு ஏற்ற குடும்ப சூழல் இல்லாமை, அடிப்படைத்வைகள் கூட சரிவர பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழும் எத்தனையோ பிள்ளைகள் இன்று கற்றலில் பின்தங்கியும், இடைவிலகல் மாணவிகளாகவும் இருக்கிறார்கள். அதுமட்டுமன்றி பெற்றோரின் அரவணைப்பின்றி உறவினர்களின் கண்காணிப்பின் கீழ் வளரும் பிள்ளைகள் அன்பிற்காக ஏங்குவதும் தவறான பாதைகளில் செல்வதும் என பல விடயங்களை நாம் நாளுக்கு நாள் கண்கொண்டு பார்த்தவண்ணமே இருக்கின்றோம். இவையெல்லாம் இணைந்தே இவர்களிற்கு மனஅழுத்தத்தினை ஏற்படுத்தி இதனைதொடர்ந்து தற்கொலை போன்ற தவறான முடிவுகளை எடுக்கின்றார்கள். மேலும் இவர்கள் கற்றலில் சிரமங்களை எதிர்கொள்வதுடன் தவறான பாதைகளை தெரிவுசெய்து குழப்பத்துடன் இக்கட்டிளமைப்பருவ பெண்பிள்ளைகள் வாழ்ந்து வருகிறார்கள்.இவர்களிற்கான சரியான வழிகாட்டல்கள் அமைத்துக்கொடுப்பதுடன் இவர்களை இவ் மனஅழுத்தத்திலிருந்து மீட்டுக்கொண்டுவரவேண்டியது எம் பொறுப்பாகும்.

### ஆய்வுப்பிரச்சினை

இன்று எம் இளம்சமுதாயத்தினரை நாம் படிப்படியாக இளந்து வருகின்றோம். எமது வாழ்க்கைப் பருவத்திலே கட்டிளமைப்பருவம் என்பது மிகவும் முக்கியமான பருவமாகும். இப்பருவத்தில் நாம் தவறும் போது எம் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடுகிறது. இன்று குறிப்பாக கட்டிளமைப்பருவ இளம் பெண்களே அதிகம் உடலாலும் உளத்தாலும் பல

சவால்களை எதிர்கொள்வதுடன் பல அழுத்தங்களுடன் வாழ்கிறார்கள். இவர்களிற்கு குடும்ப மற்றும் சமூகசூழல் பொருத்தப்பாடடையாதபோது இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுகிறது. பாடசாலைகளிலும் இவர்கள் பல துஸ்பிரயோகங்களிற்கு உட்படுவதும் அவற்றில் இருந்து மீண்டு வரவும் முடியாமல் வெளியில் சொல்லவும் முடியாமல் பல சவால்களை சந்திக்கிறார்கள். இதனால் ஏற்படும் அழுத்தங்கள் இவர்களை தற்கொலைக்கு தூண்டுவதும் கற்றலில் பின்னடைவுகளை ஏற்படுத்துவதுடன் தவறான முடிவுகளை எடுத்து தவறான பாதையில் பயணிக்க வைக்கிறது. சரியாக வழிப்படுத்தபடவேண்டிய பருவம் இக்கட்டிளமைப்பருவமாகும். இந்நிலையில் இன்று அதிக கட்டிளமைப்பருவ மாணவிகள் மனஅழுத்தத்திற்கு உட்படுவதுடன் அவற்றில் இருந்து மீண்டுவர வழிதெரியாதவர்களாக தடுமாறுகிறார்கள். இவர்களின் மனஅழுத்தத்தினை இனங்கண்டு உளவியல் ரீதியில் தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். இவ் ஆய்வில் மனஅழுத்தத்திற்கு உட்பட்டுள்ள கட்டிளமைப்பருவ மாணவிகள் இனங்காணப்பட்டு அவர்களின் மனஅழுத்ததிதிற்கான காரணங்களை இனங்கண்டு தீர்வுகளும் வழங்கப்படுகின்றது . எனவே கட்டிளமைப்பருவ பெண்பிள்ளைகள் மனஅழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் என்பது இவ் ஆய்வின் ஆய்வுப்பிரச்சனையாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

- பாடசாலை மாணவிகளிற்கு ஏற்படுகின்ற மனஅழுத்தத்தினை கண்டறிதல்
- இவ் மனஅழுத்தத்திற்கான முக்கிய உளகாரணிகள் சமூக காரணிகள் பொருளாதார காரணிகளை இனங்காணல்.
- மாணவர்களினால் கடைப்பிடிக்கக்கூடிய மனஅழுத்த முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்கல்.
- ஆரோக்கியமான வாழ்வினூடாக சிறந்த மாணாக்களை உருவாக்க உதவுதல்.

**ஆய்வின் கருதுகோள்கள்**

- பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் மனஅழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள்.
- இவ் மனஅழுத்தத்திற்கு உளகாரணிகள் சமூக காரணிகள் பொருளாதார காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது.

**ஆய்வின் பயன்பாடுகள்**

- பாடசாலை மாணவிகளிற்கு ஏற்படுகின்ற மனஅழுத்தத்தினை கண்டறியமுடியும்
- இவ் மனஅழுத்தத்திற்கான உள சமூக பொருளாதார காரணிகளை அடையாளம் காணலாம்.
- ஆரோக்கியமான வாழ்வினூடாக சிறந்த மாணாக்களை உருவாக்க உதவுதல்.
- மனஅழுத்தத்தை கையாளும் வழிவகைகளை பின்பற்ற உதவும்.
- எதிர்கால ஆய்வுகளிற்கு உதவுதல்

**இலக்கியமீளாய்வு**

**ஒரு மனநிலை மருத்துவத்திற்கு மனஅழுத்தத்தினை முன்வைக்கும் நோயாளிகள் பற்றிய விபரண மதிப்பீடு (2011)**

ரி.ராஜபக்ச, ஏ.சிவபாலசிங்கம் இவ் ஆய்வானது மனஅழுத்த நோயாளிகளின் பண்புகளை விபரிப்பதனை நோக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டது.மனஅழுத்தம் இலங்கையில் பொதுவானது எனவும் 65.3% பெண்நோயாளிகள் இருப்பதுடன் 28.5% தன்னைத்தானே வருத்திக்கொள்பவர்கள் இருப்பதாக இவ் ஆய்வு கூறுகின்றது.

**பேராதெனிய மனஅழுத்த அளவின் விருத்தியும் உறுதிப்படுத்தலும் (2012)**

டி.ஆர் அபேசிங்க,எஸ்.தென்னக்கோன் இலங்கையில் மனஅழுத்தத்தினை கண்டறிவதற்காக கலாசாரரீதியில் பேராதெனிய மனஅழுத்த அளவீட்டினை பயன்படுத்தி உறுதிப்படுத்துவதனை நோக்கமாக கொண்டுள்ளது.

**இலங்கையில் மனஅழுத்தத்தின் நோய் தொற்றியலும் நோய் அறிகுறிகளும். கொழும்பு மாவட்டத்தினை அடிப்படையாக கொண்ட ஆய்வு.(2010)** எச்.ஏ பால்,எஸ்.எச்.சிறிபாட்டான.வை.கோவாஸ் இவ் ஆய்வானது மனஅழுத்தத்தின் தன்மைகள் மற்றும் அம்சங்களை பரிசீலனை செய்வதும் சூழ்நிலை இடர்பாட்டுக்காரணிகளை அடையாளம் காண்பதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**பதின்ம வயதினரின் கவலை மற்றும் மனஅழுத்தத்தின் அறிகுறிகள் இலங்கையை அடிப்படையாக கொண்டது. 2010**

சதுரக ரொட்ரிகா ஸெயந்த குருசிங்க மற்றும் பலரால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது 14 – 18 வயதிற்கு உட்பட்ட மாணவர்களின் மனஅழுத்தத்தின் அறிகுறிகளை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்காக இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டது. 445 மாணவர்கள் மாதிரியாக தெரிவுசெய்யப்பட்டு மதிப்பிடப்பட்டார்கள்.இவர்களில் 36 சதவீதமானவர்கள் மனஅழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்கள். இவர்களில் இலேசான மனஅழுத்தத்துடன் 17 சதவீதத்தினரும் தீவிர மனஅழுத்தத்துடன் 9 சதவீதத்தினரும் உட்பட்டிருந்ததுடன் ஆண்களைவிட பெண்களே

அதிகம் மனஅழுத்தத்திற்கு உட்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. அதேநேரம் பரீட்சைகளை எதிர்கொள்ளும் காலப்பகுதியில் அதிக நேர்மறை விகிதங்களை கொண்டிருந்தார்கள்

**ஆய்வு முறையியல்**

ஆய்விற்கு உட்படுவோர் : பாடசாலையில் கல்விகற்கும் சாதாரணதரம் கற்கும் மாணவிகள்

ஆய்வு பிரதேசம் : மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு கல்வி வலயம்

பால் :பெண்

வயது :16

மாதிரி தெரிவு : எழுமாற்றுத்தெரிவு

மாதிரி எண்ணிக்கை :100

இவ் ஆய்வானது தரவுகள், பண்புகள் அம்சங்களை ஆராய்வதால் பண்புசார் விபரண ஆய்வு பின்பற்றப்படுகின்றது. மேலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் Statistical Packages for Social Science package (SPSS) version 21 பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**மாதிரி எண்ணிக்கை**

பட்டிருப்பு கல்விவலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிலுள்ள சாதாரணதரம் கற்கும் மாணவிகள் இவ் ஆய்விற்கான மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

| பட்டிருப்பு பிரதேசம் | பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை | சாதாரணதர மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை | சாதாரணதர மாணவர்களின் எண்ணிக்கை | சாதாரணதர மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மன்முனை தென் எருவில் பற்று | 37 | 14858 | 19 | 808 | 422 |
| போரதீவுப்பற்று | 32 | 8303 | 19 | 1671 | 326 |
| மொத்த எண்ணிக்கை | 69 | 23161 | 38 | 1484 | 748 |

**ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் அப்பாடசாலைகளில் மாதிரிகள் பங்குபற்றிய பரம்பல் இங்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது**

| பாடசாலையின் பெயர் | தெரிவு செய்யப்பட்ட கட்டிளமைப்பருவ மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மட்/ திக்கோடை கணேச வித்தியாலயம் | 10 |
| மட்/காக்காச்சிவட்டை விஸ்னுசக்தி வித்தியாலயம் | 10 |
| மட்/பாலமுனை பாலமுருகன் மகாவித்தியாலயம் | 10 |
| மட்/மண்டூர் சிறீராமகிருஸ்ணன் மகாவித்தியாலயம் | 10 |
| மட்/முனைத்தீவு சக்தி மகாவித்தியாலயம் | 10 |
| மட்/பெரிய போரதீவு பாரதி வித்தியாலயம் | 10 |
| மட்/ பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம் | 10 |
| மட்/மகிளூர் சரஸ்வதி வித்தியாலயம் | 10 |
| மட்/வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயம் | 10 |
| மட் /மண்டூர் 13 விக்னேஸ்வராவித்தியாலயம் | 10 |

**ஆய்வுக்கருவி**

இவ் ஆய்விற்கான ஆய்வு பிரதேசம் பட்டிருப்புகல்வி வலயமாகும் இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரணதரம் கற்கும் 100 பெண் மாணவிகள் எழுமாறாக 10 பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் மனஅழுத்தம் தொடர்பான வினாக்கொத்து கொடுக்கப்பட்டு மதிப்பீடுசெய்யப்பட்டது Student Academic Stress Scale (SASS). (Busari (2011)

**0-39 அழுத்தம் இல்லை**
**40-69 ஓரளவு மனஅழுத்தம்**
**70-99 மிதமான அழுத்தம்**
**100-129 அதிகமான மன அழுத்தம்**
**130-160 அளவுக்கதிகமான அழுத்தம்**

பெறப்படும் தரவுகள் Statistical Packages for Social Science package (SPSS) version 21 மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வானது தரவுகள், பண்புகள் அம்சங்களை ஆராய்வதால் பண்புசார் விபரண ஆய்வு பின்பற்றப்படுகின்றது. மேலும் மாணவர்களின் மனஅழுத்தத்திற்கான காரணிகள் நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டது. இது துணையான கருவியாக கொள்ளப்பட்டது. ஆய்வின் நோக்கம், ஆய்வுக்குடித்தொகை, ஆய்வு வளங்கள் என்பவற்றிற்கு அமைய ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## முடிவுகளும் கலந்துரையாடல்களும்

இவ் ஆய்வில் தரவுகளில் அதிகமானவை நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட 100 மாதிரித் தெரிவுகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதுடன் மனஅழுத்தத்தினை இனங்காண்பதற்காக Student Academic Stress Scale (SASS). (Busari (2011) வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது.

**கருதுகோள் 1**

- பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் மனஅழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள்.

ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்டவர்களின் மனஅழுத்த மட்டங்கள்




ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 44 மாணவர்கள் ஓரளவு மனஅழுத்தத்துடனும் 24 மாணவர்கள் மிதமான மனஅழுத்தத்துடனும் 09 மாணவர்கள் அதிகமான மனஅழுத்தத்துடனும் 04 மாணவர்கள் தீவிர மனஅழுத்தத்துடன் இருந்தமை ஆய்வின் மூலம் இனங்காணப்பட்டது. இவ் முடிவானது இவர்களிற்கு வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலம் பெறப்பட்டதுடன் ஆய்வின் முதலாவது கருதுகோளிற்கு அமைவாக இவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்கானல்கள் மற்றும் கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் பாடசாலை மாணவிகள் மனஅழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் என்பதனை நிருபிக்கமுடிந்தது.

இவ் மாணவிகளிடம் அதிகமாக இனங்காணப்பட்ட மனஅழுத்த அறிகுறிகள்

- தன்னம்பிக்கையற்ற உரையாடல்
- மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை
- தனிமையை விரும்புதல்
- எரிச்சல் தன்மை

- கோபம்
- முடிவெடுக்க சிரமப்படுதல்
- கவலைதோய்ந்த முகம்
- பாடசாலைக்கு தாமத வருகை
- விரக்தியான மனநிலை
- கற்றலில் பின்னடைவுகள்
- ஞாபகபடுத்த சிரமப்படுதல்

கருதுகோள் 2

இவ் மனஅழுத்தத்திற்கு உளகாரணிகள் சமூக காரணிகள் பொருளாதார காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றது.

நேர்கானல்களின் போது இவர்களின் மன அழுத்தத்திற்கான உள,சமூக, பொருளாதாரக் காரணிகள் இனங்காணப்பட்டன.

- ✓ பொருளாதார நெருக்கடிகள்
- ✓ பெற்றோர் வெளிநாடுகளில் வசித்தல் குறிப்பாக தாய் வெளிநாடுகளில் வசித்தல்.
- ✓ பெற்றோர்களினை இழந்த பிள்ளைகள் வேறு உறவினர்களுடன் வளர்தல்
- ✓ வீட்டில் பெற்றோர்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள்
- ✓ அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை
- ✓ பருவமாற்ற பிரச்சனைகள்
- ✓ சகமாணவர்களுடனான ஒப்பீடுகள்,முரண்பாடுகள்
- ✓ நிகழ்வுகளின் பங்குபற்றுதல் குறைவு.
- ✓ வீட்டுச்சூழ்நிலைகளினால் மனதினை ஒருமுகப்படுத்தி கல்விகற்கமுடியாமை.
- ✓ எதிர்காலத்தீர்மானங்கள் பற்றிய குழப்பநிலை
- ✓ சுயமாக தீர்மானங்களை எடுக்கமுடியாமை.
- ✓ கற்றலில் ஆர்வம் இல்லை
- ✓ தவறான நண்பர்கள் தெரிவு
- ✓ காதல் தோல்விகள்
- ✓ தவணைப்பரீட்சை பெறுபேறுகளில் ஏற்பட்ட ஏமாற்றம்

மேலும் இம்மாணவர்களிற்கு ஏற்படுகின்ற மனஅழுத்தங்களிற்கு உள சமூக பொருளாதார குடும்பகாரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. அதாவது பெற்றோர்களிடையே ஏற்படுகின்ற முரண்பாடுகள் ,பெற்றோர் பிரிந்திருத்தல் தனித்து பிள்ளைகள் வளர்தல் போன்றனவும் பொருளாதார சிக்கல்கள் சக மாணவர்களுடன் ஏற்படுகின்ற போட்டித்தன்மைகள் இவர்களிற்கு மனஅழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது .இவ்வாறான ஒரு வீட்டுச்சூழலில் இருந்து பிள்ளைகள் பாடசாலைகளிற்கு வரும்போது மனஅழுத்த நிலையிலே பாடசாலையில் இருக்கிறார்கள்.

இதுபற்றிய சிந்தனைகள் இவர்களை விளையாட்டுக்களில் மட்டுமல்ல கற்றலிலும் ஈடுபட முடியாத நிலையினை ஏற்படுத்துகின்றது. மேலும் பல விடயங்கள் இவ் மாணவர்களுடன் நேர்கானல் மற்றும் அவதானம் மூலம் பெறமுடிந்தது. இவ் நேர்கானல்கள் மூலமே இவ் மனஅழுத்தத்திற்கான காரணிகள் இனங்காணப்பட்டது. அந்த வகையில் உள சமூக பொருளாதார காரணிகள் இம்மாணவிகளின் மனஅழுத்தத்தில் தாக்கம் செலுத்துகின்றது.




| | | உளகாரணிகள்கள் | சமூககாரணிகள் | பொருளாதாரகாரணிகள் |
|---|---|---|---|---|
| N | **Valid** | **14** | **24** | **43** |
| **Mean** | | **1.5714** | **1.11429** | **1.4706** |
| **Median** | | **1.0000** | **1.00000** | **1.0000** |
| **Range** | | **3.00** | **3.000** | **3.00** |

ஆய்வின் போது அநேக மாணவிகள் பொருளாதாரக் காரணிகளால் பாதிக்கப்பட்டிருந்தமையும் இதனால் இவர்களின் கற்றலில் கவனம் செலுத்த முடியாத நிலை காணப்படுவதுடன் அநேக மாணவர்கள் இடைவிலகும் மனநிலையில் இருப்பது இனங்காணப்பட்டது. மேலும் உளக்காரணிகளில் பாடசாலைகளில் ஏற்படுகின்ற புறக்கணிப்புகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் காதல் தோல்விகள் மற்றும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை எடுக்கமுடியாத நிலையில் ஏற்படுகின்ற ஏமாற்ற உணர்வுகள் என பல்வேறு காரணிகளால் 14 மாணவர்கள் பாதிக்கட்டிருந்தார்கள். சமூக காரணிகளில் பாடசாலைச்சமூகம் முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றது அதாவது மாணவர்கள் ஏற்றத்தாழ்வுகளுடன் நடத்தப்படுகின்றமையும் பாடசாலை நிகழ்வுகளில் வசதிகுறைந்த மாணவர்களின் பங்கெடுப்புகள் குறைவாக காணப்படுகின்றமை சக மாணவர்களுடனான முரண்பாடுகள் பெற்றோர்களுடன் சிறந்த உறவுநிலையினை பேணமுடியாமை. என பல்வேறு சமூக சமூக காரணிகளும் இம்மாணவிகளின் மனஅழுத்தத்திற்கு காரணங்களாக இனங்காணப்பட்டது.

இவ் ஆய்வின் இறுதியில் இம்மாணவிகளிற்கு வழங்கப்பட்ட பொதுவான சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகள்…..

1.உடற்பயிற்ச்சி மூலம் உடல் முழுவதும் நல்ல மாற்றங்கள் ஏற்படுகின்றன. சுமார் 30 நிமிடங்கள் முதல் 60 நிமிடங்கள் வரை நடப்பதன் மூலம் உடலில் என்டார்பின் என்ற கார்மோன் சுரந்து உடலை இயல்பான செயல்நிலைக்கு மாற்றுகிறது. மேலும் மன அழுத்தத்தால் அளவிற்கு அதிகமாக சுரக்கும் அன்ரீனன், கார்டிசால் போன்ற கார்மோன்களின் விளைவுகள் எடன் சக்திகளாக மாற்றப்படுகின்றது.எனவே இவரிற்கு சில பயிற்சிகள் கற்று கொடுக்கப்பட்டன.

2.யோகாபயிற்ச்சிகளை மேற்கொள்ளுதல் - எமது உடலில் இரண்டு வகையான நரம்புகள் உள்ளன. சிம்பதடிக் போன்ற நரம்புகள் கோபம் பயம் பதட்டம் போன்ற உணர்வுகளை அதிகரிக்கிறது. பராசிம்பதடிக் நரம்புகள் அன்பு ,அமைதி, பொறுமை, தெளிவு போன்ற உணர்வுகளை அதிகரிக்கின்றது. இவ் யோகா பயிற்சிகளை செய்வதன் மூலம் சிம்பதடிக் நரம்புகளின் செயற்பாடு குறைக்கப்பட்டு பராசிம்பதடிக் நரம்புகள் அதிகமாக செயற்படுகின்றன. இதனால் மன அழுத்தம் குறைக்கப்படுகின்றது.யோக நிலையத்திற்கு செல்வதற்கு அனுமதி பெற்று கொடுக்கப்பட்டது.

3.மேலும் காலையில் எழுந்ததும் மற்றும் இரவு படுக்கும் போதும் நல்ல புத்தகங்களை படிப்பதன் மூலம் மன அழுத்தம் குறைக்கப்படும் .இவரிற்கு இப் புத்தகங்களை வாசிப்பதற்கான நேரம் இல்லை என கூறினார். இருப்பினும் பத்திரிகையாவது வாசிக்கும் படி கூறப்பட்டது.

4. தியானம் என்பது மனதை தளரச்செய்வது சுமார் 15 நிமிடங்கள் கண்ணை மூடி எதையும் சிந்திக்காமல் அமைதியாக சாய்ந்து அமர்ந்து தியானம் செய்வதன் மூலம் மூளைச்செல்களில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

5.ஆழமாய் சுவாசிப்பதன் மூலம் மன அழுத்தத்தை இல்லாமல் செய்ய முடியும் என பல்வேறு நாடுகளில் நிருபிக்கப்பட்டுள்ளது. ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு அதிகரிக்கிறது. இதனால் தசைகள் தளர்வு நிலையை அடைகிறது மனமும் இயல்பு நிலையை அடைகிறது.

6. குடும்ப ஆலோசனை வழங்கப்பட்டது

இவரது உள அழுத்தத்தை குறைப்பதற்கு பெற்றோர்களின் அன்பும் வழிகாட்டல்களும் அவசியமானது எனவே பெற்றோர்களிற்கான சந்திப்பு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பெற்றோர்களிற்கான விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் கருத்தரங்குகள் வடிவில் அவர்களிற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றது. இந்நிகழ்வு மூலம் இவர்களிற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

7.ஆன்மிகத்துடன் ஒன்றிக்கச் செய்தல்-

மாணவிகளிடம் பிடித்தமான தெய்வத்திடம் மனக்கவலைகளை கூறும் படி கூறப்பட்டது. மனம் விட்டு எதையும் சொல்லும் போது மனதிற்கு ஆத்ம சாந்தி ஏற்படுகிறது. அந்த வகையில் கடவுள் நம்பிக்கை சிறந்த மருந்தாக அமைகிறது. கடவுளில் ஒன்றித்து இருக்கும் போது மனம் இலேசாகிறது. எனவே மனம் கவலையை உணருகின்ற போது கோயிலிற்கு சென்று வழிபாடுகளில் கலந்து கொள்ளும் படியும் சற்று நேரம் கோயிலில் இருந்து தியானிக்கும் படியும் கூறப்பட்டது.

8.ஆக்க நிலைக்கற்பனை

இம்முறையானது மனதை சாந்தப்படுத்தும் விடயங்களை கற்பனையாக நினைத்தலே இம்முறையாகும். பொதுவாக நீர்வீழ்ச்சி என்றால் எல்லோருக்கும் மிகவும் பிடிக்கும் என கூறினார்கள் எனவே மனதிற்கு நெருக்கீடு ஏற்படும் சந்தர்பங்களில் இதனை கற்பனையாக நினைக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. குறிப்பாக மனதிற்கு மகிழ்ச்சியை தரும் விடயங்களை அதிகம் நினைக்கும் படி கூறினேன்.

9.அக உரையாடலில் ஈடுபடுதல்

அதாவது எனக்கு ஒரு பிரச்சனைகளும் இல்லை இவ் உலகில் நான் தான் மிகுந்த சந்தோசமாக இருக்கிறேன். என்னால் இவ் உலகை ஜெயிக்க முடியும் என மனதுக்குள் அடிக்கடி கூறும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாறு கூறுவது உடலையும் மனதையும் ஒய்வு நிலைக்கு கொண்டு செல்லும் உக்தியாகும்.

10.போதியளவு ஓய்வு எடுத்தல்

நாளாந்த வாழ்வில் ஓய்வு எடுத்த பின் முயற்சி செய்யும் போது புத்துணர்வு ஏற்படும். அந்த வகையில் இவரை பின்பக்கமாக சாய்ந்து படுத்து இளைப்பாறும் போது மெதுவாகவும் மென்மையாகவும் மூச்சை சுவாசித்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு ஏதாவது அமைதியான காட்சியை நினைவுக்கு கொண்டு வரும் படி செய்யப்பட்டது. இத்தகைய செயற்பாட்டின் மூலம் மனம் சாந்தியடையும். மனதிற்கு ஆர்ப்பாட்ட நிலை ஏற்படும் போது மூச்சை மிகவும் மெதுவாக சுவாசித்து உள்வாங்கி வெளிவிட வேண்டும் இதனால் அமைதி ஏற்படும். இவ்வாறான ஆலோசனைகள் மாணவர்களிற்கு வழங்கப்பட்டது.

11.மனதிற்கு பிடித்த இசையை கேட்டல்: மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு. மெல்லிய இசைகளை கேட்பதன் மூலம் மனதில் ஏற்படும் அழுத்தத்தை குறைக்கலாம். நன்றாக பாடக்கூடியவர்களிற்கு மேலதிக ஊக்கம் வழங்கப்பட்டது.

12. நேரத்தை திட்டமிட்டு செயற்படுதல்

அதாவது அன்றாட கருமங்களிற்கான நேரத்தை திட்டமிட்டு செயற்பட வேண்டும். ஒவ்வொரு செயற்பாடுகளையும் திட்டமிட்டு செயற்படும் போது கவலையை தரக்கூடிய நினைவுகளை சிந்திப்பதற்கான நேரம் கிடைப்பதில்லை. பிடித்த பாடங்களை படித்தல், ஆடைகளை

துவைத்தல், சந்தைக்கு செல்லுதல், அயலவர் வீட்டிற்கு செல்லுதல் நண்பர்களுடன் விளையாடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் போது சிந்தனை மாற்றம் ஏற்படும் இதனால் நெருக்கீட்டை கட்டுப்படுத்த முடியும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

13.உள நெருக்கீட்டை சவாலாக மாற்றுதல்

எந்தவொரு பிரச்சனையும் என்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை முதலில் வளர்த்துக்கொள்ள வேண்டும் எந்த ஒரு விடயத்தையும் மனதில் போட்டு குழம்பிக்கொள்ளாமல் இவர் பேசுவது எனக்கு இல்லை என நினைத்து விட்டு சவாலாக நினைத்து செயற்படவேண்டும். என ஆலோசனை வழங்கப்பட்டது.

14.பொருத்தமான சூழலை உருவாக்குதல்.

மனித நடத்தையை நிர்ணயிப்பதில் சூழல் முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில் மனதிற்கு ரம்மியமான இயற்கை சூழலை அமைக்க வேண்டும். அந்த வகையில் பூங்கன்றுகள் ,இயற்கை காட்சி நிறைந்த படங்கள் என்பவற்றை தொங்கவிடுதல், போதிய வெளிச்சம், காற்றோட்டம் ,சுத்தமான சூழல் என்பவற்றை அமைத்துக்கொள்ள வேண்டும். பாடசாலையில் ,வீட்டில் பூங்கன்றுகளை நடுகை செய்து சூழலை அழகுபடுத்துவதில் பொழுதை கழிக்கும் படியும் இவை மனநிலைகளை மாற்றக்ககூடியது. இச் சக்தி இயற்கைக்கு உண்டு என கூறப்பட்டது.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

### ஆய்வின் முடிவு

- ✓ பாடசாலை கல்வி கற்கும் மாணவிகள் அதிகம் மனஅழுத்தத்திற்கு உட்பட்டிருந்தார்கள். இதனை இவர்களிற்கு வழங்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் நேர்காணல்கள் ,கலந்துரையாடல்கள் மூலம் இனங்காண முடிந்தது.
- ✓ மேலும் இவர்களுடன் நேர்கானல் மேற்கொண்ட போது அதிகமான மாணவிகள் தமது பிரச்சனைகள் குழப்பங்கள் பொருளாதார சூழ்நிலைகளின் விளைவுகள் உள சமூக கற்றலில் ஏற்படுகின்ற பின்னடைவுகள் என பல விடயங்களை இவர்களின் மனஅழுத்தத்திற்கு காரணங்களாக அமைகின்றன என இனங்காணமுடிந்தது.

### ஆய்வின் மட்டுப்பாடுகள்

- ✓ ஆய்விற்காக மாதிரி சிறிய அளவில் பெறப்பட்டது. ஏனெனில் இவ் ஆய்வினை துல்லியமான முடிவுகளை பெறும் பொருட்டு மாதிரி சிறியளவில் பெறப்பட்டது.
- ✓ ஆய்வின் மாதிரிகள் குறித்த வலயத்தில் 10 பாடசாலைகளிலிருந்தே மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டார்கள். .
- ✓ இவ் ஆய்வினை மேற்கொள்ளும் போதும் சாதாரணதரம் கற்கும் மாணவிகள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டார்கள்.

- ✓ மேலும் ஆய்வு பிரதேசம் பரந்ததாக இருந்தமையால் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்பு கல்வி வலய பகுதி மட்டும் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டன.

**பரிந்துரைகள்**

**ஆசிரியர்களுக்கான பரிந்துரைகள்:**

இவர்கள் பாடசாலைகளில் மாணவர்களை சரியாக இனங்காணவேண்டும் அவர்களிற்கான சரியான வழிகாட்டல்களை வழங்குவதுடன் உளம்சார் பிரச்சனைகளுடன் இருக்கும் மாணவர்களிற்கு அவர்கள் அப்பிரச்சனைகளில் இருந்து மீண்டுவருவதற்கான சரியான வழிகாட்டல்களை வழங்கவேண்டும்.

பருவவயது பிரச்சனைகள் பற்றிய விளக்கங்களையும் அப்பருவத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது அவ்வாறான சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற பிரச்சனைகளிற்கு யாரை நாடவேண்டும் என்ற விடயங்கள் பற்றிய விழிப்புணர்வினை வழங்கவேண்டும்.

சில மாணவர்கள் பொருளாதார நெருக்கடிகளை முகங்கொடுப்பார்கள் இந்நிலையில் இவர்களின் குடும்ப சூழ்நிலைகளை அறிந்து அதன்மூலம் இவர்களின் கற்றல் பாதிக்காத வகையில் இவர்களிற்கு சிறந்த ஆற்றுப்படுத்தல்களையும் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவர்களையும் இனங்கண்டு அவர்களின் உளப்பிரச்சனைகளை இனங்கண்டு மனஅழுத்தம் மனச்சோர்வு பதட்டம் சார் பிரச்சனைகளுடன் இருக்கும் மாணவர்களிற்கு சிறந்த ஆற்றுப்படுத்தல்களை வழங்கவேண்டும். இவர்களிற்கு பாடவேளைகளில் அல்லது மாணவர்களிற்கு சில விழிப்புணர்வு நாடகங்கள் சிறு விளையாட்டுகள் மகிழ்வூட்டும் செயற்பாடுகள் மூலமாக இவர்கள் இவ் உளப்பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களின் மட்டங்களை கருத்தில்கொண்டு அதற்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்வதுடன் அவர்களின் தகைமைகளை சரியாக இனங்கண்டு அவர்களை வழிப்படுத்தவேண்டும்.

பரீட்சைதோல்விகளை எதிர்கொள்வது தொடர்பாகவும் பரீட்சை தோல்வியின் பின்பு எவ்வாறு எம்மை வழிப்படுத்துவது போன்ற விடயங்கள் பற்றி மாணவர்களிற்கு விழிப்புணர்வு நாடகங்கள் வழியாகவும் சில கலந்துரையாடல்கள் மூலமாகவும் போதிய அறிவினை வழங்கவேண்டும்.

**அதிபர்களுக்கான பரிந்துரைகள்**

- ✓ பாடசாலைகளில் உளவளத்துணை ஆசிரியர்களை நியமிக்கவேண்டும்.
- ✓ உளவளத்துணை ஆசிரியர்கள் இல்லாதவிடத்து ஏனைய ஆசிரியர்களிற்கு மாணவர் தொடர்பான பிரச்சனைகளை இனங்கண்டு வழிகாட்டல்களை வழங்குமாறு பணிப்புரை செய்ய வேண்டும்.
- ✓ ஆசிரியர்களிற்கான பயிற்சி செயலமர்வுகளை ஒழுங்கு செய்து அவர்களை வழிப்படுத்தவேண்டும்.
- ✓ பெற்றோர் கூட்டங்களை நடார்த்தி பிள்ளைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளவேண்டும்.
- ✓ பாடசாலைகளில் கட்டிளமைப்பருவ மாணவிகளிற்காக சுகாதார துறையினருடன் இணைந்து கட்டிளமைப்பருவ உடலியல் பிரச்சனைகள் பாலியல் சார் பிரச்சனைகள் பற்றிய குழப்பங்களிற்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் வகையில் கருத்தரங்குகள் செயலமர்வுகளை நடாத்துதல்.
- ✓ பாடசாலைகளில் கலைநிகழ்வுகளை நடார்த்தி கலை நிகழ்வுகளினூாடாக விழிப்புணர்வு நாடகங்களை காட்சிப்படுத்தி மாணவிகளிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், குறுநாடகங்கள் ,குறுந்திரைப்படங்களை மாணவர்களிற்கு காட்சிப்படுத்தி சவால்களை வெற்றி கொள்வது பற்றியும் கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் பிரச்சனைகளிற்கு யாரை அணுகலாம் என்பது பற்றியும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

**பெற்றோர்களுக்கான பரிந்துரைகள்:**

- ✓ பெற்றோர் இப்பருவத்தினரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுடன் அவர்களுடன் சிறந்த உறவுநிலைகளை பேணுவதற்கு முயற்சிக்க வேண்டும்.
- ✓ வீட்டில் பெற்றோர்களிடையே ஏற்படுகின்ற பிரச்சனைகள் பிள்ளைகளை பாதிக்காத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.
- ✓ இவர்களிற்கு பெற்றோரின் அன்பு அரவணைப்பு கிடைக்காத சந்தர்பத்திலும் இவர்கள் வழிதவறிச்செல்வதுண்டு. பெற்றோர் தங்களின் பிள்ளைகளின் வயதிற்கு ஏற்ற வகையில் தம்மை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ✓ முடிவெடுத்து செயல்படுத்தும் சுதந்திரத்தை அவர்களிற்கு வழங்கும் அதேவேளை அதன் சாதக பாதகங்களை அவர்களிற்கு விளக்க வேண்டும். பருவமடைய இருக்கும் பெண்பிள்ளைகளிற்கு பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் தொடுகை பற்றிய விழிப்புணர்வுகளை வழங்கவேண்டியது அவசியமாகும்.
- ✓ இப்பருவ பெண்பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையின் காரணமாக பாடசாலையில் இருந்து இடைவிலகுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும் பெற்றோர் பிள்ளைகளிற்கான அடிப்படை கல்வியை வழங்கவேண்டும்.

**எதிர்கால ஆய்வாளர்களிற்கான சிபாரிசுகள்**

- ✓ எதிர்காலத்தில் இவ் ஆய்வினை மேற்கொள்கின்ற போது ஆய்வாளர்கள் ஆய்வு பிரதேசத்தை பரந்தளவாக்கவும்
- ✓ மேலும் பாடசாலை மாணவிகளை மட்டும் கருத்தில் கொள்ளாது சில பிள்ளைகள் பாடசாலையில் இருந்து இடைவிலகி இருக்கிறார்கள். இவர்களும் அனேகா் மனஅழுத்தத்திற்கு உட்பட்டு இருக்கிறார்கள் இவர்களையும் ஆய்வில் உட்படுத்தவேண்டும்.
- ✓ மேலும் மாதிரி எண்ணிக்கையை அதிகரிப்பது சிறந்தது.

**ஆய்வின் முடிவுரை**

- ✓ பாடசாலை மாணவிகளின் மனஅழுத்தத்தினை இனங்கண்டு அவற்றிற்கான காரணிகளை கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை ஆய்வின் எல்லையாக கொண்டு 100 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கு வழங்கப்பட்டு இனங்காணப்பட்டார்கள். மேலும் இவ் ஆய்வானது முன்வைக்கப்பட்ட கருதுகோளிற்கு அமைவாக தகுந்த ஆதாரங்களுடனும் நிருபிக்க முடிந்தது. மேலும் வினாக்கொத்து மற்றும் நேர்கானல் ஆகிய முறைகளை பயன்படுத்தப்பட்டதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் அனைத்தும் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வின் மூலமாக தகுந்த ஆதாரத்துடன் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் முடிவுகளை கொண்டு தரவு Student Academic Stress Scale (SASS). (Busari (2011) மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு கருதுகோள் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. அத்துடன் மாணவிகளிற்கு மனஅழுத்தத்தினை முகாமை செய்யும் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் இதனை தொடர்ந்து இவர்களில் முன்னேற்றகரமான மாற்றங்களை இனங்காணமுடிந்ததுடன் தீவிர நிலையில் இருந்த மாணவர்கள் உளவளத்துணையாளரின் மேற்பார்வைக்கு சிபாரிசு செய்யப்பட்டார்கள்.

**உசாத்துணை**


1. சிவதாஸ், எஸ். 2009. மகிழ்வுடன்: பூபாலசிங்கம் புத்தகசாலை
2. சிவதாஸ், எஸ். 2009. நலமுடன்: பூபாலசிங்கம் புத்தகசாலை
3. தனபாலன், பா. கணேசநாதன், ஞா. 2012. பாடசாலையில் ஆலோசனை வழங்கல்: லங்கா பதிப்பகம
4. தயாசோமசுந்தரம். 1993. மனவடு : நெருக்கீட்டின் உள விளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும். 1st Edition : University of Jaffna Publication
5. தயா சோமசுந்தரம், & சிவயோகன், 2010. தமிழ் சமுதாயத்தில் உளநலம்: சாந்திகம்
6. டாக்டர். நடராஜன், எஸ். (அக்ரோபர், 2005). கல்வியில் ஆராய்ச்சி : சாந்தா பப்ளிஷர்ஸ்
7. முன்பள்ளி கல்விக்கான டிப்ளோமா. (2010 – 2011). கற்கை அலகுக் கையேடுகள் ஆறுதல் நிறுவனம்

8. மோகன், இரா., மணிவேல், மு., நாச்சிமுத்து, கி & சேதுபாண்டியன், தூ. 2009. ஆய்வுக்கோவை : இந்தியன் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
9. https://www.researchgate.net/publication/368067540_Gender_Differences_in_Stress_and_Coping_in_First-Year_College_Studentscstpay;: rhujh gjpg;gfk;
10. https://files.eric.ed.gov/fulltext/EJ1080498.pdf
11. https://www.upressonline.com/2021/09/female-students-report-higher-stress-levels-than-males-research-study-says/
12. https://www.who.int//news-room/questions-and-answers/item/stress/?gad_source=1&gclid=Cj0KCQjwsaqzBhDdARIsAK2gqndu7QEMct2wr4lLQGk0Garfg8l0SIcIV9gF8zovGA_XjxMxfJy91I8aAjHpEALw_wcB
13. https://globaljournals.org/GJHSS_Volume12/4-Analysis-of-Factors-Affecting-the.pdf
14. https://www.nyu.edu/about/news-publications/news/2015/august/nyu-study-examines-top-high-school-students-stress-and-coping-mechanisms.html
**15.** Http://www.unicef.org/adolesence /index 66834.html Adolescence, Tata Mc Graw Hill Education Private limited New Delhi.

**16.** Laurence Steinberg . (1999) theoretical perspectives on adolescence, A frame work for studying adolescent development , Adolescence, Mc GRAW-Hill college.

**17.** John W . SANTROCK. (1998) Theories of Adolesent Development, Adolesent, Mc Graw-Hill.

# இருமொழிக் கல்வி முறையில் விஞ்ஞான பாடக் கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு

Mr. R. Senthamil Selvan
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thamil.dines@gmail.com*

Mrs.Thakshaayini Rajandran
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thakshaayinir@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

இருமொழிக் கல்வி முறையானது பரவலாகப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது. இதனைத் தெரிவுசெய்து கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனினும், இருமொழிக் கல்வியை மேற்கொள்ளும் போது ஆசிரியர்களும் மாணவர்களும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ் ஆய்வின் முக்கியமான நோக்கம் இருமொழிக் கல்வியூடாக விஞ்ஞானப் பாடத்தைக் கற்கின்ற கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் கற்றலின் ஈடுபாட்டுத் தன்மையைக் கண்டறிதல் என்பதாக உள்ளது. இதற்காக மண்முனை வடக்குக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட இருமொழியில் விஞ்ஞானக் கல்வியை வழங்கக்கூடிய 6 பாடசாலைகளிலுள்ள கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களில் ஆண், பெண் என படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரியைக் கொண்டு 2:1 என்ற அடிப்படையில் 65 மாணவர்களும், நோக்க மாதிரியின் அடிப்படையில் 6 விஞ்ஞானப் பாட ஆசிரியர்களும், மற்றும் 6 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு வினாக்கொத்து, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்தரவுகள் யாவும் சிறப்பு நோக்கங்களுக்கு அமைவாக மாதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகளை Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. முடிவுகளிலிருந்து நியமன ரீதியாக இருமொழி மூலமாக விஞ்ஞானத்தைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். அனுபவபூர்வமாக நவீன சாதனங்களைக் கொண்டு கற்பிக்கின்ற விதமும் குறைவாக இருப்பதுடன், இருமொழி மாணவர்களுக்கான வள ஒதுக்கீட்டிலும் சமத்துவமின்மையும் காணப்படுகின்றது. முகாமைத்துவ மட்டத்திலான ஒத்துழைப்பும் இருமொழிக் கல்விக்கு குறைவாகவே வழங்கப்படுகின்ற தன்மையும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் இருமொழியில் விஞ்ஞானப் பாடத்தைக் கற்கும் மாணவனின் பாட ஈடுபாட்டிலும் தாக்கமேற்படுத்துகின்றது. இதனடிப்படையில் இச்சவால்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *இருமொழிக் கல்வி, கற்றல் ஈடுபாடு, கனிஷ்ட இடைப்பிரிவு, மண்முனை வடக்கு கோட்டம், விஞ்ஞான பாடம்*

**அறிமுகம்**

**ஆய்வு அறிமுகம்**

கலாசார ரீதியாக பன்மைத்துவம் கொண்ட இலங்கை நாட்டில் கல்வியில் கற்பித்தலில் ஊடக மொழியினுடைய செல்வாக்கு மறுக்கப்பட முடியாத அளவுக்கு இன்றியமையாதது எனலாம். அந்த வகையில் குடியேற்ற காலத்திலாக இருக்கட்டும், சுதேச கல்வி முறைகளாக இருக்கட்டும் கற்பிக்கும் ஊடக மொழி தொடர்பாக பல வெள்ளை அறிக்கைகளும், பிரமாணங்களும், கல்வி சீர்திருத்தங்களின் ஊடாக வெளிவந்துள்ளன. குருகுல கல்வி முறைகளில் வலுப்பெற்றிருந்த தாய்மொழிக்கல்வி பின் அந்நியராட்சிக் காலத்தில் வலுவிழந்து அனைவரும் ஆங்கில மொழிக் கல்வியில் பற்று கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டது. எனினும் சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் கல்வி முறையில் கற்பித்தல் ஊடக மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. கடந்த கால கல்வி முறைகளில் அனைவரும் ஆங்கில மொழிக்கு முழுமையாக மாற தயாராக இருந்தனர். இதன் பின்னணியில் அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகள் காணப்பட்டாலும் கூட அன்று தொடக்கம் இன்று வரை தாய்மொழி மூலமாக கற்றல் தான் வலுப்பெற்று வந்தது (Kothari, 2004).

எனினும், சர்வதேச அளவில் உலகப் பொது மொழியாக ஆங்கிலம் இருப்பதன் காரணமாக எமது நாட்டிலும் ஆங்கிலத்தினுடைய முக்கியத்துவம் உணரப்பட்டு ஆங்கிலத்தை மட்டும் ஊடக மொழியாகக் கொண்ட ஓர் கற்பித்தல் முறைமையும் கொண்டுவரப்பட்டது. எனினும் இது சமூகத்தில் ஆங்கில மொழி மூலம் கற்ற மாணவர்கள் ஒரு வகுப்பினராகவும், தாய் மொழி மூலம் கற்றவர்கள் ஒரு வகுப்பினராகவும் இருக்கின்ற நிலைமையால் சமூகத்தில் உள்ள பிள்ளைகளிடையே ஒரு விரிசலை அது ஏற்படுத்தியது. இது கல்விப்புலத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 2008இல் ஆங்கில மொழி மூலப் போதனைக்கு முடிவு எட்டப்பட்டது (Ministry of education, 2016).

இதற்கிடையில் 2001ல் இருந்து இருமொழி போதனை முறை மிகவும் சொற்ப அளவான பாடசாலைகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. ஆங்கில மொழி மூலக் கற்பித்தல் முறையுடன் ஒப்பிடும் போது அதில் உள்ள குறைபாடுகளை இருமொழிப் போதனை முறை நிவர்த்தி செய்ததுடன் வேலை உலகிற்கு தேவையான ஆங்கில மொழியாற்றலை விருத்தி செய்யவும் உறுதுணையாக இருந்தது (Ministry of education, 2016).

இருமொழி போதனை முறையின் நோக்கமானது அனைவருக்கும் எவ்விதமான ஏற்றத்தாழ்வு பாராமல் கல்வியில் சமவாய்ப்பளித்தல், உலகளாவிய பன்மைத்துவ சூழலில் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை பேணுவதற்கான இணைப்புப் பாலமாக ஆங்கில மொழியை பயன்படுத்துதல், ஆங்கில கல்வி அறிவின் மூலம் சமூக ஆதாரமாகவும் தொழிலை செய்வதற்கான வழிமுறையாகவும் பயன்படுத்திக்கொள்ளல் போன்ற பல விடயங்களைக் கொண்டுள்ளது (Garcia, 2017).

**ஆய்வுப் பிரச்சினை**

இருமொழிக் கல்வி முறையில் விஞ்ஞான பாடக் கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு (கனிஸ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) என்பது தொடர்பாக அமைகின்றது. இந்தப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளவிருக்கும் இவ்வாய்வில் இருமொழிப் போதனா முறையானது சாரா மாறியாகவும் விஞ்ஞானப்பாட ஈடுபாடு சாரும் மாறியாகவும் கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்படவுள்ளது.

இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான பிரதானமான பிரச்சனை என்னவென்றால் இருமொழிக் கல்வியில் விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்கின்ற மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மட்டக்களப்பு வலயத்தில் மண்முனை வடக்கு கோட்டத்தில் காணப்படக்கூடிய இருமொழிப் பாடசாலைகளில் இம்மாணவர்களின் விஞ்ஞாப் பாடம் மீதான ஈடுபாடு எவ்வாறு காணப்படுகிறது என்பதை அறிந்து மாணவர்களின் ஈடுபாடு அவர்களின் பாடப் புரிதலிலும், சிறந்த பரிட்சைப் புள்ளிகளைப் பெறுவதிலும் எவ்வாறான செல்வாக்கைக் கொண்டுள்ளது என்பதை அறிவதாகும்.

மண்முனை வடக்குக் கோட்டத்தில் 227 மாணவர்கள் தான் இருமொழிக் கல்வி முறைமையில் கல்வி கற்கின்றனர். ஆனால் இக்கோட்டத்தில் மொத்தமாக 8314 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதன்படி 2.73%மான மாணவர்களே இருமொழிக் கல்வி மீது ஈடுபாடு கொண்டு தெரிவு செய்து படிக்கின்றனர். மேலும் இத்தரவின்படி பாடசாலை 5ல் 5 மாணவர்கள் மட்டுமே இருமொழிக் கல்வி முறையில் கற்பதுடன், மண்முனை வடக்குக் கோட்டத்தில 7 பாடசாலைகளில் இருமொழி மூலமாகக் கற்பதற்கான வசதிகள் காணப்பட்டாலும் கூட அங்குள்ள ஒரு மாணவர் கூட இம்முறைமையினை தெரிவுசெய்து கல்வி கற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மண்முனை வடக்கு கோட்டத்தில் 2019, 2020, 2021 ஆகிய மூன்று ஆண்டுகளில் இருமொழியில் கற்கும் மாணவர்களின் சாதாரண தர விஞ்ஞானப் பரிட்சையில் சித்தியடைந்தோர் பற்றிய தரவுகளின் படி தொடர்ச்சியாக 10% அளவிலான மாணவர்கள் தொடர்ந்தும் சித்தி பெறாத தன்மையும் காணப்படுகின்றது.

Bialystok (2002) மேற்கொண்ட Bilingual education for young children: review of the effects and consequences என்ற ஆய்வில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை ஆங்கில மொழியுடன் கற்பது பெரும் சுமையாகவே மாணவர்கள் கருதுகின்றனர். பெரிய பாடப்பரப்புகளைக் கொண்ட விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்கள் காணப்படுகின்றன. இவற்றை சரியான முறையில் விளங்கி கற்பதிலும் சரியான எண்ணக்கருவாக்கத்தை உருவாக்குவதிலும் ஆங்கில மொழியின் செல்வாக்கு அதிகமாக காணப்படுவதால் மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெறுவது சவாலாகவே அமைந்துள்ளது என்கிறார்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

ஆய்வுப் பிரதேசத்தில் இருமொழிக் கற்றல் இடம்பெறும் 1AB பாடசாலைகளில் உள்ள கனிஷ்ட இடைநிலை மாணவர்களின், ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான பாடத்தில் உரிய மாணவர் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் இருமொழிக் கல்வி முறைமை சார்ந்த காரணிகள் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

**பொது நோக்கம்:**

இருமொழிக் கல்வியூடாக விஞ்ஞானப் பாடத்தைக் கற்கின்ற கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் கற்றலின் ஈடுபாட்டுத் தன்மையைக் கண்டறிந்து, இம்மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டில் தாக்கம் செலுத்தும் காரணிகளையும் பிரச்சினைகளையும் இனங்காண்பதுடன், மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துக்காட்டுதல்.

**சிறப்பு நோக்கங்கள்:**

1. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் இருமொழிமூல விஞ்ஞானப் பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தற்போதுள்ள நிலைமையைக் கண்டறிதல்.
2. இருமொழிக் கல்வி முறையில் பயிலும் கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு பாடசாலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இனங்காணல்.
3. இருமொழிக் கல்விச் செயற்பாட்டில் விஞ்ஞானப் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.
4. இருமொழிப் போதனை முறையில் பயிலும் கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

**இலக்கிய மீளாய்வு**

Rana Esseily என்பவரும் அவரது குழுவினரும் மேற்கொண்ட ஆய்வாகிய The Relative Importance Of Language In Guiding Social Preferences Through Development மொழி தாயின் வயிற்றிலே இருக்கும் போதே கற்கப்படுகின்றது. மொழி சமூகங்களால் பகிரப்பட்டு தகவல்கள் பரிமாற்றப்படுவதனால் கலாசாரக் கற்றலுக்கான வழிகாட்டியாகவும் உள்ளது. புவியியல் தோற்றம், சமூகநிலை, பாலினம் மற்றும் இனக்குழு என மக்களைப் பற்றிய தகவல்களை மொழி வழங்குகின்றது. மொழி அபிவிருத்திக்கான சமூக விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் இயக்கக் கூடியதுமாகும் என்கிறார்.

இருமொழிப் போதனாமுறை என்பது குறைந்த பட்சம் இரு மொழிகள் தொடர்புபடும் விதத்தில், குறிப்பிட்ட இலக்கு, நோக்கம் என்பவற்றுடன் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப்படுகின்ற கல்வி முறையாகவும் இது அமையும். இத்தகைய போதனாமுறையில், போதனையானது ஆங்கில மொழியறிவை சுதேசிய மொழியை ஊடகமாக்கிக் கொண்டு வழங்கப்படுவதாகும். அதாவது சிறார்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை பேணவேண்டிய அவசியப்பாட்டின் உணர்வு குன்றாமல் மேற்கொள்ளப்படும் கல்வி ஒழுங்குமுறையே இதுவாகும் (Hasan,1993).

Bialystok (2002) மேற்கொண்ட ஆய்வாகிய Bilingual Education For Young Children: Review Of The Effects And Consequences என்ற ஆய்வில் எந்த ஒரு கல்வி முறையிலும் அறிவை வழங்குபவர் ஆசிரியர் என்ற தன்மைக் காணப்படுகின்றது. எனவே இரு மொழிக் கல்வியை பொறுத்தவரையிலும் ஆசிரியர்களுக்கு என தனி இடம் உண்டு. அவர்கள் இரண்டு மொழிகளிலும் கற்றல் சார்ந்த தேர்ச்சிகளையும், சிறந்த அறிவினையும் கொண்டிருப்பதோடு மாணவர்களை புரிந்து அவனது உளவியல் தன்மைக்கு ஏற்ப தனது அறிவை தொகுத்து வழங்க கூடிய திறனையும் பெற்றிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

Vithanapathirana (2014) இலங்கையில் மேற்கொண்ட Improving secondary science instruction through content and language integrated learning (CLIL) in Sri Lanka ஆய்வில் இருமொழியில் கற்கும் மாணவர்கள் பாட விடயத்துடன் சேர்த்து மொழியையும் கற்றுக் கொள்வதனால் மாணவர்கள் கற்பதில் இடர்படுகின்றார்கள் என சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே பாடத்திட்டங்களை எழுதும்போது பாட அறிவையும் கூடவே மொழி அறிவையும் வழங்குவதில் ஆசிரியர்கள் கூடுதலான கவனத்தை செலுத்துதல் வேண்டும் என்கிறார்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக்காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத்தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவுரீதியான முறையியல்களும், பண்புரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்ரீதியான முறையியலினுள் எண்கள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டுசெல்லப்படுகிறது. ஆய்வு தொடர்பான கோட்பாடுரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்புகொண்டதாக பண்புரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு இருமொழிக் கல்வி முறையின் அடிப்படையில் கல்விகற்கும் மாணவர்கள், அவர்களுக்கான கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் ஆகியோரிடம் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்களிடம் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், எண்ணங்கள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன. மேலும் நேரடி அவதானமும் மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு வினாக்கொத்து, நேரடி அவதானம் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்டதரவுகளை அளவுரீதியாகவும், பண்புரீதியாகவும் பகுப்பாய்வு செய்து

அதன்மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இதுவொரு அளவைநிலை ஆய்வாகும்.

**மாதிரித் தெரிவு**

ஆய்வுப் பிரதேசமாக மண்முனை வடக்குக் கல்விக் கோட்டம் ஆய்வாளனால் தெரிவு செய்யப்பட்டது. இங்குள்ள 39 பாடசாலைகளில் 06 பாடசாலைகளிலேயே இருமொழிப்போதனை இடம்பெறுகின்றது. இப் பாடசாலைகள் யாவும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. அதிபர்கள் 6 பேரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். விஞ்ஞானப் பாட ஆசிரியர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர். கனிஷ்ட இடை நிலைப்பிரிவில் இருமொழிக் கல்வி முறையில் பயில்கின்ற 129 மாணவர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு குறித்த மாணவர்களில் 50 சதவீதத்தின் அடிப்படையில் 65 பேர் இறுதி மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப் பகுப்பாய்வுகள்**

**கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தற்போதுள்ள நிலைமையைக் கண்டறிதல்.**




**கூற்று 01:** இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றலில் மாணவர்களின் பங்குபற்றலும் ஆர்வமான கற்றலும்.

**கூற்று 02:** வகுப்பறைகளில் இருமொழிகளையும் பயன்படுத்தும் தன்மை

**கூற்று 03:** விஞ்ஞானப் பாடத்தில் மாணவர் மையமான கற்றல் கற்பித்தல் முறைகளின்

**உரு 4.1. கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தற்போதுள்ள நிலைமையைக் கண்டறிதல்.**

இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றலில் மாணவர்களின் பங்குபற்றலும் ஆர்வமான கற்றலும் சிறப்பாக இருப்பதாக 74 சதவீதமான ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மேலும் இதனை 100 மாணவர்களும் ஏற்றுள்ளனர். வகுப்பறைகளில் இருமொழிகளையும் பயன்படுத்தும் தன்மை நன்றாகக் காணப்படுவதாக 83% ஆசிரியர்களும் 74% மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடத்தில் மாணவர் மையமான கற்றல் கற்பித்தல் முறைகளின் பயன்பாடு மிகவும் சிறப்பாக இடம்பெறுவதாக 100% ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். ஆனால் 35.4 மாணவர்களே இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**இருமொழிக் கல்வி முறையில் பயிலும் கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்குப் பாடசாலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இனங்காணல்.**




**உரு 4.2. இருமொழிக் கல்வி முறையில் பயிலும் கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்குப் பாடசாலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இனங்காணல்.**

விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் தன்மை நன்றாகவுள்ளது. இதனை 86.2 சதவீதமான மாணவர்களும் 100%மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடக் கற்றலுக்கான ஆய்வுகூட வசதிகளும் உபகரண வசதிகளும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பூரணமாகக் காணப்படுகின்றது. இதனை 69% மான மாணவர்களும், 83% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் காட்டிக் கற்பித்தல் இடம்பெறுகிறதா என வினவிய போது இதனை 27% மான மாணவர்களும், 100% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே பெரும்பாலான மாணவர்கள் உண்மைப் பொருட்களைக் காட்டிக் கற்பிப்பதில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

**கூற்று 01:** விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் தன்மை

**கூற்று 02:** விஞ்ஞானப் பாடக் கற்றலுக்கான ஆய்வுகூட வசதிகளும் உபகரண வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தல்

**கூற்று 03:** விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் காட்டிக் கற்பித்தல்

**இருமொழிக் கல்விச் செயற்பாட்டில் விஞ்ஞானப் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.**




| |
|---|
| **கூற்று3:** விஞ்ஞான பாடத்தைக் கற்பதற்கு மாணவர்களிடம் இருமொழிப்புலமை |
| **கூற்று2:** விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதற்கான திறன் |
| **கூற்று1:** ஆய்வுகூடம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பமளித்தல் |

**உரு 4.3. இருமொழிக் கல்விச் செயற்பாட்டில் விஞ்ஞானப் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.**

ஆய்வுக்கூடம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பமளித்தல் என்ற கூற்றிற்கு 46.2% மான மாணவர்களும் 35.6% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடத்தைப் கற்பிப்பதற்கான திறன் பற்றி மாணவர்களிடம் வினாவிய போது 58% மான மாணவர்களும் 60% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆய்வுக்கூடம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பமளித்தல பற்றி மாணவர்கள 39.9% மாகவுள்ளதாகவும், 45.6% மான ஆசிரியர்களும் காணப்படுவதாகக் கூறியுள்ளனர்.

**இருமொழிப் போதனை முறையில் பயிலும் கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானபாட ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.**



**கூற்று 1**: இருமொழியில் விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் போதியளவான ஆசிரியர் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்

**கூற்று 2:** விஞ்ஞானப் பாடத்தின் போது ஆய்வுகூடங்களைப் பயன்படுத்தவும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவுமான வசதிகளை ஏற்படுத்தல்

**கூற்று 3:** முகாமைத்துவ மட்டத்தில் இருமொழிமூல விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான பூரண ஒத்துழைப்புகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்துதல்

**கூற்று 4:** விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல்

இருமொழியில் விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் போதியளவான ஆசிரியர் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் என்பதை 100% மான மாணவர்களும் 95% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடத்தின் போது ஆய்வுகூடங்களைப் பயன்படுத்தவும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவுமான வசதிகளை ஏற்படுத்தல் என்பதை 83.3%மான மாணவர்களும் 90% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். முகாமைத்துவ மட்டத்தில் இருமொழிமூல விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான பூரண ஒத்துழைப்புகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்துதல் என்பதை 83.3% மான மாணவர்களும் 75% மான ஆசிரியர்களும் ஏற்றக்கொண்டுள்ளனர். விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல் என்பதனை 100% மான மாணவர்களும் 92% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

**கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் தற்போதுள்ள நிலைமையைக் கண்டறிதல்.**

**முடிவுகள்**

- இருமொழி மூல விஞ்ஞானப் பாடக் கற்றலில் மாணவர்களின் பங்குபற்றலும் ஆர்வமான கற்றலும் சிறப்பாக இருப்பதாக 74 சதவீதமான ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- வகுப்பறைகளில் இருமொழிகளையும் பயன்படுத்தும் தன்மை நன்றாகக் காணப்படுவதாக 83% ஆசிரியர்களும் 74% மாணவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடத்தில் மாணவர் மையமான கற்றல் கற்பித்தல் முறைகளின் பயன்பாடு மிகவும் சிறப்பாக இடம்பெறுவதாக 100 ஆசிரியர்கள் ஏற்றுள்ளனர். ஆனால் 35.4 மாணவர்களே இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மாணவர் வரவினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை பாடசாலையின் முகாமைத்துவத்தினர் முன்னெடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கான உணவு தொடர்பாகவும், அது விஞ்ஞானப்பாட ஈடுபாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாகவும் பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி போசாக்கான உணவிலும், உடற்பயிற்சியிலும் கவனமெடுக்கச் செய்தல்.
- விஞ்ஞானப் பாடத்தை மாணவர் மையமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் கணினி, புரொஜெக்டர்கள் என்பவற்றைக் கொண்டு கற்பிக்க வேண்டும். பாட அறிவும், மொழியறிவும் சிறப்பாகக் கொண்ட ஆசிரியர்களைக் கொண்டு விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிக்கச் செய்தல் வேண்டும். ஆய்வுகூடப் பரிசோதனைகளையும் உண்மைப் பொருட்களையும் கொண்டு விஞ்ஞானத்தைக் கற்பிப்பதுடன் மாணவர்களுக்கு சிறந்த அனுபவங்களைத் தரக்கூடியவாறு வகுப்பறையையும் ஒழுங்கமைத்தல்.

**இருமொழிக் கல்வி முறையில் பயிலும் கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்குப் பாடசாலை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இனங்காணல்**

**முடிவுகள்**

- விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் தன்மை நன்றாகவுள்ளது. இதனை 86.2 சதவீதமான மாணவர்கள் ஏற்றுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடக் கற்றலுக்கான ஆய்வுகூட வசதிகளும் உபகரண வசதிகளும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பூரணமாகக் காணப்படுகின்றது. இதனை 69% மான மாணவர்களும், 83%மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் காட்டிக் கற்பித்தல் இடம்பெறுகிறதா என வினவிய போது இதனை 27% மான மாணவர்களும், 100% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- அதிபர்கள் தினசரி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களின் பிரச்சினைகள் என்ன என்பது அதிபருக்குத் தெரியவரும். மேலும் தேவையான வளங்கள் என்ன, ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் தொடர்பான முடிவுகளை எடுக்கவும் முடியும். எனவே பாசாலைகள் அளவில் பெறிதாக இருப்பதால் தினமும் கண்காணிக்க முடியாவிட்டாலும் வாரத்தில் முன்று முறையாவது மாணவர்களின் செயற்பாடுகளை கண்காணிக்க வேண்டும்.

- மாணவர்களிடம் விஞ்ஞானப் பாடம் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான பிரதானமான செயற்பாடு அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதாகும். இப்பாடசாலைகளில் விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் மாணவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதன் மூலம் அவர்களது பாட அடைவையும், பாடத்தின் மீதான ஈடுபாட்டையும் மேம்படுத்தலாம். மாணவர்கள் தங்கள் பலம் மற்றும் பலவீனங்களைப் புரிந்து கொள்ள உதவும் வகையில் சரியான நேரத்தில் மற்றும் குறிப்பிட்ட ஊக்கப்படுத்தும் கருத்துக்களை ஆசிரியர்கள் வழங்க வேண்டும் என்கிறார்கள் எனவே மாணவனின் விஞ்ஞானப் பாடம் மீதான ஈடுபாட்டை அதிகரிக்க பாராட்டலும் ஊக்கப்படுத்தலும் அவசியமானவை.

**இருமொழிக் கல்விச் செயற்பாட்டில் விஞ்ஞானப் பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.**

**முடிவுரை**

- ஆய்வுக்கூடம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பமளித்தல் என்ற கூற்றிற்கு 46.2% மான மாணவர்களும் 35.6% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடத்தைப் கற்பிப்பதற்கான திறன் பற்றி மாணவர்களிடம் வினாவிய போது 58% மான மாணவர்களும் 60% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- ஆய்வுக்கூடம் மற்றும் வளங்களைப் பயன்படுத்த சந்தர்ப்பமளித்தல் 39.9% மாகவும் 45.6% மான ஆசிரியர்களும் காணப்படுவதாக மாணவர்கள் கூறியுள்ளனர்.

**விதப்புரைகள்**

- தேசிய மட்டத்தில் இருமொழியில் பள்ளியிலும் பிள்ளைகளுக்கான இரண்டாம் மொழி(L2) விருத்திக்கான தனியான புத்தகங்களை வழங்குதல். பாடசாலை நூலகத்திற்கு இரண்டாம் மொழிப் புலமையை அதிகரிப்பதற்கு ஏற்றவாறான புத்தகங்களை கொள்வனவு செய்து மாணவர்களுக்கு வழங்குதல்.
- தினமும் காலை உணவை உண்டு விட்டு வரும்படி மாணவர்களுக்கு அறிவுறுத்துதல். உளரீதியான உடல் ரீதியான குறைபாடுகளை கொண்ட மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஏற்றாற் போல கற்பித்தல் செயற்பாடுகளை இயைபாக்கம் செய்தல்.
- மாணவரிடம் தேடலைத் தூண்டக்கூடிய மாதிரியான வகுப்பறை செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். வீட்டிலும் மாணவர்கள் சுயமாகக் கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். விஞ்ஞானப் பாடத்தை சுயமாகக் கற்பதற்கான உபகரண வசதிகள், தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல். மாணவர்களின் சுயகற்றலுக்குத் தேவையான புத்தகங்களை

வகுப்பறையில் சிறிய வாசிப்பு மூலைகளை அமைத்து அதில் வைத்துப் கற்கச் செய்தல். வகுப்பில் போட்டிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்துவதோடு கற்றலில் அனைத்து மாணவர்களினுடைய பங்குபற்றலையும் உறுதிசெய்தல்.

**இருமொழிப் போதனை முறையில் பயிலும் கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.**

**முடிவுகள்**

- இருமொழியில் விஞ்ஞானப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் போதியளவான ஆசிரியர் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் என்பதை 100% மான மாணவர்களும் 95% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடத்தின் போது ஆய்வுகூடங்களைப் பயன்படுத்தவும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவுமான வசதிகளை ஏற்படுத்தல் என்பதை 83.3%மான மாணவர்களும் 90% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
- முகாமைத்துவ மட்டத்தில் இருமொழிமூல விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான பூரண ஒத்துழைப்புகளையும் ஆலோசனைகளையும் வழங்கி ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்துதல் என்பதை 83.3% மான மாணவர்களும் 75% மான ஆசிரியர்களும் ஏற்றக்கொண்டுள்ளனர்.
- விஞ்ஞானப் பாடத்தை உண்மைப் பொருட்களைக் கொண்டு கற்பித்தல் என்பதனை 100% மான மாணவர்களும் 92% மான ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**விதப்புரைகள்**

- மாணவர்களுடைய செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் அடையாளப்படுத்துவதன் மூலமாகவும் அவர்களது கற்றலை மேம்படுத்த முடியும். இருமொழி மூலமாக கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தற்போது இருமொழியில் கற்கின்ற மாணவர்கள் செய்கின்ற செயற்பாடுகள், சாதனைகள், அவர்களது சாதகமான துலங்கல்களை ஏனைய மாணவர்களின் முன்னால் பாராட்டி, அங்கீகரிக்கும் போது இருமொழி மூலமாக தெரிவு செய்து படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளலாம். மேலும் அந்த மாணவர்கள் கற்றலில் சிறந்த அடைவுகளை பெறுவதற்கும் இது வாய்ப்பாக அமையும். மாணவனது சிறியளவான சாதகமான துலங்கல்களையும் பாராட்டுவதானது மாணவர்களை மேம்படுத்துவதற்கும், பாட ஈடுபாட்டை அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும்.
- இருமொழிக் கல்வியை சிறந்த முறையில் முன்னெடுக்க வேண்டுமாக இருந்தால் முதலில் பார்க்க வேண்டியது மானிட வளங்கள் சிறப்பான முறையில் இருக்கின்றதா

என்பதுவேயாகும். அந்த வகையில் இவ்வாறு பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உரிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

- இருமொழிக் கல்வியில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கும் ஆய்வுக்கூடங்களை பயன்படுத்தி கற்கவும் கற்பிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மாணவனுக்கு நடைமுறை உலக உதாரணங்களைக் காட்டி செயற்பாட்டு ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் பல்வேறான விதங்களில் பரிசோதனைகளை செய்து காட்டியும் மாணவனுக்கு விளக்குதல் வேண்டும் என்கிறார். இவ்வாறான முறைகளை விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

**சாராம்சம்**

இருமொழி கல்வி முறையில் விஞ்ஞான பாடக்கற்றலில் மாணவர்களின் ஈடுபாடு என்ற தலைப்பில் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாய்வில் ஆய்வு வினாக்களுக்கு ஏற்ப இருமொழிக் கல்வியில் தற்போதைய நிலையை அறிதல், இருமொழிக் கல்வியில் விஞ்ஞானப் பாட ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு பாடசாலைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிதல், இருமொழி மூல விஞ்ஞானப் பாடத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் உள்ள சவால்களை அறிதல், விஞ்ஞான பாட ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்வைத்தல் என்ற ரீதியில் அவற்றுக்கான ஆலோசனைகளும் விதந்துரைகளும் இவ் அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்டன. அத்துடன் ஆய்வின் வரையறை, ஆய்வின் முடிவுகளும் பிரயோகங்களும், எதிர்காலத்தில் தொடரவிருக்கும் ஆய்வுகளுக்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**

Amerstorfer, C.M., and Münster-Kistner, F. (2021). **Student Perceptions of Academic Engagement and Student-Teacher Relationships in Problem-Based Learning**, Frontires Psychology. https://doi.org/10.3389/fpsyg.2021.713057

Barak, R., and Bialystok, E., (2011). **Cognitive Development Of Bilingual Children**, Research Gate, Canada. https://doi.org/101017/S0261444810000339

Bialystok, E. (2018). **Language Processing in Bilingual Children**, Cambridge, England: Cambridge University Press. Bilingual Education.

Buxton, C., and Lee, O. (2023). **Multilingual Learners In Science Education**, Research On Science Education, https://doi.org/10.4324/9780367855758-13

Cahyani, H. (2018). **Teachers'code-Switching In Bilingual Classrooms: Exploring Pedagogical And Sociocultural Functions**, International Journal Of Bilingual Education And Bilingualism, https://doi.org/10.1080/13670050.2016.1189509

# Innovation and Education

# AN INVESTIGATION OF TRAINED SCHOOL TEACHERS' SELF-EFFICACY BELIEFS AND THEIR IMPACT ON THE TEACHING-LEARNING PROCESS

Mr. Krishnapillai Punniyamoorthy
Postgraduate Institute of Humanities and Social Sciences,
University of Peradeniya,
Peradeniya.
*krishpunni@gmail.com*

Prof. Fareed Mohamed Nawastheen
The Open University of Sri Lanka,
Nawala,
Nugegoda.
*fmnaw@ou.ac.lk*

**Abstract:**

Education is a key indicator of national development, and teachers are its driving force. Through learning, they shape future generations, preparing them to meet the challenges of tomorrow. Three-year diploma programs at Sri Lanka's National Colleges of Education equip aspiring teachers with the knowledge, skills, and values needed for success. By focusing on content knowledge, pedagogical expertise, and strong professional ethics, these programs aim to cultivate self-efficacious teachers who excel in teaching, classroom management, and student interactions. This research paper explores teacher self-efficacy beliefs among trained teachers in the Eastern Province of Sri Lanka, focusing on their utilization of instructional techniques. The study, based on Albert Bandura's Social Cognitive Theory, examines how observational learning, cognitive processes, and behavioral standards influence teachers' confidence in their teaching abilities. A sample of 230 teachers (114 males and 116 females) from National Colleges of Education (NCOEs) participated in the survey, using the Teacher Sense of Efficacy Scale (TSES). Findings reveal a moderate to high level of self-efficacy in utilizing teaching techniques (mean = 5.84, SD = 1.04), with male teachers showing slightly higher self-efficacy than females. Subject taught and training institution type significantly influences self-efficacy, while school type does not. Recommendations include tailored training programs, mentorship, professional development, and promoting positive role models to enhance self-efficacy beliefs, particularly among female teachers, thus improving teaching effectiveness and student outcomes.

***Keywords****: Classroom Management, Instructional strategies, Self-efficacy beliefs, student engagement, Teacher*

## Introduction

Education is the cornerstone of a nation's progress. It empowers individuals, fosters innovation, and drives economic growth. But this engine of development relies on a crucial element: teachers. They are the architects who shape young minds, ignite curiosity, and prepare future generations to meet the challenges of tomorrow. In Sri Lanka, National Colleges of Education (NCOEs) play a vital role in equipping aspiring teachers for success. These intensive Three years programs provide a strong foundation in content knowledge, ensuring teachers have a deep understanding of the subjects they will teach. But knowledge alone isn't enough. NCOEs go beyond by fostering pedagogical expertise, equipping teachers with effective teaching methods to engage students and promote active learning. Furthermore, NCOEs emphasize the importance of strong professional ethics. Teachers instilled with these values become champions for fairness, responsibility, and student well-being within the classroom. One crucial aspect of teacher development is self-efficacy, a teacher's belief in their ability to effectively perform their role. High self-efficacy translates to confident and motivated teachers who are more likely to embrace innovative teaching styles, manage classrooms with ease, and build positive relationships with students. NCOEs strive to cultivate this self-efficacy, empowering teachers to excel in teaching, classroom management, and student interactions. However, the impact of teacher training programs extends beyond the NCOE walls. A critical question remains: how effectively do these well-trained teachers utilize their acquired skills in real-world school settings? This is where a gap in knowledge exists. Limited research explores how NCOE graduates translate their theoretical knowledge and practical skills into effective classroom practices. To address this gap, this study focused on evaluating the self-efficacy of trained teachers employed in schools within Sri Lanka's Eastern Province. By understanding the self-efficacy levels of teachers, we can identify areas where they may require additional support or professional development opportunities. This knowledge can then be used to refine NCOE programs, ensuring they effectively prepare teachers for the diverse challenges they face in schools. Ultimately, by investing in teacher training and fostering high self-efficacy among educators, Sri Lanka can create a more empowered and effective educational system, paving the way for a brighter future for its young minds.

This study's primary aim is to investigate the self-efficacy beliefs of teachers trained at Sri Lanka's National Colleges of Education (NCOEs) who are currently employed in formal

schools within the Eastern Province. To achieve this, the research delves deeper with the following objectives:

- To assess the level of Self-Efficacy among NCOE-trained teachers in the Eastern province of Sri Lanka.
- To determine any significant differences in self-efficacy beliefs related to instructional strategies, classroom management, and student engagement based on the teachers' gender.

## Review of Literature

Albert Bandura's Social Cognitive Theory (SCT) provides the foundation for this study. SCT emphasizes observational learning, imitation, and modeling as key factors shaping human behavior. It acknowledges the role of direct experiences as highlighted in behaviorism, but expands on it by recognizing that individuals learn by observing others and the outcomes of their actions (Bandura, 1977). Core constructs of SCT include observational learning, reciprocal determinism, self-efficacy, modeling and imitation, cognitive processes, and behavioral standards and reinforcement. Self-efficacy, a central concept in SCT, refers to an individual's belief in their ability to successfully complete a task and achieve desired results (Bandura, 1986). High self-efficacy is associated with increased motivation, perseverance, and performance, while low self-efficacy can lead to task avoidance (Bandura, 1999). Following the introduction of SCT, the concept of teacher self-efficacy gained significant traction in educational research (Duffin et al., 2012). Teacher self-efficacy refers to a teacher's belief in their capacity to effectively instruct students, manage classrooms, and influence student learning outcomes (Tschannen-Moran & Woolfolk Hoy, 2001). A substantial body of research has explored teacher self-efficacy across various contexts. These studies consistently highlight the positive impact of high self-efficacy on teachers' motivation, instructional practices, and student outcomes (e.g., Uyanık, 2016; Demir, 2020). However, research on teacher self-efficacy in Sri Lanka, particularly among teachers trained at National Colleges of Education (NCOEs), remains limited (Rahman, 2022; Nawastheen et al., 2017). While some global studies suggest potential gender differences in self-efficacy (Moalosi & Forcheh, 2015; Sarfo et al., 2015), Nawastheen et al. (2017) found no significant gender differences among Sri Lankan student teachers. Looking deeper into existing research, some studies suggest that males may have higher self-efficacy than females (Moalosi &

Forcheh, 2015), while others found female teachers reported higher self-efficacy in specific domains (Sarfo et al., 2015). Interestingly, Nawastheen et al. (2017) did not find significant gender differences in the Sri Lankan context. Research by Uyanık (2016) suggests that teacher training programs can influence self-efficacy beliefs, as a positive relationship was found between self-efficacy and attitudes towards teaching among teacher candidates. Additionally, Michelle (2019) highlights that preventive classroom management strategies can positively impact teacher self-efficacy. Furthermore, Kaleli (2020) found a positive correlation between pre-service teachers' self-efficacy and their attitudes towards the teaching profession. Demir (2020) further suggests that self-efficacy is positively related to job satisfaction and motivation. In conclusion, this review underscores the importance of self-efficacy for teachers, particularly NCOE-trained teachers in Sri Lanka where research on this topic is scarce. The studies included provide valuable insights into potential gender variations in self-efficacy, the influence of teacher training programs, and the relationship between self-efficacy and various aspects of teaching practice.

**Methodology**

This study employed a survey research design to investigate teacher self-efficacy beliefs among NCOE-trained teachers currently working in Sri Lanka's Eastern Province. The target population consisted of approximately 2,332 trained teachers based on source of data. A representative sample of 230 teachers (114 males and 116 females) was chosen using stratified sampling to ensure proportional representation of both genders within the Eastern Province teacher population. The primary data collection tool was the Teacher Sense of Efficacy Scale (TSES) developed by Tschannen-Moran and Woolfolk Hoy (2001). This 24-item scale measures self-efficacy in three key domains: Instructional Strategies (8 items), Classroom Management (8 items), and Student Engagement (8 items). Participants rated their agreement with each statement on a Likert scale ranging from one (strongly disagree) to nine (strongly agree). To ensure the instrument's validity and reliability in the Sri Lankan context, the TSES was translated into Tamil and then back translated into English to verify accuracy. Additionally, expert opinions were sought to confirm the clarity and content relevance of the translated instrument. Finally, Cronbach's alpha reliability analysis was conducted, yielding a coefficient exceeding 0.70 for all items, indicating strong internal consistency and reliability of the translated instrument.

**Results and Discussion**

The analysis of self-efficacy beliefs among NCOE-trained teachers in the Eastern Province revealed interesting patterns. Table 1 shows the mean and standard deviation values of trained teachers in terms of their instructional strategies, student engagement and classroom management.

Table 1. Levels of self-efficacy beliefs among NCOE-trained teachers

| **Self-Efficacy Beliefs** | **N** | **Mean** | **Standard Deviation** |
|---|---|---|---|
| Student Engagement | 230 | 5.62 | .92 |
| Instructional strategies | 230 | 5.84 | 1.04 |
| Classroom Management | 230 | 7.21 | .50 |

According to Table 1, the teachers reported the highest mean score (7.21) for self-efficacy in classroom management, indicating a moderate to high level of confidence in this area. In contrast, mean scores for student engagement (5.62) and instructional strategies (5.84) were closer to the middle of the scale, suggesting that teachers are "somewhat confident" in these domains. These findings suggest that while NCOE programs effectively equip teachers with classroom management skills, there may be room for further development in areas like fostering student engagement and implementing a wider range of instructional strategies.

This study also investigated potential gender differences in self-efficacy beliefs among NCOE-trained teachers in Sri Lanka's Eastern Province. The analysis focused on three key areas: student engagement, instructional strategies, and classroom management. Table 2 shows the gender differences in self-efficacy beliefs among NCOE-trained teachers in Sri Lanka's Eastern Province.

Table 2; Self-efficacy beliefs based on gender among NCOE-trained teachers

| **Demographic Variable** | **Aspects of Self-Efficacy Beliefs** | **T** | **df** | **Sig (2tailed)** | **Conclusion** |
|---|---|---|---|---|---|
| Gender of Trained | Student Engagement | 1.49 | 2.14 | 0.07 | There is no statistically significant difference in |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Teachers (Male & Female) | | | | | Student Engagement self-efficacy between male and female teachers. |
| | Instructional Strategies | 1.48 | 2.07 | 0.14 | There is no statistically significant difference in Instructional Strategies self-efficacy between male and female teachers |
| | Classroom Management | 1.17 | 3.34 | 0.247 | There is no statistically significant difference in Classroom Management self-efficacy between male and female teachers. |

Encouragingly, the results revealed no statistically significant differences in self-efficacy beliefs related to gender across any of these domains. This suggests that both male and female NCOE-trained teachers report similar levels of confidence in their ability to manage student engagement, implement instructional strategies, and maintain a positive classroom environment. These findings differ from some prior studies that reported gender variations in self-efficacy (e.g., Moalosi & Forcheh, 2015). Further research is needed to explore the reasons behind this discrepancy and to understand the specific factors that influence self-efficacy beliefs among both male and female teachers in the Sri Lankan context.

**Conclusion & Recommendations**

This study investigated the self-efficacy beliefs of NCOE-trained teachers currently employed in Sri Lanka's Eastern Province. The findings revealed that these teachers possessed a moderate to high level of self-efficacy in classroom management, indicating confidence in their ability to maintain a positive learning environment. However, self-efficacy scores for student engagement and instructional strategies were somewhat lower, suggesting that teachers may feel less confident in these areas. Interestingly, the study did not find any significant gender differences in self-efficacy beliefs, which contradicts some prior research. This finding warrants further exploration in future studies. Based on the results of this study, the following recommendations are proposed to enhance teacher self-efficacy among NCOE-trained teachers in Sri Lanka's Eastern Province:

- **Tailored NCOE Programs:** NCOE curriculum development can explore incorporating modules focused on fostering student engagement and implementing a wider range of instructional strategies. This targeted training could increase teacher confidence in these areas.
- **Mentorship and Professional Development:** Establishing mentorship programs and ongoing professional development opportunities can provide ongoing support for teachers, particularly those entering new subject areas or facing challenges.
- **Sharing Best Practices:** Highlighting and celebrating successful teachers, both male and female, can serve as positive role models and inspire other educators to develop high self-efficacy beliefs and effective teaching practices.

By implementing these recommendations, teacher training institutions and educational authorities can create an environment that fosters and sustains strong teacher self-efficacy. Ultimately, this will contribute to improved teacher performance, increased student engagement, and a more effective educational system in Sri Lanka.

**References**

Bandura, A. (1978). Self-efficacy: Toward a unifying theory of behavioral change. *Advances in behaviour research and therapy*, *1*(4), 139-161.

Bandura, A. (1986). *Social foundations of thought and action: A social cognitive theory*. Englewood Cliffs, NJ: Prentice-Hall.

Bandura, A. (1999). Social Cognitive Theory: An Agentic Perspective. *Asian Journal of Social Psychology*, *2*(1), 21–41. https://doi.org/10.1111/1467-839x.00024

Demir, S. (2020). The Role of Self-Efficacy in Job Satisfaction, Organizational Commitment, Motivation and Job Involvement. *Eurasian Journal of Educational Research*, 20(85), pp.205–224. doi.org/10.14689/ejer.2020.85.10

Duffin, L. C., French, B. F., & Patrick, H. (2012). The Teachers' Sense of Efficacy Scale: Confirming the factor structure with beginning pre-service teachers. *Teaching and Teacher Education*, *28*(6), 827–834. https://doi.org/10.1016/j.tate.2012.03.004.

Kaleli, Y. S. (2020). Investigation of the Relationship between Pre-service Music Teachers' Attitudes towards Teaching Profession and their Self-efficacy Beliefs. *International Journal of Research in Education and Science*, *6*(4), 580. https://doi.org/10.46328/ijres.v6i4.1493

Khalid, S. A., & Abdul Rahman, N. (2023). Academic Self-Efficacy, Intrinsic Motivation and Academic Achievement: Moderating Effect of Gender. *International Journal of Academic Research in Business and Social Sciences*, *13*(1). https://doi.org/10.6007/ijarbss/v13-i1/16043

*Michel, N., Cater, J. J., & Varela, O. (2009).* Active versus passive teaching styles: An empirical study of student learning outcomes. *Human Resource Development Quarterly*, *20*(4), 397–418. https://doi.org/10.1002/hrdq.20025

Moalosi, W.T.S. and Forcheh, N., (2015). Self-Efficacy Levels and Gender Differentials among Teacher Trainees in Colleges of Education in Botswana. *Journal of Education and Learning*, *4*(3), http://dx.doi.org/10.5539/jel.v4n3p1

Nawastheen, F. M., Wanasinghe, W. M. S., & Senaviratne, P. (2017). A Study on PGDE Student-Teacher Efficacy Beliefs in the Sri Lankan Context. *OUSL Journal*, *12*(1), 27. https://doi.org/10.4038/ouslj.v12i1.7360

Tschannen-Moran, M., & Hoy, A. W. (2001). Teacher efficacy: capturing an elusive construct.*Teaching and Teacher Education*, *17*(7), 783–805. https://doi.org/10.1016/s0742-051x(01)00036-1

Rahman. A.F. (2021) Classroom management efficacy of trained teachers with reference to in-service and pre-service trained teachers. *1st International Research Symposium – 2021Interdisciplinary Research in Education*. University of Colombo. https://edu.cmb.ac.lk/wp-content/uploads/2022/04/Proceedings-IRS-2021.pdf

Uyanık, G. (2016). Investigation of the Self-efficacy Beliefs in Teaching Science and Attitudes towards Teaching Profession of the Candidate Teachers. *Universal Journal of Educational Research*, *4*(9), 2119–2125. https://doi.org/10.13189/ujer.2016.040924

# வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளைத் துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு

Mr. Kanthasamy Abilash
BT/KK/Akuranai Bharathy Vidyalayam,
Batticaloa.
abiabilash716@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

புதிய சகாப்தத்தின் விரைவான தொழிநுட்ப வளர்ச்சியானது இன்றைய நவீன வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் எதிர்பார்க்கும் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதிலும் ஒட்டுமொத்தக் கல்விமுறையை வளப்படுத்துவதிலும் ஆசிரியரின் வகிபங்கு மகத்தானது. பல்வேறு புதுமையான உத்திகளைச் செயற்படுத்துவதன் மூலம் கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளில் புதிய மாற்றங்களைகளை கொண்டு வர முடியும். கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளில் நவீன, புதுமையான உத்திகள் நடைமுறைக்கு வரும்போது, கல்வியாளர்களும் மாணவர்களும் தங்கள் பணிகளையும், செயற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும். மறுபுறம், ஒட்டுமொத்தக் கல்வி முறையிலும் முன்னேற்றங்களையும் கொண்டு வர முடியும். பல்வேறு வகையான தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்பது கற்பித்தல்-கற்றல் செயன்முறைகளின் புதுமைகளில் மிக முக்கியமான வடிவமாக கருதப்படுகின்றது. ‘இன்றைய வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் முறைகளில் புதுமைகளை துரிதப்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு’ எனும் தலைப்பில் அமைந்த இவ் ஆய்வானது, மட்டக்களப்பு மாவட்டத்தில், கல்குடா வலயத்தின் கோறளைப்பற்று வலயப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது அளவைநிலை ஆய்வாக அமையும் வகையில் தரமான அணுகுமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இவ்வலயத்தின் 05 பாடசாலைகள் நோக்க மாதிரி முறையிலும், எழுமாற்று மாதிரி அடிப்படையில் 150 சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்களும், 50 மாணவர்களும், 50 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் வகையில் ஆய்விற்கான தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் அளவுசார் மற்றும் பண்புசார் பொருத்தமான மென்பொருள் முறைகளினூடாக வகைப்படுத்தல், பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்பட்டன. பாடசாலைகளில் புதுமையான உத்திகள், அணுகுமுறைகளின் அடிப்படையில் தங்கள் திறன்களையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

***திறவுச்சொற்கள்:*** *கல்வி, கற்றல்-கற்பித்தல் செயன்முறைகள், சிரேஷ்ட இடைநிலை, புதுமைகள், நவீன வகுப்பறை*

**ஆய்வு அறிமுகம்**

ஆரம்ப காலத்திலிருந்து மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் முக்கிய பகுதியாக கல்வி அமைகிறது. இக்கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் கடத்தல், பரிமாற்றல், நிலைமாற்றல் நிலைகளைத் தாண்டி வகுப்பறைகளில் பல வகிபாகங்களைக் கொண்டுள்ளனர். ஏனெனில், ஒரு நாட்டின் கல்வியின் வளர்ச்சி அதன் எதிர்கால வளர்ச்சியுடன் நெருக்கமாக தொடர்புடையது. பாரம்பரிய கற்பித்தல் முறை மாணவர்களுக்கு புத்தக அறிவை வழங்க ஆசிரியர்களை மையமாகக் கொண்டது. 21ம் நூற்றாண்டின் புதிய சகாப்தத்தின் வளர்ச்சியுடன், அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ளன. மக்களின் சிந்தனை பரந்துபட்டதால் மாணவர்கள் பாடப்புத்தகங்களிலிருந்து கற்க விரும்புவது மட்டுமின்றி, புதுமையான அறிவால் ஈர்க்கப்படுகிறார்கள் (Damodharan, 2019). கற்பித்தலின் தரத்தை மேம்படுத்த, மாணவர்கள் புதுமைகளை படைக்க, கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தும் கல்வியை ஊக்குவிக்கவும் பல திட்டங்கள் நவீன கற்பித்தல் முறைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

**இலக்கியமீளாய்வு**

ஆசிரியர்கள் கற்பித்தலில் ஒரே ஒரு முறையைப் பயன்படுத்தும்போது, சில சமயங்களில் கற்றல் சலிப்பானதாக இருக்கும். ஒன்றுக்கும் மேற்பட்ட புதுமையான முறைகளை செயற்படுத்துவது ஊக்குவிக்கப்படுகிறது, எனவே மாணவர்கள் கற்றலில் மகிழ்ச்சியடைய முடிகிறது. மாணவர்களிடையே ஊக்கத்தை வளர்ப்பதில் தொழில்நுட்ப ரீதியாக ஆடியோ, வீடியோ, காணொளி போன்றன ஆசிரியர்களுக்கு பல செயற்பாடுகளை வடிவமைக்க உதவும் (Damodharan, 2019). இது வகுப்பறைக் கற்பித்தல்-கற்றல் செயற்பாட்டை முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றுகிறது. தற்போதைய உலகில், வீடியோ ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக கருதப்படுவதுடன் புதுமையான அனுபவத்தை வழங்குகிறது (Sadavel, Joseph, Ragam, & Narayan, 2017). வகுப்பறையின் இயங்குநிலையைத் தீர்மானிக்கும் ஆசிரியர்கள் வகுப்பறையின் வினைத்திறன் செயற்பாடுகளுக்கு பாடத்திட்டத்தை மாற்றியமைத்தல் மூலம் வெவ்வேறு மாணவர்களின் கற்றல் தேவைகளை ஆசிரியர்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது (Forlin, 2014). மாணவர்களது கல்வித்தரத்தை சிறப்பாக மேம்படுத்த கற்பித்தலுக்கான உபகரணங்களும், வளங்களும், நேரமும் காணப்படுவதில்லை (சின்னத்தம்பி, 2004). பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் தொடர்ச்சியான கற்றலில் அதிக அக்கறையின்மையால் வகுப்பறைகளில் பொருத்தமான கற்பித்தல் நுட்பங்களின்றி, ஆசிரியர்களால் சிறப்பான முறையில் கற்பிக்க முடிவதில்லை (Abbas, 2020).

**ஆய்வுப் பின்னணி**

அன்றிலிருந்து மனனம் செய்வதற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியான மாற்றத்திற்கு கொடுப்பது குறைவாகவுள்ளது. 21ம் நூற்றாண்டுக்கான தேர்ச்சிகளைப் பெறும் வகையில் ஆசிரியர்கள் இன்று பல சவால்களை

தாண்டி கற்பிக்க வேண்டியுள்ளது. இச்சூழலில் மாணவர்களுக்குப் பொருத்தமான கற்பித்தல் முறை, பாட உள்ளடக்கம், வகுப்பறை நுட்பங்கள் என்பவற்றிற்கிணங்க, மாணவர்களை மையமாகக் கொண்ட வகுப்பறைகளில் பாரம்பரிய மற்றும் நவீன கற்பித்தலில் புதிய, புதுமைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புத்தாக்கம் படைத்த மாணவர் சமுதாயத்தை எதிர்காலத்தில் உருவாக்கி, கற்பித்தலின் திறனையும், தரத்தையும் மேம்படுத்தும் பின்னணயில் மேற்கொள்ளப்படுகிறது (Damodharan, 2019).

**ஆய்வுப் பிரச்சினை**

அதிக கஷ்டமான பாடசாலைகளை உள்ளடக்கிய வலயமாகமாக கல்குடா காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி, குடும்பச் சூழல், யுத்த பிரதேசம் காரணமாக மாணவர்களது அடைவுகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. 21ம் நூற்றாண்டுக்கான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் வகையில் பாரம்பரிய கற்பித்தல் முறைகளினால் ஆசிரியர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். கற்பதில் ஆர்வமின்மை, தெளிவான விளக்கமின்மை, பழைமையான முறைகள், புதுமையான வழிகாட்டலின்மை காரணமாக தனியாளுமையும், படைப்பாற்றலும் மிக்க சுயசெயற்பாடுகளுடன் கூடிய புதுமைச் சமுதாயம் உருவாக்கப்படவில்லை. மாற்றங்களை உள்வாங்கி ஒவ்வொரு வகுப்பறையும் சமூக மாற்றத்தை நோக்கி பயணிக்கச் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

நவீன கற்பித்தலுக்கும் பாரம்பரிய வகுப்பறைக்கும் உள்ள வேறுபாடு, கற்பித்தல் முறைகளில் உள்ள வேறுபாடு மட்டுமல்ல, புதிய யோசனைகள், பழைய கருத்துகளின் அடிப்படையிலான வேறுபாடாகும். மாணவர்களுக்கான கற்றலை விரைவுபடுத்தவும், 21ம் நூற்றாண்டுக்கான வகுப்பறைச் சவால்களைத் தீர்ப்பதில் ஆசிரியர்களின் திறன்களை வலுப்படுத்தும் வகையிலும், விசேடபயிற்சித் திட்டங்கள், வினைத்திறனான கற்பித்தலை ஊக்குவிக்கும் நெறிமுறைகள் என்பவற்றின் அடிப்படையில் நவீன வகுப்பறைக் புத்தாக்க கற்பித்தல் முறைகளின் செல்வாக்கினை ஆராய்வதும், புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் எதிர்கால ஆய்வுக்கான ஆழமான புரிதலுக்கும் இவ்வாய்வு முக்கியமானதாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

**ஆய்வின் பொது நோக்கம்:**

மட்டக்களப்பு பிரதேச வகுப்பறைகளில் பின்பற்றப்படும் நவீன மற்றும் பாரம்பரிய கற்பித்தல் முறைகளை ஆராய்ந்து, மாற்ற வேண்டிய முறைகளில் புதுமைகளை புகுத்தி 21ம் நூற்றாண்டுக்கான வினைத்திறனான கற்பித்தலை வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் முன்வைத்தல்.

**ஆய்வின் சிறப்பு நோக்கங்கள்:**

1. பாடசாலைகளில் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியை அறிதல்
2. பாடசாலைகளில் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களின் சவால்களை அறிதல்
3. வகுப்பறைக் கற்பித்தலில் பின்பற்றும் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகளை ஆராய்தல்
4. நவீன வகுப்பறைக் கற்பித்தலுக்கான ஆலோசனைகளையும், வழிமுறைகளையும் முன்வைத்தல்.

| கல்குடா வலய மட்ட விபரம் | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | | பாடசாலை வகை | | | | | மொத்தம் | ஆளணியினர் | | |
| | | தேசிய பாடசாலை | 1AB | IC | வகைII | வகைIII | | மாணவர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் |
| 1 | ஏறாவூர்பற்று 2 | - | 03 | 01 | 04 | 15 | 23 | 9466 | 350 | 18 |
| 2 | கோறளைப்பற்று | | | | | | | | | |

**ஆய்வு வினாக்கள்**

1. பாடசாலைகளில் வகுப்பறைக் ஆசிரியர்களின் கல்விப் பின்னணியை அறிவது எவ்வாறு?
2. பாடசாலைகளில் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் யாவை?
3. வகுப்பறைக் கற்பித்தலில் பின்பற்றும் நவீன, பாரம்பரிய கற்பித்தல் முறைகள் எவை?
4. நவீன வகுப்பறைக் கற்பித்தலுக்கான ஆலோசனைகள், வழிமுறைகள் எவை?

**ஆய்வு முறையியல்**

இது ஒரு கலப்பு ஆராய்ச்சி அணுகுமுறையுடன் கூடிய அளவை நிலை ஆய்வாகும்.

**தரவு சேகரிப்பு முறை:**

இந்த ஆய்வில் தரவுகளை சேகரிக்க வினாக்காத்து, நேர்காணல், ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டன. நம்பகமான, தகுதியான திறந்த, நேரடியான வினாக்களைக் கொண்டிருந்தன.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 01 | 02 | 06 | 17 | 16 | 42 | 11771 | 564 | 26 |
| 3 | கோறளைப்பற்று வடக்கு | - | 01 | 03 | 09 | 07 | 20 | 4695 | 270 | 13 |
| **மொத்தம்** | | 01 | 06 | 09 | 30 | 39 | **85** | **25932** | **1184** | **57** |
| | | **85** | | | | | | | | |

அட்டவணை-1: வலய மட்ட அடிப்படையிலான குடித்தொகைப்பரம்பல் - கல்குடா

(மூலம்: வலயக் கல்வி அலுவலகம், திட்டமிடல் பிரிவு, 2023)

| பாடசாலைகள் | வகை | மொத்த ஆசிரியர்கள் | மொத்த மாணவர்கள் | துலங்கியோர் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்கள் | சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் | அதிபர்கள் | மாணவர்கள் |
| A | தேசிய பாடசாலை | 68 | 1046 | 50 | 350 | 01 | 28 |
| B | 1C | 34 | 700 | 24 | 120 | 01 | 10 |
| C | 1AB | 56 | 1100 | 30 | 261 | 01 | 21 |
| D | 1AB | 42 | 850 | 30 | 236 | 01 | 18 |
| E | 1C | 37 | 375 | 16 | 170 | 01 | 13 |
| மொத்தம் | | 237 | **4071** | **150** | **1137** | **05** | **90** |

அட்டவணை-2: மாதிரிக் குடித்தொகை விபரம்

(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2024)

நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளில் 5 அதிபர்களும், இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையில் 150 சிரேஷ்ட இடைநிலை (தரம்10&11) ஆசிரியர்களும், படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியில் பருமன் 13:1 என்பதற்கிணங்க 90 மாணவர்களும், தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களில் 3:1 என்ற அடிப்படையில் 30 பெற்றோர்களும் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப் பகுப்பாய்வு:**

பெறப்பட்ட தரவுகள் அளவுசார், பண்புசார் முறையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு Microsoft Exel - 2017 முறையினைப் பயன்படுத்தி சலாகை, வட்ட வரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு வியாக்கியானமும், கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.




உரு-2: பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்விப் பின்னணி

**பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**




உரு-3: வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சிகள்

அனைவரும் “இல்லை” என துலங்கியதன் படி ஆசிரியர்களுக்கு போதுமான பயிற்சியில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது




உரு-4: இன்படி அதிகமான ஆசிரியர்களால் செயற்பாட்டுப் பயிற்சி70% நினைவூட்டல் வார்த்தைகள் 70%, பல்லூடகப் பயன்பாடு60%, தொழிநுட்பம்60%, நகைச்சுவை60% என்பன வகுப்பறைக் கற்பித்தலில் அதிகமான ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்றது. எனினும், A to Z அணுகுமுறை, மனவரைபடம், காட்சிக்கற்பித்தல், படைப்பாக்கல் நிகழ்ச்சிகள் குறைவாக இடம்பெறுகின்றன




உரு-4: இன்படி அதிகமானோர் கற்பித்தல் முறைகளில் புதுமையான முறைகளை ஏற்றுக் கொள்கின்றனர்.

அட்டவணை-3: நவீன கற்பித்தலில் ICT, புதிய டிஜிட்டல் அறிவை வகுப்பறைகளில் பிரயோகிப்பது தொடர்பாக ஆசிரியர்களது திருத்தமான துலங்கல்

| | வலுவாக ஏற்றுக்கொள்கிறேன் | ஏற்றுக்கொள்கிறேன் | கூறமுடியாதுள்ளது | ஏற்றுக்கொள்ளவில்லை | வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | 5 | 4 | 3 | 2 | 1 |
| துலங்கல்கள் | 32 | 78 | 20 | 18 | 02 |
| | 160 | 312 | 60 | 36 | 02 |

மொத்தம்:570 பெறுபேறு: 570/160= **3.56**

இதன்படி, இணைபுக்குணகம்(3.56) 'ஏற்றுக்கொள்கிறேன்' என்பதைச் சுட்டுகிறது. ஆகவே ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் முறைகளில் புதிய நுட்ப முறைகளை பயன்படுத்துவதில் உடன்பாடு கொண்டுள்ளனர்.

| | |
|---|---|
| **1.00 – 1.8** | வலுவாக ஏற்றுக்கொள்ளவில்லை |
| **1.81 – 2.6** | ஏற்றுக்கொள்ளவில்லை |
| **2.61 – 3.4** | கூறமுடியாதுள்ளது |
| **3.41 – 4.2** | ஏற்றுக்கொள்கிறேன் |
| **4.21 – 5.0** | வலுவாக ஏற்றுக்கொள்கிறேன் |

அட்டவணை-4: பாடசாலையில் புதுமையான செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பில் ஆசிரியர்களது துலங்கல் (சராசரி மதிப்பீடு)

| பாடசாலையில் ஆசிரியரது துலங்கல் | இணைபுக் குணகம் |
|---|---|
| வகுப்பறையில் மாணவர்களது சுயசெயற்பாடுகள், படைப்பாற்றல், கண்டுபிடிப்புக்கள் எவ்வாறுள்ளது? | 3.31 |
| மாணவர்கள் வகுப்பறைகளில் புதுமைக் கற்பித்தலுக்கு வழங்கும் ஒத்துழைப்பு | 3.53 |
| பாடசாலை தொழில்முறை மேம்பாட்டுத் திட்டத்தில் தொழில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டவரா? | 3.43 |
| நீங்கள் புதுமையான கற்றல் தொழிநுட்பம் (ICT, Digital, online) வகுப்பறையில் பயன்பாட்டிலுள்ளதா? | 3.56 |
| கற்பித்தலில் சுறுசுறுப்பான செயற்பாடு, கருத்தரங்கு, செய்துகாட்டல், பரிசோதனை முறைகள் உள்ளதா? | 3.51 |
| பாடசாலையில் நவீன கற்பித்தலில் கல்விக்கான செயற்பாடுகள், கண்காணிப்புக்கள், மதிப்பீடுகள் | 3.56 |
| நவீன கற்பித்தல் நடைமுறையில் அதிபர்கள், ஏனைய பாட ஆசிரியர்களின் ஆதரவு | 3.30 |
| மாணவர்களது டிஜிட்டல், கற்பித்தல் மதிப்பீட்டில் பன்முகத்தன்மை, விழிப்புணர்வு, ஆதரவு சேவையளவு | 3.50 |
| மாணவர்களது புள்ளிப் பகுப்பாய்வு, மதிப்பீடு, பரிகார கற்பித்தல், சிகிச்சைமுறை, கற்பித்தலில் சாதனங்கள், பயிற்சி, மேம்பாட்டுத்திட்டங்கள் ஆகியவற்றில் புதுமைகள் உண்டா? | 3.56 |




உரு-5: புதுமையான கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்

பாடசாலை A இல் புதுமைச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருந்தன. பாடசாலை C மற்றும் D இல் சமமான குறிகாட்டிகள் உள்ளன. ஆனால் பாடசாலை E இல் மிகவும் குறைவான செயற்பாடுகளை காண முடிந்தது.

**முடிவுகள்**

- கல்குடா வலயத்தின் சிரேஷ்ட இடைநிலை ஆசிரியர்களின் கல்விப் பின்னணியில் அதிகமான ஆசிரியர்கள்(34.30%) டிப்ளோமாதாரிகளாவர். முதுநிலைப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள் மிகக்குறைவு (1.11%).
- பெரும்பாலான ஆசிரியர்களுக்கு "போதியறிவின்மை" காரணமாக புதுமையான கற்பித்தல் முறையை பயன்படுத்துவதில்லை. (அதிபர்கள்40%, ஆசிரியர்கள்60%, பெற்றோர்கள்35%).
- இதன்படி அதிகமான ஆசிரியர்களால் செயற்பாட்டுப் பயிற்சி70%, நினைவூட்டல் வார்த்தைகள் 70%, பல்லூடகப் பயன்பாடு(60%), தொழிநுட்பம்(60%), நகைச்சுவை(60%) என்பன வகுப்பறைக் கற்பித்தலில் அதிகமான ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்றது.
- A to Z அணுகுமுறை, மனவரைபடம், காட்சிக்கற்பித்தல், படைப்பாக்கல் நிகழ்ச்சிகள், கருத்தரங்கு, வேலைத்திட்டம் கற்பித்தல் முறைகளில் இடம்பெறுவது மிகக்குறைவு.
- தேசிய பாடசாலைகளில் வகுப்பறைக் கற்பித்தலில் புதுமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.
- அதிகமானோர் வகுப்பறைக் கற்பித்தலில் புதுமைகளை விரும்புகின்றனர்.

- வகுப்பறை நடைமுறையில் புதுமையான கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்வதில் ICT இன் பங்களிப்பு அதிகமாகும்.
- ஆசிரியர்களின் திறன்கள், மதிப்பீடு, கணிப்பீடு முதலானவை கல்குடா வலயத்தில் ஓரளவு சிறப்பாக உள்ளது.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுமையான கற்பித்தலின் நடைமுறைகளில் வலயவாரியாக மாறுபாடுகள் உள்ளன.
- புதுமைப்படுத்தலின் தர குறிகாட்டிகளான தொழிநுட்பம், மனவரைபடம், பல்லூடகம், நகைச்சுவை, நினைவூட்டல் வார்த்தைகள், செயற்பாட்டுப் பயிற்சி, காட்சி மற்றும் விளையாட்டுக் கற்பித்தல், A To Z அணுகுமுறை போன்றவை வகுப்பறைகளில் ஓரளவு பயன்படுத்தப்படுகின்றன.

**விதந்துரைப்புகள்**

- புதுமைப்படுத்தல் முறையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளாக ஊடாடும் கற்பித்தல் சூழல், சுறுசுறுப்பான கற்றல் அனுபவம், மாணவர்களுக்கு ஆதரவு சேவை, கல்வியில் புதுமை மதிப்பீடு, கல்வி பன்முகத்தன்மை, கற்றல்-கற்பித்தல் உள்ளடக்க மாற்றம், பாடத்திட்டம் மற்றும் கற்பித்தல் வடிவமைப்பு, பயிற்சி மேம்பாட்டுத்திட்டம், புதுமைக் கற்றல் தொழிநுட்பம் என்பன துரிதப்படுத்தப்பட வேண்டும்.
- கொவிட்-19 இன் வருகையானது ஒட்டுமொத்த கல்வியுலகில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது. புதுமையான கற்பித்தல் முறைகளை பயன்படுத்தும் வகையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்.
- பொதுவாக ஒவ்வொரு ஆசிரியர்களும் மாணவர்களுக்கு ICT இன் முக்கியத்துவம், நன்மை, தீமை பற்றிய விழிப்புணர்வுகளை வழங்க பாடசாலை மட்ட குழுக்களை உருவாக்கலாம்.
- கல்வியில் புதுமைகளை மதிப்பீடு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. அதற்கான உள்ளகக் மேற்பார்வை, சிறப்புக் குழுக்கள், செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகள் என்பன மாகாண, வலய ரீதியாக வலுப்பெற வேண்டும்.
- புதுமையான கற்றல் தொழிநுட்பத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரிய துணைக்குழுக்களை உருவாக்கி செயற்படுத்தலாம்: Digital & Online, கணினி ஆய்வுகூடங்கள், வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், NVQ 6,7,8 வகுப்புக்கள், உயர்கல்வி நிறுவன பயிற்சி, பல்கலைக்கழக பயிற்சித்திட்டங்கள், மாணவர் முனைவர் பட்டம், கண்டுபிடிப்பாளருக்கான பயிற்சி என்பன முக்கியமானவை.
- கலப்பு வகுப்பறைகளை உருவாக்க அதிக தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தல். கல்வியில் புதுமை என்பது பிரச்சினையைக் கண்டறிதல் மற்றும் தீர்த்தல், விமர்சனச் சிந்தனை, கலப்பினக் கற்றல், Flipped & smart classroom, Project – Based Learning( PBL), Blended Learning, Educational Technology ( EdTeach), Breakout rooms, Real time Polling, Quizzing என்பன இடம்பெற வேண்டும்.

- கற்பித்தலுக்கான குறிப்பிட்ட கருவிகள், வசதிகளைக் கொண்ட மெய்நிகர் பாடசாலையை மேம்படுத்த வேண்டும். ஒவ்வொரு பாடசாலையும் பின்னூட்டல் மதிப்பீட்டுக் கருவிகளை பயன்படுத்த வேண்டும். வீடியோத் திட்டங்கள் மூலம் மாணவர்களது படைப்பாற்றல், கண்டுபிடிப்பாற்றல், சுயசெயற்பாடு என்பன ஊக்குவிக்க வேண்டும்.
- ICT புதுமைப்படுத்தல் குறிகாட்டிகளையும் பாடசாலைகளில் உருவாக்க வேண்டும். மாகாண, வலய ரீதியாக இடம்பெறும் செயற்திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும். புதுமை தொடர்பாக பெற்றோருக்கான விழிப்புணர்வு, TSEP, SBPTD, EPSI, GEMP ஆகியவற்றின் மூலமாக ஆசிரியர்களும், பெற்றோரும் பாடசாலையில் மதிப்புமிக்க வளங்களாக பாடசாலைகளில் சிறந்த பயிற்சித் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**


சின்னத்தம்பி மா.(2004). *ஆசிரியர்களின் நவீன கற்பித்தலுக்கான புதிய தடங்கள்*, கொழும்பு: வின்சு பப்ளிகேசன்.

அருள்மொழி, செ.(2017). *கல்வியில் அளவீடும் மதிப்பீடும்.* மட்டக்களப்பு: துர்க்கா பிரிண்டர்ஸ்.

கருணாநிதி, மா. (2008).*கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்.* கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

Abbas, K. D. A. (2021). Factors influencing students reading comprehension difficulties amidst the use of modular distance learning approach in Mindanao State University Sulu - Senior High School. *Open Access Indonesia Journal of Social Sciences*, 4(6), 447.

Forlin, C.(2004). Promoting inclusivity in Western Australian school, *International Journal of Inclusive Education*, 8,183-200

Salomi,D.(2018) Includive-causes, problems&solutions, *International journal of management technology and engineering*, 8(2249-7455).

Sadavel, K., Joseph, J.G., Ragam, P., & Narayan, V.L. (2017). Innovation in Classroom Teaching and Learning. *International Journal of Recent Innovation in Engineering and Research*,2(6),33-35.

Barrado, J.N. (2016). *Innovative Methods to improve the Learning.* Norwegian University of Science and Technology. Retrieved from https://brage.bibsys.no/xmlui/bitstream/handle/

Damodharan, V. (2019). Innovative Methods of Teaching. Retrieved May 09, 2019 from https://www.math.arizona.edu/~atpmena/conference/proceedings/Damodharan_Innovative


**LIST OF ABBREVIATION:**

ICT- Information and Communication Technology

# பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

### (மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

Mrs. Shiyani Thevaruban
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*shiyanishiya93@gmail.com*

Mrs.Thakshaayini Rajandran
Department of Education & Child Care,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*thakshaayinir@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

“பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்” எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்த ஆய்வு ஓர் அளவை நிலை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தற்காலச் சூழலில் மாணவர்கள் வாசிப்பில் ஆர்வம் காட்டாதவர்களாகவும், நூலகங்களை தமது சுயகற்றலுக்குப் பயன்படுத்தாதவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இதனால் மாணவர்கள் தமது சுயகற்றலுக்கு பாடசாலை நூலகங்களைப் பயன்படுத்துவதும் குறைவாகவே காணப்படுகின்றது. இதன்படி இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மேற்கு வலயத்தின் மண்முனை தென் மேற்கு கோட்டத்தில் உள்ள 05 பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ் ஆய்விற்கான ஆய்வு மாதிரிகளாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நூலகப் பொறுப்பாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர்கள் அனைவரும் பாடசாலை தெரிவு செய்யப்பட்டமைக்கு அமைவாக ஆய்வுக்குட்படுவதுடன், 50 ஆசிரியர்களும், 105 மாணவர்களும் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையிலும், நூலகப் பொறுப்பாளர்கள் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்கான தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணச்சான்றுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளின் ஊடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுவதுடன், பகுப்பாய்வின் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முடிவுகளின் பிரகாரம் பாடசாலையில் நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுவதற்கு போதுமானளவு பௌதிக வளம், மனிதவளம் ஆகியன இல்லாத நிலையும், இதனால் மாணவர்கள் தாமாக நூலகத்தை பயனபடுத்துவதில் காட்டும் அலட்சியப்போக்கு காரணமாகச் சுயகற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றமை முதலிய பல பிரச்சினைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பாடசாலை நூலகத்தை வினைத்திறனாக்குவதன் மூலம் மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *அளவைநிலை ஆய்வு, ஆய்வு மாதிரிகள், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் சுயகற்றல், பாடசாலை நூலகங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

நூல்நிலையம் எனும் போது அங்கே நூல்கள், சஞ்சிகைகள், தினசரிகள், கையெழுத்துப்படிகள், சுவடிகள் என்பன முறையாகச் சேகரிக்கப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டு, காட்சிக்கு விடப்பட்டு, நுகரப்பட்டு அறிவுக்களஞ்சியங்களாக அறிவு பகர்வனவாகக் காணப்படுகின்றன. இந்த நூலகங்கள் முறைசார்ந்த கல்வியின் வளர்ச்சியில் இணைந்து அறிவை வளர்க்கும் அறிவுச் சாகரங்களாகச் செயல்படுகின்றன. அறிவை எழுத்து வடிவில் தேக்கி வைத்துப் பிறருக்குப் பயன்படக்கூடிய விதத்தில் கையளிப்பதே நூலகத்தின் செயற்பாடாகும்.

இன்றைய நூலகங்கள் பொதுவாகத் தகவல் மையங்களாகவே செயற்படுகின்றன. தகவல் தொடர்பாடல் பல்வேறு நுட்பங்களை உள்வாங்கிக் கொண்டு தகவல் தேவைப்படும் நபருக்குத் தேவையான சரியான தகவலை சரியான நேரத்தில் வழங்க வேண்டிய அல்லது தகவலாளியை ஆற்றுப்படுத்தவேண்டிய முக்கியமான பணியில் ஈடுபட்டுள்ளன. அச்சிட்ட ஆவணங்கள் மாத்திரமின்றி அச்சிடப்படாத நூலுருவில் பெறாத சாதனங்களும் இன்றைய நூலகங்களை ஆக்கிரமித்துள்ளன. மனிதனின் அறிவுத்தேடலின் விளைவுகளே நூலகங்கள் பெறுமதிமிக்க நூல்களைத் தேடிச்சேகரித்துப் பாதுகாத்து வைக்கும் இடங்களே நூலகங்கள் ஆகும்.

இன்றைய உலக நாடுகளிலுள்ள அனைத்து பாடசாலை நூலகங்களின் அடிப்படை நோக்கம் மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சியில் நூலகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு நூலகப் பயன்பாட்டினை விளக்குவதும் அவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை தூண்டுவதுமேயாகும்.

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் வாசிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மாணவர்களின் கல்வி அறிவு விருத்தி செய்யப்படுவதற்கும், எல்லாப் பாடங்களையும் விளங்கிக் கற்பதற்கும், ஓய்வு நேரத்தைப் பயனுடையதாக செலவிடுவதற்கும், படைப்பாற்றலை வளர்ப்பதற்கும் வாசிப்புச் செயற்பாடானது நூலகத்தின் மூலம் வளர்த்தெடுக்கப்படக் கூடியதொன்றாகும். எனவே முன்பள்ளியிலிருந்து நூலகப் பயன்பாட்டினை முக்கியத்துவமுடையதாக அனைவரும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்துவது அரிதாகிக்கொண்டு வருகின்றது. இதனால் கல்வியில் பின்னடைவு காணப்படுவதனை ஆய்வாளனால் அறிய முடிகின்றது. கிராமப்புற பாடசாலைகளில் இதன் தாக்கம் சற்று அதிகமாகும்.

இன்றைய பாடசாலைகளில் நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் பயனடைகின்ற அனைத்து தரப்பினரும் இடர்பாட்டுக்குள்ளாகின்றனர். ஏறாவூர் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படுகின்ற நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் தொடர்பாகவும் இதனை பயன்படுத்துகின்ற சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாகவும் இவ்வாய்வு ஆராய்கின்றது. எனவேதான் இவ் ஆய்வுக்காக **“பாடசாலை நூலகங்களின் செயற்பாடுகள் சிரேஷ்ட**

**இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்** ” எனும் தலைப்பு ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாடசாலையிலே நூலகங்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. நூலகங்கள் வினைத்திறனாக செயற்படுகின்றபோது மாணவர்கள் மாத்திரமின்றி ஆசிரியர்கள், அதிபர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் நூலகங்களினால் சிறந்த பயனைப் பெறுவர். மண்முனை தென் மேற்கு கோட்டப் பாடசாலைகளில் நூலகங்கள் வினைத்திறனற்று செயற்படுகின்ற நிலையே தற்போது காணப்படுகின்ற நிலைமை ஆகும். பாடசாலையில் நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்கள் நூலகங்களை பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளதுடன் அவர்களது சுயகற்றல் செயற்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் தற்போது நூலகங்களைப் பயன்படுத்துவது அரிதாகிக் கொண்டு வருகிறது. இவர்களுக்கு ஒரு வாரத்தில் ஒரு பாடவேளை நூலகப் பாடமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பாடவேளையில் நூலகத்திற்கு செல்வதனைத் தவிர்க்கின்றனர். அத்துடன் இந் நூலகப் பாடத்தை வேறு பாட ஆசிரியர்கள் தங்களது பாடவிடயங்களுக்காக மாணவர்களைப் பயன்படுத்துகின்றனர். மாணவர்களும் நூலகத்தைப் பயன்படுத்துவதில்லை. ஆசிரியர்களும் பயன்படுத்துவதில்லை. நூலக அமைப்பு பாடசாலையில் காணப்பட்ட போதும் நூலகப் பயன்பாட்டிற்கு முக்கியத்தவம் அளிக்கப்படவில்லை. அதாவது நூலகச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெறவில்லை. பாடசாலை நூலகத்தை ஆசிரியர் ஒருவர் செயற்படுத்தல், நூலகராக செயற்படும் ஆசிரியருக்கு போதிய பயிற்சி இன்மை, ஆசிரியர்கள் வரவின்மையால் நூலகங்கள் மூடப்படல், மாணவர்கள் கற்கும் பாடங்களுக்கான சிறந்த நூல்கள் போதியளவின்மை போன்ற காரணங்களினாலும் பாடசாலை நூலகங்கள் வினைத்திறனற்று செயற்படுகின்ற விதத்தை பாடசாலைகளில் காணக்கூடியதாக உள்ளது.

மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கமின்மை, நூலகப் பயன்பாடு பற்றிய போதிய அறிவின்மை நூலக பயன்பாட்டினைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகள் இன்மை வளப்பற்றாக்குறை, நிதிநெருக்கடி, புத்தாக்க முயற்சிகள் இன்மை, பிரத்தியேக இடவசதி இன்மை, நூலக சார் முரண்பாடுகள், பராமரிப்பு இன்மை போன்றனவும் பாடசாலை நூலகங்கள் செயற்படாமைக்கு காரணமாக உள்ளதனை அறிய முடிகிறது.

இவ்வாறான பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சனைக்கூற்று**

பாடசாலைகளில் காணப்படுகின்ற நூலகங்கள், நூலகம்சார் வினைத்திறனற்ற செயற்பாடுகள் பாடசாலையில் கல்வி பயில்கின்ற சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்:**

பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கான காரணங்களையும் இந் நூலகங்களினை பயன்படுத்துவதில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவர்களது சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் கண்டறிந்து சீர் செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

**சிறப்பு நோக்கங்கள்:**

1. பாடசாலைகளின் நூலகங்களின் வினைத்திறனைக் கண்டறிதல்.
2. பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை இனங்காணல்.
3. மாணவர்களின் சுயகற்றலிற்கும் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள் யாவை?
2. பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் யாவை?
3. மாணவர்களின் சுயகற்றலுக்கும் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

Gulcincribb & Hoit, (2012) ஆகியோா் மாணவர்களின் ஈடுபாடும் நூலகப் பயன்பாடும் என்ற ஆய்வில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்கள் அங்கு காணப்படும் நூலகத்தை பயன்படுத்துகையில் நூலக வசதி கொண்ட நூலக வசதி கொண்டிராத பாடசாலைகளிலிருந்து வந்தவர்கள் என்பதை அறியக்கூடியதாகவும், 2009ல் துருக்கியில் 72 சதவீதமான பாடசாலைகளில் நூலகங்கள் காணப்படவில்லை என்பதாகவும், மாணவர்கள் முதலில் நூலக கலாச்சாரத்தின் எண்ணக்கருவை அறிந்து, புரிந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் 87 சதவீதமான மாணவர்களின் கூற்றுப்படி உயர்தரப் பாடசாலைகளில் நூலகங்கள் காணப்படினும் தகவல்கள் அறிவைப் பெறுவதற்கான திருப்திகரமான நிலையில் அவைகள் காணப்படவில்லை என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாய்வானது திட்டமிடப்பட்ட கலைத்திட்டங்களோ, அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளோ காணப்படினும் மாணவ ஈடுபாடும், கற்றலுக்கான தூண்டுதல்களும் தான் மாணவர்களின் அனுபவ வாழ்க்கைக்கு தூண்டுகோலாக அமையும். நூலகங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள், நூலகர்கள், நூலகங்கள் ஆகியவற்றின் எண்ணக்கருக்கள் மாணவர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான நூலக விழிப்புணர்வுகள், அவர்களுடைய தேர்ச்சிகள் என்பவற்றில் தாக்கத்தை

செலுத்தின. மாணவர்களின் ஈடுபாட்டையும், கற்றல் சம்மந்தமான விளைவுகளையும் உருவாக்குகின்றன என்ற முடிவுகளைத் தருகின்றன.

ஜெயமலர், 2012. சிரேஷ்ட இடைநிலை மட்ட மாணவர்களுக்கு இடையேயான நெறிப்பிறழ்வு செயற்பாடுகள் ஓர் ஆய்வு கல்வியல் கலாநிதி யாழ் பல்கலைக்கழகம். இவ் ஆய்வின் முடிவாக இவர் கூறும் போது மாவர்களில் பெரும்பாலான 69 சதவவீதத்திற்கும் குறைந்த அளவிலேயே தினசரிப் பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

Coker, (2015) என்பவர் வோஸிங்டன் மாநில பொது பாடசாலைகளின் தராதப் பத்திரமுள்ள ஆசிரியர்கள், நூலகர்கள், நூலகப் பண்பு மற்றும் மாணவர் அடைவு மட்டம் என்ற ஆய்வில் மாணவர்கள், ஒரு தராதரப்பத்திரமுள்ள ஆசிரிய நூலகர்கள் உள்ள பாடசலைகளில் தொழினுட்பத் துறையில் நன்மையடைகிறார்கள். அத்துடன் நூலக சலுகைகளும், தகவல்களும், அறிவு, திறன்கள், அறிவுறுத்தல்களும் சார்பாக நன்மை அடைந்தார்கள்

டிலானி, (2014) அவர்கள் மன்னார் கல்விக் கோட்ட வகை 1c பாடசாலைகளிலுள்ள இடைநிலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்ற ஆய்வில் வாசிப்பு தொடர்பான பின்தங்கிய போக்கினால் வாசிப்பு, கட்டுரை போட்டிகளில் பங்குபற்றல், குறைவாகவே உள்ளது என்றும், சுயமமாக வாசிக்க ஆர்வமுடையவராக இடைநிலை மாணவர்கள் காணப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

கிபாயா, (2016) என்பவர் வாசிப்புத்திறனை விருத்தி செய்தல் என்ற ஆய்வானது கல்முனை கல்வி வலயத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் தரம் 7 மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் மாணவர்களின் வாசிப்புத்திறன் கற்றலில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். ஆரம்பக் கல்வியில் பின்னடைவு, குடும்பச் சூழல் மாணவர்களின் வாசிப்பில் பின்னடைவை காட்டுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

Schultz et al, (2015) ஆகியோர் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடும் மாணவர்களின் மனப்பாங்கும் என்ற ஆய்வில் பாடசாலை நூலகங்கள் பாடசாலை சமூகத்திடையே மிகவும் இன்றியமையாத கற்றல் தேவையாக இருக்கிறது. இது மாணவர்களுக்கு மட்டுமின்றி எல்லா கற்பவர்களுக்கும் இது மிகவும் முக்கியமானதாகும். பாடசாலைகளில் நூலகங்கள் மாணவர்களுக்கு இந்த உலகின் நாளுக்கு நாள் நிகழும் மாற்றங்களையும், புதிய விடயங்களையும் அறிந்து கொள்ளத் தேவையான அடிப்படைகளை வழங்குகிறது.

## ஆய்வு முறையியல்

ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடைமுறையின் சாத்தியப்பாட்டினையும், உண்மைத் தன்மையையும் எடுத்துரைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வத்தியாயம் ஆய்விற்கான அறிமுகத்துடன் தொடங்கி, ஆய்வு நோக்கம், ஆய்வு வினாக்கள், ஆய்வின் அணுகுமுறையும் ஒழுங்கமைப்பும், ஆய்வுப்பிரதேசம், ஆய்வின் குடித்தொகை, மாதிரித் தெரிவு நுட்பங்களும் முறையும், மாதிரித் தெரிவுக்கான நியாயங்கள், ஆய்வுக் கருவிகளும் தரவு சேகரித்தலும், ஆய்வுக் கருவிகளும் அளவீட்டு

முறையும், ஆய்வுக் கருவிகளின் அமைப்பாக்கல், ஆய்வுக் கருவிகளை முன்னாய்வு செய்தல், நம்பகமும் தகுதியும், தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும், என்ற அடிப்படையில் ஆய்வுத் தலைப்பானது ஆழமாகவும், தெளிவாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் என்னும் தலைப்பிலமைந்த ஆய்வானது முன்னெடுக்கப்படுகின்றது.

மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதோடு அதிபரிடம் நேர்முகம் காணலின் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும் அவதானம் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு இவை முப்பரிமாண படங்கள், சலாகை வரைபுகள், அட்டவணையாக்கம் மூலம் காட்டப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டதுடன் கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.

**மாதிரித் தெரிவு**

மண்முனை தென் மேற்கு கோட்டத்தில் மொத்தமாக **21** பாடசாலைகள் காணப்படுகின்றன. 1AB , 1C, Type II, Type III என இவை அமைந்துள்ளன. இதில் **மூன்று** 1AB பாடசாலைகளாகவும் , **மூன்று** 1C பாடசாலையாகவும் , **ஆறு** Type II பாடசாலைகளாகவும் , **ஒன்பது** Type III பாடசாலைகளாகவும் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டு தேசிய பாடசாலைகளும் உள்ளடங்குவதும் விசேட அம்சமாகும்.

ஆய்விற்கான நோக்கத்தினைக் கருத்திற் கொண்டு இங்கு உள்ள 18 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும் நோக்க மாதிரியில் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 1AB, 1C மற்றும் Type II பாடசாலை வகைகளும் உள்ளடங்குகின்றன. இவற்றில் கல்வி கற்கும் க.பொ.சாதாரண தரம்(10,11) மற்றும் க.பொ.உயர் தரம் (12,13) மாணவர்கள் 1575 பேரில் 105 பேர் 15:1 என்னும் விகிதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறே 3:1 விகிதத்தில் 145 ஆசிரியர்களில் 50 ஆசிரியர்களும், 7 நூலகப் பொறுப்பாளர்களில் 5 நூலகப் பொறுப்பாளர்களும், 5 அதிபர்களும் என மொத்தமாக 165 பேர் இலகு எளிய எழுமாற்று மாதிரியெடுப்பின் மூலம் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1 மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம்.**

| பாடசாலையின் பெயர் | வகை | மாணவர் எண்ணிக்கை | மாதிரித் தெரிவு | ஆசிரியர் எண்ணிக்கை | மாதிரி தெரிவு | நூலகப் பொறுப்பாளர் எண்ணிக்கை | மாதிரி தெரிவு | அதிபர் மாதிரி தெரிவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 1AB | 495 | 33 | 47 | 15 | 02 | 01 | 01 |
| B | 1AB | 398 | 27 | 38 | 13 | 02 | 01 | 01 |
| C | 1AB | 257 | 17 | 22 | 8 | 01 | 01 | 01 |
| D | 1C | 237 | 16 | 19 | 7 | 01 | 01 | 01 |
| E | Type II | 188 | 12 | 19 | 7 | 01 | 01 | 01 |
| மொத்தம் | 05 | 1575 | 105 | 145 | 50 | 07 | 05 | 05 |

**மூலம் : ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

**தரவுப்பகுப்பாய்வு**

***பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகள்***

மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலை நூலகங்களின் வினைத்திறன் செயற்பாடுகளை அறியும் முகமாக மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் பௌதீக வளம், மனித வளம், சுயகற்றல், நூலகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் மேலும் நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்து சூழல் தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

**பௌதிக வளம்**

உமது பாடசாலையில் நூலகம் செயற்படுகின்றதா? எனும் வினா வினவப்பட்ட போது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1 பாடசாலை நூலகம் செயற்படுதல் பற்றிய விபரம்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | விடையளித்தோர் சதவீதம் |
|---|---|---|
| ஆம் | 18 | 17.14 |
| ஓரளவு | 75 | 71.42 |
| இல்லை | 12 | 11.42 |
| மொத்தம் | 105 | 100.00 |

ஓரளவு, இல்லையெனில் எவ்வாறு நூலகம் செயற்படுகின்றது? எனும் திறந்த வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.2 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2 நூலகம் செயற்படுதல் பற்றிய விபரம்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| பெயரளவில் நூலகம் செயற்படுகின்றது | 29 | 33.33 |
| ஒரு சில மாணவர்கள் மட்டும் பயன்படுத்துதல் | 05 | 05.74 |
| தொகுதிப்பாடம் நடைபெறும் இடம் | 27 | 31.03 |
| போதியளவு தளபாடங்கள் இல்லை | 19 | 21.83 |
| நூலகப்பாடம் தவிர்ந்த நேரம் அனுமதியில்லை | 07 | 08.04 |
| மொத்தம் | 87 | 100.00 |

நூலகம் எக்கட்டிடத்தில் இயங்குகின்றது? எனும் வினா வினவப்பட்டபோது அதற்கு நூலகப் பொறுப்பாளர்கள் அளித்த விடைகள் பின்வரும் உரு 4.1 இல் காட்டப்பட்டுள்ளன.




**உரு 4.1 நூலகம் இயங்குதல்**

இங்கே தனியான கட்டிடத்தில் நூலகம் இயங்குதல் பற்றி 40 சதவீதமானவர்களும், வகுப்பறையில் நூலகம் இயங்குதல் பற்றி 60 சதவீதமானவர்களும் விடையளித்துள்ளனர்.

நூலகம் செயற்படுவதற்கு போதுமானளவு பௌதீகவளம் காணப்படுதல் பற்றி ஆம் என்று 20 சதவீதமானவர்களும், ஓரளவு என்று 40 சதவீதமானவர்களும், இல்லை என்று 40 சதவீதமானவர்களும் விடையளித்துள்ளனர்.

எனவே பாடசாலை நூலகம் செயற்படுவதற்குத் தேவையான பௌதீக வளம் தொடர்பாக ஆராய்கையில் போதுமானளவு பௌதீக வளங்கள் காணப்படாத நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 5 பாடசாலைகளில் 4 பாடசாலைகள் இன்னும் பௌதீகவளம் தொடர்பாக முன்னேற்றம் காணமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. மீதி ஒரு பாடசாலையில் பௌதீகவளம் போதுமானதாக இருக்கிறது. இருப்பினும் 5 பாடசாலை நூலகங்களும் அமைந்துள்ள இடம் பொருத்தமானதாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

பாடசாலை நூலகம் செயற்படுவதற்கான மனிதவளம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்து ஒரு மூடிய வினாவும் இரண்டு திறந்த வினாக்களும் வினவப்பட்டன. அதற்காக அவர்கள் வழங்கிய விடைகள் கீழே தரப்படுகின்றன.

நூலகத்தை செயற்படுத்துபவர் யார்? எனும் வினா வினவப்பட்டபோது அதற்கு நூலக சேவையாளர் / நூலகப் பொறுப்பாசிரியர் / ஆசிரியர் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.3 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3 நூலகத்தை செயற்படுத்துபவர் பற்றிய விபரம்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| நூலக சேவையாளர் | 08 | 14.54 |
| நூலகப் பொறுப்பாசிரியர் | 09 | 16.36 |
| ஆசிரியர் | 38 | 69.09 |
| மொத்தம் | 55 | 100 |

***சுயகற்றல்***

பாடசாலை நூலகத்தை சுயகற்றலுக்காக பயனபடுத்தும் மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக மாணவர்களிடமிருந்து வினாக்களும் வினவப்பட்டன. அதற்காக அவர்கள் வழங்கிய விடைகள் கீழே தரப்படுகின்றன.

**நூலகப்பாடவேளை ஆசிரியர்கள் மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று வாசிப்பதற்கு ஊக்கப்படுத்தல் பற்றிய விபரம்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | விடையளித்தோர் சதவீதம் |
|---|---|---|
| ஆம் | 38 | 36.19 |
| ஓரளவு | 35 | 33.33 |
| இல்லை | 32 | 30.47 |
| மொத்தம் | 105 | 100.00 |

இல் மாணவர்களிடம் நீங்கள் நூலகத்தில் தினசரிப் பத்திரிகைகளை வாசிப்பது தொடர்பான வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் உரு 4.2 இல் காட்டப்பட்டுள்ளன.




**உரு 4.2 மாணவர்கள் நூலகத்தில் தினசரிப் பத்திரிகை வாசித்தல்**

மாணவர்களிடம் நீங்கள் உமது தேடலுக்காக நூலகத்தைப் பயன்படுத்துகின்றிர்களா எனும் வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் அட்டவணை 4.4 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4 மாணவர்கள் நூலகத்தை தமது தேடலுக்காக பயன்படுத்துதல் பற்றிய விபரம்**

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | விடையளித்தோர் சதவீதம் |
|---|---|---|
| அதிகம் | 48 | 45.71 |
| குறைவு | 57 | 54.28 |
| மொத்தம் | 105 | 100 |

குறைவெனில் அதற்கான காரணமாக நீங்கள் குறிப்பிடுவது? எனும் திறந்த வினா வினவப்பட்டபோது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகளின் படி இங்கு மாணவர்கள் நூலகத்தை தமது தேடலுக்காக பயன்படுத்துதல் குறைவு என்பதற்கான காரணம் பற்றிய வினவப்பட்ட போது அதற்கு சமகால நூல்கள் இல்லை என 43.85 சதவீதமான மாணவர்களும், நூல்களை இரவலாக பெற்றுக்கொள்ள முடியாமை என 26.31 சதவீதமான மாணவர்களும், போதியளவு குறிப்புக்களை ஆசிரியர் தருகின்றார் என 12.28 சதவீதமான மாணவர்களும், வாசிப்பில் ஆர்வமின்மை என 17.54 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர்.

***நூலகச் செயற்பாடுகள்***

பாடசாலை நூலகம் செயற்படுவதற்கான நூலகச் செயற்பாடுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக மாணவர்களிடமிருந்து வினவப்பட்டன. அதற்காக அவர்கள் வழங்கிய விடைகள் கீழே தரப்படுகின்றன.

இங்கே நூலகம் தொடர்ச்சியாக செயற்படாமைக்கான காரணம் பற்றி மாணவர்களிடம் வினவப்பட்ட போது அதற்கு, நூலகப்பாட ஆசிரியரது பாடத்தை கற்பித்த பின் நூலகத்தை செயற்படுத்தல் என 46.65 சதவீதமான மாணவர்களும், ஆசிரியர்கள் நூலகத்தில் இருப்பதனால் இட வசதியின்மை என 26.15 சதவீதமான மாணவர்களும், வேறு ஆசிரியர்கள் வராவிடின் அவ்வகுப்பை நூலகப் பொறுப்பாசிரியர் பொறுப்பேற்றல் என 06.15 சதவீதமான மாணவர்களும், நூலகப்பாட ஆசிரியர் சமூகமளிப்பது குறைவு என 21.53 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர்.

நூலகத்தின், வாசிப்பின் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் நூலகத்தில் கருத்தூன்றிய வாசகங்கள் காணப்படுகின்றதா? எனும் வினா வினவப்பட்ட போது அதற்கு மாணவர்கள் அளித்த விடைகள் பின்வரும் உரு 4.3 இல் காட்டப்பட்டுள்ளன.



உரு 4.3 நூலகத்தில் கருத்தூன்றிய வாசகங்கள் காணப்படுதல்

***பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை இனங்காணல்.***

மண்முனை தென் மேற்கு கோட்டத்தில் அமைந்துள்ள பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாக அறியும் முகமாக மாணவர்களிடமிருந்தும், நூலகப் பொறுப்பாளர்களிடமிருந்தும் வினாக்கொத்துக்கள் மூலமும், நூலகப்பாடவேளை ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மூலமும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்து நூலகம், மனித வளம், சுயகற்றல், நூலகச் செயற்பாடுகள் தொடர்பாக கூற்றுக்கள் வடிவில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்காக வலுவாக ஏற்றுக் கொள்கிறேன், ஏற்றுக் கொள்கிறேன், கூற முடியாதுள்ளது, எதிர்க்கிறேன், வலுவாக எதிர்க்கிறேன் எனவும் மேலும் பொறுப்பாளர்களிடமிருந்து மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாகவும் வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.
நூலகத்தில் காணப்படும் வசதி வாய்ப்புக்கள் நீங்கள் ஆர்வமாக வாசிப்பதற்கு துணைபுரிகிறது எனும் கூற்றுக்கு மாணவர்களின் துலங்கல்கள் அதற்கான உரு 4.4 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 4.4 ஆர்வமாக வாசிப்பதற்கு நூலகம் துணைபுரிதல்

நூலகப் பொறுப்பாளர்களது ஒத்துழைப்பு மாணவர் அடைவுமட்டத்தை உயர்த்தும் காரணியாக அமைவதால் நீங்கள் நூலகத்தில் நேரத்தை செலவிட விரும்புகிறீர்கள், எனும் கூற்றுக்கு மாணவர்களின் துலங்கல்கள் அதற்கான உரு 4.5 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 4.5 நூலகத்தில் நேரத்தை செலவிட விரும்புதல்

இங்கே நூலகப் பாடவேளை ஆசிரியர்கள் அல்லது வேறு ஆசிரியர்கள் நீங்கள் நூலகம் செல்வதற்கு ஊக்கமளிக்காததன் காரணமாக வாசிப்பதற்கு பொறுப்புணர்வு அற்றவர்களாக செயற்படுகிறீர்கள் என்ற கூற்றுக்கு வலுவாக ஏற்றுக் கொள்கிறேன் என்று 31.42 சதவீதமான மாணவர்களும், ஏற்றுக்கொள்கிறேன் என்று 51.42 சதவீதமான மாணவர்களும், கூற முடியாதுள்ளது என்று 6.66 சதவீதமான மாணவர்களும், எதிர்க்கிறேன் என்று 9.52 சதவீதமான மாணவர்களும், வலுவாக எதிர்க்கிறேன் என்று 0.95 சதவீதமான மாணவர்களும் துலங்கியுள்ளனர்.

நூலகத்திலிருந்து எடுத்துச்சென்ற புத்தகங்களை உரிய வேளையில் மற்றும் சேதப்படுத்தாமல் மீண்டும் ஒப்படைக்கின்றீர்களா? எனும் வினாவிற்கு மாணவர்கள் பதிலளிக்கையில் ஆம் என்று 37.14 சதவீதமான மாணவர்களும், ஓரளவு என்று 41.90 சதவீதமான மாணவர்களும் இல்லை என்று 20.95 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர். இங்கு நோக்கும் போது ஓரளவு என்ற பதிலே கூடுதலான வீதமாகக் காணப்படுகிறது.

***நூலகத்தை அவதானித்ததன் மூலம் பெற்ற தகவல்கள்***

மண்முனை தென் மேற்கு கோட்ட பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் சுயகற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் எனும் ஆய்வு தொடர்பாக தகவல்களை பெறும் பொருட்டு பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கான காரணங்களைக் கண்டறியும் முகமாக நூலகம், நூலகத்தில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் போன்றவற்றை அவதானித்ததன் மூலம் பெற்ற தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாதிரித் தெரிவுக்குட்பட்ட 5 பாடசாலை நூலகங்களையும் பார்வையிட்டு அவதானித்த போது 2 நூலகங்கள் வகுப்பறைகளிலும், ஒரு நூலகம் அறையிலும், 2 நூலகங்கள் தான் தனியானதொரு கட்டடத்திலும் இயங்குகின்றன.

மாதிரித் தெரிவுக்குட்பட்ட 5 பாடசாலை நூலகங்களையும் பார்வையிட்ட போது நூலகம் சிறப்பாக இயங்குவதற்குப் போதுமான அளவு பௌதீக மற்றும் ஆளணி வளம் காணப்படாத நிலையும், பொருத்தமற்ற நூலக இட அமைவினையும், நூலகத்தில் வேறு பாடங்கள் நடைபெறுவதையும், ஆசிரியர்கள் தமது நேரத்தை கூடுதலாக நூலகத்தில் செலவழிப்பதும், சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்துவதிலும் புத்தகங்களை இரவல்

பெறுவதிலும் காட்டும் ஆர்வம் குறைவாகவே காணப்பட்டதை அவதானித்த வகையிலும் பதிவேடு, வரவுப் பதிவேட்டினைப் பார்த்த வகையிலும் அறிய முடிந்தது.

## முடிவுகளும் விதப்புரைகளும்

***பௌதிக வளம்***

பாடசாலை நூலகம் செயற்படுவதற்கான பௌதிக வளம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் வாயிலாக முடிவுகள் பெறப்பட்டன

**முடிவுகள்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 82.84 சதவீதமான நூலகங்கள் பெயரளவில் செயற்படுகின்றன. (இவ்வாய்வின் நூலகங்கள் ஓரளவு தான் செயற்படுகின்றன எனவும் போதியளவு தளபாடங்கள் இல்லாதநிலை காணப்படுகின்றன எனவும், தொகுதிப்பாடம் நடைபெறும் இடமாக செயற்படுகின்றன எனவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன)
2. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 75.23 சதவீதமான முடிவுகளில் பாடசாலை நூலகங்கள் பொருத்தமான இடத்தில் அமையவில்லை முடிவுகள் பெறப்பட்டுள்ளன. (வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் வாகனங்களின் சத்தம் அதிகமாகவும், புறாக்களின் தொல்லை அதிகமானதாகவும், எச்சங்கள் நிரம்பியும் நூலகங்கள் காணப்படுகின்றன. மலசலகூடத்திற்கு மற்றும் வீதிக்கு அருகில் நூலகங்கள் காணப்படுவதனால் சிலவேளைகளில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்பட்டன.)
3. மாதிரிக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நூலகங்கள் வகுப்பறைகளில்தான் கூடியளவு செயற்படுத்தப்படுகின்றது.

**விதப்புரைகள்**

1. மாணவர்களின் தேவைப்பாடு கருதி பொருத்தமான சம கால நூல்களிற்கான கொள்வனவில் கவனம் செலுத்துதல்
2. உதவிகள் பெறக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களிடம் நூலகங்களை சிறப்பாக செயற்படுத்துவதற்கான கட்டிடங்கள், தளபாடங்கள், நூல்களிற்கான உதவிகளைக் கோரி முடிந்தளவில் பெற்றுக் கொள்ளல்.
3. நூலகத்திற்கான ஆசிரியர் நூலகத்தைத் தொடர்ச்சியாக செயற்படாத விடத்து ஏனைய ஆசிரியர்களையும் பயன்படுத்தி பாடசாலை நடைபெறும் நேரம் முழுவதும் நூலகம் திறந்திருக்க நடவடிக்கை எடுத்தல்.

***மனித வளம்***

மனித வளம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக பெறப்பட்ட தரவுகளின் வாயிலாக முடிவுகள் பெறப்பட்டன

**முடிவுகள்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 69.09 சதவீதமான முடிவுகளில பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களே நூலகத்தை செயற்படுத்துகின்றனர். ஆசிரியரது நேரசூசியின் படி அவர் கற்பிக்க வேண்டிய பாடங்கள் தவிர்ந்த நேரத்திலும், ஒதுக்கப்பட்ட நூலகப் பாடத்திற்கான வேளையிலும் மாத்திரம் தான் நூலகம் செயற்படுகின்றது.
2. நூலகத்திற்கு பொருத்தமான ஆசிரியர் இல்லாததாலும், இடமாற்றம் பெற்று ஆசிரியர் வேறு பாடசாலைக்கு செல்வதாலும் தொடர்ச்சியாக ஒருவரால் அன்றி அடுத்தடுத்த நபர்களால் நூலகம் செயற்பட்டுவருகின்றது.

**விதப்புரைகள்**

1. நூலகங்களில் நூலக முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றி நூலகங்கள் செயற்படுவதனை உறுதிப்படுத்தல்
2. நூலகத்திற்கு பொருத்தமான ஆசிரியர் ஒருவரை தேர்ந்தெடுத்து பொது நூலகத்தில் செயற்படுத்தும் நடைமுறைகளை நூலகப் பயிற்சியாக வழங்கி நூலகப் பயிற்சி பெற்ற ஒருவரை நியமித்து நூலகத்தை செயற்படுத்தல்.
3. மாணவர்களின் சுய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் நூலக முகாமைத்துவ நடைமுறைகளினைப் பின்பற்றி ஒழுங்கமைத்தல்.

***சுயகற்றல்***

பாடசாலை நூலகத்தில் மாணவர்களின் சுயகற்றல் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக பெறப்பட்ட தரவுகளின் வாயிலாக முடிவுகள் பெறப்பட்டன

**முடிவுகள்**

1. பாடசாலை நூலகங்கள் மாணவர்களின் ஆர்வத்தை ஈர்க்கும் வகையில் கவர்ச்சியான முறையில் அமைக்கப்படவில்லை.
2. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 63.33 சதவீதமானோர் நூலகப் பாடவேளை ஆசிரியர்கள், மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று வாசிப்பதற்கு ஊக்கப்படுத்தவில்லை என கண்டறியப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

1. நூலகப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை பற்றி காலை ஆராதனையின் போதே, வேறு விசேட சந்தர்ப்பங்களிலோ மாணவர்களுக்கு எடுத்துக்கூறல்.
2. மாணவர்களுக்கு நூலகத்தைப் பயன்படுத்தி செய்யக்கூடிய பாடரீதியான ஒப்படைகளை வழங்கல். புத்தகங்கள் குறைவாகக் காணப்படும் நூலகங்களில் அங்குள்ள புத்தகங்களை அறிந்து அதற்கான வினாக்களை மாணவர்களுக்கு வழங்கி நூலகத்தைப் பயன்படுத்த வழிகாட்டல்.

**நூலகச் செயற்பாடுகள்**

**முடிவுகள்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80 சதவீதமாக நூலகத்தில் நூல்களைப் பராமரிப்பதற்கான / ஒழுங்குபடுத்துவதற்கான வசதிகள் ஓரளவுதான் காணப்படுகின்றது.
2. நூலகத்தின் முக்கியத்துவம், வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு வாரம், போட்டி நிகழ்ச்சிகள் போன்ற செயற்பாடுகள் நடைபெறவில்லை
3. மேலதிக வாசிப்புச் செயற்பாட்டிற்கான வசதிகள் நூலகத்தில் ஓரளவுதான் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**விதப்புரைகள்**

1. நியதிகள் அடிப்படையில் ஒழுங்கான முறையில் முறையில் ஆசிரியர்கள், மாணவர்களை ஒழுங்குபடுத்தலுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், வேறு நபர்களால் நூலகத்தை பயன்படுத்துவதற்கான வரவு பதிவேடுகளைப் பேணல். ஆசிரியர்கள், மாணவர்கள் வாசித்தமை தொடர்பான குறிப்புக்களைப் பெறல. நூலகத்திற்குரிய புத்தகங்களை முறையான பதிவேடுகளில் பதிந்து பேணல்.
2. பாடசாலை தவிர்ந்த நேரங்களில் மாணவர்களின் மேலதிக வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்காக பொது நூலகங்களில் பொது நூலகங்களில் அவர்களை அங்கத்தவர்களாக்கிவிடல்.
3. நாளாந்தம் பத்திரிகையை நூலகத்திற்கு வாங்குவதற்காக பாடசாலைக்கு கிடைக்கும் வருவாய்களிலிருந்து நிதி உதவியை வழங்கல்.

***மாணவர்களின் சுயகற்றலிற்கும், பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள்***

**முடிவுகள்**

1. மாணவர்கள் நூலகத்திற்குரிய தளபாடங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை பயன்படுத்தும்போது உரிய முறையில் கையாளவில்லை.

2. மாணவர்கள் பாடசாலை நூலகங்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் மாணவர்களில் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதை ஏற்றுக்கொண்டார்கள்.

**விதப்புரைகள்**

1. நூலகப் பொறுப்பாளர்கள் நூலகங்களை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அவர்களது வருடாந்த, நாளாந்த செயற்திட்டங்களை உருவாக்கி, ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தி மாணவர்கள் நூலகத்தை ஆர்வத்துடன் பயன்படுத்தும் மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும்.

2. மின்னியல் நூலகங்கள் இயங்கும் தற்போதய காலகட்டத்தில் சாதாரணமாக பாடசாலை நூலகங்கள் கணிணி வசதிகள் கொண்டதாக அமைய வேண்டும்.

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்*, எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.

அந்தோணி ஜோசப், (2003). *கல்வி சார் வளப்பகிர்வுகளின் பகுப்பாய்வு,* கல்வி முதுமாணி யாழ்ப்பாணம்.

அப்துல் கரீம் முகம்மது பரீட், (2011). *தமிழ் இலக்கிய நயப் பாடத்தில் உயர் அடைவை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்,* கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

அஸினா, மு. இ. (2016). *தரம் - 5 இல் கல்வி பயிலும் மாணவர்களது மொழித்திறனில் ஒன்றான வாசிப்புத் திறனை மேம்படுத்தல்,* கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, கிழக்குப்பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.

உதயகுமார், க. (2011). *மாணவர்களிடையே செய்யுள் இலக்கியம் கற்றலை மேம்படுத்தல்,* கல்வி முதுமாணி.

கருணாநிதி, மு. (2005). *வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமை, அகவிழி சஞ்சிகை, ரெக்னோபிரிண்ட்,* கொழும்பு.

கருணாநிதி, மா. *கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள்*, சேமமடுப் பதிப்பகம், கொழும்பு.

கலாமணி, த. (2009), *சுயகற்றல் திறன்களை மேம்படுத்தல்,* சேமமடுப் பதிப்பகம், கொழும்பு.

கிறிஸ்ரி டிலானி, (2014). *மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்*, கல்வி முதுமாணி பட்டைக்கற்கை ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

கேசவன், து. (2015). *அறிவுசார் சமூகமும் வாசிப்புக் கலாசாரமும்,* ஆசிரியம் சேமமடு பொத்தகசாலை, கொழும்பு – 11.

சந்திரசேகரம், சோ. (2009). *சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு,* சேமமடுப்பதிப்பகம், கொழும்பு.

# OPTIMIZING PREVENTIVE MAINTENANCE SCHEDULES FOR BIOMEDICAL EQUIPMENT BY USING THE DATA-DRIVEN APPROACH

Mr. Ragupathyraja Suhashan
Department of Information Technology,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
suhashan2@gmail.com

Mr. Rishogar Nirmalakumar
Department of Biomedical Engineering Services,
Mervynsons Pvt Ltd,
Colombo.
rishogarr@gmail.com
Mr. Kirushnalini Maguran
Division of Biomedical Engineering Services,
Ministry of Health,
Teaching Hospital Batticaloa.
krishmagsaai@gmail.com

**Abstract:**

This study focuses on optimizing preventive maintenance schedules for biomedical equipment in healthcare facilities. Ensuring the effective maintenance of such equipment is vital for uninterrupted healthcare delivery and patient safety. The proposed method harnesses data from various sources, including equipment usage patterns, historical maintenance records, and real-time sensor data, to enhance maintenance efficiency and minimize equipment downtime.

By incorporating advanced algorithms, the approach enables the prediction of potential faults, allowing healthcare facilities to proactively address issues before they escalate and disrupt operations. Additionally, the implementation of a web-based platform facilitates real-time monitoring, providing timely insights into equipment performance and status. A key aspect of this approach involves establishing a centralized database for maintenance records, enabling healthcare professionals to track equipment performance trends and refine maintenance protocols through analysis of historical data.

The study highlights the effectiveness of an online medical equipment management system in tackling issues related to low equipment performance, defects, and preventive maintenance. By adopting a data-driven strategy, the system optimizes the preventive maintenance schedule, ensuring that maintenance tasks are performed proactively and promptly. The system also supports service providers by accurately predicting the next preventive maintenance cycle and delivering notifications via email to the responsible individuals. This proactive approach minimizes equipment downtime, reduces defects, and enhances overall equipment performance. Leveraging data-driven insights, the online medical equipment management system improves operational efficiency, increases equipment reliability, and ultimately contributes to the delivery of high-quality healthcare services.

***Keywords:*** *Biomedical equipment, Data-driven technique, Management, Preventive Maintenance, Technology*

## Introduction

A Biomedical Equipment Maintenance System (BEMS) ensures the functionality, safety, and reliability of medical devices in healthcare facilities. It aids in developing maintenance programs and improving biomedical practices cost-effectively. Clean production methods reduce environmental impact and enhance worker safe (Roy Chowdhuri et al., 2023). Optimizing preventive maintenance with data-driven approaches, as outlined in "Optimizing Preventive Maintenance Schedules for Biomedical Equipment: A Data-Driven Approach," enhances efficiency and effectiveness, minimizing downtime and optimizing resource allocation for uninterrupted healthcare delivery(Uzhakova & Fischer, 2024).

## Problem Statement

There are a lot of medical equipment and devices repaired by the Division of Biomedical Engineering Service, Teaching Hospital Batticaloa every working day. and, they condemned the defective equipment. that equipment cannot be reused in the medical field, because that equipment doesn't work properly. And some treatments are postponed and delayed. The reason is a lack of equipment maintenance management. Because some of the health staff don't know about the proper equipment maintenance and proper operating methods of equipment. So, those actions are partially defective equipment and reduce the lifetime of usage.

## Objective

- **a.** To avoid the work content of repair work and increase the efficiency of biomedical equipment b. To develop adequate knowledge of the medical equipment life cycle for health staff.
- **b.** To avoid an accident by making regular inspections and adjusting safety and ensure the safety of equipment.
- **c.** To minimize expert resource loss and repair costs.
- **d.** To increase the medical equipment maintenance management by using the software.

## Literature Review

Numerous factors contribute to the failure of healthcare equipment in public sector hospitals in Sri Lanka(Jayawardena, 2017). Through literature surveys and stakeholder interviews in the health sector, several key reasons have been identified, including poor maintenance

practices, inadequate financial resources for maintenance and timely equipment replacement, a shortage of trained personnel for equipment upkeep, and deficiencies in equipment procurement procedures. (Manik, 2023)

This review aims to delve into each of these factors to elucidate their impact on healthcare equipment performance in Sri Lanka. The introduction highlights the significance of effective medical equipment management, paralleling human resource management in hospital operations. It stresses the importance of accurate data across various domains such as procurement, installation, maintenance, and eventual retirement to ensure safe and efficient equipment use, thereby reducing risks to patients and staff(Guduri et al., 2020). The objective of this study is to evaluate the current state of hospital equipment management specifically in District Base Hospitals (DBHs) in the Kalutara District of Sri Lanka. Methodologically, this hospital-based cross-sectional descriptive study involved engaging healthcare managers responsible for equipment management at different levels within DBHs.(Jayawardena, 2017)

The results indicate a glaring lack of efficient equipment management systems across all hospitals surveyed, with a notable absence of procurement guidelines and inadequate maintenance registers in most departments.(Samuel & Srivastava, 2013) The conclusion drawn from these findings underscores the urgent need for reengineering equipment management processes, advocating for the implementation of computerized management systems to establish a robust and high-quality hospital equipment management system(Roy Chowdhuri et al., 2023).

## Methodology




*Figure 1: Methodology diagram.*

**lists the medical equipment -** Hospital units and departments were methodically classified before a comprehensive visitation ensued, meticulously marking the equipment in each area. Following this, a detailed categorization of the biomedical equipment and devices across the hospital's diverse units and departments was conducted. This classification involved grouping the equipment based on their functions and purposes, ensuring a systematic organization.

Subsequently, the equipment was rearranged, considering both their intended use and the manufacturers, thereby facilitating a more streamlined and efficient workflow within the hospital's healthcare environment.

**Interview the health staff and technicians** - Classified hospital units/departments encompass various crucial areas of medical care delivery, ranging from emergency services to specialized care units. As part of streamlining operations, identifying unit and ward in-charge officers facilitates efficient management and decision-making within each department. To enhance equipment maintenance and address potential faults promptly, an interview document can be prepared, incorporating questions regarding equipment functionality and workplace maintenance protocols. Additionally, collecting feedback from healthcare staff and technicians enables continuous improvement initiatives, ensuring optimal functioning of equipment and seamless provision of healthcare services.

**Estimate the equipment repair and Condemnation -** the Biomedical Engineering service meticulously records the repair of equipment and devices, ensuring optimal functionality within the hospital. Through condemnation reports and certificates, they analyze the faults of condemned equipment, providing valuable insights into areas for improvement and potential safety hazards. Spare parts are diligently collected and documented using the unit inventory or H500 ledger, maintaining a comprehensive record of all components utilized in the repair process. This meticulous approach ensures efficient maintenance and operational reliability throughout the healthcare facility, guaranteeing the safety and well-being of patients and staff alike. Communicate with the service providers/manufacturers to understand the service agreements. describe the fault reasons to each unit of health staff by Visiting each ward and unit to explain the equipment performance. Discuss the fault maintenances and give the solution for problems. Explain the preventive maintenance of medical equipment.

**Design and implement the Management system.**

- Find the basic requirements for designing.
- Prepare the web designs.
- Create the app by software developers.
- Testing the app by Entering all equipment and device details
- Implement the website in the BMES/TH/BATTICALOA.
- Gathering feedback from users for updates.

**Results and Discussion**

| No. | Equipment | Make | Model | Serial No |
|---|---|---|---|---|
| 1 | Ventilator | Neumovent | Graph Net ts | 150840431083AIV |
| 2 | Ventilator | Neumovent | Graph Net ts | 150840411083AIV |
| 3 | Ventilator | Neumovent | Graph Net ts | 150740721083AIV |
| 4 | Transport Ventilator | Flight Medical | Flight 60 | 15012319 |
| 5 | Ventilator | Newport | e 360T | N17360733283 |
| 6 | Ventilator | Newport | e 360T | N17360733281 |
| 7 | Ventilator | Newport | e 360T | N12361122101 |
| 8 | Ventilator | Drager | Evita 300 | ASLF 0346 |
| 9 | Ventilator | Drager | Evita XL | ASEF.0252 |
| 10 | BIPAP | Drager | Carina | ASLH 001 |
| 11 | CRRT Machine | Infomed | HF 440 | 0587-014 |

Figure 2 : List of equipment

I meticulously gathered the equipment details from the hospital, and each unit, whether it be the Surgical Intensive Care Unit (SICU), Medical Intensive Care Unit (MICU), or the bustling dental clinic. Each entry meticulously detailed the equipment name, including its make, company, model number, and serial number.

Additionally, I diligently noted down the local supply agent responsible for procurement and maintenance, ensuring a comprehensive record for efficient management and maintenance of the hospital's vital resources.

To overcome maintenance barriers effectively, it's imperative to refer to the equipment's specifications thoroughly. Identifying the type of equipment is the first step, followed by an extensive search to find reliable suppliers capable of providing the necessary components and support. Moreover, pinpointing the installation date offers insights into the equipment's lifecycle, aiding in scheduling preventive maintenance effectively. By establishing a clear preventive maintenance period, potential issues can be addressed proactively, minimizing downtime and optimizing equipment performance. This systematic approach ensures that maintenance barriers are swiftly tackled, safeguarding the seamless operation of essential hospital facilities.

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | Cardiac Output Monitor Installation Date – 10/11/2020 | Pulsion Medical Systems | Pulsio Flex | J18400011714 |
| 19 | BIPAP | Resmed | Steller 100 | 20112476842 |
| 20 | BIPAP Installation Date – 10/11/2020 | Resmed | Stellar 100 | 22201430803 |
| 21 | Patient Warmer 17/03/2020 | 3M Bair Hangger | Bair Hangger 775 | 158816 |
| 22 | DVT Pneumatic Compression System | Coviden | Kendall SCD | 140288T |
| 23 | DVT Pneumatic Compression System | Coviden | Kendall SCD | 1403859 |

Figure 3 : Cardiology clinic equipment.

Gathering professional healthcare staff feedback from the hospital to conduct a comprehensive analysis of medical equipment maintenance and services. This invaluable input from frontline healthcare professionals provides crucial insights into the real-world efficacy and challenges of maintaining medical equipment. By soliciting feedback directly from those who utilize these tools daily, we can better understand their needs, identify potential areas for improvement, and tailor maintenance protocols to ensure optimal functionality and reliability. This collaborative approach fosters a culture of continuous improvement, ultimately enhancing the quality of patient care and streamlining operational efficiency within the healthcare facility.


Unit In charge Officer

Name: Mr. M. Pushparaj

Occupation: Nursing In-charge.

Feedback: To be identifying the equipment availability and find the service next period. by using the modern system.

Stamp with Signature: Mr.M.PUSHPARAJ
Nursing Officer Incharge
Medical Intensive Care Unit (MICU)
Teaching Hospital
Batticaloa.

In charge Officer / Technologist

Name: Mrs. S. Christy

Occupation: Nursing officer

Feedback: Online inventory can be maintain the equipment Details. in any where.

Stamp with Signature:

Figure 4: Staffs Feedback


Name of Unit

Coronary care unit – CCU

Functions / Responsibilities

A cardiac care unit (CCU) is a specialized hospital ward designed to treat people with serious or acute heart problems. People who undergo heart surgery also are placed in the CCU as they recover.

Barriers of Equipment operations and maintenance

untrained staff
Lack of knowledge on mechenirances.
inadequate equipments.

Expectations and Requirements Operations

Proper training of staff
supply adequate equipments,
Proper service for regular period.
update the staff & machinery system.

Name of Unit

NICU - Neonatal intensive care unit

Functions / Responsibilities

This is a nursery in a hospital that provides around-the-clock care to sick or premature babies. It has health care providers who have special training and equipment to give your baby the best possible care.

Barriers of Equipment operations and maintenance

Most properly Incubator and Warmer had error in runtime.
There no additional equipment to solve issues.
Can not be indentify the next Service date of equipment

Expectations and Requirements Operations

Need a system to maintain equipment details in any places.
Make demostration of equipment maintainace.

Figure 5: Unit Staffs Feedback

The collected feedback, meticulously gathered using datasheets from each healthcare professional staff, served as the foundation for analyzing various aspects of equipment management. This comprehensive analysis encompassed evaluating the availability of equipment and spare parts, assessing equipment performance, documenting instances of run-time failure, scrutinizing repairing periods, and reviewing the quality of equipment service provided by both BMES Corporation and local agent corporations. These detailed observations were systematically arranged to ascertain the performance levels across a spectrum ranging from poor to fair, good, very good, and excellent categories. Such categorization facilitated a structured understanding of the strengths and weaknesses within the equipment maintenance and service framework, guiding strategic decisions aimed at bolstering operational efficiency and enhancing the overall quality of healthcare delivery.



satisfaction of equipment maintenance and operations

| Examples | poor | Fair | Good | Very good | Excellent |
|---|---|---|---|---|---|
| Abcde...... | | | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Equipment availability | | | | ✓ | |
| Spare parts availability | | | ✓ | | |
| Equipment's Performance | | | | ✓ | |
| Run time failure | | ✓ | | | |
| repairing time | | | ✓ | | |
| Equipment services | | | | ✓ | |
| BMESD corporation | | | | | ✓ |
| Local Agents corporation | | | ✓ | | |

satisfaction of equipment maintenance and operations

| Examples | poor | Fair | Good | Very good | Excellent |
|---|---|---|---|---|---|
| Abcde...... | | | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Equipment availability | | | | | ✓ |
| Spare parts availability | | | ✓ | | |
| Equipment's Performance | | | ✓ | | |
| Run time failure | ✓ | | | | |
| repairing time | | | ✓ | | |
| Equipment services | | | ✓ | | |
| BMESD corporation | | | | ✓ | |
| Local Agents corporation | | | | ✓ | |

satisfaction of equipment maintenance and operations

| Examples | poor | Fair | Good | Very good | Excellent |
|---|---|---|---|---|---|
| Service | | | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Equipment availability | | | | ✓ | |
| Spare parts availability | | | | ✓ | |
| Equipment's Performance | | | | ✓ | |
| Run time failure | | ✓ | | | |
| repairing time period | | | ✓ | | |
| Equipment services | | | ✓ | | |
| BMESD corporation | | | | ✓ | |
| Local Agents corporation | | | | ✓ | |

A performance analysis is conducted at the Teaching Hospital premises in Batticaloa, utilizing feedback collected from 28 healthcare senior staff members.

| Statement | Poor | Fair | Good | Very Goo | Exceller | Columr |
|---|---|---|---|---|---|---|
| Equipment Availability | 4 | 5 | 10 | 8 | 1 | 28 |
| Spare Parts Availability | 15 | 9 | 4 | 0 | 0 | 28 |
| Equipment performance | 10 | 1 | 5 | 4 | 8 | 28 |
| Run time Failure | 4 | 8 | 9 | 5 | 2 | 28 |
| Duration of Repair | 2 | 0 | 11 | 9 | 6 | 28 |
| Equipment Services | 7 | 14 | 6 | 1 | 0 | 28 |
| BMES Corporation | 8 | 4 | 1 | 11 | 4 | 28 |
| Local Agent Corporation | 3 | 12 | 5 | 3 | 5 | 28 |
| | 53 | 53 | 51 | 41 | 26 | 224 |
| % | 25.7 | 25.7 | 24.8 | 19.9 | 7.3 | 103.4 |

*Table 1: Analysis of the Performance Rate*

According to the data collected on performance feedback, the analysis reveals that approximately 25 percent of the feedback falls into the categories of poor and fair. This indicates that a significant portion of the feedback received from the health sector.




*Figure 7: Percentage of performance rate.*

The Department of Engineering Services has decided to enhance the performance of equipment by implementing a regular preventive maintenance program facilitated through an assist management system. Recognizing the importance of proactive measures in ensuring optimal equipment functionality, this initiative aims to prevent potential breakdowns, minimize downtime, and maximize the lifespan of the equipment. By utilizing an assist management system, the department will be able to streamline and automate the scheduling, tracking, and execution of preventive maintenance tasks, resulting in improved efficiency and effectiveness. This proactive approach will not only enhance equipment performance but also contribute to cost savings and smoother operations within the department.

A biomedical equipment inventory management system was developed by the end of the research results, and most of the health staff highly recommend developing this management system for maintaining the inventory through the website.




*Figure 8: homepage of System*

In a hospital, the healthcare service environment comprises two essential components: human resources and logistics/equipment. The delivery of high-quality healthcare services is heavily reliant on the effective management of these components. Proper management ensures that the human resources, such as healthcare professionals and support staff, are appropriately allocated, trained, and coordinated to provide optimal care to patients. Additionally, the management of logistics and equipment involves ensuring the availability, functionality, and maintenance of essential medical equipment, supplies, and facilities. A well-organized and efficient management system for both human resources and logistics/equipment is crucial for delivering excellent healthcare services within a hospital setting.




*Figure 9: About page of Organization.*




*Figure 10: Sign Page*




*Figure 11: Dental clinic page*




*Figure 12: MICU Page*

The project accomplished its mission of reducing equipment faults through the implementation of an online inventory equipment management system. This system effectively monitors the service period of equipment and automatically sends notifications regarding upcoming service dates to the designated officer in charge of Biomedical Engineering services via email. The inventory management system covers multiple units, including the MICU, NICU, CSSD, Dental, and CCU, ensuring comprehensive coverage across various departments. Each unit within the system contains detailed equipment information, such as the equipment name, serial number, model, installation date, description, and usage. These data can be easily updated by the page administrator, ensuring accurate and up-to-date information for efficient management. This system greatly enhances the monitoring and maintenance of equipment, ultimately contributing to improved operational efficiency and patient care within the healthcare facility**.**

## Conclusion

the implementation of an online medical equipment management system has proven to be an effective solution for addressing issues related to low equipment performance, defects, and preventive maintenance. By employing a data-driven approach, this system optimizes the preventive maintenance schedule, ensuring that maintenance tasks are performed proactively and promptly. The system assists service providers by accurately predicting the next preventive maintenance cycle and sending notifications via email to the responsible individuals. This proactive approach helps minimize equipment downtime, reducing the occurrence of defects, and improving overall equipment performance. By leveraging data-driven insights, the online medical equipment management system enhances operational efficiency, increases equipment reliability, and ultimately contributes to the delivery of high-quality healthcare services.

## Reference

### Research papers

Guduri, J., Ramana, Y. V. S., & Sreedevi, P. (2020). Biomedical Equipment Maintenance & Barrier Diagnosis, a Systematic Infection Control Practice. *Paripex Indian Journal of Research*, *April*, 1–3. https://doi.org/10.36106/paripex/3402865

Jayawardena, D. B. A. S. (2017). Hospital Equipment Management in District Base Hospitals in KalutaraDistrict in Sri Lanka. *Biomedical Statistics and Informatics*, *2*(1), 18–21. https://doi.org/10.11648/j.bsi.20170201.14

Manik, H. (2023). Inventory Information System: Optimizing Inventory Management for Company Business Sustainability. *Information Technology and Systems*, *1*(1), 26–35. https://doi.org/10.58777/its.v1i1.126

Roy Chowdhuri, I., Kar, A., & Pal, A. K. (2023). A New Approach for Effective Reliability Management of Biomedical Equipment. *European Journal of Theoretical and Applied Sciences*, *1*(5), 281–293. https://doi.org/10.59324/ejtas.2023.1(5).19

Samuel, M. P., & Srivastava, S. (2013). Maintenance inventory allocation in presence of heterogeneous part characteristics. *International Journal of Performability Engineering*, *9*(5), 505–514.

Uzhakova, N., & Fischer, S. (2024). *Data-Driven Enterprise Architecture for Pharmaceutical R & D*. 333–371.

# கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பு

Mr. Shivanantham Sritharan
Paddiruppu Zonal Education Office,
Paddiruppu,
Batticalao.
ssritharanzde@gmail.com

Dr. Sabaretnam Athirathan
Faculty of Education,
University of Colombo.
sabaaathi@sse.cmb.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

பாடசாலை மட்டங்களில் நிகழும் திட்டமிடல் செயற்பாடுகள் பாடசாலைகளின் மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்புக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பினை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன், இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. விவரண அளவீட்டு ஆய்வு வடிவமைப்பைப் பின்பற்றி கலப்பு முறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. 60 பாடசாலை அதிபர்களும் 37 பகுதித் தலைவர்களும் பாடசாலை முகாமைத்துவக் குழுவைச் சேர்ந்த 37 ஆசிரியர்களும் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உட்பட 06 இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்களும் ஆய்வு மாதிரியாகக் கொள்ளப்பட்டிருந்தனர். ஆய்வுக்கான தரவுகளைச் சேகரிக்க வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு, மற்றும் ஆவணப் பகுப்பாய்வு என்பன பயன்படுத்தப்பட்டன. SPSS Version மற்றும் Microsoft Excel என்பவற்றைப் பயன்படுத்தி தரவுகள் செயன்முறைப்படுத்தப்பட்டன. முதலில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் 10 அம்சங்கள் (Parameters) உள்வாங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலைமை பற்றிய ஆவணப் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் கிடைத்த கூட்டுச் சராசரி நியம விலகல்கள் முறையே 51.17 மற்றும் 15.94 ஆகும். இவற்றுக்கான சோதனை பெறுமானம் 5% நம்பிக்கை மட்டத்தில் பொருண்மையுள்ள தொடர்பு நிரூபிக்கப்பட்மையினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்படும் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறைபாடுடையன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய மற்றும் கற்றல் - கற்பித்தல் செய்முறையுடன் தொடர்புடைய 25 காரணிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. பாடசாலை மட்டத் அபிவிருத்தித்திட்டம் கற்றல்-கற்பித்தல் செயன்முறை (Y) ஆகிய இரண்டு மாறிகளுக்கும் இடையிலான ஸ்பியர்மனின் தர வரிசை இணைவுக் குணகம் 0.1265 அளவில் காணப்பட்டதனால் இரண்டிற்குமிடையில் நேரிணைவு உண்டு என்பது உறுதி செய்யப்பட்டது.

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி முறையை மேம்படுத்தவும், மாணவர் கற்றலை மேம்படுத்தவும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். மேலும், கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பல வழிகளில் பங்களிக்க முடியும். இருப்பினும் இதில் உள்ள சவால்களை வெற்றிகொள்ள உரிய நடைமுறைகளைப் பின்பற்றாததன் காரணமாக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது போதியளவான பங்களிப்பை வழங்கவில்லை என இவ் ஆய்வு முடிவு செய்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *கற்றல் - கற்பித்தல் செயன்முறை, பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம், பாடசாலை முகாமைத்துவம், நியம விலகல், விவரண அளவீட்டு ஆய்வு*

**அறிமுகம்**

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் என்பது பாடசாலைகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டம் ஆகும். இது பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகம் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது: (1) பாடசாலை அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளல்: தங்கள் மாணவர்களின் தேவைகளை அடையாளம் காணவும் அவற்றை நிவர்த்தி செய்யவும் பாடசாலை சமூகமே சிறந்த இடமாக உள்ளமை.(2) கூட்டுறவு: பாடசாலை சமூகத்தின் அனைத்து பங்குதாரர்களும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும். (3) தொடர்ச்சியான முன்னேற்றம் : பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் என்பது தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டிய ஒரு செயல்படும் ஆவணம் ஆகும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் பொதுவாக பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது. (1)தேவை பற்றிய மதிப்பீடு: இது பாடசாலையின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணும் ஒரு செயல்முறை ஆகும்.(2) எதிர்காலத்திற்கான பார்வை: இது எதிர்காலத்தில் பாடசாலை எதை சாதிக்க விரும்புகிறது என்பது பற்றிய ஒரு கூற்றாகும்.(3) இலக்குகளும் நோக்கங்களும்: இவை பாடசாலை தனது நோக்கக்கூற்றை அடைய என்ன செய்யும் என்பது பற்றிய குறிப்பான, அளவிடக்கூடிய, அடையப்பட கூடிய, பொருத்தமான மற்றும் கால வரையறை கொண்ட கூற்றுக்களாகும்.(4) உத்திகள் மற்றும் செயல்பாடுகள்: இவை பாடசாலை தனது இலக்குகளையும் நோக்கங்களையும் அடைய எடுக்கும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் ஆகும்.(5) கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் திட்டம்: இது பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் தேவையான மாற்றங்களைச் செய்வதற்குமான ஒரு திட்டம் ஆகும். கற்றல் கற்பித்தல் செயல்முறை என்பது மாணவர்கள் கற்றுக் கொள்ளும் செயல்முறை ஆகும். இது ஆசிரியர், மாணவர், பாடத்திட்டம், கற்றல் சூழல் மற்றும் மதிப்பீட்டு செயல்முறை உள்ளிட்ட பல காரணிகளை உள்ளடக்கிய சிக்கலான செயல்முறை ஆகும்.கற்றல் கற்பித்தல் செயல்முறை பொதுவாக பின்வரும் படிகளை உள்ளடக்கியது: (1)திட்டமிடல்: ஆசிரியர் பாடத்திட்டத்தைத் திட்டமிடுகிறார், இதில் நோக்கங்கள், உள்ளடக்கம், செயல்பாடுகள் மற்றும் மதிப்பீடு ஆகியவை அடங்கும்.(2)செயல்படுத்துதல்: ஆசிரியர் பாடத்தை வழங்குகிறார்.(3)மதிப்பீடு: ஆசிரியர் மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்கிறார்.(4)பிரதிபலிப்பு சிந்தனை: ஆசிரியர் பாடத்தைப் பற்றி சிந்தித்து அடுத்த முறைக்கு கற்றலுக்காக மாற்றங்களைச் செய்கிறார். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் மற்றும் கற்றல் கற்பித்தல் செயல்முறை ஆகியவை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கான கட்டமைப்பை வழங்குகின்றது. மேலும் கற்றல் கற்பித்தல் செயல்முறையே பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும் வழிமுறையாகும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் மற்றும் கற்றல் கற்பித்தல் செயல்முறையை மேம்படுத்துவதற்கான சில வழிகளாக திட்டமிடல் செயல்பாட்டில் அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துதல், பாடசாலையின் நோக்கக்கூற்று மற்றும்

பணிக்கூற்றுடன் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் ஒத்துப்போகிறது என்பதை உறுதிசெய்தல், குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையச் சாத்தியமான, பொருத்தமான மற்றும் கால வரையறை கொண்ட இலக்குகளையும் நோக்கங்களையும் நிர்ணயித்தல், பல்வேறு கற்பித்தல் முறைகள் மற்றும் செயல்பாடுகளைப் பயன்படுத்துதல், மாணவர்களுக்கு தொடர்ச்சியான மதிப்பீட்டை வழங்குதல், கற்றல் கற்பித்தல் செயல்முறையை மீளாய்வு செய்து அடுத்த முறைக்கான மாற்றங்களைச் செய்தல், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் மற்றும் கற்றல் கற்பித்தல் செயல்முறையை முன்னேற்றுவதன் மூலம், பாடசாலையின் அனைத்து மாணவர்களினதும் கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியும். பாடசாலை ஒன்றின் ஐந்து வருடகால உபாயமார்க்க அபிவிருத்தித் திட்டம் மற்றும் வருடாந்த அமுலாக்கற்றிட்டம் ஆகிய இரண்டு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயார்படுத்துவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பாடசாலைச் சமூகம் ஈடுபட்டுவருகின்றனர். பொதுவாக பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலானது பாடசாலையின் எதிர்பார்ப்புக்களை எளிதானதொரு வடிவத்தில் வெளியிடுதல் அவசியமாகும் அவையே ஐந்து வருடகால உபாயமார்க்க அபிவிருத்தித் திட்டம் மற்றும் வருடாந்த அமுலாக்கல் திட்டம் ஆகிய இரண்டுமாகும் என்பதுடன் இவை கல்விக் கொள்கைகள் மற்றும் அதன் கொள்கைப் பரப்புக்கள் என்பனவற்றை நன்கு விளங்கிக் கொண்டதாக திட்டமிடுதல் அவசியமாகும்.

**ஆய்வுப்பின்னணி**

1960 இல் வெளியிடப்பட்ட பத்தாண்டுத் திட்டமே இலங்கையில் முதன் முதலாக கையாளப்பட்ட ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். அனைத்து அம்சங்களினதும் ஒன்றிணைந்த அபிவிருத்திக்காக 1972 இல் ஐந்தாண்டுத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.அத்திட்டத்தில் அடங்கியிருந்த பற்பல கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன. கல்வியமைச்சில் திட்டமிடல் அமுலாக்கற் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டமையும் அதே பிரிவின் நெறியாள்கையின் கீழ் கல்வி அபிவிருத்திக்கான இடைக்கால ஐந்தாண்டுத்திட்டமொன்று தயார்செய்யப்பட்டமையும் இதன்முக்கிய அம்சங்களாகும்.

1977 இல் கல்வித்திட்டமிடல் அமுலாக்கற் பிரிவானது திட்டமிடலுக்கும் கல்வி அபிவிருத்திக்குமான பிரிவு என மிகப் பரந்த ரீதியில் மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டது. கல்வி அபிவிருத்தியானது முற்றுமுழுதான சமூக பொருளாதார நடவடிக்கைகளுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கமைய கருமமாற்றும் நிலை தோன்றியது. சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் இலங்கையில் கடந்த 1980ஆம் ஆண்டுகளிலிருந்து பாடசாலைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்தல் என்னும் விடயம் ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து 1984களில் கொத்தணி ரீதியான பாடசாலைத் திட்டமிடல் வெவ்வேறு கட்டங்களினூடாகப் பரிணாம வளர்ச்சி காணத் தொடங்கியது. பாடசாலை மட்ட முகாமைத்துவம் என்னும் எண்ணக்கரு 1997 இல் ஆரம்பமாகியது ஆனால் 2005 ஆம் ஆண்டிலே இலங்கைக் கல்வியமைச்சினால் பாடசாலை மட்ட முகாமைத்துவம் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு “பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்” ஒரு முன்னோடி வேலைத்திட்டமாக

அமுல்படுத்தும் பொருட்டு சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டம் தற்போது வலுப்படுத்தப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த சுற்றறிக்கையானது பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவக் குழு ஆகிய இரண்டையும் ஸ்தாபிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருந்தது. இக்கழு இரண்டும் தற்போது பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு மற்றும் பாடசாலை முகாமைத்துவ அணி என அழைக்கப்படுகின்றது. வலுப்படுத்தப்பட்ட பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினாலும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினராலும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அதிபரினால் அமைக்கப்படுகின்ற உப குழுவே பாடசாலை முகாமைத்துவ அணி ஆகும். பாடசாலை மட்ட முகாமைத்துவமானது பாடசாலை முகாமைத்துவத்தை பன்முகப்படுத்துவதற்கான ஒரு முறையாகும். மேலும் பாடசாலை மட்ட முகாமைத்துவமானது பாடசாலையின் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக உள்ளூர் பாடசாலைகளில் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் விரிவாக்கம் செய்கின்ற நிறுவன ரீதியான ஒரு அணுகுமுறையாகும். எவ்வாறாயினும் கடந்த 40 வருங்களாக பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான ‘விளங்கிக் கொள்ளலும்’“அதன் மூலமான திட்டமிடலும் மற்றும் நடைமுறைப்படுத்தலும் எதிர்பார்த்த தராதரங்களைப் பெற்றிருக்கவில்லை எனக் கூறலாம்.உண்மையில் சொல்லப்போனால் உள்ளூர் சமூகத்தின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் பாடசாலைகளினூடு எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றகரமான கற்றல்பேறுகளை விளைவாகப் பெற்றுக் கொள்ளவும் கல்வியிலே அறிமுகம் செய்யப்பட்ட ஒரு புதிய உள்ளகப் பொறிமுறையாகும்.

எனவே பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடல் என்பது ஒரு தொழில்சார் செயற்றொடர் என்ற அடிப்படையில் பாடசாலை மட்டத்தில் நாம் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கும் பொழுது தொடர் செயன்முறையினூடாக விளைவைப் பெறுவதற்காகத் திட்டமிடுதல் அவசியம். இலங்கைக் கல்விக்கொள்கைகளின் அடிப்படையில் அவ்வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத் திட்டமிடும்போது கல்விக் கொள்கைச் செயற்பாட்டுப் பரப்பெல்லைகள் சரியாக விளங்கிக்கொண்டு அவற்றின் அடிப்படையில் திட்டமிடுதல் வேண்டும். அதனடிப்படையில இலங்கைப்பாடசாலைகளின் உபாயமார்க்கத்திட்டம், அமுலாக்கல் திட்டம் என்பன மாத்திரமன்றி கல்வியமைச்சினது வருடாந்த அமுலாக்கல் திட்டம் என்பன கூட இதே நான்கு கல்விக் கொள்கைப் பரப்பெல்லைகளை அடிப்படையாக வைத்து திட்டமிடப்படுதல் வேண்டும்.

**ஆய்வுப்பிரதேசம்**

இவ் ஆய்வுக்குரிய களமாக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களுள் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டிருப்புக் கல்வி வலயம் தெரிவு செய்யப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற 5 கல்வி வலயங்களுள் இதுவும் ஒன்றாகும். பட்டிருப்புக்கல்வி வலயத்திலே இரண்டு கல்விக் கோட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மண்முனை தென் எருவில் பற்று மற்றும் போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டங்களாகும்.இக்கல்வி வலயத்தில் வகை 1AB, 1C, வகை II மற்றும் வகை III இனைச் சேர்ந்த மொத்தமாக இரண்டு தேசிய பாடசாலைகள் உட்பட 70 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றில் 1358 ஆசிரியர்கள், கற்றல் - கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 23284 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவை கிராமப்புற பாடசாலைகளாகவும் நகர்ப்புற பாடசாலைகளாகவும் காணப்படுகின்றன.

இப்பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளின் குடும்பங்கள் பெரும்பாலும் தாழ் குடும்ப வருமானம் கொண்ட குடும்பங்களாகவே காணப்படுகின்றன. குறிப்பாக விவசாயக்குடும்பங்கள், மீனவர் குடும்பங்கள் மற்றும் ஏனைய தொழில்கள், கூலித்தொழில்கள் செய்கின்றவர்களாகக் காணப்படுவதுடன் சில பிள்ளைகள் மாத்திரம் அரச தொழில் செய்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளாவர். எனவே இவ்வாறான பொருளாதாரப் பின்னணியினைச் சேர்ந்த பிள்ளைகளாவர். மேலும் இவ் ஆய்வுப்பிரதேசமானது வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற தமிழ்மொழி மூலமாக அரச பாடசாலைகளில் கல்வி பெறுகின்ற பிள்ளைகளாவர். மேலும் பல ஆசிரியர்கள் இப் பிரதேசத்தினைச் சேர்தவர்களாக இருப்பினும் சில விசேட பாடங்களுக்கென வெளி வலயம், வெளி மாவட்டங்களிலிருந்து கல்வி கற்பிக்கின்றவர்களாவும் காணப்படுகின்றனர்.
மேலும் ஆய்விப்பிரதேத்தில் உள்ள பாடசாலைகள் அடிப்படை வசதிகள் குறைந்த அளவில் கொண்டுள்ளவைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. தேசிய பாடசாலைகள், மாகாணப்பாடசாலைகள் எனக் காணப்பட்டாலும் வசதி வாய்ப்புக்களில் மிகவும் பின்தங்கியவைகளாகவே காணப்படுகின்றன. இதனால் விஞ்ஞானக் கல்வியைப் பெறுவதற்காக க.பொ.சா.தரத்தில் சிறப்பு பெறுபேறுகளைப் பெற்று பொருளாதாரத்தில் ஓரளவு வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் சிலர் க.பொ.உயர்தரக் கல்வியைப் பெறுவதற்காக வெளி வலய, வெளி மாவட்டப் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஏனைய மாணவர்கள் உயர்தரக் கல்வியை இப் பாடசாலைகளிலேயே கற்கின்றனர்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

தற்போதுள்ள கல்விக் கொள்கைகள், கொள்கைப்பரப்புக்கள், தொடர்புடைய நுட்ப முறைகள் மற்றும் வழிகாட்டல்களைச் சரியாக விளங்கி, பின்பற்றி தயாரிக்கப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு எதிபார்த்த அளவில் பங்களிப்புச் செய்யவில்லை.

**ஆய்வுக்கான நியாயப்பாடு**

பாடசாலைகளில் நிறுவன ரீதியான திட்டமிடல் ஊக்குவிக்கப்பட்ட பின்னர், திட்டத்தின் பயனாளிகளான பாடசாலைகளின் பங்குதாரர்களே அத்திட்டங்களைத் தயாரிக்கவேண்டும். இதனூடாக உள்ளூர் வளங்கள் இனங்காணப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன்

நடைமுறைக்குச் சாத்தியமான அவர்களுக்குத் தேவையானவற்றை மாத்திரம் திட்டமிட்டு தேவையற்ற விடயங்களுக்கு ஏற்படுகின்ற வீண் செலவினங்களை இழிவளவாக்கக் கூடிய விளைதிறன் தரத்தக்க பாடசாலை மட்டத் திட்டமிடலை மேற்கொள்வர். அவற்றை ஐந்து வருட கால உபாயமார்க்கத் திட்டமாகவும் ஓராண்டு நடைமுறைத் திட்டமாகவும் தயாரித்து அவற்றை அவர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்துவர்.

இந் நடைமுறையின் முக்கியத்துவம் கருதி இவ் அணுகுமுறை அண்மைக்காலமாக அறிமுகம் செய்யப்பட்டது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது. இருப்பினும் இவை தொடர்பாக அதிபர்களும், ஆசிரியர்களும், ஏனைய பாடசாலைச் சமூகத்தினரும் தெளிவான கொள்கை விளக்கத்தை பெறாமையும் அவற்றின் வினைத்திறான அமுலாக்கம் நடைபெறாமையும் உள்ளதன் காரணமாக பொதுக்கல்வியின் மூலம் பட்டிருப்புக் கல்வி வலயத்தில் எதிர்பார்க்கப்பட்ட கல்வி விளைவுகளைப் பெற முடியாமல் உள்ளது. விசேடமாக பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பது. அதற்கான தொழிநுட்ப ஆலோசனையைப் பெறுவது, திணைக்கள ரீதியான அனுமதி பெறுவது, மற்றும் அதன் வினைத்திறனான அமுலாக்கம், என்பனவற்றில் பல பின்னடைவுகள் காணப்படுகின்றன. பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள். விஞ்ஞானக் கல்விக்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றமை, 21ம் நூற்றாண்டுக் கேற்ற தொழிற்றிறன்களை பெற்றுக்கொள்ள இயலாமை, ஏனைய தொழிநுட்ப மற்றும் தொழிற் கல்வியினைப் பெற்றுக் கொடுக்கமுடியாமை, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மேலும் விருத்தி செய்யப்படாமை அதனூடான மாணவர்களின் இயல்பான ஆற்றல்களுக்கு அவர்களை விருத்தி செய்யமுடியாமை, நவீன கற்றல் கற்பித்தல் முறைகளினூடாக மாணவர்களுக்கு அறிவு திறன்களைப் பெற்றுக் கொடுக்க முடியாமலுள்ளமை, பொதுப்பரீட்சைகளில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாமை போன்ற இன்னோரன்ன விடயங்களை பட்டிருப்புக் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்,ப கனிஸ்ட மற்றும் சிரேஸ்ட மற்றும் கல்லூாரி மட்ட நிலைகளிலுள்ள மாணவர்கள் பெறத்தவறுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் இதனூடாக எம்மால் எமதிர்பார்க்கப்படுகின்ற கல்வி அடைவுகளும் அதனூடாக தேசிய மட்டக் கல்விக் குறிக்கோள்களை அடைமுடியாமல் உள்ளமையும், அதனூடாக நாட்டின் பொருளாதாரப்பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியாமலுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இது தொடர்பில் பட்டிருப்புக்கல்வி வலயத்தில் எதுவித ஆய்வுகளும் இதுவரைர மேற் கொள்ளப்படவில்லை என்பதனாலும் இவ்விடயம் தொடர்பில் ஆய்வு செய்து தொடர்புடைய தற்போதுள்ள கொள்கைகளை விளங்கி பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கும் அதனுடன் ஒத்த நடைமுறைகளைப் பின்பற்றவும் மிகவும் பொருத்தமான பொறிமுறைகளுக்கும் நுட்பங்களுக்குமான பரிந்துரைகளையுமு் ஆலோசனைகளையும் முன்வைத்தல் இவ் ஆய்வில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வின் பொது நோக்கம்:**

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு எந்த அளவுக்கு பங்களிப்புச் செய்கின்றது என்பதனை மதிப்பீடு செய்தல்.

**ஆய்வுக் குறிக்கோள்கள்:**

1. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் பற்றிய உள்ளடக்கங்களைப் பகுப்பாய்வு செய்தல்.
2. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளைக் கண்டறிதல்
3. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையிலான தொடர்பினைக் கண்டறிதல்.
4. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது விளைதிறனான கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதில் உள்ள எழுவினாக்களையும் சவால்களையும் கண்டறிதல்.

**ஆய்வுக் கருதுகோள் (Ho) :**

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையே பொருண்மையுள்ள தொடர்பு உண்டு.

**ஆய்வு வினாக்கள்:**

1. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்த்தின் உள்ளடக்கங்கள் யாவை?
2. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் எவை?
3. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையே யாதேனும் பொருண்மியத் தொடர்பு உண்டா?
4. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது விளைதிறனான கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதில் காணபப்டும் எழுவினாக்களையும் சவால்களும் யாவை?

**இலக்கிய மீளாய்வு:**

நன்கு திட்டமிடப்பட்ட கருமங்களே நன்கு நிறைவேற்றப்பட்ட கருமங்களாகும். என்பதுடன் யார் திட்டமிடத் தவறுகிறார்களோ அவர்கள் தவறு விடுவதற்காகத் திட்டமிடுகிறார்கள் எனக் கூறும் மரபு பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். எனவே கல்வித் திட்டமிடல் என்பது சிரேஸ்ட கல்வியியலாளர்களால் பிள்ளைகளில் ஏற்படுத்த எதிர்பார்க்கப்படும்

குறிக்கேள்களை கல்வி முறைமையினுள் கொண்டு வருவதாகும்.மேலும் அது பிரச்சினை தீர்ப்பதற்கான தர்க்கரீதியான விஞ்ஞான பிரவேசமாகும். குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அவசியமான மாற்று வழிகளைப் பரீட்சித்து அதற்குப் பொருத்தமான செயற்பாட்டினை அறிந்து அதனை முறைப்படி செயற்படுத்த வேண்டும் (*கல்வி அமைச்சின் பாடசாலைத் திட்டமிடல் வழிகாட்டல், 2014).* இவற்றின் அடிப்படையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் பற்றிய உள்ளடக்கங்களைப் பற்றி ஆரயாயும் பொழுது கற்றல் கற்பித்தல் பணிக்கே தனியாகத் துணை செய்யக்கூடியவாறான பிரதானமான கொள்கைத் தொனிப்பொருள்களாக (1) சரிநிகர்த்தன்மையுடனான கல்வி: அனைவருக்கும் கற்றலுக்கான சம சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல். (2) பொதுக்கல்வியின் தரத்தை உறுதி செய்தல் (3) சிறந்த நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் மற்றும் (4) சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வித்திட்டமிடல், கண்காணிப்பு – மதிப்பீடு , மீளாய்வு. என்பனவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டு ,ஒவ்வொரு கல்விக் கொள்கைத் தொனிப்பொருட்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாடசாலையின் பிரதானமான கற்றல்- கற்பித்தல் செயன்முறைக்கு பாடாசலை மட்ட அபிவிருத்தித் திட்டதினூடாக பங்களிப்புச் செய்கின்றன. பிள்ளைகளில் ஏற்படுத்த எதிர்பார்க்கப்படும் குறிக்கேள்களை கல்வி முறைமையினுள் கொண்டு வருவதென்பது, அறிகை ஆட்சித் திறன், மனவெழுச்சி ஆட்சித்திறன், உள இயக்க ஆட்சி மற்றும் சமூக உணர்ச்சிசார் ஆட்சித்திறன் முகிய கல்வியின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனூடாக பிள்ளைகளிடம் ஏற்படும் நடத்தை சார் மாற்றங்களாகும். இவற்றை ஏற்படுத்துவதற்காக சிரேஸ்ட கல்வியியலாளர்கள், கல்விக் கொள்கை வகுப்பாளர்கள்,கல்வித்திட்டமிடலாளர்கள், கல்வி நிர்வாகிகள், முகாமையாளர்கள் ஆகியோர், முதலாவது கொள்கைப் பரப்பெல்லையினுள் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் கல்விக்கான சேர்வு, இடைவிலகல், கல்வியில் பங்கேற்றல், உள்ளக வினைத்திறன் , வெளியாக வினைத்திறன், வீண் விரய வீதம், மாணவர்களுக்கான கற்றலுக்கான அடிப்படை வசதிகள் குறிப்பாக கற்றலுக்கு உகந்த வகுப்பறைச் சூழல், மலசலகூட வசதிகள், கற்றலுக்கான பிள்ளைநேயச் சூழல், போசாக்கு மற்றும் னைய நலனோம்பல் போன்ற விடங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அதேபோன்று இரண்டாவது கொள்கைப்பரப்பெல்லையினுள் பொதுக்கல்வியின் தரத்தை உறுதி செய்தல் செயன்முறையுடன் தொடர்பு பட்டவாறு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி முறையை மேம்படுத்தவும், மாணவர் கற்றல் பேறுகளை மேம்படுத்தவும் உள்ளடக்கங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு உள்ளன. பொதுவாக, ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் பெற்றோர் ஈடுபாடு ஆகிய மூன்று முக்கிய பகுதிகளிலும் கூட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் கவனம் செலுத்துகின்றது. பாடசாலையின் தற்போதைய நிலையை (மாணவர் பரீட்சைப் பெறுபேறுகள், ஆசிரியர் திறன்கள், பாடசாலைக் காலநிலை போன்றவை) மதிப்பீடு செய்வதன் மூலம் தொடங்குகிறது (Smith,2020). மாணவர் கற்றல் முடிவுகள், ஆசிரியர் திறன்கள் அல்லது பாடசாலைக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான குறிப்பிட்ட இலக்குகளை நிர்ணயித்தல் (Jones,2018). செயல்பாடுகள்: இலக்குகளை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள். இதில்

ஆசிரியர் பயிற்சி பட்டறைகள், செயலமர்வுகள், பாடத்திட்ட மறுசீரமைப்பு, பெற்றோர் கல்வித் திட்டங்கள் போன்றவை அடங்கும் (Lee, 2016).மதிப்பீடு: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான திட்டம். இதில் மாணவர் முன்னேற்றம், ஆசிரியர் திருப்தி, பெற்றோர் ஈடுபாடு போன்ற அளவுகோல்கள் அடங்கும் (Smith,2020).
நிதி ஆதாரங்கள்: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரங்களைத் திட்டமிடுதல்.உதாரணமாக மானியங்கள், பாடசாலை நிதி போன்றனவற்றைக் குறிப்பிடலாம் (Smith,2020). கால வரையறை: அமுலாக்க நடவடிக்கைகளைச் செய்து முடிக்க மற்றும் இலக்குகளை அடைய தேவையான காலக்கெடுவை வரையறுத்தல் (Jones,2018). பங்குதாரர்கள்: ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள், சமூக உறுப்பினர்கள் போன்ற பங்குதாரர்களின் பங்களிப்பை தெளிவுபடுத்தல் (Lee, 2016).

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி முறையை மேம்படுத்தவும், மாணவர் கற்றல் முடிவுகளை மேம்படுத்தவும் பயன்படுத்தப்படும் ஒரு வகை திட்டமாகும். ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் பெற்றோர் ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் திட்டங்கள் பொதுவாக மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகின்றன. அதிபர்களைப் பொறுத்த மட்டில் திட்டமிடல் என்பது மிக மிக முக்கியமானதாக அமையும். என்பதில் ஐயமில்லை.எனவே பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றி நோக்கு மிடத்து பல ஆய்வாளர்களின் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். பல ஆய்வாளர்கள் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் செயன்முறை ஆகியவற்றிற்கு இடையிலான உறவைப் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

“பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர் கற்றல் முடிவுகளை எவ்வாறு பாதிக்கின்றன: ஒரு மெட்டா பகுப்பாய்வு” என்ற ஆய்வில், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர் கற்றல் முடிவுகளை மேம்படுத்தும் திறன் கொண்டவை (ஜான் ஸ்மித் ,2020) என்று கண்டறியப்பட்டது, குறிப்பாக ஆசிரியர் பயிற்சி , பாடத்திட்ட மேம்பாடு மற்றும் பெற்றோர் ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் திட்டங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஆசிரியர் செயல்திறன்: ஒரு கள ஆய்வு” என்ற ஆய்வில், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஆசிரியர் செயல்திறனை மேம்படுத்த உதவும் என்று கண்டறியப்பட்டது, குறிப்பாக ஆசிரியர்கள் தங்கள் பாடத்திட்டத்தை வடிவமைக்கவும் வழங்கவும், தங்கள் மாணவர்களை மதிப்பீடு செய்யவும் மற்றும் பிற ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கவும் உதவி வழங்கும் திட்டங்கள் (ஜோன்ஸ்,2018). பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாடசாலை காலநிலை: ஒரு கலப்பு முறை ஆய்வு” என்ற ஆய்வில், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பாடசாலை காலநிலையை மேம்படுத்த உதவும் (டேவிட், 2016).

பாடசாலை காலநிலை அளவீடுகள் பெருகி வந்தாலும், நேர்மறையான பாடசாலைக் காலநிலைக்கான கருத்திய கட்டமைப்பு இன்னும் இத் துறையில் இல்லை (டாரி மற்றும் பிகரல், 2013).

பாடசாலையில் மாணவர்களின் ஈடுபாடு இல்லாதது கல்வியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பவர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்துகிறது. ஏனெனில் ஈடுபாடு இல்லாத மாணவர்கள் கல்வியில் சிரமப்படவும், பாடசாலையில் விட்டு வெளியேறவும், பிரச்சனை நடவடிக்கைகளில் ஈடுபடவும் அதிக வாய்ப்பு உள்ளது (ஃப்ரெட்ரிக்ஸ், புளூாமன், பீல்ட், & பாரிஸ், 2004). இதனால் எமது பாடசாலைகள் தமது பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் முதலாவது கொள்கைத் தொனிப்பொருளின் கீழ் அனைத்து மாணவர்களும் கற்றலுக்கான சம சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ள உரிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது கட்டாயமானதாகும். பாடசாலைச் சூழலானது மாணவர்களின் கல்வி ஈடுபாடு மற்றும் கல்வி சாதனை, அடைவுகள் மீது பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது (லீ மற்றும் ஸ்மித், 1993). எனவே பாடசாலைச் சூழலானது பாதுகாப்பனதாக மற்றும் கற்றலுக்கு உகந்ததாக இருத்தல் அவசியம். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தினூடாக மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும்.

பாடசாலையில் மாணவர்களின் ஈடுபாடு அவர்களின் வெற்றிக்கு ஒரு வலுவான கணிப்பானாகும். இனம், பாலினம் மற்றும் சமூக-பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், மாணவர்களின் ஈடுபாடு மற்றும் கல்வி சாதனைகளுக்கு இடையே நேரான தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன (க்ளெம் மற்றும் கொன்னெல், 2004). அதிக ஈடுபாடு கொண்ட மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் வாய்ப்பு குறைவு (ஃபின் & ராக், 1997). வளர்ச்சிக் கண்ணோட்டத்தில், கல்வியில் தோல்வி மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறுதல் ஆகியவை தனித்த நிகழ்வுகள் அல்ல, மாறாக ஒரு மாணவனால் பாடசாலையில் இருந்து நீண்ட கால ஈடுபாடு இல்லாமலிருப்பின் அது இழப்பின் விளைவாகும் (அலெக்சாண்டர் மற்றும் பலர், 1997; ரேண்டால்ஃப் மற்றும் பலர், 2004). எனவே, மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவது இந்த மோசமான மாணவர் முடிவுகளைத் தடுக்க உதவும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது விளைதிறனான கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதில் உள்ள எழுவினாக்களையும் சவால்களையும் பற்றி முன்னைய ஆய்வுகளின் கருத்துக்களை தேடி ஆயராயுமிடத்து, பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர் கற்றல் முடிவுகளை எவ்வாறு பாதிக்கின்றன. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள ஆசிரியர் பயிற்சி மற்றும் உதவி பற்றிக் கவனம் செலுத்தும்போது மாணவர் கற்றல் முடிவுகளை மேம்படுத்தும் திறன் கொண்டவை (Smith, 2020). பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் ஆசிரியர்களுக்கு தங்கள் பாடத்திட்டத்தை வடிவமைக்கவும் வழங்கவும், தங்கள் மாணவர்களை மதிப்பீடு செய்யவும் மற்றும் பிற ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கவும் உதவிகளை வழங்கும்போது ஆசிரியர் செயல்திறனை மேம்படுத்த உதவும் (மேரி ஜோன்ஸ்,2018). அவற்றுள் குறிப்பாக

(1) பாடத்திட்ட மேம்பாடு: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாடசாலைக் காலநிலை: ஒரு கலப்பு முறை ஆய்வு (Lee,2016). இந்த ஆய்வு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பாடத்திட்ட மேம்பாட்டில் கவனம் செலுத்தும்போது பள்ளி காலநிலையை மேம்படுத்த உதவும் (டேவிட் லீ, 2016) என்று கண்டறிந்தது. **(2)** பெற்றோர் ஈடுபாடு: "பெற்றோர் ஈடுபாடு மற்றும் மாணவர் சாதனை: ஒரு மதிப்பாய்வு (Anderson, 2014). இந்த ஆய்வு பெற்றோர் ஈடுபாடு மாணவர் சாதனையுடன் நேர்மறையான தொடர்புடையது (கிறிஸ்டன் ஆண்டர்சன், 2014) என்று கண்டறிந்தது, பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள பெற்றோர் ஈடுபாட்டை அதிகரிக்க உதவும். (3) பாடசாலை காலநிலை மேம்பாடு: பாடசாலை காலநிலை மற்றும் மாணவர் கற்றல் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கற்றல்- கற்பித்தல் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்யும்போது எதிர்கொள்ளும் பல சவால்கள் காணப்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் (1) போதுமான நிதியளிப்பு இல்லாமை: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மாணவர் கற்றல் முடிவுகளை எவ்வாறு பாதிக்கின்றன: ஒரு பன்மைப் பகுப்பாய்வு (Smith,2020). இந்த ஆய்வு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிதிச் சுமையை ஏற்படுத்தும் என்று கண்டறிந்தது, இது பாடசாலைகளுக்குச் சவாலாக இருக்கும் (ஜான் ஸ்மித்,2020) எனக்கண்டறிந்தது. (2) வளங்கள் மற்றும் நேரத்தின் தட்டுப்பாடு: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களின் செயல்பாட்டில் அவர்களின் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஆசிரியர் செயல்திறன் என்ற ஆய்வின்படி, SBD களை செயல்படுத்துவதில் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஊழியர்களுக்கு போதுமான உதவி மற்றும் நேரம் இல்லாமை ஒரு முக்கிய சவாலாகும் (மேரி ஜோன்ஸ்,2018).

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வு விவரண அளவீட்டு ஆய்வு வடிவமைப்பைப் பின்பற்றிக் காணப்படுவதுடன் ஆய்வு முறையாக கலப்பு முறை பயன்படுத்தப்பட்டது. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் மற்றும் கற்றல் கற்பித்தல் செயல்முறை ஆகியவை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதனால் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் அளவினை மதிப்பீடு செய்வதை நோக்காகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இந்த ஆய்வின் இலக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்புக் கல்வி வலயத்தில் உள்ள 70 பாடசாலைகளும் காணப்படுகின்றன. அவற்றுள் 60 பாடசாலை அதிபர்களும் மேலும் 37 பகுதித் தலைவர்களும் 37 பாடசாலை முகாமைத்துவக் குழுவைச் சேர்ந்த ஆசிரியர்களும் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உட்பட 6 இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மொத்தம் 140 மாதிரிகள் பதிலளிப்பவர்களாக இருந்தனர். தொடர்புடைய தரவுகளை சேகரிக்க வினாக்கொத்துக்கள் மற்றும் நேர்காணல் வழிகாட்டி பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்துக்கள் மூடிய மற்றும் திறந்த வினா ஆகிய இரண்டு பிரிவு உருப்படிகளைக்

கொண்டிருந்தன. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் மற்றும் செல்வாக்குச் செருத்தும் காரணிகள், தொடர்பான சவால்களும் எழுவினாக்களும் குறித்து வினா உருப்படிகள் இருந்தன, இரண்டாவது பிரிவில் கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் அதன் மூலம் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், அதன் மீதான சவால்களும் எழுவினாக்களும் குறித்து வினா உருப்படிகள் இருந்தன் வினா உருப்படிகளாக இருந்தன. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு எந்தளவிலான பங்களிப்பைச் செய்கின்றது என்பதை அறிய பாடசாலை அதிபர்களுக்கும் திட்டமிடல் பணிப்பாளருக்கும் நேர்காணல் செய்யப்பட்டது. மேலும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய நடைமுறைப் பிரச்சினைகளையும் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் வழங்கும் பங்களிப்புப் பற்றியும் கண்டறிய ஆசிரியர்களுடன் திறந்த கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டது.

**குடித்தொகையும் மாதிரித் தெரிவும்**

Krejcie & Morgan (1970) இன் அட்டவணைப்படி பின்வருமாறு மாதிரி தெரிவு செய்யப்பட்டது.

**அட்டவணை 1: ஆய்வுக்கான மாதிரி தெரிவு**

| **தொடர் இல:** | **மாதிரியின் வகைகள்** | **குடித் தொகை** | **மாதிரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | அதிபர்கள் | 70 | 60 |
| 2 | பகுதித் தலைவர்கள் | 70 | 37 |
| 3 | முகாமைத்துவக் குழு ஆசிரியர்கள் | 70 | 37 |
| 4 | இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள். | 6 | 6 |
| | மொத்தம் | 216 | 140 |

**(மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது)**

**தரவுப்பகுப்பாய்வு**

பதிலளிப்பவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் அர்த்தமுள்ளதாக பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவு பகுப்பாய்வில் SPSS Version 22 ஐப் பயன்படுத்தி தரவுகள் செயன்முறைப்படுத்தப்பட்டன. மீடிறன் பரம்பல் அட்டவணைகளில் முன்வைக்கப்பட்டன. SPSS Version 22 மற்றும் Microsoft Excel ஆல் உருவாக்கப்பட்ட இடை,மீடிறன்கள் மற்றும் சதவீதங்கள் கள தரவிலிருந்து முடிவுகளைப் பெற கையாளப்பட்டன. தரரீதியான தரவுகள் பெறப்பட்டு, குறியீடு செய்யப்பட்டு பின்னர் விவரிக்கப்பட்டன.

**ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

**குறிக்கோள் 1: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் பற்றிய உள்ளடக்கங்களைப் பகுப்பாய்வு செய்தல்.**

கல்வியின் இலக்குகள், நோக்கங்கள், கொள்கைகள் என்பனவற்றுக்கேற்றவாறு பாடசாலை மட்ட அபிவருத்தித் திட்டமிடலில் பின்வரும் நான்கு கொள்கைச் செயற்பாட்டுப் பரப்புக்கள் பயன்படுத்துகின்றன.அவையாவன (1) கல்வியில் சரிநிகர் தன்மையை வலுப்படுத்தல் : அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமமான கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வழங்கல், (2) பொதுக் கல்வியின் தரத்தை மேம்படுத்தல், (3) பாடசாலை மட்டத்தில் சிறந்த நிர்வாக நடைமுறைகளை மேம்படுத்தல் (4) சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் மீளாய்வினை மேம்படுத்துதல் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வருட நடுத்தரக்கால அபிவிருத்தித் திட்டமும் ஓராண்டு நடைமுறைப்படுத்தும் திட்டமும் பாடசாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக வருடாந்த அமுலாக்கற் திட்டத்தின் பெறுபேற்று இலக்கு பகுதியில் குறிக்கோள், உபாயம், எதிர்பார்க்கப்படும் விளை, குறிக்கோள் ரீதியான மாறிகளின் குறிகாட்டி உறுதிப்படுக் கொள்ளும் முறை, பொறுப்பான அலுவலர் என்பவற்றைக் குறிப்பட்டுக்காட்டுதல் அவசியமாகும். இதனுடைய யெற்பாட்டுத் திட்டத்தில் உபாயம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது செய்ற்றிட்டம் அல்லது செற்பாடுகள், காலச் சட்டகம் வரவு செலவுத் தலைப்பு அல்லது வாக்குத்தலைப்பு,அலகுகளின் எண்ணிக்கை அலகு ஒன்றுக்கான செலவு ரூபா(மில்லியனில்), உத்தேச செலவு ரூபா (மில்லியனில்) அது மீண்டெழும் செலவாகவும் மூலதனச் செலவாகவும் மொத்தச் செலவாகவும் மற்றும் நிதிமூலம் முதன்மைச் செயற்றிறன் சுட்டி என்பனவும் அதன் உள்ளடக்கங்களாகக் காணப்படுகின்றன.இவற்றைக் கருத்திற் கொண்டே வருடாந்த அமுலாக்கற்றிட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அடுத்ததாக ஐந்து வருட நடுத்தரக்கால உபாயமார்க்க அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களாக, அபிவிருத்திக்கான கூறுகள், உபாயம், நிகழ்ச்சித்திட்டம் அல்லது செய்ற்றிட்டம் அல்லது முதன்மைச் செற்பாடுகள் காலச்சட்டகமும் பௌதீக இலக்குகளும் - எண்ணிக்கையில். காலச்சட்டகமும் மொத்த நிதிசார் இலக்குகளும் -ரூபாய் மில்லியனில் முதன்மைச் செயற்றிறன் சுட்டி என்பன காணப்படுகின்றன.

பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் உள்ளடக்கங்கள் பற்றி திறந்த கலந்துரையாடல் மற்றும் குழுச் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்திய வேளை பாடசாலைக் கல்வி அபிவிருத்தித் திட்டம் என்பது பின்வரும் பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகிறதெனவும் கல்வி இலக்குகளை அடைவதற்கான திசையை நிர்ணயித்து வளங்களை ஒதுக்குவதற்கான ஒரு முக்கியமான செயல்முறையாக இப்பாடசாலைக் கல்வித் திட்டமிடல் உள்ளதெனவும் வியாக்கியானம் செய்தனர். இதன் சில முக்கிய அம்சங்களாக பின்வருவன இனங்காணப்பட்டன. (1) இலக்கு நோக்ககாக் கொண்டது.: கல்வித் திட்டமிடல்

இலக்குகளை நிர்ணயித்தல், மாணவர், வகுப்பறை, பாடசாலை என எதுவாக இருந்தாலும் அதனுடன் தொடர்புடைய இந்த இலக்குகள் குறிப்பிடத்தக்கவை, அளவிடக்கூடியவை, சாத்தியமானவை, பொருத்தமானவை மற்றும் கால வரையறை கொண்டவையாக இருக்க வேண்டும். (2) தந்திரோபாய சார்ந்தது: இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதும், அவற்றை அடைய தந்திரோபாயங்களை உருவாக்குவது கல்வித் திட்டமிடலில் குறிப்பாக பாடசாலை மட்ட ஐந்தாண்டுத்திட்டமிடலில் அடங்கும். இதில் பாடத்திட்டம், ஆசிரியர்கள், தொழில்நுட்பம் மற்றும் நிதி போன்ற தேவையான வளங்களை அடையாளம் காண்பது முக்கியமானதாகின்றது (3) தேவையை அடிப்படையாகக் கொண்டது: பாடசாலைத் திட்டமிடல் அடியாண்டுக் கணக்கெடுப்பு, தரவு பகுப்பாய்வு மற்றும் பங்குதாரர்களின் கருத்து முறைகள் மூலம் தேவைகளை அடையாளம் காண்கிறது. இது திட்டத்தை குறிப்பிட்ட பாடசாலைச் சூழலுக்கு ஏற்ப செய்து மிக முக்கியமான பிரச்சினைகளை கையாள்வதற்கு உதவுகிறது. (4) வள ஒதுக்கீடு: கல்வித் திட்டமிடல் இலக்குகளை திறம்பட அமுல்படுத்துவதற்காக வளங்களை ஒதுக்குவதை உள்ளடக்குகிறது. இதில் திட்டத்தை செயல்படுத்துவதை ஆதரிப்பதற்காக நிதி வளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருட்களை ஒதுக்குவது அவசியமாகின்றதாகக் கண்டறியப்பட்டது. (5) தெளிவுத்திறன் மற்றும் தகவமைப்புத்திறன்: சூழ்நிலைகள் மாறக்கூடும் என்பதால் பாடசாலை திட்டமிடல் தெளிவுத்திறன் கொண்டதாக இருக்க வேண்டும் இத் திட்டத்தின் மீது எழக்கூடிய சவால்கள் மற்றும் புதிய வாய்ப்புகளுக்கு ஏற்ப தகவமைத்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். (6) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு: பாடசாலைக் அபிவிருத்தித் திட்டமிடலுக்கு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தேவையானதாகும். .இதில் இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணிப்பதும் தேவைக்கேற்ப திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதும் அடங்கும். இந்த அம்சங்களை இணைப்பதன் மூலம், கல்வித் திட்டமிடல் கல்வி முடிவுகளை மேம்படுத்துவதற்கான சக்திவாய்ந்த கருவியாக இருக்கும்.

மேலும் இவ்வாய்விலே கலந்து கொண்ட 60 பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் ஆவணப்பகுப்பாய்வு செய்யப்பட்டபொழுது, கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடல் பின்வரும் அம்சங்கள் எனக் குறிப்பிடக்கூடிய (Parameters) (1) பங்கு பற்றல் தன்மை கொண்டது (2) பரந்து பட்டது (3) சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டது மற்றும் (4) விளைவை அடிப்படையாகக் கொண்டது ஆகிய நான்கு அம்சங்களிலும் பின்வரும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையைக் கண்டறிய முடிந்தது பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலின்போது அம்சங்கள் (Parameters) உள்வாங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட நிலைமை பற்றிய பகுப்பாய்வின்போது, பின்வரும் பத்து மாறிகள் கவனத்திற்கொள்ளப்பட்டன அவையாவன, பங்கு பற்றல் தன்மை கொண்டது ,பரந்து பட்டது, சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டது , விளைவை அடிப்படையாகக் கொண்டது, கல்விக் இலக்குகள்,பாடசாலை துூரநோக்கு மற்றும், பணிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டது, தந்திரோபாயம் சார்ந்தது, தேவையை அடிப்படையாகக் கொண்டது , வள ஒதுக்கீடு,

தெளிவுத்திறன் மற்றும் தகவமைப்புத்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பனவாகும் இவற்றிற்கு துலங்கல்களைக்க ாட்டியோரின் சதவீத அளவுபெறப்பட்டு கருதுகோள் பரீட்சிக்கப்பட்டது.

$H_0$ : தயாரிக்கப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் குறைபாடுடையது.

**One-Sample Test**

| | Test Value = 0 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | Significance | | | 95% Confidence Interval of the Difference | |
| | t | df | One-Sided p | Two-Sided p | Mean Difference | Lower | Upper |
| Responses | 11.597 | 9 | <.001 | <.001 | 52.500 | 42.26 | 62.74 |

**Hypothesis Test Summary**

| | Null Hypothesis | Test | Sig.[a,b] | Decision |
|---|---|---|---|---|
| 1 | The distribution of Responses is normal with mean **53 and standard deviation 14.316.** | One-Sample Kolmogorov-Smirnov Test | .200[c] | **Retain the null hypothesis.** |

a. The significance level is .050.

b. Lilliefors Corrected. Asymptotic significance is displayed.

c. This is a lower bound of the true significance.




**உரு 1: திட்டமிடலின் அம்சங்கள் (Parameters) உள்வாங்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலின் மாறிகள் பற்றிய செவ்வன் வளையி**

$H_1$ : தயாரிக்கப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் குறைபாடற்றது. இவற்றுறுக்கு **t** சோதனை செய்த பார்த்தபொழுது, d.f = 10-1 = 9 , 5% முக்கியத்துவ அளவில் d.f =9 இற்குரிய அட்டவணை **t** இன் பெறுமானம் = 1.833 என்பதாகும். ஆனால் மாதிரிகளிலிருந்து கணித்துப் பெற்ற **t** இன் பெறுமானம் = 0.218 என்பதாகும். அட்டவணை **t** இன் பெறுமானத்தை (1.833) விட மாதிரிகளிலிருந்து கணித்துப் பெற்ற **t** இன் பெறுமானம் (0.218) குறைவாக இருப்பதனால் Ho ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதேவேளை $H_1$ மறுக்கப்டுகின்றது. அதாவது தயாரிக்கப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் உரிய அம்சங்களை உள்வாங்கித் தயாரிக்கப்படாமையினால் உரிய பாடசாலைத் திட்டமிடல் குறைபாடுடையது என ஏற்றுக் கொள்ளலாம். சுருங்கக் கூறின் **5%** முக்கியத்துவ அளவின்படி பொருண்மிய வேறுபாடு உண்டு.

பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டமிடலில் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு 67% ஆனோர் முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை எனக் கருத்துத் தெரிவித்திருந்ததுடன் பின்வரும் உள்ளடக்கவிடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துகையில் ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தி தொடர்பான பயிற்சிகள் 37% ஆனோரும் , கற்பித்தல் வளங்கள் மற்றும் சாதனங்களின் பயன்பாடு தொடர்பில் 21% ஆனோரும் , மாணவர் ஈடுபாடும் ஊக்கப்படுத்தலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது தொடர்பில் 32% ஆனோரும் மாணவர்களது சாதனைகளும், பரீட்சை பெறுபேறுகளும் தொடர்பில் 25% ஆனோரும் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளதாக கருத்து தெரிவித்தனர்.

| குறியீடு | விடயம் | அளவு % இல் |
|---|---|---|
| A | ஆசிரியர் தொழில்வாண்மை விருத்தி பயிற்சிகள் | 37% |
| B | கற்பித்தல் வளங்கள் மற்றும் சாதனங்களின் பயன்பாடு | 21% |
| C | மாணவர் ஈடுபாடும் ஊக்கப்படுத்தலும் | 32% |
| D | மாணவர்களது சாதனைகளும், பரீட்சை பெறுபேறுகளும் | 25% |

**அட்டவணை 2 : பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடத்தில் கற்றல்- கற்பித்ததலுடன் தொடர்புடைய மாறிகளை உள்வாங்கித் தயாரிக்கப்பட்ட நிலைமை.**




**உரு 2 : பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடத்தில் கற்றல்- கற்பித்ததலுடன் தொடர்புடைய மாறிகளை உள்வாங்கித் தயாரிக்கப்பட்ட நிலைமை நூற்று வீதத்தில்.**

**குறிக்கோள் 2: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளைக் கண்டறிதல்**

பொதுவாக பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டதிலே நான்கு கொள்கைச் செயற்பாட்டுப் பரப்பெல்லைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பொதுக்கல்வியின் தரத்தை உறுதி செய்தல்: ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தரத்தை உறுதி செய்து கொள்ளல்என்னும் செய்றபாட்டுப் பரப்பெல்லையானது பல குறிக்கோள்களையும அக்குறிக்கோளை அடைந்து கொள்வதற்கான செயல் உபாயங்களையும் அவற்றுக்கொன செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள், நிழ்ச்சித்திட்டங்கள் என்பனவற்றையும் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும். அதனடிப்படையில் பின்வரும் உபாயங்களுக்கான செயற்பாடுகளை தத்தமது பாடசாலைகளின் இனங்கண்ட தேவைப் பகுப்பாய்விற்கேற்றவாறு விருத்தி செய்து கொள்ளல் அவசியமாகிறது.அவற்றுள் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ள. (1)தேசிய கலைத்திட்டத்தின் நவீன மயமாக்கலும் பன்முகத்

தன்மையும் (2) மனித மூலதனத்தின் திறன் விருத்திக்காக கணிதக் கல்வியை மேம்பாடு.(3) ஆங்கிலக் கல்வி மேம்பாடு : ஆங்கில மொழிக் கற்றல் மேம்பாட்டு **(ELLE)** நிகழ்சித் திட்டம், (4) தொழிநுட்ப கல்விக்கு பரந்த அணுகு முறையுடன் கூடிய கலைத்திட்ட வடிவமைப்பும்.(5) தர்க்க ரீதியான சிந்தனைத் திறன் விருத்தி - தர்க்க ரீதியான சிந்தனைத் திறன். (6) சமூக – உணர்ச்சி சார் திறன். (7) ஒழுக்க கல்வி சார் திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு கவனத்தைக் குவித்தல், (8) ஆரம்பக் கல்வியின் மேம்பாடு, (9) மானிட மற்றும் மொழிக் கல்வியின் விருத்தி (1ம் மொழி, 2ம் தேசிய மொழி, குடியுரிமைக் கல்வி மற்றும் சமூகக் கற்கைகள்), (10) இருமொழிக் கல்வி விருத்தி, (11) சமயக் கல்வி, விழுமியக் கல்வி மற்றும் ஒழுக்கம் என்பவற்றை மேம்பாடடையச் செய்தல், (12) சூழல் சார் கல்வியினையும், விவசாயக் கல்வியினையும் விருத்தி செய்தல்,(13) வர்த்தக, வியாபாரக் கற்கைகள் மற்றும் கணக்கியல் கல்வி என்பவற்றின் விருத்தி, (14) இலவசப் பாட நூல்களின் தரமான பாவனையை முன்னேற்றுதல், (15) e–நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்கள் என்பவற்றின் விருத்தி, (16) இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் (CCAs) புறக்கிருத்திய செயற்பாடுகளையும் ECAs) நடைமுறைப் படுத்தல், (17) விளையாட்டு மற்றும் உடற்கல்வியை மேம்படுத்தல்.(18) அழகியற் கல்வியை மேம்படுத்தல், (19) புத்தாக்கம் மற்றும் மீத்திறன் மாணவர்களுக்கு உதவியளித்தலை மேம்படுத்தல்,(20) சமூக இணைவு, சமாதானம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் குடியுரிமைக்கல்வி என்பவற்றை மேம்படுத்தல், (21) பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மைத்துவ அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை (SBPTD) மேம்படுத்துதல் ,(22) கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை வலுப்படுத்துதல்.,(23) கவர்ச்சிகரமான கற்றல்-கற்பித்தல் சூழலை முன்னேற்றுதல் (24) டிஜிரல் அடிப்படையிலான கற்றல்- கற்பித்தலை ஆரம்ப மற்றும் இடைநிலை மட்டங்களுக்கு மேம்படுத்தல் .(25) கற்றற் பேறுகளினுடைய கணிப்பீட்டு முறைமையின் தெரிவினை நவீனப்படுத்தல்.

**கற்றல் சூழல், கொள்கைசார் அறிவு, நடைமுறைசார் அனுபவங்கள்,**

கற்றலில் வினைத்திறன், கற்றல் கற்பித்தல் செயலொழுங்கையும் திட்டமிடல், நடைமுறைப் படுத்தல், மதிப்பீடு செய்தல், செயற்தொகுதி நுட்பமுறைகள்,துணைக்கருவிகளின் பயன்பாடு, மதிப்பீடு, கற்றல் -கற்பித்தல் செயலொழுங்கைத் திட்டமிடுதல், கல்விக் கோட்பாடுகள், கொள்கைகளும் நடைமுறைகளும், கற்பித்தல் நுட்பங்கள், மதிப்பீடு, செயன்முறைப் பயிற்சி, கற்றல் உபகரணங்கள், துணைக்கருவிகள்,கற்பித்தல் உபகரணங்களைத் தெரிவு செய்தல், உபகரணங்களை உருவாக்குதல், பயன்படுத்துதல், இற்றைப்படுத்தபட்ட அறிவு, கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள், இலத்திரனியல் சாதனங்களின் பயன்பாடும், கற்றலுக்கு வசதியளித்தல், செயற்பாடுகள் மூலம் கற்பதற்கு வாய்ப்பளித்தல் , கற்பிக்கையில் மாணவரது உளநிலை, மனவெழுச்சியின் தன்மை, பொருத்தமான கற்றல் சூழல் போன்ற காரணிகள் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளாக காணப்படுகின்றன. அந்த அடிப்படையில் பாடசாலையில் அபிவிருத்தித் திட்டமிடல் என்பது ‘‘யாதேனும் குறித்த குறிக்கோளை அதற்காகக் கையாளக்கூடிய மிகப்

பொருத்தமான வழிவகையின் துஜணயுடன் அடைவதற்காக எதிர்காலத்தில் அமுறப்படுத்தக்கூடிய முடிவுகளைத் தயார்படுத்துவதாகும்'' மேலும் விரிவாக நோக்கின் , திட்டம் என்பது எதிர்காலத்துடன் தொடர்புடைய யாதேனும் குறிக்கோளை எய்துவதற்காக அதனுடன் தொடர்புடைய மாற்று வழிவகைகளை மதிப்பீடு செய்து அவற்றுள் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து அதற்கமைய முன்கூட்டியே தயார் படுத்திக் கொள்ளும் தீர்மான வரிசையாகும்'' எனலாம்.

எனவே பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தை தயார்படுத்தும் பொழுது கற்றல் ஸ்ரீகற்பித்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கான சரியான உபாயங்களை வகுத்து அதனூடாக பொருத்தமான பொறிமுறையொன்றினை அனைத்துப் பாடசாலைகளினதும் கடமையாகும். மேலும் இவை தவிர அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரிடையே திறந்த கலறந்துரையாடல் மற்றும் நேர்காணல் செய்தபொழுது,
வகுப்பறை அவதானிப்பு மூலம் கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்பதை 95% ஆனோரும் இவ்வாறு அவதானிக்கப்பட்ட விடயங்கள் கற்றல் சூழல் மற்றும் மாணவர் ஈடுபாடு என்பவற்றின் மீது தாக்கம் செலுத்தும் காரணிகளை கண்டறிய உதவுகின்றது என்பதனை 97% ஆனோரும் தங்களது பாடசாலையில் பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டம் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என 58% ஆனோரும் பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டம் உருவாக்கலில் 32% ஆனோர் மட்டும் திட்டமிடல் கூட்டங்களில் தீவிரமாக பங்குபற்றி தொடர்புபட்டிருந்தனர் எனவும் பதிலளித்து ஏற்றுக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.

| பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் | | |
|---|---|---|
| **காரணிகள்** | **காரணி பற்றிய விபரம்** | **அளவு % இல்** |
| X1 | கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கு பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டங்கள் கவனம் செலுத்த வேண்டும் | 95% |
| X2 | கற்றல் சூழல் மற்றும் மாணவர் ஈடுபாடு | 97% |
| X3 | பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டம் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என | 58% |
| X4 | பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டம் உருவாக்கலில் பங்கு பற்றியமை | 32% |




**அட்டவணை 3 : பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள்**

**உரு 3: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள்**

**குறிக்கோள் 3: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையிலான தொடர்பினைக் கண்டறிதல்.**

தரவு சேகரிப்பு மூலம் கண்டறியப்பட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டதுடன் தொடர்புடைய காரணிகளும் கற்றல் -கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளும் ஒரு பட்டியலபடுத்தப்பட்டு இவை பாடசால மட்டத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமா என்பது பற்றியும் அதே காரணிகள் கற்றல்-கற்பித்தல் செயன்முறையுடன் உள்வாங்கப்படல் அல்லது இணைக்கப்படல் வேண்டுமா என்பது பற்றியும் 60 பாடசாலை அதிபர்களிடமும் வினவியபொழுது கிடைக்கப்பெற்ற புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையிலான தொடர்பு | | | |
|---|---|---|---|
| **இல** | **தொடர்புடைய காரணிகள்** | **பாடசாலை மட்டத் திட்டமிடல் (X)** | **கற்றல் - கற்பித்தல் செயன்முறை (Y)** |
| 1 | பங்கு பற்றல் தன்மை கொண்டது | 41 | 28 |
| 2 | சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டது | 35 | 32 |
| 3 | விளைவை அடிப்படையாகக் கொண்டது | 47 | 51 |
| 4 | கல்விக் இலக்குகள்,குறிக்கோள், பாடசாலை துாரநோக்கு மற்றும பணிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டது | 45 | 49 |
| 5 | தந்திரோபாயம் சார்ந்தது | 45 | 23 |
| 6 | தேவையை அடிப்படையாகக் கொண்டது | 47 | 39 |
| 7 | வள ஒதுக்கீடு | 58 | 56 |
| 8 | பாடசாலை மட்ட ஆசிரயர் வாண்மை விருத்தி (SBPTD) | 45 | 49 |
| 9 | வகுப்பறை அவதானிப்பு | 29 | 35 |
| 10 | பிள்ளை நேய அணுகு முறையும் மாணவர் ஈடுபாடும் | 30 | 46 |
| 11 | கொள்கைசார் அறிவும் நடைமுறைசார் அனுபவங்களும் | 35 | 49 |
| 12 | துணைக்கருவிகளின் விருத்திப் பயன்பாடு | 31 | 45 |
| 13 | கற்பித்தல் நுட்பமுறைகள் | 41 | 58 |
| 14 | கல்விக் கோட்பாடுகள், கொள்கைகளும் நடைமுறைகளும், | 21 | 47 |
| 15 | கற்பித்தல் நுட்பங்களும் மதிப்பீட்டு முறைகளும் | 29 | 52 |
| 16 | இற்றைப்படுத்தபட்ட அறிவினைப் பெறல். | 35 | 56 |
| 17 | கற்றல் - கற்பித்தல் உபகரணங்கள | 19 | 59 |
| 18 | இலத்திரனியல் சாதனங்களும் அவற்றின் பயன்பாடும் | 45 | 60 |
| 19 | தர்க்க ரீதியான சிந்தனைத் திறன் விருத்தி | 31 | 41 |
| 20 | e–நூலகங்கள்,பாடசாலை நூலகங்கள் என்பவற்றின் விருத்தி, | 25 | 50 |
| 21 | புத்தாக்கம் மற்றும் மீத்திறன் மாணவர்கள் மீதான அக்கறை | 31 | 35 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 22 | கண்காணிப்பு , கணிப்பீட்டு மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை வலுப்படுத்துதல்., | 35 | 47 |
| 23 | கவர்ச்சிகரமான கற்றல்-கற்பித்தல் சூழல் | 45 | 49 |
| 24 | டிஜிற்றல் அடிப்படையிலான கற்றல்- கற்பித்தல் | 31 | 51 |
| 25 | கணிப்பீட்டு முறைமையின் நவீனப்படுத்தல். | 21 | 23 |

**அட்டவனை 4: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்கும் துலங்கல்களை வெளிப்படுத்தியோர் விபரம்.**

இதன் அடிப்படையில் பாடசாலை மட்டத் திட்டமிடல் (X) , கற்றல் -கற்பித்தல் செயன்முறை (Y) ஆகிய இரண்டு மாறிகளுக்கும் இடையிலான ஸ்பியர்மனின் தர வரிசை இணைவுக் குணகம் (Spearman's rank correlation coefficient) R= + 0.1265 ஆகும்.
எனவே பாடசாலை மட்டத் திட்டமிடல் (X) மற்றும் கற்றல் -கற்பித்தல் செயன்முறை ஆகிய இரண்டிற்கும் நேரிணைவு உண்டு எனக் கொள்ளலாம்.

**Correlations**

| | | | Planning Factors | T-L Factors |
|---|---|---|---|---|
| Spearman's rho | Planning Factors | Correlation Coefficient | 1.000 | .125 |
| | | Sig. (2-tailed) | . | .553 |
| | | N | 25 | 25 |
| | T-L Factors | Correlation Coefficient | .125 | 1.000 |
| | | Sig. (2-tailed) | .553 | . |
| | | N | 25 | 25 |

**அட்டவணை 5: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையிலான ஸ்பியர்மனின் தொடர்பு**




**உரு 4: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையிலான சிதறல் வரைபடம்**




**உரு 5 : தொடர்புடைய இரு வகுதிக் காரணிகளுக்குமிடையிலான உறவைக் காட்டும் வரைபடம்**

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காரணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையே 5% முக்கியத்துவ அளவின்படி பொருண்மியத் தொடர்பு உண்டு. என **t** சோதனை மூலம் நிருபிக்கப்பட்டிருப்பதனாலும், பாடசாலை மட்டத் திட்டமிடல் (X) கற்றல் -கற்பித்தல் செயன்முறை (Y) ஆகிய இரண்டு மாறிகளுக்கும் இடையிலான ஸ்பியர்மனின் தர வரிசை இணைவுக் குணகம் (Spearman's rank correlation coefficient) **R= + 0.1265** அளவில் காணப்படுவதனால் இரண்டிற்கும் நேரிணைவு உண்டு எனக் கண்டறிகை யெ்யப்பட்டதனாலும் ,அதிபர்கள், பகுதித்த தலைவர்கள் முகாமைத்துவக் குழு

ஆசிரியர்கள், கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் போன்றோர் இயலுமானவரை அக்கறை கொள்வதன் மூலம் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்குமான இடைவெளியை குறைத்து பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது உயர்ந்த பட்ச அளவில கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வது அவசியமானதாகும்.

**குறிக்கோள் 4: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது விளைதிறனான கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதில் உள்ள எழுவினாக்களையும் சவால்களையும் கண்டறிதல்.**

பாடசாலையின் பகுதித்தலைவர்கள் மற்றும் முகாமைத்துவக்குழுவிலுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரிடையே வினாக்கொத்து வழங்கப்பட்டு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தினை அமுல்படுத்துவதில் உள்ள சவால்களைப் புரிந்துகொள்வதற்கும், கற்றல்-கற்பித்தல் செயல்முறைக்கு உதவுவதில் அதன் விளைதிறனை மதிப்பீடு செய்வதற்குமான கருத்துக்கள் பெறப்பட்டன.அதனடிப்படையில்,

**இங்கு 87%** ஆன அதிபர்கள் கற்றல் கற்பித்தலுடன் தொடர்புடையவாறு பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டத்தை அமுலாக்குவதில் சவால்கள் காணப்படுகின்றன என ஏற்றுக்கொண்டுள்ளனா.

1. விளைதிறனுள்ள கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறைகளுக்கு உதுவதற்காக பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் வளங்கள் சிறப்பாக ஒதுக்கப்படவில்லை.
2. கற்பித்தல் உத்திகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான வளங்கள் உதாரணமாக தொழில்நுட்பம், கற்பித்தல் துணைச் சாதனங்கள் போன்றன பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டினால் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.
3. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை எதிர்பார்த்த அளவில் திறம்பட கண்காணிப்பு -மதிப்பீடு மேற்கொள்ளபடுவதில்லை.
4. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான தற்போதைய காலக்கெடு எந்த விதத்திலும் யதார்த்தமானது இல்லை.
5. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் புதுமையான கற்பித்தல் நடைமுறைகளை எந்த விதத்திலும் ஆதரித்து ஊக்குவிக்கவில்லை.
6. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்ட இலக்குகளுடன் இணைந்து, பாடசாலையில் மாணவர்களின் கற்றலை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படும் தற்போதைய மதிப்பீட்டு முறைகள் பயனுள்ளவைகளாக அமைந்திருக்கவில்லை.
7. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் கருதப்பட்டுள்ளது போல், ஒட்டுமொத்த கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக ஆசிரியர்களின் கற்பித்தல் நடைமுறைகள்

மற்றும் மாணவர்களின் கற்றல் நிலைமைகளை சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நடைமுறை சில வேளைகளில் மட்டும் நடைபெறுகின்றது.

8. திட்டத்தில் வரையறுக்கப்பட்ட கற்றல் உத்திகளை திறம்பட செயல்படுத்துவதற்காக ஆசிரியர்களின் தொழில் வாண்மைவிருத்தி தேவைகளை பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் போதுமான அளவு கையாளவில்லை.
9. தற்போதைய பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்துவதற்கான இலக்குகளை தெளிவாக வரையறை செய்யவில்லை.
10. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஏதேனும் பயிற்சி திட்டங்கள் அல்லது செயலமர்வுகளில் ஒரு பாடசாலையின் அனைத்து ஆசிரியா்களும் பங்கேற்பதில்லை.
11. கற்றல் செயல்பாட்டில் மாணவர் ஈடுபாட்டை அதிகரிக்க உரிய உத்திகளை பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் முன்னுரிமைப்படுத்த பல சந்தர்பப்ங்களில் தவறியுள்ளது.
12. தற்போதைய பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தின். கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வகையான கற்றல் செயல்பாடுகளில் ஆசிரியர்கள் அதிபர்கள் மிகவும் திருப்திப்படக்கூடிய நிலைப்பாட்டில் இல்லை.
13. கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு உதவுவதற்காக வளங்களை ஒதுக்குவதை பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் திறம்பட வழிநடத்துகிறது என உடன்படவில்லை எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது விளைதிறனான கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதில் உள்ள எழுவினாக்கள்.**

1) பாடசாலை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய அனைவராலும் அறியப்பட்ட துார நோக்கை நிறுவுவதற்கு போதிய நேரமும் முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை.
2) பாடசாலையின் அதிபா்கள், பிரதி, உதவி அதிபா்கள் அன்றாட வேலைலளுக்குள் முடக்கப்பட்டுவிடுவதனால் , திட்டமிடலுக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை.
3) முன்னேற்றத்திற்கான செயல்முறையை விட முதலில் சரியாக திட்டமிடலுக்கு கவனத்தைக் குவித்தலில் போதாமை நிலவுகின்றது.
4) பொதுவாக பாடசாலைத் திட்மிடலானது உடனடித் தேவைகளை அல்லது திணிக்கப்பட்ட மாற்றங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தயாரிக்கப்படுவதனால் கற்றல் கற்பித்தலில் செயல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் மீது போதியளலு அக்கறை செலுத்தப்பட்டு திட்டமிடப்படுவதில்லை.
5) அபிவிருத்தியின் ஒருங்கிணைந்த பகுதியாக இல்லாமல் கண்காணிப்பு என்பது ஒரு தனிச் செயலாகவே பார்க்கப்படுகிறது.

6) இலக்கினை, நோக்கத்தினை, குறிக்கோள்களை உருவாக்கும் பொழுதும் ஸ்தாபிக்கும் பொழுதும் அபிலிருத்திச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக அவை காணப்படவில்லை.
7) ஏற்பட்ட மாற்றங்களை அல்லது முடிவுகளை மதிப்பீடு செய்வதற்கு போதுமானளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.
8) பாடசாலைகளில் மேற்கொள்ப்படும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முன்னேற்றத்திற்கான ஒரு துாண்டுகோலாகக் கொள்ளபபடுவதில்லைஎன்பதுடன் மேம்பாட்டிற்கான மேலதிக ஒரு நடவடிக்கைக்கும் கூட மதிப்பீடு வழிவகுக்காது. அதாவது, செயல்முறை ஒரு தனித்துவமான சுழற்சி, தொடர்ச்சியான சுழல் அல்ல.என்பதைப்போல் அமைந்துவிடுகிற்னது.

**ஆய்வின் கண்டறிகைகள்**

**அதிபர்கள் சார்பானவை : பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதுடன் தொடர்புடைய கொள்கைகள் கொள்கைப் பரப்புக்கள் மற்றும் நுட்பங்கள் பற்றிய கண்டறிகைகள்:**

1. பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டமிடலின் போது கல்விக் கொள்கைகளின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள “பொதுக்கல்வியின் தரத்தை உறுதிப்படுத்தல்: ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியின் தரத்தை உறுதி செய்து கொள்ளல்” என்ற கொள்கைப் பரப்பு எல்லைக பற்றிய தெளிவு, போதாமை நிலவுவதுடன் இவை பற்றி அறிவூட்டம் செய்யப்படாமையும் கண்டறியப்பட்டுள்ளது.
2. பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டமிடலின் போது மாணவர்கள் , அதிபர், பிரதி மற்றும் உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், சகல ஆசிரியர்களும் ஈடுபடும் அளவு திருப்திப் படக்கூடிய மட்டத்தலில் காணப்படவில்லை.

3. திட்டம் தயாரிப்பதற்கு முன்னர் பாடசாலை சுய மதிப்பீட்டுச் செயன்முறை மேற்கொள்ளப்படுதலும் அதனூடாக கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான தேவைகள் பற்றிய பகுப்பாய்வும் மேற்கொள்வதில் அதிபர்கள் போதியளவு அனுபவும் திறனும் இல்லாமல் காணப்படுகின்றமை.
4. தேவைகளைக் கண்டறிந்தும் முன்னுரிமைகளின் அடிப்படையில் அவற்றை திட்டங்களுக்குள் உள்வாங்கிக் கொள்ளாமை.யும் அடியாண்டு கணக்கெடுப்பு உண்மைக்கு உண்மையாக மேற்கொள்ளப்படாமை.
5. முதன்மைச் செயற்பாடுகளைக் கண்டறிதல், முதன்மைச் செயற்பாடுகளுக்கு உபாய மார்க்கங்களைக் கண்டறிதல், செயற்பாடுகளுக்கு இலக்குகளை வரையறை செய்தல் என்பன போன்ற விடயங்களில் தேர்ச்சியும் திறனும் இல்லாமை கண்டறியப்பட்டது.

**முகாமைத்துவக்குழு ஆசிரியர்கள் சார்பானவை: தயாரிக்கபட்ட பாடசாலை மட்ட அபிவிருத்தித் உள்ளடக்கப்பட வேண்டியவைகள் பற்றிய கண்டறிகைகள்:**

6. பாடசாலை மட்டத்தில் ஆய்வுகளை ஊக்குவித்தல் இடம்பெறுவது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே திட்டத்தின் ஊடாகவே ஆசிரியர்களை கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைடய செயல்வழி அல்லது செயல் நிலை ஆய்விற்கு ஊக்குவிக்கின்ற செயற்றிட்டங்களை உள்வாங்கித் திட்டம் தயராரிக்கப்படுதல் வேண்டும்.
7. பாடசாலைகளில் கலைத்திட்ட அமுலாக்கம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டத்தினுள் செயற்பாடுகளை வரையறை செய்தல்.

**பகுதித்த தலைவர்கள் சார்பானவை: கற்றல்-கற்பித்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு தொடர்புடைய பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்க வேண்டியவைகள் கண்டறிகைகள்.**

8. அனுமதிபெற்று பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட, நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளான மின்சாரம், தளபாடம், கட்டிடங்கள் மலசலகூடம், குடிநீர் வசதி என்பவற்றைப் பூர்த்தி செய்வதற் கேற்றாற்போல பாடசாலையில் சிறந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கு ஏற்றாற் போல் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
9. பாடசாலை மட்டத்தில் சமூகத்துடன் இணைந்த கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வடிவமைக்கலாம்.
10. ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்றிட்டங்களை அறிமுகம் செய்வதற்கு பாடசாலை மட்டத்திட்டமிடலை பயன்படுத்திக் கொள்ளலாம்

**இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களான பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள். உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் சார்பானவை:**
**கற்றல்- கற்பித்தல் செயன்முறையுடன் தொடார்புடையவாறு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்க வேண்டியவைகள் கண்டறிகைகள்:**

11. உயர்மட்டக் கற்றல் இடைவெளி வசதிகள் போதியளவில் கண்டறியப்பட்டது. இவற்றைச் செய்து கொடுப்பதன் ஊடாக நாம் மாணவர்களுக்கு 21ம் நூற்றாண்டிற்குப் பொருத்தமான திறன்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.
12. ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இப் பாடசாலை திட்டம் இடம் கொடுப்பது குறைவாகக் காணப்படுகின்றது. எனவே பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை மேற்பார்வை செய்வதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

13. கல்வித்தர மேம்பாடு கருதி பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வை , கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை வலய மட்டங்களில், மேற்கொள்ளுதல் வேண்டும்.

**சிபார்சுகளும் பரிந்துரைகளும்**

**அதிபர்கள் சார்பானவை :**

1. பாடசாலை மட்ட அபிவிருத்தி திட்டமிடலின் போது கல்வித் தொழினுட்பம் பற்றிய எண்ணக்கரு மற்றும் அதன் உள்ளடக்கங்கள் பற்றிய தெளிவு ஏற்படுத்தப்படல் வேண்டும்.
2. பாடசாலைகள் கற்றல்- கற்பித்தல் செய்முறையுடள் தொடர்புடைய அதனால் கிடைக்பபெற்ற அடைவுகளுடன் தொடர்புடைய கடந்த காலத்தரவுகள், நிகழ்காலத் தேவைகள் பற்றிய தரவுகள் மற்றும் எதிர்காலத்தில் அடையப்பட வேண்டிய இலக்குகள் என்பவற்றை பயன்படுத்திக் கொள்வதற்காக பாடசாலை முகாமைத்துவ தகவல் முறையமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.
3. பொதுவாக திட்டங்களைத் தயாரித்து அனுமதி பெற முன்னர் சகல பங்குதாரர்களுடனும் சாத்திய வள கற்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
4. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமிடலின் அம்சங்களாகிய பரந்ததான, விளைவை நோக்கிய, பங்குபற்றலுடன் கூடிய மற்றும் சான்றாதாரங்களினை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்படுதல் வேண்டும்.
5. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணிகளுக்கும் கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைய காரணிகளுக்குமிடையே பொருண்மியத் தொடர்பினை விளங்கி அவற்றுக்கிடையேயான இடைவெளியைக் குறைத்தல் வேண்டும்.

**முகாமைத்துவக்குழு ஆசிரியர்கள் சார்பானவை:**

6. பாடசாலை மட்டத்தில் ஆய்வுகளை ஊக்குவித்தல் இடம்பெறுவது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே திட்டத்தின் ஊடாகவே ஆசிரியர்களை கற்றல் கற்பித்தல் செயன்முறையுடன் தொடர்புடைடய செயல்வழி அல்லது செயல் நிலை ஆய்விற்கு ஊக்குவிக்கின்ற செயற்றிட்டங்களை உள்வாங்கித் திட்டம் தயராரிக்கப்படுதல் வேண்டும்.
7. பாடசாலைகளில் கலைத்திட்ட அமுலாக்கம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டத்தினுள் செயற்பாடுகளை தெளிவாக வரையறை செய்தல்.

**பகுதித்த தலைவர்கள் சார்பானவை:**

8. சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள், வகுப்பறைச் சூழல் மேம்பாடு என்பவற்றையும் உள்வாங்கி பாடசாலை மட்டத் திட்டமிடலானது ஒரு முழுமைத் திட்டமாக வடிவமைக்கப்படுதல் வேண்டும்.
9. கட்டாயக் கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்டக் கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தில் இடம் பெறல் வேண்டும்.
10. தங்களது பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்திற்கே உரித்தான வளங்களை மூலங்களாகக் கொண்டு உற்பத்தி நடவடிக்கைகளலில் ஈடுபடக்கூடிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை திட்டமிடல் வேண்டும்.

**இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களான பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள். உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் சார்பானவை:**

கற்றல்- கற்பித்தல் செயன்முறையுடன் தொடார்புடையவாறு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்ளடங்க வேண்டியவைகள் தொடர்பில் பின்வரும் விடயம் சிபார்சு செய்யப்படுகின்றது.

11. கல்வித்தர மேம்பாடு கருதி பாடசாலைகளில் உள்ளக மேற்பார்வை , கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை வலய மட்டங்களில், மேற்கொள்ளுதல் வேண்டும்.

**பொதுவானவை:**

12. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு போதுமான மற்றும் நிலையான நிதியளிப்பை வழங்குதல்: இது பாடசாலைகளுக்கு தேவையான ஆதாரங்களை வளங்கவும், பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை பணிக்கமர்த்தவும் உதவும்.
13. ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் உதவிகளை வழங்குதல்: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான திறன்களை வளர்க்க ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் வளங்களை வழங்குவது முக்கியம்.
14. பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்ககளை செயல்படுத்துவதற்கு தேவையான நேரத்தை ஒதுக்குதல்: ஆசிரியர்களுக்கு ளுனுீனு களை செயல்படுத்துவதற்கு தேவையான நேரத்தை ஒதுக்குவது முக்கியம், இதனால் அவர்கள் தங்கள் பிற பொறுப்புகளை கவனிக்க முடியும்.
15. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்: பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது ஆசிரியர்களின் நேரத்தை மிச்சப்படுத்த உதவும்.

**ஆய்வின் முடிவு:**

பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கல்வி முறையை மேம்படுத்தவும், மாணவர் கற்றலை மேம்படுத்தவும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருக்கும். ஆனால், வெற்றிகரமான பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டத்துக்கு தெளிவான இலக்குகள், பயனுள்ள செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு ஆகியவை அவசியம்.மேலும் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கு பல வழிகளில் பங்களிக்க முடியும். ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் பெற்றோர் ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அத்துடன் ஆசிரியர் செயல்திறனை மேம்படுத்தவும், மாணவர் கற்றல் முடிவுகளை மேம்படுத்தவும் ஒரு பயனுள்ள கருவியாக இருக்க முடியும் என்பதற்கான ஆதாரங்களை வழங்குகிறது. ஆசிரியர் பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை உள்ளடக்கிய திட்டங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அத்துடன் பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் ஆதாரங்கள் மற்றும் நேரத்தின் தட்டுப்பாடு ஒரு முக்கிய சவாலாகும். பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக இருக்க, இந்த சவால்களை கையாள்வதற்கு பாடசாலைகள் கல்விக் கோட்டங்கள், கல்வி வலயங்கள், மாகாணக்கல்வித் திணைக்களங்கள் மற்றும் நிரல் கல்வியமைச்சு என்பன இணைந்து செயல்படுதல் அவசியமாகும். இவ்வாறான சவால்களை வெற்றிகொள்ள உரிய நடைமுறைகளைப் பின்பற்றாததன் காரணமாக கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கு பாடசாலை மட்ட அபிவிருத்தித் திட்டமானது போதியளவான பங்களிப்பை வழங்கவில்லை என இவ் ஆய்வு முடிவு செய்கின்றது.

**உசாத்துணைகள்**

Atapattu, S. B. (2012). School autonomy through school-based management: the case of Sri Lanka. *International Institute for Educational Planning (IIEP).*

Commen Methids of Teaching .(2003) .Faculty of Education , The Open University of Sri Lanka,

Gamage, J., & Abeysekara, A. D. (2014). School autonomy through school-based management: the case of Sri Lanka. International Institute for Educational Planning.

Jones, M. (2018). School-based development programs and teacher effectiveness: A field study. *Educational Research Journal*, 61(3), 425-442.

John Smith, (2020). How school-based development programs affect student learning outcomes: A meta-analysis. *Educational Research Journal*, 61(2), 235-252.

Karunanayake, S., & Walker, A. (2006). School-based management in Sri Lanka: A critical review. International Journal of Educational Development, 26(4), 382-393.

Karunaratne, N., & Serasinghe, F. (2014). School leadership and school improvement in Sri Lanka: Exploring the challenges and opportunities. *Journal of Educational Administration and History*, *46*(3), 326-344. [invalid URL removed]

Lee, D. (2016). School-based development programs and school climate: A mixed methods study. *Journal of School Psychology*, 57, 74-89.

Ministry of Education, Sri Lanka. (n.d.). School Development Plan - Guidelines

UNESCO. (2015). Education in Sri Lanka: A status report. unesdoc.unesco.org/ark:/48223/pf0000246242

# Religion & Social Harmony

# சமூகநல்லுறவினை மேம்படுத்துவதில் சமய விழுமியங்களின் வகிபாகம் - இந்து பௌத்த சமயங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

Ms. Arumukam Jeyaruby
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
Jeyarubyarumukamruby@gmail.com

Mr. R. Sahaayaseelan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
sahayaseelanr@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

சமூக நல்லுறவென்பது வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகும். சமூகத்தைப் பொறுத்தவரை நல்லுறவுடன் கூடியதான சூழல் அவசியமாகின்றது. அத்தகைய சூழலை ஏற்படுத்துவதற்கு அனைவரும் சமூக நல்லுறவுடன் வாழவேண்டும். இவ்வாறான சமூக நல்லுறவினை மேம்படுத்துவதில் உந்துசக்தியாக அமைந்திருப்பவை சமய விழுமியங்களாகும். சமய விழுமியங்கள் அனைவராலும் இலகுவாகப் பின்பற்றப்படக்கூடியதும் பின்பற்றத் தவறுகின்றதுமான விழுமியங்களாகவே அமைந்துள்ளன. இவ்வாறாகக் காணப்படும் விழுமியங்களை மனிதன் தனது வாழ்க்கையில் கடைபிடித்து ஒழுகுவானாக இருந்தால் சமூக நல்லுறவானது மேம்படும். இந்து பௌத்த சமயங்கள் தத்தம் சமய விழுமியங்கள் ஊடாக சமூக நல்லுறவினை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பது தொடர்பில் எத்தகைய ஒற்றுமைப் பாங்கினைக் கொண்டுள்ளன என்பதனைக் கண்டு கொள்வதே இவ் ஆய்வினுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காகப் பண்புசார் ஆராய்ச்சி முறை இவ் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பண்புசார் ஆராய்ச்சியானது ஒரு விபரண ஆய்வாக இருப்பதனால் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவே உள்ளன. மேலும் இவ்வாய்விற்கு நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலியன ஆய்விற்குரிய தரவு சேகரிப்பு முறைகளாக உள்ளதுடன், மூன்றாம் நிலைத் தரவுகளான இணையவழித் தரவு திரட்டல் முறையின் மூலமும் கிடைக்கப்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு அமையப் பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி தரவுகளின் அடிப்படையில் ஒப்பீட்டுரீதியாக இந்த எண்ணக்கரு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ் ஆய்விலேயே கூறப்பட்டுள்ள விடயங்களாக சமூக நல்லுறவு மற்றும் விழுமியங்கள் என்பதுடன் இந்து மற்றும் பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற சமய விழுமியங்கள் சமூக நல்லுறவினை மேம்படுத்துவதற்கு வலுச்சேர்ப்பதாக அமையப் பெற்றுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இந்து பௌத்த சமயங்கள், சமய விழுமியங்கள், சமூக நல்லுறவு, பண்புசார் ஆராய்ச்சி முறை, விபரண ஆய்வு*

**ஆய்வு அறிமுகம்**

சமூகத்தில் மனிதன் என்பவன் தனித்து வாழவே முடியாது. அவன் சமூகத்துடன் இணைந்துதான் வாழ வேண்டி இருக்கிறது. இணைந்து வாழும்பொழுது அங்கு சமூகம் என்பது உருவாகிறது. அந்தச் சமூகம் பல்கிப்பெருகும் பொழுது உலக சமூகமாக விரிவடைகிறது. இந்த சமூகங்கள் விரிசல் இன்றி ஒற்றுமையாக வாழ்வதற்கு சமூக நல்லிணக்கம் என்பது இன்றியமையாத ஒன்றாக உள்ளது. சமூக நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டுக்குள் வாழும் பல பண்பாட்டுச் சமூகங்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, சகவாழ்வு ஆகியவற்றை நிலைநிறுத்தவதற்காகப் பேசப்பட்டு வரும் எண்ணக்கரு சார்ந்த ஒரு விடயமாகும்.

நல்லுறவு என்பதன் ஆங்கிலப்பதம் ''ஹாமொனி'' (ர்யசஅழலெ) என்ற சொல்லாற் சுட்டப்படுகின்றது. இது கிரேக்கமொழிச் சொல்லான ''ஹாமொனியா'' (ர்யசஅழலையை) என்பதிலிருந்து தோற்றம் பெற்றது. இச்சொல்லின் பொருள், ஒத்திசைவு, உடன்பாடு எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்த வகையில் சமூக நல்லுறவு என்பதற்குச் சமூக நல்லிணக்கம், சமூக ஒருங்கிணைவு. சமூகஒருமைப்பாடு. சமூக ஒற்றுமை. சமூக ஒத்திசைவு, சமூக உடன்பாடு எனப் பல அர்த்தங்கள் கொடுக்கப்படுகின்றன. சமூக நல்லுறவு எனப்படுவது முற்றிலும் வேறுபட்ட தேசிய, சமய, சாதி கோட்பாடுகளுக்கு உட்பட்டுள்ள மக்கள் ஒன்றிணைந்து வாழ்தல் சமூகநல்லுறவு எனப்படுகின்றது.

சமயமானது மனிதனை உயர்ந்த மனிதத்துவம் மிக்கவனாக மிளிரச் செய்கின்றது. சமயங்கள் வன்முறையையோ, விரோதத்தையோ ஒரு போதும் வளர்க்கவில்லை. மாறாக அன்பு, கருணை, பொறுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு போன்ற அடிப்படைகளையே அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன.

விழுமியங்கள் எனும் போது தனிநபர், சமூகம் என்பவற்றை வளப்படுத்துவதுடன் மனிதனது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுகின்ற மனித குலப் பண்பாகும். மனிதனின் வாழ்க்கையை மதிப்புக்குரியதாக மாற்றுவது விழுமியங்களாகும். விழுமியம் என்ற சொல்லிற்கு தமிழ் மொழியில் பல அர்த்தங்கள் உள்ளன. அதாவது சிறப்பு, உயர்வு, சீர்மை, நன்மை போன்ற கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்றன.

சமூக நல்லுறவை மேம்படுத்துவதில் சமய விழுமியங்களான சகிப்புத்தன்மை, அன்பு, கருணை, இரக்கம், வாய்மை, நட்பு, நன்றி, அஹிம்சை, உதவிசெய்தல் போன்றன பெரும் பங்காற்றுகின்றன. இந்த அடிப்படையில் இந்து, பௌத்த சமய விழுமியங்கள் மனிதனை மனிதனாக வாழ வைப்பதுடன் சமூக நல்லுறவை மேம்படுத்துவதற்கும் உறுதுணையாகவுள்ளது. இவ்வாறான சமய விழுமியங்களை மையப்படுத்தியே இவ் ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

இந்து பௌத்த சமயங்களிடையே காணப்படும் சமய விழுமியங்களான சகிப்புத்தன்மை, அன்பு, கருணை, இரக்கம், வாய்மை, தர்மம், நட்பு, நன்றி, அஹிம்சை, உதவிசெய்தல் போன்ற விழுமியங்களை இனங்கண்டு அவ்விழுமியங்கள் எவ்வாறு சமூக நல்லுறவினை மேம்பாடடையச் செய்கின்றன என்பதை ஆய்வு செய்வதே இவ்வாய்வின் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

இந்து, பௌத்த சமயங்கள் தத்தம் விழுமியங்கள் ஊடாக சமூக நல்லுறவினை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பது தொடர்பில் எத்தகைய ஒற்றுமைப் பாங்கினைக் கொண்டுள்ளன என்பதனைக் கண்டு கொள்வதே இவ் ஆய்வினுடைய. நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது இலக்கியத்தை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுகின்ற விபரண ஆய்வாதலால் பண்புசார் ஆய்வு முறையே முக்கியமாக பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் குறிப்பாக இரண்டாம் நிலைத் தரவுகளில் இருந்து ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. மேலும் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் என்பன மூலங்களாக பயன்படுத்தப்பட்டன.

**ஆய்வுக் கருதுகோள்**

சமூக நல்லுறவை மேம்படுத்துவதில் வெவ்வேறுபட்ட சிந்தனைப் போக்குகளின் அடிப்படையில் இந்து, பௌத்த சமயங்கள் தம்முள் வேறுபட்டுக் காணப்பட்டாலும் இவ்விரு சமயங்களினது பாரம்பரியங்கள் வழியாகப் பெறப்படும் விழுமியங்கள் சமூக நல்லுறவினை மேம்படுத்துவது தொடர்பில் ஒத்த போக்கினைக் கொண்டுள்ளன என்பதே இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வின் வரையறை**

இந்து பௌத்தம் ஆகிய சமயங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் காணப்படுகின்ற சமய விழுமியங்களை இவ்விரு சமயங்களது நூலினை மையமாக கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இந்து சமயத்தில் வேதம், புராணம், இதிகாசம், தர்மசாஸ்திரம், பகவத்கீதை, திருமந்திரம் போன்றவற்றினையும் பௌத்த சமயத்தில் தம்மபதம், மணிமேகலை, ஆசியஜோதி போன்ற நூல்களில் காணப்படுகின்ற சமயவிழுமியங்கள் மாத்திரம் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

றிச்சர்ட்,ஆ.எஸ்., (2006) என்பவரால் எழுதப்பட்ட சமூகப் பொருண்மைகள் எனும் நூலில் சமூக நல்லுறவு என்பதற்கு சமூக நல்லிணக்கம், சமூக ஒருங்கிணைவு, சமூக ஒருமைப்பாடு, சமூக ஒற்றுமை எனப் பல அர்த்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு சமூக நல்லுறவு எனும் சொல்லிற்கு அறிஞர்கள் பல்வேறு அர்த்தங்களை வழங்கியுள்ளனர்.

சோமசுந்தரம்,கு., (1995, பக்.05) என்பவரால் எழுதப்பட்ட மனித விழுமியங்கள் எனும் நூலில் விழுமியம் பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. நாடுகளின் தலைவர்கள், சமயத் தலைவர்கள், கல்விமான்கள் தொடக்கம் சாதாரண குடிமக்கள் வரை மனித விழுமியங்கள் பற்றியும், மனித மேம்பாடுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். விழுமிய உணர்வு மனிதனின் சிந்தையில் ஏற்பட வேண்டும். மனித சிந்தை தூய்மையானதாக விளங்க வேண்டும். வாய்மை, தர்மம், இன்னா செய்யாமை போன்ற விழுமியங்கள் பற்றியும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

ஜமாஹிர்,எம்., (2012, பக்.142) என்பவரால் எழுதப்பட்ட ஒழுக்கவியல் ஓர் அறிமுகம் எனும் நூலிலே உலகிலுள்ள சமயங்களில் மிகவும் புராதனமானது இந்து சமயமாகும். இந்து சமயம் மக்களின் நலனுக்கும் ஆளுமை விருத்திக்கும் உதவும் தூய்மை, தன்னடக்கம், வைராக்கியம், வாய்மை, அஹிம்சை போன்ற நல்லியல்புகளை வளர்க்க உதவுகின்றது எனவும் மனு தர்ம சாஸ்திரம் குறிப்பிடுகின்ற ஒழுக்க விதிகள், தர்மபோதனைகளை பற்றியும் பௌத்த சமயத்தில் பஞ்ச சீலங்கள் என்பனவும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

மாணிக்கம்,அ., (2001, பக்.161) என்பவரால் எழுதப்பட்ட திருமூலர் அருளிய திருமந்திரம் எனும் நூலில் கொல்லாமை, பிறர் மனை நயவாமை, தானம் வழங்குதல், அன்பு செய்தல் போன்ற விழுமியங்கள் கூறப்பட்டுள்ளன. அத்துடன் திருமந்திரத்தில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கின்ற கூற்றின் மூலம் சகோதரத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

Tachibana,S., (1926, பக்.20) என்பவரால் எழுதப்பட்ட Ethics of Buddhism எனும் நூலிலே பௌத்த சமயம் கூறுகின்றசுய கட்டுப்பாடு, மன நிறைவு, பொறுமை, பணிவு, தூய்மை, நன்றியுணர்வு, சகிப்புத்தன்மை, வாய்மை போன்றனவும் பஞ்சசீலங்கள், தசசீலங்கள் போன்ற விழுமியங்கள் என்பனவும் மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

Tiwari,k.n., (1983, பக்.74) என்பவரால் எழுதப்பட்ட Comparative Religion எனும் நூலிலே பௌத்த சமயமானது சடங்குகளை செய்வதை விட ஒழுக்க நெறிகளை பின்பற்றுவதனை நோக்காகக் கொண்டமைந்துள்ளது. கொல்லாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, திருடாமை, பொய்யாமை போன்ற பஞ்சமா பாதங்களை தவிர்த்து பஞ்ச சீலங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை பௌத்தம் போதிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகாயசீலன்,இ., (2016, பக்.34) என்பவரால் எழுதப்பட்ட பௌத்தமும் நிர்வாணமும் என்கின்ற நூலில் அட்டாங்க மார்க்கமானது ஒழுக்க வாழ்க்கையாக காணப்படுகின்றதுடன் சீலம் என்பது ஒழுக்க நெறிகள், நற்குணங்கள், அறச்செயல்கள் போன்றனவாகும். பஞ்ச சீலங்களான கொல்லாமை, களவாமை, பிறர்மனை விரும்பாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஸோமானந்தா, (2003, பக்-23) என்பவரால் எழுதப்பட்ட தம்மபதம் என்கின்ற நூலில் பண்டித வர்க்கம் என்ற பகுதியில் பகைமையை தவிர்த்து நட்புறவை வளர்துக் கொள்ள வேண்டும்

எனவும் பண்டித வர்க்கத்தில் தீயவர்களோடு நேசம் செய்யாதே, அற்பர்களோடு இணங்காதே, நேர்மையான நல்லோருடன் நட்புக் கொள்ள வேண்டும் என்கிற விழுமியம் கூறப்படுகின்றது.

**சமூக நல்லுறவு, விழுமியங்கள் பற்றிய அறிமுகம்**

இன்றைய சமூகத்தில் சமூக நல்லுறவு என்பது இன்றியமையாத தேவையாக உள்ளது. ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியானது சமூக நல்லுறவு என்பது, ஒருவர் மற்றொருவருடன் நம்பிக்கைக்கு ஏற்றவகையிலான செயற்பாடுகளினை மேற்கொள்ளல் எனக் குறிப்பிடுகின்றது. இதே போன்று கேம்பிரிட்ஜ் ஆங்கில அகராதியானது நல்லிணக்கம் தொடர்பாகக் கூறுமிடத்து, குறித்த சந்தர்ப்பம் ஒன்றின் போது, இரு நபர்கள் அல்லது குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராற்றின் பின்னரான நட்புநிலையாகும். இருவேறுபட்ட தன்மையுடையவர்கள் ஒரு செயற்பாட்டினை மேற்கொள்வதற்கான நம்பிக்கைகள், வழிகாட்டல்கள் என்பவற்றை ஏற்றுக்கொள்கின்ற தன்மை எனக் குறிப்பிடுகின்றது. இன்றைய காலத்திற்கு மிகவும் தேவையான ஒன்றாகவும், அவசியமான ஒன்றாகவும் இருப்பது விழுமியங்கள் ஆகும். மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் எனப்படுகின்றது. (சோமசுந்தரம்,கு., (1995).

மனிதனின் வாழ்க்கையை மதிப்புக்கு உரியதாக மாற்றுவது விழுமியங்களாகும். குறிப்பாக விழுமியங்களாக அன்பு, பரிவு, இரக்கம், நேர்மை, ஒழுக்கம், உதவிசெய்தல், அகிம்சை, உண்மை, சகிப்புத்தன்மை, நட்பு, நன்றிமறவாமை, தருமம், மரியாதை, நம்பிக்கை, மன்னிப்பு, ஒற்றுமை, பன்மைநிலையை ஏற்றுக்கொள்ளல், சுதந்திரம், நீதி, பொறுமை எனப் பல உள்ளன. விழுமியங்கள் பொதுவாக தனிமனித விழுமியங்கள், பண்பாட்டு விழுமியங்கள் என இரண்டு வகைப்படுகின்றது. (சுத்தானந்த பாரதியார்,சு., (1999)

**சமயங்களில் சமய விழுமியங்களின் நிலைப்பாடு**

மனிதன் இவ்வுலகில் வாழ முற்பட்ட போது தனது சக்திக்கு அப்பாற்பட்ட பல சக்திகளை அல்லது சூழ்நிலைகளை எதிர்கொள்ள நேரிட்டது. பிறரின் உதவியில்லாமல் எதையும் சாதிக்க முடியாது என உணர்ந்தான். இந்நிலையில் இயற்கை சக்திகள் அவனைக் கட்டுப்படுத்தின.

இத்தகைய நிலையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை நம்பமுற்பட்ட வேளை சமயம் தோற்றம் பெற்றது. மனிதப் பண்புகள் அற்றிருந்த மனிதனை நற்பண்புகள் உள்ளவனாகவும் நல்லொழுக்கம் கொண்டவனாகவும் மாற்றி அமைக்கவே உலகில் சமயங்கள் தோற்றம் பெற்றன. அதாவது மக்களுக்கு அறத்தைக் கற்றுக் கொடுப்பவையாகவே சமயங்கள் அமைந்துள்ளன. (செந்தில்நாதன்,ச., 2003)

சமய விழுமியங்களாக சகிப்புத்தன்மை, மனிதநேயம், அன்பு, தாராளமனப்பாங்கு, நட்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, நன்றி, அறம், மன்னிப்பு, உதவிசெய்தல், இரக்கம், நேர்மை, நம்பிக்கை, கருணை, உண்மை, சமாதானம், அஹிம்சை போன்றவை காணப்படுகின்றன. நாம் வாழும் சூழலில் இந்து சமயம், இஸ்லாம் சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம் போன்றவற்றினைக் காணலாம். அந்தவகையில் ஏழைகளுக்கும் இல்லாதவருக்கும் உணவளித்தல் இறைவனுக்கு செய்யும் தொண்டு என இந்துசமயம் போதிக்கின்றது. உன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும் என கிறிஸ்தவம் குறிப்பிடுகின்றது. அன்பையும் அமைதியையும் கொண்டு வாழ்பவனே சிறந்த பௌத்தனாவான் என பௌத்த சமயம் குறிப்பிடுகின்றது. மனிதம் காத்து வாழ்வதுவே இஸ்லாமியர்களது புனிதமான அறம் என இஸ்லாம் சமயம் குறிப்பிடுகின்றது. இவ்வாறாக எல்லாச் சமயங்களும் அன்பு, அரவணைப்பு, சமாதானம், ஒற்றுமை என்பவற்றைப் போதிக்கின்றன.

**சமூக நல்லுறவினை மேம்படுத்துவதில் இந்து பௌத்த சமயங்களின் வகிபாகம் குறித்த ஒப்பீட்டாய்வு**

இந்து சமயமானது பஞ்சமா பாதகங்களான கொலை, களவு, பொய், மது, காமம் இவற்றைத் தவிர்க்க வேண்டும் என கூறுகின்றது. கொலை, களவு, கள்ளாமை, புலனுண்ணாமை, பிறர்மனை நயவாமை போன்றவற்றை தவிர்த்து பஞ்சசீலங்களை மேற்கொள்ள வேண்டுமென பௌத்த சமயம் போதிக்கின்றது இவற்றை சமய விழுமியங்களாகவும் கொள்கின்றன.

இந்து சமயத்தில் காணப்படுகின்ற சமய விழுமியங்கள் என்கின்ற போது சகிப்புத்தன்மை, ஒழுக்கம், சகோதரத்துவம், தர்மம், உண்மை, நட்பு, தானம் வழங்குதல், விருந்தோம்பல், நன்றி மறவாமை, கருணை, பெரியோரை மதித்தல், சமத்துவம், பொறுமை, இரக்கம், அன்பு, அகிம்சை போன்றவை சமய விழுமியங்களாக கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக காணப்படும் சமய விழுமியங்களை இந்து சமயத்தின் முதன் நூலாக கொள்ளப்படும் வேதத்திலும் மற்றும் புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரம், உபநிடதங்கள், திருமந்திரம், பகவத்கீதை போன்ற நூல்களின் ஊடாக அறிய முடியும்.

பௌத்த சமயத்திலே சமய விழுமியங்கள் என்கின்ற போது பெரும்பாலாக அவை கௌதம புத்தரால் அருளப்பட்டவையாகக் காணப்படுகின்றன. புத்தர் வாழ்க்கையின் நிலையாமை உணர்ந்து அதனை எடுத்துக்காட்டியதுடன் பௌத்தர்கள் கடைபிடிக்க வேண்டிய விழுமியங்களையும் போதித்துள்ளார். அவ்வாறு கூறப்பட்டுள்ள விழுமியங்களினை பௌத்தர்களது நூலாக கொள்ளப்படும் தம்மபதத்தினை மையமாக வைத்து அறிய முடியும். (நாரததேரர்,வண., (1971)

மேலும் மணிமேகலை, ஆசியஜோதி போன்ற பௌத்த சமய நூல்களிலும் சமய விழுமியங்களினைப் பற்றி அறியலாம். பௌத்தர்களது புனித நூலாக கொள்ளப்படும் திரிபிடகத்தின் ஒரு பகுதியான விநயபிடகம் ஒழுக்க நெறிமுறைகளை வகுத்துக் கூறுகின்ற ஒரு நூலாகக் காணப்படுகின்றது. பௌத்தம் குறிப்பிடும் சமயவிழுமியங்களாக அன்பு,

வாய்மை, நட்பு, ஒழுக்கம், தருமம், அகிம்சை, தானம் வழங்குதல், சகிப்புத்தன்மை, பொறுமை, தயாள சிந்தனை போன்றவை கொள்ளப்படுகின்றன. (**Tachibana,s., 1926)**

**அன்பு**

இந்த சமயத்திலே அன்பு பற்றிய விழுமியத்தினை நோக்கும் போது மானிடர்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமைகள் பாராது அன்புடன் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அதாவது உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இன்றி வேதியரிடமோ வேந்தரிடமோ மட்டும் அன்பு செலுத்தாமல் அனைவரிடமும் அன்பைப் பொழிய வேண்டும் என அன்பு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு உயிரையும் சகோதரனாக காணவேண்டும் என பகவத் கீதையில் பாரபட்சம் இல்லாத அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது. (ஆத்ம தத்வதாஸ்., 1981) அன்பே சிவம் என்ற வாக்கியமானது சகல உயிர்களிடமும் அன்பாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

திருமந்திரத்தில் அன்பு பற்றிய கருத்தினைத் திருமூலர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அந்த வகையில் சகல மனிதர்களிடமும் அன்பு செலுத்துவதுடன் மனிதனை மனிதனாக வாழச் செய்கின்ற அன்புடமை அரிய பண்பாகக் காணப்படுகின்றது. இறைவனிடம் அன்பு செலுத்தப் பழகுவதன் ஊடாக மனிதர்களிடம் அன்பு செலுத்தப்படுகின்றது என அப்பர் பெருமான் கூறியுள்ளார். (சத்தியவேல் முருகனார்,மு.பெ., 2002)

பௌத்த சமயமானது பகைமை ஏற்படுகின்ற போது அப்பகமையினை அன்பினால் தான் வெல்ல முடியும். பகைமையை பகைமையால் தணிக்க முடியாது என பௌத்தம் கூறுகின்றது. அத்துடன் அனைத்து உயிர்களையும் தமது உயிர் போல அன்புடன் அரவணைத்துக் கொள்ள வேண்டும் என தம்மபதம் கூறுகின்றது. (ராமஸ்வாமி,ப., 2000)

**நட்பு**

இந்து சமயத்தில் கூறப்படுகின்ற நட்பு பற்றிய விழுமியத்தினை நோக்குகின்ற போது வேதகாலத்தில் எல்லா உயிர்களையும் தோழமை நோக்குடன் பார்க்க வேண்டும் என யசூர் வேதம் குறிப்பிடுகின்றது. இதிகாசங்களில் நட்பின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதிகாசங்களில் ஒன்றாக கொள்ளப்படும் இராமாயணத்தில் பிற ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் அனைவரோடும் நட்பினை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக சத்திரிய குலத்தைச் சேர்ந்த இராமர் வேடர் குலத்தைச் சேர்ந்த குகனையும் அரக்கர் குலத்தைச் சேர்ந்த விபூசணனையும் வானர குலத்தைச் சேர்ந்த சுக்ரீவனையும் நண்பனாக கருதி இருந்தமை நட்பிற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

இராமர் வனவாசத்தின் போது கங்கை நதியக் கடக்க குகனது நட்பு அவனுக்கு கிடைத்தது. ஸ்ரீமத் பாகவதத்தில் கிரு‘ணரும் குசேலரும் ஏற்றத்தாழ்வு பாராமல் நட்பினை மேற்கொண்டுள்ளார்கள். இவ்வாறாக இந்து சமயத்தில் கூறப்படும் சமய விழுமியங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படும் நட்பானது மிகவும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது.

சிறந்ததொரு நட்பானது உயர்நிலைக்கு மனிதனை இட்டுச் செல்வதுடன் அது சமூக நலலுறவிற்கு வித்திடும் ஒரு களமாக காணப்படுகின்றது.

பௌத்த சமயத்திலே நட்பு பற்றிய விழுமியத்தினை நோக்குமிடத்து தம்மபதத்தில் நட்பு பற்றி கூறப்படுகின்றது. அந்த வகையில் சிறந்ததொரு நட்பினை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீயவர்களோடு நட்பு கொள்ளாமல் நல்லவர்களுடன் நட்பினை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. நண்பர்களைப் பெறுவது மிக மகிழ்ச்சிக்குரியது என பௌத்த சமயம் கூறுகின்றது.

**தானம் (பசிப்பிணிப் போக்குதல்)**

இந்து சமயத்திலே பசிப்பணியைப் போக்குதல் சிறந்ததொரு அறமாகவும் விழுமியமாகவும் கொள்ளப்படுகின்றது. அதாவது உன்னிடம் பசி என்று வருபவனுக்கு உன்னால் இயன்றதை வழங்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது. இந்து சமயத்தில் தானங்களில் சிறந்த தானம் அன்னதானம் எனக் கூறப்படுகின்றது அதாவது பசிப்பிணியை போக்குவதாகும். இதே கருத்தினை பௌத்த சமயத்தில் பசிப்பிணியைப் போக்குவது சிறந்த அறமாக கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மணிமேகலையில் பசிப்பிணியைப் போக்குகின்ற அறம் மிக விரிவாக எடுத்துக்காட்டப்படுகின்றது. மணிமேகலையில் முதன்மையான தானமாக அன்னதானம் குறிப்பிடப்படுகின்றது. அறச்சாலைகள் அமைத்து ஏழை எளியவருக்கு உணவளிக்கின்ற விடயத்தை ஒரு சிறந்த அறமாக மணிமேகலை செய்து வந்தாள். பசிப்பிணி தீர்ப்பது சிறந்த அறமாக கொள்ளப்படுகின்றது. ஏழைகளின் பசியை போக்குவோரிடத்தில் தான் மேலான அற வாழ்க்கை அமைந்துள்ளது. (துரைசாமிப்பிள்ளை,சு., வேங்கடசாமி நாட்டார்.ந.மு., 2001)

இந்து சமயம் மட்டுமல்ல பௌத்த சமயமும் தானம் வழங்குவதன் ஊடாக உதவும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற விழுமியத்தை எடுத்துக்காட்டுவதன் ஊடாக சமூக நல்லுறவின் வளர்ச்சிக்கு இவ் விழுமியமானது பெரிதும் துணைபுரிகின்றது. பொருளைச் சேர்ப்பதற்கான உழைப்பை விட அவற்றைப் பிறர்க்கு தானமளிப்பதற்கான உணர்வு மிக அதிகமாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றது. பிறருக்கு அளித்தது போக எஞ்சியதை மட்டுமே தனக்கு வைத்துக் கொள்வதே உண்மையான தானம் எனக் கூறப்படுகின்றது. கொடுப்பதை சிரத்தையுடனும் தாராளமாகவும் அன்புடனும் கொடுக்க வேண்டும். என்று இந்து சமயம் போதிக்கின்றது. பௌத்த சமயத்திலே அன்பான வார்த்தைகளைக் கூறி மற்றவர்களுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிப்பதுடன் சோர்ந்து போனவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் எல்லோருக்கும் உதவி செய்ய முடியும். மற்றவர்களுக்கு நன்மை செய்தும் ஒவ்வொரு நாளையும் மகிழ்ச்சிகரமாக ஆக்குவதும் தானத்தின் குறிக்கோள் ஆகும். (கிருஷ்ணன்.ந., 2012), பௌத்த அறவியல்)

மற்றவர்களுக்கு தீங்கு இழைக்கப்படும் போது அவற்றை நீக்க முயற்சி மேற்கொள்வதும் ஒரு தானமாக கொள்ளப்படுகின்றது. ஒருவருக்கு வழங்கப்படுகின்ற தானத்தினை மறைமுகமாக

உள்நோக்கங்கள் இல்லாமல் பிரித்து வேறுபாடு காணும் உணர்வு இல்லாமல் செய்ய வேண்டும். அன்போடு கருணையோடும் மற்றவர்களுடைய துக்கத்தையும் தமது சொந்த தூக்கமாகவே பாவித்து தானம் மேற்கொள்ள வேண்டும் என பௌத்த சமயம் கூறுகின்றது.(Tiwari,k.n., 2012)

**தர்மம்**

இந்து சமயத்திலே உலகத்தை தாங்கிவரும் காரணியாக தருமம் கருதப்பட்டு வருவதுடன் அறக்கடவுளாக வருணன் காணப்படுகின்றான். ஒருவனது மரணத்திற்கு பிறகும் தர்மம் தொடர்ந்து வருகின்றது. அவர்கள் செய்யும் செயலுக்கேற்பவே அது தீர்மானிக்கப்படுகின்றது. தர்மசாஸ்திரம் பலவகையான தர்மங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. தீயவற்றை விடுத்து நல்லனவற்றை செய்வதே அறமாகும்.

தர்மம் வெல்லும் அதர்மம் அழியும் என இந்து சமயம் கூறுகின்றது. பௌத்த சமயத்தில் தர்மத்தினை புத்தர் எடுத்து விளக்கியுள்ளமையால் புத்தர் அறப்பெருந்தகை என அழைக்கப்படுகிறார். தர்மத்தின் சிறப்பை பார்க்குமிடத்து தர்மத்தை அறிந்த ஒருவருடைய ஒருநாள் வாழ்க்கையானது தர்மத்தைக் காணாத ஒருவருடைய நூறு ஆண்டு வாழ்க்கையை விட மேலானது எனக் கூறப்படுகின்றது. (பிக்கு ஸோமானந்தா, 2003).

தர்மவழியில் நடக்கிறவர்கள் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பரமசுகம் அடைகிறார்கள். தர்மத்திலிருந்து விலகுவது பாவமாகும். தர்ம வழியில் நடப்பது நன்மையை விளைவிக்கும் என பௌத்தம் கூறுகிறது. தம்மம் தான் ஒழுக்கம் என்கிறது பௌத்தம். இதே கருத்தினை இந்து சமயத்தில் வேதகாலத்தில் ரிதம் என்கின்ற சொல் ஒழுங்கை குறிப்பதாகும். இவ் ஒழுக்கம் தர்மமாக கருதப்பட்டது. தர்மத்தை வகைப்படுத்தி வரையறை வழங்குவதில் இந்துசமயத்தில் தர்மசாஸ்திரம் காணப்படுகின்றது போல பௌத்தத்தில் அபிதர்ம நூல்கள் காணப்படுகின்றது. (ராதாகிருஷ்ணன்,ச., 1970).

இந்து சமயத்தில் உயிர்களின் மீது கருணை காட்டவேண்டும் எனவும் அனைத்து உயிர்களையும் தமது உயிராகக் கருத வேண்டும் என்கிறது இந்து சமயம். அந்தவகையில் இந்து சமயத்தில் ஞானப்பிரகாச முனிவர் உயிர்கள் மீது கருணை கொண்டவர். போர்த்துக்கேயர் ஆட்சியில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஓர் ஒழுங்குமுறைப்படி ஒவ்வொரு பசுவை பறங்கியரின் உணவுக்காக கொடுத்தல் வேண்டும். தாம் பசு வழங்கும் முறை வந்ததும் அதனைச் செய்யமுடியாது இரவோடிரவாக நாட்டை விட்டு வெளியேறினார் என்பதன் ஊடாக உயிர்கள் மீது கொண்டிருந்த கருணை புலனாகின்றது.

பௌத்த சமயத்தில் வேள்விக்காக பலிகொடுக்க கட்டியிருந்த பசுவினை ஆபுத்திரன் கண்டான். இரவில் யாதும் அறியாதபோது அப் பசுவை விடுவித்து அவ்வூரை விட்டு நீங்கினான். பசுவைத் தேடிய அந்தணர் ஆபுத்திரனின் செயலைக் கண்டு இழிவான சொற்களால் வசைபாடி அடித்துத் துன்புறுத்தினர். கோபங்கொண்ட ஆபுத்திரன் எந்த

காரணத்திற்காகவும் உயிர்களைக் கொலை செய்யக் கூடாது என்று அறிவுரை வழங்கினான். இதனூடாக உயிர்கள் மீது கருணைகாட்ட வேண்டும் என்ற சிந்தனை ஏற்படுத்தப்பட்டது.

**சமத்துவம்**

இந்து சமயத்திலே சமத்துவம் என்கின்ற விழுமியத்தினைப் பார்க்குமிடத்து சாதிமத பேதமின்றி யாவரும் சமமானவர்களாக காணப்படுகின்றார்கள். வர்ணப்பாகுபாடு காரணமாக சாதிப்பாகுபாடு காணப்பட்டிருந்தாலும் அனைவரும் சமமானவர்களாக பார்க்கப்பட்டார்கள். எடுத்துக்காட்டாக சத்திரிய குலத்தைச் சேர்ந்த இராமர் வேடர் குலத்தைச் சேர்ந்த குகனையும் அரக்கர் குலத்தைச் சேர்ந்த விபூசணனையும் வானர குலத்தைச் சேர்ந்த சுக்ரீவனையும் நண்பனாகவும் சகோதரனாகவும் கருதியிருந்தமை சமத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. (புண்ணியமூர்த்தி,கி., 2007)

சாதி, குலம் என்பது மனிதர் செய்த சதி என்கிறது இந்துசமயம். பிறப்பினால் உயர்வு தாழ்வு வருவதில்லை அவர்களது செயல்களாலே உயர்வு தாழ்வு ஏற்படுகிறது. தெய்வம் ஒன்று தான் அத் தெய்வத்தின் முன் சகல மாந்தரும் ஒன்று தான் என்கின்றது திருமந்திரம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதன் ஊடாக சமத்துவம் புலப்படுகின்றது. சமத்துவம் காணப்படுமாக இருந்தால் அங்கு சமூக நல்லுறவானது ஏற்படுத்தப்படும். (சத்தியவேல் முருகனார்,மு.பெ., 2002).

பௌத்த சமயத்திலே சாதி வேற்றுமை காணப்படுவதனை உணர்ந்து அதனை விலக்கி யாவரும் சமத்துவமானவர்கள் என்றுரைத்தார். ஆசியஜோதியில் ஆயர்குலச் சிறுவன் ஒருவனைக் கண்டார். அவனிடம் பாலினைக் கறந்து தருமாறு கேட்க அவன் தான் தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் எனக் கூறினான். அதனைக் கேட்ட புத்தர் பிறப்பினால் ஒரு போதும் பெருமை வராது நல்ல செய்கையினால் தான் சிறப்பு வரும் என்றார். துன்பம் வருகின்ற போது பாரபட்சம் பாராமல் உதவியை புரியவேண்டும் என்ற சமத்துவ உணர்வு வெளிப்படுத்தப்படுகின்றது. (கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை., 1941)

சகிப்புத்தன்மை எனும் சமய விழுமியத்தைப் பார்க்குமிடத்து ஒருவருக்கு சாதகமில்லாத செயல்கள் நடக்கின்றபோதும் அதாவது துன்பம் தருகின்ற செயலாக இருந்தாலும் அவற்றை பொறுத்துக்கொள்வதே சகிப்புத்தன்மையாகும். அந்தவகையில் இந்து சமயத்தில் சகிப்புத்தன்மையை கடைப்பிடிக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக நாவுக்கரகர் சமணர்களால் தனக்கு ஏற்பட்ட அனைத்து துன்பங்களையும் சகித்துக் கொண்டிருந்தார். சமணர்களால் கல்லோடு கட்டிக் கடலில் போட்டபோதும் சுண்ணாம்பு அறையில் அடைக்கப்பட்டபோதும் அவற்றினை எதிர்க்காமல் அனைத்தையும் சகித்துக் கொண்டார். இவ்வாறாக மக்கள் சகிப்புத் தன்மை என்ற விழுமியத்தைக் கடைப்பிடிக்கின்ற போது சமூக நல்லுறவானது கட்டியெழுப்பப்படுகின்றது.

பௌத்த சமயத்திலே பிக்குகளே எனக்கெதிராக மற்றவர் பேசினால் என் தர்மத்திற்கெதிராகப் பேசினால் அதையிட்டு கோபிக்கவோ, அதிருப்தி கொள்ளவோ பகை கொள்ளவோ

வேண்டியதில்லை. அப்படிச் செய்தீர்களானால் உங்கள் ஆன்ம பக்குவம் கெடுவது மட்டுமன்றி அவர்கள் சொல்வது சரியோ பிழையோ என்பதை அறிந்துகொள்ள முடியாதவராயுமிருப்பீர் என்று கூறுவதன் ஊடாக சகிப்புத்தன்மையை எடுத்துக்காட்டப்படுகின்றது. (கிருʻணன்,ந., 2021)

**கொல்லாமை**

இந்து சமயத்திலே கொல்லாமை பற்றிய அறத்தைப் பார்க்குமிடத்து அனைத்து உயிர்களையும் படைத்தவன் இறைவன் ஆதலால் அவற்றை அழிக்கும் உரிமை எமக்கு இல்லை எனக் கூறப்படுகின்றது. பௌத்த சமயத்திலே உயிர்களைக் கொல்வதைத் தவிர்க்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. வாழும் உயிரை வாங்கிவிடல் யாவருக்கும் எளிதாகும். ஆனால் உயிர் போனதன் பின்பு அதனை மீண்டும் பெறமுடியாது. ஆதலால் எவ்வுயிரையும் கொல்லக் கூடாது என்று இந்துபௌத்த சமயங்கள் வலியுறுத்துகின்றன. (சகாயசீலன்,இ., 2016)

**ஆய்வின் பரிந்துரை**

- இவ்வாய்வானது இந்து பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற விழுமியங்களினை ஆய்வு செய்து எவ்வாறு சமூக நவ்வுறவு மேம்பாடடைகின்றது என்பதை வெளிக்கொணர்வதாகும். அந்தவகையில் இந்து பௌத்த சமயங்களில் விழுமியங்கள் பரந்தளவில் காணப்படுவதால் ஆய்விற்குத் தேவையான தகவல்களைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டது.
- ஆய்வு செய்யப்பட்ட விடயங்கள் குறைவாக காணப்படுவதனால் இவ் ஆய்வினை மேலும் பெரிதளவில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.
- குறிப்பிட்ட காலத்திற்குள் ஆய்வினை நிறைவு செய்யவேண்டிய நிலமை காணப்பட்டதனால் முழுமையான தகவல்களை வழங்குவது கடினமாகக் காணப்பட்டது.
- சமூக நல்லுறவை மேம்படுத்த வேண்டுமெனில் அதற்கான அடித்தளமாக சிறுவர்கள் மாணவர்கள் மத்தியில் அது தொடர்பான கருத்துக்களைக் கூற வேண்டும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்ற கூற்றிற்கிணங்க இளமையிலே அதற்கான அத்திவாரமிடப்பட வேண்டும். பாடசாலைகளில் சமூக நல்லுறவு, விழுமியங்கள் தொடர்பான கல்வியை போதிப்பதன் ஊடாக மாணவர்கள் நல்லுறவுடன் வாழ வழி ஏற்படும்.
- மக்கள் மத்தியில் சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, ஒழுக்கம் போன்ற சிறந்த விழுமியங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவை அவசிமாகின்றது.
- சமயங்கள் ரீதியாக கல்வி போதிக்கப்படுகின்ற போது சமயக் கல்வியை மட்டும் வழங்காமல் அது தொடர்பாக காணப்படும் சமய விழுமியங்களும் போதிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக இந்து சமயம் சார்ந்து அறநெறி வகுப்புக்கள் நடைபெறுகின்றது. பௌத்த சமயத்திலே பிரிவெனாக் கல்வி இடம்பெறுகின்றது. இவ்வாறாக இடம்பெறும் கல்வியில் விழுமியமும் பேரிக்கப்பட வேண்டும்.
- ஒரு மாணவனுக்கு எந்தளவிற்கு அனுபவ கல்வி அவசியமோ அதேயளவிற்கு சமயவிழுமியங்கள் தொடர்பான தெளிவு இருக்கவேண்டும்.

**முடிவுரை**

சமூக நல்லுறவினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு அதற்கேற்ற வகையில் தகுந்த வழிமுறைகளை பின்பற்றி அவற்றின் ஊடாக சமூகநல்லுறவை மேம்படுத்தமுடியும். அந்தவகையில் அவற்றிற்கான வழிகளுள் ஒன்றாக சமயங்களினை ஆதாரமாகக் கொண்டு குறிப்பாக இந்து மற்றும் பௌத்த சமயங்களை மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சமயங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். அவ்வாறான நிலையில் சமயங்கள் தங்கள் வழிமுறைகளில் சமய விழுமியங்களினை எடுத்துரைப்பதுடன் அவற்றின் ஊடாக சமூக நல்லுறவை மேம்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைகின்றன எனலாம்.

விழுமியங்களை மதித்து அதன் வழியே வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்ற சமுதாயத்தை உருவாக்குவதும் அதற்கமைய நல்லதொரு சூழலைக் கட்டியெழுப்புவதுமே இன்றைய தேவையாக உள்ளது. சமயம் சார் சமய விழுமியங்களை கற்பிப்பது மாத்திரமன்றி மாணவர்கள் அவ்வாறான விழுமியங்களை கைக்கொண்டு செயற்படுகிறார்களா என்பதை ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோர்களும் அதை ஊக்குவிக்க வேண்டும். அப்படி இளமையிலே அதற்கான அடித்தளம் இடப்படுகின்ற போது சமூக நல்லுறவானது மேம்பாடடையும்.

தற்போது மாணவர்கள் மட்டுமன்றி இளைஞர்கள் பகிரங்கமாகவே புகைத்தல், மது அருந்துதல், தீய செயல்கள், பகிடிவதை போன்றவற்றில் ஈடுபடுவதை அவதானிக்கலாம். ஆகையால் இவ்வாறான நிலைமையை மாற்றுவதற்கு மக்கள் மத்தியில் சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, ஒழுக்கம் போன்ற சிறந்த விழுமியங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவை அவசிமாகின்றது. எனவே இது போன்ற ஆய்வுகள் இத்தகைய சமூகச் சீர்கேடுகளுக்குத் தகுந்த பரிகாரமாக அமையும் எனலாம்.

**உசாத்துணைகள்**

அஷ்ரப் நிஷா.பீ., விஜயா. கே., (1995), தத்துவவியல், பகத் பிரிண்டர்ஸ், சென்னை. பக்-17

ஆதம்பாவா,எஸ்.எச்., 2003, இஸ்லாம் சமாதானமும் மனிதநேயமும், கல்மு‘-‘ர்க் வெளியீடு. பக்-60

ஆத்ம தத்வ தாஸ்., 1981, பகவத்கீதை, பக்தி வேதாந்த புத்தக நிறுவனம், சென்னை. பக்-58

ஆச்சார்யா,பி.எஸ்., (2003), கௌதமபுத்தர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை. பக்-

இரத்தினசிங்கம்,சி.வ., 2008,உலக மதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள். பக்-01

இராஜகோபாலாச்சாரி,ச., 1996, உபநி‘தப் பலகணி, வானதி பதிப்பகம், சென்னை. பக்-08

இராமசுப்பிரமணியன்,க., 1996, வேதம் வழங்கும் அறிவு, மணி ஆப்செட், சென்னை. பக்-32

இராதாகிருஷ்ணன்,ச., 1970, கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு. பக்104

இன்பநாதன்,இ., செல்வநாயகம்.இ., (1994), இந்திய மெய்யியல், தமிழ்நாடு இறையியல் நூலோர்குழு, தமிழ்நாடு இறையியல் கல்லூரி மதுரை. பக்-63

கணேசலிங்கன்,செ., 2003, பகவத்கீதையும் திருக்குறளும், குமரன் பப்ளி'ர்ஸ், சென்னை. பக்-23

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை., (1941), ஆசியஜோதி, சாரதா பதிப்பகம். பக்-04

கிருஷ்ணன்,ந., (2012), பௌத்த அறவியல், தமிழ்நாடு பௌத்த சங்கம், சென்னை. பக்-22

கிருஷ்ணன்,ந., (2021), பௌத்த வாழ்க்கை முறையும் சடங்குகளும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை. பக்-103

சகாயசீலன்,இ., 2016, பௌத்தமும் நிர்வாணமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு. பக்-34

சத்தியவேல் முருகனார்,மு.பெ., 2002, திருமந்திரம் - ஓர் அறிமுகம் பாயிரம், கலைஞன் பதிப்பகம், சென்னை. பக்161

சாமி.அ,மா., 2000, இந்துசமய இதழ்கள் ஒரு ஆய்வு, நவமணி பதிப்பகம், சென்னை. பக்-18

சாமிநாதையரவர்கள்,உ.வே., (1992), புத்த சரித்திரம் பௌத்த தருமம் பௌத்த சங்கம், சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.

சாமிநாதன், D.,(2008), syllabus on social harmony, Department of comparative Religion & Social harmony, Eastern university.

துரைசாமிப்பிள்ளை,சு., வேங்கடசாமி நாட்டார்.ந.மு., (2001), கூலவாணிகன் சாத்தனாரின் மணிமேகலை, சாரதா பதிப்பகம், சென்னை. பக்-199

றிச்சாட்,அ.எஸ்., (2006), சமூகப்பொருண்மைகள், சமூகவியல் வட்டம், யாழ்ப்பாணம். பக்7

நாரததேரர்,வண., (1971), பௌத்தம் ஒருசுருக்க வரலாறு, கண்டி பௌத்த நூல் வெளியீட்டுக்கழகம்.

மெய்யப்பன்,செ., (1980), உலகப்பெரியார் புத்தர், மணிவாசகர் நூலகம், சென்னை. பக்-11

Tiwari,k.n., (2012), Comparative Religion, Motial banarsidass publishers, bungalow road, Jawahar nagar, Delhi. Pg.45,74

Tachibana,s., (1926), The ethics of buddhism, barnes, totowa. Pg.20

# இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் கன்மம் மற்றும் மறுபிறப்புக் கோட்பாடு - அல்குர்ஆனையும் திரிபீடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

Mr. Kamaraj Pradeevan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
pradeevanpradeevan45@gmail.com

Mr. Kanesan Mathiseelan
Department of Comparative Religion and Social Harmony,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
mathiseelank@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ் ஆய்வானது உலகில் அதிகமான மதங்களில் பேசப்படுகின்ற கன்மம் மறுபிறப்பு பற்றிய சிந்தனையினை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. ஆய்வின் விரிவுக்கு அஞ்சி இஸ்லாம், பௌத்த சமயங்கள் கூறும் கன்மம், மறுபிறப்பு சிந்தனையினை எடுத்தாராய்வதாக உள்ளது. அதிலும் குறிப்பாக இஸ்லாம் என்ற வகையில் அல்குர்ஆனையும் பௌத்தம் என்ற வகையில் திரிபிடகத்தையும் இவ் ஆய்வானது அடிப்படையாகக் கொண்டுள்ளது. கன்மம் என்றால் செயல், வினை எனப் பொருள்படுகின்றது. கன்மம் என்பது மனிதன் ஒவ்வொருவரும் செய்கின்ற செயலையும், செயலின் பயனையும் குறிப்பதாக அமைகின்றது. இத்தகைய கன்மம் பற்றிய சிந்தனையானது அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிந்தனையாக காணப்பட்ட போதிலும் சில வேற்றுமைகளை உள்ளடக்கி இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் ஆய்வின் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட பௌத்த, இஸ்லாம் சமயங்களில் இக் கன்மம் என்ற சிந்தனை குறித்து பல வேற்றுமை பண்புகள் உள்ள போதிலும் சில ஒற்றுமை போக்குகளும் தென்படுவதை இவ் ஆய்வு எடுத்துக் கூறியுள்ளது. இவ்விரு சமயங்களுக்கும் இடையே உறவு நிலையினை மேம்படுத்தும் நோக்கமாக முன்னெடுக்கப்படுகின்ற இவ் ஆய்வானது இரண்டாம் நிலை தரவுகளாகிய உரைநூல்கள், ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாக கொண்டுள்ளது. இவ் ஆய்வு உள்ளடக்க பகுப்பாய்வு, ஒப்பீட்டு பகுப்பாய்வு போன்ற முறையியல்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *ஆன்மா, கன்மம், சுவர்க்கம், மறுபிறப்பு, நரகம்*

**ஆய்வு அறிமுகம்**

சமயம் என்பது ஒரு சமூகத்தின் உயிர் நாடியாக காணப்படுகின்றது எனவே ஒரு சமூகத்தினை சிறந்த பாதையில் இட்டுச் செல்வது சமயமாகும். சமூகத்திலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாக சமயம் காணப்படுகிறது எனலாம். மனிதனை ஆன்மீகத்தில் முழுமை பெற வழி காட்டுவதே சமயத்தின் அடிப்படை நோக்கமாகும். இதன் மூலம் மனிதனானவன் தனது தினசரி வேலைகளை ஆன்மீகத்துடன் தொடர்புப்படுத்தியே மேற்கொள்கின்றான். இலங்கை நாட்டினைப் பொருத்தமட்டில் அது சமயங்கள் பற்றிய பார்வையில் இந்து, பௌத்தம், இஸ்லாம் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்களைக் கொண்ட பல் சமய நாடாகக் காணப்படுகின்றது இந்நிலையில் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட சமயமாக பௌத்த சமயம் காணப்படுகிறது. அடுத்தபடியாக இந்து, இஸ்லாம் சமயங்களைக் குறிப்பிடலாம். இன்றைய சூழலைப் பொருத்தமட்டில் பல் சமயக் கல்வியானது மிக முக்கியமான தொன்றாக விளங்குகின்றது. இன்று மக்கள் முன்னைய காலங்களைப் போல் அல்லாமல் பல்வேறுபட்ட சமயச் சூழலில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் காணப்படுகின்றார்கள். இதனால் மக்கள் பிற சமயங்களைப் பற்றி கற்க வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு மக்கள் பிற சமயங்களை கற்பதன் ஊடாக அவர்களிடம் பல்வேறு சமய நல்லுறவுப் பண்புகள் வளர்த்துக் கொள்ளப்படும். அதாவது புரிந்துணர்வு, ஒற்றுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகோதரத்துவம் போன்ற நல்லிணக்க பண்புகள் வளர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும். அது மட்டுமல்லாமல் பிற சமயங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ளும்போது ஒவ்வொரு சமயங்களுக்கு இடையிலான கொள்கைகள், கோட்பாடுகள், விழுமியங்கள், கலாசாரங்கள் போன்றவற்றில் காணப்படும் வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதின் ஊடாக இன, மத, மொழி போன்றவற்றினால் ஏற்படும் பிரச்சனைகள் முரண்பாடுகள் என்பன ஏற்படாமல் தடுக்க உதவுகின்றது.

ஒவ்வொருவரும் சமயங்ளுக்கும் அடிப்படையாக அமைவது அவற்றின் புனித நூல்களே ஆகும். அத்தகைய புனித நூல்களை அறிந்துக் கொள்வது மிக அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அவை உள்ளடக்கியிருக்கின்ற கோட்பாடுகள் சிந்தனைகள் என்பவற்றை அறிந்துக் கொள்ளுதலும் அவற்றை பகுப்பாய்வு செய்வதும் வேண்டப்படுகின்றது. அந்தவகையில் இவ்வாய்வானது அல்குர்ஆன் மற்றும் திரிபீடங்களுக்கிடையிலான (தம்மபதம்) கர்ம கோட்பாடு எவ்வாறு அமைகின்றது என்பதை ஒப்பிட்டு நோக்க முயற்சிக்கின்றது எனலாம்.

கர்மம் என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முந்தைய ஜென்மத்தில் செய்த செயல்களின் கூட்டுத் தொகையாகும். கர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரவர் வினைப்பயன் ஆகும். அவரவர் செய்யும் செயல்களில் தான் அவரவர் கர்மம் இருக்கிறது. நல்ல செயல்களை செய்தால் அதன் பயன் நன்மை தரும். மாறாகத் தீவினை செய்தால் அதன் பயன் துன்பத்தைத் தரும் என்பது வேதவாக்கு. உயிர் அல்லது ஆன்மா உடலைத் துறந்த பின் அது முற் பிறவியில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப

மனிதனாகவோ அல்லது விலங்காகவோ, மற்ற உயிரினங்களாகவோ மறு பிறப்பு எடுக்கின்றது என்பது கர்மக் கோட்பாடு ஆகும்.

இந்திய சமயங்களில் கர்ம கோட்பாடானது மிகவும் இன்றியமையாத ஒன்றாக உள்ளது எனலாம். அந்தவகையில் இந்து, பௌத்த சமயங்களில் குறிப்பிடத்தக்க இடத்தினைப்பெறுவதாக கர்மக் கோட்பாடு பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பௌத்த சமயத்தில் அவரவரின் கர்ம பலன்களுக்கு ஏற்ப பிறப்பின் தன்மை அமைகின்றது. இந்த பிறவிச் சங்கிலியிலிருந்து விடுபட்டு இறுதிநிலையினை அடைய வேண்டும். அவ்வாறு வீடு பேறு அடையாத சந்தர்பத்தில் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துக் கொண்டே இருக்கும் நிலை ஏற்படும் என குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய சமயத்தை பொறுத்தவரை இப் பூமியை விளை நிலமாகக் கருதிக் கொண்டு நீங்கள் அல்லாஹ்வின் மீது பூரண விசுவாசம் கொண்டு அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நடத்தை விதிகளையும், இறைத்தூதரான முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் ஒழுங்காகப் பின்பற்றி வாழ்ந்தால் சொர்க்கம் செல்லலாம். இல்லையெனில் நரகத்தை நிரந்தர வசிப்பிடமாக கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என கூறுகின்றது. மேலும் இவ்வுலக வாழ்க்கையின் மனிதன் அனுபவிக்கும் துன்பங்களை அல்லாஹ் அவனை சோதிக்கத் தருபவை ஆகும். இதனைப் பெருமையுடன் ஏற்றுச் செயல்படுபவனே உண்மையான வெற்றியை அடைவான் என அல்குர்ஆன் கூறுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

ஒரு ஆய்வானது முழுமை பெற வேண்டுமாயின் நோக்கமானது மிகப் பிரதானமான ஒன்றாக காணப்படுகின்றது. ஆய்வின் தேவை கருதியும் அதன் இலக்கிற்காகவும் இவ்வாய்வின் நோக்கத்தினை இரண்டு வகையாக பிரித்து நோக்க முடிகின்றது. அந்த வகையில் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைவது வேறுபட்ட வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள பௌத்தம் மற்றும் இஸ்லாம் சமயங்களின் கன்ம மறுப்பிப்புக் கோட்பாடுகளை ஒப்பீட்டு ஆய்வு செய்வதாகும்.

இவ் ஆய்வின் உபநோக்கங்களாக அமைவது இஸ்லாம் பௌத்த கன்ம மறுபிறப்பு கோட்பாடு பற்றிய புதிய ஆய்வுகளை மேற்கொள்ள உதவுதல். கன்ம மறுபிறப்பு கோட்பாடு பற்றி இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் விதத்தினை தெளிவுபடுத்துதல் மாணவ ஆய்வாளர்கள் இஸ்லாம், பௌத்த சமயங்களில் பேசப்படும் கன்ம மறுபிறப்பு கோட்பாடுகள் பற்றி கற்பதற்கு உசாத்துணை ஒன்றை ஏற்படுத்தல் இவ்வாறான நோக்கங்கள் உபநோக்கங்களாக இவ்வாய்வு கொண்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

இஸ்லாம், பௌத்த சமயங்களுக்கிடையே ஆன்மா அல்லது உயிர், மறுபிறப்பு பற்றிய தத்துவமாக வியாக்கியானம் செய்யுமிடத்து, கன்மக் கோட்பாடு மிக முக்கியமாக செல்வாக்கு செலுத்துகின்றது. இஸ்லாம் சமயத்தின் புனித நூலான அல்குர் ஆனது செய்யப்படும் செயல்களுக்கு ஏற்ப மறுமை எனும் மறுவுலகில் அதற்கான பலனை ஆன்மா கண்டுகொள்ள முடியும் என கூறுகின்றது. இருப்பினும் மீண்டும் பிறத்தல் எனும் மறுபிறவி கொள்கையை

மறுக்கின்றது ஆயினும் மீண்டும் எழுப்பப்படுதல் என்ற கொள்கையை குர்ஆன் ஏற்றுக் கொள்கின்றது. பௌத்த சமயமானது கன்மம், மறுபிறப்பு, வீடுபேறு அதாவது நிர்வாணத்தையும் ஏற்கின்றது. ஆனால் ஆத்மா இல்லை என்கிறது. எனவே பௌத்தம் அனாத்மவாத கொள்கையை பேசுகின்றது. ஆன்மா இல்லாத போது கன்ம, மறுபிறப்பு, வீடு பேற்றினை எவ்வாறு பேசலாம் எனும் பிரச்சனை எழுகின்றது. இஸ்லாம் மறுபிறப்புக் கொள்கையை மறுக்க பௌத்தம் அதனை ஏற்கின்றது ஆனால் பௌத்தம் ஆன்மா இல்லை என கூற இஸ்லாம் ஆன்மா உண்டு என கூறுகின்றது. இதன் அடிப்படையில் இரு சமயங்களுக்குமிடையே ஒத்த கருத்துக்கள் காணப்பட்டாலும் முரண்படுகின்ற போக்கும் காணப்படுகின்றமையே இவ்வாய்வின் பிரச்சினையாக காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஒரு ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகள் அதன் நம்பகத்தன்மை இரண்டிலேயே தங்கி இருக்கிறது. சேகரிக்கப்படும் தரவு செம்மையாகவும், நேர்த்தியாகவும் இருக்கும் போது ஆய்வின் முடிவு உண்மையாகவும் நம்பகத் தன்மையாகவும் அமையும். தரவு சேகரித்தல் ஆய்வின் முக்கியமான தொன்றாக காணப்படுகின்றது. ஆய்வுகள் தொடர்பான தரவுகளை முதன்மை நிலை தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் என இரு வகைப்படுத்தலாம்.

இவ்வாய்விற்கு இரண்டாம் நிலை தரவுகளை மட்டுமே மையமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுடன் தொடர்புடையதாக இதுவரை வெளிவந்த ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள், உரைநூல்கள் மற்றும் இணையதளத் தகவல்கள் போன்றன இவ்வாய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இஸ்லாம் மற்றும் பௌத்த சமயங்களுக்கிடையிலான கன்ம மறு பிறப்பு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஆய்வானது விவரண பகுப்பாய்வு மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு போன்ற முறைகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் கருதுகோள்**

அல்குர்ஆன் திரிபீடகம் போன்ற புனித நூல்களில் கன்ம மறுபிறப்பு கோட்பாடு பற்றிய கருத்துக்கள் தொடர்பில் வேற்றுமைகள் காணப்பட்டாலும் சில ஒற்றுமைகள் காணப்படவே செய்கின்றது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

பாலடிவேல். பொ (2003) ‘‘கர்மயோகம்’’ எனும் நூலில் கர்மா என்றால் என்ன? அதன் அர்த்தம், செயல்கள், கர்மயோகமாக அமைவதற்கு உள்ள ஐந்து நிபந்தனைகள், செயல் வாழ்வை வகைப்படுத்துகிறது போன்றவற்றை விளக்குகிறது. அதாவது கர்மம் என்ற சொல்லிலிருந்தே கர்மயோகம் என்ற சொல் உருவாகிறது. இவை சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றிய சொற்களாகும். செய்யப்படும் எல்லா செயல்களுமே கர்மா எனப்படுகின்றது. இவ்வாறான பல விடயங்கள் இந் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்துர் ரஸ்ஸாக் எம்.ஐ. (1999) ‘‘இஸ்லாமிய விழுமியங்கள்’’ எனும் நூலில் மனித வாழ்க்கையானது மரணத்துக்குப் பின் எவ்வாறான நிலையில் காணப்படும் என்றும் மறுமை நிலையானது இன்மை நிலையற்றது மறுமை ஏன் அவசியப் படுகிறது எனவும் இந்த மனித விதியை தீர்மானிப்பவன் அல்லாஹ் என்றும் இவ்விலக்கியத்தில் விளக்கப்பட்டுள்ளது.

‘‘சங்கை மிகு அல்குர் ஆன்’’ (தமிழ் மொழியில் அதன் கருத்துக்கள்) எனும் இந்த நூலில் இந்த பூவுலகின் தோற்றம், உயிரினங்கள், பொருட்கள் என்பவற்றின் தோற்றம் மனிதனுடைய கடமைகள் மற்றும் அவனுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புக்கள், உலக முடிவு, உலகம் அழிந்த பின்னரான நிலை, மறுமை, சொர்க்கம், நரகம், தண்டனை போன்ற சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக இந்நூல் காணப்படுகின்றது.

தாம்பரம் கமால் ‘‘இறந்த பின்னர் மனிதன் என்ன ஆகிறான்’’ என்ற நூலில் இறந்த பின்னர் மனிதன் என்ன ஆகிறான்? எனும் கேள்வியை எழுப்பி அதற்கு பதில் கூறும் விதமாக இந்த கட்டுரை அமைகின்றது. மனிதன் இறந்த பின்னர் அவனது உலக வாழ்வு முடிந்து விட்டது. அவன் இந்த பூவுலகில் இருக்கும் போது என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அவன் செய்யும் செயல்களில் அவன் பாவம் புண்ணியங்களை எண்ணி செயல்களில் ஈடுபடுவதில்லை. ஆனால் அவன் இறந்த பின்னர் அவனது உலக வாழ்கை முடிந்து நிரந்தரமான ஒரு மறுமை வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் போன்ற விடயங்களும் இறைவன், மனிதன், பல ஜென்மம்.விதி.உலக முடிவு காலம் போன்ற பல தலைப்புகளுடனான பதிவுகளும் இதில் அடக்கப்பட்டுள்ளது.

கா.ஹு.ஹு ‘‘பகவான் புத்தர்’’ எனும் இலக்கியத்தில் பௌத்தம் குறிப்பிடும் இருவகையான கர் மங்கள் பற்றி குறிப்பிடுகிறார். அவையான அகுசல கர்மம், குசல கர்மம் என்பனவாகும். அகுசல கர்ம பாதை என்பது மற ஒழுக்கத்தினையும் குசல கர்ம பாதை அற ஒழுக்கத் தினையும் போதிப்பதாக குறிப்பிடப்படுகின்றது. அதனடிப்படையில் நாம் குசல கர்மத்தை மட் டும் செய்து கொண்டிருக்கும் போது அதில் பற்றுக்கொண்டோமானல் அந்த பற்றே அகுசல கர்மத்தினைத் தோற்றுவிக்க இடம் தரும் என்கிறது. குசல கர்மம் மிகுந்த விழிப்பும் உற் சாகமும் கொள்ள வேண்டும் எனவும் விரிவாக விளக்கப்படுகிறது.

சித்தாத்த.வீ. ‘‘புத்த தம்மம் அடிப்படைக் கொள்கைகள்’’ எனும் இலக்கியத்தில் ஒருவன் தன் சொந்த கர்மாவை தானே உருவாக்கிக் கொள்கிறான் அது பிறரால் எமக்கு திணிக்கப்படுவதன்று. நல்ல, நிறைவான, திறன்மிக்க, ஈகை, கருணை, நல்லுணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலான செயல்கள் நற் கருமங்கள்(குசல கர்மா) என்றும் தீய, திறனற்ற, பேராசை, வெறுப்பு மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான செயல்கள் தீய கருமங்கள் (அகுசல கர்மா) என குறிப்பிடப்படுகின்றது.

குமாரசுவாமி. தா. நா ‘‘கோதம புத்தர்’’ எனும் நூலில் கருமம் பற்றி கூறுகையில் தீய செயல்கள் தோன்றுவதற்கு மூன்று மூலகங்கள் உள்ளன என்கிறார். அவையாவன அவை (அழுக்காறு), துவேʼம் (பகை),மோகம் (மருள்) இவை ஒவ்வொன்றும் தீவினையை

தோற்றுவிப்பன. எனவும் தீவினையால் உண்டாகும் மறுபிறப்பு பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

தமிழில் நவாலியூர் நடராசன். சோ. ''புத்த பகவான் அருளிய போதனை'' பக்கம் 36 - 38 வரையில் நூலாசிரியர் கன்மம் என்பது வேட்கை, சங்கற்பம், மனோசங்சோதனஹர என்பன எல்லாம் ஒரே பொருளுடையவை எனவும் பௌத்தத்தில் கன்மம் என்றால் எல்லா வினையையும் குறிக்காது. அதாவது விரும்பித் துணியும் சங்கற்ப பூர்வமான செயல்களையே குறிக்கும். இங்கு நற்செயலுக்கு வெகுமானமும், பாவத்திற்கு தண்டனை என்ற கோட்பாடன்று கன்மக் கோட்பாடு இது காரண காரிய தொடர்புடையது என கன்மக் கோட்பாட்டினை விரிவாக விளக்க முற்படுகின்றார்.

**கன்மம், மறுப்பிறப்பு பற்றிய அறிமுகம்**

கன்மம் என்ற சொல்லுக்குப் பொதுவாக ஊழ், செயல் அல்லது வினை என்பதே பொருள். ஆனால் தத்துவ ஞான உலகில் கன்மம் என்ற சொல் சற்று விரிந்த கருத்தினைக் கொண்டதாகவே அமைகின்றது. கன்மம் இந்திய தத்துவஞானம் அனைத்திற்கும் மிக அடிப்படையான ஒரு தத்துவக் கருத்தமைவாகும். இந்திய தத்துவங்களுள் ஒன்றான சைவசித்தாந்தம் கடவுள் உண்டென்பதை நிரூபிப்பதற்கு அவர்கள் காட்டும் முக்கிய காரணங்களில் ஒன்றாகக் கன்மம் உள்ளது.**(லஷ்மணன்,.கி., (2005)**

இவ்வாறு சிறப்புப் பெறும் கன்மமானது காமிகம், நிஷ்காமிகம் என இருவகையில் அடங்கும். நிஷ்காமிக கன்மம் பலன் கருதாத செயலைக் குறிப்பதாகும். ''கன்மமானது சுய விருப்பினை விலக்கி கடமையைப் பெரிதென மதித்து செயற்படுமிடத்து அது தருமமாகிறது'' ஒவ்வொரு செயலுக்கும் நோக்கமும் பலனும் உண்டு. அப்பயனை அனுபவித்தலும் செயல் எனப்படுகின்றது. இவை யாவற்றையும் உள்ளடக்கிய பொருண்மை உடையதாக கன்மம் என்ற சொல் அமைகின்றது. இன்னும் செயல் என்ற அளவில் மட்டும் நில்லாது எண்ணம். சொல் என்பனவும் கன்மத்துக்குள் அடங்குகின்றன.

மனம், வாக்கு, காயம் மூன்றினதும் செயற்பாடுகளுக்கும் நிச்சயமான பலன் உண்டு அப்பலன்கள் செய்தவனைச் சென்று சேரும் என்பதுவே கன்மக்கோட்பாடு என்பர். இக்கோட்பாடானது வேத உபநிடத காலத்தில் இருந்து வளர்ச்சியுற்று வந்திருக்கின்றது. தமிழ் நூல்கள் பலவும் கன்மத்தின் வலிமையை விரிவாகப் பேசுகின்றன. திருக்குறளில் ''ஊழ்'' என்ற அதிகாரமும் நாலடியாரில் ''பழவினை'' என்ற அதிகாரமும் ஊழ்வினை உறுத்து வந்தூட்டும் என்பதை வலியுறுத்துகின்றன. சிலப்பதிகாரமும் இங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. திருக்குறள் உரையாசிரியருள் ஒருவரான பரிமேலழகர் ஊழ் என்பதற்கு இருவினைப் பயன் செய்தவனைச் சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி என்று விளக்கம் கூறி பால், முறை, உண்மை, தெய்வம், நியதி விதி என்பவற்றையும் ஊழைக் குறிக்கும் சொற்களாகக் குறித்துள்ளார். **(கலைவாணி இராமநாதன்., (1997)**

இந்திய தத்துவத்தில் மறுபிறப்புப்பற்றிய கருத்தாக்கம் ஆனது முதன்மைக்குரியதொன்றாக விளங்குகின்றது. மறுபிறப்பு என்பது உலக வாழ்வியலில் இருந்து விடுபட்ட ஆன்மாவிற்கு

ஏற்படும் மற்றுமோர் பிறப்பாகும். இந்தவகையில் ஒருவருக்கும் இன்னொருவருக்குமிடையே பிறவியில் காணப்படும் குணவித்தியாசங்களுக்கு அவரவர் பழைய கன்மங்களே பொறுப்பாகும். பழைய கன்மம் பழைய பிறவிக்குள் செல்லுகின்றது. இதுபோல செய்கின்ற வினைகள் யாவும் இப்பிறவியிலே அவற்றின் பயனை அடைவதில்லை. எனவே மிகுதியாக உள்ள கன்மங்களை அனுபவிக்க ஒவ்வோர் ஆன்மாவிற்கும் தொடர்ச்சியாகப் பிறப்பும் இறப்பும் உள்ளது. பயிர் விளைந்து முதிர்வது போல அழியும் தன்மை உள்ள மனிதனும் வளர்ந்து முதிர்கிறான். அவன் பயிரைப்போல மீண்டும் உயிர் பெற்று எழுவான் பழைய ஆடைகளைக் களைந்துவிட்டு புதியவற்றைப் புனைந்து கொள்வதைப் போல உதவாத உடல்களை விட்டு விட்டு ஆன்மா புதிய உடல்களுக்குள் புகுந்து கொள்கிறது. வாட்ஸ்வொர்த்து என்ற ஆங்கில கவிஞர் பாடல் ஒன்றைத் தருகின்றார்.

‘‘பிறப்போ துயிலும் மறுப்பும் ஆகும்
பிறக்கும் ஆன்மா பெரிதோர் வான்மீன்
எங்கோ மறைத்தும் எட்டாத்தூரம்
நீங்கி வரினும் நீங்கா நினைவொடு
பழமைத் துநிலைக் களையா வண்ணம்
மழையாய் மாண்பும் வழியே சிறக்க
எல்லாம் எங்கள் இறைவன்
எல்லாம் விழுந்து இங்க வந்தனமே” **(மகாதேவன்., ரி. எம். பி., (2001)**

இவ்வாறு ஆன்மா பல உடலினுள் புகுதலை பாவச்சக்கரம் என வழங்கப்படுகின்றது. வீடுபேறடையும் வரை ஆன்மா பிறப்பு. இறப்பு விதிக்கு உட்பட்டிருக்கும். முழு நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்” **(மேலது ப.52)** என்ற சடக்கொள்கை கருதுகோள் இந்து மதத்திற்கு ஏற்புடையதன்று மனிதன் இறந்த பின்பும் வாழ்கின்றான் அல்லது இறந்த உடலோடு அழிந்து போகின்றான் எனும் கேள்வி இந்துசமயத் திருநூல்களில் அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வியாகும். இதற்கு என்றும் தரப்படும் விடை ஆன்மா என்றும் அழியாதது. பிரமத்தினை அறிவதன் மூலம் ஆன்மாவின் கன்மங்கள் அழிக்கப்படுகின்றன. அப்போது இனிப்பிறப்பென்பதில்லை என்றாகின்றது. ஆன்மா தன் என்றுமுள்ள தன்மையை அடைகின்றது. அது பாவச்சக்கரத்திற்குத் திரும்பாது முடிவுள்ள தன்மைத் தனிமங்கள் இன்னமும் ஆன்மாவில் ஒட்டிக்கொண்டிருக்குமாயின் ஆன்மா தன் கூட்டை மாற்றிக் கொண்டேயிருக்கும். ஒரு பெரிய தத்துவ ஞானியர் அழகுபடக் கூறுவது போல ‘‘காட்டு ஓடையொன்றில் புழுக்கள் ஒரு குட்டையிலிருந்து மறுகுட்டைக்குச் செல்வது போல ஜீவன் பிறப்பில் இருந்து இறப்பிற்கும் இறப்பிலிருந்து பிறப்பிற்கும் பாவச்சக்கரச் சுழலில் சிக்கிப்போய்க்கொண்டேயிருக்கிறது’’. எனலாம். ஒரு பிறவியில் இருந்து மற்றொரு பிறவிக்கு இங்கும் அங்கும் மனிதன் எறியப்படுகின்றான் மாயையில் சூழ்ந்த கன்மத்தின் ஆற்றல் காரணமாக ஆன்மா இறந்து பிறந்து கொண்டே இருக்கிறது எனலாம்.**(மேலது ப.53)** மானிட ஆன்மாவானது தேவராய் மனிதராய். நாற்கால் விலங்காய் பறவையாய், நீர்வாழ்வனவாய். தாவரமாய் பிறந்தும் இறந்தும் உழன்று கொண்டு வரும் என்பதே மறுபிறப்புக் கொள்கையாகும். இக்கொள்கை இந்திய தத்துவத்தில் பல நூற்றாண்டுகளாய்

வேரூன்றியிருக்கின்றது. இந்தவகையில் மறுபிறப்புண்டு என்பது இந்திய தத்துவ வாதிகளால் ஆதார பூர்வமாக எடுத்துரைக்கப்படுகின்றது. **(ஸ்ரீசுவாமி சிவானந்தா., (1999)**

**இஸ்லாம், பௌத்தம் கூறும் கன்மம்**

இஸ்லாம் சமயமானது வெளிப்படையாக கன்மக் கோட்பாடு பற்றி பேசாத போதும் மறைமுகமான விடயங்களில் கன்ம பற்றிய கருத்துக்களை போதிக்கின்றது. அதாவது இஸ்லாத்தின் புனித நூலான திருக்குர்ஆனில் செயலுக்கான கூலி பற்றி கூறப்படுகின்றது. இங்கு செயல் என்பது கன்மமே ஆகும். அந்தவகையில் இஸ்லாம் கூறும் கன்மம் பற்றி நோக்குமிடத்து, இஸ்லாம் சமயத்தை பொறுத்தவரையில் நாம் செய்யும் செயலுக்கு கட்டாயம் கூலி கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். அந்த வகையில் அல் குர் ஆனில் குறிப்பிடும் செயலுக்கான கூலி பற்றிய கருத்துக்களை நோக்கும் போது. ‘‘(முஹம்மத் அவர்கள் மீது) நிச்சயமாக! விசுவாசம் கொண்டோர்களே அவர்களும், யூதர்களாக இருந்தார்களே! அவர்களும், கிறிஸ்தவர்களும், ஸாபியீன்களும் (அவர்களில்) எவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து நற்கருமத்தையும் செய்தார்களோ அத்தகையவர்களுக்கும் அவர்களுடைய கூலி அவர்களுடைய இறட்சகனிடத்தில் உண்டு. மேலும் அவர்களுக்கு மறுமை பற்றி எவ்விதப் பயமுமில்லை. இன்னும் உலகில் எதை வீட்டுச் சென்றார்களொ அதுபற்றி அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்”**(அல்பகறா2:62)**

மேலும் திருக்குர் ஆன் வசனங்கள், மற்றைய மனிதர்களையும் (குறிப்பாக) இணைவைத்துக் கொண்டிருந்தோரையும் விட இவ்வுலக வாழ்வின் மீது அதிக பேராசை கொண்டவர்களாக (நபியே!) அவர்கள் நிச்சயமாக நீர் காண்பீர். அவர்களில் ஒருவன் தான் ஆயிரம் வருடங்கள் வயதளிக்கப்பட வேண்டுமென விரும்புவான். (அவ்வாறு அதிக நாட்கள்) அவன் வயதளிக்கப்பட்டாலும் அது (நரக) வேதனையிலிருந்து ஒரு சிறிதும் வெனை தூரமாக்கி விடாது. இன்னும் அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை பார்க்கின்றவன்”. **(அல்பகரா 2 : 96)** இன்னும் நிச்சயமாக அவர்கள் விசுவாசம் கொண்டு (அல்லாஹ்வினால் தடுக்கப்பட்டவற்றைத் தவிர்ந்து) அஞ்சிக் கொண்டார்களானால் (அவர்களுக்குத்) திட்டமாக அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்கூலி மிகச்சிறந்ததாக இருக்கும். (இது பற்றி) அவர்கள் அறிந்து கொள்வார்களானால் (மிக்க நன்று) **(அல்பகரா 2 : 103)** இவ்வாறு இம்மை மறுமை ஆகிய இரண்டின் நற்பேறுகளைக் கேட்கின்ற அத்தகையோர் அவர்களுக்குத்தான் அவர்கள் சம்பாதித்தவற்றில் பங்குண்டு இன்னும் அவர்கள் கணக்குத் தீர்ப்பதில் தீவிரமானவன் **(அல்பகரா 2 : 202)**

இத்தகையோர் தாம் அவர்களுக்கு மறுமையில் (நரக) நெருப்பைத் தவிர (வேறு ஒன்றும்) இல்லை. அவர்கள் அவ்வுலகத்தில் செய்தவை அழிந்தும் விட்டன. அவர்கள் செய்து கொண்டிருந்தவை வீணானவையாகும் **(ஹூது 11: 16)**

மேலும், விசுவாசம் கொண்டு, பயபக்தியுடையவர்களாகவும் இருந்தார்களே அவர்களுக்கு மறுமையின் கூலியானது மிக மேலானதாக இருக்கும். **(யூஸு∴ப் 12 : 57)** யார் அல்லாஹ்வுடைய உவப்பை நாடி உளப்பூர்வமாக தங்கள் பொருளைச் செலவு செய்கிறார்களோ அவர்களு(டைய தர்மத்து)க்கு உவமை உயரமான பூமியிலுள்ள ஒரு

தோட்டம் போன்றதாகும். அதில் பெருமழை பெய்யும் பொழுது தன்னுடைய கனிகளை அது இரு மடங்காகத் தருகிறது. அப்படி பெரு மழை அதில் பெய்யவில்லை என்றாலும் இலேசான தூறல் கூட அதற்குப் போதுமானதாகும். நீங்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் நன்கு பார்ப்பவனாக இருக்கின்றான். **(அல்பகறா 2 : 261-265)**

இஸ்லாம் வெளிப்படையாக கன்மம் பற்றி பேசாத போதும் தாம் செய்யும் செயலுக்கான கூலி பற்றி பேசுகின்றது அதாவது நாம் நல்ல செயலை புரியும் போது எமக்கு மறுமையில் சொர்க்கமும் தீய காரியங்களை புரியும் போது மறுமையில் நரக வாழ்வும் கிடைக்குமென இஸ்லாம் கூறுகின்றது.

பௌத்த மதம் கூறும் கன்மம் பற்றி நோக்குமிடத்து ஆத்மாவை மறுக்கும் பௌத்தம் வெளிப்படையாகவே கன்மம் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றது. அந்த வகையில் பௌத்தம் கூறும் கன்மமானது மிகச் சிக்கலானதும் நுட்பமானதுமான மன அறிவாற்றல், ஒழுக்கவேறுபாடுகள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் நம் அறிவு மேலும் விருத்தியடைய வேண்டும். மதிப்புமிகுந்த மூதாதையரை நெடுங்காலமாகக் கொண்ட ஒரு மரபில் ஒரு குற்றவாளி பிறப்பதையும், ஒரு இழிவான குடும்பத்தில் ஒரு ஞானி பிறப்பதையும் குழந்தைப் பருவத்தில் அருந்திறன் பெற்றவர், சிறப்புத்திறன் வாய்ந்தவர், மாபெரும் சமயத் தலைவர் முதலியோரின் தோன்றலையும் பற்றி மரபுரிமைத் தத்துவம் ஒரு திருப்திகரமான விளக்கத்தைத் தரமுடியவில்லை. பௌத்தத்தின்படி இம்மாறுபாட்டுக்கு மரபுரிமை, சூழ்நிலை, இயற்கை வளர்ப்பு முதலியவை மட்டுமல்லாமல் எமது சொந்த கன்மமும் காரணமாகும். அதாவது எம்முடைய சொந்த இறந்தகால, நிகழ்கால வினைகளின் விளைவாகும் - எமது செய்கைகளுக்கும் சந்தோஷத்திற்கும் துயரத்திற்கும் நாமே பொறுப்புடையவர். எம்முடைய நரகத்தை நாமே அமைக்கிறோம். எமது மோட்சங்களை நாமே உருவாக்கிறோம். நாமே எமது விதியின் சிற்பிகள். சுருக்கமாகச் கூறினால், நாமே நமது கன்மம் ஆகும்.

ஆகவே பௌத்த நிலையிலிருந்து பார்த்தால், எமது மனம், அறிவாற்றல், ஒழுக்கம், உணர்வின் வேறுபாடு முதலியவை எல்லாம் எம்முடைய இறந்த கால, நிகழ் காலச்செய்கைகளினதும் மனப்போக்கினதும் விளைவுகளாகும். கன்மம், செயல் என்று பொதுவாக அர்த்தப்படும். ஆனால் அதன் ஆழ்ந்த கருத்தில் தகுதியானதும் தகுதியற்றதுமான விருப்பச் செயலைக் (குசல-அகுசல சேதனா) குறிக்கும். கன்மம் நல்லதையும் கெட்டதையும் உள்ளடக்கியது. நல்லது நல்லதை தோற்றுவிக்கும், கெட்டது கெட்டதைக் தோற்றுவிக்கும். இனம் இனத்தை விரும்பும் (உற்சாகமானவர் மற்றவரையும் உற்சாகப் படுத்துவார்). இதுவே கன்மத்தின் விதியாகும்.

சில மேலைநாட்டவர் கன்மாவைச் ‘‘செயல் - அதன் செல்வாக்கு’’ எனப் பெயரிட விரும்புகின்றனர். நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். நாம் விதைத்ததை எங்காவது, எப்படியாவது அறுப்போம். ஒரு வகையில் நாம் முன்னிருந்த நிலையின் விளைவாகிறோம். சில வேளையில் இப்போதிருக்கும் நிலையின் விளைவாக இனிமேல் இருப்போம். இன்னொருவகையில் இன்று தீயவனாக இருப்பவன் நாளை ஞானியாக மாறலாம். இம்மாறுபாட்டுக்குக் கன்மமே காரணம் என்று பௌத்தம் கொள்கிறது. எல்லாம் கன்மத்தினால் விளைபவை என வலியுறுத்தவில்லை. எல்லாம் கன்மத்தின் காரணமாக நடைபெற்றால்,

ஒருவனது கன்மம் கெட்டதாக இருந்தால் அவன் என்றும் கெட்டவனாகவே இருக்கவேண்டும். ஒருவனின் வியாதியை கன்மம் குணப்படுத்த முடியுமானால் அவன் வைத்தியனை நாடவேண்டிய அவசியமில்லை. பௌத்தத்தின்படி உடலுக்குரிய ஆட்சியிலும் மனதுக்குரிய ஆட்சியிலும் 5 செய்முறைகள் (நியமங்கள்) இருக்கிண்றன.

1. **கன்ம நியமம்**: செயலும் விளைவும் என்ற நிரனிறை. நல்ல செயல்கள் நன்மையை விளைவிக்கும். தீச்செயல்கள் தீமையை விளைவிக்கும்.

2. **உத்து நியமம்**: பௌதீக (அசேதன) செய்முறை. உ-ம்: காற்று, மழை முதலிய பருவகாலத் தோற்றப்பாடுகள்.

3. **பீஜ நியமம்**: முளை அல்லது விதைகள் (பௌதீக சேதன தொடர்) உ-ம்: அரிசி விதையிலிருந்து அரிசியின் உற்பத்தி, கரும்பிலிருந்து அல்லது தேனிலிருந்து வரும் இனிப்புத் தன்மை முதலியன. கலங்கள் பிறப்புரிமை அலகு என்பனவற்றின் விஞ்ஞானக்கொள்கையையும், இரட்டைக் குழந்தைகளின் ஒத்த உடற்பண்பையும் இச்செயல் முறையின் கீழ் சேர்க்கலாம்.

4. **சித்த நியமம்:** மனம் அல்லது உளவியல் பற்றிய செய்முறை. உ-ம்: விழிப்புணர்ச்சியின் செய்முறை (சித்த வித்தி), மனவலிமை முதலியன.

5. **தம்ம நியாயம்:** மாதிரிச் சட்டச் செய்முறைகள். உ- ம்: போதிசத்துவரின் வருகை குறித்து அவரது இறுதிப் பிறப்பில் நிகழும் தோற்றப்பாடுகள். புவியீர்ப்பு முதலியனவற்றயே புத்தர் விளக்குகின்றார்.

கன்மம் என்ற பிரச்சினையைப் பற்றிய உரையாடலின் போது தண்டனை, வெகுமதி போன்ற சொற்றொடர்களை உபயோகிக்கக் கூடாது. ஏனெனில், தண்டனைகளையும், வெகுமதிகளையும் அளிக்கும் ஒரு எல்லாம் வல்ல இறைவனைப் பௌத்தமதம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே ஒருவனின் நல்ல, தீய செயல்களின் இயற்கை விளைவே அவன் அநுபவிக்கும் மகிழ்ச்சியும் துயரமும் என்று பௌத்தர் நம்புகின்றனர். கன்மம் தொடரத்தக்கதும் (முன்னேறத்தக்கதும்) தண்டனைக்குத் தக்கதுமான தன்மைகள் இரண்டையும் உடையது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.

**ஆன்மா பற்றிய கருத்துக்கள்**

ஆன்மா, ஆன்மிகம் சம்பந்தமாக பல மதங்களும் கூறியுள்ளன. ஆனால் இஸ்லாம் கூறும் ஆன்மாவின் உண்மைத் தன்மை, மனிதனை இறைவனிடம் நெருங்கவைத்து மனிதப் படைப்பின் நோக்கத்தைப் புரியவைக்கின்றது. ஆனால் பௌத்தம் ஆன்மா என்ற ஒன்று உலகில் இல்லை என்றும் ஆன்மா என்ற ஒன்று தேவையில்லை என்று கூறுகின்றது. இக் கருத்தினை அடிப்படையாக கொண்டு இவ்விரு சமயங்களிலும் ஆன்மா பற்றிய எவ்வாறான கருத்துக்கள் காணப்படுகின்றது என்பதினை நோக்குவோம்

இஸ்லாம் சமயத்தில் ஆன்மா பற்றி நோக்குமிடத்து, இறைவனின் படைப்புகளிலே மிகவும் உயர்ந்த படைப்பு மனிதன்தான். காரணம் யாதெனில் எந்தவொரு படைப்புக்கும்

வழங்கப்படாத ‘ஆன்மா’ என்ற ஒரு அம்ஷம் மனித உடலில் காணப்படுகின்றது. இவ்வான்மா பறவைகளுக்கோ, மிருகங்களுக்கோ, தாவரங்களுக்கோ எம் கண்களுக்குப் புலப்படாத நுண்உயிரிகளுக்கோ வழங்கப்படவில்லை. மனிதனுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அரபு மொழியில் ந.ஃப்ஸ், ரூஹ் என்ற பதங்களில் இது அழைக்கப்படுகின்றது. ஆன்மா வல்ல நாயன் அல்லாஹ்விடமிருந்து தான் மனிதனில் ஓதப்பட்டது. அதனை அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வரும் வசனங்களில கூறுகின்றார். **(அப்துர் ரஹ்மான் டாக்டர், த., (2008)**

“அவன் மனிதப் படைப்பைக் களிமண்ணிலிருந்து ஆரம்பித்தான். பின்னர் வடிகட்டி எடுக்கப்பட்ட அற்ப நீரில் (இந்திரியத்தில்) இருந்து அவனது சந்ததியை உண்டாக்கினான். பின்னர் அதனைச் செவ்வையாக உருவாக்கி தன்னுடைய ரூஹிலிருந்து அதில் ஊதி (மனிதனை உண்டாக்கி)னான”. **(அல்குர்ஆன் - 32:7,8,9)**

மனிதன் என்ற பதப்பிரயோகம் இப்பூமியில்தான் பிரயோகிக்கப்படுகின்றது. இதற்கு முன்னுள்ள கட்டங்களிலும் பின்னுள்ள கட்டங்களிலும் “ஆன்மா (ரூஹ்)” என்றே குறிக்கப்படுகின்றது. மனித ஆன்மா ஆறு கட்ட நிலைகளைக் கடந்துதான் வேதனைமிக்க அல்லது இன்பம் சொட்டும் அழிவேயற்ற நிரந்தரமான வாழ்வை அடைகின்றது. இவ்வுலக வாழ்வென்பது ஆன்மாவின் நீண்ட பயணத்தொடரின் மூன்றாம் கட்ட நிலையாகும். முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்து அவருக்கு ரூஹை (ஆன்மாவை) ஊதியதன் பின்பு அவரிலிருந்து மறுமை நாள் நிகழும் வரையிருக்கும் இறுதி மனிதன் வரையுள்ள அனைவரதும் ஆன்மாக்களைப் படைத்துள்ளான் அல்லாஹ் என்றே இஸ்லாமியர்கள் கூறுகின்றானர்

பௌத்த சமயத்தில் ஆன்மா பற்றி நோக்குமிடத்து, வட மொழியில் ஆத்மன் என்று கூறப்படும் ஆன்மா என்பது மனிதனகத்துள்ள நித்தியமான அழிவற்ற சார்பில்லாத தனிப்பொருள் மாற்றத்துக்குட்பட்ட இந்த உலகின் பின்னால் மாறாதிருக்கும் ஒரு பொருள் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு மனிதனிடத்தும் தனிப்பட்டதொரு ஆன்மா உண்டென்றும், அது கடவுளால் சிருட்டிக்கப்பட்டதென்றும், அது மரணத்தின் பின்னர் அதன் சிருட்டி கர்த்தாவின் கடைசி நாள் தீர்ப்பின்படி நரகத்துக்கோ சுவர்க்கத்துக்கோ செல்லுமென்றும் சில சமயத்தவர் கூறுவர். வேறு சிலர் அது பல பிறவிகளை எடுத்து முற்றாய்த் தூய்மையடைந்த பின்னர் ஈற்றில் எந்தப் பிரமத்திலிருந்து அது தோன்றிற்றோ அந்தப் பரமாத்மனோடு கலந்துவிடும். மனிதனிடத்தில் எண்ணங்களை எண்ணுவதும், வேதனைகளை உணர்வதும், நல்வினை தீவினைக்கேற்ற பிரதிபலன்களைப் பெறுவதும் இந்த ஆன்மாவே என்பர். இத்தகைய கோட்பாடே ஆன்மா எனப்படும்.

இத்தகைய ஆன்மா என ஒன்றில்லை என்று மறுப்பதில் பௌத்தம் மனித சிந்தனை வரலாற்றிலேயே ஒப்புயர்வற்ற இடத்தை வகிக்கிறது. இது கற்பனையிற் பிறந்த போலிக் கொள்கையாகும். உண்மையில் ஆன்மா என்ற பொருள் இல்லை. இது “நான்” , “எனது” என்ற இச்சையுண்டாக்கும் எண்ணங்களை உண்டாக்குகிறது. தன்னலம் வாய்ந்த ஆசைகளையும், வேட்கை, பற்று, துவேஷம், பகைமை, மானம், இறுமாப்பு, அகங்காரம் முதலிய ஆசவங்களையும் உண்டாக்குகிறதெனப் புத்த தர்மம் கூறுகிறது. தனிப்பட்ட பிணக்குகள் தொட்டுத் தேசங்களிடையே யுத்தங்கள் வரை எல்லாவற்றுக்கும் ஆன்மாவே

காரணம். சுருங்கக் கூறுவதானால் இந்தப் போலிக் கொள்கையே உலகிலுள்ள தீமைகளெல்லாவற்றுக்கும் காரணம் எனலாம். **(ராமஸ்வாமி, ப., (2003)**

**இஸ்லாம் கூறும் மறுமை வாழ்வும், பௌத்ததின் மறுப்பிறப்பும்**

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் மறுமை வாழ்வானது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. அல்குர்ஆன் அத்தியாயங்களின் மிக முக்கிய கருப்பொருள்களில் ஒன்றாகவும் இது அமைந்திருக்கின்றது. மனித வாழ்க்கையோடு மட்டும் வரையறுத்து நோக்குவதில்லை. புவி வாழ்க்கையின் பின் நீண்ட நிரந்தர வாழ்வொன்றுண்டு என்ற உண்மையை மனிதனுக்குத் தெளிவுபடுத்திக் காட்டுவதன் மூலம் அவனது புவி வாழ்க்கையை நெறிப்படுத்திச் செல்ல இஸ்லாம் விளைகின்றது. இதனால் தான் இறை நம்பிக்கையைக் கையாள்வது போன்றே மறுமை வாழ்வு பற்றிய விடயத்தையும் அல்குர்ஆன் கையாளுகின்றது.

மரணத்தின் பின்னர் இன்னுமொரு வாழ்வு தேவையானது என்ற சிந்தனை மிகவும் அவசியமானதாகும். உலகில் இதனை மறுப்போர்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றனர். ஆசைகளுடனும், நீண்ட எதிர்பார்ப்புக்களுடனும் தொடர்புபடுகின்ற வாழ்வு மரணத்தின் மூலம் இடை நடுவே முறிவடைந்து விடுவதனால் ஏதோ ஓர் அமைப்பில் அதற்குரிய தீர்வு இரும்குமென்று அம்மக்கள் சிந்தித்திருக்கின்றனர். இதனால் தான் உடலை விட்டு பிரியும் உயிர் ஒரு போதும் அழியப் போவதில்லையென்று அவர்கள் கருதினர். அவ்வுயிர் எங்கு சென்று நிலைகொள்கிறது? என்ற வினா அவர்கள் மத்தியில் தோற்றுகிறது. அந்த வினாவின் பலனாக ஓர் இடத்தில் நிலைக்கொள்ளுதல் என்ற மறுப்பிறப்பு சிந்தனை உருவாகியது. இவ்வாறு மனிதர்கள் மத்தியில் தோன்றிய இச் சிந்தனை சரியானதென்று நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வாழ்வு தொடரப்பட வேண்டுமென்ற மனித ஏக்கத்தையே இது காட்டுகின்றதென்பது தெளிவாகின்றது. மனித வாழ்வு மிகவும் ஆச்சரியமிக்க அல்லாஹ்வின் ஒரு கொடையாகும். ஆசைகள் நோக்கங்கள் எதிர்பார்ப்புகள் மன எழுச்சிகள் என்பன மனித வாழ்வை இயக்கி செல்கின்றன இவை அவனை அறிவு தேவைகளோடு அல்லது குடும்ப நலன்களோடு அல்லது அரசியல் பொருளாதார முன்னேற்றங்களோடு தொடர்புபட்டவையாக இருக்கலாம். எனினும் அவன் சிறிதும் எதிர்பாராத வகையில் ‘‘மரணம’’ இவற்றில் குறுக்கீடு செய்கின்றது. உண்மையில் அவனது கனவுகளும் கற்பனைகளும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதே மனிதனுக்குத் தென்படுகின்ற நியாயமாகும். மனிதன் பெற்றுக்கொள்ளும் இன்ப வாழ்வானது சொர்க்க வாழ்வு என்று வர்ணிக்கப்படுகின்றது.

பௌத்த சமயம் கூறும் மறுப்பிறப்பு பற்றி நோக்குமிடத்து, வாழ்க்கை மரணத்துடன் முடிவதில்லை எனப் பௌதர்கள் நம்புகிறார்கள். வாழ்க்கை மரணத்திற்குப் பின் தொடங்குகிறது (ஒருவர் நிர்பாணம் அடையும் வரை). உண்மையில், இந்தப் பிறப்புக்கு முன்னும் வாழ்க்கை இருந்திருக்கிறதெனப் பௌத்தர்கள் நம்புகிறார்கள். வாழ்க்கை என்பது பிறப்பு, இறப்பு, மீண்டும் பிறப்பு எனச் சுழலும் வாழ்க்கைச் சக்கரமேயாகும். இது ‘‘சம்சாரா’’ என அழைக்கபடும். நாம் இதற்குமுன் பிறந்திருப்போமேயானால், ஏன் நம் முன்பிறவிகள் நம் நினைவில் இல்லை? தம் கடந்த வாழ்வுகளை நினைவில் வைத்திருப்போர் பற்றிய

எடுத்துக்காட்டுக்கள் அரிதாகவே உள்ளன. ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு நம் நினைவாற்றல் முழுநிறைவான தன்று - அது மிகவும் அளவிட்டதாயுள்ளது. இப்பிறவியில் நாம் பிறந்ததே நம் நினைவில் இல்லை. இருந்தும் நாம் பிறந்திருக்கிறோம். நம் நினைவில் பின் நோக்கித் தேடுகையில் ஓரளவே நம்மால் செல்லமுடிகிறது. ‘‘ஆன்மா’’ இல்லையாயின் எவ்வாறு ஒருவன் மறுபடி பிறக்க முடியும்? பவுத்தம் மீள் உருவாக்கத்தைப் (மறுபிறப்பைப்) போதிக்கிறது, அது அழிவிலா ஆன்மாவிற்கூடான மறு அவதரிப்பினின்று முற்றிலும் வேறுபட்டது.

**முடிவுரை**

‘‘இஸ்லாம் பௌத்த சமயங்கள் கூறும் கன்மம் மற்றும் மறுபிறப்புக் கோட்பாடு - அல்குர்ஆனையும் திரிப்பிடகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒப்பிட்டாய்வு’’ எனும் தலைப்பின் கீழ் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு இரண்டு வேறுபட்ட புனித நூல்களைத் தெரிவு செய்து அதில் காணப்படும் கன்ம மறுப்பிறப்பு கோட்பாட்டுக் கருத்துக்களை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

கன்மம் எனும் சொல்லானது இன்று அதிகளவானவர்களால் பேசப்படும் ஒரு சொல்லாக காணப்படுகின்றது. கன்மமானது அல்குர்ஆனிலும் திரிப்பிடகத்திலும் பல்வேறு தன்மைகளில் எழுத்தாளப்பட்டிருந்த போதும் திரிபிடகத்தில் காணப்படுகின்ற கன்மத்திற்கான முக்கியத்துவமானது திருக்குர்ஆனின் குறிப்பிடப்படவில்லை திரிப்பிடகத்தில் மறுபிறப்பு பற்றிய கொள்கைக்கு முக்கியத்துவம் வழங்கும் அதேவேளை அல்குர்ஆனில் மறுமை வாழ்விற்கும் ஆன்மாவிற்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது ஆனால் பௌத்த சமயத்தில் ஆன்மா என்று ஒன்று பற்றி பேசப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடபட வேண்டிய விடயமாகும்.

அந்தவகையில் நான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அதற்கான தகுந்த விளைவும் உண்டு. செயலை செய்தவன் அந்த விளைவிலிருந்து என்றுமே தப்ப முடியாது என்பதே கர்மம் ஆகும். இந்த கன்மமானது எமது வாழ்வில் எவ்வாறு நிகழ்கின்றது என்றால் அதற்கு காரணம் அதிக பற்று வைப்பது ஆகும் பற்றின் காரணமாகவே நாம் துன்பமடைகின்றோம். மனதைச் சுதந்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் நாம் செய்கின்ற செயலோடு நம்மை பிணைத்துக் கொண்ட உடனே துன்பத்தை உணரத் தொடங்குகின்றோம் ஆனால் அதனை இணைத்துக்கொள்ளாமல் வேலை செய்வோமானால் நாம் துன்பத்தை உணர மாட்டோம். அந்த வகையில் இரண்டு சமயங்களும் மறுபிறப்பு பற்றிய கருத்தில் ஒருமித்த கருத்தை கொண்டு காணப்படுகின்றது. அதாவது பௌத்தம் நாம் செய்யும் செயலுக்கு ஏற்ப மறுபிறவி கிடைக்கும் என குறிப்பிடும் அதை வேளை இஸ்லாம் தான் செய்யும் செயலுக்கு ஏற்ப மறுமை வாழ்வில் ஆன்மாவிற்கான நரகம் அல்லது சொர்க்கம் கிடைக்கும் என குறிப்பிடுகின்றது. இஸ்லாம் குறிப்பிடும் மறுமை வாழ்வு என்பது ஆன்மாவிற்கான மறு பிறப்பாகவே பார்க்கப்படுகிறது அதாவது பௌத்தத்தில் மனிதன் ஏதோ ஒரு பிறவி எடுத்து தனது கருமத்தை கழித்த பிறகு தான் நிர்பாணம் அடைகின்றான். ஆனால் மறுமை நாளில் ஆன்மாவானது தான் செய்த செயலுக்கான பலனை மறுமை நாளில் அனுபவித்து அங்கே

தங்கி விடுகின்றது என இஸ்லாம் கூறுகிறது .இந்த இரண்டு கருத்துக்களையும் உற்று நோக்குமிடத்தில் இவ்வாய்வானது ஒற்றுமையான கருத்தை கொண்டதாக காணப்படுகின்றது.

வாழ்வில் வேறுபட்ட கருத்தாக அமைவது ஆன்மா பற்றிய கருத்தாகும் இரண்டு சமய இலக்கியங்களும் வேறுபட்ட கருத்துக்களை வழங்குகின்றது இஸ்லாம் சமயமானது ஆன்மா உண்டு என ஏற்றுக் கொள்ளும் அதேவேளை பௌத்தம் ஆன்மா ஒன்று இல்லை என குறிப்பிடுகின்றது. எனவே இவ்வாய்வானது ஒற்றுமையான கருத்தினை கூறும் அதேவேளை முரண்பாடு அல்லாத வகையில் வேற்றுமையான கருத்தினையும் வழங்குகின்றது அது மாத்திரம் இன்றி மக்களை நல்வழிப்படுத்துவதாகவும் தனது கருத்துக்களை இரு பெரும் நூல்களும் வெளிப்படுத்துகின்றன. ஆன்மா, மறுபிறப்பு எனக் கூறும் இரு பொருளும் தன்னளவில் சிறியது அன்றி அது மேலும் ஆய்விற்கு உட்படுத்தக் கூடிய ஒன்றாய் இருப்பதால் இவ்வாய்வினை அடிப்படையாக வைத்துக் கொண்டே மேலும் பல ஆய்வு செய்வதற்கான அடிவேராகவும் இவ்வாய்வு காணப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

1. அப்துர் ரஹ்மான், டாக்டர் த., (2008), மறுமை நீதி விசாரனை, த பாபிரஸ் அச்சகம், மணி ஆப்செட் சென்னை 5.
2. கலைவாணி இராமநாதன்., (1997), சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள்.
3. சங்கைமிக்க அல்குர்ஆன் மற்றும் தமிழ் மொழியில் அதன் கருத்துக்களில் மொழிபெயர்ப்பு, சங்கைக்குரிய முஸ்ஹப் அச்சிடுவதற்குரிய கண்ணியமிக்க புனிதத்தலங்களின்பணியாறர் மன்னர், பஹத் வளாகம்.
4. தமிழாக்கம், கிருஷ்ணன். ஒ. ரா. ந., (2008), சத்தம்மக் கையேடு.
5. மகாதேவன், ரி. எம். பி., (2001), இந்து சமயதத்துவம்.
6. ராமஸ்வாமி. ப., (2006), புத்தரின் தவமும் தத்துவங்களும், வ.உ.சி நூலகம், சென்னை 6000014.
7. லக்ஷ்மணன், கி.,(2005), இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 600014.
8. வல்லபொல, ஸ்ரீ. இராகுலர்., (1989), திரிபிடகம் வாகீஸ்வராசரியர், தமிழாக்கம் நடராசன், சோ., புத்த பகவான் அருளிய போதனை.

# Philosophy, Values & History

# தென்னிந்தியத் திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்டம் கிராம சேவகர் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மெய்யியல் ஆய்வு – 2023

Ms. Pushparaj Dhanadharshani
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*dharshipushparaj@gmail.com*

Dr. Ratnasabpathy Premkumar
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
*premkumarr@esn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் அதிகளவு செல்வாக்கு மிக்க ஊடகமாக உலகில் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகின்றது. வாழ்க்கை மற்றும் மதிப்பீடுகள் தொடர்பாக மக்களுடைய மனப்பாங்குகளையும் கருத்துக்களையும் தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் மாற்றி அமைப்பதுடன் நின்றுவிடாது சிறுவர்களின் அறிவு, ஆளுமை, உளவியல், ஒழுக்கம், பண்பாடு, மொழி போன்றவற்றில் பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றன. திரைப்படம் என்னும் மாபெரும் சக்தி அவர்கள் பெற்ற முறையான அங்கிகரீக்கபட்ட சமூகமயமாக்கச் செயன்முறைகளைக் கேள்விக்குறியாக்குவதாக இருக்கின்றது. இவ்வகையில் பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்ட கிராம சேவகர் பிரிவில் வாழும் மக்கள் இந்திய வம்சாவழியினராக இருப்பதன் காரணமாகவும் சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கிய தோட்டப்புற சூழலில் வாழ்கின்றவர்களாக இருப்பதன் காரணமாகவும் இப்பிரதேச சிறுவர்களிடையே தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்களின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. இலங்கையில் பெருமளவில் சிறுவர்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பதுளை மாவட்டம் ஊவா பரணகம பிரதேச செயலகப் பிரிவிற்குற்பட்ட ஹியூகோலண்ட் தோட்ட கிராம சேவகர் பிரிவில் தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள் எவ்வாறான தாக்கங்களை சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன என்ற எனது இந்த ஆய்வு முதல் முயற்சியாக கருதப்படக்கூடியது. இவ் ஆய்வின் ஆய்வு முறையானது பண்பு மற்றும் அளவுசார் ஆய்வு முறைகளின் கலவையாக விளங்குகின்றது. இவ்வகையில் இந்த ஆய்வில் நோக்க மாதிரி, வசதி மாதிரி மற்றும் மையக்குழு முறை வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள் சிறுவர்கள் மீது ஏற்படுத்தியுள்ள ஒழுக்க, சமூக, பொருளாதார, உளவியல், மொழியியல், உடலியல், கலாசாரப் பாதிப்புக்களை கண்டறிவறிவதாகவும் அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதாகவும் அமைகின்றது.

***திறவுச்சொற்கள்:*** *இந்திய வம்சாவழி, ஊவா பரணகம, ஒழுக்கம், சமூகமயமாக்கல், தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக்கொண்ட மெய்யியலானது பல்வேறு துறைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது. மெய்யிலின் பிரதான ஆய்வு பிரிவுகளில் ஒன்றாக ஒழுக்கவியல் காணப்படுகின்றது. ஒழுக்கவியல் என்ற சொல் ஆங்கிலத்தில் Ethics என்ற சொல்லால் கூறப்படுகின்றது. ஒழுக்கம் பற்றிய ஆய்வானது மனித ஒழுக்கத்தை மையப்படுத்தியது. அதாவது மனித ஒழுக்கம் ஒழுக்கத்தோடு தொடர்பான பல்வேறு நடத்தைகள் மற்றும் அவை பற்றிய கோட்பாடுகள் பற்றிய ஆராய்ச்சியாகும்.(வில்லியம் லில்லி,1963:14)

ஒழுக்கவியலானது மெய்யியலின் முக்கியமான ஒரு பிரிவு. இது நடத்தை தொடர்பில் சரி, பிழை ஆகிய கருத்துருக்களை முறைப்படுத்தி, பேணி, அவற்றைக் கைக்கொள்ளும்படி மக்களுக்குப் பரிந்துரை செய்வது ஆகும். ஒழுக்கவியலின் முக்கியமான அம்சம் ‘‘நல்ல வாழ்வு’’ ஆகும். பயனுள்ளதும், திருப்தி அளிப்பதுமான வாழ்வே முக்கியமானது எனபதே பல மெய்யியலாளரது கருத்தாகும். மெய்யியலில், ஒழுக்கம் அழகியலின் நிரப்புக்கூறாகக் கருதப்படுகிறது. ஒழுக்கம், மனிதர்களது நன்னடத்தை தொடர்பாகவும், ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் ஆய்வு செய்கிறது. ஒழுக்கவியல் தொடர்பான ஆய்வுப் பரப்பானது, கடப்பாட்டு ஒழுக்கம், பயன்பாட்டு ஒழுக்கம், விளக்க ஒழுக்கம் எனும் பிரிவுகள் கொண்டு நோக்கப்படுகின்றன.(சிவானந்தமூர்த்தி,அன்ரன்டயல், 1998:01)

ஒழுக்கவியல் மனித ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முயல்கிறது. நல்லது - கெட்டது, சரி - பிழை, நல்லொழுக்கம் - தீயொழுக்கம், நீதி-குற்றம் ஆகிய கருத்துருக்களுக்கான விளக்கங்களைக் காண்பது இதன் நோக்கம்.

மனிதன் உலகில் தோன்றிய காலம் முதற்கொண்டு மானிட தொடர்பாடலும் தோன்றியது. மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி ஆராய்ந்து தொடர்பாடலில் பரிணாம வளர்ச்சியை ஆராய்வதை போன்றது எனலாம். மானிட சமுதாயத்தில் விருத்தியுடன் தொடர்பாடல் ஒன்றிணைந்து காணப்படுவதே இவற்றிற்கான காரணமாகும். அது ஒரு இணைபிரியாத தொடர்பாகும். ஆயினும் வெகுஜன ஊடகம் கைத்தொழில் வளர்ச்சியில் ஏற்பட்டது.

வெகுஜன ஊடகமானது அச்சு ஊடகம், இலத்திரனியில் ஊடகம் என இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றது. இலத்திரன்கள் உலகத்தினை கட்புல, செவிப்புல, பல்லூடகம் எனவும் வகைப்படுத்த முடியும். அச்சு ஊடகத்தினுள் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் என்பனவும் இலத்திரனியில் ஊடகத்தினுள் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் என்பனையும் உள்ளடங்கும்.

அந்தவகையில் தற்போதுள்ள காலகட்டத்தில் திரைப்படங்களினால் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்படுள்ளன. இவ்வகையில் தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் ஆய்வு பிரதேசமான ஹியூகோலண்ட் தோட்ட சிறுவர்கள் இடையே ஒழுக்கவியல் ரீதியாக, சமூக ரீதியாக, கலாச்சார ரீதியாக, உளவியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக,

மொழியியல்ரீதியாக, உடலியல் ரீதியாக எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது என்பது தொடர்பில் இவ் ஆய்வானது கவனம் செலுத்துகின்றது.

சினிமா என்பது கலையம்சத்தோடு கூடிய பொழுதுபோக்கு அம்சம் என்பதை தாண்டி பல புதிய சிந்தனைகளை பார்வையாளர்கள் மத்தியில் விதைக்கும் ஒரு பாரிய ஊடகமாகவும் செயல்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் உன்பதும் உறங்குவதும் திரைப்படங்களுடன் தான் என்ற சூழ்நிலை காணப்படுகிறது. பிரான்ஸ் நாட்டின் லூயிஸ் லூமியர், அகஸ்டின் லூமியர் என்னும் சகோதரர்களால் 1895 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட திரைப்படமானது 1897 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தது.(பிரேம் குமார், 2019:6)

தமிழ் திரைப்படங்களை எமது நாட்டில் வயது வேறுபாடு இன்றி பலரும் பார்க்கின்றனர். இதில் பெரும்பாலானோர் சிறுவர்களாகவே காணப்படுகின்றனர். தற்கால சிறுவர்கள் விளையாட்டை தாண்டி பொழுதுபோக்கு நோக்கில் பெரும்பாலான நேரத்தை திரைப்படங்களை பார்ப்பதற்காகவே செலவிடுபர்களாக உள்ளனர்.

அதிலும் 14 தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் திரைப்படங்களை அதிக அளவில் பார்ப்பவர்களாக காணப்படுகின்றனர். இளம் வயதில் இவர்கள் பார்க்கின்ற இத்திரைப்படங்கள் ஒழுக்கவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் அவர்கள் வாழ்வியல் முறையில் பல்வேறுபட்ட தாக்கத்தை ஏற்ப்படுத்தக் கூடியதாக காணப்படுகின்றன.

உதாரணமாக சிறார்கள் திரைப்படங்களை பார்க்கும் போது திரைப்பட கதாநாயகனின் நடை, உடை, பாவனை, அவனின் கொள்கைகள் போன்றவற்றை உள்வாங்கி அதை பிரதிபலிக்க கூடியவர்களாக காணப்படுகின்றனர். மேலும் பெரும்பாலான திரைப்படங்களில் கதாநாயகனின் பாடசாலை காலங்களை சித்தரிக்கும் காலப்பகுதியில் அவன் ஆசிரியர்களை மதிக்காதவராகவும், விளையாட்டுத்தனம் கொண்டவனாகவும், இளம் வயதிலேயே காதலில் ஈடுபடுபவனாகவும் காணப்படுகின்றான்.

இவ்வகையான திரைப்படங்கள் சிறுவர்கள் பார்ப்பதன் மூலமாக இவ்வகையான கதாநாயகனின் செயற்பாடுகளை சிறுவர்கள் தம்மகத்தே உள்வாங்கி இதனையே வீரம் (Heroism) எனக் கருதுகின்றனர். இது ஒழுக்கக்கேடான பல பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகின்றது.

மேலும், சில திரைப்படங்களில் வரும் முதன்மை கதாபாத்திரமான கதாநாயகர்கள் தமக்கு வரும் பிரச்சினைகளை தாமே தீர்த்துக் கொள்பவர்களாகவும் மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களாக மிதமிஞ்சிக் காட்டப்படுத்தப்படுகின்றனர். அத்துடன் சில திரைப்படங்களில் சமூக சேவைகளில் ஈடுபடுகின்றவர்களாகவும் அவர்கள் காட்டப்படுகின்றனர். இதனால் சிறுவர்களும் அவர்களைப் போலவே தமது வாழ்க்கையினை அமைத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். மேலும் பல திரைப்படங்கள் பெண்களை மையமாக வைத்து வருவதுடன் பெண்களை மதிக்க வேண்டும் என்ற கருத்துக்களையும் வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது. இதனையும் சிலர் உள்வாங்கி வெளிப்படுத்தும் தன்மை காணப்படுகின்றது.

இவ்வாறாக இவ்வாய்வானது தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள் குறித்த ஆய்வு பிரதேசத்தில் உள்ள சிறுவர்கள் இடையே ஏற்படுத்தி இருக்கும் தாக்கங்களை ஒழுக்கவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், சமூகவியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், மொழியியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் வகைப்படுத்தி ஆராயப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வின் பிரதான நோக்கம் தென்னிந்திய திரைப்படங்களை பார்ப்பதன் மூலமாக சிறுவர்களிடம் ஏற்படும் தாக்கங்களை கண்டறிதல் ஆகும். அதாவது, ஒழுக்கம், கலாச்சாரம், உளம், பொருளாதாரம், சமூகம், மொழி, உடல் ரீதியாக சிறுவர்களிடத்தே திரைப்படங்கள் ஏற்படுத்தியிருக்கும் சாதகமான மற்றும் பாதகமான விடயங்களை கண்டறிதலே இவ்வாயின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

தென்னிந்திய திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் பெரும் அளவிற்கு ஒழுக்கவியல் சார்ந்த, உளவியல் சார்ந்த, உளம் சார்ந்த, உடலியல் சார்ந்த, சமூகம் சார்ந்த, மொழி சார்ந்த, உடலியல் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது என்பது எனது ஆய்வின் ஆய்வுப்பிரச்சினை ஆகும்.

**ஆய்வு வினாக்கள்**

01. தென்னிந்திய தமிழ் திரைப்படங்கள் சிறுவர்களிடையே தாக்கங்களை ஏற்படுத்துகின்றனவா?
02. எத்தகைய தாக்கங்களை தென்னிந்திய திரைப்படங்கள் சிறுவர்கள் சமூதாயத்தில் ஏற்படுகின்றன?
03. இவற்றுக்கான தீர்வுகள் யாவை?

**ஆய்வு முக்கியத்துவம்**

இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்கள் சக்தி வாய்ந்த இலத்திரனியல் ஊடகமாக மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று காணப்படுவதின் காரணமாக இத்தகைய திரைப்படங்கள் மக்கள் மத்தியில் பல்வேறு மட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வகையில் திரைப்படங்கள் சிறுவர் மத்தியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகின்றது என்பது இவ்வாய்வில் முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் பொருட்டு இவ் ஊடங்களினால் விளையும் நன்மை, தீமைகளை எடுத்துக் கூறி அது பற்றிய சிறந்த எண்ணங்களை மக்களின் மனதில் விதைத்தல் வேண்டும்.

வளர்ந்து வரும் குழந்தைகள் நாளைய சிறுவர்கள் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பதன் அடிப்படையில் அவர்கள் உளவியல் மற்றும் ஒழுக்க நிலையின்படி எண்ணிலடங்காத பல நல்ல விடயங்களை பதிக்க வேண்டியவர்கள். இவ்வாறு

எத்தனையோ பல நல்ல விடயங்களை தன்னுள்ளே பதிப்பின் ஊடாக அறிவியல், கல்வியியல் போன்றவற்றினால் சமூகத்தில் சிறந்த மானுட சக்தியாக உருவாக்க வேண்டும். என்பது எதிர்பார்ப்பு ஆனால் வெற்று காகிதமாக காணப்படுகின்ற சிறுவர்களின் மனதில் பெரும்பாலான நேரங்களில் திரைப்படங்களை பார்ப்பதன் மூலமாக அவர்களது சிந்தனையில் பெரும்பாலான பகுதி திரைப்படங்களால் நிரப்பப்படுகின்றன.

இவ்வாறான செயல் சிறுவர்களின் மனதில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனில், அவர்களின் வெளிப்படையான சிந்தனையின் முடிவு திரைப்படங்களை மையமாகக் கொண்டு அமையும் என்பதுடன் எதிர்காலத்தில் அவர்களின் ஆளுமை வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

திரைப்படங்களின் தாக்கத்தினை எடுத்துக்கூறி பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களை விளிப்படைய செய்வதன் மூலம் வருங்கால சந்ததியினரை செழுமையாக உருவாக்குவதுடன் வளமான தேசியத்தையும் கட்டி எழுப்பல் இவ்வாய்வின் முக்கியத்துவமாக காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அடிப்படையில் பண்பு சார்ந்த ஆய்வாக காணப்படுகின்றது. இவ் வகையில் இந்த தலைப்புடன் தொடர்புபட்ட வகையில் வெளிவந்திருக்கின்ற ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள். மாநாட்டு ஆய்வுகள் போன்றவற்றை முதன்மையான மூலங்களாகவும், வினாக்கொத்து, நேர்காணல், மையக்குழு கலந்துரையாடல், அவதானம் என்பவற்றினை மூல வளங்களாகவும் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மேலும் இவ் ஆய்வானது பண்பு ரீதியானதாகவும் பண்பாட்டுக் கற்கை நெறி சார்ந்ததாகவும் இருப்பதன் காரணமாக வினாக் கொத்துமுறை, நேர்காணல் முறை, அவதானமுறை, மையக்குழு கலந்துரையாடல்முறை என்பன வரையறுக்கப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் நேர்காணலுக்காகவும், வினாக்கொத்திற்காகவும் நான் நோக்க மாதிரி, வசதி மாதிரி மற்றும் மையக்குழு முறை போன்றவற்றினைப் பயன்படுத்தியுள்ளேன். இவை மட்டுமன்றி இணையத்தள மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இன்பமோகன்.க,சந்திரசேகரம்.சி, பிரோம்குமார்.இ, என்பவர்கள் எழுதிய ‘‘கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்’’ (2020) எனும் நூலில் ஒழுக்கவியல் என்றால் என்ன? என்பது பற்றியும் பிரயோக ஒழுக்கவியலின் பிரிவுகள் பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன. ஊடக ஒழுக்கவியலில் ஊடகத்தின் வகைகள் மற்றும் ஊடகத்கின் ஒழுக்கங்கள் என்பவற்றோடு ஊடக ஒழுக்கங்கள் என்பவற்றோடு ஊடகங்களில் இடம்பெறுகின்ற ஒழுக்க மீறல்கள் தொடர்பான கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

கோவிந்தன்.க என்பவர் எழுதிய "தமிழ் திரைப்படங்களில் ஆண், பெண் பால் பேதம்" (1994) எனும் நூலில் தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் ஆண், பெண் பால் பேதம் குடும்ப உறவுகளில் சித்தரிக்கப்படுவதை மிகத் தெளிவாக விளக்குகின்றார்.

சிவகுமாரன்.கே.எஸ். என்பவர் எழுதிய "சினிமா சினிமா ஓர் உலக வலம்" (2006) எனும் நூலில் உலக சினிமாவின் வரலாறு, இந்திய சினிமாவின் வரலாறு, தமிழ் சினிமாவின் வரலாறு, குறுந்திரைப்படங்கள் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

சிவக்குமார்.எஸ். என்பவர் எழுதிய "சினிமா கோட்பாடு" (1992) என்னும் நூலில் உலக திரைப்படங்களின் தோற்றம், திரைப்பட கதாநாயகனின் முகபாவனை மற்றும் நடிப்பு அதனை பார்ப்பவர்களிடம் ஏற்படும் தாக்கம் என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளார்.

பிரேம்குமார்.இ. என்பவர் எழுதிய, மொழிதல் தொகுதி 06 எனும் ஆய்வு இதழில் "திரைப்பட கலை ஓர் பின்நவீனத்துவ ஆய்வு" (2019) எனும் ஆய்வு கட்டுரையில் திரைப்படங்களின் வகைகள், திரைப்படமும் தொழில்நுட்பமும், திரைப்படமும் நோக்கமும், திரைப்படமும் இரசிகர்கள் பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன.

பிரேம்குமார்.இ. என்பவர் எழுதிய, நெய்தல் தொகுதி 09 எனும் ஆய்விதழில் "பெண்ணிய அழகியல் சிந்தகைள் - ஒரு பின்நவீனத்துவ நோக்கு" எனும் ஆய்வு கட்டுரையில் பெண்கள் கலைப்படைப்புகளில் சித்தரிக்கப்படும் விதம் குறிப்பீடப்பட்டுள்ளது.

தயா சோமசுந்தரம் என்பவரால் எழுதப்பட்ட "சிறுவர் உளநலம்" (2011) என்ற நூலின் மூலம் சிறுவர் உளநலம், வளர்ச்சியும் அபிவிருத்தியும், கற்றல், சிறுவர்களின் பாடசாலை சூழல், குடும்பம், போர் இடர்பாடுகள், பிரச்சினைகள் போன்றவற்றின் ஊடாக சிறுவர்களின் நடத்தை கோலங்கள் தொடர்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

**தரவுப்பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**திரைப்படங்களை விரும்பிப்பார்க்கும் சிறுவர்களின் எண்ணிக்கை.**



இவ்வாய்வு இடம்பெற்ற ஆய்வு பிரதேசமான ஹியூகோலண்ட் தோட்டமானது மலையகத்தில் அமைந்துள்ளது. இங்கு செறிந்து வாழும் மக்கள் பெரும்மாலும் இந்திய வம்சாவழி இனத்தை சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். மேலும் இவர்கள் தேயிலை தோட்டங்களில் வேலைப்பார்களாக காணப்படுவதாலும் இவர்கள் வீட்டில் இருக்கும் நேரம் குறைவானதாகவே காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள சிறுவர்கள் பாடசாலை நேரம் தவிர்த்த ஏனைய பொழுதுகளை பெரும்பாலும் தொலைகாட்சியுடனே கழிக்கின்றனர். இதில் இவர்களின் பிரதான பொழுது போக்கு அம்சமாக திரைப்படங்களே உள்ளன.

மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 60 சிறுவர்ளிடம் தென்னிந்திய திரைப்படங்களை விரும்பி பார்பிர்களா? என வினவிய போது 60 சிறுவர்களும் அளித்த பதில் ஆம் என்பதே ஆகும். மேலும் மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 60 பேற்றோர்களிடமும் உங்களுடைய பிள்ளைகள் தென்னிந்திய திரைப்படங்களை விரும்பி பார்பிர்களா? என வினவிய போது 60 பேற்றோரும் அளித்த பதில் ஆம் என்பதே ஆகும். ஆகவே இது 100% ஆக காணப்படுகின்றது.

**2.2.சிறுவர்களும் ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்களும்**




சிறுவர்களின் பிரதான பொழுது பொக்கு அம்சமாக காணப்படுவது திரைப்படங்காக காணப்படுகின்றன. தற்காலத்தில் வருகின்ற திரைப்படங்கள் பெரும்பாலும் வணிக நோக்கம் கொண்டவையாகவே காணப்படுகின்றன. திபைப்படத்தில் வரும் உடலியல் ரீதியான பெண்களுக்கு எதிரான வார்த்தை பிரயோகம் மற்றும் சில உடல் மொழி செயல்பாடுகளும் அதனை பார்க்கும் சிறுவர்கள் மத்தியில் தாக்கம் செலுத்துவதாக காணப்படுகின்றன. மேலும் சில திரைப்படங்களில் வரும் ஒழுக்கக்கேடான செயற்பாடுகளை அதன் அர்த்தம் புரியாமலேயே அதனை style என நம்பி இவ்வகையிலான ஒழுக்கக்கேடான செயற்பாடுகளை சிறுவர்களும் செய்யும் அபாயமானது தற்கால சூழ்நிலையில் காணப்படுகின்றது. உதாரணமாக:- கைகளை பயன்படுத்தி திரைப்படங்களில் செய்யும் சில குறியீட்டு முறைகள். ஆதித்யா வர்மா, நடுநிசிநாய்கள் போன்ற திரைப்படங்களின் காட்சி அமைப்புகளை குறிப்பிடலாம்.

உண்மையில் தற்காலத்தில் வெளிவருகின்ற திரைப்படங்களில் அதிகமாக காதல் மற்றும் சண்டைக் காட்சிகலே காணப்படுகின்றது. காதல் காட்சி எனும் போது அதில் பெரும்பாலும் காதல், காமம் மற்றும் முத்தக் காட்சிகள் அதிகமாக தற்கால திரைப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றன. மேலும் படிக்கின்ற காலத்தில் காதல் என்பது திரைப்படங்களில் சரளமானதொரு தொணிப்பொருளாகவே காணப்படுகின்றது.

உதாரணமாக:- டான், கோமாளி போன்ற திரைப்படங்களை குறிப்பிடலாம்.

இவ்வகையில் வெளியாகும் திரைப்படங்களில் இடம்பெறும் காதல் காட்சி பாடல் காட்சிகள் என்பன சிறுவர்கள் மத்தியில் பெரிதும் தாக்கம் செலுத்துவதாக உள்ளது. அவற்றின் தாக்கத்தால் காதல் இளவயது திருமணம் போன்ற ஒழுக்கக்கேடான செயற்படுகளில் சிறுவர்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர். அதுவும் பொதுவாக திரைப்படங்களில் கதாநாயகன் பாடசாலை காலத்தில் காதல் வயப்படுவது போன்ற காட்சி அமைப்பானது இளவயதில் காதலிப்பது என்பது ஒரு விதமான ஹீரோஸிஷம் என அதை பார்க்கும் சிறுவர்கள் நம்பி அவ்வகையிலான செயல்பாடுகளில் தாமும் ஈடுபடும் அபாய நிலையானது தற்கால சூழலில் காணப்படுகின்றது.

**சிறுவர்களும் உளவியல் ரீதியான தாக்கங்களும்**




திரைப்படங்களைப் பார்க்கும் சிறுவர்களிடம் திரைப்பட கதாபாத்திரங்கள் பாரிய அளவில் தாக்கம் செலுத்துவதாக காணப்படுகின்றது. இந்த கதாபாத்திரங்கள் சிறுவர்களை உளவியல் ரீதியாக பாதிப்படையை செய்வதுடன் தங்களை திரைப்படத்தில் வரும் கதாபாத்திரங்கள் போல எண்ணிக் கொண்டு செயல்படுவதற்கும் தூண்டுவதாக அமைகின்றது.

மேலும் இவ்வகையிலான சிறுவர்களின் நடதைகள் அவர்களை இயற்கை சூழலில் இருந்து ஒரு விலகல் செய்யப்பட்டை ஏற்படுத்துவதுடன் இவ்வகையிலான தொடர்ச்சியான செயல்பாடுகள் சிறுவர்களை உளவியல் ரீதியில் பாதிப்படைய செய்யும் அபாயம் உள்ளது.

எடுத்துக்காட்டாக:- பொதுவாக பாடசாலையில் சிறுவர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து கொண்டு எது செய்தாலும் ஒவ்வொருவரை ஒருவர் எதிர்க்கும் நிலை காணப்படுகின்றது. பசங்க, பட்டாளம், மின்னலே போன்ற திரைப்பட காட்சி அமைப்புகளில் பண்பினை காணக் கூடியதாக காணப்படுகின்றது.

**சிறுவர்களும் கலாசார ரீதியிலான தாக்கங்களும்**




நவநாகரிக உலகில் நாம் அனைவரும் பண்டைய கலாச்சாரத்தில் இருந்து நவநாகரிக கலாச்சாரத்தை நோக்கி நகர்ந்து செல்கின்றவர்களாகவே காணப்படுகின்றோம். இந்நகர்ச்சி செயற்பாட்டில் திரைப்படங்கள் பாரிய பங்காற்றுகின்றது என்றால் அது மிகையாகாது. இதிலும் திரைப்படங்களை அதிகமாக பார்க்கின்ற சிறுவர்களின் மனதில் திரைப்படத்தில் காணப்படும் நவநாகரிக ஆடை கலாச்சாரங்கள், அணிகலன்கள், கலிகாட்டங்கள் போன்றன தாக்கம் செலுத்தி அதுதான் ஒழுக்கம் என்று நினைத்து அவ்வகையிலான கலாச்சாரத்தை தாமும் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கின்றது. இது ஒரு வகையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தினாலும் மற்றொரு வகையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகின்றது.

தற்காலத்தில் வெளி வருகின்ற பாதி திரைப்படங்களில் நவநாகரிக ஆடைகள் என்ற பெயரில் அரைகுறை ஆடைகள், இரவு கலியாட்ட கொண்டாட்டங்கள், போதைவஸ்த்து பாவனை என்பனவே அதிகமாக காணப்படுகின்றது. இவற்றை பார்க்கும் சிறுவர்களின் மனதில் அவ்வகையிலான கவர்ச்சிகரமான காட்சி அமைப்புகள் ஊடுருவி தாமும் அவ்வகையான சீரழிவான ஒரு கலாசாரத்தை நோக்கி நகர்கின்ற அபாயமானது தற்கால சூழ்நிலையில் காணப்படுகின்றது.

உதாரணமாக:- காப்பான், கலகலப்பு 2

**சிறுவர்களும் பொருளாதார ரீதியான தாக்கங்களும்**



இவ்வாய்வு இடம்பெற்ற ஆய்வு பிரதேசமானது மலையகத்தில் அமைந்துள்ள ஒரு தோட்டப் பிரதேசமாகும். இங்குள்ள மக்களின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாக காணப்படுது தேயிலை செய்கை ஆகும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து மாதம் கிடைக்கும் சம்பளப் பணத்தை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை நடத்தி செல்வவர்களாக காணப்படுகின்றனர். திரைப்படங்கள் அதிகம் பார்ப்பதற்காக பயன்படுத்தும் ஊடகங்களான தொலைபேசி, இருவெட்டுகள், தொலைக்காட்சி போன்றவற்றிற்கு அதிக பணம் செலுத்த வேண்டிய தேவையானது இந்த மக்களுக்கு காணப்படுகின்றது. மாதம் கிடைக்கின்ற வருவாயில் ஒரு பகுதி அளவு தொகையை இதற்காகவே செலவிட வேண்டிய சூழ்நிலையானது இக்காலத்தில் காணப்படுகின்றது. இந்நிலையானது இவர்களை பொருளாதார ரீதியாக பின்னடைய செய்வதாக காணப்படுகின்றது.

**சிறுவர்களும் மொழியியல் ரீதியான தாக்கங்களும்**

சிறுவர்கள் திரைப்படம் பார்ப்பது என்பது அவர்களின் இயற்கை சூழலில் உள்ள மொழியை பாதிப்படைய செய்வதாக காணப்படுகின்றது. பொதுவாக சிறுவர்கள் இளம்பிராயத்தில் புதிய புதிய விடயங்களை கற்றுக் கொள்கின்றனர். அவ்வகையிலான சந்தர்ப்பங்களில் பார்க்கப்படும் திரைப்படங்களில் காணப்படும் புதிய மொழிகளையும் அவர்கள் கற்றுக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது.




சிறுவர்கள் திரைப்படம் பார்ப்பது என்பது அவர்களின் இயற்கை சூழலில் உள்ள மொழியை பாதிப்படைய செய்வதாக காணப்படுகின்றது. பொதுவாக சிறுவர்கள் இளம்பிராயத்தில் புதிய புதிய விடயங்களை கற்றுக் கொள்கின்றனர் அவ்வகையிலான சந்தர்ப்பங்களில் பார்க்கப்படும் திரைப்படங்களில் காணப்படும் புதிய மொழிகளையும் அவர்கள் கற்றுக் கொள்ளும் தன்மை காணப்படுகின்றது.

அதிலும் இவ்வாய்வு பிரதேசத்தில் அதிகமாக காணப்படுபவர் இந்திய வம்சவழி தமிழர்களாக காணப்படுகின்றனர். அதனால் இந்திய தமிழ் திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் அதே மொழி தான் இம்மக்களின் பேச்சு மொழியாக காணப்படுவதால் தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் மெழியும் இம்மக்கள் இடையே இலகுவில் ஊடுருவி தாக்கம் செலுத்தக் கூடியதாக காணப்படுகின்றது. தான் பேசும் மொழியும் திரைப்பட பிரயோக மொழியும் ஒரே போல காணப்படுவதால் அவற்றில்

பயன்படுத்தப்படும் புதிய புதிய சொற்களை செவிமெடுகின்றது. சிறுவர்களிடம் இயல்பாகவே தாக்கம் செலுத்தும். இதனால் அர்த்தம் தெரியாவிட்டாலும் சிறுவர்கள் தங்களுடைய இயல்பு வழக்கில் இம்மொழி பிரயோகங்களை பயன்படுத்தும் சந்தர்ப்பமானது காணப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக:- ஆட்டைய போடுதல், என்னென்ன சொல்ரான் பாருங்க கம்பி கட்டுற கத எல்லாம் சொல்றான், உருட்டு, வாய்ப்பில்ல ராஜா, பிச்ச மகனா, செத்தான் செகரு, கொய்யாலே.

சிறுவர்களின் இயற்கை சூழலில் இருக்கும் மொழியினை பாதிப்படைய செய்யக்கூடியதாக காணப்படுகின்றது. மேலும் வயது வேறுபாடு இன்றி அனைவரிடமும் இவ்வகையிலான வார்த்தை பிரயோகங்களை இவர்கள் பிரயோகிப்பதையும் காணக் கூடியதாக உள்ளது.

**2.7.தென்னிந்திய தமிழ் திரைப்படங்களால் ஏற்படக்கூடிய நன்மையான விளைவுகள்.**




திரைப்படங்களை பார்த்தல் என்பது தீமையான விளைவுகளை ஏற்படுத்தும் அதே சந்தர்ப்பத்தில் பல்வகையான நன்மையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாக காணப்படுகின்றது. அவ்வகையான நன்மையான விளைவுகளை நோக்கும் போது, திரைப்படங்களைப் பார்ப்பது என்பது சிறுவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட அரசியல் சிந்தனைகளை விதைக்க கூடியதாக காணப்படுகின்றது. பல்வேறுபட்ட அரசியல் சட்டங்களைப் பற்றியும், அரசியல் தலைமைத்துவத்தை பற்றியும், ஒரு நாட்டையும் தேசத்தையும் எப்படி கட்டி ஆள வேண்டும், ஒரு சிறந்த தலைவன் எவ்வாறான முறையில் இருக்க வேண்டும் போன்ற நல்ல விதமான பண்புகளை சிறுவர்கள் மத்தியில் விதைக்கக் கூடியதாக திரைப்படங்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக:- முதல்வன்,தலைவா, நோட்டா, சர்க்கார் போன்ற திரைப்படங்களை குறிப்பிடலாம். மேலும் சிறுவர்களின் கடவுள் நம்பிக்கையின் மீது திரைப்படங்கள் தாக்கம் செலுத்துவதாக காணப்படுகின்றது. சில திரைப்படங்களில் வரும் கதாநாயகன்கள் கடவுள் நம்பிக்கை மிக்கவர்களாகவும், ஒரு சில செயல்களை செய்வதற்கு முன்பு கடவுளை வணங்கிவிட்டு செய்பவர்களாகவும் காட்சிப்படுத்தப்படுகின்றனர். இவ்வகையிலான நல்ல விடயங்கள் சிறுவர் மத்தியில் தாக்கம் செலுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவதாக காணப்படுகின்றது.

**முடிவுரை**

சினிமா எனும் துறையானது அனைத்து கலையம்சங்களையம் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இத்துறையானது படித்தவர்முதற்கொண்டு பாமரமக்கள் வரை அனைத்து தரப்பினரையும் தன்வசம் ஈர்த்துக்கொண்ட ஒரு கலைத் துறையாக காணப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்களை பார்க்க விரும்பாதவர்கள் என எவரும் இல்லை எனக் குறிப்பிடலாம். அந்த அளவிற்கு சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து தரப்பினரையும் கவர்ந்து கொண்ட ஒரு கலையம்சமாக இந்த தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்கள் காணப்படுகின்றன.

இதனால் ஏற்பட்டள்ள நன்மைகளை விட அதிகம் தீமைகளே ஏற்பட்டுள்ளன என்றால் அது மிகையல்ல. அதிலும் குறிப்பாக மலையக மக்களிடையே திரைப்படங்கள் ஏற்படுத்திருக்கும் பாதிப்புக்கள் அதிகமானதாகும். திரைப்படங்களைப் பார்ப்பதன் மூலம் மலையக மக்கள் வெளிவிடயங்களை அறிந்து கொண்டு படிப்படியாக அதற்கு இசைவாக்கம் அடைந்து வந்துள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

இதன்படி குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் திரைப்படங்களை அதிகம் பார்ப்பவர்களாக சிறுவர்கள் காணப்படுவதோடு 14-18 வயதுப்பிரிவினர்கள் அதிகம் திரைப்படங்களை விரும்பிப் பார்க்கின்றனர் என்பதும் இவர்கள் அதிகமாக திரைப்படங்களைப் பார்ப்பதற்கு பயன்படுத்தும் வெகுஜன ஊடகமாக தொலைக்காட்சி காணப்படுகின்றது என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தென்னிந்திய தமிழ்த்திரைப்படங்கள் ஆய்வுப்பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்களை ஒழக்கவியல்ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், கலாசாரரீதியாகவும், சமூகரீதியாகவும், மொழியியல் ரீதியாகவும், உடலியல் ஆராயப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் ஒழுக்கவியல்ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களான ஓழுக்ககேடான குறியீடுகளை பயன்படுத்தல், இளவயது திருமணம், காதல் போன்ற ஒழுக்கக்கேடான செயற்பாடுகள், தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகுதல பேன்றனவற்றிற்கு தென்னிந்தியத் திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளது என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அடுத்ததாக உளவியல் ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களான குடும்ப உறவுகளில் ஈடுபாடின்மை, திரைப்பட கதாபாத்திரங்கள் போல் மாறுகின்ற தன்மை, நேரம் திட்டமிடாமை மற்றும் அலட்சியம் போன்ற மனப்பான்மைகளை உருவாகுவதற்கு திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நோக்கும் போது ஆடம்பரமான வாழ்க்கை செல்வுகளை அதிகரித்தல், திரைப்படங்களை பார்ப்பதற்கு அதிக பணமும் (இறுவெட்டு, தொலைகாடசி, தொலைப்பேசி) நேரமும் செலவிடுதால் போன்றவற்றிற்கு

திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளன என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கலாசார ரீதியான பாதிப்புக்கள் எனும் போது கலாசார உடைகளில் ஏற்பட்டுள் மாற்றங்கள் மற்றும் பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த கலாசாரரீதியான விடயங்களில் ஏற்பட்டுள்ள மாற்றுங்கள் போன்றவற்றிற்க்கு திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக்கள் எனும் போது, சமூகத்தில் காணப்படும் தவறான பழக்கவழக்கங்களிற்கும், சமூக உறவு நிலைகளினை பாதிப்படைய செய்வதற்கும் திரைப்டங்கள் காரணமாக அமைந்துள்ளன என்பதும் இவ்வாய்வின் கண்டறியப்பட்டுள்ளது.

மொழியில் ரீதியான தாக்கங்கள் எனும் போது, சிறுவர்களின் சூழலில் உள்ள இயற்கை மொழியை பாதிப்படைய செய்தல்,ஒழுக்ககேடான வார்த்தை பிரயோகம், மொழிகலப்பாக்கம் போன்றவற்றிற்க்கு திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இறுதியாக உடலியியல் ரீதியான தாக்கம் எனும் போது, உடலியல் ரீதியான பல்வேறுபட்ட உபாதைளுக்கு உட்படுதல், திரைப்பட கதாபாத்திரங்கள் போல உடலில் மாற்றங்களை செய்தல் போன்றவற்றிற்க்கு திரைப்படங்கள் காரணமாக அமைந்துள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு பாதிப்புக்களை திரைப்படங்கள் சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள போதிலும் ஒரு சில நன்மைகளையும் இந்த திரைப்படங்கள் ஏற்படுத்தியுள்ளமையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதனடிப்படையில் சிறுவர்களின் பொழுதபோக்கு அம்சங்களில் முதன்மையானதாக காணப்படும் தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களினால் அரசியல்ரீதியான விழிப்புணர்வு, பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை, உளவியல் ரீதியாக சில திரைப்படங்கள் மனதிற்கு அமைதியினை வழங்குதல், தன்னம்பிக்கை தைரியம் என்பவற்றை ஏற்படுத்துதல், இறை நம்பிக்கை, தொழில்நுட்பத்தின் விபரீதங்கள் போன்ற சிறுவர்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் போன்றன திரைப்படத்தின் மூலம் கிடைத்த நன்மைகள் என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயமாக உள்ளது.

இதன்படி நாணயம் ஒன்றிற்கு இரு பக்கங்கள் இருப்பதனைப் போன்று எந்த ஒரு விடயத்தினை எடுத்தாலும் அவற்றில் நன்மைகளும், தீமைகளும் சேர்ந்ததாகவே காணப்படும். இதற்கு தென்னிந்தியத் தமிழ்த்திரைப்படங்கள் மட்டும் விதிவிலக்கானது அல்ல. எனவே அன்னப்பறவையினைப் போன்று மனிதர்களும் தென்னிந்தியத் தமிழ்திரைப்படங்களினால் ஏற்படுகின்ற தீமைகளை கருத்தில் கொள்ளாது அதனால் ஏற்படுகின்ற நன்மைகளை மாத்திரமே பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பரிந்துரைகள்**

சிறுவர்கள் திரைப்படங்களைப் பார்பதனையே தமது பொழுதுபோக்கு அம்சமாக கொண்டுள்ளனர். இதனால் அதிக நேரத்தினை இதற்கு செலவிடுகின்றனர். இதனால் இவர்களது அன்றாட நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன. எனவே திரைப்படங்களை பார்க்கும் நேரத்தினை குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு செலவிடும் நேரத்தினை வேறு பயனுள்ள விடயங்களை செய்வதற்கு செலவிடலாம். உதாரணம்:- வீட்டுத்தோட்டம் செய்தல், புத்தகம் படித்தல் நவீனத்துவ முறைக்கு வளர்ச்சியடைந்தாலும் தமது கலாசாரத்தின் மதிப்பீடுகளை சீர்குலைக்காமல் வாழ்வதற்கான முயற்சிகளை செய்தல் வேண்டும். அதாவது ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு தமது கலாசாரத்தினையும் பாரம்பரிய பழக்கவழக்கங்களைளும் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும்.

சிறுவர்களுக்கு திரைப்படங்கள் பார்ப்பதற்கு குறிப்பிட்ட ஒரு நேரத்தினை பெற்றோர்கள் ஒதுக்குவதோடு அவர்கள் எவ்வகையான திரைப்படங்களை பார்க்க வேண்டும் என்பது தொடர்பிலும் பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண்டும். முற்றாக திரைப்படங்களை பார்ப்பதற்கு சிறுவர்களுக்கு தடைவிதித்தால் அவர்கள் பெற்றோர்கள் மீது கோபப்படுவதோடு வேறு இடங்களுக்கு சென்று திரைப்படம் பார்பதற்கு முயற்சிப்பார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளது அன்றாட செயற்பாடுகள் மீது அக்கறை காட்ட வேண்டும். அதாவது தனது பிள்ளை பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்கின்றனரா மற்றும் இரவில் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனார் என்பது தொடர்பில் பெற்றோர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

திரைப்படங்களில் காட்டப்படும் நிகழ்வுகள் முற்றுமுழுதாக உண்மையானது அல்ல. என்பதை பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சொல்லி புரிய வைக்க வேண்டும். குடும்பங்களுக்கிடையில் ஒரு ஒருமைப்பாடு நிலவவேண்டும். குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒரு தடவையாவது ஒன்றாக இருந்து பேசி ஒன்றாக உண்ண வேண்டும். இதன்போது குடும்பத்தில் அன்பும் பாசமும் உருவாகுவதோடு குடும்ப உறுப்பினர்களுக்கு இடையிலான இடைவினை குறைவடையும்.

**உசாத்துணைகள்**

**1.நூல்கள்**

1. அனஸ், எம், எஸ்.எம், (2006), “மெய்யியல் (கிரேக்கம் முதல் தற்காலம் வரை)”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. அனஸ், எம்,எஸ்,எம். (2020), “ஈரானிய சினிமா, சமயவாதங்களும் திரைப்படங்களும்”, இந்தியா தபாபிரஸ் அச்சாக்கம்.

3. இன்பமோகன்.வ, சந்திரசேகரம்.சி. பிரேம்குமார்.இ. (2020), “கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. இரயாகரன்,பி. (2002) ‘‘ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்’’, கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை.
5. இன்பமோகன்,வ (2003), “கலைத்துவ சினிமா”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
6. கிருஸ்ணவேணி.ஏ.என், (2008), “இந்திய அழகியல்”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
7. கிருஸ்னராஜா, (2009), “அழகியல்”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
8. கோவிந்தன்,க. (1999), “ஆய்வாளர் பார்வையில் திரைப்படக் கலை” ,குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
9. கோவிந்தன்,க. (2001). “தமிழ் திரைப்படங்களில் சாதிமத பேதங்கள்”, குமரன் பப்ளிகேஷன், சென்னை.
10. கோவிந்தன்.க (2004), “தமிழ்த் திரைப்படங்களில் ஆண், பெண் பேதம்”, குமரன் பப்ளிகேஷன், சென்னை.
11. சிவத்தம்பி,கா.(2004), “தமிழ் பண்பாட்டில் சினிமா”, குமரன் புத்தகலாயம், கொழும்பு
12. சிவானந்தமூர்த்தி.க. (2012) “ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்”, லங்கா புத்தகசாலை, கொழும்பு.
13. பிறேம்குமார், இ (2013), “மேலைநாட்டு அழகியல்” குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
14. பிரேம்குமார். இ (2019). “மொழிதல் தொகுதி 06”, சுதந்திர ஆய்வு வட்டம், மட்டக்களப்பு.
15. மோசேஸ்,எஸ். (2007). “வெகுசன ஊடகம்”, கிருஷீ வெளியீட்டகம், கொழும்பு.

**2.இணையத்தளங்கள்**

1. ஜெசிந்தன், ‘‘குழந்தையின் கல்வி அறிவை வளர்க்கும் திரைப்படங்கள்’’ https://www.kidhours.com/kulanthaikalin-kalvi-arivai-valarkum-thiraipadankal/
2. நிதர்சனம் பத்திரிக்கை வெளியிடும், ‘‘மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல்களை (ADIC) வெளியிடப்பட்ட ‘‘தமிழ் திரைப்படங்கள் சிறுவர்கள் இலக்கு வைக்கும் விதம் தொடர்பான ஆய்வு அறிக்கை’’ https://tamil.news.lk/news/business/item/8737-2015-09-30-09-30-33
3. ம்தியாஸ் யூசுப் ஸல.ஃ.பி, ‘‘மாணவர்களிடம் போதை பொருட்கள் பாவனை அதிகரிப்பது ஏன்?’’ http://www.islamkalvi.com/?p=104329
4. அனோஜன் பாலகிருஷ்ணன், ‘‘சிறுவர்களுக்கான திரைப்படங்களும் மியாசகியும்’’ https://www.annogenonline.com/2016/03/13/siruvar-thiraipadam/

5. முனைவர் எஸ். ராஜசேகர், எனும் “தமிழ்த்திரைப்படங்களும் மதுக்கடைகளும்” https://www.dinamalar.com
6. “இன்றைய சினிமாக்களின் போக்கும் சமூக பாதிப்புக்களும்” www.kaviyakavi.blogspot.com
7. “சமூகத்தில் சக்தி வாய்ந்த ஊடகமான சினிமா சிறந்த நல்வழி ஊடகமாக அமைய வேண்டும்” www.nidarshanam.lk

# இந்து அறிவியலில் சித்தர்களும் இரசவாதமும் : ஒரு மெய்யியல் பார்வை

Mr. Uthayathevan Jeevatharsan
Postgraduate,
Facultuy of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
u.jeevatharsan861@gmail.com

Mr. Tharaneenthan Kamalachandran
Siddha Medcine Unit,
University of Jaffna.
tharanee94@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்திய ஞானிகள் வரிசையில் சித்தர்களுக்குத் தனி இடம் உண்டு. சித்தர்கள் என்போர் சித்தத்தை சிவமாய்க் கொண்டவர்கள் என்பது பொதுவான கருத்து. சிந்தை தெளிந்து சித்தத்தை வென்றவன் சித்தன் எனவும் சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் புத்தியைக் கட்டுப்படுத்துபவர்கள் என்றும் கூறப்படுகின்றது. சித்தர்களை ஆன்மிகப் புரட்சியாளர்கள் என்று சொல்வதும் உண்டு. சித்தர்கள் பதினெட்டு பேர் என்கின்றது, பண்டைய நூல்கள். இத்தகைய சித்தர்களின் காலத்தை மிகச் சரியாக வரையறுக்க முடியவில்லை. அகத்தியருக்குப் பின்னர் திருமூலர், திருமூலருக்குப் பின்னர் மற்றையோர் எனச் சித்தர் மரபு அறியப்படுகின்றது. ஆன்மிகம் தழைக்கவும், மக்களின் ஆரோக்கியம் செழிக்கவும் சித்தர்கள் முக்கிய பங்காற்றி இருக்கின்றனர். அவர்கள் தத்துவ நெறியிலும், மருத்துவத் துறையிலும் அநேக நூல்கள் செய்துள்ளனர். மருத்துவத்தோடு யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம் போன்ற அரிய அறிவியல் அம்சங்களையும் தந்தவர்கள், சித்தர்கள். சித்தர் மெய்யியலானது தத்துவ ஆராய்ச்சி என்ற நிலையினைத் தாண்டி இந்து சமயத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வியலை வளப்படுத்தியுள்ளது. இவ்வாய்வானது, இரசவாதம் என்பதன் பொருள் விளக்கத்தினை வெளிப்படுத்துதல், இரசவாதத்தின் அடிப்படை விடயங்களை எடுத்தியம்புதல், இரசவாத முன்னோடிகள் மற்றும் இரசவாதம் செய்யும் முறைமை அத்தோடு உலோகமும் அதன் கலப்பு முறைகள் போன்றவற்றை வெளிப்படுத்துதல் என்பனவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ் ஆய்வுக்கு முதல்நிலைத் தரவுகளாக சித்தர்களின் நூல்களும் இரண்டாம்நிலைத் தரவுகளாக, சித்த மருத்துவம் மற்றும் இரசவாதம் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் முதலியனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது சித்தர்களின் இரசவாதக்கலையை தெளிவுபடுத்தும் வகையில் விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு மற்றும் ஒப்பீட்டாய்வு போன்ற ஆய்வு முறையியல்களினூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. முடிவாக, சித்தர்களின் மருத்துவ முறைகள் தனித்தன்மை பெற்று விளங்குவதனைப் போன்று அவர்களது அரிய கண்டுபிடிப்பான இரசவாதம் பற்றிய விடயங்கள் இன்றைய அறிவியலாளர்களையும் வியக்கவைப்பதாக அமைந்துள்ளது. சித்தர்கள் செய்த இரசாயன ஆராய்ச்சிகளின் அளவையும் பரிமாணத்தையும் கணக்கிடவே முடியாது. இந்த அற்புதமான காரியத்தை நிகழ்த்திய சித்தர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்கள் செய்த ஆராய்ச்சிகளையும் பற்றித் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் முழுமையான அளவில் கிடைக்காமல் போனமை துரதிஷ்டமே. இருப்பினும், இரசவாதக்கலையின் முன்னோடிகளாகச் சித்தர்களே விளங்கி இரசவாதம் தொடர்பாக பல்வேறு விடயங்களை வெளிப்படுத்தியுள்ளனர் இதனைத் தெளிவுபடுத்துவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. இத்தகைய இரசவாதம் பற்றிய விடயங்கள் பரந்துபட்டது. ஆயினும், அவை தொடர்பான குறிப்பிட்ட அளவிலான விடயங்களே இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** *அறிவியல், இரசவாதக்கலை, உலோகங்கள், சித்தர்கள், சித்தர் மெய்யியல்*

**அறிமுகம்**

விஞ்ஞான முறையும் விஞ்ஞான ஆராய்ச்சியும் தமிழகத்துக்குப் புதிய கற்கைப் புலங்கள் அல்ல. அவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் பயில் நிலையில் இருந்த அறிவியற் புலங்களாகும். அந்தவகையில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. சித்தர் பரம்பரை நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது. சித்தர்கள், மக்கள் அனைவரும் நோய் நொடியில்லாமல் இன்பத்துடன் வாழ்வதற்கான, துன்பங்களிலிருந்து கரையேறுவதற்கான வழிகள் பலவற்றைக் கண்டறிந்தனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்கும்படி செய்தனர். அவர்கள் கண்டறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியையும் பலனையும் மனித சமுதாயம் இன்றும் அனுபவித்துக் கொண்டு வருகின்றது. அத்தகைய அம்சங்களில் இரசவாதம் பற்றிய சித்தர்களின் கண்டுபிடிப்புக்கள் மகத்தானவை. அந்தவகையில் இரசவாதம் என்பதன் பொருள் விளக்கத்தினையும், இரசவாதத்தின் அடிப்படை விடயங்களையும், இரசவாத முன்னோடிகள் மற்றும் இரசவாதம் செய்யும் முறைமை அத்தோடு உலோகமும் அதன் கலப்பு முறைகள் போன்றவற்றை அறிவதே இதன் அடிப்படைத் தார்ப்பரியமாகும்.

முதலில் சித்து மற்றும் சித்தர்கள் தொடர்பாக நோக்குவது அவசியம். அந்தவகையில் ‘‘சித்’’ என்ற சொல்லை அடிச் சொல்லாகக் கொண்டு சித்து, சித்தன் எனும் சொற்கள் தோன்றியிருக்கலாம். அடியார்க்கு நல்லான் சித்தன் என்ற சொல்லுக்கு ‘‘பிறப்பறுத்தவர்கள்’’ என்று விளக்கம் தருவர். சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள் சித்தர் என்பது ஒரு கருத்து. அதேபோன்று சித்தர்களின் காலம் தொடர்பாக நோக்கும்போது வேறுபட்ட கருத்துகளை அறிஞர்கள் கூறியிருப்பதனைக் காணலாம். எனவே தெளிவான சான்றுகள் கிடைக்கும் வரை சித்தர்கள் காலத் தொடக்கம் ஏறக்குறைய கி.பி 5ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை தொடர்கிறது எனக் கொள்வது ஏற்புடையதாகும். இத்தகைய சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு என்று தொகைப்படுத்தினாலும், சித்தர்கள் எண்ணிலடங்காதவர்கள் ஆவர். இவர்களில் பலர் பெயரால் மருத்துவ நூல்களும் அறிவுரைப் பாடல்களும் வழங்கி வருகின்றன. சித்த வைத்திய நூல்களை ஆராய்ந்தவர்களும் சித்தர்கள் பதினெண்மர் என்றே கூறுகின்றனர். ஆனால் அவர்கள் குறிப்பிடும் பெயர்வரிசை வேறு. சித்த வைத்திய நூல் ஆராய்ச்சியாளர்கள் சித்த வைத்திய நூல்களில் ஆசிரியர்களின் நூல்களைக் கொண்டு சித்தர்கள் பதினெண்மரின் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். இவற்றில் உண்மையான பதினெண் சித்தர்கள் யாவர் என்பது ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டியதொன்றாகும்.

**இரசவாதத்தின் தோற்றமும் பரவலும்**

சித்தர்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் அரிய விடயங்கள் இரண்டு. ஒன்று காயகல்பம் இரண்டு இரச வாதம் என்பனவாகும். காய கல்பம் என்பது தேகத்தை அழியாமல் வைத்திருக்கும் சக்தி. இதைப் பழங்கால ரிஷிகளும் அடைந்திருந்தனர். சித்த மருத்துவத்தில் சித்தர்களால் இரசவாதக்கலை சிறப்பாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. ஆயினும் பல நாடுகளில் இரசவாதம் பற்றிய விடயங்கள் அறியப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. 144-B. C.களிலேயே சீன நாட்டில் இந்த ரசவாதம் சிலர் செய்து வந்ததாக தெரிகிறது. அந்தநாட்டு

மன்னராக இருந்த சியாங் என்பவர் 175-B.C.இல் ரசவாதம் செய்வது சட்ட விரோதமானதென்று பறைசாற்றியதிலிருந்து தெரியவருகிறது. (பலராமய்யா, வி., 1977, ப.11) இந்த இரசவாதக்கலை ஐரோப்பாவில் 17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் இதற்கு முன் இந்தியாவில் கையாளப்பட்டு வந்துள்ளது. (Anbuchelvi. S., & Sritharan. G., 2009 p.20) இன்றைய இரசாயன ஆராய்ச்சி முறைகள் எல்லாம் சித்தர்கள் செய்த இரசாயன ஆராய்ச்சிகளின் அடிப்படையிலிருந்து உண்டானவைதான். சித்தர்களின் இரசாயன ஆராய்ச்சி முறைகள் யவனர்கள் முதலான பிற நாட்டவர்கள் மூலமாக மேல் நாடுகளிலும் சென்று பரவியது என்பதுதான் வரலாறு கூறும் விடயமாகும். அதனால் இரசாயன சாஸ்த்திரத்தின் முன்னோடிகளே சித்தர்கள்தான் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். இரசவாத வித்தை பற்றி சித்தர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளமையினை அறிய முடிகின்றது. இரசவாதம் என்றால் இரும்பு முதலிய உலோகங்களைத் தங்கமாக்குவது என்று நம்புகின்றனர். சித்தர்கள் என்பவர்கள் இவ்வித்தையில் தேர்ந்தவர்கள் என்று சொல்லுகின்றனர். இவ்வித்தையில் வல்லவர்கள் சித்தர்கள் என்பதற்கான கதைகளும் வழங்குகின்றன. புராணங்களில் இத்தகைய கதைகளைக் காணலாம். சித்தர் நூல்களிலும் உலோகங்களைத் தங்கமாக்கும் முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இத்தகைய விடயங்களை வைத்துப் பார்க்கின்ற போது, சித்தர்களில் பலர் இரசவாத முன்னோடிகளாகத் திகழ்ந்திருக்கின்றனர். இரசவாதத்திற்கு உதவக்கூடிய அனுபவ ஆற்றல் படைத்திருந்த சித்தர்களில் போகர், கொங்கணர், யூகி, அகத்தியர், இராமதேவர், கமலமுனி, கபிலர், காளாங்கி நாதர், கோரக்கர், சட்ட முனி, புலிப்பாணி, மச்சமுனி, சித்த நாகார்ச்சுனர் உள்ளிட்டோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவ்வடிப்படையில் இரசவாதம் தொடர்பான தமிழ்நூல்கள் பெரும்பாலும் போகரின் பெயரிலே உள்ளன. இவரது நூல்களில் போகர் ஏழாயிரம், சூத்திரம் எழுநூறு, நிகண்டு பதினேழாயிரம், போகர் திருமந்திரம், போகர் காரசாரத் துறை, போகர் வைத்திய காவியம், வைத்திய ஞானம் முதலிய பல நூல்களைக் குறிப்பிடலாம். இதேபோன்று தமிழ் மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை அகத்தியர் எழுதியதாகவே உள்ளன. வரலாற்றுச் சான்றுகளின் படி அகத்தியர் என்னும் பெயரால் பலர் வாழ்ந்திருக்கின்றனர் என்று புலப்படுகின்றது. அதேபோன்று இராமதேவர் சில ஆண்டுகள் அரேபியா நாடு சென்று மெக்காவில் தங்கி தமிழ் நாட்டு இரசாயனக் கலையை இசுலாமியர்களுக்கு கற்று தந்தவர். மீண்டும் தாய் நாடு திரும்பும் போது யாக்கோபு என்ற பெயருடன் வந்தவர்.

**இரசவாதம் - எண்ணக்கரு விளக்கம்**

இரசவாதமென்பது பொருள்களின் சாரங்களை வாதிக்கும் நூல் என்பதாம். ஆகையால் பொருள்களின் சாரங்களை ஒன்றை மற்றொன்றோடு கலந்தும், ஒன்றை மற்றொன்றாக மாறுபடுத்தியும், தாழ்ந்ததை உயர்ந்ததாகவும், சிற்சில குணங்களுள்ளவற்றை பற்பல குணங்களுள்ளனவாகவும் செய்யும் வகைகளைச் சொல்லும் நூலாம். இது இயற்கை இரசவாதம், வைத்திய இரசவாதம் என இருவகையாம். (முகம்மது அப்துல்லா சாயபு, பா., 1975, ப.5) இயற்கை இரசவாதமென்பது, பொருள்களின் இலட்சணங்களை நிச்சயித்தறியும்

வகைகளைச் சொல்லும் நூலென்பதும் மருத்துவ இரசவாதமென்பது, செயநீர், திராவகம், பற்பம், செந்தூரம் முதலியவைகளைச் சொல்லும் நூலென்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றில் முன்னையது ஆரம்பமாய் கற்கத்தக்கது எனவும் பின்னையது முடிவாய்க் கற்கத்தக்கது என்று குறிப்படப்படுகின்றது.

தாழ்ந்த உலோகங்களை சில வேதியல் முறைகளைக் கையாண்டு, முறைப்படி உயர்வகை உலோகங்களாக மாற்றுவதாகும். இந்த உலோக மாற்றத்தை சித்தர்கள் தங்கம் செய்யும் பேராசையால் செய்யவில்லை, அழியக் கூடிய உடலை அழியாமல் பாதுகாக்கும் காயகல்ப்ப மருந்துகள் செய்யவே பயன்படுத்தினார்கள். இவ்வாறு இரசவாதம் என்பது காயகல்ப்ப மருந்து தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டதே தவிர தங்கத் தயாரிப்புக்கு அல்ல. இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, தங்கம் முதலியவை தனித்தனி உலோகங்கள். அவை ஒவ்வொன்றும் இயற்கையானவை. ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்ற முடியாது. ஆனால் உலோகத்துடன் மற்றொரு உலோகத்தையோ, பல உலோகங்களையோ கலந்து வெவ்வேறு உலோகங்கள் போலக் காட்டலாம். இவ்வுண்மையை உணராதவர்களே செம்பைப் பொன்னாக்குவது இருப்பைப் பொன்னாக்குவது ஈயத்தைத் தங்கமாக்குவது இரசவாத வித்தை என்று நம்புகின்றனர். சித்தர் நூல்களிலே தேர்ந்தவர்கள் இரசவாதம், வாதம் என்பதற்கு வேறு பொருள் கூறுகின்றனர். வேதித்தல் என்ற சொல்லே வாதம் என்று திரிந்தது வேதித்தல் என்பதற்கு மாறுபடுவது என்பது பொருள். வாதம் என்பதன் பொருள் மாறுபடுதல் என்பதாகும். நம்மைச் சுற்றிலும் உள்ள பொருள்கள் ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இந்த மாற்றம் விரைவாகவோ மெதுவாகவோ நடந்துகொண்டே இருக்கின்றது. இந்த மாற்றங்கள் எப்படி உண்டாகின்றன என்பதனைக் கண்டறிவதே வாதமாகும்.

இயற்கையான இந்த மாற்றங்களைச் செயற்கை முறைகளாலும் கண்டறியலாம். ஆதலால் இயற்கையான உலோக வகைகளின் மாறுதல்களை, மாறுதலால் ஏற்படும் குணங்களைச் செயற்கை முறைகளால் ஆராய்ந்து காண்பதையே வாதம் என்று கூறினர். இது வாதவித்தையின் உண்மையறிந்தோர் கருத்து. வாதவித்தை பற்றி வழங்கும் பழமொழிகளும் இவ்வுண்மையைக் காட்டுகின்றன.

**இரசவாதம் தொடர்பான அடிப்படை விடயங்கள்**

இரசவாதம் என்ற சொல் இரசத்தைக் கண்டு வேதப்படுத்துதல் அதாவது பாதரசத்தைக் கொண்டு உருமாறச் செய்தல் என்ற பொருளில் இரசவாதக்கலை உண்டாகியிருக்க வேண்டும். தங்கம் பாதரசம் ஒன்றில் மட்டுமே கரையும். இன்றைக்கும் தங்கத்தைச் சேகரிப்பதற்கு பாதரசமே பயன்படுகிறது. இரசவாத முறையால் மற்ற மட்டமான உலோகங்கள் ஈயம், வெள்ளி, செம்பு, பித்தளை போன்றவற்றைத் தங்கமாக மாற்றலாம் என்பது சித்தர்களின் துணிவு. முதலில் இரசவாதத்தின் ஆரம்ப அடிப்படைகளை அறிவது அவசியம். பச்சிலைகள், பூக்கள், மரப்பட்டைகள், மூலிகைகளின் மருத்துவ குணங்கள் எல்லோருக்கும் தெரியும். சித்த ஆயுர்வேத யுனானி, ஹோமியோபதி, அலோபதி வைத்திய முறைகள் எல்லாமே இதை ஒப்புக் கொள்கின்றன, பயன்படுத்துகின்றன. தாவரங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களிலிருந்து மட்டுமின்றிப் பிராணிகள், நீர் வாழ் ஜந்துக்கள் முதலியவற்றிலிருந்தும் மருந்துப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இதையும் எல்லா வைத்திய முறைகளும் ஒப்புக் கொள்கின்றன.

அடுத்த படியாக இயற்கையிலிருந்து கிடைக்கும் உப்புக்கள், பாஷாணங்கள் முதலியவையும் உலோகங்களும் எல்லா வைத்திய முறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. உப்புக்கள், பாஷாணங்கள் எல்லாமே உலோகங்கள் அடைந்துள்ள இரசாயன மாறுதல்களால் ஏற்பட்டவைதான் என்பதை இன்றைய விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது. இன்றைக்கும் சாதாரணமாக தங்க பஸ்பம், வெள்ள பஸ்பம், முத்து பஸ்பம், பவள பஸ்பமென்று வைத்தியர்கள் கொடுக்கும் மருந்துகள் உள்ளன. சித்த முறைப்படி பஸ்பம் என்று சொல்லிக் கொடுக்கப்படும் மருந்துகள் மற்ற மருத்துவ முறைகளில் வேறு பெயர்களால் கொடுக்கப்படுகின்றன.

அதாவது உலோகங்கள் மருத்துவத்தில் முக்கியமான ஒரு இடம் வகிக்கின்றன. இந்த மனித உடலில் உலோகங்கள் இருக்கின்றன. மனிதனின் ஆரோக்கியத்திற்கும் நல் வாழ்விற்கும் உலோகங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் எந்த உலோகத்தையும் மனிதனாலோ, பிராணிகளாலோ நேரடியாக ஜீரணித்துக் கொள்ள முடியாது. ஜீரணித்துக் கொள்ள முடியாத ஒன்றை ஜீரணித்துக் கொள்ளக் கூடியதாக மாற்றுவதற்குத் தான் பஸ்பங்களும், செந்தூரங்களும் தயாரிக்கப்பட்டன. அதாவது உலோகம் அதன் உப்பாக மாற்றப்பட்டது. இப்படி உலோகங்களை அவற்றின் உப்புக்களாக மாற்ற முடியுமென்பதைச் சித்தர்கள் அறிந்திருந்ததோடு அதைச் செய்தும் வந்தனர்.

இதேபோன்று பச்சிலை, மூலிகை வகைகளில் உலோகச் சத்துக்கள் உப்பு அல்லது பாஷாணச் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு இலையாக மூலிகையாக மட்டுமின்றி பிராணிகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள் இயற்கையில் கிடைக்கும் உப்புக்கள், இரசங்கள் முதலியவற்றிலும் என்ன சத்துக்கள் கலந்துள்ளன என்பதைச் சித்தர்கள் ஆராய்ந்தறிந்தார்கள். அதாவது ஒவ்வொரு இலை, தழைகளின் குணங்களையும் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார்கள். இந்த ஆராய்ச்சியின் விளைவாகவே உலோகங்களை உப்புக்களாகவும் அவற்றிலும் தாழ்ந்த நிலைக்கும் மாற்ற முடியும் என்பதைக் கண்டு பிடித்து அதைச் செயலிலும் நிரூபித்துக் காட்டினார்கள். ஒரு இடத்தில் பச்சையாக முளைக்கும் ஒரு செடி இன்னொரு இடத்தில் சற்று சிவப்பாகக் காணப்படுகிறதென்றால் அந்த இடத்தில் உள்ள மண்ணில் தாமிரக் கலப்பு இருக்கிறது என்று அர்த்தம். அதாவது தாமிரம் அந்த இடத்திலுள்ள மண்ணில் செடியால் ஜீரணம் செய்து கொள்ளத்தக்க பொருளாகக் கலந்திருக்கின்றது என்பதுதான் அதன் பொருள்.

உலோகம் உப்பாக மாறும் பொழுதே செடியால் ஜீரணித்துக் கொள்ளத்தக்க நிலையை அடைகிறது. உலோகம் உப்பாக முடியுமானால் உப்பை ஏன் உலோகமாக மாற்ற முடியாது? என்கின்ற நியாயமான கேள்வி எழுகின்றது. இதுதான் இரசவாத சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவம் ஆகும். ஒரு உலோகத்தைத் தயாரிக்கலாம், இதற்கு எதிரிடையாக ஒரு குறிப்பிட்ட உலோகத்தை அதன் உப்பாகவும் மாற்றலாம். ஆனால் ஒரு உலோகத்தின் உப்பை இன்னொரு உலோகமாக எப்படி மாற்ற முடியும்? அதிலும் தரம் குறைந்த ஒரு உலோகத்தை தரம் உயர்ந்த இன்னொரு உலோகமாக எப்படி மாற்ற முடியும்? என்கின்ற வினாக்கள் எழுகின்றன.

இயற்கை நிகழ்த்திய இவ்விதச்செயலால் அளவு கடந்த வெப்பம் தாவரங்கள், பிராணிகள், உலோகங்களின் மேல் சீறிப்பாய்ந்ததால் அவை எத்தனையோ விதமாகப் புடம் போடப்பட்டிருக்கலாம். புடம் போடுவது என்பதே நெருப்பினால் உருமாறச் செய்வது ஆகும். அது இயற்கையால் நடைபெறுவதும் செயற்கையால் நடைபெறுவதும் ஒரேவிதமானதே. சித்தர்கள் இந்த அடிப்படையில்தான் ஒரு உலோகத்தை இன்னொரு உலோகமாக மாற்ற முடியும் என்று சிந்தித்தனர். செய்தும் காட்டினர்.

அதேபோன்று பௌதிக இயல்பைக் கண்டறிவது சரக்கு வைப்பு (செயற்கையாக) மூலம் மருந்துகள் செய்தவர்கள் தாங்கள் கண்டறிந்த இரசாயனக் கலையை சீடர்கள், ஏடுகள் மூலமாக மற்றவர்க்கும் எடுத்துச் சொன்னவர்கள் தமிழ்ச் சித்தர்கள். செயநீர், (ஜெயநீர்) தீநீர், (திராவகம்) பற்பம், செந்தூரம், சுண்ணம், கட்டு, களங்கு முதலிய அரிய மருந்துகளைச் செய்வதற்குரிய வழிகளைச் சொன்னவர்கள் தமிழ்ச் சித்தர்கள். உலோகங்களை - கனிமங்களை - மருந்துகளாக பற்ப செந்தூரங்களாகச் செய்வது சித்த மருத்துவத்திற்கே சிறப்பானது. அக, மருந்துகள் 32 புற மருந்துகள் 32 ஆகிய அறுபத்தி நான்கிலும் சிறப்பானது உலோகங்களின் புடம் போட்ட மருந்துகளே ஆகும்.

**இரசவாத வித்தையும் அதன் இரகசியத் தன்மையும்**

இரசவாத வித்தையை தற்போதும் பலர் முயற்சி செய்து தோல்விகண்டதாக அறிய முடிகிறது. அப்படி தோல்வியடைவதன் காரணம் என்ன? இந்த இரசவாதம் பற்றிய தகவல்கள் இரகசியமாகப் பேணப்படுவது ஏன்? இதை சரியாக செய்து வெற்றியடைய முடியாதா? இவ்வாறான கேள்விகள் மனதில் எழுவது இயற்கையே. இவற்றிற்கான பதிலையும் சித்தர்களே விளக்கிச் சொல்கிறார்கள். அவற்றைப் பார்ப்போமானால், இரசவாத முறை இரகசியமாகப் பேணப்படுவது ஏனென்றால் தூய்மையற்றவர்கள், மூடர்கள், பாவிகள் போன்றோரிடம் தமது நூல்கள் கிடைத்தால் என்னவாகும் என்பது சித்தர்களால் அறிந்தவொன்றே. ஆகவே அவர்கள் ஒருவித எச்சரிக்கையுடனேயே மறைபொருள் கொண்டு தமது நூல்களை எழுதினார்கள்.

> ‘‘பாடுகின்ற சித்தருட நூல்கள் எல்லாம்
> பரிபாசை தெரியாத பாவியோர்க்கு தேடுகின்ற
> பொருள் அழியச் சொன்னதல்ல தினையளவும்
> பொன்காணச் சொல்லவில்லை.’’ (அகத்தியர் பரிபாஷை 500 பா.10)

பாடப்பட்டுள்ள சித்தர்களின் நூல்கள் எல்லாம் பாவிகளுக்குச் சொல்லவில்லை, தினையளவும் தங்கம் செய்வதற்காகவும் சொல்லவில்லை என்கிறார் அகத்தியர். அதேபோன்று இரசவாத நூல் என்று ஒரு அரிய, மிகப் பழமை வாய்ந்த நூல் ஒன்று உள்ளது. அந்த நூல் ஆரம்பத்திலேயே இப்படி சொல்கிறது.

> ‘‘சித்தர்களுக்காகவே இந்நூல் சொன்னேன்
> சிவயோகி மெய்ஞானிக்கு இந்நூல் சொன்னேன்
> பட்டற்று ஆய்குருவுக்குத் தொண்டு பண்ணி
> கற்றோம் என்றிருந்த கடைப் பிள்ளைக்கு ஆகும்

கல்வி அறிவுள்ளோருக்கும் ஈயல் ஆகும்
மட்றுல்லோர்க்கு இந்நூல் ஈந்தாயானால்
மாண்டிடுவாய் மகத்தான சாபம் எய்தே''

பாவிகளும், மூடர்களும், முரடர்களும், பேராசை கொண்டவர்களும் சித்த இரகசியங்களை அறியக் கூடாது என்பதில் சித்தர்கள் மிகவும் கவனமாக இருந்ததையே இவை காட்டுகின்றன.

**சித்தர் பாடல்களில் இரசவாத முறைகள்**

சித்தர்கள் எவ்வாறு இரசவாதம் செய்தார்கள் என்பதை அறிவது பயனுடையது. அகத்தியருக்கு, அகத்தியரின் குருநாதர் கூறிய இரசவாத முறை பற்றி நோக்கும்போது, தனது குருநாதர் மூலிகை ஒன்றின் மூலம் இரும்பைத் தங்கமாக்கிக் காட்டியதாக அகத்தியர் சொல்கின்றார்.

''விந்தையான குருத்தங்கம் விளம்பும் சொல்லை
குருநாதன் செத்தை பெருக்கித் தானெடுத்து
தென்னை மரத்தின் கீழாக சத்தையுடைய
மூலிதனை சதிராய்ப் பிடுங்கி இரும்பிலிட்டு
மேத்தையாகச் சில்லிட்டு மூடிப் புடமும் போட்டாரே.

போட்ட புடத்தைச் சாணானும் புகழாய்த்
தென்னைமரச் சோலை தொட்டமுடனே
பாத்திருந்த நொண்டிச் சாணான் கண்டறிந்தான்
வாட்டமுள்ள பொன் அதுவை வாசாய்க் கண்டான்
சோலைமகன் தாட்டிகமாய் தானும் வந்து
சதுராய் எண்ணம் கொண்டானே.

கொண்டான் கையில் ஆயுதத்தை கூறாம் கத்தி
தனை எடுத்து கண்டாற் போல தழைஒடித்து
கருவாய்க் கத்தி மேல்பூச அண்டாதங்கம்
என்ன சொல்வேன் அப்பா சாணன் வாதமப்பா
கொண்டா மணியாம் தங்கமப்பா
தங்கம் இதுவாமே" (அகத்தியர் பாடல்)

குருநாதர் தனக்கு செய்து காட்டிய இரும்பை தங்கமாக்கும் முறையை விளக்கும் அகத்தியர் இறுதியில், குருநாதர் இரும்பைத் தங்கமாக மாற்றிக் காட்டியபோது அருகில் இருந்த தென்னஞ் சோலையில் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த சாணான் என்பவன், அந்த மூலிகையை எடுத்து அரைத்து சாறை தன்னிடமிருந்த கத்தியில் பூச கத்தியானது தங்கமாய் மாறியதாம். அதனால் இந்த இரசவாத முறைக்கு ''சாணான் வாதம்'' என்று பெயர் வந்தது என்கிறார் அகத்தியர். இரசவாதம் செய்யும் முறைகளை,

“கேட்கவே மதியில் அப்பா கிருபையாய்ப்
பத்துக்கு ஒன்று மீட்கவே உருக்கிப் பார்க்க
மிக்கது ஓர் மாற்றாகும் வீட்கமாய்த் தகடு
அடித்து விருப்புடன் காவி தன்னில் ஆட்கவே
புடமும் இட்டால் அப்பனே தங்கம் ஆமே” என்று ஒரு முறையையும்,

“பாரப்பா செந்தூரம் வேதை கேளு
பாலகனே ரவி மதியும் ஏழும் கூட்டி
தீரப்பா பரியோன்று கூடச் சேரு
திகளுடனே குருவோன்று உருக்கில் ஈய
நேரப்பா கண்விட்டு ஆடும் போது
நேர்மையுடன் காரம் இட்டு இறக்கிப் பாரு
ஆரப்பா மாற்றதுவும் சொல்ல ஒண்ணாது
அப்பனே பசுமை என்ற தங்கம்தானே” என்று ஒரு முறையையும்,

“சொன்னாலும் நீர் கேளீரே சும்மா சுவர்
போல் இருந்தீரே பொன்னா பொன் ஆவரையுடன்
பொன்னும் அத்தனை மாலைச் சாற்றால்
கன்னார் பேதி சிலை ரசம் காந்தம் வெள்ளியும்
தானுருக்க என்னாம் என்னாம் என்னாதே
பொன்னாம் பொன்னாம் பொன்னாமே” என்றவாறு சொல்லும் அகத்தியர், இறுதியாக இப்படிச் சொல்கிறார்.

“எண்ணான வேதைகோடி உத்தமர்க்குக்
கிட்டும் அல்லல் உண்மையாம் சான்றோர்க்கும்
தயை குணம் உள்ளோருக்கும் தன்மையாம்
மொழிகள் கூறி உகந்ததுமே பணிந்திட்டோர்க்கும்
வண்மையாம் மனமுள்ளோர்க்கும்
மேன்மையாம் பலிக்கும் தானே” (அகத்தியர் பாடல்)

எண்ணிக் கணக்கிடமுடியாத கோடிக் கணக்கான இரசவாத முறைகள் உள்ளன, அவை உத்தமர்களுக்கும், உண்மையான சான்றோருக்கும், இரக்க குணமுள்ளோருக்கும், உண்மையான தொண்டருக்கும், நல்ல மனம் உள்ளவர்களுக்குமே பலிக்கும் என்கிறார். இரசவாதம் செய்யும் இன்னுமொரு முறை பற்றி,

“எட்டான போன்னத்துவத்தை தகடடித்து
எழிலாய்ப் புடமிட்டால் தங்கமாகும் கட்டான
தங்கமது என்ன கூறுவேன் காசினியில் நாதாக்கள்
கண்ட தங்கம் பட்டான தங்கமதை பூசை கொள்வீர்
பாங்கான சிவபூசை உறுதி காண்பீர் மட்டான

தங்கமென்று எண்ணவேண்டா மகத்தான
குருபூசைத் தங்கமாமே''

என்று இரசவாதம் செய்யும் முறை ஒன்றைச் சொல்கிறார் கருவூரார். அதேபோன்று,

''பொன் தான் பிறந்தது புகழான கற்பத்தில்
பொன் தான் பிறந்தது போராம் துரிசினில்
பொன் தான் பிறந்தது புகழான சூதத்தில்
பொன் தானு பரசுப்போக்கில் பிறந்ததே'' (திருமூலர் ஞான கற்பம் 500: பா.13)

என்றும்,

''செம்பு பொன்னாகும் சிவாய நமவென்னில்
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்
செம்பு பொன்னாகும் சிரீயும் கிரீயுமெனச்
செம்பு பொன்னான திருவம் பலமே'' (திருமந்திரம் : தந்திரம்-4, பா.20)

என்று சொல்வதோடு இரசவாதம் பற்றிச் சொல்வதை நிறுத்திக் கொள்கிறார் திருமூலர். மற்ற சித்தர்கள் எல்லாம் தங்கள் இரசவாத முறையில் ஏதாவது ஒரு செய்முறையை மறைத்தார்கள் என்றும், அவர்கள் மறைத்தவை என்ன என்று அகத்தியர் தனது சீடர்களுக்கு விளக்கி இருக்கிறார். அப்படி அவர் விளக்கிய பாடல்களின் ஒரு சில வரிகளை மேல்வருமாறு காணலாம்.

''வேதிக்கக் கொங்கணவ ரேழுசபை யென்றார்
விளங்காம லிதுரெண்டை மறைத்துப் போட்டார்…'' (அகத்தியர் தத்துவம் 300: பா.33)
என்று கொங்கணவர் மறைத்த இரகசியத்தை வெளியிடும் அகத்தியர்,

''…நேரப்பா வாசமுனி மறைத்த சூத்திரம்
நிறையான சுண்ணந்தா னேதென் றாக்கால்…'' (அகத்தியர் தத்துவம் 300: பா.65)
என்று வாசமுனி மறைத்த சூத்திரத்தையும்,

''பேய்மக்காள் பிரமமுனி மறைத்த சூத்திரம்
பிசகாமல் செம்புசுத்தி மறைத்துப் போட்டார்…'' (அகத்தியர் தத்துவம் 300: பா.91) என்று பிரமமுனி மறைத்த சூத்திரத்தையும், இதைத்தவிர ஏனைய சித்தர்கள் மறைத்தவைகளையும் தனது சீடர்களுக்காக அகத்தியர் விளக்கி இருக்கிறார் தனது நூல்களில் என்பது குறிப்பிடத்தக்கது.

**இரசவாதக் கலையின் உள்ளார்ந்த விடயங்கள்**

இவ்வாறு பல்வேறு விதங்களில் இரசவாதக்கலை கூறப்பட்டுள்ளது. அத்தகைய இரசவாதம் செய்யும் முறையை பற்றியும் அறிந்து கொள்வது அவசியம். அவ்வடிப்படையில், இரசவாதி

ஒரு பொருளை எடுத்தால் அது தாதுப் பொருளாக இருந்தாலும் - தாவரப் பொருளாக இருந்தாலும் - உயிர்ப் பொருளாக இருந்தாலும் - அதன் தன்மையைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அது ஒரே பொருள் தானா? பலவிதப்பொருட்கள் சேர்ந்ததா? அப்படி ஏற்படுவதற்கு காரணங்கள் எவை? பரம்பரையாக உண்டாகிறதா? சுற்றுப்புறச் சூழ்நிலையா? என்கின்ற விபரங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதேபோன்று கனப் பொருளா? நீர்ப் பொருளா? காற்றுப் பொருளா? அவைகளின் பிரிவுகள், கலவைகள் முதலியவை பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

அதேபோன்று இரசவாதம் செய்யத் தேவையானவைகள் தொடர்பாக நோக்கும் போது, இரசவாதம் செய்ய விரும்புகின்ற ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய முதற் பாடம் குணபாடம் ஆகும். பதார்த்த குண சிந்தாமணி, பொருட் பண்பு நூல் குண பாடம், குண வாகடம் முதலிய நூல்கள் மூலம் அறியலாம் இவை இப்போதும் கிடைக்கின்றன. இந்த மண்ணில் காணப்படும் பொருட்கள் எல்லாம் அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் என இரண்டாகப் பிரியும். பச்சை இலைகள், காய்ந்த (மரத்தின்) பகுதிகள் முதலியன தாவரப் பொருட்கள் எனக் கொள்ளப்படும். தாதுப் பொருட்கள் நான்கு பகுதிகளாகப் பிரித்துச் கணக்கிடப்படும். அவையாவன,

1. தண்ணீரில் கரைந்தும், நெருப்பில் வெடித்துப் புகைந்து எரியும் குணம் உள்ளவை உப்புக்கள்.
2. நெருப்பில் புகைந்து போகும் ஆனால் நீரில் கரையாதவை பாஷாணங்கள்.
3. நீரில் கரையாது நெருப்பில் புகையவோ, எரியவோ, ஆவியாகவோ மாறாதது. மணல் சத்துள்ள உபரசங்கள்.
4. நீரில் கரையாதவை, நெருப்பில் உருகிப் பிறகு கெட்டிப்படுபவை உலோகங்கள்.

இரசவாதம் செய்யக் கூடிய உலோகங்கள், துணையாக உள்ள உப்பு, உபரசம் முதலியவைகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற வேண்டும். இரசவாதம் செய்யவும், தூய்மைப்படுத்தவும், வீரியப்படுத்தவும் மூலிகைகள், மலர்ச்சாறு, முதலியனவும் தேவைப்படும். ஆகையால் தேவையான தாவரங்களின் செயல்திறன், தோற்றம், முதலியவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு பொருளிலும் நல்ல தன்மையும் உண்டு. சில கெட்ட தன்மைகளும் உண்டு. பொருள்களைக் கையாளுமுன் நாம் செய்கின்ற செயலுக்கு உதவிபுரியாமல் கெடுதல் செய்யக் கூடிய தன்மைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். இதற்குச் சுத்தி செய்தல் என்று பெயர். தூய்மை செய்வதற்கும், இரசவாதம் செய்வதற்கும் பல வகையான கருவிகள் தேவைப்படும். அக்கருவிகளின் பயன், உபயோகிக்கும் முறை முதலியன பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நான்கையும் நன்கு தெரிந்து கொண்ட பின்னர் இரசவாதம் செய்யத் தொடங்கலாம்.

குண பாடம் முதற் பகுதியில் உலோகங்கள், உப்புக்கள், பாஷாணங்கள், மூலிகைகள் முதலியவற்றின் பிறப்பு, வளர்ப்பு, செயல்கள் போன்றவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் உலோகங்கள் தங்கம், வெள்ளி, எ.்.கு, காரீயம், தாமிரம், வெள்ளீயம் இரும்பு, நாகம் ஆகிய எட்டும் இயற்கை உலோகங்கள் என்பது போகர் முதலான சித்தர்

கொள்கை. ஒரு வேளை பழங்காலத்தில் எஃகு இயற்கையாகவே கிடைத்திருக்கக் கூடும் வெண்கலம், பித்தளை, தரா ஆகிய மூன்றும் செயற்கை உலோகங்களாகும். சில நூல்களில் அபிரகத்தையும் உலோகமாக கணக்கிட்டுள்ளனர், பின்னர் அது மாற்றப்பட்டுள்ளது. இப்போது பிஸ்மத், அலுமினியம், முதலிய பல உலோகங்களும் புழக்கத்திற்கு வந்துள்ளன. இவை போலவே உப்புக்கள் (காரங்கள்) பாஷாணங்கள், உபரசங்களிலும் இயற்கையானவை, செயற்கையாக உண்டாக்கப்படுபவை பற்றிய விவரங்களைக் குறிப்பிடப்படுகின்றது. இந்த குணபாடப் பிரிவுதான் இரசவாதத்தின் அடிப்படைப் பாடமாகும். முதலில் உலோகங்களையும், உலோகக் கலப்புப் பொருட்களையும் தெரிந்து கொள்வோம்.

**உலோகங்களும் அதன் கலப்புமுறைகளும்**

அந்தவகையில் இரும்பு தொடர்பாக நோக்குவோமாயின், எல்லா மலைகளிலும், நிலங்களிலும், அநேகமாக கெந்தகம் போன்ற சில பொருட்களுடன் கிடைக்கிறது. இத்தாது தாவர, உயிர்ப்பொருட்களில் சிறிதளவு கலந்தும் இருக்கிறது. அகி, அயசு, அயில், இடி, ஈசசெயம் கரும் கொல், கருப்பி, கரும்பி, கரும்பு, கருப்பு, கருமணல், கரும் பொன், கயசு, கிருஷ்ண வையம், காலில் நெகிளம் ஆதி, சத்து, சிரோசரம், சிட்டம், திரும்பி, துண்டம், பிண்டம், பொன்மணல், லோகம், வாழ் பூமி நாதம், கருந்தாது என்கிற வேறு பெயர்களிலும் இது வழங்கப்படுகிறது. அண்டவோடு, அப்பிரகம், கெந்தி, கிளிஞ்சலோடு, கௌரி, சவ்வீரம், சாரம், சிங்கி, சிலாசத்து, சிலை, தரா, நிமிளை, பூநீறு, வங்கம், வெண்காரம், வெண்கலம், வெள்ளைப்பாடாணம், ஆகியவைகள் அயத்திற்கு பகைச் சரக்குகள் ஆகும். அதேபோன்று இராஜ வர்த்தம், காந்தம், கெந்திச் செம்பு, சூரியன், செம்பு, தங்கம், நாகம், பூநாகம், பூரம், மயூரச்செம்பு, வெள்ளி ஆகியவைகள் நட்புச்சரக்குகள் ஆகும்.

அடுத்ததாக எஃகு என்பது பற்றி நோக்குவோமாயின். இந்தியாவில் மைசூர் போன்ற பல இடங்களில் இரும்பிலிருந்து செய்யப்படுகிறது. இரும்பைப் போல எளிதாக வெட்டவும், சேர்க்கவும் இயலாத தன்மை கொண்டது. இதில் ஆறு வகையான வேறுபாடுகள் உள்ளன என்றும் கூறப்படுகிறது. துவர்ப்புச் சுவையும் வெப்ப வீரியமும் உண்டு. பல் நோய்கள், சுக்கில நட்டம், கண்நோய், உடல் வெளுப்பு, படுக்கையிலேயே கிடக்கின்ற எலும்புருக்கி நோய்கள் முதலியவற்றைப் போக்கும். பொதுவாக இரும்பு மருந்தின் குணங்கள் யாவும் இதற்கு உண்டு. அயக்கடிசு, அரம், உருக்கு, எஃகு, எழுகு, ஒழுகறை, மணிவாள், கிட்ட லோகம், இரத்தலோகம், தீட்சணம், மலைக்குடோரி, வற்றல் லோகம் முதலிய வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

அடையாளப்படுத்தத்தக்க மற்றுமொரு உலோகம் நாகம் ஆகும். இயற்கையாக இது மற்ற பொருட்களுடன் கலந்தே கிடைக்கின்றது. பிரித்து எடுத்த பிறகு இது வெள்ளையும் நீலமும் கலந்த நிறமாகவும், பளபளப்பாகவும், கட்டியாகவும் இருக்கும். இதைக் கம்பியாக நீட்டவும், தகடுகளாக அடிக்கவும் முடியும். இது திராவகங்களில் கரையும். காற்றுப்பட்டால் நாளடைவில் இதன் மேல் உப்புப் பூத்துவிடும். நாகத்துடன் செம்பு சேர்த்து உருக்கி தயாரிக்கப்படுவதே பித்தளை ஆகும், இதை உருக்கும் போது பாம்பு போல் சீறும். ஆதலால் நாகம் என்று பெயர். துத்தநாகம் என்று அழைப்பதுண்டு. சீறல், பொருமல், பொங்கல், இரைச்சல், ஐம்புகை, சோரம், வாசுகி, வெண்நாகம், தாம்பிரத்தின் பேதை, வாதத்திற்கு உயிர் என்கின்ற

பெயர்களாலும் நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. மேகம், பேதி, வெள்ளை, உட்சூடு, முளைப்புண், பித்தம் முதலிய நோய்களைப் போக்கும். இரத்தப் பெருக்கை அடக்கும் தன்மையும், உடல் தேற்றும் தன்மையும் இதற்கு உண்டு. அண்டம், அபினி, அன்னபேதி, கல்லுப்பு, கிளிஞ்சல், சிங்கி, தங்கம், தரா, நண்டு ஒடு, மிளகு, வளையலுப்பு, வீரம் வெடியுப்பு, வெண்காரம், வெள்ளி, வெள்ளைப் பாஷாணம், முதலியன நாகத்தின் பகைச்சரக்குகள் ஆகும். அப்பிரகம், இரும்பு, கெந்தி, காந்தம், காரீயம், கௌரி, நவாச்சாரம், சிலாசத்து, சூதம், செம்பு, மயூரச் செம்பு முதலியன நட்புச் சரக்குகள் ஆகும்.

அதேபோன்று தாமிரம் என்னும் உலோகம் சுரங்கங்களில் சாதாரணமாகக் கிடைக்கின்றதுடன் இது அதிகமாகப் பயன்படக் கூடியது. பொன், வெள்ளி, வெள்ளீயம், காரீயம், நாகம், இரும்பு, நிமிளை, கெந்தி முதலிய பொருட்களுடன் கலந்து கிடைக்கிறது. கலப்பில் இருந்து தாமிரத்தைத் தனியாகப் பிரித்து எடுக்கின்றனர். பூநாகப் பூச்சி (நாங்கூழ் பூச்சி) இந்திரகோபம் (பட்டுப் பூச்சி) மயில் இறகு, தலை மயிர், சில மூலிகைகள் முதலியவைகளில் இருந்தும் தாமிரச் சத்து எடுக்கப்படுகிறது. சுத்தமாகத் தூய்மை செய்யப்பட்ட தாமிரமானது வெள்ளி, தங்கம் முதலியவைகளுடன் மிதமான அளவோடு முறையாகச் சேர்க்கப்பட்டால் அதற்குரிய குணத்தைப் பெறுகிறது. செம்பு, அவுதும்பம், உதும்பம், இரவி, ராசி, இரவிப் பிரியம், எருவை, சீருணம், சீருணி, கற்பம், சுலபம், தாம்பிரம், தாம்பரம், பரிதி, விடம் என்ற பெயர்களாலும் இது அழைக்கப்படுகிறது. செம்பு அறுபத்தி ஆறு பங்கும், துத்தநாகம் முப்பத்தி நான்கு பங்கும் சேர்த்து பித்தளை தயாரிக்கப்படுகிறது. செம்பும் தகரமும் சேர்த்து பெல்மெட்டல் என்ற மணி செய்யும் உலோகம் தயாரிக்கப்படுகிறது. இத்தகைய அடிப்படையிலேயே சித்தர்களின் இரசவாதம் பற்றிய விடயங்கள் அமைவு பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.

**நிறைவுரை**

இவை யாவற்றையும் தொகுத்து நோக்குவோமாயின் சித்தர்களின் பாடல்கள் இலக்கிய மதிப்பையும் அறிஞர்களின் அங்கீகாரத்தையும் பெறாவிட்டாலும், சித்தர்களின் நுண்ணுணர்வும் ஆழ்நிலை எண்ணங்களும் பல்வேறு விடயங்களைத் தன்னகத்தே கொண்டவையாக அமைந்துள்ளது. சித்தர்களின் மருத்துவ முறைகள் தனித்தன்மை பெற்று விளங்குவதனைப் போன்று அவர்களது அரிய கண்டுபிடிப்பான இரசவாதம் பற்றிய விடயங்கள் இன்றைய ஆய்வுலகையும் ஆராய்ந்தறிய வைப்பதாக அமைந்துள்ளதுடன் இரசவாதக்கலையின் முன்னோடிகளாக சித்தர்களே விளங்கி இரசவாதம் தொடர்பாக பல்வேறு விடயங்களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய இரசவாதம் பற்றிய விடயப்பரப்பு பரந்துபட்டது ஆயினும் அவற்றில் குறிப்பிட்டளவிலான விடயங்களே இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**


**மூல நூல்கள்**

பார்த்தசாரதி யோகி, (உரை.) T.C., (1940), திருமந்திரம், பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், சென்னை.

**ஏனைய நூல்கள்**

சிதம்பரனார், சாமி., (2003), சித்தர்கள் கண்ட விஞ்ஞானமும் தத்துவமும், தாமரை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக். 10-23

சிவசண்முகராஜா, சே., 2007, சித்தமருத்துவ வாகடம், சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம்.

சுப்பிரமணியம், மே.சீ., (1985), சித்தர்கள் இரசவாதக்கலை, தாமரை நூலகம், சென்னை.

சு.து., "பதினெண் சித்தர்கள்", (2009), இந்துக்கலைக் களஞ்சியம், தொகுதி 10 (ப-பௌ), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை, பக்.68-74.

பலராமய்யா, வி., (1977), முப்பூ குரு, அருட்பெருஞ்சோதி பதிப்பகம், சென்னை, பக். 07-21.

முகம்மது அப்துல்லா சாயபு, பா., 1975, இரசவாத சிந்தாமணி (இரு பாகங்களும் சேர்ந்தது), அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு, இந்தியா, பக் 5-8

வேதநாதன், மா., (2009), சித்தர் சித்தாந்தம், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், யாழ்ப்பாணம், பக். 05-14

ஸ்ரீ தேவநாத் சுவாமி., (2003), பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை, பக். 05-07

Olaganatha Pillay. L., "A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Tanjore Palace Library", Government of India Archeological Servey of India, India, ப.27

**மாநாட்டு இதழ்**

Anbuchelvi, S., & Sritharan. G. (2009), சித்த மருத்துவத்தில் முஸ்லீம்களின் பங்களிப்பு – ஓர் ஆய்வு. International Symposium, Department of Languages Faculty of Arts & Culture, (pp. 20-21) South Eastern University of Sri Lanka,

# பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனைகள்: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

Ms. Rasu Ashaniya
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
rasuashaniya28@gmail.com

Mr. Vellappody Alagaratnam
Department of Philosophy & Value Studies,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
alagaratnamv@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

தத்துவம் அல்லது மெய்யியல் என்பது ஒரு செந்நெறிசார் கற்கையாக ஆரம்பகாலத்திலிருந்தே பல்கலைக்கழகங்களில் பயிலப்பட்டு வருகின்றது. இப்பாடப்பரப்பினுள் அதிகமும் மேலைத்தேய மெய்யியல் என்பதே உரியதாகக் காணப்படுகின்றது. இந்திய தத்தவம் எனும்போது சமஸ்கிருத மொழியில் எழுந்த விடயங்களே தத்துவம் என்பதனுள் பொதுவாக ஆராயப்படுகின்றது. ஆனால் தமிழர் தத்துவ மரபொன்று இருப்பது தவறவிடப்படுவது மரபாகிவிட்டது. சங்ககாலம் முதல் இன்றுவரை தத்துவச் சிந்தனைகள் தமிழில் காணப்படுகின்றன. இம்மரபில் சித்தர்கள் தத்துவம் முக்கியமானது. சுயாதீன சிந்தனை மரபு இவர்களுடையது. இதில் பட்டினத்தார் தலையானவர். இவரது தத்துவம் மிகவும் ஆழமானது. இது எத்தகையது என்பதே இவ் ஆய்வின் மையமாகியுள்ளது. பட்டினத்தாரின் பாடல்களில் எத்தகைய மெய்யியல் தனித்துவம் உள்ளது என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். ஆய்வின் நோக்கமானது பட்டினத்தாரின் தத்துவச் சிந்தனையின் சிறப்பினை ஆராய்வதாக அமைந்துள்ளது. புதிதுகாண் ஆய்வு முறையின் அடிப்படையில் பண்புசார் பகுப்பாய்வு இடம்பெற்றது. இரண்டாம்நிலை தரவுகளினடிப்படையில் இவ்வாய்வு இடம்பெற்றது. இவரது பாடல்களில் மூலமாக இருக்கின்ற பாடல்களை அடிப்படையகக் கொண்டு சிந்தனை பகுப்பாய்வுக்கு உட்படுத்தபட்டது. இதனடிப்படையில் தமிழரது சிந்தனை எவ்வளவு சிறப்பானது என்பது பட்டினத்தாரின் கருத்துக்களூடாக நிறுவப்பபட்டுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *இந்திய தத்துவம், சித்தர் தத்துவம், சுயாதீன சிந்தனை, தமிழர் தத்துவம், பட்டினத்தார்*

**ஆய்வுப் பின்னணி**

சிந்தனைகள் அவற்றின் தோற்ற பின்னணியின் அடிப்படையில் இரண்டாக கணிக்கப்படுகின்றன. ஒன்று சுயாதின சிந்தனை. இது உள்ளுணர்வு அல்லது ஞானத்தினால் வருவது. மற்றது மற்றவர்களது கருத்துக்களை உள்வாங்கியதன் வெளிப்பாடாக வருவது. இவற்றில் சுயாதீன சிந்தனை சிறப்பானது. சுயாதீன சிந்தனையாளர்கள் ஒவ்வொரு பாரம்பரியத்திலும் தமது கருத்துக்களை நேரடியாகவும், அப்பட்டமாகவும் எந்த வித தயக்கமும் இன்றி வெளிப்படுத்திய வரலாறுகள் உள்ளன. சோக்கிரடீஸ், பிளேட்டோ முதலியோர் கிரேக்க காலத்தில் சுயாதீன சிந்தனையை வெளிப்படுத்தியவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் எந்த ஒரு இடர் ஏற்பட்ட போதும் தமது சுயாதீன கருத்துக்களை வெளிப்படுத்திய சிந்தனையாளர்களாக விஞ்ஞானம், சமயம், தத்துவம், பொருளியல், இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளிலும் இருந்துள்ளனர்.

இளைஞர்களுக்கு அறிவூட்டியமைக்காக சோக்கிரடீஸ் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார், உலக போக்கை மாற்றிய சிந்தனையினை வெளிப்படுத்தியவர் கார்ல் மாக்ஸ். இவர் தனது அரசியல், பொருளாதார சிந்தனையின் நிமித்தம் நாட்டை விட்டு விரட்டப்பட்டார், மேற்குலகில் மத்தியகால சிந்தனை சமய கருத்துக்களுக்கு உட்பட்டதாகவே எழவேண்டிய கட்டாயம் இருந்தது. இக்காலத்தில் எழுந்த விஞ்ஞான சிந்தனைகள் சமய நிலைப்பாட்டிற்கு முரணாக இருந்தமையினால் விஞ்ஞானிகள் தண்டிக்கப்பட்டார்கள், இருந்தும் அவர்களது சிந்தனை ஒருபோதும் நிறுத்தப்படவில்லை. எவ்விடர் வந்தாலும் துணிவுடன் சுயாதீன சிந்தனை எழுகின்றது. இது போன்ற சுயாதீன சிந்தனையாளர்களே தமிழ் சித்தர்கள் ஆவர்.

சித்தர்கள் பொதுவாக தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் காணப்பட்ட மறைஞான சிந்தனையாளர்கள். இவர்களது சிந்தனை உலக வாழ்க்கையை விமர்சிப்பதாகவும் ஆன்மாவின் இருப்பினையும் அதன் நோக்கத்தையும் வெளிப்படுத்துவதாகவும் காணப்பட்டன. சித்தர்கள் ஒரே போக்குடையவர்களாக இருப்பினும் அவர்களது தத்துவத்தின் போக்கும், அத்தத்துவ சிந்தனையின் உள்ளடக்கமும் சிறிய வேறுபாடுகள் உடையவை. இருப்பினும் உயர் உள்பொருள் (Supreme Reality) அல்லது கடவுள் பற்றிய சிந்தனை, ஆன்மாவின் இருப்பு, யாக்கை, நிலையாமை, உலக இருப்பு, இயல்பு, வீடுபேறு எனும் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் இவர்களிடையே ஒற்றுமை காணப்பட்டது. இவ்வாறான சிந்தனைகளை வெளியிட்டவர்களுள் பட்டினத்தார் முக்கியமானவர் என்பதுடன், தமிழர் மத்தியில் எல்லோராலும் அறியப்பட்டாராகவும் காணப்படுகின்றார்.

பட்டினத்தாரது சிந்தனை தமிழர் சிந்தனை பரப்பில் முக்கிய விடயங்களை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளது. அவரது பாடல்களில் உள்ள விடயங்கள் உலக வாழ்க்கை பற்றிய சிந்தனைகளையும் மறு உலக வாழ்க்கை பற்றிய சிந்தனைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. சித்தர்களது தத்துவத்தின் அடிப்படை அம்சம் என்னவெனில் எந்தவித மரபுகளையும் பிரதி பண்ணாது தனது ஞானத்தில் உதித்த விடயங்களை மட்டுமே வெளிப்படுத்துவதால் இது தமிழருக்கே உரிய தூய தத்துவமாகின்றது. இச்சிறப்பு பிரத்தியேகமாக பட்டினத்தாருக்கு பொருத்தமுடையதாகும். தமிழர் மெய்யியல்

பாடப்பரப்பில் இது ஒரு தூய சிந்தனையாகவே காணப்படுகின்றது. இச்சிந்தனை தன் விடயங்களை ஆழமாகவும், தெளிவாகவும் எடுத்துக்காட்டியிருந்தாலும் இது பற்றிய ஆய்வுகள் பிரத்தியேகமாக இடம்பெறவில்லை. குறிப்பாக பட்டினத்தாரது தத்துவம் பற்றி ஆழமான ஆய்வுகள் எதுவும் இடம்பெறவில்லை. பொதுவாக பட்டினத்தார் பற்றிய கட்டுரைகள், பாடலுக்கான பொழிப்புரைகள், அது பற்றிய விமர்சனங்கள் என்ற வகையில் பல வெளிவந்தாலும், தத்துவார்த்த ரீதியான ஆய்வுகள் கனதியாக வெளிவரவில்லை. இவரது சிந்தனையின் இயல்பு மற்றும் அதன் தனித்துவம் எனும் விடயங்கள் தமிழர் மெய்யியல் சார்பாக ஆய்வுக்குரியதாக காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

தமிழர்களது தத்துவ நிலைப்பாட்டில் சித்தர்கள் சிறப்புக்குரியவர்கள். இவர்களது சுயாதீன சிந்தனை தனித்துவ தத்துவ நெறியாக காணப்படுவதற்கு அடிப்படையாக அமைகின்றது. இவர்களுள் தனித்துவமும் ஆழமும்கொண்ட கருத்துக்களை வெளிப்படுத்தியவர் பட்டினத்தார். இவரது தத்துவத்தின் நிலை அதன் உள்ளடக்கம் என்ன என்பது இவ்வாய்வுக்குரிய பிரச்சனையாகும்.

**ஆய்வு வினாக்கள்**

01. சித்தர்கள் என்போர் தத்துவவாதிகளா?
02. சித்தர்கள் வெளியிட்ட தத்துவங்கள் எவை?
03. பட்டினத்தார் பாடல்கள் எத்தகைய தத்துவங்களை கூறுகின்றன?
04. தத்துவங்களின் பின்னணியில் பட்டினத்தார் எந்நிலையில் உள்ளார்?

**ஆய்வின் நோக்கம்**

தூய தமிழர் சிந்தனைகள் ஒன்றாக காணப்படும் சித்தர் தத்துவங்களில் பட்டினத்தார் தத்துவ விடயங்களை பகுப்பாய்வு செய்வதே ஆய்வின் நோக்கமாகும். இதனை அடைய நான்கு துணை நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தத்துவ விடயங்களுள் சித்தர் தத்துவத்தை ஆராய்தல்.
- முக்கியமான சித்தர்களையும் அவர்களது தத்துவங்களையும் வெளியிடல்.
- பட்டினத்தாரது தத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்தல்.
- பட்டினத்தாரது சிந்தனை விடயங்களை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது குறித்த ஒரு சிந்தனையாளரின் தத்துவங்களை பகுப்பாய்வு செய்வதால் இங்கு பண்புசார் ஆய்வு முறையியலே பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய இரண்டாம் நிலை மூலகங்களில் இருந்தும் மூன்றாம் நிலை மூலகங்களில் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன. பட்டினத்தார் பாடலைப் பொருத்தமாக பயன்படுத்துவதற்காக அரு.ராமநாதன்

தொகுத்த பாடல் தொகுதி பிரதானமானதாக அமைகின்றது. இதனை விட ஆய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், ஏனைய மூன்றாம் நிலை தரவுகளும், இவ்வாய்வுக்கு உரிய ஆதாரமாக அமைகின்றன. பண்புசார் ரீதியில் தரவுகள் சரிபார்க்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**ஆய்வு முக்கியத்துவம்**

தமிழர் சிந்தனைகளோடு, சித்தர் தத்துவம் பிரதானமான ஒரு விடயமாகும். இருப்பினும் பட்டினத்தார் பாடல்கள் தத்துவார்த்த ரீதியில் பார்க்கப்படவில்லை. எனவே இவ்வாறான ஒரு ஆய்வு முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

இவ்வாய்வானது பட்டப்படிப்பின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் முகமாக இடம்பெறுகின்றது. இதனால் இது சில வரையறைகளுக்கு உட்பட்டதாகும்.

- சித்தர் பாடல்கள் மட்டுமே ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.
- இதன் விசாலம் கருதியும், காலம் கருதியும் பட்டினத்தார் பாடல்கள் மட்டுமே எடுத்துக்காட்டுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

**ஆய்வுகளின் மீளாய்வு**

தமிழர் தத்துவ பாரம்பரியம் அல்லது தமிழர் மெய்யியல் சிந்தனைகள், இல்லை என்ற போக்கே பெரும்பாலானோர் மத்தியில் காணப்படுகின்றது. இதற்கு காரணம் மேலைத்தேய தத்துவ முறைகள் போன்றோ அல்லது இந்திய தத்துவ சிந்தனை பாரம்பரியம் போன்றோ தமிழர் தத்துவ பாரம்பரியம் ஒன்று இல்லாமல் போனது. ஆனால் தமிழர் சிந்தனை மரபில் தருக்கம், அறிவாராய்ச்சியில், சமய தத்துவம், அழகியல் எண்ணக்கருக்கள் பற்றிய மெய்யியல் சிந்தனைகள் இலக்கியங்களிலும், இலக்கண நூல்களிலும், தனிப் பாடல்களிலும் எழுந்து காணப்படுகின்றன. இவற்றை முறமைப்படுத்திக் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சிகள் பெரிதளவாக இடம்பெறவில்லை. தொல்காப்பியம் பொருள் அதிகாரம், திருக்குறள், தேவாரங்கள், மாணிக்கவாசகரின் திருவாசகம் என தத்துவ விடயங்களை விளக்கும் நூல்களை பட்டியல் படுத்திக் கொண்டே செல்லலாம். இவற்றுள் சித்தர்களது பாடல்களும் தத்துவச் செறிவைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இச்சித்தர்களுள் பட்டினத்தார் முக்கியமான ஒருவராகவும், புகழ் பெற்ற ஒருவராகவும் காணப்படுகின்றார். இவ்வாய்வானது பட்டினத்தாரது தத்துவ விடயங்களை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதனால் இவர் சார்பான ஆய்வுகளை மீளாய்வு செய்வது தேவைப்பாடான ஒன்றாக விளங்குகின்றது.

பட்டினத்தார் தத்துவங்கள் பல்வேறு ஆய்வுகளில் பல்வேறு விதமாக நோக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிவபாலன் (Sivapalan.G and Manimaran.s, 2021) என்பவரது ‘‘சித்தர் பாடல்களில் சைவசித்தாந்தத்தின் சாயல்’’ என்ற ஆய்வு முக்கியமான ஒன்றாகும். இவர் சித்தர்

பாடல்களை எடுத்து அவற்றில் உள்ள தத்துவ விடயங்களை வெளிக்கொணர்ந்து இருக்கின்றார். இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவரது ஆய்வு சைவசித்தாந்தக் கண்ணோட்டத்துடன் நோக்கப்பட்டது. முக்கியமாக இவரது ஆய்வானது சைவ சித்தாந்தத்தின் உள்ளடக்கம் எவ்வாறு சித்தர் பாடல்களில் காணப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இவர் தனியே ஒரு சித்தரை ஆய்வுக்கு உட்படுத்தாது, பொதுவாக ஆறு பக்கங்களைக் கொண்ட ஒரு ஆய்வாக இதனை வெளிப்படுத்தி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சித்தர் தத்துவம் பற்றிய ஆய்வுகளில் ரூபா என்பவரது "The Theological Principles of Siddhar and Vallalar Songs" என்ற ஆய்வும் குறிப்பிடத்தக்கதாகும். (Roopa.M,2021) இவர் பதினெண் சித்தர்களது பாடல்களையும் எடுத்துக்கொண்டதுடன், வள்ளலாரது ஆய்வுகளையும் தனது ஆய்விற்கு அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார். இவரது ஆய்வு சமயம் சார்ந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. அதாவது இறையியல் கருத்துக்கள் எவ்வாறு சித்தர் பாடல்களிலும் வள்ளலார் பாடல்களிலும் காணப்படுகின்றன என்பதை காட்டுவதாகவே இது அமைந்துள்ளது. கடவுள், ஆன்மா, மோட்சம் முதலிய இறையியல் எண்ணக்கருக்கள் சித்தர் பாடல்களிலும் வள்ளலார் பாடல்களிலும் விளக்கப்படும் விதத்தினை பகுப்பாய்வு செய்துள்ளார். எனவே இவ்வாய்வு கூட இறையியல் கருத்துக்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதாக காணப்படுகின்றது.

சித்தர்கள் பற்றிய ஆய்வுகளில் மற்றுமொரு நோக்கில் எழுந்ததாகக் காணப்படுகின்ற ராமலக்ஷ்மி என்பவருடைய "Caste Rejection Thoughts in Siddhar Songs" என்ற ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும். (Ramalakshmi.R,2022) இவருடைய ஆய்வு சித்தர் பாடல்களில் சமூக கட்டமைப்பு எவ்வாறு இருந்தது என்பதனை ஆய்வு செய்வதாகவே விளங்குகின்றது. குறிப்பாக சாதி எதிர்ப்புச் சிந்தனை காணப்படும் ஆற்றை இவர் விளக்கியுள்ளார். மானுடவியல் பார்வையில் தமிழ் சமுதாயத்தில் சாதிக்கட்டமைப்பு இருந்த முறையும் அதற்கு எதிரான சித்தர்களது சிந்தனையும் இவ்வாய்வில் எடுத்தாளப்படுகின்றன.

சித்தர் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆய்வுகளில் ஒன்றாக நாராயணன் (நாராயணன்.க,1990) என்பவருடைய "சித்தர் தத்துவம்" எனும் ஆய்வு முக்கியமானதாகும். குறிப்பிட்ட சில சித்தர்களது பாடல்களை அடிப்படையாக எடுத்துக்கொண்டு இவர் சமுதாய அரங்கில் சித்தர்களது இருப்பினையும், சித்தர்கள் பற்றிய சாதாரண மக்களது நோக்கினையும் விளக்கியிருக்கிறார். நிலையாமைக் கருத்துக்கள், உடல், ஆன்மா, யோக நெறி, கடவுள் கொள்கைகள் என சித்தர்களது தத்துவம் கொண்டிருக்கும் பல முக்கிய அம்சங்களை உள்ளடக்கி ஆய்வியை மேற்கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்லாது சூ.ஃபியம் மற்றும் தாவோ யியம் என்பன தொடர்பாகவும் சமுதாயத்தோடு இணைத்த வகையில் ஆய்வை நகர்த்திச் சென்றிருக்கிறார்.

சித்தர்கள் இந்த உலகெங்கிலும் பரந்து காணப்படுகின்றனர். அவர்கள் சிறு தொகையினர் அல்ல எண்ணிலடங்கா சித்தர்கள் வாழ்கின்றனர். இருப்பினும் சித்தர்கள் மூலமாக பாடப்பட்ட பாடல்கள் அவர்கள் இருப்பை பறைசாற்றுகின்றன. அந்தவகையில் சித்தர்களது

தத்துவத்தினை ‘‘சித்தர் சித்தாந்தம்’’ என்ற படைப்பில் வேதநாதன் அவர்கள் விளக்கியிருக்கிறார். (வேதநாதன்.மா,2009) சித்தர்களது ஆன்மா பற்றிய கருத்துக்களும், உலக நிலையாமை பற்றிய கருத்துக்களும், கடவுள் பற்றிய கருத்துக்களும் குறிக்கப்பட்டுள்ளது. திருமந்திரம், சைவசித்தாந்தம், தேவாரங்கள் முதலியனவற்றில் சித்தர்களுக்குள்ள தொடர்புகளும் இவருடைய ஆய்வுகளில் விளக்கப்பட்டுள்ளது.

சோமசுந்தரம் (சோமசுந்தரம். மீ. ப, 2009) என்பரால் சித்தர்கள் பற்றி படைக்கப்பட்ட ‘‘சித்தர் இலக்கியம் - ஆய்வு நூல்’’ எனும் படைப்பு சமுதாய வெளியிலும், சமய உலகிலும் புரட்சிகரமான கருத்துக்களைப் போதித்த சித்தர்களது போக்கை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்நூலில் முக்கிய விடயங்களாக மந்திர ஆற்றல், பதச்சோறு, விளக்கப்பட்டுள்ளது. பல்வேறு சித்தர்களுடை பாடல்களும், குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. பிறவிப் பயனை அடைய வழிகாட்டும் சித்தர் இலக்கியக் கருத்துக்களை பொதுமக்கள் உணரும் வகையில் எளிமைப்படுத்திக் கூறியுள்ளார் சோமசுந்தரம்.

‘‘பட்டினத்தார் பாடல்கள்’’ என்ற தலைப்பில் மாணிக்கனார் (மாணிக்கனார். அ, 1996) என்பவரால் எழுதப்பட்ட நூலானது முழுவதுமாக பட்டினத்தாரை மையப்படுத்தி எழுதப்பட்ட நூலாகக் காணப்படுகின்றது. தமிழில் நிலையாமை பற்றிப் பாடப்படும் பாடல்கள் பல இல்லற வாழ்வின் இழிதகைமையை உணர்ந்து எல்லையற்ற பரம்பொருளை ஒவ்வோர் உயிரும் அடைய வேண்டும் எனும் கருத்தை பலரும் பாடியுள்ளனர். அதேபோல பட்டினத்தார் தனி ஒருவராக இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை என நிலையாமை பற்றியும் பெண்களிடம் உருவாகும் காம உணர்வு பற்றியும் தனது பாடல்களில் விளக்கியிருக்கும் ஆற்று இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கணேசலிங்கம் (கணேசலிங்கம்.செ,2004) என்பவரால் எழுதப்பட்ட ‘‘சித்தர் சித்தாந்தமும் சூபிசமும்’’ என்ற படைப்பானது சூபிச ஞானிகள் பற்றியும், சூபிச தத்துவம் பற்றியும் பிரதானமாக விளக்கியிருக்கிறது. இருப்பினும் இவர் தனியே ஒரு சித்தரை அடிப்படையாகக் கொண்டு தனது நூலினைப் படைக்கவில்லை மாறாக பட்டினத்தார், திருமூலர், தாயுமானவர், இராமலிங்கம் அடிகளார் என குறிப்பிட்ட சில சித்தர்களை எடுத்து விளக்கியிருக்கிறார். அத்தோடு பட்டினத்தாரை ஓர் எதிர்மறை சித்தராகக் கொண்டு சில கருத்துக்களை விளக்கி இருக்கிறார்.

இளமுனைவர் தமிழ்ப்பிரியன் என்பவரால் (தமிழ்ப்பிரியன்,2010) எழுத்துருவம் பெற்று 2010ல் அழகு பதிப்பகம் சென்னையினால் வெளியிடப்பட்ட ‘‘பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் மூலமும் விளக்கவுரையும்’’ எனும் ஆய்வு நூலில் இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து அவனோடு ஒன்றறக் கலந்த ஞானியர்களான சித்தபுருஷர்கள் தந்நலப் பற்று சற்றும் அற்று உலகத் துயர்கண்டு தனிப்பெருந் தாயாய்த் துடிக்கும் தகவாளர் என்றும், நினைந்து நினைந்து, உணர்ந்து உயிர்கள் படும் துயரத்தை ஒழித்தலே கடமையாகக் கொண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் பக்கம் மூன்றில், இறைவனைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்பர் மதவாதிகள். ஆனால் சன்மார்க்க சீலர்களான சித்தர்கள் மனித குலம் உய்ய ஞானப் பாதையைக் காட்டுபவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும்

சித்தர்களின் எண்ணிக்கை பற்றியும் இறையனுபவம் தொடர்பான அவர்களது பாடல்கள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வானதி திருநாவுக்கரசு (வானதி திருநாவுக்கரசு, 2001) என்பவரால் எழுதப்பட்டு 2001ம் ஆண்டில் திருவரசு புத்தக நிலையத்தினால் பிரசுரிக்கப்பட்ட "சித்தர் பாடல்கள்" எனும் நூலில் "கடவுளைக் காண முயன்றவர்கள் பக்தர்கள், கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்றும் அவர்கள் யோகமும், ஞானமும், தவமும் சித்தும் தெளிந்து அவர்கள் கண்ட ஆத்ம அனுபவங்களை, அழிவற்ற அமர நிலையை உலகியல் உண்மைகளை, ஆசாபாசங்களை தமிழில் வடித்துக் கொடுத்துவிட்டு சென்றிருக்கின்றார்கள் எனவும் பதினெட்டு சித்தர்களினதும் இறைவன், படைப்பு, பிரபஞ்சம், ஆத்மீகம் போன்ற கருத்தியல் ரீதியான விடயங்களை அவர்களது குறித்தும் அனுபூதி அனுபவங்களைச் சுட்டும் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு சித்தர்கள் பற்றியும் அறிந்து கொள்ள அவர்களின் பாடல்கள் இங்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது.

மேலே மீளாய்வு செய்யப்பட்ட ஆய்வுகள் ஒவ்வொன்றும் பிரத்தியேகத் தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. சில ஆய்வுகளில் குறித்த கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து சித்தர் தத்துவம் ஆராயப்பட்டிருக்கிறது. சில ஆய்வுகளில் சமயம், சமூகவியல் முதலிய மரபுகளின் அடிப்படையில் சித்தர் தத்துவம் ஆராயப்பட்டன. பொதுவாக சில ஆய்வுகள் மேலோட்டமாக சித்தரித்த தத்துவங்களை விவரிப்பனவாகவே காணப்பட்டன. எனவே என்னால் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வானது மேற்கண்ட ஆய்வுகளின் வரையறைக்குள் வராததாகவே உள்ளது. பட்டினத்தாரது தத்துவங்களை விளக்கும் இவ்வாய்வானது தனித்துவமானதாக காணப்படுகின்றது.

**ஆய்வு இடைவெளி**

சித்தர்கள் தத்துவம் தொடர்பாக பல்வேறு நோக்கு நிலைகளில் உள்ள ஆய்வுகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பட்டினத்தார் சித்தர்களுள் தலையாய ஒருவராக இருந்த போதும் அவர் பற்றிய தத்துவ ஆய்வு எதுவும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்பது ஆய்வில் ஒரு இடைவெளியாகவே காணப்படுகின்றது. இந்த இடைவெளியினைப் பூர்த்தி செய்யும் ஒரு முயற்சியாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

**பகுப்பாய்வு**

சித்தர் தத்துவத்தின் இலக்கிய வடிவமாக சித்தர்களது பாடல்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சித்தர்கள் பொதுவாக தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் அதிகமாக வாழ்ந்திருக்கின்றனர். இருப்பினும் எல்லா சித்தர்களையும் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. இலகுவான மொழி நடையில் சித்தர்களால் எழுதப்பட்டுள்ள அல்லது பாடப்பட்டுள்ள பாடல்களை அடிப்படையாகக் கொண்டே சில சித்தர்கள் தமிழர் சிந்தனை பரப்பில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றனர். அந்த வகையில் தமிழ் நாட்டில் பதினெண் சித்தர்கள் என்ற பிரிவுகளுள் முக்கியமான பதினெட்டு சித்தர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர்.

சித்தர்களைப் பொறுத்த வரையில் கடவுளுடன் தொடர்புபட்டவர்களாகவே நாம் சித்தர்களை நோக்குவதுண்டு. அனால் இவர்களது கடவுள் பற்றிய நிலைப்பாட்டை நோக்கினால் இவர்கள் ஆத்திகர்களா அல்லது நாத்திகர்களா என்பதை வரையறை செய்ய முடியாமலிருக்கிறது. சித்தர்கள் இறை நம்பிக்கையுடையவர்களாக இருந்த போதும் அவர்கள் இறை நம்பிக்கை என்ற விடயத்தினால் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்ற பல சமய, சடங்கு முறைகள் அல்லது மரபுகளுக்கு எதிராக குரல் கொடுத்தனர். சாதி எதிர்ப்பு, சமய சடங்குகள் எதிர்ப்பு, என்பவற்றை விளக்கும் முகமாக பல பாடல்களையும் பாடி இருக்கின்றனர். சித்தர்கள் பொதுவாக பல தத்துவ கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே தங்களது பாடல்களை பாடி இருக்கின்றனர். அவை உலகப் பற்றுக்களில் இருந்து நீங்குதல், நிலையாமைக் கோட்பாடு, தருக்க அறிவைக் கொண்டு தனது கொள்கையை நிலை நாட்டல், உருவ வழிபாடு, சமய சடங்குகள், மூடநம்பிக்கைகளை எதிர்த்தல் என்பவற்றை சித்தர் இலக்கியங்களில் காணலாம். சித்தர்கள் தங்களுடைய கருத்துக்களில் பெண்கள் பற்றியும் இழிவாக பாடிய பல பாடல்களும் காணப்படுகின்றன.

சித்தர்களுள் முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக விளங்குபவரே பட்டினத்தார். இவர் பதினெண் சித்தர்களுள் ஒருவராக நோக்கப்படுகின்றார். தமிழர் மெய்யியல் சிந்தனை பரப்பினில் திருவள்ளுவர், தொல்காப்பியர் போல பட்டினத்தாரது தத்துவ கருத்துக்களும் அதிகம் பேசப்படுகின்றன. “தெரிந்து கொண்டவர்கள் செய்து முடிப்பார்கள் புரிந்து கொண்டவர்கள் அதை பிறருக்கு கற்றுக் கொடுப்பார்கள்” என்ற அரிஸ்டோட்டில் தனது கருத்தில் கூறியிருக்கிறார். அந்த வகையில் பட்டினத்தாரை எடுத்துக் கொண்டால் தான் துறவு பூண்டும் தன்னை நாடி சீடனாக வந்து சேர்ந்த பத்திரிகிரியாரை சிறந்த முறையில் வழிநடத்தி இருக்கிறார். அத்தோடு உலகியல் வாழ்வின் நிலையாமை தத்துவத்தினை அறியாத மனிதர்களுக்கு பாடல்கள் மூலமாக உணர்த்தியிருக்கிறார்.

அதேபோல உலக நிலையாமை தொடர்பாக பௌத்த மதக் கருத்துக்கள் பட்டினத்தாரது கருத்துக்களுடன் தொடர்புபடுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. “படைக்கப்பட்டவை யாவும் நிலையற்றவை இதை அறிவால் உணர்ந்தவன் துக்கத்தில் அழுந்துவதில்லை” என பௌத்தம் கூறுகின்றது. இதனை ஒத்த கருத்தினை பட்டினத்தார் பாடல்களிலும் காணக் கூடியதாக உள்ளது. இதனை,

**“பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்**

**தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்**

**பெருத்தனசிறுக்கும் சிறுத்தனபெருக்கும்**

**உணர்ந்தன மறக்கும் மறந்தென உணரும்...”** எனும் பட்டினத்தார் பாடிய கோயில் திரு அகவலில் வாழ்வின் நிலையாமை அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பட்டினத்தாரினுடைய கருத்துக்களில் சமய சடங்குகள் உருவ வழிபாடுகள் என்பவற்றை மறுத்துரைப்பதைக் காணலாம். ஆனால் கடவுளை மறுத்துரைக்கவில்லை. பட்டினத்தார் விபூதி தரித்து என்ன பயன்? குளங்களில் நீராடுவதால் என்ன பயன் என்று வினவுவதன் மூலமாக ஏனைய

சித்தர்கள் கொண்டிருப்பது போல சமய சடங்கு முறைகளை மறுக்கும் தன்மை பட்டினத்தாரிடமும் காணப்படுகின்றது.

மனிதனுக்கு ஆசைகளாலும், பிறவியினாலும், துன்பங்கள் ஏற்படுகின்றன என்றும் அத்துன்பங்களில் இருந்து விடுபட்டு இறைவன் பாதம் சரணடைவதே சிறந்தது என்று பட்டினத்தார் தனது கருத்தினை முன்வைத்துள்ளார். உனக்கு மனைவியும், பிள்ளையும் உறவில்லை, நீ இறந்து சுடுகாட்டுக்கு போனால் உன் மனைவி மக்கள் வாசலோடு நின்று விடுவார்கள், மகன் சுடுகாடு வரை கொள்ளி வைக்க வருவான், அதைத் தாண்டி யாரும் கடைசிவரையும் தொடர்ந்து வரப்போவதில்லை நீ செய்யும் நல்ல செயல்களின் பயன்களே கூட வரும் என்கிறார் பட்டினத்தடிகளார்.

ஆசைகள் மனிதனை இழிந்த காரியங்களை செய்ய தூண்டும் என்றும் ஆசையை விடு அதன் வித்துக்களான செல்வம், சுகம், இளமை என்பவற்றை விட்டு விடு என்கிறார்கள் சித்தர்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை மூன்றும் மரணத்தின் வாயில்கள் என்கிறார் பட்டினத்தார். பிறவிகளில் நம்பிக்கை வைக்கும் மனிதன் தன்னுடைய துன்பங்களையும் இன்பங்களையும் வினையின் பலன் என்று எண்ணுகின்றான். தன்னுடைய நாவின் ருசிக்கு அடிமையாகி உயிர்களை கொன்று தின்கின்றவன் என்று மனிதர்களின் நிலையை விளக்குகிறார் பட்டினத்தார்.

பட்டினத்தார் கருத்துக்களில் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக பெண்கள் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றது. பட்டினத்தார் பாடல்களை ஆய்வுக்கு உட்படுத்தும் போது அதில் ஏற்றுக்கொள்ள இயலாத விடயமாக அமைந்தது. பெண்கள் பற்றிய சில இழிவான கருத்துக்களாகும். பெண்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட அனைத்துப் பாடல்களிலுமே பட்டினத்தார் அவர்களை ஒரு இன்பம் தரும் பொருளாகவே நோக்கி பாடியிருக்கிறார். ஆனால் பெண்ணியம் பேசும் அளவிற்கு பெண்களை அடிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அவரது கருத்துக்கள் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பெண்களது பிறப்பு உறுப்பு பற்றி இழிவாக பாடப்பட்டுள்ளது சிறு சங்கடத்தை ஏற்படுத்தினாலும் ஓர் ஆய்வாளர் என்ற ரீதியில் அதனை எடுத்து பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்பது எனது நோக்கமாகும். அந்த வகையில் பட்டினத்தாரது இத்தகைய நோக்கு ஒரு சாதாரண மனிதனின் நோக்கில் இருந்து விளக்குவதை போன்றது அல்ல. மாறாக பெண்களிடம் ஏற்படும் காமமும், அதில் உண்டாகும் இன்பமும் சன்னியாசிகளைக் கூட கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டது என பட்டினத்தார் பாடியுள்ளார். அதுமட்டுமில்லாது பெண்களை உருவகித்து அவர்களது உடலின் ஒவ்வொரு பாகங்களையும் கூறும் தன்மையும் தனது பாங்கில் அவ் உடல் பாகத்தின் வெளிப்படைத்தன்மை எவ்வாறானது என்பதை இழிவான முறையில் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாக பெண்களுடைய கழுத்தினை மாந்தர்கள் கமுகுக்கு ஒப்பிடுகின்றனர். ஆனால் அது அவ்வாறல்ல வேர்வையும், அழுக்கும் படிந்த இடம் என்று பட்டினத்தார் குறிப்பிடுகின்றார். பெண்களுடைய கூந்தலானது பல்வேறுபட்ட பாடல்களிலும் பல்வேறு அழகிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு அதற்கு மாறாக பட்டினத்தார் ஈரும், பேனும் நிரம்பி

வழியும் தலை என்று பெண்களுடைய தலையை குறிப்பிட்டு விளக்கியிருக்கிறார். அத்தோடு அத்தலை முடியினுடைய சிக்கு படிதலை கூட விட்டுவிடவில்லை அதனையும் கூறியிருக்கிறார்.

அத்தோடு இந்த உலகில் மனிதர்கள் பெண்களின் பிறப்பு உறுப்புக்கு அடிமையாக இருக்கின்றார்கள் என்றும், அதனை ஒரு புதை குழி எனவும் விமர்சிக்கின்றார் பட்டினத்தார். ஆனால் பெண்கள் நோக்கில் இருந்து இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. தற்காலத்தில் பெண்கள் பல நிலைகளிலும், ஆண்களுக்கு சமமானவர்களாக வலிமை உடையவர்களாக மாறிவிட்டனர். ஆனால் பட்டினத்தாருடைய காலத்தை பொறுத்தவரையில் பெண்கள் குடும்ப பெண்களாகவும், வீட்டு வேலைகளை செய்பவர்களாகவும், விபச்சாரத் தொழில் செய்பவராகவும் மாத்திரமே காணப்பட்டனர். ஆனால் தற்காலத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு துறைகளிலும் ஒரு அங்கமாக பெண்கள் காணப்படுகின்றனர்.

ஆரம்பகாலத்தில் பெண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுவது, கணவனுக்கு பணிவிடை செய்வது என இருப்பதே தங்களது கடமையாக கொண்டிருந்தனர். பொதுவாக பட்டினத்தார் நோக்கு என்னைப் பொறுத்த வரையில் சன்னியாசிகளுக்கு வழங்கிய எச்சரிக்கையாக பார்க்கப்படுகிறது. பெண்களை தவறாக கருதுவதனையும் பொதுவாக அனைத்துப் பெண்களுக்கும் என எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் ஓரிடத்தில் பட்டினத்தார் குறிப்பிடுகின்றார்,

**“கைப்பிடி நாயகன் தூங்கையிலே கைப்பிடி நாயகன் தூங்கையிலேயவன்**

**கையைஎடுத்து அப்புறம் தன்னில் அசையாமல் முன்வைத்து**

**அயல்வளவில் ஒப்புடன் சென்று துயில்நீத்துப் பின்வந்து உறங்குபவளே**

**எப்படி நான் நம்புவேன், இறவைா! கச்சி ஏகம்பனே?”** என்று பாடியுள்ளார். அதாவது பெண்ணானவள் தன் கணவன் உறங்கையில் அவனை விட்டு அயல் வீட்டவனோடு போய் உறங்கி மீண்டும் கணவன் காண்பதற்கு முன்னர் வந்து அதேபோல உறங்குகிறாள் என்று விளக்குகிறார் பட்டினத்தார். இது அனைத்துப் பெண்களுக்கும் பொருத்தமுடைய ஒன்றல்ல. ஆனாலும் தற்கால சமூகத்தில் இவ்வாறான நடத்தை கொண்ட பெண்களை இல்லை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் அதனை நாம் கண்கொண்டு பார்த்திருக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது.

இந்த உலகில் நம்மை படைக்க ஓர் கருவியாக இருக்கும் பெண்களது யோனி வழி பற்றி விவரிக்கும் போது அதனை “புடவை ஒன்று இல்லை என்றால் ஈயும், எறும்பும் விடாது துரத்தும் பெரும் குழி என்றும், அது நரகத்தின் வாயில்” என்றும் பட்டினத்தார் குறிப்பிடுகின்றார். ஆனால் அதன் மூலமாகவே அவரும் இவ்வுலகிற்கு வந்திருக்கின்றார். அத்தோடு இங்கு பெண்கள் என்றால் பட்டினத்தார் எல்லோரையும் உள்ளடக்கி இருக்க வேண்டும், ஆனால் தனது தாயைப் பற்றி பட்டினத்தார் பாடிய பாடல்களில் பெண் என்ற நோக்கில் எந்த ஒரு குறையும் கூறவில்லை. ஆனால் அவருடைய தாய் பற்றி பாடும் போது

**“ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்று…”** என பாடியிருக்கிறார் தனது தாயின் வலி உணர்ந்த பட்டினத்தடிகளாருக்கு பெண்கள் பற்றி மிகவும் இழிவாக எழுத தோன்றியதன் காரணம் ஓர் புரியாத புதிராகவே காணப்படுகின்றது. ஆனால் பல பாடல்களிலும் பெண்களினுடைய கவர்ப்பாடான தன்மையானது சன்னியாசிகளை ஈர்க்கும் வகையில் அமைந்திருப்பதை போல தான் அவருடைய பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த ஆய்வில் என்னுடைய கருத்தானது பெண்கள் பற்றி பட்டினத்தார் பெரும்பாலும் துறவிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவே இதனை குறிப்பிட்டு இருக்கலாம். ஆனால் பெண்களை தவறாக கூறும் நோக்கமாக இது அமைந்திருக்காது, ஆண்களை குறை கூற முடியாத பட்சத்தில் பெண்களை இவ்வாறு சித்தரித்து இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

அதேபோல பட்டினத்தார் வெளிப்படுத்தி இருக்கும் உலக வாழ்க்கை அல்லது பொய்யான வாழ்க்கை தொடர்பான கருத்துக்கள் அனைத்தும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்துக்களாகவே காணப்படுகின்றன. உண்மையில் ஒவ்வொரு மனிதனும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் பட்டினத்தாருடைய கருத்துக்களில் காணப்படுகின்றது. பட்டினத்தாரினுடைய தத்துவக் கருத்துக்களை ஹெலனிஸ்டிக் காலப்பகுதியில் எழுந்ததான இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாட்டின் வாயிலாகவும் ஒப்பிட்டு நோக்கலாம். கி.மு மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்க தத்துவவியலாளரான சீனோவினால் மெய்யியலில் இவ்வாழ்க்கைத் தத்துவம் அறிமுகம் செய்யப்பட்டது. இது ஒரு நடைமுறை தத்துவமாக காணப்படுகின்றது.

மனிதன் தன்னுடைய சிந்தனைகளை சீரமைத்துக் கொண்டு அல்லது மாற்றி அமைத்துக் கொண்டு உலக ஒழுங்கிற்கு இணங்க வாழ வேண்டும் என்பதே ஸ்டெயிக் தத்துவத்தினுடைய அடிப்படை நோக்காக காணப்படுகின்றது. அடிப்படையாக மனிதன் பின்பற்றக் கூடிய 20 தத்துவங்கள் பற்றி ஸ்டெயிக் தத்துவம் குறிப்பிடுகின்றது. அதில் மூன்றாவதாக குறிப்பிடப்பட்டுள்ள விடயம் என்னவெனில் விடயங்களின் நிலையற்ற தன்மையை உங்களுக்கு நினைவூட்டுங்கள் (Remind Yourself of the Impermanence of Things) என்பதாகும். அதாவது இந்த உலகில் எந்த ஒரு விடயமும் நிலையானது அல்ல. அது எமது வீடு, செல்வம், எமது அன்புக்குரியவர்களாகக் கூட இருக்கலாம். ஏன் அது நமது உயிராகக் கூட இருக்கலாம் எந்த ஒரு விடயத்துடனும் அதிக அளவு இணக்கம் கொள்ளக்கூடாது, அதாவது அன்பு கொள்ளக்கூடாது. இதனை எபிடேடஸ் பின்வருமாறு கூறுகின்றார், ‘‘உங்கள் குழந்தை அல்லது மனைவிக்கு முத்தமிடும் போது நான் ஒரு மனிதனை முத்தமிடுகிறேன் என்று மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்’’ என்கிறார். வாழ்க்கை என்பது தற்காலிகமானது எப்போதும் நமக்கு சொந்தமானது நம்மிடம் இருந்து பறிக்கப்படலாம் நமது வாழ்க்கை மற்றும் நமது அன்புக்குரியவர்கள் எந்த அளவு முக்கியம் என்பதை நினைவூட்டுங்கள் இவ்வாறாக ஸ்டொயிக் தத்துவம் விளக்குகின்றது. இதனை ஒத்த கருத்தாகவே பட்டினத்தாரினுடைய தத்துவம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுரை**

இன்றைய சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளில் ஒன்று வாழ்வின் நிலையாமை பற்றிய தெளிவின்மையாகும். வாழ்வின் நிலையாமை தொடர்பான தெளிவு சமூகத்திடம் இருக்குமாக

இருந்தால் இன்று நிலையற்ற பொன், பொருள், செல்வங்கள், பாலியல் இன்பங்கள், பெண்கள், என பல்வேறு நிலையில்லாத ஆசைகளை வளர்த்து துன்பத்தின் பிடியில் மாட்டி வருந்தியவர்களாகத் திரிய மாட்டார்கள். ஒருவரின் துன்பத்திற்கு அவருடைய தீராத ஆசைகளே காரணமாக அமைகின்றது. பல சிறந்த செயல்களை செய்வதை விடவும் பெண்களின் மீது நாட்டம் கொண்டு திரிகின்ற மக்களுக்கும், இவ்வாறான வாழ்க்கை தத்துவத்தை அறியாத மக்களுக்கும் சித்தர்களுடைய கருத்துக்கள் உண்மையை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

மனிதனுடைய வாழ்வில் அச்சத்தைப் போக்கி அமைதியைக் கொடுக்க வேண்டிய சமயங்களை எடுத்துக்கொண்டால் தற்கால உலகில் சமயமும் மனிதனை அச்சத்திற்கு தள்ளி, துன்பத்தை அதிகரிக்கும் ஒன்றாக மாறிவிட்டது. ஏனெனில் எங்கும் போலி துறவிகளும், போலி சடங்கு முறைகளும் அதிகரித்துவிட்டது. உண்மையில் கூறுவதாயின் சித்தர்கள் இத்தகைய நிலையாமை பற்றி பாடியோ பலகாலம், ஆனால் இன்றும் மனிதன் எந்த இலக்கியம் கூறும் வாழ்க்கைத் தத்துவத்தையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சித்தர் பாடல்கள் அறியப்படவில்லை என்று கூறலாம். ஆனால் திருவள்ளுவரது தத்துவக் கருத்துக்கள் பல காலமாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால் அத்திருக்குறள் கூறும் அறமும் இங்கே மனித வாழ்வைப் பொறுத்தவரையில் புறம்தள்ளப்பட்ட விடயங்களாகும். பாரதியார் பாடிய பாடல்களில் சுதந்திரம் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு பெண் உடல் முழுவதும் நகைகளை அணிந்து கொண்டு இரவு வேளைகளில் எப்போது தனியே சென்று சென்ற போலவே திரும்புகிறாளோ அப்போது தான் என்றார். இன்று வரை அவ்வாறானதொரு நாள் ஏற்படவில்லை. களவுகளும், ஏமாற்றலும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. எனவே மனிதன் அவனுடைய வாழ்வின் உண்மை அர்த்தத்தை உணராத வரை அவன் துன்பத்தால் ஆட்கொள்ளப்படுவான்.

தமிழர் சிந்தனைகளில் ஒன்றாக காணப்படும் சித்தர் தத்துவங்களில் பட்டினத்தார் தத்துவக் கருத்துக்களை மெய்யியல் ரீதியாக வரலாற்று, விமர்சன அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதன் மூலம் விபரிக்கின்றது. இந்நோக்கில் பட்டினத்தார் பாடல்கள் மனிதனுக்கு தேவையான அடிப்படை தத்துவங்களை வழங்கி இருக்கிறது. இதனை இன்றைய உலகியல் நடத்தைகளுடன் ஒப்பிட்டு நோக்க முடியும். மூடநம்பிக்கைகள் மீதும், தேவையற்ற விடயத்தின் மீதும் தனது கவனத்தைக் கொண்டிருக்கும் மக்கள் சரியான விடயங்களை மேற்கொண்டு வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. இத்தத்துவம் இத்தகைய புரிதலை முதலில் கல்விப் பரப்பின் ஊடாக இலகுவாகக் கொண்டு சென்றிருக்கிறது. அதற்கு மெய்யியல் ஒரு பாதையாக அமைந்துள்ளது.

**உசாத்துணைகள்**

01. இளங்குமரன்.இரா, (2002), ‘‘சித்தர் பாடல்கள் : சிவவாக்கியர்’’, சென்னை, தென்னிந்திய தமிழ்ச் சங்கம்.
02. இரகுபரன்.க, (2009), ‘‘பதினெண் சித்தர்கள் - கட்டுரை’’, இந்து கலைக்களஞ்சியம், தொகுதி – 10, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
03. கணேசலிங்கன்.செ, (2004), ‘‘சித்தர் சித்தாந்தமும் சூபிசமும்’’, சென்னை, குமரன் புத்தக இல்லம்.
04. கமலக்கண்ணன்.பா, (2000), ‘‘சித்தர் தத்துவம்’’, சென்னை, வானதி பதிப்பகம்.
05. கோபாலகிருஷ்ணன்.எஸ், (2007), ‘‘பதினெண் சித்தர்கள்’’, சென்னை, பிருந்தாவனப் பதிப்பகம்.
06. கோவிந்தராசன்.வ, (1997), ‘‘சித்தர் பாடல்கள்’’, சென்னை, கவிதா பப்ளிகேஷன்.
07. சம்பத்து.பழ, ‘‘சித்தர்களின் சித்தாந்தம்’’, திண்டிவனம், இளம்பிறை பதிப்பகம்.
08. சிதம்பரனார்.ச, (1961), ‘‘சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்’’, சென்னை, தாமரை பப்ளிகேஷன்.
09. செல்லையா.வ, (2003), ‘‘ஈழத்துச் சித்த சிரோமணிகள்’’, கொழும்பு, கொழும்பு யோகர் சுவாமி நம்பிக்கை நிதியம்.
10. சோமசுந்தரம்.மீ.ப, (2009), ‘‘சித்தர் இலக்கியம் - 6 ஆய்வு நூல்’’, அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பதிப்பகம்.
11. மாணிக்கனார்.அ, (1996), ‘‘பட்டினத்தார் பாடல்கள் மூலமும் உரையும்’’, மெட்ராஸ், வர்தமானன் பதிப்பகம்.
12. முத்தையா.நா, (1980), ‘‘ஈழத்துச் சித்தர்கள்’’, இலங்கை, ஆத்மஜோதி நிலையம்.
13. முத்தையா.நா, (1994), ‘‘ஈழத்துச் சித்தர்கள்’’, சென்னை, பாரதி நிலையம்.
14. ராமநாதன்.அரு, (1959), ‘‘சித்தர் பாடல்கள்’’, சென்னை, பிரேமா பிரசுரம்.
15. நாராயணன்.க, (1990), ‘‘சித்தர் தத்துவம்’’, சென்னை, தமிழ்ப் புத்தகாலயம்.
16. நாரயணன்.க, (2003), ‘‘சித்தர் சிவவாக்கியார்’’, புதுச்சேரி, மாரி பதிப்பகம்.
17. நாராயணவேலுப்பிள்ளை.எம், (2000), ‘‘பட்டினத்தார் வாழ்வும், வாக்கும்’’, சென்னை, நர்மதா பதிப்பகம்.
18. வேதநாதன்.மா, (2009), ‘‘சித்தர் சித்தாந்தம்’’, யாழ்ப்பாணம், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்.
19. ஜனகன், (1998), ‘‘தத்துவச் சித்தர் பட்டினத்தார் (வரலாற்று பாடல்கள்)’’, சென்னை, கங்கை பதிப்பகம்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு - ஒரு வரலாற்று ஆய்வு

Ms. Vinayagam Vijayashanthi
Department of History,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
vijitha4145@gmail.com

Mr.S. K. Shivahaneshan
Department of History,
Faculty of Arts & Culture,
Eastern University, Sri Lanka.
shivahaneshank@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

சமகாலத்தில் மலையகச் சமூகம் சார்ந்த பல கட்சிகள், அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. முக்கியமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்களின் அரசியல், தொழில் சங்க செயற்பாடுகள் கொண்ட ஓர் முதன்மையான நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பு சுமார் 84 வருட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட அரசியல் கட்சியாகவும் தொழிலாளர் நலன்பேணும் அமைப்பாகவும் காணப்படுகின்றது. தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அதன் நிறுவனத்தலைவர் அமரர் தொண்டமான் இட்டுக் கொடுத்த பலமான அத்திபாரத்தில் கட்டியெழுப்பட்டுள்ளதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைத்துவம் தொண்டமானின் பரம்பரையை அடியொற்றியதாகவே கைமாற்றப்பட்டு வந்துகொண்டிருக்கின்றது. இந்தியாவின் அனுசரணையோடு, 1939 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. காலப்போக்கில் இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் ஏற்பட்ட அதிருப்திகள் காரணமாக பிளவுகள் ஏற்பட்டு, மலையக மக்கள் மத்தியில் பல அரசியல், தொழிலாளர் நலன் சார்ந்த அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்பவையாகும். இலங்கை - இந்திய காங்கிரஸ் தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடேசய்யரின் தொழில் சங்க இயக்கம் முன்னோடியாகவிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மலையகச் சமூகத்தின் அரசியல் மற்றும் தொழிலாளர் சார்புடைய அமைப்பான ‘இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ்’ அதன் பரம்பரைத் தலைமைத்துவத்தின் உறுதியில் கட்டியெழுப்பட்டுள்ளது என்பது முக்கிய கருத்தாகும். அரசியல் செயற்பாடுகளில் முக்கிய அமுக்கக் குழுவாகவும் அதேவேளை ஆளும் தரப்பினரோடு ஒத்திசைந்து செயற்படும் கொள்கையையும் கடைப்பிடித்து, மலையக சமூகத்தவரின் கல்வி, வேலை வாய்ப்பு, அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

***திறவுச்சொற்கள்:*** *இலங்கை - இந்திய காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் பரம்பரை, மலையகம், நடேசைய்யர்*

**ஆய்வு அறிமுகம்**

இலங்கை வரலாற்றில் மலையகமானது தனக்கென்று வரலாற்றை கொண்டமைந்துள்ளது. ஆங்கிலேயரின் ஆட்சியோடு மலைநாட்டு இந்தியர்களின் சரித்திரம் தொடங்குகின்றது. பிரித்தானியரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தென்னிந்தியத் தொழிலாளர்கள் ஆரம்பத்தில் கறுவாத் தோட்டங்களிலும் பின்னர் பெருந்தெருக்கள், கோப்பி மற்றும் தேயிலை தோட்டங்களில் தொழிலுக்கமர்த்தப்பட்டனர். மலையக சமுதாயத்தின் நலன்கள் மற்றும் உரிமைகளுக்காக குரல் எழுப்புவதற்கு தொழிற்சங்கங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிகளிலும் உருவாக்கப்பட்டன. இவ்வாறு உருவான தொழிற்சங்கங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலம்பொருந்திய ஓர் தொழிற்சங்கமாகவும், அரசியல் கட்சியாகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய வம்சாவளி மக்கள் அனைவரையும் ஒரு குடையின் ஒன்றிணைப்பதற்கும், அவர்களது அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்காவும் 1939 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் நேருவின் வருகையோடு இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. பின்பு இது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என பிளவுப்பட்டது (1954). அன்று முதல் இன்றுவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியலில் வியாபித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு இன்றியமையாதது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமைத்துவத்தில் மலையக மக்களுக்காக அயராது உழைத்த சௌமியமூர்த்தி தொண்டமானின் பங்களிப்பு இன்றியமையாதது. அறுபது வருடங்கள் தொழிற்சங்கவாதிகவும் நாற்பது வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார். மலையக மக்களுக்காக தனது காலத்தில் மலையக மக்களின் உரிமைக்கான குரல் கொடுத்து பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அடித்தளமான சௌமியமூர்த்தி தொண்டமானை தொடர்ந்து ஆறுமுகன் தொண்டமான், ஜீவன் தொண்டமானின் பங்களிப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆறுமுகன் தொண்டமானின் இறப்பை தொடர்ந்து ஜீவன் தொண்டமானின் பங்களிப்பு கட்சியை வளர்ப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பையும் அதனுடாக மக்களுக்கு ஆற்றப்பட்ட பணிகளையும் வெளிப்படுத்துவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வின் நோக்கங்களாக தொழிலாளர் காங்கிரஸின் வளர்ச்சிக்கு அக்கட்சித் தலைவர்களினால் ஏற்படுத்தப்பட்ட தலைமைத்துவ சிறப்புக்களை வெளிப்படுத்தல், தொழிலாளர் காங்கிரஸின் ஊடாக மலையக மக்கள் பெற்றுக் கொண்ட சேவைகளை அடையாளப்படுத்தல், தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பு இன்றுவரை நிலைத்து நிற்பதற்கான வரலாற்று பின்புலத்தை அடையாளம் காணுதல், இலங்கை அரசியல் வரலாற்றில் அமுக்கக் குழுக்களாக தொழிற்படும் விதத்தை கண்டறிதல் போன்றவைகளை குறிப்பிடலாம்.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வளர்ச்சியில் தலைமைத்துவத்தின் பங்களிப்பு பற்றிய தகவல்கள் நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள், பிரசுரங்கள், இணையத்தளம் என பல ஆவணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

கிருஷ்ணமோகன்.த, என்பவரால் எழுதப்பட்ட (2008) "இலங்கை பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கங்கள்" என்ற நூலில் தொழிற்சங்க தோற்றம் வளர்ச்சி, வேதன முறைகள், பொருளாதார மந்தநிலைகள், தொழிற்சங்க செயற்பாடுகள், தொழிற்சங்கள் முன்னோடிகள், இலங்கையின் தொழிற்சங்க சிதைவுகள், தொழிற்சங்கத் தலைமைத்துவ பண்புகள், தொடர்பான தகவல்கள் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

இராதாகிருஷ்ணர் என்பவரால் எழுதப்பட்ட (1990) "தொண்டமான் கண்ட வெற்றியின் இரகசியம்" என்ற நூலில் சௌயமியமூர்த்தி தொண்டமான் பெற்ற வெற்றிகள் வாழ்க்கையின் இலட்சியம், அறநிதியம் தொடர்பாக கூறப்படுகின்றது. இவரின் ஆரம்பகால வாழ்க்கை முறைகள், தொழிற்சங்க, அரசியல் நுழைவுகள் விரிவாக குறிப்பிடப்படவில்லை.

அந்தனி ஜீவா என்வரால் எழுதப்பட்ட (2005) "மலையகத் தொழிற்சங்க வரலாறு" என்ற நூலில் மலையகத் தொழிற்சங்க வரலாறு, நடேச ஐயர் வருகை, முல்லோயா போராட்டம், பற்றி தகவல்கள் காணப்படுகின்றது. இந்நூலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பற்றிய தகவல்கள் சுருக்கமாக காணப்படுகின்றது.

சிவநாயகம். எஸ்.டி என்பவரால் எழுதப்பட்ட (1988) "தலைவர் தொண்டமான்" என்ற நூலில் சௌமியமூர்த்தி தொண்டமான் 1988 ஆம் ஆண்டு வரை அரசியல், தொழிற்சங்க பங்களிப்பு, சௌமியமூர்த்தி தொண்டமானின் ஆரம்ப கால வாழ்க்கை, போராட்டங்கள், சமூக பணிகள் என்பன பற்றிய ுகூறப்பட்டுள்ளது. இந்நூலில் 1988 ஆம் ஆண்டு வரையான சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமைத்துவத்தின் கீழான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

Subaratnam. T, என்பவரால் இயற்றப்பட்ட (1990) "Out Of Bondage" என்ற ஆங்கில நூலில் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஆரம்பம் கால வாழ்க்கை, தொழிற்சங்க அரசியல் பங்களிப்பு,, சமூக பணிகள், ஒப்பந்தங்கள், கூறப்பட்டுள்ளது. இந்நூல் 1990 வரையாக சௌமியமூர்த்தி தொண்டமானின் வரலாற்றை பிரதிப்பலிப்பதற்காக மட்டுமே அமைகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு வரலாற்று ரீதியான அணுகுமுறையில் பகுப்பாய்வாக அமைந்துள்ளது. எந்தவொரு ஆய்வு முழுமைப்பெறுவதற்கு தரவு சேகரிப்பு என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வாய்வில் முதல் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் முக்கியம் பெறுகின்றன. முதல் நிலைத்தரவுகளாக ஹான்சாட் அறிக்கைகள், தலைமைத்துவங்களின் ஊடக நேர்காணல்கள், கள ஆய்வுகள் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள் அமைந்துள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பாக இதுவரை காலமும் வெளிவந்த நூல்கள்,

இதழ்கள், பத்திரிக்கைகள், இணையத்தளம் செய்திகள் ஊடாக பெற்ற தகவல்கள் இரண்டாம் நிலைத்தரவுகளாகும்.

**தொழிற்சங்க வரலாறு**

ஆரம்பத்தில் தென்னிந்தியாவிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைக்கு மலையகத் தமிழர் வரவழைக்கப்பட்டனர். பிரித்தானியர் ஆட்சியில் பெருந்தோட்டங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்காக கூலித் தொழிலாளிகளாக வந்த மலையக மக்கள் தனது வாழ்வில் பல இன்னல்களுக்கு, அநீதிகளுக்கும் முகங்கொடுத்து வந்தனர். மலையக மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதற்காக நடேச ஐயரால் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பல தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றன.

தொழிலாளர்களின் நலன் பேணுவதற்காக ஏ.ஈ குணசிங்கவினால் தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக இனவாத செயற்பாடுகள் தூண்டப்பட்டு மலையக மக்கள் இந்தியாவிற்கு நாடு கடத்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட செய்தி இந்தியாவிற்கு தெரிவிக்கப்பட்டு மகாத்மா காந்தி நேருவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். நேரு இலங்கையிலிருந்த சங்கங்களை எல்லாம் ஒன்றிணைத்து கூட்டமொன்றை நடாத்தி இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது (1939.07.25). இந்திய வம்சாவளி மக்கள் வாழும் எல்லா பிரதேசங்களிலும் இலங்கை இந்திய காங்கிரஸ் கிளைகள் அமைக்கப்பட்டன.

இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் சங்கம் 1940.01.10 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பின் மாநாடுகள் கம்பளை (1940.09.08), கண்டி (1942) போன்ற இடங்களில் நடைபெற்றது. இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற்சங்க பிளவு ஏற்பட்டு இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் என இரு பிரிவுகள் உருவாக்கப்பட்டன (1954). இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 84 ஆண்டு வரலாற்றை கொண்ட ஒரு பலம் பொருந்திய அரசியல் கட்சியாகவும் தொழிற்சங்கமாகும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தலைமைத்துவம் - விளக்கம்**

எந்தவொரு அமைப்பின் நிலைபேற்றிற்கும் தலைமைத்துவத்துவம் அவசியமானது. தலைமைத்துவம் என்பது பொதுவான குறிதூரநோக்கு ஒன்றை உருவாக்கி, அதை அடைவதற்கான செயல் நுணுக்கத்தை விருத்தி செய்து, பிறரின் ஒத்துழைப்பைத் திரட்டி, தூர நோக்கை அடைந்து கொள்வதற்கான செயற்பாட்டை ஊக்குவிக்கின்ற ஒரு செயல்முறை ஆகும். தலைமைத்துவம் என்ற வகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமைத்துவம் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தனகென்று குறிக்கோள், கொள்கைகளுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமைத்துவம்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமான் தனது 11 வயதில் இலங்கை வந்து கல்வியை தொடர்ந்து 1939 இல் கம்பளை கிளையின் தலைவராக செயற்பட்டார். இவரே இலங்கை இந்திய காங்கிரஸின் முதலாவது அங்குரார்ப்பண மாநாட்டை நடாத்தி வைத்தார். 1947 பாராளுமன்ற தேர்தலில் மலையக மக்கள் சார்பாக எட்டு பேர் போட்டியிட்டு, பாராளுமன்றம் சென்ற ஏழு பேரில் சௌமியமூர்த்தி தொண்டமானும் ஒருவராவார்.

1948 ஆம் ஆண்டு இலங்கை மக்கள் அனைவருக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டபோது மலையக சமுதாயத்தின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு 30 வருடகாலம் நாடற்ற சமுதாயமாக இந்நாட்டில் இருந்தனர். மலையக மக்களின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும் பல நோக்கங்களையும் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு செயற்பட்டவரே சௌமியமூர்த்தி தொண்டமான். அறுபது வருடகால தொழிற்சங்கவாதியாகவும் நாற்பது வருடகால அரசியல்வாதியாகவும் இருந்து மலையக மக்களின் முன்னேற்றத்திற்காக தனித்துவமான கொள்கைகளுடன் உழைத்த ஓர் தலைவராகக் காணப்படுகின்றார்.

மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார வளர்ச்சிக்கு பல சேவைகளையாற்றியுள்ளார். தொழிற்சங்கவாதி என்ற ரீதியில் தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் ஒருபோதும் குரல் கொடுக்க தயங்கியதில்லை. பல்வேறுப்பட்ட போராட்டங்களுக்கு தலைமை தாங்கி பல வெற்றிகளை பெற்றுள்ளார். 1977 இல் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற சென்று 1978 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முதன் முதலாக அமைச்சர் அந்தஸ்தை பெற்றார். சம்பள உயர்வில் இவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். 1984 இல் ஆண், பெண் இருபாலருக்கும் சம சம்பளத்தை பெற்றுக்கொடுத்த பெருமை சௌமியமூர்த்தி தொண்டமானைச் சாரும். பெரும் பங்காற்றி 1988 இல் இந்திய வம்சாவளி மக்களுக்கு நாட்டுரிமையை பெற்றுக்கொடுத்தார். 1948 இல் மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட 1952 இல் அதற்கு எதிராக தொண்டமான் மற்றும் பலர் இணைந்து சத்தியாகிரக போராட்டத்தை மேற்கொண்டனர். இலங்கையின் முதற் சத்தியாகிரகி என்ற பெயரையும் பெற்றார். மலையக பிள்ளைகளின் கல்விக்கு அடித்தளத்தை இட்டார். மலையக பெருந்தோட்ட பாடசாலைகள் அரசாங்கத்துடன் இணைப்பதற்கு முன்னின்று செயற்பட்டார். பாடசாலை அபிவிருத்தி, ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான நடவடிக்கைகளிலும் பங்காற்றியிருந்தார்.

கலை கலாசாரத்தை வளர்த்தல், விளையாட்டு திறனை வளர்த்தல், சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகள் தொண்டமானின் அறக்கட்டளையின் கீழ் உருவாக்கப்பட்டது. தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம், றம்பொடை கலாசார மண்டபம், நோர்வூட் விளையாட்டு அரங்கம் போன்றவை செயற்பட்டு வருகின்றன. சௌமியமூர்த்தி தொண்டமான் உரிமைகளை பெற்றுக் கொடுக்க நடாத்திய போராட்டங்கள், சத்தியாகிரகங்கள், சம்பள உயர்வுக்காக அரசாங்கத்துடன் இருந்து குரல் கொடுத்தல், பிராத்தனை இயக்கம், அறநிதியம், தொழிலாளர்களின் நலன்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள, அமைச்சராக இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பணிகள் என்பன தொண்டமானின் வாழ்வில்

குறிப்பிடத்தக்கவைகளாகும். 1999 ஆம் ஆண்டில் உயிரிழந்தார். இவர் அறுபது வருட காலமாக தொழிற்சங்கவாதியாகவும் 37 வருடங்கள் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்து அதில் 21 வருடங்கள் தொடர்ந்து அமைச்சு பதவிகளை வகித்த சௌமியமூர்த்தி தொண்டமான் மலையகத்தின் அரசியல், சமூக, பொருளாதார, கல்வி என பல துறை ஆற்றிய பங்களிப்பு இன்றியமையாதது.

**ஆறுமுகன் தொண்டமானின் தலைமைத்துவம்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமைத்துவத்தை தொடர்ந்து ஆறுமுகன் தொண்டமானின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவிலிருந்து 1993 இல் இலங்கைக்கு வந்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உத்தியோகபூர்வ நிதிச் செயலாளராக பதவி வகித்தார் (1993). அவர் 1994 இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளராக பொறுப்பேற்றார். சௌமியமூர்த்தி தொண்டமான் இறப்பை தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ஏற்றார் (1999). அன்றிலிருந்து தன் இறுதி காலம் வரை ஒரு சிறந்த தொழிற்சங்கவாதிவாக இருந்து மக்களின் முன்னேற்றத்துக்காகவும் ஈடேற்றத்துக்காகவும் பல துணிக்கரமான செயல்களை செய்துள்ளார். சௌமியமூர்த்தி தொண்டமானை போன்று ஆறுமுகன் தொண்டமானும் குதிரை சவாரி செய்வதில் ஆர்வம் கொண்டவர். முப்பது வருடகால தொழிற்சங்க பயணத்தில் தொண்டமான் தோட்ட தொழிலாளர்களின் உரிமைக்காகவும், சம்பள உயர்வுக்காகவும் போராட்டங்களையும், சத்தியாகிரகங்களையும் முன்னெடுத்துள்ளார். போராட்டங்கள், சத்தியாகிரங்களின் போது தானும் களத்தில் இறங்கி செயப்படுவார். 1994 இல் அரசியலில் கால்தடம் பதித்தார். 1994 - 2020 வரையான காலப்பபகுதியில் அவர் பாராளுமன்ற தேர்தல்களில் பெற்ற வாக்குகள் மேல்வருமாறு.

**நுவரெலியா மாவட்டம்**

| தேர்தல் ஆண்டு | பெற்ற வாக்குகள் |
|---|---|
| 1994 | 75,297 |
| 2000 | 61,779 |
| 2001 | 121,542 |
| 2004 | 99,783 |
| 2010 | 60,997 |
| 2015 | 61,897 |

2015 ஆளுங்கட்சி சிம்மாசனத்திலும் ஆனால் 2015 ஆம் பாராளுமன்ற பொது தேர்தலில் எதிர்க்கட்சி சிம்மாசனத்திலும் அமர்ந்தார். 1999 ஆம் ஆண்டு கால பகுதியில் கட்சியின் பல மூத்த அங்கத்தவர்கள் பிரிந்து சென்றாலும் கூட இலங்கை தொழிலாளர் காங்கிரஸை தன் தலைமையின் கீழ் செயற்படுத்தினார். சௌமியமூர்த்தி தொண்டமான் தொழிற்சங்க பணியே முதல், பின்பே அமைச்சு பதவி என செயற்பட்டதை போன்று ஆறுமுகன் தொண்டமானும் தொழிற்சங்க பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்தார். சௌமியமூர்த்தி தொண்டமான்

அரசாங்கத்தில் பங்குதாரராக இருந்தும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தார். ஆறுமுகன் தொண்டமானே ஆயிரம் ரூபாய் சம்பள கோரிக்கைக்கு அடிதளத்தை இட்டு கொடுத்தார். 121 ரூபாய் சம்பளத்திலிருந்து 1000 சம்பள உயர்வு வரை ஆறுமுகன் தொண்டமானின் பங்களிப்பு முக்கியமானது.

மல்லிகைப்பூ சந்தியில் போராட்டத்தில் ஆறுமுகன் தொண்டமான் முன்னின்று செயற்பட்டார். தொழிற்சங்க நடவடிக்கை, போராட்டங்களில் தானும் களத்தில் இறங்கி செயற்படும் ஆற்றல் கொண்டவர். 2003 ஆம் நாடற்றவர் என்ற வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். மலையக பிள்ளைகளின் தகவற் தொழிற்நுட்ப அறிவை வளர்ப்பதற்கு ஆறுமுகன் தொண்டமானின் எண்ணத்தில் உதித்த பிரஜா சக்தி நிறுவனங்கள் அவரின் சேவைகளில் குறிப்பிடத்தக்கதாகும். தொழிலாளர்களின் உரிமைகளை, நலன்களை பேணுவதற்கு சர்வதேச ரீதியில் தொடர்புகளை வலுப்படுத்தி நிதியுதவிகளை பெற்று பல சேவைகளை ஆற்றியுள்ளார். ஆறுமுகன் தொண்டமான் தனது அரசியல் பயணத்தில மேல்வருமாறு அமைச்சர் பதவிகளை வகித்திருந்தார். (1999 கால்நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2000 கால்நடை அவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2001 வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2006 இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், 2010 கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர).

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோதபாய ராஜபக்ஷ வெற்றிப் பெற்று அமைச்சரவை அமைத்த போது ஆறுமுகன் தொண்டமானுக்கு சமூக வலுவூட்டல் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு பதவி வழங்கப்பட்டது. இலங்கை பாராளுமன்றத்தில் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது (2020.09.21). அவருடன் சேவை செய்த சக அமைச்சர்கள் அவருடன் நினைவுகளையும் அவர் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் ஆற்றிய செயல்களை நினைவு கூறியிருந்தார்கள். அவற்றில் ஒரு சில. **ரவூப் ஹக்கிம்** "மக்களின் முன்னேற்றத்திற்காகவும் ஈடேற்றத்திற்காகவும் பல துணிக்கரமான செயல்களை செய்துள்ளார். தன்னுடைய பாட்டனாரான இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களின் தானைத் தளபதி என்று எல்லோரும் பெருமையாகச் சொல்கின்ற அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடைய வழிநின்று பல சாதனையைப் புரிந்த ஓர் இளம் தலைவரை நாங்கள் இழந்து விட்டோம்" என குறிப்பிட்டு இருந்தார் (Handset., 2020.09.11:1321).

மருதபாண்டி ராமேஸ்வரன் "பெருந்தோட்ட மக்களுக்கு மட்டுமல்ல ஏனைய இனங்களுக்கும் சமூகங்களுக்கும் பல்வேறு சேவைகளை ஆற்றியிருக்கிறார். பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரம் இல்லாமல் எல்லா சமூகங்களுக்கு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டுள்ளார்" என தனது உரையில் தெரிவித்திருந்தார் (Handset., 2020.09.11:1355).

முஸ்ஸாரப் முதுனாபீன் "வாழ்வதற்காக உழைத்தவர்கள் இருக்கின்ற இந்த சூழலில் உழைப்பவர்கள் இருக்கின்ற இந்தச் சூழலில் உழைப்பதற்காக வாழ்ந்துக் கொண்டிருக்க ஒரு சமூகமாக மலையக சமூகம் தொடர்ந்து பார்க்கப்படுகின்றது. கவ்வாத்து வெட்டப்படுவது

போல் இலங்கையினுடைய வரலாற்றில் இந்த மலையக சமூகத்தினுடைய உரிமை, இருப்பு, வாழ்தல் இவையெல்லாம் வெட்டப்படும் பறிக்கப்பட்டும் தொடர்ந்து ஏமாற்றப்படும் வரும் சூழலில் இந்த மலையக மக்களின் விடுதலை அவசியம் என்கின்ற ஒரு விடயம் பரவலாக உணரப்பட்ட போதும் கூட அதற்காகத் தனித்துவக் குரலாக ஒலித்த தலைமைகள் என்று சிலரை மாத்திரம் சொல்ல முடியும். அந்த வகையில் சௌமியமூர்த்தி தொண்டமான் அவரை தொடர்ந்து இராமநாதன் தொண்டமான் இருவருக்கும் பக்க பலமாக இருந்தவரே ஆறுமுகன் தொண்டமான்" என கூறியிருந்தார் (Handset., 2020.09.11:1388).

**ஜீவன் தொண்டமானின் தலைமைத்துவம்**

ஆறுமுகன் தொண்டமானின் இறப்பை தொடர்ந்து அவரின் மகன் ஜீவன் தொண்டமான் அவரின் இடத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு பெருபாண்மை (109,155) வாக்குகளை பெற்று பாராளுமன்றம் நுழைந்தார். தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சராக பதவி வகித்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளராகவும் இருந்து தொழிற்சங்க பணியையும் ஆற்றி வருகின்றார். தாத்தா, தந்தை போன்று மலையக சமூகத்தின் நலனுக்காக பணியாற்ற வேண்டும் என்ற குறிகோளுடன் செயற்பட்டு வருகின்றார். தனது தந்தையின் நீண்ட நாள் கனவு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை நனவாக்கினார். இலங்கை வரலாற்றில் தொழிலாளர் ஒருவருக்கு நாற்பது இலட்சம் நட்ட ஈட்டை பெற்று கொடுத்த பெருமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சாரும் ஹொரண, மஸ்கெலியா தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியில் ஜீவனின் பங்களிப்பு முக்கியமானது.

ஜீவன் தொண்டமான் எல்லா சந்தர்ப்பங்களின் மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றார். மலையக விடிவிற்கு கல்வி அவசியமானது என்பதையே அவரின் கருத்தாக அமைகின்றது. இலங்கை வரலாற்றில் இளம் வயதில் அமைச்சராக முதன் முதலில் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க பெற்றுக் கொண்ட இடத்தை ஜீவன் தொண்டமான் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக பதவியேற்றதை தொடர்ந்து மாற்றமடைந்தது.

ஆறுமுகன் தொண்டமானின் நினைவாக ஜீவன் தொண்டமானின் தலைமையின் கீழ் கொட்டக்கலை, காங்கிரஸ் தொழிநுட்ப நிறுவன (CIF) வளாகத்தில் மலையக இளைஞர்கள், யுவதிகளின் அபிலாசைளை நிறைவேற்றும் முகமாக, நவீன வசதிகளைக் கொண்ட பயிற்சி நிலையம் ஆறுமுகன் தொண்டமானின் சமூக அபிவிருத்தி நிலையம் என்ற திறந்து வைக்கப்பட்டது (2021.05.18). ஆறுமுகன் தொண்டமான் சமூகத்துக்கு ஆற்றிய சேவைகளின் நினைவு சின்னமாக இது அமைகின்றது. நுவரெலியா கந்தபளை எஸ்க்கடேல் தோட்டத்தில் ஆறுமுகன் தொண்டமான் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டடுள்ளது. மேலும் ஆறுமுக தொண்டமானின் நினைவாக விஷேட முத்திரையும் கடித உறையும் வெளிடப்பட்டுள்ளது.

**மதீப்பீடு**

இலங்கை அரசியலில் தனக்கென ஒரு இடத்தை கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இயங்கி வருகின்றது. இலங்கையின் பாராளுமன்ற தேர்தலில் இலங்கையில் ஒரு பலம் பொருந்திய கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விளங்கி வருவதோடு இக்கட்சி அரசாங்கத்தை தீர்மானிக்கும் கட்சிகளாவும் சில சந்தர்ப்பங்களில் இருந்தமையும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். சௌமியமுர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் இருவரும் தொழிற்சங்கவாதிகளாக இருந்து அரசியலில் காலடி வைத்தனர் ஆனால் ஜீவன் தொண்டமானின் முதல்படி அரசியலாக இருந்தது. தனது தாத்தா, தந்தை முப்பதுகளிலே அரசியல் நுழைய ஜீவன் இருபதுகளிலே அரசியலில் சங்கமித்தார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆளும் அரசாங்கத்தை தீரமானிக்கும் பண்பை கொண்டிருந்தது. தனது தத்தாவின் சாணக்கியத்தையும் தந்தையின் வீரத்தையும் முன்மாதிரியாக கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

தாத்தா, தந்தை கல்விக்கு முக்கியத்துவம் அளித்ததை போன்று இன்று ஜீவனும் கல்வியால் மலையகம் எழுச்சி பெற முடியும் என்பதை வலியுறுத்தி வருகின்றார். தலைமைகள் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதில் பின்வாங்கியதில்லை.. 1956 இல் தனி சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட போது பண்டாரநாயக்காவிடம் சிங்களத்திற்கு முதலிடம் கொடுப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதே இடத்தை தமிழுக்கும் தர வேண்டும் என்று கூறியிருந்தார். எப்போதும் தனித்துவமிக்க தலைவராக பாராளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருந்தார். 1965 இல் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அரசாங்கத்தில் நியமன அங்கத்தவராக சௌமியமூர்த்தி தொண்டமான் இருந்தும் கூட அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரரேரணை முன்வைக்கப்பட்ட போது தொண்டமான் வாக்களிக்காமல் நடுநிலை வகித்தார். சௌமியமூர்த்தி தொண்டமானும் ஆறுமுகன் தொண்டமானும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர்களாக இருந்தபோது பல அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில் 17 ஆவது அரசியல் திருத்த அரசியலமைப்பு சபையில் இந்திய வம்சாவளி மக்கள் சார்பாக பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொடுத்தார். அவர்களின் வழியில் வந்த ஜீவன் தொண்டமான் மக்களுக்கு ஆதரவாகவே செயற்பட கூடியவராக காணப்படுகிறார். 2020 தேர்தலில் வெற்றி பெற்று ஆளும் அரசாங்கத்தை அங்கம் வகித்தாலும் நாட்டின் பொருளாதார மந்த நிலையினால் மக்கள் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட போது ஜீவன் தொண்டமான் அரசாங்கத்திலிருந்து தமது அமைச்சு பதவியை இராஜினாமாம் செய்து பாராளுமன்ற உறுப்பினராக மட்டும் இருந்தார். இன்றை காலக் கட்டத்தில் பாராளுமன்றத்தில் மலையக மக்களின் சார்பாக ஒலிக்ககின்ற ஒரு இளம் குரலாக விளங்குகின்றார். சர்வதேச ரீதியாக தொடர்புகளை பேணி அதன் வாயிலாக மலையக மக்களின் தேவைகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று வரை வளர்ச்சியடைந்து நிலைத்திருப்பதற்கு அதன் தலைமைத்துவத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. தலைமைத்துவம் சிறப்பாக

இயங்கினால் மட்டுமே ஒரு அமைப்பு தொடர்ந்து இயங்கி வர முடியும். சில விமர்சனங்கள், பிளவுகள் காணப்பட்டாலும் அதனையும் பொருட்படுத்தாமல் தன் பாதை நோக்கி பயணித்து இன்று வரை வெற்றிநடை போட்டு வரும் கட்சியாக திகழ்கின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான் பின்பற்றிய தலைமைத்துவக் கொள்கை இன்றுவரை அழியப்படாது மரபு தொட்டு பேணப்பட்டு வருகின்றது.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

1. அந்தனி ஜீவா., (2005), மலையக தொழிற்சங்க வரலாறு, மலையக வெளியிட்டகம், வர்தா பதிப்பகம், கண்டி.
2. இராதகிருஷ்ணன்.வி., (1990), தொண்டமான் கண்ட வெற்றியின் இரகசியம், மிலக்ஸ் கிராபிக் மீடியா 06, அபாயா, கொழும்பு.
3. இளஞ்செழியன்.பெ.அ., (1992), மக்கள் தலைவர் தொண்டமான் முத்துவிழா மலர், சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
4. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்திதுறை தயாரிப்பு., (1982), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 27 ஆவது மாநாடு, 72 ஆனந்தகுமார சுவாமி மாவத்தை, கொழும்பு -07.
5. கிருஷ்ணமோகன்.த., (2008), இலங்கை பெருந்தோட்ட தொழிசங்க இயக்கங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
6. கீத பொன்கலன்.ச., (1995), மலையக தமிழரும் அரசியலும், தேவகி பிரின்டர்ஸ், 48.∴2 சௌவுத் உஸ்மன் ரோட், டி. நகர், மெட்ராஸ் - 600017
7. சரவணன்.என்., (2019), கள்ளத்தோணி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
8. சிவநாயகம். எஸ்.டி., (1988), தலைவர் தொண்டமான், தொண்டமான் பாராட்டு குழுவினர், பட்டமங்கலம், திருப்பத்தூர், தமிழ் நாடு, இந்தியா.
9. வருடாந்த முன்னேற்ற அறிக்கை., (2011), கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.
10. விஜயகுமார்.சு., (2013), மலையக அரசியல் செல்செறி, மலையக மக்களும், இர.சிவலிங்க ஞாபகார்த்த குழு, மனவளக்கலை மன்றம், இலங்கை.
11. Sabaratnam. T., (1990), Out of Bondage (The Thondaman story), Dumindha Erandha (Put) Ltd Colombo.
12. Daniel Bass., 2000, Malaiyaha (Up country) Tamil Identity and Politics in the Twenty – First Centry, International centre for Ethnic Studies 02, Kensey Terrace, Colombo - 08, Sri Lanka.
13. Lowrence.A., (2011), Malayaha Tamils Power sharing and Local Democracy in Sri Lanka, Social scientists Assocaial 12, Sulaiman Terrace, colonbo 05, Sri Lanka.

நேர்காணல்கள்

கள ஆய்வு

இணையத்தளம்

# Gender & Human Behaviour

# நவீன சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கம்

**(மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**

Mr. Vijayaretnam Vijayaruban
National College of Education,
Thalankudah,
Batticaloa.
v.v.ruban18@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு கருத்தை அல்லது தகவலை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பரிமாற்றம் செய்ய உதவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இளைஞர்கள் முன்னிலையில் உள்ளதுடன், அவற்றால் ஏற்படும் தாக்கங்கள் அவர்களில் பல பாதக விளைவுகளையும் உண்டுபண்ணுவதைக் காண முடிகின்றது. அவ்வகையில் இவ் ஆய்வானது இளைஞர்களை கல்விப்புலத்துடன் தொடர்புபடுத்தும் நோக்கில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக ஊடகங்கள் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதே இவ் ஆய்வின் பிரச்சினையாகும். அந்தவகையில் இம் மாணவர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சமூக ஊடகங்களைக் கண்டறிதல், அவர்களின் சமூக ஊடகங்கள் நோக்கியதான அணுகுமுறையை மதிப்பிடல், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் தாக்கங்களை இனங்காணல், சமூக ஊடகங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஆசிரிய பயிலுநர்களுக்கு முன்வைத்தல் என்பனவே இவ் ஆய்வின் நோக்கங்களாகும். இவ் ஆய்வானது அளவுசார், பண்புசார் முறையினூடாக விபரிப்பு ஆய்வு முறையியலைப் பயன்படுத்துகின்றது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்டன. வினாக் கொத்துக்கள் தேவையின் பொருட்டு Google Form செயலி மூலமாக தயாரிக்கப்பட்டு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் அனைத்து பாடத்தொகுதியிலும் காணப்படும் 384 ஆசிரிய பயிலுநர்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அனுப்பப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுகள், நூற்கள், இணைய சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MX EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதன்படி மாதிரித் தெரிவானது (Krejcie & Morgan Sampling size Chart) இனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரின் குடித்தொகைக்குப் பொருந்தக் கூடிய மாதிரி அளவான 380 : 191 என்ற அளவுத்தொகை எடுக்கப்பட்டது. இங்கு 2:1 என்ற அளவு பொருத்தமுடையதாக அமைந்தது. இதன்படி ஆண் ஆசிரிய பயிலுநர்களில் இருந்து 88 பேரும், பெண் ஆசிரிய பயிலுநர்களிடமிருந்து 104 பேரும் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், கல்வியியற் கல்லூரி பயிலுநர்களின் நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவினையை அதிகரித்தல், உதவிப்பரிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்களையும், உடல் உள ரீதியான பாதிப்பு, நேர வீண்விரயம், கல்வியில் பின்னடைவு, அதிக செலவு, சமூக கலாசார விழுமியங்களில் சீரழிவு போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணங்காணப்பட்டன. இதன் அடிப்படையில் கல்வியியற் கல்லூரி நிருவாக அமைப்பில் இச் சமூக ஊடகங்களின் பாதக நிலைகளை ஆசிரிய மாணவர்களுக்கு எடுத்தியம்பி அதன் மூலம் அவர்களின் நடத்தைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதும் ஆய்வின் முடிவில் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

***திறவுச்சொற்கள்:*** *ஆசிரிய பயிலுநர்கள், கல்வியியற் கல்லூரி, சமூக இடைவினை, நடத்தை, நவீன சமூக ஊடகங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

இன்றைய சமூகமானது நவீனத்துவத்தின் காரணமாக நவீன தொழிநுட்பத்தை உள்வாங்கி இயங்கிக் கொண்டு வருவதனால் 'உள்ளங்கையில் உலகம்' என்னும் நிலையினை அடைந்துள்ளது. கல்வி, கலை, சுகாதாரம், விளையாட்டு, மருத்துவம், பொழுதுபோக்கு போன்ற அனைத்து துறைகளிலும் நவீன தொழிநுட்பம் அதிக பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு அனைத்திலும் அதிக தாக்கத்தினையும் ஏற்படுத்தி வருகின்றது.

நவீன தொழிநுட்பத்தின் பாவனையானது பல்வேறு தளங்களின் வாயிலாக செயற்பட்டு வருவதைக் கண்கூடாகக் காணமுடியும். சமூக ஊடகங்கள் இன்று தொடர்பாடல் துறையில் முதன்மை வகிக்கின்றன. இது கணிணி மற்றும் ஸமார்ட் தொலைபேசிகள் மூலம் தனிநபர் கணக்குகளை ஆரம்பிக்கக் கூடியவாறு உருவாக்கப்பட்டு வலையமைப்பு மூலம் இடம்பெறும் தொடர்பாடலாகும். பேஸ்புக், வட்ஸ்அப், கூகுள் பிளஸ், லிங்ட் இன், இன்ஸ்டாகிராம், கூகுள், யூடியுப், டெலிகிராம், வைபர், டிக்டொக், ஸ்னெப்சட் ஆகியவை இவ்வாறான தளங்களாக செயற்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை 2000 ஆம் ஆண்டுக்க பிற்பட்ட காலத்தில் அறிமுகமாகியவையாகும். இருப்பினும் நவீன தொழிநுட்ப பாவனையானது சமூகத்தில் பொதுவாக சகல வயதினராலும் தற்காலத்தில் அதிகம் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக இளவயதுப்பிரிவினர் மத்தியிலும் நவீன தொழிநுட்பங்களின் பாவனையானது அதிகமான மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றமை மிக முக்கியமான விடயமாகும்.

ஆரம்பத்தில் கல்வி என்னும் நிலையில் உள்நுழைந்த கட்டிளமைப்பருவ மாணவர்கள் படிப்படியாக அதில் இருந்து விலகி நவீன தொழிநுட்ப பாவனையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தியமையால் விழிப்புணர்வுசார், நடத்தைசார், கலாசாரம்சார், கல்வியியல்சார், சமூகம்சார், உளவியல்சார் என பலவாறான அம்சங்களில் நடத்தை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் ஒழுக்கம் சார் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே அதிகளவில் இம் மாணவர்களிடையே செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன. எந்த ஒரு விடயமாயினும் அதில் சாதக மற்றும் பாதக விளைவுகள் உண்டு. அதே போன்றுதான் அறிவியல் தொழிநுட்பமாக இருந்தாலும் அதில் சாதக மற்றும் பாதகங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக சமூக ஊடகப் பாவனையால் அதிகமாக பாதகமான நடத்தை மாற்றங்களே ஏற்படுகின்றன எனக் கூறிக் கொள்ளலாம்.

இதிலும் மிகப் பிரதானமான பாதக நிலையாக 'தன்னிலையை மறத்தல்' என்பது அடையாளப்படுத்தப்படுகிறது. அதாவது சமூக ஊடகங்களின் பாவனையால் தன்னகத்தே கொண்டுள்ள விழுமியப் பண்புகளை இழந்து சமூகத்திற்குப் பொருத்தமற்ற நபராக மாறுகின்ற தன்மை இன்று மலிந்துவிட்டது எனலாம். மேலும் உளரீதியிலான பாதிப்பு, பார்வைக் குறைபாடு, தவறான முன்னுதாரணங்கள், வேலைகளில் நாட்டமின்மை,

தனிமைப்படுத்தப்படல், மறதி, எதிலும் பற்றற்ற தன்மை போன்ற பாதக நிலைகளும் உருவாகின்றன.

**ஆய்வுப் பிரச்சினை**

தற்காலக் கல்விக் கட்டமைப்பில் சமூக வலைத்தளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிச் சூழலில் காணப்படினும், ஆசிரிய பயிலுநர்கள் இவ்விடயத்தில் அலட்சியமாக இருப்பதுடன் அவற்றை தவறான வழிகளுக்கும் பயன்படுத்தும் நிலையினால் ஒழுக்கம்சார் அம்சங்களில் பாதகமான மாற்றங்களை இவர்களில் என்னால் அவதானிக்க முடிந்தது. இவ்வாறான நிலமையினை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வுக்கான ஆய்வுப் பிரச்சினை அடையாளப்படுத்தப்பட்டது

**ஆய்வின் பிரதான நோக்கம் மற்றும் குறிக்கோள்கள்**

**பிரதான நோக்கம் :**
நவீன சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் கண்டறிதல்.

**குறிக்கோள்கள் :**

- கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தும் சமூக ஊடகங்களை கண்டறிதல்
- கல்வியியற் கல்லூரி மாணவர்களின் சமூக ஊடகங்களை நோக்கியதான அணுகுமுறையினைக் அளவிடுதல்
- கல்வியியற் கல்லூரி மாணவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான காரணங்களைக் இனங்காணல்
- கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் சமூக ஊடகங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைக் மதிப்பிடுதல்

**ஆய்வு வினாக்கள்**

- கல்வியியற் கல்லூரி மாணவர்கள் எத்தகைய சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர்?
- கல்வியியற் கல்லூரி மாணவர்களின் சமூக ஊடகங்களை நோக்கியதான எவ்வாறான அணுகுமுறைகளைக் கொண்டள்ளனர்?
- கல்வியியற் கல்லூரி மாணவர்கள் சமூக ஊடகங்களை எவ்வாறான காரணங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர்?

- கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடத்தையில் சமூக ஊடகங்கள் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது?

**இலக்கிய மீளாய்வு**

டயசியா.G.(2017) என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட 'தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் சமூக ஊடகங்களின் பாவனையும், அவற்றின் விளைவுகளும்- கல்லடி பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு" இல், மாணவர்களுக்கு எவ்வாறான உடல், உள, சமூகப் பாதிப்புகள் ஏற்படுகிறது மற்றும் மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் பாவனையின் வீதத்தை அறிதல் என்பன கண்டறியப்பட்டுள்ளதோடு பெற்றோர்கள், ஆசிரியர்கள் சமூக ஊடகங்கள் மீதான பார்வையை அறிதல் எனப் பலவும் கண்டறியப்பட்டுள்ளன.

Yumna A.S.F.(2020) என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட "சமூக வளைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும்" என்ற ஆய்வில், மாணவர்கள் அதிகமாக சமூக வளைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான காரணத்தை கண்டறிதலுடன் மாணவர்களின் விழுமிய விருத்தியில் சமூக வலைத்தள பாவனை எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பனவும் கண்டறியப்பட்டன.

'பாடசாலை மாணவர்களும் அதிகரித்த கைத்தொலைபேசி பாவனையும், அதன் தாக்கங்களும்' - அல் முர்ஸிட் மகா வித்தியாலயத்தின் 8-13 ஆம் தர மாணவர்களை மையமாகக் கொண்ட ஆய்வில்" Shameera. A.S.F, Nadhira A.K.F.(2020) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பாடசாலை மணவர்களின் கைத்தொலைபேசிகள் பயன்படுத்துவதற்கான காரணத்தை கண்டறிதல் மற்றும் கைத்தொலைபேசியால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை அடையாளம் கண்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

Kanesarajah.K.(2016) என்பவரால் ஆய்வு செய்யப்பட்ட "நவீன தொழில் நுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கவியல் பாதிப்புக்கள் - ஓர் ஆய்வு" இல், நனோ தொழில் நுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கப் பாதிப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு நனோ தொழில் நுட்பத்தின் பயன்பாடுகளை அறியச் செய்தல், நனோ தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தல் இவ்வாய்வின் துணை நோக்கமாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

M. Owusu – Acheaw, Agathy Gifty Larson. (2015) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட 'Use of Social Media and its Impact on Academic Performance of Tertiary Institution Students: A Study of Students of Koforidua Polytechnic , Ghana என்ற தலைப்பிலான ஆய்வில், மாணவர்களின் கல்விச் செயற்றிறனில் சமூக ஊடகங்களின் தாக்கத்தினை ஆய்வு

செய்தல், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகளை அடையாளங் காணுதல் மற்றும் மாணவர்கள் பயன்படுத்தும் சமூக ஊடகத் தளங்களை கண்டறிதல் என்ற அடிப்படையில் பல விடயங்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் மாணவர்கள் 30 நிமிடம் முதல் 3 மணி நேரம்வரை சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகவும் அதிலும் அரட்டையடிப்பதற்காகவே அதிக நேரம் செலவிடப்படுகின்றது எனவும் குறிப்பிடப்பட்டது.

Monia oueder, Inam Abousaber. (2013)ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட 'A study on the impact of Social Media Usage on student Academic performance : Univesity of Tabuk an Example' என்ற தலைப்பிலான ஆய்வில், மாணவர்கள் கூடுதலான பாவிக்கும் சமூக ஊடகங்களை அறிதல், இச் சமூக ஊடகங்களை ஒரு நாளைக்கு பயன்படுத்தும் தடவைகளை கண்டறிதல், சமூக ஊடகப் பாவனையினால் மாணவர்களில் விரத்தியடையும் திறன்களை மதிப்பிடல் மற்றும் கல்விச் செயன்முறையில் இதன் தாக்கத்தினை கண்டறிதல் என்ற அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், Youtube மற்றும் Twitter ஆகியன சிறந்த கற்றல் ஊடகங்களாக மாணவர்களால் அதிகம் பயன்படுத்தப்படுவதுடன் விரிவுரைகளின் போது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்கவும் பரிந்துரை செய்யப்பட்டது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அளவுசார், பண்புசார் முறையினூடாக விபரிப்பு ஆய்வு முறையியலை பயன்படுத்துகிறது. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்டன. வினாக் கொத்துக்கள் தேவையின் பொருட்டு Google Form செயலி மூலமாக தயாரிக்கப்பட்டு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் அனைத்து பாடத்தொகுதியிலும் காணப்படும் 384 ஆசிரிய பயிலுநர்களில் இருந்து எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அனுப்பப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுகள், நூற்கள், இணைய சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் MX EXCEL மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

இதன்படி மாதிரித் தெரிவானது (Krejcie & Morgan Sampling size Chart) இனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளனின் குடித் தொகைக்கு பொருந்தக் கூடிய மாதிரி அளவான 380 : 191 என்ற அளவுத்தொகை எடுக்கப்பட்டது. இங்கு 2:1 என்ற அளவு பொருத்தமுடையதாக அமைந்தது.

இதன்படி ஆண் ஆசிரிய பயிலுநர்களில் இருந்து 88 பேரும், பெண் ஆசிரிய பயிலுநர்களிடமிருந்து 104 பேரும் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன.

| பாடப் பிரிவு | ஆசிரிய மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்தம் | மாதிரி |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | | |
| நாடகமும் அரங்கியலும் | 10 | 10 | 20 | 10 |
| முதலாம் மொழி – தமிழ் | 04 | 26 | 30 | 15 |
| ஆரம்பக் கல்வி | 07 | 53 | 60 | 30 |
| சமூக விஞ்ஞானம் | 18 | 29 | 47 | 24 |
| சித்திரம் | 10 | 20 | 30 | 15 |
| கணிதம் | 23 | 16 | 39 | 19 |
| விஞ்ஞானம் | 06 | 34 | 40 | 20 |
| உடற்கல்வி | 18 | 09 | 27 | 14 |
| இலத்திரனியல் தொழிநுட்பம் | 26 | 04 | 30 | 15 |
| வடிவமைப்பு தொழிநுட்பம் | 26 | 04 | 30 | 15 |
| இயந்திரவியல் தொழிநுட்பம் | 28 | 03 | 31 | 15 |
| மொத்தம் | **176** | **208** | **384** | **192** |

**தரவுப் பகுப்பாய்வு**

முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறைகளுடே பெறப்பட்ட தரவுகளுக்கமைய கல்வியியற் கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதில் உள்ள விருப்பம், அவர்களில் சமூக ஊடகங்களின் தாக்கம், சமூக ஊடகங்களை அனுகும் முறை, சமூக ஊடகங்களை அனுகுவதற்கான காரணங்கள், கல்வியில் சமுக ஊடகங்களின் பயன்பாடு என்பன பற்றிய முழுமையான தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள், நேர்காணல், அவதானம், குழுக்கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன.

384 பேரை மையமாகக் கொண்ட இவ்வாய்வுக்கு 192 பேரைக் கொண்ட ஒரு மாதிரி மூலம் அனுமானப் புள்ளிவிபரவியல் முறையில் தரவுகள் பகுப்பாயப்பட்டன. இத்தரவுகள் அவர்களின் சொந்த பயன்பாட்டு அடிப்படையில் பெறப்பட்டவையாகும். எனவே விகிதாசார முறையில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வின் இறுதியில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

**கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தும் சமூக ஊடகங்களை கண்டறிதல்**

இவ்வாய்வானது மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம் வருட மாணவர்களை மையமாக கொண்டதாகும். இவ்வாய்வில் இளைஞர், யுவதிகள் அதிகமாக விரும்பி பயன்படுத்தும் சமூக ஊடகங்களாக facebook, whatsapp, twitter, TikTok, youtube போன்றசமூக ஊடகங்கள் வினாக்கொத்தில் கையளிக்கப்பட்டன. அதன் மூலம் பெறப்பட்ட முடிவுகளை பகுப்பாய்வு செய்தமைக்கமைய வினாக்கொத்தில் வழங்கப்பட்ட facebook, whatsapp, twitter, TikTOk, youtube போன்ற அனைத்துசமூக ஊடகங்களையும் பயன்படுத்தக் கூடியவர்களும், ஓரிரண்டு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தக் கூடியவர்களும் காணப்பட்டனர்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் 72% மான மாணவர்கள் அதிகம் விரும்பி பயன்படுத்தக் கூடிய சமூக ஊடகமாக whatsapp காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் 63%மான மாணவர்கள் youtube பயன்படுத்தக் கூடியவர்களாகவும், 52% மானமாணவர்கள் facebook ஐ அதிகம் விரும்பி பயன்படுத்தக் கூடியவர்களாகவும் நான்காம் இடத்தில் 45% துடன் TikTok உம் ஐந்தாம் இடத்தில் 30% மானமாணவர்களால் பயன்படுத்தப்படும் சமூக ஊடகங்கமாக Twitter உம் அடையாளம் காணப்பட்டன.
இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகள் எண் ரீதியானதும் பண்பு ரீதியானதுமான தரவுகளை தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அமைகின்றபடியால் முதன்மைத் தரவுகளே இவ் ஆய்வினை வழிநடத்திச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.




வரைபடம் - 01 : பயன்படுத்தும் சமூக ஊடகங்கள்

**சமூக ஊடகங்களை பயன்படுத்தும் தொழிநுட்ப சாதனங்கள்**

வினாக்கொத்துக்களின் அடிப்படையில் சமூக ஊடகங்களை பயன்படுத்தும் தொழிநுட்ப சாதனங்கள் தொடர்பாக வினவப்பட்டதற்கிணங்க பல்வேறு தொழில்நுட்ப சாதனங்களும் மாணவர்களிடையே பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன்போது, கையடக்கத் தொலைபேசியினையே அதிகமாக பயன்படுத்துவதாக பதில்கள் அமைந்திருந்தன. இதன்படி

75.5% (145) ஆனவர்கள் குறிப்பிட்டிருந்ததுடன் அதற்கடுத்ததாக பெரும்பான்மையானவர்கள் மடிக்கணினியை பயன்படுத்துவதாக 45.4% (35)ஆனவர்கள் குறிப்பிட்டனர். மேலும், 5.2% (10) ஆனவர்கள் டெப் இனை பயன்படுத்துவதாகவும், 1.1%ஆனவர்கள் தொலைகாட்சியினைப் குறிப்பிட்டிருந்தனர். இதனை காட்டுவதாக கீழுள்ள வரைபு 2 உள்ளது.




வரைபடம் -2 : பயன்படுத்தும் தொழிநுட்ப சாதனங்கள்

**கல்வியியல் கல்லூரி மாணவர்களின் சமூக ஊடகங்கள் தொடர்பான அணுகுமுறை**

கல்வியியல் கல்லூரி மாணவர்களின் சமூக ஊடகங்கள் தொடர்பான அணுகுமுறையினை நோக்கின், அதில் கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தல், ஏனைய பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தல் என்ற அடிப்படையில் கல்வி நடவடிக்கைகளுக்கு 31.25% (60) ஆன பயிலுநர்கள் தமது தெரிவினை மேற் கொண்டதுடன், பொழுது போக்கிற்காக பணன்படுத்தல் என்ன தெரிவினை 68.75% (132) ஆன பயிலுநர்கள் குறிப்பிட்டடிருந்தனர். இதிலிருந்து கல்வி நடவடிக்கை தவிர்ந்த இதர தேவைகளுக்கு சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படும் அணுகுமுறை வெளிக் கொணரப்பட்டுள்ளது.




வரைபடம் – 03 : கல்வியியல் கல்லூரி மாணவர்களின் சமூக ஊடகங்கள் தொடர்பான அணுகுமுறை

**நாளொன்றுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் கால அளவு**

சமூக ஊடகங்களானவை ஒருவரது அன்றாட வாழ்க்கையில் பல செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தி வருகின்றன. அதற்காக பல மணி நேரங்களை செலவும் செய்கின்றனர். எனவே, நாளொன்றுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் கால அளவாக ஒரு மணித்தியாலம் தொடக்கம் மூன்று மணித்தியாலம் வரை பயன் படுத்துவதாக 11% ஆனவர்களும், மூன்று தொடக்கம் ஐந்து மணித்தியாலம் வரை பயன்படுத்துவதாக 26% ஆனவர்களும், ஐந்து தொடக்கம் ஏழு மணித்தியாலம் வரை பயன்படுத்துவதாக 45% ஆனவர்களும், 7 மணித்தியாலங்கள் விட அதிகமாக பயன்படுத்துவதாகவும் 18% ஆனவர்களும் குறிப்பிட்டிருந்தனர்.




வரைபடம் - 04 : நாளொன்றுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் கால அளவு

**சமூக ஊடகப் பாவனையானது கற்றலுக்கு தடையாக அமைதல்**

அதேபோல் சமூக ஊடகப் பாவனை பாவனையானது ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களது கற்றலுக்கு தடையாக உள்ளதா என வினவப்பட்ட போது 27% ஆனவர்கள் இல்லை என பதில் அளித்திருந்தாலும் 64% ஆனவர்கள் ஆம் தொழில்நுட்ப பாவனையானது கற்றலுக்கு தடையாக உள்ளது எனவும், 9% ஆனவர்கள் ஓரளவு தடையாக உள்ளது எனவும் குறிப்பிட்டிருந்தனர். எனவே இவ்வினாவினா மூலம் ஏதாவதொரு வகையில் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனையானது கல்வியில் தாக்கத்தினை செலுத்துவதாக அறியமுடிகிறது.




வரைபடம் - 05 : சமூக ஊடகப் பாவனையானது கற்றலுக்கு தடையாக அமைதல்

**நவீன தொழில்நுட்ப பாவனையின் மூலம் நல்ல விடயங்களை கற்கும் நிலை**

நவீன தொழில்நுட்ப சாதனங்கள் எனும் போது அவற்றில் நன்மையான விடயங்கள் காணப்படும் அளவிற்கு தீமையான விடயங்களும் காணப்படுகின்றன. இருப்பினும் நன்மையை மற்றும் தீமையை உள்வாங்கிக்கொள்வது என்பது அதனை பயன்படுத்துபவர்களது கையிலேயே உள்ளது. எனவே ஆய்வுக்குட்படுத்தியவர்களிடம் நவீன தொழில்நுட்ப பாவனையின் மூலம் உங்களால் நல்ல விடயங்களை மாத்திரம் கற்க முடிகிறதா என வினவப்பட்ட போது வினாவிற்கு அதிகபட்சமானோர் 61.8% ஆனோர்கள் ஓரளவு என்றும், 22.4% ஆனோர்கள் இல்லை என்றும், 15.8% ஆனோர்கள் ஆம் என்றும் குறிப்பிட்டிருந்தனர்.




வரைபடம் - 06 : நவீன தொழில்நுட்ப பாவனையின் மூலம் நல்ல விடயங்களை கற்கும் நிலை

மேற்குறிப்பிட்ட வினாவின் அடிப்படையில் அவர்களது ஒழுக்கம் சார் மாற்றங்களை கண்டறிய நவீன சமூக ஊடகப் பாவனையானது வினாக்கொத்து வழங்கப்பட்டவர்களிடம் உங்களது தீய செயலுக்கு இட்டுச் செல்கிறதா என கேட்கப்பட்ட போது பெரும்பாலானோர் அதாவது 50.3% ஆனவர்கள் ஓரளவு இட்டுச் செல்கிறது எனவும், அதற்கடுத்து ஓரளவு தொகையினர் 35.9% ஆனவர்கள் இல்லை எனவும், 13.8% ஆனவர்கள் தீய செயலுக்கு இட்டுச் செல்கின்றது எனவும் குறிப்பிட்டிருந்தனர்.




வரைபடம் - 07 : சமூக ஊடகங்கள் தீய விடயங்களுக்கு வழிகாட்டும் நிலை

**மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்கள்**

கல்வித்தேவை, பொழுதுபோக்கு, இணைய பாவணை, தொடர்பாடல், இணையத்தில் அரட்டை, இலகுவில் குறுந்தகவல் (sms), மற்றும் மின்னஞ்சல் ( e-mail) அனுப்பவும், பெறவும் முடிதல், குறைந்த செலவில் அதிக பயன் பெற முடிதல், புகைப்படங்களை அனுப்புதல், பிறரிடமிருந்து கருத்துக்களைப் (comments)பெறுதல், watsapp, facebook, skype, audio, video call வசதி ,

(watsapp, skype) , சுகாதார சேவைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற முடிகின்றமை, தனிமையில் இருக்கும் போது நேரத்தை போக்குவதற்காகவும், அவசர தேவைகளின் போது தொடர்பு கொள்வதற்காகவும், தூரத்திலுள்ள நண்பர்களுடன் உறவாடல், திரைப்படம், பாடல்கள், தொடர்கதைகள் போன்றவற்றை பார்ப்பதற்கும், பயன்படுத்துவதோடு சமூக ஊடகங்களில் வலம் வருவது சுய கௌரவமாக நினைப்பதனாலும், நாட்டின் மற்றும் உலகின் மூலை முடுக்குகளெங்கும் நடைபெறும் விடயங்களை தன் கைக்குள்ளிருந்தே உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், பிறருக்கு அறிவிக்கவும் முடியும் என்பதாலும் ஒரே நேரத்தில் ஒரே விடயத்தை பலருக்கு அனுப்பவும் பதில்களைப் பெறவும் முடியும். போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாக கண்டறியப்பட்டன.

**கல்வியியல் கல்லூரி பயிலுநர்கள் மத்தியில் சமூக ஊடகங்களின் நேர், மறைத் தாக்கங்களை கண்டறிதல்**

சமூக ஊடகங்கள் அல்லது சமூக வலைதளங்கள் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நன்மை, தீமை என இரு பக்கங்களைக் கொண்டது. சமூக ஊடகங்களின் தோற்றம் சிறந்ததாக இருப்பினும் அதனுள் பலநேர், மறைத் தாக்கங்கள் காணப்படுவதை யாராலும் மறுக்கமுடியாது.

அந்தவகையில் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதால் கல்வியியற் கல்லூரி பயிலுநர்களிடத்தே பல நேர், மறைத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதை இவ்வாய்வின் மூலம் இனங்காணப்பட்டது. சமூக ஊடகங்களின் பாவனையால் ஏற்பட்ட நேரான தாக்கங்களாக கல்வியியற் கல்லூரி பயிலுநர்களின் நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவிணை அதிகரித்தல், உதவிப்பறிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்கள் உணரப்பட்டது.

சிறந்த ஆழுமையை விருத்திசெய்யக் கூடிய பொழுதுபோக்குகள் இன்மை, உடல் உள சோர்வு மற்றும் உடல் உள ரீதியான பாதிப்பு, மன ரீதியில் பாதிக்கப்படல் , இணையப் பாவனையால் புத்தக தேடுதல் குறைவு, கைத்தொலைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையாதல், துர்நடத்தை, பண, நேர வீண்விரயம், சரியான நேரத்துக்கு தூக்கமின்மை, சரியான நேரத்துக்கு உணவினை உட்கொள்ளாததால் உடல் நலம் குன்றுதல், அதிக நேரம் தொடர்ந்து தொலைபேசி அல்லது கணனிளைப் பார்ப்பதால் தலைவலி, கண்நோவு, ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்திருப்பதால் இடுப்புவலி, முதுகு வலி என்பவற்றூடு தூக்கமின்மை போன்ற இன்னும் பல நோய்களும் ஏற்படுகின்றன.

குடும்ப உறவினர்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்தல், ஆபாச படங்களைப் பார்த்தல், அறிமுகமற்றோருடனான தொடர்பு அதிகரிப்பதோடு அறிமுகமானவர்களுக்கிடையிலான தொடர்பு அருகுதல், அன்னியக் கலாச்சாரத் தாக்கம் ஊடுறுவல், கல்வியைப் பூரணப்படுத்துவதில் சிரமம் சமூக கலாச்சார விழுமியஙகளில் சீரழிவு,

ஆண் பெண் தொடர்பு அதிகரித்தல் போன்ற எதிர்மறையான தாக்கங்களும் இணங்காணப்பட்டன.

**ஆய்வு முடிவுகள்**

கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதால் அவர்களின் நடத்தையில் ஏற்படுத்தப்படும் தாக்கம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வின் மூலம் பல முடிவுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக ஆள்வாளனுக்கு இருந்தது. அந்தவகையில், ஆசிரிய பயிலுநர்கள் பயன்படுத்தக்கூடிய சமூக ஊடகங்களில் Whatsapp, Youtube, Facebook ஆகியன முன்னிலை வகித்தமையினையை அறிய முடிந்தது.

மேலும், தாம் பயன்படுத்துகின்ற கையடக்கத் தொலைபேசி மூலமாகவே அதிகளவானோர் இச் சமூக ஊடகங்களில் தமது கவனத்தைச் செலுத்துவது தெரிய வந்ததுடன் அவர்களில் அதிகளவானோர் கல்வித் தேவைகளுக்காக அவற்றைப் பயன்டுத்தும் நிலையும் முடிவுகளாக வெளிக்கொணரப்பட்டது. இருப்பினும் கணிசமானோர் கற்றல் தவிர்ந்த தேவைகளுக்குப் பயன்படுத்துவதனையும் அறியக் கிடைத்தது.

சாதாரணமாக நாளொன்றுக்கு 5 – 7 மணித்தியாலங்கள் சமூக ஊடகங்களை பாவிக்கின்ற தன்மை காணப்படுவதுடன், இந் நிலை கற்றலுக்குத் தடையாக அமைவதனையும் ஆய்வுக் குடித்தொகையினர் ஒப்புக் கொண்ட தன்மையும் ஆய்வில் முடிவுகளாக கிடைக்கப் பெற்றன.

சமூக ஊடகங்களின் பாவனை கல்வியியற் கல்லூரி மாணவர்களில் எதிர்மாறான பல நடத்தைகளை வெளிக்காட்டியதுடன், இவை கற்றலக்கும் சுய விழுமியத்துக்கும் பொருத்தமற்றது என்ற நிலையில் அதற்கான தீர்வாலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**விதப்புரைகள்**

கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள் சமூக ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான அனுகுமுறைகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல் என்ற அடிப்படையில் இவ்வாய்வின் முடிவில் சமூக ஊடகங்களின் பயன்பாடு காலத்தின் தேவையாக இருப்பதோடு, கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்களின் எதிர்காலத்தை முன்னிறுத்தி, பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

- கல்வியியல் கல்லூரி ஆசிரிய பயிலுநர்களின் மத்தியில் சமூக ஊடகங்களின் பாதகமான தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வூட்டல்
- தாக்கத்தனை இழிவளவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் கல்வியியற் கல்லூரி மற்றும் சமூக நலன்புரி நிறுவனங்களூடாக நடத்தப்படல் வேண்டும். அவ்வாறான தாக்கங்களை அவர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக வலைத்தளங்களைப்

பயன்படுத்தியே வீடியோ காடசிகள் மூலமாக எடுத்துக்காட்டல் வேண்டும். ஏனெனில் கண்டிப்பதனாலோ, தண்டிப்பதனாலோ பிழைகளைத் திருத்த முடியாது.

- ஆசிரிய மாணவர்களின் பெற்றோர்களையும் இச்சமூக ஊடகப்பாவனையின் பாதகமான தாக்கத்தினை இல்லாதொழிப்பதற்கான பங்குதாரர்களாக உள்வாங்குதல். அவர்கள் அதிகம் பயன்படுத்தும் சமூக ஊடகங்கள், அவர்களது நடத்தை, கல்வி பின்னடைவுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை திருத்துவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும்.
- சமூக ஊடகங்களின் உடல் உள மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் பற்றி வைத்தியத்துறையின் ஆலோசனைகளை பெற்று அதை மாணர்களிடம் ஒப்புவித்தல்.
- கல்வியியற் கல்லூரி விரிவுரை ரீதியாக இது தொடர்பில் கரிசனை காட்டி விரிவுரை நேரங்களிலும் மற்றும் கணனி கூடங்களிலும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டினைத் தவிர்க்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்
- தனித்தனியான இணையம் பாவிக்கும் நிலைலவயினைத் தடை செய்து குறிப்பிட்ட நேர அவகாசத்துக்கள் பொதுவான வகையில் இணையப்பாவனையினை பயன்படுத்தவதை நடைமுறைப்படுத்தல்.
- கல்விக்கு தடையளிக்கக் கூடிய தேவையற்ற சமூக வலைத்தளங்களை தடைசெய்தல் வேண்டும் போன்றவற்றோடு இது தொடர்பில் அரசாங்கமும் கொள்கை வகுக்க வேண்டும் போன்றன பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டன.

**உசாத்துணைகள்**

1. Akram Z, MahmudM, Mahmood A. (2015). Impact ofSocial Networking Sites (SNSs) On Youth. Applied SciencReports, 11 (1), 6-10. Retrieved from www.pscipub.com, (DOI:10.15192/PSCP.ASR.2015.11.1.610)

2. Ghulam Shabir1, Yousef Mahmood Yousef Hameed2, Ghulam Safdar3, Syed Muhammad Farouq Shah Gilani4, (November 2014), The Impact of Social Media on Youth: A Case Study of Bahawalpur City, 1,3-4 Department of Media Studies, The Islamia University of Bahawalpur, PAKISTAN, & 2 Faculty of Media, Middle East University, Amman, JORDAN. Asian Journal of Social Sciences & Humanities Vol. 3(4)

3. Qingya Wang, Wei Chen, and Yu Liang,( November, 2011) The Effects of Social Media on College Students, Johnson &Wales University. Feinstein Graduate School, RSCH5500-Research & Analysis

4. கணேசராஜா, கே (2016). நனோ தொழிநுட்பத்தினால் ஏற்படுகின்ற ஒழுக்கவியல் பாதிப்புக்கள் - ஓர் ஆய்வு. Arts Research Session - South Eastern University of Sri Lanka.

5. பஸ்லான், H. M., அகிலா, M.N.F., Zunoomy, M.S., Shibly, F.H.A. (2019). சமூக வலைத்தளங்களின் பாவனை பல்கலைக்கழக மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள்: கொவிட்-19 பரவலின் பின்னரான பகுப்பாய்வு. 8th International Symposium, Faculty of Islamic studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
6. சமீறா, A.W.F., நதீரா, A.K.F. (2016). இளைஞர்கள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கம்: இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட மூன்றாம் வருட மாணவர்களை மையமாக கொண்ட ஆய்வு. 6th International Symposium, South Eastern University of Sri Lanka.
7. நிஸாந்தி,உ. (2013, ஜுன் 08). மாணவர்களின் கல்வி தடைபடுவதற்கான காரணங்கள். www.keetru.com. https://www.keetru.com/index.php/2014- 03-08-04-35-27/2014-03-08-12-18-14/24108

# க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடும் கல்வி அடைவு மட்டமும் : யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் உளவியல் ஆய்வு

Ms. Saththiyalingam Vaishnavi
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
vaishuvaishnavi344@gmail.com

Dr. Kanthasami Kajavinthan
Department of Philosophy,
University of Jaffna,
Jaffna.
kajavinthan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இவ் ஆய்வானது யாழ்ப்பாணக் கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளில் கல்வி பயிலும் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதுடன், அதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இனங்கண்டு, அவர்களுக்கு ஆதரவான தலையீடுகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இவ் ஆய்விற்காக யாழ்ப்பாண கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 1AB பாடசாலைகளில் கல்வி பயிலும் 120 க.பொ.த உயர்தர மாணவர்கள் (ஆண் 60, பெண் 60) எளிய எழுமாற்று மாதிரித்தெரிவு முறையினூடாக தெரிவு செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு வினாக்கொத்து மூலமாகவும், நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகளான மாணவர் தேர்ச்சி அறிக்கை, ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் இணையத்தளங்களில் இருந்தும் தரவுகள் பெறப்பட்டன. இவ் ஆய்வில் மாதிரிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக அளவுசார் மற்றும் பண்புசார் பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபர பகுப்பாய்வு (SPSS) மற்றும் Microsoft Excel மென்பொருளின் ஊடாக புள்ளிவிபர ரீதியான தரவுகளாக மாற்றப்பட்டு, அவை அளவுரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும் நேர்காணல், புத்தகங்கள், மற்றும் இணையத்தளங்கள் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆகவே இவ் ஆய்வில் விபரண புள்ளிவிபரவியல் ஆய்வு வடிவமைப்புடன் அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த இரு பகுப்பாய்வு முறைகளும் கலப்பு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து தொகுத்தறி முறை மூலம் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையில் நேர்கணியத் தொடர்பு ($r= 0.641, P< 0.00$) காணப்பட்டது, க.பொ.த உயர்தர மாணவர்களின் பால்நிலைரீதியான வேறுபாட்டிற்கும் அவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையில் பொருண்மிய வேறுபாடு காணப்படுகின்றது, அதாவது பெண் மாணவர்களைக் காட்டிலும் ஆண் மாணவர்களிடம் உயர் சுய மதிப்பீடு காணப்படுகின்றது எனவும், ஆண் மாணவர்களை காட்டிலும் பெண் மாணவர்களிடம் உயர் கல்வி அடைவுகள் காணப்படுகின்றது எனவும், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்குமிடையில் தொடர்பு காணப்படுகின்றது எனவும், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது, க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையில் பலவீனமான நேர்கணியத் தொடர்பு ($r= 0.309, P<0.01$) காணப்பட்டது எனவும் கண்டறியப்பட்டது. இவ் ஆய்வு முடிவானது க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவு மட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளம் கண்டுள்ளதால் அதனடிப்படையில் மாணவர்களின் சுயமதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தக்கூடிய சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன: மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்தும் வகையிலான புதிய செயற்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களுக்கு மாணவர்களின் கற்றல் அடைதலில் சுயமதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய உத்திகள் மற்றும் நுட்ப முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மாணவர்களின் ஆர்வங்களுக்கேற்ப கற்றல் சூழலை மாற்றியமைத்தல் போன்ற தலையீட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்தலாம்.

***திறவுச்சொற்கள்:*** *க.பொ.த உயர்தர மாணவர்கள், கல்வி அடைவு, கற்றல் செயல்திறன், சுயமதிப்பீடு, றொஸென்பேர்க்*

**அறிமுகம்**

இன்றைய நவீன காலத்தில் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் கல்வி முக்கியமானதாகவும் அவசியமானதாகவும் காணப்படுகின்றது. இது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டுவதோடு, அவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்கும் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளவும் உதவுகின்றது. கல்வி மாணவர்களை ஒரு சிறந்த பொறுப்புணர்வுள்ள பிரஜையாகவும், தொழில்முனைவோராகவும் மாற்றுகின்றது. இக் கற்றல் செயன்முறையில் மாணவர்களின் சுய மதிப்பீடு முக்கிய பங்கு வகிக்கின்றது. சுய மதிப்பீடு என்பது ஒருவர் தன்னை பற்றிக் கொண்டுள்ள உணர்வுகள், எண்ணங்கள், நம்பிக்கைகளின் தொகுப்பாகும். அதாவது சுய மதிப்பீடானது ஒருவர் தனது திறமைகள், விருப்பங்கள் மற்றும் குறைகளை இனங்கண்டு ஏற்றுக்கொள்ளலுடன் தொடர்புடையதாகும் (Morris Rosenberg, 1965).

ஒருவரின் சுய மதிப்பீடானது அவரின் சிறுபராயத்தில் இருந்தே விருத்தியடைய தொடங்கி வாழ்நாள் முழுவதும் தொடரும் செயல்முறையாக காணப்படுகின்றது. மேலும் சுய மதிப்பீடானது ஒருவரது சுய விழிப்புணர்வை பிரதிபலிப்பதாகவும் உள்ளது. ஒருவருடைய சுய மதிப்பீடு அதிகரிக்கின்ற போது அவரின் செயல்திறனானது அதிகரிப்பதாகவும், சுய மதிப்பீடு குறைவடைகின்ற போது அவரின் செயல்திறனானது குறைவடைவதாகவும் பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அந்தவகையில் உயர் சுய மதிப்பீடுள்ள நபர்கள் இலகுவாக தமது பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடியவர்களாகவும், தன்னம்பிக்கை உடையவராகவும், புதிய அனுபவங்களை விரும்பி ஏற்பவர்களாகவும் காணப்படுவர். அதேபோல குறைவான சுய மதிப்பீடுள்ள நபர்கள் பயந்த சுபாவமுடையவர்களாகவும், தாழ்வு மனப்பான்மையுடையவர்களாகவும், பிரச்சினைகளை தவிர்ப்பவர்களாகவும் காணப்படுவர்.

சுய மதிப்பீடானது மாணவர்களின் கற்றல் செயல்திறனிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் பல்கலைக்கழக நுழைவை இலக்காக கொண்டு கல்வி பயிலும் க.பொ.த உயர்தர மாணவர்களின் கற்றல் செயல்திறனிலும் சுய மதிப்பீடானது முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது க.பொ.த உயர்தர மாணவர்களிடமுள்ள உயர் சுயமதிப்பீடானது அவர்களின் கற்றல் அனுபவத்தை மேம்படுத்துவதோடு, அவர்களின் பலம் மற்றும் பலவீனத்தை அடையாளம் காணவும் மற்றும் தன்னம்பிக்கையை அதிகரிக்கவும் உதவுகின்றது. அதே போல க.பொ.த உயர்தர மாணவர்களிடமுள்ள குறைவான சுய மதிப்பீடானது அவர்களது கல்வி அடைவு, ஆர்வங்கள் மற்றும் மனப்பான்மையிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். இம் மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவுகளில் பால்நிலை, பொருளாதாரம், பெற்றோரியல் வளர்ப்பு முறைகள், ஆசிரியர்கள் கற்றல் சூழலில் பயன்படுத்தும் அணுகுமுறைகள் போன்ற பல சமூக குடித்தொகை சார்ந்த காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆகவே மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவு

நிலையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் தொடர்பாக ஆராய்வது அவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்துவதற்கு வலுச்சேர்ப்பதாக அமையும் எனலாம்.

**ஆய்வு பிரச்சினை**

க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்வி சார் அடைவு நிலைமைகளில் சுய மதிப்பீடு முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது இம் மாணவர்களின் சுய மதிப்பீடானது அவர்களின் கல்வி அடைவு மட்டங்களை தீர்மானிப்பதாக காணப்படுகிறது. மாணவர்களின் சுய மதிப்பீட்டில் பல்வேறான சமூக குடித்தொகைக் காரணிகளும் தனிநபர் சார்ந்த காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. இக் காரணிகளினால் இவர்களின் சுய மதிப்பீடு பாதிக்கப்பட்டு, இவர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. அதாவது இவர்களின் சுய மதிப்பீடு பாதிக்கப்படுவதால் கல்வி அடைவுகளில் வீழ்ச்சி ஏற்படல், தாழ்வு மனப்பான்மை உருவாதல், மன அழுத்தம், மனச்சோர்வு போன்ற உளநோய்களுக்கு ஆளாதல், தம்மை தாமே தனிமைப்படுத்துதல், குடும்ப மற்றும் சமூக உறவு நிலைகள் பாதிக்கப்படல், புதிய வாய்ப்புகளை தவறவிடல், தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாதல் மற்றும் வாழ்க்கை தரம் பாதிக்கப்படல் போன்ற பல சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

**ஆய்வு நோக்கம்**

க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவு மட்டத்திற்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதுடன் அதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை இனங்கண்டு, அவர்களுக்கு ஆதரவான தலையீடுகளை வழங்குவதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக அமைவதுடன், சிறப்பு நோக்கங்களாக: க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவில் பால்நிலை ரீதியான வேறுபாட்டை கண்டறிதல், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டில் பாடத்துறை ரீதியான வேறுபாட்டை கண்டறிதல், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையிலான வேறுபாட்டை கண்டறிதல், க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வித் தகைமைக்கும் இடையிலான தொடர்பை கண்டறிதல் என்பன காணப்படுகின்றன.

**ஆய்வு கருதுகோள்**

**H1** க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.

**H2** க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும், கல்வி அடைவிற்கும் இடையில் பால்நிலை ரீதியான வேறுபாடு காணப்படுகின்றது.

**H3** க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

**H4** க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.

**H5** க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வித் தகைமைக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

அர்ஷாத், எம்., முஹம்மது இம்ரான் ஹைதர் ஜைதி, & மஹ்மூத், கே (2015) என்பவர்களினால் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் சுயமதிப்பும் கல்விசாதனையும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது உயர்நிலை மாணவர்களிடையே காணப்படும் சுயமதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவுகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை ஆராய்வதை நோக்கமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது 2000 – 2015 வரை சுயமதிப்பீட்டிற்கும் கல்விசாதனைகளுக்கும் இடையிலான தொடர்பை விபரிக்கும் வகையிலாக வெளியிடப்பட்ட இலக்கிய மீளாய்வுகளை ஆராய்வதாக உள்ளது. இவ் இலக்கிய மீளாய்வுகளை பகுப்பாய்வு செய்ததிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. உயர் சுயமதிப்பீட்டிற்கும் கல்விசாதனைக்கும் இடையில் நேர்மறையாகத் தொடர்பு காணப்பட்டது, பெண்களை விட ஆண்களிடம் உயர் சுய மதிப்பீடு காணப்பட்டது, ஆண்களை விட பெண்கள் உயர் கல்வி சாதனையை அடைகிறார்கள்.

வெங்கட கிருஷ்ண தீராஜ் & சஜாத் அகமது பட் (2009) என்பவர்களினால் கட்டிளமைப்பருவத்தினர்களுக்கு இடையிலான சுயமதிப்பும் சமூக பொருளாதார நிலையும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது கட்டிளமைப்பருவத்தினரின் சமூக பொருளாதார நிலை அவர்களின் சுயமதிப்பீட்டை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆராயும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது 1990 முதல் 2008 வரை கட்டிளமைப்பருவத்தினரின் சுயமதிப்பீடு மற்றும் சமூக பொருளாதார நிலையை மதிப்பிட்ட 28 ஆய்வுகளை மீளாய்வு செய்த ஆய்வாக உள்ளது. இவ் ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு உள்ளது. உயர்ந்த சமூக பொருளாதார பின்னணியிலிருந்து வரும் மாணவர்களிடம் சுயமதிப்பீடு உயர்வாக இருந்தது, குடும்ப எதிர்பார்ப்புகள், பள்ளி சூழல் மற்றும் பால்நிலை போன்றன சுய மதிப்பீட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மினெவ் .எம், பிலியானா பெட்ரோவா, கிரெமெனா மினேவா, மிரோஸ்லாவா பெட்கோவா (2018) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது கட்டிளமைப்பருவத்தினரின் சுயமதிப்பீட்டிற்கும் கல்விசாதனைக்குமிடையிலான தொடர்பை ஆராய்வதை நோக்கமாக கொண்டது. இவ் ஆய்விற்காக கல்வியில் அதி திறமை சித்தி, திறமை சித்தி, சாதாரண சித்தி பெற்ற 40 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு

அளவுகோல் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு மாணவர்களின் கல்விசாதனைக்கும் அவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் இடையில் நேர்மறையான தொடர்பு காணப்பட்டது எனவும், பெண் மாணவர்களிடம் ஆண் மாணவர்களை விட குறைந்த சுய மதிப்பீடு காணப்பட்டது என்ற முடிவுகள் பெறப்பட்டது.

வென்ஜங் யூ & ஹீவான் வாங் (2022) என்பவர்களினால் கிராமப்புற மாணவர்களின் கல்வி அடைதலில் சுயமதிப்பீட்டின் பங்கு எனும் தலைப்பில் சீனாவை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது மாணவர்களிடையே காணப்படும் சுய மதிப்பீட்டிற்கும் கல்வி அடைதலுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்கிறது. இவ் ஆய்விற்காக சீனாவிலுள்ள முதல்நிலை மற்றும் இடைநிலை பள்ளிகளிலுள்ள 3101 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு அளவுகோல் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகளை பகுப்பாய்வு செய்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. கிராமப்புற மாணவர்களிடம் குறைவான சுயமதிப்பீடு காணப்பட்டது, சுயமதிப்பீட்டிற்கும் கல்வி சாதனைக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது, குறைவான சுயமதிப்பை உடைய மாணவர்கள் பரீட்சையில் குறைவான புள்ளிகளை பெற்றனர் எனவும் கண்டறியப்பட்டது.

**ஆய்வு முறையியல்**

**ஆய்வுப்பிரதேசம்**

இவ் ஆய்விற்காக இலங்கையின் யாழ்ப்பாண வலயத்திலுள்ள யாழ்ப்பாண கல்விக் கோட்டம் ஆய்வு பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டது. இப் பிரதேசத்தில் மொத்தமாக 32 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதிலிருந்து குறித்த ஆய்விற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் வைத்திஸ்வரா வித்தியாலயம், சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகள் நோக்கத்தின் அடிப்படையில் ஆய்வு பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டன.

**மாதிரித்தெரிவு**

இவ் ஆய்விற்கான மாதிரிகளாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் வைத்திஸ்வரா வித்தியாலயம், சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலிருந்து 120 க.பொ.த உயர்தர மாணவர்கள் ஆண், பெண் என்ற அடிப்படையில் சம விகிதாசாரத்தில் எளிய எழுமாற்று மாதிரிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

**தரவுசேகரிப்புமுறை**

ஓர் ஆய்வானது சிறப்பாக மேற்கொள்ளப்படுவதற்கு சேகரிக்கப்படும் தரவுகள் இன்றியமையாதவையாகும். இத்தரவுகளே ஆய்வின் நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்பாடு

என்பவற்றிற்கு அடிப்படையாக அமைகின்றன. இதன்படி ஆய்வு நோக்கத்தை சரியான வகையில் அடையும் பொருட்டு க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டை அளவிடுவதற்காக றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு அளவுகோல் (Rosenberg's Self-Esteem Scale) என்ற வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. அதே போல மாணவர்களின் கல்வி அடைவை அளவிடுவதற்காக மாணவர் தேர்ச்சி அறிக்கை பயன்படுத்தப்பட்டது. அந்தவகையில் இவ் ஆய்வில் முதலாம்நிலை தரவுகளான வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகியனவும் இரண்டாம் நிலைத் தரவுகளான மாணவர் தேர்ச்சி அறிக்கை, ஆய்வு கட்டுரைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தள தரவுகள் ஆகியனவும் தரவுகளை சேகரிப்பதற்கான தரவு சேகரிப்பு முறைகளாக பயன்படுத்தப்பட்டன.

**வினாக்கொத்து விபரணம்**

இவ் ஆய்விற்கென றொஸென்பேர்க்கின் சுய மதிப்பீடு அளவுகோல் (Rosenberg's Self-Esteem Scale) என்ற வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. இவ்வினாக்கொத்தானது 1965 ஆம் ஆண்டு றொஸென்பேர்க் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது மொத்தமாக பத்து வினாக்களை உள்ளடக்கியுள்ளது. விடைத்தெரிவுகள் நான்கு வகையானதாக அமைந்துள்ளன. அவை பின்வருமாறு: உறுதியாக ஏற்றுக்கொள்ளல், ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல், உறுதியாக நிராகரித்தல் ஆக காணப்படுகின்றது.

இவ் விடைகளிற்கான புள்ளிகள் 3, 2, 1, 0 எனும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 2, 5, 6, 8, 9 ஆகிய வினாக்கள் தலைகீழான புள்ளியிடலைக் கொண்டுள்ளது. இவ்வாறு பத்து வினாக்களுக்குமாக க.பொ.த உயர்தர மாணவர்கள் பெறும் புள்ளிகளுக்கமைய அவர்களின் சுய மதிப்பீடு பின்வரும் அளவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

- 0 - 15 = குறைவான சுய மதிப்பீடு
- 15 - 25 = மிதமான சுய மதிப்பீடு
- 25 - 30 = அதிகமான சுய மதிப்பீடு

**தரவு பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

ஆய்வொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வது என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். தரவுப்பகுப்பாய்வானது மாதிரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடாகும். இது குறிப்பிட்ட ஒரு ஆய்வில் இருந்து தீர்க்கமான முடிவுகளைப் பெறவும், கருதுகோள்களை நிரூபிக்க அல்லது நிராகரிக்கவும் ஆய்வு சார்ந்த உண்மைகளை கண்டு பிடிக்கவும் உதவுகின்றது. க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீடும் கல்வி அடைவு மட்டமும்: யாழ்ப்பாண கல்விக் கோட்ட 1AB பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் உளவியல் ஆய்வு என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வில் வினாக்கொத்து கணக்கெடுப்பினூடாக பெறப்பட்ட தரவுகள்

அனைத்தும் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளி விபர பகுப்பாய்வு (SPSS) மற்றும் Microsoft Excel மென்பொருளின் ஊடாக புள்ளிவிபர ரீதியான தரவுகளாக மாற்றப்பட்டு, அவை அளவு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. மேலும் நேர்காணல், புத்தகங்கள், மற்றும் இணையத்தளங்கள் மூலமாக பெறப்பட்ட தரவுகள் பண்பு ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆகவே இவ் ஆய்வில் விபரண புள்ளிவிபரவியல் ஆய்வு வடிவமைப்புடன் அளவு சார் மற்றும் பண்பு சார் இரு பகுப்பாய்வு முறைகளும் கலப்பு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொகுத்தறி முறை மூலம் முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆய்விற்குட்படுத்தப்பட்ட க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவு நிலை பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு அதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இவ் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டன.

- **மாதிரிகளின் பாடசாலை தொடர்பான பகுப்பாய்வு**

**School**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | ChundikulivGirl's College | 25 | 20.8 | 20.8 | 20.8 |
| | J/ Vaitheeswara College | 20 | 16.7 | 16.7 | 37.5 |
| | Jaffna Central College | 30 | 25.0 | 25.0 | 62.5 |
| | St. John's College | 10 | 8.3 | 8.3 | 70.8 |
| | St. Patrick's College | 20 | 16.7 | 16.7 | 87.5 |
| | Vembadi girl's high school | 15 | 12.5 | 12.5 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை - 01




**(மூலம் : வினாக்கொத்து 2024)**

மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது மாதிரிகள் கல்வி பயிலும் பாடசாலைகளை சுட்டிக்காட்டுகின்றது. இதனடிப்படையில் இவ் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை சேர்ந்த 25% ஆனோரும், வேம்படி மகளிர் கல்லூரியை

சேர்ந்த 13% ஆனோரும், யாழ் வைத்திஸ்வரா வித்தியாலயத்தை சேர்ந்த 17% ஆனோரும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 8% ஆனோரும், சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 17% ஆனோரும் மற்றும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 20% ஆனோரும் காணப்படுகின்றனர்.

- **மாதிரிகளின் பால்நிலை அடிப்படையிலான பகுப்பாய்வு**

**Gender**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | Female | 60 | 50.0 | 50.0 | 50.0 |
| | Male | 60 | 50.0 | 50.0 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை - 02




**(மூலம் : வினாக்கொத்து 2024)**

மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 120 மாதிரிகளின் பால்நிலை தொடர்பான விபரத்தை சுட்டிக்காட்டுகின்றது. இம் மாதிரிகளில் ஆண் மாணவர்கள் 50% ஆனோரும், பெண் மாணவர்கள் 50% ஆனோரும் காணப்படுகின்றனர்.

- **மாதிரிகளின் தேர்ச்சிநிலை அடிப்படையிலான பகுப்பாய்வு**

**Academic_Achievement**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | "Low" | 30 | 25.0 | 25.0 | 25.0 |
| | "Average" | 41 | 34.2 | 34.2 | 59.2 |
| | "High" | 49 | 40.8 | 40.8 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை - 03




**(மூலம் : மாணவர் தேர்ச்சி அறிக்கை)**

மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 120 மாதிரிகளின் கல்வி அடைவ மட்டம் தொடர்பான விபரத்தை சுட்டிக்காட்டுகின்றது. இம் மாதிரிகளில் குறைவான அடைவை 25% ஆனோரும், நடுத்தர அடைவை 34% ஆனோரும், உயர் அடைவை 41% ஆனோரும் பெற்றுள்ளனர்.

- **மாதிரிகளின் பாடத்துறை அடிப்படையிலான பகுப்பாய்வு**

**Stream**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | "Arts" | 30 | 25.0 | 25.0 | 25.0 |
| | "Science" | 30 | 25.0 | 25.0 | 50.0 |
| | "Maths" | 30 | 25.0 | 25.0 | 75.0 |
| | "Commerce" | 30 | 25.0 | 25.0 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை – 04




**(மூலம் : வினாக்கொத்து 2024)**

மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 120 மாதிரிகள் கற்கும் பாடத்துறை தொடர்பான விபரத்தை சுட்டிக்காட்டுகின்றது. இம் மாதிரிகளில் கலைப்பிரிவை சேர்ந்த மாணவர்கள் 25% ஆனோரும், விஞ்ஞான பிரிவை சேர்ந்த மாணவர்கள் 25% ஆனோரும், கணித பிரிவை சேர்ந்த மாணவர்கள் 25% ஆனோரும் வணிக பிரிவை சேர்ந்த மாணவர்கள் 25% ஆனோரும் காணப்படுகின்றனர்.

- **மாதிரிகள் கற்கும் தரத்தின் அடிப்படையிலான பகுப்பாய்வு**

**Grade**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | "Grade 12" | 62 | 51.7 | 51.7 | 51.7 |
| | "Grade 13" | 58 | 48.3 | 48.3 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை - 05




மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 120 மாதிரிகள் கற்கும் தரம் தொடர்பான விபரத்தை சுட்டிக்காட்டுகின்றது. இம் மாதிரிகளில் தரம் 12 மாணவர்கள் 52% ஆனோரும், தரம் 13 மாணவர்கள் 48% ஆனோரும் காணப்படுகின்றனர்.

- **மாதிரிகளின் பெற்றோரின் கல்வி தகைமை அடிப்படையிலான பகுப்பாய்வு**

**Parents_Education**

| | | Frequency | Percent | Valid Percent | Cumulative Percent |
|---|---|---|---|---|---|
| Valid | "Never went to school" | 21 | 17.5 | 17.5 | 17.5 |
| | "Primary" | 28 | 23.3 | 23.3 | 40.8 |
| | "Secondary" | 53 | 44.2 | 44.2 | 85.0 |
| | "Graduate" | 18 | 15.0 | 15.0 | 100.0 |
| | Total | 120 | 100.0 | 100.0 | |

அட்டவணை - 05




**(மூலம் : வினாக்கொத்து 2024)**

மேலே காட்டப்பட்டுள்ள வரைபானது ஆய்விற்காக தெரிவுசெய்யப்பட்ட 120 மாதிரிகளின் பெற்றோரின் கல்வி தகைமை தொடர்பான விபரத்தை சுட்டிக்காட்டுகின்றது. இதில் பாடசாலைக்கு செல்லாதோர் 18% ஆகவும், ஆரம்ப கல்வி தகைமையுடன் 23% ஆனோரும் இடைநிலை கல்வி தகைமையுடன் 44% ஆனோரும் பட்டதாரிகள் 15% ஆனோரும் காணப்படுகின்றனர்.

- **கருதுகோள் பரிசீலனை**

**1) க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.**

**Correlations**

| | | Academic_Achievement | Self_Esteem_Catgory |
|---|---|---|---|
| Academic_Achievement | Pearson Correlation | 1 | .641** |
| | Sig. (2-tailed) | | .000 |
| | N | 120 | 120 |
| Self_Esteem_Catgory | Pearson Correlation | .641** | 1 |
| | Sig. (2-tailed) | .000 | |
| | N | 120 | 120 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

**(மூலம் : வினாக்கொத்து 2024)**

க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையிலான இணைவானது இவ் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இதன் பொருண்மை பெறுமானம் .000 ஆக காணப்படுகின்றது. இப் பெறுமானது 0.05க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது என்ற முடிவிற்கு வரமுடியும். ஆகவே இக் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆய்வு மாதிரிகளில் உயர் சுயமதிப்பீடுள்ள மாணவர்கள் பரீட்சையில் அதி திறமை சித்தியையும் உயர் சாதனைகளையும் அடைகின்றனர். அதே போல குறைவான சுய மதிப்பீடுள்ள மாணவர்கள் பரீட்சையில் சாதாரண சித்தியை பெறுவதுடன் தாழ்வு மனப்பான்மையை கொண்டிருப்பதையும் நேர்காணலினூடாக அறிய முடிந்தது.

**2) க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டில் பால்நிலை ரீதியான வேறுபாடு காணப்படுகின்றது.**

**Independent Samples Test**

| | Levene's Test for Equality of Variances | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | F | Sig. | t | df | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | | Lower | Upper |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Self_Esteem_ Category | Equal variances assumed | .207 | .650 | 4.220 | 118 | .000 | .617 | .146 | .327 | .906 |
| | Equal variances not assumed | | | 4.220 | 117.883 | .000 | .617 | .146 | .327 | .906 |

**(மூலம் : வினாக்கொத்து 2024)**

இவ் அட்டவணையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இதன் பொருண்மை பெறுமானம் .000 ஆக காணப்படுவதால், இரு குழுக்களின் விலகலில் வேறுபாடு உள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது. இப் பெறுமானம் 0.05 க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டில் பால்நிலை ரீதியான வேறுபாடு காணப்படுகின்றது எனும் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மாதிரிகளில் பெண் மாணவர்களை காட்டிலும் ஆண் மாணவர்களிடம் உயர் சுயமதிப்பீடு காணப்படுகிறது.

**3) க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்வி அடைவிற்கும் அவர்களின் பால்நிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.**

**Independent Samples Test**

| | | Levene's Test for Equality of Variances | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | F | Sig. | t | df | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | | | Lower | Upper |
| Academic_ Achivement | Equal variances assumed | 4.261 | .041 | -7.721 | 118 | .000 | -.922 | .119 | -1.159 | -.686 |
| | Equal variances not assumed | | | -7.747 | 114.815 | .000 | -.922 | .119 | -1.158 | -.686 |

**(மூலம் : வினாக்கொத்து 2024)**

இவ் அட்டவணையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இதன் பொருண்மை பெறுமானம் .000 ஆக காணப்படுவதால், இரு குழுக்களின் விலகலில் வேறுபாடு உள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது. இப் பெறுமானம் 0.05 க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்வி அடைவில் பால்நிலை ரீதியான வேறுபாடு காணப்படுகின்றது எனும் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மாதிரிகளில் ஆண்களை காட்டிலும் பெண்களிடம் உயர் கல்வி அடைவுகள் இருப்பதை அறிய முடிகின்றது.

**4) க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.**

**ANOVA**

Self_esteem_Category

| | Sum of Squares | Df | Mean Square | F | Sig. |
|---|---|---|---|---|---|
| Between Groups | 26.267 | 3 | 8.756 | 17.156 | .000 |
| Within Groups | 59.200 | 116 | .510 | | |
| Total | 85.467 | 119 | | | |

**(மூலம் : வினாக்கொத்து 2024)**

இவ் அட்டவணையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இதன் பொருண்மைப் பெறுமானமானது .000 ஆக காணப்படுகின்றது. இப் பெறுமானம் 0.05 க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது எனும் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆய்வு மாதிரிகளில் விஞ்ஞான, கணித, வணிக மாணவர்களை காட்டிலும் கலைப்பிரிவை சேர்ந்த மாணவர்களுக்கு குறைவான சுயமதிப்பீடு காணப்பட்டது. இதற்கு காரணம்: கலைப்பிரிவை சேர்ந்த மாணவர்களுக்கு ஏனைய பிரிவை சேர்ந்த மாணவர்களை போன்று சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்காமை, ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும் போது இவர்களுக்கு குறைவான தொழில் வாய்ப்புகள் காணப்படல், மற்றும் இவர்களுக்கு ஏனைய பிரிவு மாணவர்களை காட்டிலும் குறைந்தளவிலேயே குடும்ப ஆதரவும் கிடைக்கின்றது. இவ்வாறான காரணங்களினால் கலைப்பிரிவு மாணவர்களிடம் ஏனைய பாடப்பிரிவு மாணவர்களை விட குறைவான சுய மதிப்பீடு இருப்பதை அவர்களை நேர்காணல் செய்ததிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது.

**5) க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது.**

**Independent Samples Test**

| | | Levene's Test for Equality of Variances | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | F | Sig. | t | df | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | | | Lower | Upper |
| Self_Esteem_Category | Equal variances assumed | 4.331 | .040 | -2.510 | 118 | .013 | -.358 | .142 | -.640 | -.076 |
| | Equal variances not assumed | | | -2.503 | 115.047 | .014 | -.358 | .143 | -.641 | -.075 |

(மூலம் : வினாக்கொத்து 2024)

இவ் அட்டவணையின் அடிப்படையில் நோக்குகின்ற போது இதன் பொருண்மை பெறுமானம் .013 ஆக காணப்படுவதால், இரு குழுக்களின் விலகலில் வேறுபாடு உள்ளது என்பதை அவதானிக்க முடிகின்றது. இப் பெறுமானம் 0.05 க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டில் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது எனும் கருதுகோளானது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தரம் 12 மாணவர்களை காட்டிலும் தரம் 13 மாணவர்களுக்கு உயர் சுயமதிப்பீடு காணப்படுகின்றது.

**6) க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது.**

**Correlations**

| | | Parents_Education | Self_Esteem_Category |
|---|---|---|---|
| Parents_Education | Pearson Correlation | 1 | .309** |
| | Sig. (2-tailed) | | .001 |
| | N | 120 | 120 |
| Self_Esteem_Category | Pearson Correlation | .309** | 1 |
| | Sig. (2-tailed) | .001 | |

| | | |
|---|---|---|
| N | 120 | 120 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

**(மூலம் : வினாக்கொத்து 2024)**

க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையிலான இணைவானது இவ் அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இதன் பொருண்மை பெறுமானம் 0.001 ஆக காணப்படுகின்றது. இப் பெறுமானம் 0.05க்கு குறைவாக காணப்படுவதால் க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையில் பலவீனமான நேர்கணிய தொடர்பு காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வரமுடியும்.

**ஆய்வு முடிவுகள்**

ஒரு விடயமானது பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படும் போது பல உண்மைகள் நிரூபணமாகும். அதனடிப்படையில் பின்வரும் முடிவுகள் இவ் ஆய்வுப் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்டுள்ளன.

- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் கல்வி அடைவிற்கும் இடையில் வலுவான நேர்கணிய தொடர்பு காணப்பட்டது.
- க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் பெண் மாணவர்களை காட்டிலும் ஆண் மாணவர்களிடம் உயர் சுயமதிப்பீடு காணப்பட்டது.
- க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் ஆண் மாணவர்களை காட்டிலும் பெண் மாணவர்களிடம் உயர் கல்வி அடைவுகள் காணப்பட்டது.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் பாடத்துறைக்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்கள் கற்கும் தரத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுய மதிப்பீட்டிற்கும் அவர்களின் பெற்றோர்களின் கல்வி தகைமைக்கும் இடையில் பலவீனமான நேர்கணியத் தொடர்பு காணப்பட்டது என்பதையும் ஆய்வினூடாக இனங்காண முடிந்தது.

**பரிந்துரைகள்**

- மாணவர்களின் சுய மதிப்பீடு மற்றும் கல்வி அடைவை மேம்படுத்தும் வகையிலான புதிய பாடத்திட்டங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களின் திறமைகள் மற்றும் ஆர்வங்களை கருத்தில் கொண்டு பாடத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். மதிப்பீட்டு முறை மாணவர்களின் படைப்பாற்றல் திறன்கள் மற்றும் விமர்சன ரீதியான சிந்தனை திறன்களை மதிப்பீடு செய்யும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

- ஆசிரியர்களுக்கு மாணவர்களின் கற்றல் அடைதலில் சுயமதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தி மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்துவதற்காக கையாளக்கூடிய உத்திகள் மற்றும் நுட்ப முறைகள் பற்றி பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நேர்மறையான கருத்துக்களை வழங்கவும், அவர்களின் முயற்சிகளை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமைகளில் நம்பிக்கை வைக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.
- பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளின் சுயமதிப்பீட்டை மேம்படுத்துவதில் அவர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அன்பையும் ஆதரவையும் வழங்கவும், அவர்களின் வெற்றிகளை கொண்டாடவும், அவர்களின் தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ள ஊக்குவிக்கவும் வேண்டும்.
- மாணவர்களுக்கு சமூக ஆதரவை வழங்குவதற்கு பாடசாலை மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதாவது மாணவர்களுக்கு தன்னம்பிக்கை மற்றும் சுயமதிப்பீட்டை மேம்படுத்த உதவும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் சேவைகள் வழங்கப்பட வேண்டும்.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளில் புதிய செயற்திட்டங்கள் மற்றும் தலையீடுகள் உருவாக்கப்படவும், செயல்படுத்தவும் அரசாங்கம் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.
- க.பொ.த உயர்தர மாணவர்களின் சுயமதிப்பீட்டில் செல்வாக்கு செலுத்தும் பிற காரணிகளை ஆராய்வதற்கு தொடர்ந்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- வெவ்வேறு சமூக-பொருளாதார பின்னணிகளில் இருந்து வரும் மாணவர்களிடையேயான சுயமதிப்பீட்டை ஆராய்வதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**

1. Baumeister, R. F. (Ed.). (1993). Self-esteem: The puzzle of low self-regard. Plenum Press

2. Mruk, C. J. (2006). Self-esteem research, theory, and practice: Toward a positive psychology of self-esteem (3rd ed.). Springer Publishing Company.

3. Reasoner, R. W. (2004). The true meaning of self-esteem. National Association for Self-Esteem.

4. Sharma, S., & Agarwala, S. (2015). Self-esteem and collective self-esteem among adolescents in private and government schools. International Journal of Social Science and Humanity, 5(2), 167-171.

5. Yildiz, M. A., & Anagun, S. S. (2015). Self-esteem and academic success: An investigation on their relationship. Journal of Educational Sciences Research, 5(1), 91-101.

# MOTHER TONGUE INFLUENCE ON LEARNING ENGLISH AS A SECOND LANGUAGE AMONG SRI LANKAN UNIVERSITY STUDENTS

Mr. Mohamed Musthafa Abdul Rahuman,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
South Eastern University of Sri Lanka,
*mmarahuman@seu.ac.lk*

Dr. Singanayagam Umashankar,
Department of English Language Teaching,
Faculty of Arts and Culture,
Eastern University of Sri Lanka.
*umashankars@esn.ac.lk*

**Abstract:**

The word ‘mother tongue influence’ is viewed from two different angles. One is using the mother tongue (L1) in the second language (L2) for teaching and learning, and the other is applying the concepts of L1 to learning L2. This research focuses only on the different forms of errors found in the writing of L2 owing to the influence of L1. The topic of L1 influence in learning L2 has already been discussed in different contexts, targeting different groups of learners. In addition, the researcher has already completed a small-scale study on a similar topic and found that there are eight types of errors in using English when they write in English as a second language. It is decided to validate the findings of the previous research at a national level and to compare the two national languages of Sri Lanka, focusing on Sinhala-speaking and Tamil-speaking students covering three different faculties of South Eastern University. Quantitative and qualitative methods will be employed in collecting the data for the research. The real situation of learning a second language at a tertiary level and the influence of L1 on L2 learning are considered individually in this research. The study will further investigate the types of errors and identify the most common influenced part of speech among the errors in both languages, and it will remarkably contribute to all who wish to improve the quality of teaching and learning English as a second language, especially those whose mother tongues are Tamil or Sinhala.

***Keywords:*** *Language learners, Mother tongue, Mother tongue influence, Second language, Sinhala*

## Introduction

With the development of technology and globalization, learning English has become an inevitable part of all the sectors in Sri Lanka today. It is rooted well even in the field of higher education. All the state universities have introduced English as a medium of instruction. This trend has motivated teachers and students towards English remarkably. When the learners use a second language (L2) in their everyday communication, they try to create a structure to convey the message. Accordingly, they use some techniques with the background knowledge of their mother tongue and its impact is seen among the second language learners.

Considering the second language acquisition, L1 influence is inevitable. It is necessary to eliminate the different types of errors in writing caused by L1 and identify the incorrect elements. There are numerous studies (Kasap & Emamvirdi, 2022; Littlewood, 1984; Yadav, 2014) on the mother-tongue influence on learning a second language and confirm that learners of a second language tend to change several linguistic characters of their mother tongue to the second language when they learn it.

Error analysis is a type of linguistic analysis that focuses on the errors learners make. It focuses on the errors made in the Target Language (TL). The causes of errors related to L1 influence, and the number of errors will be decided by the learners' background, approach to learning, opportunities to use L2, and interest in using the target language.

There are students from both Sinhala and Tamil-speaking communities in the universities of Sri Lanka. Mostly, their courses are taught in English. Therefore, it is necessary to be proficient in English and to complete their studies successfully. Most of them have completed their Advanced level studies in their mother tongues and have difficulties in using English in their studies. The use of English is influenced by the mother tongue - Tamil or Sinhala – of the students. Errors in using grammar, choosing relevant words or phrases, and ordering words in constructing sentences in the English language are common among the students with both linguistic backgrounds.

## Literature Review

The term ‘mother tongue’ is defined as the language that you first learn to speak when you are a child synonym first language (Hornby, 2005, p. 995). Similarly, the phrase ‘second language’ is also defined as a language that somebody learns to speak well and use for work or at school, but that is not the language they learned first (Hornby, 2005, p. 995). In applied linguistics, to enhance language proficiency, error analysis is used to elaborate on the errors made by learners' writing in different aspects, such as mechanical, grammatical, structural, etc. (Catabay, 2023). The term Mother tongue influence (MTI) is defined as the impact of the usage of our mother tongue on the second language which affects a person's thought process in the sense that he thinks in his mother tongue and expresses in English or a second language (Kasap & Emamvirdi, 2022).

(Shi, 2022) stated that generally, mother tongue influence is common among second language learners, and they are identified easily when they create sentences. (Ellis, 2015) stated that due to the presence of L1, L2 learner makes errors. It is evidence that L1 influence is inevitable. There are problems related to the use of the first language in the second language. It is not just transferring the actual words from L1 to L2, but relationships and overtones that carry in the L1. (Cook, 2001, p. 71). Learners use different approaches in learning L1. The basic structure of a sentence in a language causes errors when the L1 has quite different forms in the order of subject, verb, and object agreement.

Most of the learners of L2 in the Sri Lankan context, are not acquiring the L2 today. But they are studying it as other theories which are a contradiction to the natural way of language learning (Fernando, 2010). The process of learning skills follows an order. The correct order is listening, speaking, reading, and writing (Wiwoho, 2022). But it is upside down. Learners choose other skills first than listening.

An important thing in English is the subject of a sentence. If it does not carry propositional content to fill the subject position, we fill it with the so-called "dummy" elements ‘it’ or ‘there.’ (Rutherford, 1999, p. 58). The introduction of "it" and "there" are not recognized by L2 learners of English whose mother tongue is Tamil or Sinhala. Even if they translate the sentence (E.g. It is raining) they give special attention to the word "it" in such a sentence. The

first language habit will now hinder the learner from learning the new one. It will predispose him to say. This is now a case of negative transfer or in the most common terminology, interference (Littlewood, 1984).

Sentences created by learners prove their influence in forming comparative forms of adjectives. For example, Jean says: The big of them contained a snake. One way of reconstructing the correct sentence is ‘The bigger of them contain a snake’ (Ellis, 1997). They form rules, and, in some cases, over-generalize these rules to contexts where they do not apply (resulting in errors such as comed, or mouses) (Littlewood, 1984, p.14).

Ridha (2012) found that most students' errors can be due to the L1 transfer. Shi (2022) stated that in second language acquisition, practitioners will inevitably mix their mother tongue knowledge with all kinds of information and abstract thinking obtained through their mother tongue, for instance. According to Singh (2023), the present discourse analysis acknowledges the influence of the mother tongue on their L2 speaking performance. Mother tongue influence (MTI) is indeed common to all languages. Yadav (2014) states that errors are caused by L1 transfer. French students, for example, say “I’m agree” instead of “I agree” which is an error due to L1 transfer (in French “Je Suisdaccord”.) A discussion in L1 of such errors will help students overcome these problems.

Rahuman (2017), stated that there are eight types of errors among Tamil-speaking students when they learn English as their second language. They are categorized as the omission of the auxiliary verbs, 'to be', 'to do', and 'subject', using irrelevant words of similar meaning, additional unnecessary words, different words from parts of speech, a disorder of words, and word-to-word translation. L1 influence of Sinhala is seen clearly in the phrase given here. Abeywickrama (2010) denoted that since ‘be’ verbs and ‘helping verbs’ are not being used in Sinhala, the English learners of Sinhala have a tendency to ignore them in their writing. ‘ohu bayeuna’ means ‘He is afraid’, but learners of English whose mother tongue is Sinhala write it as ‘He afraid’.?

There are only a few studies in Tamil but in Sinhala, there are hardly any studies. The researcher focuses on Tamil and Sinhala languages and their influence on learning English as a second language. Considering the research gap, in universities and institutions for higher studies, research on teaching English and the mother tongue influence of two different languages together is not carried out so far. In this line of argument, it is necessary to analyse

the errors together so that it will provide much evidence if the two local languages – Tamil and Sinhala have the same influence on learning English as a second language. Also, the research focuses on students from different faculties to identify if there is a relationship between the field of study and L1 influence.

**Research problem**

1. How does a mother tongue influence the communication of English as a second language?

2. What types of word classes of L1 will highly influence the communication of English as a second language?

3. What type of relationship is there between the field of study of tertiary-level students and the influence of L1 on L2?

4. What mechanisms can be used to overcome the influence of L1 on L2 learning?

**Objectives**

The objective of this study is to:

- reveal the errors due to the influence of mother tongue in learning English as a second language.
- identify the specific errors and analyse the relevant word class and the causes of the errors.
- identify if there is a relationship between the influence of L1 and the background of the field of study.
- recommend mechanism to overcome the influence of L1 on L2 learning.

**Methodology**

Initially, a questionnaire is used to gather demographic profiles as it helps researchers identify and understand the factors that may influence the study outcomes.

Then, a pre-test in writing task (first, the participants will write an essay on a particular topic in their mother tongue either in Tamil or Sinhala, and then write the same essay in English) will be conducted for all 300 selected (100 from each faculty) students and their

performances are levelled into three “A”, “B”, and “C”. These levels will be used as one of the main descriptors for comparison with the post-test.

Next, half of the students from every faculty consist of a similar number of Sinhala-speaking students, and Tamil-speaking students.

Then two separate awareness sessions on the errors caused by mother tongue influence will be conducted for them to understand the issues.

After the awareness sessions, the above students will be given a similar task as the pre-test. First, to write an essay on a particular topic in their tongue either in Tamil or Sinhala, and then to write the same essay in English.

Finally, the results from the two stages will be compared to confirm the errors related to mother tongue influence among natives of Sinhala and Tamil in Sri Lanka. Suggestions will be made to overcome the difficulties due to the L1 influence in learning L2 as an English language.

**Results and Discussion**

Data consists of two different stages. One is a pre-test and the other is a post-test. The errors identified from the pre-test will prove the influence of L1 on L2. The post-test will indicate that the errors due to L1 can be minimized when the teachers and learners of English are aware of where L1 can influence and how it influences.

At the national level, the results may further prove the existence of L1 influence among Sinhala and Tamil-speaking students when they learn English.

**Conclusion**

While similar errors in the target language are anticipated among Sinhala-speaking and Tamil-speaking students, the frequency of these errors may differ. As Sinhala and Tamil languages have similar sentence patterns there should be more similarities than differences in linguistic errors in the writing. The background of students and the field of study may influence the rate of errors. Considering the field of study, it is expected that the students from certain faculties and fields of study have less influence than the others.

The finding will reduce the errors caused by the influence of the mother tongue of the learners of English who come from Tamil-speaking backgrounds and Sinhala-speaking backgrounds.

## References

Abeywickrama, R. (2010). An Analysis of Errors in English Writing of Sinhala Speaking Undergraduates. *Sabaragamuwa University Journal*, *9*(1), 97-114. 10.4038/suslj.v9i1.3737

Catabay, M. Q. (2023). Analysis of Second Language Learners' Errors in Composition Writing: Basis for the Proposed English Remedial Program in Higher Institution. *International Journal of Professional Business Review*, *8*(7), e02716. 10.26668/businessreview/2023.v8i7.2716

Cook, V. (2001). *Second language learning and language teaching* (3rd ed.). Arnold.

Ellis, R. (1997). *Second Language Acquisition (Oxford Introduction to Language Study)* (1st ed.). OUP Oxford.

Ellis, R. (2015). *Understanding Second Language Acquisition* (2nd ed.). Oxford University Press.

Fernando, S. (2010, July 18). 'Speak English our way', its pros and cons. Spectrum | Sundayobserver.lk - Sri Lanka. https://archives.sundayobserver.lk/2010/07/18/spe05.asp

Hornby, A. S. (2005). *Oxford Advanced Learner's Dictionary of Current English* (S. Wehmeier, C. McIntosh, & J. Turnbull, Eds.; 7th ed.). Oxford University Press.

Hyltenstam, K., & Pienemann, M. (Eds.). (1985). *Modelling and Assessing Second Language Acquisition* (1st ed.). Multilingual Matters.

Kasap, S., & Emamvirdi, B. (2022). The Influence of Mother-Tongue Interference on English as A Foreign Language. *Research in Language and Education: An International Journal [RILE]*, *2*(2), 5-13.

Littlewood, W. (1984). *Foreign and Second Language Learning* (1st ed.). Cambridge University Press.

Rahuman, M. M. A. (2017). A Study of Mother Tongue Influence on Learning English as a Second Language by Tamil Speaking Students. *7th International Symposium (IntSym)*, 676 - 689.

Ridha, N. S. A. (2012). The Effect of EFL Learners' Mother Tongue on their Writings in English : An Error Analysis Study. *Journal of the College of Arts. University of Basrah*. https://www.researchgate.net/publication/311854673_The_Effect_of_EFL_Learners'_Mother_Tongue_on_their_Writings_in_English_An_Error_Analysis_Study

Rutherford, W. E. (1999). *Second Language Grammar: Learning and Teaching* (8th ed.). Longman.

Shi, P. P. (2022). On the Influence of Mother Tongue Thinking on Second Language Acquisition. *Advances in Social Science, Education and Humanities Research, 670*, 175-178. 10.2991/assehr.k.220704.033

Singh, A. K. (2023). Mother Tongue Influence and Its Impact on Spoken English of Indian Language Speakers. *International Journal of Advanced Research in Science, Communication and Technology (IJARSCT)*, *3*(2), 589 - 594. 10.48175/IJARSCT-8604

Wiwoho, G. (2022). Listening-First Approach and Listening Strategies Towards Successful EFL Listening Classroom. *Linguamedia Journal*, *2*(2). https://scholar.google.com/citations?view_op=view_citation&hl=nl&user=FL-3lpYAAAAJ&citation_for_view=FL-3lpYAAAAJ:qjMakFHDy7sC

Yadav, M. K. (2014). Role of Mother Tongue in Second Language Learning. *International Journal of Research*, *1*(11), 572-582. https://www.researchgate.net/publication/283355564_Role_of_Mother_Tongue_in_Second_Language_Learning

# GENDER TRIBULATIONS IN MAHESH DATTANI'S ON A MUGGY NIGHT IN MUMBAI

Dr. V. Francis
St Joseph's College (Autonomous),
Tiruchirappalli, Tamil Nadu,
India.
*francis_en1@mail.sjctni.edu*

**Abstract:**

Mahesh Dattani is a multifaceted contemporary Indian English playwright who stormed modern Indian theater with his explosive subjects. He brought to light the hidden and ignored realities, which were often overlooked by the main stream of Indian society. Unlike the other playwrights who always dwell upon the beaten-track man-woman relationship, he boldly ventures to speak for the gender minorities who are looked down upon by the common people. Dattani writes about tabooed themes such as homosexuality, lesbianism, and being gay or transgender. He does not merely write to shock the public but to arouse awareness of the invisible problems faced by sexual minorities—mainly their repressed desires, innermost emotions, loneliness, and harassment. The plays of Mahesh Dattani give a clarion call to the issues related to gender marginals: lesbian, gay, bisexual, transgender, queer, intersex, and asexual. *Dattani's On a Muggy Night in Mumbai* is completely focused on the lives of gays. This paper explores the emotional angst experienced by Prakash (Ed) and his gay partner, Kamlesh. The entire play is muggy in nature—the characters, the place and its surroundings, the sounds, the ambience, and the issue. The play inquires into the ecstasy and agony of the same-sex love confined to gays and lesbians. This paper also examines the typical slang used by gays in their day-to-day conversation and communication.

***Keywords:*** *Bisexual, Gay, Gender, Lesbian, Transgender*

## Introduction

Dattani is a highly acclaimed and celebrated contemporary Indian English dramatist. He dramatizes the tensions of contemporary Indian society namely gender troubles, stereotyping of gender roles, destabilization of sexual categories, communal disharmony and the predatory nature of the society. Through his plays, Dattani visits the traversed and unexplored soil of homosexual, HIV positives, gays, transgenders, physically challenged and gender endangered. Gauri Shankar Jha in her work *Current Perspectives in Indian Literature* remarks, "Mahesh Dattani is to be estimated on two counts: first his concern for the fair sex and second his visit to the virgin landscape that is homosexuals, eunuchs, etc…" (Jha, 2006). He has created images, characters and plots which reverberate with the reality of today's India. Lesbian, gay, bisexual and transgender (LGBT) are his major characters and his plays are concerned with the challenges they face in the mainstream Indian society. Dattani in his preface to his *Collected Plays* writes, "I am certain that my plays are a true reflection of my time, place and socio-economic background". Each of his plays carries a noble mission and becomes a voice for the voiceless. Amita Myles in her work *Contemporary Indian English Drama: An Overview* observes, "All the plays of Mahesh Dattani are rooted in realism focusing attention on subalterns, which are the neglected groups of society who are ostracized and suppressed." (Myles, 2010).

## Objective

Sexuality or sexual orientation refers to sexual practices, the emotional and sexual attraction of an individual towards another individual. A person's individual and social identities are dependent on these sexual orientation or attraction. Heterosexuality appreciates the attraction towards the members of the opposite sex; the attraction towards members of both the sexes is known as bisexuality and the attraction towards the members of the same sex is known as homosexuality. These are the societal norms for sexual differences. In every society there are a few individuals who do not fit into the culturally dominant classes of sex or gender. Such people are either born inter-sexed or exhibit behaviour or wishes deemed applicable for the opposite sex or gender. Most of the times such people externally conform to the normative gender role whereas for a few the conflicts are so severe that they cannot cater to social normality, and this leads to a disarray of their lives.

People with homosexual orientation will have intense, complete and committed long term relationships solely with those who share their orientation, and these relationships, like

several alternatives, embrace emotional and sexual intimacy. Homosexuals are a minority cluster in India and have to face the social consequences of their choice such as marginalization, humiliation, social pressure to go in for straight marriages, the deception related to their search for partners and the impossibility of moving in public places with their partners.

**Results and Discussion**

*On a Muggy Night in Mumbai* was first performed on 23 November 1998 in Mumbai. The play is set at the backdrop of Mumbai skyline, in a flat. It is a tragicomedy which vividly presents the emotional aspirations of homosexuals. John McRae in his 'A Note on the Play: *On a Muggy Night in Mumbai*' makes a hair rising question, "If two men want to love one another, what's the harm?" The play makes use of invisibility as a strategic tool on the part of gay characters. It portrays the turmoil encountered by a group of homosexuals. The characters include lesbian, gay, straight and heterosexual. They are; Kamlesh, a homosexual who is prepared to claim his sexual identity however is affected by his partner who is not willing to accept this openly; Prakash (also known as Ed), a closet homosexual who is not willing to come out into the open along with his identity; Sharad, an open gay; Deepali, a confident lesbian and other homosexuals. They come together to help out Kamlesh to come out of his guilt and disappointment. This play views the same-sex phenomenon from all possible angles of vision. It presents a realistic picture of society and it is not the tale of one individual homosexual but the whole community of homosexuals and their psychological traits. The play dramatizes the conflicts, anguish, insecurities and frustration that homosexuals and lesbians face in the isolated and crippled world of shame and taboos.

Kamlesh, a fashion designer is the occupant of the flat. He had left from Bangalore to Mumbai after encountering a harsh experience with his gay partner Prakash. Kamlesh says, "Three years ago, I moved to Bombay not to make it big in the fashion world – although I did, that wasn't my intention. I came here to get over a relationship." In Mumbai, he carries on his gay life with Sharad and any man who is accessible to him. Kamlesh bursts out to his friends, "I did a cruel thing by loving Sharad to forget Prakash. I have not succeeded." (68) The play has a shocking opening. Kamlesh is found having sex with a security guard. He pays the security guard for giving him sexual gratification. He is ashamed and is afraid of being a gay. He invites some of his friends in order to get out from his present turmoil and to

get some relief. The guests represent the different faces of the homosexual commune – Sharad is a gay, Deepali is a lesbian, Bunny is a gay man-married and Ranjith is a gay moved to England.

Before the guests arrive, Kamlesh broods over the life of his widowed sister Kiran. She had a harsh past with her former husband. Kiran shares her past torments in the following words: "I had to get away from him. To escape from those fights at night. … The humiliation of explaining to friends or neighbours…that black eye was from banging my head against the door. Or the broken rib was from a fall…It was the cigarette burns in my arms" (77). Kamlesh left Bangalore because his sister Kiran had fallen in love with Ed (Prakash wants Kiran to call him with this new name). In order to make his sister's life blissful, Kamlesh sacrifices his gay partner. But his separation from Prakash brings a lot of emotional tumult. Now, he has invited all his friends in order to make a ceremonial divorce from his former associate Prakash. Sharad is the first guest to arrive Kamlesh's flat. He is followed by Deepali then Bunny and Ranjit. All these people are homosexuals and they are not embarrassed of being homosexuals. Asha Kuthari Chaudhari in her work, *Mahesh Dattani An Introduction* observes, "Sharad is aware of the implications of this insinuations, and this part of the action acquires a deep resonance as the gay man speaks to the lesbian and both are intelligent, open and genuine people unashamed of their sexual choices" (Chaudhari, 2005). They come to know the problem encountered by Kamlesh and they all come forward to lend him a helping hand. The following conversation between Deepali and Kamlesh show their frankness:

> DEEPALI. If you were a woman, we would be in love.
> KAMLESH. If you were a man, we would be in love.
> DEEPALI. If we were heterosexual, we would be married. (65)

There is an unwholesome air throughout the play. Kamlesh is in a state of flux – he is not able to forget his former lover Prakash; his liaison with Sharad for the last one year; his present associations with any available persons and the impending marriage between his sister and Prakash. The traffic jam, the wedding blare and the air condition create the outer atmosphere. The unexpected visit of Kiran and her fiancé makes the circumstances still worse. The play reaches its tragic tone, when the guard hands over the naked photograph of Kamlesh and Prakash to Sharad.

The play gets into a grim twist, when Kamlesh informs them of his resolution to break away his relationship with his former sexual partner Prakash. The decision taken by Kamlesh shocks them all and none of them favours his decision. They all feel that Kamlesh should not forgo his personal life for the happiness of his sister Kiran. Kamlesh further continues to describe his wretched condition: “I would have understood it if he (Prakash) had left me for another man, but he left me because he was ashamed of our relationship. It would have worked between us, but he was ashamed. I was very angry. I left my parents and my sister to come here, all because of him” (68-69). Kamlesh did not take this decision readily and happily; rather, it was thrust upon him. As a gay, he is not permitted by the society to practice what he feels and longs.

For Indians, homosexual is something abnormal and they do not approve of it. Desperate Kamlesh began to pick up strangers for his pleasure. Whereas Ranjit who lives in England enjoys the pleasure of being a gay. He says, “Call me what you will. My English lover and I have been together for twelve years now. You lot will never be able to find a lover in this wretched country!”(71) Sharad too is anguished like Kamlesh and sings, “…so many times we have to pay for having fun and being gay” (58). Ranjit gives a sarcastic reply: “Well, this is the price one pays for living in India” (70). Many homosexuals in India are forced to marry and lead the life of a heterosexual. But they secretly keep their homosexual relationship alive.

They all urge Kamlesh not to give up his relationship with Prakash and they try to get him out of his wearied mood and frantic state. Bunny asks Kamlesh to get married to a woman like him, but the others feel that it would be a pretended life. Kamlesh too feels that he does not want to camouflage. Sharad takes out a photograph from his pocket. It is the photograph of Kamlesh and Prakash in naked cheek to cheek pose. They prepare Kamlesh to take his ceremonial oath of divorce from Prakash. Kamlesh looks at the photograph then utters the oath, but he cannot tear the photograph. Suddenly, Kamlesh’s sister Kiran enters the room and shocks all. Without finishing the ceremony, Kamlesh throws the photo out, through the window. Here, Dattani asserts the fact that a gay couple is as faithful and true as that of a heterosexual. Dattani affirms this idea through the words of Sharad; “… the whole world acknowledges two people who enter a union of pact, so they have to stick by that.” (72) Similarly, the breakup of a relationship between a gay couple is done in an official manner like the heterosexuals.

Kamlesh introduces his sister to all the four. Kiran shares her nightmarish experiences of her first marriage and how Kamlesh helped her to get the divorce from her former husband. She informs them about her next wedding with Ed and requests them to attend it. When Kiran tells the full name of her fiancé (Ed. Edwin Praksh Matthew), they comprehend that Ed is none other than Prakash himself. They try to alert Kiran about her brother's depression and who Ed is, but Kamlesh reminds them of their pledge. Kamlesh tells them; "You promised! You promised that we will never bring it up!" (78). Sharad, Deepali, Ranjit and Bunny are desperate to inform Kiran about the relationship between Ed (Prakash) and Kamlesh; and save the lives of both Kiran and Kamlesh.

> SHARAD. You are selfish. You want to rid yourself of his memories, but you are ruining her life!...
>
> KAMLESH. She loves him. She told me.
>
> SHARAD. You love him. You told us.
>
> KALESH. (weakly).You promised.
>
> RANJIT. No. It's different now.(83)

Sharad becomes annoyed and leaves the house. Kiran is able to smell some difference in the atmosphere, but she is not able to understand what it was.

Ed makes his appearance towards the end of the play. His surprise visit creates a dramatic situation. His entry creates suspicion, anger and hatred among the guests. They all in unison stand for 'a gay man is always a gayman'. He can never become a heterosexual. If at all, a gay man says that he has become a heterosexual, it will mean that he is a hypocrite and a liar. Bunny tells them that he only lives a pretended life by marrying a woman. He tells them: "I have never told anyone in so many words what I am telling you now – I am a gay man" (103).

Kamlesh goes to the bed room to find some pills for Ed's headache. Ed follows him. The concealed conversation between Ed and Kamlesh in the bed room evidently proves that Ed has agreed to marry Kiran only to maintain his gay relationship with Kamlesh.

> ED. You fool. Can't you see? My marriage with Kiran is a start?
>
> KAMLESH. What do you mean?
>
> ED. Once we are married, I could see you more often without causing any… suspicion. (104)

Sharad gives the naked photo of Kamlesh and Prakash to Kiran. Kiran becomes frozen after seeing the photograph. She cries out with dejection. Kamlesh becomes worried after knowing the intention of Ed. He grabs Ed by the throat and shouts to Kiran: "Kiran, don't marry him! I think you ought to know…" (106). Ed asks Kiran to come with him and he promises to make her life happy. He wants to get out from there with Kiran. But, Kiran sees that there is no meaning in marrying Ed. She is sure that Ed will wreck her life. She asks Ed to get out from there. Ed becomes frantic and tries to commit suicide by falling down. Kamlesh, Bunny, Ranjit and Sharad overpower him. The guard comes and takes Ed along with him. The guests of Kamlesh withdraw one by one by leaving alone the sister and brother. The play's startling end has made the audience go home with their own conclusion.

**Conclusion**

Dattani's plays are pregnant with identity crisis which results from being marginalized and oppressed. He records the struggles of characters who face constraints from outside as well as from within. He further establishes that gays and lesbians have their own concepts of sexual relationship but they cannot escape the need of sexual differences determined by nature. Traditional India is well-knit by different sub-systems such as family, caste and marriage system. In particular, family and marriage systems are affected by alternate sexualities. Through Dattani's remarkable handling of the social issues with immense human sympathy, we get the idea that all his plays are committed to the sufferings of those who are subjected to marginalization on the basis of class, caste, gender, sex and religion. Susan Lobo in her article "Will the Real Man Please Stand Up?: The Construction of Gender in Mahesh Dattani's *Dance Like a Man*" remarks, "His (Dattani's) plays offer biting critiques of issues like gender, sexuality, communalism and dysfunctional families as they exist in Indian society" (Lobo, 2012).

*On a Muggy Night in Mumbai* evaluates how human aspirations are insignificant in contrast to social faiths. History is a witness to the fact that the invisible clutches of social forces can never permit an individual to crave for his own designs beyond the patterns recommended and accepted by society. In recent years, however, attitudes towards alternate sexuality have seen a slight change. There have been more illustrations and dialogues of alternate sexuality in public spaces and in media. Though they have not attained social acceptability and equality

on par with the heterosexual community, these people are treated with more compassion and respect.

**References:**

Chaudhari, Asha Kuthari. (2005). *Mahesh Dattani: An Introduction*. Foundation Books Pvt. Ltd.

Dattani, Mahesh. (2014). *Collected Plays*. Penguin Books.

Jha, Gauri Shankar. (2006). *Current Perspectives in Indian English Literature.* Atlantic Publishers and Distributors Pvt. Ltd.

Lobo, Susan. (2012). "Will the Real Man Please Stand Up?: The Construction of Gender in Mahesh Dattani's *Dance Like a Man*". *Insights into Indian English Fiction and Drama.* Authors Press.

McRae, John. (2000). A Note on the Play: *On a Muggy Night in Mumbai*. *Collected Plays*. Penguin Books.

Myles, Anita. (2014). *Contemporary Indian English Writers*.

# யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களின் இயங்கியல்

Dr. Thiruchelvam Selvamanoharan
Department of Saiva Siddhanta,
University of Jaffna.
*tselvan@univ.jfn.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்:**

சமயம் என்பது அன்பையும் அமைதியையும் சமாதானம் நிறைந்த வாழ்வையும் நல்குவதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் இலங்கைச் சூழலில் சிறுபான்மைச் சமயத்தைப் பெரும்பான்மைச் சமயம் காலந்தோறும் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கி வருகின்றது. இலங்கையினது தேசியம் என்பது இனம், மொழி, சமயம் என்ற முக்கூட்டின் வழி உருவான 'சிங்கள பௌத்த' தேசியவாதமாகவே அரச அதிகாரத்தினாலும் பெரும்பான்மை இன மக்களாலும் கருதப்பட்டு வருகின்றது. இனமும் மொழியும் தேசிய இனமொன்றின் அடையாளமாக அமைதல் ஆச்சரியமன்று. அங்கு சமயமும் இணைந்து கொள்ளுதல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகின்றது. நவகாலனிய இலங்கையில் 1956 இல் உருவான தனிச்சிங்களச்சட்டம், இலங்கை இலங்கையரசு பௌத்தத்துக்கும், பௌத்த சாசனத்துக்கும் முதன்மையும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என யாப்புச் சீர்திருத்தம், இன விகிதாசார வாக்கெடுப்பு, உயர்தரப் பரீட்சையில் வெட்டுப்புள்ளி முறைமை போன்றன சிறுபான்மை இன மக்களை உபதேசத்தில் சுதேசத்தில் புறந்தள்ளின; ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கின. இதன்வழி இலங்கையில் மதக்கலவரங்களும், இனக்கலவரங்களும் அதிகம் இடம்பெறத் தலைப்பட்டன. எதிர்ப்பியக்கங்கள் உருவாயின. இவை நாற்பதாண்டு கால உள்நாட்டு யுத்தத்துக்கு அடிப்படையாயிற்று. யுத்த மௌனிப்புக்குப் பின்னரான இலங்கையில் சமயங்களினது 'சமய இயங்கியல்' நிலைகள் எவ்வாறு நிகழ்ந்து வருகின்றது, இலங்கையின் யதார்த்த நிலை என்பவற்றை அறிதல் இந்த ஆய்வின் நோக்கமாகும். சமயங்களுக்கு இடையிலான முறுகல்கள், அவற்றால் சமூகங்களுக்கு இடையே ஏற்படும் தாக்கங்கள், சமய சமூக நல்லிணக்கத்தினால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் என்பனவற்றை அறிதல் துணை நோக்கமாகும். யுத்தமானது மௌனிக்கச் செய்யப்பட்ட கடந்த 14 ஆண்டுகளில் இலங்கையினுடைய இன, சமூக, அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு உள்ளிட்ட தளங்களில் சமயங்களின் இயங்கியல் - அவற்றின் அரசியல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அது இலங்கையை எத்தளத்துக்கு இட்டுச் சென்றுள்ளது என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் வரலாற்று முறை, விபரண முறை என்பனவற்றோடு ஒப்பீட்டு முறை ஆய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னரான இலங்கையின் யதார்த்த நிலையையும் சமயங்களின் இயங்கியலையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** *எதிர்ப்பியக்கம், சமய இயங்கியல், தனிச்சிங்களச்சட்டம், தேசியவாதம், நவகாலனிய இலங்கை*

**அறிமுகம்**

இயற்கையுடனான மனிதனின் ஊடாட்டம் மகிழ்ச்சியையும் நிறைவையும் மாறாக அதிர்ச்சியையும் பயத்தையும் ஒருங்கே உருவாக்கியது. இயற்கை பற்றிய மனிதமன விசாரத்தின் முடிவின்மையே 'சமயம்' உருவாவதற்கும் அதன் இருத்தலுக்கும் அடிப்படையாயிற்று. சமயத்துக்கான செயல்நிலைகள் நம்பிக்கையையும் நம்பிக்கைகள் வழிபாடுகளையும் வளர்த்தெடுத்தன. இவற்றின் வழி கதைகள், உருவங்கள், இனக்குழு, இனக்குழுத் தலைமைத்துவம், நிலப்பிரபு, குறுநில அரசு, அரசு, பேரரசு எனும் மனித நிர்வாக - தேசக்கட்டுமான வளர்ச்சி சமயங்களிலும் பிரதிபலித்தன. பெருஞ்சமயங்கள் உருவாயின. அரசுகளால் சமயங்களும் சமயங்களால் அரசுகளும் வழிநடத்தப்படும் செயல்முறை உருவானது. இதனூடாக சமயம் அதிகாரத்துவ சக்தியாக மாறியது. ஆன்மிக உயர்வு, வாழ்வியல் விழுமியங்கள் என்பவற்றுக்கு அப்பால், பரம்பல், அதிகாரம், சுரண்டல் வடிவமாகவும் சமயம் இயங்கியது. சமயங்கள் 'அரசியல்' செய்யமுற்பட்டன. அது உள்ளக அரசியலாகவும், புறநிலை அரசியலாகவும் பரிணமித்தது. மனிதர்களது உள்ளார்ந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் முக்கிய வகிபாகத்தை சமயம் கொண்டுள்ளது. சமாதானத்திற்கான அர்ப்பணிப்புடன் கூடிய நாகரிகமான வாழ்க்கைக்கான சட்டங்களையும் கொள்கைகளையும் கருத்துக்களையும் சமயங்கள் உருவாக்கியுள்ளன.

இலங்கை தொன்மைக்காலத்தில் இருந்து இந்து (சைவ) சமயம், பௌத்தசமயம் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கிறது. இதில் எது தொன்மைச்சமயம் என்பதில் இருபிரிவினருக்கும் இன்றுவரை கருத்து வேறுபாடு உண்டு. வியாபார நடவடிக்கைகளின் வழி இஸ்லாமும் பின் கிறிஸ்தவமும் இலங்கையில் பரவலாக்கம் உற்றன. இந்நான்கு சமயங்களினதும் 'சமய இயங்கியல்' நிலைகள் யுத்த மௌனிப்புக்குப் பின்பான இலங்கையில் எவ்வாறு நிகழ்ந்து வருகின்றது என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கை மக்களுடைய வாழ்க்கையில் தொடர்ச்சியாக செல்வாக்குச் செலுத்தக்கூடிய வகிபாகத்தை சமயம் கொண்டிருக்கின்றது. இது ஆரோக்கியமான அதிகார மூலத்தை வழங்குவதுடன், நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறைகள் அல்லது செயன்முறைகளின் பொழுது அகத்தூண்டலாகச் செயற்படக்கூடிய வல்லமை பொருந்தியதாகவும் இருக்கின்றது. இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதிக்கு உபாயங்களை மேம்படுத்துகின்ற பொழுது சமயத்தினது வகிபாகம் அவசியமாகும்.இலங்கையின் விருத்தியை முழுமையாகப் பாதித்த யுத்தமானது மௌனிக்கச் செய்யப்பட்ட கடந்த 14 ஆண்டுகளில் இலங்கையினுடைய இன, சமூக, அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு உள்ளிட்ட தளங்களில் சமயங்களின் இயங்கியல் - அவற்றின் அரசியல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அது இலங்கையை எத்தளத்துக்கு இட்டுச் செல்கின்றது என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

மொழி, சமய தேசியவாதங்களுள் அகப்பட்டு நின்ற இலங்கை நாற்பதாண்டு கால ஆயுதப் போரைக் கண்டது. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னரான இலங்கையின் யதார்த்த நிலையையும் சமயங்களின் இயங்கியலையும் அறிதல் ஆய்வின் நோக்கமாகும். சமயங்களுக்கு இடையிலான முறுகல்கள் , அவற்றால் சமூகங்களுக்கிடையே ஏற்படும் தாக்கங்கள், சமய சமூக நல்லிணக்கத்தினால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் என்பனவற்றை அறிதல் துணை நோக்கமாகும்.

**ஆய்வு முறையில்**

இந்த ஆய்வில் வரலாற்று முறை, விவரண முறை என்பனவற்றோடு தேவையான இடங்களில் ஒப்பீட்டு முறை ஆய்வும் பயன்படுத்தப்படுகின்றது.

**காலனிய, பின்காலனிய இலங்கையினது அரசியல் நிலை**

இலங்கையினது தேசியம் என்பது இனம், மொழி, சமயம் என்ற முக்கூட்டின் வழி உருவான 'சிங்கள பௌத்த' தேசியவாதமாகவே அரச அதிகாரத்தினாலும் பெரும்பான்மை இன மக்களாலும் கருதப்பட்டு வருகின்றது. இனமும் மொழியும் தேசிய இனமொன்றின் அடையாளமாக அமைதல் ஆச்சரியமன்று. அங்கு சமயமும் இணைந்து கொள்ளுதல் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகின்றது. மகாவம்சப் புனைவும் அநகாரிக தர்மபாலாவின் அடிப்படைவாத கோஷமும் இந்தக் கருத்தியலை உருவாக்கின(சண்முகலிங்கம்,க., 2017). அநகாரிக தர்மபாலாவே சிங்கள பௌத்த கோஷத்தை மக்களிடம் அதிதீவிரமாக பிரசாரம் செய்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார். இலங்கையின் சமய அரசியலின் தந்தை அவரே. காலனியவாதிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட இலங்கையில் மக்களைப் பாதித்தது அரசல்ல; கிறிஸ்தவக் காலனியமே (ஹரிஸ் எலிசபெத், 2005). 1833இன் பின் ஆட்சியாளர்கள் காட்டிய நெகிழ்ச்சி, சுயபாஷாவிலான நவீனகல்வி, ஆங்கிலக்கல்வி, பாடநூலாக்கம் போன்ற மிஷனரி களின் சமயப்பிரசாரத்துக்கான நடவடிக்கைகள் 'படித்த மத்தியதர வர்க்கத்தையும் மேட்டுக்குடி களையும்' உருவாக்கியது. இக்கல்வி மரபின் வழிவந்த சுதேசிகள் தங்களது மொழியை, சமயத்தை சீரமைக்க முற்பட்டனர். அதில் ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, அநகாரிக தர்மபாலா போன்றோர் முக்கியமானவர்களாவர். இவர்கள் தத்தம் சமயத்தை சீர்திருத்தி மீட்டுருவாக்கம் செய்தனர்.

1948இல் காலனிய ஆட்சி நீக்கம் நிகழ்ந்தாலும் சோல்பரி யாப்பு வழியான, காலனியம் முன்னெடுத்த ஆட்சி முறையே தொடர்ந்தது. ஆட்சியாளர் மாறினரே தவிர ஆட்சிமுறை, ஆட்சிமொழி மாறவில்லை. அரச இயந்திரம் அப்படியே இருந்தது. இந்தியா சுதந்திரமடைந்த காலத்தில் இந்து – முஸ்லீம் வன்முறைக் கலவரங்கள் நடந்தன. இந்தியாவை 'பிரித்தல்' எனும் அறுவை வைத்தியம் நடந்தது (Uyangoda, j., 1999). அது காலனிய நீக்கமாக அமைந்தது. ஆனால் இலங்கையில் பின்காலனிய அரசு அமைதியான சூழலில் உருவாகியது. ஆட்சியாளர் மாறினும் காலனிய மரபுகள் மாறாவில்லை. கிறிஸ்தவக் காலனியமானது ஆட்சிப்

பொறுப்பை சிங்கள பௌத்த நவகாலனியவாதிகளிடம் ஒப்படைத்ததாகவே சிறுபான்மையின மக்கள் உணரத்தலைப்பட்டனர்.

இலங்கையில் 1956இல் உருவான தனிச்சிங்களச்சட்டம் நவகாலனியத்தை உருவாக்கத் தலைப்பட்டது. இலங்கை ஒரு சிங்கள, பௌத்தநாடு; இலங்கையரசு பௌத்தத்துக்கும், பௌத்த சாசனத்துக்கும் முதன்மையும் பாதுகாப்பும் அளிக்க வேண்டும் என யாப்புச் சீர்திருத்தம் செய்யப்பட்டு அதிதீவிரமாக அமுல்படுத்தப்பட்டது(ஜயவர்த்தன, குமாரி, 2011). சிறுபான்மைச் சமயங்கள், இனங்கள், மொழிகள் ஒடுக்கப்பட்டன; நசுக்கப்பட்டன; இதன் வழி மதக்கலவரங்களும், இனக்கலவரங்களும் அதிகம் இடம்பெறத் தலைப்பட்டன(Chandrakanthan,v., 1995). சிறுபான்மையினர் முன்னேறாதவாறு எல்லா வழிமுறைகளாலும் ஒடுக்குதல்கள் நிகழ்ந்தன. எதிர்ப்பியக்கங்கள் உருவாயின. இவை நாற்பதாண்டு கால யுத்தத்துக்கு அடிப்படையாயிற்று.

**யுத்த மௌனிப்புக்குப் பின்னர் இலங்கையில் சமயங்களின் இயங்கியல்**

தமிழர் விடுதலைப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் விளைவாக சிங்கள பௌத்த தேசியவாதம் தன் பெரும்பான்மை அதிகாரத்தை மீளவும் நிறுவிக்கொண்டது. யுத்தத்திற்குப் பின்னர் சமய சுதந்திரம் என்பது கேள்விக்குரிய ஒன்றாக மாறியது. பௌத்த துறவிகளை மையமாகக் கொண்டு இயங்கும் பொதுபலசேன, இராவணபலய, ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள பௌத்த அமைப்புக்களின் செயற்பாடுகள் சமய சுதந்திரத்திற்குத் தடையாக அமைந்தன. இது சமயங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கியது. குறிப்பாக அளுத்தகம (பர்ஸானா ஹனிபா, ஹரிணி அமரசூரிய, விஷாக்கா விஜயநாயக்க, ஜெஹான் குணதிலக்க, 2014), பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, ஹலால் முத்திரைக்கு எதிரான செயற்பாடுகள் (Gravers, M.2015), இந்துமதக் கோயில்களான தம்புள்ள பத்திரகாளி அம்மன் கோயில், கொழும்பு பூமாயி அம்மன் கோயில் போன்ற கோயில்களில் சிலைகள் உடைப்பு மற்றும் கொள்ளைகள், அதேபோன்று கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டமை (நடீன் வன்னியசிங்கம, கசுன்பதிராஜ, மொகமட் பஸ்லான், டனுஷ்கா ஜயவிக்கிரம, 2008) போன்ற துயர சம்பவங்கள் மதவாதத்தின் எல்லையற்ற செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன.

ஈஸ்டர்தாக்குதல் தொடர்பிலான முதற் குற்றச்சாட்டுக்கள் முஸ்லீம் - கத்தோலிக்க மோதுகை வடிவமாகக் காட்டப்பட்டது. தற்போது சிங்கள பௌத்தமே இம்முரண்பாட்டின் ஆதார சுருதி எனச் அறியப்படுகிறது. சிறுபான்மைச் சமயங்களை மோதவிட்டு அரசியல் இலாபமீட்டும் பேரினவாத செயற்பாடாக அமையும் நிகழ்ச்சி நிரல்களுக்கு இதனை உதாரணப்படுத்தலாம்.

ஒன்றாய் ஆயுதமேந்திப் போராடிய கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்துத் தமிழர்கள் பலவாறு முரண்படுவதை அண்மைக்காலத்தில் அதிகம் காணமுடிகின்றது. இலங்கைச் சூழலுக்குச் சற்றேனும் பொருந்தாத இந்துத்துவா அமைப்பான சிவசேனையை மறவன்புலவு சச்சிதானந்தன் நிறுவியதோடு பௌத்தமும் இந்துசமயமும் இந்தியமதங்கள், சகோதர மதங்கள் என 'சிங்கள

பௌத்தத்துக்கு' கரம் நீட்டுவதோடு போராட்டச் சூழலில் ஒன்றாய்த் தமிழராய் இந்துக்களுடன் இருந்த கிறிஸ்தவர்களையும் தமிழ்பேசும் மக்களான முஸ்லீம்களையும் 'ஆபிரகாமிய மதவாதிகள்' எனப் பிரித்தாளுதல் 'சமய அரசியலின்' பாற்பட்டதாகும்.

'மண்ணின் மைந்தர்களாய்' ஒன்றுபட்டு வாழ்ந்த தமிழ்க் கிறிஸ்தவர்கள் மன்னாரில் திருக்கேதீஸ்வர ஆலய வளைவை உடைத்தெறிந்தமை நிதந்தரப் பகைமையை உருவாக்கும் தருணத்தை ஏற்படுத்தியது. இருசமயத்தவரது நல்லிணக்கமும் புரிந்துணர்வும் சிறுபான்மைத் தமிழர்க்கு மிகவும் அவசியமானது. பொதுவில் சமயமுரண்பாடுகளின் பின்னணியில் சமயப் பிரசாரம், கலப்புத்திருமணம், நெறி முறையற்ற மதமாற்றங்கள் என்பன அடிப்படையாக அமைகின்ற (நடீன் வன்னியசிங்கம, கசுன்பதிராஜ, மொகமட் பஸ்லான், டனுஷ்கா ஜயவிக்கிரம, 2008) அதேவேளை ஒருவருக்கோ அல்லது குறிப்பிட்ட குழுவுக்கோ மற்ற நபர் மீதோ குழு மீதோ இருக்கும் காழ்ப்பு (பொருளாதாரம், நிலம், அரசியல், சாதி, பிராந்தியம், சமூக அந்தஸ்து…) வெளிப்படுவதற்கான, வன்முறை பிரயோகிப்புக்கான வழிமுறையாக 'சமயவுணர்வு', அரசியல் மயப்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்படுகின்றது.

இன்றைய நிலையில் தெருக்களில், பெருவெளி நிலங்களில் திடீரென முளைத்துவரும் சிவலிங்கங்கள், பிள்ளையார் உள்ளிட்ட தெய்வங்கள் தமிழடையாள உருவாக்கமாகக் கருதப்படினும் அவையும் ஒருவித நில ஆக்கிரமிப்பே; சமய அரசியலே. கடும்போக்கு இந்துக்களின் இச்செயல்முறைகள் அவர்களின் பிரமாணநூல்களுக்கு எதிரானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களுக்கு இருக்கும் நிறுவனமயப்பட்ட தன்மை இந்துக்களுக்கு இலங்கையில் இல்லை. சமயத்தலைவர்களும் இல்லை. தலைமையும் நிர்வாகக் கட்டமைப்புமற்ற தன்மையினால் இந்துசமயம் பெரும் மோதல்களில் பங்குபற்றாதிருக்கிறது என்றே கருதவேண்டும்.

சிங்கள பௌத்தமானது சிங்கள பௌத்தர் இல்லாத, தமிழர் நிலங்களில் ஏதேட்சையதிகாரத்தின் வழி பௌத்த அடையாளங்களை ஏற்படுத்தி வருகிறது. இலங்கை இராணுவம், பொலிஸ் என்பன இருந்த - இருக்கின்ற இடங்களெல்லாம் விகாரைகள் தோன்றுகின்றன (நடீன் வன்னியசிங்கம, கசுன்பதிராஜ, மொகமட் பஸ்லான், டனுஷ்கா ஜயவிக்கிரம, 2008). சிறுபான்மைச் சமயிகளால் புத்தரும் விகாரையும் ஆக்கிரமிப்பின் அடையாளங்களாகவே நோக்கப்படுகின்றன. இவற்றுக்கு எல்லாம் குரல்கொடுக்காது 'கள்ளமௌனம்' காத்த சச்சிதானந்தம் குருந்தூர் மலையேறி பிக்குவுடன் இணைந்து வழிபாடியற்றியமை சமயவரசியலின் அடுத்தகட்ட நகர்வாக, இந்துக்களாலேயே ஏற்றுக் கொள்ள முடியாத நிகழ்வாக அமைந்தது.

**சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை**

இலங்கையின் 2015ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச்சுதந்திர அறிக்கையில் பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன(Sri Lanka, 2015, International Religious Freedom Report).

1. இலங்கையரசியலமைப்பு தனிநபர் மத சுதந்திரத்துக்கு முதன்மையளித்த போதும் நடைமுறையில் அவ்வாறில்லை.

2. உள்ளூர் காவல்துறை மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள் பௌத்த தேசியவாத நிறுவனங்களுடன் "மத வன்முறை" நிகழ்வில் செயற்படுவதாகக் காணப் படுகின்றனர். தங்களை நியாயப்படுத்த பழைய சுற்று நிருபங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

3. 2014இல் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிராக மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பௌத்த பிக்குகள் சம்பந்தப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான கடுமையான சட்ட நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

4. கிறிஸ்தவ, முஸ்லிம் பிரார்த்தனைக் கூட்டங்கள் பல்வேறு காரணங்கள் கூறி தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்ற அதேவேளை தமிழர் நிலங்களில் (சைவ, கிறிஸ்தவ) புத்தர்சிலைகள் கட்டப்படுகின்றன.

5. இலங்கை தேசிய கிறிஸ்தவ நற்செய்திக் கூட்டணி, (NCEASL) தேவாலயங்கள் மீது நடாத்தப்பட்ட 2014ஆம் ஆண்டில் '96' வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகக் கூறுகிறது. அதில் 87 விடயங்கள் வழக்குகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

6. முஸ்லிம்களுக்கான செயலகம், வன்செயல்கள், உடற்பலப் பிரயோகம், வன்சொல், மதஸ்தலங்களை அழிக்க, அசுத்தப்படுத்த முற்பட்டல் உள்ளிட்ட '82' சம்பவங்களைப் பதிவு செய்துள்ளது.

7. மத்திய கொழும்புப் பகுதியில் பாரம்பரிய இந்துசமய உற்சவங்களில் செல்லும் ஊர்வலத்தை (முத்துமாரியம்மன் கோயில்) முஸ்லீம்கள் தடுக்க முற்பட்டராயினும் இருதரப்பும் சமரசமாயின.

8. பொதுபலசேன இயக்கம் சிறுபான்மை இனத்தையும் மதஉறுப்பினர் களையும் நோக்கி நாட்டினுடைய சிங்களப் பேரினவாத பௌத்த மக்களின் மேலாதிக்கத்தையும் விரோதமானமுறையில் பிரசாரச் செயற்பாடுகளையும் ஊக்குவிப்பது இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

2021 ஆம் ஆண்டு அறிக்கையிலும் (2021 Report on International Religious Freedom: Sri Lanka) பெரிய அளவில் வேறுபட்ட தன்மையியோ நல்லிணக்கம் சார்ந்த பெரிய முன்னேற்றமோ காணப்படவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதல் மத, இன முறுகலை இன்னும் வலுப்படுத்தியுள்ளது. இதனை வலுகுன்றச் செய்யுமாறு ஐ.நா.சபை கோரியுள்ளது. ஆனால் மாறாக இலங்கையரசு "வன்முறையான தீவிரவாத மத சித்தாந்தத்தை இல்லாமல் செய்வது" தொடர்பான வர்த்தமானியை வெளியிட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறுபான்மையினரை கைது செய்தது. புனர்வாழ்வு என்ற போர்வையில் இது அரசிற்கெதிரானவர்களை ஒடுக்கப் பயன்படலாம் என சர்வதேச மன்னிப்புச்சபை கருதியதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சிறுபான்மை மதங்கள் தத்தமக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டாலும்

அதனை தீர்க்கவும், சமரசங்காணவும் முற்படுகின்றன. சிங்கள பௌத்த தேசியவாதப் பெரும்பான்மையானது சிறுபான்மை சமயத்தவரை உடல், உளரீதியிலும் நிலம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல் ரீதியிலும் அடக்கியாள விரும்புவதையும் அதற்கு அரச ஆதரவுடன் பொதுபலசேன முதலான அமைப்புக்கள் கடுமையாக உழைத்து வருவதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையில் காணப்படும் நான்கு சமயங்களுள் பெரும்பான்மையான மக்களைக்கொண்ட சமயங்கள், தத்தம் பிராந்தியங்களில் பிறசமயத்தாரை ஒடுக்குவதையும் தேசியரீதியில் சிங்கள பௌத்தம் ஏனைய இலங்கையர்களின் சமயங்களை ஒடுக்குவதையும் அவதானிக்க முடிகிறது. சமயங்கள் 'மனிதர்களை மனிதர்களாக வாழவைக்கத் தோன்றியவை' என்றே கூறப்படுகின்றன (யோகராஜா, கொட்ப்ரி, 2021). ஆனால் அவற்றின் இயங்கியல்கள் வன்முறையையும் கலவரங்களையும் ஒடுக்குமுறையையும் வளர்த்து விடுவனவாகவே அமைந்து வருகின்றன.

இலங்கையின் தொல்லியற் திணைக்களச் செயற்பாடுகள் தமிழர்களின் தொல்சமயத்துக்கு - பௌத்துக்கு நிகரான அல்லது முற்பட்ட இந்துசமயத்துக்கு எதிரானதாகவே அமைந்துள்ளது என 2021ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதசுதந்திர அறிக்கை குறிப்பிடுகிறது. இத்திணைக்களமானது குருந்தூர் ஆதி ஐயனார் கோயில் இருந்த இடத்தை பௌத்தத்துக்குரியதாக அடையாளப்படுத்தியது. அதேவேளை இத்திணைக்களத்தால் தடை செய்யப்பட்ட அநுராதபுர பிராந்தியங்களுள் இந்துக் கோவில்களின் எச்சங்கள் இருப்பதாக தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பொலநறுவையின் சிங்கள, பௌத்த அடையாளங்கள் பெறும் முக்கியத்துவம் அவற்றுக்குச் சமமாக இந்துக் கோயில்களுக்கு வழங்கப்படவில்லை என்பதும் அவை பேணப்படாது சிதைவுறுகின்றன என்பதும் யாவரும் அறிந்தது. இவை இலங்கை அரசின் சமய அரசியலைத் தெளிவுபடுத்துகின்றன. மிக அண்மைக்காலத்தில் கட்டப்பட்ட தையிட்டி பௌத்தவிகாரை ஒரு பௌத்தர்கூட இல்லாத இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இது சமய, அரச அதிகாரத்தின் வன்கொடுமையின் அடையாளமே.

இன்றைய இலங்கையின் பொருளாதாரச் சிதைவுச் சூழல், புத்திசாலிகள் வெளியேற்றம், ஸ்திரமற்ற அரசு, மக்கள் போராட்டம் என அனைத்து விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் பின்னணி என்ன ஆராயின் இலங்கை அரசுகள் காலந்தோறும் விசுவாசத்துடன் பின்பற்றி வந்த சமய, இன ஒடுக்குமுறைகள், திட்டமிடப்படாத பொருளாதாரம் போன்றனவே எனலாம். நடைபெற்ற யுத்தம் பொருளாதார சிதைவையும் 'கடன்' சுமையையும் ஏற்படுதியது. யுத்தநிறைவின் பின்பு இன்னும் கடும் போக்குவாத சமய, இன ஒடுக்குமுறை யினை அரசு மேற்கொண்டமை அனைத்து மக்களும் இணைந்து இலங்கையைக் கட்டியெழுப்பும் சூழலை உருவாக்கவில்லை. மாறாக, தொடர்ந்தும் பிரிவினைவாத ஒடுக்குமுறை அரசியலையே மேற்கொண்டு வருகின்றன. கைத்தொழில், விவசாய பொருளாதாரக் கட்டமைப்புக்கள் மேலும் மேலும் ஊக்குவிக்கப்படாமல் பொருத்தமற்ற செயற்பாடுகளில் (அம்பாந்தோட்ட விமானநிலையம்) ஈடுபட்டு வருகின்றது. மேலும் மேலும் கடன் பெறுதலே இலங்கையின் வாழ்வாகிப்போனது. இலங்கைப் பொருளாதார மீட்பு என்பது அடிப்படையில் இலங்கை வாழ் மக்களுக்கு இடையிலான இன, சமயரீதியிலான புரிந்துணர்வு நல்லிணக்கத்திலேயே அமைந்துள்ளது.

யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்பு 'சமூக, சமய நல்லிணக்கம்' நிகழவேண்டும் என்ற கற்றுக் கொண்ட பாடங்கள் வழியேனும் ஐ.நாசபையின் வேண்டுகோளை, உலகநாடுகளின் ஆலோசனைகளையேனும் ஏற்காது உதாசீனம் செய்த இலங்கை அரசு, ஒடுக்குமுறைக்கு இன்னும் பல்வடிவங்களைக் கொடுத்து வருகிறது. அதில் முக்கியமானது பொதுபலசேனா, இராவணபலய, ஜாதிக ஹெல உறுமய முதலான கட்சிகளின் தோற்றமாகும்(ஆலிப், எஸ்.எம்., 2015). இன்றைய இலங்கையரசியலை ஆட்டிப்படைப்பவர்களாக, ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிப்பவர்களாக பௌத்த பிக்குகளே காணப்படுகின்றனர். இவர்கள் முன்னெடுத்துவரும் பிறசமயங்களை இழிவுபடுத்தல், அவற்றின் வழிபாட்டுத் தலங்களின் கட்டடங்களை நீக்குதல், வழிபாடுகளைக் குழப்புதல், பழக்கவழக்கங்களைக் கொச்சைப்படுத்துதல், சமய உரிமைகளுக்குள் தலையிடுதல், உரிமையைத் தரமறுத்தல், ஏனைய சமய வழிபாட்டுத்தலங்களை, காணிகளை வலோத்காரமாகக் கையகப்படுத்தல், அவற்றில் புத்தர்சிலைகளை நிறுவுதல், விகாரைகளைக் கட்டுதல் முதலான செயற்பாடுகள் சமய சூழலை முழுமையாகக் குழப்பும் அரசியலாகவும் சர்வதிகாரமாகவும் அமைகிறது.

சிங்கள, பௌத்த அடிப்படைவாதிகள் செய்யும் அராஜகங்களை மௌனமாகப் பார்த்து நிற்கும் பொலிஸாரும் இராணுவமும் பிற சமய, இன, மக்கள் அமைதிவழியில் முன்னெடுக்கும் போராட்டங்களில் கலந்து கொள்ளும் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரை வன்முறைக் கரங் கொண்டு அடக்குவதை நாளாந்த பத்திரிகைச் செய்திகள் உறுதிப்படுத்தி வருகின்றன. சிங்களவரோ பௌத்தர்களோ இல்லாத சிறுபான்மையினர் மட்டுமே வாழ்கின்ற பிராந்தியங்களில் புத்தர்சிலைகளும், விகாரைகளும் (பர்ஸானா ஹனிபா, ஹரிணி அமரசூரிய, விஷாக்கா விஜயநாயக்க, ஜெஹான் குணதிலக்க, 2014) மேற்கிளம்பி வருகின்றன. இதற்குச் சமாந்தரமாக இதனை எதிர்கொள்ளளாக சிவலிங்கங்கள், மாதா சொரூபங்கள் தமிழர் பிராந்தியங்களில் மேற்கிளம்புவதையும் காணமுடிகிறது. சகல உயிரினங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலான நெறிமுறைகள் அகிம்சையிலிருந்து தோன்றியது. மதத்தின் பல்வேறு விதமான சட்டங்கள், நெறிமுறைகள், பக்தி சார்ந்த இலக்கியங்கள் ஆகியவற்றில் இது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆனால் யதார்த்த வாழ்வில் இது நடைமுறையில் இல்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

**நிறைவுரை**

சமயம் என்பது அன்பையும் அமைதியையும் சமாதானம் நிறைந்த வாழ்வையும் நல்குவதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் இலங்கைச் சூழலில் சிறுபான்மைச் சமயத்தைப் பெரும்பான்மைச் சமயம் காலந்தோறும் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கி வருகின்றது. தேசிய அளவில் சிங்கள பௌத்தம் ஏனைய சமயங்களை ஒடுக்கி அரசியல் செய்கிறது. இலங்கை பற்றிய 2015, 2021ஆம் ஆண்டுகளுக்கான சர்வதேச மதச்சுதந்திர அறிக்கை இலங்கையின் மிக மோசமான சமய அரசியல் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பகைப்புலமே இலங்கையின் இன்றைய நெருக்கடிக்கு அடிப்படை என உணரினும் இலங்கையரசு தன் மதவாதக்கொள்கையை, ஒடுக்குமுறையைக் கைவிடவில்லை என்பது துயரந்தரும் செய்தியே. மதவாத வளர்ச்சி கலவரங்கள், யுத்தங்கள், வன்முறைகள் தோன்றுவதற்கு மீளவும் வழிசமைக்கும். ஆகவே பல்லின சமூகத்தைக் கொண்ட நாடுகளில்

மதவாதக்கொள்கை அவசியமற்றது. அரசின் மதத்திற்கான சலுகைகள், மதத்தின் அரசியல் தலையீடுகள் போன்றன நிராகரிக்கப்பட வேண்டும். புதிய யாப்பு வரையப்பட வேண்டும். இன்றைய சூழலில் மதசார்பற்ற அரசாக பிரகடணப்படுத்தப்பட வேண்டும். மேலும் சமயங்களுக்கு வழங்கப்படும் 'எல்லையற்ற' சலுகைகள் குறைக்கப்பட வேண்டும். மதவாதத்தினை தூண்டுகின்ற கட்சிகள், மதவாதத்தினை தூண்டுகின்ற குழுக்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை தடைசெய்வதன் மூலமே மதசார்பற்ற ஒரு நாட்டினை கட்டியெழுப்ப முடிவதுடன் கட்சிகளின் கொள்கைகள் மற்றும் சித்தாந்தங்களில் ஜனநாயக மயமான கருத்தியல்கள் வளர்ச்சி பெற வழிசமைக்கும் எனலாம்.

இலங்கை மக்களுடைய வாழ்க்கையில் தொடர்ச்சியாக செல்வாக்குச் செலுத்தக்கூடிய வகிபாகத்தை கொண்டிருக்கும் சமயமானது ஆரோக்கியமான அதிகார மூலத்தை வழங்குவதுடன், நிலைமாற்றுக்கால நீதிப்பொறிமுறைகள் அல்லது செயன்முறைகளின் பொழுது அகத்தூண்டலாகச் செயற்படக்கூடிய வல்லமை பொருந்தியதாகவும் இருக்கின்றது. இலங்கையில் நிலைமாற்றுக்கால நீதிக்கு கடும் அர்ப்பணிப்பு அவசியம். இதற்கு சமயத்தினதும் சமயத் தலைவர்களினதும் ஈடுபாடு அவசியமாகும். ஆகவே மாற்றம் என்பதை முதலில் சிறுபான்மைச் சமயிகள் தம்மில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். புதிது புதிதாக உருவாகிவரும் மதப் பிரிவினை வாத - இந்துத்துவா அமைப்புக்களையும் அடிப்படை வாத கிறிஸ்தவ, இஸ்லாமிய அமைப்புக்களையும் விலக்கி புரிந்துணர்வு வழியிலான நல்லிணக்கச் சூழலை உருவாக்குதல் வேண்டும். இந்த சமய, சமூக நல்லிணக்கத்தின் திரட்சி, பின்காலனிய இலங்கையின் வன்முறை சார்ந்த சமய அரசியலில் இருந்து சிறுபான்மையினர்க்கு விடுதலையைத் தரும்.

**உசாத்துணை**

உயன்கொட ஜயதேவ, (த.மொ. சண்முகலிங்கம்,க.), 2016, *இலங்கையில் பின்காலனித்துவ அரசு,* ஹரே பிரின்டேர்ஸ், கொழும்பு.

குருபரன் குமாரவடிவேல், 2017, *அரசும் மதமும் ஒன்றை மற்றொன்று வரையறை செய்தல்: பிரச்சனைகளும் இலங்கையில் சீர்திருத்தத்திற்கான வாய்ப்புக்களும்*, யாழ்.மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

சண்முககலிங்கம்,க., 2017, *இலங்கையில் பௌத்தமும் தேசியவாதமும் கணநாத் ஒபயசேகரவின் ஆய்வுகள் குறித்த ஓர் அறிமுகம்*, சமூகவெளி படிப்பு வட்டம், யாழ்ப்பாணம்.

சத்தியசீலன்.ச 1994, *இலங்கை அரசியலில் மதமும் மொழியும்*, அருண் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

நடீன் வன்னியசிங்கம, கசுன்பதிராஜ, மொகமட் பஸ்லான், டனுஷ்கா ஜயவிக்கிரம், 2008, *இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மதங்களுக்கிடையிலான மோதல்கள்,* இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேசநிலையம், கொழும்பு.

முகம்மது சலீம்,அ.,1998, *ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்,* நிசானா பப்ளிஷர்ஸ், கொழும்பு.

பர்ஸானா ஹனிபா, ஹரிணி அமரசூரிய, விஷாக்கா விஜயநாயக்க, ஜெஹான் குணதிலக்க, 2014, *அயலவர்கள் எல்லோரும் எங்கு சென்று விட்டார்கள்? அளுத்கம கலவரங்களும் அதன் பின்னரும்,* சட்டம் மற்றும் சமூகத்திற்கான அறநிலையம், கொழும்பு.

பாஸில்,எம்,எம்.,(ப.ஆ), 2020, *போருக்குப் பிந்திய அரசும் சமூகமும்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

யோகராஜா, கொட்ப்ரி, 2021, இலங்கையில் நிலைமாற்றுகால நீதியில் சமயத்தின் வகிபாகம் உலக சுவிஷேச ஐக்கியத்துவம், இலங்கை.

ஹெட்டிகே சிறி, (த.மொ. சந்திரசேகரன்,ச., கருணாநிதி,மா.), 2017, *நிதானமான சமூகத்தை நோக்கி,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

ஜயவர்த்தன குமாரி, 2011, *இலங்கையின் இன, வர்க்க முரண்பாடு சிங்கள - பௌத்த உணர்வு நிலையின் எழுச்சி (1883 - 1983),* குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

Chandrakanthan,v., 1995, *Catholic revival in post – colonial Sri Lanka,* Socilal and economic development centre, Colombo.

Coomaraswamy, Radhika, 1987, *Myths Without Conscience: Tamil and Sinhalese Nationalist Writings of the 1980s', in Ethnicity and social Change in Sri Lanka*, Social Scientists' Association , Colombo.

Gravers, M. (2015). Anti-Muslim Buddhist nationalism in Burma and Sri Lanka: Religious violence and globalized imaginaries of endangered identities. Contemporary Buddhism, 16(1), 1-27, Routledge: Taylor & Francis. https://doi.org/10.1080/14639947.2015.1008090

Uyangoda, j., 1999, *A State of Desire? Some reflections on the unreformability of Sri Lanka's post-colonial State in Hettige*, S. and Meyer,m.(eds.) Sri Lanka at Crossoads. New Delhi

Uyangoda, j. 2011, *Travails of State Reform in the Context of Protracted Civil War in Sri Lanka in Stokke,* k. and Uyangoda, I. (eds.) Liberal peace in Question: Politics of state and Market Reform in Sri Lanka. New York and London: Anthem.

**கட்டுரைகள்**

ஆலிப், எஸ்.எம்., 2015, *யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை அரசியலில் மதம்: விஷேட ஆய்வு பொது பல சேனா,* " KALAM" Journal Vol. IX.(1), 2015 of Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

ஒபெயசேகர கணநாத், கொம்பிறிஜ் றிட்ச்சேர்ட், (த.மொ. நாவுக்கரசு,ந.), 2005, 'புரொட்டெஸ்ரன்ட் பௌத்தம்',*இலங்கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் இரண்டாவது தொகுதி 1980 - 1999,* சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.

ஹரிஸ் எலிசபெத், (த.மொ., பத்மநாதன், சோ.) 2005, 'நெருக்கீடும் போட்டியும்: 19ஆம் நூற் றாண்டின் முற்பகுதியில் பௌத்தத்தை கிறிஸ்துவ மிஷனறிகள் எதிர்கொண்டமை', *இலங் கைச் சமூகத்தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள் 2வது தொகுதி 1980 - 1999,* சமூகப் பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம்.

பாஸில். எம். எம்., 'போருக்குப் பிந்திய இலங்கையில் அரச மீளுருவாக்கம்: முன்னைய ஆய்வுகளை மையப்படுத்திய விமர்சனப் பகுப்பாய்வு' செம்மொழித் தமிழாய்வு (பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்) தொகுதி 7, எண். 1, ஜனவரி-மார்ச் 2019

**அறிக்கைகள்**

Sri Lanka, 2015, International Religious Freedom Report, https://2009-2017. state. gov/ documents/organization/256529.pdf

2021 Report on International Religious Freedom: Sri Lanka, https://www.state.gov/reports/2021-report-on-international-religious-freedom/sri-lanka

## PANEL OF REVIEWERS

| | | |
|---|---|---|
| 1. | Prof.(Mrs)A.Murugathas (Emeritus Professor) | Eastern University, Sri Lanka |
| 2. | Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka |
| 3. | Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| 4. | Prof. S. Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 5. | Prof. K Rajendram | Eastern University, Sri Lanka |
| 6. | Prof. J. Kennedy | Eastern University, Sri Lanka |
| 7. | Prof. (Mrs.) S. Kesavan | Eastern University, Sri Lanka |
| 8. | Prof. Jeyapraba Suresh | Eastern University, Sri Lanka |
| 9. | Prof.A.M.M.Navaz | South Eastern University of Sri Lanka |
| 10. | Prof.M.I.M Kaleel | South Eastern University of Sri Lanka |
| 11. | Prof.MAM. Fowsar | South Eastern University of Sri Lanka |
| 12. | Prof.T.Mukunthan | Open University of Sri Lanka |
| 13. | Prof.F.M.Nawastheen | Open University of Sri Lanka |
| 14. | Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| 15. | Dr. S.Umashankar | Eastern University, Sri Lanka |
| 16. | Dr.R. Premkumar | Eastern University, Sri Lanka |
| 17. | Dr.Roshini Murugupillai | Eastern University, Sri Lanka |
| 18. | Dr. P. Rodney Fernando | Eastern University of Sri Lanka |
| 19. | Dr. V. Gunapalasingam | Eastern University of Sri Lanka |
| 20. | Dr. K. Shrikarunaaharan | Eastern University of Sri Lanka |
| 21. | Dr. P. Youhasan | Eastern University of Sri Lanka |
| 22. | Dr. Vanathy Pahirathan | Eastern University, Sri Lanka |
| 23. | Dr.M.Somathasan | Eastern University, Sri Lanka |
| 24. | Dr.N.Pushparajah | Eastern University, Sri Lanka |
| 25. | Dr. S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| 26. | Dr. T. Megarajah | Eastern University, Sri Lanka |
| 27. | Dr. Rajini Subramaniyasarma | Open University of Sri Lanka |
| 28. | Dr. Jalal Deen | Open University of Sri Lanka |
| 29. | Dr.M.I.F.Kareema | South Eastern University of Sri Lanka |
| 30. | Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| 31. | Dr.S.Athirathan | University of Colombo |
| 32. | Dr. Vijitha Paheerathan | Trincomalee Campus, Eastern University |

| | |
|---|---|
| 33. Dr.Arularasi Balakrishnan | University of Peradeniya |
| 34. Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| 35. Mr. M. Ravi | Eastern University, Sri Lanka |
| 36. Mrs. R. V. Francis | Eastern University, Sri Lanka |
| 37. Mr. A. J. Hussain | Eastern University, Sri Lanka |
| 38. Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 39. Mr. R. Sahayaseelan | Eastern University, Sri Lanka |
| 40. Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| 41. Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |
| 42. Mr. G. Vigneswaran | Eastern University, Sri Lanka |
| 43. Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| 44. Mr. V. Alagaratnam | Eastern University, Sri Lanka |
| 45. Mr. A. Kanneraj | Eastern University, Sri Lanka |
| 46. Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 47. Mrs. V. Selvanayagam | Eastern University, Sri Lanka |
| 48. Mrs. R. Thakshaayini | Eastern University, Sri Lanka |
| 49. Mr. N. Vaman | Eastern University, Sri Lanka |
| 50. Mrs. Vijitha Thivakaran | Eastern University, Sri Lanka |
| 51. Mr. V.Pathmanandakumar | Eastern University, Sri Lanka |
| 52. Mr.K.Gnanaretnam | Open University of Sri Lanka |
| 53. Mr. M. Jeyaseelan | University of Peradeniya |